# மெஹர் பிரபு

## (MEHER PRABHU)

**இக்கால அவதார புருஷரின் வருகை**
**(ADVENT OF THE AVATAR)**

# மெஹர் பாபாவின் வாழ்க்கை வரலாறு

**(MEHER BABA’S LIFE HISTORY)**

## குறுகிய தமிழாக்கம்

**(TAMIL TRANSLATION - ABRIDGED)**

## தொகுப்பு பதினைந்து

## (VOLUME FIFTEEN)

**1956 - 1958**

# இறைவனின் அன்பளிப்பு

இடம், காலம், பொருள் இவற்றை இறைவனன்றி வேறு யாரறிவர்? எது, எங்கு, எப்படி, எப்போது நடக்கவேண்டுமோ அதை நடத்துபவனும் அவனே! தனிப்பட்ட மனிதனால் முடிவது கையளவாக இருந்தாலும் கடவுளின் கருணையால் நிகழ்வது கடலளவு. இருந்தும் அனைத்தையும் தனிமனிதன் செய்வதுபோலத் தோற்றமளிக்கச் செய்வது மாயையின் கைவண்ணம்; இதுவே, இந்த இறைநாடகத்திற்கு இறைவன் எழுதிய திரை, கதை, வசனம்.

மெஹர் பாபாவின் வரலாற்றுத் தொகுப்புக்கு உயிரூட்டம் அளித்தவர் மெஹர் பாபா மட்டுமே என்றாலும், உருவாக்கம் தந்த நூலாசிரியர் அவருடைய நெருங்கிய மண்டலியில் ஒருவரான,

ஸ்ரீ பாவ் கல்சூரி.

இந்தி மொழியில் கவிதை வடிவில் உருவகம் கொடுக்கப்பட்ட வரலாறு, உரைநடை பாணியில், ஆங்கிலத்தில் ஆக்கம் தந்தவர், மெஹர் பாபாவின் அரவணைப்பில் இருந்த,

ஸ்ரீ ஃபெராம் ஒர்க்கிங்பாக்ஸ்வாலா.

மொத்தத்தில் ஏறக்குறைய 8000 பக்கங்கள், 20 தொகுப்புகள். இவை அனைத்தையும் ஒருங்கிணைத்து ஆங்கிலத்தில் வெளியிட்டவர்,

ஸ்ரீ லாறன்ஸ் ரைட்டர்.

இந்த வரலாற்றுத் தொகுப்பு, நாளடைவில், பல மொழிகளில் முழுமையாக அல்லது குறுகிய வடிவில் வெளிவந்துள்ளன. தமிழ் மக்களுக்கும் இது ஒரு பொக்கிஷமாக அமைய வேண்டும் என்ற ஆர்வத்தில் சமர்ப்பணம் செய்பவர்:

**தமிழாக்கம் & புத்தக வடிவமைப்பு:**
கு. ராதாகிருஷ்ணன்
வேலம்மாள் ராதாகிருஷ்ணன்
முகேஷ் சிவகுமார்
நித்யகலா நிர்மல்
பூனா, ஆகஸ்ட் 2023
✉ vela.radhakrishnan@gmail.com
✆ +919225631113

REV:01/04.07.2025

# மெஹர் பாபா கூறுகிறார்…

மூலமுதலான உண்மைப்பொருளிலிருந்து
வரும் வார்த்தைகளுக்கு, உண்மையான அர்த்தம்
உண்டு. ஆனால் மனிதர்கள், இந்த வார்த்தைகளைத்
தங்கள் சொந்த வார்த்தைகளாக மொழியும்போது,
அவை அர்த்தமற்றதாகிவிடும்.

# நிகழ்வுகளின் காலவரிசை

**1956**
- ஆகஸ்ட் **17,** மேற்கத்திய நாடுகளில் பயணத்தை நிறைவு செய்து, பாபா இந்தியா வருகை; சத்தாராவில் ஏகாந்தவாசப் பணி தொடர்ந்தது

**1956**
- செப்டம்பர் **07 - 11,** பாபா சத்தாராவிலிருந்து ஹைதராபாத், அதைச் சூழ்ந்த இடங்களுக்கு, காரில் மஸ்த் பயணம்

**1956**
- அக்டோபர் **03 - 06,** மும்பை மஸ்த் பயணம்; மெஹராஸாத் வருகை
- அக்டோபர் **08,** மெஹராபாத்தில் மஸ்த் அலி ஷாவை சந்தித்து சத்தாரா வருகை

,

**1956**
- அக்டோபர் **16-22,** சத்தாராவில் உபவாசமும் ஏகாந்தவாசப் பணியும் தொடர்ந்தது
- அக்டோபர் **21-23,** நாசிக், இந்தூர் மஸ்த் பயணம், மெஹராபாத் வருகை

**1956**
- நவம்பர் **16-21 ,** உத்தரபிரதேசம் **-** மஸ்த் பயணம், மெஹராஸாத், சத்தாரா வருகை
- டிசம்பர் **02,** சத்தாரா - பூனா - சத்தாரா காரில் பயணம், உட்தாராவில் கார் விபத்து

**1956**
- டிசம்பர் **10,** பாபா, அவசர மருத்துவ ஊர்தி மூலம் பூனாவிற்கு அழைத்துச் செல்லப்பட்டு, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்

**1957**
- பிப்ரவரி **12,** பாபா, பூனாவிலிருந்து மெஹராஸாத் அழைத்துவரப்பட்டார்.
- பிப்ரவரி **15,** ஓராண்டு கால ஏகாந்தவாசம் 'ஏழை' நிகழ்ச்சியுடன் நிறைவு

**1957**
- மார்ச் **18,** ஸக்கோரி விஜயம், மெஹராஸாத் வருகை
- மார்ச் **23,** பூனா ஸெயின்ட் மீரா பள்ளிக்கூடம் விஜயம், மெஹராஸாத் வருகை

**1957**
- ஏப்ரல் **18 - 28,** பூனா, கணேஷ்கிந்த் தோட்டம் வருகை; சிகிச்சை தொடர்ந்தது
- ஏப்ரல் **28,** பூனா, 'குருபிரசாத்' பங்களா - ஒரு மாத விஜயம்

**1957**
- ஜூன் **1,** மீண்டும் பூனா, கணேஷ்கிந்த் தோட்டம் வருகை
- ஜூன் **8,** பூனா மெஹர் பாபா, மையம் விஜயம்

**1957**
- ஜூன் **10,** மெஹர் பாபா, பெண் மண்டலியுடன் பூனா, கணேஷ்கிந்த் தோட்டத்திலிருந்து மெஹராஸாத்திற்குப் பயணம்

**1957**
- ஜூன் **15,** நோரினா மேட்சபெல்லி தனது **77**ஆவது வயதில், மர்ட்டில் பீச் 'யூபான் டூன்ஸ்' இல்லத்தில், காலமானார்

**1957**
- ஆகஸ்ட் **01 -** மெஹர் பாபாவின் **75** நாள் சிறப்புப் பணி ஆரம்பம்
- ஆகஸ்ட் **24 -** பூனா பயணம் - கணேஷ்கிந்தில் **80** பூனா அன்பர்களுடன் சந்திப்பு

**1957**

- செப்டம்பர் 6, 8 - மெஹராஸாத் வருகை, மும்பை, பூனா, அஹமதுநகரைச் சேர்ந்த 32 நபர்களுடன் மூன்று மணி நேர சந்திப்பு

**1957**

- அக்டோபர் 08, பாபா, பல்வேறு மருத்துவ சிகிச்சைகளுக்காக மும்பை வருகை
- அக்டோபர் 27, நெருங்கிய மும்பை அன்பர்களுக்கு தரிசனம்

**1957**

- அக்டோபர் 30, குஸ்தாஜி காலமானார் - மெஹராபாத்தில் உடல் அடக்கம்
- நவம்பர் 4, மெஹராபாத்தில் குஸ்தாஜிக்கு அஞ்சலி, மெஹராஸாத் வருகை

,

**1957**

- டிசம்பர் 22, மும்பை தரிசன நிகழ்ச்சி
- டிசம்பர் 26, மெஹராஸாத் வருகை

**1958**

- பிப்ரவரி 15-19, ஹிந்தி & மராட்டி சகவாசம் - மெஹராபாத்
- பிப்ரவரி 22-26, தெலுங்கு & குஜராத்தி சகவாசம் - மெஹராபாத்

**1958**

- மார்ச் 15, மும்பையிலிருந்து மெஹராஸாத் வருகை
- மார்ச் 19-23, பூனா கணேஷ்கிந்த் தோட்டம் - மஹாபலேஷ்வர் வருகை

**1958**

- ஏப்ரல் 30-மே 15, பூனா குருபிரசாத்தில் இளைப்பாறல்; அமெரிக்கா பயணத்திற்காக மும்பை வருகை

**1958**

- மே 15-17, நியூயார்க் - வடக்குக் கரோலினாவின் வில்மிங்டன் வருகை
- மே 19-30, மர்டில் பீச் சகவாசம்

**1958**

- மே 31-ஜூன் 02, வாஷிங்டன் டி.சி., ஸான்ஃபிரான்சிஸ்கோ வழியாக ஆஸ்திரேலியா பயணம் - ஸிட்னி - பிரிஸ்பேன் வருகை.

**1958**

- ஜூன் 03-06, ஆஸ்திரேலியா சகவாசம்

**1958**

- தொடரும்

# பொருளடக்கம்

இந்திய மண்ணில் இரத்தம் - சத்தாரா................................ 2

இந்திய மண்ணில் இரத்தம் - மெஹராஸாத்தில் நன்னிலை எய்தல்........................................................................ 47

குருபிரசாத், பூனா .......................................................................... 75

மெஹராஸாத் & பூனா ..................................................................106

பூனா, மும்பை தரிசனம்..............................................................142

ஹிந்தி & மராட்டி சகவாசம்......................................................179

தெலுங்கு & குஜராத்தி சகவாசம்..........................................256

மஹாபலேஷ்வர் & பூனா ..........................................................320

மர்டில் பீச் சகவாசம்...................................................................344

அவதார புருஷரின் வாழ்விடம் - ஆஸ்திரேலியா........433

# இந்திய மண்ணில் இரத்தம் - சத்தாரா

(**Blood On Indian Soil - Satara**)

இங்கிலாந்து, அமெரிக்கா, ஆஸ்திரேலியா நாடுகளில் பயணத்தை நிறைவு செய்து, 1956 ஆகஸ்ட் 17 அன்று, இந்தியா திரும்பிய பிறகு, மெஹர் பாபா, சத்தாராவில் தனது ஏகாந்தவாசப் பணியை மீண்டும் தொடங்கினார். அவர் பெண்மணிகளுடன் கிராஃப்டனில் (GRAFTON) தங்கியிருந்து, கைக்கோபாத்துடன் ‘ஜட்ஜ்’ பங்களாவில் (JUDGE’S BANGALOW) பணிபுரிந்தார். ரோஸ்வுட்டில் (ROSEWOOD) வாழ்ந்த ஆண் மண்டலியில் எவரும், எந்தப் பெண்ணுடனும் பேசக் கூடாது என்ற கட்டளை நடைமுறைக்கு வந்தது. ஒரு நாள் பாபா, பாவ் கல்சூரியை பஜாருக்கு அனுப்பி, துடைப்பங்களை வாங்கி வருமாறு கூறினார்; பொதுவாக, பெண் வியாபாரிகள் மட்டுமே இவற்றை விற்பனை செய்தனர்; பாவ், பஜார் முழுவதும் தேடியும், துடைப்பங்கள் விற்கும் எந்த ஓர் ஆண்மகனையும் அவரால் கண்டுகொள்ள முடியவில்லை. என்ன செய்வது என யோசனை செய்துகொண்டிருந்த போது, ஒரு பெண்மணி அவரது மகனைப் பொறுப்பாக விட்டுவிட்டு, கடையிலிருந்து வெளியே சென்ற வேளையில் பாவ், இதையே தக்க தருணமாகப் பயன்படுத்தி, அவனிடம் சென்று, ஐந்து துடைப்பங்களை வாங்கினார். தாயார் திரும்பி வருவதைக் கண்டதும், பணத்தை அவசரமாகத் தரையில் வீசிவிட்டு, அந்தப் பெண்மணியுடன் பேசுவதைத் தவிர்த்து, துடைப்பங்களுடன் பாவ் விரைந்தார். அந்தப் பெண்மணி, அவருடைய வினோதமான நடத்தையைக் கண்டு, தலையை அசைத்து அவரைப் பார்த்தார்.

பாவ் கல்சூரிக்கு அருகிலிருந்த ஆலையிலிருந்து மாவு கொண்டு வரும் கடமையும் வழங்கப்பட்டது. ஒரு நாள் அலோபா, ஆலையிலிருந்து வரும் மாவு தரமானதாக இல்லை என்று பாபாவிடம் புகார் கூறவே, அவர், பாவ் கல்சூரியிடம், **“அலோபா கூறுவது உண்மைதான். மாவு அரைக்க வேறு ஆலை ஒன்றைத் தேடுங்கள்”** என்றார். அலோபா, அவருக்கு இரண்டு மைல் தொலைவில் அமைந்த வேறொரு மாவு ஆலையைக் காட்டினார். கனமான கோதுமை மூட்டையைத் தோளில் சுமந்தபடி, பாவ் அங்கு நடந்து செல்ல வேண்டியிருந்தது.

இரண்டு ஆலைகளிலும் அரைத்த மாவுகளுக்கு இடையே எந்த ஒரு சிறிய வித்தியாசமும் இல்லை; பாவ் கல்சூரி விரைவில் இந்த உண்மையை பாபாவின் கவனத்திற்கு கொண்டு வந்தபோது, அவர், **“என்ன கூறுகிறீர்கள்? வானுக்கும் பூமிக்கும் இடையேயான வித்தியாசம் உள்ளது! இந்தப் புதிய ஆலையில் மாவு அரைக்க வேண்டும் என்பது எனது விருப்பம். வித்தியாசம் எதுவும் இல்லை என்று ஏன் வலியுறுத்திக் கூறுகிறீர்கள்? மாவை ஏன் கருத்தில் கொள்ள வேண்டும்? எனது விருப்பத்தில் கவனம் செலுத்துங்கள்”** என்றார்.

இந்த நேரத்தில் சத்தாராவில் கைக்கோபாத் தொடர்பான மற்றுமொரு சம்பவம் நிகழ்ந்தது. முன்னாள் பார்சி பாதிரியாராக இருந்த கைக்கோபாத், எளிதில் திருப்திபடுத்த முடியாத, தீவிரமான நபர். அவர் ஒவ்வொரு நாளும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் உணவு உண்டு, தேநீர் அருந்துவது வழக்கம்; தாமதத்தை சற்றும் பொறுத்துக் கொள்வதில்லை. அவர் சரியாக காலை 11:00 மணிக்கு, மதிய உணவு உண்பதைப் பழக்கமாகக் கொண்டதால், ஒருமுறை, அவர் உணவு உண்ண சமையலறைக்குச் சென்றபோது, அரிசி பதமாக மேலும் ஐந்து நிமிடங்கள் ஆகும் என்ற நிலையில், காத்திருக்க விருப்பமின்றி, கைக்கோபாத் அதை அப்படியே உண்ணத் தொடங்கினார். அப்போது ரோஸ்வுட்டில் இருந்த பாபா, திடீரென ஜட்ஜ் பங்களாவில் தோன்றி, சமையலறைக்குச் சென்றபோது, அங்கு கைக்கோபாத் உணவருந்திக் கொண்டிருந்ததைக் கண்டார். அரிசியைப் பதம் பார்த்தபோது, அது அரை வேக்காடாக இருந்தது.

கைக்கோபாத்திடம் அதை உண்ணக் கூடாது என்று தடை விதித்தார். இந்த நேரத்தில், மீதமுள்ள அரிசி சமைக்கப்பட்டு தயாராக இருந்தது. பாபா அதை கைகோபாத்திற்குப் பரிமாறினார்; அதைத் தொடர்ந்து பாவ் கல்சூரி, அலோபா இருவரையும் அரைகுறையாக, பதமாகாமல் இருந்த சாதத்தை உண்ணுமாறு கூறினார்.

சில சமயங்களில், பாபா வேண்டுமென்றே மண்டலி இடையே சச்சரவுகளை உருவாக்குவதுண்டு. இந்த வழியில், உள்ளளவில் புதையுண்டிருக்கும் உணர்வுகள் வெளிப்பட்டு விரயமாக்கப்படும். ஒருமுறை, பைதூலைப் பார்த்து, கண் ஜாடை செய்து, டாக்டர் நீலுவின் முன்னிலையில் பாபா அவரிடம், “**நீங்கள் சில தினங்களுக்கு முன்னர், என்னிடம் நீலுவைப் பற்றி என்ன சொல்லிக் கொண்டிருந்தீர்கள்? அவர் கல்லூரியில் படிக்கும் போது, அவரை செருப்பால் அடித்தது யார்?**” என்று கேட்டார்.

பைதூல், பாபாவின் உட்குறிப்பை உணர்ந்து பதிலளித்தார், “கல்லூரியில் நீலு, அழகான பெண் ஒருத்தியைக் காதலித்தார்; அது, அந்தப் பெண்ணின் தந்தைக்குத் தெரிய வந்ததும், அவர் சந்தையின் மத்தியில் அவரை செருப்பால் அடித்தார்!”

டாக்டர் நீலுவின் கோபம் கொதித்தெழுந்தது. “இந்தக் காட்டுமிராண்டி (ஒன்றும் அறியா) ஈரானியின் இத்தகைய பொய்களை நீங்கள் ஏன் நம்புகிறீர்கள்? நான் கல்லூரியில் படிக்கும் போது, அவர் எங்கே இருந்தார்?” என்று பாபாவிடம் கேட்டார்.

“நான் உங்களுடன் இருந்தேன்!” பைதூல் பதிலளித்தார்.

“இதற்கு மேலும் பொய் பேசினால் செருப்பால் அடிப்பேன்!” என்று மிரட்டினார் நீலு.

பாபா அவர்களை அமைதியாக இருக்குமாறு சைகையால் தெரிவித்து, அந்தப் பெண்ணின் உண்மைக் கதை என்னவென்று விசாரித்தார். அதற்கு டாக்டர் நீலு, “அது எதுவாகவும் இருக்கலாம், ஆனால் இந்தப் படிப்பறிவற்ற ஈரானி, இதில் ஏன் மூக்கை நுழைக்கிறார்?”

"நான் பொய் சொல்கிறேன் என்றால், நீங்கள் ஏன் உண்மையைப் பேசக்கூடாது?" பைதூல் வினவினார்.

"என்னிடம் அதைச் சொல்ல நீங்கள் யார்?"

"அதை மறைக்க நீங்கள் யார்?"

டாக்டர் நீலு உடனே, "பாபா, இந்த முட்டாளை இந்த நொடியில் இங்கிருந்து போகச் சொல்லுங்கள் - இல்லையேல் நான் அவரை உதைக்காமல் விடமாட்டேன்" என்றார்.

பாபா, "**பைதூல் உங்களை விட வலிமையானவர். மாறாக அவர் உங்களை உதைக்கலாம்**" என்று சுட்டிக்காட்டினார்.

"ஆனால் அவர் ஏன் என்னைப் பற்றி பொய் பேசுகிறார்?"

"**அவர் எதையேனும் கேள்விப்பட்டிருக்கலாம்... எனக்கும் அதில் ஏதாவது இருக்க வேண்டும் எனத் தோன்றுகிறது**" என்றார் பாபா.

பைதூல் உடனே, "பாபா, அதை நான் உங்களுக்கு நிரூபிப்பேன். அதன் பின்பு நீங்கள் என்னை நம்புவீர்கள்" என்றார்.

"என்ன ஆதாரம் உங்களால் கொண்டு வர முடியும்?" நீலு கோரிக்கை விடுத்தார். "அந்தப் பெண்ணை நானே இங்கு அழைத்து வந்து, உங்களிடம் உண்மையைச் சொல்லச் சொல்கிறேன்."

பாபா புருவத்தை உயர்த்தி, "**அப்படியானால், நீங்கள் ஒரு பெண்ணின் பின்னால் இருந்தீர்கள்**" என்று சைகையால் குறிப்பிட்டார்.

"நான் அவள் பின்னால் செல்லவில்லை, பாபா. நான் அவளைத் தொட்டதுமில்லை! ஆனால் அவள் என்னை நேசித்தாள், என்னால் இன்றுவரை திருமணமாகாமல் இருக்கிறாள்."

"**அப்படியானால், இதை ஏன் இதுவரை என்னிடம் சொல்லவில்லை? இத்தனை வருடங்களாக என்னிடம் ஏன் இதை மறைத்தீர்கள்? பைதூல் இப்போது எனது கண்களைத் திறந்தது நல்லது; இல்லையேல், நான் அறிந்திருக்க மாட்டேன்.**"

"அவளைப் பற்றி நான் உங்களிடம் சொல்லும் அளவுக்கு அவளுடன் எனக்கு என்ன தொடர்பு இருந்தது?"

"**அந்தப் பெண் உங்களை நேசிப்பதால் இன்னும் திருமணமாகாமல் இருக்கிறாள், இல்லையா? எனவே, அவளுடைய மனப்படிவங்கள் உங்களைத் தொற்றிக்கொண்டுள்ளன; நீங்கள் என்னுடன் இருப்பதால், நான் இந்த பாரத்தை சுமக்க வேண்டும். நீங்கள் என்னிடம் தெரிவித்திருந்தால், இந்த சுமை என் மீது இருந்திருக்காது. சரி, இப்போது அதைக் குறித்து கவலைப்படாதீர்கள்.**"

நீலு, இந்தப் பழைய காதல் விவகாரத்தை முழுவதுமாக மறந்துவிட்டார்; பைதூலுக்கு அது குறித்து எதுவும் தெரியாது. ஆனால், அவர்களுக்கிடையே இந்த மோதலைத் தூண்டுவதன் மூலம், பாபா அந்த ரகசியத்தை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்ததோடு, நீலுவை அவருள் புதைந்திருந்த ஆழ் உணர்வுகளிலிருந்து விடுவித்தார்.

ஒரு நாள் ராம்பாவ் (RAMBHAU) என்றழைக்கப்பட்ட மஸ்தை ஒத்த ஒரு நபர், பைதூலால் பூனாவிலிருந்து சத்தாராவிற்கு அழைத்து வரப்பட்டார். அவர் முழுநிறை மஸ்தாக இல்லாமல் இருந்தாலும், ஓரளவு அதன் வாசத்தை நுகர்ந்து, ஆன்மீக போதையில் இருந்தார். பாவ் கல்சூரி அவரை கவனித்துக் கொள்ளுமாறு கட்டளையிடப்பட்டார் - அவருக்கு உணவு பரிமாறவும், படுக்கையைத் தயார் செய்யவும், பொதுவாக அவரது தேவைகள் அனைத்தையும் கண்காணிக்க வேண்டியிருந்தது. மேலும், ராம்பாவின் பாதங்களைக் கழுவி, ஏழு முறை அவரைத் தலைவணங்குமாறு பாபா, பாவ் கல்சூரிக்குக் கட்டளையிட்டார்.

ஒரு சந்தர்ப்பத்தில், பாவ் கல்சூரியிடம், "**இன்று, நான் ராம்பாவின் தலைமுடியை வெட்டி நீராட்டப் போகிறேன், எனவே மதியம் 1:30 மணிக்கு வேண்டிய அனைத்தையும் தயார் செய்து விடுங்கள்**" என்று பாபா அறிவுறுத்தினார். பாபா அவரை மூன்று அல்லது நான்கு முறை எச்சரித்து, "**சரியாக 1:30 மணிக்கு நான் அதைச் செய்யப் போகிறேன்; உஷாராக இருங்கள், ராம்பாவ் பங்களாவை விட்டு வெளியே செல்லாமல் பார்த்துக் கொள்ளுங்கள்**" என்று கூறினார்.

ராம்பாவ் ஒருபோதும் வெளியே செல்லமாட்டார்; அவர் எப்பொழுதும் ஒரே இடத்தில் அமைதியாக அமர்ந்திருந்தார். பாவ் கல்சூரி தேவையான ஏற்பாடுகளைச் செய்து, ராம்பாவை தயார் நிலையில் வைத்திருந்தார். ஆனால், பாவ் குளியலறையில் இருந்தபோது, ராம்பாவ் தனது அறையிலிருந்து நழுவி, முதல் முறையாக வெளியேறினார்.

சரியாக மதியம் 1:30 மணிக்கு, பாபா கிரா:ஃப்டனிலிருந்து ரோஸ்வுட்டிற்கு வந்தார். பாவ் கல்சூரி அப்போது ராம்பாவை அழைத்து வர, அவரது அறைக்குச் சென்றதும், அறை காலியாக இருப்பதைக் கண்டு திகைப்பில் ஆழ்ந்தார். அவர் இப்படி நடந்து கொள்வார் என்று சற்றும் எதிர்பார்க்கவில்லை; ஐந்து நிமிடங்கள் மட்டுமே பாவ் கல்சூரி அவரைத் தனியாக விட்டுச் சென்றார். மிகவும் அதிர்ச்சியடைந்த பாவ், பங்களா வளாகம் முழுவதும் தேடியும், அவரைக் கண்டுகொள்ள முடியவில்லை. பாவ் கல்சூரியை அழைத்து பாபா, "**நான் உங்களிடம் மஸ்தை அழைத்துவரச் சொன்னேன் அல்லவா? நீங்கள் என்ன செய்து கொண்டிருந்தீர்கள்? உங்களுக்காக நான் இங்கே காத்திருக்கிறேன்... அவர் எங்கே?**" என வினவினார்.

பாவ் தடுமாறினார், "மஸ்த் எங்கேயோ ஓடிவிட்டார்."

பாபா சீற்றமடைந்து பாவ் கல்சூரியைக் கடிந்துகொண்டார்: "**கவனமாக இருக்குமாறு உங்களை, நான் பலமுறை எச்சரித்தேன். நீங்கள் எனது பேச்சைக் கேட்கவில்லை. நீங்கள் எவ்வளவு அலட்சியமாக இருக்கிறீர்கள்! நான் உங்களை எப்படி நம்புவது? எனது பணியைப் பாழாக்கிவிட்டீர்கள்.**"

தொடர்ந்து பாபா, "**ராம்பாவைக் கண்டுபிடித்து, அரை மணி நேரத்திற்குள் அழைத்து வாருங்கள், இல்லையேல் நீங்கள், உங்கள் பெட்டி படுக்கைகளைச் சுருட்டிக்கொண்டு வெளியேற வேண்டியதுதான்!**" என்றார்.

பாவ் கல்சூரி சைக்கிளில் சென்று, சாலைகளில் எங்கும் தேடியும் ராம்பாவை காணவில்லை; பதட்டத்தில் மனமுடைந்து வெறுங்கையுடன் திரும்பினார். பாபாவின் சீற்றம் தணிந்தபாடில்லை, உள்ளூர குமுறிக் கொண்டிருந்தார். பாபா, அவரை மீண்டும் பெண்டுவுடன் காரில் அனுப்பியும், அவர்களால் மஸ்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

ராம்பாவ் காணாமல் போனதை எண்ணி, அச்சத்தில் நடுங்கி, பாவ் கல்சூரி, பாபாவின் முன்னிலையில் குற்ற உணர்வுடன் நின்றார். கடைசியாக, பாபா அவருக்குக் கட்டளையிட்டார், **"இப்போது, நடந்தே செல்லுங்கள். மஸ்தைக் கண்டுபிடித்து, ஐந்தே நிமிடங்களில் அவருடன் திரும்பி வாருங்கள். இல்லையேல், நீங்கள் இங்கே இருக்க அனுமதிக்கப்பட மாட்டீர்கள்."**

பாவ் கல்சூரி வெளியே சென்ற அந்த வேளையில், பங்களாவை நோக்கி வரும் சாலையில் ராம்பாவ் நடந்து வந்துகொண்டிருந்ததைக் கண்டார்! ஆழ்ந்த நிம்மதி அடைந்த பாவ் கல்சூரி, அவரை உடனடியாக பாபாவிடம் அழைத்துச் சென்றதும், அவர் **"நீங்கள் அவரை எங்கே கண்டுபிடித்தீர்கள்?"** என வினவினார்.

"வெளியே சாலையில்."

**"மஸ்த் இதுவரை இப்படி அலைந்து திரிந்ததில்லை, இன்று அவர் எப்படிச் சென்றார்?"**

"இது உண்மையிலேயே ஆச்சரியமாக உள்ளது," பாவ் கல்சூரி கூறினார். "நான் அவரை சாலையில் எல்லா திசைகளிலும் தேடினேன், ஆனால் எங்கும் அவரைக் காணமுடியவில்லை. அவர் எங்கே இருந்தார், எப்படித் திரும்பி வந்தார் என்று எனக்குத் தெரியவில்லை." அதற்கு பாபா, **"என் எச்சரிக்கையை நீங்கள் சரியாக கவனிக்கவில்லை, அதனால்தான் அவர் வெளியே சென்றார். இது உங்களுக்கு ஒரு பாடமாக இருக்கட்டும்"** என்று பதிலளித்தார்.

ராம்பாவ், பொது சிறுநீர் கழிப்பிடம் ஒன்றில் மறைந்து கொண்டார் என்றும், பாபா, பாவ் கல்சூரியை மீண்டும் வெளியே தேட அனுப்பிய அந்த வேளையில், ராம்பாவ் கழிப்பிடத்திலிருந்து சாலையில் வந்ததாக பின்னர் அறியப்பட்டது.

1956 செப்டம்பர் 1 சனிக்கிழமையன்று, பாபாவின் ஓராண்டு கால ஏகாந்தவாசம் உச்ச கட்டத்தை எட்டியது. அனைத்து கடிதப் பரிமாற்றங்களும் முற்றிலுமாக நிறுத்தப்பட்டன; மேலும் வெளியூர் அன்பர்கள் சத்தாராவிற்கு வருவது கண்டிப்பாகத் தடை செய்யப்பட்டது. அந்த நாள் முழுவதும் பாபா தண்ணீர் கூட அருந்தாமல் இருந்தார். ஆனால் அந்தக் கால நிகழ்வுகள் சீராக நடந்தபாடில்லை; மணி (பில் லெ பாஜுக்கு - BILL LE PAGE - எழுதிய கடிதத்தில்) விவரித்தபடி: "செப்டம்பர் 1ஆம் தேதி, மாயா மிகவும் கச்சிதமாக உழைத்தாள்; மேலும், தவறாக நடக்கக்கூடிய அனைத்தும், அவ்வாறே நடந்ததாகத் தோன்றியது. முடிவில், பாபா தனது சிறப்புப் பணியின் காரணமாக, அதை அன்று

ஆரம்பித்ததாகக் கூறினார், ஆனால், மாயாவின் எதிர்ப்பு அட்டகாசமாக இருந்தது (அல்லது நான் அடிமட்டமாக இருந்ததாகச் சொல்கிறேனா)" என்று பாபா விளக்கினார்.

2ஆம் தேதி முதல் 5ஆம் தேதி வரை, காலை 8:00 முதல் 11:00 மணி வரை, பாபா, கைக்கோபாத்துடன் 'ஜட்ஜ்' பங்களாவில் ஏகாந்தவாசத்தில் பணிபுரிந்தார். மேலும், தேவைப்பட்டால், தினசரி பிற்பகல் 3:00 முதல் 5:00 மணி வரையிலும் பணியைத் தொடர நேர்ந்தது.

செப்டம்பர் 6ஆம் நாள், அதே பங்களாவில், பாபா, 200 ஏழை சிறுவர்களின் கால்களைக் கழுவி, தலைவணங்கி, அவர்களுக்கு இனிப்பு ரவை வழங்கி, ஒவ்வொருவருக்கும் ஒரு சட்டைக்குத் தேவையான துணியைக் கொடுத்தார். ஏழை நிகழ்ச்சிக்கான செலவுகளை ஐரீன் கோனிபியர் (IRENE CONYBEARE), பாபாவிடம் பரிசாக வழங்கினார். மேலும் 50 குழந்தைகள் வந்தபோது, அவர்களுக்கும் இனிப்புகள் பிரசாதமாக வழங்கப்பட்டன.

எரச், ஏறக்குறைய ஒரு வாரம் பூனா சென்று, ஏழை நிகழ்ச்சிக்கு முந்தைய நாள் சத்தாராவிற்குத் திரும்பி வந்தார். பூனாவில் இருந்தபோது, அவருக்கு மணியிடமிருந்து இந்தத் தொலைத்தந்தி வந்தது: "**சாது வாஸ்வானியை** (SANT VASWANI) **சந்தித்து, பாபாவைப் பற்றிய அனைத்தும் அவரிடம் எடுத்துக் கூறுங்கள், அவர் பாபாவின் பிரியமான, அரிய குழந்தைகளில் ஒருவர் என்றும் சொல்லுங்கள்**." அதன்படி, செப்டம்பர் 4ஆம் தேதி மாலை, 7:30 மணிக்கு, சாது வாஸ்வானியை சந்தித்து, மெஹர் பாபாவைக் குறித்து எடுத்துரைத்தார். சாது வாஸ்வானி, மிக்க மகிழ்ச்சியடைந்து, பாபாவை நினைவு கூர்ந்தார் என்றும் அவர் தனது அன்பைத் தெரிவித்ததாகவும் கூறி அனுப்பினார். பூனாவில் அமைந்த அவரது பள்ளிக்கு விஜயம் செய்ய, பாபாவிடம் அவரது இதயப்பூர்வமான அழைப்பைத் தெரிவிக்குமாறு எரச்சிடம் கேட்டுக்கொண்டார், மேலும் பாபாவிடம் செய்தியைத் தெரிவிப்பதாக எரச் உறுதியளித்தார்.

அதுபோல, பாபாவின் செய்தியை சாது நித்யானந்தாவிற்கும் (SAINT NITYANANDA) வழங்க எரச் ஒருமுறை குஜராத் மாநிலத்தில் கணேஷ்புரிக்கு (GANESHPURI) அனுப்பப்பட்டார்; மேலும் அதே செய்தியை, போலி துறவியான மங்காராம் மிர்சந்தானிக்கும் (MANGHARAM MIRCHANDANI) வழங்க மும்பைக்குச் சென்றார். இந்தியா-பாகிஸ்தான் பிரிவினைக்குப் பிறகு, பாகிஸ்தானிலிருந்து இந்தியாவிற்கு வந்த மிர்சந்தானி, ஒரு துறவி போல தன்னை பாவித்து, அப்பாவி மக்களை ஏமாற்றி வந்தார். சமீபத்தில் மும்பையில் நடந்த பாபாவின் பிறந்தநாள் விழாவில், அவர் தலைமைப் பேச்சாளராக இருந்தார். ஆனால் எரச், '**அனைத்து மேல்நிலை ஆத்மாக்களும் பாபாவின் அன்புக்குரிய குழந்தைகள்**; **அவர் அனைத்து நதிகளும் சென்றடையும் இறை பெருங் கடல்**' என்ற பாபாவின் செய்தியைத் தெரிவித்தபோது, மிர்சந்தானி கோபமாக பதிலளித்து, பாபாவை மோசமாக இழிவுபடுத்தத் தொடங்கினார். எரச் இதை பாபாவிடம் தெரிவித்த

வேளையில் அவர், சாது என்று அழைக்கப்படும் மிர்சந்தானியின் அவதூறுகளால் சிறிதளவும் வருத்தப்படவில்லை. மிர்சந்தானியைத் தொடர்புகொள்வதற்கு, அவர் தனது சொந்த காரணங்களைக் கொண்டிருந்தார்.

1956 செப்டம்பர் 7 வெள்ளியன்று, பாபா சத்தாராவிலிருந்து பெண்டு, நீலு, பைதூல், பாவ் கல்சூரி, எரச் ஆகியோருடன் ஹைதராபாத் (HYDERABAD) மற்றும் அதைச் சூழ்ந்த இடங்களுக்கு, நான்கு நாள் பயணமாக நரிமனின் காரில் புறப்பட்டார். நல்கொண்டா (NALGONDA) என்ற குறுநகரத்தில், ஒரு சிறிய சாலையோர தேநீர் கடையில் நிறுத்துமாறு பாபா, எரச்சிடம் (ஓட்டுநர்) சைகையால் தெரிவித்தார். எரச் உரிமையாளரிடம் நல்ல தேநீர் தயாரிக்கக் கூறி, உள்ளே சென்று கோப்பைகள் சுத்தமாக உள்ளனவா என்பதை ஊர்ஜிதம் செய்தார்.

காரில் அமர்ந்திருந்த பாபாவின் திறந்த கார் கதவு அருகே, பாவ் கல்சூரி நின்று கொண்டிருந்தார். சிறிது நேரத்தில் பாபா, பாவ் கல்சூரியிடம் உள்ளே சென்று தேநீர் தயாராகி விட்டதா என்று பார்த்து வருமாறு கூறினார். அவர் தேநீரைக் கொண்டு வந்ததும், பாபா, தனது கோப்பையில் இருந்த தேநீரை தட்டில் ஊற்றி அருந்தத் தொடங்கினார். பாபா, கோப்பையை வைத்திருந்த வலது கை மூலமாக ஏதோ சைகையால் தெரிவித்ததை, தட்டு ஓரளவு மறைத்ததால், பாவ் கல்சூரியால் அவரது கை சைகைகளைப் புரிந்துகொள்ள முடியவில்லை.

மரத்தின்கீழ் தரையில் அமர்ந்திருந்த சிறுவன் ஒருவன், பாபாவையே பார்த்துக் கொண்டிருந்தான்; பாபாவும் அவனை கவனித்தார். பாபா சைகையால் தொடர்ந்து தெரிவித்ததை பாவ் கல்சூரி புரிந்து கொள்ள முடியாமல் தவித்தார். “சர்க்கரை வேண்டுமா பாபா?” இல்லை என்று தலையசைத்தார் பாபா.

திடீரென சிறுவன் எழுந்து நின்று உரத்த குரலில், “அவருக்குப் பால் வேண்டும்!” என்று கூறியபோது, பாபா ‘**ஆம்**’ என்று தலையசைத்தார்; பாவ் உடனே பால் கொண்டு வந்தார்.

மண்டலி திரும்பி வந்ததும், பாவ் கல்சூரியைச் சுட்டிக்காட்டி, பாபா, “**இவரைப் பாருங்கள், என்னுடன் மூன்று வருடங்களாக இருந்து வருகிறார்; இதுவரையில் நான் கேட்ட பால் போன்ற ஓர் எளிய விஷயத்தை அவரால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆனால்** (சிறுவனைக் காட்டி) **அந்த சிறுவன் அதைப் புரிந்துகொண்டு விளக்க வேண்டியிருந்தது, பாவ் எப்படிப்பட்ட மனிதர் பாருங்கள்?**” என்றார்.

சிறுவன் தரையில் அமர்ந்திருந்ததால், பாபாவின் கை சைகைகளைப் பார்க்க முடிந்தது, அதே சமயம் பாவ் நின்று கொண்டிருந்தார். ஆனால், பாவ் கல்சூரி அமைதியாக இருந்தார்; பின்னர் அவர்கள் ஹைதராபாத்தை நோக்கி பயணத்தைத் தொடர்ந்து, அங்கு பாபா ஏற்கனவே சந்தித்த சில மஸ்துகளைத் தொடர்பு கொண்டு, பணிபுரிந்தார். மூன்று நாட்களுக்குப் பின்னர், அவர்கள் சத்தாராவிற்குத் திரும்பிக் கொண்டிருந்த வேளையில், பாபா மீண்டும் அதே சிறிய ஹோட்டலில் தேநீர் அருந்துவதற்காக நின்றார். அந்த சிறுவனும் அப்போது, அதே மரத்தின் கீழ் அமர்ந்திருந்தான்; அவர்கள் வந்ததும், சிறுவன்

பாபாவை உற்று நோக்கத் தொடங்கினான். பாபா, பாவ் கல்சூரியை தேநீர் அருந்த உள்ளே அனுப்பியதும், சிறுவன் அவரிடம் வந்து, “அவர் யார்?” என வினவினான். பாபாவின் ஏகாந்தவாச வேளையில் தொந்தரவு செய்வதை விரும்பாததால், பாவ் அவனிடம், “போய் விடு” என்றார். சிறுவன், தனது இடத்திற்குத் திரும்பிச் சென்று, பாபாவை உன்னிப்பாகப் பார்த்துக் கொண்டிருக்க, அவரும் தேநீர் அருந்திக் கொண்டே சிறுவனைப் பார்த்தார்.

புது வாழ்வின் போது, பாபா, டாக்டர் தௌலத் ஸிங்கிடம் (DR. DAULAT SINGH) ஒரு நாள் அவரது இல்லத்திற்கு விஜயம் செய்வதாக உறுதியளித்தார். இந்தப் பயணத்தின் போது, ஸெக்கந்திராபாத்தில் (SECUNDERABAD) வாழ்ந்த தௌலத் ஸிங்கின் இல்லத்திற்கு திடீர் விஜயம் செய்தார். தௌலத் ஸிங் அளவிலா மகிழ்ச்சியில் மூழ்கினார்; மேலும் சத்தாராவிற்குப் பயணத்தைத் தொடங்கும் முன்பு, பாபா அவரது முழுக் குடும்பத்தையும் சந்தித்தார்.

செப்டம்பர் 10ஆம் நாள், சத்தாராவிற்குக் காரில் திரும்பிச் செல்லும் வேளையில், படர்கா (BATARGA) கிராமத்தில் ஒரு சிறந்த மஸ்த் வாழ்ந்ததாகத் தெரியவந்தது. கிராமத்தை நோக்கிச் செல்லும் சாலை, மழையால் முற்றிலும் சேதமடைந்ததால், அவர்களால் காரில் கிராமத்திற்குள் செல்ல முடியவில்லை. எனவே, தங்கள் காரை சாலையோரம் நிறுத்திவிட்டு, பாபா கிராமத்திற்கு கால்நடையாக புறப்பட்டு, உள்பகுதியில் ஆறு மைல் நடந்து சென்றார். பாதை செப்பனிடப்படாமல், சேறு நிறைந்து, முட்கள் மற்றும் கூழாங்கற்களுடன், மேடும் பள்ளமுமாக இருந்ததால், பாபாவும் மண்டலியும் வெறுங்காலுடன் நடந்து சென்று, அதே வழியில் திரும்பி வந்தனர். அவர்கள் நடந்து சென்ற பாதையின் ஒரு பகுதியில் முழங்கால் அளவு தண்ணீர் இருந்தது.

இத்தனை முயற்சிகளுக்குப் பின்னர், அவர்கள் கிராமத்திற்குள் நுழைந்தபோது, தாங்கள் பார்க்க வந்தவர் உண்மையில் ஒரு மஸ்த் அல்ல, ஆனால் மந்திரக் கவசங்கள் (தாயத்து) வழங்குபவர் என்பது தெரியவந்தது. பாபா அந்த இடத்தைச் சென்றடைந்த போது மாந்திரீக மருத்துவர் வீட்டில் இல்லை, ஆனால் அவர், மும்பையிலிருந்து ஒரு செல்வந்தர் அவரது ஆலோசனையை நாடி வந்திருப்பதாக அழைக்கப்பட்டார். பாபா, அவருக்காக வீட்டில் காத்திருந்தார். அவர் வந்ததும், பாபா அவரை வணங்கி, ஐந்து ரூபாய் பிரசாதமாக வழங்கி, உடனடியாகப் புறப்பட்டு ஆறு மைல் தூரம் காரை நோக்கி மறுபடியும் நடக்க ஆரம்பித்தார்.

வழியில் பாபா, “**அந்த மனிதர் நல்லவராக அல்லது தீயவராக இருந்தாலும், அவர் என்னுடையவர்**” என்று குறிப்பிட்டார்.

இந்தத் தொடர்புக்குப் பிறகு, பாபா, குல்பர்காவைச் (GULBARGA) சென்றடையும் அவசரத்தில் இருந்தார். எவரும் மதிய உணவு உண்ணவில்லை. பிற்பகல் சுமார் 2:30 மணியளவில் குல்பர்காவிற்கு காரில் செல்லும் போது, பாபா அவர்களை ஒரு பெரிய வாகன விபத்திலிருந்து காப்பாற்ற நேர்ந்தது. மண்டலியால் அதை ஓர் அதிசயம் என்று மட்டுமே விவரிக்க

முடிந்தது. சாலையின் சாய்விலிருந்து ஆழமான ஒரு பள்ளத்தில் நழுவி, கார் தரையிலிருந்து ஒரு சில அங்குலங்கள் மட்டுமே அதன் பக்கவாட்டில் சாய்ந்து நின்றது; இல்லையேல் அதை ஒட்டியிருந்த ஆழமான பள்ளத்தில் விழுந்திருக்கும்; இதை அதிசயம் என்று கூறுவதைத் தவிர, வேறு எந்த விளக்கத்திற்கும் இடமில்லை. “இது எப்படி நடந்தது என்பதை என்னால் இன்னும் புரிந்து கொள்ள முடியவில்லை,” என்று பாவ் கல்சூரி பின்பு மணியிடம் கூறினார். “ஒரு வினாடி, எனது முகம் கிட்டத்தட்ட தரையைத் தொட்டது, அடுத்த கணம் நாங்கள் மீண்டும் சாலையில், நான்கு சக்கரங்களில் இருந்தோம். பாபாவின் கை, எரச்சின் கையை உறுதியாகப் பற்றிக்கொண்டதை நான் கண்டேன்.” கார் பாபாவின் பக்கத்தில் சாய்ந்த அந்த நேரத்தில், எரச் ஸ்டீயரிங் மீதான கட்டுப்பாட்டை இழந்து, அவர் பாபா மீது வீழவே, (கிட்டத்தட்ட சாத்தியமற்ற கோணத்தில்) பாபா, எரச்சை மீண்டும் அவரது இருக்கையை நோக்கித் தள்ளினார்; இதனால் அவர், ஸ்டீயரிங் வீலை இழுத்து, காரை பாதுகாப்பாக கொண்டு வரமுடிந்தது; அனைத்தும் கண்ணிமைக்கும் நேரத்தில் நடந்து முடிந்தது. இது ஓர் அதிசயம் என்று மண்டலி கூறியதும், பாபா அப்பாவித்தனமாகப் பார்த்து, “**எனக்கு இது குறித்து எதுவும் தெரியாது**” என்று சைகையால் தெரிவித்தார்.

அவர்கள் காரை ஓட்டிக்கொண்டு ஒரு கிராமத்திற்கு வந்தபோது, அங்கு நடுத்தர வயதில் நீண்ட முடியுடன் கூடிய ஒரு மஸ்த், கள் அருந்திக்கொண்டிருந்த அந்த நேரத்தில் பாபா அவரது பாதங்களைத் தொட்டு வணங்கி, ஐந்து ரூபாய் வழங்கினார். அவர்கள் அதைத் தொடர்ந்து ஸாங்க்ளி (SANGLI) நகருக்குப் புறப்பட்டுச் சென்று, அங்கு பாபா ஒரு சிறப்பான மேல்நிலை மஸ்தைத் தொடர்பு கொண்டார். பாபா முன்னர் அவருடன் பணிபுரிந்தார், அவரை மீண்டும் பார்த்ததில் மிக்க மகிழ்ச்சி அடைந்தார்.

மஸ்த் தொடர்புகளுக்காக இரவும் பகலும் பயணித்த பாபா, செப்டம்பர் 11ஆம் தேதி மாலை சத்தாராவிற்குத் திரும்பி வந்தார்.

1956 செப்டம்பர் 15ஆம் தேதி சனிக்கிழமை மாலை முதல், 16 மாலை வரை, பாபா 24 மணிநேரம் தண்ணீர் கூட அருந்தாமல் உபவாசம் மேற்கொண்டு, மாலை 6.50 மணிக்கு அதைக் கைவிட்டார். 16ஆம் தேதி அனைவருக்கும் இனிப்புகளை வழங்கினார்.

செப்டம்பர் 18 முதல் 30ஆம் தேதி வரை, பாபா, கைக்கோபாத்துடன் ‘ஜட்ஜ்’ பங்களாவில் காலையில் மூன்று மணி நேரமும், மதியம் இரண்டு மணி நேரமும் ஏகாந்தவாசத்தில் பணிபுரிந்தார்.

1956 அக்டோபர் 1 அன்று இந்தியா, பாகிஸ்தான் தேசங்களில் வாழும் பாபா அன்பர்களுக்காக வெளியிடப்பட்ட சுற்றறிக்கையில் (செப்டம்பர் 22 அன்று எடுத்துரைக்கப்பட்டது), அவர் 1957 நவம்பர் 7 முதல் டிசம்பர் 7 வரை, மெஹராபாத்தில் ஒரு சகவாச நிகழ்ச்சி நடத்த முடிவு செய்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. ஆண்களும் பெண்களும் அதில் கலந்துகொள்ள

அழைக்கப்படுவார்கள். 1955ஆம் ஆண்டில் நிகழ்ந்தது போலவே, தலா ஐந்து நாட்களுக்கு, நான்கு குழுக்கள் பங்கெடுக்க வேண்டும். சுற்றறிக்கையின்படி, **“முன்னெப்போதும் நடந்திராத இந்தக் கூட்டத்தில், மேற்கத்திய ஆண், பெண் அன்பர்கள் மட்டுமின்றி, இந்தியாவில் வாழும் மதிப்பும் மரியாதைக்கும் உரிய, பிரபலமான புனிதர்கள் மற்றும் மஸ்துகளில் சிலரும் அடங்குவர்.”** இந்த நிகழ்ச்சியில் பங்கெடுக்கும் எண்ணத்தில், மெஹராபாத்திற்கு வருவதற்கான வாய்ப்பைக் கண்டு மக்கள் பரவசமடைந்தனர் என்பதைச் சொல்லத் தேவையில்லை - ஆனால் அவர்கள் இன்னும் பதிமூன்று மாதங்கள் காத்திருக்க வேண்டியிருந்தது!

சகவாச நிகழ்ச்சிக்காக எதிர்பார்க்கப்படும் 225 மேற்கத்திய அன்பர்களுக்கும், 1,500 கிழக்கத்திய மக்களுக்கும் தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் செய்ய, ஒவ்வொரு மேற்கத்திய நண்பரும் $300 அன்புப் பரிசாக வழங்கினால், நிதி போதுமானதாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டது; இது அவர்கள் இந்தியாவில் தங்கும் மாதத்தில், அனைத்து மேற்கத்திய சகவாசிகளுக்கான செலவுகளுக்காகவும் பயன்படுத்தப்படும். இந்தத் தொகையை பாபா அங்கீகரித்தார். மண்டலியில் ஒருவர், இது தோராயமாகக் கணக்கிடப்பட்டது மட்டுமே என்று கூறி, “நிதி போதுமானதாக இல்லாவிட்டால் என்ன செய்வது?” எனக் கேள்வி எழுப்பினார்.

பாபா சிரித்துக்கொண்டே, **“நாம் அனைவரும் உபவாசம் இருந்து ஞாயிற்றுக்கிழமை மட்டும் உண்ணவேண்டும்”** என்று கேலி செய்தார்.

1956 அக்டோபர் 1 திங்கட்கிழமை அன்று, பாபா மீண்டும் 24 மணி நேரம் தண்ணீர் கூட அருந்தாமல் உபவாசம் மேற்கொண்டார். இரண்டு நாட்களுக்குப் பிறகு, 3ஆம் தேதி, மஸ்த் தொடர்புக்காக, எரச், நீலு இருவருடன் நரிமனின் காரில் மும்பைக்குப் புறப்பட்டுச் சென்று, அனைவரும் ஆஷியானாவில் தங்கிய வேளையில் பாபா, நரிமனைத் தவிர வேறு எவரையும் பார்க்கவில்லை. ஆஷியானாவிலிருந்து அர்னவாஸ், கோஹெரின் சகோதரி கேட்டி இருவரும் தாதரில் அர்னவாஸின் குடும்ப இல்லத்தில் தங்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

பாபா இதற்கு முன்னதாக பணிபுரிந்த மும்பையில் வாழும் சில மஸ்துகளை மூன்று நாட்கள் தொடர்பு கொண்ட பின்னர், அவர் 6ஆம் தேதி எரச், நீலு, பைதூல் ஆகியோருடன் மெஹராஸாத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். (செப்டம்பர் 29 அன்று, மஸ்த் நீல்கந்த்வாலாவை (MAST NILKANTHWALA) மும்பைக்கு அழைத்து வர, பைதூல் ஹரித்வாருக்குச் சென்றிருந்தார்; ஆனால், மஸ்த் வர மறுத்ததால் அந்தத் திட்டம் தோல்வியை சந்தித்தது.) மெஹராஸாத்தில் தனியாகத் தங்கியிருந்த காக்கா பாரியாவுடன் பாபா, இரண்டு நாட்கள் வெவ்வேறு விஷயங்களைப் பற்றி விவாதித்த வேளையில், அவருடன் ஆதி சீனியரும் கலந்துகொண்டார். சகன் வழக்கம் போல் இரவு நேர கண்காணிப்புப் பணிக்காக அழைக்கப்பட்டார்.



**1956** அக்டோபர் தஸரா தினத்தன்று மெஹரா மற்றும் ஷீபாவுடன் பாபா
(BABA WITH MEHERA & SHEBA, ON DASSERA, OCTOBER 1956)

ஆதி சீனியருடன் உரையாடும் போது, பாபா தனது கையால் எழுதப்பட்ட பழைய பயிற்சிப் புத்தகம் ஒன்றை ஆய்வு செய்து, '**ஆதியிடம் அதைத் தட்டச்சு செய்யுமாறும், அதில் பதிவு செய்யப்பட்ட கருத்துக்கள் வேறு எங்கேயேனும் விவரிக்கப்பட்டுள்ளதா**' என்பதைக் கண்டறியுமாறும் கேட்டுக்கொண்டார்.

அக்டோபர் 8ஆம் நாள் சத்தாரா செல்லும் வழியில் உடல்நலம் குன்றி இருந்த மஸ்த் அலி ஷாவைப் பார்க்க, பாபா மெஹராபாத் சென்றார்.

பாபா, சத்தாராவிற்குத் திரும்பி வந்ததும், அவர் மீண்டும் இரண்டு தனித்தனி நாட்கள் - அக்டோபர் 10, 12 தேதிகளில் - 24 மணி நேரம் தண்ணீர் கூட அருந்தாமல் உபவாசம் கடைப்பிடித்தார். மஸ்த் தொடர்புகளுக்காக 12ஆம் தேதி கோலாப்பூருக்கும் (KOLHAPUR) பயணம் செய்தார்.

நிர்வாண் (NIRVAN), நிர்விகல்ப் (NIRVIKALP) எனும் தெய்வீக நிலைகளைக் குறித்த சில விளக்கங்களைக் கேட்டு, ஆதி சீனியர் பாபாவிற்குக் கடிதம் எழுதியிருந்ததைத் தொடர்ந்து, அக்டோபர் 13ஆம் நாள், பாபா இரு நிலைகளையும் விளக்கி பாவ் கல்சூரி மூலம் பதில் ஒன்றை எடுத்துரைத்தார்.

1956 அக்டோபர் 14 ஞாயிற்றுக்கிழமை, தஸரா விடுமுறை நாளன்று, மெஹரா, ஷீபாவை பிரமாண்டமாக அலங்கரித்து, பாபாவின் முன்னிலையில் குதிரையை அணிவகுப்பில் அழைத்துச் சென்றார். பாபா, ஷீபாவையும் (SHEBA), மணியின் செல்லப்பிராணியான காக்கர் ஸ்பானியல் பீட்டரையும் (COCKER SPANIAL, PETER) விரும்பினார். அன்று, பாபா, மெஹரா, மணி, நாஜா, ரானோ, கோஹெர், மெஹரு ஆகியோரை கிருஷ்ணா மற்றும் வென்னா நதிகளின் (VENNA RIVER) சங்கமத்தைப் பார்வையிட அழைத்துச் சென்றார்.

அக்டோபர் 15ஆம் தேதி பாபா, மீண்டும் 24 மணி நேரம் தண்ணீர் அருந்தாமல் உபவாசம் மேற்கொண்டார். ஆயினும்கூட, அவர் வழக்கம் போல, கைக்கோபாத்துடன் தனது ஏகாந்தவாசப் பணியைத் தொடர்ந்தார் - கைக்கோபாத் பிரார்த்தனை செய்யும் வேளையில் பாபா அவரை தலைவணங்கினார்.

அக்டோபர் 21 ஞாயிற்றுக்கிழமை எரச், டாக்டர் நீலு, பெண்டு ஆகியோருடன் பாபா காரில் மஸ்த் பயணத்திற்காகப் புறப்பட்டுச் சென்றார். பைதூல் முன்கூட்டியே அனுப்பி வைக்கப்பட்ட அன்றைய தினம், பாபா, நாசிக்கில் குழுவை சந்தித்தார். பாபா முதலில் மத்தியப் பிரதேசத்தில் குணா (GUNA) மற்றும் ராஜஸ்தானில் கோட்டா (KOTA, 650 மைல்கள் நேரடியாக வடக்கே) போன்ற இடங்களில் மஸ்துகளைத் தொடர்பு கொள்ளத் திட்டமிட்டார், ஆனால் முதல் நாளிலேயே, அவர் தனது திட்டத்தை மாற்றியமைத்து, இந்தூர் (INDORE) வரை மட்டுமே சென்றார். இரவும் பகலும் பயணம் செய்து, 23ஆம் தேதி மெஹராபாத்திற்குப் புறப்பட்டுச் சென்று, நள்ளிரவில் வந்தடைந்தவர், அலி ஷாவுடன் இரண்டு மணி நேரம் பணிபுரிந்தார்.

அந்த நேரத்தில் அலி ஷா தனது சமீபத்திய நோயிலிருந்து குணமடைந்து, நல்ல மனநிலையில் ஆரோக்கியமாக இருந்தார்; ஆனால்,

மஸ்தைப் பற்றி குறிப்பிடுகையில், அவர் உயிரைத் துறந்தால் அடக்கம் செய்வது குறித்து பாதிரி, சிது இருவருக்கும் பாபா அறிவுறுத்தினார். பாபா, குஷ்ரு குவார்ட்டர்ஸுக்குச் சென்றபோது, அங்கு அவர் ஆதி சீனியரிடமும் இதைப் பற்றி பேசினார். முஸ்லீம் சடங்கு முறைப்படி, மஸ்தின் இறுதிச் சடங்குகள் செய்யப்பட வேண்டும், பாபா அனைத்து செலவுகளையும் ஏற்றுக்கொள்வார் என்றும் தெரிவித்தார். "**இது பாப்ஜியுடனான எனது கடைசி தொடர்பு**" என்று பாபா குறிப்பிட்டதற்கு இணங்க, இரண்டு மாதங்களுக்குப் பின்னர், எதிர்பாராத விதமாக அலி ஷா, அவரது பௌதீக உடலைத் துறந்துவிட்டதால், உண்மையில் இது, இந்த மகத்தான மஸ்துடனான பாபாவின் இறுதி சந்திப்பு என்பதை நிரூபித்தது.

பாபா, மேலும் மஸ்த் தொடர்புகளுக்காக மும்பை சென்ற அவ்வேளையில், அங்குக் கடும் வெப்பம் நிலவியது. கிரிக்கெட் விளையாட்டுப்போட்டி நடைபெற்றுக் கொண்டிருந்ததால், பாபா, அக்டோபர் 26ஆம் நாள் முழு நேரத்தையும் விளையாட்டு மைதானத்தில் கழித்தார். ஆனால் வெப்பம் சுட்டெரித்தது, சிறிதளவு காற்றும் வீசவில்லை, அவர் ஆஷியானாவிற்குத் திரும்பிவந்த போது, சற்று நகைச்சுவை கலந்த தொனியில் குறிப்பிட்டார், "**எனது கடுமையான மஸ்த் பயணத்திற்குப் பிறகு, நான் ஓய்வெடுக்க விரும்பினேன். ஆனால் அதற்கு பதிலாக, இன்று நான் கிருஷ்ணனாகவும் ராமனாகவும் இருந்தபோது நிகழ்த்திய தவம் எனது நினைவுக்கு வந்தது!**"

ஒரு முறை, மும்பையில் பாபா மண்டலியுடன் கிரிக்கெட் விளையாட்டுப் போட்டியைக் பார்க்கச் சென்ற போது, ஜிம் மிஸ்திரியும் அவர்களுடன் சென்றார். டாக்டர் நீலு, ஜிம் மிஸ்திரி இருவருக்குமிடையே ஏற்பட்ட வாக்குவாதத்தில், பாபா தலையிட்டு இருவரையும் திட்டினார். பாபா, நீலுவிடம் ஏதோ கேட்டார், ஆனால் நீலு மிக்க வருத்தத்தில் இருந்ததால், அவர் பதிலளிக்க மறுத்துவிட்டார். ஏன் அமைதியாக இருக்கிறீர்கள் என்று பாபா கேட்டதற்கு நீலு, "இப்போது இங்கே ஒரு புதிய மனிதர் இருக்கிறார்," என்று ஜிம் மிஸ்திரியைக் குறிப்பிட்டுக் கூறினார்.

பாபா பதிலளித்தார், "**ஒருவர் புதியவர், வேறொருவர் வயதானவர் என்று நீங்கள் எவ்வாறு தீர்மானிக்க முடியும்? என்னைப் பார்க்காதவர்கள் பலர் இருக்கிறார்கள், ஆனால் அவர்கள் என்னுடன் மிகவும் நெருக்கமானவர்கள்.**"

பாபா, அக்டோபர் 27ஆம் தேதி மாலை நேரத்திலிருந்து நள்ளிரவு வரை மும்பையில் மஸ்த் தொடர்புக்காக வெளியே சென்று, தனது பணியை நிறைவுசெய்து மறுநாள் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை சத்தாராவிற்குத் திரும்பிச் சென்றார். அதீத சோர்வாக இருந்தாலும், கைக்கோபாத்துடன் ஏகாந்தவாசத்தில் பணிபுரிந்தார்.

பாபா மஸ்த் வேட்டையைத் தொடர்ந்த இந்தக் காலக்கட்டத்தில், மத்திய கிழக்கு நாடுகளில் அரசியல் பிரச்சினைகள் கொதித்தெழுந்தன. தடுமாறும் தனது ஆட்சியைத் திடப்படுத்தும் நோக்கத்தில், எகிப்திய ஜனாதிபதி நாஸர் (EGYPTIAN PRESIDENT NASSER), ஜூலை மாதம் சூயஸ் கால்வாயை (SUEZ CANAL) கைப்பற்றி, இஸ்ரேலுக்கு எதிராக போர் தொடரப்போவதாக அச்சுறுத்தினார். நாஸர் ஒரு தாக்குதலைத் தொடங்குவதற்கு முன்னதாக, இஸ்ரேலியர்கள், பிரிட்டிஷ் மற்றும் ஃபிரெஞ்சு துருப்புக்களின் ஆதரவுடன் அக்டோபர் 29 அன்று, எகிப்து நாட்டை ஆக்கிரமித்தனர். அதே நேரத்தில், சோவியத் கட்டுப்பாட்டில் இருந்த ஹங்கேரியில் அதிருப்தி உச்ச கட்டத்தை எட்டியது; 1956 நவம்பர் 4அன்று, சோவியத் இராணுவப் படைகள், தலைநகரம் புடாபெஸ்ட் (BUDAPEST) மீது உருவான எழுச்சியை நசுக்கும் நோக்கத்தில், அதைத் தீவிரமாகத் தாக்கின. அச்சுறுத்தப்பட்ட ஆயிரக்கணக்கான ஹங்கேரிய அகதிகள், ஆஸ்திரியா (AUSTRIA) மற்றும் யூகோஸ்லாவியா (YUGOSLAVIA) நாடுகளுக்குத் தப்பிச் சென்றனர். ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் மற்றும் அறிவுஜீவிகளைக் கொன்று குவித்த பிறகு, சோவியத் நாடு ஹங்கேரியில் ஒரு பொம்மை ஆட்சியை நிறுவியது.

1956 ஜூலை மாதத்தில், பாபா மேற்கத்திய நாடுகளுக்குப் பயணம் செல்வதற்கு முன்னர், ஐவி டியூஸ், ரானோவிற்கு எழுதிய கடிதத்தில், 'கடவுள் பேசுகிறார்' (GOD SPEAKS) புத்தகத்தில் விவரிக்கப்பட்டுள்ள பரிணாமம் (EVOLUTION) மற்றும் உட்சுழற்சி (INVOLUTION) செயல்முறையை, குறிப்பாக குழந்தைகளுக்கான விளக்கத்துடன் தெளிவுபடுத்துமாறு பரிந்துரைத்திருந்தார். முதலில் ரானோ இந்த யோசனையை ஏற்றுக்கொள்ளாமல், பின்னர் அதைக் குறித்து யோசனை செய்து, பாபாவின் அனுமதியை நாடினார்; அவர் இல்லாத நேரத்தில் அந்தப் பணியைச் செய்ய முடியுமா என்று கேட்டபோது, பாபா அதைத் தொடர ஒப்புதல் வழங்கினார்.

ரானோ அவரிடம், "அதன் பரிணாம வளர்ச்சி குறித்த பாகத்தை என்னால் சித்தரிக்க முடியும் என்று நினைக்கிறேன், ஆனால் ஆன்மீகத் தளங்களைப் பற்றி என்ன செய்வது?" என வினவினார்.

பாபா சிரித்துக்கொண்டே, **"உங்களால் இயன்றதைச் செய்யுங்கள்"** என்று சைகையால் தெரிவித்தார்.

பாபா திரும்பி வரும் வேளையில், ரானோ அதன் ஆரம்பப் பணியை நிறைவு செய்து அவருக்காகக் காத்திருந்தார். பாபா அதை ஆமோதித்து, விளக்கப்படத்தைச் சார்ந்துள்ள அனைத்து வார்த்தைகளையும் வழங்கினார்: **'உருவமற்ற, நிறமற்ற', 'கடவுள், தம்மை எங்கும் நிறைந்தவர், எல்லையற்றவர், நித்தியமும் நிரந்தரமுமானவர் என்று அறியும் படைப்பாற்றல் மற்றும் கற்பனையின் தூண்டுதல்'**.

ரானோ ஒன்றுக்கு மேற்பட்ட நபர்களை ஆன்மீகத் தளங்களில் இணைக்க வேண்டும் என்று எரச் பரிந்துரைத்தார் (அவர் ஒரே ஒரு உருவத்தை மட்டுமே காட்டியுள்ளார்), ஏனெனில் ஒரே நேரத்தில் ஒரே ஒரு நபர் மட்டுமே ஆன்மீகத்

தளங்களில் பயணிக்க முடியும் என்ற எண்ணத்தை மக்கள் அடையப் பெறும் வாய்ப்புள்ளது. பாபா அதற்கு ஒப்புதல் வழங்கினார். ரானோ வரைபடத்தை நிறைவு செய்ததும், அக்டோபர் இறுதியில் அது ஐவிக்கு அனுப்பப்பட்டு, அதன் மறு உருவாக்கம் செய்யப்பட்டது.

1956 நவம்பர் 7ஆம் நாள் காலை, மெஹரா, மணி, கோஹெர், ரானோ, நாஜா, மெஹரு ஆகியோருடன் மஹாபலேஷ்வருக்குச் சென்ற பாபா, அங்கு, சகவாச நிகழ்ச்சி நடத்துவதைக் குறித்து கருத்தாய்வு செய்தார். மந்தமான மழைக்காலத்தில், சத்தாராவில் தங்கி வந்த கோஹியார் சத்தாராவாலாவால் நிர்வகிக்கப்படும் ரிப்பன் ஹோட்டலில் (RIPON HOTEL) அவர்கள் அன்று இரவு தங்கினர்; கோஹியார் எப்போதேனும் பாபாவைப் பார்க்க அனுமதிக்கப்பட்டார். இதற்கிடையில், அன்றைய தினம் மத்திய கிழக்கில், எகிப்தியர்கள் இஸ்ரேலியர்களுடன் போர் நிறுத்த உடன்பாட்டை ஏற்றுக்கொண்டனர்.

ராம்ஜூ அப்துல்லா, குடும்பத்துடன், அப்போது சத்தாராவில் வாழ்ந்து வந்ததால், தினமும் ரோஸ்வுட் பங்களாவிற்கு வருவது வழக்கம்; ஆனால் அவரது குடும்பத்தினர் பாபாவை சந்திக்க அனுமதிக்கப்படவில்லை.

பாவ் கல்சூரி, பாபாவுடன் வந்திணைந்த பின்னர், அவரது மனைவி ரமா (RAMA) மற்றும் இரண்டு குழந்தைகள் - ஷீலா (SHEELA, 4), மெஹர்நாத் (MEHERNATH, 3 வயது) - நாக்பூரிலிருந்து 100 மைல் தொலைவில் அமைந்த ஒரு கிராமத்தில், ரமாவின் பெற்றோருடன் வாழ்ந்து வந்தனர். ஒரு நாள் மெஹர்நாத், அவரது சகோதரியை, கொதிக்கும் பால் பாத்திரம் மீது தற்செயலாகத் தள்ளிவிட நேர்ந்ததில், ஷீலா பலத்த காயங்களுக்கு ஆளானார்.

நவம்பர் 8 அன்று ஷீலாவிற்கு நிகழ்ந்த விபத்து குறித்து, சத்தாரா ரோஸ்வுட் பங்களா முகவரிக்கு ஒரு தொலைத்தந்தி வந்தது. பாபாவின் ஏகாந்தவாச காலகட்டத்தில், கடிதப் பரிமாற்றத்திற்குத் தடை இருந்ததால், பாவ் கல்சூரி அதை பாபாவிற்குத் தெரிவிக்கவில்லை. ஆனால் அன்று மாலை 5:00 மணிக்கு, பாபா, அவரை கிராஃப்டனுக்கு அழைத்து, ‘**ஏதேனும் கடிதம் அல்லது தொலைத்தந்தி வந்துள்ளதா?**’ என்று கேட்டார். ரமாவிடமிருந்து ஒன்று வந்திருப்பதாக பாவ் கூறியதும், “**அவர் என்ன கூறுகிறார்?**” என பாபா கேட்கவே, பாவ் கல்சூரி நடந்ததை அவருக்குத் தெரியப்படுத்தினார்.

“**ஷீலாவின் மருத்துவ சிகிச்சைக்கு ஏற்பாடு செய்யும் விதத்தில், நானா கேருக்கு உடனடியாகத் தொலைத்தந்தி அனுப்பவும்.**”

“அனைத்தும் அங்கே (ரமாவின் பெற்றோரால்) கவனிக்கப்படும்; நானாவை ஏன் சிரமத்திற்குள்ளாக்க வேண்டும்? என்று பாவ் கல்சூரி எதிர்ப்புத் தெரிவித்தார்.

இது பாபாவை மிகவும் வருந்தச் செய்தது, அவர் தனது காலணியைக் கழற்றி, பாவ் மீது பலமாக வீசினார். “**எனது கட்டளையை மட்டும் பின்பற்றாமல், ‘நானாவிற்கு ஏன் இந்தப் பிரச்சினை?’ என என்னிடம் பேச**

உங்களுக்கு வெட்கமாக இல்லையா? நானாவிற்கு இப்போது யார் தொலைத்தந்தி அனுப்பப் போவது, நீங்களா அல்லது நானா?"

பாவ் கல்சூரி அமைதியாக இருந்தபோது, பாபா மேலும் கூறினார், "நான் நானாவிற்கு வேறொருவரைப் பற்றி தொலைத்தந்தி அனுப்பியிருந்தால், நீங்கள் இதுபோன்ற பிரச்சினையைப் பற்றி பேசுவீர்களா?" பாவ் இல்லை என்று பதிலளிக்கவே, பாபா இவ்வாறு கூறினார், "நீங்கள் இந்த நேரத்திலும், ரமா, ஷீலா, மெஹர்நாத் ஆகியோருடன் பிணைக்கப்பட்டிருக்கிறீர்கள். அத்தகைய பற்றுதல் இல்லை என்றால், நீங்கள் இவ்வாறு கூறியிருக்கமாட்டீர்கள். உங்களின் உண்மையான அன்பினால் அல்ல, ஆனால் பற்றுதலின் காரணமாக, அவர்கள் உங்களுடையவர்கள் என்று நினைக்கிறீர்கள். நீங்கள் அவர்களை, உண்மையான அன்பினால் உங்களுடையவர்களாகக் கருதியிருந்தால், 'நானாவிற்கு ஏன் இந்த வீண் பிரச்சினை?' என்ற வார்த்தையைக் கூறியிருக்க மாட்டீர்கள், ஏனெனில், அவளை கவனித்துக் கொள்ளுமாறு நானாவிற்கு நான் கட்டளையிடுகிறேன்."

சில நிமிடங்களுக்குப் பிறகு, பாபா மேலும் கூறினார், "நீங்கள் எப்பொழுதும் என்னுடன் வாழ்கிறீர்கள்; உங்கள் மனைவி, இரண்டு சிறிய குழந்தைகளுடன், தொலைதூர கிராமத்தில் வசிக்கிறார். இத்தனை ஆண்டுகளில், ஒருமுறை கூட, உங்களை அங்கு அனுப்புமாறு அவர் ஒரு கோரிக்கையை முன்வைத்ததில்லை, மிகவும் அரிதாகவே கடிதம் எழுதி, அவர் மகிழ்ச்சியாகவும் திருப்தியாகவும் இருக்கிறார் என்று கூறுகிறார். அவர் எந்த அளவுக்கு உங்களுக்கு உதவுகிறார் என்று பார்த்தீர்களா? அவருக்கு என் மீது அன்பு உள்ளது, குழந்தைகள் என்னுடையவர்கள், அவர்கள் உங்களுடையவர்கள் அல்ல; ஆதலால், நான் அவர்களுக்கு என்ன செய்தாலும் அதைக் குறித்து கவலைப்பட வேண்டாம். உங்களுக்கு எண்ணங்கள் இருப்பது, அவர்கள் மீதான உங்கள் பற்றுதலின் விளைவு; உங்களுக்கு அத்தகைய எண்ணங்கள் இல்லையென்றால், அது அன்பு என்றழைக்கப்படுகிறது. இப்போது கூறுங்கள், நீங்கள் என்னைப் பின்பற்ற விரும்புகிறீர்களா இல்லையா?"

புன்னகைத்த பாவ் கல்சூரி, "நான் உங்களைப் பின்பற்ற விரும்புகிறேன், பாபா" என்று பதிலளித்தார்.

அப்போது பாபா, "நீங்கள் ரமாவிற்குக் கடிதம் எழுதி எத்தனை நாட்கள் ஆயின?" என்று கேட்டார்.

"ஆறு மாதங்கள்," பாவ் பதிலளித்தார்.

"ஆறு மாதங்களா? எனது வாழ்நாளில் உங்களைப் போன்ற ஒரு பைத்தியக்காரனை நான் பார்த்ததில்லை! நீங்கள் ஏன் அவருக்கு எழுதக்கூடாது? என்னைப் பற்றி - எனது செயல்பாடுகளைப் பற்றி எழுதுங்கள், அவர் என் அன்பர்களில் ஒருவர் இல்லையா? நீங்கள் எத்தனையோ பேருக்கு எழுதுகிறீர்கள், ஏன் அவருக்கு இல்லை? உங்கள் பற்றுதலால், அவர்கள் உங்களுக்குச் சொந்தம் என நீங்கள்

**எடுத்துக்கொள்வதை இது காட்டுகிறது. நீங்கள் ரமாவை என் அன்பர்களில் ஒருவராக நினைத்திருந்தால், பிறருக்கு எழுதியதைப் போல் அவருக்கும் எழுதியிருந்திருப்பீர்கள். அதில் எந்தத் தீங்கும் இல்லை. இது உங்கள் பற்றுதலின் விளைவு; எனவே அவரை நேசிக்க முயற்சி செய்யுங்கள், ஏனெனில் அன்பு பற்றற்றது.**"

பாபா அவரிடம், "**உடனடியாக நானாவிற்குத் தொலைத்தந்தி அனுப்புங்கள், மாதம் ஒருமுறை ரமாவிற்கு எழுதுங்கள். அவருக்கு என் மீது அளப்பரிய பிரியம் உள்ளது**" என்று அறிவுறுத்தினார். எனவே, பாவ் கல்சூரி, நானா கேருக்கு ஒரு தொலைத்தந்தி அனுப்பினார்; அவர் உடனடியாக கிராமத்திற்குச் சென்ற அந்த நேரத்தில், ஷீலாவின் சிகிச்சைக்கான எல்லா ஏற்பாடுகளும் ஏற்கனவே முடிந்துவிட்டது, ஆனால், நானா அங்குத் தங்கியது ரமாவிற்கு மிகுந்த ஆறுதலாக இருந்தது. பாபாவின் கருணை மிகு பார்வையால், ஷீலா, ஆறு மாதங்கள் படுக்கையில் இருந்து, பின்பு குணமடைந்தார்; அவளுடைய அந்த இளம் வயதிலும், உள்ளளவில் தொடர்ந்து பாபாவின் உதவியை நாடினார்.

இதற்கிடையில், பாவ் கல்சூரியின் 'மாணவன்' இஸ்மாயில் தனது வாழ்நாளின் அற்புதமான தருணத்தை அனுபவித்துக் கொண்டிருந்தான், இப்போதும் ஓர் இளவரசனைப் போல செல்லமாக நடத்தப்பட்டான். பாபா ஒவ்வொரு நாளும் அவனை கிரா:ப்டனுக்கு அழைத்துவரக் கூறி, அங்கு அவனுக்கு பாபாவால் சுவையான உணவுகள் வழங்கப்பட்டன, அதற்குப் பிறகு, பாவ் கல்சூரி அவனுக்குப் பாடங்களைப் புகட்டும் முயற்சியில் ஈடுபட்டார்.

1956 நவம்பர் 8ஆம் தேதி அமெரிக்காவில் வாழும் பாபா அன்பர்கள், அவர்களின் தனிப்பட்ட விஷயங்களைக் குறிப்பிடாமல் அல்லது கேள்விகள் எதுவும் எழுப்பாமல், உடனடியாக அவருக்கு ஒரு சிறிய தனிப்பட்ட கடிதம் எழுதுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர். அதே அறிவுறுத்தல்கள் இங்கிலாந்து, ஐரோப்பா மற்றும் ஆஸ்திரேலியாவில் வாழும் அன்பர்களுக்கும் நவம்பர் 27 அன்று அனுப்பப்பட்டன. நவம்பர் 29 அன்று இந்தியா, பாகிஸ்தான், இலங்கை மற்றும் ஆ:பிரிக்கா நாடுகளில் வாழும் அன்பர்களுக்கும், இந்த அறிவுறுத்தல்களை வழங்குமாறு பாபா, ஆதி சீனியருக்குத் தெரிவிக்க அவர் டிசம்பர் 2ஆம் தேதி அதே சுற்றறிக்கையை அனுப்பினார்.

இந்த நேரத்தில், பாபா, தனது நெருங்கிய அன்பர்களில் பலர் உடல்நலம், நிதி அல்லது பிற இடர்பாடுகள் தொடர்பாக, கடுமையான நெருக்கடிகள் மற்றும் பிரச்சினைகளுக்கு ஆளாகி இருப்பதற்கு, பிரபஞ்சத்திற்கான பாபாவின் பணியில் ஒரு குறுகிய அளவு பாரத்தை அவர்கள் பகிர்ந்துகொள்வதே காரணம் என்று குறிப்பிட்டார். "**முழு முனைப்புடன் பணியாற்றிய எனது ஐந்து பரிபூரண குருநாதர்கள், இப்போது தங்கள் பௌதீக உடலைத் துறந்து விட்டதால், முழு பாரத்தையும் நானே சுமக்கிறேன்; எனவே, அதில் பங்குபெறும் அனைவரும் மிகவும் அதிர்ஷ்டசாலிகள்**" என்று அவர் கூறினார்.

மேலும், இந்த நேரத்தில், பால் பிரண்டன் - PAUL BRUNTON ('எ ஸெர்ச் இன் ஸீக்ரெட் இந்தியா' - A SEARCH IN SECRET INDIA - புத்தகத்தின் ஆசிரியர்) கிட்டத்தட்ட 30 ஆண்டுகளுக்குப் பிறகு, பாபாவிற்கு எழுதிய கடிதம், அவர் முன்னிலையில் வாசிக்கப்பட்டது. 'கடவுள் பேசுகிறார்' (GOD SPEAKS) புத்தகத்தின் நகலை பிரண்டனுக்கு அனுப்ப வேண்டும் என்ற பாபாவின் கோரிக்கையுடன், ஆதிக்கு அந்தக் கடிதத்தை அனுப்புமாறு, பாவ் கல்சூரி அறிவுறுத்தப்பட்டார்; ஆதி அவருடன் கடிதப் பரிமாற்றத்தில் ஈடுபட்டிருந்தார்.

1956 நவம்பர் 16 வெள்ளியன்று பாபா, சத்தாராவிலிருந்து நரிமனின் நீல நிற ஷெவர்லே (CHEVROLET) காரில் உத்தரபிரதேசத்தில் ஒரு மஸ்த் பயணத்திற்காகப் புறப்பட்டுச் சென்றார்; எரச் காரை ஓட்டிச் செல்ல, பெண்டு, நீலு, பைதூல் ஆகியோரும் உடன் சென்றனர். முதலில் மெஹராஸாத் சென்றடைந்து, ஒர் இரவை அங்குக் கழித்தனர். ஆதி சீனியர், குல்மாய் இருவரும் அன்று மதியம் 2:00 மணிக்கு மெஹராஸாத்திற்கு அழைக்கப்பட்டனர். கடந்த சில மாதங்களாக, மிகவும் அமைதியின்றி காணப்பட்ட குல்மாய், பாபாவின் பல்வேறு காட்சிகளைக் கனவில் கண்டதாகவும், தூங்குவதில் சிரமங்கள் இருப்பதாகவும் முறையிட்டார். பாபா அவரிடம், "**உங்களது தற்போதைய துன்பத்தைப் பற்றி கவலைப்படாதீர்கள். உங்களுக்கு மறுபிறவியிலிருந்து விடுதலை வழங்கப்படும்**" என்று உறுதியளித்தார்.

அந்த ஆண்டு, வழக்கத்திற்கு மாறாக, மழை மிகவும் தாமதமாகப் பெய்தது; ஒரு கட்டத்தில், காரை ஒரு பெரிய நீரோடையின் ஒரு கரையிலிருந்து மறுகரைக்கு படகில் கொண்டு செல்ல வேண்டியிருந்தது. இரவும் பகலும் பயணம் தொடர்ந்தது. ஒரு குறிப்பிட்ட இடத்தில், சத்தர்பூர் (CHHATARPUR) மஹாராஜாவின் அரண்மனையில் தங்கியிருந்த ஷரிர் பாபா (SHARIR BABA) என்ற மேல்நிலை இந்து மஸ்தைப் பற்றி கேள்விப்பட்டு, அங்குச் செல்லவிருந்த அன்றைய தினம், மஸ்த், பிற்பகல் 3:00 மணிக்கு அந்த இடத்தை விட்டு வெளியேறுவதாக இருந்தது; ஆனால் அப்போது, ஏற்கனவே மதியம் 1:00 மணியாகிவிட்டது.

பாபா இதுவரை அவருடன் பணிபுரியாததால், இந்த மஸ்தைத் தொடர்பு கொள்வதில் மிக்க ஆர்வத்துடன் காணப்பட்டார். அவர்கள் நகரங்கள் மற்றும் கிராமங்கள் வழியாக, கரடுமுரடான சாலைகளில், அசுர வேகத்தில் 128 மைல்களை இரண்டு மணி நேரத்தில் கடந்து - சரியாக மாலை 3:00 மணிக்கு சத்தர்பூரைச் சென்றடைந்தனர். மிகவும் வயதான இந்த மஸ்த் அவரது சிறுநீரை தானே அருந்துவதைப் பழக்கமாகக் கொண்டார்.

அவரது அறையில் கெட்டுப்போன இனிப்புப்பண்ட பெட்டிகள் மற்றும் இதர பொருட்கள் சிதறிக் கிடந்தன. ஒரு வலுவான துர்நாற்றம் காற்றில் பரவியிருந்த போதிலும், வயதான மஸ்த் அந்த இடத்தை சுத்தம் செய்ய எவரையும் அனுமதிக்கவில்லை.

பாபா அந்தத் தொடர்பில் மட்டற்ற மகிழ்ச்சியடைந்து, “**நமது நூற்றுக்கணக்கான மைல்கள் பயணம் உண்மையில் பலனளித்தது**!” என்று குறிப்பிட்டார். பாபா பயணத்தைத் தொடங்கி, ஏறக்குறைய இரண்டு வாரங்கள் கடந்தது. ஆனால் நவம்பர் 21ஆம் தேதி, ஆண் மண்டலியும், அவரும் அதீத சோர்வாக உணர்ந்ததால் (சிலர் உடல்நலம் குன்றி காணப்பட்டனர்), அவர் உத்தரபிரதேச சுற்றுப்பயணத்தின் எஞ்சிய பாகத்தை ரத்து செய்துவிட்டு, மெஹராஸாத் திரும்பிச் சென்று, அங்கு அவர் சில நாட்கள் ஓய்வெடுக்க விரும்பினார். பலத்த மழை இடைவிடாமல் கொட்டியது.

ஃபிரான்சிஸ் கோல்ட்னி (FRANCIS GOLDNEY) கிறிஸ்துமஸை ஒட்டி இந்தியா வரவிருந்தார்; ஆனால், பாபா மெஹராஸாத்தில் இருந்தபோது, ஆதி, கோல்ட்னியிடமிருந்து அடையப்பெற்ற கடிதத்தைப் படித்தார்; ஸூயஸ் கால்வாய் நெருக்கடி (SUEZ CRICIS) காரணமாக, அவரும் அவரது மனைவி ஓல்லாவும் (OLLA) மேற்கொள்ளவிருந்த இந்தியப் பயணம் ரத்து செய்யப்பட்டதாகக் கூறியிருந்தார். பாபா, அவர்கள் மார்ச் மாதத்தில் விமானத்தில் வருவதைக் குறித்து ஆதிக்கு அறிவுறுத்தினார்; மேலும் சத்தாராவில் அவர்களுக்காக ஒரு சிறிய பங்களாவும் வாடகைக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

1956 நவம்பர் 23 அன்று, பாபா, சத்தாராவிற்குத் திரும்பிச் சென்றார். இது மெஹர் பாபாவின் கடைசி மஸ்த் பயணம் என்பது குறிப்பிடத்தக்கது. அவரது உண்மையான அன்பர்களின் அடிமை மெஹர் பாபா, மறுபடியும் ஒருபோதும் மஸ்த் தொடர்புகளுக்காக வெளியே செல்லவில்லை; அன்றிலிருந்து, அவர் எங்கிருந்தாலும், மஸ்துகள் அவர் இருந்த இடத்திற்கு அழைத்து வரப்பட்டனர்.

சத்தாராவிற்குத் திரும்பிய பாபா, கைக்கோபாத்துடன் தனது அன்றாட வழக்கத்தைத் தொடர்ந்தார். ஒவ்வொரு மாலையும், அவர் மண்டலியை கிராஃப்டனுக்கு அழைத்து, அவர்களுடன் சீட்டு விளையாடுவதை வழக்கமாகக் கொண்டார். டாக்டர் நீலு வேடிக்கையான கவிதைகளை எழுதி பாபா முன்னிலையில் வாசித்து வந்தார்.

இந்த நேரத்தில் சத்தாராவில் தங்கியிருந்த ஐரீன் கோனிபியர், ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் கிராஃப்டன் பங்களாவிற்கு வர அனுமதிக்கப்பட்டார். நவம்பர் 26 அன்று, பூனா, ஸெயின்ட் மீரா உயர்நிலைப் பள்ளிக்கு (SAINT MEERA HIGH SCHOOL, POONA), பாபா விஜயம் செய்யுமாறு, சாது வாஸ்வானி விடுத்த அழைப்பை அவர் பாபாவிற்குத் தெரிவித்தார். பாபா அதற்கு இணக்கம் தெரிவித்து 1957 பிப்ரவரி 20ஆம் தேதியை நிர்ணயித்தார்.

நவம்பர் 29ஆம் தேதி பாபா கூறினார், “**பிப்ரவரி 15 அன்று, எனது ஏகாந்தவாச பணி உச்சக்கட்டத்தை எட்டும் அதன் முந்தைய ஓரிரு மாதங்களில், நான் எதிர்கொள்ளும் அதிக அளவிலான, தீவிரமான**

**இடர்பாடுகளில், எனது நெருங்கிய அன்பர்களும் பங்கெடுப்பார்கள்.**" ஆனால், பாபா எந்த வகையான இடர்பாடுகளைக் குறிப்பிடுகிறார் என்று மண்டலிக்குத் தெரியாது.

1956 டிசம்பர் 2 ஞாயிற்றுக்கிழமை அன்று, பாபா, உபவாசம் மேற்கொள்ள விரும்பி, பாவ் கல்சூரியைத் தவிர அனைத்து மண்டலியும், அன்றைய தினம் தண்ணீர் அருந்தாமல் உபவாசம் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தினார். பாவ் கல்சூரியின் உடல்நிலை சமீபத்தில் பாதிக்கப்பட்டது. அவர் கடிதப் பரிமாற்றத்தில் நீண்ட நேரம் பணிபுரிந்து கொண்டிருந்த வேளையில், அவர் நுரையீரல் அழற்சியால் பாதிக்கப்பட்டார். பாபா, அவரை முழுமையாக ஓய்வெடுக்குமாறும், படுக்கையை விட்டு நகர வேண்டாம் என்றும் கட்டளையிட்டார்.

பின்னர் அவர் மண்டலியிடம், "**இரண்டாவது நாளை எப்படி செலவிடுவது? அன்று தண்ணீர் கூட அருந்த முடியாது, தாகம் மற்றும் பசியின் தொந்தரவுகளைத் தவிர்க்க ஏதாவது செய்தாக வேண்டும்**" என்று கேட்டுக்கொண்டார்.

ஒரு நீண்ட விவாதம் நிகழ்ந்தது, பாபா உடனே, "**ஏன் அன்று பூனாவிற்குச் சென்று, ஞாயிற்றுக்கிழமை கிரிக்கெட் விளையாட்டைப் பார்வையிட்டு, மாலையில் திரும்பி வரக் கூடாது? ஆர்வத்துடன் விளையாட்டைப் பார்த்தாலே நமக்கு தாகமோ பசியோ ஏற்படாது**" என்று பரிந்துரைத்தார். ஆண் மண்டலி அதற்கு ஒப்புக்கொண்டனர்; மேலும் பாபாவின் பயன்பாட்டிற்காக சத்தாராவில் வைக்கப்பட்டிருந்த நரிமனின் காரில் பூனாவிற்குச் செல்வதாகத் தீர்மானிக்கப்பட்டது.

விஷ்ணு சில பணிகள் நிமித்தம் டிசம்பர் 1ஆம் தேதி பூனாவிற்குப் புறப்பட்டுச் சென்றார்; மேலும் 2ஆம் தேதி மாலை அவர்கள் சத்தாராவிற்குத் திரும்பும்போது, அவர்களுடன் இணையுமாறு பாபா அவரிடம் கூறினார். மெஹர்ஜி டிசம்பர் 1 அன்று பூனாவிலிருந்து சத்தாராவிற்கு அழைக்கப்பட்ட வேளையில், பல பெட்டிகள் நிரம்ப ஸோடா நீர் கொண்டு வருமாறு அறிவுறுத்தப்பட்டார். அவர் சத்தாராவிற்கு பேருந்தில் வர வேண்டும் என்பது பாபாவின் நிலையான உத்தரவு. ஆனால் அவர் ஸோடா பெட்டிகளையும் கொண்டு வர இருந்ததால், மெஹர்ஜி, புதிதாக இறக்குமதி செய்யப்பட்ட அவரது ஷெவர்லே காரில் சத்தாராவிற்கு வந்தார்; வந்ததும் பாபா அவர் மீது சீற்றமடைந்தார்: "**ஏன் எனது உத்தரவை மீறி காரில் வந்தீர்கள்? உடனே காரை பூனாவிற்குத் திருப்பி அனுப்புங்கள்**" என்றதும், மெஹர்ஜி காரை ஓட்டுநருடன் திருப்பி அனுப்பிவிட்டு, அவர் அன்றிரவு அங்கேயே தங்கினார்.

கிரிக்கெட் போட்டியைப் பார்வையிடச் செல்லும் காரணத்தைக் காட்டி, பாபா, சத்தாராவிலிருந்து நரிமனின் நீல நிற ஷெவர்லே காரில், டிசம்பர் 2 அன்று, எரச், பெண்டு, மெஹர்ஜி, நீலு ஆகியோருடன் பூனாவிற்குப் புறப்பட்டுச் சென்றார். வழியில் பாபா, நீலுவுடன் இருக்கைகளை மாற்றினார், முன்பக்கத்திலிருந்து பாபா பின் இருக்கைக்குச் சென்றார்.

அன்றைய தினம் குளிரும், மேகமூட்டமாகவும் இருந்தது. அவர்கள் பூனா வந்தடைந்தபோது, இந்திய பிரதமர் நேருவுடன் நகரத்தில் இருந்த சீன பிரதமர் சௌ என்-லாய் (CHOU EN-LAI), பிம்பிரி (PIMPRI) புறநகரில் அமைந்த 'மத்திய நீர்நிலை மின் ஆராய்ச்சி நிலையம்' (CENTRAL WATER AND POWER RESEARCH STATION) மற்றும் 'தேசிய பென்சிலின் தொழிற்சாலை' (NATIONAL PENCILLIN FACTORY NEAR PIMPRI) போன்றவற்றைப் பார்வையிடச் சென்றதால், பாபா பயணித்த கார், ஸ்வார்கேட் (SWARGATE) அருகே நிறுத்தப்பட்டது. நீலு காரிலிருந்து இறங்கி அவர்கள் கடந்து சென்றதை பார்க்க ஆவலாக இருந்தார்; ஆனால், பாபா, முகம் சுளித்து தலையை அசைத்தபோது, நீலு பிடிவாதமாக இருந்தார்; இறுதியாக பாபா இணக்கம் தெரிவித்தார். நீலு ஒரு குறுக்கு வழியில் நடந்து சென்று, சௌ என்-லாய் மற்றும் நேரு அமர்ந்திருந்த கார் வேகமாகச் சென்றபோது, அவர் சாலையில் நின்று பார்த்துக் கொண்டிருந்தார்; பின்னர் அவர் பாபாவின் காருக்குத் திரும்பினார்.

பூனாவில், ஜால்பாய் குழுவுடன் இணைந்தபோது, அவர்கள் கிரிக்கெட் மைதானத்திற்குச் சென்று, ஒரு மரத்தின் கீழ் காரை நிறுத்திவிட்டு, விளையாட்டைப் பார்வையிடத் தொடங்கினர். பாபா, காரில் அமர்ந்திருக்க, அருகில் மண்டலி நின்றனர். அவ்வப்போது ஜால்பாய், பந்து அடிப்பவரையும், ஆட்டப்புள்ளிகளையும் அறிந்து வர அனுப்பப்பட்டார். அன்று அவர்கள் உபவாசம் கடைப்பிடித்த போதிலும், பாபா ஒவ்வொரு மண்டலிக்கும் சாப்பிட ஒரு வாழைப்பழத்தைக் கொடுத்தார்.

போட்டியின் 45 நிமிட மதிய உணவு இடைவேளையின் போது, பூனாவிலிருந்து பத்து மைல் தொலைவில் அமைந்த 'கடக்வாஸ்லா தேசிய பாதுகாப்பு பயிற்சிக் கழகத்திற்கு' (NATIONAL DEFENSE ACADEMY AT KHADAKWASLA) காரில் செல்ல பாபா பரிந்துரைத்தார். ஆனால் அவர்கள் அங்குச் சென்றபோது, முந்தைய நாள் பிரதமரின் வருகை காரணமாக, பார்வையாளர்கள் நுழுவுச் சீட்டு இல்லாமல் உள்ளே அனுமதிக்கப்படவில்லை. எரச், அவர்கள் எந்தக் கட்டிடத்திலும் நுழையப் போவதில்லை என உறுதியளித்து, மைதானத்தைச் சுற்றி வந்து அரை மணி நேரத்திற்குள் வெளியேறிவிடுவதாக அனுமதி கோரி உள்ளே சென்றனர்.

கிரிக்கெட் மைதானத்திற்குத் திரும்பிக் கொண்டிருந்தபோது, மெஹர் பாபாவின் அன்பர்களான காடேக்கர் (GADEKAR), கே.கே.ராமகிருஷ்ணன் இருவரும் ஒரு வாடகைக் காரில் பாபாவின் காரைக் கடந்து சென்றதைக் காண நேர்ந்தது. ஏற்கனவே வெளியிடப்பட்ட சுற்றறிக்கைக்கு இணங்க, பாபாவின் அன்பர்கள், அவரது ஏகாந்தவாச காலகட்டத்தில் அவரைத் தொடர்பு கொள்ளவோ, பார்க்கவோ வேண்டாம், மேலும், பாபா எங்கேனும் பயணம் செய்யும்போது அவரைக் காண நேர்ந்தால், கண்டுகொள்ளாமல் தங்கள் வழியில் செல்ல வேண்டும் என்றும் கடுமையாக அறிவுறுத்தப்பட்டிருந்தனர்.

காடேக்கர், பாபாவைப் பார்த்தார்; பாபா, பெண்டுவிடம் அவர்கள் பயணித்த கார், பாபாவின் காரைப் பின்தொடர்கிறதா என்று கேட்க, பெண்டு அந்தக் கார் பின்தொடர்வதைக் கண்டதும், பாபா, அது பார்வையிலிருந்து

மறையும் வரை, எரச்சிடம் வேகமாகச் செல்லுமாறு அறிவுறுத்தினார். அது கண்களிலிருந்து மறைந்தபோது பாபா மகிழ்ச்சியடைந்தார், பின்னர் அவர்கள் கிரிக்கெட் மைதானத்திற்குத் திரும்பிச் சென்றனர்.

போட்டி நடந்து கொண்டிருந்த வேளையில், சிறிது தூரத்தில் ஒரு மரத்தின் கீழ் காடேக்கரின் கார் நின்று கொண்டிருந்ததை பெண்டு கவனித்தார். பாபா விளையாட்டில் ஆர்வம் காட்டுவதாகத் தோன்றியது; அவர் வருந்தக்கூடும் என்ற எண்ணத்தில் காடேக்கரின் கார் குறித்த செய்தியை பெண்டு அவருக்குத் தெரிவிக்கவில்லை. ஆனால் ஜால்பாய், அந்தக் காரை கவனித்து, “பாபா, அவர்கள் இங்கேதான் இருக்கிறார்கள், நம்மைப் பின்தொடர்ந்து வந்து நிற்கிறார்கள்” என்றார்.

பாபா உடனே, “**அவர்களிடம் சென்று, ‘பாபாவின் சுற்றறிக்கையை அவர்கள் அடையப் பெற்றார்களா?’ அவர்கள் அதைப் பார்த்திருந்தால், ‘என்னைப் பின்தொடராமல், முகத்தைத் திருப்பிக் கொண்டு சென்றுவிட வேண்டும் என்ற எனது கட்டளையை ஏன் மீறினார்கள்?’ நான் இங்கே ஓய்வெடுக்க வந்துள்ளேன்; சோர்வாக இருக்கிறேன், அவர்கள் எனது மனநிலையைக் கெடுக்கிறார்கள்!**” என்ற செய்தியை அவர்களுக்குத் தெரிவிக்குமாறு அறிவுறுத்தினார்.

பெண்டு அவர்களை அணுகியபோது, மிகவும் உணர்ச்சிவசப்பட்ட காடேக்கர், தனது தவறுக்காக வருந்தினார்; ஆனால், அவர் தன்னைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்று விளக்கினார்.

பாபா, எரச்சிடம் காரைத் திருப்பி, சத்தாராவிற்குப் புறப்படுமாறு அறிவுறுத்தினார். காடேக்கரின் காரைக் கடந்து செல்லும் போது, பாபா, அருகே நின்று, காடேக்கரிடம், “**நீங்கள் சுற்றறிக்கையை அடையப் பெற்றீர்கள்; நீங்கள் பூனா மையத்தின் மூத்த உறுப்பினர்; அவர் (ராமகிருஷ்ணன்) புதியவர், ஆனால் நீங்கள் எனது கட்டளைகளைப் பின்பற்றியிருக்க வேண்டும்.**” காடேக்கர் தனது தவறை ஒப்புக்கொண்டார். “**அப்படியானால், ஏன் என் உத்தரவை மீறினீர்கள்? ஏன் என்னைப் பின்தொடர்ந்தீர்கள்?**” என வினவினார்.

‘இடையே இவ்வளவு தூரம் இருந்ததால் அது உத்தரவை மீறுவதாக இருக்காது’ என்று நினைத்ததாக காடேக்கர் பதிலளித்தார்.

பாபா முதலில் எரிச்சலுற்று, பின்னர் அவரை மன்னித்தார். “**இந்த முறை நான் உங்களை மன்னிக்கிறேன், ஆனால் மறுபடியும் இதுபோன்ற முட்டாள்தனமான தவறை செய்யாதீர்கள்**” என்று பாபா கூறினார்.

அப்போது பிற்பகல் 3.45 மணி. மெஹர்ஜி அவரது வீட்டில் இறங்கிக்கொண்ட பின்பு, விஷ்ணு அவரது இடத்தில் அமர்ந்தார். ஜால்பாயும் பாபா இல்லத்தில் இறங்குவதற்காக நின்ற வேளையில், பாபா, பெஹராம், பெரின், அவர்களது மகன்களான ஷெரூ, ஸொராப், ருஸ்தம் மற்றும் மகள் குல்னாரை சந்தித்தார். பாபா இல்லத்தின் பின்புறம் ஜால்பாயின் அறைக்குச் சென்று, ஸொராப், ருஸ்தம் என்ற இரட்டையர்களுடன் கோலி விளையாட

விரும்பியதால், அவர்களிடம் சிறந்த பளிங்குக் கோலிகளைக் கொண்டு வருமாறு அவர்களுக்கு அறிவுறுத்தினார். பளிங்குக் கோலிகளை ஆராய்ந்த பாபா, ஒரு 'சிறந்த விளையாட்டு' வீரரைத் தேர்ந்தெடுத்து, ஆட்டத்தைத் தொடங்கும் முதல் வீரராக இருக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். பாபாவின் மனநிலை மிகவும் தீவிரமாகத் தென்பட்டது, அவர் பளிங்குக் கோலிகளில் ஒன்றை அதீத சக்தியுடன் அடித்த போது, அது பல கண்ணாடித் துண்டுகளாக உடைந்தது. இதைப் பார்த்த இரட்டையர்கள் ஆச்சரியத்தில் ஆழ்ந்து, தங்கள் முறையை விளையாட விரும்பிய வேளையில், பாபா விளையாட்டு முடிந்துவிட்டதாக சைகையால் தெரிவித்தார். விரைவில், பாபாவும் மண்டலியும் சத்தாராவிற்குத் திரும்ப ஆயத்தமாயினர்.

எரச் (வலதுபுறம் ஓட்டுநர் இருக்கையிலும்), பாபா (இடதுபுறம்) இருவரும் முன் இருக்கையிலும், பெண்டு, விஷ்ணு, டாக்டர் நீலு மூவரும் பின் இருக்கையிலும் அமர்ந்தனர். செல்லும் வழியில் பாபா, அன்று மாலை வேளையில் சத்தாராவைத் தாமதமாகச் சென்றடைய விரும்பியதாலும், நிறைய நேரம் மீதமிருந்ததாலும் மெதுவாக வாகனத்தை ஓட்டுமாறு அறிவுறுத்தினார். பெண்டு இவ்வாறு விளக்கமளித்தார்: "பாபா எங்காவது செல்லும் ஒவ்வொரு முறையும், நாங்கள் எத்தனை மணிக்குத் திரும்புவோம் என்று மெஹராவிடம் கூறுவது வழக்கம். இதனால், பெண் மண்டலி தங்கள் பணிகளைத் திட்டமிட்டுச் செய்ய சுதந்திரமாக இருந்தனர். இல்லையேல், பாபா எத்தனை மணிக்கு வருவார் என்று தெரியாமல், அவர்கள் மனக்கலக்கத்தில் இருக்க நேரும். அன்று பாபா அவர்களிடம், '**இன்று மாலை நான் திரும்பி வருகிறேன், ஆனால் ஆறு மணிக்கு முன்னதாக இல்லை**' என்று கூறியிருந்தார். பாபா, மெஹராவிடம் என்ன நேரத்தைக் குறிப்பிட்டிருந்தார் என்று எங்களுக்குத் தெரியாது. பாபா, விரைவில் சென்றடையும் நோக்கத்தில், வேகமாக ஓட்டிச் செல்வதை விரும்பியதால், எரச் வேகமாக ஓட்டிச் சென்றார்."

சத்தாராவிற்கு இன்னும் சில மைல்கள் இருந்தபோது, பாபா, எரச்சிடம் '**நேரம் என்ன என வினவி, ஆறு மணிக்கு முன்னதாகச் சென்றடைய வேண்டாம்**' என்று கூறினார். எரச் ஒரு மரத்தின் கீழ் காரை நிறுத்திவிட்டு, "இங்கே சற்று ஓய்வெடுத்து, நேரத்தைப் போக்க நாம் சீட்டு அல்லது வேறு ஏதேனும் விளையாட்டை விளையாடுவோம், ஏனெனில் நமது பங்களா இப்போது மிக அருகில் உள்ளது, ஆறு மணிக்கு முன்னதாகச் சென்றுவிடுவோம்" என்றார்.

பாபா தொடர்ந்து செல்லுமாறு சொன்னபோது, எரச், மிகவும் மெதுவாக ஓட்டத் தொடங்கினார். பாபா அதையும் விரும்பவில்லை. **"உங்களுக்கு என்னவாயிற்று? நீங்கள் ஏன் வேகமாகச் செல்லவில்லை?"** அவர் கேட்டார்.

எரச் பதிலளித்தார், "ஆறு மணிக்கு முன்னதாகச் சென்றடைய வேண்டாம் என்று நீங்கள் என்னிடம் கூறினீர்கள்; மேலும், நீங்கள் இங்கே காத்திருக்கவும் விரும்பவில்லை."

**"இல்லை, வழக்கம் போல் ஓட்டுங்கள்."**

டாக்டர் நீலுவுடன் அமர விரும்புவதாகக் கூறி, பெண்டு, விஷ்ணு இருவருடன் இடங்களை மாற்றிக்கொண்டு, பாபா முன்பக்கத்திலிருந்து பின் இருக்கைக்குச் சென்றார். பத்து அல்லது பதினைந்து நிமிடங்களுக்குப் பிறகு, மாலை 5:05 மணிக்கு, சத்தாராவிலிருந்து பதினைந்து மைல்கள் தூரத்தில் இருந்த வேளையில், பாபா காரை நிறுத்தக்கோரி மீண்டும் இடங்களை மாற்றினார். அவர் மீண்டும் எரச்சுடன் முன் இருக்கையில் அமர்ந்தார், பின்புறத்தில் விஷ்ணுவும் (இடதுபுறம்) நீலுவும் (வலதுபுறம்) ஜன்னல் இருக்கைகளை ஆக்கிரமிக்க, பெண்டு நடுப்பகுதிக்கும் நகர்ந்தார். பாபாவின் விரல்கள் தொடர்ந்து அதி விரைவில் நகர்ந்து, பணிபுரிந்து கொண்டிருந்தன; இது அவருடைய தீவிரமான மனநிலையின் அறிகுறியாக இருந்தது.

எரச் இப்போது மிக வேகமாக ஓட்டிக் கொண்டிருந்தார், ஏனெனில் பாபா அவர் மெதுவாகச் சென்றதாகக் கூறினார். சத்தாராவிலிருந்து பன்னிரெண்டு மைல் தொலைவில் அமைந்த உட்தாரா (UDTARA) என்ற இடத்தில் சென்று கொண்டிருந்த வேளையில், அங்கு பாபா, ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பு மண்டலி மற்றும் பிற அன்பர்களுடன் கிரிக்கெட் விளையாடிய இடத்தைச் சுட்டிக்காட்டி அந்த நாளையும் நினைவு கூர்ந்தார்.

மாலை 5:15 மணியளவில், அவர்கள் கிரிக்கெட் விளையாடிய இடத்திற்கு நேர் எதிரே, எரச், பாபாவின் சைகைகளை கவனித்துக் கொண்டிருந்த வேளையில், ஸ்டீயரிங் திடீரென, விவரிக்க முடியாத விதத்தில், முழுக் கட்டுப்பாட்டையும் இழந்தது. கார் ஏடாகூடமாக வளைந்து, நெளிந்து ஒரு கல்வெட்டில் மோதி, இறுதியில் அதன் மறுபுறத்தில் ஆழமற்ற ஒரு பள்ளத்தில் வீழ்ந்து, பூனாவை நோக்கிய திசையில் நின்றது. இந்த விபத்தில் காரிலிருந்த பாபா உட்பட அனைவரும் பலத்த காயத்திற்கு உள்ளாயினர். பாபா இரத்தக் குளத்தில் மூழ்கியிருந்தார், அவரது நாக்கு கிழிந்தது, இடுப்பு எலும்பு முறிந்தது, அவரது நெற்றி, மூக்கு, கன்னங்கள் மற்றும் கால்களில் பலத்த உரசல்கள் இருந்தன.

ஆனாலும் விபத்தின் போது, பாபாவின் முகபாவனையை கவனித்த விஷ்ணு, 'அவர் மகிழ்ச்சி மற்றும் நம்பிக்கையின் உச்சத்தில் இருந்த தோற்றத்தைக் கொண்டிருந்தார்' என்று குறிப்பிட்டார். பாபாவின் இரத்தம் தோய்ந்த முகத்தைப் பார்த்த விஷ்ணு, பாபாவின் மகிமைமிக்க 'உலகளாவிய உடலை'யும் அவரது முகத்தில் திகைப்பூட்டும் ஒளியையும் காண நேர்ந்தது.

விஷ்ணு பின்னர் இவ்வாறு விவரித்தார்:

கண்ணிமைக்கும் நேரத்தில் அனைத்தும் நடந்து முடிந்தது. நான் என் உணர்வு நிலைக்கு வந்ததும், காரின் பின் இருக்கையில் நான் மட்டுமே இருந்ததைக் கண்டேன். நான், பாபா எப்படி இருக்கிறார் என்று பார்க்க முன்பக்கம் சென்றபோது, அவர் முன் இருக்கையில் சாய்ந்திருக்க, அவருடைய உடைகளிலும் முகத்திலும் இரத்தம் நிரம்பி இருந்தது. (அவ்வாறு ரத்தம் வழிந்தாலும்), எனது வாழ்நாளில் பாபாவின் முகத்தில் இருந்ததைப் போன்ற முழுமையான பிரகாசத்தையும், பொலிவையும் நான் இதுகாறும் பார்த்ததில்லை!

அவர் ஒரு பெரிய போரில் வெற்றி பெற்ற மாமன்னரைப் போல தோற்றமளித்தார். போர்க்களத்தில் வெற்றிவாகை சூடிய கிருஷ்ணா, தனது தேரில் அப்படித்தான் இருந்திருக்க வேண்டும். மாபெரும் பிரகாசம் கண்ணைப் பறிப்பதாக இருந்தது! என்னால் காரையோ, சுற்றுப்புறத்தையோ அல்லது வேறு எதையும் பார்க்க முடியவில்லை; பாபாவின் முகத்தில் தோன்றிய வெற்றியின் மகத்துவத்தை மட்டுமே பார்த்தேன்!

சில நிமிடங்களுக்குப் பிறகு விஷ்ணு, பாபாவிடம் ‘உங்களுக்கு மிகவும் வலியாக உள்ளதா பாபா?’ என்று கேட்டார். பாபா தலையசைத்து, வாயையும் காலையும் சுட்டிக்காட்டினார், ஆனால் பிற அனைவரும் எப்படி இருக்கிறார்கள் என்று முதலில் விஷ்ணுவிடம் சைகையால் வினவினார். அந்தப் பார்வை விஷ்ணுவிற்குத் தேவையான தைரியத்தையும், பலத்தையும் வழங்கியது. முழங்காலுக்கு அருகில் அவரது ஒரு காலில் காயமும், அவருடைய முகத்தில் வெட்டுக்கள் மற்றும் விலா எலும்பு முறிந்திருந்தாலும், விஷ்ணு வலியை மறந்து, சக மண்டலிக்கு உதவ முயற்சிக்கத் தொடங்கினார். எரச், பெண்டு, நீலு மூவரும் காரிலிருந்து தூக்கி வீசப்பட்டனர். நீலுவும் பெண்டுவும் சுயநினைவின்றி தரையில் கிடந்தனர். கல்வெட்டு சுவரில் இருந்த கற்கள் தாக்கியதில் நீலுவிற்கு கடுமையான உள் காயங்கள் ஏற்பட்டன; பெண்டுவின் கால் முறிந்தது. எரச் சுயநினைவுடன் இருந்தார்; அவரது ஐந்து விலா எலும்புகள் முறிந்திருந்தாலும் கூட, அவர் மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்ட விதத்தில், முழு முயற்சியுடன் எழுந்து நின்று, காரில் சாய்ந்து பாபாவிடம் பேசினார்.

சாலை போக்குவரத்து மற்றும் பாதசாரிகளின் நடமாற்றம் இல்லாமல் சாலை வெறிச்சோடி காணப்பட்டது. விபத்து நடந்த மூன்று நிமிடங்களுக்குப் பிறகு, பெல்காவ்மிலிருந்து பூனாவிற்கு எதிர்திசையில் பயணம் செய்த இளைஞர் ஒருவர், விபத்து நடந்ததைக் கண்டு, தனது காரை நிறுத்தினார். விஷ்ணுவும் அந்த இளைஞரும் பாபாவை அந்த மனிதரின் காரில் ஏற்றினர். அந்த வழியில் நின்ற ஒரு திறந்த சரக்கு வண்டியின் பார்சி ஓட்டுநரின் உதவியை நாடிய விஷ்ணு, எரச், பெண்டு, நீலு மூவரையும் ரோஸ்வுட்டுக்கு அழைத்துச் செல்லும்படி கேட்டுக் கொண்டார். விஷ்ணு பாபாவுடன் காரில் கிராஃப்டனுக்குச் சென்றார்.

பாபா கிராஃப்டனுக்கு வந்ததும், ரோஸ்வுட்டிலிருந்து டாக்டர் டானை அழைத்துவர மணி தனது சைக்கிளில் விரைந்தார். டான் வேகமாக வந்து, கோஹெருடன் இணைந்து, பாபாவின் காயங்களுக்கு சிகிச்சை அளிக்கத் தொடங்கினார். பாபாவின் முகத்தில் வழிந்த ரத்தத்தைத் துடைத்தபடி, மெஹரா துக்கத்துடன் அருகில் இருந்தார். இதர பெண்மணிகளும் பாபாவின் துன்பத்தைப் போக்க தங்களால் இயன்ற அனைத்தையும் செய்தனர். ஆனால் அவதார புருஷரின் துன்பத்தை எப்படி எளிதாக்க முடியும்? அவரது ஆறுதல் அவர் அனுபவிக்கும் துன்பத்தில்தான் இருந்தது; அவர், ஒவ்வொரு நொடியும் தொடர்ந்து அந்தத் துன்பத்தை சகித்துக்கொண்டு, தனது தெய்வீக பணிக்காக அதை தன் மீது ஏற்றுக்கொண்டார்.

எதிர்கால சந்ததியினருக்காக, இந்த சோகத்தைப் பதிவு செய்ததில், காலம் அதீத துக்கத்தில் ஆழ்ந்தது. 'மறுபடியும் வேண்டாம்!' என காலம் கண்ணீர் சிந்தியது. "ஓ பாரத் (இந்தியா), உனக்கும் அவதார புருஷரின் இரத்தம் தேவையா? அமெரிக்க தேசத்திற்கு அவருடைய இரத்தம் தேவைப்பட்டது; 1952இல் அவர் அதை அங்கே சிந்தினார். இப்போது, நான்கு வருடங்களுக்குப் பின்னர் இந்திய தேசத்திற்காகச் சிந்தினார்!" அன்பாலும், இரக்கத்தாலும் தன் இரத்தத்தை சிந்திய தயாளு பிரபுவான அன்பிற்குரியவரை, இதுகாறும் மனிதகுலம் அங்கீகரிக்கவில்லை என்று காலம் உலகிற்குப் பறைசாற்றி மனம்வருந்தியது.

பாவ் கல்சூரி படுக்கையிலே ஓய்வெடுக்க வேண்டும் என்ற பாபாவின் கட்டளையை மீறி, மணி, டான் இருவரையும் பின்தொடர்ந்து, கிராஃப்டன் பங்களாவிற்குச் சென்றார். பாபா அவரைப் பார்த்ததும், அவருடைய முதல் வார்த்தைகள்: **"ஏன் எனது கட்டளையை மீறினீர்கள்?"** ஆயினும்கூட, இந்த நெருக்கடியான சூழ்நிலையில், பாவ் கல்சூரி அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் அபாடினை (DR. ABADIN) அழைத்துவர விரைந்தார்.

அறுவை சிகிச்சை நிபுணர் வந்ததும், பாபா அவரிடம், **"இன்று ஞாயிற்றுக்கிழமை, உங்கள் விடுமுறை நாள் என்பதால் எப்படி வந்தீர்கள்?"** என்று கேட்டார்.

"இது எனது கடமை," டாக்டர் பதிலளித்தார்.

இதற்கிடையில் ரோஸ்வுட்டில், டாக்டர் நீலு, பாவ் கல்சூரியின் படுக்கையில் வைக்கப்பட்டார்; ஆனால் அவரது உடலிலிருந்து அதிக அளவில் இரத்தம் விரயமாகிக் கொண்டிருந்தது. அறுவை சிகிச்சை நிபுணர் நீலுவின் படுக்கைக்கு வந்து பரிசோதித்தபோது, நீலு உயிரைத் துறந்துவிட்டதாகத் தெரிவித்தார். நீலுவிற்கு சுயநினைவு திரும்பவில்லை. எரச், பெண்டு இருவரையும் பொது மருத்துவமனையில் அனுமதிக்குமாறு மருத்துவர் அறிவுறுத்தியபோது, பாவ் கல்சூரியும், அலோபாவும் அவர்களை சிறப்பு மருத்துவ ஊர்தி மூலமாக அங்கு அழைத்துச் சென்றனர்; இருவருக்கும் அங்கு சிகிச்சை வழங்கப்பட்டது. (அவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவதற்கு முன்பு, பாபாவின் அனுமதி பெறப்பட்டது, அவர்கள் இருவரும் அன்றைய தினம் முழு உபவாசம் கடைப்பிடித்ததால், எரச்சும் பெண்டுவும் தண்ணீர் அருந்த அனுமதிக்கப்பட்டனர்.)

பாபாவின் நாக்கைத் தையலிட்டு சீராக்க, ஒரு சிறிய, பழமையான உள்ளூர் மருத்துவமனைக்கு, அவசர மருத்துவ ஊர்தி மூலம் அழைத்துச் செல்லப்பட்டார். அவரை அறுவை சிகிச்சை அறையில் மேஜையில் படுக்கவைத்த போது, டாக்டர் கோஹெரும், பாவ் கல்சூரியும் அவருடன் இருந்தனர். பாபாவின் அருகில் நின்றுகொண்டிருந்த கோஹெரிடம் அவர் சைகையால் தெரிவித்தார்: **"அவர்கள் எனக்கு மயக்க மருந்து கொடுத்தால், நான் எந்த சத்தமும் எழுப்பாமல் பார்த்துக் கொள்ளுங்கள். எப்போதும் என் அருகிலேயே இருங்கள்."**

அவருக்கு வெளிப்படையான வலியும் அசௌகரியமும் இருந்தபோதிலும், பாபா மிகவும் மகிழ்ச்சியாகத் தோற்றமளித்தார். மேலும் பாபா அவரது கையை, பாவ் கல்சூரியின் முகத்தின் மீது அன்புடன் வருடியபோது டாக்டர் அபாடின் அதிர்ச்சியடைந்தார். கடுமையான காயங்களுடன், அதீத வலியை அனுபவித்தபோதிலும், பாபாவின் வாயிலிருந்து ஒரு வார்த்தை கூட வரவில்லை. காயப்பட்ட நிலையிலும், பாபா புன்னகைத்த வண்ணம் பிறரிடம் தனது அன்பை வெளிப்படுத்தினார்; தீவிரமான எதுவும் நடக்காதது போல டாக்டருடன் நட்புடன் உரையாடி அன்பினைப் பரிமாறினார். அறுவை சிகிச்சை நிபுணருக்கும், இதர மருத்துவர்களுக்கும் இது ஓர் அற்புதமான அனுபவமாக இருந்தது, மேலும் பாபாவின் அன்பில் டாக்டர் அபாடினின் இதயம் விழிப்படைந்தது.

பாபாவின் நாக்கு மற்றும் அவரது தாடையின் கீழ் பகுதியில் இருந்த வெட்டுக்காயங்கள் தையலிடப்பட்ட பின்பு, டாக்டர் கோஹெர், பாபாவை கிராஃப்டனுக்கு அவசர மருத்துவ ஊர்தியில் அழைத்துச் சென்றார். பழைய வாகனம், மேலும் கீழுமாக ஆடி அசைந்து சென்று பாபாவின் உடலைப் புரட்டிப் போட்டது . ஒரு கடினமான பயணத்திற்குப் பின்னர், அதிகாலை 2:00 மணிக்கு பாபா ஓய்வெடுத்தார்.

பாவ் கல்சூரி உடனடியாக ஆதி, மெஹர்ஜி, நரிமன் ஆகியோருக்குத் தொலைத்தந்தி அனுப்பினார்: “கடுமையான விபத்து, காயம் அடைந்த அனைவரும் சத்தாரா மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். சத்தாராவிலிருந்து பத்து மைல் தொலைவில் அமைந்த, உட்தாரா கிராமத்திற்கு அருகில், விபத்திற்குள்ளான கார் உள்ளது - பாவ் கல்சூரி.” மெஹர்ஜி அதிகாலை 1:30 மணிக்கு சத்தாராவிற்கு வந்தார். ஆனால், ஆதி மும்பையில் இருந்ததால், ஃபெராம், ஸரோஷை உடனடியாகத் தொலைப்பேசியில் தொடர்பு கொள்வதற்கு பதிலாக, தொலைத்தந்தியை மேசை மீது வைத்தார்; அடுத்த நாள் காலை 8 மணி வரை ஸரோஷுக்குத் தகவல் தெரியாது. ஸரோஷ், ஆதியை தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு, அவரை நேரடியாக சத்தாராவிற்குப் புறப்படச் சொல்லி, வாமனுடன் தனது காரை பூனாவிற்கு அனுப்பி வைத்தார். அஹமதுநகரிலிருந்து ஸரோஷ், காக்கா பாரியா இருவரும் ஒரே நேரத்தில் சத்தாராவிற்குப் புறப்பட்டுச் சென்றனர்.

பாபாவின் அன்பர்கள் அனைவருக்கும் இந்த விபத்து குறித்த விபரங்கள் செய்தித்தாள்கள் மூலம் விரைவில் தெரிய வந்தது. ஆனால் பாபாவின் ஏகாந்தவாசம் காரணமாக, அவர்கள் அவரை சந்திக்கவும், அவருக்கு எழுதவும் அல்லது எந்த வகையிலும் அவரைத் தொடர்புகொள்வதிலிருந்தும் தடை செய்யப்பட்டனர்; மேலும், அனைவரும் அவருடைய விருப்பத்திற்குக் கட்டுப்பட வேண்டிய கட்டாயம்.

விபத்து நடந்த மறுநாள் காலை, 1956 டிசம்பர் 3, மிகுந்த வலியில் இருந்தாலும், பாபா இவ்வாறு எடுத்துரைத்தார்:

**ஹங்கேரிய மக்கள் தங்கள் சமீபத்திய போராட்டத்தில் (ரஷ்யர்களுக்கு எதிராக) மிகவும் பாதிக்கப்பட்டனர். பலர், பலத்த காயங்களுடன், ஆதரவற்றவர்களாக சாலைகளில், தங்கள் அன்புக்குரியவர்களிடமிருந்து விலகி, எந்த கவனிப்பும் இல்லாமல் அல்லது வலியிலிருந்து விடுபடமுடியாமல் கிடந்தனர். குறைந்த பட்சம், நான் ஒரு படுக்கையில் படுத்திருக்கிறேன், நல்ல மருத்துவர்களின் கண்காணிப்பு மற்றும் என்னுடன் இருக்கும் அல்லது இருக்க முடியாத என் அன்பர்கள் அனைவரின் அளப்பரிய அன்புடனும் நான் இங்கே இருக்கிறேன்.**

சில நாட்களுக்கு முன்பு, பாபா இவ்வாறு குறிப்பிட்டார்:

**எவரும் காரணமின்றி துன்பப்படுவதில்லை, ஏனெனில், உண்மையான சுதந்திரம் என்பது ஆன்மீக சுதந்திரம், துன்பம் அதை நோக்கி அழைத்துச் செல்லும் ஓர் ஏணி. மனிதன் அறியாமல் கடவுளுக்காகத் துன்பப்படுகிறான், கடவுள் தெரிந்தே மனிதனுக்காகத் துன்பப்படுகிறார்.**

விஷ்ணு (டாக்டர் நீலுவிற்கு மிகவும் நெருக்கமானவர்), சதாஷிவ் பாட்டீல் இருவரும் நீலுவின் உடலை அன்று காரில் மெஹராபாத்திற்கு எடுத்துச் சென்றனர், அங்கு அது தகனம் செய்யப்பட்டது. நீலுவின் அஸ்தி, பின்பு துனிக்கு அருகில் அமைந்த கீழ் மெஹராபாத்தில் புதைக்கப்பட்டது. பாபா இவ்வாறு குறிப்பிட்டார், "**குறிப்பாக நீலு என் அருகில் இருந்த வேளையில், தனது இறுதி மூச்சை விட்ட அதிர்ஷ்டசாலி, அது அவர் விரும்பியபடியே நடந்தது.**"

நீலு 'தன் உயிரைத் துறக்கும் நேரம் வரும்போது, அது உடனடியாகவும், பாபாவின் பௌதீக உடல் இருக்கும் இடத்திலும் நிகழ வேண்டும்' என்று அவர் கூறியதைக் குறித்து, பாபா அவரை அவ்வப்போது கேலியும், கிண்டலும் செய்வது வழக்கம். எனவே அவரது மரணம் அவர் விரும்பியபடியே நடந்தது. முந்தைய வாரத்தில் பாபா குறிப்பாக, நீலுவிடம் மிகவும் அன்பாக இருந்தார், சில நேரங்களில் அவருக்கு இனிப்புகளைக் கூட வரவழைத்து வழங்கினார். இப்போதுதான் ஏன் என்று பிற மண்டலிக்குப் புரிந்தது.

டிசம்பர் 3ஆம் தேதி நள்ளிரவில், டாக்டர் டான் (மெஹர்ஜியுடன் பூனாவிற்குச் சென்றவர்) பூனாவிலிருந்து டாக்டர் வி. பன்ஸோட் (DR. BANSOD) என்ற எலும்பு முறிவு மருத்துவ நிபுணரை அழைத்துவந்தார்; அவர் பாபாவின் காலை ஒரு தூண்டிலில் போட்டு, அதன் நுனியில் சிறிய மணற் பைகளை வைத்தார். அப்போது பாபாவால் மூன்று மணி நேரம் தூங்க முடிந்தது. ஜால்பாய், மெஹர்ஜி, ஸவக் ஆகியோர் இரவு கண்காணிப்புப் பணியைப் பகிர்ந்து கொண்டனர். மெஹர்வான், நஸர்வான் இருவரும் ஸஸூன் மருத்துவமனையிலிருந்து (SASSOON HOSPITAL) எரச்சிற்காக ஏற்பாடு செய்திருந்த அவசர மருத்துவ ஊர்தியுடன், ஆதி சீனியரும் ஸரோஷும் ஆதியின் காரில் வந்து சேர்ந்தனர். ஸரோஷ், டாக்டர் பன்ஸோடை மெஹர்ஜியின் காரில் பூனாவிற்குத் திரும்ப அழைத்துச் சென்றார்.

பூனா மருத்துவமனைக்கு எரச்சை அழைத்துச்செல்ல வேண்டாம் என முடிவு செய்யப்பட்டதால், டிசம்பர் 4ஆம் நாள் அவசர மருத்துவ ஊர்தி திருப்பி அனுப்பப்பட்டது. ராம்ஜூ, நஸர்வான் இருவரும், மணி, ஆதி சீனியர் ஆகியோருடன் பாபாவைப் பார்த்தனர்; மேலும் விபத்து குறித்த ‘வாழ்க்கைச் சுற்றறிக்கை’க்கான (LIFE CIRCULAR) விபரங்கள் மதிப்பாய்வு செய்யப்பட்டன. பின்னர், ஆதி, வாமன், காக்கா பாரியா, நஸர்வான் ஆகியோர் அஹமதுநகருக்குத் திரும்பிச் சென்றனர்.

அவரது கால்கள் தலையணையில் முட்டுக் கொடுத்து வைக்கப்பட்டதால், வலி அதிகமாக இருந்தது; ஆகையால் கால் தொங்கவிடப்பட்ட தூண்டில், டிசம்பர் 4ஆம் தேதி அகற்றப்பட்டது. டிசம்பர் 6ஆம் நாள், பாபாவின் இடுப்பு மற்றும் முழு வலது கால், பொது மருத்துவமனையில் பிளாஸ்டரால் பூசப்பட்டது; அது பாபாவிற்குப் பேருதவியாக இருந்தது; ஆனால் அவர் மீண்டும் மீண்டும் தசைப்பிடிப்புகளால் அவதியுற்றார்; இது பயங்கரமான வலியை ஏற்படுத்தியது. தசைப்பிடிப்பிற்கான ஊசி மருந்துகளும் உதவியாக இல்லை.

உண்மையில், இந்த விபத்து குறித்த மறைகுறிப்புகளை பாபா ஏற்கனவே வழங்கியிருந்தார், ஆனால் அந்த நேரத்தில், அப்படி ஒரு சம்பவம் நிகழக்கூடும் என்று எவரும் கனவிலும் நினைக்கவில்லை. 1955 நவம்பர் மாதத்தில், அவர் ‘**தனது நெருங்கிய அன்பர்களில் இருவர் ஒரு வருடத்திற்குள் உயிரைத் துறந்துவிடுவார்கள்**’ என்று அறிவித்திருந்தார்.

1956 ஜூலை தொடக்கத்தில், இங்கிலாந்து மற்றும் அமெரிக்காவிற்குச் செல்வதற்கு முன்பு, மெஹராஸாத்தில், அவர் ஒரு சுற்றறிக்கையை வெளியிட்டார்: “…**பேரிடர் என்று அழைக்கப்படும் சோக நிகழ்வு, என்னையும் என் அன்பர்களையும் தாக்கக் காத்திருக்கிறது. எனது ‘அவமானம், பேரிடர்’ இரண்டும் இன்றியமையாத ஒன்றாக இருந்தாலும், அது ஓர் உன்னதமான இலக்கை நோக்கிச் செல்லும் பாதையின் இடைப்பட்ட கட்டங்கள் என்பதை, என் அன்பர்களுக்கு உறுதியாகக் கூற விரும்புகிறேன்.**”

1956 ஆகஸ்ட் மாதத்தில், ஸான் ஃபிரான்சிஸ்கோவில், அவர் அமெரிக்க அன்பர்களிடம் இவ்வாறு குறிப்பிட்டார்: “(1957) **பிப்ரவரி 15க்கு முன்னர், என்ன நடக்கப் போகிறது என்பது எவருக்கும் தெரியாது.**”

ஒருவர் பாபாவிடம், “இவை ஏன் நடக்க வேண்டும்? ஏன் உங்களால் இவற்றைத் தடுக்க முடியாது?” என்று கேட்டதற்கு, பாபாவின் பதில்: “**தெய்வீக சித்தம் என்ன விதித்ததோ அது நிச்சயமாக நடக்கும், நடக்க வேண்டும்; நான் இறை மனிதன் என்று நீங்கள் நம்புகிறீர்களேயானால், அதைத் தவிர்ப்பது அல்லது தடுப்பது எனது கடைசி செயலாக இருக்கும்.**”

விபத்து நிகழ்வதற்குப் பல நாட்களுக்கு முன்பு, பாபா மண்டலியிடம் கேலியும், கிண்டலும் செய்தார்: “**நாம் அனைவரும் சில நாட்களில் உயிரைத் துறந்துவிடலாம்.**”

டாக்டர் நீலுவின் பக்கம் திரும்பி, “**எதை நினைத்தும் கவலைப்படாதீர்கள். என்னையே தொடர்ந்து சிந்தனை செய்துகொண்டே இருங்கள். ஏக இறைவனான நான் ஒருவனே எங்கும் இருப்பவன், நான் ஒருவனே முக்கியமானவன்.**”

டிசம்பர் 6ஆம் தேதி, பாபா தனது அன்பர்களுக்கு இந்த தனிப்பட்ட செய்தியை வழங்கினார்: “**கவலைப்படாதீர்கள், மகிழ்ச்சியாக இருங்கள். அனைத்தும் சிறப்பாக இருக்கும். நான் வழங்கிய அறிவுரைகளை உண்மையாக நிறைவேற்றுங்கள். விபத்து, வரவிருக்கும் சகவாச திட்டத்தை எவ்வகையிலும் பாதிக்காது; மாறாக, அதை முன்னெடுத்துச் செல்ல இது உதவியாக இருக்கும்**” என்று சுட்டிக்காட்டி, பாபா மேலும் கூறுகையில், “**இந்த சகவாச நிகழ்ச்சி நடந்தாக வேண்டும், அது நடக்கும்**” என்று குறிப்பிட்டார்.

பாபாவின் வாய் மற்றும் நாக்கு வீங்கியிருந்ததால், வீக்கம் குறையும் வரை திரவ உணவையே சில நாட்கள் உண்டுவந்தார். பூனாவிலிருந்து வந்த பப்பா ஜெஸவாலா, சதாஷிவ் பாட்டீல் ஆகியோர் பாபாவைப் பார்க்க அனுமதிக்கப்பட்டனர்; பாபா, எரச், பெண்டு மூவரையும் பார்த்த பின்னர் இல்லம் திரும்பினர்.

பெண்டுவின் கால்கள் இரண்டும் பிளாஸ்டர் பூசப்பட்ட நிலையில், பல நாட்களாக அவர் சுயநினைவின்றி இருந்ததோடு, தலையில் ஏற்பட்ட காயத்தால் அவரது பேச்சும் பாதிக்கப்பட்டது; பயங்கரமான வலியும் இருந்தது. எரச் தனது துன்பத்தை தைரியமாகத் தாங்கிக் கொண்டிருந்தார்; மேலும், அவரது விலா எலும்புகள் உடைந்ததால், அவர் படுக்க முடியாமல் இரவும் பகலும் பின் முதுகில் சாய்ந்து அமர்ந்திருந்தார். ஒரு மாதத்திற்குள், அவர் மருத்துவமனையிலிருந்து வெளியே வந்து, பூனாவில் பாபாவுடன் இணைந்தார்.

விபத்தில் உயிர் பிழைத்தவர்களில், பாபாவிற்கு மிகக் கடுமையான காயங்கள் ஏற்பட்டன, அவருடைய துன்பம் வேறு எந்த தனி மனிதருக்கும் தாங்க முடியாததாக இருந்திருக்கும். ஆனால் பாபா அதை விரும்பி ரசித்ததாகத் தோன்றியது, முற்றிலும் முடியாத நிலையில், அதீத வேதனையில் இருந்தபோதிலும், அவர் சிறிய சிறிய விஷயங்களையும் கருத்தில் கொண்டார்.

ஒரு முஸ்லீமாக இருந்த, பொது அறுவை சிகிச்சை நிபுணர், டாக்டர் அபாடின் உண்மையாகவே பாபாவிடம் வெகுவாக ஈர்க்கப்பட்டார். அவர் பாபாவைப் பார்க்க தினமும் கிராஃப்டனுக்குச் செல்வதுண்டு, மேலும் ராம்ஜூ மூலமாக அவரைப் பற்றி அடிக்கடி தெரிந்து கொண்டார்.

பாவ் கல்சூரி, அலோபா இருவரும் மருத்துவமனையில் இரவும் பகலும் எரச் மற்றும் பெண்டுவை கவனித்துக் கொண்டனர்; மேலும் அவர்களது சகோதர பாசத்தின் இதயப்பூர்வமான வெளிப்பாட்டால், ஊழியர்கள் வெகுவாக ஈர்க்கப்பட்டனர். பார்சி, ஈரானி, இந்து மற்றும் முஸ்லீம் நண்பர்களிடையே இவ்வளவு அன்பை அவர்கள் பார்த்ததில்லை, மேலும் ஒரு மருத்துவர், பாவ் கல்சூரியிடம் கூறினார்: “நீங்கள் உங்கள் சக தோழர்களுக்கு (மண்டலிக்கு)

சேவை செய்வது போல, நாங்கள் எங்கள் சொந்த தந்தை அல்லது சகோதரருக்கு சேவை செய்திருக்க மாட்டோம்.” ஜாதி, மதம், சமூகம் அல்லது இனம் தொடர்பான கட்டுப்பாடற்ற பாபாவின் தெய்வீக அன்பின் அற்புதத்தை, முழு மருத்துவமனை ஊழியர்களும் பார்க்க முடிந்தது.

பாபா தனது ஓராண்டு கால ஏகாந்தவாசத்தின் இறுதிப் பகுதியில், முழு ஓய்வெடுக்க வேண்டியது அவசியம் என்று கூறியிருந்தார். இப்போது, கிராஃப்டனில் அவரது படுக்கையில் முடங்கிய வண்ணம், எல்லா நேரத்திலும் ஒரே நிலையில் அவரது முதுகில் சாய்ந்துகொண்டு, கிட்டத்தட்ட நகர முடியாமல் இருந்த அவரது ஓய்வு காலம், இந்த அளவுக்குத் தனிப்பட்டதாகவோ அல்லது முழுமையானதாகவோ இருந்திருக்க முடியாது.

ஆனால் விபத்து நடந்து ஒரு வாரத்திற்குப் பின்னர், உடல் வலிகள் அதிகமாகி, தொடர்ந்து தசைப்பிடிப்பு போன்ற பிற சிக்கல்களும் ஏற்பட்டபோது, கடைசியாக கோஹெர் மற்றும் டானின் வேண்டுகோளுக்கு இணங்கி, பூனா மருத்துவமனையில் சிறந்த மருத்துவ வசதிகள் இருந்ததால், அங்கு அனுமதிக்கத் திட்டமிடப்பட்டது.

1956 டிசம்பர் 10 திங்கட்கிழமை காலை, பாபா அவசர மருத்துவ ஊர்தி மூலம் பூனாவிற்கு அழைத்துச் செல்லப்பட்டு, ஜங்க்ளி மஹாராஜ் சாலையில் (JANGLI MAHARAJ ROAD) அமைந்த டாக்டர் பன்ஸோடின் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். மெஹரா, மணி, மெஹரு ஆகியோர் மெஹர்ஜியின் காரில் பின்தொடர்ந்தனர், ரானோவும் நாஜாவும் மறுநாள் காலை ஸாம் கேரவாலாவின் காரில் வந்தனர். பாபாவை நேராக டாக்டர் பன்ஸோடின் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லவே, இரண்டாவது மாடிக்கு குறுகிய படிகளில் அவரை, தூக்கு படுக்கையில் மிகவும் சிரமப்பட்டு கொண்டு செல்ல வேண்டியிருந்தது. மருத்துவமனையில் காத்திருந்த மெஹர்வான் ஜெஸவாலா இவ்வாறு நினைவு கூர்ந்தார், “பாபாவின் இடுப்பில் ஏற்பட்ட பயங்கர வலியால் அவர் மிகவும் சத்தமாக முனகிக் கொண்டிருந்தார். அத்தகைய வேதனையை அவர் அனுபவித்தார்.” பாபாவின் கால் தசை பிடிப்பின் காரணமாக, பிளாஸ்டர் வார்ப்பு அகற்றப்பட்டது. மேலும் எக்ஸ்ரேக்குப் (X-RAY) பின்னர், அவரது கால் எலும்பு முறிவு சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டு, இழுவை மருத்துவம் வழங்கப்பட்டது. அவரை பரிசோதிக்க நரம்பியல் மற்றும் இதய நிபுணர்களும் வரவழைக்கப்பட்டனர்.

இடுப்பு எலும்பு முறிவு திருப்திகரமாக சீராகி வந்தாலும், வலியின் தீவிரத்தன்மை இருந்துகொண்டே இருந்தது; பாபாவின் மிகச் சிறிய அசைவுகளும் அதீத வேதனைக்கு வழிவகுத்தது. ஆனாலும், இடுப்பு வலி நீங்கியபோது, வேறுவிதமான வலி உருவானது - பாபா அந்த நேரத்தில் மண்டலியிடம், ‘**தான் இப்படித் துன்பப்பட வேண்டும், அவர்களால் எதுவும் செய்ய முடியாது, அதைக் குறைக்கவோ, பகிர்ந்துகொள்ளவோ இயலாது**’ என்று தெளிவாகக் கூறுவது போலவும், பாபா இதை உறுதிப்படுத்துவதாகவும் தோன்றியது. ஒரு நாள் அவர் தனது விரலால், எலும்பு முறிவு ஏற்பட்ட இடத்தில்

ஒரு வட்டத்தைச் சுட்டிக்காட்டி, "**முழுப் பிரபஞ்சத்தின் துன்பமும் இந்த சிறிய இடத்தில் குவிந்துள்ளது. இது நான் தாங்கும் உலகளாவிய துன்பத்தின் உறுதியான வெளிப்பாடு**" என்று சைகையால் தெரிவித்தார்.

ஆனால், அவரது உடல் வேதனையையும் மீறி, "**நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன். நான் விரும்பியபடியே நிகழ்கிறது**" என்று பாபா குறிப்பிட்டார்.

டாக்டர் பன்ஸோடின் மருத்துவமனையில் தங்குவது பாபாவிற்கு மனதிற்கு உகந்ததாக இல்லை - அது மிகவும் சிறியதாக இருந்தது, மேலும் அவர் அசௌகரியமாக உணர்ந்தார் - அவர் தேவைக்கு அதிகமாக அங்குத் தங்க மாட்டேன் என்று கூறினார். எனவே மெஹர்வான் ஜெஸவாலாவும் மெஹர்ஜியும் பூனாவில் பொருத்தமான வீட்டைக் கண்டுபிடிக்க விரைந்தனர். ஸாலிஸ்பரி பார்க் ரோடு 23இல் (23 SALISBURY PARK ROAD) மெஹர்ஜியின் சொந்த இல்லத்திற்கு அருகில் 'ஸில்வர் ஓக்ஸ்' (SILVER OAKS) என்ற ஒரு சிறிய, அமைதியான பங்களாவை வாடகைக்கு எடுத்தனர். 11ஆம் தேதி மதியம், பாபா அங்கு அழைத்துச் செல்லப்பட்டார். அவருக்காக ஒரு பிரத்யேக படுக்கையைத் தயார் செய்து, டாக்டர் பன்ஸோட் மற்றும் டாக்டர் வீர்கர் (DR. VIRKAR) என்ற அறுவை சிகிச்சை நிபுணர் அவரது காலிற்குத் தேவையான சிகிச்சையை வழங்கினர். ஆனால், அன்று மாலை, பாபாவிற்கு மீண்டும் கடுமையான வலியும் சதைப்பிடிப்பும் ஏற்படவே, இரவில் மருத்துவரை அழைக்க வேண்டியதாயிற்று.

பெண் மண்டலி பிந்த்ரா ஹவுஸில் தங்கினர்; அதைத் தொடர்ந்து, டாக்டர் டானைப் போலவே பாபாவுடன் தங்குவதற்காக, அவர்கள் ஸில்வர் ஓக்ஸ் பங்களாவிற்குச் சென்றனர். கோஹெர், மற்றும் மெஹருவின் சகோதரி நாகு (அவரும் ஒரு மருத்துவர்) ஆகியோர் அவரை கவனித்துக் கொண்டிருந்தனர். அனைவருக்கும் தேவையான உணவு பிந்த்ரா ஹவுஸிலிருந்து வந்ததால், சமையலில் உதவ நாஜா அங்குத் தங்க வேண்டியதாயிற்று. மெஹர்ஜி, ஜால்பாய் இருவரும் இரவு கண்காணிப்புப் பணிகளைப் பகிர்ந்து கொள்ள, நரிமன் ஒவ்வொரு வார இறுதியிலும் மும்பையிலிருந்து வந்து இரவு கண்காணிப்பில் உதவினார்.

சத்தாராவில் குணமடைந்து வரும் மண்டலியைப் பற்றிய விபரங்களை அறிந்து, பாபாவிடம் தெரிவிக்க பாவ் கல்சூரி ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் பூனாவிற்குச் சென்று, அன்று மாலையே சத்தாராவிற்குத் திரும்புவது வழக்கம். பாவ் கல்சூரிக்கு இது ஒரு பயங்கரமான மன உளைச்சலின் காலகட்டமாக இருந்தது. பாபா அவரை ஓய்வெடுக்கச் சொன்னாலும், இன்னும் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் எரச்சையும் பெண்டுவையும் எவரேனும் கவனித்துக்கொள்ள வேண்டியிருந்ததால், அவரால் கீழ்ப்படிய முடியவில்லை. சில நேரங்களில், பெண்டுவிற்கு அருகிலிருந்த உதவியாளர் வரவில்லை என்ற செய்தி பாவ் கல்சூரிக்குத் தெரிவிக்கப்பட்டதும், அவர் நேராக மருத்துவமனைக்குச் சென்று, இரவு முழுவதும் விழித்திருக்க வேண்டியிருந்தது.

பாபா, அவரை ஓய்வெடுக்க அறிவுறுத்தி இருந்தாலும், அதை நிறைவேற்றுவது சாத்தியமற்றதாக இருந்தது.

பூனாவில் இருந்த வேளையில், ஒரு ஞாயிற்றுக்கிழமை, பாபா அவரை மீண்டும் கடிந்து கொண்டார். **"எனது வார்த்தைகளுக்கு மதிப்பில்லையா?"** அவர் பாவ் கல்சூரியிடம் கேட்டார். **"நீங்கள் எனது கட்டளையை மீறுவது வழக்கமாகிவிட்டது. உங்கள் உடல்நிலை சரியில்லாததால் நீங்கள் உயிரைத் துறக்கலாம். உங்கள் மரணம் எனக்கு வலியைத் தராது, ஆனால் எனது கட்டளைகளுக்கு உங்களின் கீழ்ப்படியாமை வலியைத் தரும்! நான் ஏற்கனவே துன்பப்படுகிறேன், உங்கள் கீழ்ப்படியாமை, எனது துன்பத்தை மேலும் அதிகரிக்கிறது."**

பாவ் கல்சூரியை சித்திரவதைக்கு உள்ளாக்கும் விதத்தில், பாபா, **"உங்களால்தான் இந்த விபத்து நடந்தது!"** என்றார்.

அந்த நேரத்தில், பாவ் கல்சூரிக்கு அதன் அர்த்தம் என்னவென்று தெரியவில்லை; ஆனால், பாபாவின் கண்டனம் தாங்க முடியாத அளவுக்கு அதிகமாகிவிட்டது. அவர் பாபாவிடம் கூறினார், "நான் என்ன செய்ய வேண்டும்? சூழ்நிலைகளால் நான் கீழ்ப்படிய முடியாத நிலைக்குத் தள்ளப்படுகிறேன்."

**"சூழ்நிலைக்கு ஏற்ப என் அறிவுறுத்தல்களைப் பின்பற்ற விரும்புகிறீர்களா? உங்கள் கீழ்ப்படிதல் சூழ்நிலைகளைச் சார்ந்தது என்றால், உங்களால் ஒருபோதும் எனக்குக் கீழ்ப்படிய முடியாது."**

"அப்படியானால், எரச், பெண்டு இருவருக்கும் என்ன ஏற்பாடு செய்ய வேண்டும்?"

**"நீங்கள் எனது வார்த்தைகளுக்கு மதிப்பளிக்கிறீர்களா அல்லது எரச், பெண்டு இருவரின் வார்த்தைகளுக்கா? அவர்கள் உயிரைத் துறந்தால்தான் என்ன? எனது விருப்பத்தை நிறைவேற்றுவதைப் பொறுத்தவரை, அதனிடையே எதுவும் வரக்கூடாது."**

இறுதியில் 1957 ஜனவரியில், மெஹராபாத்திலிருந்து சிது இரவு நேரங்களில் பெண்டுவின் அருகில் இருக்க அழைக்கப்பட்டார்.

பத்து நாட்களாக பாபாவிற்கு சிறுநீர் கழிப்பதில் சிக்கல் இருந்தது. அவர் பல நாட்களாக மலமும் கழிக்கவில்லை; மேலும் டாக்டர் பன்ஸோட் கழிவுகளை தனது கைகளால் அகற்ற வேண்டியிருந்தது. இது மிகவும் வேதனையான செயல்முறையாக இருந்தாலும், அதற்குப் பிறகு பாபா மிகவும் ஆறுதலாக உணர்ந்தார். பாபாவிற்கு சிகிச்சை அளித்த ஒவ்வொரு மருத்துவரும் அவருடைய தேவைகளைப் பூர்த்தி செய்வதில் மிக்க மகிழ்ச்சி அடைந்தனர்; அதீத வலியால் அவதியுற்ற போதிலும், பாபா அவர்களுடன் எந்த துன்பமும் இல்லாதது போல நடந்து கொண்டார். மருத்துவர்கள், நோயாளிகளைப் போல, தங்கள் தனிப்பட்ட பிரச்சினைகளை பாபா முன் வைத்தனர்.

ஆனால், மண்டலியுடனான பாபாவின் அனுதின அணுகுமுறை முற்றிலும் தலைகீழாக இருந்தது. அவர்களிடம், அவர் தொடர்ந்து புகார்

கூறுவதும், அவர்களின் அனைத்து கருத்தார்ந்த கவனத்தையும் மீறி, வலியால் அமைதியின்றி இருந்தார்; இதன் மூலம் அவருக்கு மேலதிகமாக சேவை புரியும் வாய்ப்பு வழங்கப்பட்டது. எந்த ஓர் ஆண் அல்லது பெண் மண்டலியின் சிறிதளவு கவனக்குறைவையும் அவரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை, மேலும் அவர்களுக்கு உயர்தரமான சேவையைக் குறித்த எண்ணற்ற பாடங்களைக் கற்றுத்தந்தார்.

1956 டிசம்பர் 15 அன்று மாலை பாபா, பெண்மணிகளிடம் கூறினார்:

**எனது ஏகாந்தவாசத்தின் கடைசி 75 நாட்களில், விபத்து நிகழ்ந்த நாளிலிருந்து, நான் உடல் ரீதியான துன்பங்களை சந்திக்க வேண்டியிருந்தது. அதன் தீவிரத்தன்மையின் முக்கிய வடிவம், ஒரு மலையில் ஏறுவதைப் போன்றது: முதல் மூன்று வாரங்கள் ஏற்றத்தில் இருப்பது. (எனவே நாளை தொடங்கும் முக்கியமான வாரம் அதன் உச்சமாக இருக்கும்.) அடுத்த மூன்று வாரங்கள் மெதுவாக, படிப்படியாக இறங்கும்; அதன் பின்னர் அடுத்த 45 நாட்களில் படிப்படியாக எனது நிலையில் ஏற்படும் முன்னேற்றம், சாதாரண ஒருவரின் வலி மற்றும் அசௌகரியமான நிலை போல் இருக்கும்.**

பாபா தொடர்ந்தார்:

**பிரபஞ்சத்தின் முழு மன வேதனையும் என்னை நசுக்க விரும்புகிறது போலும்! ஆனால் நான் அனுபவிக்கும் அளவிறுதியற்ற பேரின்பமும், அனைவரின் மீதும் நான் கொண்ட அளப்பரிய அன்பும் என்னைத் தாங்கி நிற்கிறது; மேலும், என் அன்பர்கள் அனைவரின் ஒட்டுமொத்த அன்பும், நான் சுமக்கும் பாரத்தில் என்னை ஆதரிக்கிறது. வரவிருக்கும் வாரம் எனது துன்பத்தின் உச்சக்கட்டமாக இருக்கும், ஆனால் அது மிகவும் இன்றியமையாதது; அப்படியே இருக்க வேண்டிய ஒன்று. இந்த இக்கட்டான காலகட்டமும், என்னை நேசிக்கும் அனைவரின் அன்பினால் கடந்து போகும்.**

பாபா கீழ்வரும் செய்தியை 'அவர் மீது அன்புள்ளம் கொண்ட அனைவருக்காகவும்' எடுத்துரைத்தார்:

**இந்த வெளியளவிலான உதவியற்ற நிலையில், கடவுளைத் தவிர, பிற அனைத்தும் மாயை என்று நான் மீண்டும் பறைசாற்றுகிறேன்; அன்பு, தியாகம் மற்றும் அன்பிற்குரிய இறைவனின் விருப்பத்திற்கு முழுமையாக, தங்குதடையின்றி சமர்ப்பணம் செய்வது ஒன்றுதான், ஆத்மா பரமாத்மாவுடன் ஒன்றிணைவதற்கான ஒரே வழி.**

**நான் ஒவ்வொரு தனிப்பட்ட ஆத்மாவின் ஆதாரமாகத் திகழும் பரமாத்மா. நானே ஏக இறைவனோடு ஐக்கியமாகும் இறுதி இலக்கு. எனவே இதயப்பூர்வமாகவும், முழு நேர்மையுடனும் என்னை நேசிக்கவும். எனது ஏகாந்தவாசம் நிறைவடைந்ததும் (1957, பிப்ரவரி 15 அன்று), நான் இந்த உதவியற்ற நிலையிலிருந்து விடுபடுவேன். அனைவருக்கும் எனது சகவாசம், தரிசனம் மற்றும் எனது ஆசிகளை வழங்குவேன்.**

**பிப்ரவரி 15ஆம் தேதி, என் அன்பர்கள் அனைவருடனும் இணைந்து, 24 மணி நேரம் உபவாசம் கடைப்பிடிப்பேன். மேலும், உடற் காயங்கள் காரணமாக, எனது செயல்பாடுகளுக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளைப் பொருட்படுத்தாமல், அன்று 700 ஏழைகளுக்கு உணவளித்து தலைவணங்குவேன்.**

**உங்கள் அனைவருக்கும் என் அன்பை வழங்குகிறேன்.**

1956 டிசம்பர் 16 ஞாயிற்றுக்கிழமை முதல், பாபா, உடல் நலம் குன்றியதாக உணரத் தொடங்கினார். அவரது வலி மேலும் அதீத தீவிரத்தன்மையுடன் அதிகரித்தது. பாபாவின் கால் இழுவையில் வைக்கப்பட்டதால், மணற் பைகள் அவரைப் படிப்படியாக படுக்கையின் கால்களை நோக்கி இழுத்துச் சென்றன; மீண்டும் அவரை மேலே கொணர்ந்தபோது அவருக்கு பயங்கரமான வலி ஏற்பட்டது. முந்தைய பிளாஸ்டர் வார்ப்பு மற்றும் படுக்கைப் புண்கள் காரணமாக அவரது முதுகில் கொப்பளங்கள் வந்தன, ஆனால் அவர் நகர்த்தப்படும் போதெல்லாம் அவரது காலில் வலி அதிகமாக இருந்ததால், அவற்றை குணப்படுத்த சிரமமாக இருந்தது. மேலும், அவர் எப்பொழுதும் பின் முதுகில் சாய்ந்து இருந்ததால், அவரது முதுகெலும்பின் கீழே உள்ள குத எலும்பில் வலி தொடர்ந்து இருந்தது.

டிசம்பர் 16ஆம் நாள் சரியாக மாலை 4.00 மணி, பெண்மணிகள் அவருடன் இருந்த போது, இந்த சம்பவம் நிகழ்ந்தது. பாபா படுக்கையில் படுத்திருந்தார்; இதர நேரத்தோடு ஒப்பிடுகையில், அமைதியாக, வலி இல்லாமல் இருந்தது போல தோற்றமளித்தார்; ஆனால் பெண்மணிகள் திடீரென அவரது கண்களிலிருந்து கண்ணீர் கன்னங்களில் வழிந்ததைக் கண்டனர். இந்த அழுகை தொடங்குவதற்கு முன்னால், அவரது விரல்கள் விரைவாக அதிர்ந்தன. கிட்டத்தட்ட ஒரு நிமிட நேர அழுகைக்குப் பிறகு, பாபா தனது கண்களைத் துடைத்து, அதைக் கண்டுகொள்ளாமல் மறந்துவிடுமாறு சைகையால் தெரிவித்தார். "**கண்ணீர் என் உடலின் துன்பத்திற்காக அல்ல; மாறாக, உலகம் எதிர்கொள்ளவிருக்கும் துன்பத்திற்காக**" என்று பாபா விளக்கினார்.

உலகத்திற்கு இந்தத் துன்பம் இதுகாறும் வரவில்லை என்று பெண்மணிகள் யூகித்தனர். பாபா கண்ணீர் சிந்துவதைப் பார்ப்பது, ஓர் அசாதாரண நிகழ்வு. இதுவரை பெண் மண்டலி பாபாவை இப்படிப் பார்த்ததில்லை.

கடுமையான வலி தொடர்ந்தது; 17 அன்று, பாபாவிற்கு ஜுரம் ஏற்பட்டது. இரண்டு நாட்களுக்குப் பிறகு, டிசம்பர் 19 அன்று, டாக்டர் ஸமரேந்திர சந்திர சேட்டர்ஜி (DR. SAMARENDRA CHANDRA CHATTERJEE) என்ற எலும்பியல் அறுவை சிகிச்சை நிபுணரை, இராணுவ மருத்துவமனையிலிருந்து டாக்டர் டான் அழைத்து வந்தபோது, அவர் பாபாவிற்கு சிகிச்சை அளிக்கத் தொடங்கினார். 38 வயதான சேட்டர்ஜி ராணுவத்தில் கர்னலாக இருந்தவர். பாபா, டாக்டர் சேட்டர்ஜியை மிகவும் விரும்பினார், டாக்டர் பன்ஸோடின் சிகிச்சை நிறுத்தப்பட்டது. சேட்டர்ஜி அதிக எக்ஸ்-ரேக்களை (X-RAYS) எடுத்தார் (பாபா, அந்த ராணுவ அதிகாரியை செல்லமாக காக்கா ஸௌரி (KAKA SOURI) என்று அழைத்தார்), மேலும் இழுவை

அகற்றப்பட்டு, பாபாவின் கால், இரண்டு நாட்களுக்கு 'தாமஸ் ஸ்பிலின்ட்' (THOMAS' SPLINT) என்றழைக்கப்படும் சிறப்பு இழுவையில் வைக்கப்பட்டது. டிசம்பர் 23ஆம் தேதி மாலையில், இதுவும் அகற்றப்பட்டபோது, பாபா தனது காலில் எந்த தடையும் இல்லாமல் மிகவும் சௌகரியமாக உணர்ந்தார்.

டிசம்பர் 22 அன்று, தினா டே (DINAH DAY), ஜீன் நிக்ஸ் (JEAN NIX) இருவரும், முறையே ஆங்கிலேய மற்றும் ஐரிஷ் பெண்மணிகள் (இவர்களில் ஒருவர் பாபாவைப் பற்றி கேள்விப்பட்டிருந்தும், அவரை இதுவரை சந்தித்ததில்லை) பாபாவைப் பார்க்க அனுமதிக்கப்பட்டனர். அவர்கள் இங்கிலாந்திலிருந்து தரைவழியாக ஈரான் வந்து, இந்தியாவில் பயணம் செய்தனர். ஆதி அவர்களை அஹமதுநகரில் சந்தித்து, பாபாவின் முகவரியைக் கொடுத்தார். பிந்த்ரா மாளிகையில் அன்றிரவைக் கழித்துவிட்டு, அவர்கள் மதராஸுக்குப் புறப்பட்டனர். இந்த இரண்டு பெண்மணிகளும் பாபாவுடன் எந்தத் தொடர்பையும் கொண்டிருக்கவில்லை என்றாலும், அன்பிற்குரியவரின் அரவணைப்பில் வரும் பல இளம் மேற்கத்தியர்களில் அவர்கள் முதன்மையானவர்கள்.

1956 டிசம்பர் 19/20 அன்று நள்ளிரவுக்குப் பிறகு, துறவி காட்கே மஹாராஜ் (GADGE MAHARAJ), அமராவதிக்குச் செல்லும் வழியில் உயிரைத் துறந்தார். மேலும், பாபா சுட்டிக்காட்டியபடி, ஏழு நாட்களுக்குப் பிறகு, டிசம்பர் 27ஆம் தேதி, மஸ்த் அலி ஷா மெஹராபாத்தில் மாலை 4:15 மணிக்கு காலமானார். பாபாவிற்குப் பிரியமான இருவர் இப்பூவுலகை விட்டுச் சென்றனர்.

டாக்டர் டான், பாபாவிற்காக வடிவமைத்து உருவாக்கிய ஒரு விசேஷமான கயிற்றுக் கட்டிலிற்கு பாபா 23ஆம் தேதி மாற்றப்பட்டார். இரண்டு தொங்கும் பட்டைகளைக் கையால் பற்றிக் கொண்டு, பாபா தனது உடலைத் தூக்குவதற்கு வசதியாக கட்டமைக்கப்பட்டது, அது அவருக்கு ஒரு சிறிய உடற்பயிற்சியையும் அளித்ததோடு, மிகவும் சௌகரியமாக இருந்தது; அவர் இன்னமும் தனது பக்கவாட்டில் திரும்ப அனுமதிக்கப்படவில்லை, இது அவரது அசௌகரியத்தை அதிகரித்தது. மணி, டான் ஸ்டீவன்ஸுக்கு எழுதிய கடிதத்தில் (1957 ஜனவரி 4) இந்தப் படுக்கையைக் குறித்து விவரித்தார்: "புதிய படுக்கையில் எல்லா வகையான உருளைகளும், சிறு சிறு கருவிகளும் பொருத்தப்பட்டுள்ளன; மேலும், பாபா (தனது முதல் இரு சக்கர வாகனத்தில் சவாரி செய்யும் பள்ளி மாணவனைப் போல) தனது பின் முதுகை உயர்த்த ஊஞ்சலை ஒத்த கம்பிகளின் துணையுடன் அதை இயக்குவது கண்ணைக் கவரும் காட்சியாக இருந்தது."

டிசம்பர் 24 காலை முதல் பாபாவின் கால் வலி கணிசமான அளவு குறைந்தது; அவரால் ஒரே நேரத்தில் சில நிமிடங்கள் எழுந்து அமரவும், காயமடைந்த காலை லேசாக வளைக்கவும் முடிந்தது. இதர பழகிப்போன வலிகள் மற்றும் அசௌகரியங்கள் அவ்வப்போது மிதமான ஜுரத்துடன் தொடர்ந்தன.

**பூனா** (POONA), **1957**



**பூனா** (POONA), **1957**

ஜகிந்தர் ஸிங்கிற்கு (JAGINDAR SINGH) பாவ் கல்சூரி எழுதியது போல் (டிசம்பர் 31 அன்று), "இப்போது பாபாவின் கால் தன்னியக்கத்துடன் இருந்தாலும், திடீர் அதிர்வுகளைத் தவிர்க்க மணல் மூட்டைகளுக்கு இடையில் வைக்கப்பட்டுள்ளது. பாபா உடலளவில் மிகவும் முன்னேற்றமடைந்ததாகத் தோன்றினாலும், அவர் அவ்வப்போது உடலின் ஏதேனும் ஒரு பகுதியில் வலி இருப்பதாக புகார் கூறுகிறார். வழக்கம் போல், அவர் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறார். சில நேரங்களில், அவருக்கு எதுவும் நடக்காதது போலவும், இதர நேரங்களில், அவர் மிகவும் வேதனையுடனும் காணப்படுகிறார்.

ஆதி, டான் இருவரும் 1957 ஜனவரி 5 காலை 9:00 மணிக்கு வந்த வேளையில், பாபா தனது முதல் விபத்துக்குப் பிறகு பயன்படுத்திய ஊன்றுகோல் மற்றும் மடிப்பு சக்கர நாற்காலியை கொண்டு வந்தனர், மேலும் காக்கா மெஹராஸாத்திலிருந்து அனுப்பி வைத்த ஒரு பெரிய கம்பளத்தையும் வழங்கினர். பாபா படுக்கையில் ஒரு பின்தாங்கியின் துணையுடன் முதுகுக்கு எதிராக கால்களை நீட்டி அமர்ந்திருந்தார். 1957 பிப்ரவரி மாதத்தில் பாபா நடத்த விரும்பும் ஏழைகளுக்கான மூன்று நிகழ்ச்சிகளுக்குத் தேவையான அறிவுரைகளை அவர் ஆதிக்கு வழங்கினார். பூனாவில் சாது வாஸ்வானியை சந்திக்கவும், சகவாச நிகழ்ச்சியில் கலந்து கொள்ள அழைப்புவிடுத்து, கோதாவரி மாய்க்காக சில செய்திகளுடன் ஸாக்கோரிக்குச் செல்லவும், ஆதியிடம் அறிவுறுத்தப்பட்டது. ஜனவரி 6ஆம் தேதி பாபாவைப் பார்க்க காடேக்கர் அனுமதிக்கப்பட்டார்.

பாபா குணமடைவதை துரிதப்படுத்த, திரு. நாயர் (MR. NAIR) என்ற மஸாஜ் மற்றும் உடற்பயிற்சி நிபுணர் (MASSEUR & PHYSIOTHERAPIST) நியமிக்கப்பட்டார். 5ஆம் தேதி முதல், நாயர், பாபாவிற்கு தினமும் கால் மற்றும் முதுகு மஸாஜ் செய்யத் தொடங்கினார், மேலும் மூட்டுகளில் ஒட்டுதல்கள் ஏற்படுவதைத் தடுக்க கால் பயிற்சிகளையும் வழங்கினார். பரிந்துரைக்கப்பட்ட பயிற்சிகள் வலிமிகுந்ததாக இருந்தாலும், பாபா அவற்றை முறையாகச் செய்தார்.

ஜனவரி 6 மதியம் தேஷ்முக் பூனாவிற்கு வந்து, ஸாலிஸ்பரி பார்க்கில் பாபாவைப் பார்த்தார். பாபா, தேஷ்முக்கை சில நிமிடங்கள் மட்டுமே தன்னுடன் இருக்க அனுமதித்து, பின்பு காடேக்கரை தொடர்பு கொள்ளுமாறு அறிவுறுத்தினார்.

விஷ்ணு சவானும் பாபாவின் பங்களாவுக்கு வந்தார். பல வருடங்களாக பாபாவின் தொடர்பில் இருந்தும், பாபா அவரைப் பார்க்கவில்லை. உண்மையில், பாபா ஏகாந்தவாசம் மேற்கொண்டதால், பூனா அன்பர்கள் எவரும் அவரைப் பார்க்க அனுமதிக்கப்படவில்லை. ஆனால் விஷ்ணு சவான் பிடிவாதமாக இருந்து, பாபாவின் ஆசீர்வாதத்தைத் தவிர வேறு எதையும் விரும்பவில்லை என்று கூறி அனுப்பினார். எனவே, அவருடைய ஆசீர்வாதத்தைப் பெறுவதற்காக, சில வாரங்களில் ஒரு குறிப்பிட்ட தேதியில் மெஹராபாத் செல்லுமாறு பாபா அவருக்கு அறிவுறுத்தினார்.

குறிப்பிட்ட நாளில், விஷ்ணு சவான் மெஹராபாத்திற்குச் சென்று, பின்பு, பாபா தங்கியிருந்த மெஹராஸாத்தை வந்தடைந்த வேளையில், பாபா அவரை எச்சரித்தார், "**எனது ஆசீர்வாதத்தை ஜீரணிப்பது என்பது மிகவும் கடினமானது. அதன் அர்த்தத்தை நீங்கள் புரிந்து கொள்ளவில்லை. அது என்னவென்று உங்களுக்குத் தெரியாது. நீங்கள் மிகப்பெரிய இடர்பாடுகளை சந்திக்க நேரிடும். என் அருள் என்றால் என்ன தெரியுமா? உங்களுக்குச் சொந்தமான அனைத்தும் பறிக்கப்படும். நீங்கள் வீதிக்கு வந்துவிடுவீர்கள்! என் அருளை அடையப்பெறத் துணிந்தவர்கள் மற்றும் அதற்கான நல்வாய்ப்பை அடையப் பெற்றவர்கள் அனைத்தையும் இழக்கிறார்கள். அவர்களுக்குத் தலைமேல் கூரை இராது, இடுப்பில் ஒரு கோவணம் மட்டுமே இருக்கும்.**"

பாபா மீண்டும் அவரை எச்சரித்தார், "**என்னுடைய ஆசீர்வாதத்தை உங்களுக்குள் ஓர் அங்கமாக்க மிகுந்த தைரியம் தேவை. ஆதலால், அதைக் கேட்காதீர்கள்; வேறு எதையேனும் கேளுங்கள்.**"

"எனக்கு உங்கள் ஆசி மட்டுமே வேண்டும்" என்று விஷ்ணு சவான் வலியுறுத்தினார்.

அமைதியாக பாபா, "**சரி, எடுத்துக் கொள்ளுங்கள். நான் உங்களுக்கு எனது ஆசியை வழங்குகிறேன்**" என்று சைகையால் தெரிவித்தார். பாபாவின் ஆசியுடன், விஷ்ணு சவான் பூனாவிற்குத் திரும்பிச் சென்றார். மிகக் குறுகிய காலத்தில், பாபாவின் வார்த்தைகளுக்கு இணங்க, விஷ்ணு சவான் மிகவும் கடினமான காலங்களை சந்திக்க நேர்ந்தது; படிப்படியாக வாழ்க்கையின் பிடிப்பை இழந்தார். அவர் திருமணமாகி குழந்தைகளுடன் வாழ்ந்து வந்தார். இந்த சந்திப்புக்குப் பிறகு, சில மாதங்களில், அவர் வீடு, பணம் அனைத்தையும் இழந்து பரிதாப நிலைக்கு ஆளானார்.

சில காலம், அவர் குடும்பத்துடன் பூனாவில் அமைந்த காட்கே மஹாராஜ் தர்மசாலையில் வாழ்ந்து வந்தார். நாட்கள் கடந்து செல்ல, அவர்கள் அங்கிருந்து வெளியேற வேண்டிய கட்டாயம் ஏற்படவே, காவல்துறையில் பணிபுரிந்த பாபா அன்பரான துரேக்கர், அவர்கள் மீது இரக்கப்பட்டு, தனது பங்களாவில் சேமிப்பு அறை ஒன்றில் தங்க அனுமதித்தார். மாதங்கள் கடந்தன. விஷ்ணு சவான், பாபாவின் 'ஆசீர்வாதத்தால்' தனது வாழ்க்கையின் சோதனைகளைத் தாங்க முடியாமல் தற்கொலை செய்ய தீர்மானித்தார். தற்செயலாக, அவர் எரச்சை ஒரு வீதியில் சந்தித்து, அவருக்கு என்ன நடந்தது என்பதைத் தெரியப்படுத்தவே, இந்தச் செய்தி பாபாவை எட்டியது; விஷ்ணு சவான், குருபிரசாத் பங்களாவிற்கு அழைக்கப்பட்டார்.

விஷ்ணு சவான், பாபா முன்னிலையில் ஸாஷ்டாங்கமாக விழுந்து வணங்கியபோது, பாபா அவருடைய குடும்பத்தைப் பற்றி அன்புடன் விசாரித்தார்; தொடர்ந்து பாபா, "**நீங்கள் முதலில் என்னிடம் வந்தபோது, என் ஆசீர்வாதத்தை அடையப் பெற, துணிச்சலும், தைரியமும் தேவை என்று நான் எச்சரித்தேன். உங்களுக்கு அந்த தைரியம் இல்லை, இப்போது, உங்களுக்கு என்ன வேண்டும்?**"

“பாபா, எனக்கு உதவுங்கள். வீட்டு உரிமையாளர் என்னையும் எனது குடும்பத்தாரையும் எங்கள் வீட்டிலிருந்து வெளியேற்றி, உடைமைகள் அனைத்தையும் அகற்றிவிட்டார். என்னிடம் ஒரு நயா பைசா கூட இல்லை, குழந்தைகள் பட்டினியால் வாடுகின்றனர்.”

**“சரி. நான் என் ஆசீர்வாதத்தை திரும்பப் பெற்றுக் கொண்டு, உங்களுக்கு சிறிது பண உதவி செய்கிறேன். ஆனால் எப்போதும் நேர்மையாக இருங்கள், என்னை மறந்துவிடாதீர்கள்.”** விஷ்ணு சவானுக்கு ரூ.1,000 தருமாறு நரிமனிடம் கேட்டுக்கொண்டதற்கு இணங்க, அவர் பணத்தைப் பெற்றுக் கொண்டு, மகிழ்ச்சியுடன் திரும்பிச் சென்றார்.

அடுத்த ஆண்டு, பாபா மீண்டும் பூனாவில் இருந்தபோது, கே.கே. ராமகிருஷ்ணனிடம், **“உங்களுக்கு விஷ்ணு சவானைத் தெரியுமா? அவரிடமிருந்து** (பூனா மையப் பணிக்காக) **ஏதேனும் பணம் கேட்டீர்களா அல்லது பெற்றுக்கொண்டீர்களா? நீங்கள் பூனா மையத்தை உருவாக்குவதில் பைத்தியமாக உள்ளீர்கள் என்று எனக்குத் தெரியும்”** என்றார்.

ராமகிருஷ்ணன் பாபாவிடம் கூறினார், “ஆமாம், எனக்கு அவரைத் தெரியும். அவர் இப்போது பெரிய மனிதராகத் தோன்றுகிறார். அவர் ஒரு தொழில்துறை அல்லது வணிக நிறுவனத்தின் மும்பை ஏஜென்சியை நடத்தி, பெரிய செல்வந்தர் ஆகிவிட்டார். ரயில் நிலையத்திற்குப் பின்னால் வசிக்கும் அவர், வாடகைக் காரில் எங்கும் பயணம் செய்கிறார். ஆனால் நான் அவரிடம் நன்கொடையாக எதுவும் கேட்கவில்லை. அவரது மனைவி ஒவ்வொரு மாதமும் பூனா மையத்திற்கு இரண்டு ரூபாய் அனுப்பி வைக்கிறார்; அவ்வளவுதான்.”

விஷ்ணு சவானிடமிருந்து பணம் எதுவும் ஏற்றுக்கொள்ள வேண்டாம் என்று ராமகிருஷ்ணனை பாபா எச்சரித்தார். **“மையத்தின் தேவைகளுக்காக ஒன்று இரண்டு ரூபாயை ஏற்றுக் கொண்டால் பரவாயில்லை, பெரிய தொகை வேண்டாம், அவராகவே வழங்கினாலும் வேண்டாம்; ஜாக்கிரதை.”**

மீண்டும், சிறிது காலம் கடந்தது. ஒரு நாள் குருபிரசாத்தில், மஹாராணி ஷாந்தாதேவி, பாபாவின் அருகில் அமர்ந்திருந்த வேளையில், விஷ்ணு சவான், மிகவும் சோகமான மனநிலையில் அங்கு வந்தார். பாபா அவரிடம் குஜராத்தி மொழியில் உண்மையை எடுத்துரைக்குமாறு அறிவுறுத்தி, மேலும் அவருக்கு என்ன பிரச்சினை என்று கேட்டார். விஷ்ணு சவான் தனக்கு எதிரான சில குற்றச்சாட்டுகளைப் பற்றி எடுத்துக்கூறி, அவர் நிரபராதி என்று சந்தேகத்திற்கு இடமளிக்கும் தொனியில் கூறிச் சென்றார். ஆனால் விரைவில், அவர் மோசடி குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டார். நேர்மையாக இருப்பது பற்றி பாபாவின் அறிவுரையைப் பின்பற்றத் தவறிய போதிலும், பாபா, அவர் சிறையில் இருந்தபோது விஷ்ணு சவானின் மனைவி மற்றும் குழந்தைகளின் நலனை அன்புடன் கவனித்து வந்தார்; இதன் மூலம் விஷ்ணு சவான் குருநாதரின் கட்டளைகளைப் பின்பற்றுவதில் விலைமதிப்பற்ற பாடத்தைக் கற்றுக்கொண்டார்.

இதேபோன்ற சம்பவம் பிலாஸ்பூரில் வாழ்ந்து, இந்திய ரயில்வேயில் பணிபுரிந்து வந்த தென்னிந்திய பாபா அன்பரான வட்ரேவு ராமராவ் (VADREVU RAMARAO) என்பவருடனும் நிகழ்ந்தது. ரயில்வே சொத்துக்களைத் திருடியதாக அவர் மீது குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன. பாபாவின் தரிசனத்திற்காக வந்தபோது, அவரும் தான் நிரபராதி என்று கூறினார். அவர் சட்ட விரோதமாக எதுவும் செய்யவில்லை என்றால் கவலைப்பட வேண்டாம்; **"உண்மை எப்போதும் வெல்லும்"** என்று பாபா அவரிடம் கூறினார். **"எனது பார்வை உங்கள் மீது இருக்கும். இப்போது வீட்டிற்குச் சென்று ஓய்வெடுங்கள். உங்களுக்கு ஒன்றும் ஆகாது."**

ஆனால் ராமாராவ் மீது விசாரணை நடத்தப்பட்டு, குற்றவாளி என நிரூபிக்கப்படவே, பல ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. அவர் சிறையில் இருந்தபோது ராமாராவின் குடும்பத்தைப் பராமரிக்குமாறு, பாபா தன் அன்பர்களிடம் கேட்டுக்கொண்டார். சிறையிலிருந்து விடுதலையானதும், ராமாராவ், பாபாவைப் பார்க்க வந்தார்; பாபா மீண்டும் அவரிடம், **"உண்மையைச் சொல்லுங்கள், நீங்கள் திருடுனீர்களா?"** என்று கேட்டதற்கு, கடைசியில் அவர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டார். **"உண்மை எப்போதும் வெல்லும் என்று நான் உங்களிடம் சொன்னேன்; கடைசியாக வந்தபோது ஏன் என்னிடம் உண்மையைச் சொல்லவில்லை?"** என பாபா வினவினார்.

பாபா, ராமாராவின் காதுகளைத் திருகி, **"நான் உங்களை மன்னிக்கிறேன், ஆனால் இனி ஒருபோதும் அவ்வாறு செய்யாதீர்கள்"** என்று அறிவுறுத்தினார்.

பாபாவின் எலும்பு முறிவுக்கு டாக்டர் சேட்டர்ஜி தொடர்ந்து சிகிச்சை அளித்து வரவே, அது நன்றாக குணமடைந்தது. அவரது உடல்நிலையில் சீரான முன்னேற்றம் இருந்தாலும், பாபா, படுக்கையிலிருந்து விரைவில் எழுந்து, வழக்கம் போல தனது செயல்பாடுகளைத் தொடர ஆர்வமாக இருந்தார். 1957 ஜனவரி 7 திங்கட்கிழமை அன்று, **"நான் விரைவில் குணமடைய வேண்டும், ஏனெனில், எதிர்காலத்தில் பல விறுவிறுப்பான பணிகள் செய்யப்பட உள்ளன"** என்றார்.

எரச், பெண்டு இருவரும் நன்கு குணமடைந்து வந்தனர். எரச், சத்தாரா மருத்துவமனையிலிருந்து 7ஆம் தேதி ரோஸ்வுட் பங்களாவிற்கு அழைத்துவரப்பட்டார். பெண்டுவின் உடல்நிலை சீராக முன்னேறி வந்தது.

விபத்து குறித்து காவல்துறையினர் நீண்ட நாட்களாக விசாரணை நடத்தினர். எரச்சின் ஓட்டுநர் உரிமம் தற்காலிகமாக ரத்து செய்யப்பட்டு, பாபா உட்பட அனைவரிடமும் வாக்குமூலம் சேகரிக்கப்பட்டது. விபத்துக்கான வெளிப்படையான காரணத்தை அதிகாரிகளால் கண்டுபிடிக்க முடியாததால், வழக்கு பல மாதங்கள் நீடித்தது. எரச் இறுதியாக 1957 செப்டம்பர் 28 அன்று விடுவிக்கப்பட்டார். நீதிபதி, "இது கடவுளின் செயல்" என்று தீர்ப்பளித்தார்.

காக்கா ஒரு நாள் பூனாவிற்கு அழைக்கப்பட்ட போது, ஜனவரி 21ஆம் தேதி திங்கட்கிழமை, ஸரோஷ் அவரை அழைத்து வந்தார். ‘பூட்டி’ (BHOOTY) என்ற நாய்க்கு குட்டிகள் பல இருந்தன, மேலும் தாயின் உருவத்தை ஒத்த ஆண் நாய்க்குட்டிகளில் ஒன்றைக் கொண்டு வருமாறு, பாபா, காக்காவிற்கு செய்தி அனுப்பியிருந்தார். பாபா, நாய்க்குட்டியுடன் விளையாடி, காக்காவிடம் இந்த நாய்க்குட்டியை மெஹராஸாத்தில் வைத்துக்கொண்டு, பிற பெரும்பாலான குட்டிகளை எவருக்கேனும் கொடுத்துவிடுமாறு அறிவுறுத்தினார். பாபா மெஹராஸாத் திரும்பி வந்ததும் அந்த நாய்க்குட்டிக்கு ‘மஸ்தான்’ (MASTAN) என்று பெயரிட்டார்.

ஜனவரி 19 அன்று பாபாவின் இடுப்புப் பகுதியின் எக்ஸ்-ரேக்கள் எடுக்கப்பட்டன; இது எலும்பு சரியாக குணமடைவதை உறுதிப்படுத்தியது. மறுநாள் மாலை 6:30 மணிக்கு டாக்டர் சேட்டர்ஜி, டான் கொண்டு வந்திருந்த சக்கர நாற்காலியில் பாபா சில நிமிடங்கள் அமரலாம் என்று கூறினார். எனவே, ஆறு வாரங்களுக்கு முன்பு நடந்த விபத்துக்குப் பிறகு, முதல் முறையாக, பாபா படுக்கையிலிருந்து தூக்கி சக்கர நாற்காலியில் அமர வைக்கப்பட்டார். அப்போது பாபா மகிழ்ச்சியாக, முகமலர்ச்சியுடன் முழு வீட்டையும் சுற்றி வந்தார். அடுத்தடுத்த நாட்களில், பாபா சக்கர நாற்காலியில் நீண்ட நேரம் அமரத் தொடங்கினார்; அவரது இடுப்பு வலியும் கணிசமான அளவுக்குக் குறைந்தது. முதல் விபத்திற்குப் பின்னர், அவர் பயன்படுத்திய ஊன்றுகோல் மெஹராபாத்திலிருந்து கொண்டு வரப்பட்டாலும், இன்னும் பயன்படுத்த அனுமதிக்கப்படவில்லை.

பாபாவிற்கு சில நேரங்களில் திரும்பத் திரும்ப வலிகள் இருந்தன; டாக்டர் கோஹெர் கூறியது போல, கிழிந்த மற்றும் பயன்படுத்தப்படாத தசைகள் இப்போது அதிக அளவிலான பயன்பாட்டில் வந்ததால், இத்தகைய வலி இருக்கத்தான் செய்யும். எனவே பாபா தொடர்ந்து வலியை அனுபவிக்க வேண்டியிருந்தது. ஆனால், முன்பு போல கடுமையாக இல்லை. இருப்பினும், ஜனவரி 23 மாலை, வலி பயங்கரமாக இருந்த அந்த நேரத்தில் அவர் இவ்வாறு கருத்துரைத்தார், “**விபத்து பிரபஞ்சத்திற்கு ஓர் ஆசீர்வாதம், அதே வேளையில் பாபாவிற்கு ஒரு சாபம்**!” ஆனால், மறுநாள் காலையில், வலி கிட்டத்தட்ட இல்லாமல் போனது, மேலும் அவர் இரண்டு மணி நேரத்திற்கும் மேலாக சக்கர நாற்காலியில் அமர முடிந்தது.

சத்தாராவிற்குத் திரும்பிச் செல்ல வேண்டாம் என்று பாபா முடிவு செய்ததால், 27ஆம் தேதி, ரானோ, நாஜா இருவரும் சத்தாராவிற்குச் சென்று, எல்லா பொருட்களையும் மூட்டை முடிச்சுகளாகக் கட்டி, பூனாவிலிருந்து பாபா விரைவில் செல்லவிருந்த மெஹராஸாத்திற்கு அனுப்பி வைத்தனர்.

1957 ஜனவரி 29 தொடங்கி, அஹமதுநகருக்கான பயணத்திற்குத் தயாராகும் வகையில், பாபாவை தினமும் காரில் ஒரு சிறிய சவாரிக்கு அழைத்துச் சென்றனர். எரச் பூனாவிற்கு வந்து பிந்த்ரா ஹவுஸில் தங்கியிருந்தார்; அவரும், மெஹர்ஜியும் பாபாவுடன் வருவதாகத் திட்டம்.

பாபாவின் இடுப்பு மூட்டில் சில சமயங்களில் மிகவும் வலியாக இருந்தது, மேலும் அவரால் இன்னும் நிற்கவோ, ஊன்றுகோலைப் பயன்படுத்தவோ முடியவில்லை. அவரது இரு சக்கர நாற்காலி காருக்கு அருகே எடுத்துச் செல்லப்பட்டு, பாபா தனது மறு காலைத் தாங்கிக் கொண்டு, இருக்கையில் நழுவி அமர்ந்தார்.

பாபாவிற்கு சிகிச்சை அளித்த அனைவரும் - எக்ஸ்ரே படம் எடுக்கும் ராணுவ மேஜர், டாக்டர் சேட்டர்ஜி மற்றும் மஸாஜ் மருத்துவ நிபுணர் திரு நாயர் - அவரால் வெகுவாக ஈர்க்கப்பட்டனர். ஒரு நாள் நாயர் அவரிடம், “பாபா, உங்கள் வலிகள் அனைத்தும் விடுபடும் நாளை எதிர்நோக்கி இருக்கிறேன்” என்றார்.

பாபா சிரித்துக்கொண்டே, **“அன்றைய தினம் நான் உங்களைத் தழுவுவேன்”** என்று சைகையால் தெரிவித்தார்.

“அப்படியானால் அது விரைவில் நடக்கும் என்று நம்புகிறேன்!” நாயர் அதீத ஆர்வத்துடன் பதிலளித்தார்.

ஒரு நாள் கோஹெர், பாபா தனது காலை அசைக்க முடியாத அளவுக்கு வலி இருப்பதாக டானிடம் கூறினார். டான் உடனடியாக ராணுவ மருத்துவமனைக்குச் சென்று, டாக்டர் சேட்டர்ஜியை அழைத்து வந்தார். அவர் வந்ததும் பாபா அவரைப் பார்த்து சிரித்தார். சேட்டர்ஜி பாபாவிடம், “என்ன பிரச்சினை?” என வினவினார்.

**“ஒன்றுமில்லை”** என்று பாபா பதிலளித்தார். படுக்கையில் எழுந்து அமர்ந்து, கால்களை பக்கவாட்டில் கொணர்ந்து, எந்தக் காயமும் ஏற்படாதது போல், இரண்டு கால்களையும் விளிம்பில் தொங்கவிட்டார். அவரைப் பிடித்துக்கொண்டு, சேட்டர்ஜி, பாபாவை எழுந்து நிற்க உதவியபோது, பாபா வலி எதுவும் இல்லை என்று கூறினார்; மகிழ்ச்சியான மனநிலையில் மீண்டும் படுக்கையில் அமர்ந்தார். சேட்டர்ஜி வருவதற்கு முன், பாபாவால் காலை அசைக்கவோ, படுக்கையில் அமரவோ முடியவில்லை!

டாக்டர் சேட்டர்ஜி, கோஹெரைப் பார்த்து, வினோதமான முறையில் வினவினார், “என்ன டாக்டர், உங்களுக்கு என்னவாயிற்று? என்னை ஏன் அழைத்தீர்கள்? பாபாவிற்கு ஒன்றும் இல்லை. அவர் நலமாக இருக்கிறார்.” கோஹெர் தன்னை ஓர் முட்டாள் போல் உணர்ந்தார், டானும் அவ்வாறே உணர வேண்டிய கட்டாயம் (பின்பு, சேட்டர்ஜியைத் தொந்தரவு செய்ததற்காக டான், கோஹெரைக் கண்டித்தார்.) சேட்டர்ஜிக்கு, பாபா அவரது நெருக்கமான தொடர்பை வழங்குவது - மேலும் கோஹெரை இத்தகைய அவமானகரமான அனுபவங்களைக் கடக்கச் செய்வது, பாபாவின் விளையாட்டாக இருந்தது.

1957 பிப்ரவரி 3 ஞாயிற்றுக்கிழமை அன்று சிது, அலோபா இருவருடன், பெண்டு, அவசர மருத்துவ ஊர்தி மூலம் பூனா வந்து, பாபாவைப் பார்ப்பதற்காக சில்வர் ஓக்ஸுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்; அங்கு வந்திருந்த மும்பை மற்றும் பூனாவைச் சேர்ந்த சில நெருங்கிய அன்பர்களைக் கண்டு, பெண்டு கண்கலங்கி அழுதார். பாபா, பெண்டுவைப் பார்க்க சக்கர நாற்காலியில் வெளியே

வந்து, அவரைக் கேலி செய்து அவருடன் வேடிக்கையாக பேசி, அதன் மூலம் அவருக்கு வேண்டிய தைரியத்தை வழங்கினார். "**நாங்கள் இருவரும் ஒன்றாக எழுந்து நடப்போம்**" என்று பாபா அவருக்கு உறுதியளித்தார்.

"ஆனால் நீங்கள் அனைத்தையும் அமைதியாக அனுபவிக்கிறீர்கள்" என்று பெண்டு கருத்துத் தெரிவித்தார்.

பாபா பதிலளித்தார், "**நீங்கள் முற்றிலும் சீராகிவிடுவீர்கள், மீண்டும் நடப்பீர்கள், ஆனால் என்னால் இனி எப்பொழுதும் சாதாரணமாக நடக்க முடியாது. என் இடுப்பு மூட்டு கூட சாதாரண இயல்பு நிலைக்கு வராது.**"

இராணுவ மருத்துவமனையில் சோதனை செய்த பிறகு, பெண்டு அஹமதுநகருக்கு அழைத்துச் செல்லப்பட்டார், அங்கு அவர் குணமடையும் காலகட்டத்தில், அக்பர் அச்சகத்தில் ஸட்டா குடும்பத்துடன் தங்கினார். இரண்டு கால்களிலிருந்தும் பிளாஸ்டர் வார்ப்புகள் அகற்றப்பட்டன, ஆனால் பெண்டுவால் இன்னும் நிற்க முடியவில்லை. அவரை கவனிக்க அலோபா நியமிக்கப்பட்டு, சிகிச்சைக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. ஒரு மாதத்திற்குப் பிறகு, பெண்டு, விஷ்ணுவைப் போலவே மெஹராபாத்திற்கு அனுப்பப்பட்டார். இதனால் சத்தாராவில் தங்கியிருந்த காலகட்டம் நிறைவுக்கு வந்தது. பாபா அங்கு மறுபடியும் செல்லவில்லை.



மஸ்தானுடன் மெஹராஸாத், **1957**
(WITH MASTAN, MEHERAZAD, 1957),



மெஹராஸாத்
(MEHERAZAD), **1957**



மெஹராஸாத்
(MEHERAZAD), **1957**

# இந்திய மண்ணில் இரத்தம் - மெஹராஸாத்தில் நன்னிலை எய்தல்

**(Blood On Indian Soil - Recovery In Meherazad)**

1957 பிப்ரவரி 12 செவ்வாய் அன்று காலை 9:30 மணிக்கு, டாக்டர் டான், மெஹர்ஜி இருவருடன் பாபா, பூனாவிலிருந்து மெஹராஸாத்திற்கு மெஹர்ஜியின் காரில் அழைத்து வரப்பட்டார். ஆதியின் காரில் பெண்மணிகள் பின்தொடர்ந்து, சுமார் ஒரு மணியளவில் வந்தடைந்தனர். பைதூல், பகீரத் இருவரும் சில நாட்களுக்கு முன்னர், 7 அன்று அனைத்து பெட்டி படுக்கைகளையும் கொண்டு வந்தனர். எரச், பாவ் கல்சூரி, ஸவக் மூவரும் ரயிலில் 11ஆம் தேதி இரவும், குஸ்தாஜி, கைக்கோபாத், ஜால்பாய் ஆகியோர் அடுத்த நாளும் வந்தனர். அவரது உடல் காயம் காரணமாக, அடுத்த சில மாதங்களுக்கு மெஹராஸாத்தில் கீழ்த்தள படுக்கையறையைப் பயன்படுத்த பாபா ஒப்புக்கொண்டார்.

பாபாவின் ஓராண்டு கால ஏகாந்தவாசம் 1957 பிப்ரவரி 15 வெள்ளிக்கிழமை முடிவடைய இருந்தது. ஏற்கனவே அறிவித்தபடி, 700 ஏழைகளுக்குத் துணி மற்றும் இனிப்புகளை விநியோகிக்க பாபா விரும்பினார். பாதிரி, காக்கா, சகன், ஆதி ஆகியோர் பொருத்தமான ஏழைகளைக் கண்டுபிடித்து, அன்றைய தினம் மெஹராஸாத்திற்கு அழைத்து வருமாறு, ஒரு மாதத்திற்கு முன்னரே அறிவுறுத்தப்பட்டனர். அன்று பாபா, தண்ணீர் கூட அருந்தாமல் 24 மணி நேரம் உபவாசம் கடைப்படித்தார். திட்டமிட்டபடி 700 ஏழைகள், அக்கம் பக்கத்து கிராமங்களிலிருந்து அழைத்து வரப்பட்டனர். ஒரு சரக்கு வாகனத்தில் துணிமணிகள் மற்றும் லட்டுகள் வந்து குவிந்து, கூடைகளாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. பாபாவின் விருப்பப்படி ஹமிர்பூரிலிருந்து உதவுவதற்காக, புக்கார் வந்திருந்தார், அஹமதுநகர் அன்பர்களும் இந்த நிகழ்ச்சியில் உதவியாக இருந்தனர்.

ஏழை நிகழ்ச்சி காலை 9:00 மணிக்கு ஆரம்பமானது. உள்ளே நுழைந்து, வெளியேற இரண்டு கதவுகள் இருந்ததால், காக்காவின் அறை இந்த நிகழ்ச்சிக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. முன் கதவு வெளியேறவும், பின் கதவு நுழைவாயிலாகவும் வைக்கப்பட்டு, அதன் வழியாக, ஏழைகள் ஒவ்வொருவராக உள்ளே விரைந்தனர். இரண்டு வாசல்களுக்கும் வெளியே, தார்பாய்களால் தற்காலிக கூரை அமைக்கப்பட்டது. முன் நுழைவாயிலின் வலது மூலையில் பாபா தனது சக்கர நாற்காலியில் அமர்ந்திருந்தார். இரண்டு அடி நீளத் துண்டுகளாக வெட்டப்பட்ட வெள்ளைத் துணிகளின் அடுக்கு, பாபாவின் அருகில் விநியோகத்திற்காகத் தயாராக வைக்கப்பட்டிருந்தது. அது ஒரு நபரின் சட்டைக்குப் போதுமான துணியாக இருந்தது. துணிக் குவியலுக்குப் பக்கத்தில் லட்டு கூடைகளும் இருந்தன.

விபத்தின் காரணமாக, பாபா விரும்பியபடி ஒவ்வொருவரையும் தலை தாழ்த்தி வணங்க முடியவில்லை. எனவே அவரது வலதுபுறத்தில் உயர்ந்த கால் மணை ஒன்று வைக்கப்பட்டது. ஒவ்வொரு ஏழையும் தனது பாதத்தை அதன் மீது வைத்த வேளையில், பாபா தனது கைகளால் பாதத்தைத் தொட்டு, பின்னர் அவரது நெற்றியைத் தொட்டு வணங்கினார். ஒவ்வொரு நபரும் பாபாவின் இடதுபுறம் அழைத்துச் செல்லப்பட்ட வேளையில், அவருக்கு ஒரு துண்டு துணியில் இனிப்புகளைச் சுற்றி வைத்து வழங்கப்பட்டதை, பாபா தனது இடது கையால் தொட்டார். சக்கர நாற்காலியில் அமர்ந்திருந்தாலும், இந்த வேலையில் மூழ்கியிருந்தபோது, பாபாவின் முகத்தில் விவரிக்க முடியாத மகிழ்ச்சி தென்பட்டது. அவரது இடுப்பில் வலி குறையாதபோதும், ஏழைகளுக்காக உழைத்ததில் அவர் அடைந்த வெளிப்படையான மகிழ்ச்சி அதை அகற்றியது போல தோன்றியது.

பாபா அன்றைய தினம், நவ்ஸாரியைச் சேர்ந்த ஹோாஷங் பரூச்சாவை (HOSHANG BHARUCHA OF NAVSARI) மெஹராஸாத்திற்கு அழைத்தார்; மேலும் கிராம மக்களைச் சுட்டிக்காட்டி, பாபா அவரிடம், "**நான் அவர்கள் ஒவ்வொருவரிலும் இருக்கிறேன்**" என்று குறிப்பிட்டார்.

ஏழை ஆண், பெண்களின் எண்ணிக்கை 700ஐத் தாண்டியது; மேலும் 40 துணி துண்டுகள் இருந்ததை இனிப்புகளுடன் அவர்களுக்கு வழங்கிய பின்னர், எஞ்சியிருந்த ஏழைகளுக்கு பாபா தலா இரண்டு ரூபாய் வழங்கினார். இந்த விழாவிற்காக 706 நபர்களுக்கு நுழைவுச் சீட்டு வழங்கப்பட்டாலும், அவர்களில் 36 பேர் வரவில்லை. மாறாக, நுழைவுச் சீட்டு இல்லாத பல ஏழைகள் அங்கு வந்தனர். துணிகள் மற்றும் இனிப்புகளின் விநியோகம் நிறைவடைந்த வேளையில், பாபா, பைதூலிடம் நாள் முழுவதும் அங்கேயே காத்திருக்குமாறு அறிவுறுத்தினார். நுழைவுச் சீட்டுடன் அந்த ஏழைகள் வந்தபோது, பைதூல் ஒவ்வொருவரின் கால்களையும் தொட்டு, தலா இரண்டு ரூபாயை வழங்கினார்; இது முடிந்ததும், பாபா, பைதூலின் கால்களை 36 முறை தொட்டார்.

ஏழைகளுக்கான நிகழ்ச்சியின் போது, மஸ்தை ஒத்த பாராகோட்டியும் (BARAKOTI) அங்கு வந்திருந்தார்; பாபா அவரைக் கண்டு மிக்க மகிழ்ச்சியடைந்தார்.

ஜிம் மிஸ்திரிக்கு அறிமுகமான நோஷிர் ஈரானியும் (NOSHIR IRANI) எதிர்பாராத விதமாக மும்பையிலிருந்து வந்தார். ஆனால் அவர் சற்று வித்தியாசமான நபர். பாபாவிற்கு கேக் மற்றும் இனிப்பு வகைகளை கொண்டு வந்திருந்தார். பாபா பொட்டலங்களைத் திறந்து, 706 நுழைவுச் சீட்டுகளை தங்கள் கிராமங்களில் வாழும் ஏழைகளுக்கு விநியோகிப்பதில் உதவி செய்த, பல்வேறு கிராமத் தலைவர்கள் ஒவ்வொருவரின் வாயிலும், இனிப்புத் துண்டுகளை தனது கைகளால் ஊட்டினார். கேக்கின் எஞ்சியிருந்த பாகம் ஹமிர்பூர் அன்பர்களுக்கு விநியோகிக்க புக்காரிடம் வழங்கப்பட்டது. கிராமத் தலைவர்கள் தவிர, 793 பேர் பாபாவிடமிருந்து பிரசாதத்தைப் பெற்றுக்கொண்டனர். காலை 11:00 மணிக்கு, விழா நிறைவடைந்தது. அதை வெற்றிகரமாக ஏற்பாடு செய்து, செயல்படுத்த

உழைத்தவர்களை பாபா பாராட்டினார், மேலும் அவர் தனது வீட்டில் தானே லட்டுகளை தயார் செய்த சகனை குறிப்பாகப் பாராட்டினார்.

மிகுந்த வேதனையில் இருந்த போதிலும், ஏழைகளின் பாதங்களைத் தொட்டு, அவர்களுக்குப் பிரசாதம் வழங்கி, சிறிதளவு அசௌகரியத்தையும் வெளியளவில் காட்டிக்கொள்ளாமல், ஒன்றரை மணி நேரம் பாபா பணிபுரிந்தார்.

அவரது விருப்பத்திற்கு இணங்க, மண்டலியுடன் பாபாவின் கிழக்கு மற்றும் மேற்கத்திய அன்பர்கள் நாள் முழுவதும் உபவாசம் கடைப்பிடித்தனர்.

குல்மாயின் மனநிலை சரியில்லாமல் மிகவும் அமைதியற்றவராக இருந்ததால், ஆதி சீனியர் அவரை 16ஆம் தேதி மெஹராஸாத்திற்கு அழைத்து வந்தார்; அங்கு பாபாவின் முன்னிலையில் பெரிதும் ஆறுதலாக உணர்ந்தார். மெஹரா அவரை தேநீருக்காக உள்ளே அழைத்துச் சென்றார்.



பாபாவின் பிறந்தநாள், மெஹராஸாத், 25 பிப்ரவரி 1957

(BABA'S BIRTHDAY, MEHERAZAD, 25 FEBRUARY 1957)

1957 பிப்ரவரி 25 திங்கட்கிழமை அன்று, பாபாவின் 63ஆவது பிறந்தநாள், பல்வேறு இடங்களில் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. இரண்டு நாட்களுக்கு முன்பு, பாபா உலகம் முழுவதும் வாழும் தமது அன்பர்களுக்கு, தொலைத்தந்தி அனுப்பினார்: "**என் அன்பர்கள் அனைவருக்கும் என் அன்பைத் தெரிவிக்கவும்.**"

பாபாவின் விருப்பத்திற்கு இணங்க, மெஹராஸாத் மண்டலி அனைவரும், அதிகாலை 4:00 மணிக்குத் தயாராகி விட்டனர். சத்தாராவிலிருந்து வந்திருந்த ராம்ஜூ, அன்று காலை நீராடி முடிக்க நீண்ட நேரம் எடுத்ததால், பிற அனைவரும் தண்ணீர் குழாயின் கீழ் நீராட வேண்டியிருந்தது. பாபா அனைவரையும் அதிகாலையில் நீராட அறிவுறுத்தியிருந்தும், சிலர் நீராடாமலேயே செல்லவேண்டிய கட்டாயம்.

காலை சரியாக ஐந்து மணிக்கு, பாபா பிறந்த அந்த நேரத்தில், ஆண், பெண் அனைவரும் அவரவர் பக்கங்களில் இருந்து, ஏழு முறை கடவுளின் பெயரை மொழிந்தனர். பாபா, ஆண்கள் அனைவரையும் தன் அறைக்கு அழைத்தார். மெஹரா, பாபாவிற்கு வெளிர் நீல நிற சட்டையை அணிய உதவியதோடு, அவரது கழுத்தில் மல்லிகை மற்றும் ரோஜா மாலையை அணிவித்தார். பாபா படுக்கையில் முதுகுப்புறம் சாய்ந்து அமர்ந்து, பிரகாசமாகத் தோற்றமளித்தார். ஒவ்வோர் ஆண்களுக்கும் முத்தமிட அவர் தனது கையை நீட்டினார் - அவரது பிறந்தநாளில் அவர்களுக்கு ஒரு தனித்துவமான அன்பின் அடையாளம்.

அப்போது பாபா ஆண்களிடம், "**நீங்கள் அனைவரும் நீராடினீர்களா?**" என வினவினார். காலை 4:00 மணி முதல் 4:45 மணி வரை ராம்ஜூ குளியலறையை ஆக்கிரமித்து, ஏகபோகமாக இருந்ததால், அவரும் காக்காவும் (பின்னர் அவசரமாக உள்ளே நுழைந்தவர்), மேலும் பைதூல், பாவ் இருவரையும் (குழாயின் கீழ் திறந்தவெளியில் நீராடியவர்கள்) தவிர வேறு எவரும் அன்று காலை நீராடவில்லை. ஜால்பாய் இதை பாபாவிடம் தெரிவிக்க, அவர் இவ்வாறு குறிப்பிட்டார், "**பிற இடங்களில் வாழும் என் அன்பர்கள், இரவு முழுவதும் எனக்காக விழித்திருந்து, எனது நினைவில் பல நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்திருந்த அதே நேரத்தில், என்னுடன் இருக்கும் நீங்கள் அலட்சியமாக இருக்கிறீர்கள். வெறுமனே நீராடுவதில் எந்த முக்கியத்துவமும் இல்லை; ஆனால் எனது சொந்த காரணங்களுக்காக நான் உங்களை நீராடச் சொன்னபோது, எனது விருப்பத்தை நீங்கள் நிறைவேற்ற வேண்டியது அவசியம்.**"

ஜால்பாய், ராம்ஜூவைப் பற்றி புகார் செய்து, "அவர் இதை வேண்டுமென்றே செய்தார் பாபா. பிற அனைவரும் வெளியில் காத்திருப்பது அவருக்குத் தெரியும்" என்று கூறி முடித்தார். ராம்ஜூ அமைதியாக இருக்க, இறுதியில் பாபா அவர்களை மன்னித்தார்.

பாதிரி, அரன்காவ்ம் கிராமவாசிகள் நிகழ்த்திய பாபாவின் பிறந்தநாள் விழாவைக் காண, அவரை ஸரோஷின் காரில் அன்று மெஹராபாத் அழைத்துச் சென்றார்.

பாபாவின் ஏகாந்தவாசம் நிறைவடைந்ததும், அவர் சக்கர நாற்காலியில் அமர்ந்து, ஒவ்வொரு காலையிலும் ஆண் மண்டலியைப் பார்க்கத் தொடங்கினார். 1957 மார்ச் 1 அன்று, ஸரோஷ், டாக்டர் கேட்கரை (DR. KETKAR) அஹமதுநகரிலிருந்து காலை 9:30 மணிக்கு அழைத்து வந்தார். விபத்துக்குப் பிறகு முதன்முறையாக பாபா, பக்கத்துணையின்றி நிற்க முடிந்ததில் அவர் மிக்க மகிழ்ச்சியடைந்தார். அஹமதுநகர் பூத் மருத்துவமனையில், அன்று மதியம் எடுக்கப்பட்ட மேலும் சில எக்ஸ்ரேக்கள் (X-RAYS), ஸரோஷ் மூலமாக பிந்த்ரா ஹவுஸில் தங்கியிருந்த டாக்டர் டானுக்கு அடுத்த நாள் அனுப்பப்பட்டது. காலில் ஏற்பட்ட முன்னேற்றத்தில் திருப்தி அடைந்து, அவற்றை டாக்டர் சேட்டர்ஜியிடம் காட்டியபோது, பாபா, ஊன்றுகோல் அல்லது இருபுறமும் ஆண்களின் தோள்களில் கையை ஊன்றி நடக்க ஆரம்பிக்கலாம், ஆனால் முதலில் மெதுவாக நடக்கலாம் என்று அவர் கூறினார். அதைத் தொடர்ந்து 3ஆம் தேதி மெஹராஸாத்திற்கு வந்த டாக்டர் டான், பாபாவின் சிகிச்சையை மேற்பார்வையிட அங்குத் தங்கத் தொடங்கினார். 4ஆம் தேதி மதியம், டானின் உதவியுடன், பாபா, விபத்துக்குப் பிறகு, தனது முதல் சில அடிகளை எடுத்துவைக்க முயன்றார். ஊன்றுகோலைப் பயன்படுத்தி, அவர் மிகவும் மெதுவாக நகர்ந்தார், மேலும் நடக்க முயற்சித்த வேளையில் வலி அதிகமாக இருந்தது. ஆனால் ஆண், பெண் மண்டலி அனைவரும் பாபாவின் அடுத்த கட்ட முன்னேற்றத்திற்கான ஆயத்தத்தில் நிம்மதியும் மகிழ்ச்சியும் அடைந்தனர்.

அடுத்த நாள், வேகம் மற்றும் நடைச்சுற்று (அவரது படுக்கையறைக்குள்) ஒரு நாளைக்கு இரண்டு முறை சில நிமிடங்களாக அதிகரிக்கப்பட்டன; பாபா வலியையும் பொருட்படுத்தாமல், மேலும் அதிகமாக முயற்சிக்கும் முனைப்பில் இருந்தார். மார்ச் இறுதி வரை, அவரது முழு எடையையும் வலது காலில் தாங்க வேண்டாம் என்று மருத்துவர்கள் அவருக்கு அறிவுறுத்தினர்; மேலும் பெண்மணிகள் அவரை மெதுவாக நகருமாறு நினைவூட்ட வேண்டும். இரவு நேரங்களில் அவர் அமைதியற்றவராக இருந்தார்; அவரது கால்களில் அவ்வப்போது தசைப்பிடிப்புகள் இருந்தன, ஆனால் அவர் ஒவ்வொரு நாளும், விடாமல் நடைபயிற்சியைத் தொடர்ந்தார். மார்ச் 8 அன்று, பாபா ஊன்றுகோலின் உதவியோடு சுற்றி வந்தார்; அவரது அடிகள் நீண்டதாகவும், முன்னேற்றங்கள் வேகமாகவும் இருந்தன.

பாபா, இஸ்மாயில் என்ற முஸ்லீம் சிறுவனை சத்தாராவிலிருந்து மெஹராஸாத்திற்கு அழைத்தார். இஸ்மாயில் பாபாவுடன் வாழ விரும்பினாலும், பாவ் கல்சூரியின் பாடப் பயிற்சி நிறைவடைந்ததும், பாபா அவரை ஆசீர்வதித்து, மீண்டும் சத்தாராவிற்கு அனுப்ப முடிவு செய்தார்.

இஸ்மாயில் பின்னர் இராணுவத்தில் இணைந்தார், அங்கு அவர் மிகச் சிறப்பாகச் செயல்பட்டு, குறுகிய காலத்தில் பல பதவி உயர்வுகளை அடையப் பெற்றார்.

1940 ஆண்டுகளின் முற்பகுதியில், பெங்களூரில் கிருஷ்ணா நாயர், பாபாவுடன் இணைந்ததைத் தொடர்ந்து, அவர் அருகிலேயே இரவு கண்காணிப்பாளராகப் பணிபுரிந்தார். ஆனால் சத்தாராவில் தங்கியிருந்த வேளையில், பாபா அவரை கேரளாவில் அவரது இல்லத்திற்கு திருப்பி அனுப்பினார். 1957 மார்ச் மாதத்தில் ஒரு நாள், பிற்பகல் 3:00 மணிக்கு, பாவ் கல்சூரி, பாபாவிடம் அவரது கண்காணிப்புப் பணிக்காகச் சென்றபோது, பாபா கேட்டார், "**கிருஷ்ணாவின் முகவரி உங்களுக்குத் தெரியுமா?**"

பாவ் கல்சூரி, "தெரியாது, ஆனால் அவர் மும்பையில் இருப்பதாகக் கேள்விப்பட்டேன்" என்று பதிலளித்தார்.

பாபா தீவிரமாகப் பார்த்து, "**நான் அவருக்கு ஒரு முக்கியமான தொலைத்தந்தி அனுப்ப வேண்டும். அதை எப்படி அனுப்புவது?**" என்று கேட்டதற்கு, பாவ் பதிலளித்தார், "ஸொராப்ஜி ஸிகன்போரியா (மும்பை மையத்தின் செயலாளர்) கிருஷ்ணாவின் இருப்பிடம் குறித்து அறிந்திருக்கலாம். அவருக்குத் தொலைத்தந்தி அனுப்பினால், அவர் கிருஷ்ணாவிற்குத் தெரிவிப்பார்."

உடனே பாபா கீழ்வரும் தொலைத்தந்தியை அனுப்புமாறு கட்டளையிட்டார்: "**கவலைப்படாதீர்கள். நான் உங்களுடன் இருக்கிறேன். நான் உங்களை ஒருபோதும் கைவிடமாட்டேன். அன்பு பாபா.**"

தொலைத்தந்தியை உடனே அனுப்புமாறு, பாவ் கல்சூரிக்கு அறிவுறுத்திய அடுத்த கணம், பாபாவின் அறையிலிருந்து வெளியே வந்ததும், அஹமதுநகருக்கு தினசரி செய்திகளையும் அஞ்சல்களையும் எடுத்துச் செல்லும் சிறுவன் ஏற்கனவே சென்றுவிட்டான் என்பது தெரிய வந்தது. பாவ் கல்சூரி, பாபாவிடம் திரும்பி வந்து தெரிவித்ததும், பாபா மிகவும் கலக்கமடைந்து, சைகையால், "**அவன் சென்றுவிட்டால், வேறு ஒருவரை அனுப்பியிருக்க வேண்டும், நான் இப்போது உங்களை எப்படி நம்புவது? நீங்கள் உபயோகமற்றவர்! எனது பணியின் முக்கியத்துவம் உங்களுக்குப் புரியவில்லை. நான் உடனே அனுப்பச் சொன்னால், அது 'உடனே' என்று அர்த்தம்!**"

இதர வேலைக்கார சிறுவர்கள், காக்கா பாரியாவின் கண்காணிப்பின் கீழ் இருந்ததால், இந்தச் சிறுவர்களுடன் பேசக் கூட தைரியம் இல்லாத அளவுக்கு பிற மண்டலியிடம் காக்கா மிகவும் கண்டிப்பாக நடந்துகொண்டார் என்பதும் உண்மை.

பாபா விபரங்கள் எழுதப்பட்ட தொலைத்தந்தி காகிதத்தை துண்டு துண்டாக கிழித்து, பாவ் கல்சூரியை நிந்தித்தார். சரமாரியான கண்டனங்கள் மாலை 5:00 மணி வரை தொடர்ந்தது, அவர் கிருஷ்ணாவிற்கு வேறொரு

தொலைத்தந்தியை எழுதுமாறு அறிவுறுத்தினார்: “**நீங்கள் எனக்கு மிகவும் பிரியமானவர், தைரியமாக இருங்கள், எல்லாம் சரியாகிவிடும்.**”

பாவ் கல்சூரியிடம் அதை உடனடியாக வேறொரு சிறுவன் மூலமாக அனுப்பிவைக்குமாறு அறிவுறுத்தவே, அவர் காக்காவை அணுகி, வேறொருவரை அனுப்புமாறு கூறினார். “இரண்டாவது சிறுவன் பால் வாங்கிவரச் சென்றுள்ளான்” என்று காக்கா எரிச்சலுடன் பதிலளித்தார். “நான் இந்தத் தொலைதந்தியை எனது கைகளில் எடுத்துக்கொள்வேன் என்று எதிர்பார்க்கிறீர்களா? ஏன் இன்று காலை சென்ற சிறுவனுடன் அதை அனுப்பவில்லை?”

பாபாவிடம் திரும்பிவந்த பாவ் கல்சூரி, தொலைத்தந்தி அனுப்பப்படவில்லை என்பதைத் தெரிவித்தார். இது அவரை மேலும் வருத்தமடையச் செய்தது, தொடர்ந்து இரண்டு மணிநேரம் அவருக்கே உரித்தான பாணியில் திட்டித் தீர்த்தார்.

இரவு 7:00 மணிக்கு, பாபா பழரசம் கேட்க, பாவ் அதை ஒரு கண்ணாடி டம்ளரில் கொண்டுவந்தார். இரண்டு வாய் அருந்திவிட்டு, டம்ளரை பாவ் கல்சூரியிடம் கொடுத்து, மீதியை அருந்துமாறு சைகையால் தெரிவித்தார். பாபாவின் மனநிலை திடீரென மாறியது. அவர் கேலி செய்து நகைச்சுவையாக உரையாடினார்.

அன்று மாலை வெளிப்பட்ட பாபாவின் விசித்திரமான மனநிலை, பாவ் கல்சூரியைக் குழப்பத்தில் ஆழ்த்தியது; அவர் தனது அறைக்குத் திரும்பி வந்ததும், சம்பவம் நிகழ்ந்த தேதி மற்றும் நேரத்தை நாட்குறிப்பில் பதிவு செய்துகொண்டார். சில வாரங்களுக்குப் பிறகு பூனா, ஸெயின்ட் மீரா உயர்நிலைப் பள்ளிக்கு, பாபா தரிசனம் வழங்கச் சென்றபோது, இந்த மர்மம் புலப்பட்டது. விழாவில் கலந்து கொண்ட கிருஷ்ணா நாயருடன் பாவ் கல்சூரி உரையாடிக் கொண்டிருந்த வேளையில், நடந்த சம்பவத்தை எடுத்துரைக்காமல், பாபா மெஹராஸாத்தில் அப்படியொரு புயலை உருவாக்கிய அதே நாளில், கிருஷ்ணா விரக்தியில் மலை மீது ஏறி தற்கொலை செய்துகொள்ள இருந்த சம்பவம் அவருக்குத் தெரிய வந்தது.

கிருஷ்ணா சத்தாராவிலிருந்து அவரது இல்லத்திற்கு அனுப்பப்பட்டு, இரண்டு வருடங்கள் கடந்தன; அவர் பாபாவைப் பார்க்க முடியாமல் மிகவும் பரிதவித்தார். பாபாவின் கட்டளைப்படி, அவர் மும்பையில் பணிபுரிந்து கொண்டிருந்த வேளையில், விரக்தியும் மனச்சோர்வுமடைந்த அவர், பாபாவைப் பிரிந்து வாழ முடியாது என்பதை உணர்ந்தார். அவர் மும்பையின் வடக்குப் பகுதியில் வாழ்ந்த சுவாமி நித்யானந்தாவின் ஆசிரமத்திற்குச் சென்று, அங்கு அந்த மகத்தான துறவியை சந்தித்தார். கிருஷ்ணா அவர் முன் நின்றதும், எதுவும் கேட்காமல், நித்யானந்தா சிரிக்க ஆரம்பித்தார்; கிருஷ்ணாவும் ஒரு வார்த்தை கூட பேசவில்லை.

கிருஷ்ணா அமைதியாக அங்கிருந்து புறப்பட்டுச் சென்று, துறவியின் ஆசிரமத்தின் அருகே அமைந்த மலையின் மீது ஏறி, மாலை 4:00 மணிக்கு மலை உச்சியைச் சென்றடைந்தார். மலைக்கு கீழே அமைந்த பெரிய பள்ளத்தாக்கில்

குதிக்கும் தீர்மானத்தில் அவர் இருந்தார். அவரது உடல் மலை இடுக்குகளில் மறைந்திருப்பதை எவரும் கண்டு கொள்ள முடியாது என நினைத்து, உறுதியாக, பொழுது சாய்ந்த பின்பு குதிக்க முடிவு செய்தார். அங்கேயே மலை மீது சாய்ந்து தூங்கியவர் விழித்தபோது, இருள் நிரம்பி இருந்தது. அவர் குன்றின் விளிம்பை நோக்கி மூன்று அடி எடுத்து வைத்த அந்த கணத்தில், திடீரென பாபாவின் கைதட்டல் கேட்டது. அவர் திரும்பிப் பார்க்கையில் பாபா, தனக்கு முன்னால் நின்றுகொண்டிருந்ததைக் கண்டார். பாபா அவரது முப்பது வயது தோற்றத்தில், சத்ரா அணிந்து, நீண்ட முடியுடன் காணப்பட்டார். கிருஷ்ணா, பாவ் கல்சூரியிடம் கூறினார், “பாபாவின் கண்கள் நெருப்பைப் போல் எரிந்து கொண்டிருந்தன! சிவப்பு நிறத்தில் ஒளிர்ந்தன!” கிருஷ்ணா மயங்கி கீழே விழுந்தவர், விழித்து எழுந்ததும் தற்கொலை எண்ணம் அவரைவிட்டு முற்றிலுமாக மறைந்தது.

அன்றைய தினம், அவருக்கும் பாபாவிற்கும் இடையே நடந்ததை, பாவ் கல்சூரி கிருஷ்ணாவிடம் சொல்லவில்லை. ஆனால், கிருஷ்ணாவின் உயிரைக் காப்பாற்ற, பாபா செயல்பட்ட விதம் அவருக்குத் தெளிவாகப் புலப்பட்டது. கிருஷ்ணா ஆறுதல் அடைந்து வீடு திரும்பியபோது, பாபாவின் மனநிலையில் திடீர் மாற்றம் ஏற்பட்டது. பல மணிநேர கண்டன வார்த்தைகளுக்குப் பிறகு, பாபா ஓரிரு வாய் அருந்திய இனிப்பு பானத்தை சுவைக்கும் அதிர்ஷ்டம் பாவ் கல்சூரிக்குக் கிடைத்தது.

பாபா தனது அன்பர்களை உண்மையாகவே வணங்குகிறார், அவரிடமிருந்து எதுவும் மறைக்கப்படுவதில்லை. அதைத் தொடர்ந்து, கிருஷ்ணா பாபாவை சந்தித்தபோது, அன்று நடந்ததைக் குறித்து வினவி, பாபா கூறினார், “**நான் இங்கு மட்டுமே இருக்கிறேன் என்று நீங்கள் நினைக்கிறீர்கள், ஆனால் நான் எங்கும், எல்லா இடங்களிலும் இருக்கிறேன் - உலகம் முழுவதும், உங்கள் இதயத்திலும் இருக்கிறேன்.**”

கிருஷ்ணா, பாபாவிடம் மும்பையில் அவர் எவ்வளவு பரிதாபமான நிலையில் இருந்தார் என்பதை எடுத்துரைத்தார். அவர் சிறுவனாக இருந்தபோது, பாபா அவரிடம் என்ன வேண்டும் என்று கேட்டதற்கு, ”எனக்கு நீங்கள் வேண்டும், பாபா” என்று பதிலளித்ததை பாபா அவருக்கு நினைவுபடுத்தினார்.

“**அது உங்களுக்கு நினைவிருக்கிறதா?**” பாபா அவரிடம் கேட்டார். “**என்னை அடைய விரும்புவது என்பது எனது கட்டளைகளைப் பின்பற்றுவதாகும்.**”

கிருஷ்ணா உடனே, “அப்போது நான் நினைத்தேன், உங்கள் விருப்பங்களைப் பின்பற்றுவது எளிது என்று, ஆனால் அது மிகவும் கடினம்” என்றார்.

“**பரவாயில்லை. இப்போது உங்கள் வேலைக்குத் திரும்புங்கள். இது என் உத்தரவு. நீங்கள் சுதந்திரமாக எப்பொழுது வேண்டுமானாலும் என்னை வந்து பார்க்கலாம்**” என்றார் பாபா.

நித்யானந்தாவுடனான அவரது சந்திப்பை கிருஷ்ணா விவரித்த வேளையில், பாபா வினவினார், **“நீங்கள் அந்தப் புனிதரின் தரிசனத்தைப் பெற்றுக்கொண்டீர்களா?”**

கிருஷ்ணா, “இல்லை, அவர் சிரித்துக் கொண்டிருந்தார்” என்று பதிலளித்தார்.

அதற்கு பாபா, **“அவர் சிரிக்கவில்லை; நான் சிரித்துக் கொண்டிருந்தேன். நானேதான் சிரித்துக் கொண்டிருந்தேன். நீங்கள் உயிரைத் துறக்க விரும்பினீர்களா? இனிமேல் தற்கொலையைப் பற்றி நினைக்காதீர்கள்!”** என்று கூறினார்.

டெல்லியைச் சேர்ந்த ஹக்குமத் ராய் கபில் (HAKUMAT RAI KAPIL), டெஹ்ரா டூனில், நான்கு ஆண்டுகளுக்கு முன்பு பாபாவை சந்தித்ததிலிருந்து, பாபாவின் ‘அழைப்பிற்காக’ காத்திருந்தார். அந்தக் காலகட்டத்தில், அவர் உலகத்தைத் துறந்ததோடு, இறை-உணர்வை எய்தும் எண்ணத்தில் ரிஷிகேஷ் சென்றிருந்தார்.

பாபா இவ்வாறு விளக்கமளித்தார்: **“வெளியளவில் துறப்பது எளிது, ஆனால் துறக்க வேண்டிய விதத்தில் துறப்பது மிக மிகக் கடினம். நீங்கள் உங்கள் சுயத்தைத் தவிர வேறு எதையும் துறக்க வேண்டாம். மேலும் என் உதவியின்றி அது இயலாது.”**

பாபா அவரை விரைவில் அழைப்பதாக உறுதியளித்தார்; மேலும் ஹக்குமத், பாபாவின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றி, ரிஷிகேஷுக்குச் சென்று, பின்னர் டெல்லிக்குத் திரும்பி வந்து, குடும்பத்துடன் இருந்து, தனது பணியைத் தொடர்ந்தார். பல ஆண்டுகளாக பாபா அவருக்கு அவ்வப்போது நினைவூட்டுவது வழக்கம்: **“எந்த நேரத்திலும், எல்லாவற்றையும் விட்டுவிட்டு என்னிடம் வாருங்கள் என்று நான் உங்களுக்கு ஒரு தொலைத்தந்தி அனுப்புவேன், நீங்கள் காலம் தாழ்த்தாமல் உடனடியாக வர வேண்டும்.”** இவ்வாறு, பாபாவின் தகவலுக்காகக் காத்திருந்த ஹக்குமத்தின் ஒருமித்த கவனம், பாபாவின் மீது குவிந்திருந்தது.

மெஹராஸாத்திலிருந்து, ஒரு நாள் பாபா, ஹக்குமத்திற்கு இந்தத் தொலைத்தந்தியை அனுப்பினார்: **“எல்லாவற்றையும் விட்டுவிட்டு என்னிடம் வாருங்கள்.”**

ஹக்குமத் ராய் வந்தபோது, பாபா அவரிடம் மூன்று நாட்கள் ஓய்வெடுக்குமாறு அறிவுறுத்தி, தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார். மூன்று நாட்களுக்குப் பிறகு, பாபா அவரிடம், **“கவனமாகக் கேளுங்கள். உங்களுக்கு இறையறிவு வேண்டுமாயின் எனது கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டும்”** என்று கூறினார்.

“இந்த நோக்கத்திற்காகத்தான் நான் உங்களிடம் வந்துள்ளேன்,” என்று ஹக்குமத் பதிலளித்தார்

பாபா கூறினார், **“எனது முதல் உத்தரவு, டெல்லிக்குத் திரும்பிச் சென்று, உங்கள் குடும்பத்துடன், இயல்பு வாழ்க்கை வாழ வேண்டும். அடுத்த**

**முறை நான் உங்களை அழைக்கும் வேளையில், உங்களைத் திருப்பி அனுப்ப மாட்டேன். நீங்கள் எனக்கு 100 சதவீதம் கீழ்ப்படிவதாக வாக்குறுதி அளித்துள்ளீர்கள். நீங்கள் கீழ்ப்படிகிறீர்களா இல்லையா என்பதை, இப்போது நான் பார்க்கிறேன்."**

ஹக்குமத் டெல்லிக்குத் திரும்பிச் சென்று, தொடர்ந்து பாபாவின் செய்திக்காகக் காத்திருந்தார், இது அவரது ஏக்கத்தை மேலும் அதிகரித்தது. சிறிது காலம் கழித்து, பாபா அவரை மெஹராஸாத்திற்கு அழைத்து, அவரிடம், **"நேற்றிரவு, உங்கள் மனைவி காலமானதைக் கண்டேன். உங்கள் குழந்தைகளும் திடீரென உயிரைத் துறந்துவிட்டனர். அவர்களைப் பற்றி நீங்கள் கவலைப்படுகிறீர்களா?"** என வினவினார்.

"இல்லை, பாபா, நான் இங்கே உங்களுடன் மகிழ்ச்சியாக இருக்கிறேன்" என்று அவர் பதிலளித்தார்.

**"உங்களைப் பொறுத்தவரை அவர்கள் உயிரைத் துறந்ததால், நீங்கள் சந்தோஷமாக இருக்கிறீர்கள், ஆனால் எனக்காக அவர்கள் வாழ்கிறார்கள். ஆதலால், நான் எனது பொறுப்பைக் கருத்தில் கொண்டு, அவர்களை கவனித்தாக வேண்டும். நீங்கள் சுதந்திரமாக இருந்து, இந்தப் பொறுப்பை என்னிடம் கொடுக்க விரும்புகிறீர்களா? இந்தத் தலைவலியை நான் உங்களிடமிருந்து எடுத்துக் கொண்டால் நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்களா?"**

"நீங்கள் எனக்காகத் துன்பப்படக்கூடாது," ஹக்குமத் கூறினார்.

**"இப்போது 'துறவு' என்பதன் பொருள் உங்களுக்குத் தெரியுமா? துறவு என்றால் உலகத்தில் வாழ்ந்து, அத்துடன் ஒன்றாமல் இருப்பது. அதுதான் துறவு. எல்லாவற்றையும் வெளியளவில் விட்டுவிட்டு, காட்டிற்குச் செல்வதானால் அது துறவு ஆகாது. எல்லாமே உங்கள் மனதில் உள்ளது. உலகத்துடன் உங்களைப் பிணைத்து வைத்திருக்கும் அந்த மனப்படிவங்களிலிருந்து நீங்கள் விடுபடாத வரை, உங்கள் எண்ணங்களிலிருந்து விடுதலை கிடைக்காது.**

**"எனவே நான் உங்களை ஒரு 'காவலராக' நியமிக்கிறேன். எனக்காக உங்கள் மனைவி மற்றும் குழந்தைகளை கவனித்துக் கொள்ளுங்கள், அவர்கள் எனக்குச் சொந்தமானவர்கள், நீங்கள் அவர்களை எனக்காக கவனித்துக் கொள்ள வேண்டும்; அவர்கள் உங்களுக்குச் சொந்தமானவர்கள் என்று ஒருபோதும் நினைக்க வேண்டாம்.**

**"இந்த தியானம், ஒருமித்த கவனம், துறவு, விரதம், மௌனம், பலவிதமான பிராயச்சித்தங்கள், தவங்கள் அனைத்தையும், எனது கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதுடன் ஒப்பிடும்போது ஒன்றுமில்லை. எனவே எனது விருப்பத்தைப் பின்பற்றி, என்னை நினைவில் கொள்ளுங்கள்; நான் உங்களுக்குத் தேவையானதை விட அதிகமாகத் தருவேன் என்று நான் உறுதியளிக்கிறேன். நான் என்ன தருவேன் என்று உங்களால் கற்பனை செய்து கூட பார்க்க முடியாது. நான் உங்களுக்கு உண்மையான பொக்கிஷத்தை வழங்குவேன்; அது உங்களை உண்மையின் பாதையில்**

**இறை உணர்வை நோக்கி அழைத்துச் செல்லும். நான் எப்பொழுதும் உங்களுடன் இருப்பேன்.**"

ஹக்குமத் மிகுந்த மகிழ்ச்சியுடன் தனது இல்லம் திரும்பி, பாபாவின் வழிமுறைகளைப் பின்பற்றினார்.

1957 மார்ச் 10ஆம் தேதி பாபா அனுமதித்ததற்கு இணங்க, ஆதி சீனியர், ரோடா மிஸ்திரியை சில மணிநேரங்களுக்காக மெஹராஸாத்திற்கு அழைத்து வந்தார். ஐரீன் கோனிபியர் சில நாட்கள் மெஹராஸாத்தில் தங்க அனுமதிக்கப்பட்டார். மார்ச் 16 அன்று மதியம் 2:30 மணிக்கு, ஐரீனுடன் அறிமுகமான இராணுவ அதிகாரி கர்னல் ஃபிரான்சிஸ் கோல்ட்னி இங்கிலாந்திலிருந்து மெஹர்ஜியுடன் வந்து, மெஹராஸாத்தில் தங்கத் தொடங்கினார். கேஷவ் நிகம், குமார், கிஷன் ஸிங் ஆகியோரும் அழைக்கப்படவே, அவர்களும் இந்த நேரத்தில் வந்தனர். கேஷவ் அஹமதுநகருக்குப் பயணம் செய்த ரயிலின் ஐந்து பெட்டிகள் தடம் புரண்டது, ஆனால் எவருக்கும் பெரிய அளவில் காயம் ஏற்படவில்லை. அன்று காலை முழுவதும் பாபா, கேஷவைப் பற்றிக் கேட்டுக் கொண்டிருந்தார்.

கோதாவரி மாய், பாபாவை ஸாக்கோரிக்கு அழைத்திருந்தார், அவரை ஏமாற்றமடையச் செய்ய விரும்பாததால், பாபா, அங்குச் செல்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. பாபா, ஸாக்கோரிக்கு விஜயம் செய்யவிருக்கும் செய்தி, இந்திய தேசம் முழுவதும் பரவியது. அவர் ஏகாந்தவாசம் மேற்கொண்டதால், ஒரு வருடத்திற்கும் மேலாக, பாபாவின் அன்பர்கள் அவரைப் பார்க்கமுடியவில்லை; மேலும் வாகன விபத்துக்குப் பின்னர், அனைவரும் அவரை சந்திக்கும் ஆர்வத்துடன் இருந்தனர். எனவே, தேதி நிர்ணயம் செய்யப்பட்டதும், ஆந்திரா, ஹமிர்பூர், டெல்லி, மும்பை, பூனா, நவ்ஸாரி மற்றும் பிற இடங்களிலிருந்து கிட்டத்தட்ட 400 அன்பர்கள் ஸாக்கோரியில் ஒன்றுதிரண்டனர்.

1957 மார்ச் 18 திங்கட்கிழமை காலை 6:30 மணிக்கு, பாபா, மெஹராஸாத்திலிருந்து மெஹர்ஜியுடன் அவரது காரில் புறப்பட்டார்; பாபாவுடன் மற்றுமொரு காரில் பாவ் கல்சூரி, அலோபா, காக்கா, குஸ்தாஜி, குமார், கிஷன் ஸிங், கேஷவ், ஃபிரான்சிஸ் கோல்ட்னி ஆகியோர் இருந்தனர். (எரச், சகன், ஆதி சீனியர், பால் நாத்து ஆகியோர் வேண்டிய ஏற்பாடுகளை கவனிக்க, இரண்டு நாட்களுக்கு முன்பே புறப்பட்டுச் சென்றனர்.) குல்மாய் உட்பட அஹமதுநகரிலிருந்து பல அன்பர்களும் பங்கெடுத்தனர். பாபா காலை 9:00 மணிக்கு ஸாக்கோரியைச் சென்றடைந்த வேளையில், அவருடைய காரைச் சுற்றி நூற்றுக்கணக்கானோர் குவிந்தனர்; அவர், காரில் ஒரு சிறப்பு ஊர்வலமாக ஆசிரம வாயில்கள் வழியாக, ஒரு வெள்ளை குதிரையுடன், வெள்ளிக் கம்பிகளை ஏந்தியவர்கள், 'அவதார் மெஹர் பாபாவிற்கு ஜெய்!' என்று தொடர்ச்சியாக எழுப்பிய கோஷங்கள் எங்கும் எதிரொலிக்க, உள்ளே அழைத்துச் செல்லப்பட்டார். பாபாவை, சக்கர நாற்காலியில் கோவிலுக்கு அழைத்துச்

செல்ல, வஸந்த் அங்கே பூஜையை நிகழ்த்தினார். கோதாவரி மாயும் இதர கன்யாக்களும் பாபாவின் ஆரத்தியை நிகழ்த்தியதைத் தொடர்ந்து, கன்யாக்கள் பாபாவிற்கு மாலை அணிவித்து, அவரது தரிசனத்தைப் பெற்றுக்கொண்டனர். ஒரு பெரிய ஆலமரத்திற்கு எதிரே, பந்தல் ஒன்று அமைக்கப்பட்டிருந்தது, அதன் கீழ் பல ஆண்டுகளாக உபாஸனி மஹாராஜ் அமர்ந்திருந்தார். பாபா உள்ளே மேடையில் நாற்காலியில் அமர மண்டலி உதவினர். கூடாரம் நிரம்பி வழிந்தது. மேடையில் பாபாவின் அருகில் கோதாவரி மாய் அமர்ந்திருந்தார். பாபாவின் கீழ்வரும் செய்தி ஒலிபெருக்கியில் எடுத்துரைக்கப்பட்டது:

**எனது குருநாதர் உபாஸனி மஹாராஜின் இருப்பிடமான ஸாக்கோரிக்கு இன்று வந்ததில், நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். மஹாராஜ் பரிபூரணமாக உருவெடுத்தவர். என்னுடன் அமர்ந்திருக்கும் எனது 'தாயார்' இங்கு இருப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். நான், கிருஷ்ணா என்பதால், அவரை யஷோதா என்று அழைக்கிறேன். இதயத்தின் தூய்மையில், உலகில் அவருக்கு இணையானவர்கள் எவரும் இல்லை.**

கோதாவரி மாய் மற்றும் கன்யாக்கள் மீண்டும் பாபாவின் ஆரத்தியை நிகழ்த்தினர், பாபா தரிசனம் வழங்கி, பிரசாதம் விநியோகிக்கத் தொடங்கினார், பின்னணியில் இசை மற்றும் பாடல் தொடர்ந்தது. பல மணி நேரம், மக்கள் கூட்டம் தெய்வீக அவதார புருஷரின் முன்னிலையில், அவரது ஸ்பரிசத்திற்கான ஏக்கத்தை வெளிப்படுத்தியது.

ஃபிரான்சிஸ் கோல்ட்னி இவ்வாறு நினைவு கூர்ந்தார்: "பாபா மிகுந்த மகிழ்ச்சியையும் பேரின்பத்தையும் வெளிப்படுத்தினார்; பலர் தீராத கண்ணீர் சிந்தினர், எங்கள் கண்களிலும் கண்ணீர் தொடர்ந்து வழிந்தது. அன்பான சீடர்கள் அவரது புருவத்திலிருந்து வியர்வையைத் துடைத்தனர், மேலும் திறமையான கைகள் அவரது கால்களை மஸாஜ் செய்தன."

கூட்டத்தில் பாபா கூறினார்:

**நீங்கள் காண்பதெல்லாம் மாயையே அன்றி வேறொன்றுமில்லை. பாபா இங்கே உங்களுடன் அமர்ந்திருப்பதையும், தரிசனம் வழங்குவதையும், உரையாடுவதையும் நீங்கள் பார்ப்பது கூட மாயையே தவிர, அதில் எந்த மாற்று சிந்தனையும் இருக்க முடியாது. இந்தக் காரணத்திற்காக, தனது அனைத்தையும் இழக்கும் ஒருவர், உண்மைப்பொருள் எனும் ஆழங்காண முடியாத இறைப்பெருங் கடலின் ஆழத்தை அடைய முடியும்.**

தொடர்ந்து பாபா கூறினார்:

**சமீபத்தில் நடந்த கார் விபத்தில் எனக்கும், எனக்குப் பிரியமானவர்கள் சிலருக்கும் பலத்த காயம் ஏற்பட்டது. என் இடுப்புப் பாகத்தில் ஏற்பட்ட காயம், என்னை படுக்கையில் தள்ளியது. ஆனால், உங்கள் அனைவரின் அன்பின் மூலமாக, நான் அடைந்த முன்னேற்றம், எதிர்பார்த்ததை விட மிகக் குறுகிய காலத்தில் ஏற்பட்டது; அடுத்த பதினைந்து நாட்களுக்குள், நான் சுதந்திரமாக நடமாட முடியும் என்று உணர்கிறேன்.**



**ஸாக்கோரி** (SAKORI), **மார்ச்** (MARCH) **1957 -**

**கீழே வலது புறம்: ஆதி சீனியர், எரச், குல்மாய், கோதாவரி மாய், புக்கார்**

(BOTTOM RIGHT: ADI SENIOR, ERUCH, GULMAI, GODAVRI MAI, PUKAR)

ஆந்திரா அன்பர்களைக் கருத்தில்கொண்டு, பாபாவின் அறிக்கைகளை தெலுங்கில் மொழிபெயர்த்தார் குடும்ப சாஸ்திரி. அங்கு நிலவிய சூழ்நிலையால் பாதிக்கப்பட்ட காக்கிநாடாவைச் சேர்ந்த அன்பர் ஒருவர் நடனமாடத் தொடங்கினார். ஆந்திராவின் மற்றுமொரு அன்பரிடம் பாபா கூறினார், "**நான் காலாதிகாலத்தவர்களில் மிகவும் பழமையானவன். உங்களுக்கும், எனக்கும் இடையேயான உறவு இந்தக் காலத்தில் உருவானதல்ல. நான் உங்களிடம் விரும்புவது, எல்லாவற்றிற்கும் மேலாக என்னை நேசிக்க வேண்டும் என்பதுதான். உங்களுக்கு வேண்டிய அனைத்தையும் என்னிடமிருந்து அடையப்பெற, நீங்கள் உங்களுடைய அனைத்தையும் என்னிடம் ஒப்படைக்கும் காலம் வரும்.**"

ஹமிர்பூர் மாகாணம் முழுவதும் பயணம் செய்து, தனது செய்தியைப் பரப்புமாறு பாபா, முன்பு புக்காருக்கு அறிவுறுத்தியிருந்தார்; மேலும் அவரது பயணங்கள் குறித்த முழு விவரத்தையும் கேட்டிருந்தார். புக்கார் அதீத களைப்புடன் இருந்தபோதிலும், ஒரு கோவிலின் பூசாரி (காவலர்) அவரை ஒரு கொள்ளைக்காரன் என்று நினைத்து, அங்குத் தூங்க அனுமதிக்காத ஒரு சம்பவத்தை புக்கார் எடுத்துரைத்தார். பாபா திடீரென அவரைத் தடுத்து, "**அந்த கிராமத்தில் புலி அல்லது பாம்பை நீங்கள் பார்த்தீர்களா?**" என்று கேட்டார்.

புக்கார் இதைக் குறிப்பிட மறந்தபோது, "ஆம், நான் ஒரு பெரிய கருப்பு நாகப்பாம்பைப் பார்த்தேன். உண்மையில், அங்கே அந்த இரவைக் கழிக்க அனுமதிக்காமல், பூசாரி என்னை, பாம்பிடமிருந்து காப்பாற்றியிருக்கலாம்" என்று கூறினார்.

அதற்கு பாபா, "**அப்படியானால், அதை ஏன் என்னிடம் சொல்லவில்லை?**" ஆனால் அவர் பதிலளிப்பதற்குள், பாபா குறுக்கிட்டு, "**நான் எங்கும் இருக்கிறேன்; நான் பாம்பிலும், எல்லாவற்றிலும் இருக்கிறேன். அனைத்தும் எனக்குத் தெரியும். நீங்கள் சுற்றுப்பயணத்தில் என்ன செய்தீர்கள் என்பதை என்னிடம் சொல்ல வேண்டிய தேவையில்லை. அது குறித்து அனைத்தும் நான் அறிவேன். உங்கள் பயணம் முழுவதும் நான் உங்களுடன் இருந்தேன், உங்கள் மூலம் எனது பணியைச் செய்தேன்.**" என்று கூறினார்

காலம் இவ்வாறு பதிவுசெய்தது, "இந்தியாவின் அனைத்து மூலைகளிலிருந்தும், பாபாவின் அன்பர்கள் தங்கள் கண்களில் நீர் ததும்ப, பேரானந்தத்துடன் அவரிடம் வந்தனர். தனது உடல் வலியை மறைத்து, பாபா, தனது அன்பின், தெய்வீக ஆனந்தத்தின் மதகுகளைத் திறந்தார்; அதன் மூலம் அனைவரும் அவரது சகவாசத்தில் மகிழ்ச்சியடைந்தனர். அன்று பிற்பகல் வரை, 2,000க்கும் மேற்பட்ட அன்பர்கள் அவரை தரிசனம் செய்து, பிரசாதத்தைப் பெற்றுக்கொண்டனர். அப்போது பாபா, அவரைப் பார்ப்பதற்காகத் தொலைதூரத்தில் இருந்து வந்த அன்பர்கள் மத்தியில் அமர்ந்து, அவர்களை நோக்கி ஆரஞ்சு பழங்களை வேகமாக வீசியெறிந்தார். பாபாவின் வேடிக்கை மற்றும் அறிவுப்பூர்வமான களிப்பூட்டும் ஆற்றலையும் கண்டு, அங்கிருந்தவர்கள் மகிழ்ச்சி அடைந்தனர்."

நவ்ஸாரியைச் சேர்ந்த ஹோஷங் பரூச்சா (HOSHANG BHARUCHA) மற்றும் கோவாஸ் வெஸூனா (COWAS VESUNA) ஆகியோர் பாபாவின் சக்கர நாற்காலியை நகர்த்த, அவர் விரும்பியபோது அனுமதிக்கப்பட்டவர்களில் அடங்குவர். ஒரு கட்டத்தில், பாபாவின் கால்சட்டை தண்ணீர் சிந்தியதில் நனைந்தபோது, பாபா தனது உள்ளாடையில் சிறிது நேரம் இருக்க வேண்டியிருந்தது. பாபா, அப்போது நகைச்சுவையாக, "**நான் என் உடையை ஈரப்படுத்துவதில் எந்தத் தீங்கும் இல்லை, ஏனெனில் நானும் ஒரு குழந்தை**" என்றார்.

கோதாவரி மாய், (பாபாவின் உபயோகத்திற்காக வைக்கப்பட்டிருந்த) ஜிஜியின் அறையில், தனிப்பட்ட முறையில் பாபாவிற்கு உணவு பரிமாறி, அவரை உண்ணுமாறு அன்புடன் வற்புறுத்தினார். பிற்பகலில், கோதாவரி மாயும், இதர கன்யாக்களும் பாபாவை ஊஞ்சலில் அமர வைத்து, அதை ஆட்டிக்கொண்டே பாடல்களைப் பாடினர். பாபாவின் பார்வை ஒவ்வொரு திசையிலும் இறையொளியை வீசியது, அவருடைய முகம் பார்ப்பதற்குப் பொலிவுடன் இருந்தது. பெரும்பாலான நேரங்களில், அவரது அன்பர்கள் மத்தியில், பாபாவின் மீது ஒரு திடீர் மாற்றம் தென்படவே, அவரது முக பாவனை, மிகுந்த செயல்திறன் நிறைந்து காணப்படும். அவரது எல்லையற்ற இதயத்திலிருந்து அன்பின் நீரோட்டம் தொடங்கும் அவ்வேளையில், அங்கிருந்த அனைவரும் அதில் ஒன்றிணைந்தது போல் உணர்ந்தனர். அதைத் தொடர்ந்து, பல நாட்களுக்கு அவர்கள் உலகம், தங்கள் இல்லங்கள் மற்றும் குடும்பங்களை உள்ளளவில் மறந்ததுபோல், இறை போதையின் இந்த உறுதியான ஓட்டத்தில் மூழ்கியிருந்தனர்.

இருப்பினும், நெருங்கிய மண்டலியைப் பொறுத்தவரை, பாபா அவர்களுடன் நடந்துகொள்ளும் முறை முற்றிலும் மாறுபட்டது. அவர்கள், அவரது வேதனை, அவரது உதவியற்ற தன்மை மற்றும் அவரது கண்டிப்பான அணுகுமுறையை அனுபவித்த அதேவேளையில், 'வானிலை' எப்பொழுதும் இடியுடன் கூடியதாகவே இருந்தது! எனவே, பாபாவின் இத்தகைய அற்புதமான மாற்றத்தைக் கண்டு, அவர்களும், அவருடைய அன்பான வழிகளில் மகிழ்ந்தனர், அது அவர்களின் காயங்களுக்கு மென்மையான தைலம் போல் இருந்தது.

மதிய உணவுக்குப் பின்னர், ஆந்திரா அன்பர்கள் கூட்டம் நடைபெற்றது; அப்போது கோடூரி கிருஷ்ணாராவ், கொவ்வூர் நகரில் பாபாவின் சிலை ஒன்றை எழுப்பும் விருப்பத்தைத் தெரிவித்தார். பாபா அவரிடம், "**என்னை உங்கள் இதயத்தில் நிறுவுங்கள்! சிலையை எழுப்புவதால் உங்களுக்கு என்ன லாபம்?**" என வினவினார்.

அதற்கு கோடூரி, "உங்களை என் இதயத்தில் வைத்திருக்க அந்தச் சிலை ஓர் ஊடகமாகச் செயல்படும். உடல்ரீதியாக நான் உங்களை விட்டு விலகி இருக்கிறேன், அதனால் எனக்கு அந்தச் சிலை, உங்களின் பிரதிபிம்பமாக இருக்கும். அதைப் பார்ப்பதன் மூலம், நான் உங்களை என் இதயத்தில் எப்பொழுதும் நிலையாக வைத்திருப்பேன். மேலும், இது எனக்காக மட்டும் அல்ல, எண்ணிலடங்கா பிற அன்பர்களுக்கும் அது உங்களை நினைவுகூரும் ஓர்

ஊடகமாக இருக்கும். அதிலிருந்து நாங்கள் உங்களை அதிகமாக நேசிக்கும் உத்வேகத்தை அடையப் பெறுவோம்” என்று எடுத்துரைத்தார்.

**“இந்தக் கருத்தை மனதில் கொண்டு, நீங்கள் ஒரு சிலையை எழுப்ப விரும்பினால், எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை, ஆனால் உங்கள் இதயம் அதில் என்னைக் கண்டுகொள்ள வேண்டும். உங்கள் இதயங்கள், என்னை அதில் தேடும் ஆர்வம் இருக்கும் வரையில் மட்டுமே, நான் அதில் குடிகொண்டிருப்பேன்; இல்லையேல், அங்கு எனது சிலை, வெறும் கல் அல்லது உலோகத்தை ஒத்ததாகவே இருக்கும்”** என்று பாபா பதிலளித்தார்.

ஆந்திர அன்பர்கள் அனைவரும் சிலை எழுப்பப்பட வேண்டும் என்று விரும்பியதால், பாபா அதை அனுமதித்தார்.

அன்றைய தினம் ஸாக்கோரியில், உபாஸனி மஹாராஜின் சமாதிக்கு அருகில், பாபாவின் மிகப்பெரிய புகைப்படம் ஒன்று வைக்கப்பட்டது.

பாபா, மாலை 4:00 மணி வரை ஸாக்கோரியில் இருந்தார். அதன் பிறகு, கனத்த இதயத்துடன், அனைவரும் அவரிடம் விடைபெற்றனர். இது, ஸாக்கோரிக்கு மெஹர் பாபாவின் கடைசி வருகையாகும். அவரது ஜெய் முழக்கங்களுக்கிடையில், அனைவரையும் அவரது அன்பின் நதியில் மூழ்கடித்து, பாபா மாலை 5:40 மணிக்கு மெஹராஸாத் வந்தடைந்தார். அவர்கள் திரும்பி வந்ததும், ஃபிரான்சிஸ் கோல்ட்னி இந்தியாவிற்கு அனுப்பியிருந்த தனது மோட்டார் வாகனத்தை எடுத்துவர மும்பைக்குப் புறப்பட்டார்.

பாபா 21ஆம் தேதி மெஹராஸாத்தில், நஸர்வான், மெஹர்ஜி மாமா, பீலாமாய், ராம்ஜூ, காக்கா சிஞ்சோர்கர் ஆகியோரை சந்தித்தார்.

தாதா டி.எல். வாஸ்வானி (DADA T.L. VASWANI 78), ஒரு முன்னாள் கல்லூரி பேராசிரியராக இருந்து, ஆங்கிலம் மற்றும் வரலாற்று பாடங்களைப் பயிற்றுவித்து, பின்னர் அவர் மனிதகுலத்திற்கு சேவை செய்யும் நோக்கத்தில் அனைத்தையும் துறந்தார். சாது வாஸ்வானி என்று அழைக்கப்பட்ட அவர், பூனாவில் ஸெயின்ட் மீரா உயர்நிலைப் பள்ளியை (SAINT MEERA HIGH SCHOOL) நிறுவி நடத்தி வந்தார். அந்தப் பள்ளிக்கூடத்திற்கு விஜயம் செய்யுமாறு பாபாவிற்கான நீண்டகால அழைப்பு ஒன்று இருந்தது. பாபாவை அழைத்ததற்கு இணங்க, அவரது ‘அன்பான குழந்தை’ ஏமாற்றமடையாமல், பாபா அங்குச் செல்ல இணக்கம் தெரிவித்து, தேதியும் நிர்ணயிக்கப்பட்டது.

ஸாக்கோரி நிகழ்ச்சியைப் போலவே, இந்தியாவில் வாழும் அவரது அன்பர்கள் மத்தியில் இந்தச் செய்தி பரவியதைத் தொடர்ந்து, ஆந்திரா, ஹமிர்பூர், டெஹ்ரா டூன், டெல்லி, மும்பை மற்றும் ஸிம்லாவிலிருந்து, ஸாக்கோரி நிகழ்ச்சிக்காக வந்தவர்களில் பலர் உட்பட, மேலும் பெரும்பாலான அன்பர்கள் பூனாவில் ஒன்றுதிரண்டனர். ஸாக்கரே (SAKHARE) மற்றும் காடேக்கர் (GADEKAR) குடும்பத்தினர் அவர்களுக்கு வேண்டிய உணவை ஏற்பாடு செய்தனர்.

பூனா நிகழ்ச்சியின் போது, மெஹராஸாத் மண்டலியை எப்பொழுதும் தன்னுடன் இருக்குமாறு பாபா எச்சரித்தார்; மேலும் அவர் புறப்படுவதற்கு முன்பு,

பல நாட்களுக்கு, பாபா இந்த எச்சரிக்கையை திரும்பத் திரும்ப எடுத்துரைத்தார். 1957 மார்ச் 23 ஞாயிற்றுக்கிழமை காலை 6:30 மணிக்கு, எரச், பாவ் கல்சூரி, குமார், அலோபா ஆகியோருடன் பாபா, மெஹர்ஜியின் காரில் மெஹராஸாத்திலிருந்து பூனாவிற்குப் புறப்பட்டார். கோல்ட்னி தனது ஃபோர்டு காருடன் முந்தைய நாள் மும்பையிலிருந்து திரும்பி வந்தவர், குஸ்தாஜி, கேஷவ் நிகம், கிஷன் ஸிங் ஆகியோருடன் அரை மணி நேரம் முன்னதாகவே புறப்பட்டுச் சென்றார். பூனா ரயில் நிலையத்தில் கூடியிருந்த பாபாவின் அன்பர்கள், அவரது கார் காலை 9:45 மணிக்கு வந்தடைந்தபோது, பலத்த கரகோஷத்துடன் தங்கள் பிரியமான பாபாவை வரவேற்றனர். ஏறக்குறைய 1,500 பேர் அடங்கிய கூட்டம் மிகவும் அடர்த்தியாக இருந்ததால், மோனா ஸாக்கரே கூட்டத்தின் நடுவில் மாட்டிக் கொண்டார். பாபாவிடமிருந்து எதுவும் மறைக்கப்படவில்லை. அவர் அந்தப் பெண்மணியை வெளியே அழைத்துவர மண்டலியை அனுப்பினார், மேலும் அவர்கள் மிகுந்த சிரமத்துடன் அவரை பாபாவின் கார் அருகில் அழைத்து வந்த போது, பாபா, அவரது முகத்தை வருடி, அவர் மீது தன் அன்பை வெளிப்படுத்தினார்; கூட்டம் ஊர்வலமாக உருவெடுத்துச் சென்றது.

ஹமிர்பூரின் மெஹர்தாஸ் “ஹரி பாபா, ஹரி பாபா! மெஹர் பாபா, ஹரி, ஹரி!” என்று பாடத் தொடங்கினார்.

‘ஜெய் அவதார் மெஹர் பாபா!’ என்ற மகிழ்ச்சியான கீதம் மற்றும் கோஷத்துடன் ஸெயின்ட் மீரா உயர்நிலைப் பள்ளியை நோக்கி ஊர்வலமாகச் சென்ற கூட்டத்தினூடே, பாபாவின் கார் மெதுவாக நகர்ந்து சென்றது. கார், மலர் மாலைகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது, ஊர்வலத்தின் முன்னணியில் இசைக்குழு ஒன்று இசைத்த வண்ணம் சென்றது. வாஸ்வானி, பள்ளிக்கூட வாசலில் பாபாவை வரவேற்று ஆரத்தழுவினார். அவர் பாபாவை ஒரு தனி அறைக்கு அழைத்துச் சென்று, அவருடன் சிறிது நேரம் அமர்ந்திருந்தபோது அவரது கன்னங்களில் கண்ணீர் வழிந்தது. பாபா அவருக்கு ஆறுதல் கூறினார், பின்னர் ஒரு நாற்காலியில் பள்ளியின் சரணாலய மண்டபத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார், அங்கு அவர் மேடையில் அமர்ந்த வேளையில், வாஸ்வானி அவரது வலதுபுறத்தில் அமர்ந்தார், ஐரீன் கோனிபியருக்கு அவர்களுக்கு எதிரே பிறருடன் ஒரு நாற்காலி வழங்கப்பட்டது.

பகவத் கீதையின் பாராயணம் மற்றும் மாணவர்களின் கீர்த்தனைக்குப் பின்னர், ஆழமாக மனம் நெகிழ்ந்து போன வாஸ்வானி, ஒலிபெருக்கியின் மூலம் பாபாவிற்கு ஆழ்ந்த மரியாதை செலுத்தினார். அவரது உரையின் ஒரு பகுதி பின்வருமாறு:

ஒரே தெய்வீகத் தாயின் குழந்தைகளே, சகோதர சகோதரிகளே! அவரது சீடர்கள், பல்வேறு பகுதிகளில், ஆதிகாலத்தவராகக் கருதும் ஒருவரின் முன்னிலையில் நான் பேசுகிறேன்.





ஸெயின்ட் மீரா உயர்நிலைப் பள்ளி, பூனா, **23** மார்ச் **1957**

(SAINT MEERA HIGH SCHOOL, POONA, 23 MARCH 1957)

கீழே: சாது வாஸ்வானி, அவரது உறவினரும், முதன்மை சீடருமான ஜஷன் வாஸ்வானி (BOTTOM: SADHU VASWANI & HIS NEPHEW & CHIEF DISCIPLE JASHAN VASWANI)

30 ஆண்டுகளுக்கும் மேலாக, இன்று நமது மத்தியில் இருப்பவர், வாய்மொழிப் பேச்சை விட சிறந்தது என்று சத்தியத்திற்கு சாட்சியாக இருக்கிறார்; அதுதான் மௌனம். எனது கருத்துப்படி, இது தெய்வீக உண்மைகளின் உண்மையாகத் திகழ்வது. மௌனத்தின் மூலம் உலகத்துடன் பேசியிருக்கிறார். 'அமைதியின் சாம்ராஜ்ஜியம்' பற்றிய அவரது சாட்சி, பல ஆண்டுகளுக்கு முன்னர் என் இதயத்தில் வேரூன்றியது. இந்த இரைச்சலும், கோஷங்களும் நிறைந்த யுகத்தில், அவர் 'அமைதியாக இருங்கள்!' என்ற உண்மையைக் கற்பித்தார்:...

பிரியமான பாபாவின் வாழ்க்கையில் இன்னுமோர் உண்மையும் என்னை வெகுவாகக் கவர்ந்துள்ளது. பாபா, எளிமையான வாழ்க்கையை விரும்புபவர்; அவர் எளிமையானவர், எனவே அவர் சிறுவர்களின் மத்தியில் மகிழ்ச்சியடைகிறார். அவர் தனது செய்தியில்... 'மீரா பள்ளிகளின் குழந்தைகளுடன் தொடர்பு கொள்வது, அவரது இதயத்திற்கு மிகவும் நெருக்கமானது' என்று கூறினார்.

மெஹர் பாபாவைக் குறித்து நான் கவனித்த மூன்றாவது விஷயமும் ஒன்று உள்ளது - அவரது புன்னகை. ஓர் அழகான புன்னகை அவரது உதடுகளில் எப்போதும் தவழ்கிறது. அநேக மக்கள் அனுபவிக்காத அளவுக்கு அவர் கஷ்டங்களுக்கு ஆளாகியிருக்கிறார். பலருக்கு இல்லாத வலியை அவர் எதிர்கொண்டிருக்கிறார். ஆனால் அவர் உதடுகளில் எப்பொழுதும் அழகான புன்னகை ஒன்று விளையாடிக் கொண்டிருக்கும்.

அவரது மௌனம், எளிமை, புன்னகை - இவை மூன்றும் அவர் நமக்கு அளித்த பரிசுகள். என் இதயத்தில் அன்புடனும் பணிவுடனும் அவரை வணங்குகிறேன்.

பாபாவின் சார்பில் தேஷ்முக், பாபாவின் அவதார பணியை வலியுறுத்தி ஐந்து நிமிடங்கள் சொற்பொழிவாற்றினார். வாஸ்வானியின் மாணவர்கள் மற்றும் ஆதரவாளர்களால் அரங்கம் நிரம்பி வழிந்தது. பாபாவின் அன்பர்கள் வாயிலுக்கு வெளியே நிற்க வேண்டியிருந்தது.

பள்ளியின் தலைமை ஆசிரியர் சி.பி. அத்வானி (C.B. ADVANI) சில வார்த்தைகள் மொழிந்தார், மேலும் பாபா, செயலாளர் ஸ்ரீ கங்காராமிடம் (SRI GANGARAM) இந்தச் செய்தியை வழங்கி, மாணவர்கள் முன்னிலையில் வாசிக்குமாறு கேட்டுக்கொண்டார்:

**இன்றைய இளைஞர்கள் நாளைய ஆளும் சக்தி. அனைத்து விஷயங்களுக்கும் ஒரு சிறிய ஆரம்பம் உள்ளது; கன்று மரமாக வளர்ந்து, ஓடை நதியாக தவழ்ந்து, குழந்தை மனிதனாக வளரும் தருணத்தில், இளமைப் பருவத்தில் வாழ்க்கையில் கற்றுக்கொண்ட பாடங்களை சரியாக அல்லது தவறாகப் பயன்படுத்த முடியும்.**

**ஆனால் ஒரு மனிதனாக வளர்ந்த பின்னரும், அவர் பெரும்பாலும் வார்த்தையின் ஆன்மீக அர்த்தத்தில், ஒரு குழந்தையாகவே இருக்கிறார்.**

உலகம் எனும் மழலையர் மற்றும் உயர் கல்விக் கூடங்களில், ஆன்மீகப் பாடங்களுக்குத் தேவையான எண்ணற்ற வாழ்க்கையின் மூலம், மனிதன் கற்றுக்கொள்ள வேண்டிய வேதனை-இன்பம், ஆனந்தம்-துன்பம், நல்லது-தீயது, செல்வம்-வறுமை போன்ற எதிர்நிலைகளை அனுபவிக்க வேண்டும்.

அனைத்து வளர்ச்சியும் படிப்படியாக அமைந்துள்ளது; மேலும், மெதுவான மற்றும் படிப்படியான நிலைகளின் மூலம் மட்டுமே, மனிதன் உண்மையிலேயே ‘முதிர்ச்சி அடைந்து’ தனது உண்மைப்பொருளாகத் திகழும் சுயத்தைக் கண்டறியத் தொடங்குகிறான்; தன்னலமற்ற சேவை மற்றும் அன்பின் மூலம் வெறுப்பு, பேராசை, கோபம் போன்ற குழந்தைத்தனமான விளையாட்டுப் பொருட்களைக் கைவிடுகிறான். ஆன்மீகப் பள்ளியிலும், தேர்ச்சி பெற பல தராதரங்கள் உள்ளன; அதைக் கடந்து செல்ல சிலருக்கு மட்டுமே தைரியமும் உறுதியும் உள்ளது. உங்கள் பள்ளிக்கூட கல்வியின் பாதையில் உங்களை வழிநடத்த, ஆசிரியர்களும், பயிற்சியாளர்களும் உங்களுக்குத் தேவைப்படுவது போலவே, இறைவன் எனும் உன்னதமான இறுதி இலக்கை எய்தும் நோக்கத்தில், ஆன்மீகப் பாதையில் உங்களை அழைத்துச் செல்ல, பரிபூரண குருநாதர்கள் உள்ளனர். அத்தகைய ஆன்மீக வழிகாட்டியை சந்திக்கவும், பின்பற்றவும் ஒரு சிலருக்கு மட்டுமே நல்ல அதிர்ஷ்டம் உள்ளது - நீங்கள் அவ்வாறு செய்யும்போது, அவருடைய அருளைப் பெற வேண்டும் மற்றும் அவருடைய அன்பிற்கு தகுதியானவராக இருக்க வேண்டும்.

உங்கள் பெற்றோர் மற்றும் ஆசிரியர்கள் வழங்கும் ஒழுக்க நெறிகளைப் புறக்கணித்து, குறைகூறி குரலை எழுப்பாதீர்கள். சிறிய வழிகளில் அடையப் பெறும் ஒழுக்கம், மிக அதிக அளவில் தேவைப்படும் சுய ஒழுக்கத்திற்கு வழிவகுக்கிறது. பிறரை வெல்ல முயற்சிக்காமல் - உங்களை நீங்களே வெல்லும் வேளையில், நீங்கள் உலகை வென்றுவிடுகிறீர்கள். இதைச் செய்வதற்கான எளிய வழி, கடவுளை நேசிப்பதாகும். உங்கள் சக மனிதர்களை நேசிப்பதன் மூலம், கடவுளை நேசிக்கத் தொடங்குங்கள். எல்லா உயிரினங்களிலும், பொருட்களிலும் கடவுளைக் காண்பதன் மூலம், கடவுளைக் காணத் தொடங்குங்கள். திரும்பப் பெற்றுக்கொள்ளும் எண்ணம் இல்லாமல், பிறருக்கு ஒன்றைக் கொடுங்கள். வெகுமதியை நினைந்து பாராமல், சேவை செய்யுங்கள். கடவுள் எல்லா இடங்களிலும், எல்லாவற்றிலும் இருக்கிறார். எல்லாவற்றிற்கும் மேலாக, அவர் உங்களுள்ளே இருக்கிறார். நீங்கள் உலகத்திற்காக இல்லை - உலகம் உங்களுக்காக உளதாயிருக்கிறது.

எறும்பைப் பற்றிய கதையில், இதற்கு ஒரு வேடிக்கையான உதாரணம் உள்ளது. எறும்பு ஒன்று, இலை மேல் ஏறி, ஓடையைக் கடக்க முயன்றது. நடுநடுவே, காற்றால் தூக்கி எறியப்பட்ட இலை கவிழ்ந்தபோது, எறும்பு கதறியது: “உதவுங்கள், உதவுங்கள், உலகம் மூழ்கிவிட்டது!”

**அருகில் இருந்த ஒரு தவளை கேட்டது: "இது என்ன முட்டாள்தனம்! உலகம் மூழ்கவில்லை; நீ மூழ்கிவிட்டதாகக் கூறுகிறாயா?"**

**"சரி, அப்படியே ஆனாலும்" எறும்பு சொன்னது, "ஒருமுறை நான் மூழ்கினால் உலகம் எனக்கு இல்லாமல் போய்விடலாம். எனவே, என்னைப் பொறுத்தவரை, நான் மூழ்கினாலும், முழு உலகமும் மூழ்கிப் போனதாகத்தானே பொருள்படும்!"**

**அதே போல், உளதாயிருக்கும் அனைத்தும் உங்களுக்குள் உள்ளது. கடவுள் உங்களுக்குள்ளேயே காணப்பட வேண்டும், நீங்கள் அவரைக் கண்டுகொண்ட அந்த கணம், கண்டுகொள்ளத் தகுந்த ஒரே பொக்கிஷத்தைக் கண்டுகொண்டீர்கள் என்று பொருள்படும். நீங்கள் கடவுளை நேசிக்கவும், அவரைக் கண்டுகொள்ளவும் எனது ஆசீர்வாதங்களை நான் உங்களுக்கு வழங்குகிறேன்.**

வரவேற்பு நிகழ்ச்சிகளுக்குப் பின்னர், உள்ளே இருந்த பெண்மணிகளுக்கும் மாணவர்களுக்கும் பாபா தரிசனமும் பிரசாதமும் வழங்கினார்; அந்தத் தருணத்தைப் பயன்படுத்திக் கொள்ள நூற்றுக்கணக்கானோர் முன்னோக்கிச் சென்றனர். பாபாவை மலர்மாலைகள் மற்றும் அரவணைப்புகளால் மூழ்கடித்த கூட்டத்தின் அலையைத் தடுக்க, கோல்ட்னி, புக்கார் இருவரும் கைகளை ஒன்றிணைத்து, பாதுகாப்பு வளையத்தை உருவாக்கினர்.

அதைத் தொடர்ந்து பாபா, வெளியே அழைத்துச் செல்லப்பட்டு, வராண்டாவில் அமர்ந்து தரிசனம் அளித்து பிரசாதம் வழங்கிய வேளையில், அவரது அன்பர்கள் மற்றும் பூனாவிலிருந்து வருகை தந்தவர்களின் எண்ணிக்கை தற்போது 10,000-த்தைத் தாண்டியது. சிலர் முன்னோக்கி அழுத்தும்போது முழங்கைகள் ஆங்காங்கே பறந்தன. பாபாவின் பாதுகாப்பு கேள்விக்குறியாகும் அளவுக்கு நிலைமை கட்டுக்கடங்காமல் இருந்தது. உடல் ரீதியாக, பாபா மிகவும் சிரமப்பட்டார்; ஆனால் அதையும் மீறி, அவர் தரிசனம் வழங்க பூனாவிற்கு வந்தார். கூட்டம் தொடர்ந்து கட்டுப்பாட்டை மீறவே, இறுதியில் கலவரம் வெடித்தது.

ஆஸ்திரேலியாவிலிருந்து பாபா திரும்பி வந்த விமானத்தில் பயணம் செய்த பிரபல பாடகர் தேவேந்திர வைத்யா (DEVENDRA VAIDYA), பாபாவிற்கு முன்பாக இசை நிகழ்ச்சி நடத்துவதற்காக தனது குழுவுடன் வந்திருந்தார். ஆனால், அவரது ஹார்மோனியம் மற்றும் பிற வாத்தியங்கள் அங்கு நிலவிய குழப்பத்தில் சிதைந்து சின்னாபின்னமானது. காவல்துறையினர் சம்பவ இடத்துக்கு வந்தபோது, பாபாவைச் சுற்றி வளைத்து நின்ற மண்டலியை யார் என்று தெரியாமல், போலீசார் கடுமையாகத் தாக்கி, பாபாவிடமிருந்து பிரித்தனர். குமாரை வலுக்கட்டாயமாக அப்புறப்படுத்தி, சிறிது தூரம் அழைத்துச் சென்று அமர வைத்தனர். ஆந்திரா மற்றும் ஹமிர்பூர் நிகழ்ச்சிகளின் போது பாபாவின் 'தளபதி'யாக இருந்தவர், இப்போது காவல்துறையின் கட்டுப்பாட்டிற்குள் வந்தார்! பாவ் கல்சூரி மிகவும் வன்முறையில் தள்ளப்பட்டு, பல அடிகள் தூரத்தில்

வீழ்வதிலிருந்து காப்பாற்றப்பட்டார். நாராயண் பண்டெலு அவரை சரியான நேரத்தில் பற்றிக்கொள்ளவில்லை என்றால், அவர் மிகவும் மோசமாக காயமடைந்திருப்பார்.

ஒருபுறம், காவல்துறையினர் வந்து பாபாவைச் சுற்றி வளைத்ததில் மண்டலி மகிழ்ச்சியடைந்தனர்; ஆனால் மறுபுறம், நிகழ்ச்சியின் போது அவருடன் எப்பொழுதும் நெருக்கமாக இருக்க வேண்டும் என்ற பாபாவின் கட்டளைக்குக் கீழ்ப்படிய முடியாமல் போனது. காவல் துறையினர் அவர்களை அருகில் வர அனுமதிக்காததால், அவர்கள் உதவியற்றவர்களாக தூரத்தில் நிற்க வேண்டியதாயிற்று. பாபாவின் வார்த்தைகளை எடுத்துரைக்கும் வகையில் பாபாவின் அருகில் எரச் மட்டுமே அனுமதிக்கப்பட்டார்.

சிறிது நேரத்தில் ஒழுங்கு பழைய நிலைக்குத் திரும்பினாலும், காவல்துறையினர் சம்பவ இடத்தில் இருந்த போதிலும், கூட்டம் கட்டுக்கடங்காமல் இருந்தது. மக்களை வரிசையில் ஒழுங்குபடுத்த எதுவும் செய்ய முடியாத நிலை. அயலூர் அன்பர்கள் நெரிசலில் வெளியே தள்ளப்பட்டு, வாசல் அருகே கடும் வெயிலில் நிற்க வேண்டியதாயிற்று. கூட்டத்தினிடையே, பாவ் கல்சூரி தனது மனைவி ரமா இரண்டு குழந்தைகள் ஷீலா, மெஹர்நாத், ரமாவின் சகோதரர் தீரஜ் ஆகியோருடன் பாபாவை நோக்கி நகர்வதை கவனித்தார். பாவ் கல்சூரி, பாபாவை அணுக முயன்றார், ஆனால் காவல்துறையினர் மீண்டும் அவரை அனுமதிக்காததால், அவரது குடும்பத்தினரை சந்திக்க முடியாத நிலை. பாபாவின் தரிசனத்திற்காக அவர்கள் அங்கு இருந்த போதிலும், பாவ் கல்சூரிக்கு அவர்களுடன் ஒரு நிமிடம் கூட பேச வாய்ப்பில்லை. ‘குழந்தைகள் எப்படி இருக்கிறார்கள்’ என்று பாபா, ரமாவிடம் கேட்டதையும், ஷீலாவைத் திரும்பச் சொல்லி, அவளது முதுகில் ஏற்பட்ட காயத்தைக் காட்டுவதையும் பாவ் கல்சூரி தூரத்திலிருந்து பார்த்தார். தோல் முற்றிலுமாகக் குணமாகி விட்டாலும், விபத்தின் தழும்புகள் தென்பட்டன

தரிசனம் அளித்து, இரண்டு கைகளாலும் மணிக்கணக்கில் பிரசாதம் வழங்கிய பின்பு, மதியம் 2:45 மணிக்கு, பாபா, சாது வாஸ்வானியைத் தழுவி, பள்ளியை விட்டு வெளியேறினார். பிந்த்ரா ஹவுஸிலிருந்து மதிய உணவுப் பொட்டலங்களை சேகரித்த பிறகு, பாபா, பொது தபால் நிலைய அலுவலகத்தின் முன்னால் சில நிமிடங்கள் நின்று தரிசனம் வழங்கினார். மெஹராஸாத் செல்லும் வழியில், ஸாக்கரேயின் பங்களாவில் (3, லூப் ரோடு, LOOP ROAD) சிறிது நேரம் நின்றார். சாது வாஸ்வானி பள்ளிக்கூடத்தில் தரிசனத்தில் பங்கெடுக்க முடியாத ஆந்திராவைச் சேர்ந்த ஒரு குடும்பம், பாபாவை சந்திக்கும் நம்பிக்கையில் ஸாக்கரேயின் இல்லத்திற்குச் சென்றது. பாபா அங்கு வரும் வேளையில் வேறு எவரையும் தங்கள் இல்லத்தில் இருக்க அனுமதிக்கக் கூடாது என்று ஏற்கனவே அறிவுறுத்தப்பட்டிருந்ததால், இந்தக் குடும்பத்தை பின்புறம் அமைந்த கார் கேரேஜில் இருக்குமாறு ஸாக்கரே கூறினார். பாபா வந்ததும், **‘வேறு எவரேனும் இங்கு இருக்கிறார்களா**’ என்று ஸாக்கரே குடும்பத்தாரிடம் கேட்க, ‘ஆந்திரா குடும்பம் ஒன்று கார் கேரேஜில் காத்துக்கொண்டிருக்கிறது’

என்ற தகவலை அவருக்குத் தெரிவித்தார். பாபா அப்போது அவர்களுக்கு தரிசனம் வழங்கினார். பள்ளிக்கூடத்தில் அது மறுக்கப்பட்டதால் அவர்கள் அடைந்த ஏமாற்றம் பரவச மகிழ்ச்சியாக மாறியது!

புறப்படுவதற்கு முன்பு, பாபாவின் ஆரத்தியை நிகழ்த்தியபோது, **“இன்றைய நிகழ்ச்சி எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தந்தது”** என்று குறிப்பிட்டார்.

அந்தக் கருத்துக்கு பதிலளிக்கும் விதத்தில், குமார், பாவ் கல்சூரி இருவரும், காவல்துறையினரின் கைகளால் தங்களுக்கு ஏற்பட்ட பிரச்சினை மற்றும் துரதிர்ஷ்டத்தைப் பற்றி விளக்கினர். பாபா, மனமார சிரித்துக்கொண்டே, **“அதுதான் எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தந்தது! அது உங்களுக்கு சரியாக அமைந்ததில் நான் மிக்க மகிழ்ச்சியடைந்தேன். அவ்வாறு கையாளப்பட்ட முறைக்கு நீங்கள் தகுதியானவர். உங்கள் தோழமையை நீங்கள் எனக்கு வழங்க முடியாது என்பதை இன்று நான் கண்டுபிடித்தேன். நான் உங்களை என்னுடன் நெருங்கி இருக்குமாறு கட்டளையிட்டேன். மாறாக நீங்கள் என்னை காவல்துறையின் கைகளில் விட்டுவிட்டீர்கள்!”**

“ஆனால் பாபா, நாங்கள் முற்றிலும் உதவியற்றவர்களாக இருந்தோம்” என்று குமார் அறிவித்தார். “காவல்துறையைப் பொறுத்தவரையில், எங்களால் எதுவும் செய்ய இயலவில்லை.”

அதற்கு பாபா, **“அதனால்தான் கீழ்ப்படிதல் சாத்தியமற்றது என்று நான் அடிக்கடி சொல்கிறேன். இப்போது உங்களுக்குப் புரிகிறதா இல்லையா?”** என வினவினார்.

இதற்கு குமாரிடம் பதில் இல்லை; ஏனெனில், உண்மையில், பாபாவின் அறிவுறுத்தலை நிறைவேற்ற முடியவில்லை, மேலும் சூழ்நிலைகள் அவர்களை உதவியற்றவர்களாக ஆக்கிவிட்டன.

ஆயிரக்கணக்கான மக்களுக்குப் பிரசாதம் வழங்கியதால் பாபாவின் கைகள் வலிக்கத் தொடங்கியது; அன்று மாலையில் அனைவரும் மெஹராஸாத் திரும்பிச் சென்றனர். காவல்துறை மற்றும் கட்டுக்கடங்காத கூட்டத்தால், மண்டலி முரட்டுத்தனமான நடத்தப்பட்டதை பற்றி, அவர் பெண்மணிகளுக்குத் தெரிவித்தார்.

பூனா தரிசனத்தில் கலந்துகொண்ட எல்சா மிஸ்திரி 24ஆம் தேதி மெஹராஸாத்தில் பாபாவை சந்தித்தார். கேஷவ் நிகம் அப்போது மெஹராஸாத்தில் தங்கியிருந்தார். 1957 மார்ச் 25 திங்கட்கிழமை அன்று பவானி பிரசாத் நிகம், லக்ஷ்மிசந்த் பாலிவால் இருவரும் ஹமிர்பூரிலிருந்து வந்தனர். பல ஆண்டுகளாக இந்த இருவருக்குமிடையே பெரும் நட்புறவு இருந்துவந்தது, ஆனால் சமீபகாலமாக அவர்களுக்குள் கசப்பான உறவு நிலவியது.

அவர்களுடைய மனக்கஷ்டங்களுக்குத் தீர்வு காண, பாபா அவர்களை அழைத்தார். புக்கார், மாத்ர தத்தா சாஸ்திரி, மெஹர்தாஸ் ஆகியோரும் அழைக்கப்பட்டனர். பாபா இரு தரப்பினருக்கும் செவிமடுத்து, அவர்களுக்கு

அறிவுரை வழங்கினார். இருவரும் தங்கள் முட்டாள்தனத்திற்காக வருந்தினர்; பாபா விரும்பியபடி, ஒருவரையொருவர் மனதார தழுவிக்கொண்டனர். 26ஆம் தேதி அனைவரும் திரும்பிச் சென்றனர். ஹமிர்பூருக்குத் திரும்பியதும், இரு குடும்பங்களும் ஒரு பெரிய விருந்தினை ஏற்பாடு செய்து, மெஹர் பாபாவின் மரியாதையின் நிமித்தம், நூற்றுக்கணக்கான ஏழை கிராம மக்களுக்கு உணவளித்தனர்.

மார்ச் 25ஆம் தேதி முதல், ஸரோஷ், ராணுவ மருத்துவமனையிலிருந்து, தினமும் மாலை 4:00 மணிக்கு மெஹராஸாத் செல்லுமாறு, மஸாஜ் நிபுணரை ஏற்பாடு செய்தார். அது கோடைக்காலம் என்பதால், மண்டலி மண்டபத்தில் வெப்பம் அதிகமாக இருந்தது; எனவே, பல நாட்கள் பாபா, மதியம் ஒன்று அல்லது இரண்டு மணி நேரம் மண்டலி மண்டபத்திற்கு எதிரே அமைந்த குடிசையின் நடு அறையில் மண்டலியுடன் கழித்தார். அங்கே ஒரு கட்டில் இடப்பட்டு, அறையை குளிர்விக்க, தரையில் தண்ணீர் தெளிக்கப்பட்டது.

மார்ச் 26 அன்று, ரேவா பகுதியின் லெஃப்டினன்ட் கவர்னர் திருமல ராவ் (THE LIEUTENANT GOVERNOR OF REVA, THIRUMALA RAO), மெஹராஸாத்திற்கு வந்து, பாபாவின் பாதங்களில் 'கடவுள் பேசுகிறார்' (GOD SPEAKS) என்ற புத்தகத்தின் தெலுங்கு மொழியாக்கத்தை சமர்ப்பித்தார். பாபா கையெழுத்துப் பிரதியைத் தொட்டு, ஆசீர்வதித்து, அதை வெளியிடுமாறு அறிவுறுத்தி, அவரிடம் திருப்பிக் கொடுத்தார். அவர் திருமல ராவிடம், "**உங்கள் முயற்சி மற்றும் அன்பில் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். உயர்ந்த பதவியில் இருந்தும், நீங்கள் என்னை மறக்கவில்லை. எனவே, எனக்காக வாழுங்கள், அதன் மூலம், நீங்கள் உண்மையிலேயே இந்திய அரசாங்கத்திற்கும், மக்களுக்கும் மேலும் சேவை செய்வீர்கள்.**"

திருமல ராவ் உடனே, "உங்கள் ஆசியால்தான் நான் கவர்னர் ஆனேன், அப்படியிருக்க உங்களை எப்படி மறப்பேன்? என்று கேட்டார்.

"**நீங்கள் கவர்னர் பதவியிலிருந்து நீக்கப்பட்டாலும், மகிழ்ச்சியாக இருங்கள்; அதை என் விருப்பமாக எடுத்துக் கொள்ளுங்கள், கவலைப்பட வேண்டாம்.**"

திருமல ராவ் மகிழ்ச்சியுடன் திரும்பிச் சென்றார்.

1957 மார்ச் 28 அன்று, டான், டாக்டர் கேட்கரை மெஹராஸாத்திற்கு அழைத்து வந்தபோது, பாபாவிற்கு 'நோவோகெயின்' (NOVOCAINE) என்ற வலிமிகுந்த ஊசி போடப்பட்டது. 30ஆம் தேதி ஷோலாப்பூரை சேர்ந்த ஆர். சக்கரபாணிக்கு நேர்காணல் வழங்கினார். 1955 சகவாச நிகழ்ச்சியில், ஏழு நாட்கள் உபவாசம் மேற்கொள்ளத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் இவரும் ஒருவர். நாக்பூர் அல்லது பூனாவில் தங்கி, மௌனம் கடைப்பிடிக்கவும், ஒரு நாளைக்கு ஒரு முறை மட்டுமே உண்ணவும், நள்ளிரவில் ஒரு மணிநேரம் பிரார்த்தனை செய்யவும், பாபா அவருக்கு அறிவுறுத்தினார்; ஆனால் அவரை

வணங்குவதையும் அல்லது அவர் பரிசுகளை ஏற்றுக்கொள்வதையும் தவிர்க்குமாறு எச்சரித்தார்.

ஏப்ரல் 3ஆம் நாள், மன்ஸில்-எ-மீம் பகுதியைச் சேர்ந்த பழைய, முடிதிருத்தும் தொழிலாளியான கங்காராம், எதிர்பாராத விதமாக மெஹராஸாத்திற்கு நடந்து வந்தார். இரவு கண்காணிப்புப் பணிகளில் உதவுவதற்காக அழைக்கப்பட்டிருந்ததால், அன்றும் ஜால்பாய் வந்தார்.

ஏப்ரல் 1957 தொடக்கத்தில், பாபா, இரண்டு ஊன்றுகோல்களின் உதவியுடன் சிறிது நேரம் நடக்க முடிந்தது. பெரும்பாலும் ஊன்றுகோலையும், எப்போதேனும் சக்கர நாற்காலியையும் தொடர்ந்து பயன்படுத்தி, படிகளில் ஏறி இறங்கவும் பழகி வந்தார். ஆனால் அவரது நகர்வில் முன்னேற்றம் இருந்தபோதிலும், அவரது இடுப்புப் பகுதியில் வலி தொடர்ந்தது. இதன் காரணமாக, மேலும் எக்ஸ்ரே எடுக்கப்படும் வரை, நடைபயிற்சி மற்றும் எடை தாங்கும் அளவை கணிசமாகக் குறைக்குமாறு மருத்துவர்கள் அறிவுறுத்தினர்.

இந்த விபத்து மண்டலியையும், அவரையும் பெருமளவில் பாதித்ததால், ஏப்ரல் 5 அன்று பாபா, 1957 நவம்பர் மாதத்தில் நிகழ்த்த திட்டமிடப்பட்டிருந்த சகவாச நிகழ்ச்சியை, 1958 ஜனவரி மாதம் வரை ஒத்திவைப்பதாக, ஆதி சீனியர் மூலம் சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டார். அதே நேரத்தில், இந்தியாவில் அமைந்துள்ள, குறிப்பாக, நவ்ஸாரி, டெல்லி, டெஹ்ரா டூன், கொல்கத்தா, ஆந்திரா, நாக்பூர், ஹமிர்பூர் போன்ற பல்வேறு மையங்களுக்கு செப்டம்பரில் விஜயம் செய்யும் வாய்ப்பிருப்பதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

ஆனால் அவரது திட்டங்கள் திட்டவட்டமானவை அல்ல; இதற்கிடையில், அவர் எந்தத் தொந்தரவும் இல்லாமல் இருக்க விரும்பினார். 1957 ஏப்ரல் முதல் ஆகஸ்ட் வரை, அவரது அன்பர்கள் எவரும், எக்காரணத்தைக் கொண்டும், அவரைப் பார்க்கவோ அல்லது அவருடன் நேர்காணலில் பங்கெடுக்கவோ முயற்சிக்கக்கூடாது.

1957 ஏப்ரல் 7 ஞாயிறு அன்று, வாமன் ஓட்டிச்சென்ற காரில் மெஹராபாத்திற்குச் சென்று, அங்கு வாழும் அனைவரையும் சந்தித்தார். படுத்த படுக்கையாகவே இருந்த பெண்டு, இனி நடக்கவே முடியாது என எண்ணி மிகவும் கவலைப்பட்டார். பாபா அவருக்கு ஆறுதல் கூறினார், **“கவலைப்படாதீர்கள். நான் எல்லையில்லா துன்பத்தை அனுபவிக்கிறேன். எனது துன்பத்தில் நீங்களும் கொஞ்சம் பகிர்ந்து கொள்கிறீர்கள் ஆதலால், நீங்கள் மகிழ்ச்சியாக இருக்கவேண்டும். நான் உங்களுக்குச் சொல்கிறேன், உங்களால் நடக்க முடியும்!”**

மெஹராபாத்திலிருந்து திரும்பிச் சென்ற பாபா, ஒரு சிறிய தரிசன நிகழ்ச்சி நடைபெற்ற அக்பர் அச்சகத்தில், ஸட்டா குடும்பத்தினரை சந்திக்க நின்றார். ஸட்டா குடும்பம், குழந்தைகளுடன், நூற்றுக்கும் அதிகமான நபர்களை உள்ளடக்கிய மிகப்பெரிய குடும்பமாக இருந்தது. பாபா அங்கு, தனது அஹமதுநகர் அன்பர்கள் அனைவரையும் சந்தித்தார்; அதே போல,

வெளியூர்களில் இருந்து வந்த சிலரையும் பார்க்க நேர்ந்தது. அதன் பின்னர் அவர் குஷ்ரு குவார்ட்டர்ஸில் அமைந்த ஆதியின் அலுவலகம் மற்றும் இல்லத்திற்குச் சென்று, குல்மாய், டாலி, ஃபெராம், வாமன், ரங்கோலே (முந்தைய ஆண்டு அந்த வளாகத்திற்குச் சென்றவர்) மற்றும் பிற நெருங்கிய அன்பர்களை சந்தித்து, மெஹராஸாத் திரும்பிச் சென்றார். மல்லிகார்ஜுன ராவ் ஆந்திராவிலிருந்து வந்து பாபாவைப் பார்த்தார்.

ஏப்ரல் 10 அன்று மெஹராஸாத்தில் திருமதி மிரியம் (MRS. MIRIAM ) ஓர் அரை மணி நேர நேர்காணலுக்காக அனுமதிக்கப்பட்டார். மிரியம் இதற்கு முன்பு பாபாவை சந்திக்கவில்லை, மேலும் அந்த சந்திப்பால் மிகுந்த மகிழ்ச்சியும், மனநிறைவும் அடைந்தார். ஸொராப்ஜி ஸிகன்போரியா அதே காலையில் வந்து, பாபாவுடனான ஓர் உரையாடலில் பங்கெடுக்க நேர்ந்தது. விடுமுறை நாட்களில் அஹமதுநகர் வந்திருந்த நாகு, ஏப்ரல் 12ஆம் நாள் பாபாவால் அழைக்கப்பட்டார். ஐந்து நாட்களுக்குப் பிறகு டாக்டர் மூர்த்தி, தேஷ்முக்கின் மகன் பிரபோத், மகள் சஞ்சீவனி மற்றும் சஞ்சீவனியின் நண்பருடன் வந்தார்.

மெஹராவின் பெண் குதிரை ஷீபா, 1957 ஏப்ரல் 5 அன்று சத்தாராவிலிருந்து ரயிலில் கொண்டு வரப்பட்டு, அதன் ஜோடியுடன் மெஹராஸாத்தில் வைக்கப்பட்டது. ஆனால் சில வாரங்களுக்குப் பின்னர், ஏப்ரல் 27 அன்று ஸரோஷ் மூலமாக, குதிரை அஹமதுநகரில் அமைந்த இராணுவ சவாரி பள்ளிக்கு வழங்கப்பட்டது.

உட்தாராவில் நடந்த விபத்திற்குப் பிறகு, பாபாவின் செயல்பாடுகள் மற்றும் உடல்நிலை குறித்து அவர்களுக்குத் தெரியப்படுத்த, மணி சில வாரங்களுக்கு ஒருமுறை மேற்கத்திய நாடுகளில் வாழும் அன்பர்களுக்கு ‘குடும்பக் கடிதம்’ (FAMILY LETTERS) எழுதத் தொடங்கினார். 1957 ஏப்ரல் 11ஆம் தேதி வெளிவந்த கடிதத்திற்காக, பாபா தம்மைப் பின்பற்றும் அன்பர்களுக்கு இந்தச் செய்தியை வழங்கினார்:

**கவலைப்படாதீர்கள். என்னை மேலும் மேலும் நேசிக்கவும். நீங்கள் கடந்து செல்லும் சோதனைகள் மற்றும் சிரமங்கள் எதுவாக இருந்தாலும், எனது மேலங்கியைக் கெட்டியாகப் பற்றிக்கொள்ளுங்கள். என் உலகளாவிய பணியில் பங்கெடுக்கும் நீங்கள் மிகப்பெரிய அதிர்ஷ்டசாலிகள். நான் என்னை வெளிப்படுத்தும் காலம் வெகு தொலைவில் இல்லை, நீங்கள் என்னை எனது சுய ரூபத்தில் காண்பீர்கள். உங்கள் ஒவ்வொருவருக்கும் என் அன்பும், ஆசிகளும்.**



அக்பர் பிரஸ், அஹமதுநகர்
(AKBAR PRESS, AHMEDNAGAR)



**கணேஷ்கிந்த், பூனா, 1957**
(GANESHKHIND, POONA, 1957)

# குருபிரசாத், பூனா

**(Guruprasad In Poona)**

மெஹராஸாத்தில் கடும் வெப்பம் நிலவியதால், சிறிது காலம் பூனா செல்ல பாபா முடிவு செய்தார். அது தவிர, அவர் ஒரு மருத்துவ பரிசோதனைக்காக வரவிருந்தார், மேலும் புதிய எக்ஸ்ரே (X-RAY) எடுக்கப்பட வேண்டும். மெஹரா, மணி, மெஹரு, கோஹெர் ஆகியோருடன் 1957 ஏப்ரல் 18 வியாழன் காலை 7:30 மணிக்கு, மெஹர்ஜியின் காரில் பாபா புறப்பட்டுச் சென்றார். அவர்கள் கணேஷ்கிந்த் தோட்டத்தில் (GANESHKHIND GARDENS) குடியிருந்த தாதி கேரவாலாவின் பங்களாவில் தங்க வைக்கப்பட்டனர்; அங்கு தாதி, பதவி உயர்வு பெற்று, கண்காணிப்பாளராகப் பணிபுரிந்தார். எரச், ஸவக், குமார், ஜால்பாய் ஆகியோர் ஆதி சீனியருடன் காரில் சென்றனர். டாக்டர் டான் ஓரிரு நாட்களுக்கு முன்பு சென்று, நேப்பியர் ஹோட்டலில் (NAPIER HOTEL) தங்கியிருந்தார். மண்டலி உறுப்பினர்கள் அனைவரும் பூனாவில் பாபாவுடன் இருக்க வேண்டும், மேலும் அவர்கள் துணை கண்காணிப்பாளரான திரு. பல்லால் (MR. BALLAL) என்பவரின் பங்களாவில், கணேஷ்கிந்த் தோட்டத்தில் தங்க வைக்கப்பட்டனர். அனைத்து மண்டலிக்கும் உணவு பிந்த்ரா ஹவுஸிலிருந்து வந்தது.

டாக்டர் சாட்டர்ஜி அடுத்த நாள் பாபாவைப் பார்த்த வேளையில், எக்ஸ்ரே எடுக்கப்பட்டது; அவற்றை பரிசோதித்த பிறகு, சாட்டர்ஜி முன்னேற்றம் குறித்து தனது திருப்தியைத் தெரிவித்தார். டாக்டர் டான், பாபாவை தினமும் தோட்டத்தில் நடைபயிற்சிக்கு அழைத்துச் செல்வது வழக்கம். பாபா சற்று சிரமத்துடன் இலகுவாக நடக்க முடிந்தது. இருப்பினும், ஏப்ரல் 22 அன்று அவர் ஊன்றுகோலைப் பயன்படுத்தாமல் சிறிது தூரம் அடியெடுத்து வைக்க முடிந்தது.

ஏப்ரல் 24ஆம் தேதி பாவ் கல்சூரி, ஆதி சீனியருடன் வந்தார். ஆதி சீனியர், மணி, ராம்ஜூ ஆகியோர் அன்று பாபாவுடன் 'கடவுள் பேசுகிறார்' (GOD SPEAKS) மற்றும் 'மானிடரே கேளுங்கள்' (LISTEN, HUMANITY) புத்தகங்கள் தொடர்பான பதிப்புரிமை சிக்கல்கள் குறித்து நீண்ட விவாதத்தில் ஈடுபட்டனர்.

ஒரு நாள் டாக்டர் கோஹெரின் நண்பர், ஒரு முஸ்லிம் மருத்துவர், பாபாவைப் பார்க்க மும்பையிலிருந்து வந்தவர் கூறினார், "எல்லா மதங்களும் கடவுளை நோக்கி அழைத்துச் செல்கின்றன, ஆனால் எவரும் மதத்தின் பொருளைப் புரிந்துகொள்வதில்லை. அதன் உண்மையான முக்கியத்துவத்தை எவரும் உணரவில்லை, மேலும் ஷரியத் (சடங்கு சம்பிரதாயங்களை) ஏற்றுக்கொள்வதன் மூலம், அவை பிணைப்பை உருவாக்குகின்றன."

அதற்கு பாபா, "**அதையெல்லாம் மறந்துவிடுங்கள்! நான் சொல்வதைச் செய்ய உங்களுக்கு விருப்பம் இருந்தால் மட்டும் சொல்லுங்கள்**" என்றார்.

"நிச்சயமாக," மருத்துவர் பதிலளித்தார்.

பாபா அவரிடம், "**அப்படியானால், ஒவ்வோர் இரவும் நள்ளிரவில் எழுந்து, கடவுளை உண்மையாக நினைவில் கொள்ளுங்கள் - முழு மனதுடன் அல்லாவை உரத்த குரலில் அழையுங்கள்! - நீங்கள் அனுபவத்தை அடையப்பெறுவீர்கள்**" என்று அறிவுறுத்தினார்.

மருத்துவர் மகிழ்ச்சியுடன் திரும்பிச் சென்றார். இந்த சந்திப்பின் போது உடனிருந்த தாதி கேரவாலாவின் மனதில் எண்ணங்கள் அலைமோதின: "எவ்வளவு எளிது! நள்ளிரவில் ஐந்து நிமிடங்கள் இறைவனை நினைந்து, பேரின்பத்தை அனுபவிப்பது!"

ஆனால் அந்த நபர் சென்ற பின்னர், எதையும் கேட்காமல், பாபா, "**தாதி, இது உங்களுக்காக அல்ல, அவருக்காக மட்டுமே**" என்று கூறி, தாதியின் திட்டங்களுக்கு திடீரென முற்றுப்புள்ளி வைத்தார்.

ஒருமுறை, முக்கியமான அரசாங்க அதிகாரி ஒருவர், அவரைப் பார்க்க வந்தபோது, பாபா, மண்டலியுடன் சதுரங்கம் விளையாடிக் கொண்டிருந்தார். அவரை அருகில் அமரச் சொல்லி, பாபா விளையாட்டைத் தொடர்ந்தார். அதிகாரியின் மனம் விறுவிறுப்பாக வேலை செய்யத் தொடங்கியது. சிரித்துக்கொண்டே பாபா கூறினார், "**நான் கிருஷ்ணனாக இருந்தபோது, இந்த விளையாட்டை விளையாடினேன்; இன்றைய இந்த ரூபத்திலும் நான் அதை ரசிக்கிறேன். உங்களுக்கு நான் அதில் மூழ்கியிருப்பதாகத் தோன்றினாலும், நான் இப்போது பிரபஞ்சத்தில் என்ன செய்கிறேன் என்று உங்களுக்குத் தெரியாது. எனது பிரபஞ்சத்திற்கான பணி, ஒவ்வொரு கணமும் தொடர்கிறது - நான் உண்ணும்போது, அருந்தும்போது, உறங்கும்போது, விளையாடும்போதும் - தொடர்ந்து நடந்து வருகிறது.**" அதிகாரி எதுவும் கேட்காமலேயே அவரது கேள்விக்கான பதிலை அடையப்பெற்று, வெகுவாக ஈர்க்கப்பட்டார். அவர், பாபா விளையாடுவதை சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்தபோது, பாபா, எப்போதாவது அவரது முதுகைத் தட்டி, வருடிக் கொடுத்தார்.

அந்த அதிகாரி பின்பு தாதியிடம் கூறினார், "பாபா அனைத்தும் அறிந்தவர், எந்தக் கேள்விக்கும் வார்த்தைகளால் அல்ல, புன்னகையின் மூலம் பதில் அளிக்கிறார். என்னுடைய எல்லா கேள்விகளுக்கும் அவருடைய வருடல்கள்தான் பதிலாக அமைந்தன. அவர் அருகில் அமர்ந்திருந்த வேளையில், எனது மனதில் என்ன கேள்விகள் எழுந்தன என்பதை கடவுள் அறிவார். ஆனால் அவர் எனது முதுகைத் தட்டி, வருடிய அடுத்த கணமே, எனது கேள்விகள் அனைத்தும் மறைந்துவிட்டன. இது எனது வாழ்க்கையின் மறக்க முடியாத அனுபவம்."

பாபா பூனாவில் இருந்த போதெல்லாம், டெக்கன் ஜிம்கானா பகுதியில், 885/5 பண்டார்கர் இன்ஸ்டிடியூட் சாலையில் (885/5 BHANDARKAR INSTITUTE ROAD) அமைந்த காடேக்கரின் புதிய இல்லத்திற்கு அவர் எப்பொழுதும் வருகை தருவது வழக்கம். பாபா சில நேரங்களில் காடேக்கரின் அலுவலகத்திற்குச் சென்று, அங்கு

தரிசனம் வழங்குவதும் உண்டு. கோடைக்காலத்தில் தங்குவதற்கு வசதியாக விசாலமான பங்களா ஒன்றை விரும்புவதாக பாபா தெரிவித்திருந்தார். ஆறு ஆண்டுகளுக்கு முன்பு, சர்தார் ராஸ்தேயின் (SARDAR RASTE) உதவியுடன், பாபாவின் உபயோகத்திற்காக பூனாவில் மஹாராணி ஷாந்தாதேவியின் அரண்மனையான ‘குருபிரசாத் பங்களா’வை (MAHARANI SHANTADEVI’S PALATIAL GURUPRASAD BANGALOW) காடேக்கர் கண்டுபிடித்தார். காடேக்கர் மீண்டும் மஹாராணியைத் தொடர்பு கொண்டு பாபாவிற்கான அரண்மனையைப் பெற்றுக் கொள்ள முடிந்தது.

1957 ஏப்ரல் 28 ஞாயிற்றுக்கிழமை அன்று, பாபா, கணேஷ்கிந்த் தோட்டத்திலிருந்து குருபிரசாத்திற்குச் சென்று, மே இறுதி வரை அங்குத் தங்கியிருந்தார். குருபிரசாத்தில் அதிக அறைகளும் வசதிகளும் இருந்ததால், ரானோ, நாஜா இருவரும் குழுவுடன் இணைய அழைக்கப்படவே, ஸரோஷ் அவர்களை 30ஆம் தேதி அழைத்து வந்தார். மும்பையில் வாழ்ந்து வந்த ஸூனாமாஸி, கோர்ஷெத் ஆகியோர் ஐந்து நாட்களுக்கு அங்கு அனுமதிக்கப்பட்டனர். சில நாட்களுக்குப் பிறகு கோஹெரின் சகோதரி கேட்டியும் வந்திணைந்தார்.



குருபிரசாத் (GURUPRASAD), **1957**

ஏப்ரல் 29ஆம் நாள் பாபா, ஊன்றுகோல் இல்லாமல் நடக்கும் நோக்கத்தில், அவர் அதைத் தள்ளிப் பழகுவதற்காக, குழந்தைகளுக்கான தள்ளுவண்டி ஒன்று கொண்டு வரப்பட்டது. சற்று பளுவாக இருக்கும் விதத்தில் அதில் ஒரு கல் வைக்கப்பட்டது. ஒருமுறை, பாபாவுடன் குருபிரசாத்தில் தங்க வந்திருந்த தேஷ்முக்கிடம் பாபா, சக்கரங்கள் பொருத்திய தள்ளுவண்டியில் அமருமாறு கட்டளையிட்டார், இந்தக் காட்சி அனைவரையும் மகிழ்வித்தது. ஒரு நாள் பாபா, பெண் மண்டலியின் பக்கம் திரும்பி, அவர்களிடம், "**உடலில் கடுமையான வலி இருந்தும், நான் மண்டலியைக் கேலியும் கிண்டலும் செய்து, சிரிப்பு ஆரவாரத்துடன் மகிழ்ச்சியாகத் தோற்றமளிக்கிறேன் - ஆனால் நான் சுமக்கும் சுமை எவருக்கும் தெரியாது**" என்று கூறினார்.

அதன் பின்னர் அவரது முகம் பிரகாசமான வேளையில், அவர் மேலும் கூறினார், "**ஆனால் விரைவில் எல்லாம் சீராகி, திட்டமிட்டபடி நடக்கும்.**"

பெண்டுவைக் கண்காணிப்பதற்காக, டாக்டர் டான் ஏப்ரல் 28ஆம் தேதி மெஹராபாத்திற்குத் திருப்பி அனுப்பப்பட்டார். அவர் பாபாவைப் பார்க்க, வாரம் ஒருமுறை பூனாவிற்குச் செல்வது வழக்கம்; மேலும், பாபாவும் பெண்டுவின் சிகிச்சையைப் பற்றி விசாரித்து அவருக்கு கடிதம் எழுதி வந்தார்.

ஒரு நாள் பாபா, பாவ் கல்சூரியிடம், "**நான் கூறுவதை கவனமாகக் கேளுங்கள். விவாதம் செய்யாமல், நான் கூறுவதை மட்டும் ஏற்றுக்கொள்ளுங்கள்**" என்று கூறினார்.

**"உங்கள் மனைவி ரமாவும், குழந்தைகளும் பல நூறு மைல்களுக்கு அப்பால் இருக்கும் போது, நீங்கள் என்னுடன் பல வருடங்களாக இருந்து வருகிறீர்கள். அவர்களை ஸெயின்ட் மீரா உயர்நிலைப் பள்ளியில் பார்த்தபோது, அவர்களைக் குறித்த உள்ளார்ந்த உணர்வு என்னை ஆட்கொண்டது; அவர்களின் அன்பு என் இதயத்தைத் தொட்டது. இப்போது ரமாவும் குழந்தைகளும் அருகில் இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்; அதனால் அவர்கள் எப்போதேனும் என்னைப் பார்க்க முடியும். நீங்கள் இரவும் பகலும் என்னுடன் இருக்கிறீர்கள், அவர்களுடன் உங்களுக்கு எந்தத் தொடர்பும் இல்லை; ஆனால் எனது தொடர்பின் மூலம், நான் அவர்களை கவனித்துக்கொள்வேன்."**

மே 2, 3 தேதிகளில் ஆதி சீனியரை அழைத்து, கல்சூரி குடும்பத்தினரை மெஹராபாத்தில் அல்லது அஹமதுநகரில் தங்க வைப்பது குறித்து, பாபா அவருடன் விவாதித்தார். பாபா முடிவு செய்வதற்கு முன்பு, விஷ்ணுவின் ஆலோசனையைக் கேட்டறிய, அவர் மே 5ஆம் தேதி அழைக்கப்பட்டார். முழுக் குடும்பமும் மெஹராபாத்தில் அமைந்த குடும்ப குவாட்டர்ஸில் தங்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. அதற்கு இணங்க, பாவ் கல்சூரி, ரமாவின் சகோதரர் தீரஜ், நானா கேர் ஆகியோருக்குக் கடிதம் எழுதிய சில வாரங்களில் ரமா, ஷீலா, மெஹர்நாத் மூவரும் மெஹராபாத் குடும்ப குவாட்டர்ஸில் நிரந்தரமாகத் தங்க வைக்கப்பட்டனர். பாபாவின் கட்டளைப்படி, பாதிரி அவர்களை கவனிக்கத்

தொடங்கினார், இதனால் பாவ் கல்தூரி குடும்பத்திற்கும் பாபாவின் அருகில் வாழும் வாய்ப்பு வழங்கப்பட்டது.

1957 மே 14 அன்று மெஹராஸாத்திலிருந்து குருபிரசாத்திற்கு பைதூல் அழைக்கப்பட்டார். அன்று, பாபாஜானின் சமாதியில் அஞ்சலி செலுத்த பெண் மண்டலியை பாபா அனுப்பி வைத்தார்.

மாயா கங்குலி (MAYA GANGULY) என்ற கண் பார்வையற்ற இளம் பெண் (வயது சுமார் 15), மார்ச் மாதம், ஸெயின்ட் மீரா உயர்நிலைப் பள்ளியில் நடந்த தரிசன நிகழ்ச்சியின் போது, பாபாவின் முன்னிலையில் பாடினார். அவர் ஒரு சிறந்த பாடகி, பாபாவிற்கு அவருடைய குரல் நயம் பிடித்திருந்தது. ஒரு நாள் அந்தப் பெண், அவரது பெற்றோருடன் குருபிரசாத்தில் பாபாவைப் பார்க்க வந்த வேளையில், அவர் மீண்டும் பாபாவின் முன்னால் பாடினார்; நிகழ்ச்சி நிறைவடைந்ததும், பாபா, அவரது கண்களுக்கு என்ன நேர்ந்தது என்று கேட்கவே, அவருடைய பார்வை குறைபாடு குறித்து பெற்றோர் பாபாவிடம் விளக்கினர்.

பாபா அந்தப் பெண்ணிடம் '**அவர் வழங்கும் குறிப்பிட்ட வழிமுறைகளைப் பின்பற்றுவாரா**' என்று கேட்டதும், அவருடைய பார்வையை மீட்டெடுக்கும் நம்பிக்கையில், மாயா கங்குலியும் அவரது பெற்றோரும் உடனடியாக ஒப்புக்கொண்டனர். பாபா, அவரிடம் மூன்று மாதங்கள் பால் மற்றும் வாழைப்பழங்களை மட்டுமே உட்கொண்டு, ஓரளவு உபவாசம் கடைப்பிடிக்குமாறு அறிவுறுத்தினார். அந்தப் பெண் பாபாவின் கட்டளையை ஏற்று, அதை மிகவும் தீவிரமாகப் பின்பற்றினார். ஆனால் பல வாரங்களுக்குப் பிறகு, மாயா பலவீனமாகிவிட்டதால் பெற்றோர் கவலைப்படத் தொடங்கினர்.

மாயா, பாபாவின் கட்டளையை மீற விரும்பவில்லை, ஆனால் பெற்றோர் பாபாவிடம் தங்கள் மகள் பலவீனமடைந்து வருவதாகவும், பாபா, அவர் மீது வைத்திருந்த கட்டுப்பாடுகளை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்றும் முறையிட்டனர். துரதிர்ஷ்டவசமாக, பாபா சில சலுகைகளை வழங்கி, விரதத்தின் ஒரு பகுதியை எளிதாக்கினார். அதைத் தொடர்ந்து, மாயாவின் பெற்றோர் கொடுத்த அழுத்தத்தின் காரணமாக, பாபாவின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதில் உறுதியாக இருந்தபோதிலும், மாயா குறிப்பிட்ட காலம் முடிவதற்குள் உபவாசத்தைக் கைவிட்டார்.

மாயாவின் பெயர் பாபாவிற்கு முன் எழுந்தபோது, மண்டலியில் ஒருவர், "அவர் உபவாசத்தைத் தொடர்ந்து, பாபாவிற்குக் கீழ்ப்படிந்திருந்தால், எவ்வளவு அதிர்ஷ்டசாலியாக இருந்திருக்க முடியும்" என்று குறிப்பிட்டார்.

பாபா, "**ஆம், அவர் எனது கட்டளைகளைக் கடைப்பிடித்திருந்தால் சிறப்பாக இருந்திருக்கும். ஆனால் அது அவருடைய விதியில் இல்லை**" என்று குறிப்பிட்டார்.

"அவருக்குக் கண்பார்வை வந்திருக்குமா?" என்று ஒருவர் கேட்டார்.

பாபா தோள்களைக் குலுக்கி, "**கடவுளுக்கே வெளிச்சம். ஒருவேளை**" என்று சைகையால் தெரிவித்தார்.



பாபாவின் பாதங்களில் மாயா கங்குலி, பூனா, 1957
(MAYA GANGULI AT BABA'S FEET, POONA, 1957)

1957 மே 19, ஞாயிற்றுக்கிழமை குருபிரசாத்தில் 'எச்சரிக்கை' ஒன்றை வழங்குவதற்காக மண்டலி மற்றும் அஹமதுநகர், பூனா, மும்பையைச் சேர்ந்த அவரது நெருங்கிய அன்பர்களுடன் ஒரு சந்திப்பை நிகழ்த்த பாபா விரும்பினார். மொத்தத்தில் 47 பேர் அழைக்கப்பட்டனர். ஆதி சீனியர் ஒரு நாள் முன்னதாகவே கைக்கோபாத்துடன் வந்து சேர்ந்தார். கூட்டம் அன்று காலை 8.00 மணிக்கு ஆரம்பமானது. திகம்பர் காடேக்கரும், பால் நாத்துவும் குறிப்புகள் எடுத்தனர். 'அன்றிரவு நன்றாகத் தூங்கினீர்களா' என்று அங்கிருந்தவர்களிடம் பாபா வினவி, தொடர்ந்து கூறினர், **"என்னைப் பொறுத்தவரை, சில முக்கியமான ஆன்மீகப் பணிகளைச் செய்ய வேண்டியிருந்ததால், எனக்கு தூக்கம் இல்லை. விபத்து நடந்ததிலிருந்து, நான் தொடர்ந்து கடுமையான உடல் வலிகளை அனுபவித்து வருகிறேன். எனது முகத்தைப் பார்த்து, இப்போது நான் எப்படி இருக்கிறேன் என்று சொல்லுங்கள்?"**

பாபாவின் முகம் எப்பொழுதும் போல புன்னகையுடனும், மகிழ்ச்சியுடனும் காணப்பட்டதாக பெரும்பாலானோர் கூறினர்.

சில நிமிடங்களுக்குப் பிறகு, பாபா கூறினார், **“நீங்கள் இங்கு அழைக்கப்பட்டீர்கள், ஆனால் நான் ஏன் உங்களை அழைத்தேன்? நான் என்ன சொல்ல வேண்டும் என்பதே இப்போது என் முன் உள்ள கேள்வி!”** என்றதும் எல்லோரும் சிரித்தனர். பாபா, பூனா அன்பர்களை எழுந்து நிற்கச் சொல்லி, அழைக்கப்படாதவர்களைக் குறித்து விசாரித்தார். **அழைக்கப்படாதவர்கள் அன்றைய தினம் மதியம் 2:00 மணிக்கு, குருபிரசாத்திற்கு வந்து அவரது அரவணைப்பைப் பெற்றுச் செல்லுமாறு அறிவுறுத்தினார்.**

காயங்களிலிருந்து மீண்டு வருவதைப் பற்றி பாபா குறிப்பிட்டார், **“இடுப்பு எலும்பு முறிவு நன்றாக உள்ளது. இராணுவத்தில் கர்னலாக இருக்கும் அறுவை சிகிச்சை நிபுணரின் கருத்துப்படி, எனது முன்னேற்றம் எதிர்பாராத விதமாக, வேகமாக உள்ளதாக அவர் என்னிடம் கூறினார். இளம் ராணுவ வீரர்கள் இந்த அளவிற்கு குணமடைய, குறைந்தது ஆறு மாதங்கள் தேவைப்பட்டிருக்கும்.”**

தேஷ்முக், பாபாவிடம் அவரது உடலைப் பார்த்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார், அதற்கு பாபா, **“மனிதகுலத்தின் துன்பங்களைத் தாங்க நான் மீண்டும் மீண்டும் மனித ரூபத்தில் வர வேண்டும்”** என்று பதிலளித்தார்.

மேலும் சில ஆரம்ப அறிக்கைகளுக்குப் பிறகு, பாபா தொடர்ந்து கூறினார்:

**நீங்கள் ஒவ்வொருவரும் நன்கு நினைவில் கொள்ள வேண்டிய முக்கியமான ஒரு விஷயத்தை நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். நான் பிரபஞ்சத்தின் இறைவன் என்பது உண்மை. நான் எங்கும் வியாபித்திருப்பவன். இப்போது நேரம் வேகமாக நெருங்கிக்கொண்டிருக்கிறது, ‘கார் மேகம்’ வட்டமிடுவதை நான் கண்கூடாகக் காண்கிறேன்; அதன் சித்திரத்தைப் பார்க்கிறேன். இதன் மூலம் நான் சமீபத்தில் நடந்த வாகன விபத்தைக் குறிப்பிடவில்லை. பல வருடங்களாக நான் குறிப்பிட்டு வந்த அவமானம் எனது கண்களில் தெரிகிறது. எனது வாழ்க்கையின் அந்தக் கட்டத்தில், நான் உங்கள் கைகளில் இருந்து நழுவுவதற்கான எல்லா வாய்ப்புகளும் உள்ளன.**

**இப்போது நான் அவமானம் என்றால் என்ன என்பதை முதலில் விளக்குகிறேன். பல ஆண்டுகளாக நீங்கள், யாரோ ஒருவரால் மிகவும் அன்பாக நேசிக்கப்படுகிறீர்கள் என்று வைத்துக்கொள்வோம்; ஒரு நாள் நீங்கள் அவரைச் சந்திக்க நேர்ந்தால், அவர் திடீரென உங்களை அவதூறாக நடத்தத் தொடங்குகிறார், உங்களைத் தாக்கி உங்கள் முகத்தில் துப்புகிறார். அவருடனான உங்கள் முந்தைய உறவின் பின்னணியில், உங்கள் அவலநிலை அவமானத்திற்கு ஓர் எடுத்துக்காட்டு. இதேபோல, பல ஆண்டுகளாக என்னை வணங்கி வானளாவ உயர்த்திய சிலர், திடீரென**

எனக்கு எதிராகத் திரும்பி, என்னை அருவருப்பான அசுத்தத்தில் தூக்கி எறிந்தால், அது அவமானத்திற்கு மற்றுமோர் எடுத்துக்காட்டு.

இதுபோன்ற ஒரு விஷயம் நடக்கக்கூடிய சூழ்நிலைகளுக்கான உதாரணம் ஒன்றைத் தருகிறேன். இத்தனை வருடங்களாக நீங்கள் என்னை வழிபடுகிறீர்கள். திடீரென நான் விரும்பத்தகாதவற்றை உண்பதையும், தெருக்களில் நிர்வாணமாக சுற்றித் திரிவதையும், பைத்தியக்காரனைப் போல நடந்துகொள்வதையும் நீங்கள் காண்கிறீர்கள் என்று வைத்துக்கொள்வோம். என்னுடைய இந்த நடத்தைக்கு உங்கள் எதிர்வினை என்னவாக இருக்கும்? உங்களில் எவரும் பாபா, பைத்தியமாகப் போகிறார் என்று நினைக்கவோ, சொல்லவோ நான் விரும்பவில்லை! மாறாக, உலகம் முழுவதையும், ஏக இறைவனான உண்மைப்பொருளுக்குப் பின்னால் பைத்தியமாக்க நான் வந்துள்ளேன்.

அவதார புருஷர் மட்டுமே, தான் மனித குலத்தின் மத்தியில் வாழும் போதெல்லாம், அவமானத்தை சந்திக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். இறை நிலையை அடைந்து, முழுப் பிரபஞ்சத்தின் விவகாரங்களைக் கட்டுப்படுத்தி, கவனித்துக்கொள்ளும் ஐந்து பரிபூரண குருநாதர்கள் இருக்கும் வேளையில், அவர்கள் பூமியில் இறை மனிதனின் தோற்றத்தை விரைவுபடுத்த வேண்டிய தேவைதான் என்ன? மனிதகுலத்தின் துன்பங்களைத் தோளில் சுமக்க அவர்கள் அவரை இப்பூவுலகில் கொண்டுவருகின்றனர். ஐந்து பரிபூரண குருநாதர்கள் (சத்குருக்கள்) அவதார புருஷர் எதிர்கொள்ளும் அல்லது அனுபவிக்கும் அளவுக்கு அவமானப்படுத்தப்பட்டவர்கள் அல்லது அவதூறாக நடத்தப்பட்டவர்கள் அல்ல. இந்த யுகத்தின் ஐந்து பரிபூரண குருநாதர்களால் நான் இந்த மனித உருவத்தை எடுக்கவும், சிலுவையைச் சுமக்கவும், அவமானப்படவும் ஆளாக்கப்பட்டேன்.

“நீங்கள் என்னை மறுப்பீர்கள்” என்று கிறிஸ்து தமது சீடர்களிடம் கூறியதை, அவருடைய வாழ்க்கை மற்றும் போதனைகளை விவரிக்கும் திருநல் ஏடுகளில் நீங்கள் படித்திருப்பீர்கள். தலைமை சீடர்களில் ஒருவரான பீட்டர், இயேசுவை மறுத்தபோது நிகழ்ந்தது என்னவெனில், அவமானத்தின் குறிப்பிட்ட காலகட்டத்தில், அனுகூலமான சூழ்நிலைகள் இல்லாத பட்சத்தில், எனது மீதான பிடிப்பு, உங்கள் கைகளிலிருந்து நழுவுவது உங்களுக்குத் தெரியாது! அந்த நேரத்தில், என்னை விட்டு விலகுவதைக் கூட நீங்கள் நியாயமாக உணரலாம்.

ஆனால் இது நடக்கக்கூடாது என்று நீங்கள் உணர்ந்தால், அதற்கு ஒரே ஒரு பரிகாரம் மட்டுமே உள்ளது. நான் கூறுவதை நீங்கள் நன்றாகப் புரிந்துகொண்டு, அந்த ஆழமான புரிதலின் அடிப்படையில் வாழ வேண்டும். இன்று நீங்கள் கேட்கும் அனைத்தையும் இங்கு இல்லாதவர்கள் அனைவரிடமும் எடுத்துச் சொல்ல வேண்டும்.

சுருக்கமாகச் சொன்னால், நான் கார்மேகத்தைத் தெளிவாகக் காண்கிறேன். எந்தக் காரணமும் இல்லாமல் இதைப் பற்றி வெறுமனே குறிப்பிட விரும்பவில்லை, ஆனால் எனது மீதான பிடிப்பு, உங்கள் கைகளிலிருந்து நழுவக் கூடாது என்பதற்காக, இது, உங்களுக்கு நான் வழங்கும் அன்பான எச்சரிக்கை.

இன்று, நான் உங்களுக்கு வேறு சில முக்கியமான விஷயங்களையும் சொல்ல விரும்புகிறேன். நான் ‘சாதுக்கள்’ என்ற தலைப்பில் தொடங்குகிறேன். இந்த நாட்களில் என் அன்பர்களிடமிருந்து வரும் கடிதங்களில் அடங்கிய இந்த விஷயம், அடிக்கடி எனது கவனத்திற்கு வருகிறது. சிலர் எழுதுகிறார்கள்: “பாபா, நீங்கள் அடிக்கடி, நீண்ட நேரம் ஏகாந்தவாசம் மேற்கொள்கிறீர்கள்; மிக அரிதாகவே உங்களின் சகவாசத்தை அடையப் பெறுவதற்கான வாய்ப்பு எங்களுக்குக் கிடைக்கிறது; பல மாதங்கள் தொடர்ந்து உங்களின் தரிசனம் கூட எங்களுக்கு அனுமதிக்கப்படுவதில்லை. இது துறவிகளை தரிசிக்கவும், அவர்களின் சகவாசத்தில் இருக்கவும் எங்களை உணர்வுப்பூர்வமாகத் தூண்டுகிறது.” துறவிகள் வழங்கும் சில அறிவுரைகளைப் பின்பற்ற வேண்டுமா என்றும் என்னிடம் கேட்கிறார்கள்.

சில நாட்களுக்கு முன்னர், எனது அன்பர் ஒருவரின் மனைவி எனக்கு எழுதிய கடிதத்தில், தன்னை ஒரு துறவி என்று சொல்லிக் கொள்ளும் ஒரு நபர், அந்தப் பெண்மணியிடம் அவர்களது வீட்டைக் காக்க, நான் அந்த சாதுவிற்குக் கட்டளையிட்டதாகவும், அவர் என்னை மிகவும் நேசிப்பதாகவும் கூறினார். இந்தக் கூற்றின் உண்மைத் தன்மைக்கு புறம்பாக, என்னை பாதித்த விஷயம் என்னவெனில், இதுபோன்ற செயல்கள் தொடரும் பட்சத்தில், எவரேனும் எனது பக்தர்களை அணுகி, எனது பெயரில் நூற்றுக்கணக்கான ரூபாய்களைக் கேட்கலாம், இதனால் அவர்களை எளிதில் ஏமாற்றலாம். ஒரு மனிதர் உண்மையான சாதுவா, அல்லது போலியா என்பதை அதிகாரப்பூர்வமாக அறிவிப்பது, என்னுடைய உரிமையே தவிர உங்களுடையது அல்ல.

இந்த நேரத்தில் ஒருவர் உரையாடலின் நடுவே குறுக்கிட்டு, “பாபா, நாங்கள் சாதுக்களிடம் செல்வதன் காரணம் என்னவெனில், நீங்கள் எல்லோரிடமும் இருக்கிறீர்கள் என்ற உணர்வு எங்களுக்கு உள்ளது” என்று கூறியதற்கு பாபா இவ்வாறு பதிலளித்தார்:

**நான் ஒரு திருடனிலும், கொலைகாரனிலும் கூட இருக்கிறேன்! அப்படியானால் அவர்களை மதிக்கவும், வழிபடவும் தடையாக இருப்பது எது? நீங்கள் என்னை, எனது சுய ரூபத்தில் எல்லா இடங்களிலும் பார்க்க நேர்ந்தால், நீங்கள் சாதுக்களிடம் செல்ல வேண்டிய தேவையோ, எனக்கு மரியாதை செலுத்துவதற்காக என்னிடம் வரவோ கூட, எந்த அவசியமும் ஏற்படாது.**

நான், ஆதிகாலத்தவனாக உருவெடுக்கும் போது, தங்களை அவதாரம் என்று கூறிக்கொள்ளும் பல பொய்யான தீர்க்கதரிசிகள் உருவாகிறார்கள் என்பதை, எப்பொழுதும், காலங்காலமாக அறிவித்து வருகிறேன். உதாரணமாக, ஒரு வாரத்திற்கு முன்னர், உத்தரபிரதேசத்திலிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்தது. ஓர் அன்பர், தனது ஊரில் இரண்டு நபர்கள் இருப்பதாகவும், ஒவ்வொருவரும் தன்னை யுகத்தின் அவதாரம் என்று பிரகடனப்படுத்துவதாகவும் எழுதுகிறார். இது அவர் மனதில் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியது. மேலும், வட இந்தியாவில் ஒரு நகரத்தில் வாழும் சமூக சேவகர் ஒருவர், தான் அவதாரம் என்று உரிமை கோருகிறார்.

இதையெல்லாம் நான் உங்களுக்கு விரிவாகச் சொல்கிறேன், ஏனெனில் அவர்கள் அனைவரும் என் குழந்தைகள் என்பதால் அவ்வாறு சொல்வதற்கு எனக்கு மட்டுமே உரிமை உள்ளது. உங்களைப் பொறுத்த வரையில், நீங்கள், அத்தகைய நபர்களை விமர்சிக்கவோ அல்லது பழிவாங்கும் செயலில் ஈடுபடவோ கூடாது. உண்மையான சாதுவைப் பற்றி நீங்கள் தவறாகப் பேசினால், அது உங்களுக்குத் தீங்கு விளைவிக்கும். நீங்கள் பயங்கரமான (மனப்படிவங்களின்) பிணைப்புகளை உருவாக்குவீர்கள். சாதுக்கள் என்று தங்களை அழைக்கும் மஹாத்மாக்களைக் கூட அவதூறு செய்வதை நீங்கள் தவிர்க்க வேண்டும், ஏனெனில் அவர்கள் உண்மையானவர்களா இல்லையா என்பதை நீங்கள் உறுதியாகக் கூற முடியாது. மட்டுமீறிய தன்னம்பிக்கை மிக்க போலி துறவிகள், வெளியளவில் உண்மையான துறவிகளைப் போல செயல்படுகிறார்கள். நீங்கள் அவர்களை வேறுபடுத்தி உண்மையை அறிய முடியாது - அதே வழியில் நீங்கள் மஸ்துகள் மற்றும் மனநிலை பாதிக்கப்பட்ட நபர்களை வேறுபடுத்தி அறிந்துகொள்ள முடியாது. ஆனாலும், அவர்களின் உள் நிலைகளில் உலகளவு வித்தியாசம் உள்ளது!

உண்மையான சாதுக்களைக் குறித்த கருத்துக்கு இப்போது நான் வருகிறேன்; சாதுவாக மாறுவது, குழந்தை விளையாட்டு போன்ற மிக எளிய செயல் அல்ல என்பதை நீங்கள் அறிந்து கொள்ள விரும்புகிறேன். ‘சாது’ என்ற வார்த்தையை, பொதுவாக ஒருவரைக் குறிப்பிட்டு பயன்படுத்தப்படும்போது, பல தவறான புரிதலை உருவாக்குகிறது. சாதுக்கள் பற்றிய தவறான புரிதல்களை நீக்கும் ஒன்றை, நான் இப்போது உங்களுக்குச் சொல்கிறேன்.

இரண்டு வகையான சாதுக்கள் உள்ளனர்: உண்மையான மற்றும் பொய்யும், போலியுமான சாதுக்கள். ஒரு சாதாரண மனிதனால் உண்மையான மற்றும் போலி பவளத்தை வேறுபடுத்திப் பார்க்க முடியாதது போல், உண்மையான மற்றும் போலியான சாதுக்களை வேறுபடுத்திப் பார்க்க முடியாது. ஒரு நகைக்கடைக்காரனைப் போல் என்னால் மட்டுமே வித்தியாசத்தை கண்டுகொள்ள முடியும்.

குறிப்பாக இந்தியாவில், நாம் பல போலி சாதுக்களைக் காண்கிறோம், இதற்கு வேதாந்தத்தின் மேலோட்டமான ஆய்வுதான் காரணம். வேதாந்தத்தைப் படிப்பதன் மூலம், ஒருவர் கூறலாம்: ‘நான் கடவுள்.’ சத்குருக்களும் கூறுகிறார்கள்: ‘நான் கடவுள்.’ போலி சாதுக்களும் வேதாந்தத்தின் உதவியுடன் இதையே கூறுகிறார்கள். உண்மையான சாதுக்களுக்கு அத்தகைய உதவி தேவையில்லை; அவர்கள் உள்ளளவில் அனுபவித்ததைச் சொல்கிறார்கள். சிலர், வேதாந்தத்தைப் படித்த பிறகு, தங்களுக்கு அத்தகைய அனுபவம் இல்லை என்பதை உணர்ந்தாலும், அவர்கள் இன்னும் சொல்கிறார்கள்: ‘நான் கடவுள்.’ இது போலித்தனம். வேதாந்தத்தைப் படித்த பிறகு, ‘நான் கடவுள்’ என்ற உண்மையான, உள் உணர்வைக் கொண்ட சில போலி துறவிகளும் உள்ளனர்; இருப்பினும், உண்மையில் அவர்களுக்கு உணர்வுப்பூர்வமான அனுபவம் இல்லை.

எவரேனும் உங்களிடம் தெய்வீக மகத்துவத்தைத் திணித்து, உங்களை வணங்கி, உங்களுக்கு மாலை அணிவிக்கத் தொடங்கினால், நீங்கள் அதற்குத் தகுதியற்றவர் என்பதை நீங்களே அறிவீர்கள். ஆரம்பத்தில், இந்த (தெய்வீக) மகத்துவத்தை ஏற்றுக்கொள்ள நீங்கள் தூண்டப்படுகிறீர்கள் அல்லது விருப்பப்படுகிறீர்கள், இது உங்களை மகிழ்ச்சியாக உணரச் செய்கிறது. ஆனால், உங்கள் மனசாட்சி உங்களை உணர்வுப்பூர்வமாக உறுத்திக் கொண்டிருக்கும்; மேலும் எதிர்கால முன்னேற்றங்களைக் குறித்த கவலையில் நீங்கள் எப்போதும் இருப்பீர்கள். உங்கள் மீது திணிக்கப்படும் மகத்துவத்தை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அந்தச் சிக்கலான சூழ்நிலையில் மாட்டிக்கொண்டு நீங்கள் தவிப்பீர்கள்.

இந்த தெய்வீக மகத்துவத்தை நீங்கள் ஏற்றுக்கொண்டால், சூழ்நிலையிலிருந்து வெளியேறுவது உங்களுக்கு மிகவும் கடினமாகிவிடும். சிறிது காலத்திற்குப் பிறகு, மனசாட்சியின் உறுத்தல்கள், உங்களைத் தொந்தரவு செய்வது நின்றுவிடுகின்றன, ஏனெனில் நீங்கள் அவற்றுடன் பழகி விட்டீர்கள். பின்னர் அது போதைக்கு அடிமையாவது போலாகிவிடுகிறது, அது இல்லாமல் உங்களால் எதுவும் செய்ய முடியாத நிலை உருவாகிறது. அப்போது நீங்கள் உண்மையான துறவியாகக் காட்டிக் கொள்கிறீர்கள். இந்தப் போலி ரூபம், உங்களை மேலும் அதிகமான எண்ணற்ற பிறவிகளை எடுக்க வைக்கும். உள் அனுபவம் இல்லாமல், ஏன் ஒரு சாதுவாகக் காட்டிக் கொள்ள வேண்டும்?

என்னைப் பொறுத்தவரை, நான் ‘உயர்ந்தவர்களில் உயர்ந்தவர்’ என்று சொல்கிறேன். நான் ஆதிகாலத்தவராக இல்லாவிட்டால், சாதுக்கள் என்று அழைக்கப்படுபவர்களை சந்திக்க உங்களை நான் ஊக்குவித்திருப்பேன்; நான் அவர்களைப் பாராட்டியிருப்பேன், பதிலுக்கு அவர்களும் என்னைப் பாராட்டியிருப்பார்கள். இவ்வண்ணம், பொதுமக்களை ஏமாற்ற, பரஸ்பர பாராட்டுகளை ஊக்குவிக்கும் ஒரு குழு உருவாகும்.

உங்களில் எவரேனும் ஒரு போலி துறவியை அல்லது போலி அவதாரத்தை சந்தித்தால், அவர் உங்களிடம் என்ன சொல்வார்? நான் சொல்வதையே அவரும் சொல்வார். பாபா அவதார புருஷர் என்று நீங்கள் அவரிடம் சொல்வதானால், 'நான்தான் உண்மையானவன், பாபா ஒரு மோசடிக்காரர்!' என்று கூறுவார். எவரேனும் ஒரு போலி சாதுவை அணுகும் வேளையில், அவர், அவரைப் பற்றி உருவாக்கும் வெளிப்புற சூழ்நிலையால் ஈர்க்கப்பட்டு, போலி சாதுவின் மீதான நம்பிக்கையின் காரணமாக, அவர் அனுபவங்களை அடையப்பெற்றால், அவர் அந்த போலி சாதுவிற்கு அவற்றைக் காரணம் காட்ட வாய்ப்புள்ளது. இது குழப்பத்தை உருவாக்குகிறது.

பாபா தொடர்ந்து விளக்கினார்:

இப்போது ஒரு சம்பவத்தை உங்களுக்கு விளக்குகிறேன். அண்மையில் நிறைவு செய்த என் அமெரிக்க விஜயத்தின் போது, அமெரிக்காவில் நீண்ட காலமாக தங்கியிருந்த ஒரு மனிதர், எனது சில நிகழ்ச்சிகளினிடையே, குறிப்பாக திரைப்படங்கள் மற்றும் புகைப்படங்கள் எடுக்கப்பட்டபோது, எனது பக்கத்தில் அமர்ந்திருந்தார். இந்த மாண்புமிகு மனிதர், நான் கூறிய அனைத்தையும் ஆய்வு செய்து, அறிவுப்பூர்வமாகப் புரிந்து கொண்டார், ஆனால் அதைத் தவறாகப் பயன்படுத்தியுள்ளார். அமெரிக்காவிலிருந்து வந்த கடிதம் ஒன்றில், இந்த மனிதர் பாபாவின் பிரதிநிதி என்று மக்களிடம் சொல்லத் தொடங்கியதாகக் கேள்விப்படுகிறேன்!

இத்தனை ஆண்டுகளாக என்னை அறிந்தவர்கள் இதனால் பாதிக்கப்படவில்லை, ஆனால் புதிய அன்பர்கள், கல்வியறிவுற்றவர்களாக இருந்தாலும், அவரால் வெகுவாக ஈர்க்கப்படுகிறார்கள், அவரைச் சுற்றி வருகிறார்கள். மேற்கத்தியர்கள் கூட எப்படித் தவறாக வழிநடத்தப்படுகிறார்கள் என்பதைப் பாருங்கள்!

இதற்கு என்ன பரிகாரம்? அதை இப்போது நான் சொல்கிறேன். நீங்கள் அதை நன்கு புரிந்து கொண்டால் மட்டுமே, இது உங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். பாபா அவதார புருஷர், இறை மனிதன் என்று நீங்கள் அனைவரும் உறுதியாக நம்பினால், குழப்பம் என்ற கேள்வி எழவே வாய்ப்பில்லை. இந்த நிலையில், குழப்பம் மற்றும் சஞ்சலங்கள், உங்கள் மனதில் நுழைவதைத் தடுக்க, எனது மேலங்கியை உறுதியாகப் பற்றிக் கொண்டு, எல்லா கதவுகளையும் மூடிவிடுங்கள். உங்களுக்கு நம்பிக்கை இல்லை என்றால் என்னை விட்டுவிடுங்கள். வேறொருவரைத் தேடுங்கள். ஆனால், எனது தெய்வீகத்தை நம்பாமல், அலைபாயும் மனதுடன் என்னிடம் ஒட்டிக்கொள்ள முயன்றால், அரவை இயந்திரத்தில் சிக்கிய கொட்டை போல் ஆகிவிடுவீர்கள்!

பல ஆண்டுகளாக என்னுடன் இணைந்திருந்தாலும், மஸ்துகளிடம் அதிக கவனம் செலுத்துபவர்களின் சில நிகழ்வுகளையும் நான் உங்களுக்குச் சொல்கிறேன். அவர்களில் ஒருவர், மஸ்த் வழங்கும் போதெல்லாம் கள்

அருந்தும் அளவிற்கு சென்றார். மற்றுமொருவர் (தேஷ்முக்) ஒரு குறிப்பிட்ட மஸ்தைத் தோளில் சுமந்து, வீட்டிற்கு அழைத்துச் சென்று, தினமும் அவருக்கு சேவை புரிந்து, உணவு பரிமாறுவதை வழக்கமாகக் கொண்டார். நான் அவர்களை சரியான நேரத்தில் எச்சரிக்காமல் இருந்திருந்தால், அவர்கள் அந்த மஸ்துகளுடன் தீவிரமாக ஈடுபட்டிருக்க நேர்ந்திருக்கும். இறை மனிதன், தாமே பூமியில் இறங்கியிருக்கும் வேளையில், அவருடன் தனிப்பட்ட முறையில் தொடர்பு கொள்ள உங்களுக்கு அதிர்ஷ்டம் இருக்கும் நேரத்தில், அவருடைய குழந்தைகளான மஸ்துகள் மற்றும் சாதுக்களின் பின்னால் ஏன் ஓட வேண்டும்?

உத்தரபிரதேசம் மற்றும் பஞ்ஜாபில், இரண்டு வகை - உண்மையான மற்றும் போலி சாதுக்கள் உள்ளனர். அங்கே, மக்கள் ஹோம-ஹவனம் (HOMA-HAVAN), பஜனை-கீர்த்தனை (BHAJAN-KIRTAN), யத்னா-யாகம் (YADNA-YAGA), ஆரத்தி-பூஜை (ARTI-PUJA) போன்ற பலவற்றைச் செய்வதன் மூலம், ஆன்மீகத்தின் ஒரு பெரிய காட்சியை வெளிப்படுத்துகின்றனர். வெளித்தோற்றத்திலிருந்து, யார் உண்மையான சாது, யார் போலி என்பதைக் கண்டுபிடிக்க முடியாது. ஆன்மீக சூழ்நிலை என்று அழைக்கப்படும் வெளிப்புற காட்சிகளால், எவரும் எளிதில் ஈர்க்கப்படுகிறார்கள். என்னுடன் நீங்கள் அத்தகைய காட்சிகளைக் காண்பதில்லை. மாறாக, நான் உங்கள் மத்தியில் அமர்ந்திருப்பதைக் காண்கிறீர்கள், சில நேரங்களில் நகைச்சுவையான பேச்சுக்கள் மூலம், உங்களை சிரிக்க வைப்பதுண்டு. உண்மையான ஆன்மீகப் பாதையானது, வழக்கமான பஜன்-கீர்த்தனை, ஹோம-ஹவன், ஸத்ரா-கஸ்தி (புனித நூல்), நமாஸ் செய்தல் மற்றும் பலவற்றிலிருந்து முற்றிலும் வேறுபட்டது. மாறாக, இந்த சடங்கு சம்பிரதாயங்களில் ஒருவர் சிக்கிக் கொள்ளும்போது, அவர் உண்மையான பாதையிலிருந்து தவறிவிடுகிறார்.

நான் இந்த விஷயங்களைக் கூறிய பின்பு, பிற சாதுக்களைச் சந்திக்க வேண்டாம் என்று உங்களிடம் கூறும்போது, 'பாபா பிறர் மீது பொறாமைப்படுகிறாரா?' என்று உங்களில் சிலர் ஒருவேளை நினைக்கலாம். ஆனால் நான், எந்த ஒரு கணமும், ஏக இறைவனாக இருப்பதால், எனக்கு போட்டி என்பதே இல்லை. நான் நிகரற்றவன். நான் ஒருவனே உண்மைப்பொருளாக இருப்பதால், போட்டி என்ற கேள்வி எழ வாய்ப்பே இல்லை. நான் பொறாமைப்பட வேண்டுமானால், எனது பரமாத்மா எனும் நிலையைப் பற்றிதான் நான் பொறாமைப்பட வேண்டும்.

எறும்பு ஒன்று நிலத்தில் நகர்வதை ஒரு மனிதன் கண்டால், எப்போதேனும் பொறாமைப்படுவானா? எறும்பும், மனிதனும் தரையில் ஒரே மட்டத்தில் நகர்ந்தாலும், இரண்டின் உணர்வு நிலையில் உலகளவு வேறுபாடு உள்ளது. உதாரணமாக, இந்த இயந்திர யுகத்தின் நுணுக்கங்களை எறும்பினால் புரிந்து கொள்ளவே முடியாது.

எறும்பும், சாதாரண மனிதனும், நானும் ஒரே பூமியில் நடமாடுகிறோம், ஆனால் ஒரு சாதாரண மனிதன், எறும்பு மற்றும் எனது

உணர்வு நிலைகளுக்கும் இடையே எவ்வளவு வித்தியாசம் உள்ளது! விலங்குகள் சாம்ராஜ்யத்தில் கூட, எறும்பு, யானை இரண்டிற்கும் இடையே உள்ள உணர்வு நிலைகளில் மிகப்பெரிய வித்தியாசம் உள்ளது. எறும்பின் மீது பொறாமை கொண்டு, யானை எப்போதேனும் வேண்டுமென்றே ஆதிக்கம் செலுத்தி அதை மிதித்து அழித்ததுண்டா?

எனது பக்தர்களில் ஒருவர், மும்பையின் ஒரு குறிப்பிட்ட மஸ்தைப் பார்க்க வேண்டும் என்ற தீவிர விருப்பத்தை வெளிப்படுத்தினார்; அதே சமயம் சிலர், இக்காலத்தின் அவதாரம் வேறொருவர் என்று கூறுவதைப் பற்றி, அதிக அக்கறையும், கவலையும் அடைவதாகத் தோன்றியது. என்னை உயர்ந்தவர்களில் உயர்ந்தவர் என்று கருதும் நீங்கள், ஏன் இதர ஆளுமைகளின் பின்னால் ஓட வேண்டும் என்று எனக்கு வியப்பாக உள்ளது?

இந்த விஷயத்தைக் குறித்து, பாபா ஒரு கடிதத்தின் ஒரு பகுதியைக் குறிப்பிட்டு, அதைப் படித்த பிறகு கூறியதாவது: “யார் ஒருவரையும் குற்றம் சொல்ல வேண்டிய தேவையில்லை. இது எவருடைய தவறும் இல்லை. இது கடவுளின் ஆதி முதலான ஆர்வம் மற்றும் அசலான தற்போக்கெண்ணத்தின் தூண்டுதலால் தொடங்கியது. இந்த தெய்வீக விளையாட்டை அவரும் தனது சுய முயற்சியால் அனுபவிக்க முடியும்.” பாபா தொடர்ந்து கூறினார்:

இந்தியாவில் உண்மையான சாதுக்கள் இல்லை என்று நான் சொல்லவில்லை. (அவர் ஒரு சில நன்கு அறியப்பட்ட சாதுக்களைக் குறிப்பிட்டார்.) வெகுஜனங்களுக்கு தெரியாத சில உண்மையான சாதுக்கள் உள்ளனர். இதுகாறும் அறிய வந்த சாதுக்களுடன் ஒப்பிடுகையில், அறியப்படாமலிருந்த இந்த சாதுக்கள் மிகவும் மேல்நிலையை அடைந்தவர்கள். இருப்பினும், இந்த விஷயத்தில், மறைவில் இருந்த மற்றும் அறியப்பட்ட சாதுக்கள் அனைவரும் இறை நிலையை எய்தவில்லை என்பதை, நான் உங்களுக்கு அதிகாரபூர்வமாகக் கூற விரும்புகிறேன். சில வார்த்தைகள் மற்றும் சொற்றொடர்களைப் பயன்படுத்தி தவறாக வழிநடத்தப்பட வேண்டாம். எவரேனும் உங்களை ‘பிரியமான பரமாத்மா’ என்று அழைக்க நேர்ந்தால், அவர் இறுதி இலக்கான இறை நிலையை அடைந்துவிட்டார் என்ற எண்ணத்தில் இருக்க வேண்டாம்.

இந்த நீண்ட, நெடிய பேச்சின் சாராம்சமும், பொருளும் என்னவெனில், நீங்கள் என்னை மட்டும் உறுதியாகப் பற்றிக் கொள்ளுங்கள் அல்லது என்னை முழுவதுமாக விட்டுவிடுங்கள். எந்த சமரசமும் செய்து கொள்ள வேண்டாம். இருப்பினும், சாய்பாபா, உபாஸனி மஹாராஜ், ஹஸ்ரத் பாபாஜான், தாஜுதீன் பாபா, நாராயண் மஹாராஜ் ஆகிய எனது ஐந்து பரிபூரண குருநாதர்களின் ஆலயங்களுக்கு மரியாதை செலுத்தவும், தரிசிக்கவும் நீங்கள் சுதந்திரமாக இருக்கிறீர்கள். எனது ஐந்து சத்குருக்களில் நான்கு பேருக்கு பிரதிநிதிகள் இல்லை. உபாஸனி மஹாராஜுக்கு மட்டுமே ஒரு பிரதிநிதி இருக்கிறார். அவர்தான் கோதாவரி மாய். அவர் மிகவும் தூய்மையான இதயம் கொண்டவர்; இந்த விஷயத்தில் அவருக்கு நிகர்

**எவரும் இல்லை. நீங்கள் ஸாக்கோரிக்குச் சென்று அவருக்கு மரியாதை செலுத்தலாம். அவர் எனக்கு மிகவும் பிரியமானவர். அவர் என்னை மிகவும் நேசிக்கிறார். அவர் என் அன்புக்குரிய யஷோதா. என் ஐந்து சத்குருக்களுக்குப் பொறுப்பாளர்களும், நெருங்கிய வட்டத்து உறுப்பினர்களும் இல்லை என்று இது அர்த்தமாகாது. எந்த விதிவிலக்கும் இல்லாமல், ஒவ்வொரு சத்குருவும் தன்னைப் போலவே, பரிபூரணமானவராக ஆக்கும் ஒருவரிடம் தனது பொறுப்பை ஒப்படைக்க வேண்டும். அத்தகைய ஒருவர் பரிபூரண குருநாதர் என்று அழைக்கப்படுகிறார்.**

**பிற ஆசிரமங்களுக்கோ அல்லது சாதுக்களிடமோ செல்ல வேண்டாம்; ஏனெனில் உண்மையான மற்றும் பொய்யும் போலியுமான சாதுக்களை நீங்கள் வேறுபடுத்திப் பார்க்க முடியாது. நீங்கள் எவரையும் விமர்சிக்கவோ அல்லது அவதூறாகப் பேசவோ கூடாது என்று நான் விரும்புகிறேன். தற்செயலாக சாதுக்களை நீங்கள் சந்திக்க நேர்ந்தால், உண்மையான அல்லது போலியாக இருந்தாலும், நீங்கள் அவர்களுக்கு மரியாதை செலுத்தலாம். ஆனால் அவர்கள் பின்னால் ஓடாதீர்கள். என் மீது உங்களுக்கு முழு நம்பிக்கை இருந்தால் என்னுடன் கெட்டியாக ஒட்டிக்கொள்ளுங்கள்; இல்லையேல், என்னை நிரந்தரமாக விட்டுவிடுங்கள்.**

பாபா வினவினார், **"என்னை இறுதிவரை, முழு மனதுடன் பற்றிக்கொண்டிருப்பவர் யார்?"** அங்கிருந்த அனைவரும் கைகளை உயர்த்தி தங்கள் விருப்பத்தை வெளிப்படுத்தினர்.

இந்த நேரத்தில் ஒரு நபர் கூறினார், "எவ்வாறாயினும் அல்லது வேறு எந்த வழியிலும், பரமாத்மா (இறைவன் - GOD IN THE BEYOND) பூமியில் ஒரு மனிதனாக உருவெடுத்து வாழ்வதை என் இதயம் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. நான் கிருஷ்ணரை நம்புகிறேன், ஆனால் பரமாத்மாவின் ஓர் அங்கமாக மட்டுமே பார்க்கிறேன். இருப்பினும், அர்ஜுனனைப் போல் எனக்கு விஸ்வ ஸ்வரூப தரிசனம் (VISHWA SWARUP DARSHAN, அவதார புருஷரின் உலகளாவிய ரூபத்தின் காட்சி) கிடைத்தால், வேண்டிய நம்பிக்கையை அடையப்பெறுவேன் என்று நினைக்கிறேன்."

அதைக் கேட்ட பாபா சிரித்துக்கொண்டே எடுத்துரைத்தார், **"அப்படியானால் இப்போது நாம் ஆன்மீகத்தில் பேரம் பேசுகிறோமா? நான் உங்களுக்கு ஏதேனும் தரிசனம் வழங்குவதானால், நீங்கள் என்னை 100 சதவீதம் நம்புவீர்கள்? அது ஒரு தரக்குறைவான கொடுக்கல் வாங்கல்.**

**"விஷ்வ ஸ்வரூப தரிசனத்தை வழங்கி, பரமாத்மா எனும் அடையாளத்தை வெளிப்படுத்தியதன் மூலம், 'நான் இறை மனிதன்' என்று அர்ஜுனனை நம்பவைத்தது, கிருஷ்ணராக வருகை தந்த அந்தக் காலகட்டதில் எனது பலவீனமே தவிர, வேறு ஒன்றும் இல்லை."**

பாபா தொடர்ந்து விளக்கினார்: **"எந்தவொரு சிறிய அல்லது பெரிய அனுபவமும், இறுதியில், இறை உணர்வுடன் ஒப்பிடுகையில் பூஜ்ஜியமாகும்.**

**என்னை கடவுளின் அவதாரமாகக் கருதும் சில மேற்கத்திய அன்பர்கள், தங்கள் அரிய அனுபவங்களைப் பற்றி எனக்கு எழுதுகிறார்கள், ஆனால் அவற்றிற்கும் உண்மையான முக்கியத்துவம் எதுவும் இல்லை. அனுபவங்களைப் பெறுவது மனதுக்கு இதமாக இருந்தாலும், அவற்றிற்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதும், அதில் ஈடுபடுவதும் மிகவும் ஆபத்தானது.**"

தேநீர் அருந்துவதற்காகக் கூட்டம் கலைந்து செல்வதற்கு முன்பு, பாபா, "**சொல்ல வேண்டியவற்றை நான் தெளிவான வார்த்தைகளில் சொல்லவில்லையா? கேள்விக்குரிய விஷயங்கள் உங்களுக்கு போதுமான அளவு தெளிவுபடுத்தப்பட்டுள்ளன என்று நான் உறுதியாக நம்புகிறேன்**" என்று குறிப்பிட்டார்.

நோஷிர் ஈரானி, பாபாவின் பாதங்களில் ரூ.1,000 வழங்க விருப்பம் தெரிவித்தார். இந்தத் தொகையை பாபாவின் பணிக்காக அவர் அன்புடன் வழங்கினார். ராட்டிலால் பஞ்சால் (RATILAL PANCHAL) ரூ.1,000, மினூ பரூச்சா ரூ.101 மற்றும் பலர் தானாகவே முன்வந்து தங்களால் இயன்றதை வழங்கினர். நன்கொடைத் தொகையை ஏழை சிறுவர்களுக்கு உணவளிக்க பாபா முடிவு செய்து, அதை ஏற்பாடு செய்யும்படி ராமகிருஷ்ணனுக்கு அறிவுறுத்தினார்.

இந்தத் தொகையில் ஒரு பகுதியை புதிதாகத் திறக்கப்பட்ட மையத்திற்கு அனுப்புமாறு பாபா கட்டளையிட்டார், "**பாபா பணம் வழங்குதையும், அதனால் அவருடைய பணியைச் செய்வதையும் அவர் விரும்புவதில்லை. இது அபத்தமானது! இருப்பினும், இந்தப் பணத்தை நான் பிரசாதமாக வழங்குகிறேன். பாபாவின் பணிக்காக இன்னும் வேறு எதையும் எதிர்பார்க்க வேண்டாம்.**"

அப்போது அவர் கூறினார், "**காசு கொடுப்பதை விட, என் அன்பர்களைப் பொறுத்த வரை, அவர்களின் தலையைக் கொடுப்பது எளிது என்பது நிதர்சனம்!**"

இந்த நேரத்தில், இந்தியாவில் மெஹர் பாபாவிற்கு அர்ப்பணிக்கப்பட்ட 100 வெவ்வேறு குழுக்கள் இருக்கலாம். பல்வேறு மையங்களில் பங்கெடுப்பவர்கள் குறித்து அவர் அறிவுரை வழங்கினார், "**கூட்டத்தில் 500 பேர் கலந்து கொண்டால் அது நல்லது. உங்களால் முடிந்த அளவு முயற்சி செய்தும், மக்கள் பங்கெடுக்கவில்லை என்றால் மனம் தளராதீர்கள். கூட்டத்தில் ஐந்து பேர் மட்டுமே இருந்தாலும், நான் அங்கு இருப்பேன் என்று எடுத்துக்கொள்ளுங்கள்!**"

வெவ்வேறு குழுக்களிடையே வேறுபாடுகள் நிலவின: காடேக்கர், ராமகிருஷ்ணன் இருவருக்கும் இடையேயும், மும்பையில் மானேக் மேத்தாவிற்கும் பிற அன்பர்களுக்கும் மத்தியில் மோதல்கள் இருந்தன. இது குறித்து பாபா கூறினார்:

**எனது சில அன்பர்களிடையே, கணிசமான அளவுக்கு கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளதாக சமீபத்தில் கேள்விப்பட்டேன். அத்தகைய**

**மனப்பான்மையை வளர்த்துக் கொள்வதை விட, நீங்கள் எனக்காகப் பணிபுரியாமல் இருப்பது நல்லது. நீங்கள் என்னிடம் சரணடைவதிலும், வெளிப்படுத்தும் அன்பிலும் மட்டுமே, உங்கள் போட்டி மனப்பான்மையை நான் பாராட்டுவேன். எனது பணியைச் செய்யும்போது, உங்களிடையே பிரிவினையை வளர்த்துக் கொள்வது, அந்தப் பணியின் அடித்தளத்தையே அதிர வைக்கிறது. அது தமது முடிவையே தோற்கடிக்கும். "பாபாவின் பணியை என்னால் மட்டுமே செய்ய முடியும்" என்று கூறுவது பாசாங்குத்தனத்தின் உச்சம் என்று கூறுவேன்.**

சம்பந்தப்பட்டவர்கள் தத்தமது உணர்வுகளையும், எண்ணங்களையும் சுதந்திரமாக வெளிப்படுத்த வாய்ப்பு வழங்கப்பட்டது.

பாபா தொடர்ந்து விளக்கினார்:

**உங்களிடையே பிரிவினையும், பாரபட்சமும் ஏற்படும்போது, நானும் எனது பணியும் ஒதுக்கி வைக்கப்படும். நீங்கள் சகோதரத்துவத்தை பரப்ப ஒரு மையத்தை உருவாக்குகிறீர்கள், ஆனால் முதலில் நீங்கள் குழுவில் எப்படி நடந்துகொள்கிறீர்கள் என்பதை நீங்களே பாருங்கள்! உங்களால் ஒற்றுமையுடன் இணைந்து பணியாற்ற முடியாவிட்டால், எனக்காக ஏன் புதிய மையங்களைத் திறக்க வேண்டும்? நீங்கள் எனது நோக்கத்தையும், பணியையும் மேலும் தொடர விரும்பினால், எனது பணியில் தூசி போல் ஆகிவிடுவதைத் தவிர, வேறு வழியில்லை! இதில் எந்த சமரசத்திற்கும் இடம் இல்லை. என் அன்பர்கள் ஒவ்வொருவரும் தூசி போல் ஆக வேண்டும். அப்போது அவரவர் விருப்பப்படி மக்கள் அவரைச் சுற்றி ஒன்று திரள்வார்கள்; அவருடைய சுய வாழ்வு, எனது அன்பின் செய்தியை பிறருக்கு வெளிச்சமிட்டுக் காட்டும்.**

**மையங்கள் எழுப்புவதை நான் எதிர்க்கவில்லை. அங்கு, பாபாவின் அன்பர்கள் சந்தித்து, தங்கள் கருத்துகளையும், பாபாவின் அன்பின் உணர்வுகளையும் பரிமாறிக் கொள்ளலாம். ஆனால் நல்லிணக்கம் நிலவ வேண்டும். ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்கும் உணர்வு இருக்க வேண்டும். இன்று நாம் 'மையங்கள் இருக்க வேண்டுமா அல்லது அவற்றைக் கலைக்க வேண்டுமா' என்பதை முறையாகத் தீர்மானிக்க வேண்டும். என்னைப் பொறுத்தவரை, எனது பணியில் தூசி போல் ஆவதுதான் ஒரே தீர்வு.**

**ஆனால் 'தூசி போல் ஆவது' என்பதன் மூலம் நீங்கள் என்ன புரிந்து கொள்கிறீர்கள்? நீங்கள் எப்படி தூசி போலாக முடியும்? நான் கூறுவதை உங்களால் செய்ய முடியுமாயின், நீங்கள் தூசி போல் இருப்பதாகப் பொருள்படும். நான் உங்களிடம் கேட்டுக்கொள்வதை நீங்கள் செய்வது மிகவும் கடினம். உங்கள் இதயம், என்மீதான அன்பினால் கொழுந்துவிட்டு எரியும்போதுதான் அது சாத்தியமாகும். நான் நேசிக்கப்பட வேண்டிய விதத்தில், உங்களால் என்னை நேசிக்க முடியாவிட்டால், குறைந்தபட்சம்**

என்னைக் கெட்டியாகப் பற்றிக்கொள்ள முயற்சி செய்யுங்கள். நான் உங்களுக்கு உதவுவேன்.

நாம் தூசி மேல் நடந்தாலும், அதை மிதித்தாலும், அல்லது நாம் விரும்பும் விதத்தில் பயன்படுத்தினாலும் அது ஒருபோதும் குறை கூறாது. எத்தனை பேரிடர்கள் வந்தாலும், நீங்கள் சிரித்த முகத்துடன் இருந்தால், அது உங்களை தூசி போலாக்கிவிடும். என் மீது உன்னதமான அன்பைக் கொண்டிருந்தால்தான் நீங்கள் தூசி போலாக முடியும். தூசி போல் மாறுவதுதான் உங்களை ஒன்றிணைக்கும் ஒரே பந்தம்.

அங்கிருந்த குழுவின் மூத்த உறுப்பினர்களைப் பற்றி பாபா கூறினார்:

ஒருவர் வயதாகும்போது, அவர் ஒரு விசித்திரமான எதிர்பார்ப்பு உணர்வால் ஆட்கொள்ளப்படுகிறார். இளைஞர்கள் வேண்டுமென்றே தன்னைப் புறக்கணிக்கிறார்கள் அல்லது வெறுக்கிறார்கள் என்று அவர் உணர்கிறார். இளைஞர்கள், பெரியவர்கள், உங்கள் அனைவரையும் பற்றிய எனது பெரிய எதிர்பார்ப்பு என்னவெனில், நீங்கள் எந்த எதிர்பார்ப்பையும் மனங்கொள்ள வேண்டாம். நீங்கள் அனைவரும் புதிதாக உருவாக்கிய மையங்கள், உங்கள் பள்ளிக்கூடங்களாக இருக்கட்டும். ஒவ்வொருவருக்கும் என்மீதான அன்பை வெளிப்படுத்த, தனிப்பட்ட வழி உள்ளது என்பதை நினைவில் கொள்ளுங்கள். எனவே உடன்பிறப்புகளைப் போல நடந்துகொள்ள முயற்சி செய்யுங்கள். உங்களுக்குள் ஒற்றுமை தழைத்தோங்கட்டும். ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து, இணக்கமாக இருக்க முயற்சி செய்யுங்கள். தற்போதைக்கு, 1958 ஜனவரி - பிப்ரவரியில் நடைபெறவிருக்கும் சகவாச நிகழ்ச்சி வரை, உங்களால் இயன்றவரை எனது பணியைத் தொடருங்கள்.

சகவாச சபையில், நான் திட்டவட்டமான கொள்கைகளை முன்வைக்க உள்ளேன். என்னைப் பின்பற்ற விரும்புபவர்கள் இந்தக் கொள்கைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். எதிர்வரும் சகவாச நிகழ்ச்சிக்கு, உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்து அன்பர்கள் வர உள்ளனர். இது எனது அவதார காலகட்டத்தின் மிக முக்கியமான பாகமாக இருக்கும். சகவாச நிகழ்ச்சி காலத்தில், நான் முழு வீச்சில் பணிபுரிவேன். அந்த நேரத்தில் நான் சில திட்டவட்டமான கொள்கைகளை முன்வைப்பேன், அவை உண்மையான மற்றும் நீடித்த மதிப்புடையதாக இருக்கும். எல்லா மிதமிஞ்சிய சடங்கு சம்பிரதாயங்களின் பிணைப்புகளையும் அழிக்க விரும்புகிறேன்.

இயேசுவும் கிருஷ்ணரும் வாழ்ந்த காலங்கள் வேறுபட்டவை. தற்போதைய காலம் முற்றிலும் மாறுபட்டது. காலத்தின் தேவைக்கேற்ப மக்களுக்கு எடுத்துரைக்க வேண்டியது இன்றியமையாதது. தற்போதைய அணு யுகத்தில், பௌதீக முன்னேற்றம் ஏறக்குறைய அதன் உச்சத்தைத் தொட்டுள்ளது, மேலும் இது ஆன்மீக அதிகார எல்லையின் உள்ளளவிலான முன்னேற்றத்தின் நிழலாகும்.

**(சகவாச நிகழ்ச்சியின் போது) நான் உங்களுக்கு தனி முதலான ஒன்றைச் சொல்லப் போகிறேன். இதற்குப் பின்னர், இதுபோன்ற திட்டங்கள் எதுவும் இருக்காது. நான் ஏன் இந்த மனித ரூபத்தை எடுத்தேன் தெரியுமா? சகவாச சபையின் போது, இந்த இறை மனிதனின் நோக்கம் அதன் உண்மையான வடிவத்தை அடையப் பெறும்.**

**நீங்கள் நோய்வாய்ப்பட்டிருந்தாலும், உடல்நலம் குன்றி இருந்தாலும், அல்லது சில முக்கியமான பணிகளைச் செய்ய வேண்டியிருந்தாலும், 1958 ஜனவரி - பிப்ரவரி சகவாச நிகழ்ச்சியில் கலந்துகொள்ளத் தவறாதீர்கள்.**

ஏற்கனவே அறிவித்தபடி உத்தரபிரதேசம், ஆந்திரா மற்றும் பிற இடங்களில் நடைபெற இருந்த தனது தரிசன சுற்றுப்பயணங்களை ரத்து செய்ய முடிவு செய்ததாக பாபா மேலும் கூறினார்.

முடிவில், பாபா மீண்டும் அன்புடன் பின்வரும் விஷயங்களை வலியுறுத்தினார்:

**நான் கடவுள் என்பது உண்மை. நான் உயர்ந்தவர்களில் உயர்ந்தவன். கைகளை உயர்த்தியவர்கள், அவர்களது நன்மைக்காக என்னை உறுதியாகப் பற்றிக்கொள்ள விரும்புகிறேன்.**

**என் அன்பர்கள் சாதுக்களை தரிசிக்க வேண்டிய அவசியம் இல்லை. அவமான காலகட்டத்திலும் கூட, என்னுடன் ஒட்டிக்கொள்ளுங்கள். என் அன்பின் செய்தியை அனைவரிடமும் பரப்பி, பாபாவின் பணியில் தூசி போல் இருங்கள்.**

கூட்டம் மதியம் முடிவடைந்தது. பாபாவின் அறிவுறுத்தலின்படி, பூனாவிலிருந்து கூட்டத்தில் கலந்து கொள்ளாதவர்கள் மதியம் 2:00 மணிக்கு குருபிரசாத்திற்கு வந்து, பாபாவின் அரவணைப்பைப் பெற்றுக்கொண்டு வெளியேறினர்.

ஒரு வாரம் கழித்து, 1957 மே 26 ஞாயிற்றுக்கிழமை அன்று, பாபாவைப் பார்க்க ஆதி சீனியர், குல்மாயை அழைத்துக்கொண்டு திரும்பி வந்தார். ஜூன் 1ஆம் தேதி மீண்டும் ஆதி அழைக்கப்பட்டபோது, பாபாவின் பணியைப் பற்றிய சில குறிப்புகள் வழங்கப்பட்டன.

அந்தக் கோடை காலத்தில் வந்த பாபாவின் மற்றுமொரு பால்ய நண்பரும், ஒரு காலத்தில் மெஹராபாத் குடியிருப்பாளருமான பெய்லி, பல ஆண்டுகளாக பாபாவை சந்திக்கவில்லை; இருப்பினும் அவர், பாபாவிடம் ஆழ்ந்த பக்தியுடன் இருந்தார். பெய்லி தனது மனைவி கோஹெரை விட்டுப் பிரிந்து, பூனாவில் மிகுந்த சிரமத்தில் வாழ்ந்துவந்தார். ஒரு நாள் மதியம் சைக்கிளில் குருபிரசாத்தை வந்தடைந்த அவர், பாபாவை மண்டபத்தில் தனிப்பட்ட முறையில் சந்தித்தார். அவர் புறப்படும்போது, ”என்னை மன்னியுங்கள் பாபா” என்றார். பாபா அவரிடம் ரோஜா மலர் ஒன்றைக் கொடுத்தார் (அதை பெய்லி பின்னர் உண்டார்!). அதன் பின்பு விரைவில், பெய்லி ஹைதராபாத் சென்றார்; அவர் பாபாவை மீண்டும் பார்க்கவில்லை.

பாபா பூனாவை விட்டு வெளியேறும் வரை, குருபிரசாத் அரண்மனையில் தங்கப்போவதாகத் திட்டமிடப்பட்டிருந்தது; ஆனால் மும்பையிலிருந்து மஹாராணி ஷாந்தாதேவியின் செயலாளரிடமிருந்து நீண்ட தூர தொலைபேசி அழைப்பு ஒன்று வந்தது; அதற்கிணங்க, ஷாந்தாதேவி வழங்கிய வாக்குறுதிப்படி, குருபிரசாத் அரண்மனையின் ஒரு பகுதி, அவரது சகோதரர் மற்றும் நண்பர்களுக்கு ஒதுக்க வேண்டியிருந்தது.

பாபா தங்கியிருந்த காலத்தில், வேறு எவரும் அங்குத் தங்குவதை விரும்பவில்லை என்று செயலாளரிடம் கூறப்பட்டது. ஆனால் மஹாராணி ஏற்கனவே தனது சகோதரருக்கு வாக்குறுதி அளித்திருந்ததால், பாபா, பங்களாவை சீக்கிரமாகக் காலி செய்ய ஒப்புக்கொண்டார். செயலர் இதை மஹாராணியிடம் தெரிவித்ததைத் தொடர்ந்து, மும்பைக்கும் குருபிரசாத்திற்கும் இடையே, மேலும் தொலைபேசி அழைப்புகள் முன்னும் பின்னுமாக நடந்தன. ஆனால் அங்கிருந்து வெளியேற முடிவு செய்த பாபா, 1957 ஜூன் 1 அன்று கணேஷ்கிந்த் தோட்டத்தில், தாதி கேரவாலாவின் பங்களாவிற்குத் திரும்பிச் சென்றார். அதன் விளைவாக, மஹாராணி, குருபிரசாத் அரண்மனையை மெஹர் பாபாவின் பயன்பாட்டிற்காக மட்டுமே ஒதுக்கினார், மேலும் பாபா இருக்கும் வேளையில் வேறு எவரையும் தங்க அனுமதிக்கவில்லை.

1957 ஜூன் 2 ஞாயிற்றுக்கிழமை அன்று பாபா, நவ்ஸாரி, பாஜ்வா மற்றும் சூரத்தை சேர்ந்த தனது அன்பர்கள் 43 பேருடன் கணேஷ்கிந்தில் மற்றுமொரு சந்திப்பை நிகழ்த்தி, சாதுக்களை தரிசிப்பது குறித்து, மே மாதம் நடந்த 'எச்சரிக்கை' கூட்டத்தில் அவர் எடுத்துரைத்ததை, வார்த்தைக்கு வார்த்தை, மீண்டும் கூறினார். '**கார்மேகம் வேகமாக நெருங்கி வருவதால், தமது மேலங்கியை உறுதியாகப் பற்றிக்கொள்ளுமாறு**' பாபா அவர்களுக்கு அறிவுறுத்தினார், மேலும் அவர், '**இந்த யுகத்தின் உண்மையான அவதார புருஷர்**' என்பதை மீண்டும் வலியுறுத்தினார். "**காலாதிகாலமாக, ஐந்து சத்குருக்கள் உலக விவகாரங்களைக் கட்டுப்படுத்துகிறார்கள். அவர்கள், உலகின் துன்பங்களை தம் மீது சுமப்பதில்லை; அதற்காக என்னை பூமியில் கொண்டுவருகிறார்கள்**" என்று பாபா கூறினார்.

குழுவிலிருந்த ஒரு பழைய அன்பர், டெஹ்ரா டூனைச் சேர்ந்த ஆதேர் தேசாய் - ADER DESAI (கேக்கி தேசாயின் சகோதரர்) உடனடியாக, "பாபா, நான் உங்களை மிகவும் நேசிக்கிறேன்; ஆனால் கடவுள் அவதார புருஷராக வருகிறார் என்ற எண்ணம், நான் எவ்வளவுதான் முயன்றாலும், என் இதயத்தில் நுழைய மறுக்கிறது. நீங்கள் அவதார புருஷர் என்று நான் பிறருக்குச் சொல்கிறேன், ஆனால் உண்மையாகச் சொல்வதானால் எனக்கு அத்தகைய நம்பிக்கை இல்லை; ஆனால், நான் அதை மிகவும் விரும்புகிறேன்."

பாபா அவரிடம், "**என்னை விட நீங்கள் வேறு எவரையேனும் அதிகமாக நேசிக்கிறீர்களா? என்னைவிடப் பெரியவர் ஒருவரை நீங்கள் எதிர்கொண்டிருக்கிறீர்களா?**" என்று கேட்டார்.

அதற்கு ஆதேர், "இல்லை பாபா, உங்களை விட அன்பிற்கு தகுதியானவர் வேறு எவரும் இல்லை" என்று பதிலளித்தார்.

பாபா அவரிடம், "**அப்படியானால் அது போதும். ஏன் கவலைப்பட வேண்டும்? என்னை மேலும் மேலும் நேசிக்க முயற்சி செய்யுங்கள். ஆனால் ஒன்றை மட்டும் நினைவில் கொள்ளுங்கள்: நீங்கள் உள்ளளவில் உணராததை, பிறரிடம் சொல்லாதீர்கள். நீங்கள் என்னை நேர்மையுடன் என்னவென கருதுகிறீர்களோ, அதை மட்டும் பிறரிடம் சொல்லுங்கள். அனைத்தும் நானே; மேலும், ஒருவர் எதையும் நேர்மையாக நம்பலாம்.**"

பாபா, கோவாஸ் வெஸுனாவைச் சுட்டிக்காட்டி, அவரிடம் '**நீங்கள் அவதார புருஷர் என்று நம்புகிறீர்களா?**' என்று கேட்டதற்கு, கோவாஸ், "நூறு சதவீதம்!" என்றார்.

பாபா மீண்டும் வலியுறுத்தினார், "**எனது மேலங்கியைப் பற்றிக்கொள்ள முயற்சி செய்யுங்கள்.**" அவர் மேலும் கூறினார், "**நீங்கள் அதை எவ்வளவு உறுதியாகப் பற்றிக் கொள்ள முயற்சித்தாலும், உங்கள் கைகள் நழுவுவதும், நழுவாமல் இருப்பதும் எனது விருப்பத்தைப் பொறுத்தது. ஆனாலும், நீங்கள் முழு மனதுடனும், நம்பிக்கையுடனும் முயற்சி செய்ய வேண்டும்.**"

அன்று மாலை பாபா, மனோகர் மற்றும் மோனா ஸாக்கரே தம்பதியரின் இல்லத்திற்கு அரை மணி நேரம் விஜயம் செய்தார். பாபாவின் தரிசனத்திற்காக அவர்கள் ஏங்கிக் கொண்டிருந்தார்கள்; பாபா ஏற்கனவே தேதியை நிர்ணயித்திருந்தார்.

மனோகரின் பிறந்தநாள் என்பதால் தம்பதியர் மகிழ்ச்சியில் ஆழ்ந்தனர். பூனா மையத்தின் சேவகர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்; மேலும் பாபாவின் அன்பில் இணக்கமாகப் பணியாற்றுவதாகவும், அவருடைய சேவையில் ஒருவருக்கொருவர் ஒத்துழைப்பதாகவும் உறுதியளித்தனர். மதுசூதன், சுபத்ரா இருவரும் சில பாடல்களைப் பாடினர், அனைவரின் முன்னிலையிலும், பூனா மையத்தின் செயலாளர் ராமகிருஷ்ணன், பாபாவின் செய்தியைப் பரப்ப, அயராது உழைக்கத் தீர்மானித்தார். பாபா, ஸாக்கரே தம்பதியினரைத் தழுவி, பின்பு கணேஷ்கிந்த் தோட்டத்திற்குத் திரும்பிச் சென்றார்; நிகழ்ச்சியில் பங்கெடுத்த அனைவருக்கும் (கிட்டத்தட்ட 100 பேர்) இரவு உணவு வழங்கப்பட்டது.

மனோகர் இந்திய விமானப்படையில் பணிபுரிந்தார்; பாபா, மெஹராஸாத் திரும்பிச் சென்ற பின்பு, மனோகர் சில நேரங்களில் வானில் பறந்து, மெஹராஸாத்தை ஏழு முறை சுற்றி வந்து, வணக்கம் செலுத்துவது வழக்கம். அந்த நேரங்களில், பாபா வெளியில் நின்று, ஊன்றுகோலை உயர்த்தி வாழ்த்திவந்தார்.

மற்றுமொரு சந்தர்ப்பத்தில், பாபா, தனது பூனா அன்பர்களின் கூட்டத்தை கணேஷ்கிந்தில் நடத்தினார். அவர் திகம்பர் காடேக்கரிடம் ஒரு பட்டியலைத் தயார் செய்து, சம்பந்தப்பட்ட அனைவரையும் அழைக்குமாறு அறிவுறுத்தினார்.

பிரதாப் அஹிரின் பெயர் எப்படியோ தவறுதலாக விடுபட்டுப் போனதால், அவர் அழைக்கப்படவில்லை. கூட்டம் தொடங்கியதும் பாபா, “**பிரதாப் எங்கே?**” என்று கேட்க, கூட்டத்திற்காக அழைக்கப்பட்டவர்களின் பட்டியல் சரிபார்க்கப்பட்டபோது, அதில் முரண்பாடு இருந்தது தெரியவந்தது. பாபா, உடனடியாக ‘**ஒருவரை, பிரதாபின் இல்லத்திற்குச் சென்று, அவரை அழைத்து வருமாறு**’ கூறினார்; ஆனால் கூட்டத்திற்கு அழைக்கப்படாத ஏமாற்றத்துடன், பிரதாப் நதிக்கரைக்குச் சென்று, அங்கு அவர் இலக்கின்றி அலைந்து கொண்டிருந்தார். சிறிது நேரத்தில் அவர் வீடு திரும்பியதும், பாபாவின் செய்தியை அடையப் பெற்ற அடுத்த கணமே, கணேஷ்கிந்திற்கு விரைந்தார்; அங்கு பாபா அவரிடம், “**நீங்கள் ஏன் கூட்டத்திற்கு வரவில்லை?**” என்று வினவினார்.

பிரதாப் அழைக்கப்படவில்லை என்று விளக்கியதும், பாபா, “**அவர் பெயர் எப்படி விடுபட்டது?**” என்று கேட்கவே, எவரும் பதிலளிக்கவில்லை.

“**பட்டியலைத் தயார் செய்தது யார்?**” திகம்பர் என்று ஒருவர் பதிலளித்தார். பாபா, பிரதாபிடம், “**திகம்பர் உங்கள் நெருங்கிய நண்பர். நீங்கள் இருவரும் ஒன்றாகக் கல்வி பயின்றீர்கள். உங்கள் பெயரை அவர் எப்படி மறந்தார்?**” பிரதாப் கண்ணீரை அடக்க முடியாமல் அமைதியாக இருந்தார். பாபா அவருக்கு ஆறுதல் கூறினார்: “**இப்போது இதை மறந்து விடுங்கள். இந்த உலகில் உங்கள் தோழர்கள் அனைவரும், சொல்லப்போனால் சில வருடங்கள் மட்டுமே உங்களுடன் இருப்பார்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள், அதே நேரத்தில், நான் இறுதி வரை உங்களுக்கு உறுதுணையாக இருப்பேன். நான்தான் உங்கள் உண்மையான நண்பன்.**”

மேலும் ஒரு சந்தர்ப்பத்தில், நெருங்கிய பூனா குழுவினர் கணேஷ்கிந்திற்கு அழைக்கப்பட்டபோது, பிரதாப் கண்கலங்கி அழுதார். அவர் தரிசனம் செய்ய பாபாவை அணுகிய வேளையில், அவரால் அழுகையை அடக்க முடியவில்லை. காரணத்தைக் கேட்டபோது, பாபா மிகவும் வெளிர்ந்து போய், உடல்நிலை மிகவும் மோசமாக இருப்பதாக பிரதாப் விளக்கினார். பாபா தலைக்கு மேல் எதையோ வைத்திருப்பது போல் சைகையால் காட்டி, கூறினார்: “**ஏனெனில் முழுப் பிரபஞ்சத்தின் பாரமும் எனது தலையில் உள்ளது.**”



பூனா, ஜூன் (POONA, JUNE), **1957**

இந்தக் காலகட்டத்தில், பாவ் கல்சூரி, மதியம் 3:00 முதல் இரவு 11:00 மணி வரை பாபாவின் அருகில் கண்காணிப்பாளராக இருந்தார். அதைத் தொடர்ந்து, ஸவக் இரவு 11:00 மணி முதல் காலை 6:00 மணி வரை பணிபுரிந்தார். 1957 ஜூன் 3ஆம் நாள் மதியம், பாவ் கல்சூரி, பாபாவிடம் சென்றபோது, பாபா அவரிடம், “**இன்று நான் சோர்வாக இருப்பதால் ஓய்வெடுக்க விரும்புகிறேன். ஆதலால், சிறிதும் சத்தம் செய்யாமல் அசைவின்றி இருங்கள்**” என்று அறிவுறுத்தினார்.

பாபா இந்த அறிவுரையை பத்து முறை சத்தமாக மீண்டும் மீண்டும் மொழியுமாறு பாவ் கல்சூரியிடம் வலியுறுத்தி கூறி, பின்னர் அவர் ஓய்வு பெற்றார். பாபாவின் படுக்கையறையில் இருந்த நாற்காலியில் பாவ் கல்சூரி அமைதியாக அமர்ந்தார்; ஆனால் சிறிது நேரத்தில் அவர் தொண்டையில் ஏற்பட்ட அரிப்புணர்ச்சியால் இரும விரும்பினாலும், அதை அடக்கிக்கொண்டு இரு கைகளாலும் வாயை மூடிக்கொண்டார். ஆனால் எவ்வளவோ முயன்றும் அதைக் கட்டுப்படுத்த முடியாமல், கைக்குட்டையை வாயில் திணிக்க முயன்றார். அதுவும் பலனளிக்காத நிலையில், இறுதியாக ‘உம்ம், ஊம், ஊம்ஹ்’ என்ற சத்தம் தொண்டையிலிருந்து வந்தது.

பாபா தனது கண்களைத் திறந்து, வருத்தத்தை வெளிப்படுத்தும் விதத்தில் நடந்துகொண்டது, பாவ் கல்சூரி அவரது ஓய்வில் குறுக்கிட்டதைக் குறித்தது. அவர் பாவ் கல்சூரியைக் கடுமையாகக் கண்டித்தார். ஆனால் பாபா, அவரைத் திட்டத் தொடங்கியதும், பாவ் கல்சூரியின் மார்பில் ஏற்பட்ட அழுத்தத்துடன், தன்னிச்சையாகத் தொடர்ந்த இருமலில் கைக்குட்டை அவரது வாயிலிருந்து வெளியே வந்தது. பாபா அவரைக் கேலி செய்தார், “**நீங்கள் எனக்கு சேவை செய்ய வந்தீர்களா, அல்லது என்னை தொந்தரவு செய்யவா? நான் பலமுறை கூறினேன், ஆனால் நீங்கள் எனது தூக்கத்தைக் கெடுத்துவிட்டீர்கள், இப்போது இரவு முழுவதும் ஓய்வெடுக்க முடியாது**.”

ஒவ்வொரு அரை மணி நேரத்திற்கும் பாபா அவரை வசைபாடிக் கொண்டிருந்தார்; பின்பு, கோஹெரை அழைத்து, அவரிடம் பாவ் கல்சூரியைப் பற்றி புகார் செய்தார். அனைத்தும் அத்துடன் முடிந்துவிடவில்லை. பாபா, மெஹரா, மணி, மெஹரு, நாஜா, ரானோ ஆகியோரை அழைத்து, பாவ் கல்சூரியிடம் ‘அறையை விட்டு வெளியேறி, கதவருகே நிற்குமாறு’ அறிவுறுத்தினார். இது ஏதோ புதுமையாக இருந்தது, ஏனெனில், பாபா பெண்மணிகளுடன் பேசும் போதெல்லாம், காவலாளியை வெளியே வெகுதூரம் அனுப்புவது வழக்கம். இந்த முறை அவர் வேண்டுமென்றே பாவ் கல்சூரியை வாசல் அருகில் நிற்குமாறு அறிவுறுத்தினார், இதனால் அவர் அறைக்குள் நடக்கும் அனைத்தையும் கேட்க முடியும்.

பாபா, பெண் மண்டலியிடம், பாவ் கல்சூரியைப் பற்றி கடுமையாகப் புகார் கூறினார், “**அவர் எனக்கு சேவை புரியவில்லை, ஆனால் என் உயிருக்குப் பின்னால் இருக்கிறார்! நான் ஏன் அவரை என்னுடன் இருக்க**

**அழைத்தேன்? இப்போது, இரவு முழுவதும் என்னால் ஓய்வெடுக்க முடியாது. இன்று நான் மிகவும் சோர்வாக உணர்கிறேன்.**"

உண்மையில் என்ன நடந்தது என்று பெண் மண்டலிக்குத் தெரியாது; பாவ் கல்சூரியின் இது போன்ற முட்டாள்தனத்தைப் பொறுத்துக் கொண்டதற்காக, இயற்கையாகவே பாபாவிடம் முழு அனுதாபம் இருந்தது. "கண்காணிப்பில் இருக்கும்போது அவர் மிகவும் கவனமாக இருக்க வேண்டும்," என்று அவர்கள் கூறினர்.

சிறிது நேரம் கழித்து, பாபா, பெண் மண்டலியை அனுப்பிவிட்டு, பாவ் கல்சூரியை அழைத்து, "**இப்போது என்னை ஓய்வெடுக்க அனுமதிப்பீர்களா இல்லையா?**" என்று மீண்டும் கேட்டார்.

பாவ் கல்சூரி சீற்றத்துடன் குறிப்பிட்டார், "நீங்கள் ஓய்வெடுக்கக் கூடாது என்று நான் விரும்புவதாக நீங்கள் நினைக்கிறீர்களா?"

"**அப்படியானால் ஏன் அவ்வாறு சத்தம் செய்தீர்கள்?**"

"நான் என்ன சொல்ல முடியும் பாபா? என் உயிர் போவது போல நான் தவித்தேன்!"

பாபாவின் முகத்தில் முழுமையான அப்பாவித்தனம் வெளிப்பட்டது. என்ன நடந்தது என்று அன்பான அக்கறையுடன் பாபா கேட்க, அவர் இருமலைத் தடுக்க முழு முயற்சி செய்ததையும், ஆனால் மூச்சுத் திணறலால் அவதிப்பட்டதையும் பாவ் விளக்கினார்.

"**உண்மையாகவா? இதை ஏன் என்னிடம் முன்பே சொல்லவில்லை?**" என்று பாபா கேட்டார்.

"நீங்கள் என்னிடம் கேட்கவில்லை, விளக்கமளிக்க எனக்கு வாய்ப்பும் வழங்கவில்லை."

"**இருந்தாலும் நீங்கள் என்னிடம் சொல்லியிருக்க வேண்டும்**" என்று பாபா வலியுறுத்தினார்.

"உங்களுக்குத் தெரியாதா? வேண்டுமென்றே இந்த முழு நாடகத்தையும் நடத்தினீர்கள்!" என்று பாவ் கல்சூரி உறுதிபட தெரிவித்தார்.

பாபா தனது குரல்வளையான ஆதாமின் ஆப்பிளைத் தொட்டு, "**எனக்கு எதுவும் தெரியாது என்று நான் சத்தியம் செய்கிறேன்**" என்று சைகையால் தெரிவித்தார். சத்தியம் செய்யும்போது, பாபா மிகவும் அப்பாவியாகத் தென்பட்டவே, பாவ் கல்சூரியின் கோபம் தணிந்து சிரித்தார். பாபா, பாவ் கல்சூரியை ஆரத்தழுவி, அவரது முகத்தை அன்புடன் வருடினார்; பின்பு பாபா, "**நான் உங்களை மிகவும் நேசிப்பதால், உங்களை மிகவும் துன்புறுத்துகிறேன்; இந்த அலைக்கழித்தல் நான் உங்களுக்கு அன்புடன் வழங்கும் பிரசாதம்**" என்று கூறினார்.

1957 மே 19 அன்று நடந்த சந்திப்பின் போது, பூனா மையத்தின் அமைப்பாளர்கள் அவரிடம் முன்வைத்த வேண்டுகோளுக்கு இணங்க, ஜூன் 8 சனிக்கிழமையன்று காலை எட்டு மணிக்கு, பாபா, பூனா மையத்திற்கு விஜயம் செய்தார். பாபா, '**தரிசனம் வழங்கவோ, அன்பளிப்புகளை ஏற்றுக்கொள்ளவோ**

**மாட்டேன், மையத்தின் சார்பில் ஒரே ஒரு மலர் மாலையை மட்டுமே ஏற்றுக்கொள்வேன்**' என்பதை, ஏற்கனவே தெளிவுபட தெரிவித்திருந்தார்.

அப்போது பூனா மையம், சரஸ்வத் காலனி, 399 ஸோம்வார் பேட் என்ற இடத்தில் அமைந்த அப்பா ராவ் முதலியார் இல்லத்தில் (APPA RAO MUDALIAR, SARASWAT COLONY, 399 SOMWAR PETH) இருந்தது; அங்கு ஏப்ரல் மாதம் முதல், வாராந்திர கூட்டங்கள் நடத்தப்பட்டன. ராமகிருஷ்ணன் இந்த செல்வந்தர் குடும்பத்தைத் தொடர்பு கொண்டு, இதர உள்ளூர் மத மற்றும் ஆன்மீகக் குழுக்கள் கூடும் பெரிய குடியிருப்பில் அமைந்த மண்டபத்தைப் பயன்படுத்தக் கோரினார். பாபா வருகை தந்த வேளையில், அறை முழுவதும் புதிய நபர்களின் கூட்டம் நிரம்பி வழிந்ததால், மைய ஊழியர்கள் வெளியே நிற்க வேண்டியதாயிற்று. (இல்லத்தை நோக்கிச் செல்லும் சாலையில் ரோஜா இதழ்கள் தூவப்பட்ட புடவைகளை குடும்பத்தினரும் அந்நியர்களும் விரித்திருந்தனர்.) சதாஷிவ் பாட்டீல், பாபாவிற்கு மாலை அணிவித்தார், காடேக்கர் ஒரு சிறிய வரவேற்பு உரையை நிகழ்த்தினார், மதுசூதன் பஜனை பாடல்களைப் பாடினார்.

மையத்தின் பணியாளர்களான ராமகிருஷ்ணன், ஷிண்டே, காம்ப்ளே, பால் டவ்லே, பிரதாப், தாடே, பண்டெலு குடும்பத்தினர் மற்றும் பலர் வெளியில் இருப்பதை பாபா கவனித்தார். “**எனது சேவகர்களில் சிலர், தங்களுக்கான கடமைகளைச் செவ்வனே செய்யும் பொருட்டு, மண்டபத்திற்கு வெளியே நின்று, தரிசனத்திற்காகவும் கவலைப்படாமல் இருப்பதைக் கண்டு நான் மகிழ்ச்சியடைகிறேன்! எனது சேவகர்கள் இப்படி இருப்பதை நான் விரும்புகிறேன். நான் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறேன். நீங்கள் விரும்பியபடி உங்களுக்கான சூழ்நிலையை நான் இங்கே உருவாக்கியுள்ளேன். இப்போது நீங்கள் ஒருவரோடு ஒருவர் இணக்கமாகச் செயல்படுவதும், அதைப் பராமரிப்பதும் உங்கள் கடமை. உங்கள் அனைவருக்கும் என் ஆசிகள்**.”

அதைத் தொடர்ந்து, ராமகிருஷ்ணன் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, பாபா ஒரு வயதான பெண்மணிக்கும், மற்றுமொரு பக்தருக்கும் தரிசனம் மற்றும் ஆசியை வழங்கினார். ஸெயின்ட் மீரா உயர்நிலைப் பள்ளியில் கூட்ட நெரிசல் காரணமாக அந்தப் பெண்மணி பாபாவின் தரிசனத்தைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

ஆதியின் ஆலோசனையின் பேரில், மதுசூதன் பாடிய மற்றொரு கஸலை, பாபா பெரிதும் பாராட்டினார். புறப்படுவதற்கு முன்பு, கூட்டத்திற்கு வினியோகிக்கத் தயாராக வைக்கப்பட்டிருந்த பிரசாதத்தை பாபா தொட்டு ஆசீர்வதித்தார்.

அனைத்து மைய ஊழியர்களுடன், டெக்கன் ஜிம்கானா, கர்வே சாலையில் அமைந்த டவ்லேயின் தோல் விநியோக கூட்டுறவு சங்கத்திற்கு பாபா விஜயம் செய்தார். டவ்லே, பாபாவின் நீண்டகால அன்பர். தொழிற்சாலையில் ஊழியர்கள் பாபாவை ஆரவாரத்துடன் வரவேற்று, குறிப்பாக, அவருக்காக அலங்கரிக்கப்பட்ட இருக்கைக்கு அழைத்துச் சென்றனர். பாபா

அவர்களுக்கு தரிசனம் வழங்கிய வேளையில், சுபத்ரா இசை நிகழ்ச்சி ஒன்றை நிகழ்த்தினார். அனைவரிடமும் தனது மனமார்ந்த மகிழ்ச்சியை தெரிவித்து, அவர்களை ஆசிர்வதித்த பாபா, அடுத்ததாக கமலா நேரு விடுதிக்குச் சென்று, அங்குள்ள ஹரிஜன குழந்தைகள் மற்றும் மாணவர்களை சந்தித்தார். விடுதிச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பி.என். ராஜ்போஜ் (P.N. RAJBHOJ), பாபாவை வரவேற்று, சில வார்த்தைகள் கூறினார். இரண்டு சிறுமிகள் மராட்டி மொழியில் பஜனைப் பாடினர், பாபா குழந்தைகளை தரிசனம் செய்ய அனுமதித்தார். சுபத்ரா மேலும் ஒரு பஜனை பாடி, பாபாவிற்கு முன்பாக ஆரத்தியை நிகழ்த்தினார்.

தொடர்ந்து பாபா, கோத்ருடில் (KOTHRUD) அமைந்த எஸ்.என். வந்த்ரேக்கரின் (S.N. WANDREKAR) தோட்டத்திற்குச் சென்றார். வந்த்ரேக்கர் மும்பை அரசாங்கத்தின் முன்னாள் துணை அமைச்சராக இருந்தார், அவரும், அவரது குடும்பத்தினரும் பாபாவை அன்புடன் வரவேற்றனர். பாபா தோட்டத்திற்குள் நுழைந்தார், அங்கு ஒரு மேஜையில் பழங்கள், மிட்டாய்கள் மற்றும் இனிப்புப் பண்டங்கள் வைக்கப்பட்டிருந்தன. பாபா தனது இருக்கையில் அமர, அனைவரும் அவருக்கு முன்பாக அமர்ந்தனர். வந்த்ரேக்கர் குடும்பத்தினரை அழைத்து, பாபா அவர்களைத் தன் அருகில் அமர வைத்தார்; மீண்டும் சுபத்ரா பஜனைகள் பாடி, ஆரத்தியை நிகழ்த்தினார். இறுதியாக பாபா அனைவருக்கும் பிரசாதம் வழங்கினார்; மேலும் மிலன் புகைப்பட ஸ்டுடியோவின் பிக்குபாய் கே. பனார்கர் - BHIKUBHAI K. PANARKAR (ஷிண்டே மூலம் பாபாவை சந்தித்தவர்) குடும்பம் மற்றும் தொழிலாளர்களுடன் பாபாவின் புகைப்படத்தை எடுத்தார். நண்பகலில் நிகழ்ச்சிகள் நிறைவடைந்ததும், பாபா மண்டலியுடன் கணேஷ்கிந்த் திரும்பிச் சென்றார்.

பாபாவின் இந்த விஜயத்தின் போது, ராமகிருஷ்ணன் அவருடன் காரில் சென்றார். அந்த நேரத்தில் பூனாவில் தொற்றுக் காய்ச்சல் பரவலாக இருந்தது; காரில் இருந்தபோது ராமகிருஷ்ணனுக்கு தடுப்பு நடவடிக்கையாக, ஒரு மாதத்திற்கு தினமும் இரண்டு ஏபிசி - APC (ஆஸ்பிரின் போன்ற) மாத்திரைகளை உட்கொள்ளுமாறு பாபா அறிவுறுத்தினார். ராமகிருஷ்ணனுக்கு உடல் நலம் சீராக இல்லை, இவ்வளவு நாள் மருந்து அருந்த விருப்பமில்லாமல் இருந்தபோதிலும், பாபாவின் உத்தரவுபடி மருந்து மாத்திரைகளை உட்கொள்ளத் தொடங்கினார்.

மே மாதத்தில் நடந்த கூட்டத்தில் நோஷிர் ஈரானி மற்றும் பலர் நன்கொடையாக வழங்கிய ரூ.1,000 மூலம், பாபா, கணேஷ்கிந்தில் 1957 ஜூன் 9 ஞாயிற்றுக்கிழமை அன்று, ஏழைகளுக்கான ஒரு நிகழ்ச்சியை நடத்தினார். பாபா குறிப்பிட்டதற்கு இணங்க பதினைந்து வயதுக்குட்பட்ட இருநூறு ஏழை சிறுவர்கள் அவரது பூனா அன்பர்களால் அழைத்து வரப்பட்டனர்; பூனா அன்பர்களும் நிகழ்ச்சியில் கலந்துகொள்ள அனுமதிக்கப்பட்டனர். மும்பை, நவ்ஸாரி, ஹமிர்பூர் மற்றும் ஆந்திராவிலிருந்து ஐரீன் கோனிபியர், ஃபிரான்சிஸ் கோல்ட்னி ஆகியோர் உட்பட ஒரு சில அன்பர்களும் அங்கு வந்திருந்தனர். ஒவ்வொரு சிறுவரும் ஒருவர் பின் ஒருவராக பாபாவை அணுகியதும், அவர்

சிறுவர்களைத் தலை வணங்கிய பின்பு, ஒரு துண்டு துணியையும் இனிப்புகளையும் வழங்கினார்.

பிரசாதம் வழங்கும் வேளையில், சில குழந்தைகளைத் தட்டிக் கொடுத்து கேட்டார், **“உனக்கு பள்ளி செல்ல பிடிக்குமா? …நீ கோலி விளையாடுவதுண்டா? …நீ பட்டம் பறக்கவிடுவாயா?”** 200 சிறுவர்களுக்கு பிரசாதம் வழங்கிய பிறகு, பாபா மேலும் ஐந்து குழந்தைகளை அழைத்து, அவர்களுக்கும் பிரசாதம் கொடுத்தார். அங்கிருந்த மேலும் சில குழந்தைகளுக்கும் இனிப்புகளை வழங்கினார்.

நண்பகலில் நிகழ்ச்சியை நிறைவு செய்து, பாபா, எரச், மெஹர்ஜி இருவரின் கைகளில் சாய்ந்தபடி, தனது அறைக்குச் சென்று, அங்கு அவர் சிலரை அழைத்தார். **“இந்த நாட்களில் நான் என் அன்பர்களுடன் இருக்க நேரம் கிடைப்பது அரிது”** என்று குறிப்பிட்டு, **“நான் எங்கு வெளியே சென்றாலும், எனது தரிசனத்திற்காகக் காத்திருக்கும் மக்கள், எல்லாப் பக்கங்களிலும் என்னை சூழ்ந்திருப்பார்கள். ஆனால் இன்று நான் உங்களில் சிலருக்கு மத்தியில் நிம்மதியாக அமர முடிகிறது”** என்றார்.

பாபா அவரை கஸல்களால் மகிழ்விக்க பஜனைக் குழுவை அழைத்த போது, மதுசூதன், சுபத்ரா இருவரும் பாடினர்; பாபா, அலோபாவிடம் கவிஞர் ஜிகரின் கஸலை வாசிக்கக் கூறி, அதன் பொருளை விளக்கினார்.

பாபா ஒரு பாடகரைப் பாராட்டினார், உடனே, **“நான் யாரைப் புகழ்வது? நானே பாடகர், நானே பாடல்! தப்லாவும், தப்லா வித்வானும் நானே! நான் ஹார்மோனியத்தில் இருக்கிறேன், நானே அதுவாகவும் இருக்கிறேன்! அதிலிருந்து வெளிப்படும் ஒலியும் நானே! எல்லாம் நானே, எங்கும் நானே! இனி எவரைப் போற்றுவது? என்னையே நான் புகழ்கிறேன்!”** என்றார்.

அன்றைய தினம் நிகழ்ச்சிகளின் நடுவே இவ்வாறு குறிப்பிட்டார், **“நானே இறைப் பெருங்கடல்… நானே ஆதிகாலப் புருஷன்… நான் நித்தியமானவன், அளவிறுதியற்றவன்!”**

ஆரத்தி நிறைவடைந்ததும் அனைவரும் தத்தமது இல்லங்களுக்கு திரும்பிச் சென்றனர்.

புது வாழ்வு காலகட்டத்தில், 1950இல் பாபா, மஹாபலேஷ்வரில் இருந்த வேளையில், காஷ்மீர் வணிகர் ஹபிபுல்லா பெய்க் அவரைப் பார்க்க வந்திருந்தார். அப்போது பாபா அவரிடம், **“நீங்கள் என் அண்டை வீட்டாராக இருப்பீர்கள்”** என்று கூறியதன் அர்த்தம் ஹபிபுல்லாவிற்குப் புரியவில்லை; ஆனால், குறுகிய காலத்தில், அவர் பூனாவில் ஒரு சிறிய கடையைத் திறக்க நேர்ந்தது. சில ஆண்டுகளுக்குப் பின்னர், அவர் முன்பு பணிபுரிந்த காஷ்மீர் ஸ்டோரின் உரிமையாளர், அவரது வணிகத்தை விற்க விரும்பவே, ஹபிபுல்லா அதை வாங்கினார். அந்தக் கடை, பாபா இல்லத்திலிருந்து சில தெருக்களுக்கு அப்பால் இருந்தது, இந்த வழியில் அவர் பாபாவின் ‘அண்டை வீட்டுக்காரர்’ ஆனார்.



மெஹர் பாபா - கணேஷ்கிந்த் தோட்டம் - மே **1957**
(MEHER BABA, GANESHKHIND GARDENS - MAY 1957)



**8 ஜூன் 1957, பூனா -** கீழே: மோனா ஸாக்கரே & கே.கே. ராமகிருஷ்ணன்
(8 JUNE 1957, POONA - BOTTOM: MONA SAKHARE & K.K. RAMAKRISHNAN)

பாபா பூனாவில் தங்கியிருந்தபோது, காஷ்மீர் ஸ்டோரில் ஹபிபுல்லாவை சந்தித்தார். அவர் பல ஆண்டுகளுக்கு முன்பு கூறியதை அவருக்கு நினைவுபடுத்தினார், **“இப்போது நீங்கள் என் அண்டை வீட்டாராக மாறிவிட்டீர்கள், என்னை மறந்துவிடாதீர்கள்!”** 1950இல் ஹபிபுல்லா நடைமுறையில் பணமில்லாமல் இருந்தார், ஆனால் பல ஆண்டுகளில் வணிகம் செழித்ததால், அவர் ஒரு லட்சாதிபதி ஆனார். தனது வாழ்க்கையின் செழிப்பைப் பற்றி கூறுகையில், எல்லாமே பாபாவின் அருளால்தான் என்று அவர் உறுதியாக நம்பினார். பாபாவின் மீதான அவரது அன்பு, பல ஆண்டுகளாக அதிகரித்ததோடு, பாபாவின் தெய்வீகத்தன்மையில் அவர் உறுதியாக இருந்தார்.

டாக்டர் தனபதி ராவ், குடும்ப சாஸ்திரி, புக்கார் ஆகியோர் கணேஷ்கிந்தில் பாபாவுடன் சில நாட்கள் தங்கியிருந்தனர், மேலும், 1957 ஜூன் 9 அன்று, ஒரு வாரத்திற்கு முன்னதாக நடந்த கூட்டத்தில் கலந்து கொள்ள முடியாத டாக்டர் ஹோஷங் பரூச்சாவிற்கு, பாபா ஒரு சிறப்பு அழைப்பு விடுத்தார். அன்று மதுசூதன், சுபத்ரா இருவரின் பஜனையும் கவாலி நிகழ்ச்சியும் நடந்து கொண்டிருந்தது. ஒரு கட்டத்தில், பாபா, ஹோஷங்கிடம் கேட்டார், **“ஒரு பரிபூரண குருநாதரின் மனம் எப்படி இயங்குகிறது என்று நினைக்கிறீர்கள்?”**

ஹோஷங் பதிலளித்தார், “இது ஒரு வெறுமையான மனம் என்று நான் நினைக்கிறேன்,” அதாவது ஒரு பரிபூரண குருநாதர் உலக பற்றின்றி இருப்பவர்.

பாபா விளக்கினார்: **“வெறுமையான மனம் என்பது ஒரு மூடனின் மனம். நான் உங்களுடன் பேசும் போது, நான் உங்களைப் பற்றி உணர்கிறேன், அதே நேரத்தில் பாடகர்களின் இசையைக் கேட்கிறேன். நான் அந்த உணர்வில் இருக்கிறேன்; இந்த அறையில் இருக்கும் ஒவ்வொருவரும் எதையாவது நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் உணர்கிறேன். ஒரே நேரத்தில், உலகில் உள்ள அனைத்து மக்களைப் பற்றிய உணர்வுடன் நான் இருக்கிறேன், மேலும் ஏழு ஆன்மீகத் தளங்களில் நிலைகொண்டுள்ள அனைவரையும் நான் உணர்கிறேன். அதுவே பரிபூரண நிலை.”**

ஹோஷங் பரூச்சா, கோதாவரி மாயின் தீவிர பக்தராக இருந்தார்; மேலும், பாபாவை தனது குருநாதராக முழுமையாக ஏற்றுக்கொள்வது குறித்து சில தவறான புரிதல்களைக் கொண்டிருந்தார். அவருக்குக் கீழ்ப்படிவதை விளக்கி, பாபா கூறினார், **“கோதாவரி மாய்க்குக் கீழ்ப்படியுங்கள். நீங்கள் எனது அறிவுரைகளுக்கும் கீழ்ப்படிய வேண்டும், ஆனால் அவை கோதாவரி மாயின் கட்டளைகளுக்கு முரணாக இல்லாவிடில் மட்டுமே.”** பரூச்சா, பாபாவின் ஆலோசனையைப் பின்பற்றினார், ஆனால் படிப்படியாக பாபாவின் அன்பு அவரை முழுவதுமாக பாபாவின் அரவணைப்பில் கொண்டுவந்தது.

1957இல் ஹோஷங் பலமுறை மெஹராஸாத்திற்கு அழைக்கப்பட்டார். ஒரு முறை பாபா அவரிடம் கூறினார்: **“நீங்கள் என்னை நேரடியாக நினைவுகூரலாம் அல்லது வேறு எந்த குருநாதரை - அல்லது நீங்கள்**

**காதலிக்கும் ஒரு பெண்ணை கூட நினைக்கலாம் - எதுவானாலும், நான் எல்லோரிடமும் இருப்பதால் நீங்கள் என்னைப் பற்றி மட்டுமே நினைக்கிறீர்கள் என்று பொருள்படும். ஆனால் இந்த வழியில் நீங்கள் நினைப்பது என்னை மறைமுகமாக வந்தடைகிறது.**"

ஒருமுறை மெஹராஸாத்தில், பரூச்சா காலணிகளுடன் பாபாவின் அறைக்குள் நுழைந்தார். வழக்கமான அரவணைப்புக்குப் பின்னர் அவர், மண்டலி அனைவரின் காலணிகள் அறைக்கு வெளியே இருந்ததைக் கண்டு, அவரும் தனது காலணிகளைக் வெளியே விடவேண்டுமா என்று கேட்டதற்கு பாபா பதிலளித்தார், "**நான் அதிலும்** (காலணியில்) **இருக்கிறேன்**" என்றார்; பரூச்சா பின்பு தனது காலணிகளுடன் அமர்ந்தார்.

ஒவ்வொரு முறை ஹோஷங் வரும்போதும், பாபா, தாம் செய்து கொண்டிருந்ததை நிறுத்திவிட்டு, ஏதாவது ஆன்மீக விஷயங்களில் சொற்பொழிவு வழங்குவது வழக்கம். ஒருமுறை ஹோஷங் மனதில் ஒரு குறிப்பிட்ட கேள்வியுடன் அங்கு வந்தார். அவர் மெஹராஸாத் வந்தடைந்ததும், பாபா கூறினார், "**நீங்கள் இங்கு வரும் ஒவ்வொரு முறையும், நான் உங்களிடம் ஒன்றைச் சொல்கிறேன், ஆனால் இன்று நீங்கள் என்னிடம் ஒரு கேள்வி கேட்கலாம்.**" இது, பாபா சர்வ ஞானம் படைத்தவர் என்பதை அவருக்கு உணரவைத்தது.

ஒரு முறை மெஹராஸாத்திலிருந்து புறப்படும் வேளையில், பாபாவைப் பார்க்க அழைத்தமைக்கு ஹோஷங் நன்றி தெரிவித்தார். "**உங்களுக்காக நான் செய்யும் அனைத்திற்கும் நீங்கள் எனக்கு நன்றி சொல்ல ஆரம்பித்தால், 24 மணி நேரமும் 'நன்றி, நன்றி' என்று சொல்வதைத் தவிர வேறெதையும் செய்ய மாட்டீர்கள்; மாறாக, என்னை நேசித்து என்னை நினைவில் கொள்ளுங்கள்**" என்று பாபா கூறினார்.

புக்காரின் வருகையின் போது, பாபா, ஏற்கனவே நல்ல உடல் ஆரோக்கியத்துடன் இருந்த அவரை, நன்றாக உண்ணுமாறு தொடர்ந்து ஊக்குவித்தார். ஜூன் 9 அன்று, பிந்த்ரா ஹவுஸிலிருந்து பூரிகள், மாம்பழ ரசம் மற்றும் பிற உணவு வகைககள் அனுப்பப்பட்டன. அன்று மாலை இரவு உணவின் போது, பைதூல், அலோபா, ஸவக் ஆகியோரின் நகைச்சுவையான வற்புறுத்தலுக்கு அடிபணிந்து, புக்கார் அளவுக்கு அதிகமாக உண்டார். அவரது அதிகப்படியான உணவால், புக்காருக்கு அஜீரணம் ஏற்பட்டு, இரவு முழுவதும் அசௌகரியமாக உணர்ந்தார். மறுநாள் வழக்கம் போல, பாபா அனைவரிடமும் '**எப்படித் தூங்கினார்கள்**' என்று விசாரித்தபோது, "பைதூல், அலோபா, ஸவக் மூவரும் என்னை இன்னும் அதிகமாக சாப்பிட வற்புறுத்தியதால், என்னால் தூங்கவே முடியவில்லை, எனது வயிறு முற்றிலும் நிலைகுலைந்தது" என்று புக்கார் கூறினார்.

அன்றைய தினம் மெஹராஸாத்திற்கு, பேருந்தில் திரும்புவதற்கு முன்பு, தேவையான பொருட்களை மூட்டை கட்டுவதில் மண்டலி மும்முரமாக

இருந்தனர்; ஆனால் ஸவக், அலோபா (பைதூல் முன்னதாகச் சென்றுவிட்டதால்) இருவரும், புக்காரை கேலியும் கிண்டலும் செய்ததற்காக பாபா திட்டினார். அதற்குத் தண்டனையாக, பூனாவை விட்டு வெளியேறும்போது, "**பேருந்து நிலையம் வரை நடந்து செல்லுங்கள்**, **அதனால் புக்காரின் இரவு உணவு ஜீரணமாகும்**!" என்று அவர் அலோபாவிற்கு உத்தரவிட்டார்.

# மெஹராஸாத் & பூனா

**(Meherazad & Poona)**

1957 ஜூன் 10 திங்கட்கிழமை அதிகாலை, பாபா பூனாவிலிருந்து மெஹராஸாத்திற்கு, பெண் மண்டலியுடன் புறப்பட்டார். டாக்டர் தனபதி, எரச், ஸவக், குஸ்தாஜி, ஆகியோரை ஆதி சீனியர் அழைத்து வந்தார். தேஷ்முக் (நாக்பூருக்குத் திரும்பிச் செல்ல இருந்தவர்), குமார், புக்கார் உட்பட இதர ஆண் மண்டலி பேருந்தில் பயணம் செய்தனர். இரண்டு நாட்களில் மெஹராபாத்தில் அரன்காவ்ம் பக்தர்களின் பஜனை நிகழ்ச்சி நடைபெறவிருந்ததால், அஹமதுநகர் வந்த குடும்ப சாஸ்திரி, தனபதியுடன் குஷ்ரு குவார்டர்ஸில் தங்கினார். மெஹராஸாத்தில், பாபா மாடியில் அமைந்த படுக்கையறையைப் பயன்படுத்தத் தொடங்கினார்.

குழந்தைக் கடவுளாகக் (CHILD-GOD) கருதப்படும், பதினேழு வயதான 'பாலக் பகவான்' (BALAK BHAGWAN) என்ற இளம் இந்து சிறுவனுக்கு, ராய்ப்பூரில் பல பக்தர்கள் இருந்தனர். மெஹர் பாபாவை தரிசனம் செய்யுமாறு அப்துல் மஜித் கான், பாலக் பகவானை வற்புறுத்தி, இறுதியில் அவர், பாபாவைப் பார்க்க ராய்ப்பூரிலிருந்து அனுப்பி வைத்தார். ஜூன் 12ஆம் தேதி காலை தரிசனத்திற்கு சற்று முன்னர், இளைஞன் மெஹராஸாத்திற்கு வந்தான். ஸரோஷின் காரில் அவனையும் மண்டலியையும் அழைத்துக் கொண்டு, பாபா மெஹராபாத்திற்குப் புறப்பட்டுச் செல்லும் வழியில், பாலக் பகவான் மாயாஜால சக்திகளைப் பயன்படுத்தி, சூரியனை சுட்டிக்காட்டிக்கொண்டே "அது அஸ்தமனமாகலாம், மேலும், நாம் வெப்பத்தை உணராமல் இருப்போம்" என்று விளக்கிக் கொண்டிருந்தான். காலநிலையில் வெப்பம் தணியவில்லை என்றாலும், பாபா இளைஞனின் கோமாளித்தனங்களை ரசித்தார்.

ரமா, ஷீலா, மெஹர்நாத் கல்சூரி மூவரும் மே 21 அன்று, குடும்ப குவாட்டர்ஸுக்கு குடிபெயர்ந்தனர். பாபாவின் அறிவுறுத்தலின்படி நாக்பூரிலிருந்து அவர்களை அழைத்து வந்த ரமாவின் சகோதரர் தீரஜும் சில நாட்கள் தங்கியிருந்தார். பாபா அவர்களைப் பார்க்கச் சென்ற வேளையில், அங்கு முழுக் குடும்பத்தையும் அழைத்த அவரது இரக்கத்தன்மைக்கு ரமா மிகவும் நன்றியுள்ளவராக இருந்ததால், கண்கலங்கி அழுதார். அவரைத் தழுவிய பாபா, **"உங்களை என் அருகில் இருக்கும்படி அழைத்ததில் நீங்கள் எவ்வளவு அதிர்ஷ்டசாலி. எதைப் பற்றியும் கவலைப்படாதீர்கள், நான் உங்களுடன் இருக்கிறேன்"** என்று உறுதியளித்தார். பாவ் கல்சூரியைச் சுட்டிக்காட்டி, மெஹர்நாத்திடம், "**அவர் யார்?**" என வினவினார் பாபா. மெஹர்நாத் தனது தந்தையைப் பார்த்ததில்லை; ஒரு வார்த்தையும் பேசாமல் இருந்த அவனது எதிர்வினை பாபாவை மனமார சிரிக்க வைத்தது.

பாபா, மெஹராபாத் மண்டபத்திற்குச் சென்று, அங்கு அவர் அரன்காவ்ம் கிராமவாசிகளுக்கு தரிசனம் வழங்கி, பூனா குழுக்களுக்கு அவர் அளித்த எச்சரிக்கையை மீண்டும் எடுத்துரைத்தார். அப்போது, அங்கிருந்த ஆந்திராவைச் சேர்ந்த தனபதி, குடும்ப சாஸ்திரி இருவரிடமும், பாபா, "**இவர்களைப் பாருங்கள், ஏழைகளாக இருந்தாலும் என் மீது அளப்பரிய அன்பு கொண்டுள்ளனர்**" என்று குறிப்பிட்டார்.

பெண்டு, இன்னமும் நடக்க முடியாமல் படுத்த படுக்கையாகவே இருந்தார். ஊன்றுகோலின் உதவியுடன் பெண்டு நடக்க முயற்சிக்க, பாபா, டாக்டர் டானை மெஹராபாத்திற்கு அனுப்பி வைத்தார். மே மாதத்திலிருந்து, பாபா ஊன்றுகோல் பயன்படுத்துவதை நிறுத்திவிட்டு, ஆண் மண்டலி இருவரின் கரங்களில் தன்னைத் தாங்கிக்கொண்டு நடக்க முடிந்தது. பாபா, பெண்டுவிடம், வரவிருக்கும் சகவாச நிகழ்ச்சிகளைப் பற்றி விளக்கினார், அதற்கான தேதிகளை உறுதி செய்து, பின்பு மெஹராஸாத் திரும்பிச் சென்றார்.

பாலக் பகவானும் அவர்களுடன் திரும்பிச் சென்றான்; ஆனால் அவன், பாபா, எரச், பாவ் கல்சூரி ஆகியோரை தங்கள் பணிகளில் கவனம் செலுத்த அனுமதிக்கவில்லை. குறும்புக்கார சிறுவன், பாபா தனது நாற்காலியில் அமர்ந்திருந்த வேளையில், பாபாவின் கால்களின் இருபுறமும் நகர்ந்து, விளையாடிக் கொண்டிருந்தான். பாபாவும் மண்டலியும் அவனது தந்திர விளையாட்டுகளின் வேடிக்கையை பார்த்து ரசித்தனர். அவன் தைரியமாக பாபாவிடம், "எனக்கு மாலை அணிவிக்கப்படாத நாளில், நான் நன்றாக உணர்வதில்லை!" என்றான்.

பாபா அவனது அப்பாவித்தனத்தைக் கண்டு புன்னகைத்து, ஆனால், "**பிறரிடமிருந்து வழிபாடு அல்லது ஆரத்தியை ஏற்றுக்கொள்வது நல்லதல்ல. அது உங்களை துர்நாற்றம் வீசும் பாதாளத்தில் தள்ளும்!**" என்றார்.

சிறுவன் உடனே, "ஆனால் நான் வணங்கப்படுவதில் மகிழ்ச்சி அடைகிறேன்! மக்கள் என்னை வணங்கி, எனக்கு ஆரத்தியை நிகழ்த்த வேண்டும் என்று நான் விரும்புகிறேன்!" என்று பதிலளித்ததைக் கேட்டு பாபா சிரித்தார்.

பாலக் பகவான் மெஹராஸாத்தில் இரவைக் கழித்து, மறுநாள் காலையில், பாபா, மண்டலி மண்டபத்திற்கு வந்தபோது, அந்த இளைஞன், "நேற்று இரவு கண்காணிப்புப் பணியில் இருந்தபோது, பாவ் தூங்கினார்! அவர் தூங்கியதை நான் என் அறையிலிருந்து பார்த்தேன்" என்று கூறினான். பாபா மகிழ்ச்சியடைந்து, அவருக்கு பாலக் மெஹர் (மெஹரின் குழந்தை) என்று பெயரிட்டார். பாபா அந்த இளைஞனைத் தழுவி, பின்பு ராய்ப்பூருக்குத் திரும்புமாறு அறிவுறுத்தினார். அவனும் அன்றே புறப்பட்டுச் சென்றான்.

ஒரு வாரத்திற்கு பிறகு, சாதர்பூரில் (CHHATARPUR) வாழ்ந்த ஆறாவது ஆன்மீகத் தள மஸ்த் ஷரிர் பாபா (SHARIR BAAB, முந்தைய ஆண்டு பாபா தொடர்புகொண்டார்), அமராவதியின் கோவர்தன் மஹாராஜ் (GOVARDHAN MAHARAJ) அல்லது வேறு உண்மையான மேல்நிலை மஸ்த் எவரையேனும் தொடர்பு

கொண்டு, அழைத்து வரும் நோக்கத்தில் புக்கார் அனுப்பப்பட்டார். பாலக் பகவானைப் போன்ற வேறு ஒரு சிறுவனையும் கண்டுபிடிக்குமாறு பாபா அவரிடம் கேட்டுக்கொண்டார். எவ்வளவோ முயற்சித்தும், புக்காரால் ஷரிர் பாபாவை ('நான் இங்கிருந்து பாபாவைப் பார்க்கிறேன்; நான் ஏன் உங்களுடன் அங்குச் செல்ல வேண்டும்?" என வினவினார்) அல்லது வேறு எந்த மஸ்தையும் பாபாவிடம் அழைத்து வர இயலவில்லை. அவர் பாபாவிற்குக் கீழ்ப்படியவில்லை என்ற மிகுந்த மனவருத்தத்துடன் மெஹராஸாத்திற்குத் தனியாகத் திரும்பி வந்தார். ஆனால் பாபா, அவர் மீது அதிருப்தி அடையவில்லை, மாறாக, அவரை பிறருக்கு முன்னுதாரணமாகக் காட்டினார்.

1957 ஜூன் 14ஆம் தேதி பாதிரி, விஷ்ணு, ரமா, மெஹர்நாத், ஷீலா, தீரஜ் ஆகியோரை ஆதி மெஹராஸாத்திற்கு அழைத்து வந்தார். ரமாவிற்கு மாதாந்திர பராமரிப்பு உதவித்தொகையாக ரூ.200 வழங்க முடிவு செய்யப்பட்டது.

ரமா, ஷீலா, மெஹர்நாத் மூவரையும் அவ்வப்போது மெஹராஸாத்திற்கு அழைத்து, பாபாவை சந்தித்து அவருடன் மதிய உணவு உண்ட பின்பு, குடும்பத்தை மெஹராபாத்திற்கு திருப்பி அனுப்புவது வழக்கம். பாபா மெஹராபாத் செல்லும் போதெல்லாம், அவர்களை சந்தித்து, அவருடன் நெருக்கமாக இருக்கச் செய்தார்.

ஐரீன் கோனிபியர் மற்றும் ஃபிரான்சிஸ் கோல்ட்னி இருவரும் 14ஆம் தேதி மஹாபலேஷ்வரிலிருந்து மெஹராஸாத் திரும்பி வந்தனர். ஐரீன் 'இன் குவெஸ்ட் ஆஃப் ட்ரூத்' (IN QUEST OF TRUTH) என்ற புத்தகத்தை எழுதிக் கொண்டிருந்த வேளையில், கோல்ட்னி, கையெழுத்துப் பிரதியை தட்டச்சு செய்து, பாபாவைப் பற்றிய கட்டுரைகளை எழுதிக் கொண்டிருந்தார். மூன்று நாட்களுக்குப் பிறகு, கோல்ட்னியின் மனைவி ஒல்லா, கப்பலில் மும்பை வந்தடைந்தார். (ஸூயஸ் கால்வாய் நெருக்கடிக்குப் - SUEZ CRISIS - பின்னர் இந்தியா வந்த முதல் கப்பல் இதுவாகும்.) கோல்ட்னி, மனைவியை மும்பையில் சந்தித்து, இருவரும் 25ஆம் தேதி மெஹராஸாத் திரும்பி வந்தனர். அடுத்த 40 நாட்களுக்கு, மூவரும் மண்டலியுடன் மெஹராஸாத்தில் தங்கி இருந்த வேளையில், இந்திய உணவு ஒல்லாவிற்கு ஒத்து வராததால், அவர் வயிற்றுக்கோளாறால் அவதியுற நேர்ந்தது. கோஹெரின் மருத்துவ சிகிச்சையின் கீழ், அவர் குணமடைந்தார்.

1957 ஜூன் 15ஆம் தேதி நண்பகலில், நோரினா மேட்சபெல்லி (NORINA MATCHABELLI) தனது 77ஆவது வயதில், மர்ட்டில் பீச்சில் அமைந்த 'யூப்பான் டூன்ஸ்' (YOUPON DUNES) இல்லத்தில், நீண்டகால இருதயப் பிரச்சினைக்குப் பிறகு காலமானார். நோரினாவின் அன்பு, சேவை மற்றும் பற்றற்ற தன்மையை விவரிக்க முடியாது. அவர் முழுவதுமாக பாபாவிற்குரியவராக இருந்து, அவரில் ஐக்கியமானார். காலம் தனது ஆழ்ந்த வணக்கங்களை அவருக்கு வழங்கியது - மேலும், இந்த யுகத்தின் இறை மனிதன், 17ஆம் தேதி எலிஸபெத், கிட்டி

இருவருக்கும் கீழ்வரும் தொலைத்தந்தியை அனுப்பினார்: **“என் அன்பான நோரினா, என்னுடன், நித்தியமாக வாழ வந்ததில் மகிழ்ச்சியாக இருங்கள்.”** அவருடைய உடல் தகனம் செய்யப்பட்டு, பாபாவின் விருப்பத்திற்கிணங்க, அஸ்தி இந்தியாவிற்குக் கொண்டுவரப்பட்டு, மெஹராபாத் மேல்மலையில் அடக்கம் செய்யப்பட்டது. அவரது கல்லறையில் இவ்வாறு பொறிக்கப்பட்டது: **“இளவரசி நோரினா, பாபாவுடையவராக இருக்கிறார்; என்றென்றும் இருப்பார்.”**

உயிரைத் துறப்பதற்கு முன்பு, நோரினா எலிஸபெத்திடம், “எனக்காக வருந்தாதீர்கள்; என்னை விட்டுவிடுங்கள்” என்று கூறியிருந்தார். அதனால், அவர் இறந்த மறுநாள் மாலை, எலிஸபெத், கிட்டி இருவரும் உள்ளூர் தியேட்டருக்கு நாடகம் பார்க்கச் சென்றனர். நுழைவாயிலில் தியேட்டரின் உரிமையாளரும் மேலாளருமான ஜேன் பேரி ஹெய்ன்ஸ் (JANE BARRY HAYNES) அவர்களை அன்புடன் வரவேற்றார். இந்தப் புதிய ‘பறவை’யைப் பற்றி பின்பு காண்போம்.

ஜால்பாய் ஜூன் 15 முதல் ஐந்து நாட்கள் மெஹராஸாத்தில் தங்கியிருந்த வேளையில், பாபா அவரையும், எரச், புக்கார் மற்றும் குமாரையும் அஹமதுநகருக்கு அழைத்துச் சென்றார். பாதையில், பாபா சாலையில் நடந்து சென்று கொண்டிருந்த ஒரு மஸ்தைக் காட்டினார். கார் நகரத்தின் வழியாகச் சென்றபோது, பாபா, கொண்டிமாமா (KHONDIMAMA) என்று அழைக்கப்பட்ட ஒரு பிரபலமான உள்ளூர் மஸ்தையும், ஒரு மஸ்தானியையும் கண்டுகொள்ள நேர்ந்தது. மறுநாள், பாபா மீண்டும் காரில் நகரத்திற்குச் சென்றார், ஆனால் மஸ்துகள் ஒருவரும் தென்படவில்லை. அவர்கள் மெஹராஸாத் திரும்பி வருகையில், ஒரு மதகு பாலத்தில் அமர்ந்திருந்த மஸ்த் ஒருவரை காண நேர்ந்தது. பாபா ஓட்டுநரை அவர் அருகில் நிறுத்தக் கூறி, எரச்சிடம் மஸ்தை அணுகி, பாபா காரில் அமர்ந்திருப்பதாகவும், மஸ்த் பாபாவின் தரிசனத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் கூறச் சொன்னார்.

இதைக் கேட்ட மஸ்த், “என்ன அவசரம்?” என்று பதிலளித்ததும், பாபா, எரச்சிடம் மீண்டும் அதைக் கூறச் சொல்ல, புக்காரும் அவரை இணங்க வைக்க கீழே இறங்கினார். இம்முறை மஸ்த் கார் அருகே வந்து பாபாவின் பாதங்களை வணங்கினார். பாபா அவரை முன் இருக்கையில் அமரும்படி சைகை காட்ட, அவர்கள் மீண்டும் மெஹராஸாத்தை நோக்கிச் சென்றனர். வழியில், மஸ்த் தனது பாக்கெட்டிலிருந்து சில பெர்ரி பழங்களை எடுத்து பாபாவிற்கு வழங்கினார். பாபா பழங்களைப் புக்காரிடம் ஒப்படைத்து, காக்கா அவற்றை மண்டலியிடையே விநியோகிக்குமாறு கூறச் சொன்னார். இது மேலும் இரண்டு முறை நடந்தது; மூன்றாவது முறை, பாபா காரில் இருந்தவர்களிடம் இரண்டு பழங்களை உண்ணுமாறு கேட்டுக்கொண்டார், பாபாவும் இரண்டு பழங்களை உண்டார்.

காரில், பாபா மஸ்திடம், **“உங்கள் குழந்தைகள் நலமாக இருக்கிறார்களா? …உங்கள் மகளுக்கு என்ன வயதாகிறது? …அவளுக்கு**

**திருமணமாகிவிட்டதா இல்லையா?"** போன்ற பல கேள்விகளுக்கு மஸ்த் பதிலளித்தார். மெஹராஸாத்தில், பாபா, பதினொரு முறை மஸ்தின் பாதங்களில் வணங்கினார். பாபா அவருக்கு உணவளித்தார், பின்னர் அவரை காரில் அஹமதுநகருக்கு அழைத்துச் செல்லும்படி பைதூலுக்கு அறிவுறுத்தினார்.

அவர் வெளியேறிய பிறகு, பாபா, "இந்த மஸ்த் மிகவும் புத்திசாலி" என்று கூறினார்.

1957 ஜூன் 21 அன்று, ராம்ஜூ சில வாரங்கள் தங்குவதற்காக மெஹராஸாத்திற்கு வந்தார். அவர் அங்கு இருந்த வேளையில், டான் ஸ்டீவன்ஸ், ஐவி டியூஸ் ஆகியோருக்கு, பதிப்புரிமை தொடர்பான கடிதங்களை எழுதினார். 23ஆம் தேதி, பாபாவை தரிசனம் செய்வதற்காக, பெண்டு காரில் மெஹராஸாத்திற்கு அழைத்து வரப்பட்டார். டாக்டர் கேட்கர் அடுத்த நாள் விஜயம் செய்தபோது, அவர் பாபாவின் தொடர்ச்சியான வலியைப் போக்குவது பற்றி கோஹெரிடம் ஆலோசனை செய்து, பாபா நடப்பதை கவனித்தார்.

1957 ஜூன் 30 ஞாயிற்றுக்கிழமை அன்று, பூனாவைச் சேர்ந்த அன்பர்கள் குழு ஒன்று காலை 8:00 மணிக்கு மெஹராஸாத்தில் பாபாவிற்கு முன்பாக பஜனை நிகழ்ச்சி நடத்த திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் வழியில், அவர்களின் பெரிய வாடகை ஸ்டேஷன் வேகன் பலமுறை கொட்டும் மழையில் பழுதடைந்தது. எனவே, காலை 8:00 மணிக்கு, அவர்கள் சாலையோரம் அமர்ந்து, பாபாவிற்காக அங்கேயே பஜனை பாடினர்!

அன்று மதியம் 2:00 மணிக்கு பாபா மெஹராபாத் சென்று, அங்கு அவர் தரிசனம் வழங்கினார். பூனா குழுவினர் வந்ததும், பாபா அவர்களுக்கு மதிய உணவு வழங்கினார். முந்தைய வருடம் பாபாவை சந்தித்த பீட்ரைஸ் வீகோ (BEATRICE VIGO) மீண்டும் அவரை சந்திக்க வந்தார்; ஜி.எஸ்.என். மூர்த்தியும் அவரது மனைவியும் அன்று பாபாவின் தரிசனத்திற்காக வந்திருந்தனர். அரன்காவ்ம் டி.பி. ஸானிடோரியத்தில் (T.B. SANITARIUM) பணிபுரிந்த செவிலியர் கம்லாபாய் புஸல்கர் (KAMLABAI PUSALKAR), பாபாவின் மீது அதீத பக்தி கொண்டிருந்தார், அங்குள்ள நோயாளிகளுக்கு தரிசனம் வழங்குமாறு வேண்டுகோள் விடுத்ததை, அவர் அன்புடன் ஏற்றுக்கொண்டார்.

ஒல்லா கோல்ட்னி தனது கணவரைப் போல அந்த அளவுக்கு பாபாவால் ஈர்க்கப்படவில்லை; ஆனால், பாபா அரன்காவ்ம் ஏழைகளையும், மருத்துவமனையில் நோயாளிகளையும் அன்புடன் அரவணைத்து, முத்தமிடுவதைக் கண்டபோது, "எங்கள் தந்தை கிறிஸ்து, அதையே செய்தார்" என்று கருத்துரைத்தார்.

பாபா அவர் கூறியதைக் கேட்டு, **"நான்தான் அந்தத் தந்தை கிறிஸ்து"** என்று கூறினார்.

மாலை 5:00 மணிக்கு, பாபா மெஹராஸாத் திரும்பிச் சென்றார். அங்கு பூனா பஜனை குழுவினர் மண்டலி மண்டபத்தில் இரவு 7:30 மணி வரை இசை நிகழ்ச்சியைத் தொடர்ந்து, பின்பு பூனாவிற்குப் புறப்பட்டுச் சென்றனர். பெண்

மண்டலி மண்டபத்தை ஒட்டிய வராந்தாவில் அமர்ந்து இசை நிகழ்ச்சியைக் கேட்க அனுமதிக்கப்பட்டனர்.

பாபாவின் இடுப்புப் பாகத்தில் இருந்த வலி இன்னும் அவரைத் துன்புறுத்தியது, குறிப்பாக ஜூலை 5 அன்று, வலி மிகவும் மோசமாக இருந்தது. ஆயினும்கூட, அவரது செயல்பாடுகளில் எந்தக் குறைவும் இல்லை! அவரது வாழ்க்கையில் இத்தகைய நெருக்கடி காலங்களில், பாபாவின் செயல்பாடுகள் பொதுவாக மிகவும் தீவிரமடைந்தன, மேலும் அவருக்கு ஓய்வெடுக்க நேரமில்லை.

பாபாவின் விருப்பத்திற்கு இணங்க, மெஹராஸாத் உட்பட, கிழக்கு மற்றும் மேற்கத்திய நாடுகளில் வாழும் அவரது அன்பர்கள் அனைவரும் 1957 ஜூலை 9ஆம் தேதி நள்ளிரவு முதல் ஜூலை 10 நள்ளிரவு வரை, பாபாவின் 32ஆவது ஆண்டு மௌன நாளன்று, மௌனம் கடைப்பிடித்தனர். அன்றைய தினம், தேவையான அளவு தண்ணீர் அருந்தி, முழு உபவாசம் மேற்கொள்ளவும், ஒரு முறை தேநீர் அல்லது காஃபி எடுத்துக் கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டது.

ஜூலை 11ஆம் தேதி காலை வரை மௌனம் காத்த குல்மாயை, ஆதி மெஹராஸாத்திற்கு அழைத்துச் சென்ற போது, அவர் பாபாவின் முன்னிலையில் மௌனத்தையும், உபவாசத்தையும் கைவிட்டார். பின்னர் அவருக்கு 40 நாட்கள் சிறப்பு உணவுக் குறிப்புகள் வழங்கப்பட்டன, அதில் அவர் பாபாவின் லாக்கெட்டை குடிநீரில் நனைத்து, பின்னர் அதை அருந்துவதும் உள்ளடங்கியது.

ஜூலை 15 திங்கட்கிழமை, எரச்சின் தாயார் கெய்மாய், அவரது சகோதரி பானுமாஸியுடன் பாபாவைப் பார்க்க பூனாவிலிருந்து வந்து, பிற்பகல் 3.30 மணிக்கு அவரை சந்தித்தனர்; எரச், ஆதி இருவரும் உடனிருந்தனர்; உரையாடலின் போது, பாபா இவ்வாறு குறிப்பிட்டார்:

**இயேசுவிற்கு துரோகம் செய்த ஒரு யூதாஸ் இருந்தார். முந்தைய அனைத்து அவதார புருஷர்களின் வாழ்க்கையிலும், ஒரு யூதாஸ் இருந்தார். இது இப்படியே விதிக்கப்பட்டுள்ளது.**

**கடவுள் (மெஹர்) பாபாவாக, அவதார புருஷராக, காலச்சுழற்சியின் முடிவான, மிக முக்கியமான இந்த நேரத்தில் அவதரித்துள்ளார்; மேலும் அந்த சுழற்சியின் கடைசி அவதார புருஷராக, பாபாவிற்கு பன்னிரண்டு யூதாஸுக்கள் இருப்பார்கள். முதன்மையாக, ஒரு யூதாஸ் பார்சி இனத்தவராகவும், இதர பதினொன்று பேர் துரோகச் செயலில் ஈடுபடும் அவரது சகாக்களாகவும் இருப்பார்கள். பதினொரு யூதாஸுகளில் பார்சிகளும், பிற இனத்தைச் சார்ந்தவர்களும் இருப்பார்கள், அவர்களில் இரண்டு பார்சி பெண்களும் அடங்குவர்.**

கெய்மாய், பானுமாஸி இருவரும் அன்றே பூனாவிற்குத் திரும்பிச் சென்றனர்.



மெஹராபாத் (MEHERABAD), **30 ஜூன்** (JUNE) **1957**
திகம்பர் காடேக்கர் (கண்ணாடி அணிந்த வண்ணம் இடது புறம்),
ஃபிரான்சிஸ் & ஒல்லா கோல்ட்னி, பீட்ரைஸ் வீகோ, ஐரீன் கோனிபியர்
(DIGAMBAR GADEKAR – LEFT SIDE WITH GLASSES, FRANCIS & OLLA GOLDNEY, BEATRICE VIGO, IRENE CONYBEARE)

1957 ஜூலை மாதத்தில், ஐரீன் கோனிபியரின் பல கேள்விகளுக்கு பாபா பதிலளித்தார்; மேலும் அவரது 'இன் க்வெஸ்ட் ஆஃப் ட்ரூத்' (IN QUEST OF TRUTH) என்ற புத்தகத்திற்கு மூன்று சொற்பொழிவுகளை வழங்கினார்: ஒன்று 'மாயா' (MAYA), மற்றொன்று 'கருணை' (COMPASSION) மற்றும் மூன்றாவது 'தி ஆரா அண்ட் தி ஹேலோ' (THE AURA AND THE HALO) - ஒருவரின் தலை அல்லது உடலைச் சுற்றியிருக்கும் 'ஒளிவட்டம்' (AURA) மற்றும் 'முழு ஒளிவட்டம்' (HALO) இரண்டிற்கும் இடையேயான வித்தியாசத்தை விளக்கும் பாபாவின் சொற்பொழிவின் ஒரு பகுதி பின்வருமாறு:

**ஒளிவட்டங்கள் இரண்டும் வெவ்வேறு விஷயங்கள், மேலும் மக்கள் இரண்டையும் வேறுபடுத்திப் பார்க்க முடியாது. அந்தந்த நிழல்களைப் போலவே, ஒவ்வோர் ஆணும், பெண்ணும், குழந்தையும் ஓர் ஒளியைக் கொண்டுள்ளனர், ஆனால் மிகச் சில நபர்கள் மட்டுமே, அதன் வளர்ச்சியின் பல்வேறு கட்டங்களில் ஒளிவட்டத்தைக்** (AURA) **கொண்டுள்ளனர், இன்னும் சிலரே முழு ஒளிவட்டத்தைக்** (HALO) **கொண்டுள்ளனர். ஒளி என்பது எந்தவொரு பௌதீக விஷயமும் பௌதீகத் தளத்தில் அதன் நிழலைக் கொண்டிருப்பது போல், ஒரு தனிப்பட்ட மனதின் உள் உணர்ச்சிகளின் பிரதிபலிப்பாகும். ஒளிவட்டம் மறையத் தொடங்கும் போது, முழு ஒளிவட்டம் தோன்றத் தொடங்குகிறது.**

**'ஒளிவட்டம்' என்பது ஒரு தனிப்பட்ட மனதில் சேகரிக்கப்பட்ட, சேமிக்கப்பட்ட எண்ணங்கள் மற்றும் செயல்களின் மொத்த மனப்படிவங்களின் பிரதிபலிப்பாகும். ஒவ்வொரு தனி ஒளிவட்டமும், ஏழு வண்ணங்களாலான வட்டத்தின் உருவமாகும்; மேலும் ஒவ்வோர் ஒளிவட்டமும், தனிநபரின் முக்கிய மனப்படிவங்களுக்கு ஏற்ப, ஏழு வண்ணங்களில் ஒவ்வொன்றும் மற்றொன்றிலிருந்து, அதன் அளவின் விகிதத்தில் வேறுபடுகிறது.**

**ஓர் ஒளிவட்டம் மங்கலாகி, மறையத் தொடங்கி, 'முழு ஒளிவட்டம்' உருவாகத் தொடங்கும்போது தான், ஒரு நபர் இறை-உணர்தலுக்கான ஆன்மீகப் பாதையில் முன்னேறத் தொடங்குகிறார் என்று அர்த்தம். ஒளிவட்டம் படிப்படியாக மங்கலாகத் தொடங்கும் போது, முழு ஒளிவட்டம் மேலும் மேலும் பிரகாசிக்கத் தொடங்கி, ஆன்மீகப் பாதையில் தனிநபரின் உணர்வுநிலையில் ஏற்படும் முன்னேற்றத்தின் விகிதத்தில் பிரகாசமாகிறது.**

குமாரும், புக்காரும் ஒரு கட்டத்தில் தங்கள் இல்லங்களுக்குத் திரும்பிச் சென்றனர். இதற்கிடையில், பாபா, மும்பையிலிருந்து ஜிம் மிஸ்திரியை மெஹராஸாத்தில் ஒரு மாதம் தங்குவதற்காக அழைத்தது, பாபாவுடனான நெருங்கிய தொடர்புக்கு வழிவகுக்கும் வாய்ப்பாக அமைந்தது. வேடிக்கையான கதைகளை எடுத்துரைப்பதன் மூலம், ஜிம், பாபாவை மகிழ்வித்தார்; மேலும், பாபாவும் அவருடன் விளையாட்டுத்தனமாகக் கேலி செய்து வந்தார். ஒரு நாள் மாலை, அன்பர்களிடையே பாம்புகள் மற்றும் ஆவிகள் - SPIRITS (GHOSTS, பேய்கள்)

பற்றிய பல விஷயங்கள் உரையாடலில் இடம்பெற்றன. அனைவரும் படுக்கைக்குச் சென்றனர், ஆனால் ஜிம்மின் அறையில் இருந்த விளக்கில் மண்ணெண்ணெய் இல்லாததால், அவர் முழு இருளில் தூங்க முடியாமல் விழித்திருக்க வேண்டியதாயிற்று. மறுநாள் பாபா, நன்றாகத் தூங்கினார்களா என்று கேட்டபோது, ஜிம் 'ஆமாம்' என்று கூறினாலும், அவரது பதில் மிகவும் நம்பிக்கைக்குரியதாக இல்லை. பின்னர், உண்மை வெளிவந்தது, ஜிம்மின் அறையிலிருந்த விளக்கில் மண்ணெண்ணெய் நிரம்பியிருப்பதை உறுதி செய்யாததால், காக்காவை பாபா கடிந்துகொண்டார்.

"என்னால் தூங்க முடியாமல் போனதற்கு இன்னுமொரு காரணமும் உள்ளது பாபா," என்றார் ஜிம். "நான் படுக்கைக்குச் செல்வதற்கு முன்பு, நாங்கள் பாம்புகள் மற்றும் ஆவிகளைப் பற்றி பேசிக்கொண்டிருந்தோம், அதனால் எனது மனம் கலக்கமடைந்து, என்னால் தூங்க முடியவில்லை."

பாபா, "**தூங்குவதற்கு முன்னர், எனது பெயரை 51 முறை மொழியுங்கள்**" என்று அறிவுறுத்தினார்.

ஜூலை மாதத்தில் நிகழவிருக்கும் சகவாச சபையைப் பற்றி விவாதிக்கப்பட்டது; மேலும் பெண்டு, பாபாவின் 'அம்புகளுக்கு' இலக்கானார். பெண்டு இன்னமும் உதவியற்ற நிலையில் ஊன்றுகோல் இல்லாமல் நடக்க முடியவில்லை என்றாலும், சகவாச நிகழ்ச்சிகளுக்குச் செய்ய வேண்டிய அனைத்து ஏற்பாடுகளிலும் முழு கவனம் செலுத்தாத பெண்டுவை, பாபா அடிக்கடி கடுமையாக விமர்சித்தார்.

ஒரு நாள் பெண்டு, பாதிரி, விஷ்ணு, டாக்டர் டான் ஆகியோரை, சகவாச நிகழ்ச்சி குறித்து விவாதிக்க, பாபா, மெஹராஸாத்திற்கு அழைத்தார். அன்று பாபா, தீவிரமான மனநிலையில் காணப்பட்டார். பெண்டு தடுமாறிக்கொண்டே மண்டபத்திற்குள் நுழைந்து, நாற்காலியில் அமர்ந்தபோது, பாபா அவரிடம், "**நேற்று இரவு தூங்கினீர்களா?**" என்று கேட்டார்.

பெண்டு பதிலளித்தார், "நான் எப்படித் தூங்க முடியும்? எனக்கு பயங்கரமான வலி உள்ளது; என்னால் தூங்க முடியவில்லை, என்னால் சரியாக உண்ணவும் முடியவில்லை. இதை என்னால் தாங்க முடியவில்லை!"

பாபா அவரைக் கடுமையாகத் திட்டினார். "**உங்களுக்கு ஏதேனும் வெட்கம் உள்ளதா? உங்கள் வலியை மட்டும் நினைக்கிறீர்களா? என்னுடையதை எப்போதாவது நினைப்பதுண்டா? நீங்கள் உங்களுக்காகவே துன்பப்படுகிறீர்கள், ஆனால் நான் முழுப் பிரபஞ்சத்திற்காகவும் தவிக்கிறேன்! நீங்கள் உயிரைத் துறந்தால் என்னவாகும்? ஒன்றுமில்லை. எனது வலியைக் குறித்து உங்களுக்கு ஏதேனும் யோசனை உள்ளதா? நான் எவ்வளவு துன்பப்படுகிறேன்? இருந்தும், ஒவ்வொரு சிறிய விஷயத்தையும் நான் கவனிக்கிறேன்; நீங்களோ படுக்கையில் படுத்திருக்கிறீர்கள், நாள் முழுவதும் எதுவும் செய்ய வேண்டியதில்லை! இந்த முறை, நானே அனைத்து**

**ஏற்பாடுகளையும் கவனித்துக் கொள்கிறேன்; உங்கள் உதவி எனக்குத் தேவையில்லை.**

**"போய் விடுங்கள், மெஹராபாத்திற்குச் சென்று ஓய்வெடுங்கள்,"** பாபா வெறுப்பூட்டும் வார்த்தைகளால் திட்டினார், **"இந்த முறை, உங்களுக்கு எந்தப் பணியும் வழங்கப்பட மாட்டாது! நீங்கள் மிகவும் சுயநலவாதி. நான் உங்கள் முகத்தைப் பார்க்க விரும்பவில்லை! இங்கிருந்து சென்றுவிடுங்கள்!"**

பெண்டு அடக்க முடியாமல் அழுதாலும், அது பாபாவின் தாக்குதலைத் தணிப்பதாக இல்லை, மேலும் பாபா அவரைத் திட்டினார். பதற்றமடைந்த பெண்டு பிறருடன் மெஹராபாத் திரும்பிச் சென்றார். அவர் கண்கலங்கி அழத்தொடங்கிய போது, பெண்டுவின் பரிதாபமான நிலையைக் கண்டு, ஜிம்மின் கண்களிலும் கண்ணீர் பெருக்கெடுத்தது. ஆனால், பெண்டு வெளியே சென்ற பிறகு, பாபா, ஜிம்மிடம் புன்னகைத்துக்கொண்டே கூறினார், **"எல்லையில்லா இரக்கமுள்ளவராக மாற, நான் எல்லையற்ற கொடூரமானவராக மாற வேண்டும்."**

உண்மையில், இது பாபாவின் இயல்பான, மண்டலி மீதான அன்றாட அணுகுமுறையாகும்; மேலும் பாபாவின் மீதுள்ள அதீத அன்பினால் அவர்கள் அதைத் தாங்கிக் கொண்டனர். தேள் கொட்டுவது போன்ற பாபாவின் கொடூரமான கிண்டல்களும், பழிச்சொற்களும் மண்டலிக்கு இரையாக இருந்தது. இதிலடங்கிய முரணான கூற்று என்னவெனில், அவரது கிண்டல் மற்றும் வசைமொழிகள் வரவேற்கப்படாவிட்டாலும், அவை இல்லாத பட்சத்தில், அது அவர்களுக்கு மகிழ்ச்சியைத் தராது. சில சமயங்களில், பாபா சில மண்டலியிடம் அலட்சியமாக இருப்பதோடு, எதற்கும் அவர்களைக் கடிந்தும், கண்டும் கொள்ளாமல், அவர்களுக்கு அறிவுரைகளும் வழங்காமல் இருப்பதுண்டு - இது மிகவும் மோசமான நிலை உருவாகத் தூண்டுதலாக இருந்தது! சொல்லப்போனால், அது அவர்களுக்கு மரண தண்டனை போல் இருந்தது. அவருடைய அலட்சியத்தைத் தாங்க முடியாமல், உண்ணவும், உறங்கவும் அல்லது நேராக சிந்திக்கவும் முடியாமல் அமைதியற்றவர்களாக இருந்தனர். குருநாதருடனான இந்த வாழ்க்கையை எப்படி விவரிக்க முடியும்? வலி இனிமையானதாக இல்லை, ஆனால் அது இல்லாமல் வாழ்க்கை வாழவும் தகுதியற்றதாக இருந்தது. அம்புகள் இதயத்தில் ஊடுருவுகின்றன, ஆனால், அவை இல்லாமல் வாழ்வது என்பது நினைத்துப் பார்க்க முடியாததாக இருந்திருக்கும். பிரியமானவரின் கொடுமை, சில நேரங்களில் சகிக்க முடியாததாக இருந்தது, ஆனால் அது இல்லாமல் வாழ்வதும் சாத்தியமில்லை.

"அன்பானவருடனான இந்த வாழ்க்கை அற்புதம்!" காலம் பறைசாற்றியது. "மிகப்பெரிய கருணையை வழங்க, அவர் கொடூரமான வழியில் செயல்பட வேண்டும்; இரக்கமாக இருக்க அவர் தயவற்றவராக இருக்க வேண்டும். அதை மனதால் புரிந்து கொள்ள முடியாது. அதற்கு இதயத்தின் முழுமையான சரணாகதி தேவை."

ஜிம் மிஸ்திரி 1957 ஜூலை 21 அன்று மும்பைக்குத் திரும்பிச் சென்றார்.

மண்டலியை பாபா எப்படி நடத்தினார் என்பதற்கு மேலுமோர் உதாரணம் சொல்ல வேண்டுமானால், ஒரு நாள் அவர் மண்டலி மண்டபத்திற்கு வந்தபோது, அலோபாவிடம் கேட்டார், **“ஏன் என்னை முறைத்துப் பார்க்கிறீர்கள்? என்னை முறைக்காதீர்கள்! நான் இங்கு வரும்போதெல்லாம், நீங்கள் எப்போதும் என்னையே முறைத்துப் பார்க்கிறீர்கள்.”** எனவே அலோபா, பாபாவிற்கு எதிரே அமர்ந்திருந்தாலும், அவர் வேறு திசையைப் பார்க்க வேண்டியிருந்தது. உரையாடலின் போது, அவர் பாபாவைப் பார்க்க முயற்சித்தது உண்டு, ஆனால் பாபா எப்பொழுதும் அதைக் கண்டுபிடித்து, அவரைச் சுட்டிக்காட்டி, அவருடைய வழிமுறைகளை மீண்டும் விளக்குவதை வழக்கமாகக் கொண்டார். கடைசியாக, பாபா, **“என் முன் வராதீர்கள்! நாளையிலிருந்து, நான் உங்களை அழைக்காதவரை மண்டபத்திற்குள் நுழையாதீர்கள்”** என்றார். எனவே அடுத்த நாள் முதல், அலோபா, மண்டலி மண்டபத்திற்குள் வருவதை நிறுத்தினார்.

அலோபாவின் சுபாவம், தூரத்திலிருந்தும் பாபாவை தினமும் தரிசிக்காத வரை அவரால் தாங்கிக்கொள்ள முடியாது. மண்டலி மண்டபத்தின் ஜன்னலுக்கு வெளியே, ஒரு சில நடமாட்டங்களைக் கவனித்த பாபா, **‘எவரேனும் அங்கு இருக்கிறார்களா’** என்று காக்காவிடம் கேட்டார். அவர் திரும்பிவந்து, அலோபா உள்ளே எட்டிப்பார்க்க முயற்சிப்பதாகத் தெரிவித்தார். பாபா அவரை அழைத்து, பிற மண்டலிக்கு முன்பாக ‘வறுத்தெடுத்தார்’. **“ஏன் எனக்கு கீழ்ப்படியவில்லை?”** அவர் கேட்டார். **“என்னைப் பார்க்க வேண்டாம் என்று சொன்ன பின்னரும், ஏன் என்னைப் பார்த்தீர்கள்?”**

அலோபா, “உங்களைப் பார்க்க என் இதயம் ஏங்குகிறது, என்னால் என்னைக் கட்டுப்படுத்த முடியவில்லை” என்று கெஞ்சினார்.

பாபா முற்றிலும் சோர்ந்து போய், மண்டலி பக்கம் திரும்பி, **“இப்போது, நான் இவரை என்ன செய்ய வேண்டும்?”** என்று கேட்டார்.

பாபாவின் சகோதரர் ஜால்பாய் அங்கு வந்து, “அவர் உங்களைப் பார்ப்பது உங்களுக்குப் பிடிக்கவில்லை என்றால், அதற்கு ஒரு தீர்வு உள்ளது. அவர் உங்கள் முன்னிலையில் இருக்கும்போதெல்லாம், அவர் உங்களை உற்றுப் பார்க்காமல் இருக்க, கருப்பு கண்ணாடியை அணிய வேண்டும்” என்று பரிந்துரைத்தார்.

பாபா இந்த யோசனையை விரும்பி, காக்காவிடம் மிகவும் இருண்ட ஒரு ஜோடி கருப்பு கண்ணாடிகளை வாங்குமாறு அறிவுறுத்தினார். காக்கா அதற்கான ஏற்பாடுகளை செய்து, கிட்டத்தட்ட எதையுமே பார்க்க முடியாத அளவுக்கு இருண்ட சூரியக் கண்ணாடியை வாங்கினார்! அலோபா இருண்ட கண்ணாடி அணிந்து, பாபாவிற்கு முன்பாக அமர ஆரம்பித்த நேரம் முதல், பார்வையாளர்கள் வரும் போதெல்லாம், இந்த நபர் ஏன் மண்டபத்திற்குள் கருப்பு கண்ணாடி அணிந்துள்ளார் என ஆச்சரியப்பட்டு, அவரைப் பார்த்து நகைத்தனர். அலோபா எவ்வளவு வித்தியாசமான மனிதர் என்பதைக் குறிப்பிட்டு, பாபா

அவர்களுக்கு இந்த விசித்திரமான காட்சியை சுட்டிக்காட்டுவது வழக்கம். இதன் பின்னணியில் உள்ள உண்மைக் கதை அவர்களுக்குத் தெரியாது!

மண்டலிக்கு பாபா எவ்வாறு சில பாடங்களைக் கற்றுத் தந்தார் என்பதற்கான வேறொரு சம்பவமும் பின்வருமாறு: குஸ்தாஜி, அவ்வப்போது மிகவும் தெளிவான கனவுகளைக் காண்பதுண்டு. ஒவ்வொரு காலையிலும், மண்டலியின் உடல் நலம் மற்றும் விபரங்களை விசாரித்த பின்பு, பாபா, '**முந்தைய நாள் இரவு ஏதேனும் கனவு கண்டீர்களா**' என்று கேட்பதை வழக்கமாகக் கொண்டார்: "**நீங்கள் கனவில் என்ன கண்டீர்கள்?**" குஸ்தாஜி எப்பொழுதுமே பாபாவை மகிழ்விப்பதற்காக, சில கனவுக் கதைகளைத் (அல்லது ஒன்றை உருவாக்கி) தயாராக வைத்திருந்தார். குஸ்தாஜி அவரது உயிரோட்டமிக்க கதா பாத்திரத்தை, வியத்தகு முறையில் எடுத்துரைக்கும் வேளையில், பாபா, அவரது செயல்பாட்டில் மிகுந்த ஆர்வம் காட்டி, "**அடுத்து என்ன நடந்தது? ...பின்னர் என்ன நடந்தது?**" என்று குறுக்கிட்டு அவரை ஊக்குவிப்பது கண்கொள்ளா காட்சி. குஸ்தாஜி தனது கை சைகைகளால் இடைவிடாமல் விளக்கி வந்தார்.

அரைமணிநேரம் இதுபோன்ற சுவாரஸ்யமான உரையாடலுக்குப் பிறகு, பாபா அன்றைய தினம் வந்த கடிதங்களையும் தந்திகளையும் படித்துவிட்டு, எப்படி பதிலளிப்பது என்பதை அறிவுறுத்தி வந்தார். ஒருமுறை, அனைத்து மண்டலியும் மண்டபத்தில் அமர்ந்திருந்தபோது, பாபா தனதருகில் இருந்த நாற்காலியில் அமர்ந்திருந்த குஸ்தாஜிக்கு இனிப்புகளைக் கொண்டு வந்தார்.

பாபா, பாவ் கல்சூரியிடம், குஸ்தாஜிக்காக ஒரு தட்டு எடுத்து வருமாறு கூறி, பின்னர் அவர் கூறிய மிக அவசரமான கடிதம் ஒன்றை, அவரது அறைக்குச் சென்று எழுதுமாறு அறிவுறுத்தினார். பாவ் எழுதத் தொடங்கிய நேரத்தில், பாபா கைகளைத் தட்டவே, குஸ்தாஜியின் தட்டிலிருந்து கீழே விழுந்த சிறு துண்டுகளைக் காட்டி, பாபா, "**இதை சுத்தம் செய்யுங்கள், இல்லையேல் எறும்புகள் இங்கு வரும்**" என்று சைகையால் தெரிவித்ததும், பாவ் அவ்வாறே செய்தார். "**இப்போது நீங்கள் போகலாம்!**" பாபா சைகையால் தெரிவித்தார். "**அந்தக் கடிதத்தை முடிக்கவும்; இது அவசரமானது, மிக முக்கியமானது.**"

பாவ் கல்சூரி தனது அறைக்குத் திரும்பிச் சென்றார், ஆனால் பாபா மீண்டும் கைகளைத் தட்டியபோது, அவர் இரண்டு வரிகளைக் கூட முடிக்கவில்லை. "**குஸ்தாஜிக்கு ஒரு கிளாஸ் தண்ணீர் வேண்டும், அவருக்காகக் கொண்டு வாருங்கள்**" என்று அவர் பாவ் கல்சூரியிடம் கூறினார்.

பிற மண்டலி அனைவரும் வேடிக்கை பார்த்துக்கொண்டு மண்டபத்தில் அமர்ந்திருந்தனர், ஆனால் பாபா இந்தக் குறும் பணியைச் செய்ய, பாவ் கல்சூரியை அவரது அவசர வேலைக்கிடையே அழைத்தார். 'அந்த முதியவர் (குஸ்தாஜி) என்னை வேண்டுமென்றே துன்புறுத்த இதைச் செய்கிறார்' என்று பாவ் நினைத்தாலும், மீண்டும் ஒருமுறை அவர் சொன்னபடியே செய்தார்.

பாபா, “**அந்தக் கடிதத்தை முடித்துவிடுங்கள்! சீக்கிரம்! சிறுவன் அஹமதுநகருக்குத் தபாலை அனுப்பச் செல்வதற்குள் அதை முடிக்க வேண்டும்**” என்று சைகையால் தெரிவித்தார்.

மீண்டும் பாவ் கல்தூரி, தன் அறைக்குச் சென்ற ஐந்து நிமிடங்களுக்குப் பிறகு, குஸ்தாஜியின் தட்டுக்குக் கீழேயிருந்த மேலும் பல துண்டுகளை சுத்தம் செய்ய பாபா அவரை அழைத்தார். பின்னர், “**அந்தக் கடிதத்தை முடித்துவிட்டீர்களா?**” என வினவினார்.

இந்த நேரத்தில் பாவ் பொறுமை இழந்து, மிகவும் எரிச்சலடைந்தார், “நான் எப்படி முடிப்பேன், பாபா? நீங்கள் ஒவ்வொரு இரண்டு நிமிடங்களுக்கும் என்னை அழைக்கிறீர்கள் - குஸ்தாஜி இங்கே சாவகாசமாக அமர்ந்து அனைத்து பிரச்சினையையும் உருவாக்குகிறார்!”

அதற்கு பாபா, “**அவர் ஒன்றும் செய்யவில்லையா? உங்களை விட மிக முக்கியமான வேலையைச் செய்கிறார்! இங்கே எனதருகில் அமர்ந்து குஸ்தாஜி செய்யும் வேலையை, எனக்காக அயராது உழைத்தாலும் உங்களால் அதைச் செய்ய முடியாது. காரணம், அவர் என்னை மகிழச்செய்வதை மட்டுமே பார்க்கிறார். நீங்கள் எனக்குக் கீழ்ப்படிகிறீர்கள், அது உண்மைதான், நான் உங்களிடம் கடிதம் எழுதச் சொன்னேன், நீங்கள் இணங்குகிறீர்கள், ஆனால் உங்கள் கீழ்ப்படிதல், எனக்கு மகிழ்ச்சியைத் தரவில்லை; இது என்னை மகிழச் செய்கிறது என்று அவருக்குத் தெரிந்ததால், குஸ்தாஜி இதை என்னை மகிழ்விக்கும் நோக்கத்துடன் செய்கிறார். அவரது கீழ்ப்படிதல் எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது, எனக்கு என்ன வேண்டும் என்று அவருக்குத் தெரியும், அவர் என்னை மகிழ்விப்பதற்காக அனைத்தையும் செய்கிறார்.**

“**அவர் இனிப்புகளை உண்பது எனக்கு மகிழ்ச்சியைத் தருவதால், அதை அவர் செய்கிறார். அவர் உங்களிடமிருந்து எதையேனும் கேட்க வேண்டும் அல்லது வேறு எதையும் செய்யச் சொல்ல வேண்டும் என்பது என் விருப்பம் என்பதால் அதையும் அவர் செய்கிறார். என்னை மகிழ்விக்கும் வேளையில், உங்கள் வேலையில் குறுக்கிடுவதாக அவர் ஒருபோதும் நினைத்ததில்லை. அவர் அப்படிச் செய்தால், அவர் உங்களை மகிழச் செய்கிறார், என்னை அல்ல என்று அர்த்தமாகும்.**

“**என்னை எது மகிழச் செய்யும் என்பது அவருக்குத் தெரியும், ஆனால் உங்களுக்குத் தெரியாது! அவர் என்னை மகிழ்விக்க இதையெல்லாம் செய்கிறார் என்பதும் உங்களுக்குத் தெரியும்; ஆனாலும், எனது மகிழ்ச்சியைப் பற்றி சிறிதும் சிந்திக்காமல், மாறாக, நீங்கள் அவர் மீது கோபப்படுகிறீர்கள். குஸ்தாஜி எதுவும் செய்யாமல், இங்கே அமர்ந்து, இனிப்பு உண்ணும் போது, நீங்கள் வேலை செய்கிறீர்கள் என்று நினைக்கிறீர்கள். அவர் உண்மையில் வேலை செய்கிறார்! நீங்கள் செய்யும் எந்த வேலையிலும் பயனில்லை. நான் குஸ்தாஜிக்கு இனிப்புகள் எதுவும் வழங்காமல், அதை அவர் மூலமாக உங்களுக்கு அனுப்பி வைத்தால், அதை**

**அவர் வேறு எந்த எண்ணமும் இல்லாமல் விருப்பத்துடன் செய்வார். இதற்குப் பெயர்தான் வேலை!"**

**"எனவே அவர் உங்களை விட மிக முக்கியமான வேலையைச் செய்கிறார். நீங்கள் இருவரும் 100 சதவிகிதம் எனக்குக் கீழ்ப்படிகிறீர்கள், ஆனால் வித்தியாசம் என்னவெனில், அவருடைய கீழ்ப்படிதல் எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது, உங்களுடையது அல்ல."**

பூனாவில் நடந்த மே மாத கூட்டத்தில், பாபா வழங்கிய 'எச்சரிக்கை' (WARNING) ஒரு சிறிய கையேடாக வெளியிடப்பட்டு, உலகம் முழுவதும் வாழும் அவரது அன்பர்களுக்கு விநியோகிக்கப்பட்டது. 1957 ஜூலை 20 அன்று, பாபா, ஆதி சீனியர் மூலம் பின்வரும் சுற்றறிக்கையை வெளியிட்டார்:

**அச்சிடப்பட்ட கையேட்டில் அவரது அன்பர்களுக்கு, 'எச்சரிக்கை' என்ற தலைப்பில் நான் கூறியுள்ளதை, என் அன்பர்கள் அனைவரும் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன்; ஆனால், அது என்னை நேசிப்பவர்களுக்கும் எனக்குக் கீழ்ப்படிபவர்களுக்கும் மட்டுமே பொருந்தும் என்ற புரிதல் வேண்டும். அவர்கள் பின்பற்றும் குருநாதர்களை விட்டுவிட்டு, என்னைப் பின்பற்ற வேண்டும் என்பதில்லை. அவதார புருஷராக இருப்பதால், நான் மனிதகுலத்தை எழுச்சியுறச் செய்ய வந்துள்ளேன்; முழு உலகமும் என்னிடம் வர வேண்டும் என்று விரும்புகிறேன்.**

**உண்மையான சாதுக்கள், என் இதயத்திற்கு மிகவும் அன்பானவர்கள், நெருக்கமானவர்கள். பரிபூரணமானவர்களும், இறை அன்பர்களும் உலகுக்கு அழகு சேர்க்கின்றனர், எப்பொழுதும் அவ்வாறே செய்கின்றனர். நித்தியம் முழுவதும் பரிபூரண குருநாதர்கள் அவர்களின் பௌதீக உடலில் வாழ்வது என்பது, உலகின் எந்தக் குறிப்பிட்ட அல்லது சிறப்புப் பகுதியிலும் மட்டுப்படுத்தப்பட்டதாக ஆகாது.**

**கடந்த கால, நிகழ்கால மற்றும் எதிர்கால பரிபூரண குருநாதர்கள்,** (அறிந்த மற்றும் அறியப்படாத) **உண்மையான துறவிகள், இறை அன்பர்கள் மற்றும் நான் குடிகொண்டிருக்கும் பிற அனைத்து உயிரினங்களுக்கும், அவை உணர்வுப்பூர்வமாக உணர்ந்தாலும் அல்லது உணராவிடிலும், எனது வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

பாபா இப்போது 75 நாட்கள் 'சிறப்புப் பணி'க்கான (SPECIAL WORK) தனது திட்டங்களை அறிவித்தார். ஜூலை 19ஆம் தேதி முதல், இந்தக் காலகட்டத்தில் மண்டலி பின்பற்ற வேண்டிய வழிமுறைகளை அவர் வழங்கத் தொடங்கி, அதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். அவர் தனது 75 நாட்களின் சிறப்புப் பணியில் பங்கெடுக்கும் அனைவருக்கும், அவரவர் கடமைகளை ஒதுக்கி, மேலும் கூறினார்: **"நீங்கள், உங்களுக்கு வழங்கப்பட்ட கடமையைச் செய்தால், எனது ஒவ்வொரு கட்டளைக்கும் கீழ்ப்படிந்தால், எனது பணியில் உதவுவீர்கள்."** மேலும், **"அவர் கருப்பு கண்ணாடி அணிந்திருந்தாலும்,**

**அலோபா இன்னும் என்னை பக்கத்திலிருந்து பார்க்க முயற்சிக்கிறார். எனவே இந்த 75 நாட்களுக்கு அவர் எனது முன்னிலையில் வரக்கூடாது!"**

டாக்டர் டான், பாபாவின் எக்ஸ்-ரேக்களை லண்டனில் டாக்டர். ஸர். ரெஜினால்ட் வாட்சன்-ஜோன்ஸுக்கு (DR. REGINALD WATSON-JONES) அனுப்பியிருந்தார் (இவர் 1952இல் லண்டனில் பாபாவைப் பரிசோதனை செய்தார்). பிரபல டாக்டர் அனுப்பிய பதில் கடிதத்தில் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்; பாபாவின் இடுப்பு எலும்பு இடம்பெயர்ந்துவிட்டது, அதை அறுவை சிகிச்சை செய்யாவிடில் சரியாகாது.

இது 1957 ஜூலை 24 அன்று விவாதிக்கப்பட்டது; ஆனால், பாபா அறுவை சிகிச்சைக்கு உடன்படவில்லை. பாபா, ஏற்கனவே சுட்டிக்காட்டியதற்கு இணங்க, ஸர் ரெஜினால்டுக்கு, அவரது அனைத்து மருத்துவ அறிக்கைகளையும், டாக்டர் டான் ஆரம்பத்தில் அனுப்பாதது, அவரை மனம் கலங்கச் செய்தது. இதன் காரணமாக, கடந்த எட்டு மாதங்களாக இடுப்புப் பகுதியில் ஏற்பட்ட எலும்பு இடப்பெயர்வு கண்டறியப்படாமல் இருந்தது. 25ஆம் தேதி, டாக்டர் டானுக்கு எழுதிய கடிதத்தில், பாபா இந்தக் கருத்துக்களை குறிப்பிடுமாறு எரச்சிற்குக் கட்டளையிட்டார்: "**நீங்கள் அவ்வாறு செய்திருந்தால்** (வாட்ஸன்-ஜோன்ஸுக்கு பாபாவின் மருத்துவ ஆவணங்களை அனுப்பியிருந்தால்), **நான் தேவையற்ற, தாங்க முடியாத வலியை அனுபவித்திருக்க மாட்டேன். நீங்கள், டாக்டர்கள் சாட்டர்ஜி மற்றும் கேட்கர்** (அஹமதுநகர்), **எல்லா விஷயங்களையும் குழப்பி அடித்து விட்டீர்கள்**."

ஆனால் ஆகஸ்ட் 5ஆம் தேதி, டாக்டர் ஆண்டர்சன், பூத் மருத்துவமனையில் புதிய எக்ஸ்-ரேக்களை எடுத்தபோது, எந்தவிதமான எலும்பு இடப்பெயர்ச்சியும் இல்லை என்று கூறினார்.

பாபாவின் 'சிறப்புப் பணி' 1957 ஆகஸ்ட் 1 வியாழன் முதல் தொடங்கியது. ஆதி, டாக்கே, சிது, சகன், சதாஷிவ் பாட்டீல் ஆகியோர் அன்று அழைக்கப்பட்டனர். அவர்கள் குஷ்ரு குவார்ட்டர்ஸிலிருந்து புறப்படுவதற்கு சற்று முன்பு, பாபாவிடமிருந்து ஒரு குறிப்பை அடையப்பெற்றனர்; ஒவ்வொருவரும் வருவதற்கு முன்பு நீராட வேண்டும். அன்று சிது, டாக்கே இருவரும் நீராடாததால், புறப்படுவதற்கு முன்பு நீராடி, பின்னர் அவர்கள் காலை 9:15 மணிக்கு மெஹராஸாத்தைச் சென்றடைந்தனர். பாபா அரை மணி நேரத்திற்கு முன்னதாகவே மண்டபத்திற்கு வந்துவிட்டார். சிது, சகன், டாக்கே மூவரும் பல நாட்கள் மெஹராஸாத்தில் தங்கவேண்டியிருந்ததால், மூவருக்கும் ஓர் அறை வழங்கப்பட்டது; சதாஷிவ் பாட்டீல் தனியாகத் தங்க வைக்கப்பட்டார்.

பாபா, அவர்களை பத்து மணிக்கு மண்டலி மண்டபத்திற்கு அழைத்தார். அவர், "**எனக்கு உடல் வலி அதிகமாக உள்ளது. எந்தப் பரிகாரமும் பயனளிக்கவில்லை. மருத்துவர்கள் ஆழமான ஊசி அல்லது அறுவை சிகிச்சையைப் பரிந்துரைத்தனர், ஆனால் என் இடுப்பில் உள்ள வலி காரணமாக, அறுவை சிகிச்சை செய்வது நல்லது அல்ல. வலி**

**குறையும் அறிகுறியே இல்லை; எனவே, இங்கு ஒரு கலகலப்பான சூழ்நிலையை உருவாக்கவும், என்னை மகிழ்விக்கவும் உங்கள் அனைவரையும் மெஹராஸாத்திற்கு அழைத்தேன்.**" பாபா அவர்களின் நலம் விசாரித்து, ஆசிரமத்தில் இருந்த பழைய நாட்களை நினைவு கூர்ந்தார்.

பதினோரு மணியளவில், பாபா அனைவரிடமும் முகத்தையும் கைகளையும் கழுவச் சொன்னார். மண்டலி மண்டபத்தின் இடையே திரைச்சீலை ஒன்று தொங்கவிடப்பட்டது, அதன் பின்னால் பெண் மண்டலி தங்கள் இருக்கைகளில் அமர்ந்தனர். மண்டபத்தில் பதினான்கு மண்டலி இருந்தனர்: ஆதி சீனியர், அலோபா, பைதூல், பாவ் கல்சூரி, சகன், டாக்கே, எரச், குஸ்தாஜி, கைக்கோபாத், காக்கா, சதாஷிவ், சிது, ஸவக் மற்றும் ஜால்பாய். ஒவ்வொருவருக்கும் ஒதுக்கப்பட்ட கடமை வாசிக்கப்பட்டது, பாபா ஒவ்வொருவருக்கும் தனித்தனி கடமைகள் பட்டியலிடப்பட்ட காகிதச் சீட்டுகளை வழங்கினார்.

பாபாவின் வழிகாட்டுதலின் பேரில், எரச், கைக்கோபாத் இருவரும் 'குருநாதரின் பிரார்த்தனை' (MASTER'S PRAYER) மற்றும் 'மனம் வருந்தி மொழியும் பிரார்த்தனை'யையும் (REPENTANCE PRAYER) ஓதினர். கைக்கோபாத், பாபாவின் 75 நாட்கள் சிறப்புப் பணியின் வெற்றிக்காகவும், மண்டலியின் இதயத் தூய்மைக்காகவும் பிரார்த்தனை செய்தார். கைகளை மூன்று முறை சுத்தம் செய்த பின்பு, பாபா, கைக்கோபாத்தை நோக்கி நின்றார். அங்கு நிலவிய சூழ்நிலை, மிகவும் தீவிரமானதாகவும், ஆன்மீக அதிகாரம் நிறைந்ததாகவும் இருந்தது. அதன் பின்பு பாபா, ஒவ்வொருவரையும் வணங்கினார், ஒவ்வொருவரும் அவரவர் மதத்தின்படி கடவுளின் பெயரை உச்சரித்தனர் - இந்து, முஸ்லீம் அல்லது ஸொராஸ்ட்ரியன்.

பாபா இவ்வாறு குறிப்பிட்டார்: "**என் உடல் வலிக்கு எந்த மருத்துவ முறைகளும் பலனளிக்கவில்லை. நான் எப்படித் துன்பப்படுகிறேன் என்பது உங்களுக்குத் தெரியாது. இரவும் பகலும் வலி இருந்து வருகிறது. இரவில் என்னால் தூங்க முடியவில்லை. எனது கால்கள் பலமுறை எனக்கு நடுக்கத்தை ஏற்படுத்துகின்றன. இரவில், ஜால் மற்றும் பிறர் அவற்றைப் பற்றிப் பிடித்துக்கொண்டு அழுத்த வேண்டிய கட்டாயம். நான் நடப்பதை நிறுத்திவிட்டு, தூக்கும் நாற்காலியில் கொண்டு செல்ல வேண்டியிருந்தது. அடுத்த 75 நாட்களுக்கு நான் இப்போது ஒரு திட்டத்தைத் தீட்டியுள்ளேன், உங்களுக்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின்படி, நீங்கள் செயல்பட்டால், நீங்கள் எனது வழிமுறைகளை முழு மனதுடன் பின்பற்றினால், 100 சதவிகிதம் எனக்குக் கீழ்ப்படிந்தால், 75 நாட்களுக்குப் பின்னர் என் உடல் வலி குறையும்.**"

பாபா, அதைத் தொடர்ந்து, உலகத்திற்கான அவரின் பணி நிறைவேறும் பொருட்டு, பாபாஜானிடம் பிரார்த்தனை செய்யுமாறு பைதூலுக்கும், உபாஸனி மஹாராஜிடம் பிரார்த்தனை செய்ய அலோபா, தாஜுதீன் பாபாவிடம் காக்கா, வேறு இருவர் சாய்பாபா மற்றும் நாராயண் மஹாராஜிடம் பிரார்த்தனை

செய்யுமாறும் அறிவுறுத்தினார். பாபா ஏழு ஏழைகளின் கால்களில் தலை வணங்கி, தக்ஷிணையாக தலா ஐந்து ரூபாய் வழங்கி, பின்னர் ஏழைகளுக்கு உணவளித்து அனுப்பி வைத்தார்.

பாபா இதைக் கூறி கூட்டத்தை நிறைவு செய்தார்: "**இந்த 75 நாட்களிலும் நீங்கள் அனைவரும், ஆண்களும் பெண்களும், மகிழ்ச்சியாக இருக்க வேண்டும்; மேலும் எனது கட்டளைகளையும் அறிவுறுத்தல்களையும் விருப்பத்துடன் நிறைவேற்றுவதன் மூலம், எனது பணியில் எனக்கு உதவுவீர்கள்**." அடுத்த 75 நாட்களில் அனைவரும் அதீத கவனத்துடன் இருக்குமாறு அவர் கேட்டுக் கொண்டார், ஏனெனில், அவரது உத்தரவில் ஏதேனும் தவறு நிகழ்ந்தால், அவரது உடல் வலி குறைவதில் பாதிப்பு ஏற்படும்.

அதற்குப் பிறகு, பாபாவும் மண்டலியும் கோலி விளையாடியது (சதாஷிவ் பாட்டிலால் கொண்டு வரப்பட்டது) மதியம் இரண்டு மணி வரை தொடர்ந்தது; பாபா, சதாஷிவ், சிது ஒருபுறமும், டாக்கே, எரச் மற்றும் சகன் மறுபுறமும் குழுக்களாக விளையாடினர். மதியம் 2:00 மணியளவில், பூனாவிற்குத் திரும்பிச் செல்லவிருந்த ஜால்பாயுடன் ஆதி புறப்பட்டார். பாபா மேலும் ஒரு மணி நேரம் கேரம் விளையாட்டைத் தொடர்ந்தார்.

பிற்பகல் 3:00 மணிக்கு, பாபா, கைக்கோபாத்தின் அறைக்குச் சென்று அவரைத் தலை வணங்கினார். '**அடுத்த 75 நாட்களில் 100,000 முறை அல்லது ஒரு நாளைக்கு 1,333 முறை கைக்கோபாத்தை வணங்குவேன்**' என்று பாபா கூறினார்.

ஐரீன் கோனிபியர், ஃபிரான்சிஸ் - ஒல்லா கோல்ட்னி ஆகியோர் ஏழைகளுக்கான நிகழ்ச்சியின் போது, பாபாவின் பின்னால் அமர்ந்திருந்தனர். ஒல்லா எப்போதுமே பாபாவிடமிருந்து சற்று ஒதுங்கி இருந்தார்; ஆனால், ஏழைகளுக்கு மத்தியில் அவரைப் பார்த்ததும், தனது கணவரின் பக்கம் திரும்பி, உடைந்த ஆங்கிலத்தில் தனது ஸ்காண்டிநேவிய உச்சரிப்புடன், "அவர் நல்ல மனிதர்" என்று குறிப்பிட்டார். ஏழைகளின் பாதங்களைக் கழுவுவதிலும், அவற்றில் தலை வணங்குவதிலும் வெளியளவில் மூழ்கி இருந்தாலும், பாபா உடனடியாகத் தலையைத் திருப்பி, ஒல்லாவை நேராகப் பார்த்து, எரச்சின் மூலம், "**நான்** (GOOD) '**நல்ல மனிதன்' அல்ல, நான்** (GOD) **இறை-மனிதன்!**" என்றார். பின்னர், இந்த சம்பவத்தை பெண் மண்டலியிடம் கூறும்போது, பாபா, அவரைப் பார்த்து, முழு அதிகாரத்துடன் 'அவதார புருஷர்' என்று கூறியதை, உறுதியாக தான் நம்புவதாக ஒல்லா கூறினார்.

75 நாட்கள் சிறப்புப் பணி தொடங்கியது; ஆனால், அலோபா, பாவ் கல்சூரி இருவருக்கும் பெரும்பாலும் 75 நாட்களும் துன்பமும், மன வேதனையும் மட்டுமே மிஞ்சின! அவர்கள் பாபாவின் கேலி கிண்டல்களுக்கு முதன்மையான இலக்குகளாக இருந்தனர்; இரவில் பாவ் கல்சூரி, பகலில் அலோபா. பாபா மண்டபத்தில் இருந்த வேளையில், அதன் அருகில் எங்கேனும் அலோபா தென்பட்டால், பாபா அவரை அழைத்து, கடுமையாகக் கண்டித்தார்: "**உங்கள்**

**முகத்தை 75 நாட்களுக்கு நான் பார்க்கும் சூழ்நிலையை உருவாக்க வேண்டாம் என்று நான் கூறினேன்; நான் மண்டபத்தில் இருக்கும் வரை, உங்கள் அறைக்கு உள்ளேயே இருங்கள், வெளியில் எதுவும் செய்யாதீர்கள், மண்டபத்தை விட்டு விலகி இருங்கள்.**" ஆனால் ஒவ்வொரு நாளும், அதே விஷயம் நடந்தது: கதவு அல்லது ஜன்னலிலிருந்து, பாபா, அலோபாவைப் பார்த்த அடுத்த கணமே, அம்புகள் பறக்கத் தொடங்கும். உண்மை என்னவெனில், பாபா, அலோபாவைப் பார்க்க விரும்பினார், மேலும் அலோபாவை தனது அறையை விட்டு வெளியே வருமாறு கட்டாயப்படுத்தும் சூழ்நிலைகளை உருவாக்கி - பாபா, பின்னர் அவரைக் கண்டித்து விமர்சிப்பது அன்றாட நிகழ்வு.

ஒரு நாள், மண்டலி ஒருவரிடம் பாபா கூறினார்: "**எந்த சமரசமும் இல்லை - ஒன்று நீங்கள் உங்களை மகிழச் செய்யுங்கள் அல்லது எந்த சிறிய விஷயங்களிலும் என்னை முழுமையாகத் திருப்திப்படுத்துங்கள்.**" ஆனால், மண்டலி எவ்வளவுதான் முயன்றும், பாபாவைப் போதுமான அளவு திருப்திப்படுத்த இயலாத நிலையில், ஏதேனும் ஒரு காரணம் காட்டித் திட்டுவது, தவறாமல் நடந்து வந்தது.

ஒரு வருடம் இந்தியாவில் தங்க வேண்டும் என்று பாபா முதலில் ஃபிரான்சிஸ் கோல்ட்னியிடம் கூறியிருந்தாலும், இப்போது அவரும், அவரது மனைவியும் ஃபேரோ தீவுகளுக்குத் (FAEROE ISLANDS) திரும்புவதே சிறந்தது என்று முடிவு செய்தார். ஆகஸ்ட் 4 அன்று அவர்கள் புறப்படுவதற்கு முன்பு, பாபா, கோல்ட்னிக்கு தியானம் செய்வது பற்றியும், வாரத்திற்கு ஒரு முறை கடிதம் எழுதுமாறும் அறிவுறுத்தினார். ஐரீன் கோனிபியரும் ஆகஸ்ட் மாதத்தில் தென் ஆஃபிரிக்காவின் டர்பனுக்குத் (DURBAN, SOUTH AFRICA) திரும்பிச் சென்று, மரணப் படுக்கையில் இருந்த, ஏற்கனவே விவாகரத்து செய்யப்பட்ட, தனது கணவரான ஜெரால்ட் ஹார்வி (GERALD HARVEY) என்பவரைப் பார்க்கத் திட்டமிட்டிருந்தார். பாபாவிற்கு இது ஏற்புடையதாக இல்லை, ஆனால் ஐரின் வலியுறுத்தினார், பின்னர் அவர் பாபாவை ஓரளவு விமர்சிக்கும் சூழலுக்குத் தள்ளப்பட்டார். ஐரீன் பாபாவை மீண்டும் பார்க்கவில்லை.

ஆகஸ்ட் 11 ஞாயிற்றுக்கிழமை மற்றும் இரண்டு நாட்களுக்குப் பிறகு, வரவிருக்கும் சகவாச நிகழ்ச்சிகள் பற்றிய கூட்டங்கள் மெஹராஸாத்தில் நடைபெற்றன. 12ஆம் தேதி, எரச், எல்சா மிஸ்திரிக்கு எழுதினார்: "பாபாவின் உடல் வலி மிகவும் மோசமாக உள்ளது; மண்டலி மற்றும் பெண்மணிகளைப் பொறுத்தவரை மிகவும் உதவியற்ற சூழல் நிலவுகிறது." பாபாவின் இடுப்புப் பகுதியில் மிகவும் வலியாக இருந்ததால், 14ஆம் தேதி, மேற்கத்திய அன்பர்களுக்குத் தொலைத்தந்தி மூலம் தெரிவிக்கப்பட்டது, '**ஒரு மாத கால சகவாச நிகழ்ச்சி, பாபாவிற்கு பெரும் சிரமமாக இருக்கும் என்பதால், அவர் இந்தத் திட்டத்தை 1958 பிப்ரவரி 15 முதல் 12 நாட்களுக்கு குறைக்க முடிவு செய்துள்ளார்.**'

அவரது இடுப்பு வலிக்கு, மேல் சிகிச்சைக்காக, பாபா 1957 ஆகஸ்ட் 24 சனிக்கிழமையன்று, மெஹர்ஜியின் காரில், பெண் மண்டலியுடன் பூனாவிற்குச் சென்றார். எரச், பாவ், ஸவக், நரிமன் ஆகியோர் ஆதி சீனியருடன் சென்றனர். அனைவரும் மீண்டும் கணேஷ்கிந்த் தோட்டத்தில் தங்கினர், அங்கு ஜால்பாய் அவர்களுடன் இணைந்தார்.

ஆகஸ்ட் 25ஆம் தேதி, பாபா சுமார் 80 பூனா அன்பர்களை கணேஷ்கிந்திற்கு அழைத்தார், அங்கு மாலை 3:00 மணிக்கு இசை நிகழ்ச்சி நடைபெற்றது. நவ்ஸாரியின் ஹோஷங் பரூச்சாவும் கலந்து கொண்டார். பாபா 'செயல் மற்றும் செயலின்மை' (ACTION AND INACTION) என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினார்: **உணர்வற்ற செயலின்மை, உணர்வு நிலையிலான செயல் மற்றும் உணர்வு நிலையிலான செயலின்மை ஆகியவற்றுக்கு இடையேயான வேறுபாட்டை விளக்கினார். கடவுளின் ஆதி முதலான அசல் நிலைக்கும்** (BEYOND BEYOND STATE OF GOD) **அப்பால், உணர்வற்ற செயலற்ற தன்மை இருப்பதாக அவர் விளக்கினார்; மறுபுறம், பௌதீக உடலில் மாயையில் செய்யப்படும் செயல்கள், 'பிணைப்புகளை உருவாக்கிய உணர்வு நிலையிலான செயல்கள்'; அதே வேளையில், சத்குருக்கள் அல்லது அவதார புருஷரின் செயல்கள், 'செயலற்ற செயல்கள்', இது பிறரின் பிணைப்புகளை வேரோடு பிடுங்குகிறது.**

ஆகஸ்ட் 26 முதல், பாபா, தமது இடுப்பில் ஏற்பட்ட முதுமை மூட்டுவாதம் அதிகரித்ததைத் தடுக்கும் முயற்சியில், தொடர்ச்சியான ஆழ்ந்த உடல் சிகிச்சையைத் தொடங்கினார். அவர் பூனாவில் தங்கியிருந்த காலத்தில், ஸஸூன் மருத்துவமனையின் (SASSOON HOSPITAL) கதிரியல் சிறப்பு நிபுணரான டாக்டர் எம்.எஸ். தீக்ஷித்துடன் (DR. M.S. DIKSHIT) மூன்று முறை நீண்ட சந்திப்புகளை மேற்கொண்டார். பாபாவின் சிகிச்சையைப் பற்றி பிரபல எலும்பியல் மருத்துவரான டாக்டர் கத்ரக்கிடம் (DR. KATRAK) ஆலோசனை பெற, டாக்டர் டான் மும்பைக்குச் சென்றார்.

பன்டெலு குடும்பத்தினர் (BUNDELLU), பாபாவை 26ஆம் தேதி பார்த்தனர். சுபத்ராவிற்கும் அவர் தந்தையாருக்கும் இடையே ஏற்பட்ட குடும்பத் தகராறை பாபா தீர்த்து வைத்தார். பாபா ஒவ்வொருவரின் மனதில் உள்ளதையும் கேட்டறிந்து, அவர்களை ஒருங்கிணைத்து, சமரசம் செய்து வைத்தார். சுபத்ராவும் அவர் தம்பி கிருஷ்ணாவும் அடிக்கடி வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். ஒரு கட்டத்தில், பாபா கூறினார், "**பகவான் கிருஷ்ணரின் காலத்தில், நான் உங்கள் சண்டைகளைத் தீர்த்துவைத்தேன், மீண்டும் இந்த முறை நான் அதைச் செய்ய வேண்டும்! உங்கள் ஒவ்வொருவருக்கும் என்னுடன் பழைய தொடர்பு உள்ளது.**"

பாபா கணேஷ்கிந்தில் தங்கியிருந்தபோது, டாக்டர் மூர்த்தியும் தரிசனத்திற்காக வந்தார்.



**கணேஷ்கிந்த் தோட்டம் - பூனா 1957**

(GANESHKHIND GARDENS - POONA 1957)

1957 ஆகஸ்ட் 31 சனிக்கிழமை காலை 9:00 மணிக்கு, டாக்டர் கோஹெர், டாக்டர் டான் இருவரும் பாபாவை, மெஹர்ஜியின் காரில் மும்பைக்கு அழைத்துச் சென்று, தாதரில் அமைந்த நௌரோஜி தாதாச்சாஞ்சியின் இல்லத்தில் தங்கியிருந்த வேளையில், அவரை, பிரபல எலும்பு அறுவை சிகிச்சை நிபுணரான, டாக்டர் அரவிந்த் கேஷவ் தல்வல்கர் (DR. ARVIND KESHAV TALWALKAR) அங்குப் பரிசோதனை செய்தார். மருத்துவரின் கருத்துப்படி, எலும்புகளின் எந்த இடப்பெயர்வும் இல்லை என்றும், பாபாவின் வலியானது முதுமை மூட்டுவாதத்தால் மட்டுமே ஏற்பட்டது, அதனால் குறைந்தது பல வருடங்களுக்கு அறுவை சிகிச்சை செய்யக்கூடாது என்றும் கூறினார். பாபா அன்று இரவு 9:00 மணிக்கு பூனா திரும்பி வந்தார்.

நௌரோஜியின் குடும்பப் பெண்மணி ஒருவர், பாபாவைத் தழுவிய பின்பு, "தயவுசெய்து விரைவில் குணமடைந்துவிடுங்கள், பாபா" என்று கூறினார்.

பாபா, குஜராத்தி மொழியில் **"எது நடக்க வேண்டுமோ, அது நடக்கும்"** என்று அழுத்தம் திருத்தமாக சைகையால் தெரிவித்தார். பாபா அங்கிருந்த அனைவருக்கும் இதைத் திரும்பத் திரும்ப எடுத்துரைத்தார்.

பாபாவின் இடுப்புப் பாகத்தில் வலி அவரது வாழ்நாள் முழுவதும் இருந்துகொண்டே இருக்கும். காலம் குறிப்பிட்டது போல, "மனிதகுலத்திற்காக அவர் அனுபவித்த துன்பம் தவிர்க்க முடியாதது."

ஒரு சந்தர்ப்பத்தில், ஆகஸ்ட் மாத இறுதியில், '**பென் ஹெய்மனிடமிருந்து ஏதேனும் கடிதம் அல்லது தொலைத்தந்தி வந்ததா**' என்று பாபா கேட்கத் தொடங்கினார். பென் அடிக்கடி கடிதம் எழுதுவதில்லை; ஆகையால், பாபாவின் விடாப்பிடியான தினசரி வினவல்களால், மணி குழப்பமடைந்தார். பூனாவைச் சென்றடைந்ததும், பாபா மீண்டும் '**பென்னிடமிருந்து ஏதேனும் தகவல் வந்ததா?**' என்று கேட்க, 'எதுவும் வரவில்லை' என்று கூறியதும், பாபா, "**நாளை, பென்னைப் பற்றி தவறாமல் எனக்கு நினைவூட்டுங்கள்**" என்று கூறினார்.

இவரைப் பற்றி என்ன நினைவூட்ட வேண்டும் என்று மணி கேட்டதற்கு, பாபா, "**பரவாயில்லை, எனக்கு நினைவூட்டுங்கள்**" என்று சைகையால் தெரிவித்தார்.

செப்டம்பர் 1ஆம் தேதி, வாகன விபத்து ஒன்றில் பென் ஹெய்மனுக்கு காயமும், ஒரு கால் மற்றும் அவரது சில விலா எலும்புகளில் முறிவுகள் ஏற்பட்டதாகவும் தகவல் வந்தபோது, அந்த மர்மம் புலப்பட்டது. அனைத்தையும் அறிந்தவர், அமெரிக்காவில் தொலைதூரத்தில் வாழும் தனது அன்பர்களில் ஒருவருக்காக, தனது சர்வ அறிவார்ந்த அக்கறையை மீண்டும் ஒருமுறை வெளிப்படுத்தினார்.

1ஆம் தேதி டாக்டர் சாட்டர்ஜி, பாபாவைப் பரிசோதனை செய்ய வந்தார், அவரும் இந்த நேரத்தில் பாபாவின் இடுப்பில் அறுவை சிகிச்சை செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்று நிராகரித்தார்.

செப்டம்பர் 1ஆம் தேதி, டெக்கன் ஜிம்கானாவில் (DECCAN GYMKHANA) கிரிக்கெட் போட்டியைப் பார்வையிட பாபாவை அழைத்து சென்ற ஆதி சீனியர், குதிரைப் பந்தயத்தைக் காணச் சென்ற பெண்மணிகளை, ரேஸ்கோர்சிலிருந்து (RACECOURSE) மீண்டும் கணேஷ்கிந்திற்கு அழைத்துச் சென்றார்.

1957 செப்டம்பர் 6 வெள்ளியன்று, பூனா மையத்தின் சேவகர்கள் பலர் ஒன்றுதிரண்ட, கிர்கியில் (107/5 ரேஞ்ச் ஹில்ஸ், RANGE HILLS) கே.கே. ராமகிருஷ்ணனின் இல்லத்திற்கு பாபா விஜயம் செய்தார். காடேக்கரின் இல்லத்திற்குச் செல்வதற்கு முன்பு, பாபா அவர்களை சிறிது நேரம் சந்தித்தார்; அதற்குப் பிறகு, முன்பு போலவே மெஹர்ஜி மற்றும் ஆதியின் கார்களில் மெஹராஸாத் புறப்பட்டுச் சென்றார்.

பாபா, பூனாவில் வாழும் சில மஸ்துகளையும் தொடர்பு கொண்டார். ஒரு நாள் ஜால்பாய், பஜாரில் அலைந்து திரிந்த, ஜான் (JOHN) என்றழைக்கப்பட்ட கிறிஸ்தவர் ஒருவரை அழைத்து வந்தார். பாபா இதற்கு முன்னர் இவரைத் தொடர்பு கொண்டதில்லை. பாபா, **“அவர் ஆன்மீகத் தளங்களில் பிரவேசிக்கவில்லை, ஆனால், அதன் வாசனையை சற்று நுகர்ந்துள்ளார்”** என்று கூறினார். அந்த நபர் சரளமாக ஆங்கிலம் பேசும் மஸ்த் போல தோற்றமளித்தாலும், அவரது வாக்கியங்கள் அர்த்தமற்றதாக இருந்தன. அவர் மிகவும் வித்தியாசமான தோற்றம் கொண்டவர், தாடி, பழைய உடையணிந்து சற்றே ஒழுக்கமான முறையில் இருந்தார். பாபா அவரைத் தொடர்பு கொண்டதில் மிக்க மகிழ்ச்சியடைந்தார், மேலும் அவரது முட்டாள்தனமான பேச்சை ரசித்தார்.

பாபா, பெண் மண்டலியுடன் பூனாவிலிருந்து புறப்படும் வேளையில், பாபாஜானின் சமாதியிலிருந்து சிறிது தூரத்தில் காரை நிறுத்தி, அவர் காரில் அமர்ந்திருக்க, விரைவில் பாபாஜானுக்கு மரியாதை செலுத்தி வருமாறு பெண் மண்டலியிடம் கூறினார். அவர்கள் திரும்பி வந்தபோது, திறந்திருந்த காரின் கதவருகில் அந்தக் கிறிஸ்தவர் ஜான், பாபாவை உற்று நோக்கிக் கொண்டிருந்ததை அவர்கள் காண நேர்ந்தது. பாபா, மணியிடம் ஒரு ரூபாய் வழங்குமாறு சைகையால் தெரிவித்ததும், அவர் அதைக் கொடுத்தபோது, ஜான், மணியிடம், “நீங்கள் அவருக்கு ஏதேனும் உதவி செய்தீர்களா?” என வினவினார்.

மணி பதிலளித்தார், “நாங்கள் அவ்வாறு நம்புகிறோம், ஜான், நாங்கள் அவ்வாறு நம்புகிறோம்.”

அவர்களது கார் புறப்பட்டுச் சென்றபோது, ஜான் பலவிதமான வார்த்தைகளை முணுமுணுக்கத் தொடங்கினார். அவர் என்ன சொன்னார் என்று பாபா கேட்டதற்கு, மணி, “‘அது நிச்சயமாக சரிபார்க்கப்பட்டதும் நான் அவருக்குத் தெரிவிக்கிறேன்’ என்று கூறியது மட்டும் எனது செவிகளில் விழுந்தது” என்றார்.

அன்று மாலை சுமார் எட்டு மணியளவில் மெஹராஸாத்தை வந்தடைந்தனர்.

இரண்டு நாட்களுக்குப் பின்னர், 1957 செப்டம்பர் 8 ஞாயிற்றுக்கிழமை, மண்டலி மற்றும் மும்பை, பூனா, அஹமதுநகரைச் சேர்ந்த 32 நபர்களுடன் மூன்று மணி நேரக் கூட்டம் மெஹராஸாத்தில் நடைபெற்றது. வெளியளவில், எதிர்வரும் சகவாச நிகழ்ச்சி, மற்றும் அதற்காக அழைக்கப்பட்ட மேற்கத்திய அன்பர்களுக்குத் தேவையான ஏற்பாடுகள் குறித்து விவாதிக்க கூட்டம் நடைபெற்றது. இந்த 'அரைக்கால' கூட்டத்தின் தொடக்கத்தில் (அதாவது அவருடைய 75 நாட்களின் விசேஷ பணியில் பாதி இது), பாபா இனிப்புகளை விநியோகித்து கூறினார்: **"நீங்கள் சில கசப்பான மாத்திரைகளை விழுங்குவதற்கு முன்னதாக உங்கள் வாயை இனிமையாக்குகிறேன்."**

பின்னர் அவர் அனைவருக்கும் நினைவூட்டினார்:

**நான் உங்களுக்குச் சொல்லப் போவது, இப்போது எனக்கு முன்னால் இருப்பவர்களுக்கு மட்டுமல்ல, என்னை நேசிப்பவர்களுக்கும், எனக்குக் கீழ்ப்படிய விடாமுயற்சியுடன் இருப்பவர்களுக்கும் சேர்த்து தான். முதலில், ஒவ்வோர் இடத்திலும் அமைந்த ஒவ்வொரு மையத்திலிருந்தும், குழுவிலிருந்தும் ஒரு பிரதிநிதியை அன்றைய தினம் அழைக்க நினைத்தேன். ஆனால், நீண்ட பயணங்களினால் ஏற்படும் செலவு, சிரமம் மற்றும் சம்பந்தப்பட்ட அனைவரின் அசௌகரியங்கள் போன்ற அனைத்தையும் கருத்தில் கொண்டேன்; ஏனெனில், இங்கு எப்பொழுதும் என் அருகில் வாழ்பவர்களுக்கும் கூட வசதிகள் குறைவாகவே உள்ளன.**

**என் இதயத்திலிருந்து நேரடியாக உங்களிடம் விஷயங்களைப் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன், மேலும் அவை உங்கள் காதுகளை மட்டுமல்ல, உங்கள் இதயங்களையும் சென்றடையட்டும் என்று நான் எதிர்பார்க்கிறேன். ஹோஷங் பரூச்சாவின் நண்பர்கள் என்னிடம் கூறுகிறார்கள், அவருடைய அனைத்து நற்குணங்களுக்காகவும், அவர் பொதுவாக, விஷயங்களை ஒரு காதில் வாங்கி, மறுகாது வழியாக வெளியே விட்டுவிடுவார் என்று! ஆனால், அவர் என்னை நேசிக்கிறார், நான் கூறுவதற்குத் தீவிரமாக செவிமடுக்கிறார் என்று எனக்குத் தெரியும். இப்போது இங்கு இருக்கும் எவரேனும், நான் கூறுவதை இலகுவாக எடுத்துக்கொள்வதாக நம்பினால், அவர் இந்தக் கூட்டத்திலிருந்து உடனடியாக வெளியே செல்வது நல்லது.**

**நான் சாது, சன்னியாசி இல்லை. நான் 'அப்பாற்பட்ட நிலையில்' இருப்பதால், நான் அனைத்து சாதுக்களுக்கும் அப்பாற்பட்டவன். நான் யார் என்பதை உலகம் அறிந்த அடுத்த கணமே, நீங்கள் இப்போது என்ன புரிந்து கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேனோ - அதாவது, காலாதிகாலத்திலிருந்து நான் ஆதிகால புருஷன், மாறாத, அளவிறுதியற்ற, நித்தியமான தன்மை உடையவன் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். நான் அவதார புருஷர் என்று நீங்கள் முழு மனதுடன் நம்பலாம், ஆனால் எவ்வளவு ஆழமான நம்பிக்கையாக இருந்தாலும் அது முழுமையான, அசைக்கமுடியாத நம்பிக்கையாக இருக்காது.**

இங்கே, டாக்கே குறுக்கிட்டு, “உங்களை ஒருமுறை ஆதிகால புருஷர் என்று ஏற்றுக்கொண்ட எங்களுக்கு நம்பிக்கை என்ற கேள்விக்கே இடமில்லை, ஏனெனில் நாங்கள் உங்களை முழுமையாக ஏற்றுக்கொண்டோம்.”

பதிலுக்கு, பாபா விரிவாகக் கூறினார்:

**எந்த சூழ்நிலையிலும், அந்த ஏற்றுக்கொள்ளல் (நம்பிக்கை) அசைக்க முடியாததாக இருந்தால் அது நல்லது. உலகம் பொதுவாக, கடவுள் உளதாயிருக்கிறார் என்பதை நம்புவதற்கான காரணங்களைப் பற்றி அதிகம் கவலைப்படாமல் ஏற்றுக்கொள்கிறது. உலகில் கடவுளை ஒருவர் எப்படிப் பார்க்க வேண்டுமோ, அப்படியே பார்க்கிறவர்கள் உள்ளனர், மேலும் சிலர் கடவுளை உண்மையில் எப்படி அறிய வேண்டுமோ, அப்படியே அறிந்துகொள்பவர்களும் உள்ளனர் என்பது உண்மை.**

**என் மீது வட்டமிடும் கார்மேகத்தை நான் தெளிவாகக் காண்பது குறித்து, நான் ஏற்கனவே உங்களுக்கு எச்சரித்துள்ளேன். நான் பல வருடங்களாக ஏதோ ஒரு வகையில் இதைக் குறிப்பிட்டு வருகிறேன். சொல்லப்போனால், ஒவ்வொரு முறை வரும்போதும், ஒவ்வொரு விஷயங்களின் வடிவம் மட்டுமே மாறுகிறது; அதனால்தான் சொன்னதையே திரும்பத் திரும்ப வேறுவிதமாகச் சொல்கிறேன். இயேசுவின் காலத்தில், நான் பல எச்சரிக்கைகளை வழங்கினேன், ஆனால் நான் சிலுவையில் அறையப்படுவதை எவராலும் முன்கூட்டியே புரிந்து கொள்ள முடியவில்லை.**

**இப்போது, கார்மேகம் வெடிக்கும் தருவாயில் உள்ளது; அதன் முழு சக்தியையும் நானே என் மீது எடுத்துக்கொள்ள வேண்டும். அதன் அர்த்தம் என்ன என்று உங்களுக்குத் தெரியாது. பூமியில், நரகம் என் மீது வெடிப்பது போல் இருக்கும்! இந்தக் கார்மேகம் வெடித்தாலும், எனது மேலங்கியைப் பற்றிக் கொள்வதில் உறுதியாக இருங்கள். இதன் மூலம் எனது பணியை நீங்கள் பகிர்ந்து கொள்வீர்கள்.**

**மஸ்த் மற்றும் முல்லா** (முஸ்லீம் பாதிரியார்) **பற்றிய கதை ஒன்றை நான் உங்களுக்குக் கூறுகிறேன். மஸ்த், அவரது உணர்வு நிலையில், அவரது அன்பான இறைவனுக்கு மிக அருகாமையில் இருந்து கவனம் செலுத்துவதில், இதர அனைத்தையும் கிட்டத்தட்ட மறந்துவிடுகிறார். அதேவேளையில், முல்லா, இந்த மஸ்தின் உண்மை நிலையைப் புரிந்து கொள்ள முடியாததால், கற்றறிந்த கிளிப்பிள்ளையின் மொழிகளால் மஸ்தைத் துன்புறுத்துகிறார்; இறுதியில் ஒரு நாள், முல்லா கோபமடைந்து, ‘அவர் நரகத்திற்குச் செல்வாராக’ என்று சபிக்கிறார்.**

**முல்லாவின் சாபத்தைக் கேட்டு, நன்கு புரிந்துகொண்ட மஸ்த் சீற்றத்துடன், சிரிப்பூட்டும் முறையில், சொர்க்கத்தில் கடவுளைத் தவிர, இதர அனைத்தும் உள்ளன என்று மஸ்த் மறுமொழி கூறினார். ஆனால் கடவுள் எல்லா இடங்களிலும் இருப்பதை அறிந்த மஸ்த், நரகத்தில் மிகவும் மகிழ்ச்சியாக இருந்து, அங்கு அவர் தனது பிரியமானவரின் துன்பங்களைப் பகிர்ந்து கொள்கிறார்.**

அறிவியல் வளர்ச்சியடைந்துள்ள நிலையில் அழிவின் ஆயுதங்களைப் பாருங்கள். போருக்கான ஆயத்த நிலையைக் கண்டு, ஒரு நாடு வேறொரு நாட்டைக் குற்றம் சாட்டுகிறது, மேலும் உலகப் பேரழிவு, எந்த நேரத்திலும் முன்னறிவிப்பின்றி வரக்கூடும். உலக நிகழ்வுகள் என் உட்பணியின் முடிவுகளை பிரதிபலிக்கின்றன. நோவாவின் (NOAH) காலத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின் போது, உலகம் நரகமாகிவிட்டது. முழு யுத்தம் வந்தால், முழு உலகமும் அழிந்துவிடும் என்று விஞ்ஞானிகளும் அரசியல்வாதிகளும் இப்போது ஆணித்தரமாக அறிவிக்கிறார்கள். அவர்கள் எனது குரலை எதிரொலிக்கிறார்கள், ஆனால் 700 ஆண்டுகளுக்குப் பிறகு, நான் மீண்டும் இங்கே வர வேண்டும் என்பதால் முழு உலகமும் அழியாது.

நான் சமீபத்தில் பூனாவில் தங்கியிருந்த போது, பூனா பஜனை குழுவினரை எனக்கு முன்பாக பாட அனுமதித்ததில் மகிழ்ச்சி அடைந்தேன். நான் என்னுடைய சில அன்பர்களின் இல்லங்களுக்கு விஜயம் செய்தேன், மேலும் சிலரை என்னை சந்திக்க அனுமதித்தேன்; ஆனால் எனது இடுப்புப் பாகத்தில் தொடர்ந்து ஏற்பட்ட வலி காரணமாகவே நான் பூனாவிற்குச் சென்று, பின்பு மும்பைக்கும் பயணம் செய்தேன்.

எனது இடுப்பு எலும்பு கிட்டத்தட்ட குணமடைந்து விட்டதாகவும், இதனால் முழு எடையைத் தாங்குவதோடு, ஏறக்குறைய சாதாரணமாகக் கால்களைப் பயன்படுத்துமாறும் சிறந்த ஆலோசகர்களால் அறிவுறுத்தப்படுகிறது. ஆனால் நான் ஓய்வெடுக்கும் போது கூட, தொடர்ந்து மிகுந்த வலியை அனுபவிக்கிறேன் என்பதே உண்மை. எனது படுக்கை அருகில், இரவு முழுவதும் ஒருவருக்குப் பின் ஒருவராகக் கண்காணிக்கும் மண்டலிக்கு, நான் எவ்வளவு துன்பப்படுகிறேன் என்பது தெரியும்; என் அருகில் இருப்பவர்களின் அன்பான உதவி மற்றும் கண்காணிப்பை நான் சார்ந்திருக்க வேண்டிய அளவிற்கு, தற்பொழுது முடங்கிப்போய் இருக்கிறேன். ஆனால், கார்மேகம் என் மீது வெடித்து வீழும் வேளையில், நான் தாங்கிக்கொள்ள வேண்டியதை ஒப்பிடும்போது, இவை அனைத்தும் ஒன்றுமே இல்லை.

விதிக்கப்பட்ட அனைத்தும் நிறைவேற, நான் உழைக்கிறேன்; இந்த உழைப்பு என் அவதார காலகட்டத்தின் வருகைக்கு முத்திரையாகத் திகழும் மிகப்பெரிய சக்தியை வெளிப்படுத்தும். மனிதகுலத்தின் மீது, இந்த சக்தியின் தாக்கம், பொதுவாக ஒரு விழிப்புணர்வுக்கும், குறிப்பாக இறை உணர்தலுக்கும் வழிவகுக்கும்.

எதிர்ப்பு சக்திகளை சந்தித்து இறுதியில் வெற்றியை நிலைநாட்டும் போது, உழைப்பிற்கு அதற்குரிய அழகான ஆளுமை உள்ளது. தற்போதைக்கு, நான் இருள் நிறைந்த மேகத்தை எதிர்கொள்கிறேன்; இன்னமும், நான் எனது பணியை இடைவிடாமல் செய்து வருகிறேன். இது தவிர, நான் பல்வேறுபட்ட விஷயங்களை செய்ய வேண்டும். உதாரணமாக, நான் சகவாச நிகழ்ச்சிகளுக்கான ஏற்பாடுகளை கவனிக்க வேண்டும், மேலும் என்னைப்

பின்பற்றும் நூற்றுக்கணக்கான அன்பர்களுக்கு சகவாசத்தை வழங்க வேண்டும்.

ஆனால், கவனம் ஆங்காங்கே சிதறும் போது, அனைத்து தடைகளையும் சமாளித்து, கையில் இருக்கும் பணியை முடிப்பது எவ்வளவு கடினம். உதாரணமாக, எனது இடுப்புப் பாகத்தில் உள்ள வலி, எனது பணியில் ஈடுபடும்போது, நான் தாங்கிக்கொள்ள வேண்டிய பல கவனச்சிதறல்களில் ஒன்றாகும். இந்த வலி மறைந்தால் அல்லது ஓரளவிற்குக் குறைந்தால், நிறைவைக் கெடுக்கும் கார்மேகத்தின் தாக்குதலுக்கு மத்தியிலும் எனது பணி நிறைவேறும்.

உடல் ஆரோக்கியமாக இருந்தாலும், உடலால் செய்ய வேண்டிய காரியங்களை உதவியின்றிச் செய்ய, நான் இப்போது இயலாதவனாக இருப்பதைப் போலவே, வரவிருக்கும் நெருக்கடியின் போது, நான் மனரீதியாக உதவியற்றவனாக ஆகலாம், ஆனால் மனதளவில் சிறிதும் தளராமல் இருக்கலாம்.

நீங்கள் எனது மேலங்கியை, தொடர்ந்து பற்றிப் பிடித்துகொள்ள முடியாமல் போகலாம், ஏனெனில், சூழ்நிலைகள், நீங்கள் அதை விட்டுவிடுவதை நியாயப்படுத்தும். நான் அளவிறுதியற்ற அளவுக்கு இரக்கமுள்ளவன், அதனால், அதே கருப்பொருளை மீண்டும் மீண்டும் கூறுவதானால், நீங்கள் எனது வார்த்தைகளை நினைவில் வைத்துக் கொண்டு, என்னுடன் ஒட்டிக்கொள்ள உங்களால் முடிந்தவரை முயற்சி செய்யுங்கள். உதாரணமாக, திடீர் மற்றும் பயங்கரமான நிலநடுக்கத்தில், எந்த ஒரு மனிதனும், தன் உயிரைக் காப்பாற்றும் குருட்டு நம்பிக்கையில், தனது குடும்பத்தையும், தன் உடைமைகளையும் நொடிப்பொழுதில் மறந்து, தான் செய்ததை உணர்ந்து கொள்வதற்குள் அவற்றைக் கைவிட்டு ஓடிவிடக்கூடும்.

எது நடக்க வேண்டுமோ அது நடக்கும். இதுதான் கொள்கை, அல்லது நான் அதை அழைப்பது போல, விதியின் நிர்பந்தம் அல்லது சட்டம்; அதாவது உலகளாவிய மாயை தழைத்தோங்கும் சட்டம். மாயையில் தயாராக இருக்கும் முழுமையான திரைப்படம், தொடக்கமில்லாத தொடக்கத்திலிருந்து முடிவற்ற முடிவு வரை, தொடர்ந்து முன்னிறுத்தப்படுவது போல் உள்ளது. எனது மேலங்கி உங்கள் கைகளிலிருந்து நழுவ வேண்டும் என்று விதி இருந்தால், அது நடக்கும். ஆனால் நான் உங்களை எச்சரிப்பதும், நீங்கள் எச்சரிக்கையாக இருப்பதும் முக்கியம். மாயையில், நீங்கள் எந்த நேரத்திலும் உயிரைத் துறக்கலாம். மாயையான வாழ்க்கைக்கு எந்த உத்தரவாதமும் இல்லை, ஏனெனில், அடுத்த கணம் என்ன நடக்கும் என்பதை எவரும் உறுதியாக அறிய முடியாது. கடவுளைத் தவிர அனைத்தும் மாயை. இந்த உலகமும் அதன் அனைத்து விவகாரங்களும் ஒன்றுமே இல்லாதவை, பொருளற்றவை என்று கூறுவது கூட அர்த்தமற்றது!

ஏக இறைவனான என்னை உணர்வது வேடிக்கை விளையாட்டல்ல! அகப்பார்வை படைத்தவர்களும், முறையாக நிலைகொண்டுள்ள சாதுக்களும் கூட, என்னைப் புரிந்து கொள்ளத் தவறிவிடுகிறார்கள். ஏனெனில், 'ஃபனா' - FANA ((முழுமையாக நிர்மூலமாதல்) என அழைக்கப்படும் நிலை, மிகக் குறுகியது முதல், பெரியதான அனைத்து மாயைகளுக்கும், ஏக இறைவனான உண்மைப்பொருளுக்கும் இடையில் நிலைகொண்டுள்ளது. 'ஷரியத்' நடைமுறை (THE PRACTICE OF SHARIAT), அதாவது, ஒருவரது மதத்தின் சட்டங்கள் மற்றும் கட்டளைகளுக்கு இணங்கி வாழ்வது, ஆறு நிலைகளைக் கொண்ட 'தரிகத்' (TARIQAT), அதாவது 'ஞானத்தின் பாதை'யை நோக்கி வழிநடத்தும். ஆனால் தரிகத்தின் முடிவு ஃபனாவில் உள்ளது.

உதாரணமாக உங்கள் உடல், உங்களின் மேல் ஓடு என்றும், ஆறு நிலைகளைக் கொண்ட ஞானத்தின் போக்கில் உங்கள் உடல் முழுவதும் உங்களால் அழிக்கப்பட வேண்டும் என்றும் கற்பனை செய்து பாருங்கள். ஒவ்வொரு கட்டத்திலும் உங்களின் வாயால், இதைத் துண்டு துண்டாக்கி நிர்மூலமாக்க வேண்டும். இறுதி கட்டத்தில், உங்களின் வாய் அதை உண்ண வேண்டும்! இதைத்தான் இறுதி ஃபனா என்று நான் சொல்கிறேன், அதனால்தான், என் உதவியின்றி என்னை உணர முடியாது என்று கூறுகிறேன்.

ஒவ்வோர் அவதார காலகட்டத்திலும், நான் மிகவும் வித்தியாசமாகத் தோற்றமளித்தாலும், எப்பொழுதும், ஆரம்பம் முதல் இறுதி வரை, ஒன்றாகவே இருக்கிறேன். நான் ஒரே நேரத்தில் வாழும் தெய்வீக வாழ்க்கையை வாழ்வதற்காக, மக்களுக்கு உதவும் நோக்கத்தில், அவர்கள் வாழும் உலக வாழ்க்கையை நானும் வாழ்கிறேன். மக்களின் இதயங்களில் நிலைபெற, எனக்கு மதம் சம்பந்தமான அமைப்புகள் தேவையில்லை. மாறாக, எனது பெயருக்குப் பின்னால் மத அமைப்புகளை ஸ்தாபிக்க நான் தேவைப்படுகிறேன். என்னை நேசிக்காதவர்கள் என்னைப் புரிந்துகொள்ளத் தவறுகிறார்கள்; எனது தெய்வீகத்தை உணராதவர்களும் அதைப் புரிந்து கொள்ளத் தவறுகிறார்கள்.

இங்கும், மேற்கத்திய நாடுகளிலும் என்னை நம்புபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், அன்பு, நம்பிக்கை, தியாகம், சேவை ஆகியவற்றை வெளிப்படுத்துவதன் மூலம், அவர்கள் என் இதயத்தை அடிக்கடி நெகிழச் செய்கிறார்கள்; மேலும், என்னில் அக்கறை இல்லாமல் இருப்பவர்கள் மற்றும் என்னை எதிர்ப்பவர்களின் அணுகுமுறையை நான் பொருட்படுத்துவதில்லை. ஆனால் உங்கள் கீழ்ப்படிதலை நான் தொடர்ந்து கவனித்து வருகிறேன், ஏனெனில் உங்களிடமிருந்து வேண்டிய அளவு கீழ்ப்படிதல் இல்லாத நிலையில், முழு உலகத்திலிருந்தும் அன்பை அடையப்பெறுவது வீண்.

நான் அடிக்கடி கீழ்ப்படிதலை வலியுறுத்தும்போது, நீங்கள் திட்டமிட்டு அல்லது வேண்டுமென்றே எனக்குக் கீழ்ப்படியவில்லை என்று

நான் அர்த்தப்படுத்தவில்லை. மாறாக, உங்கள் கடமை உணர்வை நான் மறக்கவில்லை.

சமீபத்தில், உதாரணமாக, போஃபலி, குடும்ப சாஸ்திரிகள் மற்றும் அவர்களது குடும்பத்து உறவுகள், என்மீதான அவர்களின் கடமை உணர்வு குறித்து, ஏராளமான சான்றுகளை வழங்கியுள்ளனர். போஃபலியின் மகன், ஒரு சிறந்த எம்.எஸ்சி. அறிவியலில் முதுகலைப் பட்டம் பெற்றவர். வாழ்க்கையின் முதன்மையான கட்டத்தில் ஒரு சிறிய நோயால் தாக்கப்பட்டு உயிரைத் துறந்தார். எனது நோக்கத்தில் அவர் தனது கடமையாக கருதியதை நிறைவேற்றுவதற்காக, போஃபலி, தனது மகன் இறுதி மூச்சை விடும் நேரத்திலும், மிகவும் தாமதமாகச் சென்றடைந்தார். இந்த சூழ்நிலையிலும், போஃபலியின் இளைய மகன்கள், 'அவர்கள் இன்னமும் எனது சகவாசத்திற்காக காத்திருக்கும்போது, அவர்களின் மூத்த சகோதரர் எனது சகவாசத்தில் ஏற்கனவே வந்துவிட்டார்' என்று எனக்கு எழுதுகிறார்கள்.

குடும்ப சாஸ்திரி, அவரது இளைய சகோதரர் காலமான வேளையிலும், உடனடியாக எனது வேலையின் நிமித்தம் அவரது வீட்டை விட்டு வெளியேறினார். மூத்த சகோதரராக, குடும்ப சாஸ்திரி, வழக்கப்படிக் கடைப்பிடிக்கும் இறுதிச் சடங்குகளைச் செய்யக் கூட காத்திருக்கவில்லை. மரணத்திற்காக வந்தவர்கள், இது குறித்து விசாரித்தபோது, குடும்ப சாஸ்திரி சொன்னதையே அவரது குடும்ப உறுப்பினர்களும் திரும்பத் திரும்ப சொன்னார்கள்: அவர் பாபாவை நேசித்தார், மேலும் அவரது பௌதீக உடலின் மேலாடையைக் களைந்துவிட்டார். பாபாவிற்குச் செய்யும் சேவையை, எந்தச் சடங்குகளையும் விட, எப்பொழுதும் மிகவும் முக்கியமானதாகவும், பலனளிக்கக் கூடியதாகவும் அவர் கருதியதால், பாபாவின் அவசரப் பணியை, உடனடியாகச் செய்ய வேண்டுமென, தனது இளைய சகோதரர் விரும்பி இருப்பார் என்று குடும்ப சாஸ்திரி உறுதியாக உணர்ந்திருந்தார்.

நீங்கள் நன்கு புரிந்துகொள்ள வேண்டும் என்று நான் விரும்புவது என்னவெனில், எனக்குக் கீழ்ப்படிவது, ஒருபோதும் காலங்கடந்ததாக நினைக்க வேண்டாம்; நீங்கள் இறுதிவரை எனக்குக் கீழ்ப்படிய வேண்டும்; எந்தப் பேரழிவிற்கும் ஆளாகாத தைரியத்துடன் நீங்கள் எனக்குக் கீழ்ப்படிய வேண்டும். மேலும், எல்லாவற்றிற்கும் மேலாக, நான் கார்மேகத்துடன் நேருக்கு நேர் நிற்கும்போது, நீங்கள் எனக்குக் கீழ்ப்படிய வேண்டியது இன்றியமையாதது.

ஆறு மாதங்கள், நான் கூறுவதற்கு நீங்கள் கவனமாக செவிமடுத்தால், அதற்குப் பின்னர் உங்களை நான் பார்த்துக்கொள்கிறேன். நான் மீண்டும் சொல்கிறேன், உங்கள் இழப்புக்கு எந்தப் பரிகாரமும் கிடைக்காதபோது, என்னை விட்டுவிட்டு, பிறகு வருந்தாதீர்கள். ஆறு மாதங்களுக்கு, எப்பாடு பட்டேனும் எனக்குக் கீழ்ப்படிவதை விட்டுவிடாதீர்கள் - என்ன வந்தாலும் - என்னை நினைவில்கொண்டு, நான் சொல்வதைச் செய்யுங்கள். உங்கள் முழு மனதுடன் என்னை மகிழச்

செய்வதற்கான உங்கள் தீர்மானத்திற்கு, பிற எல்லா எண்ணங்களையும் அடிபணியச் செய்யுங்கள்.

எனது மேலங்கியை நழுவ விடுவது எப்பொழுதுமே எளிதானது என்றாலும், அதை உறுதியாகப் பற்றிப் பிடிப்பது ஒருபோதும் எளிதானது அல்ல; அடுத்த ஆறு மாதங்களில், அது முன்பை விட மிகக் கடினமாக இருக்கலாம். ஆனால் நீங்கள் முழு மனதுடன் அவ்வாறு செய்ய முயற்சித்தால், நான் நிச்சயமாக உங்களுக்கு உதவுவேன். நீங்கள் ஒருமுறை நழுவ விட்டுவிட்டால், மீண்டும் எனது மேலங்கியைப் பற்றிக் கொள்வது, மிகவும் கடினம் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

ஸூஃபி குருநாதர்களின் சர்தார் (தலைவர்) என்று அழைக்கப்படும் பயாஸித், மிகவும் முதிர்ந்த வயதில் கடவுளை உணர்ந்தார்; மேலும் அவரது காலத்தின் ஐந்து பரிபூரண குருநாதர்களில் ஒருவராகவும் இருந்தார். ஒருமுறை, அவர் தன்னை மிகவும் நேசித்த இரண்டு சீடர்களிடம், அவர்களின் மிகப்பெரிய ஆசை என்ன என்று கேட்டார். ஒருவர் கூறினார்: “எனக்கு குருநாதர் வேண்டும்.” இரண்டாமவர் கூறினார்: “எனக்கு குருநாதரின் முழுநிறை இறை நிலை வேண்டும்.” இருவரும் விரும்பியது ஒரே விஷயம் என்றாலும், அவர்களின் அணுகுமுறையில் உலகளவு வித்தியாசம் இருந்தது. முதலாமவர், எல்லாவற்றிற்கும் மேலாக, தனது குருநாதரின் மகிழ்ச்சியை விரும்பினார், ஏனெனில் அவர் குருநாதரின் மீதான தனது பிடியை இறுதிவரை விட விரும்பவில்லை.

தொடர்ந்து பாபா பின்வரும் அறிவுரைகளை வழங்கினார்.

**இப்போது, ஆறு மாதங்களுக்கு, மார்ச் 1958 வரை:**

1. **நான் உங்களிடம் எதைக் கேட்டாலும் அதைச் செய்யத் தயாராகவும் உறுதியாகவும் இருங்கள்.**
2. **காமச் செயலில் ஈடுபடாதீர்கள்; கணவனும் மனைவியும் கூட பிரம்மச்சாரியாக இருப்பது நல்லது.**
3. **நேர்மையாக இருங்கள். நீங்கள் எவரையும் ஏமாற்ற வேண்டாம், தவறான நம்பிக்கை அல்லது வெற்று வாக்குறுதியை வழங்க வேண்டாம் என்று நேர்மை கோருகிறது.**
4. **பிறரின் உணர்வுகளைப் புண்படுத்தாமல் இருக்க, உங்களால் முடிந்தவரை முயற்சி செய்யுங்கள், ஆனால் காமச் செயலில் ஈடுபடும் அளவிற்கு அல்ல.**

**என்னிடம் சரணடையாதவர்கள் அல்லது அவ்வாறு செய்ய முடியாதவர்கள், ஆயினும்கூட, எனக்குக் கீழ்ப்படிய விரும்புபவர்கள், கடைசி மூன்று உத்தரவுகளை, அவர்களுக்கான எனது கட்டளைகளாகக் கருத வேண்டும்.**

முடிவில், பாபா அங்கிருந்தவர்களை உற்சாகமூட்டும் விதத்தில் உபதேசம் வழங்கினார்: “**இந்த ஆறு மாதங்களுக்கு நீங்கள் 100 சதவிகிதம் எனக்குக் கீழ்ப்படிய முயற்சிப்பீர்கள் என்றும், அமைதியாக என்னை**

**அரவணைத்துக்கொண்டு, அந்தத் தீர்மானத்தில் கவனம் செலுத்தி, நம்பிக்கைக்குரியவராக இருப்பீர்கள் என்றும், இங்கே, இப்பொழுதே தீர்க்கமான, அடுத்த கட்டத்திற்கான நிலைப்பாட்டை எடுங்கள்.**"

பாபா ஒவ்வொருவரையும் தழுவுவதற்கு முன்னர், அவர்களின் உறுதியான நிலைப்பாட்டில் கவனம் செலுத்துமாறு அவர்களுக்கு நினைவூட்டினார். மண்டலியில் ஒவ்வொருவருக்கும் ஆறு மாதங்களுக்கு, தனிப்பட்ட கடமைகள் வழங்கப்பட்டன, சகவாச ஏற்பாடுகள் குறித்து, மேலும் விவாதிக்கப்பட்டன. மெஹராஸாத்தில் மதிய உணவுக்குப் பின்னர் அனைவரும் புறப்பட்டுச் சென்றனர்.

ஒரு வாரத்திற்குப் பின்னர் 1957 செப்டம்பர் 15 ஞாயிற்றுக்கிழமை அன்று, பாபா அஹமதுநகர் தொழுநோயாளிகள் உறைவிடத்தில் 101 தொழுநோயாளிகளின் கால்களைக் கழுவி, ஒரு தாழ்வான நாற்காலியில் நிற்கச் செய்து, தலைவணங்கி, அவர்களுக்கு ஒரு ரூபாய் பிரசாதம் மற்றும் ஒரு பொட்டலம் இனிப்புகளை வழங்கினார். மண்டலியில் ஆதி சீனியர், பாவ் கல்சூரி, எரச், காக்கா பாரியா, ஜால்பாய், எல்சா மிஸ்திரி ஆகியோர் கலந்துகொண்டனர்; எல்சா அன்றைய தினம் மும்பைக்குப் புறப்பட்டுச் சென்றார். தொழுநோயாளிகளுடனான விழா தனிப்பட்டதாக இருந்தாலும், டாக்கே, காக்கா சிஞ்சோர்கர் மற்றும் அஹமதுநகரைச் சேர்ந்த மேலும் சிலரும் வந்திருந்தனர்; உடன் இணைந்த பீட்ரைஸ் வீகோவிடம் பாபா குறிப்பிட்டார்: "**இந்தத் தொழுநோயாளிகளின் உடலாகிய கூண்டுகளில் அழகான ஆன்மாக்கள் வாழ்கின்றன. நான் அவர்களைத் தலைவணங்கவில்லை; அவர்களின் காலடியில் எனது தலையை வைப்பதன் மூலம், கடவுள், கடவுளை வணங்குகிறார்! துன்பம் ஒருவரை கடவுளிடம் நெருங்கச் செய்கிறது, அதனால், இந்தத் தொழுநோயாளிகள் எனக்கு மிகவும் பிரியமானவர்கள்.**"

பாபா காலை 11:45 மணிக்கு மெஹராஸாத்திற்குப் புறப்பட்டுச் சென்றார்.

மேலுமொரு சகவாச கூட்டம், மெஹராஸாத்தில் 17ஆம் தேதி காலை 9:00 மணிக்கு நடைபெற்றது. மெஹராஸாத் மண்டலியுடன் பெண்டு, பாதிரி, விஷ்ணு, சிது, ஆதி சீனியர், ஸரோஷ், ஃபெராம் ஆகியோரும் கலந்துகொண்டனர். மூன்று நாட்களுக்குப் பின்னர் 20ஆம் தேதி, மெஹராஸாத்தில் வாழ்ந்த ஆண், பெண் மண்டலி அனைவரும் உபவாசம் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டனர், மேலும் அவர்கள் பாபாவின் சிறப்புப் பணி நிறைவடையும் வரை, ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் உபவாசம் கடைப்பிடித்தனர். பாபாவும் அவர்களுடன் உபவாசத்தில் பங்கெடுத்தார்.

1957 செப்டம்பர் 22 ஞாயிறு அன்று, பிம்பல்காவ்ம் கிராமத்துப் பள்ளி சிறுவர்கள் 101 பேர் (ஏழைக் குழந்தைகள்) மெஹராஸாத்திற்கு அழைத்து வரப்பட்டனர். பாபா அவர்களைத் தலைவணங்கி, சகன் தயார் செய்த பிரசாதப் பொட்டலத்தை (ஒரு ரூபாய் மற்றும் லட்டுகள்) ஒவ்வொருவருக்கும்

வழங்கினார். பாபாவிற்கு இடுப்புப் பாகத்தில் இன்னமும் கடுமையான வலி இருந்தபோதிலும், அவர் தனது பணியின் நிமித்தம், ஏழைகள் மற்றும் தொழுநோயாளிகளின் கால்களில் தலைவணங்கினார்.

பாபா, தனது இடுப்புப் பகுதியில் 'தளர்வான உணர்வு' என்று மருத்துவர்கள் விவரித்ததை அனுபவிக்க நேர்ந்தது. அவர் நடக்க கால்களை எடுத்து வைக்கும்போது, எலும்பு அந்த இடத்தில் சீராக அமர்வதை அவரால் உணர முடிந்தது. படுக்கும் வேளையிலும், பக்கவாட்டில் திரும்பும்போதும் இந்த உணர்வு இருந்தது. பாபா மற்றும் மண்டலிக்கு, மும்பையில் பணிபுரியும் ஒரு சிறப்பு உடல் சிகிச்சை நிபுணர் பற்றியும், அவர் நரம்பு இழைகளை அழுத்துவதன் மூலம் வலியைக் குறைக்கும் மருத்துவ முறையைக் கையாளுவதாகவும் தெரிவிக்கப்பட்டது; எனவே பாபா, மூன்று வாரங்கள் இந்த சிகிச்சையைப் பெறுவதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு, நரிமன் கேட்டுக் கொள்ளப்பட்டார்.

23ஆம் தேதி, மெஹராபாத் மண்டலி, மேலதிக விவாதங்களுக்காக மெஹராஸாத் திரும்பிச் சென்றனர். அதைத் தொடர்ந்து, பாபா, ஆதி சீனியருடன் அஹமதுநகர் திரும்பிச் செல்லவே, பாதிரி, பாபாவை மெஹராபாத்திற்கு அழைத்துச் சென்றார்; பாபா, மெஹராஸாத் திரும்புவதற்கு முன்னர் அனைத்து அன்பர்களையும் சந்தித்தார்.

கார் விபத்து வழக்கின் இறுதித் தீர்ப்புக்காக, நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டிய நிலையில், செப்டம்பர் 24 அன்று, எரச் சத்தாராவிற்குப் புறப்பட்டுச் சென்றார். நீதிமன்ற தீர்ப்பின்படி, அவர் விடுவிக்கப்பட்டார்.

அந்த நேரத்தில், பாபா, மெஹராஸாத் இல்லத்தின் மேல் தளத்தில் அமைந்த தனது படுக்கையறையைப் பயன்படுத்திக் கொண்டிருந்தார், அங்கு அவர் ஒவ்வொரு நாளும் கை நாற்காலியில் எடுத்துச் செல்லப்பட்டார். இரண்டாவது கார் விபத்துக்கு முன்னர், இரவு கண்காணிப்பாளர் எப்பொழுதும் பாபாவின் அறைக்கு வெளியே அமர்ந்திருப்பது வழக்கம், ஆனால் சமீபத்திய விபத்துக்குப் பின்னர், இரவு கண்காணிப்பாளர் பாபாவுடன் அறையில் அமர்ந்தார். காரணம், பாபா ஓய்வெடுக்கும்போது, அவரது கால்களில் திடீர் தசைத்துடிப்பு ஏற்படுவதுண்டு, எனவே கண்காணிப்பாளர் படுக்கையில் அமர்ந்து, பாபாவின் பாதங்களை அழுத்திவிட வேண்டியிருந்தது. செப்டம்பர் 26 அன்று இரவு, பாவ் கல்சூரி படுக்கையில் அமர்ந்து, பாபாவின் பாதங்களைப் பற்றிப் பிடித்துக் கொண்டு, ஒரு காலை பக்கவாட்டில் தொங்கவிட்டு அமர்ந்திருந்த அந்த நேரத்தில், பாபா சத்தமாக குறட்டை விட்டுக் கொண்டிருந்தார். இது தொடர்பாக, பாபாவின் சர்வ அறிவாற்றலை பாவ் கல்சூரி ஒருமுறை சத்தாராவில் அனுபவித்திருந்தாலும், 'பாபா ஒரு சாதாரண மனிதனைப் போல குறட்டை விடுகிறார். எனவே, அவதார புருஷர், எப்படி உணர்வு நிலையில் தூங்குவதாகக் கூற முடியும்?' என்ற எண்ணம் அவரைத் துன்புறுத்தியது.

திடீரென பாபா நகர்ந்து, தனது விரல்களை நொடித்து, சடக்கென்ற ஒலி எழுப்பவே, பாவ் கல்சூரி எழுந்து நின்றார்; இரண்டு கால்களும் தரையைத் தொட்டதும், காலருகில் அங்குல இடைவெளியில் ஒரு விஷப் பாம்பைக் கண்டார். பாபா, பாவ் கல்சூரியின் கவனத்தை அங்கே ஈர்க்காமல் இருந்திருந்தால், அது அவரைக் கடித்திருக்கும். படிக்கட்டுகளைத் தவிர வேறு வழியில்லாததால், பாம்பு இரண்டாவது மாடிக்கு வந்தது ஆச்சரியமாக இருந்தது, மேலும் நாய்கள் தொடர்ந்து தோட்டங்களில் அலைந்து திரிந்து, பாம்பைக் கண்டால் குரைக்கும் பழக்கம் இருந்தது.

பாபா பாம்பைக் கொல்லுமாறு பாவ் கல்சூரியிடம் சைகையால் தெரிவித்த போது, அவர் தனது வாழ்நாளில் ஒரு பாம்பைக் கூட கொல்லாததால், பாவ் மிகவும் சிரமப்பட்டு, அதன் தலையை நசுக்கினார். பாபா அவரிடம், "**நான் எந்த வகையான தூக்கத்தை அனுபவிக்கிறேன்?**" என்று கேட்டதும், பாவ் கல்சூரி சிரித்தார்; பாபா அவருக்கு நினைவூட்டினார், "**என்னால் ஒரு சாதாரண மனிதனைப் போல தூங்க முடியாது என்பதை நினைவில் கொள்ளுங்கள். நான் எப்பொழுதும் விழிப்புடன் இருக்கிறேன்! நான் எப்பொழுதும் முழு உணர்வு நிலையில் இருந்து, எனது உலகளாவிய பணியைச் செய்கிறேன்.**"

பாபா 28ஆம் தேதி மாலை 6:00 மணிக்கு, ஆண், பெண் மண்டலியுடன் ஒரு 'நடமாடும்' சர்க்கஸைப் (TRAVELING CIRCUS) பார்வையிட அஹமதுநகர் சென்றார். ஸரோஷ், ஆதி இருவரும் பெண்மணிகளை எவரும் பார்க்காதபடி, தனி அறை ஒன்றை ஏற்பாடு செய்திருந்தனர். பாபாவின் வருகை குறித்து, சர்க்கஸ் நிறுவன மேலாளருக்கு எப்படித் தெரிந்தது என்பது தெரியவில்லை. ஆனால் நிகழ்ச்சியின் முடிவில், மேலாளர், பார்வையாளர்களுக்கு முன்னிலையில் அழைத்து வந்த யானை ஒன்று பாபாவிற்கு மாலை அணிவித்தது. மேலும் பாபா வருகை தந்ததற்கு மேலாளர் தனது நன்றியைத் தெரிவித்தார்.

பாபா அன்பின் வெளிப்பாட்டைப் பாராட்டி, பின்னர் அவசரமாக வெளியேறினார். நிகழ்ச்சியின் எஞ்சிய பகுதிகளைப் பார்ப்பதற்கு பதிலாக, மக்கள் பாபாவை தரிசனம் செய்வதற்கான வாய்ப்புக்காகக் காத்திருந்தனர். குழப்பமடைந்த பாபாவும் பெண்மணிகளும் அமைதியாக கூடாரத்தை விட்டு வெளியேறி, மெஹராஸாத் திரும்பிச் சென்றனர். மேலாளரின் பக்தி, பாபாவிற்கு ஒரு சுமையாக மாறியது!

1957 செப்டம்பர் 29 ஞாயிறு அன்று, 8ஆம் தேதி நடைபெற்ற முந்தைய கூட்டத்தில் கலந்து கொண்ட அதே குழுவுடன், மெஹராஸாத்தில் சகவாச சபை குறித்த மற்றுமொரு கூட்டம் நடைபெற்றது. பாபா, அஹமதுநகர் அன்பர்களையும் அழைத்தார், ருஸ்தம் காக்கா மெல்லிசைப் பாடல்களைப் பாடி பாபாவை மகிழ்வித்தார். சகவாசத்தில் கலந்துகொள்ள வரவிருக்கும் மேற்கத்திய அன்பர்களுக்கான தங்குமிடங்கள் பற்றி விவாதிக்கப்பட்டது; ஸரோஷ், விலூ இருவரும் அதை நிர்வகிப்பதாக பாபாவிடம் உறுதியளித்தனர்.

பாபா, முந்தைய கூட்டத்தில் தெரிவித்த சிலவற்றை மீண்டும் கூறினார்:

**விதிக்கப்பட்ட அனைத்தையும் நிறைவேற்ற, நான் மேற்கொள்ளும் பணி, ஒரு மாபெரும் சக்தியை உருவாக்கி, எனது வருகையை அடையாளப்படுத்தும் விதத்தில் முத்திரை பதிக்கும். எல்லையற்ற, மாற்றமில்லாத உண்மைப்பொருள், வரையறுக்கப்பட்ட, மாறும் தன்மையுடைய ஒன்றின் மூலம் செயல்படும் போது, வழிமுறைகள் நிச்சயம் மாறுபடுவது மட்டுமின்றி வரம்பற்றதாகவும் இருக்கும். உருவாக்கப்பட்ட எதிரெதிர் சக்திகள் மிகப்பெரியவையாக இருந்தாலும், எனது பணிக்கு அனுகூலமாக இருக்கும். கார்மேகம் என்னை எதிர்கொண்டாலும், நான் எனது பணியை இடைவிடாமல் செய்கிறேன். எனது பணியின் ஒரு பகுதி, 1958 ஜூன் மாதத்திற்குள், என்னைப் பின்பற்றும் நூற்றுக்கணக்கான அன்பர்களுக்கு எனது சகவாசத்தை வழங்குவதாகும்.**

**நான் பணிபுரியும் வழிகளையும் முறைகளையும் புரிந்துகொள்ள முயற்சிக்காதீர்கள். கவலைப்படவோ, கேள்விகள் எழுப்பவோ வேண்டாம்; கீழ்ப்படிந்தால் மட்டும் போதும். எனது பணியைச் செய்யும் வேளையில், நான் கருத்தில் கொள்ளவேண்டிய பல கவனச்சிதறல்களில் இடுப்பு வலியும் ஒன்றாகும். ஏனெனில் கேள்விக்கு இடந்தராத கீழ்ப்படிதல், 100 சதவிகிதம் எனது அறிவுறுத்தல்களை மகிழ்ச்சியுடன் நிறைவேற்றுவது, எனது முடிவைக் கடைப்பிடிப்பதற்கான உங்கள் விருப்பம் - இவை அனைத்தும் எனது பணியில் உதவியாக இருக்கும். எனது அறிவுறுத்தல்கள் முரண்பாடாகவோ அல்லது முன்னும் பின்னுமாக இருப்பதாகத் தோன்றினாலோ, கவலைப்பட வேண்டாம். என்ன செய்ய வேண்டும் என்று எனக்குத் தெரியும். அதை, எப்படி செய்வது என்பதையும் நான் அறிவேன். நான் சொல்வதை நீங்கள் செய்ய வேண்டும். வேறு எதற்கும் கவலைப்பட வேண்டாம்.**

காலை 9.30 மணி முதல் மதியம் 3:00 மணி வரை நடந்த கூட்டத்தில், மதிய வேளையில் தேநீருடன் பஜ்ஜி வழங்கப்பட்டது. அனைவருக்கும் அவர்கள் உண்ணக்கூடியதை விட அதிகமாக கொடுக்கப்பட்டது, அதன் பிறகு குஸ்தாஜி எஞ்சியிருந்த பஜ்ஜிகளை தன்வசப்படுத்தி, பின்னர் அனுபவிக்க தனது அறைக்கு எடுத்துச் சென்றார். பாபா இதை அறிந்ததும், குஸ்தாஜியிடம், "**நீங்கள் சாக விரும்புகிறீர்களா? அந்த பஜ்ஜிகளையெல்லாம் உண்டால் நீங்கள் அழிந்து போவது உறுதி!**" அந்த நேரத்தில் இது எவருக்கும் தெரியாது என்றாலும், இது குஸ்தாஜிக்கு ஒரு முக்கிய குறிப்பைச் சுட்டிக்காட்டியது.

கூட்டத்திலிருந்து வெளியான முக்கியக் குறிப்புகள்: **1958 ஜூன் 15க்குப் பிறகு, சகவாச நிகழ்ச்சி எதுவும் நடக்க முடியாது என்று பாபா கூறினார். அவர் உலகின் கிழக்கு மற்றும் மேற்குப் பகுதிகளுக்கு சகவாசத்தை வழங்க வேண்டும், இரண்டும் ஒன்றிணைந்து நிகழும் பட்சத்தில் இது பிப்ரவரியில் மட்டுமே நடத்தப்படும்.**

ஆனால், தற்போதைய வலி காரணமாக, அவரது அசைவுகள் குறைந்தபட்சமாகக் கட்டுப்படுத்தப்படும் நிலையில், இதுபோன்ற சகவாச நிகழ்ச்சிகள் சாத்தியமில்லை. எனவே அவர் இரண்டு புதிய சிகிச்சை முறைகளை முயற்சிப்பதாகக் கூறினார்: ஒன்று மும்பையில் உள்ள ஒரு பிரபல ஆயுர்வேத மருத்துவரின் சிகிச்சை; அது உதவவில்லை என்றால், கோஹெர் தொடர்பு கொண்ட, கொல்கத்தாவில் வாழும் அமெரிக்கப் பயிற்சி பெற்ற வர்ம முறை மருத்துவ சிகிச்சை.

பாபா கூறினார்: **நவம்பர் மாத இறுதிக்குள்** (சிகிச்சைக்குப் பிறகு) **வலி நீங்கினால், 1958 பிப்ரவரியில் பன்னிரண்டு நாட்களுக்கு இந்தியாவில் கிழக்கும்-மேற்கும் ஒன்றிணைந்த சகவாசத்தை வழங்குவேன். தற்போதைய வலி அப்படியே இருந்தால், ஒருங்கிணைந்த சகவாசம் பெரும் சிரமத்தை ஏற்படுத்தும் என்பதால், கிழக்கையும் மேற்கையும் பிரித்து, 1958, பிப்ரவரி மாதத்தில் கிழக்கத்திய அன்பர்களுக்கும், மே மாதத்தில் நெருங்கிய மேற்கத்திய அன்பர்களுக்கும் மட்டுமே சகவாச நிகழ்ச்சிகளை வழங்குவேன். கடந்த காலத்தைப் போல விளம்பரமும், 'பொது' தரிசனமும் இருக்காது.**

பாபா '**ஐரோப்பாவிற்கோ இங்கிலாந்துக்கோ செல்லமாட்டேன்**' என்று குறிப்பிட்டார் (அங்கிருந்து அன்பர்கள் மர்டில் பீச் செல்ல வேண்டும்), ஆனால் அவர் ஆஸ்திரேலியா செல்வதாகத் திட்டம்.

கூட்டம் நிறைவடைந்ததும், அனைவரும் புறப்படுவதற்கு முன்பு, தாயம் (பகடை - GAME OF PACHISI) விளையாடுவது பரபரப்பான வெற்றி தோல்வியின்றி சமமாக முடிந்தது.

1957 செப்டம்பர் 30 அன்று பிம்பல்காவ்ம் கிராமத்தைச் சேர்ந்த 101 முதியவர்கள் மெஹராஸாத்திற்கு அழைத்து வரப்பட்டனர். அவர் முன்பு தொழுநோயாளிகள் மற்றும் குழந்தைகளுடன் செய்ததைப் போலவே, பாபா ஒவ்வொரு முதியவர் மற்றும் பெண்மணியையும் தலைவணங்கி, பத்து ரூபாயும், சகன் தயார் செய்த லட்டு பொட்டலத்தையும் தனது பிரசாதமாக வழங்கினார். ஸரோஷ் உயர் போலீஸ் அதிகாரி, ஆட்சியாளர் மற்றும் பொது அறுவை சிகிச்சை மருத்துவர் ஆகியோரை ஏழை நிகழ்ச்சியைப் பார்வையிட அழைத்து வந்தார், ஆனால் அவர்கள் தாமதமாக வந்தாலும், பாபா அவர்களுடன் சில நிமிடங்கள் உரையாடி, ஒவ்வொருவருக்கும் லட்டுகளைப் பிரசாதமாக வழங்கினார்.

அக்டோபர் 1ஆம் தேதி மதியம் 2:30 மணிக்கு குல்மாயை, அவரது 40-நாட்கள் நள்ளிரவு பிரார்த்தனைகள் நிறைவடைந்த பின்னர், ஆதி சீனியர் அழைத்து வந்தார். ஹோஷங் பரூச்சா அடுத்த நாள் விஜயம் செய்தார்; 3ஆம் தேதி பங்க்ராஜ் (மெஹராஸாத்தில் மூன்று நாட்கள் தங்குவதற்கு) மற்றும் ஸிகன்போரியா 4ஆம் தேதியும் வந்தனர். பாபாவின் செய்திகளை கோதாவரி மாய் மற்றும் பிற அன்பர்களுக்குத் தெரிவிக்க, ஆதி அவ்வப்போது ஸாக்கோரிக்கு அனுப்பப்பட்டார். அவர் அக்டோபர் 6ஆம் தேதி அங்குச் சென்று,

அடுத்த நாள் ஏ.சி.எஸ். சாரியுடன் (A.C.S. CHARI) மெஹராஸாத் திரும்பி வந்து பாபாவை சந்தித்தார்.

பாபா, கைக்கோபாத்துடன் தினமும் அரை மணி நேரம் தொடர்ந்து பணிபுரிந்தார். பாபா என்ன மகத்தான பணிபுரிகிறார் என்பதைக் குறித்து கைக்கோபாத் சிறிதும் சிந்தனை செய்யாமல், ஏழு இறை நாமங்களை ("யா எஸ்தான், அஹுரமஸ்தா, அல்லா, ஈஷ்வர், பரமாத்மா, சர்வ வல்லமையுள்ள கடவுள், பர்வர்திகார்!") திரும்பத் திரும்ப மொழிந்துகொண்டே இருந்தார்; ஒவ்வொரு பெயரையும் மொழிந்ததைத் தொடர்ந்து, கைக்கோபாத்தின் கால்களில் தலைவணங்குவதை பாபா பழக்கமாகக் கொண்டார்.

இந்தக் காலகட்டத்தில் இரவு கண்காணிப்பாளர்களில் ஒருவரான ஸவக் கொத்வாலின் உடல்நிலை மோசமாக இருந்ததால் ஒருவாரம் மும்பை செல்ல அனுமதிக்கப்பட்டார். எனவே பாவ் கல்சூரி மாலை 4:00 மணி முதல் அதிகாலை 4:00 மணி வரையிலும், குஸ்தாஜி காலை 4:00 முதல் 6:00 மணி வரை, இரண்டு மணிநேரம் கண்காணிப்புப் பணியை மேற்கொண்டனர். குஸ்தாஜியும் மௌனம் கடைப்பிடித்ததால், பாபாவும் அவரும் கை சைகைகளைப் பயன்படுத்தி உரையாடுவதை, பாபா மிகவும் ரசித்தார்.

குஸ்தாஜி கண்காணிப்புப் பணிக்காக வந்ததும், இது அவருக்குப் பிடிக்கும் என்பதை அறிந்த பாபா ஒரு பாட்டில் சோடா நீரைக் கேட்பதும், பாபா அதை ஒரு வாய் அருந்தி, பின்பு குஸ்தாஜிடம் அருந்தக் கொடுப்பதையும் வழக்கமாகக் கொண்டார். அவர் அதை அருந்தி முடித்ததும், பாபா இரண்டாவது பாட்டிலைக் கேட்டு, மீண்டும் அவ்வாறே செய்து வந்தது, காலை 6:00 மணி வரை தொடர்ந்தது; குஸ்தாஜி, பாபாவின் அறையிலிருந்து முகத்தில் ஒளிரும் புன்னகையுடன் திரும்பியது ஒரு சிறப்பான காட்சி. இந்தப் பரிமாற்றம், பாபா தனது பழங்கால தோழருடன் நிகழ்த்திய கடைசி பொழுதுபோக்காக இருந்தது.

1957 அக்டோபர் தொடக்கத்தில், மெஹராபாத்தில் நடந்த 1955 சகவாச நிகழ்ச்சிகளின் தொகுப்பு 'லிஸன் ஹியுமானிட்டி' (LISTEN HUMANITY) என்ற புத்தகத்தின் வடிவில் வெளிவரவே, அதன் நகல் விமான அஞ்சல் மூலம் அடையப்பெற்றது. இது டான் ஸ்டீவன்ஸால் திருத்தம் செய்யப்பட்டு, 'மறுசீரமைக்கப்பட்ட ஸூஃபியிஸம்' (SUFISM REORIENTED) வாயிலாக பாபாவால் வெளியிடப்பட்டது. பாபா அதில் மட்டற்ற மகிழ்ச்சியடைந்தார்; மேலும் எதிர்வரும் சகவாச நிகழ்ச்சிகளுக்கு முன்னர், இது முடிந்தவரை பரவலாகப் படிக்கப்பட வேண்டும் என்று அவர் விரும்பினார்.



மும்பை (MUMBAI), **1957**





# பூனா, மும்பை தரிசனம்
(**Darshan In Poona & Mumbai**)

1957 அக்டோபர் 8 செவ்வாய் அன்று, பாபா பல்வேறு மருத்துவ சிகிச்சைகளுக்காக மும்பை புறப்பட்டுச் சென்றார். அவர் முதலில் ஆதி சீனியரின் காரில் அமர்ந்து, வழியில், ஸரோஷ் மோட்டார் ஒர்க்ஸில் சிறிது நேரம் நின்றார்; அங்கு, பீட்ரைஸ் வீகோ அமெரிக்காவிற்குப் புறப்படுவதற்கு முன்பு, பாபாவுடனான அவரது தொடர்பின் இறுதி வாய்ப்பைப் பெற்றார். அஹமதுநகர் ரயில்வே சந்திப்புகளில் கார்களை மாற்றி, மெஹர்ஜியின் காரில் பெண் மண்டலியுடன் சவாரி செய்தார். அவர்கள் பன்வெல் (PANVEL) என்ற இடத்தில் தேநீர் அருந்துவதற்காக நின்ற வேளையில், சில பிச்சைக்காரர்கள் அவர்களை அணுக, சில நாணயங்கள் வழங்கப்பட்டன.

மும்பையில், பாபாவும் பெண்மணிகளும் ஆஷியானாவில் தங்கினர், அங்கு முன் அறையில் குளிரூட்டும் கருவி பொருத்தப்பட்டிருந்ததைப் பார்த்து, பாபா பாராட்டினார். எரச், பாவ் கல்சூரி, பைதூல், ஜால்பாய் ஆகியோரும் உடன் இருந்தாலும், இரவு நேரத்தில் தீனா தலாட்டியின் தாயார், ரூபாமாய் கரணியின் இல்லத்திற்குத் தூங்கச் சென்றனர். அஹமதுநகரிலிருந்து சகனும் அழைக்கப்படவே, அவர், பாவ் கல்சூரியுடன் இரவுக் கண்காணிப்புப் பணிகளைப் பகிர்ந்து கொண்டார். ஸவக் இன்னமும் முழுமையாக குணமடையாத நிலையில் மும்பையில் தனது குடும்பத்துடன் வசித்து வந்தார்.

ஆயுர்வேத மருத்துவர், டாக்டர் பச்சுபாய் (DR. BACHUBHAI), மும்பையில் பாபாவிற்கு சிகிச்சை அளிக்கத் தொடங்கினார். பாபாவின் இடுப்புப் பாகத்தை, பல்வேறு வகையான எண்ணெய்களால் மஸாஜ் செய்ய, அவர் ஆஷியானாவிற்கு வந்து, மேலும் சில உட்கொள்ளும் ஆயுர்வேத மருந்துகளையும் கொடுத்தார். ஆனால் திருப்திகரமான நிவாரணம் கிடைக்காததால், பாபா சிகிச்சையை 18ஆம் தேதியிலிருந்து நிறுத்திவிட்டார்.

மெஹர்ஜி ஒரு வாரத்திற்காக மும்பை வந்தபோது சிகிச்சை பற்றி விளக்கினார்:

மருந்து உதவுவதற்கு பதிலாக, சில நேரங்களில் வலி அதிகரித்ததோடு, பாபா, கால் எலும்புகளில் ஒரு கனத்தை உணர்ந்தார். இரவுகள் மிகவும் அமைதியற்று காணப்பட்டன... இந்த மும்பை பயணத்தினால் ஏற்பட்ட சிரமங்கள், நேரம், செலவுகள் அனைத்தும் காற்றில் பறந்துவிட்டன... பாபா, தனது சொந்த பணிக்காக, இந்தத் துன்பத்தையும் வலியையும் அல்லது நீங்கள் என்னவென்று அழைத்தாலும், அவர் அதைத் தன் மீது எடுத்துக்கொண்டார். எந்த அளவிலான மருத்துவ சிகிச்சையோ அல்லது வேறு ஏதேனும் முறையிலான வழிகளோ, அதற்குரிய நேரம் வந்தாலொழிய, அதைக் குறைக்காது; அதற்குப் பிறகு, பாபா தனது பழைய சுயமாகவே இருப்பார். உண்மையில், அவர் விரும்பியபடி தன்னை உருவாக்கிக் கொள்கிறார்.

ஆந்திராவைச் சேர்ந்த கோடூரி கிருஷ்ணா ராவ், கொவ்வூர் மையத்திற்காக, பாபாவின் உருவச் சிலையை எழுப்ப அனுமதி கோரி எழுதியிருந்தார். பாபா அதற்கு இணக்கம் தெரிவித்து, செப்டம்பர் மாதம் கணேஷ்கிந்தில் மீலன் ஸ்டுடியோவின் பிக்குபாய் (BHIKUBHAI) எடுத்த, பாபாவின் சில புகைப்படங்களை அடிப்படை குறிப்பீடாக வைத்துக்கொள்ள அறிவுறுத்தப்பட்டது. அக்டோபர் 9ஆம் தேதி, ஆதி சீனியர், 69 வயதான பி.வி. தாலிம் (B.V. TALIM) என்ற புகழ்பெற்ற சிற்பியின் ஸ்டுடியோவிற்குச் சென்றார். மஹாராஷ்டிராவில் தாலிம் ஒரு பழம்பெரும் சிற்பக் கலைஞராக இருந்தார். 1954ஆம் ஆண்டில், ஷிர்டியில் அமைந்த சாய்பாபாவின் கல்லறைக்கு மேல் வைக்கப்பட்டிருந்த அவரது புகழ்பெற்ற வெள்ளை இத்தாலிய பளிங்கு சிலையை அவர் உருவாக்கினார்.

ஆதி ஸ்டுடியோவில் பார்த்ததை விரும்பி, நாற்காலியில் அமர்ந்திருக்கும் பாபாவின் முழு மனித அளவிலான வெண்கலச் சிலைக்கு ரூ.16,000 விலை நிர்ணயம் செய்தார். பாபாவின் அனுமதியுடன், தாலிமின் மகன்/உதவியாளர் ஹரிஷ், (HARISH, 34, அன்று ஆஷியானாவில் பாபாவின் முகத்தின் சில அளவீடுகளை எடுத்தார். சில நாட்களுக்குப் பிறகு, பாபாவின் ஒரு ஜோடி கால்சட்டையும், ஒரு சத்ராவும் மெஹராஸாத்திலிருந்து அனுப்பப்பட்டு, தாலிமிடம் கொடுக்கப்பட்டது, இதனால் உருவத்தின் விகிதங்கள் துல்லியமாக இருக்கும்.

பாபா 8ஆம் தேதி ஆஷியானாவைச் சென்றடைந்ததும், பாவ் கல்சூரியிடம், **“நான் என்ன சொல்வதாக இருந்தாலும், உங்கள் உணவை முழுமையாக உண்ணுங்கள்”** என்று அறிவுறுத்தினார். பாபா கூறியதன் அர்த்தம் என்னவென்று பாவ் கல்சூரிக்கு முழுமையாகப் புரியவில்லை, ஆனால் அவர் அதைப் புரிந்துகொள்வதாகக் கூறினார். மாலையிலிருந்து நள்ளிரவு வரை, பாபாவின் அருகில், காவலில் இருக்க வேண்டியிருந்தாலும், அவர் ஒரு நாளைக்கு ஒரு வேளை மட்டுமே உணவருந்தினார்; எரச்சும் ஒரு நாளைக்கு ஒரு முறைதான் உண்ணுவது பழக்கம்.

முதல் நாள் இரவு, பாபா கூறினார், **“நாம் ஆஷியானாவில் தங்கியிருக்கும் போது, நிறைய நல்ல உணவுகள் கிடைக்கும், எனவே காலையில் ஒரு கப் தேநீர் மட்டும் அருந்திவிட்டு, பின்னர் இங்கே சாப்பிட வாருங்கள்.”** நள்ளிரவில், ரூபாமாய் இல்லத்திற்குச் செல்ல, ஏறக்குறைய ஒன்றரை மைல் தூரம் பயணிக்க வேண்டியிருந்தது; பின்பு, காலை ஏழு மணிக்கு ஆஷியானாவிற்குத் திரும்ப வேண்டும்.

மறுநாள் அனைவரும் மதிய உணவுக்கு அமர்ந்திருந்தபோது, பாபா, பாவ் கல்சூரிக்கு அருகில் அமர்ந்து கேட்டார், **“ஆமாம், நீங்கள் எவ்வளவு சாப்பிடுகிறீர்கள்? உங்கள் தட்டு நிரம்பி வழிகிறது! நீங்கள் ஒரு ராட்சசனா? இதையெல்லாம் சாப்பிட்டால், பிறருக்கு என்ன மிஞ்சும்?”**

மண்டலியை நோக்கி அவர் தொடர்ந்தார், "**பாவ் எவ்வளவு சாப்பிடுகிறார் பாருங்கள்! அவருக்கு என்ன மாதிரியான பழக்கம் பார்த்தீர்களா?**" மதிய உணவு முடியும் வரை, பாபா, பாவ் கல்சூரியை பிறர் முன்னிலையில் சிறுமைப்படுத்திப் பேசிக்கொண்டே இருந்ததால், அதை நினைத்து அவர் மிகவும் வருத்தப்பட்டார். பாவ் கல்சூரியின் அகோரப் பசியைக் குறித்த பாபாவின் கேலி, கிண்டல்கள், மதிய உணவு நேரத்தில், தினசரி சடங்காக மாறியது, எனவே பாவ், ஒரே ஒரு ரொட்டியை மட்டுமே எடுக்கத் தொடங்கினார். இப்படியே இருபது நாட்கள் கடந்தன, ஆனால் பாபா, ஒரு நாளும் அவரை விட்டபாடில்லை, மதிய உணவிற்காக அமரும் போதெல்லாம் அவரைக் கிண்டல் செய்து, தொந்தரவு செய்தார். ஒவ்வொரு நாளும், பாபா வந்து அவருக்கு அருகில் அமர்ந்து, அவரைப் பற்றியும் அவரது பசியைப் பற்றியும் பலவிதமான கருத்துகளையும் விமர்சனங்களையும் கட்டவிழ்த்து விடுவது வழக்கமாக இருந்தது.

ஒவ்வொரு நாளும் மதிய உணவு நேரம் நெருங்கும் போதெல்லாம், பாவ் பதற்றமடையத் தொடங்கினார்; மேலும், சிறிது நேரம் கழிப்பறைக்குச் செல்வது போல பாசாங்கு செய்து, தனது ஒரே ஒரு ரொட்டித் துண்டை மட்டுமே உண்ணும் எண்ணத்தில் மீண்டும் மேசைக்கு வரும் நேரத்தில், பாபா அவரை சும்மா விடமாட்டார்.

இறுதியாக ஒரு நாள் பாவ், எரிச்சலின் உச்சத்தில் பாபாவிடம், "நாளை முதல் நான் உணவு உண்ண வரமாட்டேன். ஒரு நாளைக்கு எட்டு அணாக்கள் (50 நயாபைசா) கொடுங்கள், வெளியில் நானே உணவுக்கான ஏற்பாடுகளை செய்து கொள்கிறேன். கடந்த மூன்று வாரங்களாக ஒரு துண்டு ரொட்டியில் நான் வாழ்ந்து வருகிறேன்; இருந்தும் நீங்கள் என்னை விட்டபாடில்லை, நான் ஒரு ராட்சசனைப் போல சாப்பிடுகிறேன் என்று என்னைக் கேலி செய்கிறீர்கள்!"

அதற்கு பாபா, "**என்ன ஒரு முட்டாள் நீங்கள்! முதல் நாளே, 'நான் என்ன சொல்வதானாலும், உங்கள் உணவை முழுமையாக உண்ணுங்கள்' என்று சொன்னேன். அப்படித்தானே? ஆனால் நீங்கள் எனக்குக் கீழ்ப்படியவில்லை. என் கட்டளையை மீறினீர்கள். மேலும், ஒவ்வொரு நாளும் நீங்கள் சாப்பிடாமல் எனது கட்டளையை பின்பற்றாத போது, நீங்கள் என் இதயத்தை நொறுக்கினீர்கள்! நீங்கள் நன்றாக உண்ணாதபோது நான் எவ்வளவு வேதனை அடைந்தேன்**" என்று கூறினார்.

பாவ் கல்சூரி தனது தவறை உணர்ந்து, தொடர்ந்து சாப்பிடத் தொடங்கினார். பாபா அவரை இடைவிடாது கிண்டலும் கேலியும் செய்தார், ஆனால் அதையும் மீறி, பாவ் இப்போது உண்டதில் பாபா மகிழ்ச்சி அடைந்தார்.

கதை இத்துடன் முடிந்துவிடவில்லை. ஆறு மாதங்களுக்குப் பிறகு, பாபா மீண்டும் பூனா, கணேஷ்கிந்தில் தங்கியிருந்தபோது, பல மும்பை மற்றும் பூனா அன்பர்கள் அங்கு அழைக்கப்பட்டனர். மதிய உணவு நேரத்தில், அனைவரும் உண்ண அமர்ந்தனர், பாபாவும் பாவ் கல்சூரிக்கு எதிரே ஒரு நாற்காலியில் அமர்ந்தார். அனைவரின் முன்னிலையிலும் பாவ் கல்சூரியிடம், "**எப்படி**

**ராட்சசனைப் போல் உண்கிறீர்கள்? அப்படி உண்டால் பிறர் பசியால் வாடுவார்கள்!**” பாவ், அவர் கூறியதைக் கேட்காதது போல, தொடர்ந்து உணவு உண்பதில் கவனம் செலுத்தியபோது, பாபா கூறினார், “**இவர் எவ்வளவு வெட்கமற்றவர் என்று பாருங்கள்! அதிக உணவை உண்பதாக நான் அவருக்குச் சொல்லிக்கொண்டே இருக்கிறேன், அவர் மேலும் அதிக உணவை வாயில் திணிக்கிறார், இதைத்தான் வெட்கக்கேட்டின் உச்சம் என்பது.**”

அங்கிருந்தவர்கள் பாவ் கல்சூரியை முறைத்துப் பார்த்தனர், ஆனால் பாபாவிற்குக் கீழ்ப்படிந்து அவர் சாப்பிட்டுக்கொண்டே இருந்தார். பாபா அவரை தொடர்ந்து விமர்சித்தார்; ஸொராப்ஜி ஸிகன்போரியா அவரது செயல்களால் குழப்பமடைந்து, பாவ் கல்சூரியைப் பார்த்தார். பாவ் என்ன சொல்ல முடியும்? உண்மை என்னவெனில், ஒரு நாளைக்கு, ஒரு முறை உணவு உட்கொள்ளுவதை ஒப்பீட்டளவில் பார்த்தால், பிறரை விட குறைவாகவே இருந்தது.

உணவுக்குப் பிறகு பாபா வெளியேறியதும், இதர அன்பர்கள் பாவ் கல்சூரியிடம் வினவினர், “நீங்கள் மண்டலியில் ஒருவர், நீங்கள் எப்படி பாபாவிற்கு கீழ்ப்படியாமல் இருக்க முடியும்?”

“எனக்கு மிகவும் பசியாக இருந்தது,” பாவ் பதிலளித்தார்.

“ஆனால் நீங்கள் உண்ணக்கூடாது என்பது பாபாவின் விருப்பமாக இருந்தது. ஒரு வேளை உணவை மட்டும் உண்ணாமல் இருந்தால், அது உங்கள் உயிரைப் பறித்துவிடுமா? இவ்வளவு சிறிய காரியத்தை உங்களால் செய்ய முடியாதபோது, நீங்கள் எப்படி சீராக பாபாவிற்கு சேவை புரிய முடியும்?”

சிரித்துக்கொண்டே பாவ் பதிலளித்தார், “நான் எனது வயிற்றுக்கு மட்டுமே சேவை புரிகிறேன்; அது எப்படித் தோன்றினாலும், உண்மையில் அது பாபாவின் விருப்பத்திற்கு எதிரானது அல்ல.”

மாலையில் அவர் பாபாவிடம் சென்றபோது, பாபா அவரை ஆரத்தழுவி, “**இன்று, நான் உங்களால் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். அவமானத்திற்குள்ளானாலும் 100 சதவிகிதம் எனக்குக் கீழ்ப்படிந்தீர்கள்**” என்று கூறினார்.

ஒரு நாள் ஆஷியானாவில், அர்னவாஸ் உடல்நிலை சரியில்லாமல் இருந்ததால், பாபா அவரிடம் தூங்குவதற்கு முன்னர், அனாசின் (ANACIN) மாத்திரையை எடுத்துக் கொள்ள அறிவுறுத்தினார். அன்று இரவு, பாபா அவரது அறையில் பாவ் கல்சூரியுடன் இருந்த வேளையில், அர்னவாஸ், இரவு ஓய்வெடுக்கச் செல்வதற்கு சற்று முன்னர், அவருக்கு அனாசின் பற்றி நினைவு வந்தது; ஆனால் இப்போது, எல்லா கடைகளும் மூடப்பட்டிருந்ததால், வெளியே சென்று வாங்கிவரவும் முடியாத நிலை. வீட்டில் சில மாத்திரைகள் இருந்தன, ஆனால் அது பாபா பயன்படுத்திய அறையில் இருந்தது, பாபா படுக்கைக்குச் சென்ற பின்னர் அவரைத் தொந்தரவு செய்வது, நினைத்துப் பார்க்க முடியாத

ஒன்று. எரச், பாபாவின் கட்டளையை அர்னவாஸ் மீறுவதைத் தவிர்க்க, உள்ளே சென்று அவருக்காக சிலவற்றை எடுத்து வருவதாகக் கூறினார்.

எரச் கவனமாகக் கதவைத் திறந்து, மெதுவாக உள்ளே சென்றபோது, பாபா, சத்தமாக குறட்டை விட்டுக் கொண்டிருந்தார். பாட்டிலை எடுத்துக்கொண்டு எரச் சத்தம் செய்யாமல் வெளியே வந்த பெருமையுடன், மருந்தை அர்னவாஸிடம் கொடுத்தார், மேலும் கடவுளுக்குத் தெரியாமல், அவர் எதிரே இருந்து எதையாவது திருடக்கூடிய, அவரது புத்திசாலித்தனத்திற்காகப் பெருமிதம் அடைந்தார்.

ஆனால் எரச் சென்றவுடன், பாபா தூக்கத்திலிருந்து விழித்து, '**அறைக்குள் வந்தவர் யார்**' என்று பாவ் கல்சூரியிடம் கேட்டபோது, அவர் நடந்ததைக் கூறினார். அவர் ஆழ்ந்த தூக்கத்தில் இருப்பதுபோலத் தோன்றினாலும், யாரோ அறைக்குள் நுழைந்ததை பாபா அறிந்துகொண்டதை நினைத்து அவர் ஆச்சரியப்பட்டார். எரச்சை அழைக்கும்படி பாபா, பாவ் கல்சூரிக்கு சைகையால் தெரிவிக்க, அவர் வந்ததும் தனது அறைக்குள் நுழைந்ததற்கான காரணத்தைக் கேட்டார். எரச் உண்மையை அவரிடம் கூறியபோது, பாபா எச்சரித்தார், "**நான் எனது தூக்கத்திலிருந்தாலும், எல்லாவற்றையும் பார்க்கிறேன் என்பதை நினைவில் கொள்ளுங்கள்!**" எரச்சின் தந்திரம் தலைகீழாக மாறியது, பின்னர் அவர், பாபாவிடம் ஏன் சொன்னீர்கள் என்று கேட்டதற்கு, பாவ் கல்சூரி கூறினார்: "நான் அவரிடம் எதுவும் கூறவில்லை! அறைக்குள் யார் நுழைந்தார்கள் என்று அவரே கேட்டார்."

மும்பையில் தங்கியிருந்த இந்த வேளையில், பாபா தமது சர்வ ஞானத்தைக் குறித்த மற்றுமொரு சான்றை வழங்கினார். பைதூலின் மகள் ஸர்வர் (SARWAR) திருமணமாகி, தனது கணவர் ஜஹாங்கிர் தாராபூர்வாலாவுடன் (JEHANGIR TARAPOREWALA) மும்பையில் வாழ்ந்து வந்தார். ஒருமுறை தம்பதியினருக்கு இடையே கடுமையான தகராறு ஏற்படவே, ஸர்வர் மிகவும் மனமுடைந்து, அவர், ஜஹாங்கிரை விட்டு வெளியேற முடிவு செய்தார். அதே நேரத்தில், பாபா ஆஷியானாவில் இருந்தார்; ஒரு குறிப்பிட்ட மஸ்தை அவரிடம் அழைத்து வராத சாக்குப்போக்கில் பைதூலைக் கடுமையாகக் குற்றம் சாட்டினார். திடீரென பாபா, "**போய் ஸர்வரை உடனே இங்கு அழைத்து வாருங்கள்**" என்று அறிவுறுத்தினார்.

ஸர்வரின் குடியிருப்பு இரண்டு மைல் தொலைவில் இருந்தது. பைதூல் ஒரு வாடகைக்காரில் சென்ற அந்த நேரத்தில், ஸர்வர் தனது பெட்டி பைகளுடன் கதவைத் தாண்டி, வெளியே வந்து கொண்டிருந்தார்! பாபா, ஸர்வரை அழைத்து வர விரும்புவதாக பைதூல் அவரிடம் தெரிவித்தபோது, அவருடைய இந்த இக்கட்டான நிலையை பாபா அறிந்திருக்க முடியுமா என்று நினைத்து ஆச்சரியப்பட்டார். பெட்டி பைகளை வீட்டில் வைத்துவிட்டு, தனது தந்தையுடன் சென்றார். தம்பதியினருக்கு இடையே ஏற்பட்ட மோதல் குறித்து பைதூலுக்கு எதுவும் தெரியாது, ஸர்வரும் அவரிடம் எதுவும் சொல்லவில்லை.

ஆஷியானாவிற்கு வந்ததும், பாபா, ஸர்வரை ஐந்து நிமிடம் அமைதியாக அமருமாறு அறிவுறுத்தினார்; குற்ற உணர்வுடன் அவர் கீழ்ப்படிந்தார். அவருடைய கோபம் தணிந்ததும், பாபா, ஸர்வரிடம், **"கோபம் மிகவும் மோசமான விஷயங்களில் ஒன்றாகும், அதை விழுங்கக் கற்றுக்கொள்ள வேண்டும். நீங்கள் என்னுடன் பல வருடங்கள் மெஹராபாத்தில் இருந்துள்ளீர்கள்; ஆதலால், நீங்கள் பிறருக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும்."** பாபாவின் வார்த்தைகள் ஸர்வர் மனதை நெகிழச் செய்தது; மனமார மன்னிப்புக்கோரி, அவர் மிகுந்த வருத்தத்தில் ஆழ்ந்தார். பாபாவின் சர்வ ஞானத்தை அவர் இவ்வாறு நம்பியதோடு, அந்த அனுபவம், அவருடைய வாழ்நாள் முழுவதும் அவருக்கு உத்வேகமாகத் திகழ்ந்தது.

மும்பையில் தங்கியிருந்த வேளையில், கோஹெரின் சகோதரி கேட்டி, பாபாவைத் தனது விகட நயம் மிக்க வேடிக்கையான கதைகளால் மகிழ்வித்தார்; அதேபோன்று ஜிம் மிஸ்திரி, பாபாவைத் தனது புத்திசாலித்தனம் மற்றும் நகைச்சுவைகளால், மகிழ்ச்சியான மனநிலையில் இருக்கச் செய்தார்.

1957 அக்டோபர் 20 ஞாயிறு அன்று, கோர்ஷெத் கண்பார்வையற்ற பாடகர் ஒருவரை ஆஷியானாவிற்கு அழைத்து வந்தார். அவருடைய ஒவ்வொரு கையிலும் இரண்டு விரல்கள் இல்லாதபோதும், அவர் ஹார்மோனியத்தை நன்றாக வாசிக்க முடிந்தது; அவர் பாடிய பல கஸல்களை பாபா மிகவும் ரசித்தார்.

அவர்கள் மும்பையில் இருந்ததாலும், பாபா, ஆயுர்வேத மஸாஜ் செய்வதை நிறுத்திவிட்டதாலும், டாக்டர் தல்வால்கரை மீண்டும் கலந்தாலோசிக்க கோஹெர் பரிந்துரைத்தார். அவர் புதிய எக்ஸ்-ரேக்களை எடுக்க அறிவுறுத்தினார், எனவே மண்டலி, பாபாவை நன்கு பிரபலமான கதிரியக்க நிபுணர் டாக்டர். எல்.எச். அட்லேயிடம் (DR. L.H. ATHLE) அழைத்துச் சென்றனர், அவருடைய மருத்துவமனை, 'குயின்' மற்றும் 'சார்னி' சாலைகளின் (QUEEN AND CHARNI) சந்திப்பில் அமைந்திருந்தது. புதிய எக்ஸ்-ரேக்கள் டாக்டர் தல்வால்கரிடம் காட்டப்பட்டபோது, அவர் சில உட்கொள்ளும் மருந்துகளைப் பரிந்துரைத்தார்.

செப்டம்பரில், டாக்டர் கோஹெர் ஒரு வர்ம முறை மருத்துவரைத் தேடத் தொடங்கினார், மேலும் ஏ.சி.எஸ். சாரி மூலம், அவர் கொல்கத்தாவில், அமெரிக்க பயிற்சி பெற்ற, ஆமீனிய வம்சாவளியைச் சேர்ந்த, மருத்துவர் எம். அலெக்ஸாண்டரைத் (ARMENIAN DESCENT, DR. M. ALEXANDER) தொடர்பு கொண்டு, பாபா அங்கு சிகிச்சைக்காகச் செல்வதற்கான சாத்தியக்கூறுகள் பற்றி விவாதித்தார். பாபாவின் எக்ஸ்-ரேக்கள் அனுப்பி வைக்கப்பட்டன, டாக்டர் அலெக்ஸாண்டரின் கருத்துப்படி, உடல் வர்ம சிகிச்சை மூலம் பாபா நிச்சயமாக பயனடைவார் என்று சாரி எழுதினார்.

பாபா மண்டலியுடன் மும்பையில் இருந்தபோது, நியூயார்க் நகரில் வாழ்ந்த அடீல் வோல்கினிடமிருந்து (ADELE WOLKIN), டாக்டர் கோஹெருக்கு ஒரு கடிதம் வந்தது. அடீல் ஒரு மருத்துவமனையில் செவிலியராகப் பணிபுரிந்து

வந்தார், மேலும் பாபாவிற்குத் தேவையான மருந்துகள் அல்லது வேறு எதையும் அனுப்புவதன் மூலம், அவரால் முடிந்த விதத்தில் உதவ முன்வந்தார். அடீல் தனது கடிதத்தில், 1956ஆம் ஆண்டு அமெரிக்காவில், பாபாவை சந்தித்த கண்பார்வையற்ற வர்ம முறை மருத்துவர் டாக்டர் ஹாரி கென்மோர் (HARRY KENMORE), பாபாவின் வலியைப் போக்க உதவும் சரியான மருத்துவராக இருக்கலாம் என்று பரிந்துரைத்தார். கொல்கத்தா வர்ம முறை மருத்துவரைத் தொடர்பு கொள்வதற்கான முயற்சிகளைப் பற்றிய குடும்பக் கடிதத்தைப் படித்த பிறகு, டாக்டர் கென்மோர், டாக்டர் கோஹெருக்குக் கடிதம் எழுதி, தனது சேவைகளை வழங்கி, பாபா, கால்சியம்-பாஸ்பரஸ் (CALCIUM-PHOSPHOROUS) கரைசலை உட்கொள்ளத் தொடங்குமாறு பரிந்துரைத்தார். டாக்டர் ஹாரி கென்மோரை இந்தியாவிற்கு அழைக்குமாறு பரிந்துரைத்த அடீலின் கடிதத்தை கோஹெர், பாபா முன்னிலையில் வாசித்தார். 1957 அக்டோபர் 23 அன்று, அந்த வருடம் நவம்பர் 1ஆம் தேதிக்குப் பின்னர், இந்தியா வருவதற்கான பயணச்சீட்டு, எந்த விமானத்தில் முதலில் கிடைத்தாலும் வருமாறு கென்மோருக்கு ஒரு தொலைத்தந்தி அனுப்பப்பட்டது.

அவர்கள் பாபாவிற்கு அதிக அளவில் உதவியாக இல்லாவிடிலும், டாக்டர் தல்வால்கர் மற்றும் டாக்டர் அட்லேயின் முயற்சிகளில் பாபா மகிழ்ச்சியடைந்தார். பாபா எப்பொழுதும் மருத்துவர்களுக்கான கட்டணத்தை வழங்க வேண்டும் என்று வலியுறுத்தி கூறினார்; ஆனால் இருவரும், சிறப்பான, நன்கு அறியப்பட்ட மருத்துவர்கள், அவரிடமிருந்து எந்தப் பணத்தையும் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டனர். கோஹெர், டாக்டர் அட்லேயிடம் எக்ஸ்ரே செலவுக்குப் போதுமான பணத்தையேனும் வழங்க முயன்றார், ஆனால் அதையும் அவர் மறுத்துவிட்டார். தீபாவளி தினமாக இருந்ததால், பாபா, கோஹெரிடம் இரண்டு பழைய வெள்ளி நாணயங்களைக் கொடுத்து, ஒவ்வொரு மருத்துவருக்கும் ஒரு நாணயத்தை வழங்குமாறு அறிவுறுத்தினார். பாபாவின் அன்புப் பரிசு, அவர்களின் இதயங்களை ஆழமாகத் தொட்டதோடு, அவர்கள் பாபாவிடமிருந்து அடையப் பெற்ற நாணயத்தை பொக்கிஷமாகப் பாதுகாத்து வைப்பதாகக் கூறினர்.

அன்று தீபாவளி என்பதால் ஆஷியானா அடுக்குமாடி குடியிருப்புக்கு வெளியே, இரவு முழுவதும் பட்டாசு வெடிக்கும் சத்தம் கேட்டுக்கொண்டிருந்தது. பாபா கூறினார்: **“இவை அனைத்தும் சந்திரனும் நட்சத்திரங்களும் என் ஒளியின் மங்கலான மாயையின் எதிரொலியாகும். நானே முழு இறை ஒளி!”**

அக்டோபர் 24ஆம் தேதி மதியம் 2:00 மணிக்கு பாபா, உபவாசத்தைத் தொடங்கி, 24 மணிநேரமும் தண்ணீர் மட்டுமே அருந்தி வந்தார். அவர் மும்பையில் இருந்த வேளையில், பாபா, எப்போதேனும் மண்டலியுடன் நெரிசலான வீதிகளில் காரில் சென்றாலும், பெரும்பாலும் அவர் தனது அறைக்குள்ளேயே இருந்தார்; சில நேரங்களில் இசைத்தட்டு ஒலிப்பதிவைக் கேட்பதை பழக்கமாகக் கொண்டார் அல்லது ஆண் மண்டலியுடன் கேரம்

விளையாடினார். பைதூல், ஆஷியானாவில் அவ்வப்போது அழைத்து வந்த மஸ்துகளுடன் பாபா தனிமையில் அமர்ந்தார். (அவரது 75-நாட்கள் சிறப்புப்பணி தொடர்பாக மஸ்துகளைத் தொடர்பு கொண்டார் என்பதில் ஐயப்பாடு எதுவும் இல்லை, இந்த சிறப்புப்பணி பாபா மும்பையில் இருந்தபோது நிறைவுக்கு வந்தது.)

1957 அக்டோபர் 27 ஞாயிறு அன்று, பாபா அவரது நெருங்கிய மும்பை அன்பர்களுக்கு தரிசனம் வழங்க அனுமதித்தார்; கிட்டத்தட்ட 400 பேர் ஆஷியானாவிற்கு வந்தனர். அனைவரும் பழைய அன்பர்கள். இதர சமயங்களில் அவர் இருந்ததை ஒப்பிடுகையில், பாபா அவர்களுடன் மிகவும் சுதந்திரமாக, கேலி செய்து பேசி உரையாடினார்.

ஜிம்-ரோடா மிஸ்திரி அவர்களின் மூன்று இளம் மகன்களான மெஹர்வான் (MEHERWAN), ஃபாலு (FALU), ஸரோஷ் (SAROSH) ஆகியோருடன் தரிசனத்தில் கலந்து கொண்டனர். பாபா, ஜிம்மிடம், "**மூவரில் யார் மிகவும் சைத்தானைப் போல் இருப்பவர்?**" என்று கேட்டதற்கு அவர், "அந்தப் பெருமை ஸரோஷையே சேரும்" என்றார்.

எனவே பாபா, ஸரோஷிடம், "**என் அருகில் அமருங்கள், குறும்பு எதுவும் செய்யாதீர்கள்!**" என்றார். ஸரோஷுக்கு மூன்று வயது, பாபாவின் அருகில் தரையில் கால்களைக் குறுக்காக வைத்துக்கொண்டு, கண்களை மூடி தியானம் செய்வது போல் அமர்ந்திருந்தான். தரிசனத்தின் போது, ஸரோஷ், பாபாவைப் பார்க்க, சற்றே கண்களைத் திறந்த ஒவ்வொரு முறையும் பாபா அவனைக் கண்டுபிடித்து, தரிசனத்திற்காக வந்தவர்களிடம் சுட்டிக்காட்டி, "**இந்த இளம் யோகியைப் பாருங்கள்! அவன் சமாதியில் அமர்ந்திருக்கிறான், ஆனால் அதி புத்திசாலி. அவன் கடைக்கண் வழியாக என்னைப் பார்க்கிறான்**" என்றார்.

ஸரோஷ் பற்றிய இந்த சம்பவத்தை பாபாவிடம் ரோடா விவரித்தார். ஒரு நாள் ரோடா அவனிடம், தாயாரின் உதவி இல்லாமல் கழிப்பறைக்குச் செல்லும் அளவுக்கு அவன் இப்போது பெரியவன் ஆகி விட்டான் என்று கூறினார். ஸரோஷ் குளியலறைக்குள் நுழைந்து, கழிவுக் கலம் மீது அமர்ந்தான். கழிப்பறைக்குச் சென்ற பின்பு, சிறுவன் ஒரு குவளை தண்ணீரைக் கையில் ஏந்தி, "அவதார் மெஹர் பாபாவிற்கு ஜெய்!" என்று சத்தமாக கத்தி, பின்னர் அவன் தன்னைத் தானே கழுவி சுத்தம் செய்தது, தாயாருக்கு மிகவும் வேடிக்கையாக இருந்தது. அதைக் கேட்ட பாபாவும் அடக்கமுடியாமல் மனம்விட்டுச் சிரித்துக்கொண்டே, ரோடாவிடம், "**நான் உங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்று ரத்தினங்களைக் கொடுத்துள்ளேன்**" என்று கூறினார்.

கர்மன் மாஸியும் தரிசனத்திற்காக வந்தார்; அவர் ஒரு தடித்த, உருளையைப் போலத் தென்பட்டார். பாபா அவரைக் கிண்டல் செய்தார்: "**கர்மன் மாஸி, நீங்கள் பலவீனமாகத் தெரிகிறீர்கள்! உங்களைப் போர்க்களத்திற்குப் போராட அனுப்ப வேண்டும்!**"

ஸூனாமாஸியும் அவரது மகள் கோர்ஷெத்தும் தரிசனத்தில் கலந்து கொண்டனர். இருவரும் 1949இல் 'புது வாழ்வு' (NEW LIFE) தொடங்கியதிலிருந்து மும்பையில் தங்கியிருந்தனர்; எப்போதாவது மட்டுமே பாபாவை தரிசிக்க அனுமதிக்கப்பட்டனர். பாபாவை விட்டு விலகி வாழ்வதில் ஸூனாமாஸி பரிதாபமாகக் காணப்பட்டார்; பாபா அவரிடம், **"நான் உங்களை ஒதுக்கி வைக்கிறேன் என்று நினைக்காதீர்கள். தொலை தூரத்தில் இருக்கச் செய்து, உங்களை என்னுடன் நெருக்கமாக வைத்திருக்கிறேன்"** என்று உறுதியளித்தார்.

ஜால் மற்றும் டாலி தஸ்தூரிடம் பாபா, **"உங்களிடையே எப்போதேனும் சண்டை சச்சரவுகள் நிகழ்வதுண்டா?"** என்று கேட்டார்.

ஜால், "சில நேரங்களில்" என்று பதிலளித்தார்.

**"அப்படியானால், நீங்கள் அதை எப்படிச் செய்கிறீர்கள் என்று பார்க்கிறேன்!"** என்றதும், இருவரும் அடக்கமுடியாமல் சிரித்தனர்; ஆனால் டாலியின் தாயார் ஸூனாமாஸி எஞ்சினீயர், "அவர்கள் சண்டையிடுவதில்லை, பாபா. ஜால் மிகவும் நல்ல மனிதர்" என்று கூறினார்.

பாபா, டி.எம். ஷிண்டேயிடம், **"உங்கள் தொழில் எப்படி நடக்கிறது?"** என வினவினார்.

"முற்றிலும் ஏற்ற தாழ்வுகள் நிரம்பியதாக உள்ளது" என்று அவர் பதிலளித்தார்.

**"உலக விவகாரங்கள் அனைத்தும் அப்படித்தான்"** என்று பாபா அவதானித்தார். **"எனது தொழிலில் மட்டுமே அவை இல்லை!"**

பாபா, கேஷவ் நேனேயிடம் பாடச் சொன்னபோது அவர் பாடினார். பாபா அவரது வயதைக் கேட்டார், "நாற்பத்தைந்து" என்று நேனே பதிலளித்ததும், **"நீங்கள் பதினைந்து வயது இளைஞராகத் தோற்றமளிக்கிறீர்கள்"** என்று பாபா கேலி செய்தார்.

மெஹர்பாய் மெர்ச்சன்ட் மிகவும் குள்ளமான பெண்மணியாக இருந்ததால், பாபா அவரைக் கேலி செய்தார், **"நீங்கள் பிக்மி** (ஆஃபிரிக்காவின் குள்ள இனத்தவர்) **போல் இருக்கிறீர்கள்! 700 ஆண்டுகளுக்குப் பிறகு நான் திரும்பி வரும்போது, உங்களை 20 அடி உயரமாக்கி, உங்களைத் தழுவ ஏணியைப் பயன்படுத்துவேன்."**

இவ்வாறு மிகுந்த மகிழ்ச்சிக்கு மத்தியில் தரிசனம் நிறைவுற்றது, பாபாவும் மிக்க மகிழ்ச்சியாகத் தோற்றமளித்தார்.

1957 அக்டோபரில், பாபா மும்பையில் ஒரு மாத காலம் தங்கியதில், ஒரு வித்தியாசமான அம்சம் இருந்தது. முதல் முறையாக, பாபா, குஸ்தாஜியை தன்னுடன் அழைத்து வரவில்லை; நெருங்கிய மண்டலிக்கும் ஏன் என்று புரியவில்லை. பொதுவாக, பாபா எங்குச் சென்றாலும், குஸ்தாஜி அவருடன்

இருக்க வேண்டும் என்று பாபா, குறிப்பாகச் சுட்டிக்காட்டினார். ஆனால், '1957 அக்டோபர் 30 புதன்கிழமை அன்று, மதியம் 3:20 மணிக்கு குஸ்தாஜி காலமானார்' என்று அஹமதுநகரிலிருந்து ஆதி, பாபாவிற்குத் தெரிவிக்க, தொலைபேசியில் அழைத்தபோது, பாபா இம்முறை உடன் அழைத்து வராததன் காரணம் தெளிவாகத் தெரிந்தது. காக்கா பாரியா, அவரது அறைக்கு மதியம் தேநீருக்காக அவரை அழைக்கச் சென்றபோது, குஸ்தாஜி மூச்சு இல்லாமல் படுக்கையில் படுத்திருந்ததைக் கண்டார்.

சில நாட்களுக்கு முன்பு, குஸ்தாஜிக்கு உடல்நிலை சீரில்லை என்று காக்கா, ஆதியிடம் தெரிவித்ததால், அக்டோபர் 28 அன்று, ஆதி, அஹமதுநகரிலிருந்து டாக்டர் ஹோஷங்கை அழைத்து வந்து, அவரைப் பரிசோதனை செய்தார். குஸ்தாஜியின் வயது காரணமாக, அவரது இதயம் பலவீனமாக இருந்தது என்று மருத்துவர் கூறினார். அவரது கல்லீரல் பெரிதாகி, லேசான நிமோனியாவின் அறிகுறியும் தென்பட்டது.

30ஆம் தேதி காலை, ஆதி மீண்டும் டாக்டர் ஹோஷங்கை அழைத்து வந்தார். அந்த நேரத்தில் குஸ்தாஜி, ஆதியிடம், "நான் உயிரைத் துறக்கப் போகிறேன் என்று பாபாவிடம் கூறுங்கள்" என்று சைகையால் தெரிவித்தார். ஐந்து மணி நேரத்திற்கு பின்னர், அவர் தனது உயிரைத் துறந்தார்.

குஸ்தாஜியின் மறைவை எரச், பாபாவிடம் தெரிவித்தார். அந்த செய்தியைக் கேட்ட பாபாவின் கண்களில் நீர் ததும்பியது. மூன்று நிமிடம் அவரால் எதுவும் பேச முடியவில்லை. ஒருவர் உயிரைத் துறந்துவிட்டார் என்று கேள்விப்பட்ட பாபா, கண்கலங்கியதை கவனிக்கும் மிக அரிதான தருணங்களில் இதுவும் ஒன்று. இதுவே, குஸ்தாஜிக்கு ஒரு பொருத்தமான அஞ்சலியாகவும், பாபா அவரை எவ்வளவு அன்புடன் நேசித்தார் என்பதற்கு சான்றாகவும் இருந்தது.

பாவ் கல்சூரி நினைவு கூர்ந்தார், "சூழல் மிகவும் அமைதியாக, பூரண நிசப்தத்துடன் காணப்பட்டது. நாங்கள் சிலைகள் போல நின்று கொண்டிருந்தோம்."

திடீரென, பாபா இவ்வாறு வெளிப்படுத்தினார்: **"எனது பழைய அன்பான நண்பரும், அமைதியான தோழருமான குஸ்தாஜி, தனது உடலைக் கைவிடும் வேளையில், எனது உண்மை நிலையை உணர்ந்தார்."** யாரோ ஒருவர் 'இறை நிலையை எய்தினார் என்று பாபா உணர்த்துவது இதுவே முதல் முறை' என்று கூறினார். பொதுவாக, உயிரைத் துறந்தவர் தன்னிடம் 'வந்துவிட்டார்' என்று பாபா கூறுவதுண்டு - அதாவது அவர்கள் முக்தி (விடுதலை) அடைந்துவிட்டார்கள் அல்லது அடுத்த பிறவியில் அவரிடம் திரும்பி வருவார்கள் அல்லது பாபா குடும்பத்தில் மீண்டும் பிறவி எடுப்பார்கள் என்று பொருள்படும்.

சில நிமிடங்கள் குஸ்தாஜியை நினைவுகூர்ந்த பிறகு, பாபா மண்டலியை அறையை விட்டு வெளியேறுமாறு சைகையால் தெரிவித்து, அவர் கைக்குட்டையால் கண்களைத் துடைத்துக் கொண்டார்.

பாபாவின் விருப்பத்திற்கிணங்க, அக்டோபர் 30ஆம் தேதி குஸ்தாஜியின் உடலை ஆதி சீனியர் மெஹராபாத்திற்குக் கொண்டுச் சென்றார்; அங்கு பாதிரி, குஸ்தாஜியின் உடலை நீராட்டி, நேர்காணல் அறையில் வைத்தார். மெஹராஸாத்திலிருந்து ஆதியுடன் வந்த கைக்கோபாத், துனிக்கு அருகில் அமைந்த அலி ஷாவின் அடக்கமான கல்லறையிலிருந்து, குஸ்தாஜியின் உடல் பன்னிரண்டு அடி தூரத்தில் அடக்கம் செய்யப்படும் வரை, மெஹராபாத்தில் தங்கி, பிரார்த்தனை செய்யுமாறு பாபா அறிவுறுத்தினார். அக்டோபர் 31 பிற்பகல் 3.00 மணியளவில் இறுதிச் சடங்கு நடைபெற்றது; பூனா மற்றும் அஹமதுநகரைச் சேர்ந்த மெஹர்ஜி, சதாஷிவ், மெஹர்வான், தாதி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

67 வயதான குஸ்தாஜி மண்டலியில் மூத்தவர், அவர் தனது இறுதி மூச்சு வரை மௌனம் கடைப்பிடித்தார். அவர் பாபாவின் 'இருண்ட பக்கமாக' இருந்ததோடு, பாபாவின் நெருங்கிய வட்டத்து உறுப்பினர்களுக்கும், தோழர்களுக்கும் மிகவும் நெருக்கமானவர்; அனைவராலும் விரும்பப்பட்டவர். இறுதியில், இறை உணர்தலின் இலக்கை எய்திய பாபாவின் உள்வட்டத்தின் மிகவும் உறுதியான இந்த உறுப்பினருக்கு, காலம் அதன் வணக்கத்தையும், மரியாதையையும் தெரிவித்தது!

அக்டோபர் 31ஆம் தேதி நரிமன் தாதாசாஞ்சியின் பிறந்தநாள், அதை சிறப்பிக்கும் வகையில் ஆஷியானாவில் விருந்து நடைபெற்றது. ஐஸ்கிரீம் (குஸ்தாஜிக்கு மிகவும் பிடித்தது) பரிமாறக் கூடாது என்பதைத் தவிர, திட்டமிட்டபடி கொண்டாட்டங்களை நடத்த பாபா அனுமதித்தார்.

1957 நவம்பர் 1அன்று மதியம், பாபா ஓய்வெடுத்துக் கொண்டிருந்த வேளையில், வாசல் மணி ஒலித்தது. அர்னவாஸ் அதற்கு பதிலளிக்கவே, வெளியே மிர்சந்தானியின் மூன்று சீடர்கள் நின்று கொண்டிருந்தனர்; ஆனால் அவரது கூற்றிற்கு இணங்க, அவர் ஓர் உண்மையான துறவி அல்ல என்பதை பாபா ஏற்கனவே வெளிப்படுத்தினார். பாபா அவரை சந்திப்பதாக உறுதியளித்ததால், அவர்கள் பாபாவைப் பார்க்க வேண்டும் என்று கோரினர், மேலும், மெஹர் பாபாவை அவரிடம் அழைத்துச் செல்லவேண்டும் என்பது தங்கள் குருவின் (மிர்சந்தானி) உத்தரவு என்றும் கூறினர். பாபா ஓய்வெடுத்து வருவதாகவும், எவரும் உள்ளே அனுமதிக்கப்படவில்லை என்றும் அர்னவாஸ் விளக்கி, அவர்களைத் திருப்பி அனுப்ப முயன்ற வேளையில், பாபா கைகளைத் தட்டி, '**அங்கே யார்**' என வினவினார். அர்னவாஸ், யார் என்பதை அவரிடம் தெரிவித்ததும், "**அவர்களை போகச் சொல்லுங்கள். மிர்சந்தானியை அடுத்த மாதம் இங்கு வந்து பார்க்கச் சொல்ல வேண்டும்**" என்று அறிவுறுத்தினார். ஆனால் அந்த நபர்கள் வெளியேற மறுத்தபோது, இறுதியில் பாபா அவர்களை உள்ளே வர அனுமதித்தார்.

அந்த நபர்களில் ஒருவர், அர்னவாஸின் மனதை வசியப்படுத்துவது போல விரல்களை அசைத்து, பாபாவிற்கு முன்பாக அமர்ந்தபோதும் அதையே

செய்யத் தொடங்கினார். அர்னவாஸ் நினைத்தார்: 'இந்த பைத்தியக்கார மனிதர்கள், அவதார புருஷரின் மனதை வசியப்படுத்தவும் முயற்சிக்கிறார்கள்.' மிர்சந்தானியின் சீடர்களில் ஒருவரான அலு கம்பட்டாவின் உறவினர் ஒருவர், முன்பு பாபாவின் தொடர்பில் இருந்தார். பாபா அவருக்கு ஒரு கைக்குட்டையை வழங்கிய பின்னர், அதிர்ஷ்டவசமாக, அவர் மிர்சந்தானியை விட்டு வெளியேறினார்.

பாபாவிடம் சில கணங்கள் பேசிவிட்டு, அந்த நபர்கள் வெளியேறினர். ஆதி சீனியர், வாமன் இருவரும் மும்பைக்கு வந்திருந்தனர். மறுநாள் அதிகாலையில் பாபா, '**டிசம்பர் மாதத்தில் ஆஷியானாவில் நடக்கவிருக்கும் தரிசன நிகழ்ச்சியில், பாபாவை தரிசனம் செய்ய வரலாம்**' என்ற செய்தியை, ஆதி மூலமாக மிர்சந்தானிக்கு அனுப்பிவைத்தார். ஆனால் மிர்சந்தானியின் குடியிருப்பிற்கு பாபா வர வேண்டும் என்று அவர் விரும்பவே, ஆஷியானாவில் நடந்த தரிசன நிகழ்ச்சியில் கலந்து கொள்ளவில்லை.

நவம்பர் 2 அன்று, ஆதி மற்றும் மெஹர்ஜியின் கார்களில், பாபா, ஆண், பெண் மண்டலியுடன் புறப்பட்டுச் சென்றார். திரும்பும் வழியில், தாதரில் தாதாசாஞ்சியின் இல்லத்திற்கு விஜயம் செய்து, தொடர்ந்து, கண்டாலா மலைப்பகுதியில் ஜே.பி. மர்ஸபான் ஸானடோரியத்தில் (J.B. MARZABAN SANATORIUM, KHANDALA) அப்போது தங்கியிருந்த ஸிகன்போரியா குடும்பத்தினரின் இல்லத்திற்கும் சென்று, தரிசனம் வழங்கி, நேராக, பூனா பிந்த்ரா ஹவுஸ் வந்தடைந்தார். ('பாபா வெளிர்ந்து, தேய்ந்து போனார்; அவருடன் வந்த அனைத்து மண்டலியும் அவ்வாறே காணப்பட்டனர்' என்று எரச்சின் சகோதரி மனு ஒரு கடிதத்தில் எழுதியிருந்தார்.)

பாபா கிர்கியில், ராமகிருஷ்ணனின் இல்லத்திற்கு சென்றபோது, பெண்மணிகள் பிந்த்ரா ஹவுஸில் மெஹர்ஜியின் காரிலிருந்து இறங்கினர். பாபா கிட்டத்தட்ட இரண்டு மணிநேரம் அங்கே செலவிட்டார்; பூனா மைய உறுப்பினர்களுக்கு இடையே இருந்த கருத்து வேறுபாடுகளை சீர்செய்து, அனைவரும் ஒத்துழைக்குமாறும், இணக்கமாகச் செயல்படுமாறும் அவர்களுக்கு அறிவுறுத்தினார்.

பாபா, பிந்த்ரா ஹவுஸுக்குத் திரும்பியபோது மணி இரண்டாகிவிட்டது. பெண் மண்டலி மதிய உணவை ஏற்கனவே முடித்து விட்டதால், பாபாவின் மதிய உணவு பொட்டலமாக அவர்களுடன் காரில் கொண்டு செல்லப்பட்டது. ஸவக் கொத்வாலின் உடல் நலம் சீரான நிலையில், அவர், மும்பையிலிருந்து மண்டலியுடன் வந்து, அன்று மாலை மெஹராஸாத்தைச் சென்றடைந்ததும், மீண்டும் தனது இரவுக் கண்காணிப்புப் பணியைத் தொடர்ந்தார்.

நவம்பர் 4ஆம் தேதி காலை, மண்டலி ஆதியின் காரிலும், பாபா, வேறு பலருடன் ஸரோஷின் காரிலும் மெஹராபாத் சென்றனர். குஸ்தாஜியின் கல்லறைக்கு அருகே பாபாவை அவரது சக்கர நாற்காலியில் அழைத்து வந்தனர்; அவர் கைக்கோபாத்திடம், **"குஸ்தாஜி என்னை உண்மையாகவே**

**உணர்ந்திருந்தாலும், அவர் கடவுளுடன் ஒன்றிணைந்திருக்க வேண்டிக்கொள்ளுங்கள்.**" கைக்கோபாத் பிரார்த்தனையைத் தொடங்கியபோது, சில கிராமத்துப் பெண்மணிகள் சாலையில் ஒன்றுதிரண்டு, அவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தனர். அவர்களின் வருகை பாபாவின் மனநிலையை சீர்குலைய செய்தது, மேலும் அவர் பிரார்த்தனைகளை நிறுத்தியபோது, மண்டலி அவரை சக்கர நாற்காலியில் குடிலுக்கு அழைத்துச் சென்றனர். சாலையிலிருந்த பெண்மணிகள் திரும்பிச் சென்றதும், பாபா மீண்டும் குஸ்தாஜியின் கல்லறைக்குச் சென்று, அதன் மீது பூக்களைத் தூவினார்; மண்டலியும் அவருடன் இணைந்தனர். பாபா, அலி ஷாவின் சமாதியிலும் மலர்களை வைத்தார்.

இறுதியாக, ஏற்கனவே ஏற்பாடு செய்ததற்கு இணங்க, பாபா, அரன்காவ்மை சேர்ந்த வயதான 25 கிராமவாசிகளின் கால்களில் தலைவணங்கி, அவர்களுக்கு, தலா ஐந்து ரூபாய் பிரசாதமாக வழங்கினார். கிராமவாசிகளில் ஒருவர், 'அவதார் மெஹர் பாபாவிற்கு ஜெய்!' என குரல் எழுப்பியது, இந்த சந்தர்ப்பத்திற்கு பொருத்தமற்றதாக பாபா கருதினார். அந்த மனிதரின் குறுக்கீடு காரணமாக, பாபா, ஒருவருடன் சீற்றமடைந்தார், அவரது மனநிலை பாதிக்கப்பட்டது. ஆனால், அங்கிருந்த ஒவ்வொரு மண்டலியின் காலிலும் இரண்டு முறை தலை வணங்கிய பிறகு பாபாவின் மனநிலை சீரானது.

பின்னர் அங்கிருந்து பாபா, ரமா, மெஹர்நாத், ஷீலா கல்சூரி மற்றும் ஜங்க்ளே குடும்பத்தினரைப் பார்க்கச் சென்றார். மேல்மலையில் வாழும் மன்ஸாரி மற்றும் கைக்கோபாத் குடும்பத்தினரையும், கீழ் மெஹராபாத்தில் வாழும் மண்டலியையும் அவர் சந்தித்தார். பாதிரி மற்றும் பிற மண்டலியுடன் சகவாச திட்டத்தைப் பற்றி விவாதித்த பின்னர், அவர் மீண்டும் மெஹராஸாத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். பாபா, ஜுரம் மற்றும் பொதுவாக உடல்நிலை சரியில்லாமல் உணர்ந்ததோடு, அவரது இடுப்பு எலும்பு தொடர்ந்து தொந்தரவு தந்தது.

1957 நவம்பர் 5 அன்று, உடல் வர்ம முறை மருத்துவர் ஹாரி கென்மோர், மெஹர்ஜியுடன் மெஹராஸாத் வந்தார். அவர் தனது சொந்த மடிப்பு மேசையைக் கொண்டு வந்து, தினமும் காலை, மாலை ஒவ்வொரு மணி நேரம், மண்டலி மண்டபத்தில் பாபாவிற்கு சிகிச்சை அளிக்கத் தொடங்கினார்; மேலும் பாபாவின் உணவில் அதிக புரதம் மற்றும் ஊட்டச்சத்துகளைச் சேர்த்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தினார். பாபாவிற்கு மேசையில் படுத்திருப்பது அசௌகரியமாக இருந்தது, அவர் பொறுமையாக சிகிச்சையைப் பெற்றுக்கொண்டாலும், பலனளித்ததாகத் தெரியவில்லை. ('இது ஒரு நம்பத்தகாத வேலை' என்று கென்மோர் முதலில் பாபாவின் இடுப்பைப் பரிசோதித்தபோது குறிப்பிட்டார்.) டாக்டர் கென்மோரின் திறமையைக் குறித்த எந்த சந்தேகமும் இல்லை; உண்மையில் ஒரு நாள், பாபா அவரிடம், "**நீங்கள் கண் பார்வையற்றவராக இருந்திராவிடில், நீங்கள் ஒரு சிறந்த, உலகப் புகழ்பெற்ற அறுவை சிகிச்சை**

**நிபுணராக மாறி இருப்பீர்கள் - ஆனால் பாபாவுடன்** (அவரது தொடர்பில்) **இருந்திருக்க மாட்டீர்கள்!"**

ஒருமுறை பாபா, ஹாரி கென்மோரிடம், "**ஒரு நாள், நான் உங்களுக்கு உண்மையான பார்வையை வழங்குவேன் - எனது சுய ரூபத்தின் சிறியதோர் அனுபவம்; அப்போது, அது மட்டுமே பார்க்கத் தகுந்தது என்பதை உங்களுக்கு உணர வைக்கும். பிறர் தங்கள் பௌதீகக் கண்களால் காணும் எதற்கும் எந்த மதிப்பும் இல்லை**" என்று கூறினார்.

ஹாரி கென்மோர் மற்றொரு நாள், பாபாவின் சத்ராவில் ஒரு கீறலை உணர்ந்து, "உங்கள் சத்ரா கிழிந்ததில் எனக்கு ஆச்சரியமில்லை பாபா. உங்கள் மேலங்கியில் பலர் தொங்கிக்கொண்டிருப்பதால், சில தேய்மானங்களும், கீறல்களும் இருக்கத்தான் செய்யும்!" என்றார்.

ஒரு நாள் பாபா, ஹாரியிடம், "**நான் வேகமாக நடப்பது பழக்கம், மண்டலி என் பின்னால் ஓட வேண்டிய கட்டாயம்!**" என்று கூறினார்.

அதற்கு ஹாரி, "ஆம் பாபா, அவர்கள் இன்னமும் உங்கள் பின்னால் ஓடுகிறார்கள்!" என்றார்.

கென்மோர், பாபா பயன்படுத்தும் விதத்தில் ஒரு நிலையான மிதிவண்டியை பரிந்துரைத்தார்; மேலும் அதற்கிணங்க, மிதிவண்டி ஒன்று இராணுவ மருத்துவமனையிலிருந்து வாங்கப்பட்டு, மண்டலி மண்டபத்தின் ஒரு மூலையில் ஒழுங்கமைக்கப்பட்டது. பாபா, ஒவ்வொரு நாளும் பல நிமிடங்கள் அதன் மீது அமர்ந்து மிதித்து வந்தார், ஆனால் மிதிப்பது அவருக்கு அதீத வலியைத் தந்தது. பாபாவின் இடுப்பெலும்பில் இயற்கையான திரவம் மிகச் சிறிய அளவில் மட்டுமே எஞ்சியிருப்பதாக கென்மோர் அஞ்சினார், மேலும் அது சீராக நகர்வதற்கு பதிலாக, எலும்பைப் பற்றிக் கொண்டிருக்கிறது.

பாபாவின் வலியைப் போக்க, கென்மோர் தன்னால் இயன்றதைச் செய்தாலும், வேண்டிய அளவு சீராக்கும் விதத்தில் உதவ முடியவில்லை. ஒரு நாள் அவர் மிகவும் சோகமாகக் காணப்பட்டபோது, பாபா அவரிடம் காரணத்தைக் கேட்க, அவர் கூறினார், "நாம்தேவின் அன்பு, விட்டலின் (விஷ்ணு) கற்சிலையில் கூட, அவரது கைகளிலிருந்து உணவை ஏற்றுக்கொள்ளச் செய்தது, ஆனால், நான் என்னால் இயன்றதைச் செய்து, தினமும் உங்களிடம் மனதார வேண்டிக் கொண்டிருந்தாலும், நீங்கள் கேட்டபாடில்லை! இது, உங்கள் மீது எனக்கு அன்பு இல்லை என்று என்னை நினைக்கத் தூண்டுகிறது."

அதற்கு பாபா, "**விட்டலின் சிலையில் அவரது 'விருப்பம்' இல்லை, ஆனால் இங்கே நீங்கள் எனது விருப்பத்தைக் காக்க வேண்டும். இந்த வலியை, மனிதகுலத்தின் நன்மைக்காக, நான் என் மீது ஏற்றுக்கொண்டேன்; நோக்கம் நிறைவேறியதும், வலி தானாகவே நீங்கிவிடும். நீங்கள் முழு மனதுடன் எனக்கு சேவை செய்யும் வகையில், சிகிச்சை அளிக்கும் வாய்ப்பை நான் உங்களுக்கு வழங்குகிறேன். நான் உங்களுக்கு எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன், இது உங்கள் பிரார்த்தனைகளுக்கு எனது பதில்**" என்றார்.

“நான் ஜூன் மாதத்தில் வந்திருந்தால், இந்தச் சிக்கல்கள் அனைத்தும் ஏற்பட்டிருக்காது,” கென்மோர் விரக்தியுடன் கூறினார். “எனது பயணம் சில மாதங்கள் தாமதமாகி இருந்தால், என்னால் உதவவே முடியாமல் போயிருக்கும்.”

பாபா விளக்கினார், “**எனது விபத்து, ‘விபத்து’ அல்ல. நான் துன்பப்பட வேண்டும் என்பதற்காக நீங்கள் முன்னதாக வரவில்லை.” பாபா, தம் மீது சுமக்கும் பாரம் உலகளாவியது என்பதால், அவருக்கு சிகிச்சை அளிக்கத் தன்னால் இயன்றதைச் செய்யுமாறும், முடிவுகளை அவரிடமே விட்டுவிடுமாறும் பாபா கூறினார். இந்த நேரத்தில் கென்மோர், பாபாவின் நெருங்கிய சகவாசத்தில் இருக்கும் வாய்ப்பை அடையப்பெற்றார்; கண்பார்வையற்றவராக இருந்தாலும், அவரது இதயம் பாபா ‘ யார்?, என்ன?’ என்பதைப் ‘பார்க்க’ முடிந்தது - ‘அன்பின் அவதாரம்**’.

அந்தக் காலகட்டத்தில் மனச்சோர்வடைந்த மற்றுமொரு நபர் எரச் ஆவார்; அவர் பாபாவின் உடல் ரீதியான துன்பங்களுக்கு ஓரளவு பொறுப்பாளியாக உணர்ந்தார். விபத்து நடந்த உடனேயே, ஒரு சந்தர்ப்பத்தில், பாபா அவரிடம், “**ஏன் இவ்வளவு சோகமாக இருக்கிறீர்கள்?**” என வினவினார்.

“உங்களுக்கு அதன் காரணம் தெரியும்,” எரச் பதிலளித்தார்.

பாபா அவரிடம், “**வருந்தாதீர்கள். என்னால் நடக்க முடிவதை நீங்கள் காண்பீர்கள். ஒரு நாள், நான் நிச்சயமாக நடப்பேன்**” என்று உறுதியளித்தார்.

பாபா உறுதியளித்த போதிலும், எரச்சிற்கு சிறிதும் நம்பிக்கை இல்லை; மேலும் பாபாவை வேதனையுடன் பார்க்கும் போதெல்லாம், அவரது இதயம் வலித்தது. பின்பு, பாபா அவரைத் திருத்தும் விதத்தில், “**என்னுடைய வலிக்கு நீங்களே காரணம் என்று நினைக்கும் அளவுக்கு, உங்களுக்கு மட்டுமீறிய தன்னம்பிக்கை எங்கிருந்து வந்தது? நீங்கள் யார்?**” என வினவினார்.

“நான் கார் ஓட்டுநராக இருந்தேன்,” எரச் கூறினார். “எனக்கு இத்தகைய சிந்தனை வருவது இயற்கையானது.”

“**அதற்கும் உங்களுக்கும் சம்பந்தம் இல்லை. விபத்து நடக்க வேண்டியதாக இருந்தது, அது நடந்தது. தனிப்பட்ட பேரிடர் வரும் என்பதை நான் ஏற்கனவே சொல்லியிருந்தேன். அதற்காக நீங்கள் ஏன் இவ்வளவு வருத்தப்பட வேண்டும்?**”

“ஆனால் நீங்கள் வாழ்நாள் முழுவதும் உடல் ஊனமாக, உதவியற்றவராக இருப்பீர்கள்! உங்களால் நடக்கவே முடியாது. உங்கள் பின்னால் ஓட வேண்டிய அளவுக்கு நீங்கள் வேகமாக நடந்ததை நாங்கள் பார்த்திருக்கிறோம். அது இப்போது எங்கே? எல்லாம் போய்விட்டது.”

“**யார் அப்படிச் சொல்கிறார்?**”

“உலகின் மிகப் பெரிய அறுவை சிகிச்சை நிபுணர்கள். டானும் பிற மருத்துவர்களும் அதையே சொல்கிறார்கள்.”

அதனால் எரச் இதுபோன்ற எண்ணங்களால் மனதளவில் பாதிக்கப்பட்டார். ஒரு நாள், டாக்டர் டான் மெஹராஸாத்திற்கு வந்து, 'கிங் ஜீஸஸ்' - KING JESUS (ராபர்ட் கிரேவ்ஸ் - ROBERT GRAVES எழுதியது) என்ற நாவலைப் புரட்டிக் கொண்டிருந்தபோது, இயேசு நொண்டு நடை போட்டதாக விவரிக்கும் ஒரு பகுதியைக் கண்டார். எரச் இதைப் படித்தபோது, இயேசுவும் பாபாவைப் போல துன்பப்பட வேண்டியிருந்தது என்ற உண்மையால் அவர் ஓரளவு சமாதானம் அடைந்தார்.

1957 நவம்பர் 6 அன்று, புக்காரும் அவரது குடும்பத்தினரும், பவானி பிரசாத், பாலிவால், பிஷம்பர் (BISHAMBAR), அங்குரி குப்தா (ANGURI GUPTA), கேஷவ் நிகம், ஹமிர்பூர் மற்றும் டெல்லியைச் சேர்ந்த பலர், திருமல ராவ் உட்பட அவரது குடும்பத்தினருடன் பாபாவின் தரிசனத்திற்கு வந்தனர். நௌரங்காவின் முங்காலாலும் (MUNGALAL) உடன் வந்திருந்தார்; ஆனால் அவர் ஒரு மஸ்த் போல மாறி, விசித்திரமாக நடந்து கொண்டார். ஒருமுறை உணர்ச்சிவசப்பட்டு கிணற்றில் குதித்தார். மெஹராஸாத் செல்லும் வழியில் முங்காலால் தவறான ரயில் நிலையத்தில் ரயிலிலிருந்து இறங்கினார்; புக்கார் ராஹுரியில் இறங்கி, திரும்பிச் சென்று அவரை வேறு ரயிலில் அழைத்து வர வேண்டியதாயிற்று. அவரது தற்போதைய நிலை காரணமாக, பாபா, அவரை மெஹராஸாத்திற்கு அழைத்தார்; பாபாவை சந்தித்த பிறகு, முங்காலால் மீண்டும் சுயநினைவுக்கு வந்தார்.

அடுத்த நாள் கிஷன் ஸிங்கும், நவம்பர் 9 அன்று ஜால்பாய், ராம்ஜூ இருவரும் வந்தனர். அக்பர் அச்சகத்தின் எரச்சின் உறவினர் மெஹரு தமானியாவிற்கு விரைவில் திருமணம் நிச்சயிக்கப்பட்டது. மெஹரு, குழந்தைப் பருவத்திலிருந்தே பாபாவின் தொடர்பில் இருந்ததால், பாபாவால் அந்தப் பெயர் வழங்கப்பட்டது. துரதிர்ஷ்டவசமாக, அவரது சகோதரி கோர்ஷெத் (எரச்சின் மனைவி) மிர்சந்தானியின் தொடர்பில் வர நேர்ந்தது. நவம்பர் 15ஆம் தேதி குடும்பத்தை மெஹராஸாத்திற்கு அழைத்த பாபா, அவர்களுடன் இரண்டு மணிநேரம் உரையாடினார், போலி குருநாதர்கள் குறித்த தனது சமீபத்திய எச்சரிக்கையை அவர்களுக்கு நினைவூட்டினார். மெஹருவின் திருமணத்தில் மிர்ச்சந்தானி கலந்து கொண்டால், பிந்த்ரா ஹவுஸ் குடும்பத்தினர் கலந்துகொள்ள பாபா அனுமதிக்கமாட்டார் என்று அவர் அவர்களிடம் தெரிவித்தார்.

அடுத்த நாள், வயதான ஐந்து பிம்பல்காவ்ம் கிராமவாசிகள் மெஹராஸாத்திற்கு அழைத்து வரப்பட்டனர். பாபா அவர்களின் கால்களில் தலைவணங்கி ஒவ்வொருவருக்கும் 51 ரூபாய் பிரசாதமாக வழங்கினார்.

நவம்பர் 23 அன்று ஜெஸவாலா குடும்பத்தினர், பானுமாஸி மற்றும் தாதி கேரவாலா ஆகியோருடன் மெஹராஸாத்திற்கு வந்தனர்; நரிமனும், ஸிகன்போரியாவும் அன்றைய தினம் வருகை தந்தனர். அடுத்த நாள், ஞாயிற்றுக்கிழமை, 1957 நவம்பர் 24, பாபா, ஹாரி கென்மோர், நரிமன், எரச்

ஆகியோருடன் ஸரோஷின் காரில் மெஹராபாத் சென்றார். ஜால்பாய், ஸவக் இருவரும் ஆதியுடன் சென்றனர். அரன்காவ்ம் கிராம மக்கள் பஜனை நிகழ்ச்சி நடத்தவே, பாபா தரிசனம் வழங்கினார்; அதைத் தொடர்ந்து ஹாரி கென்மோருடன் மெஹராபாத் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டார். மெஹராஸாத் திரும்பும் வழியில், அக்பர் அச்சகத்தில் பாபா சிறிது நேரம் நின்று, அங்கு அவர் திருமணத்திற்கு வந்தவர்களை சந்தித்தார்.

1957 நவம்பர் 25 திங்கள் அன்று, மெஹரு தமானியா, புர்ஜர் மேத்தா இருவரும் அஹமதுநகரில் திருமணம் செய்து கொண்டனர். நரிமன், காக்கா பாரியா மெஹராஸாத்திலிருந்தும், பாதிரி, விஷ்ணு, டான், சிது, ஜங்க்ளே ஆகியோர் மெஹராபாத்திலிருந்தும் வந்தனர். 29ஆம் தேதி காலை, தம்பதிகள் தங்கள் திருமண உடையில் மெஹராஸாத்திற்கு வந்தபோது, பாபா அவர்களை ஆசீர்வதித்து, **"நீங்கள் இருவரும் எனது மேலங்கியைக் கெட்டியாகப் பற்றிக்கொள்ளுங்கள்"** என்று அவர்களிடம் வலியுறுத்தினார்.

1957 நவம்பர் 27 புதன்கிழமையன்று, பாபா, மெஹராஸாத்தில் ஒரு கூட்டத்தை நடத்தினார்; வரவிருக்கும் சகவாச சபையைக் குறித்த தனது முடிவைத் தெரிவித்தார். ஹாரி கென்மோரும் உடனிருந்தார்.

பாபா கூறினார்:

**ஹாரிக்கு என் மீதான அன்பு மற்றும் மருத்துவராக அவரது திறமை ஆகிய இரண்டிலும் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். அவர் தனது பணியை 100 சதவிகிதம் அறிந்தவர்; அவர் என் உடலுக்கு அவரால் இயன்றதைச் செய்து, எனது பணியில் உதவினார். திருப்திகரமான முடிவுகளுடன் தன்னால் முடிந்ததைச் செய்துள்ளார். ஆனால் இடுப்பு எலும்பின் நிலை மிகவும் மோசமாக உள்ளது; நான் ஏற்கனவே கூறியதற்கு இணங்க, முன்பு போல் என்னால் மீண்டும் நடக்க முடியாது என்று அவருக்குத் தெரியும். அவர் கூறுகிறார், அது எனக்கும் தெரியும், அதாவது, சில மாதங்களுக்கு முன்னர் அவர் வந்திருந்தால், நான் இப்போது சாதாரணமாக நடந்து கொண்டிருக்க முடிந்திருக்கும். ஆனால் அது அவ்வாறு விதிக்கப்படவில்லை. எனது விபத்து, 'விபத்து' அல்ல, அது ஒரே ஒரு விஷயத்தை மட்டும் குறிக்கிறது: "நான் விரும்பியது நடந்தது, நான் விரும்புவது நடக்கும்."**

**தொடர்ச்சியான வலி, எனது பணிக்கு இடையூறாக இருந்தது; ஆதலால், ஹாரி கென்மோரின் வருகை பெரிதும் உதவியது. அவர் என் உடலை, கட்டமைப்பின் சமநிலைக்கு மாற்றியமைத்துள்ளதால், விபத்துக்குப் பின்பு முதல் முறையாக இப்போது, நல்ல தோற்றத்துடன் நிமிர்ந்து நிற்க முடிகிறது. 'இந்தக் கட்டமைப்பு சமநிலையை நிலைநிறுத்த, அவர் சுமார் ஒரு வருடத்திற்கு அதீத கவனத்துடன் இருக்கவும், தரிசனம் மற்றும் சகவாசங்கள் வழங்கும்போது மிகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளவும்' அறிவுறுத்தியுள்ளார். என் உடலில் எந்த அழுத்தமும்**

இருக்கக்கூடாது, மேலும் நான் களைப்படைவதைத் தவிர்க்க வேண்டும்; தரிசனத்தின் போது, நான் வழக்கமாகச் செய்வது போல் அதிக எண்ணிக்கையில் பிரசாதம் வழங்குவது, அவர்களால் அரவணைக்கப்படுவது போன்ற சக்தி விரயமாகும் அசைவுகளைத் தவிர்க்க வேண்டும். டிசம்பர் மாதத்தில் பூனாவிலும், மும்பையிலும் நான் வழங்கும் தரிசனங்களின்போதும், அதன் பிறகும் அவருடைய ஆலோசனையைப் பின்பற்ற ஒப்புக்கொண்டேன்.

நான் ஹாரியிடம் கூறுகிறேன், அவர் இங்கு இருக்கும் வரை, அவர் என்னிடம் கூறுவதை நான் செய்வேன், அவர் இல்லாத நேரத்தில் அவருடைய அறிவுரைகளை நிறைவேற்ற முயற்சிப்பேன். ஆனால், எனக்கு உலகளாவிய பணி இருப்பதால், அவற்றை முழுமையாக நிறைவேற்றுவேன் என்று உறுதியளிக்க முடியாது. ஹாரி அவரது தொழிலை திருப்திகரமாக செய்து முடித்தார்; என்னுடைய தொழிலை நான் முடிக்க வேண்டும். நான் இந்த உடலை மனித குலத்திற்காக ஏற்றுக்கொண்டேன்; மனித குலத்திற்காக நான் செய்ய வேண்டிய பணிக்கு என் உடலைப் பயன்படுத்த வேண்டும். எனவே, எனது பணியில் தலையிடும் அளவுக்கு அதை நான் கவனித்துக் கொள்ளக் கூடாது. மறுபுறம், நான் போதுமான கவனத்துடன் இருக்க வேண்டும், அதனால் என் உடல், இந்த வருடத்தில் என்னை எதிர்நோக்கி இருக்கும் பணியின் அழுத்தத்தை எதிர்த்து நிற்கும்.

இரண்டு காரணங்களுக்காக கிழக்கு-மேற்கு சகவாசத்தை ஒன்றிணைக்க வேண்டாம் என்று முடிவு செய்துள்ளேன். முதலாவதாக, நான் உடல் ரீதியாக முடங்கிப்போனதால், அது எனக்கு மிகுந்த சிரமமாகவும், சோர்வாகவும் இருக்கும். இரண்டாவதாக, அதையும் மீறி நான் வழங்குவதானால், எனது சகவாசத்தில் கொடுக்க விரும்புவதை நான் என் அன்பர்களுக்கு முழுமையாகக் கொடுக்க முடியாது; மேலும், அவர்கள் நான் விரும்புவதை அடையப் பெற முடியாது. எனவே, இந்தியாவில் வாழும் அன்பர்களுக்கும், மர்டில் பீச் மற்றும் ஆஸ்திரேலியாவில் வாழும் மேற்கத்திய மக்களுக்கும், தனித்தனியாக சகவாசங்களை வழங்க முடிவு செய்துள்ளேன். 1958 பிப்ரவரி மாதத்தில் கிழக்கத்திய அன்பர்களுக்கு வழங்குவேன்; அதேவேளையில், அவர்களின் அன்பின் வெளிப்பாடுகளான மாலை அணிவித்தல், அரவணைத்தல் போன்ற பலவற்றை - டாக்டர் கென்மோரின் ஆலோசனை மற்றும் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப மாற்றியமைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். சகவாசத்தில் கலந்துகொள்ளும் கிழக்கத்திய அன்பர்களின் எண்ணிக்கை 1400 ஆகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது (நான்கு நிகழ்ச்சிகளுக்கு பதிலாக தலா 700 பேர் அடங்கிய இரண்டு குழுக்கள் - இந்தி மற்றும் மராட்டி மொழி அன்பர்களின் ஒரு குழு; குஜராத்தி மற்றும் தெலுங்கு பேசும் மற்றொரு குழு).

1958 மே மாதத்தில், பதினைந்து நாட்கள் மர்டில் பீச் மையத்திலும், ஐந்து நாட்கள் ஆஸ்திரேலியாவிலும், மேற்கத்திய அன்பர்களுக்கு எனது

**சகவாசத்தை நிச்சயமாக வழங்குவேன். எனக்கு எந்த விதமான விளம்பரமும் வேண்டாம், (பொது ஜனங்களுக்கான) 'திறந்த நாள்' நிகழ்ச்சியும், அந்த வகையில் புதிய 'பார்வையாளர்களையும்' அழைக்க வேண்டாம். என்னுடனான சகவாசத்திற்காக, இந்தியா வர விரும்பியவர்களும், வர விரும்பியும் ஏதோ காரணங்களுக்காக வர முடியாதவர்களும், மேலும் என்னை நேசிக்கும், எனக்குக் கீழ்ப்படியத் தயாராக இருப்பவர்களும், சகவாச நிகழ்ச்சியில் கலந்துகொள்ள விரும்புபவர்களும் இதில் பங்கெடுக்கலாம்.**

**1958 ஜூலை 15க்குப் பிறகு, சகவாசங்கள், கூட்டங்கள், வெகுஜன தரிசனங்கள் போன்றவை இராது. எனது உடல் நிலை மற்றும் வெளிப்புற சூழ்நிலைகளைக் கண்டுகொள்ளாமல், ஜூலை 15ஆம் தேதிக்கு முன்பு நான் அனைத்தையும் செய்ய வேண்டும்.**

அடுத்த நாள், அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் ஆஸ்திரேலியாவில் வாழும் அன்பர்களுக்கு பாபாவின் முடிவு, தொலைத்தந்தி மூலம் இவ்வாறு தெரிவிக்கப்பட்டது: **"நான் எனது தெய்வீக ஞானத்தில் கடவுளாகவும், டாக்டர் ஹாரி கென்மோரின் அறிவின் மூலம், ஒரு மனித நோயால் பாதிக்கப்பட்டவராகவும் இந்த முடிவுக்கு வந்தேன். இந்தியாவில், ஒன்றிணைந்த மேற்கு மற்றும் கிழக்கு சகவாசங்கள் முற்றிலும் விரும்பத்தகாதவை."**

கீழ்வரும் இந்தச் செய்தி மேற்கத்திய அன்பர்களுக்கு, டிசம்பர் 1ஆம் தேதி மணியின் குடும்பக் கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டது:

**உங்கள் அன்பில் நான் மகிழ்ச்சியடைகிறேன், மேலும் எனது விருப்பங்களை நீங்கள் எந்தக் கேள்விக்கும் இடந்தராமல் ஏற்றுக்கொள்வதை அறிவேன். எது மிகச் சிறந்தது என்று எனக்குத் தெரியும், எனது முடிவு நன்மைக்காகவே. கடவுள் ஒருவரே நேசிக்க முடிந்ததைப் போல நான் உங்களை நேசிக்கிறேன்; 1958 மே மாதத்தில் நிச்சயமாக எனது சகவாசத்தை உங்களுக்கு வழங்குவேன். இந்த சகவாசம், 100 சதவிகிதம் எனது திருப்தியுடன் நான் உங்களுக்குத் தர விரும்புவதை வழங்கும். இதன் மூலம் நான் என்ன சொல்கிறேன் என்பதை நீங்கள் முழுமையாக புரிந்துகொள்வீர்கள். எனது மேலங்கியைப் பற்றிக் கொள்ளுங்கள், மேலும் மேலும் என்னை நேசியுங்கள், நான் வழங்குவதை நீங்கள் முழுமையாக அடையப் பெறுவீர்கள்.**

**ஒவ்வொருவருக்கும் என் அன்பு.**

குஸ்தாஜியின் சகோதரர் ஸ்லாம்சன் நவம்பர் 30 அன்று, மெஹராஸாத்தில் பாபாவை சந்தித்த போது, குஸ்தாஜியின் சில உடைமைகள் அவருக்கு வழங்கப்பட்டன. மறுநாள் மதுசூதனனுக்கு பாபா ஒரு நேர்காணலை வழங்கினார்.

1957 டிசம்பர் 5 அன்று, ஹாரி கென்மோர், மெஹர்ஜியுடன் மும்பைக்குச் சென்று, நியூயார்க் நகருக்கு, தெய்வீக மதுபானத்தில் முழுவதுமாக நனைந்தபடியே புறப்பட்டுச் சென்றார். அவர் இறைவனுக்கு சிகிச்சை செய்ய வந்திருந்தார், ஆனால் அவரே 'சிகிச்சைக்கு' உள்ளாக்கப்பட்டார், மேலும் பாபாவின் அன்பில் பித்துப்பிடித்தவரானார்.

அர்னவாஸ், நரிமன் இருவரும் அதே நாளில் வந்தனர்; அர்னவாஸ் பன்னிரண்டு நாட்கள் மெஹராஸாத்தில் தங்கினார்.

பாபாவின் பூனா அன்பர்கள் தங்களுக்கும் தங்கள் குடும்பத்தினருக்கும் தரிசனம் வழங்குமாறு அவரிடம் கெஞ்சினர்; அதற்கு பாபா இணக்கம் தெரிவிக்க, டிசம்பர் 8ஆம் தேதி நிர்ணயிக்கப்பட்டது. குருபிரசாத் பங்களாவில் பூனா சேவகர்கள் வேண்டிய ஏற்பாடுகளை செய்தனர். பாபாவின் அனுமதியுடன் வெளியூர்களிலிருந்து வந்தவர்களில் புக்கார், பால் நாத்து மற்றும் அஹமதுநகரைச் சேர்ந்த சுமார் 20 பேர் அடங்குவர்.

அவர்களுடன் ஜபல்பூரைச் சேர்ந்த அமியா குமார் ஹஸ்ரா (AMIYA KUMAR HAZRA) என்ற புதிய நபரும் வந்திணைந்தார். 26 வயதான அமியா, 1954ஆம் ஆண்டு ஜபல்பூரில் பாபாவைப் பற்றி முதலில் கேள்விப்பட்டபோது, பாவ் கல்சூரியின் முறைசாரா பேச்சில் பங்கெடுக்கும் வாய்ப்பைப் பெற நேர்ந்தது. பின்னர் 1956இல், அமியா ஒய்.எல். முனிராஜ் (Y.L. MUNIRAJ) என்பவரை ஒரு திருமணத்தில் சந்தித்தார்; மேலும், பாபாவின் சில புத்தகங்களைப் படிக்கும் வாய்ப்பு அரிதானது என்ற நம்பிக்கையை, முனிராஜ் அவர் மனதில் வேரூன்றச் செய்தார். தனது சொந்த ஊரில் வாழ்ந்த பாபா அன்பர்களுடனான அடுத்தடுத்த சந்திப்புகளுக்குப் பின்னர், அமியா, பாபாவிற்கு ஒரு கடிதம் எழுதினார். கடிதம் எழுதிய அடுத்த கணத்திலிருந்து பாபாவின் மீதான அன்பின் வெளிப்பாடும், அதீத ஏக்கமும் அவரை உணர்ச்சிவசப்படச் செய்தது. பாபாவைப் பார்க்க பிப்ரவரி மாதம் வரை காத்திருக்க முடியாது என்று அவருக்கு கடிதம் எழுதவே, பாபா அவரை டிசம்பர் 7 அன்று பூனாவிற்கு வர அனுமதித்தார்.

பாபா 7ஆம் தேதி மெஹராஸாத்திலிருந்து வருகை தந்து, கணேஷ்கிந்தில் இரவைக் கழித்தார். காலை 5:00 மணிக்கு எழுந்திருக்க வேண்டியிருந்ததால், அவர் ஓய்வின்றி, காலை 8:00 மணிக்கு குருபிரசாத்தை வந்தடைந்தார். பாபா மண்டபத்திற்குள் நுழைந்ததும் ஒன்றுதிரண்ட அன்பர்கள் அனைவரும் கோஷமிட்டு வரவேற்றனர். அவரது பாதங்களை தொடுவதும், மலர்மாலை அணிவிப்பதும் கண்டிப்பாகத் தடைசெய்யப்பட்டது. முதலில் குருநாதருக்கான பிரார்த்தனை (MASTER'S PRAYER) சத்தமாக மொழியப்பட்டது; அதைத் தொடர்ந்து, நிகழ்ச்சியில் கலந்துகொண்ட நபர்கள் மற்றும் குடும்பத்தினரின் குறுகிய ஒரு நிமிட அறிமுகம் செய்யப்பட்டது. பாபா சிலரை அரவணைத்து, சிலரைத் தட்டிக் கொடுத்து, சிலரை முத்தமிட்டு, சில அன்பான வார்த்தைகளை ஒவ்வொருவரிடமும் பகிர்ந்துகொண்டார். பாபா, அமியாவை அறையின் முன்புறம், பெண் மண்டலியின் பக்கத்தில் அமர அழைத்தார்,

அதனால் அவர் பாபாவை நன்றாகப் பார்க்க முடிந்தது. அந்த நிமிடம் வரை, கூட்டத்தில் தான் இருப்பது பாபாவிற்குத் தெரியாது என்று அமியா கருதினார்.

தனிப்பட்ட அறிமுகங்கள் நிறைவடைந்ததும், பாபா, கீழ்ப்படிதலின் பல்வேறு வகைகளைப் பற்றி ஒரு சொற்பொழிவைத் தொடங்கினார்:

**நித்தியமாக, கடவுள் ஒருவரே, என்றும் மாறாதவர். கடவுள் என்றும் மாறுவதில்லை, இதர அனைத்தும் மாறுகிறது. இதுவெல்லாம் கடந்து போகும் நிகழ்ச்சி. நேற்றைய தினம் கடந்துவிட்டது; இன்றைய நாளும் கடந்து போகும். ஆனால் கடவுள் இருந்தார், இருக்கிறார், எப்போதும் உளதாயிருப்பார். இன்று நீங்கள் வயது வந்தவர், ஆனால் ஒரு காலத்தில் நீங்கள் குழந்தையாக இருந்தீர்கள். சில வருடங்களில் நீங்கள் முதுமை அடைந்து உடலைக் கைவிடுவீர்கள். அதற்குப் பிறகு நீங்கள் மீண்டும் பிறந்து மற்றுமோர் உடலை அடையப் பெறுவீர்கள். பல பிறப்பும், பல இறப்பும் கடந்து செல்கின்றன. கடவுள் மட்டுமே என்றென்றும் நிலையாக இருக்கிறார்.**

**மனம் பிறப்பிலும், இறப்பு மூலமாகவும் மாறி மாறி மாறுபட்ட சூழ்நிலைகளை எதிர்கொள்கிறது. மனம் அழியும் தருவாயில், கடவுள் தம்மை வெளிப்படுத்துகிறார். மேலும் ஒருவர் கடவுளைப் பற்றி அறியாத வரை, மனம் நிலைத்திருக்கும். 'மனம்' போனால் கடவுள் 'வருகிறார்'. என்னை முழு மனதுடன் நேசிப்பதன் மூலம் மட்டுமே, மனம் போக முடியும். அது என் அருளாலும் கரைந்து போகலாம். ஆனால் இந்த அருளுக்கு தகுதியானவராக இருக்க, நீங்கள் எனக்குக் கீழ்ப்படிவது மிகவும் இன்றியமையாதது; இது எனது விருப்பத்தின்படி முழுவதுமாகச் செயல்படுவதை உள்ளடக்கியது.**

**கீழ்ப்படிதலில் பல்வேறு வகைகள் உள்ளன:**

1. **வீரர்களின் கீழ்ப்படிதல் - தேசபக்தி நோக்கங்களிலிருந்து (ஒருவரின் நாட்டிற்காக) கீழ்ப்படிவது. ஒரு போர் தளபதி 'சுடு!' என்று கட்டளையிட்டால் அந்தத் தோட்டா, வேறு எந்த சிந்தனையும் இல்லாமல் சிப்பாயால் சுடப்பட வேண்டும். பழைய பழமொழியைப் போல்: "அவர்களது செயல் ஏன் என்று நியாயப்படுத்துவதில் அல்ல, ஆனால் செய்வதிலும், செத்து மடிவதிலும்தான் உள்ளது."**
2. **கூலிக்காக வேலை செய்யும் கீழ்ப்படிதல். எவ்வளவு அதிகமாகவும், வேகமாகவும் ஊதியம் வழங்கப்படுகிறதோ, அந்த அளவுக்கு அவரது 'ஆம் ஐயா' என்பது அவருடைய முதலாளிக்கு அதிகமாகும்.**
3. **அடிமைத்தனத்தில் ஓர் அடிமையின் கீழ்ப்படிதல். இது கட்டாயக் கீழ்ப்படிதல். முற்காலத்தில் அடிமைகளை விலைக்கு வாங்கி, விற்கும் வேளையில், அவர்களின் அவலமான வாழ்க்கையைப்பற்றி கேள்விப்பட்டிருக்கிறோம். அவர்களை வசைபாடி, நிர்ப்பந்தத்தின் கீழ் கீழ்ப்படியச் செய்வதைத் தவிர, வேறு வழி இல்லாததால், அவர்கள் தங்கள் வேலையைச் செய்யவேண்டிய கட்டாயம்.**

4. கடவுளை நேசிப்பவரின் கீழ்ப்படிதல். இதுவே உண்மையான கீழ்ப்படிதல். மனமுவந்து கீழ்ப்படிதல் - ஊதியம் அல்லது மறுபரிசீலனை இல்லை, எதிர்பார்ப்பு அல்லது வெகுமதி எதுவும் இல்லை, ஆனால் அன்பு ஒன்றுதான் உள்ளது.

மனமுவந்து கீழ்ப்படிதல் என்பது, முழு மனதுடன் அன்பினால் ஈர்க்கப்பட்ட கீழ்ப்படிதலின் உண்மையான வகை. இந்தக் கடைசி வகையைச் சார்ந்த கீழ்ப்படிதலில் கூட, வெவ்வேறு நிலைகள் உள்ளன:

(அ) முதல் கட்டத்தில் இறை அன்பன் கீழ்ப்படிவதில் தனது பொது அறிவு மற்றும் பகுத்தறிவைப் பயன்படுத்துகிறான். உதாரணமாக, என்னை மிகவும் நேசிக்கும் மற்றும் எனக்கு மனதார கீழ்ப்படிய விரும்பும் காடேக்கரை எடுத்துக் கொள்ளுங்கள். நான் அவரிடம், "உங்களின் ஒரே மகன் திகம்பரனின் தலையை நீங்கள் துண்டிக்க வேண்டும்!" என்று சொல்வதானால், காடேக்கரின் பொது அறிவு அவரைத் தயங்கச் சொல்லும், அவர் சிந்திக்கத் தொடங்குகிறார்: "பாபா எப்படி எனது மகனைக் கொல்லச் சொல்ல முடியும்? பாபா அதைத் தீவிரமான தொனியில் சொல்லியிருக்க மாட்டார்."

அப்போது நான் அவருக்கு நினைவூட்டுகிறேன்: "நான் உங்களிடம் மிகவும் தீவிரமாகவும், மிகுந்த ஆர்வத்துடன் சொல்கிறேன், திகம்பருடைய கழுத்தைத் துண்டித்து விடுங்கள்!"

மீண்டும், காடேக்கரின் பொது அறிவும், பகுத்தறிவும் தனது செயலில் வெளிப்படுகிறது. அவர் தயக்கத்துடன் எழுந்து, ஒரு மழுங்கிய கத்தியைத் தேடிச் செல்ல நினைக்கிறார்: "நான் திகம்பருடைய தொண்டையில் ஒரு சிறிய வெட்டுகாயத்தை ஏற்படுத்த வேண்டும் என்று பாபா நினைத்திருக்க வேண்டும்... நான் அவரைக் கொல்ல வேண்டும் என்று பாபா நினைத்திருக்க மாட்டார். மழுங்கிய கத்தி அல்லது ரம்பத்தால் காயப்படுத்துவது, பாபாவைத் திருப்திப்படுத்தும். நான் உண்மையில் தலையை உடலிலிருந்து பிரிக்க வேண்டும் என்று பாபா கட்டளையிடவில்லை. பாபா என்னை 'அவரது தொண்டையைக் காயப்படுத்த' மட்டுமே கூறினார்." இப்படி, காடேக்கர், பாபாவிற்கு கீழ்ப்படியவுமில்லை, தனது மகனுக்கு எந்தக் கடுமையான தீங்கும் விளைவிக்கவில்லை. அவர் முயற்சி செய்து, தனது பகுத்தறிவைப் பயன்படுத்துகிறார்; திகம்பருக்கு ஒரு சிறிய, மேலோட்டமான காயத்தை மட்டுமே விளைவிக்கிறார். அவரது பாகுபாட்டு முறையில், அவர் தனது சுய நலனுக்காக, அசல் கட்டளையை மாற்றியமைத்துள்ளார். இது மனமுவந்து கீழ்ப்படிதலின் ஒரு நிலை.

(ஆ) இரண்டாம் நிலை, நேரடியான கீழ்ப்படிதலால் வகைப்படுத்தப்படுகிறது. இங்கே காடேக்கர், தனது இதயத்தில் எந்தவிதமான உற்சாகமுமின்றி எழுந்து, கண்களை மூடிக்கொண்டு, திகம்பருடைய தொண்டையை வெட்டுகிறார். இது ஒரு கசப்பான மருந்தை உட்கொள்வது போன்றது - 'ஆமணக்கு எண்ணெயை விழுங்குவதுபோன்ற கீழ்ப்படிதல்.'

காடேக்கர் தனது பொது அறிவையோ, பகுத்தறிவையோ பயன்படுத்துவதில்லை. அவர் கீழ்ப்படிகிறார், ஆனால் அதைக் களிப்பின்றி செய்கிறார்.

(இ) மூன்றாவது கட்டத்தில், அன்பன் அன்பிற்குரிய குருநாதரின் இன்பத்தை நாடுகிறான். இங்கே காடேக்கர் என்னை மகிழ்விப்பதற்காக திகம்பருடைய தொண்டையை வெட்டுகிறார்; அவர் அதைச் செய்வதில் மகிழ்ச்சியடைந்து, திருப்தியடையும் விதத்தில் மனமுவந்து செய்கிறார். அவர் அவ்வாறு செய்வதில் மகிழ்ச்சியடைகிறார் மற்றும் அவர் என்னை மகிழ்வித்ததால் திருப்தி அடைகிறார். நான் இந்த வகையான கீழ்ப்படிதலை 'பிரியமானவரின் மகிழ்ச்சிக்காக முழுமையான கீழ்ப்படிதல்' என்று அழைக்கிறேன்.

(ஈ) கீழ்ப்படிதலின் மற்றுமொரு வகை, முழுமையாகக் கீழ்ப்படியும் நிலை. இது பிற வகைகளிலிருந்து வேறுபட்டது. ஆன்மீகப் பாதையில் முன்னோக்கிச் செல்லும் ஆன்மாக்களைத் தவிர, எவரும் குருநாதருக்கு அத்தகைய கீழ்ப்படிதலை வழங்க முடியாது. ஐந்து மற்றும் ஆறாவது ஆன்மீகத் தளங்களில் நிலைகொண்டுள்ளவர்கள் மட்டுமே, குருநாதருக்கு இத்தகைய கீழ்ப்படிதலை வழங்க முடியும்.

காடேக்கரும், திகம்பரும் எனது முன்னிலையில் இருக்கிறார்கள் என்று வைத்துக்கொள்வோம், நான் தந்தையிடம் சொல்கிறேன்: "காடேக்கர், நீங்கள் இங்கே வந்துள்ளீர்கள். உங்கள் மகன் எங்கே? அவர் ஏன் இங்கு இல்லை?" அவரது முழுமையான கீழ்ப்படிதல் காடேக்கரை, அவரது மறதி நிலைக்கு எடுத்துச் செல்கிறது, அவர் திகம்பரைத் தனதருகில் பார்க்காமல், என்னிடம் கூறுகிறார்: "ஆம், பாபா, திகம்பரைக் காணவில்லை." இது குருநாதரை மகிழ்விப்பதற்காகத் தலையை அசைப்பது மட்டுமின்றி, திகம்பர் தனதருகில் இருப்பதை அவர் உண்மையில் பார்க்கவில்லை.

முடிவில், பாபா புன்னகையுடன் சைகை செய்தார், "பயப்படாதீர்கள்! எவரையும் வெட்டும்படி பாபா எவரிடமும் கேட்கப் போவதில்லை! அது ஓர் உவமையாக எடுத்துரைத்தது. 'வெட்டுவது' என்பது 'பற்றின்மை'யாக இருப்பது."

பாபா வந்திருந்தவர்களை தேநீர் அருந்த அனுப்பிவிட்டு, இடைவேளையின் போது, அமியா ஹஸ்ராவை தன்னிடம் அழைத்தார். பாபா அமியாவைத் தழுவிக் கொண்டார்; பின்னர் அவரைச் சுட்டிக்காட்டி, பாபா கூறினார்: "அமியா, நீங்கள் கடவுள். நீங்கள் கடவுளைப் காண்கிறீர்கள் (பாபா தன்னைச் சுட்டிக்காட்டினார்), ஆனால் நீங்கள் கடவுள் ஆக வேண்டும்!"

அமியா ஒரு கல்லூரி விரிவுரையாளராகப் பணிபுரிந்தார்; மேலும் பாபா, எரச் மூலமாக விளக்கினார், "அமியாவிற்கு நிறைய தெளிவற்ற, குழப்பமான சிந்தனைகள் உள்ளன. நான் இன்று உங்கள் புத்திசாலித்தனத்தை சோதிக்கிறேன். நான் உங்களுக்கு, கடவுள் மற்றும் சுவாசம் பற்றிய ஒரு

**விளக்கத்தைத் தருகிறேன். பத்து வாக்கியங்கள் மட்டுமே. நீங்கள் அதை மீண்டும் மொழிய வேண்டும், அவ்வளவுதான்.”**

பாபா ஆரம்பித்தார்:

**கடவுள் என்றால் என்ன? கடவுள் எடையில் பளுவாகவோ அல்லது குறைவாகவோ இல்லை. அவர் எங்கும் வியாபித்திருப்பவர். அவர் முற்றிலும் சுதந்திரமானவர். ஆனால் அனைத்தும் அவரைச் சார்ந்தது. உங்களுக்கு, பௌதீக உடல் ஒன்று உள்ளது; அது பொருள் சார்ந்த விஷயம். உங்களுக்கு ஆற்றலும் (சக்தி) மனமும் உள்ளன. உடல், ஆற்றல், மனம் மூன்றும் ஒரு வகையில், சுவாசத்தை சார்ந்தது. ஆழ்ந்த தூக்கத்தில் உடல் படுக்கையில் கிடக்கிறது. ஆற்றலும், மனமும் செயல் முனைப்பற்ற நிலையில் உள்ளன; ஆனால் மூன்றையும் சார்ந்திராமல் சுவாசம் தொடர்கிறது.**

அமியாவிற்கு கவனம் செலுத்துவதில் சிக்கல் ஏற்பட்டது. அவர், பாபா கூறியதை நினைவுகூர முயன்றார், ஆனால் அதைத் திரும்ப மொழியுமாறு கேட்டபோது, ”பாபா, நான் ஒரு முட்டாள். எனக்கு எதுவும் நினைவில் இல்லை” என்று ஒப்புக்கொண்டார்.

பாபா கூறினார், “**இல்லை, உங்களிடம் தெளிவற்ற, குழப்பமான சிந்தனைகள் நிரம்பி உள்ளன. எதுவாயினும் கவலைப்படாதீர்கள். நீங்கள் போப்பாலுக்குத் திரும்பிச் சென்று, நான் கூறியதை நினைவுகூர்ந்து, அதை எழுதி எனக்கு அனுப்புங்கள்**” என்றார்.

“**சுவாசம் கடவுள் அல்ல**” என்று பாபா தொடர்ந்தார். “**இது கடவுளைப் புரிந்துகொள்வதற்கான ஓர் உவமை மட்டுமே. அவர் (நூர்) இறை ஒளியின் வரம்பற்ற பெருங்கடல்; அதை ஆங்கிலத்தில் - ஒளி** (‘LIGHT’) **அல்லது - பிரகாசம்** (‘EFFULGENCE’) **என்று மட்டுமே போதுமானதாக வழங்க முடியும். கடவுளைப் பார்ப்பவர், கடவுளைத் தவிர வேறு எதையும் பார்ப்பதில்லை, பிற அனைத்தையும் பார்ப்பவர் உலகத்தைப் பார்க்கிறார்.**

“**கடவுளைக் காண்பதற்கும், கடவுளாக மாறுவதற்கும் (கடவுளோடு ஐக்கியமாவதற்கும்) ஒரு பெரிய வித்தியாசம் உள்ளது; நீங்கள் கடவுள், இருந்தும், இன்னமும் நீங்கள் கடவுள் என்பதை உணரவில்லை**” என்று பாபா மீண்டும் கூறினார்.

இந்த நேரத்தில், பெரும்பாலான அன்பர்கள் மண்டபத்திற்குள் திரும்பி வந்தனர்; பாபா, பூனா பஜனைக் குழுவினரின் இசையைக் கேட்க விரும்பினார். ஒரு சிறிய குழு, பாபாவின் இதயத்தைத் தொடும் பஜனைகள் மற்றும் ஆழ்ந்த அர்த்தமுள்ள கஸல்களால் மகிழ்வித்தது. பெரும்பாலான பாடல்கள் பாபாவின் தெய்வீகத் தன்மையைப் பற்றி இயற்றப்பட்டவை. ஹிந்தி பாடல் ஒன்றின் இறுதியில், சத்குருவின் நிலையைக் குறிப்பிட்டு, பாபா கூறினார்: “**நான் நித்தியமாகவும், பிரிக்கப்படாமலும், ஏக இறைவனான அந்த நிலையை, தொடர்ந்து அனுபவிக்கிறேன். அனைத்தும் நானே - மத்தளம் மற்றும்**

**ஹார்மோனியம், சுரங்கள் மற்றும் ராகங்கள், பாடகர்களும், அவற்றைக் கேட்பவர்களும்! நான் எல்லாவற்றிலும் எல்லோரிலும் இருக்கிறேன்."**

ராமகிருஷ்ணனிடம், **"நான் கூறுவதை உங்களால் புரிந்துகொள்ள முடிகிறதா?"** என்று பாபா கேட்டார். அவர் வெளிப்படையாக பதிலளித்தார், அவர் வெறும் வார்த்தைகளை மட்டுமே கேட்டார், அதற்கு மேல் எதுவும் இல்லை. அதற்கு பாபா சிரித்துக்கொண்டே தொடர்ந்தார்: **"சத்குரு அல்லது குதுப் நிலையில் இருப்பவரின் உணர்வு நிலை இப்படித்தான் இருக்கும். அவ்வளவு சுலபம் - இயற்கையானது, தன்னிச்சையானது. சத்குருவும், குதுப்பும் இறை ஞானியாக மாறிவிட்டதால், சிந்தனைக்கு வாய்ப்பே இல்லை. நான் எல்லாமாக எல்லோரிலும் இருந்தாலும், இந்தக் குறுகிய கால அளவிலான விழிப்புணர்வின் வெளிப்பாடு எப்போதாவதுதான் நிகழும்."**

அதைத் தெளிவுபடுத்தும் விதத்தில் பாபா தொடர்ந்து விளக்கினார்: **"உங்கள் உடலின் எல்லா பாகங்களிலும் நீங்கள் இருப்பதை நீங்கள் அறிவீர்கள், ஆனால் உடலின் ஒவ்வொரு பாகத்திலும் இருப்பதை நீங்கள் எப்பொழுதும் நினைவில் கொள்ள மாட்டீர்கள். சில நேரங்களில் மட்டுமே நீங்கள் சொல்கிறீர்கள்: 'இது எனது மூக்கு. இது எனது கண் என்று!' நீங்கள் உங்கள் சுண்டு விரலாக இருக்கிறீர்கள், மேலும் அந்த விரலிலும் இருக்கிறீர்கள், ஆனால் சாதாரணமாக அது உங்களுடையது என்று நீங்கள் நினைவில் கொள்ள மாட்டீர்கள். உங்கள் சுண்டு விரலில் வெட்டுபட்டால், உடனடியாக அது 'உங்களுடையது' என்பதை உணர்ந்து கொள்கிறீர்கள்.**

**"சத்குரு அல்லது குதுப், தன்னை எல்லாவற்றிலும், எல்லோரிலும் உணர்வுப்பூர்வமாக காண்கிறார், அனுபவிக்கிறார். இந்த அனுபவம் அவருக்கு ஒவ்வொரு நொடியும் உடனடியாக, தன்னிச்சையாக நிகழ்வது. இது உங்கள் சுண்டு விரலில் இருப்பது போல சிந்தனையின் விளைபொருளல்ல. இந்த அனுபவம் இயற்கையானது!"**

முந்தைய நாள் காம்ப்ளே அவரது காலில் காயம் அடைந்ததும், பாபா அவரைப் பார்த்து கூறினார்: **"எனக்கு செல்வந்தர்கள், மரியாதைக்குரியவர்கள் மற்றும் புத்திசாலிகள் அவசியம் என்ற முறையில் தேவை இல்லை; நான் ஏழை எளிய மக்களின் பலவீனங்களைப் பொருட்படுத்தாமல், அவர்களையே நாடுகிறேன். நான் இயேசுவாக இருந்தபோது, ஏழை மீனவர்கள் என்னை சூழ்ந்து கொள்வதை விரும்பினேன்; கிருஷ்ணனாக, வேடிக்கையான, களிப்பூட்டக்கூடிய கோபாலர்களின்** (கிருஷ்ணரின் துணையாக இருந்த மாடு மேய்ப்பவர்கள்) **சகவாசத்தில் நான் மகிழ்ச்சியாக இருந்தேன்; நொண்டு நடை போட்ட பெண்டியா எனும் கோபாலன், கிருஷ்ணனுக்கு மிகவும் பிரியமானவராக இல்லையா?**

**"இப்போது இந்த அவதார காலகட்டத்தில், உடல் ஊனமுற்றோர், நொடிந்து போனவர்கள், வாழ வழி தெரியாதவர்கள் அனைவரும் எனது சேவகர்கள். நீங்களே எனது பணிக்கான ஊடகங்கள் என்பதை நான்**

**அறிவேன். எனவே எதற்கும் கவலைப்பட வேண்டாம். நான் சொல்வதைச் செய்யுங்கள். முழு உலகமும் அது விரும்புவதைச் சொல்லட்டும். என் அறிவுரைகளைச் செயல்படுத்தி மேலும் மேலும் என்னை நேசிக்கவும்.**"

அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் ஆஸ்திரேலியாவில் வாழும் அவரது அன்பர்களைப் பற்றி பாபா கூறினார்: "**எனது மேற்கத்திய அன்பர்களின் அன்பை நினைத்துப் பாருங்கள். அவர்கள் எவ்வளவு கரிசனத்துடன் இருக்கிறார்கள்; என் ஆரோக்கியத்தில் எவ்வளவு அக்கறை காட்டுகிறார்கள். அவர்கள் எனது விருப்பத்தையும் மகிழ்ச்சியையும் மட்டுமே பார்க்கிறார்கள். அவர்களின் கீழ்ப்படிதலை கவனியுங்கள். நான் விரும்பியதால், அவர்கள் சகவாச நிகழ்ச்சிகளில் பங்கேற்க அவ்வளவு தூரத்திலிருந்து வரத் தயாராக இருந்தனர். அவர்கள் சகவாச திட்டத்தின் மாற்றத்தையும் ஏற்றுக்கொண்டனர்.**"

பாபா கேட்டார்: "**உங்கள் இதயங்கள் எனது மையமாகத் திகழட்டும் என்று நான் கூறும் இவ்வேளையில், உங்களுக்கு என்ன புரிகிறது?**"

பாபா, அவராகவே பதிலளித்தார்: "**உங்கள் பஜனை நிகழ்ச்சிகளில் பங்கெடுக்கும் போதும், என்னைப் பற்றி பேசும் போதும், உங்கள் பக்தியை வெளிப்படுத்தும் விதத்தில் உங்கள் வாழ்க்கை வடிவமைக்கப்படுகிறது. இப்போது நான் உங்களுக்கு ஒன்று சொல்கிறேன்; உங்கள் அன்றாட வாழ்க்கையில் உங்கள் எண்ணங்கள், வார்த்தைகள் மற்றும் செயல்களில் கவனமாக இருங்கள். நீங்கள் சொல்வதற்கு எதிராக ஏதேனும் செய்தால் அது என்னை அவமதிக்கும் செயலாகும்.**"

புன்னகையுடன் பாபா தொடர்ந்தார்: "**உங்கள் அனைவரிடமும் பொதுவான ஒரு நல்ல விஷயம் என்னவெனில், நீங்கள் என்னை நேசிப்பதும் உங்களுக்குள் மோதிக்கொள்வதும் தான்!**"

அனைவரும் மனமார சிரிக்க, காடேக்கர், "பாபா, இப்போது எங்கள் மோதலுக்கு முடிவு வந்துவிட்டது. நாங்கள் ஒரு குழுவாகப் பணிபுரிகிறோம்" என்றார்.

ஆனால் ராமகிருஷ்ணன் இடையே குறுக்கிட்டு, "பாபா, 'மையத்தில் நாங்கள் செய்யும் பணியின் தன்மை குறித்து, இன்னும் சில நேர்மையான கருத்து வேறுபாடுகள் உள்ளன' என்று நான் கூற விரும்புகிறேன். எங்கள் குழுவில் சிலர், அவதார புருஷராக இருப்பதால், நீங்கள் மட்டுமே அவதார பணியைச் செய்ய முடியும் என்று கூறுகிறார்கள். மையத்தின் மூலம் செய்யப்படும் வழியில் அவர்கள் செயல்பட வேண்டிய அவசியம் இல்லை என்று அவர்கள் நினைக்கிறார்கள்."

பதிலுக்கு, பாபா விளக்கமளித்தார்: "**என் அன்பர்களில் சிலர் என்னை அவதார புருஷராக நம்பினால் நல்லது, அவர்களுக்கு இந்த நம்பிக்கை இருந்தால், வேறு என்ன வேண்டும்? நான் மட்டுமே எல்லோரிடமும், எல்லாவற்றிலும் இருக்கிறேன்; எனவே தொழில் எங்கே? தொழிலாளி எங்கே?**

**“நான் மட்டுமே எங்கும் இருக்கிறேன். எனவே இருக்கும் அனைத்திலும், நிகழும் அனைத்திலும், செய்யும் அனைத்திலும், மேலும், செய்பவரிலும் - அதாவது இவை அனைத்திலும் நான் இருக்கிறேன். ஆனால் அந்த உறுதியான நம்பிக்கை யாரிடம் உள்ளது? என்னை அவதார புருஷராக எடுத்துக் கொண்டால், நானே அவராக எங்கும், எதிலும் நிறைந்திருக்கிறேன். நான் எல்லாமாக, எல்லா உயிரினங்களாகவும் ஆகிவிட்டேன்; இப்போது என்னை ஆதிகால புருஷர் என்று நம்புபவர்களுக்கு, நான் என் அவதார பணியைச் செய்யும்போது, அவர்களும் எனது பணியிலும், நோக்கத்திலும் பங்கெடுக்க வேண்டும், பாடுபட வேண்டும் என்பது இயற்கையானது. நான் அவதார புருஷர் என்று உறுதியாக நம்பும் ஒருவருக்கு, எந்தப் பணியும் இராது, எல்லாமே சகஜமாக நிகழும்.”**

பாபா தொடர்ந்து விளக்கினார்: **“நான் அவதார புருஷர் என்றால், சந்தேகத்திற்கு இடமின்றி நானே அவர் எனும்போது, முழு உலகமும் எனக்கு எதிராகத் திரும்பினாலும், அது என்னைச் சிறிதளவும் பாதிக்காது. நான் அவதார புருஷர் இல்லை என்றால், முழு உலகமும் எனது பாதங்களில் அடிபணிந்து, பஜனைகள் பாடி என்னை புகழ்வதால் என்ன பயன்? ஆனால் நான் உயர்ந்தவர்களில் மிகவும் உயர்ந்தவன் என்பதை நான் அறிவேன்; அதனால்தான் நான் சொல்கிறேன், என்னை நேசியுங்கள், என்னை நேசிப்பது அனைத்திலும் சிறப்பும், மதிப்பும் மிக்கது.**

**“சட்டம் சொல்கிறது: ‘பிறருக்காக வாழுங்கள்.’ நான் ஒரு வினாடி கூட இடைவெளி இல்லாமல், ஏக இறைவனாக, அனைவரும் உட்பட, அனைத்திலும் வியாபித்திருக்கிறேன். எனவே, ‘என்னை நேசியுங்கள்’ என்று நான் கூறுவது, சட்டத்திற்கு முற்றிலும் இணங்கி இருப்பது. என்னுடைய தனிப்பட்ட தொடர்பில் வந்ததால் நீங்கள் அனைவரும் பாக்கியவான்கள்.”**

பாபா அப்போது குறிப்பிட்டார்: **“சகவாச நிகழ்ச்சி தீர்மானிக்கப்பட்டது, ஆனால் என் இடுப்புப் பகுதியில் வலி தொடர்ந்து உள்ளது. இருப்பினும், சகவாசங்கள் நிச்சயமாக 1958 பிப்ரவரியில் நடக்கும்”** என்று குறிப்பிட்டார். **“வலி இருந்தாலும், இல்லாவிடிலும் சகவாச நிகழ்ச்சி நிச்சயம்”** என்று நகைச்சுவையாகக் கூறினார்.

பாபா, தனது பெயரில் செய்யப்படும் பணிகளைப் பற்றி விளக்கினார்:

**பணி என்பது பாபாவை முழு மனதுடன் நேசிப்பதாகும், அதனால் நீங்கள் என் அன்பில் தொலைந்து போய், உங்களை முழுமையாக மறந்துவிடுவீர்கள். உங்களால் என்னை அங்ஙனம் நேசிக்க முடியாவிடில், தயக்கமின்றி எனக்குக் கீழ்ப்படியுங்கள். பிறர் உங்களை அவதூறாகப் பேசினாலும், எனது கட்டளையைப் பின்பற்றிச் செல்லுங்கள். இதுவும் உங்களால் சாத்தியமில்லை என்றால், பாபாவை நேசிக்கவும், மையங்களை நடத்தவும், பஜனைப் பாடவும், என்னைப் பற்றி மக்களிடம் பேசவும், எனது செய்திகளை அவர்கள் முன் வைக்கவும் முயற்சி செய்யுங்கள். இந்த வழியில், மக்களை எனது தொடர்பில் கொண்டு வருவதன் மூலம், நீங்களும்**

**சிறந்த பணியைச் செய்வீர்கள். உங்கள் இதயங்களை சுத்தமாக வைத்துக் கொள்ளுங்கள்; இல்லையேல், நீங்கள் எனது தொடர்பில் கொண்டு வரக்கூடியவர்கள் மீது, அது எதிர் விளைவை ஏற்படுத்தும்.**

**சில நேரங்களில், தேவையான அளவு மதுபானம் ஒருவருக்கு உதவுகிறது; ஆனால் அளவுக்கு அதிகமாகிவிட்டால், அந்த நபர் ஒரு பைத்தியக்காரனைப் போல செயல்படத் தொடங்குகிறார். அதேபோல, பரிபூரண குருநாதர்களால் விளக்கப்பட்ட ஆன்மீக உண்மைகள், சரியாகப் புரிந்து கொள்ளப்பட்டால், விலைமதிப்பற்ற உதவியாக நிரூபிக்கப்படும், புரிந்து கொள்ளாவிட்டால், அவை தேவையற்ற குழப்பம் மற்றும் பிரச்சினைக்குக் காரணமாகும்.**

**பணியைப் பற்றி மேலும் அதிகம் கூறலாம், ஆனால் இப்போது வாழ்க்கைச் சுற்றறிக்கை எண். 37இல் ("பாபாவின் நினைவூட்டல்") குறிப்பிடப்பட்டுள்ள நான்கு விஷயங்களை கவனமாகக் கருத்தில்கொள்ளவும்:**

1. **பாபாவிற்குக் கீழ்ப்படிவதில் உறுதியாக இருங்கள்;**
2. **காமச் செயல்களிலிருந்து விலகி இருங்கள்;**
3. **நேர்மையாக இருங்கள்; எவரையும் ஏமாற்றவோ, தவறான நம்பிக்கைகளையோ கொடுக்காதீர்கள்; மற்றும்**
4. **பிறரின் உணர்வுகளைப் புண்படுத்தாதீர்கள்.**

மதியம் 12:30 மணி, மதிய உணவுக்கான இடைவேளையில், பாபா மீண்டும் கணேஷ்கிந்திற்குச் சென்றார்; அங்கு, பிந்த்ரா ஹவுஸ் குடும்பத்தினர் அவருக்கு உணவு கொண்டு வந்தனர். அவர் 3:30 மணிக்கு குருபிரசாத் மாளிகைக்குத் திரும்பிச் சென்றார். பாபா, வராண்டாவில் தனது இருக்கையில் அமர்ந்து, தரிசனம் வழங்கத் தொடங்கினார்; தரிசனம் அவரது அன்பர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டது, பொது மக்களுக்கு அல்ல; இரண்டு மணி நேரத்தில் நிகழ்ச்சியை நிறைவு செய்து, அன்று மாலை ஆறு மணிக்கு, ஜெய் கோஷங்களுக்கு மத்தியில், பாபா மண்டலியுடன் மெஹராஸாத் புறப்பட்டுச் சென்றார்.

1957 டிசம்பர் 9 திங்கட்கிழமை அன்று, ஆதி சீனியர் காலை 9:30 மணியளவில் **வாடியா பூங்கா**விற்கு பாபாவைக் காரில் அழைத்துச் சென்றார்; அங்கு பாபா சிறிது நேரம் காரில் அமர்ந்து கிரிக்கெட் போட்டியைப் பார்த்து, பின்பு மெஹராஸாத் திரும்பிச் சென்றார்.

அடுத்த பத்து நாட்கள் மெஹராஸாத்தில், இந்திய சகவாசத்திற்கான ஒரு விரிவான திட்டம் வகுக்கப்பட்டது. பாபா, பெண்டு, பாதிரி, விஷ்ணு ஆகியோரை, பலமுறை அழைத்து, அவர்களுடன் விவாதித்து, அனைத்து ஏற்பாடுகளையும் செய்து முடித்தார்.

அலோபாவின் கருப்பு கண்ணாடிகள் குறித்து கூட்டத்தில் பேச்சு எழுந்தது. சூரிய கண்ணாடிகள் கூட அலோபா, பாபாவை '**உற்றுப் பார்ப்பதைத்**

**தடுக்காததால், பாபா, ஆறு மாதங்களுக்கு, அலோபா தனது முன் வரக்கூடாது**' என்று தடை விதித்தார். ஆனால் அங்கும் இங்கும் மறைந்திருந்து, பாபா, தனது இல்லத்திற்கும், மண்டலி மண்டபத்திற்கும் இடையே வந்து செல்லும் வேளையில், கடைக்கண் வழியாகவேனும் பாபாவைக் காணும் வாய்ப்பை அலோபா தவறவிட்டதில்லை. அலோபாவை மும்பையில் ஒரு மாதம் தங்கும்படி பாபா கட்டளையிடும் அளவுக்கு அது சென்றது. அவரைக் கண்டித்து, "**நீங்கள் தினமும் என்னை, கோபத்திற்கு உள்ளாக்குகிறீர்கள்; ஒரு மாத காலம் அங்கேயே இருங்கள். உங்கள் பைகளுடன் மாட்டு வண்டியில் பயணித்து, அஹமதுநகருக்குச் செல்லுங்கள்; அங்கிருந்து ரயிலில் உடனே மும்பைக்குப் புறப்படுங்கள். ஒரு மாதம் கழித்து உங்களை மீண்டும் அழைக்கிறேன்**" என்று கூறினார்.

கிராமத்திலிருந்து மாட்டு வண்டி ஒன்று வாடகைக்கு எடுக்கப்பட்டு, அதில் அலோபாவின் பெட்டி பைகள் வைக்கப்பட்டன. கனத்த இதயத்துடன் அவர் புறப்பட்டுச் சென்றார். ஆனால் இரண்டு மைல் தூரம் சென்ற பின்னர், அவர் ஒரு சிறுவனை நிறுத்தி, பாபாவிற்குக் கீழ்வரும் செய்தியை அனுப்பினார்: "நான் இப்போது வாழ்வதால் எந்த பயனும் இல்லை, நான் எனது வாழ்க்கையை முடித்துக் கொள்கிறேன்."

அதைப் படித்த பாபா, அவரைத் திரும்ப அழைத்து, தனது உயிரைத் துறந்துவிடுவதாக மிரட்டியதற்காகக் கடுமையாகக் கண்டித்தார். அஹமதுநகரிலிருந்து அன்று மெஹராஸாத்திற்கு வந்திருந்த டாக்கேயிடம் பாபா, "**இப்போது நான் அலோபாவை என்ன செய்ய வேண்டும்?**" என்று கேட்டார்.

டாக்கே பதிலளித்தார், "அவரது செய்தி, அவர் பிரச்சினையை உருவாக்கும் நோக்கத்திற்கான ஆதாரம். அவரைக் கைது செய்ய காவல்துறை அழைக்கப்பட வேண்டும்."

பாபா, அலோபாவிடம் கேட்டார், "**நீங்கள் மும்பைக்குச் செல்கிறீர்களா அல்லது நான் உங்களைக் காவல்துறையினரிடம் ஒப்படைக்க வேண்டுமா?**" அலோபா மும்பைக்குச் செல்வதாக உறுதியளித்து வெளியேறினார்.

நிதர்சனமான உண்மை என்னவெனில், அலோபா அவ்வப்போது மும்பைக்குச் செல்ல அனுமதி கோரினார்; சத்தாராவில் தங்கியிருந்த வேளையில், பலமுறை அங்குச் சென்றார். பல வருடங்களுக்கு முன்னர், அவர் மும்பையில் நடத்தி வந்த உணவகம் ஒன்றை, அவர் சத்தாரா இல்லத்தின் இறுதிக் கட்டத்தில் விற்பனை செய்தார்; ஆனால் சில 'பிணைப்புகள்' இன்னும் எங்கேனும் எஞ்சியிருக்கலாம். இந்தப் பற்றுதலைத்தான், பாபா ஒருமுறை துண்டிக்க விரும்பினார்; ஏனெனில், திரும்பி வந்த பின்னர், அலோபா மும்பை செல்வது குறித்து மீண்டும் பேசவில்லை.

மும்பை மையத்தின் செயலாளரான ஸொராப்ஜி ஸிகன்போரியா, பாபாவின் சம்மதத்துடன், மும்பையில் தரிசன நிகழ்ச்சி ஒன்றை ஏற்பாடு

செய்தார். 1957 டிசம்பர் 20 அன்று காலை 9:30 மணிக்கு, மெஹர்ஜியின் காரில் பாபா, பெண் மண்டலியுடன் மெஹராஸாத்திலிருந்து புறப்பட்டார். எரச், பைதூல், பாவ், ஸவக் ஆகியோர் ஆதியின் காரில் பயணம் செய்தனர். அவர்கள் மீண்டும் ஆஷியானாவில் தங்கியிருந்தாலும், இரவில் ஆண் மண்டலி ரூபாமாயின் இல்லத்தில் தூங்குவதற்காகச் சென்றனர். நரிமன், அர்னவாஸ், கேட்டி ஆகியோர் செய்த ஏற்பாடுகளை பாபா பெரிதும் விரும்பினார், ஆஷியானாவில் பாபா மிகவும் சௌகரியமாக உணர்ந்தார். அர்னவாஸ் பிரதான வரவேற்பு அறையில் பாபாவிற்காக ஒரு படுக்கையைத் தயார் செய்து வைத்திருந்தார்.

ஸிகன்போரியா மும்பை, சர்ச்கேட் (CHURCHGATE) பகுதியில் அமைந்த விசாலமான சுந்தர்பாய் ஹாலில் (SUNDERBAI HALL), தரிசனத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்திருந்தார். பூனா பஜனைக் குழு மற்றும் பிற வெளியூர் அன்பர்களும் வந்திருந்தனர். டிசம்பர் 22 காலை 8:00 மணியளவில் பாபா மண்டபத்திற்கு வந்த வேளையில், வழக்கமான பாராட்டுக் கோஷங்களுடன் அன்புடன் வரவேற்கப்பட்டார். மண்டபம் நிரம்பி வழிந்தது. எரச் மற்றும் ஆதியின் தோள்களில் கைகளைத் தாங்கிய வண்ணம், பாபா மேடையில் ஏறி, கூப்பிய கரங்களுடன் கூட்டத்திற்கு வணக்கம் செலுத்தினார். புர்ஜர் மேத்தா குஜராத்தியில் குருநாதருக்கான பிரார்த்தனையை (MASTER'S PRAYER) மொழிந்தார்; அதன் பிறகு பாபா ஒரு நாற்காலியில் அமர்ந்தார்.

நூற்றுக்கணக்கான ஆண்களும் பெண்களும் தனித்தனி வரிசையில் அவரைக் கடந்து செல்ல, தரிசனம் ஆரம்பமானது. தொடர்ந்து, மதுசூதனன் மற்றும் ஒரு கவாலி பாடகரின் இசை, மண்டபத்தை அதிர வைத்தது. மேலும் மும்பையைச் சேர்ந்த தேவேந்திரா என்ற புகழ்பெற்ற பாடகரும் தனது சிறப்பான குரல்வளத்தில் பாடவே, பாபா அவருடைய திறமையைப் பாராட்டினார். நண்பகலில் தரிசனம் நிறைவுற்ற போது, கிட்டத்தட்ட 3,000 பேர் அவதார புருஷரின் ஸ்பரிசத்தை உணரும் அதிர்ஷ்டத்தை அடையப் பெற்றனர். நிகழ்ச்சியை நிறைவு செய்ய, முதலில் குஜராத்தியும், பின்னர் இந்தி ஆரத்தியும் பாடப்பட்டன.

தரிசன நிகழ்ச்சியில் கலந்துகொண்டவர்களில் டாக்டர் தௌலத் ஸிங்கின் மருமகன், உகாண்டாவில் வாழும் திரிலோக் ஸிங் (TRILOK SINGH, UGANDA), இந்தியா வரவிருந்த விமானம் காலந்தாழ்த்தி வந்ததால், தாமதமாக வந்தார். பாபா, அவர் வந்தாரா என்று அவ்வப்போது விசாரித்துக் கொண்டிருந்தார். திரிலோக் ஸிங் மெஹராபாத்தில் சகவாச நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டார், மேலும் ஆஃப்ரிக்காவில் வெகுஜன தரிசனம் வழங்க பாபாவிற்கு அழைப்பு விடுத்தார். அவர் தனது ஒன்பது வயது மகன் ஹர்தீப் (HARDIP) உட்பட, முழுக் குடும்பத்தையும் மும்பைக்கு அழைத்து வந்தார்.

மதியம் ஹாஸ்மான் அரங்கத்தில் பாபாவின் நெருங்கிய அன்பர்களுக்கான ஒரு சிறிய விழா நடைபெற்றது; இது, தரிசன நிகழ்ச்சியாக இல்லாமல் ஒரு நெருங்கிய சகவாச நிகழ்ச்சி போல் இருந்தது. பாபா விரும்பிய கவாலிப் பாடகர்களில் ஒருவரான ஷேக் ஹிதயத் கான் (SHAIKH HIDAYAT KHAN),

ஔரங்காபாத்திலிருந்து பிரத்யேகமாக வரவழைக்கப்பட்டார். மாலை சுமார் 4:00 மணியளவில், பாபா மண்டபத்திற்கு வந்து அமர்ந்ததும், பெண் பார்வையாளர்களில் ஒருவர் முன்னோக்கி விரைந்து வந்து, அவரது பாதங்களில் தலைவணங்கினார். பாபா, **"இது தலை வணங்குவதற்கும், மாலை அணிவிப்பதற்குமான நேரம் இல்லை. தரிசன நிகழ்ச்சி முடிந்துவிட்டது. நான் இப்போது சகவாச நிகழ்ச்சிக்காக வந்துள்ளேன்"** என்று குறிப்பிட்டார்.

பாபா அனைவரையும் அருகில் அழைத்த போது, அனைவரும் அருகில் அமர்ந்தனர். பாபாவின் கேள்விக்கு பதிலளித்த ஸிகன்போரியா, பாபாவின் நீண்டகால அன்பர்கள் அனைவரும் கலந்துகொண்டதாகக் கூறினார். அவர் அனைவரையும் அறிமுகப்படுத்திய வேளையில், பாபா இவ்வாறு எடுத்துரைத்தார்: **"கடவுள் மிகவும் நெருக்கமானவர், ஆனால் அவரது நெருங்கிய தொடர்புக்கு, தைரியம் தேவை. நீங்கள் தலை முதல் கால் வரை தூள் மற்றும் தூசி ஆக மாறுவதானால், ஒருவர் தன்னை இழக்க நேரிடும். அவர் மீது அளப்பரிய அன்பு கொண்டிருங்கள், நீங்கள் அவருடைய அன்பில் துகள் ஆகிவிடுவீர்கள்."**

பாபா, கவாலி பாடகரிடம், **"எனது முன்னால் எத்தனை முறை பாடியுள்ளீர்கள்?"** என வினவினார்.

இது நான்காவது முறை என்று அந்த நபர் கூறவே, பாபா புலனாகாத முறையில் கூறினார்: **"இது நான்காவது முறை, அடுத்தது ஐந்தாவது முறை - ஆனால் அதன் பிறகு, ஆறாவது முறை என்பது இல்லை!"**

பாபாவின் சைகையைத் தொடர்ந்து, பாடகர் இந்த ஈரடிப் பாடலை மீண்டும் பாடத் தொடங்கினார்:

ஃபனா (FANA) இல்லாமல் பக்கா (BAQA) இல்லை (மனதை
நிர்மூலமாக்காமல் இறை உணர்தல் சாத்தியம் இல்லை).
கீழ்நிலை இயல்புகள் அழிக்கப்படாதவரை,
கடவுளை அடைய முடியாது.
அன்பர் கேட்க வேண்டிய விதத்தில் கேட்டால்,
அவர் எதைத்தான் அடையப் பெற மாட்டார்?

அந்தப் பாடல் முடிந்ததும், பாபா குழுவிடம் கேட்டார், **"நீங்கள் அதைப் புரிந்துகொண்டீர்களா?"** உருது மொழி அறிந்தவர்கள் மிகச் சிலரே என்பதால், பாபாவே பதிலளித்தார், **"நீங்கள் புரிந்து கொண்டாலும், அதனால் என்னவாகும்? புத்தி, புரிந்து கொள்ள வேண்டிய ஒன்றை** (உண்மைப்பொருளை) **நெருங்க முடியாது!"**

அவரது குரலைப் பாராட்டிய பாபா, கவாலிப் பாடகரிடம் வலியுறுத்தி கூறினார், **"புரியாவிட்டாலும், எல்லா இதயங்களையும் படபடக்கச் செய்யும் விதத்தில் ஒரு கஸலைப் பாடுங்கள்!"** அவர் பின்வரும் கவிதையைப் பாடினார்:

போதையின் உலகத்தைப் பற்றி என்னிடம் ஏன்
கேள்வி கேட்க வேண்டும்?
ஒவ்வொரு இதயத்திலும் நீ ஒருவனே இருக்கிறாய்
என்பது எனக்குத் தெரியும்!

அவர் பாடி முடித்ததும், பாபா அங்கு இருந்தவர்களிடம், **"'கடவுள் பேசுகிறார்'** (GOD SPEAKS) **புத்தகத்தைப் படித்தீர்களா?"** என்று கேட்க, சிலர் 'ஆமாம்' என்று பதிலளிக்க, பாபா, **"சிலர் படித்திருந்தாலும், அதன் பின்னர் என்ன?"** என வினவினார்.

அவர் மேலும் கூறினார்: **"அவர்கள் படித்து புரிந்து கொண்டதைத் தவிர, நான் ஒன்றைக் கூற வேண்டும்; நீங்கள் என்னிடம் வரும் வேளையில், உலக ஆசைகள் எதுவும் இல்லாமல் வரவேண்டும். இந்த நோய், இந்த எரிச்சல், எனக்கு வேண்டாம்! எனது தோழமையை நாடுபவர்கள் அனைத்தையும் இழக்க வேண்டும், இது முற்றிலும் உண்மை.**

**"கடவுள் எல்லையற்ற நேர்மையும் கருணையும் கொண்டவர். கடவுளாக நான், பாசாங்குத்தனத்தைத் தவிர, அனைத்தையும் மன்னிக்கிறேன். அதை என்னால் மன்னிக்கவே முடியாது. எனவே இல்லாத ஒன்றை இருப்பது போல பாசாங்கு செய்ய வேண்டாம்!"**

பாபா தொடர்ந்தார், **"ஓர் அன்பன் எதை விரும்புகிறான்? அவன் ஆழமான, நேர்மையான அன்பை விரும்புகிறான். அவனிடம் தூய்மையான அன்பு இருந்தால், அவனுக்காக வேறு என்ன மிஞ்சும்? அன்பன், பிறர் என்ன நினைக்கின்றனர் என்பதை மறந்து, ஆழமான, கலப்படமற்ற அன்பைக் கொண்டிருக்க வேண்டும்; அவன் நேசிப்பது கூட அவனுக்குத் தெரியக்கூடாது!"**

பாபா இதைக் கூறியதும், யாரோ ஒருவர் கைகளைத் தட்டினார். முகம் சுளித்த பாபா, **இது ஒரு நெருக்கமான சகவாசம். ஆழமான முக்கியத்துவம் வாய்ந்த இந்த சந்தர்ப்பத்தில், இது போன்ற ஆரவாரங்கள் பொருத்தமற்றது** என்பதை அவருக்கு நினைவுறுத்தினார்.

கவாலிப் பாடகர் மீண்டும் பாடத் தொடங்கினார்:

நான் எப்போது உன்னைக் கண்டுகொள்வேன் அல்லது
இழக்கிறேன், அல்லது உன்னில் தொலைந்து
போகிறேன் என்பது உனக்குத் தெரியாது.
நான் உடல் ரீதியாக நித்திரையில் இருக்கிறேன்,
ஆனால், என் மனம் உனது நினைவிலேயே விழித்துள்ளது!

**"மனமும் நித்திரையில் ஆழ்ந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும்!"** என்று பாபா கேலி செய்யவே, அனைவரும் சிரித்தனர்.

பாபா தொடர்ந்தார்: **"நீங்கள் பார்க்கும் முழுப் பிரபஞ்சமும் ஒரு கனவு, தற்போது நீங்கள் அனைவரும் கனவு காண்கிறீர்கள். நீங்கள் தூங்குகிறீர்கள் என்று வைத்துக்கொள்வோம்; நான் உங்கள் கனவில் தோன்றி, 'நீங்கள்**

**இப்போது பார்ப்பதும், அனுபவிப்பதும் ஒரு கனவு!' என்று கூறுவதானால், நீங்கள் அதை நம்ப மாட்டீர்கள். ஆனால், நீங்கள் விழித்திருக்கும் வேளையில், நான் உங்கள் கனவில் கூறியது, முற்றிலும் உண்மை என்பதை நீங்கள் அறிவீர்கள். அதேபோல, நீங்கள் அனுபவிக்கும் துன்பமோ, இன்பமோ எதுவாயினும், நிஜத்தில் கனவுதான். இந்தக் கவாலி இசை நிகழ்ச்சி, சுட்டெரிக்கும் வெயிலில் நீங்கள் இங்கு விரைந்தோடி வருவது, இதையெல்லாம் நான் உங்களுக்குச் சொல்வது அனைத்தும் நிஜத்தில் வெறும் கனவுதான். ஆனால் நான், உங்கள் (உள்) கண்களைத் திறக்காதவரை, நீங்கள் நம்பமாட்டீர்கள்."**

பாபா, கவாலி பாடகரின் பக்கம் திரும்பி கூறினார், **"புகழ்மாலை போதும், இப்போது அன்பைப் பற்றி ஏதாவது கேட்போம்."**

பாடகர் தொடங்கும் போது, பாபா குறுக்கிட்டு, தெய்வீக போதையைப் பற்றி விளக்கத் தொடங்கினார்: **"இறை நாட்டம் மிக்க ஒருவர், ஆன்மீகப் பாதையில் பயணிக்கும்போது, அவர் உலக உணர்வை இழக்கிறார்; அதன் விளைவாக, மஸ்த் நிலையை எய்துகிறார். இங்கே அவருக்கு உலக உணர்வு இல்லை; அவர் உண்கிறார், அருந்துகிறார், ஆடை அணிகிறார், உடலை மூடிப் பாதுகாக்கிறார், ஆனால் அதைப் பற்றிய எந்த சிந்தனையுமில்லை.**

**"இந்த நிலை வரம்பற்றதாக மாறும்போது, அந்த நபர் ஒரு மஜ்ஜூப் நிலையை எய்துகிறார். மிக மிகச் சிலரே இந்த நிலையை எய்திய பின்பு, பௌதீக உணர்வைத் திரும்பப் பெற்று, உலக வழியில் செயல்படத் தொடங்குகிறார்கள். அதுபோன்ற நிலையில் இருக்கும் ஒருவரை அடையாளம் காண்பது கிட்டத்தட்ட சாத்தியமற்றது. அதாவது அனைத்தையும் இழந்து, அனைத்தையும் அடையப்பெறுதல்."**

நகைச்சுவையாக, பாபா கருத்துரைத்தார்: **"நீண்ட காலத்திற்கு முன்பே நான் அனைத்தையும் இழந்து கடவுளானேன், ஆனால் நான், எனது நகைச்சுவை உணர்வை மட்டும் இழக்கவில்லை; கடவுளுக்கு நன்றி!"**

கவாலிப் பாடகர் மற்றுமோர் ஈரடிக் கவிதையைப் பாடினார்:

எனது இந்த ஒரே வடிவத்தில், எண்ணற்ற
வடிவங்கள் அடங்கியுள்ளன.
எவர் ஒருவரை பாவியாக எடுத்துக் கொள்வது,
எவரை மகான் என்று நம்புவது?

பாடலுக்குப் பின்னர், உணர்ச்சிவசப்பட்ட நிலையைக் (ஹால் - HAAL) குறித்து விளக்கிய பாபா, **"ஒருமுறை எனது பழைய தோழரும், சீடருமான முன்ஷிஜி, இங்கு மும்பையில் ஒரு கவாலி இசை நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்தார். அலிமுதீன் என்ற முஸ்லிம் சிறுவன், பக்தி பரவசத்தில் மேலும் கீழும் குதிக்க ஆரம்பித்தான். அன்றைய தினம் நடைபெற்ற இசை நிகழ்ச்சியில், இந்த சம்பவம் சில முறை நடந்தது. கஸல் முடிந்த பின்னரும், அலிமுதீன் அதே உணர்ச்சிவசப்பட்ட நிலையில் இருந்தான். இது 'ஹால்'**

**அல்லது 'பாவ்' என்று அழைக்கப்படுகிறது. ஒரு பக்தன் உண்மையான அன்பனாக மாறும்போது, அவன் இந்த நிலையை அனுபவிப்பதில்லை. அவனது அன்பு, அவனை வெறுமனே உள்ளளவில் எரிக்கிறது, அதை வெளியளவில் கண்டுகொள்ள முடியாது."**

கவாலிப் பாடகரை நோக்கி பாபா, **"இப்போது சில தலைசிறந்த உண்மைகளைக் கேட்போம்!"** என்றார்.

பாடகர் இவ்வாறு தொடங்கினார்:

நான் என்னை ஏமாற்றிக் கொண்டே இருக்கிறேன்,
உயிரைத் துறக்கும் நம்பிக்கையில் வாழ்கிறேன்!

பாடகரைத் தடுத்து, பாபா, இவ்வாறு கருத்துரைத்தார்: **"என்ன ஓர் அற்புதமான சிந்தனை! இந்த நிலையில் அன்பன் உலகத்திலிருந்து முற்றிலும் வேரோடு அகற்றப்படுகிறான். அவனது ஆசைகள் அனைத்தும் மறைந்துவிடுகின்றன; ஒன்றே ஒன்றைத் தவிர, அது அன்பிற்குரியவருக்காக இறப்பதாகும்."**



ஹாஸ்மன் ஹால், மும்பை, டிசம்பர் **1957**
(HASMAN HALL, MUMBAI, DECEMBER 1957)

வரவேற்பு அறையில் வெப்பம் அதிகமாக இருந்ததால், யாரோ மின்விசிறியை இயக்கினார். பாபா அதை நிறுத்தக் கூறி, கவாலி பாடகரிடம், **“எல்லா கதவுகளும் மூடப்பட்டுவிட்டன. வெப்பமாக உள்ளது. பாபா மின்விசிறியை நிறுத்திவிட்டார். அனைவரும் வெந்து, வியர்த்துக் கொண்டிருக்கிறார்கள்”** என்று கூறினார்.

மிகவும் பருமனாக இருந்த ஒருவரைப் பார்த்து, பாபா அவரைக் கேலி செய்தார், **“உங்களுக்கு வியர்ப்பது நல்லது, சற்று மெலிந்து விடுவீர்கள்.”** பாபா சொன்னதைத் தொடர்ந்து பலத்த சிரிப்பு.

அவர் நகைச்சுவையாகத் தொடர்ந்து கூறினார், **“நீங்கள் வெப்பத்தை உணர்ந்தது நல்லது. இங்கு குளிர்ச்சியாக இருந்திருந்தால், ‘பாபா, தயவுசெய்து நிறுத்தாதீர்கள், தொடருங்கள்!’ என்று கூறியிருப்பீர்கள். இப்போது நீங்கள் சீக்கிரமாகக் கிளம்ப முடியும்!”**

கவாலி இசை மீண்டும் தொடங்கியது:

உனக்காக எனது துக்கம் பாதுகாப்பாக இருக்கட்டும்;
என் இதயம் வேறு எதற்காக ஏங்குகிறது?
இது எனது பிரார்த்தனை, இது எனது வாழ்க்கை!

பாடகர் தொடர்ந்தார், இடையிடையே பாபா விளக்கினார், **“நானே எல்லாமே! நான் பாடகனாக, இசைக்கருவிகளாக மற்றும் பிற அனைத்து பொருட்களாகவும் அனுபவிக்கிறேன். இது வெறும் பேச்சு அல்ல! இது எனது உண்மையான அனுபவம்.”**

பாபா, கவாலி பாடகரிடம் கடைசியாக ஒரு பாடலைப் பாடுமாறு கூறவே, அவர் பாடினார்:

தெய்வீகச் சுடரை (குருநாதரை)
விட்டில் பூச்சியைப் போல் சுற்றிக்கொண்டிருப்பவர்,
ஒரு மூடன் என்று கருதப்படுகிறது; ஆனால் மூடர்களால் மட்டுமே!

இசை நிகழ்ச்சிக்குப் பிறகு, பாபா நான்கு வகையான கீழ்ப்படிதலைப் பற்றி பூனாவில் ஆற்றிய சொற்பொழிவை மேலும் வெளிச்சமிட்டுக் காட்டினார். முடிவில், அவர் கூறினார்: **“எனது விருப்பங்களை நீங்கள் எவ்வாறு நிறைவேற்றுகிறீர்கள் என்பதை நான் இப்போது பார்க்கிறேன். உங்கள் கீழ்ப்படிதலை நான் சோதிக்கிறேன்! ஐந்து நிமிடங்களில் இந்த மண்டபம் முற்றிலும் காலியாக இருக்க வேண்டும்!”** பாபாவின் புத்திசாலித்தனமான வழிகளைக் கண்டு அனைவரும் மனமார சிரித்து, மகிழ்ச்சியுடன் புறப்பட்டுச் சென்றனர்.

ஹாஸ்மன் அரங்கத்திலிருந்து வெளியேறி, மாலை 7:00 மணிக்குப் பிறகு, பாபா மண்டலியுடன் ஆஷியானாவிற்குத் திரும்பிச் சென்றார். நிகழ்ச்சியைக் கேள்விப்பட்ட நூற்றுக்கணக்கான மக்கள் மண்டபத்திற்கு வெளியே, வரிசையில் நின்று தரிசனத்திற்காக காத்திருந்தனர். பாபா கைகளை

அசைத்து, அவர்களைக் கடந்து சென்றதால், அவர்கள் பாபாவைத் தூரத்திலிருந்து மட்டுமே பார்க்க முடிந்தது.

அடுத்த நாள், டிசம்பர் 23 அன்று, ஸொராப்ஜி ஸிகன்போரியாவை ஆஷியானாவிற்கு அழைத்த பாபா, நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்ததில் அவர் எடுத்த முயற்சிகளுக்குப் பாராட்டுத் தெரிவித்தார், "**உங்களிலும், உங்கள் பணியிலும் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். நேற்றைய இரண்டு நிகழ்ச்சிகளும் மிகவும் சிறப்பாக அமைந்தன, அனைத்தும் எனக்கு திருப்தி அளிக்கும் விதத்தில் இருந்தன.**"

ஆஷியானாவில், பாபா அடிக்கடி தாதாசாஞ்சி குடும்ப உறுப்பினர்களையும், தீனா தலாட்டி, அவரது மகள்கள் பெர்விஸ், ஜெரூ, அல்லது ஸூனாமாஸி, கோர்ஷெத் ஆகியோரையும், தமது சகவாசத்தை அவர்களுக்கு வழங்க, அவ்வப்போது அழைத்தார். அர்னவாஸின் சகோதரன் ஹோமா, லண்டனில் இருந்ததால், ஒரு நாள் அர்னவாஸ், பாபாவிடம், "சகவாசத்திற்காக ஹோமாவை இந்தியா அழைக்க வேண்டுமா?" என்று கேட்டதற்கு, பாபா, "**கிடைத்த வாய்ப்பைத் தவறவிடக் கூடாது**" என்று பதிலளித்தார்.

1957 டிசம்பர் 24, செவ்வாய்கிழமை, மெஹராவின் பிறந்தநாளாகக் கொண்டாடப்பட்டது; அன்று பாபா, "**நாளை எனது பிறந்தநாள்!**" எனவே கிறிஸ்மஸ் அன்று காலை, பெண்மணிகள் இயேசுவை நினைவில் கொண்டு, அவருக்கு பிறந்தநாள் வாழ்த்துக்கள் பாடினர்.

சுந்தர்பாய் அரங்கத்தில் நிகழ்ந்த தரிசன நாளில், பாபாவிற்கும் மண்டலிக்கும் மதிய விருந்தளிக்க ஸிகன்போரியா விரும்பினார்; பாபா அதற்கு இணக்கம் தெரிவித்தாலும், 'வெஸ்ட் எண்ட்' ஹோட்டலில் (WEST END HOTEL) அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்ட பிறகு, பாபா அதை ரத்து செய்து, மெஹராஸாத்தில் இருந்தபோதே தொலைத்தந்தி அனுப்பினார். இதன் காரணமாக, டிசம்பர் 25ஆம் தேதி, மதிய உணவுக்காக ஸிகன்போரியாவின் இல்லத்திற்கு பாபா, மண்டலியுடன் சென்றார். உணவு பரிமாறப்பட்டது, பாபா, ஸிகன்போரியாவை அவர்களுடன் உணவில் கலந்துகொள்ளுமாறு அழைத்தார். மதிய உணவுக்குப் பிறகு, ஸிகன்போரியா மண்டலியை மூன்றாவது மாடிக்கு, கை கழுவுவதற்காக அழைத்துச் சென்றார். பாபா அவர்களுக்காகக் காத்திருந்து, சிரமப்பட்டாலும், அவரும் எழுந்து உடன் சென்றார். ஸிகன்போரியா, பாபாவிற்கு மாலை அணிவிக்க மறந்துவிட்டதை நினைவு கூர்ந்து, பின்னர் அணிவித்தார்.

ஒரு நாள் ஆஷியானாவில், ஸிகன்போரியா வந்தபோது, அனைவரும் பாபாவின் அருகில் கூடியிருந்தனர். பாபா அவரை அருகில் அமர வைத்து, "**நான் கடவுள் என்று உங்களுக்குத் தெரியுமா?**" என்று கேட்டார்.

"ஆம்," ஸிகன்போரியா கூறினார்.

"**நான் கடவுள், இதை நினைவில் கொள்ளுங்கள்**" என்று பாபா வலியுறுத்தினார், மேலும், "**உதைக்கப்படும் போது கால்பந்து அங்கும் இங்கும் செல்கிறது, ஆனால் இறுதியில், அது இலக்கைச் சென்றடைகிறது. எனவே**

**மைய வேலை செய்யும் வேளையில், நீங்கள் உதைக்கப்பட்டாலும், கவலைப்பட வேண்டாம், நீங்களும் இலக்கை அடைவீர்கள்**" என்றார்.

பாபா, ஆண், பெண் மண்டலியுடன் டிசம்பர் 26 அன்று மெஹராஸாத் திரும்பிச் சென்றார். மும்பையிலிருந்து காரில் செல்லும்போது, நௌரோஜி தாதாச்சாஞ்சி குடும்பத்தினரை சந்திக்க, பாபா எப்பொழுதும் தாதரில் நிற்பது வழக்கம். அவர்களின் இல்லத்தில் பாபா ஒருமுறை தூங்கிய அறை, இன்னமும் அவருக்காக ஒதுக்கப்பட்டிருந்தது, அவருடைய புகைப்படத்திற்கு முன்பாக எண்ணெய் விளக்கு எந்நேரமும் எரிந்து கொண்டிருந்தது.

1957 டிசம்பர் 29 அன்று, பெஹராம், மெஹராஸாத்தில் பாபாவுடன் நடந்த நேர்காணலுக்குப் பின்பு, பூனா திரும்பிச் சென்றார். பால் நாத்துவைப் போலவே, டாக்டர் தேஷ்முக்கும் அன்று அஹமதுநகருக்கு வந்திருந்த வேளையில், ஆதி சீனியர், குல்மாயுடன் அவர்களை மெஹராஸாத்திற்கு அழைத்து வந்தார். தேஷ்முக், இந்துமதி மற்றும் அவர்களது குழந்தைகளுடன் அடுத்த நாளும் மெஹராஸாத் திரும்பி வந்தபோது, பாபா குடும்பத்துடன் இரண்டு மணி நேரம் செலவிட்டார்; தேஷ்முக் அவர்களுடன் பாபாவின் புகைப்படத்தை எடுத்தார். மும்பையிலிருந்து கேட்டியும் அன்றைய தினம் வந்தார். மேலும், ஹோஷங் பரூச்சா டிசம்பர் 31 அன்று வந்த வேளையில், ஜால்பாய் மற்றும் ஸாம் கேரவாலாவுடன் மெஹராஸாத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

# ஹிந்தி & மராட்டி சகவாசம்
**(The Hindi & Marathi Sahavas)**

1958 ஜனவரி 1 புதன்கிழமை, புத்தாண்டு தினத்தன்று, பாபா ஜிலேபிகளை விநியோகித்த வேளையில், பெண்மணிகள் ஆரத்தி நிகழ்த்தினர். மெஹராபாத்திலிருந்து பெண்டு, பாதிரி, விஷ்ணு, டாக்டர் டான், அஹமதுநகரிலிருந்து ஆதி, ஃபெராம், டாக்கே, பால் நாத்து, டாக்டர் தேஷ்முக் ஆகியோரும் காலை 10:00 மணிக்கு அழைக்கப்பட்டனர். பாபாவின் அறிவுறுத்தலின்படி கைக்கோபாத் பிரார்த்தனையை மொழிய, பாபா அங்கிருந்த ஒவ்வொருவரின் கால்களிலும் தலைவணங்கினார். எதிர்வரும் சகவாச நிகழ்ச்சிகளுக்கான பல்வேறு விவரங்களைப் பற்றி விவாதித்த பின்னர், அழைக்கப்பட்ட அனைவரும் மெஹராஸாத்திலிருந்து புறப்பட்டுச் சென்றனர்.

1957 செப்டம்பர் மாதத்தில் பாபாவின் சகோதரர் ஆதி ஜூனியரின் மனைவி ஃபிரினி ஒரு பெண் குழந்தையை ஈன்றெடுத்தார், அதற்கு அவர்கள் ஷிரீன் என்று பெயரிட்டனர். ஃபிரினி குழந்தையை லண்டனிலிருந்து இந்தியாவிற்குக் கொண்டு வந்து, பாபாவிடம் காண்பிப்பதற்காக, ஜனவரி 4ஆம் தேதி மெஹராஸாத்திற்கு வந்தார். கைக்குழந்தையை பாபா, மடியில் வைத்து விளையாடி முத்தமிட்டார்.

தேசிய விளையாட்டுப் போட்டியான 'ராஞ்சி கோப்பை' (RANJI TROPHY) கிரிக்கெட் போட்டி, அஹமதுநகர் வாடியா பூங்காவில் ஜனவரி 7 முதல் 9ஆம் தேதி வரை நடைபெற்றது; முதல் இரண்டு நாட்கள் அணிகள் விளையாடுவதைப் பார்க்க பாபா சென்றார். ஜில்லா பரிஷத் (நகர கவுன்சில்) கட்டிடத்தின் இரண்டாவது மாடியில் அமர்ந்து, ஒருவரும் காணாத வகையில், முதல் நாள் போட்டியை அவரால் பார்க்க முடிந்தது; ஆனால் அடுத்த நாள் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர், அவரை பார்வையாளர்கள் ஓய்வறையில் பார்த்து, சந்திக்க சென்ற வேளையில், ஒரு கூட்டம் ஒன்றுதிரளவே, பாபா கிரிக்கெட் போட்டியை அமைதியாக பார்க்க முடியாததால், அவர் சீக்கிரமாகப் புறப்பட முடிவு செய்தார். புறப்படும் முன்னர், அஹமதுநகர் மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் செயலாளர் நாகேஷ் டவ்ரேயிடம் (NAGESH DAVRE) ரூ.100 நன்கொடையாக பாபா வழங்கினார்.

கிழக்கு மற்றும் மேற்கில் வாழும் அன்பர்களுடன், கடிதங்களின் பரிமாற்றம் தொடர்ந்து நடந்து வந்த இக்காலகட்டத்தில், சகவாச நிகழ்ச்சிகளுக்கான வேலை இப்போது முழு வேகத்தில் நடந்து கொண்டிருந்தது. பாபாவின் கால் மற்றும் இடுப்பு வலி, அவ்வப்போது பிடிப்புகளுடன் சிரமங்கள் தந்தது; ஆனால், ஆதி சீனியர் தனது நாட்குறிப்பில் குறிப்பிட்டது போல, “பாபா இடைவிடாமல் தமது பணியைச் செய்கிறார். வலி மற்றும் அசௌகரியத்தைப் பொருட்படுத்தாமல், எப்பொழுதும் அமர்ந்து கொண்டே, கடிதப் பரிமாற்றங்களைப்

பற்றி கேட்கவும், அறிவுறுத்தல்களை வழங்கவும் செய்தார்." ஆதி, ஃபெராம் இருவரும், தங்களுடைய அலுவலகத்திலிருந்து, அனைத்து நிலவரங்களை விசாரிப்பதிலும், பாபாவின் விருப்பங்களைத் தெரிவிப்பதிலும் தொடர்ந்து மும்முரமாக இருந்தனர். இதற்கிடையே, ஆதி பலமுறை ஸாக்கோரிக்குச் சென்று, கோதாவரி மாயிடம் அவரது சகவாச நிகழ்ச்சிக்கான வருகையைப் பற்றிய தகவல்களைத் தெரிவித்தார். மெஹராஸாத்தில், மேலை நாடுகளிலிருந்து பெறப்பட்ட கடிதங்களுக்கு மணி பதிலளித்தார். கிழக்கிலிருந்து வந்தக் கடிதங்களுக்கு எரச், பாவ் கல்சூரி இருவரும் பதிலளித்தனர். (எரச் ஆங்கிலத்திலும், பாவ் இந்தி மொழியிலும் பதிலளித்தனர்.) நாளடைவில், அஞ்சல்களின் எண்ணிக்கை பெருமளவில் அதிகரித்தது.

இந்த நேரத்தில், பாபாவிற்குக் கடிதம் எழுதியவர்களில் ஒருவர், டெஹ்ரா டூனைச் சேர்ந்த பிரகாஷ் சாப்ரா (PRAKASH CHHABRA) என்ற திரைப்படத் தயாரிப்பாளர் ஆவார். சாப்ரா, பாபாவை, சகவாச நிகழ்ச்சிகளில் திரைப்படம் எடுக்கும் ஆர்வத்துடன், ஸொராப்ஜி ஸிகன்போரியாவைத் தொடர்பு கொள்ளவே, அவர் சாப்ராவின் விருப்பத்திற்கு இணங்குமாறு பாபாவிற்குக் கடிதம் எழுதியிருந்தார். பாபா அதற்கு இணக்கம் தெரிவித்து, ஜனவரி 20 அன்று, திரைப்படத்திற்கு ஒரு செய்தியையும் வழங்குவதாகக் கூறினார்.

ஹோமா தாதாசாஞ்சி, நாகு இருவரும் ஜனவரி 13 அன்று மும்பையிலிருந்து வந்து, மெஹராஸாத்தில் அன்று இரவைக் கழித்தனர். பாபா ஒரு வாரத்திற்காக மும்பை செல்ல முடிவு செய்திருந்தார்; அவருடைய வருகை பற்றிய விபரங்கள் ஏற்கனவே வழங்கப்பட்டன. அன்றைய தினம், பாபா கூறினார்: **"நான் ஒரே நேரத்தில் உண்டும், உண்ணாமலும், அருந்தியும், அருந்தாமலும், எதுவும் செய்தும் செய்யாமலும் இருப்பேன்."**

நான்கு நாட்களுக்குப் பின்னர், 17ஆம் தேதி, அவர் கூறினார்: **"நிகழ்காலத்தில் கடந்த காலம், எதிர்காலம் இரண்டும் உள்ளடங்கி இருப்பதன் காரணமாக மட்டுமே, அவை உள்ளடங்கியதாக உள்ளன. நித்திய கடந்த காலத்தில், ஒவ்வொரு நொடியும் நிகழ்காலமாக இருந்தது போலவே, நித்திய எதிர்காலத்தின் ஒவ்வொரு நொடியும் நிகழ்காலத்தில் இருக்கும்."**

இந்த நேரத்தில் பாபா, இதர சுருக்கமான செய்திகளை எடுத்துரைத்து, அவற்றில் '**ஏழு செய்திகளை ஐந்து மொழிகளில் மொழிபெயர்த்து, வர்ணம் பூசப்பட்ட பலகைகளில் எழுதி, சகவாச நிகழ்ச்சிகளின் போது மெஹராபாத்தில் அனைவரும் பார்க்கும் விதத்தில் அவற்றைக் காட்சிப்படுத்தவும்**' உத்தரவிட்டார்:

**உங்கள் கோபத்தை உங்கள் பலவீனத்தில் காட்டுவதைத் தவிர,**
**வேறு எவரிடமும் வெளிப்படுத்தாதீர்கள்.**

**உங்கள் சுய காம உணர்வை வெறுப்பதைத் தவிர,**
**வேறு எவரையும் வெறுக்காதீர்கள்.**

**மேலும் அதிகமான சகிப்புத்தன்மை மற்றும் நீதியின் செல்வத்தை**
**சொந்தமாக்கும் பேராசையுடன் இருங்கள்.**

என் அருளைப் பெறுவதற்காக, உங்கள் அன்பினால் என்னை
மகிழச் செய்வதே உங்கள் ஆர்வமாக இருக்கட்டும்.
உங்கள் ஆசைகளுக்கு எதிராகப் போராடுங்கள்,
கடவுளே உங்கள் வெற்றியின் ஆதாரமாக இருப்பார்.

பிறரை மகிழ்விப்பதில்தான் உண்மையான மகிழ்ச்சி உள்ளது.
உண்மையான ஆசை என்பது, பிறரை பரிபூரணமாக்கும்
நோக்கத்தில், உங்களை முதலில்
பரிபூரணமாக்குவது ஆகும்.
உண்மையான குறிக்கோள் என்பது, முதலில் நீங்கள்
கடவுளுடன் ஐக்கியமாவதன் மூலம், பிறரையும்
கடவுளுடன் ஒன்றிணையச் செய்வது ஆகும்.

கடவுளுக்காக உயிரைத் துறப்பதுதான் உண்மையான வாழ்க்கை.
உங்கள் சுயத்திற்காக குறைவாகவும்,
பிறருக்காக அதிகமாகவும் வாழுங்கள்.
இதர எல்லா தனிப்பட்ட சுயங்களிலும் வாழ,
ஒருவர் தனது சுயத்திற்காக இறக்க வேண்டும்.
கடவுளுக்காக உயிரைத் துறப்பவர் என்றென்றும் வாழ்கிறார்.

உங்களையும் உங்களுடையதையும் நேசிப்பது போல
பிறரையும் நேசியுங்கள்.
யார் ஒருவருடைய அன்பு, துரதிர்ஷ்டத்தால் சோதனைக்கு
உள்ளாக்கப்படுகிறதோ, அவர்கள் அதிர்ஷ்டசாலிகள்.
அன்பன், அன்பிற்குரியவருக்காக தியாகம்
செய்ய வேண்டும் என்று அன்பு கோருகிறது.

எதையும் உடைமையாக்கிக் கொள்ளாமல்,
அனைத்தையும் அர்ப்பணம் செய்ய முயலுங்கள்.
பிறருக்கு நீங்கள் சேவை செய்யும் தருணத்தில்,
அவர்களில், நீங்கள் எனக்காக அதை செய்கிறீர்கள்
என்ற புரிதலுடன் சேவை செய்யுங்கள்.
எனது விருப்பத்திற்கு முற்றிலும் அடிபணிந்து இருங்கள்,
அப்போது, எனது விருப்பம் உங்களுடையதாக இருக்கும்.
என் மீதான உங்கள் நம்பிக்கையை எதுவும் அசைக்காமல்
பார்த்துக்கொள்ளுங்கள், அப்போது உங்கள்
பிணைப்புகள் அனைத்தும் வேரோடு அகற்றப்படும்.

ஆசையின்மையைத் தவிர வேறு எதற்கும் ஆசைப்படாதீர்கள்.
ஒன்றுமில்லாத ஒன்றை அடையப்பெறும்
நம்பிக்கைகளுக்கும் மேலாக உயர்ந்து செல்லுங்கள்.

**எதுவும் வேண்டாம் எனும்போது**
**நீங்கள் அனைத்தையும் அடையப் பெறுகிறீர்கள்.**

**இந்த சகவாச காலகட்டம் எனது துன்பம் மற்றும்**
**உதவியற்ற தன்மையின் காலமாகும்.**
**எனது மகிமை என் அவமானத்தைப் பின்தொடரும்.**

ஹாரி கென்மோர் சகவாசத்தில் கலந்துகொள்ளும் ஆர்வத்தில், இரண்டு வாரங்களுக்காக இந்தியாவிற்குத் திரும்பி வரும் கோரிக்கையை முன்வைத்தார். 1958 ஜனவரி 17 அன்று, பாபா, அவருக்கு இவ்வாறு அழைப்பு விடுத்தார்: "**உங்கள் செலவில் பதினைந்து நாட்களுக்காக இந்தியா திரும்பி வர வேண்டும் என்ற உங்கள் உண்மையான ஆர்வம், நீங்கள் என்னை எவ்வளவு நேசிக்கிறீர்கள் என்பது மட்டுமல்லாமல், நான் உங்களை எவ்வளவு நேசிக்கிறேன் என்பதையும் காட்டுகிறது. எல்லாவற்றையும் கருத்தில்கொண்டு, நீங்கள் இந்தியாவிற்கு இப்போது வரவேண்டாம் என்று நான் முடிவு செய்கிறேன். மர்டில் பீச் சகவாச நிகழ்ச்சியில், நீங்கள் தங்கியிருக்கும் பதினைந்து நாட்களில், நான் விரும்பினால் உங்களுக்கான அற்புதமான தந்திரத்தை செய்வேன்.**"

ஜனவரி 18ஆம் தேதி முதல் மூன்று நாட்கள் மெஹராஸாத்தில் தங்கியிருக்க டாக்கே அழைக்கப்பட்டார்; சகவாச நிகழ்ச்சி தொடர்பான செய்திகளைத் திருத்தி, தட்டச்சு செய்வது போன்ற இதர ஏற்பாடுகளில் உதவுவதற்காக, ராம்ஜூவுடன் மெஹராஸாத்தில் தங்கியிருந்தார். மெஹர்ஜி, நரிமன் இருவரும் அன்று வந்தனர்; அடுத்த நாள் அமெரிக்கா, ஆஸ்திரேலியா நாடுகளுக்கு பயணம் மேற்கொள்ளும் ஏற்பாடுகள் குறித்து விவாதிக்க, ஒரு கூட்டம் நடைபெற்றது. புக்காரும் மெஹராஸாத்தில் சில நாட்கள் தங்கியிருந்தார், ஆனால் இந்த நேரத்தில் ஹமிர்பூருக்குத் திருப்பிச் சென்று, சகவாச நிகழ்ச்சிக்காகத் திரும்பி வருமாறு அறிவுறுத்தப்பட்டார்.

ஜனவரி 18ஆம் தேதி, பாபா, மண்டலியிடம் '**கார்மேகம்**' குறித்து பேசினார்:

**கார்மேகம் வெடிப்பதை, பெரிய அளவில் அச்சுறுத்தும் மூன்று காரணிகள் உள்ளன. முதலாவது, உலகளாவிய பணியின் சுமை. இரண்டாவது, என் அன்பர்கள் அனைவரின் சுமை, இது முதல் காரணியை விட அச்சுறுத்தும் வகையில் உள்ளது. மூன்றாவது, மற்றும் மிகவும் அச்சுறுத்தும் காரணி, எனக்கு மிகவும் நெருக்கமான அன்பர்கள் - அவர்களில் ஏழு பேர், எனது விருப்பத்திற்கு மாறாக என்னை விட்டு வெளியேறக்கூடும். அவர்களை என்னுடன் வைத்திருப்பது எனது துன்பம், இது எனது மிகவும் அச்சுறுத்தும் சுமை.**

**கார்மேகத்தின் இந்த அச்சுறுத்தல்களால், 100 சதவீதம் உடல் ரீதியான துன்பங்களும், 50 சதவீதம் மன வேதனையும் ஏற்படுகிறது. ஆன்மீகத் துன்பத்தையும் அனுபவிக்க வேண்டும்.**

**எனவே, எந்த சூழ்நிலையிலும் குறைந்தபட்சம் (1958) ஜூலை 10 வரை, எனக்கு மிகவும் நெருக்கமானவர்கள் என்னுடன் உறுதியாக இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். அப்படிப்பட்ட 'அந்தரங்கமான' 56 அன்பர்கள் உள்ளனர். நான் அவர்களின் பெயர்களைக் குறிப்பிடுவேன். ஜூலை 10 முதல், என் அன்பர்களை அவர்களது தற்போதைய பிணைப்புகளுக்கு ஏற்ப விடுவிப்பேன்.**

பாபா மேலும் கூறினார்:

**"என் உடலின் உதவியற்ற தன்மை, (இறைவனின்) 'எங்கும் நிறைந்த இருளுக்கு' சமம்.**

**எனது மனதின் உதவியற்ற தன்மை, 'சர்வஞான இருளுக்கு' சமம்.**

**எனது ஆன்மீக உதவியற்ற தன்மை 'சர்வ வல்லமை மிக்க இருளுக்கு' சமம்.**

**இவற்றையெல்லாம் நான் சகவாச நிகழ்ச்சியில் விளக்குவேன்."**

சகவாசம் தொடங்குவதற்கு முன்பு, பாபா, ஒரு வார கால மாற்றத்தை விரும்பி, 1958 ஜனவரி 21 அன்று, அவர் ஆண், பெண் மண்டலியுடன் மீண்டும் மும்பைக்கு அழைத்துச் செல்லப்பட்டார், இம்முறையும் அவர் ஆஷியானாவில் தங்கினார். அங்கேயும் சகவாச ஏற்பாடுகள் குறித்த விவாதங்கள் தொடர்ந்தன.

பாபா, '**தரிசனம் வழங்கப் போவதில்லை, அவர் அழைத்த சிலரைத் தவிர வேறு எவரும் ஆஷியானாவில் தன்னைப் பார்க்க வரக்கூடாது**' என்று முன்கூட்டியே கூறி அனுப்பியிருந்தார். ஒருமுறை, அர்னவாஸிடம், பாபா மும்பையில் இருப்பது எவருக்கும் தெரியக்கூடாது என்று அறிவுறுத்திய போதும், ஒரு நாள், வாசல் மணி ஒலித்த போது, அங்கு, பாபாவின் பழைய அன்பர்களில் ஒருவர் கர்மான் மாஸி நின்று கொண்டிருந்தார்.

**"நான் இங்கே இருக்கிறேன் என்று அவரிடம் சொல்லி, அவரைத் துரத்தாதீர்கள்!"** பாபா உத்தரவிட்டார். "**அவரைப் போகச் சொல்லுங்கள்.**

கர்மான் மாஸி, அர்னவாஸிடம் தனது தாயைப் போலவே பிரியமாக இருந்ததால், இதை எப்படி சாதிப்பது என்று யோசித்தார். அப்போது பாபா, "**சரி, நான் இங்கே இருக்கிறேன் என்று அவரிடம் சொல்லுங்கள், ஆனால் அவர் போயாக வேண்டும்**" என்றார். அர்னவாஸ் கனத்த இதயத்துடன் அவ்வாறு செய்தார், கர்மான் மாஸி பணிவுடன் கீழ்ப்படிந்தார். ஐந்து நிமிடங்களுக்குப் பிறகு, பாபா, கர்மான் மாஸியை அழைக்குமாறு அர்னவாஸிடம் கூறினார்; பாபாவின் தரிசனத்தை அடையப் பெறும் நம்பிக்கையில் அவர் அளவுகடந்த மகிழ்ச்சியடைந்தார்.

பாபா மும்பையில் எவரையும் சந்திக்கவில்லை என்றாலும், ஜனவரி 24 அன்று ரீகல் திரையரங்கில் (REGAL CINEMA), 'ஸீஸல் பீ டிமில்' திரைப்படமான 'தி

டென் கமான்ட்மென்ட்ஸ்' (CECIL B. DEMILLE FIL 'THE TEN COMMANDMENTS') பார்க்க அவர் ஆண் மண்டலியுடன் சென்றார்; ஆனால் அவர், ஸினாய் மலையில் (MOUNT SINAI), மோஸஸ், கடவுளை (எரியும் புதர் போல) பார்க்கும் பகுதி வரை மட்டுமே அங்கிருந்தார்.

பின்னர், பாபா இவ்வாறு வெளிப்படுத்தினார்:

**மோஸஸ், ஆறாவது ஆன்மீகத் தளத்தில் நிலைகொண்டிருந்தார். அவர் இஸ்ரேல் தேசத்தைப் பார்க்க முடிந்தாலும், அதற்குள் நுழைய முடியாமல் போனது; ஆறாவது ஆன்மீகத் தளத்தில் கடவுளைக் காணும் அவருடைய அனுபவத்தின் அடையாளமாகத் திகழ்ந்தது; ஆனால் அவர் இன்னும் கடவுளோடு ஐக்கியமாகவில்லை; என்றாலும் மோசஸ் தன் உடலைக் கைவிட்டபோது இறை நிலையை எய்தினார்.**

**இந்தத் திரைப்படத்தை நான் பெரிதும் விரும்பினேன்; அது நன்றாக நடிக்கப்பட்டு சிறப்பாக உருவாக்கப்பட்டது. அதை விரும்பி ஏற்றுக்கொள்பவர்களுக்கு வழங்க நிறைய இருக்கிறது. ராமீஸ்** [2] - RAMESES [II] **தனது அடுத்த பிறவியில் ஆன்மீகப் பாதையில் நுழைந்தார்; பழைய ராஜா** (ஃபெரோ ஸேட்டி, PHARAOH SETI) **முக்தி நிலையை எய்தினார், ஏனெனில் அவர் உயிரைத் துறக்கும் போது மோசஸின் பெயரை உச்சரித்தார்.**

அப்போது பாபா, 1932இல் ஹாலிவுட்டில், டிமில்லுடனான சந்திப்பை நினைவு கூர்ந்தார். தியேட்டரின் பால்கனி படிக்கட்டுகளில் ஏறும் போது, பாபாவிற்கு, ஒருபுறம் ஹோமா தாதாச்சாஞ்சியும் மறுபுறம் ஹோமாவின் சகோதரர் தாராவும் உதவினர். ஹோமாவிற்கு நீண்ட காலமாக காலில் பிரச்சினைகள் இருந்த அதே வேளையில், தாரா சமீபத்தில் முழங்காலில் காயம் அடைந்தார். திரைப்படம் நிறைவடைந்ததும், பாபா இவ்வாறு கேலி செய்தார்: **"இது, தெய்வங்களுக்கு ஒரு களிப்பூட்டும் காட்சியாக அமைந்தது! இதோ, இந்த இரண்டு ஊனமுற்றோரின் தோள்களில் சாய்ந்து, காயமடைந்த நான் செல்கிறேன்."**

ஸந்த் கிர்பால் ஸிங், இந்த நேரத்தில் ஒரு விரிவுரையை வழங்க மும்பை சென்றிருந்தார். பாபா, எரச்சை அனுப்பி 'லிஸன் ஹியுமானிட்டி' மற்றும் 'லைஃப் அட் இட்ஸ் பெஸ்ட்' (LISTEN, HUMANITY & LIFE AT ITS BEST) புத்தகங்களின் பிரதிகளை அவருக்கு வழங்கினார். கிர்பால் ஸிங் மெஹராபாத்தில் நிகழவிருக்கும் சகவாச நிகழ்ச்சிக்கு அழைக்கப்பட்டார், ஆனால் அவர் கலந்து கொள்ளும் இயலாமையை வெளிப்படுத்தினார். ஜனவரி 23ஆம் தேதி, ஸிகன்போரியா மூலம், பாபா, அவருக்கு இந்தச் செய்தியை அனுப்பினார்: **"நீங்கள் வர முடியாமல் போனதால் கவலைப்பட வேண்டாம். பாபா உங்களிடம் இருக்கிறார், அவர் உங்களுடன் செல்கிறார். பாபா தனது அன்பையும் ஆசீர்வாதத்தையும் வழங்குகிறார்."**

1958 ஜனவரி 26 ஞாயிற்றுக்கிழமை அன்று, 'தீனா தலாட்டியின் மகன் கர்ஷெத் (CURSHED) முந்தைய நாள் இதய செயலிழப்பால் காலமானார்' என்ற

செய்தியை லண்டனிலிருந்து ஆதி ஜூனியர் தொலைபேசி மூலம் தெரிவித்தார். அவருக்கு வயது 29 மட்டுமே. பாபா ஏகாந்தவாசத்தில் இருந்தபோதும், 1954ஆம் ஆண்டு சத்தாராவிற்கு கர்ஷெத் தலாட்டி, நோஸர் தாதாச்சாஞ்சி இருவரும் அழைக்கப்பட்டனர். பாபாவை சந்தித்த பிறகு, கர்ஷெத் லண்டனுக்குச் சென்று பணிபுரிந்தார்.

கர்ஷெத், தீனாவின் ஒரே மகன்; செய்தி வந்ததும் பாபா, தீனாவைப் பார்க்க எரச், ஹோமா இருவரையும் அனுப்பி வைத்தார். மிகுந்த சாதுரியம் மற்றும் அனுதாபத்துடன், எரச் அவருக்கும், மகள் பெர்விஸூக்கும் (PERVIZ) இந்தச் செய்தியை வழங்கியதும், பெர்விஸ் அழத் தொடங்கினார். தீனா, மகளிடம், "ஏன் அழுகிறாய்? பாபாவின் அருகில் கர்ஷெத் மகிழ்ச்சியாக இருக்கிறான், அவனுடைய மகிழ்ச்சியில் நாமும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும்" என்று கூறினார்.

பாபாவின் மீதுள்ள அன்பும், நம்பிக்கையும், அதன் உண்மையான ஆழத்தை வெளிப்படுத்தவே, தீனா கண் கலங்காமல் தனது மகளுக்கு ஆறுதல் கூறினார். காலை சுமார் 11:30 மணியளவில், எரச் அவர்களை ஆஷியானாவிற்கு அழைத்து வந்தார். வழியில் அவர்கள் நின்று, தீனாவின் இரண்டாவது மகள் ஜெரூ மோடியையும் (JEROO MODY) அழைத்துச் சென்றனர். இந்தச் செய்தியை கேட்டதும் ஜெரூவும் கண்ணீர் விட்டு அழுதார். எரச் காரை நிறுத்தி, அவரிடம், "இதோ பாருங்கள், நீங்கள் அழுகையை நிறுத்தாவிட்டால் நான் உங்களைத் திரும்ப அழைத்துச் செல்ல வேண்டியதுதான்; பாபா சொன்னது போல, நீங்கள் அழாமல் இருந்தால் மட்டுமே உங்கள் அனைவரையும் பாபா சந்திப்பார்" என்று கூறினார்.

ஆஷியானாவில், பாபா அவர்களுக்கு உறுதியளித்தார்: "**மகிழ்ச்சியாக இருங்கள், கர்ஷெத் இறக்கவில்லை - அவர் என்னுள் வாழ்கிறார். கர்ஷெத் எனது கட்டளைகளை கடைசி வரை நிறைவேற்றினார். அவரது கடைசி தருணங்களில், அவரது உதடுகளில் எனது பெயர் தொடர்ந்து உச்சரிக்கப்பட்டதால், அவர் என்னிடம் வந்தார். இப்போது அவர் என் அருகில் மகிழ்ச்சியாக இருக்கிறார், நீங்களும் மகிழ்ச்சியாக இருங்கள்.**"

தீனா, "கர்ஷெத் மிகவும் அதிர்ஷ்டசாலி, பாபா" என்றார்.

பாபா அவரிடம், "**நீங்கள் அழ வேண்டுமா?**"

அவர், "இல்லை, பாபா" என்று பதிலளித்தார்.

"**இப்போது எவ்வளவு வேண்டுமானாலும் அழுங்கள், ஆனால் இதற்குப் பின்னர் இல்லை**" என்று அவர் கூறினார். ஜெரூ, பெர்விஸ் இருவரும் அழத் தொடங்கினர், ஆனால் தீனா, அதீத தைரியத்துடன் காணப்பட்டார்.

இத்தகைய நிகழ்வுகள் உலகத்தால் சோகமாகக் கருதப்படுகின்றன, ஆனால் அவதார புருஷரின் உண்மையான அன்பர்களுக்கு, அனைத்தும் அவரது விருப்பத்திற்கு இணங்க, துளி கூட பிசகாமல் நடக்கும்; மேலும் அந்த நம்பிக்கையில் அவர்கள் உறுதியாக உள்ளனர். பாபாவின் வார்த்தைகள் அவர்களின் இதயங்களில் அமைதியை ஏற்படுத்தியது, சில கணங்களுக்குப்

பின்னர், அவர்களின் பாவனை மற்றும் செயல்பாடுகளில் சோகத்தின் எந்த அறிகுறியும் தென்படவில்லை. தீனா 1922ஆம் ஆண்டு முதல் பாபாவின் தொடர்பில் இருந்து வருகிறார். அவரது மறைந்த கணவர் நவல், பாபாவின் நெருங்கிய சீடர் ஆவார்; மேலும், மூன்று குழந்தைகளும் சிறுவயதிலிருந்தே பாபாவின் மடியில் தவழ்ந்தனர்.

தாதரில் நர்கிஸ் தாதாசாஞ்சியுடன் இரவைக் கழிப்பது தீனா, பெர்விஸ் இருவருக்கும் சிறந்ததாகக் கருதப்பட்டது. மறுநாள் காலையில், தீனா மயங்கிய நிலையில் இருப்பதாக, பாபாவிற்குத் தகவல் வந்தது; அவருடன் உறுதுணையாக இருந்த அலு கம்பட்டா, மனதில் ஆழமாகத் தேங்கி நின்ற சோகத்தின் அழுத்தத்தை விடுவிக்க, அவரை மனம் விட்டு அழுமாறு தூண்ட முயன்றார். “அழவேண்டாம் என்று பாபா கூறியுள்ளார்” என்று தீனா பதிலளித்து வந்தார். பாபா, ‘**தான் உடனடியாக வருவதாகத் தகவல் தருமாறு**’ சைகையால் தெரிவித்தார்.

பாபா வந்தபோது, தீனா அவரை சந்திக்க அவரது கார் அருகில் வந்தார். பெர்விஸ் உள்ளே இருக்குமாறு உத்தரவிடப்பட்டது. தீனா, பாபாவிற்கு மலர் மாலை அணிவித்து, “எனது ஒரே வருத்தம், பாபா, நான் கர்ஷெத்தை முதலில் இங்கிலாந்துக்கு அனுப்பியதுதான்...” என்று மனதில் இருந்ததைக் கொட்டினார்.

பாபா அவரை சமாதானப்படுத்தினார்: **“அதற்கும், உங்களுக்கும் ஏதாவது சம்பந்தம் இருப்பதாக நீங்கள் நினைக்கிறீர்களா? இது அனைத்தும் எனது செயல். இந்த மலர் மாலையில் ஒரு இதழ் கூட எனது விருப்பமின்றி உதிராது. அவர் குறிப்பிட்ட அந்த நாளில், குறிப்பிட்ட வழியில் உயிரைத் துறக்க வேண்டும் என்பது எனது விருப்பம்; அவர் வாழ்ந்திருந்தால், மேலும் பல இன்னல்களை அனுபவித்திருக்கலாம், எனவே நான் அவருக்கு விதித்ததில் மகிழ்ச்சியாக இருங்கள்.**”

பாபா, தீனாவை மீண்டும் ஆஷியானாவிற்கு அழைத்து வந்தார். அவர், பாபா முன்னிலையில் அமர்ந்திருந்தபோது, பாபா, அவரிடம் மனம்விட்டு அழுமாறு கூறினார். சிறிது நேரத்திற்குப் பின்னர் அவர் அழத் தொடங்கினார்; ஆனால், “நான் அழுவது கர்ஷெத்துக்காக அல்ல; அது உங்கள் அன்பிற்காக, பாபா. ஏனெனில், உங்கள் அன்பு மிகவும் மகத்தானது; நீங்கள் என் மீது பொழியும் அனைத்திற்கும், நான் ஒருபோதும் நன்றியுள்ளவளாக இருக்க முடியாது; நீங்கள் நேசிக்கப்பட வேண்டிய அளவுக்கு, நான் உங்களை நேசிக்கவில்லை” என்று முறையிட்டார்.

பாரம்பரிய ஸொராஸ்ட்ரிய வழக்கத்திற்கு மாறாக, கர்ஷெத்திற்கு எந்த சம்பிரதாய முறையும் பின்பற்றப்படவில்லை. பாபா வெறுமனே தீனாவின் தாயார் ரூபாமாயிடம் ஐந்து ரூபாயைக் கொடுத்து, நெருப்புக் கோவிலுக்குச் சென்று, சந்தனம் வாங்கி நெருப்பில் இடுமாறும், கர்ஷெத் இறந்த பதினேழாவது நாளில், 20 ஏழைகளுக்கு, அவர்களின் கைகளால் தயார் செய்த உணவை வழங்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினார். (பாபா, உணவில், சாதம், பருப்பு, உருளைக்கிழங்கு தவிர வேறு எதுவும் வேண்டாம் எனவும் அறிவுறுத்தினார்.)

ஸொராஸ்ட்ரியன் ஒருவர், உயிர் துறந்த நான்காவது நாள், பொதுவாக ஒரு முக்கியமான சடங்கு நாளாகும். அன்றைய தினம், 'தி டென் கமான்ட்மென்ட்ஸ்' (THE TEN COMMANDMENTS) திரைப்படத்தைக் காண, பெண் மண்டலியுடன் செல்லுமாறு பாபா, தலாட்டி பெண்மணிகளுக்கு அறிவுறுத்தினார். பிப்ரவரி 4ஆம் நாள், பதினேழு ஏழைகளுக்கு உணவு தயார் செய்து வழங்குமாறு தீனா, பெர்விஸ் இருவருக்கும் அவர் உத்தரவிட்டார். அன்றைய தினம், இங்கிலாந்தில் கர்ஷெத்தின் உடல் தகனம் செய்யப்பட்டது என்பது அவர்களுக்குப் பின்னரே தெரிய வந்தது.

கர்ஷெத், குடும்பத்தின் ஒரே ஆதரவாக இருந்ததால், அவரது மறைவுக்குப் பிறகு, தீனா பல சிரமங்களை சந்தித்தார். ஆனால் நிலைமையை தைரியமாக எதிர்கொண்டு, தாயும், இளைய மகளும் தங்களைத் தாமே ஆதரிக்கும் நோக்கத்தில், அவர்களுக்கு உகந்த வேலைகளைக் கண்டுகொண்டனர்; பாபாவின் அன்பிற்குத் தகுதியான முன்னோடியாக நிரூபித்தனர். பாபா சமீபத்தில் இவ்வாறு கூறினார், "**யார் ஒருவருடைய அன்பு, துரதிர்ஷ்டத்தால் சோதனைக்கு உள்ளாக்கப்படுகிறதோ, அவர்கள் அதிர்ஷ்டசாலிகள்**", அவர்களும் அப்படித்தான்.

மூத்த மகள் ஜெரூ, ஒரு நாள் ஆஷியானாவில் பாபாவைப் பார்க்க வந்த வேளையில், மகிழ்ச்சியின்றி காணப்படவே, பாபா காரணத்தை வினவினார். "எனது கணவர், ரூஸி (RUSI), உங்களிடம் வருவதில்லை, அது எனக்கு மிகவும் வேதனையாக உள்ளது" என்று அவர் கூறினார்.

பாபா உடனே, "**அவரை வரச் சொல்லாதீர்கள், அவர் வருவார், ஆனால் அவர் தானாகவே வரவேண்டும்**" என்று கூறினார்.

ஜெரூ தனது கணவரிடம், பாபாவைப் பற்றி குறிப்பிடுவதை நிறுத்தினார்; இறுதியில் அவர் பாபாவிற்கு மரியாதை செலுத்தும் தனது விருப்பத்தை வெளிப்படுத்தி, தானாக அவரிடம் வந்தார்.

1958 ஜனவரி கடைசி சில நாட்களில், பாபாவின் உடல்நிலை சீரின்றி இருந்தது; தினமும் ஜுரத்தால் அவதிப்பட்டார். அவர் பிப்ரவரி 1 அன்று மும்பையிலிருந்து மெஹராஸாத் புறப்பட்டுச் சென்றார். வழியில் தாதரில், நௌரோஜி தாதாசாஞ்சியின் இல்லத்தில் நின்றார். பாபா அங்கிருந்து புறப்பட்டு எதிர்பாராதவிதமாக ஜிம் மற்றும் ரோடா மிஸ்திரியின் குடியிருப்பில் நின்றார். ரோடா, முன்னதாக பாபாவைப் பார்க்க வந்திருந்தாலும், அவரது விருப்பப்படி, ரோடாவின் மகன்கள் மெஹர்வான், ஃபாலு இருவரும் பள்ளிக்கூடத்திலிருந்து வெளியே வரமுடியவில்லை. பாபா, ரோடாவை அழைத்து மெஹர்வான் மற்றும் ஃபாலுவிடம் தனது அன்பைத் தெரிவிக்குமாறு கூறினார். பாபா மிகவும் அன்பாகவும் அக்கறையுடனும் இருந்தார்; அவர் இரண்டு சிறுவர்களைக் கூட நினைவில் வைத்திருந்தார்.

பாபா மெஹராஸாத் திரும்பி வந்ததும், வரவிருக்கும் சகவாசம் தொடர்பான நடவடிக்கைகளில் மூழ்கினார். 1958 பிப்ரவரி 4 அன்று, அனைத்தும் திட்டமிட்டபடி நடக்கிறதா என்று பார்க்க, காலையில் மெஹராபாத் சென்றார்.

பிப்ரவரி 5ஆம் தேதி காலை, டாக்கே மீண்டும் மெஹராஸாத்திற்கு அழைக்கப்பட்டார்; பாபா அவருக்கு எதிர்வரும் சகவாசத்திற்கான மேலதிக அறிவுறுத்தல்களை வழங்கினார். இந்த நேரத்தில், பாபா, ஒவ்வொரு நாளும் லேசான ஜுரம் மற்றும் இடுப்புப் பாகத்தில் கடுமையான வலியால் அவதியுற்றார். 5ஆம் தேதி, சகவாசத்தில் கலந்துகொள்ளும் அனைவருக்கும் சுற்றறிக்கை ஒன்று அனுப்பப்பட்டது:

**பாபாவின் துன்பம், நாளுக்கு நாள் அதிகரித்து வந்தாலும், அவரது உடல் அதைத் தாங்கிக் கொண்டே இருக்கிறது.**

**இவ்வளவு சிரமங்கள் அவரது பௌதீக உடலை சிதைக்கும் போதிலும், பாபா 'தனது அன்பானவர்களுக்கு அவரது சகவாசத்தை வழங்குவதாகவும், அவர்கள் அனைவரும் எந்த சூழ்நிலையிலும் வருவதை விரும்புவதாகவும், இந்த வாய்ப்பைத் தவறவிடக்கூடாது' என்றும் கூறினார். 'அதிர்ஷ்டவசமாக, பிரபஞ்சத்தின் அன்பான அதிபதிக்கு, துணையாக அவருக்கு அருகில் இருந்து, இந்த நிகழ்ச்சிகளில் பங்கெடுப்பதன் மூலம், அவரது தற்போதைய உலகளாவிய துன்பத்தை நேரில் கண்டு, பகிர்ந்து கொள்வார்கள் என்ற அர்த்தத்தில், இந்த சகவாசம் தனித்துவமானதாக இருக்கும்' என்று பாபா கூறுகிறார்.**

**முந்தைய சகவாசங்களில் பங்கெடுத்தவர்கள், பாபாவின் வழிகாட்டுதலையும் அருளையும் எதிர்பார்த்தனர். இந்த சகவாசத்தில், பாபா அவர்களிடமிருந்து, மனிதகுலத்தின் மீதான இரக்கம் மற்றும் அன்பின் அடிப்படை ஆதாரமாகத் திகழும் அவரது சுயமாக விதிக்கப்பட்ட துன்பத்தைப் பற்றிய முழுமையான புரிதலை எதிர்பார்க்கிறார்.**

1958 பிப்ரவரி 7அன்று, இந்தியாவில் ஒவ்வொரு குழுத் தலைவருக்கும் பாபாவின் உடல் ஜுரம் குறித்து, தொலைத்தந்தி மூலம் தெரிவிக்கப்பட்டது; ஆனால் '**உடல் ஜுரம் தொடர்ந்து இருந்தாலும், சகவாச நிகழ்ச்சி, திட்டமிட்ட கால அட்டவணைப்படி நடத்தப்படும்**' என்று அவர்களுக்கு உறுதியளிக்கப்பட்டது. ஆதி சீனியர், அஹமதுநகர், பூத் மருத்துவமனையின் டாக்டர் ஏ. ஆண்டர்ஸனை (DR.A.ANDERSON) அன்று மெஹராஸாத்திற்கு அழைத்து வரவே, அங்கு அவர் ஒரு மணி நேரத்திற்கும் மேலாக பாபாவை பரிசோதனை செய்தார், ஆனால் பாபாவின் உடல் ஜுரத்திற்கான உறுதியான காரணத்தை கண்டுபிடிக்க முடியவில்லை. டாக்டர் டானும் அன்று அங்கு வந்தார்.

டாக்கே மெஹராஸாத்திற்கு தொடர்ந்து வந்தார். 1958 பிப்ரவரி 12 அன்று, பாபா அவரிடம், '**கடவுளை தாய், தந்தை**' என்று குறிப்பிட்டு, மேலும் இந்த தலைப்பில் ஒரு சொற்பொழிவுக்கான குறிப்புகளையும் வழங்கினார்.

மற்றுமொரு சந்தர்ப்பத்தில், டாக்கே வந்த வேளையில், பாபா, "**இந்த மருத்துவர்கள் முடி திருத்தம் செய்பவர்கள்**! (BARBERS), **அவர்கள் எனக்கு எந்த**

**வகையிலும் உதவுவதில்லை. எனக்கு உடல் ஜுரம் உள்ளது, மிகவும் மோசமாக உணர்கிறேன், ஆனால் அவர்கள் வழங்கும் எதுவும் எனக்கு உதவவில்லை"** என்று புகார் கூறினார்.

டாக்கே கூறினார், "பாபா 'ஆம்னிடன்' (OMNIDEN) எனும் ஜெர்மன் மருந்து ஒன்று உள்ளது; இது, மூலகாரணம் தெரியாத ஜுரத்திற்கானது. ஒருவேளை அது உங்களுக்கு உதவும்."

பாபா அதை முயற்சி செய்ய விரும்பினார், மேலும் அது உள்ளூர் பஜாரிலோ அல்லது பூனாவிலோ கிடைக்காததால், மும்பையிலிருந்து அதைக் கொண்டுவருவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டது. அது வந்ததும், மருத்துவ முறையைப் பற்றிய அதன் குறிப்புகளைப் படிக்க, டாக்கே மீண்டும் அழைக்கப்பட்டார். பாபா, அந்த மருந்தை உட்கொண்டு, அவர் மிகவும் நன்றாக இருப்பதாக உடனடியாகச் சுட்டிக்காட்டினார்.

பிப்ரவரி 11ஆம் தேதி தொடங்கி, உடல் ஜுரம் இருந்தபோதிலும், அடுத்த மூன்று நாட்களுக்கு ஒவ்வொரு நாளும் சகவாச நிகழ்ச்சிகளுக்கான ஆயத்தங்களை ஆய்வு செய்வதற்காக, பாபா மெஹராபாத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். எரச் ஓர் அன்பருக்கு எழுதியது போல, "பாபாவின் செயல்பாடுகள் முன்னர் இருந்ததைப் போலவே இருக்கின்றன, ஆனால் இப்போது இடுப்பில் அதீத வலி காரணமாக, சுதந்திரமான மற்றும் வேகமான உடல் இயக்கங்கள் முற்றிலும் தடைப்பட்டுள்ளன."

பாபா, பெண்டுவை சகவாச சபையின் பொறுப்பாளராக நியமித்ததைத் தொடர்ந்து, அவர் இப்போது (ஊன்றுகோல் அல்லது பிரம்புகளைப் பயன்படுத்தி) நடக்க முடிந்தது; அனைத்து நிகழ்வுகளையும் மேற்பார்வையிட்டார். அவருக்கு உதவியாக, பாதிரி, விஷ்ணு மற்றும் அங்கு தங்காத நெருங்கியவர்களில் நானா கேர், பால் நாத்து, மினூ கராஸ், ரங்கோலே, ஆதி & ரோடா துபாஷ் போன்றவர்கள் பிப்ரவரி 10ஆம் தேதி வந்து, வெவ்வேறு பணிகளில் பங்கெடுத்தனர். மேலும், பாபா, பாவ் கல்சூரியை மெஹராபாத்திற்கு உதவிக்காக அனுப்பி வைத்தார்.

வேலை, நத்தை வேகத்தில் நகர்ந்து கொண்டிருந்தது; ஒரு நாள், முழு விரக்தியில், போதுமான கட்டில்கள் வாடகைக்குக் கிடைக்கவில்லை என்று பெண்டு அழுது கொண்டிருந்தார். பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய, பாபா உடனடியாக, சதாஷிவ் பாட்டீலை மெஹராபாத்திலிருந்து பூனாவிற்கு அனுப்பி, மொத்தம் 825 நபர்களுக்குத் தேவையான, மேலும் 100 கட்டில்களும், அதே எண்ணிக்கையில் மெத்தைகளும், போர்வைகளும் கொண்டுவரப்பட்டு, மேலும் இரண்டு தனித்தனி முகாம்கள் - ஒன்று ஆண்களுக்கு (கீழ் மெஹராபாத்தில் அமைந்த பிரதான கட்டிடத்தின் தெற்கே) மற்றும் மகளிருக்காக ஒன்று (மேற்குப் பக்கத்தில் ரயில்வே தண்டவாளத்திற்கு அருகில், சந்திப்புக் கூடாரம் அருகே) அமைக்கப்பட்டன. இரு பகுதிகளிலும் தனித்தனி கழிப்பறைகள், குளியலறைகள் மற்றும் பல எழுப்பப்பட்டன. ஒரே நேரத்தில் 1,000 பேர் அமரக்கூடிய விதத்தில், பிரத்யேக பெரிய கூடாரத்தில் உணவு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

மின்சாரம் மற்றும் தண்ணீர் குழாய்கள் இணைக்கப்பட்டன, ஏற்பாடுகள் மெதுவாக நடப்பதுபோல தோன்றினாலும், அனைத்தும் சரியான நேரத்தில் தயாராக இருந்தன; சகவாசத்திற்காக வருகை தந்த அன்பர்கள், பக்தர்கள் அனைவருக்கும் அன்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

ஆனால், காலம் குறிப்பிட்டது போல, "மெஹர் பாபாவிற்கு, இந்த சகவாச கூட்டங்கள் சிலுவையில் அறையப்படுவதற்கு சமம்! தனது அன்பர்களை அரவணைப்பது, அவர்களு தரிசனம் மற்றும் சகவாசத்தை வழங்குவது - இவை அனைத்தும் அவருக்கு சிலுவையை சுமப்பது போன்ற சித்திரவதைக்கு இணையானதாக இருந்தது. அவ்வாறு செய்வதன் மூலம், பாபா, அங்கு வருகை தந்த நூற்றுக்கணக்கான அன்பர்களின் மனப்படிவங்களை தம் மீது ஏற்றுக்கொண்டு, அந்த சுமையால் அவதியுற்றார். பாபா தனது அன்பர்களுடன் உரையாடுவது, சொற்பொழிவு வழங்குவது, நகைச்சுவையாக பேசுவது அனைத்தும் வெறுமனே வெளியளவில் நடக்கும் நிகழ்ச்சி; உள்ளளவில் பாபா சுமந்து கொண்டிருந்த ஒவ்வொருவரின் பாரமும், சிலுவையில் இயேசு சுமந்த துன்பத்தை விட மிகையானது.

"ஆயினும், மெஹர் பாபாவின் அளவிறுதியற்ற கருணையும் அன்பும் மட்டுமே, குறிப்பாக அவரது அன்பர்களுக்காகவும், பொதுவாக உலகத்திற்காகவும், அவரை, இதுபோன்ற துன்பத்தை அனுபவிக்கச் செய்தது.

"அவருடைய அன்பின் வரம்பையோ, கருணையின் அளவையோ எவராலும் கற்பனை செய்ய முடியாது. மனிதகுலத்தின் நலனுக்காக, பாபா, தனது தற்போதைய வருகையின் ஒவ்வொரு கணமும் சிலுவையில் அறையப்பட்டார், தனது உடலைத் தியாகம் செய்தார், அதன் ஒவ்வொரு துகளும் துன்பம் நிறைந்ததாக இருந்தது."

750க்கும் மேற்பட்ட ஹிந்தி மற்றும் மராட்டி பேசும் அன்பர்களும், பக்தர்களும் 1958 பிப்ரவரி 14 வெள்ளிக்கிழமை மதியம் மெஹராபாத் வந்தடைந்தனர். மெஹராபாத் தோட்டம் அவர்களின் இனிமையான பாடலுடன் மீண்டும் மலர்ந்தது. மகளிர், சகவாச நிகழ்ச்சியில் பங்கேற்பது இதுவே முதல் முறை, அவர்களின் இதயம் மகிழ்ச்சியில் பொங்கி வழிந்தது; அவர்களுக்கு சிறந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இரவும் பகலும் வேலை தொடர்ந்து, அவர்கள் வருவதற்குள் அனைத்தும் தயார் நிலையில் இருந்தது.

சகவாச நிகழ்ச்சிக்காக இளைஞன் பாலக் பகவானை, மெஹராபாத் அழைத்து வருமாறு பாபா, ராய்ப்பூர் நகரில் அப்துல் மஜித் கானுக்கு கடிதம் எழுதியிருந்தார். ராய்ப்பூரில் பாலக் பகவானை பின்பற்றுபவர்கள் பலர் இருந்தனர்; ஆறு மாதங்களுக்கு முன்னர், அவர் பாபாவை மெஹராஸாத்தில் சந்தித்தார். 14ஆம் தேதி, பாபா, பாலக் பகவானை மெஹராஸாத்திற்கு அழைத்து, அவருக்கு சில அறிவுரைகளை வழங்கினார்: "**அதாவது, மேல்நிலை ஆத்மாவாகக் காட்டிக் கொள்ளாதீர்கள், எந்தப் பெண்ணையும் தொடக்கூடாது மற்றும் 'அற்புதங்கள்' செய்யவேண்டாம்.**" பாபா அவரை

எச்சரித்தார், “**நீங்கள் எனது கட்டளைக்கு எதிராகச் சென்றால், நான் உங்களை நசுக்கிவிடுவேன்.**” அந்த இளைஞனால் எந்தப் பிரச்சினையும் வராமல் பார்த்துக் கொள்வதற்காக, பாபா, புக்காரை நியமித்தார். நரிமன், மெஹர்ஜி, எல்சா மிஸ்திரி, குமார் ஆகியோர் சில நாட்களுக்கு முன்பு மெஹராஸாத்திற்கு வந்தனர். நரிமனும், மெஹர்ஜியும், ஜால்பாய் மற்றும் அலோபாவுடன், 14ஆம் தேதி மெஹராபாத்திற்கு வந்து தங்கியிருந்தனர்.

சகவாச நிகழ்ச்சி, அடுத்த நாள் பிப்ரவரி 15 அன்று ஆரம்பமானது. பாபா காலை 8:30 மணிக்கு எரச், காக்கா, எல்சா, குமார் ஆகியோருடன் மெஹராபாத் வந்தார். கீழ் மெஹராபாத்தில் அமைந்த தர்மசாலா கட்டிடத்தின் வடக்குப் பகுதியில் எழுப்பப்பட்டிருந்த சந்திப்புக் கூடாரத்தின் அருகே, அவரது கார் நிறுத்தப்பட்டது. பாபா ஊன்றுகோலுடன் எரச், காக்கா இருவரின் உதவியுடன், நொண்டு நடை போட்டு மேடைக்குச் சென்றார். பாபாவின் இருக்கைக்கு மேல் அலங்கரிக்கப்பட்ட குடை ஒன்றும், அதன் பின்னால் பாபாவின் பெரிய புகைப்படம் மற்றும் அவரது ஐந்து சத்குருக்களின் உருவப்படங்களும் தொங்கவிடப்பட்டிருந்தன.

பாபாவின் ஜுரம் மற்றும் தொடர் இடுப்பு வலி குறித்த சுற்றறிக்கை, தொலைத்தந்திகள் காரணமாக, 14ஆம் தேதி, அனைத்து அன்பர்கள் வந்ததும், பாபாவின் உடல்நிலை குறித்து மண்டலியிடம் விசாரித்தனர். நிலைமை விபரீதமாக உள்ளது என்று அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. அன்று மாலை, பாபா, அவரது உடல் வலி கடுமையாக இருப்பதாகவும், அதீத வெப்பம் காரணமாக அவதிப்படுவதாகவும், அடுத்த நாள் அவரால் மெஹராபாத்திற்கு வர முடியாமல் போனால், சகவாசத்தில் கலந்துகொள்பவர்கள் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்றும் மெஹராஸாத்திலிருந்து மெஹராபாத்திற்கு செய்தி அனுப்பினார். சகவாசத்தில் கலந்து கொண்ட ஆண், பெண் அனைவருக்கும் இது தெரிவிக்கப்பட்டது. ஆனால், பாபாவின் சிரிப்பு பொங்கும் முகம், ரோஜாப்பூவைப் போல பிரகாசிப்பதைக் கண்டதும், மண்டலி அவர்களிடம் உண்மையை மறைத்ததாக நினைத்தனர். உண்மையில் பாபா, பயங்கரமான வலியை அனுபவித்தாலும், அவருடைய வெளிப்பாட்டால் எவரும் அதை அறிந்திருக்க வாய்ப்பில்லை.

“அவதார் மெஹர் பாபாவிற்கு ஜெய்!” என்ற வாழ்த்துக் கோஷங்கள், பந்தலுக்குள் பாபா நுழைந்ததும் காற்றில் கலந்தன. ஆண்கள் ஒருபுறமும், பெண்கள் மறுபுறமும் அமர்ந்திருந்தனர். ஏழு சுருக்கமான சகவாச செய்திகள் பலகைகளில் (ஆங்கிலம், குஜராத்தி, தெலுங்கு, மராட்டி மற்றும் இந்தி மொழிகளில்) எழுதப்பட்டு, கூடாரத்திலும் மண்டபத்திலும் தொங்கவிடப்பட்டிருந்தன.

மேடையில் இருந்த நாற்காலியில் அமர்ந்ததும் பாபா, “**எல்லோரும் பந்தலில் உள்ளனரா? எவரேனும் வெளியில் இருந்தால் அவரை உள்ளே அழைக்க வேண்டும்**” என்று தெரிவித்தார். கூடாரத்தைச் சுற்றி கண்களை

சுழற்றிப் பார்த்து, "**ஒவ்வொருவருடைய கன்னங்களும் வட்டமாகவும் நிறைந்தும் தெரிகிறது - நான் மட்டும் பலவீனமாகத் தோன்றுகிறேன்!**" என்று கேலி செய்தார். ஆனால் ஜுரம் மற்றும் வலி இருந்தபோதிலும், பாபா, தனது வழக்கமான பிரகாசத்துடனும், இனிமை நிறைந்தும், அதீத சக்திமிக்க பொலிவுடனும், மகிழ்ச்சிகரமான மனநிலையில் காணப்பட்டார்.

"**நேற்று இரவு யார் தூங்கவில்லை**" என்று அவர் கேட்டதற்கு ஒருவரும் கைகளை உயர்த்தாததால், "**நான் மட்டும் தூங்கவில்லை என்று தெரிகிறது**" என்று குறிப்பிட்டார். பாபா, சகவாச அன்பர்கள் மெஹராபாத்தில் இருக்கும் காலத்தில், முற்றிலும் கவலையின்றி இருக்குமாறு வலியுறுத்தினார், மேலும் ஒவ்வொருவரையும் தனித்தனியாக சந்திப்பதாக உறுதியளித்தார்.

லாஹூரைச் சேர்ந்த கவிஞர் ஸாயப் ஆஸ்மியை (SAIB ASMI) கவனித்த பாபா, அவரை ஒரு கணம் நிற்கச் சொல்லி, பின்பு, பாலக் பகவானை மேடையில் தனக்கு அருகில் அமர வைத்தார்.

சகவாசத்தில் கலந்து கொண்டவர்கள், தங்கள் இடது கைகளில் மஞ்சள் நிற நுழைவாயில் நாடாக்களை அணிந்திருந்ததை கவனித்த பாபா, "**ஏன் இதை அணிந்துள்ளீர்கள்?**" என வினவியபோது, பெண்டு பதிலளித்தார், "இது உணவு மற்றும் தங்கும் கூடாரங்களில் அனுமதிப்பதற்கான ஓர் அடையாளமாகும்."

ஒரு நபர் குறுக்கிட்டு, "இது இந்த நிகழ்ச்சியின் நினைவுச்சின்னம்" என்றார். தாதி கேரவாலா அதை அணியாததைக் கண்டு, பாபா அதை அணியச் சொன்னார்.

பாபா, கூட்டத்தினர் அனைவரிடமும் வற்புறுத்தி கூறினார்: "**நீங்கள் சகவாசத்தில் இருக்கும் வரை மகிழ்ச்சியாக இருங்கள். எல்லா பிரச்சினைகளையும், சிரமங்களையும் மறந்துவிடுங்கள், அனைத்து வீட்டு விவகாரங்களையும் மறந்து இங்கேயே இருங்கள். நான் பலவீனமாக இருக்கிறேன், எனக்கு ஜுரம் மற்றும் இடுப்பு வலி உள்ளது. இருந்தாலும் நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன், நான் நித்திய மகிழ்ச்சியில் இருக்கிறேன்.**"

திகம்பர் காடேக்கர், பாபா கூறுவதை குறிப்பெடுத்துக் கொண்டிருந்தார், பாபா நகைச்சுவையாக அவரிடம், "**நான் உங்களிடம் கேட்கும்போது, நீங்கள் குறித்துக்கொள்வதை எனக்கு நினைவூட்டுங்கள். எனக்கு இப்போது 60 வயதாகிறது, 60 வயதிற்குப் பின்னர், ஒரு மனிதனின் நினைவாற்றல் பலவீனமடைகிறது**" என்றார்.

பாபா கூறுவதை சுருக்கெழுத்தில் எழுதிக் கொண்டிருந்த ஃபெராமிடம், "**எழுதுவதை பாதியில் விட்டுவிடாதீர்கள், நான் சொல்வதையும் சுருக்கிவிடாதீர்கள்!**" என்று கூறினார்.

சகவாசத்தின் அர்த்தத்தை விளக்கி, பாபா இவ்வாறு எடுத்துரைத்தார்:

**சகவாசம் என்றால் அன்பின் கொடுக்கல் வாங்கல். நான் மட்டுமே அன்பன், நீங்கள் அனைவரும் என் அன்பிற்குரியவர்கள்; அல்லது, நான் மட்டுமே அன்பிற்குரியவன், நீங்கள் அனைவரும் என் அன்பர்கள்!**



மெஹராபாத்
(MEHERABAD)
பிப்ரவரி
(FEBRUARY), **1958**



ஸாயப் ஆஸ்மி, மெஹராபாத், பிப்ரவரி **1958**
(SAIB ASMI, MEHERABAD, FEBRUARY 1958)

**எனது சகவாசத்தில் நீங்கள் அனைவரும் மகிழ்ச்சியாக இருக்க விரும்புகிறேன். இது கடைசி சகவாசமாக இருக்கும், எனவே நீங்கள் மகிழ்ச்சியாக இருக்கவும், இயன்றவரை என் அன்பை உள்வாங்கவும் விரும்புகிறேன். இந்த அரிய வாய்ப்பை அதிக அளவில் பயன்படுத்திக் கொள்ளுங்கள். நான் அன்பின் இறைப் பெருங்கடல். இந்தப் பெருங்கடலிலிருந்து, உங்களால் இயன்றவரை அன்பை உள்வாங்குவது உங்களைச் சார்ந்தது. என்னை எப்படி நேசிப்பது என்பதை உங்களுக்கு விளக்குவது என்னைச் சார்ந்தது அல்ல. அதைப் புரிந்துகொள்ள முயற்சி செய்யுங்கள். ஓர் ஆண் ஒரு பெண்ணை நேசிக்கிறார் என்றும், அதேபோல் ஒரு பெண் ஓர் ஆணை நேசிக்கிறார் என்றும் வைத்துக்கொள்வோம். ஒருவரையொருவர் எப்படி நேசிக்க வேண்டும் என்று ஆண், பெண்ணுக்கோ அல்லது பெண், ஆணுக்கோ சொல்ல முடியுமா? ஒன்று மட்டும் நிச்சயம்: என்னால் இயன்றவரை என் அன்பை உங்களுக்குக் கொடுக்க விரும்புகிறேன், ஆனால், அதை அடையப் பெறுவது உங்களைப் பொறுத்தது. நீங்கள் இங்கே இருக்கும் வேளையில், உங்கள் இல்லம், குடும்பம் மற்றும் உலக விவகாரங்களை முற்றிலும் மறந்துவிட்டு, என் அன்பை ஏற்றுக்கொள்ள முயற்சிப்பது எளிதான வழி. என் அன்பை நீங்கள் அதிகபட்சமாக உள்வாங்க வேண்டுமாயின், இதுவே இன்றியமையாத முதல் விஷயம். இரண்டாவது விஷயம், முற்றிலும் சௌகரியமாக இருந்து, ஒவ்வொரு இரவும் நன்றாகத் தூங்கி, ஓய்வெடுப்பதானால், நீங்கள் தினமும் எனது சகவாசத்திற்காக வரும் வேளையில் புத்துணர்ச்சியுடன் இருப்பீர்கள்.**

**நான் கடவுள், நீங்கள் என் முன்னிலையில் தூங்கி விழுந்தால், நீங்கள் என்னை இழக்க நேரிடும்; உங்கள் அரைத்தூக்க நிலை, உங்கள் தினசரி வருகையின் போதும், எனது முன்னிலையில் மனதளவில் இல்லாமல் இருக்க உங்களைக் கட்டாயப்படுத்தும். சகவாசம் என்பதன் பொருள், நெருங்கிய தோழமை. இந்தத் தோழமையை நிலைநாட்ட, நீங்கள் என்னுடன் சுதந்திரமாக இருக்க வேண்டும். நீங்கள் இயன்றவரை என்னுடன் நெருக்கமாக இருக்க முயற்சிக்க வேண்டும்.**

சற்று தூரத்தில் அமர்ந்திருந்த கல்லூரி முதல்வர் நிரஞ்சன் ஸிங்கை பார்த்த பாபா, **“என்னிடமிருந்து உங்களை மறைக்க விரும்புகிறீர்களா?”** என்று கேட்டதும், நிரஞ்சன் ஸிங் சிரித்தார்.

தொடர்ந்து பாபா கூறினார்:

**சகவாசம் என்பது அன்பர்களிடையே, அன்யோன்யமான கொடுக்கல் வாங்கலால் விளையும் நெருக்கம். அன்பனுக்கும் இறை-அன்பருக்கும் இடையேயான இந்த கொடுக்கல்-வாங்கலை விளக்க வேண்டிய அவசியமில்லை. விளக்கங்கள் மற்றும் உரைகளின் சூழலை உருவாக்குவது என்பது, அன்யோன்யமான நெருக்கத்தில் மட்டுமே உருவான அன்பின் கண்ணியத்தை சீர்குலைப்பதாகும். இருப்பினும், நான் ஒன்றை விளக்க விரும்புகிறேன் - உடல் ரீதியான தோழமை.**

ஒரு மாதத்திற்கு முன்பு, மும்பையில் வாழும் எனது நெருங்கிய அன்பர்களுக்கு சகவாசம் மற்றும் தரிசனம் வழங்கினேன். மதிய வேளையில் நடந்த அந்த நிகழ்ச்சியில் நுழைவதற்காக, நான் காரிலிருந்து இறங்கும் போது, மேலும் இருவர் கீழே இறங்கினர்; அவர்கள் நொண்டு நடை போட்டு நடந்தனர். இந்த நாட்களில் நான் ஊன்றுகோலின் உதவியுடன் நடக்கிறேன் என்பதை நீங்கள் அறிவீர்கள். அந்த இருவரும், ஹோமா தாதாசாஞ்சி மற்றும் அவரது சகோதரர் தாரா, என் இருபுறமும் என்னைத் தாங்கி, எனக்கு உதவினர். தாராவின் காலில் சுளுக்கு ஏற்பட்டது; ஹோமா காலில் அறுவை சிகிச்சை செய்ததால், நொண்டு நடை போட்டு நடக்க வேண்டியதாயிற்று. எனவே, அவர்கள் இருவரும் நொண்டிக்கொண்டே என் இரு பக்கமும் நடந்தனர். சகவாசம் இப்படித்தான் இருக்க வேண்டும் - இதைத்தான் உடல் ரீதியான தோழமை என்பது. (எல்லோரும் சிரித்தனர்.)

ஐந்து நிமிடங்களுக்குப் பிறகு, நாம் பிரார்த்தனை செய்வோம். அதைத் தொடர்ந்து, நீங்கள் எனக்கு மாலை அணிவிக்கலாம், என்னை சந்திக்கலாம், தரிசனம் செய்யலாம், என்னைத் தழுவியும் கொள்ளலாம்; ஆனால் ஒருவர் பின் ஒருவராக வாருங்கள். குழப்பத்தை உருவாக்காதீர்கள். அவசரம் இல்லை; நிறைய நேரம் இருக்கிறது. எனது முழு நேரமும் சகவாச நிகழ்ச்சிகளில் உங்களுடன் கழிக்கப்படும். நீங்கள் என்னை நெருங்கிய நட்புடன் அணுகி, அன்யோன்யமான தோழமையுடன் சந்திக்க வேண்டும் என்று விரும்புகிறேன்.

நான், உங்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியாகவும் முகமலர்ச்சியாகவும் இருப்பதாகத் தோன்றுகிறேன்; பாபா நலமாக இருக்கிறார் என்று நீங்கள் நினைத்துக் கொண்டிருக்க வேண்டும். ஆனால் பிரபஞ்சத்திற்காக நான் எந்த அளவுக்குத் துன்பப்படுகிறேன் என்பதை நீங்கள் எப்படி அறிய முடியும்? நான் எப்படிக் கஷ்டப்படுகிறேன் என்பது எனக்கு மட்டுமே தெரியும்.

1955 நவம்பர்-டிசம்பரில் நடந்த சகவாச நிகழ்ச்சியில் ஆண்கள் மட்டுமே இருந்தனர், மேலும் மகளிருக்கும் சகவாசம் வழங்கப்பட வேண்டும் என்று அவர்கள் கேட்டுக் கொண்டனர். மகளிருக்கு அத்தகைய வாய்ப்பு, ஒருபோதும் வழங்கப்படவில்லை, எனவே நான் அவர்களை, இந்த சகவாச நிகழ்ச்சியில் கலந்துகொள்ள அனுமதித்தேன்; சொல்லப்போனால் இது முக்கியமாக அவர்களுக்கானது. ஆனால் பெண்மணிகள் தனியாகப் பயணம் செய்ய முடியாததால், ஆண்களும் அனுமதிக்கப்பட்டனர். ஆயினும்கூட, இந்த சகவாசத்தில் கலந்துகொள்ளும் பெண்களின் எண்ணிக்கை, ஆண்களை விட குறைவாக இருப்பதை நான் காண்கிறேன்.

மேலும், அவர்களின் குழந்தைகள் பற்றி என்ன சொல்வது? அவர்கள் வருவதை நான் மறுக்க வேண்டியிருந்தது, ஏனெனில் அவர்கள் பெருங் குழப்பத்தை ஏற்படுத்தியிருக்கக் கூடும். அனைத்து ஆண்களும் தங்கள்

குழந்தைகளை கவனித்துக் கொள்ள வீட்டில் இருந்திருந்தால், பெண்மணிகளின் எண்ணிக்கை நிச்சயமாக அதிகமாக இருந்திருக்கும்.

பிரார்த்தனைக்குப் பிறகு, நீங்கள் என்னை சந்திக்க வரும்போது, இதயபூர்வமாக என்னைத் தழுவுங்கள். இன்று அதற்கான நாள், ஏனெனில், உங்களில் பாதி பேருக்கு, சளிக்காய்ச்சல் பிடித்துள்ளது. என்னை அது தொற்றிக்கொண்டால், நாளை, ஜூரத்தைத் தவிர, சளிக்காய்ச்சலும் வரலாம். ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம்: நீங்கள் என்னிடமிருந்து அற்புதங்களை எதிர்பார்க்கக்கூடாது. நான் ஒருபோதும் அவற்றை நிகழ்த்தியதில்லை. இந்த உடலை கைவிடுவதற்கு முன்பு, நான் ஒரே ஓர் அதிசயத்தை நிகழ்த்துவேன் (அதாவது எனது மௌனத்தைக் கலைப்பது). ஆனால் நான் உங்களுக்கு ஒன்றைச் சொல்கிறேன்: என் உண்மையான அன்பர்கள் மூலம் நான் அற்புதங்களைப் புரிவேன்.

எனது நெருங்கிய அன்பர்கள் எப்படி அற்புதங்களைச் செய்வார்கள்? இங்கே நீங்கள் காணும் இந்த ஏற்பாடுகள் அனைத்தும் என் அன்பர்கள் செய்த அதிசயம். இதெல்லாம் எப்படி முடிந்தது என்று உங்களுக்குத் தெரியாது. பெண்டுவிடம் ஏற்பாடுகள் ஒப்படைக்கப்பட்டன. அவருடைய நிலையை நீங்கள் பார்த்திருக்க வேண்டும். வாகன விபத்தில் புறவெளி மூளைக்காயம் ஏற்பட்டதால், அவரால் தெளிவாக சிந்திக்கவோ பேசவோ முடியாது, ஆனால் எல்லா பொறுப்புகளையும் அவர் ஏற்றுக்கொண்டார்.

மேலும் ஏற்பாடுகள் பற்றிய இறுதி அனுமதியை நான் பல நாட்களுக்கு ஒத்திவைத்தேன். நான்கு நாட்களுக்கு முன்பு, நான் மெஹராபாத்திற்குச் சென்றேன், பெண்டு ஒரு குழந்தையைப் போல் என் முன் நின்று புகார் செய்து அழுதார். நான்கு நாட்களுக்கு முன்னர், இங்கு எதுவும் இல்லை, கூடாரங்கள் இல்லை, குளியலறைகள் இல்லை, கழிப்பறைகள் இல்லை, மின்சாரம், நீர்வசதி எதுவும் இல்லை.

பாதிரியின் உடல்நிலையும் சரியில்லை. அவருக்கு தொடர்ந்து முதுகுவலி உள்ளது. அவரால் நீண்ட நேரம் நின்று கட்டளைகளை வழங்க முடியாது, மேலும் அவர் வேலை செய்வதற்காகவே வாழும் ஜீவன். பெண்டு, பாதிரி இருவருக்கும் விஷ்ணு உதவினார். விஷ்ணுவும் விபத்தில் சிக்கியதால் அவரது நரம்புகள் பாதிக்கப்பட்டுள்ளன. ஒரு சிறிய வேலை கூட, அவரை பதட்டத்துடன் சோர்வடையச் செய்கிறது. இந்த மூவருக்கும் பின்னால் ஆதி. இந்த நிகழ்ச்சியின் பின்னணியில் ஆதி தான் முழுப் பொறுப்பையும் ஏற்று நடத்துபவர். அவர் இரவும் பகலும் எப்படிப் பணிபுரிகிறார் என்பதை நம்புவதற்கு நீங்கள் அவரைப் பார்க்க வேண்டும் - இரவு இரண்டு மணி வரை; அவர் பைத்தியம் பிடித்தவர் போலாகி விட்டதாக, புக்கார் கூறினார். பலர், குழுக்களை மாற்றிக் கொண்டிருந்தனர், மேலும் புதியவர்கள், தொடர்ந்து பட்டியலில் இணைக்கப்பட்டனர்.

எரச் இங்கு நிற்பதைக் காண்பதே ஓர் அதிசயம். உடல் ரீதியாக, அவர் உடைந்துபோனார். ஐந்து நிமிடம் கூட ஓய்வில்லை. ஒவ்வொரு கணமும்,

**நான் அவரை பணியில் ஈடுபடுத்துகிறேன். மேலும் அவர், இரவு நேரக் கண்காணிப்பிலும் பங்கெடுக்கிறார்.**

**ஆனால், இத்தனைக்கும் பிறகு, சகவாச நாள் இப்போது விடிந்துவிட்டது; எல்லா ஏற்பாடுகளும் ஒழுங்காக உள்ளன. இங்கு, உதவிக்கரம் நீட்ட முன்கூட்டியே வந்த பல அன்பர்களை, நீங்கள் மறந்துவிடக் கூடாது. இவர்கள் ஐவர் (பெண்டு, பாதிரி, விஷ்ணு, ஆதி, எரச்) மட்டும் அல்ல, இரவும் பகலும் உழைக்கும் எத்தனையோ அன்பர்கள் உள்ளனர்.**

பந்தலின் மறுகோடியில் நின்று கொண்டிருந்த புக்காரிடம், பாபா கூறினார், "**ஒலிபெருக்கி இருந்தும், சொல்வது உங்கள் செவிகளில் விழாவிட்டால், ஒரு கொடியை அசைக்கவும் - அல்லது குறைந்தபட்சம் உங்கள் கைக்குட்டையையாவது அசைக்கவும்!**"

பிரார்த்தனைக்கான நேரம் வந்ததும், பாபா எழுந்து நின்று கைகளை சுத்தம் செய்தார். கேஷவ் நிகம், டாக்கேஃபால்கர் இருவரும் பாபாவின் வார்த்தைகளை முறையே ஹிந்தி, மராட்டி மொழியில் மொழிபெயர்த்தனர்; மேலும், ஒவ்வொருவரும் இப்போது குருநாதருக்கான பிரார்த்தனை (MASTER'S PRAYER) மற்றும் மனம் வருந்தி மொழியும் இரங்கல் பிரார்த்தனையை (PRAYER OF REPENTANCE) அவரவர் மொழியில் மொழிந்தனர். பிரார்த்தனையின் போது, பாபா தனது விரல்களை கூட்டம் இருக்கும் திசையில் நகர்த்தி, உடன்பாடற்ற ஒன்றை விரட்டுவது போல சைகை செய்து கொண்டிருந்தார். சிறிது நேரம் அவர் கண்களை மூடிக்கொண்டார்; ஒரு கையின் விரல்கள் மற்றொரு கையின் விரல்களைத் தட்டின.

மனம் வருந்தி மொழியும் இரங்கல் பிரார்த்தனைக்கு முன்பு, பாபா, ஆண், பெண் அனைவரிடமும், பிரார்த்தனையின் போது, அவர் மீது கவனம் செலுத்துமாறு அறிவுறுத்தினார். அதன் முடிவில், மனம் வருந்தி இரங்கியதன் அடையாளமாக, பாபா தனது கன்னங்களில் லேசாக அறைந்தார். உணர்ச்சிவசப்பட்ட புக்காரின் தாயார், "பாபா, பாபா!" என்று கண்கலங்கி அழத் தொடங்கினார்.

பிரார்த்தனை முடிந்ததும், பாபா, புக்காரின் தாயாருக்கு என்ன நடந்தது என்று பார்க்கும்படி கேட்டுக்கொண்டார். அவரை பாபாவிடம் அழைத்து வந்தபோது, பாபா, அவரைத் தழுவி ஆறுதல் கூறினார்.

கேஷவின் அண்ணியும் அடக்க முடியாமல் அழத் தொடங்கினார். பாபா, அவரையும் அழைத்து ஆரத்தழுவி கூறினார், "**நீங்கள் அனைவரும் இப்படி அழ ஆரம்பித்தால், நானும் அழுதுவிடுவேன்!**" என்று கேலி செய்தார்.

தரிசன நிகழ்ச்சி தொடங்கும் முன்பு, பாபா, "**பெண்மணிகள் ஒவ்வொருவராக முதலில் வந்து, எனது வலது கையில் மாலைகளை அணிவிக்க வேண்டும். அவர்களைத் தொடர்ந்து, பாலக் பகவான் முதலில் தரிசனத்திற்காகவும், மாலை அணிவிக்கவும் முன்வர வேண்டும்; பின்னர்,**

**ஆண்கள் தொடர்ந்து வரலாம்**" என்று கட்டளையிட்டார். மகளிருக்கான தரிசன வேளையில், பாபா, ஆண்களுக்கு பதினைந்து நிமிட இடைவேளையை அனுமதித்தார்.

சஞ்சீவனி டாக்கே, இதை ஒலிபெருக்கியில் மராட்டியில் மொழிபெயர்த்தார்; பாபா, மேலும் கூறினார், "**நீங்கள் அனைவரும் எனது குழந்தைகள். ஒருவரும் என் அரவணைப்பைத் தவறவிட மாட்டார்கள். எனவே, ஒவ்வொருவராக ஒழுங்கான முறையில் என்னை அணுகவும்.**"

பாபாவிற்குப் பரிச்சயமானவர்களைத் தவிர, ஒவ்வொரு நபரும் வெவ்வேறு பகுதிகளின் குழுத் தலைவர்களால் அவருக்கு அறிமுகப்படுத்தப்பட்டனர். பாபா சிலரிடம் கேலியாகப் பேசினார், சிலரிடம் அவர்களின் வயதைக் கேட்டார், ஒரு சிலருக்கு எப்போது புறப்பட வேண்டும் என்று அறிவுரை வழங்கினார், சிலரிடம், அவர்களுக்கு வேலையிலிருந்து விடுப்பு கிடைத்ததா, அதைப் பெறுவதில் ஏதேனும் சிக்கல் இருந்ததா என்று கேட்டார். மாணவர்களிடம், படிப்பில் கவனம் செலுத்துமாறு அறிவுறுத்தினார். உதாரணமாக, தேஷ்முக்கின் மகன் மற்றும் இரண்டு மகள்களிடம், சகவாசம் முடிந்து வீட்டிற்குச் சென்று, படிப்பில் கவனம் செலுத்துமாறு பாபா அறிவுறுத்தினார். ஹிந்தி-மராட்டி சகவாசத்தில் கலந்து கொண்டவர்களில் பலர், பாபாவை அணுகியதும் உணர்ச்சிவசப்பட்டு, அவரது கரங்களில் குழந்தைகளைப் போல் அழுதனர். ஆண், பெண் இருபாலருக்கும் இதுதான் நிகழ்ந்தது.

கேஷவ் நிகம், ஹமிர்பூரைச் சேர்ந்த பெண்மணிகளை அறிமுகப்படுத்திக் கொண்டிருந்தார், ஆனால் அவருக்குத் தெரியாதவர்களிடம், முதலில் தங்களை அறிமுகப்படுத்துமாறு கூறினார். இதில் முற்றிலும் மூழ்கியிருந்த அவர், சொந்த தாயும் மனைவியும் வந்ததும், "யார் நீங்கள், எங்கிருந்து வருகிறீர்கள்?" என்று விசாரித்தார். அவர்கள் சிரித்துக்கொண்டே "உங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும்!" என்று கூறிய போதுதான், அவர்கள் யார் என்பதை கேஷவ் உணர்ந்தார். பாபாவும் அதைக் கண்டு மனமார சிரித்தார். அது அவருக்கு, சாஞ்சியை நினைவூட்டியது, "**சாஞ்சி எனது நெருங்கிய சீடர்களில் ஒருவர், கடும் உழைப்பாளி, எப்பொழுதும் அவரது பணியில் மும்முரமாக இருந்தார். ஆனால் அவர் மிகவும் மறக்கும் தன்மையுடையவராக இருந்தார், சில சமயங்களில், ஒன்றை செயல்படுத்துவதற்கு முன்னர், எனது அறிவுறுத்தல்களை மறந்துவிடுவது வழக்கம்!**"

தரிசனம் வழங்கும் போதும், பெண்மணிகளைத் தழுவும் போதும் பாபாவின் கண்கள் பந்தல் முழுவதும் அலைமோதின. பாபாவின் அன்பின் அனுபவத்தில் திகைத்து நின்ற ஸாயப் ஆஸ்மி, ராம்ஜூவின் அருகில் அமர்ந்திருந்தார். ராம்ஜூவிடம் பாபா, "**உங்கள் பக்கம் என்ன நடக்கிறது?**" ஸாயப் ஆஸ்மியின் நிலையை ராம்ஜூ ஏற்கனவே கவனித்திருந்தார்.

பாபா, தம்மை அணுகிய ஒவ்வொரு பெண்மணியிடமும் கைகளைக் கூப்பி, சிலரிடம் தமது நாமத்தை மீண்டும் மீண்டும் உச்சரிக்குமாறு அறிவுறுத்தினார்; ஒவ்வொருவரும் பாபாவின் பாதங்களில் தலையை வைத்து

வணங்கும் வேளையில், பாபாவின் காயம்பட்ட காலைக் குறித்து, சஞ்சீவனி டாக்கேயின் எச்சரிக்கையை கவனத்தில் கொள்ளுமாறு நினைவூட்டினார். பாபா சிலரைத் தட்டிக்கொடுத்தார்; சிலரது முகத்தின் மீது கையை வைத்து வருடினார்; சிலரது தலையைத் தொட்டு, சிலரின் தோள்களை உலுக்கினார்.

நகைச்சுவையாக, ஆண்களை கிண்டல் செய்தார், "**பெண்மணிகள் அதிக நேரம் எடுப்பதைப் பார்த்து பொறாமைப்பட வேண்டாம், ஏனெனில், ஒரு வகையில், இந்த சகவாசம் அவர்களுக்காக மட்டுமே. நீங்கள் வெறும் மெய்க்காவலர்கள். நான் உங்களுடன் அதிக நேரம் செலவிடுவேன் என்று எதிர்பார்க்க வேண்டாம். நான் எந்த நேரத்திலும் உங்களைத் துரத்திவிடுவேன். உங்களுக்காக ஒரு தழுவல், ஒரு ஸ்பரிசம், அவ்வளவுதான்!**"

பாபா, தனது கால்களை நீட்டி, சிறிது நேரம் ஓய்வெடுத்த வண்ணம், ஸ்ரீபத் ஸஹாயிடம், "**நீங்கள் ஏதேனும் மருந்து கொண்டு வந்தீர்களா? இந்த தரிசனம் என்னை சோர்வடையச் செய்கிறது**" என்று கேட்டார்.

ஸஹாய் பொருத்தமாக பதிலளித்தார், "பாபா, இதர எல்லாவற்றையும் போல், உங்கள் சோர்வு நிரந்தரமானது. ஆனால் எனது மருந்தினால் அது சீராகிவிடும்!"

பிரகாஷ்வதி ஷர்மா, டெஹ்ரா டூன் மகளிரை அறிமுகப்படுத்தி, மீண்டும் டெஹ்ரா டூனுக்கு வருமாறு பாபாவிடம் கெஞ்சினார். இதர பெண்மணிகளும் இந்தக் கோரிக்கையை ஆதரிக்கவே, பாபா, "**தைரியமாக இருங்கள், என்னை உண்மையாக நினைவில் கொள்ளுங்கள்**" என்று கூறினாரே தவிர, பதிலளிக்கவில்லை.

"**மதியத்திற்குள் நானும் ஆண்களுடனான அறிமுகம், தரிசனம் அனைத்தையும் முடித்துவிடுவேன், எனவே நாம் உணவுக்குச் செல்லலாம்**" என்று பாபா கேலி செய்தபோது, பெண்மணிகளுக்கான தரிசனம் கிட்டத்தட்ட நிறைவடைந்தது.

பூனா குழுவினர் முந்தைய நாள் இரவு பஜனை பாடினர், பாபா அவர்களிடம் வலியுறுத்தி கூறினார், "**தாமதமாக இரவில் விழித்திருந்து உங்கள் சக்தியைப் பாழாக்க வேண்டாம். நான் உங்களை எனக்கு முன்னால் பாட அழைத்தேன்.**"

தரிசனத்தின் போது, ஒரு பெண்மணியின் கொண்டை ஊசி பாபாவின் உள்ளங்கையில் குத்தி ரத்தம் கொட்டியது. அவர் மருந்தகத்திலிருந்து ஒரு பெண் மருத்துவரை வரவழைத்து, தற்காலிக சிகிச்சையைப் பெற்றுக்கொண்டார்.

பெண்மணிகளுக்கான தரிசனம் நிறைவடைந்ததும், பாபா அவர்களை சில நிமிடங்கள் வெளியே செல்லுமாறு அறிவுறுத்தினார். அவர்கள் திரும்பி வந்து, தங்கள் இருக்கைகளில் அமர்ந்த வேளையில், பாலக் பகவான், பாபாவிற்கு மாலை அணிவித்து, அவரைத் தழுவி, அவரது பாதங்களில் தலை வணங்கினார்.

"அவதார் மெஹர் பாபாவிற்கு ஜெய்!" என்ற தொடர்ச்சியான முழக்கங்களுக்கு மத்தியில் ஆண்களுக்கான தரிசனம் தொடங்கியது.

ஆண்களில் சிலர் பாபாவின் முன் நின்று அழவும், சிலர் அவரது கையை முத்தமிட்டு பிரார்த்தனை செய்யவும் செய்தனர். ஒருவர் பாபாவின் கன்னத்தில் முத்தமிடவே, பாபா, "**இதை எல்லோரும் திரும்பத் திரும்பச் செய்வதானால், எனது கன்னங்கள் தேய்ந்துவிடும்!**" என்றார்.

கயா பிரசாத் கரே, பாபாவை அணுகியதும், புது வாழ்வின் போது பெனாரஸில் அவர் ஆற்றிய சேவைகளுக்காக, அவரைப் பாராட்டினார். கரேயை சமையல்காரர் என்று தவறாக நினைத்து, சட்னி தயார் செய்யாததற்காக விஷ்ணு, அவரை எப்படிக் கடுமையாகத் திட்டினார் என்பதை பாபா நினைவு கூர்ந்தார். பாபா, கதையை எடுத்துரைத்தபோது, கரே கண்கலங்கி அழுதார்.

ஆண்களுக்கான தரிசனம் நடந்து கொண்டிருந்த வேளையில், மதிய உணவு நேரம் முடிந்து விட்டதால், பாபா, மகளிரிடம் மதிய உணவை முடித்து, திரும்புமாறு அறிவுறுத்தினார். அந்த நேரத்தில் ஆண்களுக்கான தரிசனத்தை நிறைவு செய்ய எண்ணினார். மகளிர் ஒரு மணி நேரத்திற்கும் மேலாக எடுத்துக்கொண்டனர்; ஆனால் ஆண்கள் தொடர்ந்து வந்துகொண்டிருந்தனர்; மேலும், ஒவ்வோர் ஆணும் பாபாவை சந்தித்து, தரிசனம் நிறைவுற, கிட்டத்தட்ட நான்கு மணிநேரம் ஆனது. பாபா கேட்டுக் கொண்ட பின்னரும், பல பெண்மணிகள் கூடாரத்தில் அமர்ந்திருந்தனர், அவர்களிடம் எச்சரிக்கை கலந்த தொனியில் அவர் கூறினார், "**நீங்கள் உங்கள் இல்லத்தில் சுதந்திரமாக இருப்பது போல், இங்கும் இருக்க விரும்புகிறேன், ஆனால் நான் உங்களுக்குச் சொல்வதைத் தவறாமல் செய்யுங்கள்.**"

நீண்ட மேலங்கி அணிந்திருந்த அப்துல் மஜித் கான் அருகில் வந்தபோது, பாபா அவரிடம், "**வெளியே பனி பொழிகிறதா?**" என வினவினார். அவரைத் தழுவிய பிறகு, பாபா அவரிடம், "**நான் பிரபஞ்சத்தின் இறைவன்**" என்று நினைவுபடுத்தினார்.

ரத் நகரின் துவாரகா பிரசாத் ஸ்ரீவஸ்தவா கொண்டுவந்த ஒரு பாட்டில் தண்ணீரால், பாபாவின் பாதங்களைக் கழுவி, பின்னர் அதை அந்த பாட்டிலில் சேகரித்தார். ஆதர்ஷ் கரே அவருக்கு உதவி, தனக்காகவும் சிறிது நீரை வைத்துக்கொண்டார்.

உஸ்மானாபாத்தைச் சேர்ந்த ஹரிபந்த் ஆர். ராக்கேல்கர், 'பாபா, பாபா' என்று எழுதப்பட்ட ஒரு கட்டுக் காகிதத்தை, அவருடைய தந்தை அனுப்பியதாகக் கூறி பாபாவிடம் கொடுத்தார். பாபா அந்தக் காகிதங்களைத் தன் அருகில் வைத்தார்.

பேட்டூல் (BETUL) நகரின் ஜி.கே. தர்மாதிகாரி தரிசனத்திற்குப் பிறகு, நடந்து சென்று கொண்டிருந்தார், ஆனால் பாபாவைப் பற்றி பாவ் கல்சூரி மூலமாக தெரிந்து கொண்டதாக எரச் பாபாவிடம் கூறியபோது, அவர் மீண்டும் அழைக்கப்பட்டு, மேலும் ஓர் அன்பின் அரவணைப்பை அடையப் பெற்றார்.

பாபா, சில கணங்கள் ஓய்வெடுப்பது போல் அமர்ந்திருந்தார்; இருப்பினும், அவரது விரல்கள் தொடர்ந்து நகர்ந்தன. பூனா பஜனை குழுவினர் எப்போது பாடத் தொடங்குவார்கள் என்று கேட்கவே, அவர்களில் ஒருவர்

உடனடியாகப் பாடத் தொடங்கினார். அதற்குப் பிறகு, காடேக்கரும் கலந்துகொண்டு, கண்களை மூடிய வண்ணம் பஜனையைத் தொடங்கினார். ஆனால், பாபா சிறிது நேரத்தில் அவரை நிறுத்தக் கூறியதும், பூனா குழுவினர் பாடலைத் தொடர்ந்தனர். பல நிமிடங்களுக்கு, பாபா தரிசனம் வழங்குவதை நிறுத்திவிட்டு, பாடுவதில் கவனம் செலுத்தி, '**மதுசூதன் எவ்வளவு சிறப்பாக பஜனைகளை இயற்றுகிறார்**' என்று, அவர் அருகில் அமர்ந்திருந்த கேஷவ் நிகமிடம் குறிப்பிட்டார். தாளத்திற்குத் தகுந்தாற் போல, பாபா கைகளைத் தட்டவே, அங்கிருந்த அனைவரும் அதில் கலந்து கொண்டனர். பதினைந்து நிமிடங்களுக்குப் பிறகு, பாடல்களுக்கு மத்தியில் தரிசனம் மீண்டும் தொடங்கியது.

ஸ்ரீபத் ஸஹாய் அருகில் வந்தபோது, பாபாவை தரிசனம் செய்வதற்கு முன்னர், அவரை வரவழைப்பது போல கவிதை ஒன்றை 'மலர்' என்ற தலைப்பில் வழங்கியதை, தரிசனத்திற்கு முன்னதாகக் கேட்டார். அப்போது அவர், "**நீங்கள் மருந்து கொண்டு வந்தீர்களா?**" என வினவினார்.

ஸஹாய் உடனடியாக, அவர் தயார் செய்த ஆயுர்வேத ஊக்கமருந்து பாட்டில் ஒன்றை பாபாவிடம் கொடுத்து, "இறைவன் துன்பப்படும்போது, இந்த மருந்து பரிந்துரைக்கப்படுகிறது" என்றார்.

அதற்கு பாபா, "**மருந்தே இல்லாமல், மூவுலக மக்களும் எனது உள்ளங்கையில் நடனமாடும் போது, நான் இந்த ஊக்கமருந்தில் மிகக் குறைந்த அளவை எடுத்துக் கொண்டால் என்ன நடக்கும்?**" என்று கேலி செய்தார்.

தரிசனத்திற்குப் பிறகு, பிலாஸ்பூர் (BILASPUR) நகரின் வி.பி. ஜா (V.P. JHA), பாபாவிடம் சில புதிய பளிங்கு கற்களைக் (கோலிகள்) கொடுத்தார்; பாபா, உடனடியாக மேடையில் அவர்களுடன் விளையாடத் தொடங்கினார். அப்துல் மஜித் கான், மேடையிலிருந்து பறந்து சென்ற ஒரு பளிங்கு கோலியை எடுத்து பாபாவிடம் கொண்டு வந்தபோது, அவர் அதை அவரிடமே வைத்துக்கொள்ளுமாறு கூறினார். ஆதர்ஷ் கரே மேடையிலிருந்து விழுந்த ஒரு பளிங்கு கோலியைத் திரும்பக் கொண்டு வந்தபோது, அதை எப்படி அடிப்பது என்பதை பாபா அவருக்குக் காட்டினார்.

அதைத் தொடர்ந்து பாபா, சகவாச நிகழ்ச்சிகளை எப்படி அனுபவித்தார் என்பதை விளக்கினார்:

**என்னைத் தலைவணங்கி, என்னைத் தழுவுவது நான் மட்டுமே; சிரிப்பதும், அழுவதும் நானே. மேடையில் அமர்ந்திருப்பது பாபா, பந்தலின் தரையில் குதிகால்களில் அமர்ந்திருப்பதும் பாபா. பாபா, பாபாவை சந்திக்கிறார்; பாபா, பாபாவை ஆறுதல்படுத்துகிறார். பாபாதான் ஒவ்வொருவரையும் அன்பாகத் தட்டுகிறார்; பாபா, பாபாவால் தட்டப்படுகிறார். இது எல்லாம் பாபா, பாபா, பாபா! அதுதான் என் அனுபவம்.**

தரிசனம் செய்தவர்களை மதிய உணவிற்குச் செல்லுமாறு பாபா கேட்டுக்கொண்டார், "**நிர்வாகக் குழு சொல்வதை நான் கேட்க வேண்டும்;**

**ஏற்பாடுகளைச் செய்தவர்கள் திட்டமிட்டதைச் செய்ய வேண்டியது அவசியம். எனது வழிமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம், நீங்கள் நிர்வாகத்திற்கும் உதவுவீர்கள்.**"

பாபா, சில நிமிடங்கள் பஜனை பாடுவதை நிறுத்தினார்; அவரது விரல்கள் அதி வேகத்தில் நகர்ந்து, வேலை செய்ததால், அங்கு முழு அமைதி நிலவியது. ஒரு மனிதர், அவர் முன் நின்று, கண்களை மூடிக்கொண்டு சிந்தனையில் ஆழ்ந்திருந்தார்.

மீண்டும், தரிசனமும் பஜனையும் தொடங்கியது. ஜால்பாயின் நண்பர், பூனாவைச் சேர்ந்த ஸால் பி. ஐடூன் (ZAL B. AIDOON) தரிசனத்திற்கு வந்தபோது, பாபா, "**உங்களை சந்திப்பது எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது**" என்று குறிப்பிட்டார்.

பாபா எழுந்து நின்று சத்ராவை சரிசெய்துவிட்டு மீண்டும் அமர்ந்தார். ஏழை பக்தர் ஒருவர், ஒரு நயாபைசா நாணயத்தை பாபாவிடம் தட்சிணையாகக் கொடுத்தபோது, பாபா அதை ஏற்றுக்கொண்டார்.

தரிசனத்திற்காக நின்ற வரிசையை தடுத்து, பாபா கூறினார், "**இப்போது நேரம் மணி பன்னிரெண்டு, உங்கள் உணவு உங்களுக்காகக் காத்திருப்பதாக நிர்வாகக் குழு கூறுகிறது; தரிசனம் செய்தவர்கள் உணவு உண்ணச் செல்லுங்கள்; உணவு உண்ணாதவர்களும், பசியுடன் இருப்பவர்களும் உடனே சென்று, பின்பு தரிசனத்திற்கு வாருங்கள், நான் இங்கேயே இருப்பேன்.**" பாபா, நிரஞ்சன் ஸிங்கிடம் நன்றாக உண்ணவும், உடல் நலத்தில் கவனம் செலுத்தவும், நன்றாகத் தூங்கவும் கூறினார்.

பல வருடங்களுக்குப் பிறகு, மீண்டும் பாபாவிடம் வந்த அஹமதுநகரைச் சேர்ந்த வழக்கறிஞர் ராவ் பஹதூர் என்.இ. நவ்லேயிடம் (RAO BAHADUR N.E. NAVLE), பாபா, "**உங்களை நான் பல ஆண்டுகளாகப் பார்க்கவில்லை!**" என்றார்.

பிரீத்தம் ஸிங் (PRITAM SINGH), பாபாவின் முன்னிலையில் அவருடைய மகிமையைப் பாடினார். அருகில் நின்றுகொண்டிருந்த அவரது மகன் வேராம் ஸிங்கை (WAYRAM SINGH) அறிமுகப்படுத்திய வேளையில், பாபா, பிரீத்தம் ஸிங்கின் அன்பைப் பாராட்டி, மகனைத் தழுவினார். பாபா இவ்வாறு விளக்கினார்:

**ஆதிகாலப் புருஷரான நான், உங்களைத் தழுவும்போது, படிப்படியாக வளரும் ஒன்றை உங்களுக்குள் எழுச்சியுறச் செய்கிறேன். நான் அங்கே விதைத்தது அன்பின் விதை. விதை உடைந்து, திறந்து பூ மலர்ந்து, கனி தரும் இந்த செயல்முறைகளுக்கு இடையே, நீண்ட காலம் மற்றும் அதிக இடைவெளி உள்ளது. உண்மையில் இறுதி இறை இலக்கு, தொலைவிலும் இல்லை அல்லது அருகிலும் இல்லை, கடக்க வேண்டிய தூரமும் இல்லை அல்லது கணக்கிடும் நேரமும் இல்லை. நித்தியத்தில், எல்லாமே இங்கே, இப்பொழுதே இருக்கிறது. நீங்கள் எதுவாக இருக்கிறீர்களோ, அதுவாகவே மாற வேண்டும். நீங்கள் கடவுள், எல்லையின்றி உளதாயிருப்பவர்.**

பாபாவின் அன்பர் ஒருவர், தான் வரைந்த பாபாவின் பென்சில் ஓவியத்தை, விளிம்புச் சட்டம் பொருத்தி பாபாவிடம் கொடுத்தார்.

பின்பு பாபா, பூனா பஜனை குழுவினர் பசியாக இருந்தால், உணவு உண்ணச் செல்லுமாறு கேட்டுக்கொண்டார். தரிசனத்தை நிறுத்திவிட்டு, பாபா முகத்தை சுத்தம் செய்து, "**இதுவரை தரிசனம் செய்யாதவர்கள், மதிய உணவுக்குப் பிறகு வரலாம்**" என்று கூறினார். ஆனால், அன்பர்கள் நீண்ட வரிசையில் காத்திருந்தனர், அவர்கள் முதலில் தரிசனம் செய்யாமல், ஓர் அங்குலமும் அசைய விரும்பவில்லை.

பைதூலின் மருமகன் பெஸி ஈரானி, பைதூலின் ஒன்றுவிட்ட சகோதரர் காலமானதை பாபாவிடம் தெரிவித்தார். "**அவர் என்னை நேசித்தாரா?**" என்று பாபா வினவவே, பெஸி இல்லை என்று கூற, "**அப்படியானால், கவலை ஏன்?**" என்று கேட்டார்.

மங்களானந்த் பரமஹன்ஸ் துனிவாலே (MANGALANAND PARAMHANS DHUNIWALE) என்ற ஸ்வாமி ஒருவர், சகவாச நிகழ்ச்சியில் கலந்துகொண்டார்; ஆனால் அவர் மெஹர் பாபா, பொய்யும் போலியுமான குருநாதர் என்று 'அம்பலப்படுத்தும்' நோக்கத்துடன் வந்திருந்தார். முந்தைய நாள் இரவு, வேதங்களை உரக்கக் கூறி, அருகில் தூங்கிக் கொண்டிருந்தவர்களை தொந்தரவு செய்தார். டாக்கே, அவரிடம் குரலைத் தாழ்த்தி, தூங்கிக் கொண்டிருக்கும் பிறரைக் கருத்தில் கொள்ளுமாறு கூறினார்; ஆனால், மங்களானந்த் கடுமையான தொனியில் பதிலளித்தார்; "இது எனது தினசரி சடங்கு, எனவே தயவு செய்து என்னை விட்டுவிடுங்கள். நான் ஒரு புலி, எனவே எச்சரிக்கையாக இருங்கள்."

டாக்கே சீற்றத்துடன் கூறினார், "நீங்கள் புலியாக இருந்தால், நான் வேட்டைக்காரன்! வெளியே வாருங்கள், நான் உங்களுக்குக் காட்டுகிறேன்" என்று பதிலளித்தார்.

அதைத் தொடர்ந்து, சுவாமி படுக்கைக்குச் செல்ல ஒப்புக்கொண்டார். சகவாச நிகழ்ச்சியின் போது, அவர் தரிசன பந்தலுக்கு வெளியே அலைந்து திரிந்து, உள்ளே செல்ல மறுத்தார். பாபா, அவரை உள்ளே வந்து தனக்கு முன்னால், ஒரு நாற்காலியில் அமருமாறு புக்காரிடம் கூறி அனுப்பினார். ஆச்சரியமாக, அந்த மனிதர் ஒப்புக்கொண்டார். 'புலி' (TIGER) தனது வழிகளை (STRIPES, வரிகளை) மாற்றிக்கொண்டது!

சிறிது நேரம் கழித்து, பாபா, புக்காருக்கு அறிவுறுத்தினார், "**சுவாமி பசியுடன் இருந்தால், மகிழ்ச்சியாக உணர்ந்தால், அவர் உணவு உண்ணச் செல்லலாம்.**" பாபா மகிழ்ச்சியாக இருந்ததால் அவரும் மகிழ்ச்சியாக இருந்ததாகவும், அப்போது உண்ண மனமில்லை என்றும் சுவாமி மங்களானந்த், பாபாவிடம் தெரிவித்தார்.

ஸாயப் ஆஸ்மி மதிய உணவு உண்டாரா என்று பாபா, ராம்ஜூவிடம் கேட்டார். அவர் மாலையில் உணவு உண்ண இருப்பதாக ராம்ஜூ கூறினார்.

பாபா, ராம்ஜூவின் மூன்று மகன்களிடம் '**வேலையிலிருந்து விடுப்பு எடுப்பதில் ஏதேனும் சிரமம் இருந்ததா? அவர்கள் எவ்வளவு காலம் தங்கி**

**இருப்பார்கள்?**' என்று கேட்டார். முதல் குழுவின் சகவாசம் முடியும் வரை தங்கலாம் என்றனர்.

டாக்டர் கனியின் இளைய சகோதரரான அப்துர் ரஹ்மானை அறிமுகப்படுத்திய பாபா, "**அவர் எனது பால்ய லங்கோட்டி நண்பர்** (ஆத்மார்த்த நண்பர்)." என்று குறிப்பிட்டார். பின்னர் அப்துர் ரஹ்மான் சில கஸல்களைப் பாடினார்.

பேராசிரியர் ஜகிந்தர் ஸிங் (PROF. JAGINDAR SINGH), இரண்டு புதியவர்களை பாபாவிடம் அறிமுகப்படுத்தினார். மாணிக்யால ராவைக் குறித்து பாபா, "**நீங்கள் எப்போது சற்று எடை போடுவீர்கள்?**" என்று கேட்டார்.

போ்ஃபலி பிளீடரை சந்தித்தபோது, பாபா, "**அவரது குடும்பம் ஆசீர்வதிக்கப்பட்டது, ஏனெனில், குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் எனது அன்பர்கள்**" என்றார்.

பூனா குழு, மராட்டியில் பாடுவதை நிறைவு செய்ததும், டெஹ்ரா டூன் பஜனைக் குழு, இந்தி மற்றும் பஞ்ஜாபி மொழிகளில் பாடியதைக் கேட்பதற்காக, பாபா தரிசனத்தை சிறிது நேரம் நிறுத்தினார்.

மீண்டும், ஸாயப் ஆஸ்மி சிறிது பழம் சாப்பிடுவாரா என்று ராம்ஜூவிடம் கேட்டதற்கு, அவர் மாலையில் உண்பதாக ராம்ஜூ மூலம் கூறினார்.

25ஆம் தேதி, தனது பிறந்தநாளில் ஏழைகளுக்குப் பிரசாதமாகப் பயன்படுத்த, பெண்டுவிடம் கொடுக்குமாறு கூறி, பாபா ஒரு பக்தரிடமிருந்து சிறிது பணத்தை ஏற்றுக்கொண்டார்.

தௌலத் ஸிங், பாபாவின் முன் வந்தபோது, அவர், பாபாவின் மகிமையைப் போற்றும் தனது வழக்கமான பிரார்த்தனையும், குருநானக்கின் சில ஈரடிக் கவிதைகளையும் மொழிந்தார். பாபா அவரிடம், "**உங்களைப் பார்த்ததில் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். நீங்கள் எனக்கு மிகவும் பிரியமானவர்**" என்று குறிப்பிட்டார்.

பதினான்கு வயதான ராம்கிரிபால் (RAMKRIPAL) ஹமிர்பூரிலிருந்து சகவாசத்தில் கலந்துகொள்ள வந்தார்; பாபா, கேஷவ், புக்கார் இருவரையும் அழைத்து, "**பதினேழு வயதுக்குட்பட்ட சிறுவர்கள், சகவாச நிகழ்ச்சியில் பங்கெடுக்க அனுமதிக்கப்படவில்லை. ஏன் அவரை அழைத்து வந்தீர்கள்?**" என வினவினார்.

அதற்கு இருவரும், "சிறுவன் மிகவும் பக்தியுள்ளவன், எங்களின் அறிவுரைகளை மீறி, வருவதில் விடாமுயற்சியுடன் இருந்தான், அவனை வர அனுமதிக்காவிடில், தற்கொலை செய்து கொள்வதாக அடம்பிடித்தான்! அதனால் அவனை அழைத்து வர வேண்டிய கட்டாயம்" என்று பதிலளித்தனர்.

பாபா, ராம்கிருபாலிடம் கேட்டார், "**இதுதான் என் மீது நீங்கள் கொண்டிருக்கும் அன்பா? எனக்காக சாகவும் தயாரா?**" சிறுவன் தலையசைத்தபோது, பாபா அவனை அன்புடன் அரவணைத்தார்.

பாபாவை சந்திக்க வந்த ஸ்ரீபாயின் மைத்துனரை அறிமுகப்படுத்திய கேஷவ், அவர் ஒரு வெற்றிகரமான தொழிலதிபர் என்றும், ஸ்ரீபாய் ஒரு வீண் செலவாளி எனவும் கூறினார். எனவே பாபா, ஸ்ரீபாயை அழைத்து வரக் கூறி, கேலி செய்தார்: “**உங்கள் மைத்துனர் பணம் சம்பாதிக்கும் அதே வேளையில், நீங்கள் பணத்தை வீணடிப்பதாக, கேஷவிடமிருந்து நான் கேள்விப்பட்டேன்! என்ன இது?**”

ஸ்ரீபாய் பதிலளித்தார், “பாபா, நீங்கள் மட்டுமே எங்களைத் தழைத்தோங்கவும், சீரழியவும் செய்கிறீர்கள்!”

கூட்டத்தை நோக்கி உரையாற்றிய பாபா, “**ஸ்ரீபாய் எனது பழைய அன்பர், அவரது அன்பு எப்போதும் போல வலிமையானது. தற்செயலாகப் பற்றிக்கொண்ட நெருப்பில், அவரது அலட்சியம் காரணமாக, ரூ.5,000 மதிப்புள்ள மருந்துகள் எரிந்து வீண் போனதாக புக்கார் கூறுகிறார். ஆனால் ஸ்ரீபாய் இப்போது செய்தது, ஐந்து கோடி மதிப்புக்கும் மிகையானது; அவர் ஒரு சிறிய அளவில் எனக்களித்த (மக்கர்துவாஜ்,** MAKARDHWAJ) **ஆயுர்வேத மருந்தினால் அந்த ஆபத்திலிருந்து பாதுகாக்கப்பட்டார்; அது விலைமதிப்பற்றது!**” என்றார்.

பாபாவின் தெளிவான அறிவுறுத்தல்கள் இருந்தபோதிலும், ஒரு சில அன்பர்கள் இரண்டு முறை தரிசனத்திற்காக வந்தனர், பாபா அவர்களை மன்னித்தார்.

இடைவேளையில் பாபா, இசை நிகழ்ச்சியை நிறுத்திவிட்டு, கால்களை நீட்டியபடி அமர்ந்திருந்தார். ஒரு நபர் பாபாவிடம் கொடுத்த புதிய காதி துண்டை ஏற்றுக்கொண்டு முகத்தைத் துடைத்தார்.

ஆதி துபாஷ் தரிசனத்திற்காக பாபா முன்னிலையில் வந்தபோது, பாபா அவரிடம், “**இதுவரை நீங்கள் எப்படி எனது கண்களில் தென்படவில்லை?**” என்று கேட்டு, அவர் மினூ கராஸையும் அழைத்தார்; மினூ, ஆதி இருவரும் தரிசனம் செய்து தழுவிக் கொண்டனர்.

டெல்லியைச் சேர்ந்த ஆர்.டி. பகுகுணா (R.D. BAHUGUNA), பாபாவை அணுகியபோது, பாபா, “**நான் ‘பகுரூப்பி’யாக** (BAHURUPYA, அடிக்கடி ரூபத்தை மாற்றும் ஒரு தெருக் கலைஞனைப் போல்) **இருந்தேன், ஆனால் இப்போது ‘பகுகுணா’வாக** (பல குணங்களைக் கொண்டவன்) **ஆகிவிட்டேன்**” என்று வேடிக்கையாகக் கூறினார்.

பாபா, கே.கே.ராமகிருஷ்ணனிடம், “**காலை மற்றும் மதிய உணவில் என்ன உண்டீர்கள்?**” என்று கேட்டதற்கு, அவரால் பதில் சொல்ல முடியாமல் போனதால், பூனா குழுவில் ஒருவர் பதிலளித்தார். எதுவும் உண்ணாத பாபா, “நான் அன்பால் நிறைந்தவன்” என்று கேலி செய்தார்.

தரிசன வேளையில் பாபா தனது இனிமையான சுயரூபமாகவும், வலியால் அவதிப்படாதவர் போலவும் தோற்றமளித்தார். ஆனால், அவர்

அவ்வண்ணம் தோன்றினாலும், உண்மையில், அவருக்கு ஜுரமும், தொடர் வலியும் இருந்தது.

சத்தாராவைச் சேர்ந்த டக்டுலால் எல். கஸாட் (DAGDULAL S. KASAT) என்பவர் பாபாவின் தரிசனத்திற்காக வந்தபோது 1956ஆம் ஆண்டு வாகன விபத்துக்குப் பிறகு, பாபாவின் காலில் பிளாஸ்டர் பொருத்தியவர் என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார்.

கல்கத்தாவைச் சேர்ந்த டி.எஸ். சௌபே (D.S. CHOWEY), பந்தலின் மறுகோடியில், பாலக் பகவானை தலை வணங்குவதை பாபா கவனித்தார். தரிசனத்தை நிறுத்திவிட்டு, பாலக் பகவானைக் கண்காணித்துக் கொண்டிருக்க வேண்டிய புக்காரை அழைத்தார். பாபா மீண்டும் பாலக் பகவானை எச்சரித்தார், **எவரையும் தனது காலடியில் தலைவணங்க அனுமதிக்காதீர்கள்**. சௌபே மன்னிப்பு கோரினார்; பாபா, அவரிடம், '**இதற்கு முன்னர் அவரை சந்தித்தது உண்டா?**' என்று கேட்டதற்கு, அமெரிக்காவில் பாபாவை சந்தித்ததாக சௌபே கூறினார்.

தரிசனம் மறுபடியும் தொடங்கியபோது, மறைந்த ஜால் கேரவாலாவின் முன்னாள் சக ஊழியரான ராம்ஹிர்தய திவாரி (RAMHIRDAYA TIWARI) வந்தார். பாபா அப்போது, ஜால் கேரவாலாவை நினைவு கூர்ந்தார், "**அவருக்கு நிகர் ஒருவரும் இல்லை**" என்று குறிப்பிட்டார்.

விபூதி, பாபாவை நெருங்கியதும், அவர் கூட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டார். "**அவர் எனது பழைய அன்பர்களில் ஒருவர்; மும்பை மற்றும் மஹாராஷ்டிராவின் பிற மாவட்டங்களில் எனது அன்பின் செய்தியைப் பரப்புகிறார்.**"

பண்டோபாவை அறிமுகப்படுத்தி, பாபா குறிப்பிட்டார், "**அவர் பிரேமாஷ்ரம (1927-28) நாட்களிலிருந்து என்னுடன் இருக்கிறார். அந்த நாட்களில் அவர் துணிமணிகளை துவைத்து சுத்தம் செய்யும் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்.**" அவர் பண்டோபாவிடம் அவருக்கு எத்தனை குழந்தைகள் என்று கேட்க, பண்டோபா 'ஆறு' என்று பதிலளித்தார்.

நௌரங்காவின் ஹீராலாலைப் (HIRALAL) பார்த்த பாபா, "**எனக்கு 105° ஜுரம் உள்ளது, எனவே நீங்கள் சீக்கிரம் தரிசனம் செய்துவிட்டுப் புறப்படுங்கள்**" என்று கேலி செய்தார். ஆனால் ஹீராலால் அவ்வளவு எளிதில் நகர்ந்து செல்வதாகத் தெரியவில்லை. அவர் பாபாவின் கன்னங்களை வருடி, அழத் தொடங்கியவர், அங்கிருந்து அசையவில்லை. பாபா அவரை அழைத்துச் செல்லுமாறு புக்காரைக் கேட்க, அவர் அதைச் செய்தார்.

நௌரங்காவின் பாபு ராம்பிரசாத்தை வாழ்த்தி, பாபா அவரைப் பற்றி கூறினார்: "**நான் அவருடைய அன்பைப் கண்டு பொறாமைப்படுகிறேன்; அவர் நிஜத்தில் ஒரு ரத்தினக் கல்!**"

ஹமிர்பூரைச் சேர்ந்த சந்திரபிரகாஷ், பாபாவின் கழுத்தில் அணிவதற்காக ஏழு ஜெபமாலை மணிகளை, ஏழு அன்பர்களிடமிருந்து கொண்டு வந்திருந்தார். ஏழு அன்பர்களின் பெயரைக் கூறுமாறு அவரிடம் கேட்டு, பாபா,

மணிகளை ஒவ்வொன்றாக தனது மணிக்கட்டில் வைக்க அனுமதித்தார். பின்னர் அவர் அனைத்தையும் கழற்றி திருப்பிக் கொடுத்து, சந்திரபிரகாஷிடம் ஏழு அன்பர்களின் பெயர்களை மீண்டும் மொழிந்து, ஜெபமாலைகளை ஒவ்வொன்றாக அவரது மணிக்கட்டில் அணியுமாறு கூறினார்.

தக்வான் (DHAGWAN) கிராமத்தின் விஷ்ணுவிடம் பாபா ஒரு பாடலைப் பாடுமாறு கேட்டுக்கொண்டதும், அவர் அதைச் செய்தார். அன்பின் பரவசத்தில் நடனமாடும் பெண்ணாக விஷ்ணு வேடிக்கையான நாட்டியத்தை அரங்கேற்றினார். உடலைச் சுற்றி புடவையை அணிந்த வண்ணம் முகத்தை மறைத்து வைத்திருந்தார். அங்கிருந்த அனைவரும் உற்சாகமாக விசில் அடித்து, 'வெட்கம் நிறைந்த இளம் பெண்ணை' உற்சாகப்படுத்தினர், பாபா நடனத்தைப் பெரிதும் ரசித்தார்.

ஹமிர்பூர், பந்த்வா (BANDWA) கிராமத்தைச் சேர்ந்த சேவகர்களில் ஒருவரான துளசிராமைப் பார்த்ததும், பாபாவிற்கு, இச்சுவாரா (ICHHUARA) கிராமத்தில் தரிசனம் வழங்க மாட்டு வண்டியில் பயணித்த சம்பவம் நினைவுக்கு வந்தது.

பாபுராவ் வியாஸ், பாபாவைப் புகழ்ந்து ஈரடிக் கவிதை ஒன்றை மொழிந்தார். பாபா அவரைக் கூட்டத்தில் அறிமுகப்படுத்தி, "**அவர் ஓர் ஆசிரியர், தனது மாணவர்களின் இதயங்களில் தெய்வீக அன்பை விழிப்புறச் செய்கிறார்** " என்று குறிப்பிட்டார்.

ஷஹஸ்த்ரபுத்தே என்ற தனது பழைய அன்பரை அறிமுகப்படுத்திய பாபா, "**அவர் சத்தாரா மற்றும் பூனாவில் பல உணவகங்களின் உரிமையாளர். அனைத்தையும் விட்டுவிட்டு, சகவாசத்தில் பங்கெடுப்பவர்களுக்கு உணவு தயார் செய்யும் நோக்கத்தில், தனது ஊழியர்களுடன் மெஹராபாத் வந்துள்ளார்**" என்று கூறினார்.

நானா கேரைத் தழுவிக்கொண்ட பாபா, "**அவர் நாக்பூரைச் சேர்ந்தவர். அவரைப் போல் அமைதியாகப் பணிபுரிபவர் ஒருவரும் இல்லை**" என்று கூறினார்.

நானாவிற்குப் பின்னால் நின்று கொண்டிருந்த பங்க்ராஜைக் குறித்து பாபா, "**இவர் பங்க்ராஜ், இவரும் நாக்பூரைச் சேர்ந்த ஒரு சிறந்த சேவகர். இவர்கள் இருவருக்கும் சர்தார் (தலைவர்), டாக்டர் தேஷ்முக், அதி புத்திசாலி, அன்பானவர், திறம் வாய்ந்தவர். அவர் நாளை வருகிறார்**" என்றார்.

ஆண்களின் தரிசனம் நிறைவடைந்ததும், அலோபா அருகில் வந்தார். பாபா அவரிடம், "**மெஹராபாத் அல்லது மெஹராஸாத் மண்டலியில் எவரேனும் இங்கு தரிசனத்திற்காக வந்திருக்கிறார்களா?**" என்று கடிந்துரைத்தார். இல்லை என்று தலையசைத்தார் அலோபா. "**அப்படியானால் ஏன் நீங்கள்?**" அவர் பதிலளிப்பதற்கு முன்னதாக, பாபா கூறினார், "**அலோபா, என் உண்மையான அன்பர்களில் ஒருவர், ஆனால் அவர் எனது கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய மறந்துவிடக்கூடிய அளவுக்கு அன்பு கொண்டவர்!**"



மெஹராபாத், பிப்ரவரி **1958**
எல்சா, காக்கா, எரச், டாக்கே,
கேஷவ் நிகம்
(MEHERABAD, FEBRUARY 1958 – ELCHA, KAKA, ERUCH, DHAKE, KESHAV NIGAM)



பாபாவிற்கு
உதவுபவர்கள்
அலோபா & காக்கா
(ALOBA & KAKA ASSISTING BABA)

பாபா அப்போது இவ்வாறு குறிப்பிட்டார்: "**அன்பின் நீரூற்றில் ஆழமாகப் பருகுங்கள், ஆனால் சுயநினைவை இழந்துவிடாதீர்கள். இந்த அன்பின் ஒரு துளியையேனும் நீங்கள் ருசிப்பதானால், எவ்வளவு அற்புதமான அனுபவத்தை அடையப் பெறுவீர்கள்!**"

பால் நாத்து அருகில் வந்தபோது, பாபா அவரிடம், "**இங்கு நிகழும் அனைத்து நடவடிக்கைகளையும் நீங்கள் குறிப்பு எடுத்துக் கொள்கிறீர்களா? இல்லையென்றால், நீங்கள் என்ன செய்கிறீர்கள்?**" பால் நாத்துவின் சேவையை, பெண்டு வேறு எதற்கோ பயன்படுத்தியதாக அவர் கூறினார். அப்போது பாபா, "**எல்லோரையும் அறிமுகப்படுத்துவது என்பது சாத்தியமில்லை. அனைவரும் உண்மையான, அன்பான சேவகர்கள்**" என்று சைகையால் தெரிவித்தார்.

திடீரென, முகுந்த்லால் நிகம், பாபாவின் காலடிகளில் விழுந்து, எவ்வளவுதான் வற்புறுத்தியும் எழுந்திருக்கவில்லை. பாபா, முகுந்த்லாலின் இளைய சகோதரர் டாக்டர் தேவேந்திர நிகமிடம், அவர் உயிருடன் உள்ளாரா? இல்லையா? என்பதை ஊர்ஜிதம் செய்யுமாறு கேட்டுக்கொண்டார்; மேலும் புன்னகைத்துக் கூறினார், "**அவர் உயிரைத் துறந்துவிட்டால், மிகவும் நல்லது, என்னிடம் வந்துவிடுவார்!**" இறுதியாக பாபா, முகுந்த்லால் நிகமிடம் மேடையை விட்டு வெளியேறச் சொன்னதும், அவர் எழுந்து நின்றார். அவர் அங்கிருந்து புறப்படுவதற்கு முன்னர், '**உண்மையான அன்பு என்பது வெளியளவில் சற்றும் வெளிப்படாமல், உள்ளத்தின் உள்ளே எரிவது மற்றும் பக்தியுடன் இருப்பது**' என்பதை பாபா விளக்கினார்.

நாக்பூரைச் சேர்ந்த சதாஷிவ் எல். லோக்கண்டே, பாபாவின் பாதங்களில் அத்தரை (வாசனை திரவியம்) தடவினார். பாபா அவரைப் பற்றிக் குறிப்பிடுகையில், "**அவர் மிகவும் அதிர்ஷ்டசாலி. அவருடைய குடும்பத்தினர் அனைவரும் என்னை நேசிக்கிறார்கள்**" என்றார்.

மெஹர்தாஸ், ஹமிர்பூரிலிருந்து மெஹராபாத்திற்கு 1,000 மைல்களுக்கு மேல், 40 நாட்கள் நடைபயணம் செய்தார். பாபா அவரிடம், "**உயிரைத் துறந்த குழந்தையை உங்கள் மடியில் வைத்தபோது, உயிருடன் வந்தது உண்மையா? நீங்கள் எனக்குக் கீர்த்தனைகளைப் பாடியபோது, குழந்தை உயிருடன் திரும்பி வந்ததா?**" என வினவினார்.

அதற்கு மெஹர்தாஸ், "ஆமாம், பாபா, அப்படித்தான். யார் உங்களிடம் பொய் சொல்ல முடியும்?" என்றார்.

பாபா அவருக்கு, "**எதிர்காலத்தில் இது போன்ற செயல்களைச் செய்யாதீர்கள், இறுதியில் அது பலனளிக்கப் போவதில்லை**" என்று அறிவுறுத்தினார்.

"**உங்களை, பக்தியுடன் வணங்க எவரையும் அனுமதிக்காதீர்கள். அகங்காரம், எந்த ஒரு வடிவிலும், இறுதியில் எவருக்கும் எந்த பலனையும் தராது.**"

பாபா, அலோபாவை பாரசீக மொழியில் ஈரடிக் கவிதை ஒன்றைப் பாராயணம் செய்ய வைத்தார். பாபா, ஸாயப் ஆஸ்மியை நினைவு கூர்ந்து, ராம்ஜூவிடம் அவரை நாளை சந்திப்பதாகத் தெரிவித்தார்.

சிம்லாவைச் சேர்ந்த எல்சா மிஸ்திரியைப் பற்றி பாபா கூறினார்: "**அவர் ஒரு சிறந்த நகைச்சுவையாளர் மட்டுமின்றி, என்னை சிரிக்க வைப்பதன் மூலம், என் உலகளாவிய சுமையை ஓரளவு குறைக்கிறார்.**" பாபா ஒரு நிகழ்வை விவரித்தார்: "**சிம்லாவில் உருளைக்கிழங்கு மற்றும் ஆப்பிள் பழங்கள் அபரிமிதமாக விளையும் என்று ஒருமுறை எல்சா என்னிடம் கூறினார். அவை எவ்வளவு பெரியவை என்று நான் அவரிடம் கேட்டபோது, ஒவ்வொரு உருளைக்கிழங்கின் எடையும் 20 ஸீர் (40 பவுண்டுகள்) மற்றும் ஒரு ஜோடி ஆப்பிள்கள் 10 ஸீர் என்று பதிலளித்தார். ஒரு பெட்டி நிரம்ப ஆப்பிளை அனுப்பி வைக்குமாறு சொன்னதும், யாரோ ஒருவர் மூலம் ஆப்பிள் பழங்களை எனக்கு அனுப்பி வைத்தார். பெட்டியை திறந்தபோது, அவை ஆப்பிளா அல்லது பாதாமி பழங்களா என்று சொல்வது கடினமாக இருந்தது - அந்த அளவுக்கு மிகவும் சிறியவை!**"

பாபா பின்பு கூறினார், "**நான் எல்சாவின் நகைச்சுவை துணுக்குகளை ரசித்தாலும், ஒவ்வொரு நொடியும் எனது உலகளாவிய பணி நடந்து கொண்டே இருக்கிறது.**"

ஏறக்குறைய ஏழு மணி நேரம் தொடர்ந்து அமர்ந்து, பாபா சகவாச சபையில் கூடியிருந்த அனைவருக்கும் தரிசனம் வழங்கினார். மாலை 4:00 மணிக்கு. அவர் தனது தூக்கு நாற்காலியில் அமர்ந்து, அவரது அறைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். பெண்டு, பாவ் கல்சூரி, விஷ்ணு, பாதிரி ஆகியோருடன் நிகழ்ச்சியைப் பற்றிய விஷயங்களை, கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் விவாதித்தார். மாலை 5:00 மணிக்கு, இடி முழக்கம் போன்ற கோஷங்களுக்கு மத்தியில் பாபா மெஹராஸாத்திற்குப் புறப்பட்டுச் சென்றார்.

1958 பிப்ரவரி 16 ஞாயிற்றுக்கிழமை காலை 8:00 மணிக்கு பாபா மெஹராபாத் வந்தடைந்து, நேராக தனது அறைக்குச் சென்றார்; அங்கு அவர் மண்டலி மற்றும் சகவாச நிகழ்ச்சியில் கலந்து கொண்ட சிலருடன் அரை மணி நேரம் கலந்தாய்வு கூட்டத்தை நிகழ்த்தினார். அதன் பின்னர், ஆரவாரங்களுக்கு மத்தியில், அவர் தனது தூக்கு நாற்காலியில் சந்திப்புக் கூடாரத்திற்கும், மேடைக்கும் கொண்டு செல்லப்பட்டார். பாபாவிற்கு, பாதையில் போதிய இடம் வழங்க, அன்பர்கள் அனைவரும் தங்கள் இருக்கைகளில் அமருமாறு பாதிரி கேட்டுக் கொண்டார்.

அன்றைய தினம் டாக்டர் தேஷ்முக் வந்தபோது, பாபா அவரைத் தழுவினார். தேஷ்முக்கின் மகன் பிரபோத்தின் பிறந்தநாளான அன்று, பாபா அவருக்கு ஒரு சிறப்பு அரவணைப்பை வழங்கி, தேஷ்முக், அவரது மனைவி இந்துமதி இருவரையும் தவிர, பிற குடும்பத்தினர் அனைவரும் அன்றிரவு

நாக்பூருக்குப் புறப்படுமாறும், தேஷ்முக்கின் குழந்தைகளை அவர்கள் படிப்பில் கவனமாக இருக்குமாறும் பாபா அறிவுறுத்தினார்.

அன்றைய தினம் தனது பிறந்தநாளைக் கொண்டாடிய மற்றுமொருவர் தரிசனத்திற்காக அழைக்கப்பட்டார். உணர்ச்சிவசப்பட்ட அவர், பாபாவின் பாதங்களில் மயங்கி விழவே, மேடையிலிருந்து அழைத்துச் செல்லப்பட்டார்.

டாக்டர் தேஷ்முக் தனது அண்டை வீட்டுக்காரரான டி.எஸ். தேஷ்முக் என்பவரை நாக்பூரிலிருந்து அழைத்து வந்திருந்தார்; அவரை சந்தித்த பாபா, **“இருவரும் ஒரே குடும்பப் பெயரைக் கொண்டுள்ளனர், இருவரும் மூக்குக் கண்ணாடி அணிந்துள்ளனர்”** என்று கேலி செய்தார்.

பின்னர் அவர் தனது தொடக்க உரையைத் தொடங்கினார்:

**நான் இன்று கூடாரத்தில் அரை மணி நேரம் இருப்பேன். பின்பு, மண்டபத்திற்குச் சென்று, வெவ்வேறு குழுக்களின் அன்பர்களை தனித்தனியாக சந்திப்பேன். ஒவ்வொரு குழுவுடன் ஐந்து நிமிடங்கள் மட்டுமே செலவிடுவேன். அனைத்து குழுத் தலைவர்களும் உடனிருக்க வேண்டும். மதியம், கூடாரத்தில் கவாலி நிகழ்ச்சி நடைபெறும்.**

**நாளை காலை நான் உங்களை மெஹராபாத் மேல்மலைக்கு அழைத்துச் செல்கிறேன், அங்கு எனது இறுதி ஓய்வெடுக்கும் இடத்தையும், இதர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களையும் காண்பிப்பேன், அவற்றைப் பற்றி உங்களுக்கு விளக்குவேன். பிற்பகலில் பல்வேறு மையங்களின் பணியாளர்கள் கூட்டம் நடைபெறும். நாளை மறுநாள் - நீங்கள் இன்னும் சுவாசித்துக் கொண்டிருந்தால் - நாம் மீண்டும் சந்திப்போம்.**

அன்று காலை, சமீபத்தில் வந்த பர்ஸி (BARSI) குறுநகரைச் சேர்ந்த நான்கு பக்தர்கள், பாபாவை தரிசனம் செய்து, அறிமுகத்திற்குப் பின்னர் அவரைத் தழுவ அனுமதிக்கப்பட்டனர்.

ராம்ஜூ, ஸாயப் ஆஸ்மி இருவரும் மேடைக்கு அழைக்கப்பட்டனர்.

ஒரு கட்டத்தில் எல்சா மிஸ்திரி, பாபாவிடம், “நேற்றிரவு நான் சிம்லாவிற்குத் திரும்பியதாகக் கனவு கண்டேன், இன்று காலை விழித்தபோது நான் மெஹராபாத்தில் இருப்பதைக் கண்டேன். நான் இப்போது சிம்லாவிலிருந்து மெஹராபாத்திற்குத் திரும்பியுள்ளதால், எனக்கும் பாபாவின் அரவணைப்பு வேண்டும்.” பாபா சிரித்துக்கொண்டே அவரைத் தழுவினார்.

அவர்கள் மேடைக்கு வந்ததும், கவிஞர் ஸாயப் ஆஸ்மியை பாபாவின் வலது பக்கத்தில் அமருமாறு கேட்டுக்கொண்டார். ஆஸ்மி, பாபாவின் கேபினில் தூங்கினாரா என்று ராம்ஜூவிடம் கேட்டதற்கு, அவர் வேறு அறையில் தூங்கியதாக பதிலளித்தார். அவரை அறிமுகப்படுத்தி, பாபா இவ்வாறு கூறினார்:

**இவர்தான் ஸாயப் ஆஸ்மி. லாகூரில் வாழும் பிரபல பாகிஸ்தான் கவிஞர். அவர் என்னை இதுவரை சந்தித்ததில்லை, மெஹராபாத் வருவது இதுவே முதல் முறை. ஆனாலும், அவர் உருது மொழியில் ‘ஸரோட்-இ-ஜாவிதான்’ என்ற புத்தகத்தை எழுதியுள்ளார்; அது எனக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. புத்தகத்தில், அவர் என்னைப் பற்றி தெரிந்த**

**அளவுக்கு எனது வாழ்க்கை வரலாற்றுக்காக சுமார் 100 பக்கங்களை அர்ப்பணித்து, என்னைப் பற்றிய கவிதைகள் இயற்றியுள்ளார். அவர் என்னை முஸ்லீம் உலகிற்கு ஸாஹேப்-இ-ஸமான் (மெஸையா) என்று அறிமுகப்படுத்தினார். மனிதன் கடவுளாகப் பிறவி எடுப்பதை மக்கள் நம்பாத ஒரு நாட்டில் (பாகிஸ்தான்), இதுவரை என்னைப் பார்க்காத ஒரு முஸ்லிமிடமிருந்து, இவை அனைத்தும் வந்துள்ளது. அவர் என் மீதுள்ள ஆழ்ந்த அன்பிலிருந்து, இந்த தைரியமான நடவடிக்கையை எடுத்துள்ளார் என்பது எனக்குத் தெரியும், அந்த வகையான தைரியமும், அன்பும் என்னைப் பெரிதும் மகிழ்விக்கிறது.**

எரச், பாபாவின் கை சைகைகளை ஆங்கிலத்தில் விளக்க, கேஷவ் நிகம் அவற்றை ஹிந்தியில் மொழிபெயர்த்துக் கொண்டிருந்தார். தவறுதலாக, கேஷவ், ஸாயப் ஆஸ்மியை 'ஸாஹேப்-இ-ஸமான் ஆஸ்மி' என்று கூட்டத்திற்கு அறிமுகப்படுத்தி, சிரிப்பலையை உருவாக்கினார்.

பாபா அப்போது அறிவித்தார், **"ஸாயப் ஆஸ்மி, 'ஸாஹேப்-இ-ஸமான்' அல்ல, ஆனால் கேஷவ் தவறாகக் கூறிவிட்டார். ஒரு நாள், அவரது எதிர்கால பிறவிகளில், ஆஸ்மி, (குதுப்) ஸாஹேப்-இ-ஸமான் ஆகலாம்!"** இவ்வாறு தெரிவித்ததும் 'அவதார் மெஹர் பாபாவிற்கு ஜெய்!' என்ற உரத்த ஆரவாரம் எழுந்து, பந்தல் முழுவதும் ஒலித்தது.

கேஷவ் தனது தவறுக்காக மன்னிப்புக் கோரி, மெஹர் பாபா ஒருவர் மட்டுமே 'ஸாஹேப்-இ-ஸமான்' என்று கூறினார்.

ஸாயப் ஆஸ்மி, பாபாவின் பாதங்களில் தலைவணங்கினார், பாபா அவரை அன்புடன் தழுவிய வேளையில், மீண்டும் பலத்த ஆரவாரம் எழுந்தது.

முதல்வர் நிரஞ்சன் ஸிங் இப்போது மேடைக்கு அழைக்கப்பட்டார், மேலும் அவர் பாபாவின் அரவணைப்பைப் பெற்றார். நிரஞ்சன் ஸிங்கின் மனைவி பாபாவின் வலது பக்கத்தில் அமர்ந்து அமைதியாக அழுது கொண்டிருந்தார்.

பாபா ஒரு சொற்பொழிவைத் தொடங்கினார்:

**ஒருவர் தன்னை ஒரு துறவி என அறிவித்து, உண்மையான அதிகாரம் இல்லாதபோதும், மக்கள் அவரைத் தலைவணங்குவதற்கும், அவருக்கு பக்தியுடன் மரியாதை செலுத்துவதற்கும் அனுமதிப்பது, ஒருவரின் அகந்தைக்கு ஆழ்ந்த மகிழ்ச்சியுடன் ஊட்டமளிப்பதாகும். அவ்வாறு ஊட்டமளிக்கும் வேளையில், நன்னிலை உணர்வும் அத்துடன் வருகிறது.**

**ஓபியம்** (உண்பது அல்லது புகைபிடிப்பது) **பழக்கத்திற்கு அடிமையான ஒருவர், தற்காலிக போதையில் இருந்தாலும், அதேபோன்ற இன்னிலை உணர்வை அடையப் பெறுகிறார். சிறிது நேரத்திற்குப் பின்னர், ஓபியத்திற்கு அடிமையானவர் கடுமையான மலச்சிக்கல், பசியின்மை, தலைவலி, மந்தம், தூக்கமின்மை போன்ற விளைவுகளை உணரத் தொடங்குகிறார். அவர் ஓபியத்திற்கு அடிமையாகாமல் இருந்திருந்தால், நன்றாக இருந்திருக்கும்**

என்பதை அவர் உணரத் தொடங்குகிறார். ஆனால், துரதிர்ஷ்டவசமாக, அவர் பழக்கத்தை விட்டுவிட முடியாத சூழ்நிலை உருவாகிறது. அவர் அதன் அடிமையாகிவிட்டார். அவர் இதை மிகவும் தாமதமாக உணர்ந்து, ஆழ்ந்த போதையில் மூழ்கிவிடுவதால், இன்னிலை உணர்வின் படிப்படியான இழப்புடன், வேகத்தைத் தக்கவைக்க அதிக அளவு ஓபியத்தை எடுத்துக்கொள்ள ஆசைப்படுகிறார்.

அதேபோல், உண்மையான அதிகாரம் இல்லாதபோதும், தன்னை வணங்குவதற்கு மக்களை அனுமதிப்பதன் மூலம், இன்பத் தோய்வில் ஆழ்ந்திருப்பவர், பிற்காலத்தில் மனசாட்சியின் உறுத்தலை உணர்கிறார். இந்த உணர்வின் மூலம், தனக்கு அதிகாரம் இல்லை என்பதை அவர் அறிந்தாலும், இந்த வழியில் தனது அகங்காரத்தை ஊக்குவிக்கும் நடைமுறை செயலுக்கு அவர் பழக்கமாகிவிட்டார்; அவரால் அதை நிறுத்த முடியாத நிலைக்கு ஆளாகி, அவர் அதில் தொடர்ந்து ஈடுபடுகிறார்; சிறிது காலத்திற்குப் பிறகு, மனசாட்சியின் குமுறலுக்கு செவிசாய்க்க முடியாமல் மரத்துப் போகிறார்.

பல்லாண்டுகால போதைக்கு அடிமையான பின்னர் ஒரு நாள், ஓபியம் போதைக்கு அடிமையானவர் அசுத்தமான சாக்கடை ஒன்றில் மயங்கிக் கிடக்கிறார். அதிகப்படியான ஓபியத்தை உட்கொள்வது, தன் மீது முழுக் கட்டுப்பாட்டை இழந்த போதைக்கு அடிமையாகும் சோகத்தை விளைவிக்கிறது. வழிப்போக்கர் கேலி செய்கிறார், ஏளனம் செய்கிறார், அவரை ஓர் ஓபியம் அடிமையாகச் சுட்டிக்காட்டுகிறார்.

அதே போல, துறவியாகப் பாசாங்கு செய்யும் ஒருவர், உண்மையில் துறவியாக இல்லாத பட்சத்தில், பல்லாண்டுகளாக, பிறர், அளவுக்கு அதிகமாக மரியாதை செலுத்தி தலைவணங்குவதற்கு அடிமையாகி, தகுதியற்ற முறையில் நடந்து கொள்ளத் தொடங்குகிறார்.

அவரைப் பொறுத்தவரையில், ஓபியத்திற்கு அடிமையாகும் ஒருவரைப் போலல்லாமல், அவரது தகுதியற்ற நடத்தை, அவரைப் பின்பற்றுபவர்களால் 'பரிபூரணமானவர்' என்று கருதத் தூண்டுகிறது. அவர் பிறரை வன்சொற்களால் வசைபாடும் போது, அவருடைய வார்த்தைகள் ஆசீர்வாதங்களாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றன! அவர் ஒருவரை அறைந்தால் அது அவரது அருளின் வெளிப்பாடாக எடுத்துக்கொள்ளப்படுகிறது! அவர் எதிர் பாலினத்தவர்களுடன் காதற்செயலில் ஈடுபடும்போது, அது தூய அன்பாகக் கருதப்படுகிறது!

சுருக்கமாகச் சொன்னால், அவர் எதைச் செய்தாலும், அனைத்தும், ஒரு துறவியாகப் பாசாங்கு செய்யும் மனிதரைப் பின்பற்றுபவர்களால், மரியாதை மற்றும் அன்பின் உணர்வோடு ஏற்றுக்கொள்ளப்படுகிறது. எவ்வளவுக்கு அதிகமாக அவரது கட்டுக்கடங்காத நடத்தை உள்ளதோ, அந்த அளவுக்கு அவரைப் பின்பற்றுபவர்களின் அபிமானம் அதிகரிக்கும். மேலும் அதிக அபிமானம், அந்த மனிதனின் அகங்காரத்திற்கு மிகப்பெரிய

ஊட்டச்சத்தாக மாறுகிறது. இறுதியில், அவர் போற்றி, புகழும் உயர் பீடத்திலிருந்து வீழ்கிறார்; ஏனெனில், உண்மையான துறவியாக இல்லாததால், அபிமானமும் மரியாதையும், அகந்தையால் ஜீரணிக்க முடியாத அளவுக்கு நிரூபிக்கப்படுகிறது! அவரது வீழ்ச்சியால் இந்த ஓபியத்திற்கு அடிமையான துறவி, கேலி செய்யப்படுகிறார். ஒரு காலத்தில் அவரைப் 'பின்பற்றியவர்கள்' என்று தங்களைத் தாங்களே அழைத்துக் கொண்டவர்கள், இப்போது அவரை ஏளனம் செய்து, ஏமாற்றுக்காரன் என்கிறார்கள்.

ஓபியத்திற்கு அடிமையான ஒருவரின் தனிப்பட்ட தோழர்கள், அதன் விளைவுகளைப் புகழ்ந்து பேசி, அப்பாவி மக்களைத் தம் பக்கம் ஈர்ப்பதைப் போலவே, ஒரு துறவியாகப் பாசாங்கு செய்பவரின் தோழர்கள், பிறரைக் கவரும் வகையில், அவரையும் அவரது 'அற்புதங்களையும்' போற்றிப் புகழ்ந்து, அவரைப் பின்பற்றுபவர்களை தமது ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவருகிறார்கள். இத்தகைய அற்புதங்கள், வெறுமனே தற்செயல் நிகழ்வுகளாக இருக்கலாம் அல்லது அத்தகைய 'ஓபியம்' துறவியின் மீது அவர்கள் வைத்த அதீத நம்பிக்கையின் விளைவாகவும் இருக்கலாம்.

எந்த அதிகாரமும் இல்லாத ஒருவர், தன்னைத் தலைவணங்குவதற்கு மக்களை அனுமதிப்பதன் மூலம், 'தோல்வி நிச்சயம்' எனும் விளையாட்டை விளையாடுகிறார், அதே வேளையில், அவருக்கு அடிபணிந்தவர்கள் நன்மை அடைகிறார்கள். இன்னும் பல பிறவிகளில் விரயமாகும் மனப்படிவங்களை அவர் தன் மீது எடுத்துக்கொள்வதால், அவருடைய கால்களில் அடிபணிந்து வணங்குபவர்களின் மனப்படிவங்கள் அவரது தோல்விக்குக் காரணமாகத் திகழ்கிறது.

அனைவரும் கருத்தில் கொள்ள வேண்டிய விஷயம் இதுதான்: ஒரு பொய்யும், போலியுமான துறவியை, தோல்வியடையச் செய்வதன் மூலம், ஆயிரக்கணக்கானோர் பயனடைய முடியும் என்றால், இந்த நபர் இவ்வண்ணம் தொடர அனுமதிக்கப்பட வேண்டுமா? இத்தகைய நபர் ஏற்கனவே ஒரு பரிபூரண குருநாதரின் தொடர்பில் இருந்து, அவரை நேசிப்பதானால், குருநாதர் உடனடியாக இதற்கு முற்றுப்புள்ளி வைத்து, அந்த மனிதரின் குறைபாடுகளை சீர்செய்து, அத்தகைய அங்கீகரிக்கப்படாத நடத்தை பற்றி, அவரைப் பின்பற்றுபவர்களை எச்சரிக்கிறார். எவ்வாறாயினும், அதுபோன்ற நபர், ஏற்கனவே ஒரு பரிபூரண குருநாதரின் தொடர்பில் இல்லை என்றால், குருநாதர் ஒருபோதும் தலையிட மாட்டார், ஏனெனில் இறுதியில் இந்த நபரும் சில நன்மைகளை அடையப் பெறுகிறார். இது அகங்காரத்தின் நாடகம் என்று குருநாதருக்குத் தெரியும். இப்படி ஏமாற்றப்பட்ட ஒருவருக்கு இறுதியில் எந்த நன்மையும் ஏற்படக் காரணம், அவர் தனது சுய தோல்வியை விலையாகக் கொடுத்து, ஆயிரக்கணக்கானோரின் மனப்படிவங்களை குவிக்கும் ஒரு குப்பைத் தொட்டியாக நிரூபிக்கப்படுகிறார்.

பிற்காலப் பிறவியில், அவரது கடந்தகால நடத்தை, தனக்குத் தெரியாமலேயே தன் மீது ஏற்றுக்கொண்ட மனப்படிவங்களின் இந்த சுமையால், அந்த நபரை மிகவும் துன்புறுத்துகிறது என்பதில் சந்தேகமில்லை. ஆனால், அவருடைய துன்பத்தின் தீவிரத்துடன், இந்த மனப்படிங்கள் அழிக்கப்படும் வேகம்தான் அவரை மீட்கும் காரணியாக அமைகிறது. அதாவது, துன்பத்தின் தீவிரத்திற்கு ஏற்ப அவை அழிக்கப்படுகின்றன. அந்த மனப்படிவங்கள் அழிவதோடு, அவருடைய சொந்த மனப்படிவங்களும் விரைவாக விரயமாக்கப்படுகின்றன.

அங்கீகரிக்கப்படாத ஒரு நபர், தன்னை ஒரு துறவியாக பாவித்து, ஆயிரக்கணக்கான மக்களுக்கு நன்மையை நிரூபிப்பது போல், அவர் பலருக்கு தீங்கு விளைவிப்பதாகவும் நிரூபிக்கிறார். இவை அனைத்தும் மாயையில் அரங்கேற்றப்படும் நாடகம்!

ஓபியத்திற்கு அடிமையான ஒருவர், வேறொருவருக்கு சிறிய அளவிலான ஓபியத்தை வழங்குவதில் மகிழ்ச்சியடைவது போலவும், அதே வேறொருவர், அதன் சுவையை உணர்ந்ததும், மற்றுமொரு சிறிய அளவிலான ஓப்பியத்தை அவரது நண்பர் ஒருவருக்கு வழங்குவதன் வழியாகவும், அவர்கள் ஓபியம் உண்பவர்களின் வட்டத்தை உருவாக்குகின்றனர். இவ்வண்ணம், இப்போதைய சொற்பொழிவில் ‘ஓபியத்திற்கு அடிமையான’ துறவிக்கு நெருக்கமான இரண்டு அல்லது மூன்று நபர்கள், இத்தகைய, ஒரு பெண்ணுக்கு குழந்தை பாக்கியம் கிடைத்ததாகவும், மற்றொருவர் அவளுடைய ஆசை நிறைவேறியதாகவும், அந்தத் ‘துறவி’ இதுபோன்ற பல அற்புதங்களை நிகழ்த்தியதாகவும் செய்திகளை பரப்பத் தொடங்குகிறார்கள். இவ்வாறு, ஓபியத்திற்கு அடிமையான துறவியைச் சுற்றி சுயநலக் கும்பல் ஒன்று உருவாக்கப்படுகிறது.

இந்த இன்பகரமான ‘சித்திரம்’ நீண்ட காலம் நீடிக்காது, ஏனெனில் சில ஆண்டுகளுக்குப் பின்னர், அவர்களில் குறைந்தபட்சம் ஒரு நபரேனும், தனது குருநாதர் பொய்யும், போலியுமானவர் மற்றும் இறை-உணர்வை எட்டாதவர் என்பதை ஒரு நாள் கண்டுகொள்வார். அவரது உறுதியான நம்பிக்கையில் ஏற்பட்ட இத்தகைய பெரும் பின்னடைவின் தாக்கம், மிகவும் வலிமையானது; அவர் தனது நம்பிக்கையிலும் பக்தியிலும் தவறாகத் ‘துறவி’யை தலைவணங்கியதன் மூலம் விரயமான அவரது அனைத்து மனப்படிவங்களும், திடீரென அவர் மீது தன்னிச்சையாகத் திரும்பி வந்து, மீண்டும் அவரை சுமக்கச் செய்கின்றன. இதனால், ஓபியத்திற்கு அடிமையான துறவியின் மீது நம்பிக்கை கொண்டிருந்தவர், பெரும் துன்பத்திற்கு ஆளாகிறார்.

இந்தச் சித்திரத்தை இன்னொரு கோணத்தில் பார்க்கலாம்: நான் ஓபியத்திற்கு அடிமையான துறவி என்று வைத்துக்கொள்வோம், நீங்கள் என்னை நேசிக்கிறீர்கள், என்னை பரிபூரண குருநாதர் என்று நம்பி

மதிக்கிறீர்கள். உங்கள் அன்பு மிகவும் ஆழமானது, உங்கள் நம்பிக்கை மிகவும் பெரியது, நீங்கள் உண்மையில் ஆன்மீகப் பாதையில் முன்னேறுகிறீர்கள், உண்மையில் ஆன்மீகப் பாதையின் அனுபவங்களைப் அடையப்பெறத் தொடங்குகிறீர்கள். இந்த சந்தர்ப்பத்தில், நீங்கள் ஓப்பியத்திற்கு அடிமையான, இந்தத் துறவியின் கைகளால் நிச்சயமாக பயனடைவீர்கள். அதே வேளையில், முந்தைய எடுத்துக்காட்டில், ஓபியத்திற்கு அடிமையான துறவி, பெரும் தீங்கு விளைவித்துள்ளார். இத்தகைய பொய்யும் போலியுமான துறவிகள் மூலம் தீமையும், நன்மையும், முன்னும் பின்னுமாக மறுபடியும் ஒன்றிணைகின்றன.

இந்தியாவில் ஆன்மீக அங்கீகாரம் இல்லாதவர்கள், பிறர் தங்களுக்குத் தலைவணங்க அனுமதிப்பதை நாம் காண்கிறோம். என்னைப் பின்பற்றியவர்களில் ஒருவரான விபூதி கூட, பல வருடங்கள் என்னுடன் தொடர்பில் இருந்த பின்னரும், 30 ஆண்டுகளுக்கு முன்னர், என்னை விட்டுப் பிரிந்து, நாசிக்கில் ‘ஆசிரமம்’ ஒன்றை நிறுவினார். நாசிக், ஓர் ஆன்மீக யாத்திரை ஸ்தலமாக நீங்கள் பார்த்திருப்பீர்கள் அல்லது கேள்விப்பட்டிருப்பீர்கள். அவர் மக்களிடம் ‘மெஹர் பாபா என்னை அவரது பொறுப்பாளராக நியமித்துள்ளார்’ என்று கூறத் தொடங்கியதும், மக்கள் அவருக்கு மிகுந்த மரியாதையும், வணக்கமும் செலுத்த முன்வந்தனர்.

இந்தச் செய்தி எனது செவிகளுக்கு எட்டியது, இந்தப் போலி காட்சியையும் முட்டாள்தனத்தையும் நிறுத்திவிட்டு, என்னிடம் திரும்பி வருமாறு கூறி ஒருவரை அனுப்பினேன். அவர் கேட்டபாடில்லை. அவரால் உருவாக்கப்பட்ட அந்த சூழலில் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தார்.

மூன்று ஆண்டுகள் கடந்தன, அவரைப் பின்பற்றுபவர்களின் ஒரு பெரிய கூட்டத்தை உருவாக்கினார், அவர்களில் அழகான பெண்மணி ஒருவரும் இருந்தார். அவர்கள் இருவருக்குமிடையே முறையான (சட்டப்பூர்வ) திருமணம் நடக்கவில்லை எனினும், அந்தப் பெண்மணி கர்ப்பவதியானார். இதைக் காவல்துறையினர் கேள்விப்பட்டதும், அந்த நபர் அச்சத்தில் நாசிக்கை விட்டு என்னிடம் ஓடி வந்தார். மூன்று வருடத்திற்கு முன்பு, நான் அழைத்தபோது வராததை நினைவூட்டினேன். இப்போது, அவர் திரும்பிச் சென்று காவல்துறையினரிடம் சரணடைய வேண்டும், அல்லது என்னுடன் தங்கியிருந்து தொழுநோயால் அவதிப்பட வேண்டும்.

எந்தப் புத்தகத்திலும் இதைப் பற்றி குறிப்பிடப்படவில்லை, ஆனால் சாஞ்சியின் நாட்குறிப்பில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அவர் என்னுடன் தங்கியிருந்த வேளையில், தொழுநோயால் தாக்கப்பட்டு எந்நேரமும் வருந்தினார். நான் அவரை மன்னித்து, வெளியே சென்று உணவுக்காக யாசிக்கவும், கைகளில் பணம் எதுவும் வைத்துக்கொள்ளாமல் இருக்கவும், பெண்களைத் தொடக்கூடாது என்றும் அறிவுறுத்தி, ஆங்காங்கே அலைந்து திரியுமாறு அனுப்பி வைத்தேன்; அவர் ஓரிடத்தில் தங்காமல், ஒரு வருடத்திற்குப் பிறகு திரும்பி வருமாறு

**அறிவுறுத்தினேன்; ஆனால் அவர் இரண்டு வருடங்கள் கடந்து வந்தார். வந்தவர் நோயிலிருந்து குணமடைந்தார். இப்போது அவர் என்னை முழுமையாக நேசிக்கிறார், என்னைப் பற்றி எல்லோரிடமும் சொல்ல விரும்புகிறார்.**

**ஆனால் இதெல்லாம் மாயையின் கைவண்ணம்; அனைத்தும் எனது நாடகம். நான் உண்மைப்பொருளாக உளதாயிருப்பதை எவராலும் புரிந்து கொள்ள முடியாது. நான் எல்லோரிலும் இருக்கிறேன், எல்லாவற்றையும் செய்கிறேன்; அதே நேரத்தில், நான் எதுவும் செய்வதுமில்லை.**

**தைரியமாகவும், மகிழ்ச்சியாகவும் இருங்கள். நானும் நீங்களும் ஒன்றுதான்; நித்தியமாக எனக்குச் சொந்தமான எல்லையில்லா உண்மைப்பொருள், ஒரு நாள் ஒவ்வொரு நபருக்கும் சொந்தமாகும்.**

ஒலிப்பெருக்கியில் டாக்டர் தேஷ்முக் கூட்டத்தினரிடம் அறிவித்தார், "இன்று மஹா சிவராத்திரி (சிவபெருமானை வழிபடும் இந்து பண்டிகை). பாபா, ஷங்கரர் (சிவன்) மனித உருவில் வந்தவர்; நாம் அனைவரும் அறியாமையின் இருளில் தத்தளிக்கும் அவருடைய குழந்தைகள். அவர் நம்மை அதிலிருந்து விடுவிப்பார். அதனால், 'மெஹர் ஷங்கர்ஜிக்கு ஜெய்' என்று ஒருமித்த குரலில் மொழியுங்கள்; முழுப் பந்தலும் அந்த அழைப்பில் எதிரொலித்தது.

அதைத் தொடர்ந்து, பூனா பஜனைக் குழுவினரின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது, டெஹ்ரா டூன் பெண்மணிகளும் பாபாவின் பல்வேறு கலை நிகழ்ச்சிகளை நடத்தினர். காலை 10:30 மணியளவில், மதுசூதனன் மற்றும் பூனா குழுவினர் பாபாவின் ஹிந்தி ஆரத்தியை பாடினர், பாபாவை அவரது தூக்கு நாற்காலியில் அமர வைத்து, அறைக்கு அழைத்துச் சென்றனர். நான்கு பேர் பாபாவின் நாற்காலியைத் தூக்க வேண்டிய தருணத்தில், வாய்ப்பு கிடைத்தவர்கள் தங்களை அதிர்ஷ்டசாலி என்று கருதினர்.

கீழ் மெஹராபாத் மண்டபத்தில் காலை 11:00 மணிக்கு கூட்டம் தொடங்கியது. முதலில் பூனா, பர்ஸி மற்றும் ஷோலாபூர் அன்பர்கள் அழைக்கப்பட்டபோது, பாபா இவ்வாறு குறிப்பிட்டார்:

**பூனா குழுவினர் அதிர்ஷ்டசாலிகள். எனது தரிசனம் மற்றும் சகவாசத்தை மீண்டும் ஒரு முறை அடையப் பெறும் வாய்ப்பு. இந்த அன்பர்கள், இரண்டு காரணங்களுக்காக அதிர்ஷ்டசாலிகள்: முதலாவதாக, பூனா எனது பிறந்த இடம்; இரண்டாவதாக, நான் அங்குச் செல்லும் போதெல்லாம் என்னை சந்திக்கும் வாய்ப்பு அவர்களுக்கு உள்ளது. கடந்த முறை,** (1957 டிசம்பர் மாதத்தில்) **நான் பூனாவில் இருந்தபோது, எனது சகவாசத்தின் பலன் அவர்களுக்குக் கிடைத்தது. பூனா பஜனை மண்டலி குழுவினர், இரண்டு குழுக்களும் தங்கியிருக்கும் வேளையில், இரண்டு வாரங்களுக்கு சகவாசத்தில் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளனர். பூனா குழுவின் உறுப்பினர்கள் என்னை மேலும் மேலும் நேசிக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.**

விமானப்படை அதிகாரி மனோகர் ஸாக்கரேயிடம், பாபா, "**நீங்களும் மோனாவும்** (அவரது மனைவி) **எவ்வளவு அதிர்ஷ்டசாலிகள் என்பது பூனா பஜனைக் குழுவினருக்குத் தெரியாது**" என்று கருத்துத் தெரிவித்தார்.

ராமகிருஷ்ணன், காடேக்கர், ஷிண்டே, காம்ப்ளே ஆகியோரிடம் பாபா, அடுத்த நாள் கூட்டத்திற்காக, நேர்மையான சேவகர்களைத் தேர்ந்தெடுக்கும்படி கேட்டுக் கொண்டார். '**சகவாசத்தின் போது, நேர்காணல் எதுவும் இருக்காது, எனவே, எவரும் அதை எதிர்பார்க்க வேண்டாம்**' என்று குறிப்பிடப்பட்டுள்ள மிக சமீபத்திய வாழ்க்கை சுற்றறிக்கை அனைத்தையும் அவர் நினைவூட்டினார். இப்போது பாபா, "**எனக்கு 105 டிகிரி ஜுரம் மற்றும் காலில் வலி உள்ளது. காக்கா எனது மருத்துவர்!**" என்று கூறி, அவர் காக்கா பாரியாவிடம் நாடித்துடிப்பை உணர, அவரது மணிக்கட்டை கொடுத்தார். பாபா அதைச் சுட்டிக்காட்டியதால், காக்காவும் அவரது உடல் வெப்பநிலை 105 டிகிரி என்பதை உறுதிப்படுத்தினார்.

ஒரு கட்டத்தில், பாபா உண்மையான மருத்துவரான நாகுவை மேடைக்கு அழைத்தார். பாபா அவரது மணிக்கட்டை நீட்டி, நாடித்துடிப்பைச் சரிபார்க்கக் கூறினார். நாகு, அவரது மணிக்கட்டைப் பிடித்து சோதனை செய்துகொண்டிருந்தபோது, பாபா சிரித்துக் கொண்டே கூறினார், "**நீங்கள் ஒரு சிறந்த, புகழ்வாய்ந்த மருத்துவராக இருப்பீர்கள்.**"

பூனா குழுவினர் அங்கிருந்து சென்றதும், நாக்பூர் குழுவினர் வந்தனர். பலர் வந்திணைய தாமதமானது. அனைவரும் ஒன்றுதிரண்டதும், பாபா அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட ஐந்து நிமிடங்கள் முடிந்துவிட்டதாகவும், நானா கேர், பங்க்ராஜ், தேஷ்முக் போன்ற சேவகர்கள் வரவில்லை என்றும் கூறினார். தேஷ்முக், பாபா முன்னால் தோன்றியபோது, "**ஐந்து நிமிடங்களுக்கு பதிலாக, பதினைந்து நிமிடங்கள் கடந்துவிட்டன. ஏன் வருவதற்கு இவ்வளவு நேரம் எடுத்தீர்கள்? இதர விஷயங்களை கவனிக்க இன்னும் பதினைந்து நாட்கள் உள்ளது**" என்று பாபா குறிப்பிட்டார். அடுத்த நாள் கூட்டத்திற்கு நேர்மையான சேவகர்களைத் தேர்ந்தெடுக்க நாக்பூர் குழுவிடமும் கூறப்பட்டது; மேலும், அந்தப் பட்டியலைத் தயார் செய்யும் கடமை டாக்டர் தேஷ்முக், நானா கேர், பங்க்ராஜ் ஆகியோருக்கு வழங்கப்பட்டது.

பாபா நாக்பூருக்கு விஜயம் செய்யுமாறு டாக்டர் தேஷ்முக் அவரிடம் கெஞ்சினார். சீற்றமடைந்த பாபா, "**நாக்பூர் இன்னும் இருப்பதானால், 700 ஆண்டுகளுக்குப் பிறகு நான் விஜயம் செய்வேன்**" என்று பதிலளித்து, மேலும் கூறினார், "**எழுநூறு ஆண்டுகள் என்பது அவ்வளவு நீண்ட காலம் அல்ல.**"

பாபா இந்தக் குழுவிற்கு, சமீபத்திய வாழ்க்கை சுற்றறிக்கையை நினைவுபடுத்தி கூறினார்: "**ஆனால் நான் எந்த வகையிலும் கட்டுப்படுத்தப்படவில்லை, மேலும் நான் விரும்பும் எவரையும் அழைத்து, அவரை சந்திக்கலாம்**" என்று தெரிவித்தார்.

டெஹ்ரா டூன் குழுவில், சில குடும்பங்களில் ஒரு சில உறுப்பினர்கள், பாபாவை நினைத்து வழிபடுவது குறித்து, கருத்து வேறுபாடு எழுந்தது.

‘**பாபாவிற்கு எதிராக இருக்கும், நெருங்கிய அன்பான உறவினர்களின் உணர்வுகளைப் புண்படுத்த வேண்டாம்**’ என்று சம்பந்தப்பட்ட அனைவருக்கும் அறிவுறுத்தியதன் மூலம், பாபா, அவருக்கே உகந்த சிறந்த முறையில் அனைத்தையும் தீர்த்துவைத்தார். ‘**இதுபோன்ற சமயங்களில், பாபாவின் புகைப்படங்களை அவர்கள் வீட்டிலிருந்து அகற்றவும், பாபா கூட்டங்களில் கலந்துகொள்ளவோ அல்லது அவரைப் போற்றிப் புகழவோ கூடாது, மேலும் அவரது பெயரை பிறர் கேட்கும்படியாக மொழிவதை நிறுத்துவதையும் விரும்புவதாக**’ பாபா கூறினார். ‘**குடும்ப உறுப்பினர்களிடையே நல்லிணக்கத்தைப் பேண வேண்டியதன் அவசியத்தை**’ பாபா தம் அன்பர்களுக்கு உணர்த்தினார், ‘**மேலும் அவரைத் தத்தமது இதயங்களில் நிலைநிறுத்தி, தொடர்ந்து நினைவுகூரும்படியும், அமைதியாக மேலும் மேலும் தம்மை நேசிக்கும்படியும்**’ அவர்களிடம் வலியுறுத்தினார். “**அதன் மூலம், குடும்பத்தில் அதிருப்தி மற்றும் கருத்து வேறுபாடுகளின் அனைத்து வழிகளும், வாசல்களும் மூடப்படும்; மேலும் உணர்ச்சியைப் புண்படுத்தும் விதத்தில் தவறிழைக்க, எந்தக் காரணமும் இராது**” என்று அவர் கூறி முடித்தார்.

பாபா, மீண்டும் காக்காவிடம் தனது நாடித்துடிப்பை உணரும்படி கேட்டுக்கொண்டார். காக்கா அவ்வாறே செய்து ஜூரம் 105° என்றார். அதை 106°ஆக ஆக்குமாறு பாபா அவருக்கு அறிவுறுத்தினார். காக்கா, அவரது ‘**வெப்பநிலை மருத்துவர்** (TEMPERATURE DOCTOR)’ என்று பாபா நகைச்சுவையாக விளக்கி, அவர் தனது நாடித்துடிப்பை உணர்ந்த பின்பு, பாபாவின் விருப்பத்தின்படி வெப்பநிலை என்ன என்பதை அறிவித்தார்!

டெஹ்ரா டூன் மற்றும் இதர குழுக்களிடமிருந்து, பாபா அவர்களின் நகரங்களுக்கு விஜயம் செய்யுமாறு தொடர்ந்து கோரிக்கைகள் வந்த வண்ணம் இருந்தன. பாபா அவர்களிடம், “**நான் இப்போது டெஹ்ரா டூன் அல்லது வேறு எந்த இடத்திற்கும் செல்வது சாத்தியமில்லை. நான் மேற்கத்திய நாடுகளிலிருந்து திரும்பி வந்ததும் பார்க்கிறேன்,**” என்று கூறிவிட்டு, “**நான் இறை மனிதன்; எவரேனும் எனது சுய ரூபத்தின் ஒரு குறுகிய பார்வையை அடையப் பெறுவதாக இருந்தால், அவர் தன்னை ஆயிரம் துண்டுகளாக வெட்டப்படுவதைப் பொருட்படுத்த மாட்டார்!**” என்று உறுதிப்பட எடுத்துரைத்தார்.

இந்தக் குழுவைச் சார்ந்த ஒருவர், தனது குடும்பப் பிரச்சினைகளுக்காக வேறொருவரைக் குற்றம் சாட்டிய போது, பாபா அவருக்கு விளக்கினார்; “**ஒவ்வொருவருக்கும் பலவீனங்கள் உள்ளன, பாபா ஒருவரே அவற்றிலிருந்து விடுபட்டவர்; ஒருவர் தனது அண்டை வீட்டாரை நேசித்தால், அது அனைவரிடமும் அன்பை எழுச்சியுறச் செய்கிறது. நான் பிறரின் பலவீனங்களுக்கு செவிமடுக்க வேண்டுமாயின், நான் டெஹ்ரா டூன் செல்வதன் நோக்கம் என்னவாக இருக்கும்?**”

மேலும், **"எனது திறவுகோலை நான் திருப்புவதானால், என்னை எதிர்ப்பவர்கள் எந்த நேரத்திலும் எனது பக்தர்களாகிவிடுவார்கள். எப்படியிருந்தாலும், நினைவுகூராமல் இருப்பதை விட, விரோத மனப்பான்மையுடன் நினைவுகூர்வது சிறந்தது!"**

டெல்லி, பட்டான்கோட் (PATHANKOT), அமிர்தசரஸ் (AMRITSAR), ஆக்ரா, அலிகார் (ALIGARH) ஆகிய பகுதிகளைச் சேர்ந்த அன்பர்கள் அடுத்தடுத்து வந்தனர். சமீபத்திய வாழ்க்கைச் சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளைக் குறித்து அவர்களுக்கு நினைவுபடுத்திய பாபா, **"என்னுடைய பக்தர்களை சந்திப்பதையும், தழுவுவதையும் என்னால் தவிர்க்க முடியாது. ஆனால் தனிப்பட்ட நேர்காணல்கள் சாத்தியமில்லை. இங்கு யார் சிறந்த கணிதவியலாளர்? ஒவ்வொருவரையும் ஐந்து நிமிடங்களில் விடுவித்தால், 800 நபர்களை சந்திக்க எத்தனை மணிநேரம் ஆகும்? குறைந்தபட்சம், ஐந்து நிமிடங்கள்; இருப்பினும் அவர்கள் ஐந்து நிமிடங்களில் திருப்தி அடைய மாட்டார்கள்."**

பாபா, காக்காவிடம் மீண்டும் நாடித் துடிப்பை சோதிக்கச் சொன்னார். ஜுரம் 107°ஆக உயர்ந்துள்ளதாக காக்கா தெரிவித்தார். பாபா கேலி செய்தார், **"இந்த வெப்பநிலை மருத்துவரிடம் நான் கேட்டுக்கொள்வதானால், ஜுரம் 110° டிகிரியையும் எட்டிவிடும்".**

வட இந்தியாவிலிருந்து வந்த இந்தக் குழுவிற்கு பாபா விளக்கினார்:

**அன்புக்கு எல்லை இல்லை, ஆனால் அதற்கு மனம் தடையாக இருக்கிறது. என் அருளில்லாமல் இந்தத் தடை நீங்காது; ஏனெனில், இது மனதை நிர்மூலமாக்கும் மனதைக் குறித்த கேள்வி! உதாரணமாக, நான் நிரஞ்சன் ஸிங்கிடம் அவர் மீதே அவரை குதிக்கச் சொன்னால், அதிகபட்சம் அவர் செய்ய முடிவது குட்டிக்கரணம் ஒன்றுதான். தன் மீது தானே குதிப்பது என்பது சாத்தியமற்றது. நிரஞ்சன் ஸிங் தனது தூய்மையான இதயத்திலிருந்து என்னை உணர விரும்புகிறார் என்பதை பாபா அறிவார், ஆனால் அதில் ஒரு தடை உள்ளது.**

நிரஞ்சன் ஸிங்கிடம், **'ஜுலை 1 முதல் 10ஆம் தேதி வரை, பத்து நாட்கள் மெஹராஸாத்தில் அவரும் அவரது மனைவியும் தங்குவது சாத்தியமா?'** என்று பாபா கேட்டார். அவர் ஒப்புக்கொண்டதும், பாபா அவருக்கு, விவரமாக பின்னர் அறிவுறுத்துவதாகத் தெரிவித்தார்.

இப்போது ஸாவ்னேர் (SAONER) மற்றும் விபூதி குழுக்கள் வந்தன. பாபா இவ்வாறு குறிப்பிட்டார்: **"ஸாவ்னேர் குழுவில் பாதி பேர் போஃபலியின் குடும்பத்தைச் சார்ந்தவர்கள்."** போஃபலி பிளீடர், வர விருப்பமில்லாத ஓர் ஏழையை அழைத்து வந்திருந்தார். பாபா, **"என் அன்பு அவரை இங்கு ஈர்த்தது"** என்று கருத்துத் தெரிவித்தார்.

டெஹ்ரா டூன் குழுவைப் போலவே, பாபாவை எதிர்க்கும் குடும்ப உறுப்பினர் ஒருவரின் கேள்வி மீண்டும் எழுப்பப்பட்டது. போஃபலியின் மகள்

நிர்மலா, குறிப்பாக பாபாவின் தரிசனத்திற்காக அதீத ஆர்வத்துடன் இருந்தார்; ஆனால், அவரது கணவர், பாபாவைக் கடுமையாக எதிர்த்தார். நிர்மலா, பாபாவின் தரிசனத்திற்குச் செல்வதானால், அவரைத் தனது வீட்டில் திரும்ப அனுமதிக்கமாட்டேன் என்று எச்சரித்தார். ஆனால், கடைசி நேரத்தில், அவருக்குள் என்ன நிகழ்ந்ததோ, நிர்மலா தனது தந்தையுடன் சகவாச நிகழ்ச்சியில் கலந்துகொள்ள வேண்டும் என்று வலியுறுத்தும் அளவுக்கு அவர் முற்றிலும் மாறிவிட்டார்.

அவர்கள் பாபாவை தரிசனம் செய்தபோது, போஃபலி, நடந்த சம்பவங்களை பாபாவிடம் எடுத்துரைத்தார்; அவர் அந்த இளம் பெண்ணுக்கு அறிவுரை வழங்கினார், **“நீங்கள் உங்கள் கணவரின் விருப்பத்திற்கு மதிப்பளிக்க வேண்டும், அவரை பாபாவாகக் கருத வேண்டும். நீங்கள் என்னை வணங்குவதை அவர் விரும்பவில்லை என்றால், எனது புகைப்படத்தை உங்கள் இல்லத்திலிருந்து தூக்கி எறிந்துவிடுங்கள். நான் என்றென்றும் உங்கள் இதயத்தில் நிலைத்திருப்பேன். உங்களால் இயன்றவரை அடிக்கடி என்னை நினைவுகூருங்கள். அதுவே என்னை வழிபடுவதற்கான உண்மையான வழி!”**

சமீபத்தில் திருமணம் செய்து கொண்ட தனது பழைய சீடர் முரளி காளேயுடனான உரையாடலின்போது பாபா, **“இப்போது நீங்கள் திருமணம் செய்து கொண்டீர்கள், உங்களுக்கு ஒரு குடும்பம் உள்ளது; அதனால் ஏற்படும் அனைத்து சிரமங்களையும் எதிர்கொண்டு, குடும்பத்தைப் பராமரிக்க வேண்டும்”** என்று விளக்கினார். முரளி காளே 1927இல் மெஹர் ஆசிரமத்தில் ஒரு மாணவராக இருந்தார்; மேலும் புது வாழ்வில் பாபாவுடன் இணைந்த மண்டலியில் ஒருவர். பாபாவின் அனுமதியுடன் அவர் ஜபல்பூருக்குச் சென்றார்.

ஜபல்பூரைச் சேர்ந்த ஸுலூ மெஷ்ராமிடம், ‘**சகவாசப் பட்டியலில் அவரது மனைவியின் பெயரைப் பதிவு செய்து, மனைவிக்கு பதிலாக அவர் வந்திருப்பதாக**’ பாபா கிண்டல் செய்தார். பாபா, **“எப்படியோ, என் அன்பினால் நீங்கள் ஈர்க்கப்பட்டீர்கள்”** என்று குறிப்பிட்டார். பாபா, ‘**எந்த ஒரு பாசாங்குத்தனத்தையும் விரும்புவதில்லை**’ என்று குறிப்பிட்டு, கூட்டத்தில் இருந்த அனைவரிடமும் ‘**எப்பொழுதும் இயல்பாகவும், போலிப் பெருமை கொள்ளாமலும் இருக்க வேண்டும்**’ என்றும் அறிவுறுத்தினார்.

ஜபல்பூருக்கு விஜயம் செய்யுமாறு பாபாவிடம் மெஷ்ராம் இறைஞ்சினார், அதற்கு அவர், **“நான் ஜபல்பூருக்குச் சென்றால், தேஷ்முக் கூறுவார், ‘பாபா, ஜபல்பூர், நாக்பூரிருந்து வெகு தொலைவில் இல்லை’, பின்னர், எனது பயணத்திற்கு முடிவே இருக்காது. நான் 1955ஆம் ஆண்டு சகவாச நிகழ்ச்சியில் வெவ்வேறு இடங்களுக்கு விஜயம் செய்வேன் என்று உறுதியளித்திருக்கலாம். ஒன்றை மட்டும் நினைவில் கொள்ளுங்கள், நான் எல்லா வாக்குறுதிகளுக்கும் அப்பாற்பட்டவன். நான் ஒரு வாக்குறுதியை அல்லது ஒரு நூறு வாக்குறுதிகளை மீறினாலும் அது ஒன்றுதான்.”**

இருப்பினும், பாபா, 700 ஆண்டுகளுக்குப் பிறகு திரும்பி வரும்போது, ஜபல்பூர் அங்கே இருந்தால், விஜயம் செய்வதாக மெஷ்ராமுக்கு உறுதியளித்தார்.

அதைத் தொடர்ந்து, பாகிஸ்தானியர்கள் அழைக்கப்பட்டனர், மினூ கராஸ், ஆதி & ரோடா துபாஷ், ஆதி & டாலி அர்ஜானி போன்ற நீண்ட கால அன்பர்களுடன் பாபா உரையாடினார்.

பிற்பகல் 2:00 மணிக்கு, பாபா சுமார் 50 பேரை அழைத்தார், அதில் சில மண்டலியும் அடங்குவர். ஒவ்வொருவருக்கும், பாபாவின் நான்கு கட்டளைகள் அடங்கிய, வாழ்க்கைச் சுற்றறிக்கை எண். 37, ('பாபாவின் நினைவூட்டல்' - BABA'S REMINDER) ஒரு நகல் வழங்கப்பட்டது; '**ஆறு மாதங்களுக்கு எந்தக் காமச் செயலிலிருந்தும் விலகியிருக்க வேண்டும்**' என்பதும் அவற்றில் ஒன்று. முரளி காளே, அலி ராம்ஜூ (சமீபத்தில் திருமணம் செய்து கொண்டவர்கள்), அந்த ஆண்டு மார்ச் மாதம் திருமணம் செய்யவிருந்த ஸாம் கேரவாலா மூவரையும் பாபா விடுவித்தார்.

முரளி காளே, ஏராளமான ஈரடிக் கவிதைகளை எழுதி, டாக்டர் நீலுவிற்கு அனுப்புவது வழக்கம் - நீலுவும் இதை ஒரு பொழுதுபோக்காக எடுத்துக் கொண்டார். பாபா, முரளியிடம் ஒரு கவிதையை மொழியுமாறு கூறியபோது, நீண்ட நேர யோசனைக்குப் பின்னர் அவர், 'ஜபல்பூர் காற்றில் ஊடுருவும் தெய்வீக மதுபானத்தின் விளைவு அற்புதம்…' என்று ஆரம்பித்தவருக்கு, அவரை வருந்தச் செய்யும் விதத்தில் (அதே நேரத்தில் அனைவரின் சிரிப்பு ஆரவாரத்திற்கு மத்தியில்), எஞ்சிய பாகத்தை, அவரால் நினைவில் கொள்ள முடியவில்லை; அப்போது அவர்களின் சந்திப்பு திடீரென முடிவுக்கு வந்தது.

பாபா, ஆண்கள் தங்கும் கூடாரத்திற்குச் சென்றார், அங்கு இச்சுவாராவின் சதுர்புஜ் (CHATURBUJ) உடல்நலமின்றி மயக்கமடைந்த நிலையில் படுக்கையில் இருந்தார். பாபா, தனது ஊன்றுகோலை அவரது மார்பில் வைத்து அவருக்குப் பால் கொடுக்குமாறு அறிவுறுத்தினார், ஆனால் யாரோ ஒருவர் அவரால் எதுவும் அருந்த முடியவில்லை என்றார். பாபா, ஒருவரிடம் பால் கொண்டு வருமாறு கூறி அனுப்பிவிட்டு, தனது மற்றுமோர் ஊன்றுகோலை அவரது மார்பில் வைத்தார். சதுர்புஜ் சட்டென்று எழுந்து அமர்ந்து பாபாவை ஆரத்தழுவிக் கொண்டார். பால் அருந்திவிட்டு சிறிது நேரம் கழித்து உணவு உண்டார்.

பிற்பகல் 2:30 மணிக்கு, கவாலி நிகழ்ச்சி நடைபெறவிருந்த சந்திப்புக் கூடாரத்திற்கு பாபா வந்தார். அப்போது வெப்பம் அதிகமாக இருந்தது, பாபா கூடாரத்தின் பக்கங்களைத் திறந்து வைத்தார். "**பாடலைப் பின்பற்ற முடியாதவர்கள் என் மீது கவனம் செலுத்த வேண்டும், வார்த்தைகளைப் புரிந்துகொள்பவர்கள் எனது முன்னிலையில் அதை அனுபவிக்க முயற்சிக்க வேண்டும்**" என்று அவர் குறிப்பிட்டார். "**ஆனால் நீங்கள் தூங்கி விழுந்தாலும், நான் கவலைப்பட மாட்டேன், நீங்கள் விரும்பினால் அவ்வாறு செய்ய உங்களுக்கு முழு சுதந்திரம் உள்ளது**" என்றும் அவர் கூறினார்.

முதல் கவாலி பாடலில், போதிய ஆன்மீக சாயல் இல்லாததால், பாபா அதிருப்தியில், "**இது போன்ற கஸல் இந்தக் கூட்டத்தில் பாடப்பட்டிருக்கக்**

**கூடாது**" என்று குறிப்பிட்டார். உடனடியாக, டாக்டர் அப்துர் ரஹ்மான், அன்புக்குரியவரிடம் குறை கூறி முறையிட்டு, பிறருடைய கவனத்தை ஈர்க்கும் விதத்தில், ஒரு 'நிந்தனை' கஸலைப் பாடினார், இது பாபாவை சிரிக்க வைத்தது. இத்தனை உற்சாகமாக அவர் இந்நாட்களில் சிரித்ததில்லை என்று குறிப்பிட்டார். அதைத் தொடர்ந்து, கவாலி பாடகர் மற்றும் அவரது இசைக்கலைஞர்கள் சில சுவாரஸ்யமான கஸல்களைப் பாடினர்.

பாபா, சுவாமி மங்களானந்த் என்பவரை மேடைக்கு அழைத்தார். சுவாமி, பாபாவின் பாதங்களைத் தொட்டபோது, '**நீங்கள் எனக்குக் கீழ்ப்படிவீர்களா?**' என்று பாபா அவரிடம் கேட்டு, பின்னர், "**உங்கள் உடலைக் கைவிடும் சூழ்நிலையை எதிர்கொண்டாலும், நீங்கள் எனது கட்டளையைக் கடைப்பிடிக்க வேண்டும்**" என்று கூறினார். சுவாமியும் அதற்கு ஒப்புக்கொள்ளவே, பாபா அவரிடம் '**தண்ணீர் மட்டுமே அருந்தி, உபவாசம் மேற்கொள்ளவும், 40 நாட்கள் மௌனம் கடைப்பிடிக்கவும்**' கட்டளையிட்டார். சுவாமியிடம் '**அதைச் செய்வீர்களா?**' என்று கேட்டதற்கு, அவர் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டார். பாபா, "**இதைக் கடைப்பிடித்து, எவரும் உங்களை வணங்கவோ, உங்கள் பாதங்களைத் தொடவோ அனுமதிக்காமல் இருந்தால், என்னுடைய தெய்வீகத் தன்மையை நான் உங்களுக்குக் காண்பிப்பேன்**" என்றார். மாண்ட்லாவில் பாபாவிற்குச் சொந்தமான நிலத்தில் ஒரு குடிசையில் குடியிருந்த அவரிடம் உடனடியாகப் புறப்படும்படி பாபா அறிவுறுத்தினார். அவர் சென்ற பிறகு, பாபா கூட்டத்தினரிடம், "**அவர் எனக்குக் கீழ்ப்படிகிறாரா என்று பார்ப்போம்**" என்று கூறினார்.

அப்துர் ரஹ்மானிடம் ஏதேனும் விசேஷமான கஸலைப் பாடச் சொன்னபோது, அவர், அன்பிற்குரியவருக்கு எதிரான புகார்கள் நிறைந்த மற்றொரு கஜலைப் பாடினார். பாபா அவரைப் புகழ்ந்து, அவர் கஸல் பாடும் போது அவரது கைகள் நடுங்குவதைக் கண்டு, "**இப்போது, மஸ்தான்** (வலிமையானவர்) **வயதாகிவிட்டார்**" என்று கூறினார்.

பாபா கூட்டத்தினரை தேநீர் அருந்தச் செல்லுமாறு கேட்டுக்கொண்டார்; இடைவேளையின் போது அவர் சிறுநீர் கழிக்க எழுந்து நின்றதும், மண்டலியில் மூவர் விரிப்பைப் பிடித்தனர், அது பார்வையாளர்களிடமிருந்து அவரை ஓரளவு மறைத்தது. அதன் பின்னர் அமர்ந்து, பாபா தனக்குள்ளேயே ஆழ்ந்த நிலையில், அவரது விரல்கள் வேகமாக, தாளத்துடன் நகர்ந்தது, சகவாசத்தில் கலந்துகொண்ட அனைவரின் உள் கணக்கையும் ஆராய்வது போலத் தோன்றியது. பாபா அரை மணி நேரம் இந்த நிலையில் லயிக்கப்பட்டார். சகவாசக் குழு திரும்பி வந்ததும், கவாலி நிகழ்ச்சி ஒரு மணி நேரம் தொடர்ந்தது. ஒரு குறிப்பிட்ட கஸல் பாபாவிடம் ஒரு வேண்டுகோளை முன்வைத்தது: "என்னைத் தழுவிய பின்னர் எங்கும் செல்லாதே; இது (எனது) வாழ்வா அல்லது சாவா என்பதைப் பற்றிய கேள்வி!"

பாபா, கவாலிப் பாடகரைத் தழுவி, '**எந்த நிகழ்ச்சியையும் தொடங்கும் முன்னர், எப்பொழுதும் பாபாவின் பெயரை உச்சரிக்குமாறு**' கூறியதும்,

அவரும், பிற இசைக் கலைஞர்களும் புறப்பட்டுச் சென்றனர். பின்பு, பூனா குழுவினரின் பஜனை தொடர்ந்தது.

மாலை 6:00 மணிக்குப் புறப்படுவதாக பாபா கூறியிருந்தாலும், இசை நிகழ்ச்சி முடிந்து, ஜெய் முழக்கங்களுக்கு மத்தியில், பாபா மெஹராஸாத்திற்குப் புறப்படும்போது மணி 6:45ஐ நெருங்கிவிட்டது. தாமதமாக வந்ததால், "**இன்று அதிக நேரம் இருந்ததால் நாளை மாலை 5:15 மணிக்கு புறப்படுவேன்**" என்று கேலி செய்தார்.

பாபா, காரை துனிக்கு அருகில் நிறுத்தி, அங்கு லோக்கண்டேயின் குழந்தைகள் பாடும் பஜனை பாடல்களைக் கேட்டார்; அவர்கள் மிகவும் இளம் வயதினராக இருந்ததால், சகவாச நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படவில்லை. லோக்கண்டே, அழைத்து வந்த அவருடைய குழந்தைகள், குடும்ப குவாட்டர்ஸில் ரமா கல்சூரியுடன் தங்க வைக்கப்பட்டனர். ஷீலா, மெஹர்நாத் ஆகியோரும் சகவாச நிகழ்ச்சிகளில் பங்கெடுக்க முடியவில்லை, இருப்பினும் ரமா நிகழ்ச்சியில் பங்கெடுத்தார். பாவ் கல்சூரி மெஹராபாத்தில் தங்கியிருந்தாலும், ரமா அல்லது அவர்களுடைய குழந்தைகளுடன் பேச அவருக்கு அனுமதி இல்லை. போ*ஃ*பலியின் மகளின் குழந்தைகளும் வந்திருந்தனர்; பாபா மெஹராஸாத்திற்குச் செல்வதற்கு முன்பு, பத்து நிமிடங்களுக்கு துனி அருகில் இந்தக் குழந்தைகள் அனைவருக்கும் தரிசனம் வழங்கினார்.

வாமன் படலே 16ஆம் தேதி மெஹராஸாத்திற்கு சில பணிகள் நிமித்தம் அனுப்பப்பட்டார்; மாலையில், அவர் அஹமதுநகருக்குத் திரும்பும் வேளையில், தனது ஒரே பேருந்தைத் தவறவிட்டதால், அவர் ஒரு மரத்தின் கீழ் இரவைக் கழிக்க வேண்டியதாயிற்று, ஆனால் அது அனைத்தும் 'திட்டமிடப்பட்டது' போலத் தோன்றியது, ஏனெனில் அந்த இரவில், மெஹராஸாத் செல்லும் தனியார் சாலையில் அவர், இளம், கருமை நிறத்தில், அழகான ஒரு மஸ்தைக் காண நேர்ந்தது. மறுநாள் காலையில் பாபா மெஹராபாத்திற்குச் சென்று கொண்டிருந்த வேளையில், வானத்தை வெறித்துப் பார்த்தபடி தனியே நின்றுகொண்டிருந்த மஸ்தை சந்தித்து, அவரை காரில் அழைத்துச் சென்றார்.

1958 பிப்ரவரி 17 திங்கட்கிழமை காலை 8:15 மணிக்கு, பாபா மெஹராபாத் வந்தார். எட்டு மனிதர்கள் மாற்றி மாற்றி அவரைத் தூக்கு நாற்காலியில், மேல் மலைக்கு அழைத்துச் சென்றனர். சகவாசக் குழுவானது உற்சாகத்தில் பாபாவின் நாற்காலியைப் பின்தொடருமாறு கூறியதை அலட்சியம் செய்து, அதிக சத்தம் எழுப்பி, அவருக்கு முன்னால் ஓடி, நிறைய தூசுகளை எழுப்பினர். அவர்களைக் கட்டுப்படுத்தும் நோக்கத்தில், பாபா, அனைவரையும் சில நூறு அடிகளுக்குப் பின்னால் வரும் பெண்மணிகளை ஒழுங்காகப் பின்தொடருமாறு கட்டளையிட்டார்.

மெஹராபாத் மேல் மலையில், அனைவரும் தகரக் கொட்டகையின் கீழ் ஒன்று திரண்டனர்; ஆனால் தரையில் கம்பளம் இல்லாமல், தூசியால்

நிரம்பியிருந்ததைக் கண்டு, மன்ஸாரி, பாதிரி, விஷ்ணு ஆகியோரை பாபா கடிந்து கொண்டார். பாபா அவரது உரையைத் தொடங்குவதற்கு முன்னர், ஆண்கள், பெண்கள் அனைவரும் அமருவதற்காகத் தரையில் கம்பளங்களைப் பரப்பும் வரை காத்திருந்தார். அவர் கூறியதாவது:

**இந்த மலையில், நான் எனது உலகளாவிய பணியைச் செய்துள்ளேன். எனது வலதுபுறத்தில் காணும் கல் அமைப்பு, முன்பு, முதல் உலகப் போரின் போது நீர்த்தொட்டியாக இருந்தது. அதற்குள் அமைந்த அறை ஒன்றில் நான் 1924இல் பலமுறை ஏகாந்தவாசம் மேற்கொண்டேன். ஜன்னலை நோக்கிச் செல்லும் இரும்பு ஏணி வழியாக ஏறி உள்ளே நுழைந்து வெளியே வந்தேன்.**

**நான் எனது உடலைத் துறந்த பிறகு வைக்கப்படும் எதிர்கால சமாதிக்கு உங்களை இப்போது அழைத்துச் செல்கிறேன். அதன் உள்ளே உறுதியாகக் கட்டப்பட்ட கீழ் நிலத்தடி ஒன்று உள்ளது, அங்கு நான் ஆறு மாதங்கள் ஏகாந்தவாசமும், ஒரு நாளைக்கு ஒரு முறை கா∴பி மற்றும் தண்ணீர் மட்டுமே அருந்தி உபவாசமும் மேற்கொண்டேன். ஏகாந்தவாசம் (1926-27) ஏறக்குறைய இரண்டு ஆண்டுகள் நீடித்தது. நான் என் உடலைக் கைவிட்டு எழுபது ஆண்டுகளுக்குப் பின்னர், இந்த இடம் புனித யாத்திரை ஸ்தலமாக மாறும், அங்கு இறை நாட்டம் மிக்கவர்கள், தத்துவவாதிகள் மற்றும் பிரபலமானவர்கள் அஞ்சலி செலுத்துவார்கள். நீங்கள் அனைவரும், நான் இன்று உயிருடன் இருக்கும் இத்தருணத்தில் என்னுடன் இருக்கிறீர்கள், என்னுடன் மலையேறி வந்தீர்கள் என்பதில் எவ்வளவு பெரிய அதிர்ஷ்டசாலிகள்!**

**இதுகாறும் எதிர்கால சமாதியைப் பார்க்காதவர்கள், இப்போது ஒவ்வொருவராக அங்குச் செல்லுங்கள். அதை அணுகி, எப்பாடு பட்டேனும் பிறருக்கு மகிழ்ச்சியையும், மனநிறைவையும் கொடுக்க உங்களால் முடிந்த அனைத்தையும் செய்வீர்கள், மேலும் நீங்கள் பாபாவை முழு மனதுடன் நேசிப்பீர்கள் என்ற உறுதியான தீர்மானத்துடன் உங்கள் மரியாதையைச் செலுத்துங்கள். இந்தத் தீர்மானத்துடன், மேற்கூறிய இரண்டு விஷயங்களையும் நேர்மையாக பின்பற்ற முயற்சி செய்யுங்கள்.**

**முதலில் பெண்மணிகள் உள்ளே செல்ல வேண்டும், பின்னர் ஆண்கள் செல்லலாம். ஏற்கனவே பார்த்தவர்கள் இங்கேயே இருக்கலாம். மரியாதை செலுத்திய பிறகு, நீங்கள் இங்கே வராமல் கீழே செல்ல வேண்டும்.**

பாபாவின் எதிர்கால சமாதியைப் பார்க்காதவர்கள் அதைப் பார்க்கச் சென்றனர்; பாபாவுடன் அமர்ந்திருந்த பெண்மணிகள் தோட்டத்தில் உலாவ சென்றதும், பாபா பிற அன்பர்களை அருகில் வருமாறு சைகையால் அழைக்கவே, அனைவரும் ஒருவரையொருவர் முந்திக்கொண்டுச் சென்றனர். **“காலியாக இருக்கும் இருக்கைகளை நீங்கள் தமக்கென ஆவேசமாக அபகரிக்கும் விதத்திலிருந்து, நீங்கள் எப்பாடுபட்டேனும் பிறரை எப்படி**

**மகிழ்விக்கப் போகிறீர்கள் என்பதை நான் பார்த்துவிட்டேன்!**” என்று பாபா காரசாரமாக விமர்சித்தார்.

மினூ கராஸ் நகைச்சுவையாகக் கூறினார்: “பாபா, நான் உங்களின் இரண்டாவது அறிவுரையை மட்டுமே நினைவில் கொண்டுள்ளேன் - அதாவது, உங்களை முழு மனதுடன் நேசிக்க வேண்டும் - அதே வேளையில் முதல் விஷயத்தை சுத்தமாக மறந்துவிட்டேன்.”

அவரை அழைத்து, பாபா அவரது காதைத் திருகி, “**உண்மையான அன்பு வெளியளவில் ஒருபோதும் தெரியப்படுத்தப் படுவதில்லை. அன்பு ஒருவரை தலை முதல் கால் வரை மறக்கச் செய்கிறது**” என்று கருத்துரைத்தார்.

கீழ் மெஹராபாத் கிழக்குப் பகுதியில் அமைந்த பிரதான கட்டிடத்திற்கு எதிரே, மஸ்திற்கான இருப்பிடத்தை அமைத்து, (மெஹராஸாத்திலிருந்து தான் அழைத்து வந்த) மஸ்தைப் பற்றி பாபா இவ்வாறு விவரித்தார். பாபா, ஒருவாய் அருந்திய பால் அவருக்குக் கொடுக்கப்பட்டது, பாபா அவருக்கு மதியம் சிறிது சாதமும், அதிக அளவில் பாலும் கொடுக்குமாறு அறிவுறுத்தினார். மஸ்துகளுக்கு இடையூறு விளைவிக்காதீர்கள், உணவு அல்லது பணத்தால் அவரைத் துன்புறுத்த வேண்டாம் என்று பாபா அனைவரையும் எச்சரித்து, இவ்வாறு குறிப்பிட்டார்:

**உலக மக்கள் அவரை ஒரு சாதாரண பைத்தியம் என்று எடுத்துக் கொள்ளலாம், ஆனால் அவர் கடவுளின் மீதான அளப்பரிய அன்பினால், துகளில் நடந்து திரிந்து, அசுத்தத்தில் உருண்டு புரண்டு நாட்களைக் கழிக்கிறார். அவரை இங்கு அழைத்து வந்ததில் மிக்க மகிழ்ச்சியுடன் இருக்கிறார். அப்படிப்பட்ட இறை அன்பர்களுக்கு நான் எப்பொழுதும் தலைவணங்குகிறேன், எனவே நீங்கள் அவருக்கு மரியாதை செலுத்த வேண்டிய அவசியமில்லை. உங்களில் சிலர் அவரைச் சுற்றி வளைக்க விரும்புவது எனக்குத் தெரியும். மஸ்திடம் ஒரு குச்சி உள்ளது; மேலும் அவரை அணுகும் ஒருவரின் கண்ணிலும் குத்துவதற்காக அவர் அதைத் தனது தலைக்கு மேல் வைத்து, தயார்நிலையில் இருக்கலாம் என்பதை நான் உங்களுக்கு எச்சரிக்க வேண்டும்.**

**ஆன்மீகப் பாதையில் பயணிக்கும் அந்த மஸ்துகள், அவர்கள் முன்னேறிச் செல்லும்போது, ஒரு குழந்தை, மனநிலை பாதிக்கப்பட்டவர் மற்றும் பேய் அல்லது பிசாசு ஆகியவற்றின் ஒருங்கிணைந்த பண்புகளைக் கொண்டுள்ளனர். அவர்கள் ஒரு குழந்தையைப் போல கபடமற்றவர்கள், ஒரு பைத்தியக்காரனைப் போல விசித்திரமாக நடந்துகொள்பவர்கள் மற்றும் ஒரு பேய்த்தனமான உருவத்துடன் அழுக்கடைந்த சூழலில் வாழ்பவர்கள்.**

**உங்களில் எவரேனும் எனது எச்சரிக்கையை மீறி, அவர் அருகில் செல்ல, அவர் தனது கழியால் உங்கள் கண்ணில் குத்தினால், நான் மகிழ்ச்சியடைவேன்.** (அனைவரும் சிரித்தனர்.) **எவருக்குத் தெரியும்? மஸ்த் எந்த நேரத்திலும் நீங்கள் தங்கும் பந்தல்களுக்குள் ஓடி வரலாம்! அவர் அவ்வாறு செய்தால், அஞ்ச வேண்டாம்; அவரை மெதுவாகப் பிடித்து**

**அமைதியாக இருங்கள். ஆனால் அவர் அதைச் செய்ய மாட்டார்; ஆதலால் அவருக்கு அஞ்ச வேண்டாம்.**

டாக்டர் தேஷ்முக், பாபாவுடன் சகவாசக் குழுவின் புகைப்படம் எடுக்க விரும்பினார், ஆனால் நேரமில்லை என்று எரச் விளக்கினார். தேஷ்முக்கின் வற்புறுத்தலின் பேரில், '**இந்தப் பொறுப்பை யார் ஏற்றுக்கொள்வார்கள்?**' என்று பாபா கேட்டார். '**பொறுப்பை ஏற்றுக்கொண்டவர் அதை நிறைவேற்றத் தவறினால், அவர் ஏழு நாட்கள் தண்ணீர் மட்டும் அருந்தி உபவாசம் கடைப்பிடிக்க வேண்டும் - ஆன்மீக நன்மைக்காக அல்ல, ஆனால் ஒரு தண்டனையாக!**' கராச்சியைச் சேர்ந்த ஆதி அர்ஜனி (ADI ARJANI) பொறுப்பை ஏற்கவும், 19ஆம் தேதி காலை 9 மணி முதல் 10:00 மணிக்குள் புகைப்படம் எடுக்க ஏற்பாடு செய்யவும் தயாராக இருந்தார். மேல்மலையை விட கீழ் மெஹராபாத்தில் புகைப்படம் எடுக்க வேண்டும் என்று பாபா முடிவு செய்தார்.

இந்த நேரத்தில் பாபாவிற்கு, புகைப்படங்கள் பற்றிய யோசனை பிடிக்கவில்லை என்றாலும், அதை விரும்பியவர்களை மகிழ்விக்கும் எண்ணத்தில் அவர் ஒப்புக்கொண்டு, இவ்வாறு குறிப்பிட்டார், "**எனது புகைப்படத்தை காகிதத்தில் வைத்திருப்பதால் என்ன பயன், அதை ஒருவரின் இதயத்தில் நிலைநிறுத்துவது நல்லது.**"

ராம்ஜூ புகைப்படம் எடுப்பதை எதிர்த்தார், மேலும் அதற்கு ஆதரவானவர்களுக்கும், அதை எதிர்ப்பவர்களுக்கும் இடையே (அவ்வப்போது சூடுபிடித்த) விவாதம் எழுந்தது. ஜபல்பூரைச் சேர்ந்த ராம் லக்கன் ஷர்மா, "நம் இதயங்களிலும், காகிதங்களிலும் பாபாவின் புகைப்படம் இருக்க வேண்டும்!" என்றபோது, அமியா ஹஸ்ரா அவரை ஆதரித்தார்.

பாபா குறிப்பிட்டார், "**ஷர்மா, ஒரே நேரத்தில், ஒரு கையை தபலாவிலும் மற்றொன்றை டோலக்கிலும் வைக்க விரும்புகிறார்.**" ஆனால் ஷர்மாவுடன் உடன்படுபவர்கள் பலர் இருந்ததால் வாக்குவாதம் தொடர்ந்தது. இறுதியில், ஆண்கள் அவருடன் ஒன்றுக்கு பலமுறை, ஏற்கனவே புகைப்படம் எடுத்துக்கொண்டதால் (1955இல்), இதுகாறும் சகவாசத்தின் வாய்ப்பை அடையப்பெறாத பெண்மணிகளுடன் மட்டுமே பாபா புகைப்படம் எடுப்பதாக முடிவு செய்தார்.

காலை 10:30 மணியளவில், பாபா தனது காரில் மேல்மலையிலிருந்து கீழே அழைத்து வரப்பட்டார்; அவருடைய எதிர்கால சமாதிக்கு மரியாதை செலுத்திவிட்டு, ஏற்கனவே கீழே சென்றவர்களைத் தவிர, அனைவரும் பின்தொடர்ந்தனர். பாபாவை காரில் அழைத்துச் செல்ல உதவியபோது, மயங்கிய நிலையில் இருந்த ஒருவர் போதையில் தள்ளாடத் தொடங்கினார். ஆஸ்துமா நோயால் பாதிக்கப்பட்ட ராம்ஜூவைப் போலவே, அவருக்கும் பாபாவின் காரில் இருக்கை வழங்கப்பட்டது.



குணாதாய், ?, ரோடா, ராம்ஜூ, பிக்குபாய், ஸாயிப் ஆஸ்மி, பாலக் பகவான் (பின்புறம்)
(GUNATAI, ?, RODA, RAMJOO, BHIKUBHAI, SAIB ASMI, BALAK BHAGWAN- BACK TURNED)



மெஹராபாத், பிப்ரவரி **1958** (MEHERABAD, FEBRUARY 1958)

மெஹராபாத் மேல்மலை, பிப்ரவரி **1958**
நிற்பவர்கள்: எல்சா, காக்கா,
அமர்ந்திருப்பவர்கள் - வலதுபுறம்:
தேஷ்முக், பாலக் பகவான்
(UPPER MEHERABAD, FEBRUARY 1958
STANDING: ELCHA, KAKA, SEATED-RIGHT
DESHMUKH, BALAK BHAGWAN)



கீழ் மெஹராபாத்தில், பவுக்கர் (BAUKHAR, ஹமிர்பூர் மாவட்டம்) கிராமத்தைச் சேர்ந்த ஒருவர் வலியால் துடித்தபடி மல்லாக்க படுத்திருந்தார். காலம் இதை இப்படி வர்ணித்தது: “தெய்வீக மதுபானம் அதன் பல்வேறு கலவைகளை வெளிப்படுத்துகிறது! சிலவற்றில் அது கண்கலங்கி அழுகிறது, சிலவற்றில் அது சிரிக்கிறது; சில உள் வலியால் சின்னாபின்னம் ஆகும் வேளையில், பிறர் தன்னை அறியாமலே சிரிக்கிறார்கள்!”

பாபா அவரது அறையில் சிறிது நேரம் ஓய்வெடுத்த பின்பு, கான்பூர், ஜாலான் (JALAUN), பார்டா (BARDA) மற்றும் ஜான்சியிலிருந்து வந்த பலர் உட்பட, ஹமிர்பூர் குழுவினர் கூடியிருந்த மண்டபத்திற்கு அழைத்து வரப்பட்டார். பாபா தனது உரையைத் தொடங்கினார்:

**நானும் ஹமிர்பூரைச் சேர்ந்தவன். ஹமிர்பூருடன் எனக்கு கடந்த காலத்திலிருந்து தொடர்பு உண்டு. நான் இரண்டு முறை ஹமிர்பூர் சென்றதற்கும், அங்கிருந்து ஏராளமான அன்பர்கள் வருவதற்கும் இதுவே காரணம். நோக்கமின்றி எதுவும் நடப்பதில்லை. இப்போது, உடல் ரீதியாக, நான் மீண்டும் ஹமிர்பூருக்கு விஜயம் செய்வது சாத்தியமில்லை. எனவே நீங்கள் அனைவரும் என் மீதான அன்பை அதிகரிக்க முயற்சிக்க வேண்டும். பிறரும் என்னை நேசிக்கத் தொடங்கும் வகையில், நாளுக்கு நாள் என்னை மேலும் மேலும் நினைவில் கொள்ளுங்கள். உங்கள் அன்பினால் என்னை உங்களிடம் ஈர்க்க முடியும். இந்தப் பௌதீக உடலில் நீங்கள் என்னை அழைத்துச் செல்ல முடியாது, ஆனால் நீங்கள் என்னை என் உண்மை ரூபத்தில் ஈர்க்கலாம். நான் முன்பு பலமுறை சொல்லியிருக்கிறேன், மீண்டும் மீண்டும் சொல்கிறேன், இறுதி மூச்சு விடும் வேளையில் எனது பெயரை உச்சரிப்பவர் என்னிடம் வருகிறார்.**

**எனக்குப் பிரியமான கர்ஷெத் தலாட்டி சமீபத்தில் லண்டனில் காலமானார். அவர் இதயக் கோளாறால் பாதிக்கப்பட்டார். அதையும் மீறி இறுதி மூச்சை விடும் நேரத்தில், எனது பெயரை மொழிந்தார். மும்பையில் வாழும் அவரது தாயார், அவர் காலமானதை அறிந்ததும், அதை அமைதியாக, நிலைகுலையாமல் ஏற்றுக்கொண்டார். அவர் அழுது புலம்பவில்லை. பாபாவின் ஆசியுடன், அவரது மகன் எனது பெயரை உதட்டில் வைத்து உச்சரித்துக்கொண்டே இறுதி மூச்சை விட்டதில் அவர் மகிழ்ச்சி அடைந்தார்.**

**ஒரு குழந்தைக்குக் கூட மரணத்தைக் குறித்த ஒருவித புரிதல் உள்ளது, ஆனால் ஒருவர் தனது கடைசி நிமிடத்தில், என்னை நினைவில் கொள்ள மறந்து விடுகிறார். உயிரைத் துறக்கும் போது, எனது பெயரை உச்சரிப்பது மாபெரும் அதிர்ஷ்டம். ஆனால் நான் நேசிக்கப்பட வேண்டிய விதத்தில் நீங்கள் உண்மையிலேயே நேசித்தால், நீங்கள் என்றென்றும் அழியாதவர்களாகிவிடுவீர்கள்!**

ராவ்ஸாஹேப் ஷர்மா என்ற வழக்கறிஞர், பாபாவிற்கு ஹமிர்பூருடன் என்ன பழைய தொடர்பு இருக்கிறது என்பதைத் தெளிவுபடுத்துமாறு கேட்டுக் கொண்டார். சில நிமிடங்கள் தீவிரமாக இருந்த பாபா, **“நான் 700**

**ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் இந்த உலகில் வரும் வேளையில், என்னை நினைவுபடுத்துங்கள்; அப்போது தெளிவுபடுத்துகிறேன்!**" என்று பதிலளித்தார். அனைவரும் கலகலவென சிரித்தனர்; பாபா அவர்களை மதிய உணவுக்குச் செல்லுமாறு கேட்டுக்கொண்டார்.

ஹமிர்பூர் குழுவினர் புறப்படும்போது, பாபா, பவானி நிகம், அவரது சகோதரர்கள் மற்றும் லக்ஷ்மிசந்த் பாலிவால், அவரது சகோதரர்களையும் அழைத்தார். ஒரு வருடத்திற்கு முன்னதாக, மெஹராஸாத்தில் பாபா அவர்களுக்கிடையே இருந்த விரோத உணர்வுகளைத் தணித்தார்; ஆனாலும், இன்னும் சில சுவடுகள் ஒட்டிக்கொண்டிருந்தன. இதை முற்றிலுமாக அகற்றும் விதத்தில் பாபா அவர்களிடம் அதைப் பற்றி கேட்டார். பின்னர், ஒவ்வொருவரையும் தழுவி, பாபா, அவர்களின் இதயங்களில் எஞ்சியிருந்த வெறுப்புணர்வுகளை அகற்றினார்.

மும்பையிலிருந்து வந்த மராட்டி குழுவினர் உள்ளே நுழைந்ததும், பாபா, "**உங்களில் முந்தைய சகவாச நிகழ்ச்சிகளில் யார் யார் பங்கெடுத்தனர்?**" என வினவ, ஏறக்குறைய அனைவரும் உடனடியாக தங்கள் கைகளை உயர்த்தினர்; பாபா, "**அப்படியானால், இப்போது ஏன் வந்தீர்கள்?**" என்று கேலி செய்தார். அவர், **அனைவரும் ஒருவரையொருவர் சந்தித்து, அவர்கள் தொடர்ந்து அவரை நேசித்து, நினைவில் கொண்டால், பாபா மகிழ்ச்சியாக இருப்பார்** என்று திரும்பத் திரும்ப எடுத்துரைக்க, சிலர் கண்கலங்கி கண்ணீர் சிந்தினர்.

அஹமதுநகர் அன்பர்கள் அழைக்கப்பட்டபோது, பண்டோபா தனது குடும்ப பிரச்சினைகளை பாபா முன் வைத்தார். பாபா அங்கிருந்த அனைவருக்கும், "**பொறுப்புகளை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும், ஆனால் அவற்றில் பற்றற்ற முறையில் இருக்க வேண்டும்**" என்று அறிவுறுத்தினார். அவர் அடுத்த நாள் விளக்கப்போவதை கவனமாகக் கேட்குமாறு காக்கா சிஞ்சோர்க்கருக்கு அறிவுறுத்தி மேலும் கூறினார்:

**புத்தகங்களும் சொற்பொழிவுகளும் ஒருவரின் ஆன்மீக மறுமலர்ச்சியைக் கொண்டு வராது. ஒருவர் தன் மீது தானே குதிக்க முடியாதது போல, மனத்தால் மனதை அழிக்க முடியாது. நான் நேசிக்கப்பட வேண்டிய விதத்தில் என்னை நேசிப்பதன் மூலம் மட்டுமே, மனதை அழிக்க முடியும். என் மீது எவருக்கும் அன்பு இருக்கலாம், ஆனால் நான் விரும்பும் அன்பு இல்லை.**

**சிங்கங்களை விரும்பி, ஒரு சிங்கத்தை தனது வீட்டில் வைத்திருக்கும் அளவுக்குப் பாராட்டும் ஒருவரோடு, என் அன்பர்கள் ஒப்பிடப்படலாம். ஆனால், சிங்கத்தைக் கண்டு பயந்து, அதைக் கூண்டில் அடைத்து விடுகிறார். சிங்கம் எப்பொழுதும் கூண்டில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும், அதற்கு உணவளிக்கும் போதும் கூட; அவர் கூண்டுக்கு வெளியே தூரத்தில் நின்று கொண்டு, செல்லப்பிராணிக்கு உணவளிக்கிறார்.**

**பாபாவும் தனது அன்பர்களால் சிங்கம் போல நடத்தப்படுகிறார். அன்பு உள்ளது, அபிமானம் உள்ளது, பாபாவை மகிழ்ச்சியாகவும், சௌகரியமாகவும் பார்க்க வேண்டும் என்ற தீவிர ஆர்வமும் உள்ளது, அவரும் தனது அன்பர்களின் அன்பினால் அடிக்கடி உணவூட்டப்படுகிறார். ஆனால் இவையனைத்தும், பாபாவை ஒருவருடைய சுயத்திலிருந்து பிரித்து வைத்து செய்யப்படுகிறது. உண்மையில் தேவையானது என்னவெனில், அன்பர்கள் 'கூண்டை'த் திறந்து, தங்கள் பாபாவின் தீவிர அன்பின் மூலம், கூண்டினுள்ளே தங்களைத் தூக்கி எறிந்து, அன்பிற்குரிய சிங்கத்திற்கு உணவாக வேண்டும். அன்பிற்குரியவரின் மீதான தனது அன்பின் மூலம், தன்னை முழுவதுமாக உட்கொள்ளப்படுவதற்கு அன்பர் தயாராக இருக்க வேண்டும்.**

25ஆம் தேதி பிற்பகல் 3 மணி முதல் 5:00 மணி வரை, பொது தரிசனம் நடைபெறும், அதில் அவர் விரும்பியவர்களை அழைத்து வரலாம் என்று பாபா, நவ்லேயிடம் தெரிவித்தார்.

ஷோலாபூர் அன்பர்கள் பாபாவின் சிலை ஒன்றை எழுப்ப விரும்பினர். அவர்கள் காடேக்கருடனும், தங்கள் குழுக்களுடனும் கலந்துரையாடுமாறு பாபா கேட்டுக் கொண்டார், "**நான் அமெரிக்காவிலிருந்து திரும்பிய பின்னர், எங்கும் எதிலும் கலந்துகொள்ள மாட்டேன்**" என்று கூறினார்.

பாவ் கல்சூரியின் அண்ணன் மகன் வீரேந்திர ஸிங் கல்சூரி தனது மனைவி புஷ்பாவுடன் வந்திருந்தார்; ஆனால் பாபாவின் கட்டளைக்கு இணங்க, பாவ் அவர்களுடன் பேசவில்லை. அவரை வரவழைத்து, பாபா அதைப் பற்றி கேட்டபோது, பாவ் கல்சூரி பதிலளித்தார், "நான் எனது உறவினர்கள் எவருடனும் பேசக்கூடாது என்பது உங்கள் உத்தரவு, அதனால் நான் அவர்களுடன் பேசவில்லை."

பாபா சற்று வருத்தத்துடன், "**உங்களைப் போல முட்டாள் ஒருவரை நான் பார்த்ததில்லை! வீரேந்திரா, புஷ்பா இருவரும் உங்கள் உறவினர்களா, அல்லது எனது சகவாச உறுப்பினர்களா? போய் அவர்களுடன் பேசுங்கள்.**" சிறிது நேரம் கழித்து பாபா, "**ஆனால் ரமாவிடம் பேச வேண்டாம். அவரும் சகவாச உறுப்பினர், ஆனால் அவரைப் பார்க்கவும், அவருடன் பேசவும் வேண்டாம். நீங்கள் மெஹர்நாத், ஷீலா இருவரையும் சந்தித்தீர்களா?**" என வினவினார்.

"அவர்களை நான் எப்படி சந்தித்திருக்க முடியும், அது உங்கள் உத்தரவுக்கு எதிரானது?" என்று பாவ் கல்சூரி கூறியதைக் கேட்டு, பாபா அகமகிழ்ந்தார்.

பாபா பின்பு, போபால் நகரிலிருந்து டி.ஒய். நஃப்டே (D.Y. NAFDE) மற்றும் அவரது குடும்பத்தினரையும், ஜபல்பூரிலிருந்து ஒய்.எல். முனிராஜின் (Y.L. MUNIRAJ) குடும்பத்தினரையும், டெஹ்ரா டூனிலிருந்து பால் கிஸன் (BAL KISAN), மெஹர் காந்தா (MEHER KANTA) ஆகியோரையும் அழைத்தார். இந்தக் குடும்பங்கள்,

பாபாவின் நெருங்கிய தொடர்பில் இருந்தன, ஆனால் அவர்களின் அன்பு ஆரவாரமின்றி அமைதியாக இருந்தது, பாபா அவர்களுடன் தனது அளவுகடந்த மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார். நஃப்டே 1952இல் நாக்பூரில் நானா கேர் மூலமாக பாபாவை முதன்முதலில் சந்தித்தார், மேலும் அவரது குழந்தைகள் பாபா மீது மிகுந்த அன்புடன் இருந்தனர். முனிராஜ் பாபாவைப் பற்றி முதன்முதலில் தாடே குடும்பத்தினர் மூலம் கேள்விப்பட்டு, 1954 செப்டம்பர் கூட்டத்தில் பாபாவை சந்தித்தார்.

1958 பிப்ரவரி 17ஆம் தேதி மதியம் சுமார் 2:10 மணியளவில், பாபா, மெஹராபாத் மண்டபத்தில் தனது ஊழியர்களின் கூட்டத்தை நடத்தினார். இந்தியா, பாகிஸ்தான், சிலோன், காஷ்மீர் ஆகிய நாடுகளைச் சேர்ந்த சேவகர்கள் கலந்து கொண்டனர். உண்மையில், பாபா வெவ்வேறு சேவகர்களையும், அவர்களது குழுத் தலைவர்களையும் தனித்தனியாகச் சந்திக்க வேண்டியிருந்தது, ஆனால் அவர் இந்த சந்திப்பை ஒன்றிணைந்த கூட்டமாக மாற்றினார், இதில் பெண்மணிகள் உட்பட சகவாச நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டவர்கள் அனைவரும் பங்கேற்றனர்.

பாபா ஹமிர்பூர் குழுத் தலைவர்களை சற்று காத்திருக்குமாறு கூறி, கேஷவ் நிகமிடம், பாபாவின் பணியைச் செய்வது குறித்து, அவருடைய சேவகர்கள் என்ன புரிந்து கொண்டனர், அவருடைய பணியை அவர்கள் உண்மையாகவும், முழு நேர்மையுடனும் செய்கிறார்களா என்றும் கேட்டார். இந்தக் கேள்வியை கேஷவ், சேவகர்கள் முன் வைத்தபோது, சிலர் உண்மையாகப் பணிபுரிவதாகவும், சிலர் தங்கள் திறன் மற்றும் புரிதலுக்கு ஏற்ப செயல்படுவதாகவும் தெரிவித்தனர். கயா பிரசாத் கரே கூறினார், “பாபா, இது வரை நான் போதுமான அளவுக்கு பணிபுரியவில்லை, ஆனால் இனிமேல் நான் விடாமுயற்சியுடன் செய்வேன் என்று உறுதியளிக்கிறேன், அதற்காக உங்கள் ஆசீர்வாதத்தை நாடுகிறேன்.”

பாபா கைகளைக் கூப்பி, **“எனது அன்பின் செய்தியை முழு மனதுடனும் அன்புடனும் பரப்பும் அனைவருக்கும் எனது வணக்கத்தைச் செலுத்துகிறேன்”** என்று கூறினார். **‘ஒவ்வொரு குழுவையும் தனித்தனியாக அழைத்து, ஒரே விஷயத்தை விளக்குவதானால், நீண்ட நேரம் பிடிக்கும்**’ என்று அவர் கருத்துத் தெரிவித்தார்; **‘எனவே, இந்த ஒருங்கிணைந்த கூட்டம்**’. பாபா, 1954இல் ராஜமுந்திரியில் இரவு முழுவதும் நடந்த சேவகர்கள் கூட்டத்தை நினைவு கூர்ந்தார்; அப்போதுதான், உண்மையான பணி என்றால் என்ன என்பதை விளக்கினார். பின்னர், அவர் தனது பணி மற்றும் சேவகர்கள் பற்றிய கருத்தை வழங்கினார்:

**பாபாவின் பணி என்றால் என்ன? பாபா யார்? என்ன? என்பதை மக்களுக்கு விளக்குவது. ஒருவர் அனைவரையும் நேசிக்க வேண்டும், ஒருவரையும் அவதூறாக நடத்தவோ, பேசவோ கூடாது; பிறரை துன்புறுத்தாமல், தூய்மையான இதயத்தை கொண்டிருக்க வேண்டும் என்று பாபா எப்போதும் வலியுறுத்தியுள்ளார். பாபா யுகத்தின் அவதார புருஷர்,**

மேலும் பாபாவை எப்படி நேசிக்க வேண்டுமோ அப்படி நேசிப்பதே ஒவ்வொருவரும் செய்யக்கூடிய மிகப்பெரிய பணி. சேவகர்களுக்கே இந்தப் பண்புக்கூறுகள் இல்லையெனில், அவர்களால் எப்படி மக்களில் மாற்றத்தை ஏற்படுத்தும் விதத்தில் பணிபுரிய முடியும்? மாறாக, அது பாபாவின் பணியாக இல்லாமல், பாபாவின் மீதான பாரத்தை அதிகரிப்பதாக இருக்கும்.

இரண்டு வகையான சேவகர்கள் உள்ளனர். உதாரணமாக, கேஷவ், 'பாபா யார், பாபா என்ன சொல்கிறார்?' என்று மக்களுக்கு எடுத்துரைக்கிறார்; மேலும் எனது சேவகர்கள் வாழ்க்கையில் எப்படி இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேனோ, அப்படித்தான் அவர் செயல்படுகிறார், வாழ்கிறார். பின்னர், அங்கே 'டில்லிபதி'யும் இருக்கிறார், அவரும் தனது சொந்த வழியில் என்னை நேசிக்கிறார், ஆனால் நான் விரும்பும் குணநலன்கள் இல்லாதவர். அப்படிப்பட்ட ஒருவர், எனது பணியை ஒழுங்கற்ற முறையில் செய்வதற்கு பதிலாக, பிறரிடம் தன் இயலாமையை ஒப்புக்கொண்டு, நான் என்ன செய்ய வேண்டும் என்று விரும்புகிறேனோ, அதை அவரால் செய்ய முடியாவிட்டாலும், அவர் நேர்மையானவராக இருப்பதால், அவருக்கென எந்தப் பிணைப்பும் உருவாக்கப்படுவதில்லை. அத்தகைய சேவகர்களின் சார்பாக நான் எந்த சுமையையும் உணரப்போவதுமில்லை. பாபா கூறுவதை எடுத்துரைக்க முயலும் முன், சேவகர்கள் தங்கள் பலவீனங்களை ஒப்புக்கொள்ளும் அளவுக்கு தைரியமாகவும், நேர்மையாகவும் இருக்க வேண்டும்.

பாபாவின் பணியைச் செய்வதில் பெரும் சிரமம் ஒன்று உள்ளது. சேவகர்கள், பாபா மீது அன்புள்ளம் கொண்டவர்கள் என்பதில் சந்தேகமில்லை; அதே வேளையில், அவர்களுக்கே உரித்தான பலவீனங்களும் உள்ளன. ஒருவரின் அகங்காரத்தை இழக்க ஒருவர் எவ்வளவு முயற்சி செய்தாலும், அந்த அகங்காரம் மற்றும் ஒரு மனிதனால் ஆட்கொள்ளப்பட்ட சுய-முக்கியத்துவத்தின் உணர்வை வெளிப்படுத்துவதில் பெரும் சிரமம் உள்ளது. இதயம் அகந்தையை பலவீனப்படுத்தும் அதே வேளையில், மனம் அதை வலுப்படுத்துகிறது. பாபாவின் பணியைச் செய்வதில் மனம் மகத்துவ உணர்வைப் பெறுகிறது. இதிலிருந்து தப்ப முடியாது.

அப்போது என்ன செய்ய வேண்டும்? அடக்கமாக இருக்க முயற்சி செய்யுங்கள். ஆனால், பாபாவின் அன்பின் செய்தியை, வெகுதூரம் பரப்பும் பொறுப்பில் இருக்கும் ஒரு குழுவின் தலைவர், பணிவாக இருக்க முயன்றாலும், அவருடைய சக ஊழியர்கள் அதை வெறும் பாசாங்குத்தனமாகக் கருதி வெறுப்புணர்வை வெளிப்படுத்தும் அதேவேளையில், பிறர், அவரது தலைமை பொறுப்பிற்காக அவரை மதிப்பார்கள்.

பாபாவின் பணியைச் செய்வதில் உள்ள மற்றுமொரு சிரமம் என்னவெனில், சேவகர்கள் ஒத்துழைக்கத் தவறுவது. கருத்து வேறுபாடுகள்

**நிலவி வருவதால், ஒருவர் மீது ஒருவர் குறை காண்கின்றனர். இறுதி விளைவு, பணி பாதிக்கப்படுகிறது. அன்பு, சகிப்புத்தன்மை, மாசற்ற இதயம் பற்றிய எனது செய்தியை மக்களிடம் எடுத்துச் செல்லத் துணிந்தாலும், சேவகர்கள் தங்களுக்குள் வேறுபாடு காட்டுவதிலிருந்து இவை அனைத்தும் விளைகின்றன.**

'**இது உண்மையா?**' என்று பாபா கேட்டார், அனைத்து கோணங்களிலிருந்தும் 'உண்மை, உண்மை!' என்ற குரல்கள் எழுந்தன. '**இந்தச் சிக்கலான சூழ்நிலைகளுக்கு என்னதான் தீர்வு?**' என்று ராமகிருஷ்ணனிடம் பாபா கேட்டதற்கு, "பாபா, இதற்கெல்லாம் மாயையே காரணம்" என்று பதிலளித்தார்.

அதற்கு பாபா கூறினார்:

**மாயா இல்லாமல் இருந்திருந்தால், படைப்பு ஆரம்பமான நாள் முதல், நான் தொடங்கிய பணியிலிருந்து இன்னமும் விடுதலை அடையாத சூழ்நிலை உருவாகி இருக்காது. அப்படியெனும்போது, வேறுபாடுகள் மற்றும் ஒற்றுமையின்மை இந்த ஓரங்க நாடகத்தில் எங்கிருந்து வரும்? உண்மையில், நான், நானே, சேவகன், சேவை, வேலை எல்லாமே. நிச்சயமாக, இந்த மாயா இதற்கு ஒரு தீர்வு அல்ல; நான் பல்லாண்டு காலமாக இதற்குப் பொருத்தமான நிவாரணியைத் தேடிக்கொண்டிருக்கிறேன், ஆனால் இதுவரை நான் அதைக் கண்டுபிடிக்கவில்லை. எவரேனும் பரிந்துரைக்க முடியுமா?**

ஒருவரும் பதிலளிக்காதபோது பாபா கூறினார்:

**ஆனால் இந்த வகையான ஒற்றுமையின்மைக்கு ஒரு தீர்வு உள்ளது. சேவகர்கள் நேர்மையும், நாணயமுமாகச் செயல்பட முயற்சித்தால், அது எளிதாக இருக்கும். உண்மையான சேவகர்கள், தங்கள் தலைவருக்கு உதவுவது மட்டுமின்றி, அவருடைய குற்றம், குறைகளையும் கண்டுகொள்ள மாட்டார்கள். இதுபோன்ற சந்தர்ப்பங்களில், சேவகர்கள் தலைவர்களாக மாறினாலும், நேர்மையான ஊழியர்களாகவே இருக்கிறார்கள். எனது சேவகர்கள் இந்த அறிவுரையைப் பின்பற்றி, தங்கள் தலைவர்கள் மற்றும் சக ஊழியர்களுடன் இதயபூர்வமாக ஒத்துழைத்து, குழுத் தலைவர்களிடம் நான்தான் இந்தப் பொறுப்பை ஒப்படைத்தேன் என்பதைப் புரிந்துகொள்வதானால், பாபாவின் பணி வெற்றிகரமாக நிறைவேறும்.**

பாபா ஆந்திராவில் அவரது அன்பின் செய்தியை ஒவ்வொரு வீட்டிலும் பரப்பிய சம்பவங்களை மேற்கோள் காட்டினார். கருத்து வேறுபாடுகள் இருந்தபோதிலும், அவரவர் பணியை உற்சாகத்துடன் செய்து வந்தனர். **பாபா சேவகர்களிடம் அவருடைய அறிவுரையைப் பின்பற்றும்படி கேட்டுக் கொண்டார். "இல்லையென்றால், பணியை முழுவதுமாக விட்டுவிடுவது நல்லது**" என்று அவர் கூறி முடித்தார்.

அனைவரும் கலைந்து செல்வதற்கு முன்பு, பாபா, அவர்கள் மாலை 3:30 மணிக்கு, தேநீருக்குப் பிறகு, பந்தலில் இருக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

சகன் சமையலறையின் பொறுப்பாளராக இருந்தார், மேலும் சகவாச குழுவிற்கு சுவையான உணவு மற்றும் தேநீர் வழங்க அயராது உழைத்தார். அவர் இரவு 8:00 மணிக்கு தூங்கச் சென்று, பாவ் கல்சூரி நள்ளிரவில் அவரை எழுப்பும் அந்த வேளையில், காலை உணவுக்கான தயாரிப்புகளைத் தொடங்கிய பின்னர் அவர் தூங்கச் சென்றார். அதிகாலை 4:00 மணிக்கு எழுந்து, பாவ் சமையலறைக்குச் செல்லும் வேளையில், சகன் 800 நபர்களுக்கான காலை உணவைத் தயார் செய்து, தேநீர் தயாரிக்கும் ஆயத்தத்தில் இருந்தது, சகவாச நாட்களில் வழக்கமாக நடந்த ஒன்று. காலை 5:00 மணிக்கு சகவாச குழுவின் ஆண்களும் பெண்களும் காலை உணவை உட்கொண்டனர்; எல்லாமே கடிகாரத்தின் துல்லிய நகர்வுகள் போல நடந்தது. ஆனாலும், அதை எப்படி மேற்பார்வையிட்டு, சமாளிக்க முடிந்தது என்று சகவாசத்தில் கலந்துகொண்ட எவருக்கும் தெரியாது!

டெஹ்ரா டூன் பஜனைக் குழுவினர் கலகலப்பான, பரவசமான பாடலுடன் தெய்வீக மதுபானத்தில் மேலும் சுவையை சேர்த்ததால், சந்திப்புக் கூடாரம் பிற்பகல் 3:30 மணிக்கு முன்பே நிரம்பியது. பாபா பந்தலுக்குள் நுழைந்து, தீவிரமான தோற்றத்துடன் மேடையில் அமர்ந்தார். அப்துல் மஜித் கானை பாபா அழைத்து, **"உங்கள் கவனத்தை 100 சதவீதம் என் மீது செலுத்துங்கள், நான் உங்களை நேசிப்பதால் இதைச் சொல்கிறேன்"** என்று வலியுறுத்திக் கூறினார்.

சேவகர்கள் கூட்டத்தில் தூங்கி விழுந்ததற்காக, பாலக் பகவானிடம் சீற்றமடைந்த பாபா, விழித்திருக்குமாறு வலியுறுத்தினார். பாலக் பகவான், "பாபாவின் கருணை என் மீது இருக்கிறது" என்று பதிலளித்தார்.

அதற்கு பாபா, **"எனது கருணையே உங்களை வாழ வைக்கிறது!"** என்றார்.

சகவாசக் குழுவினரில் ஒருவர் தாமதமாகப் பந்தலுக்குள் நுழைந்த போது, பாபா அவரிடம் காரணத்தைக் கேட்க, அந்த மனிதர் வருந்துவதாகக் கூறியதும், பாபா இவ்வாறு கூறினார்: **"நீங்கள் வருந்துகிறீர்கள் என்றால், இந்தப் பிரபஞ்சத்தைப் படைத்ததற்காக நானும் மிகவும் வருந்துகிறேன், அதன் பாரத்தை நான் தொடர்ந்து சுமக்கிறேன்! நீங்கள் இங்கு இருக்குமாறு நான் ஒரு நேரத்தைக் குறிப்பிடும்போது, அந்த நேரத்திற்கு முன்பே அனைவரும் இங்கு இருக்க வேண்டும்."**

பின்னர் அவர் கூட்டத்தினரிடம் தெரிவித்தார்: **"நாளை ஏராளமான பணிகள் இருப்பதால், நான் ஐந்து மணிக்கு மெஹராஸாத்திற்குப் புறப்பட விரும்புகிறேன். நாளை, கோதாவரி மாய் இங்கே இருப்பார்கள், நான் உரைகள் வழங்கவேண்டும். இந்த நாட்களில் நான், இடைப்பட்ட நேரங்களில் மெஹராஸாத்தில், எதிர்வரும் மேற்கத்திய** (மர்டில் பீச்) **சகவாசத்தைப் பற்றிய கடிதங்களுக்கு பதிலளிக்க வேண்டும்."**

பாவ் கல்சூரி பந்தலுக்குள் நுழைந்து, அவரை அறிமுகப்படுத்தியதும், பாபா அவரைப் பாராட்டினார், **"இவர் ஒரு கடினமான, நேர்மையான**

**உழைப்பாளி. அவர் என்னுடன் மெஹராஸாத்தில் இருக்கிறார், பல பணிகளை ஆண்டு முழுவதும் செய்கிறார்; இப்போது சகவாச நிர்வாகத்திற்கு உதவ மெஹராபாத்தில் இருக்கிறார்."**

சமீபத்தில் வெளியிடப்பட்ட 'லிஸன் ஹியுமானிட்டி' (LISTEN HUMANITY) என்ற புத்தகத்தைப் பற்றி பாபா குறிப்பிட்டார்: **"அதன் முதல் பாகத்தில், 1955, நவம்பர்-டிசம்பர் மாதங்களில் நடந்த சகவாச நிகழ்வுகளின் தகவல் தொகுப்பு வழங்கப்பட்டுள்ளது. இரண்டாவது பாகத்தில், எனது சில செய்திகளும், உரைகளும் மறு உருவாக்கம் செய்யப்பட்டுள்ளன. மூன்றாம் பாகத்தில், எனது இக்கால அவதார வருகையைப் பற்றிய அழகான விளக்கம் வழங்கப்பட்டுள்ளது."**

**ஒவ்வொருவரும் அந்தப் புத்தகத்தின் பிரதியை வைத்திருப்பதன் முக்கியத்துவத்தை பாபா வலியுறுத்தினார். தனது அன்பர்களில் சிலர் குறிப்பிட்ட தொகைகளை அன்பளிப்பாக வழங்கியதைப் பணமாக ஏற்றுக்கொள்ளாமல், அதைத் திருப்பிக் கொடுத்து, அந்தப் புத்தகத்தின் பிரதிகளை வாங்கி, ஆர்வமுள்ளவர்களுக்கு** (ஆனால் அதை வாங்கப் போதுமான பணம் இல்லாதவர்களுக்கு) **வழங்கவேண்டும்** என்று பாபா விளக்கினார். **'லைஃப் அட் இட்ஸ் பெஸ்ட்'** (LIFE AT ITS BEST) **என்ற புதிய புத்தகம்** (அமெரிக்க ஸூஃபி குழுவிலிருந்து) **வெளிவரவுள்ளதாக அவர் கூட்டத்திற்கு தெரிவித்தார்.** இது தொடர்பாக பாபா மேலும் கூறியதாவது:

**தெய்வீக அன்பை அடையப் பெற்ற ஒருவருக்கு புத்தகம் தேவையில்லை! படிப்பதானாலும், விளக்கங்கள் வழங்கப்பட்டிருந்தாலும் வார்த்தைகள் அனைத்தும் வெறும் வார்த்தைகள்தான். அவை வெறும் அறிவு சார்ந்த திருப்தியை வழங்குவதைத் தவிர, ஒருவரை வேறு எங்கும் எடுத்துச்செல்வதில்லை. கடவுள் மீதான அன்பு ஒன்றுதான் அற்புதத்தை நிகழ்த்துகிறது, ஏனெனில் அன்பு மனதுக்கும் அறிவுக்கும் அப்பாற்பட்டது. அப்படியானால் படிக்க வேண்டிய தேவைதான் என்ன? என்னை நேசிப்பவர்கள் எதையும் படிக்க வேண்டியதில்லை. அன்பு ஒருவரை அறிவுக்கு அப்பால், மனதிற்கு அப்பால் அழைத்துச் செல்வதால், நேசிக்கும் ஒருவருக்கு எதையும் வாசிக்க வேண்டிய தேவையில்லை.**

**நான் ஆதிகாலத்தவன் என்று அதிகாரத்துடன் கூறுகிறேன். இதை நான் உலகம் முழுவதும் பறைசாற்றி வருகிறேன். நீங்கள் என்னை முழு மனதுடன் நேசித்தால், சுதந்திரமாக இருப்பீர்கள்!**

பாபா, தான் அழைத்து வந்து, தனி அறையில் தங்க வைக்கப்பட்ட மஸ்தைப் பற்றி குறிப்பிட்டார்: **"நாம் அனைவரும் இங்கு ஒன்றாகத் தோழர்களைப்போல் இருக்கிறோம். உங்களில் இருவர் மஸ்தை அணுகி இரண்டு ரூபாயும், லட்டுகளையும் வழங்கியதாகக் கேள்விப்பட்டேன். மலையில் அதை நான் கடுமையாகத் தடை செய்திருந்தேன்.**

**"உங்களில் அதைச் செய்தவர் யார்? அவர்கள் முன் வந்து தங்கள் குற்றத்தை ஒப்புக்கொள்ளும் வேளையில், நான் அவர்களை மன்னிக்க**

**முடியும். அவர்கள் அஞ்ச வேண்டிய தேவையில்லை, ஏனெனில் நான் எல்லையற்ற அளவுக்கு மன்னிக்கும் தன்மையுள்ளவன்.**"

அப்துல் மஜித் கான் எழுந்து நின்று, மஸ்துக்கு ஒரு ரூபாய் கொடுத்ததை ஒப்புக்கொண்டார். பாபா அவரைத் திருத்தினார், "**நான் ஸாஹேப்-இ-ஸமான், யுகத்தின் தலைவன். நீங்கள் ஏன் கிளைகளைப் பற்றிப்பிடிக்கிறீர்கள்? நீங்கள் ஏன் ஆணிவேரைப் பற்றிக் கொள்ளக்கூடாது? உங்கள் ஆழ் இதயத்தில் நீங்கள் என்னை கடவுளாக அரியணையில் அமர்த்த வேண்டும்!**" என்று கூறி பாபா அவரைத் தழுவினார்.

இரண்டாவது நபரும் பாபா முன் வந்தார். மஸ்திற்கு லட்டுகளையும் ஒரு ரூபாய் நாணயத்தையும் வழங்கியதாகக் கூறியபோது, பாபா அவரையும் மன்னித்து அரவணைத்துக் கொண்டார். பாபாவின் அறிவுறுத்தல்களைக் கேட்பதற்கு முன்னரே இருவரும், மஸ்திற்குப் பிரசாதத்தை வழங்கினர் என்பது உறுதியானது, ஆனால் அவர்கள் இதை பாபாவிடம் குறிப்பிடவில்லை. அதை அறிந்ததும் பாபா அவர்களிடம் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்.

லோக்கண்டே தனது மூன்று குழந்தைகளையும் மேடைக்கு அழைத்து வந்தார். அவர்கள் நான்கு முதல் எட்டு வயதிற்கு உள்ளானவர்கள், மூவரும் பாபாவின் முன்னால் பாடினர். பிறகு, பாபா அவர்களைத் ஆரத்தழுவினார்.

தக்வான் கிராமத்தைச் சார்ந்த விஷ்ணு ஷர்மா, காதல் களிப்பு நிறைந்த பாடலால் பாபாவை சிரிக்க வைத்தார்.

அடுத்ததாக, ருஸ்தம் காக்காவும் அவரது மனைவி ஸில்லாவும் பாட, அவர்களின் மகன் மானேக் தபேலாவைத் துணைக்கருவியாக வாசித்தார்.

ஆதி அழைத்து வந்திருந்த ஒரு சிறுவன் பாபாவிற்காகப் பாடியபோது, மானேக் தபேலாவுடன் இணைந்தார். அனைத்து குழந்தைகளையும் பாபா கட்டித் தழுவினார், ஆனால் நாளை முதல் எந்தக் குழந்தையையும் மேடைக்கு அழைத்து வரக்கூடாது என்று குறிப்பிட்டார்.

பாபாவின் அரவணைப்பைப் பெற, மற்றுமொரு புத்திசாலித்தனமான சூழ்ச்சியை எல்சா திட்டமிட்டிருந்தார்: "பாபா, இன்று நீங்கள் என்னை மீண்டும் அரவணைத்தால், உங்கள் உடல் துன்பங்கள் அனைத்தும் மறைந்துவிடும் என்று மிகவும் நம்பகமான ஆதாரத்திலிருந்து கேள்விப்பட்டேன்" என்றார்.

பாபாவின் உடனடியான பதில்: "**நான் உங்களை விட எனது வலியை அதிகம் விரும்புகிறேன்!**" இருப்பினும், அவர் எல்சாவைத் தழுவினார்.

மறுநாள் அவர் சொற்பொழிவுகளை வழங்கியபோது, அவர்கள் பாபாவின் உற்சாகமான ஜெய் முழக்கங்களுடன் கூச்சலிட்டு குறுக்கிடக்கூடாது, ஆனால் உரையில் கூறப்பட்டதைப் புரிந்துகொள்ள முயற்சிக்க வேண்டும் என்று பாபா சகவாச நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டவர்களை எச்சரித்தார். பாபா, "**என் முன்னிலையில், நீங்கள் ஒழுக்கத்துடன் நடந்து கொள்ள வேண்டும்**" என்று கூறி முடித்தார்.

நிகழ்ச்சியின் போது, பந்தலின் ஒருபுறம் ஆண்களும், மறுபுறம் பெண்மணிகளும் அமர்ந்திருந்தனர். நூற்றுக்கணக்கானோர் பங்கெடுத்த கூட்ட நெரிசலில், முழு நேரமும் வெகு தொலைவில் அமர்ந்திருந்த ரோடா துபாஷ், பாபா தன்னை கவனித்திருக்கக் கூடுமா என்ற சந்தேகத்தில் ஆழ்ந்திருந்தார். நிரஞ்சன் ஸிங், ரோடாவின் எதிரே, இடைப்பட்ட நடைபாதை அருகே அமர்ந்திருந்தார். சிறிது நேரத்திற்குப் பிறகு பாபா, ஒலிப்பெருக்கி மூலம் வினவினார்: **"நிரஞ்சன் ஸிங், இன்று ஏன் உங்கள் இருக்கையை மாற்றினீர்கள்? என்னால் உங்களைப் பார்க்க முடியவில்லை."** ரோடா திடுக்கிட்டுப் போனார். ஏனெனில், பாபா, நிரஞ்சன் ஸிங்கிடம் அந்தக் கேள்வியைக் கேட்டிருந்தாலும், அவர் அன்று தனது இருக்கையை மாற்றாததால், பாபாவின் கேள்வி ரோடாவை நோக்கிக் கேட்கப்பட்டதாகவே தோன்றியது.

மனோகர் & மோனா ஸாக்கரே இருவரும் பயணித்த ரயில் மெஹராபாத்தைக் கடக்கவிருந்ததால், பாபா பந்தலின் பக்கங்களிலிருந்த திரையை உயர்த்தி, அவர்களை நோக்கி கைகளை அசைத்தார். அதற்குப் பிறகு மண்டபத்தை விட்டு வெளியேறும் முன், பாபா சிறிது தண்ணீர் அருந்தியது அவருக்கு இருமலை ஏற்படுத்தியது. முந்தைய நாள், அதே நேரத்தில், தண்ணீர் அருந்திய போது இருமல் வந்ததை அவர் நினைவு கூர்ந்தார். **"இதன் முக்கியத்துவம் என்ன? கார்மேகம் என்னை நினைவில் கொண்டிருப்பதை இது காட்டுகிறது"** என்று அவர் குறிப்பிட்டார்.

பூனா பஜனைக் குழுவினர் பாபாவின் ஆரத்தியை நிகழ்த்தினர்; அதன் பிறகு, மாலை 5:30 மணிக்கு, பாபா மீண்டும் மெஹராஸாத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். அவ்வேளையில், சகவாசக் குழுவினருக்கு, அடுத்த நாள் நிகழ்ச்சியைப் பற்றியும், முதல் முறையாக மெஹராபாத்திலிருந்து நேரடியாகப் புறப்பட ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சிறப்பு ரயில் பற்றியும் பாவ் கல்சூரி விளக்கினார்.

1958 பிப்ரவரி 18ஆம் தேதி செவ்வாய்க்கிழமை காலை, பாபா, 8:00 மணிக்கு வந்து, நேராக மண்டபத்திற்கு எதிரே அமைந்த தனது நேர்காணல் அறைக்குச் சென்றார். சந்திப்பு பந்தலில் பக்தர்கள் ஏற்கனவே இசை நிகழ்ச்சியை ஆரம்பித்துவிட்டனர். பாபாவின் பிரவேசத்திற்கு சில நிமிடங்களுக்கு முன்பு, கோதாவரி மாய் இரண்டு கன்யாக்களுடன் வருகை தந்தார். பாபா வந்து மேடையில் அமர்ந்ததும், கோதாவரி மாயும், கன்யாக்களும் தரிசனம் செய்தனர். கோதாவரி மாய், பாபாவின் வலதுபுறத்தில் இருந்த நாற்காலியில் அமர்ந்தார். பாபா வருவதற்கு முன்பு, மண்டலியின் வேண்டுகோளுக்குப் பின்னரும், அவர் மேடையில் அமர்ந்திருந்தாலும், அந்த நாற்காலியில் அமரவில்லை.

பூனா பஜனைக் குழுவினர் பாபாவின் ஆரத்தியை ஹிந்தி மொழியில் நிகழ்த்தினர், அப்போது, கண்ணுக்குப் புலப்படாத செய்திகளை தொலைதந்தி மூலம் அனுப்பிக் கொண்டிருந்தது போல, பாபாவின் விரல்கள் வேகமாக நகர்ந்தன. தினமும் மாலை 5:00 மணிக்கு, சிறிது தண்ணீர் அருந்தும்போது,

இருமல் வந்ததாகவும், அது கார்மேகத்தை நினைவுபடுத்துவதாகவும், கோதாவரி மாயிடம் பாபா கூறினார். பின்னர் அவர், கோதாவரி மாயிடம் மதியம் வரை அங்கு இருக்குமாறும், மூன்று மணிக்கு மறுபடியும் வருமாறும் தெரிவித்தார். இந்த சகவாச நிகழ்ச்சிகளை சாத்தியமாக்குவதற்கான அனைத்து பணிகளைப் பற்றியும், அவற்றை நிர்வகித்த மண்டலிக்கு ஏற்பட்ட பல்வேறு தொல்லைகள் குறித்தும் பாபா அவருக்கு விவரித்தார். இயலாத போதிலும், ஓர் இயந்திரம் போல, வலிமிகுந்த கால்களில் இடம் விட்டு இடம் நகர்ந்து, ஒவ்வொரு விவரத்தையும் கண்காணித்து வந்த பெண்டுவை அவர் பாராட்டினார். பாபா தன்னைப் பற்றியும் அவரிடம் கூறினார், கடந்த சில நாட்களாக அவர் எப்படி ஜூரத்தால் பாதிக்கப்பட்டார், ஆனால் அவரது வெளியளவிலான, மகிழ்ச்சிகரமான தோற்றத்தால், சகவாசத்தில் கலந்து கொண்டவர்கள், அவர் எந்த அளவிலும் பாதிக்கப்படவில்லை என்று உண்மையிலேயே நினைத்தனர். “பாபா ஆரோக்கியமாகவும், மகிழ்ச்சியாகவும், ஒளிரும் முகத்துடனும் - அவருடைய பழைய சுய இயல்புத் தன்மை மீண்டும் திரும்பி வந்ததுபோலக் காணப்பட்டார்!” காலம் இதை இவ்வாறு குறிப்பிட்டது, “ஆனால் அவரது நிலவு போன்ற முகத்தில் ஒளிர்ந்த புன்னகைக்குப் பின்னால் மறைந்திருந்த எல்லையற்ற துன்பத்தை எவராலும் பார்க்க முடியவில்லை.”

கோதாவரி மாயை கூட்டத்திற்கு அறிமுகப்படுத்தி பாபா கூறினார்:

**எனது தாயார் கோதாவரி மாய் என் அருகில் இருப்பதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். ‘கிருஷ்ணாவிற்கு யஷோதா எப்படி இருந்தாரோ அதுபோலவே எனக்கு கோதாவரி’ என்று என் அன்பர்களிடம் அடிக்கடி சொல்லியிருக்கிறேன். கோதாவரி, எனது யஷோதா** (வளர்ப்புத் தாய்) **என்பதன் பின்னணியைச் சொல்கிறேன். நான் கிருஷ்ணனாக இருந்தபோது, கோதாவரி எனது யஷோதா. இதற்கு அடிப்படையானது கோதாவரி மாயின் மகத்துவத்தில் உள்ளது.**

**ஹஸ்ரத் பாபாஜான் என் ஆதிகால நிலையை எனக்கு வெளிப்படுத்தினார், உபாஸனி மஹாராஜ் அந்த நிலையை என்னுள் நிலைநாட்டினார். ஒரு நாள் உபாஸனி மஹாராஜ் எப்பொழுதும் என்னை அழைப்பது போல, ‘மேர்வான்’ என அழைத்து, அவரைச் சுற்றியிருந்தவர்களிடம் என்னைக் கெட்டியாகப் பற்றிக்கொள்ளும்படி கூறினார். அந்த நேரத்திலும், அதற்குப் பின்னரும், ஸாக்கோரியில் ஒரு விசித்திரமான சூழல் உருவானது. உபாஸனி மஹாராஜ் இங்கே இருக்கிறார், எப்போதும் இங்கே இருக்கிறார். இன்று நான் உங்களுக்குச் சொல்லப் போகும் அனைத்திற்கும் அவர் சாட்சி, நான் உங்களுக்குச் சொல்வது முற்றிலும் உண்மை.**

**உபாஸனி மஹாராஜ் சில பக்தர்களிடம் என்னை உறுதியாகப் பற்றிக்கொள்ளுமாறு கூறியதும், ஒரு குறிப்பிட்ட இரவில் பல விஷயங்கள் நடக்கத் தொடங்கின. அன்று இரவு என்ன நடந்தது என்று** (மண்டபத்தில் இருந்த) **யஷ்வந்த் ராவிற்குக் கூட தெரியாது. நானும், மஹாராஜும் ஒரு**

குடிசையில் அமர்ந்திருந்தோம். மஹாராஜ் அவரது கரங்களைக் கூப்பி என்னிடம், "மேர்வான், நீ ஆதி சக்தி, அவதார புருஷர்" என்றார். அப்போது மஹாராஜ் என்னிடம் அவரை விட்டு விலகச் சொன்னார்; மேலும், விரைவில் உருவாகும் எதிர்ப்பின் காரணமாக, என்னிடம் ஒட்டிக்கொள்ளுமாறு கேட்டுக்கொண்ட பக்தர்களுக்கு, அவரது பரிந்துரைகளைப் பின்பற்றுவது கடினம் என்று கூறினார். "உனது மேலங்கியைப் பற்றிக் கொள்ள விரும்புவோர் கூட உன்னைக் கைவிடுவார்கள்!" என்றும் கூறினார்.

அந்த நாட்களில், ஸாக்கோரியில் இரண்டு குழுக்கள் இருந்தன: என்னை நேசித்து, பின்பற்றுபவர்களின் ஒரு குழு, என் மீது பொறாமை கொண்டு, எதிராக இருந்தவர்களின் இன்னொரு குழு. மஹாராஜ் எனக்கு எதிராக எதிர்ப்பை ஏற்படுத்தியதில் எதிராக இருந்தவர்கள் மகிழ்ச்சியடைந்தனர். என்னை நேசித்தவர்களில் ஒருவர் துர்காபாய், எதிர்த்தவர்களில் ஒருவர் பிராமண தலாட்டி (கிராம வரி வருவாய் துறை அதிகாரி). இந்த இரண்டு குழுக்களும் எப்படி மோதின, அதிலிருந்து நான் எப்படி விடுபட்டேன் என்ற கதைக்குள் செல்ல விரும்பவில்லை. ஆனால் கோதாவரி மாயைப் பற்றி நான் உங்களுக்கு ஒன்றைச் சொல்கிறேன், அது அவருடைய மகத்துவம் - அவர் உபாஸனி மஹாராஜுக்கு மிகவும் பிரியமானவர். மஹாராஜின் தரிசனத்தைப் பெற்றுக்கொள்ள வந்தவர்களும் கோதாவரி மாயை தரிசனம் செய்தனர். உபாஸனி மஹாராஜின் மறைவுக்குப் பிறகு, கோதாவரி மாய் எனக்கு எப்படி ஒரு சாதகமான சூழலை உருவாக்கினார் என்பதை கற்பனை செய்து பாருங்கள். அவர் ஏற்படுத்திய எதிர்ப்பு, மஹாராஜ் அவரது உடலை கைவிட்ட பிறகும் தொடர்ந்தது.

கோதாவரி மாய் ஒரு மாணிக்கம். இன்று, அவர் மஹாராஜின் ஆசனத்தில் அமர்ந்திருக்கிறார். அவர் இந்திய தேசத்தில் ஆயிரக்கணக்கான மக்களால் நேசிக்கப்பட்டு மதிக்கப்படுகிறார். மஹாராஜ் எனக்கு எதிர்ப்பை உருவாக்கியபோதும், கோதாவரி மாய் என்னை ஸாக்கோரிக்கு அழைத்து, வணங்க வேண்டிய அவசியம் என்ன? அவர் ஏற்கனவே பிரபலமானவர், அவருக்கு ஆயிரக்கணக்கான பக்தர்கள் இருந்தனர், அவர் மஹாராஜின் அரியாசனத்தின் ஆக்கிரமிப்பாளராக இருந்தார். அதையும் மீறி, ஸாக்கோரியில் எனக்கான சாதகமான சூழலையும் உருவாக்கினார். கோதாவரி மாய் என் யஷோதா - எனது தாயார் என்று மீண்டும் மீண்டும் சொல்கிறேன். அவரிடம் மென்மைத்தன்மை, பணிவு மற்றும் மகத்துவம் உள்ளது. அவர் என்னை மகிழ்விக்கிறார், என்னை மதிக்கிறார், என்னை வணங்குகிறார், என் ஆரத்தியை நிகழ்த்துகிறார், அதே நேரத்தில், அவர் மிகவும் அடக்கமாகவும் இருக்கிறார். நான் அவரை 'அம்மா' என்று அழைக்கிறேன், ஆனால் அவர் என்னை வணங்குகிறார். நான் அவரை யஷோதா மாய் என்று அழைக்கிறேன், இன்னும் அவர் என் ஆர்த்தியை நிகழ்த்துகிறார். இது பணிவும் பெருமையும் இல்லையா?

**உபாஸனி மஹாராஜ் அவரது பௌதீக உடலைக் கைவிடும் முன்னர், (1941, அக்டோபர்) ஸாக்கோரிக்கு அருகிலமைந்த ஒரு குடிசையில் இருவரும் ஒன்றாக சந்தித்தோம். நான் மஹாராஜை வணங்கினேன்; அவர் ஒரு குழந்தையைப் போல் அழுதார். எனது மௌனத்தைக் கலைக்குமாறு கூறினார், ஆனால் நான் அதைச் செய்யவில்லை. மஹாராஜ் அப்போது என்னிடம், "மேர்வான், நான் இந்த உடலை விரைவில் கைவிடுவேன்; ஸாக்கோரியின் மீது ஒரு கண் இருக்கட்டும்" என்றார்.**

**நான் ஆதிகாலத்தவன். எனது விருப்பமின்றி ஒரு மரத்தின் இலை கூட அசைவதில்லை. எல்லோரிலும், எல்லாவற்றிலும் இருப்பவன் நான். உபாஸனி மஹாராஜின் அரியணையைத் தனது இருக்கையாகப் பராமரிக்க, கோதாவரி மாய் எத்தனை சிரமங்களை எதிர்கொண்டார் என்பதை நான் அறிவேன். ஸாக்கோரியின் முந்தைய மற்றும் தற்போதைய சூழ்நிலைகளுக்கு இடையே, எவ்வளவு பெரிய வேறுபாடு உள்ளது என்பதையும் நான் அறிவேன். எனது தாயாரைக் குறித்து நான் மிக்க மகிழ்ச்சியாகவும், மனநிறைவுடனும் இருக்கிறேன் என்பதை உங்கள் அனைவருக்கும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நான் அவர் மீது அளப்பரிய அன்பு வைத்துள்ளேன்.**

பாபா, பூனா குழுவிடம் பஜனையைத் தொடங்குமாறு சைகையால் தெரிவித்தார், மேலும் காலை 9:45 மணிக்கு அவர் கோதாவரி மாயிடம், "**நான் எப்படி இருக்கிறேன்?**" என வினவினார்.

"நன்றாக இருக்கிறீர்கள், பாபா," அவர் பதிலளித்தார்.

பாபா பின்னர் உரைகள் மற்றும் சொற்பொழிவுகளின் 'தலைவலி'யில் மூழ்கி, கோதாவரி மாயின் நலனுக்காக 'ஓபியத்தின் தாக்கத்திற்கு அடிமையானது போன்ற' சாதுக்கள் பற்றிய தனது சொற்பொழிவை சுருக்கமாக மீண்டும் வழங்கினார். சுவாமி மங்களானந்தைப் பற்றியும், அவர், முதலில் தனது வேத அறிவின் பலத்தால், பாபாவை எப்படி எதிர்த்தார் என்றும் பாபா, கோதாவரியிடம் கூறினார். ஆனால் பாபாவை சந்தித்த பின்னர், அவரது ஒரே வார்த்தையில், சுவாமி மங்களானந்த் உடனடியாக மெஹராபாத்திலிருந்து புறப்பட்டுச் சென்று, 40 நாட்கள் மௌனம் கடைப்பிடிக்கவும், பாபாவின் அறிவுறுத்தலின்படி தண்ணீர் மட்டுமே அருந்தி உபவாசம் மேற்கொள்ளவும் முடிவு செய்தார்.

பாபா சிறிது நேரம் இசை நிகழ்ச்சியை ரசித்த வண்ணம் அவரது இடது புறம் அமர்ந்திருந்த பாலக் பகவானின் தலையில் தாளத்திற்கு இணங்க தட்டி மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கியிருந்தார். ஒரு பாடலுக்குப் பிறகு, பாபா ஆழ்ந்த சிந்தனையில் இருந்தது போல தென்பட்டார், பின்னர் இந்த சொற்பொழிவை வழங்கினார்:



மெஹராபாத் சகவாசம் - பிப்ரவரி **1958** (MEHERABAD SAHAVAS, FEBRUARY 1958)



**கோதாவரி மாய் - மெஹராபாத் சகவாசம் - பிப்ரவரி 1958**
(GODAVARI MAI – MEHERABAD SAHAVAS – FEBRUARY 1958)

பிரபஞ்சத்தின் விவகாரங்கள், நான் அவற்றில் சிறப்பு கவனம் எதுவும் செலுத்தாமல், படைப்பாளர் மீது எந்த சுமையும் இல்லாமல் தொடரும். சொற்பொழிவுகள் மற்றும் விளக்கங்கள் எனக்கு ஒரு தலைவலி. ஒருவரின் சுவாசம் இயற்கையானது, ஒருவர் அதில் கவனம் செலுத்த வேண்டியதில்லை, ஆனால் கடின உழைப்பிற்குப் பிறகு, மனம் அதை உணரும். அவ்வாறே, பிரபஞ்சத்தின் விவகாரங்கள், எனது சிறப்பு கவனம் செலுத்தாமலேயே நடைபெறுகின்றன.

ஆனால் விளக்கம் அளிக்கும் விஷயமாக வரும்போது, ஒருவர் செங்குத்தான மலை மீது ஏறி, மூச்சுத் திணறுவது போல் நான் உணர்கிறேன். சொற்பொழிவுகள் வழங்குவது எனக்கு ஒரு சுமை. இது பிரபஞ்சத்தின் விவகாரங்களை எனக்கு நினைவூட்டுகிறது, மேலும் பிரபஞ்சத்தின் விவகாரங்களில் அடங்கிய விவாதங்களும் விளக்கங்களும் எனக்கு அதிக சுமையாக உள்ளன. கோலி விளையாடுவது, பட்டம் பறக்கவிடுவது, கிட்டிபுள், கிரிக்கெட் விளையாடுவது போன்றவை பிரபஞ்சத்தின் விவகாரங்களில் அடங்கும், ஆனால் அவை சுமையைக் 'கட்டவிழ்க்க' செய்கின்றன; அதாவது மலையிலிருந்து இறங்கி வருவது போன்றது; சுமையாக இல்லாமல் சுகமாக, இலகுவாக இருப்பது!

எல்சா, டாக்கே போன்ற அன்பர்களின் நகைச்சுவை துணுக்குகள், எனது சுமையை வெகுவாகக் குறைத்து, ஓய்வெடுக்க வழிவகுக்கின்றன. இவைதான் எனக்கு மிகுந்த நிம்மதியைத் தருகின்றன. ஆனால், சுமை, ஓய்வு எதுவாக இருந்தாலும் சரி, நான் எனது பாகத்தை சிறப்பாகச் செய்கிறேன். சுமை, ஓய்வு இரண்டும் எனக்கு எந்த விதமான வேறுபாட்டையும் ஏற்படுத்தாது, ஏனெனில் நான் இதையெல்லாம் கடந்து இருக்கிறேன்.

ஏக இறைவன் ஒருவரே; அவர் தாய், தந்தை இருவரையும் உள்ளடக்கியவர். நிச்சயமாக, அவர் எல்லாவற்றிலும் எல்லோரிடமும் இருக்கிறார், அனைவருக்கும் அது தெரியும். ஆனால் கடவுள் இதற்கும் அப்பாற்பட்டவர். கடவுளைப் பற்றி அவருடைய 'தெய்வீக அப்பாற்பட்ட நிலை'யில் நான் உங்களுக்குச் சொல்கிறேன். கடவுள், அப்பாற்பட்ட நிலையில், தந்தை, தாய் இருவரும் ஒன்றிணைந்த ஒருவராக இருக்கிறார். இப்போது, உலகத் தந்தையையும் தாயையும் கருத்தில் கொள்வோம். ஒரு தம்பதியருக்கு ஏழு மகன்கள் உள்ளனர் என்று வைத்துக்கொள்வோம். தந்தையார் தனக்கு பயனுள்ள, ஆரோக்கியமான, வலிமையான, புத்திசாலியானவர்களை நேசிப்பது இயற்கையானது - வெளிப்படையாக, அத்தகைய மகன்களால் அவர் மகிழ்ச்சியாக இருப்பார். இப்போது தந்தையின் ஆறு மகன்கள் ஆரோக்கியமானவர்கள், நல்லுள்ளம் படைத்தவர்கள், புத்திசாலிகள் - எல்லா வகையிலும் சிறந்தவர்கள் - அவர், அவர்களை மிகவும் நேசிக்கிறார். ஆனால், ஏழாவது மகன் ஊனமுற்றவர், எளியவர், மந்தமானவர், எளிதில் ஏமாறக்கூடியவர், சொல்லப்போனால் ஓர் அப்பாவி. தந்தை, தனது ஏழாவது மகன் மீது, பிற ஆறு மகன்களுடன் ஒப்பிடுகையில்

குறைந்த அளவிலான அன்பு கொண்டவர்; ஆனால் தாயார், தனது ஏழாவது மகன் பலவீனமான, ஊனமுற்ற, வஞ்சகமற்ற குழந்தையாக இருப்பதால் மிகவும் நேசிக்கிறார்; இதுவே, உலக தந்தைகள் மற்றும் தாய்மார்களிடையே காணப்படும் பொதுவான போக்காகும்.

இப்போது, நாம் மீண்டும் 'அப்பாற்பட்ட தெய்வீக நிலை'க்கு வருவோம், அங்கு தந்தை, தாய் இருவரும் ஒன்றிணைந்து உள்ளனர். காலச் சுழற்சிகளின் போது, பல யுகங்களுக்குப் பிறகு, கடவுள் இந்தப் பௌதீகத் தளத்தில் அவதார புருஷராக வரும்போது, அவர் எப்போதும் ஓர் ஆண் வடிவத்தையே எடுக்கிறார். அவர் பெண்ணாகப் பிறப்பதில்லை. அவதார புருஷர்கள் 'அப்பாற்பட்ட தெய்வீக நிலை'யில் இருக்கும் தந்தையின் 'ஆண் மகன்கள்'. கடந்த அவதார காலகட்டங்கள், 'அப்பாற்பட்ட தெய்வீக நிலை'யிலிருந்து ஆரோக்கியமான, பிரகாசமான, அறிவார்ந்த 'ஆண்மகனாக' அவதார புருஷர்கள் வருகை தந்ததை கண்டன. இதன் பொருள் என்னவெனில், எனது முந்தைய வருகை காலங்களில் நான் எப்பொழுதும் எனது தந்தையின் அன்பு மகனாகவே இருந்தேன். அதாவது உலகத் தாய், தந்தையரின் ஆறு மகன்களைப் போல நானும் இருந்தேன்.

ஆனால் கடந்த காலத்தில், 'அப்பாற்பட்ட நிலை'யில் கடவுளுக்கு, தாயார் பாத்திரத்தில் நடிக்கும் சந்தர்ப்பம் இல்லை. இந்த அவதார காலகட்டத்தில், பிதாவாகிய (தந்தை) கடவுள், நான் எல்லையற்ற ஒளியாகவும், எல்லையற்ற புத்திசாலியாகவும், எல்லையற்ற சாமர்த்தியசாலியாகவும், (உஸ்தாத்) இருப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறார். நான் வாக்குறுதிகளை வழங்குகிறேன், ஒருபோதும் நிறைவேற்றவில்லை. (குழுவில் அனைவரும் சிரித்தனர்.) நான், தந்தையார் விரும்புவது போல பிரகாசமாகவும், சாதுரியம் மிக்கவராகவும் இருக்கிறேன் என்பதால், நான் எனது தந்தையின் அன்பான மகன்.

அதே நேரத்தில், இந்த அவதார உருவில், நான் உடல் ஊனமுற்றவன். 1952ஆம் ஆண்டு அமெரிக்காவில், எனது உடல் எலும்பு அமைப்பின் இடது பக்கத்தை, தலை முதல் கால் வரை உடைத்தேன். இப்போது இந்தியாவில், சமீபத்தில் நடந்த வாகன விபத்தில் வலது பக்கம் முற்றிலும் உடைந்துவிட்டது. உடல் ஊனமுற்றிருப்பதைத் தவிர, நான் எல்லையற்ற அப்பாவியாகவும், வஞ்சகமற்றவனாகவும், எளிதில் ஏமாறுபவனாகவும் இருக்கிறேன். ஆதலால், நான் எப்பொழுதும் நீங்கள் சொல்வதைக் கேட்டு, உங்கள் விருப்பத்திற்கு இணங்குகிறேன். எனது திட்டங்கள், அறிவுறுத்தல்கள் மற்றும் சுற்றறிக்கைகள் இருந்தபோதிலும், உங்களில் எவரையும் வேண்டாம் என்று சொல்லவோ அல்லது உங்கள் கோரிக்கைகளை மறுக்கவோ எனக்கு வலிமை இல்லை. எனவே, நான் 'தாயாக' இருக்கும் கடவுளின் அன்பான மகன். இந்த அவதார காலகட்டத்தில், தந்தை, தாயார் இருவரின் பாத்திரத்தில் பங்கெடுக்க கடவுளுக்கு ஒரு வாய்ப்பாக அமைந்துள்ளது.

பாபா நேரத்தை அறிய விரும்பினார். அப்போது காலை 10:45 மணி. பாபா, முதலில் இசை நிகழ்ச்சியை ரசிப்பதாகவும், அதைத் தொடர்ந்து, மற்றுமொரு சொற்பொழிவு வழங்கப் போவதாகவும் கூறினார். எனவே இசை நிகழ்ச்சி மீண்டும் தொடங்கப்பட்டது, ஒரு கட்டத்தில், தக்வான் கிராமத்தின் விஷ்ணு, ஒருங்கிணைந்த பாடல் ஒன்றை நடன நிகழ்ச்சியுடன் வழங்கினார், இது அனைவரையும் மகிழச் செய்தது.

ஒலிபெருக்கியில், கேஷவ் நிகம், பாபாவைப் புகழ்ந்து (இந்தியில்) பாடிய 'மெஹர் சாலிஸா' (MEHER CHALISA) - 40 ஈரடிக் கவிதைகளுக்கு செவிமடுத்து, பாபா மிகவும் மகிழ்ச்சியடைந்த நிலையில் அவரைத் தழுவினார்.

அடுத்து, விஷ்ணு ஷர்மா, சமஸ்கிருதம், உருது, ஹிந்தி, ஆங்கிலம் போன்ற மொழிகளின் கலவையில் எழுதப்பட்ட அவரது 'சாய் புராணம் (TALE OF TEA, தேநீரின் கதை) என்ற நகைச்சுவை வரிகளை வாசிக்க வந்தார்; இது தேநீரின் கதையை விவரிப்பதோடு அதன் பண்புகளைப் புகழ்ந்தது. வாசித்து முடித்ததும், பாபா, "**இப்போது சகவாச நிர்வாகக் குழு எதிர்கொள்ளும் தொல்லைகள் அதிகமாகிவிடும், ஏனெனில் இந்தக் கதையைக் கேட்ட பின்னர், இங்குள்ள ஆண்களும் பெண்களும் அதிக அளவில் தேநீரை விரும்புவார்கள்**" என்று கேலி செய்தார்.

மேடையில் வந்த ஸ்ரீபத் ஸஹாய் தனது காதல் வசனங்களை வாசித்தார். அதைத் தொடர்ந்து, ஹமிர்பூரைச் சேர்ந்த சில ஆண்களும் பெண்களும், அவர்களின் கைவண்ணத்தில் உருவான இசையுடன் கூடிய, பாடல்களைப் பாடி இனிமையாக நடித்தனர்.

ஒரு பக்தர் மெஹர் பாபாவின் ஆரத்தியை, அவரது சொந்த பூர்வீகமான பண்டேல்கண்டில் (BUNDELKHAND) நிகழ்த்தியது போல், எளிமையான கிராமிய பாணியில் நிகழ்த்தினார்.

இறுதியாக, தேஷ்முக், காடேக்கர் இருவரும் பஜனைப் பாடியதைத் தொடர்ந்து, சகவாசக் குழு மதிய உணவிற்குச் சென்றது.

பிற்பகல் 3:00 மணியைக் கடந்த ஓரிரு நிமிடங்களில், கோதாவரி மாய் மற்றும் அனைவரும் மண்டபத்தில் ஒன்றுதிரண்டனர்; அப்போது பாபா, 'பிரிக்கப்பட்ட அகந்தை' (SPLIT EGO) அல்லது 'பிரிக்கப்பட்ட நான் எனும் அகந்தை' (SPLIT 'I') பற்றி சொற்பொழிவாற்றினார்:

**ஆங்கிலத்தில் வழங்கப்படும் தற்போதைய சொற்பொழிவின் ஹிந்தி, மராட்டி வடிவங்களின் மொழிபெயர்ப்புகள் பற்றிய குறிப்புகளை வழங்க நான் கூறியுள்ளேன். பிளவுற்ற ஆளுமை** (SPLIT PERSONALITY) **பற்றி கேள்விப்பட்டிருக்கிறோம். இது மிகவும் பொதுவானது என்று கேள்விப்படுகிறோம். ஒரு நாள் ஒரு நபர் மகிழ்ச்சியாகவும் உற்சாகமான மனநிலையிலும் இருக்கலாம், அடுத்த நாள் அல்லது அடுத்த கணம், அவர் விரக்தியில் மனச்சோர்வை உணரலாம். ஒரு நாள் நல்ல செயல்களைச் செய்கிறார், அடுத்த நாள் விரும்பத்தகாத செயல்களைச் செய்யலாம். பிளவுற்ற ஆளுமையுடன் ஒப்பிடுகையில், 'பிரிக்கப்பட்ட அகந்தை' அல்லது**

‘பிரிக்கப்பட்ட நான் எனும் அகந்தை’ என்பது புதியது. இதற்கு முன்னர் இப்படி ஒரு விஷயத்தை நான் விளக்கியதில்லை; இதுவே முதல் முறை.

‘டாக்டர் ஜெக்கில் & மிஸ்டர் ஹைட்’ (Dr.JEKYLL & Mr.HIDE) பற்றி உங்களில் பெரும்பாலானோர் கேள்விப்பட்டிருப்பீர்கள் - ஒரு மனிதனில் உள்ள நல்ல மற்றும் தீய நடத்தையின் கலவை. பிளவுற்ற ஆளுமைக்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

பிளவுற்ற ஆளுமை போன்ற ஒரு விஷயம் இருப்பதைப் போல, பிரிக்கப்பட்ட அகந்தை போன்ற ஒன்றும் உள்ளது. அனைவருக்குள்ளும் பிளவுற்ற ஆளுமை இல்லை, ஆனால் அனைவருக்குள்ளும் ‘பிரிக்கப்பட்ட நான் எனும் அகந்தை’ உள்ளது. அனைத்திலும், அனைவருக்குள்ளும் ஏக இறைவனான ‘உண்மையான நான் எனும் அகந்தை’ (REAL ‘I’) எப்பொழுதும் பிரிக்க முடியாத ஒரு முழுமையாக உள்ளது. அதே போல், ஒவ்வொரு தனிமனிதனிடமும் அவனது தனிப்பட்ட உளதாயிருத்தலை தோற்றுவிக்கும் ‘பொய்யான நான் எனும் அகந்தை’ (false ‘i’) உள்ளது. ‘உண்மையான நான் எனும் அகந்தை’ எண்ணிலடங்கா ‘பொய்யான நான் எனும் அகந்தை’யின் அங்கத்தை பல்வேறு வழிகளில் வகித்து, பல தனித்தனி உயிரினங்களையும் பொருட்களையும், என்றென்றும் உளதாயிருக்கும் ஏக இறைவனான உண்மைப்பொருளிலிருந்து உருவாக்குவதைக் காண்கிறோம்.

உண்மையில், ஒரே ‘உண்மைப்பொருளான (தெய்வீக) நான்’ மட்டுமே உள்ளது. இந்த ‘உண்மைப்பொருளான (தெய்வீக) நான்’ முற்றிலும் சமரசத்திற்கு இடமின்றி, பிரிக்க முடியாததாக இருக்கையில், அது எந்தவிதமான தனிப்பட்ட வாழ்க்கைகளையும் அறியாது. இங்கே இருக்கும் நீங்கள் அனைவரும் அந்த ஒரே பிரிக்க முடியாத ‘உண்மைப்பொருளான (தெய்வீக) நான்’ என்பதன் முழு அங்கமாக இருக்கிறீர்கள். அப்படியானால், நாம் எப்படி இங்கு பல்வேறு வடிவங்களைக் காண்கிறோம்? இந்தப் பிரிவு எங்கிருந்து வந்தது? இந்தப் பிரிவுகள் இல்லாவிட்டால், பிரிக்க முடியாத ஒரே ‘உண்மைப்பொருளான (தெய்வீக) நான்’ என்று ஒன்று இருப்பதை எவரும் கண்டுபிடித்திருக்க மாட்டார்கள். இந்த ஏக இறைவனான ‘நான்’ ஒன்றுதான் உண்மையானது; அதே வேளையில் பிரிக்கப்பட்ட ‘நான்’ எனும் அகந்தை - அதாவது, ‘நான்’ என்ற பிரிவினை - உண்மையற்றது, இருந்தாலும், இன்னமும் இந்தப் பிரிவுகளை நாம் காண்கிறோம். இந்த ஒரே ‘உண்மைப்பொருளான (தெய்வீக) நான்’ வெளியளவில் எண்ணற்ற பொய்யான, போலியான ‘நானாக’ப் பிரிக்கப்பட்டுள்ளது. இந்தப் பொய்யும், போலியுமான ‘நான்’-லிருந்து நாம் என்ன எதிர்பார்க்க முடியும்? பொய்யான நான், பொய்யாக இருப்பதால், எல்லாவற்றையும் பொய்யாகக் குறிக்கிறது. என்னில் உளதாயிருக்கும் ‘உண்மைப்பொருளான (தெய்வீக) நான்’ ஒரு நொடிப்பொழுதும் இடைவெளி இல்லாமல், ஏக இறைவனைப் பார்க்க வழிவகுக்கிறது; மேலும் உங்களில் உள்ள ‘உண்மைப்பொருளான (தெய்வீக)

நான்' எல்லா இடங்களிலும் பிரிவுகளையும், பிளவுகளையும் காணும் பொய்யாக, போலியாகப் பிரிந்தது.

சுருக்கமாக, பலவிதமான வழிகளிலும், பல்வேறு அளவுகளிலும் எண்ணிலடங்கா பொய்களின் பங்கை, ஒரே 'உண்மைப்பொருளான (தெய்வீக) நான்' வகிக்கிறது. பொய்யும் போலியுமான 'நான் எனும் அகந்தை'யின் முக்கிய ஆதாரம் அறியாமை, இந்தப் பொய்யான நான், அதன் வெளிப்பாட்டிற்கு மூன்று தடங்களைப் (வழிகளை) பயன்படுத்துகிறது - பௌதீக உடல், சூட்சும (நுட்பமான, ஆற்றல் நிறைந்த) உடல் மற்றும் ஆழ் மன உடல். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், அறியாமையின் ஆதரவுடன், 'உண்மைப்பொருளான (தெய்வீக) நான்' தன்னை பொய்யான நான் என பாவித்துக்கொண்டு, முடிந்தவரை வேடிக்கையான கேளிக்கைகளில் ஈடுபட முயற்சிக்கிறது. தொடர்ந்து வேடிக்கையாக இருக்க முயற்சிக்கும் அதே வேளையில், அது தொடர்ந்து பின்னடைவுகளையும் துன்பங்களையும் தாங்கிக் கொண்டிருக்கிறது. இறுதியில் என்ன நடக்கும்? ஒரே 'உண்மைப்பொருளான (தெய்வீக) நான்' இறுதியில் சோர்வடைந்து, பொய்யான நான் எனும் பங்கை விளையாடுவதை நிறுத்துகிறது. உண்மையான நான், பொய்யும், போலியுமான நான் எனும் பாகத்தில் பங்கெடுப்பதை நிறுத்திய அடுத்த கணமே, அது, அதன் மூல முதலான, அசலான அழகிய, அற்புத நிலையை உணர்ந்து கொள்கிறது. இந்த உணர்வு நித்தியமானது. மேலும், என்றென்றும் மகிழ்ச்சியாக இருப்பது, சலித்துப்போன அனுபவம் என்பது சுத்த, முட்டாள்தனமான அறியாமை என்பதையும் அது உணர்கிறது.

'உண்மைப்பொருளான (தெய்வீக) நான்', பொய்யின் அங்கமாக நடிக்கும் போது, பொய்யான 'நான்', அது எதைச் செய்தாலும், பார்த்தாலும், உணர்ந்தாலும், நினைத்தாலும், புரிந்து கொண்டாலும், சொன்னாலும் அது முற்றிலும் பொய்யானது, ஏனெனில் பொய்யானது ஏறத்தாழ பொய்யானதே!

அனைத்து யோகாக்களின் நோக்கமும் ஒன்றுதான்: பொய்யான 'நான்' எனும் அகந்தை அல்லது பிரிக்கப்பட்ட 'நான்' எனும் அகந்தையின் பொய்மை மறைந்து போக வேண்டும், 'உண்மைப்பொருளான நான் எனும் தெய்வீக அகந்தை' அதன் மகிமையில் வெளிப்பட வேண்டும். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், பொய்யான 'நான்' எனும் பங்கை வகிக்கும் 'உண்மைப்பொருளான (தெய்வீக) நான்' செயலின் மூலம், பொய்யான 'நான்' எனும் பங்கை வகிப்பதை முழுமையாக மறந்துவிட்டு, ஏக இறைவனான உண்மைப்பொருளைத் தேட வேண்டும்.

உதாரணமாக, எரச்சை எடுத்துக் கொள்ளுங்கள். அவர் உள்ளளவில் உண்மைப்பொருளான (தெய்வீக) 'நான்'; ஆனால் எரச்சாக, அவர் பொய்யான 'நான்'. இப்போது எரச்சிற்குள் இருக்கும் உண்மைப்பொருளான (தெய்வீக) 'நான்', எரச் என்ற பொய்யின் பங்கை மட்டுமே வகிக்கிறது என்பதை மறக்க முயற்சிக்கிறது. அவ்வாறு செய்ய முயற்சிக்கும் போது, எரச் என்ற

பொய்யான 'நான்', இதர பல பொய்களுக்கு சேவை செய்ய முயற்சிக்கிறது. இது செயல்களால் நடப்பதால் அது கர்ம யோகா என்று அழைக்கப்படுகிறது. ஆனால் இதில் அடங்கியுள்ள வேடிக்கை அல்லது நகைச்சுவை என்னவெனில், ஒரு பொய்யானது, அதை மறப்பதற்காக, தன்னைத்தானே அழித்துக்கொள்ளும் போராட்டத்தில், அவர்களுக்கு சேவை செய்வதில் குறியாக இருக்கும் வேளையில், இதர பல பொய்களை 'நான்' நினைவுகூருகிறது.

நித்திய சுதந்திரமான உண்மைப்பொருளான (தெய்வீக) 'நான்', இந்தச் செயல்முறையால் வெளியளவில் மேலும் பிணைக்கப்படுகிறது, மேலும் அது நித்தியமாக பொய்யான 'நான்' என்பதை மறக்க முயற்சிக்கிறது மற்றும் ஒரே நேரத்தில் உண்மைப்பொருளான (தெய்வீக) 'நான்' என்பதை நினைவில்கொள்ள முயற்சிக்கிறது.

வேறொரு வகை யோகாவில் (பக்தி யோகா), 'உண்மைப்பொருளான நான் எனும் தெய்வீக அகந்தை', பொய்யான 'நான்' எனும் அகந்தையின் பாகமாகச் செயல்படும் போது, உண்மைப்பொருளை வணங்க முயற்சிக்கிறது.

பொய்யான 'நான்' எனும் அகந்தை, பொய்யைத் தவிர வேறு எதுவாகவும் இருக்க முடியாது, அது, உண்மைப்பொருளான 'நான்' குறித்த எந்தக் கருத்தையும் கொண்டிருக்க முடியாது. 'உண்மைப்பொருளான நான்', பொய்யான 'நான்' எனும் அகந்தையாக பாவனை செய்யும்போது, 'உண்மைப்பொருளான நான்' என்ற தவறான கருத்தை உருவாக்குகிறது. அப்போது, பொய்யான 'நான்' என்ன சொல்லும்? அது சொல்கிறது, "ஓ நிஜமாகவே, நான் எல்லாவற்றிலும் உன்னை வணங்குகிறேன்! நீ மட்டுமே நிஜமானவன்; நான் உன்னை வணங்குகிறேன்; நீ நிறைபேரறிவுடையவன்," இப்படிப் பல. இதிலுள்ள முரண்பாடு என்னவெனில், பொய்யான 'நான்', 'உண்மைப்பொருளான நான் எனும் உண்மையான அகந்தையை' வணங்கும்போது, அது இதர எண்ணற்ற பொய்யும் போலியுமான 'நான்' எனும் அகந்தையை மட்டுமே பார்க்கிறது, எதிர்கொள்கிறது. உண்மையில் இது, ஒரே உண்மைப்பொருளான நான் எனும் ஏக இறைவனை வணங்குவதற்கு பதிலாக, பொய்யான நான் எனும் அகந்தையைக் கொண்ட தனிப்பட்ட ஆன்மாக்களை வணங்குகிறது.

இருப்பினும், அன்பின் பாதை (பிரேம யோகா) தனித்துவமானது, ஏனெனில், (அந்த யோகா வடிவில்), உண்மைப்பொருளாகிய 'நான் எனும் ஏக இறைவன்' பொய்யான 'நான்' எனும் தனிப்பட்ட காதலனின் (அன்பனின்) பங்கை வகிக்கிறது, அதே வேளையில், அதுவே, காதலியாக (அன்பிற்குரியவராக) பின்னணியில் மறைந்து இருக்கிறது. மேலும், இந்த பாகத்தைத் தொடர்ந்து விளையாடும் போது, உண்மைப்பொருளாகிய 'நான்' காதலனின் அகந்தையை எரிக்கிறது அல்லது உட்கொள்கிறது, இறுதியில் தன்னை, காதலியாகவே நிலைநிறுத்துகிறது.

**எடுத்துக்காட்டாக, எரச்சில், உண்மைப்பொருளாகிய 'நான்' பொய்யான 'நான்' எனும் தனிப்பட்ட நபராகச் செயல்படுகிறது; மேலும், 'உண்மைப்பொருளாகிய நான் எனும் ஏக இறைவனை நேசிக்கிறது. ஒருபுறம், உண்மைப்பொருளாகிய நான் எனும் ஏக இறைவனும், மறுபுறம் பொய்யான 'நான்' எனும் எரச்சும் உள்ளனர். ஆனால் இவை இரண்டும் தனித்தனி 'நான்' அல்ல. பொய்யான எரச் எனும் 'நான்', உண்மைப்பொருளாகிய 'நான்' எனும் ஏக இறைவன் மீது அன்பைப் பொழிய முயல்கிறார். அதனால்தான், எரச்சின் அன்பு படிப்படியாக அதிகரிக்க, அது அதீத, தீவிர ஏக்கமாக மாறும் தருவாயில், எரச்சின் பொய்யான 'நான்' எனும் அகந்தை, மேலும் மேலும் அன்பால் நுகரப்பட்டு, அழிக்கப்படுகிறது. இது நிகழும் எல்லா நேரங்களிலும், அன்பிற்குரியவர் (உண்மைப்பொருளாகிய நான் எனும் ஏக இறைவன்) அவருடைய உண்மை வடிவில் பின்னணியில் இருக்கிறார். இறுதியில், பொய்யும், போலியுமான 'நான்' எனும் அகந்தை, முழுவதுமாக நுகரப்படும் போது, பொய்யான 'நான்' எனும் அகந்தை அல்லது அன்பு இரண்டும் இராது. அன்பிற்குரியவர், உண்மைப்பொருளான நான் எனும் ஏக இறைவன், எல்லையற்ற, பிரிக்க முடியாத மூலமுதலான சுயமாக ஆட்சி புரிகிறார்.**

**சூட்சும தளங்களில், உண்மைப்பொருளான நான் எனும் ஏக இறைவனின் உள் அனுபவங்களை, தெய்வீக மாயக்காட்சி** (DIVINE HALLUCINATION) **என்று கூறலாம். ஆழ் மன தளங்களில், உண்மைப்பொருளான நான் எனும் ஏக இறைவனின் உள் அனுபவங்களை, ஆன்மீகக் கொடுங்கனவு** (SPIRITUAL NIGHTMARE) **என்று கூறலாம். ஆக மொத்தத்தில், உள் அனுபவங்கள் தெய்வீக விழிப்புணர்வு அல்லது இறை உணர்வை எய்துவதில் முடிவடைகின்றன.**

உண்மைப்பொருளான நான், பொய்யான 'நான்' எனும் அகந்தையின் பாகமாக நடிக்கிறேன் என்று பாபா உரை நிகழ்த்திக் கொண்டிருந்த போது, அவரது இடது பக்கத்தில் அமர்ந்திருந்த குல்மாய், பாபாவின் காதில் வேடிக்கையாக ஏதோ கிசுகிசுத்தது அவரை சிரிக்க வைத்தது.

சரியாக மாலை 4:30 மணிக்கு, அரன்காவ்ம் குழுவினர் சில பஜனைகளைப் பாடினர். பின்னர், அலோபா எழுந்து நின்று, ஒலிபெருக்கியில் பாரசீக மொழியில் எதையோ வாசித்தைக் கேட்டு பாபா, '**அது அலோபாவைத் தவிர, வேறு எவருக்கும் புரியாது, ஏனெனில் அவர் மட்டுமே பாரசீக மொழி பேசுகிறார்**' என்றார்.

அப்போது மான்ஸிங் தாப்பாவின் (MANSINGH THAPA) மகள் ஷியாமா (SHYAMA) ஒரு வேடிக்கையான பொழுது போக்கு பாடலைப் பாட, பாபா கைகளைத் தட்டினார்.

மும்பை விமான சரக்குப் போக்குவரத்து நிறுவனத்தைச் சேர்ந்த சி.பி. வியாஸ் (C.B. VIYAS) என்பவர் பாபாவை தரிசனம் செய்தார். அவர் மூலம், சகவாசக் குழுக்கள் மெஹராபாத்திலிருந்து திரும்பிச் செல்ல இரண்டு சிறப்பு ரயில்கள்

ஏற்பாடு செய்யப்பட்டது. (தற்போதைய ஹிந்தி-மராட்டி குழுவிற்கு ஒன்று மற்றும் அடுத்த குழுவிற்கு ஒன்று).

பூனா பஜனை குழுவினர் சிறிது நேரம் இசை நிகழ்ச்சியைத் தொடர்ந்து, பாபாவின் ஆரத்தியுடன் நிறைவு செய்தனர். பாபா முற்றிலுமாக உள்வாங்கப்பட்டு, அவரது விரல்கள் விறுவிறுப்பாக நகர்ந்து கொண்டிருந்தன. ஆரத்திக்குப் பிறகு, கோதாவரி மாய்க்கு பாபா விடையளித்தார். அடுத்த நாள், குழுவுடன் புகைப்படம் எடுப்பது குறித்து, பாபா, பெண்மணிகள் மட்டுமே அனுமதிக்கப்படுவர் என்ற தனது முடிவை மீண்டும் உறுதிப்படுத்தி, காலை 11:30 மணிக்கு மெஹராஸாத்திற்குத் திரும்பிச் செல்வதாக அறிவித்தார். சகவாச சபையில் கலந்துகொண்ட ஆண்களும் பெண்களும் தத்தமது இல்லங்களுக்குப் புறப்பட வேண்டும், எனவே மறுநாள் மண்டபத்திற்கு வருவதற்கு முன்பு, பாபா, அன்பர்கள் தங்கள் பொருட்களைத் தயாராக வைத்திருக்குமாறு அறிவுறுத்தினார்.

சில ஆண்களும் பெண்களும் ஜுரத்தால் பாதிக்கப்பட்டனர், மாலை 5:45 மணியளவில், பாபா அவர்களைப் பார்க்க, தூக்கு நாற்காலியில் அழைத்துச் செல்லப்பட்டார். அவரைப் பின்தொடர வேண்டாம் என்று அவர் சகவாச குழுவிற்கு அறிவுறுத்தினார். பாபா முதலில் அருகாமையில் இருந்த பெண்கள் கூடாரத்திற்குச் சென்று, நோய்வாய்ப்பட்டவர்களை சந்தித்து ஆறுதல் கூறினார். தொடர்ந்து, ஆண்கள் கூடாரத்தில், பணியில் இருந்த மருத்துவர்களிடம் உரிய சிகிச்சை அளிக்குமாறு அறிவுறுத்தினார். டாக்டர் கனகதண்டி, டாக்டர் ரானடே ஆகியோர் ஆண்களை கவனித்துக் கொண்டிருந்தனர். டாக்டர் நாகு, மும்பையில் வாழ்ந்த தனது நெருங்கிய தோழியான, சக பெண் டாக்டரை, நோய்வாய்ப்பட்ட பெண்களுக்கு சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்திருந்த அதே வேளையில், நாகு சகவாச நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டார். டாக்டர் டான் மருத்துவர்களை கண்காணித்து உதவி செய்தார்.

நோயுற்றவர்களை சந்தித்த பிறகு, பாபா தனது அறைக்குச் சென்று, பாவ் கல்சூரியை அழைத்தார். பாவ் கல்சூரி, இருதலைக் கொள்ளி எறும்பு போல குழப்பத்தில் ஆழ்ந்தார்; நோய்வாய்ப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிக்கும் சுமை அவர் மீது விழுந்தது. தினசரி நிகழ்ச்சிகள் எப்படி நடக்கிறது என்று அவருக்குத் தெரியவில்லை, ஏனெனில் அவர் இரவும் பகலும் பல்வேறு விஷயங்களை கவனிப்பதோடு, நோய்வாய்ப்பட்டவர்களுக்கு சிறப்பு உணவுகளை வழங்க வேண்டியிருந்தது.

நோயாளிகளைப் பற்றி பாபா அவரிடம் கேட்டபோது, அவர் பதிலளித்தார், “பாபா, எனக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. அனைவரும் நாளை புறப்பட வேண்டும், ஒரு சிலருக்கு 104 டிகிரி ஜுரம் உள்ளது. நாம் எப்படிப் பலரைப் பார்த்துக் கொள்வது?”

**“நீங்கள் ஏன் புக்காரின் உதவியை நாடக்கூடாது?”** பாபா பரிந்துரைத்தார்.

“புக்கார் என்ன உதவி செய்வார்?” பாவ் கல்சூரி சற்று எரிச்சலுடன் கேட்டார், “அவர் எப்பொழுதும் உங்களையே பின்தொடர்ந்து வருகிறார்!”

எனவே பாபா, புக்காரை வரவழைக்க, அவர் வந்ததும், பாவ் கல்சூரியிடம் கேட்டார், **“நான் உங்களுக்குக் கட்டளையிட்டால், ஷீலா, மெஹர்நாத் இருவரையும் கொன்று விடுவீர்களா?”**

வேண்டுமென்றே, பாவ் கல்சூரி “இல்லை” என்று பதிலளித்தார்.

பாபா, புக்காரிடம் கேட்டார், **“எனது கட்டளையை நிறைவேற்றும் வகையில் உங்கள் குழந்தைகளை கொன்று விடுவீர்களா?”**

“எதையும் சிந்திக்காமல் செய்வேன் பாபா!” புக்கார் பதிலளித்தார்.

பாபா, பாவ் கல்சூரியை கேலி செய்து கண்டித்தார், **“புக்கார் எப்படி இருக்கிறார் என்று பார்த்தீர்களா? இப்போது அவருடைய உதவியைப் பெற்றுக்கொள்ளுங்கள்!”** பாவ் கல்சூரி மகிழ்ச்சியடைந்தார், நோயாளிகளை கவனிப்பதில் புக்கார் முழு ஒத்துழைப்பை வழங்கினார். எல்லா நடவடிக்கைகளையும் மேற்பார்வையிட்டு, பாபா மாலை 6:00 மணிக்கு மெஹராஸாத்திற்குப் புறப்பட்டுச் சென்றார்.

அன்றிரவு மெஹராஸாத்தில், பாபா ஒரு வரைபடத்தை வரைந்து, பின்வரும் விளக்கத்தை அளித்தார்; அதை எரச் ஓர் ஆய்விதழில் குறிப்பிட்டிருந்தார்:

**மனிதனுக்கு முற்பட்ட நிலையில், போலியான ‘சுயம்’ அல்லது பொய்யான ‘நான்’ எனும் உணர்வு, மிகக் குறுகிய அளவில் தோன்றியது, பரிணாம வளர்ச்சிக்கான வாய்ப்பை நல்கியது.**

**மனித வடிவத்தில், உணர்வு நிலையின் பரிணாமம் நிறைவடைவதோடு, உணர்வு முழுமையடைகிறது. மனிதர்களில் அன்பு முதன்முறையாக செயலில் வருகிறது. அன்பு அதன் பங்கை மிகவும் சுறுசுறுப்பாகவும் முழுமையாகவும் வகிக்கும் தருவாயில், பொய்யும் போலியுமான ‘நான்’ எனும் அகந்தை மேலும் மேலும் நுகரப்படுகிறது. இறுதியில், அன்பு அதன் உச்சத்தை எட்டும்போது, பொய்யான ‘நான்’, அன்பினால் முழுவதுமாக நுகரப்படுகிறது. இது அன்பிற்குரியவரின் பலிபீடத்தில் ‘அன்பன்’, ‘அன்பு’ இரண்டின் முழுநிறைவை ஏற்படுத்துகிறது. அன்பன், அன்பை வெளிப்படுத்துவதற்காக நிலைத்திருப்பதும் இல்லை அல்லது அன்பன் மீது அன்பு ஆட்சி புரிவதுமில்லை. இப்போது, இறுதி இலக்கு அடையப்படுகிறது. அன்பிற்குரியவர் பரமாத்மாவாக ஆட்சி புரிகிறார்; அன்பிற்குரியவரைத் தவிர வேறு எதுவும் இல்லை; பிற அனைத்தும், நிறைவுற்ற நிலையை எய்துகிறது.**

1958 பிப்ரவரி 19 புதன்கிழமை காலை 8:00 மணிக்கு மெஹராபாத் வந்தடைந்ததும், பாபா நேரடியாக தனது அறைக்குச் சென்று, அங்கு அவர் விஷ்ணு, பெண்டு, பாதிரி, பாவ் கல்சூரி, மேலும் சிலருடன் நோய்வாய்ப்பட்டவர்கள் மற்றும் சிறப்பு ரயிலைப் பற்றிய விபரங்களை விவாதித்தார்.

அதைத் தொடர்ந்து, காடேக்கர் குடும்பத்தினர் அழைக்கப்பட்டனர்; பாபா, குணதாயிடம், **"நான் காடேக்கரை என்னிடம் அழைக்க விரும்புகிறேன்; உங்கள் கருத்து என்ன?"** என வினவினார்.

அதற்கு அவர், "உங்கள் விருப்பம் பாபா" என்றார். பின்னர் அவர் காடேக்கரிடம் **வேலையிலிருந்து ஆறு மாத விடுப்புக்கு விண்ணப்பித்து, தன்னுடன் வந்து தங்குமாறு** கூறினார்.

அதன்பிறகு, புகைப்படக் கலைஞர்களான பைய்யா பாண்டே, பிக்குபாய் ஆகியோர் வெவ்வேறு குழுக்களைச் சேர்ந்த பெண்மணிகளுடன் பாபாவைப் புகைப்படம் எடுத்தனர்.

பாபா அங்கு வருவதற்கு நீண்ட நேரத்திற்கு முன்பே, சகவாசக் குழுவினர் மண்டபத்தில் கூடியிருந்தனர். பாபாவுடனான அவர்களின் கடைசி சந்தர்ப்பம் இதுவாகும். சிலர் பாபா முன்னிலையில் பாட விரும்பினர், சிலர் ஏதாவது கேட்க விரும்பினர். பாபா கூடாரத்திற்குள் நுழைந்ததும், மண்டலி அவர்களின் தனிப்பட்ட கோரிக்கைகள் குறித்து குழுவிலிருந்து கையால் எழுதப்பட்ட குறிப்புகளைப் பெறத் தொடங்கினார்.

ஆனால் பாபா குறுக்கிட்டு, **"எவரும் என்னிடம் தனது குறைபாடுகளை முறையிட்டு வரவோ, நேர்காணல்களை நாடவோ வேண்டாம். எனக்கு எல்லாம் தெரியும். அதனால், உங்கள் இடர்பாடுகளையும், சோகக் கதைகளையும் என் முன் வைப்பதால் என்ன பயன்? என்னிடம் எதையாவது தெரிவிக்க விரும்புபவர்கள், அதை காகிதத்தில் எழுதி அனுப்ப வேண்டாம்; ஆனால் நான் எல்லா இதயங்களிலும் நிலைகொண்டிருப்பதால், அவர்களின் ஆழ் இதயத்திலிருந்து என்னிடம் சொல்ல வேண்டும். நான் அனைத்தும் அறிந்தவன் இல்லை என்றால், எனக்கு, குறிப்புகளை அனுப்புவதில் என்ன நன்மை உள்ளது? நான் நிறைபேரறிவுடையவன், அப்படியானால் உங்கள் குறிப்புகளை அனுப்புவதில் பயன் ஏதும் இல்லை, நான் எல்லாவற்றையும் அறிந்தவன், எங்கும் நிறைந்தவன் என்பதையெல்லாம் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்!"**

சகவாசக் குழுவினர் - ஆண்களும் பெண்களும் அன்று காலை 11:30 மணிக்கு மதிய உணவு உண்ண வேண்டும், எனவே பதினொரு மணிக்கு பந்தலை விட்டு வெளியேறுமாறு பாபா அவர்களுக்கு அறிவுறுத்தினார். பாபா, அவர்கள் **அனைவரும் மனம் விரும்பும் அளவுக்கு உண்ண வேண்டும், மதியம் புறப்படுபவர்கள் உதட்டில் அவருடைய நாமத்தை உச்சரித்துக் கொண்டு ரயிலில் ஏற வேண்டும்** என்றும் வலியுறுத்தினார்.

மதுசூதன், சுனிதா தாடே, தேஷ்முக்கின் மகள் ஜெய்ஸ்ரீ போன்ற அன்பர்கள் மண்டபத்தில் பாபா முன்னிலையில் பாடல்கள் பாடினர். அப்போது, பூனா குழுவினர் ஆரத்தி நிகழ்த்தவே, பாபா, எரச்சின் கையைப் பற்றிய வண்ணம் நின்று கொண்டு, வலது கையை மெதுவாக அங்கும் இங்கும் அசைத்தபடி ஆரத்தியில் பங்கெடுத்தார். சகவாச நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டவர்கள் பாபாவின் இறை அன்பின் கடலில் மூழ்கிவிட்டனர், ஆரத்திக்குப் பிறகு, பாபா

அனைவரையும் மதிய உணவிற்குச் செல்லுமாறு அறிவுறுத்தினார். இறை அன்பின் மதுபானம் இப்போது கண்ணீராக வழிந்தது! ஒருவர் சத்தமாகக் கதறத் தொடங்கினார். மற்றுமொரு முதியவர் அழுது கொண்டே பாபாவின் பாதத்தில் விழுந்தார். இருவரையும் தம்மிடம் அழைத்து, பாபா அவர்களைத் தழுவி, **"எனக்குக் கீழ்ப்படிவதே உண்மையான விஷயம்"** என்று நினைவுபடுத்தினார்.

ஆதி துபாஷ் திடீரென மயக்கமடைந்ததால், நிற்பதில் சிரமம் ஏற்பட்டது; அவர் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். பாபா தனது அறைக்குச் சென்று, மதிய வேளையில், அனைவரும் உண்ட பின்னர், மெஹராஸாத்திற்குப் புறப்படுவதற்காக வெளியே வந்தார். சகவாசக் குழு இரண்டு நீண்ட வரிசைகளாக உருவானது. பாபா, தூக்கு நாற்காலியில் அவர்களுக்கு இடையே சாலையில் அழைத்துச் செல்லப்பட்டு, அங்கு அவர் காரில் அமர்ந்தார். காலம் இதை இவ்வாறு விவரித்தது: "மெஹராபாத்தில் ஆழ்ந்த சோக உணர்வு எங்கும் வியாபித்திருந்தது; கிட்டத்தட்ட அனைவரின் கண்களிலிருந்தும் கண்ணீர் வழிந்தது. கடந்த பல நாட்களாகத் தமது சகவாசத்தை வழங்கிய பின்னர், அவர்களுக்குப் பிரிவினையின் வேதனையே அவரது பரிசாக இருந்தது. அவர்களின் இதயங்களில் நிலைகொண்ட பாபாவை, மேலும் ஆழமாக நேசிக்கும் ஏக்கத்தை உருவாக்கியது."

மதியம் 12:30 மணிக்கு பாபா புறப்பட்டுச் சென்ற பின்பு, சகவாச குழுவின் பெட்டிகளும், பைகளும் தற்காலிக முகாம்களிலிருந்து மாட்டு வண்டிகளில் ரயில் தண்டவாளத்திற்கு அருகே கொண்டு செல்லப்பட்டன. குறைவாக ஜுரம் இருந்த நான்கு நபர்களைத் தவிர, நோயால் பாதிக்கப்பட்ட பெரும்பாலான அன்பர்கள் குணமடைந்தனர். அவர்கள் ரயில் நிலையத்திற்கு, அங்கிருந்து எளிதாக ரயிலில் செல்லும் விதத்தில் காரில் அனுப்பப்பட்டனர்.

மண்டலி மற்றும் சேவகர்கள், ரயில் பாதைகளில் ஏறி இறங்கி, முன்னும் பின்னுமாக அலைந்து, அனைத்து விஷயங்களையும் ஏற்பாடு செய்து கொண்டிருந்தனர். பெண்டு இரண்டு ஊன்றுகோல்களின் உதவியோடு மெதுவாக நடந்து கொண்டிருந்தார். ஊனமுற்ற நிலையிலும், சகவாசக் குழுக்களின் வசதிக்காக, வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய அவர் எடுத்த முயற்சியை நினைத்து, அனைவரும் மனம் நெகிழ்ந்து போயினர். சகவாச நிகழ்ச்சிகளில் கலந்துகொள்பவர்களின் சௌகரியத்திற்காக, அனைத்து மண்டலியும் செய்யாதது எதுவுமே இல்லை; இதனால் அன்பர்கள் கடந்த ஐந்து நாட்களில் மிகையாக பாய்ந்தோடிய தெய்வீக மதுபானத்தை மேலும் மேலும் அருந்த முடிந்தது.

பாவ் கல்சூரி, ரயில் தண்டவாளத்தின் அருகே யாத்ரீகர்களின் சாமான்களை இறக்குவதை மேற்பார்வையிட்டுக் கொண்டிருந்த அவ்வேளையில், அவரது ஆறு வயது மகள் ஷீலா அவரைப் பார்த்ததும் வேகமாக ஓடோடி வந்தாள். ஏற்கனவே குறிப்பிட்டபடி, பாவ் கல்சூரி அவரது மனைவி அல்லது குழந்தைகளுடன் பேசுவது தடை செய்யப்பட்டிருந்ததால், அவர் அவளைத் தவிர்க்கும் நோக்கத்தில் ஓடத் தொடங்கினார். ஷீலா தந்தையின் பின்னால் ஓடினாள். அதை நேரில் பார்த்த அனைவருக்கும் அது ஒரு விசித்திரமான

காட்சியாக இருந்தது. கண்ணீருடன் ஓடிவரும் சிறுமியிடமிருந்து இவர் ஏன் ஓடி மறைகிறார் என்பதை அவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. விரைவில், விஷ்ணு, ஷீலாவைப் பற்றிப்பிடித்து அழைத்துச் சென்றார்.

மெஹராபாத் வரலாற்றில் முதன்முறையாக ஒரு ரயில் அங்கு வந்து நின்றது. ரயில் பெட்டிகளில் சாமான்கள் அனைத்தும் குவிக்கப்பட்டன, மேலும் ரயில் விசில் ஒலி கேட்டதும், ஆண்களும் பெண்களும் கண்ணீருடன் 'மெஹர் பாபாவிற்கு ஜெய்' என்று கோஷமிட்டனர். காலம், இந்த இதயங்களை நெகிழச் செய்யும் காட்சியைக் கண்டு இவ்வாறு வர்ணித்தது: "பிரியமான பாபா, உண்மையில் அவர்களின் இதயங்களில் நிலைகொண்டிருந்தார் - இருந்தும், அவர்களால் அழுகையைத் தடுக்க முடியவில்லை. அவருக்காக சிந்திய அந்தக் கண்ணீர் எவ்வளவு மதிப்புமிக்கது!"

பலத்த ஆரவாரத்திற்கு மத்தியில் ரயில் புறப்பட்டது. மினூ கராஸ் தனது உணர்ச்சிவசப்பட்ட நிலையில், 'மெஹர் பாபாவிற்கு ஜெய்' என்று சத்தமாகக் கத்திக்கொண்டே சுமார் கால் மைல் தூரம் ரயிலுக்குப் பின்னால் ஓடினார்!

மெஹராபாத் தோட்டத்தில் பறவைகள் இல்லாமல் தற்காலிகமாக வெறிச்சோடி கிடந்ததாகத் தோன்றியது, ஆனால் இதர பறவைகள் தோட்டத்தினுள்ளே பறந்து வருவதற்கான ஏற்பாடுகள் உடனடியாகத் தொடங்கப்பட்டன!




மெஹர் பாபாவின் எதிர் கால சமாதி
(MEHER BABA'S TOMB SHRINE)



மெஹராபாத் - பிப்ரவரி **1958** (MEHERABAD - FEBRUARY 1958)



மெஹராபாத் சகவாசம் - பிப்ரவரி **1958**
(MEHERABAD SAHAVAS – FEBRUARY 1958)

# தெலுங்கு & குஜராத்தி சகவாசம்
**(The Telugu & Gujarati Sahavas)**

1958 பிப்ரவரி 20 வியாழன் காலை 11:30 மணிக்கு, பாபா மெஹராபாத் வந்து, ஆண் மண்டலி மற்றும் பிற சேவகர்களுடன் பல்வேறு விஷயங்களைப் பற்றி விவாதிக்க அவர் தனது அறைக்குச் சென்றார்.

தீரஜ் பர்மாரிடம் (ரமா கல்சூரியின் சகோதரர்) பாபா, **"எப்போது வீடு திரும்புகிறீர்கள்?"** என்று கேட்டார்.

"இரண்டாவது சகவாசக் குழு திரும்பிச் சென்ற பின்னர்," என்று அவர் பதிலளித்தார்.

**"திரும்பியதும் என்ன செய்வீர்கள்? இன்னும் சில நாட்கள் ரமாவுடன் இருந்து, பாவின் குழந்தைகளை கவனித்துக் கொள்ளுங்கள். நீங்கள் எப்போது வேண்டுமானாலும் அவர்களுடன் வந்து தங்கலாம். உங்களுக்கு எனது அனுமதி உண்டு."**

தீரஜ் அதற்கு இணக்கம் தெரிவித்து, "நீங்கள் விரும்பும் வரை நான் இங்கேயே இருப்பேன்" என்றார்.

**"ஒரு மாதம் தங்கிவிட்டு திரும்புங்கள்"** என்று பாபா அறிவுறுத்தினார்.

நானா கேரின் பக்கம் திரும்பிய பாபா, **"நானா, நான் வினுவையும்** (நானாவின் சகோதரர்) **உங்கள் தாயாரையும் பார்த்தேன், ஆனால் ஆஷா** (வினுவின் மனைவி) **எங்கே இருந்தார்?"**

"குழந்தைகள் இருப்பதால் அவரால் வர முடியவில்லை."

பாபா, நானாவை கிண்டல் செய்தார், **"நீங்கள் திருமணம் செய்து கொள்ளாமல் இருப்பது நல்லது; இல்லையேல், நீங்கள் இங்கு வருவதில் பல தடைகள் வந்திருக்கும்!"**

பாபா, கோஹியார் சத்தாராவாலாவிடம், **"உங்கள் மனைவி ரதி என்னை நேசிக்கிறார்களா?"** என்று கேட்டார்.

"இந்நாட்களில் அவருக்கு உங்கள் மீதான அன்பு அதிகமாகிவிட்டது. அவர் சகவாச நிகழ்ச்சிகளில் பங்கெடுக்கிறார்" என்றார்.

இந்தியாவில் பயணம் செய்துகொண்டிருந்த, முன் அடையாளம் தெரியாத அமெரிக்கப் பெண்மணி ஒருவர், எதிர்பாராதவிதமாக அஹமதுநகருக்கு அன்றைய தினம் வந்து, பாபாவை தரிசனம் செய்யும் விருப்பத்தைத் தெரிவித்தார். ஆதி சீனியர் அவரை மெஹராபாத்திற்கு அழைத்துச் சென்ற போது, அங்கு பாபா அவரை சந்தித்தார். ஐந்து வருடங்களுக்கு முன்னர், அமெரிக்காவிலிருந்து வெளியே வந்ததாகவும், கொல்கத்தாவிலிருந்து கப்பல் வழியாக ஜப்பானுக்குப் பயணம் செய்ய இருப்பதாகவும் அந்தப் பெண்மணி கூறினார். அந்தப் பெண்மணி அதீத மன உளைச்சலுக்கு ஆளானார் என்பதை அறிந்து, பாபா அவரை ஆறுதல்படுத்தினார், **"அன்பே கடவுள். அன்பு ஒருபோதும் தோல்வியடைவதில்லை. பாபா ஒரு குருநாதர் அல்ல. பாபா**

**பிரபஞ்சத்தின் இறைவன். பாபா எல்லாவற்றையும் அறிந்தவர் எல்லோரிடமும் இருப்பவர்.**”

அவர் அந்தப் பெண்மணிக்கு, பாபாவின் சித்திரம் பதித்த லாக்கெட் ஒன்றைக் கொடுத்து, மார்ச் 7 முதல் 40 நாட்களுக்கு, படுக்கைக்குச் செல்லும் முன்பு, தினமும் இரவில் அதை ஒரு டம்ளர் தண்ணீரில் மூழ்கச் செய்து, ஏழு முறை பாபாவின் நாமத்தை உச்சரித்து, அந்த நீரை அருந்துமாறு அறிவுறுத்தினார்.

“எனது மனம் சரியாக இயங்கவில்லை” என்றார் அந்தப் பெண்மணி.

பாபா அவரிடம், “**கவலைப்படாதீர்கள். எனது அறிவுரைகளை அன்புடனும் நம்பிக்கையுடனும் பின்பற்றுங்கள், நீங்கள் நன்றாக இருப்பீர்கள்**” என்று உறுதியளித்தார்.

மும்பை மற்றும் கொல்கத்தாவிற்குத் திரும்புவதற்கு முன்பு, மெஹராபாத்தில் இரண்டு நாட்கள் தங்க அனுமதிக்கப்பட்டார்.

அன்று பிற்பகல் 3:30 மணியளவில் பெண் மண்டலி மெஹராபாத்திற்கு அழைத்து வரப்பட்டு, பாபா அவர்களுக்கு முகாம்கள் மற்றும் சகவாச ஏற்பாடுகளைக் காட்டினார். சிறிது நேரத்தில் பாபா அவர்களுடன் மெஹராஸாத் திரும்பிச் சென்றார். மெஹராபாத்தில் தங்கியிருந்த மஸ்தையும் திரும்ப அழைத்துச் சென்று, அங்கு அவர் ஓர் அறையில் தங்கவைக்கப்பட்டார்.

முகாம்கள், தூங்குவதற்காகப் பயன்படுத்தப்படும் கட்டில்கள், கழிவறைகள், குளியலறைகள் அனைத்தும் சுத்தம் செய்யப்பட்டு சீராக வைக்கப்பட்டன. போர்வைகள், மெத்தைகள் சலவை செய்யப்பட்டு, படுக்கைகள் மறுபடியும் சீரான முறையில் உருவாக்கப்பட்டன. கொசுக்களைத் தவிர்க்க, அப்பகுதி முழுவதும் பூச்சிக்கொல்லி மருந்து தெளிக்கப்பட்டது. சந்திப்புப் பந்தலும் சுத்தம் செய்யப்பட்டு, சீரான முறையில் அலங்கரிக்கப்பட்டது; மேலும் பாபாவின் இருக்கைக்கு மேலாக தொங்கவிடப்பட்ட பெரிய வெல்வெட் குடை இந்தியாவின் அரச சிம்மாசனத்தைப் போல தோற்றமளித்தது.

1958 பிப்ரவரி 21 அன்று, ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனி பேருந்துகள், அஹமதுநகர் ரயில் நிலையத்தில், தெலுங்கு மற்றும் குஜராத்தி சகவாசக் குழு உறுப்பினர்களை வரவேற்று, மெஹராபாத்திற்கு அழைத்துச் சென்றன.

பாபா அடுத்த நாள் பிப்ரவரி 22 சனிக்கிழமை காலை எட்டு மணிக்கு மெஹராபாத் வந்தார். நேரடியாகத் தனது அறைக்குச் சென்று, மண்டலியை சந்தித்த பின்னர், 8:40 மணியளவில் பிரதான பந்தலுக்குள் நுழைந்தார். வழக்கமான ஆரவாரங்களுக்கு மத்தியில், முகத்தில் இனிமையான புன்னகை ஒளிர, பாபா, சகவாசக் குழுவை வரவேற்றார்.

பந்தல் மற்றும் மண்டபத்தில் தொங்கவிடப்பட்ட ஏழு செய்திகள் மற்றும் ஹாஃபீஸின் ஒரு குறிப்பைத் தவிர, பாபாவின் நாற்காலியின் இருபுறமும்

அமைந்த மேடையில், பின்வரும் அறிவிப்புப் பலகையும் (1956இல் மர்டில் பீச் மையத்தில் அவர் எடுத்துரைத்தது) தொங்கவிடப்பட்டிருந்தது:

**பாபா, ஆத்மாக்களின் பரமாத்மா,**
**தேவதேவர்களுக்கு பிரியமான தெய்வம்,**
**அவரது அன்பர்களின் தெய்வீக வாழ்க்கை,**
**அவர் தனது பிரியமானவர்களின் அடிமை.**

மண்டபத்தில் அனைவரும் உள்ளனரா என்று பாபா கேட்டார். காலை 8:30 மணிக்கு அனைவரும் ஆஜராகுமாறு திட்டமிடப்பட்டிருந்தாலும், சிலர் தென்படவில்லை; அப்போது அவர், "**நான் 8:30 என்று கூறினால், நீங்கள் 8 மணிக்குத் தயாராக இருக்க வேண்டும், ஏனெனில் நான் 7:30 மணிக்கும் வரலாம்.**" குழுவினர் சிரித்தனர்.

பாபா நின்று கொண்டிருந்தவர்களை அமருமாறு கேட்டுக்கொண்டு, "**சகவாசம் ஐந்து நாட்கள் நடைபெறும். நீங்கள் அவசரப்படவோ, அழுத்தமாக உணரவோ வேண்டாம். இந்த ஐந்து நாட்களை நீங்கள் மகிழ்ச்சியாகவும், முகமலர்ச்சியுடனும் கழிக்க வேண்டும்**" என்று கூறினார்.

ஒரு பெண்மணி தனது முழங்கால்களை வளைக்க முடியாததால், தன்னால் சப்பணமிட்டு அமர முடியாது என்று கூறியதற்கு பாபா, "**எனது முழங்கால்களை வளைக்க முடியாததால், நானும் சப்பணமிட்டு அமர முடியாது. எனக்கு நீங்கள் நல்ல தோழமையை வழங்குவதில் மகிழ்ச்சி அடைகிறேன்**" என்று குறிப்பிட்டார்.

யோகி ஷுத்தானந்த் பாரதி (YOGI SHUDDHANANDA BHARATI), தென்னிந்தியாவின் நன்கு அறியப்பட்ட ஆளுமை படைத்தவர், அவரைப் பின்பற்றுபவர்கள் கணிசமான எண்ணிக்கையில் இருந்தனர்; பாபாவின் அரவணைப்பைப் பெற்று, மேடையில் பாபாவின் அருகில் அமர்ந்தார்.

அதற்குப் பிறகு, பாபா சகவாசக் குழுவிடம் கூறினார்: "**நீங்கள் அனைவரும் உங்கள் ஆரோக்கியத்தை கவனித்து கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன்; இல்லையெனில், உண்மையான அர்த்தத்தில் சகவாசம் என்பது இருக்காது. இருமல், தும்மல் போன்ற தொந்தரவு இருக்கும். நீராடும் வேளையில், உடல் குளிர்ச்சி அடையாமல் முன்னெச்சரிக்கையாக இருங்கள். குளியலறையை விட்டு வெளியே வருவதற்கு முன்னர், உங்கள் உடலை நன்றாக உலர வைக்கவும், உலர்ந்த ஆடைகளை அணியவும், இதமான உடையின்றி வெளியே உலவாதீர்கள்; இல்லையெனில், உங்களுக்கு ஜுரம் வந்து, பிறரையும் தொற்றிக்கொள்ளும்.**"

எரச் ஆங்கிலத்தில் விளக்கிக் கொண்டிருந்த பாபாவின் கை சைகைகளை, குடும்ப சாஸ்திரி தெலுங்கிலும், புர்ஜர் மேத்தா குஜராத்தியிலும் மொழிபெயர்த்தனர். பாபா கூறினார்: "**குஜராத்தியர்கள் தெலுங்கு கற்கவும், ஆந்திரா அன்பர்கள் குஜராத்தி கற்கவும் இந்த சகவாசம் ஒரு நல்ல வாய்ப்பாக அமையும். உங்களில் சிலரால் நிகழ்வுகளைப் பின்பற்ற முடியாவிடில், என்னைப் பாருங்கள், நான் உங்களைப் பார்ப்பேன். இது**

சகவாசம். அமைதியாக, என்னைப் பார்த்துக் கொண்டே அமர்ந்திருங்கள். சகவாசம் என்றால் தோழமை - நெருக்கமான தோழமை. இதை குஜராத்தியில் மொழிபெயர்க்கும் போது, புர்ஜர் மேத்தா 'தோஸ்தி' என்ற வார்த்தையைப் பயன்படுத்தினார். பாபா அந்த வார்த்தையைப் பெரிதும் விரும்பி கூறினார், "இது சரியான வார்த்தை, இதற்கு 'நட்பு' என்று பொருள்."

பாபா விளக்கினார்: "நட்பு என்றால் என்ன? நண்பர்கள் சந்திக்கும் போது, 'நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்?' என வினவி, அவர்கள் ஒருவரையொருவர், வீட்டில் உள்ளவர்கள், நண்பர்கள் மற்றும் பலவற்றைப் பற்றிக் கேட்கிறார்கள். எனவே, உங்கள் உடல்நலத்தைப் பற்றி நான் உங்களிடம் கேட்பதன் மூலம், இந்த நாளைத் தொடங்கலாம். உங்களில் யார் நேற்றிரவு சரியாகத் தூங்கவில்லை?" என்று கேட்டதும், சிலர் கைகளை உயர்த்தினர்.

பாபா மேலும் வினவினார்: "நீங்கள் எல்லோரும் எப்படி இருக்கிறீர்கள்? எவருக்கேனும் உடல் சீராக இல்லையா?" இங்கும் சிலர் பாபாவைப் போலவே கைகளை உயர்த்தினர். "கவலைப்படாதீர்கள்; இரண்டு அல்லது மூன்று நாட்களில், நீங்கள் இன்னும் பல தோழர்களைக் கண்டுகொள்வீர்கள்!" என்று பாபா கேலி செய்தார்,

பின்னர் அவர் விரிவாக விளக்கினார்:

நான் எல்லோருடனும் ஒரே அளவிலான உணர்வு நிலையில் இருக்கிறேன். நீங்கள் அனைவரும் எனது சகவாசத்திற்காக வந்திருப்பதால், நீங்கள் இங்கே இருக்க வேண்டும், உங்கள் வீட்டு விஷயங்களை முற்றிலும் மறந்துவிட வேண்டும்; என்னுடன் 100 சதவிகிதம் இருப்பதானால், நீங்கள் சகவாசத்தை முழுமையாக அனுபவிக்க முடியும். சகவாசம் என்பது அன்பின் கொடுக்கல் வாங்கல்களின் நெருக்கமான தோழமை. நீங்கள் அனைவரும் என் அன்பர்களாக இருங்கள், நான் உங்கள் அனைவரின் அன்பிற்குரியவராக இருப்பேன், அல்லது நான் மட்டுமே உங்கள் இறை அன்பனாக இருப்பேன், நீங்கள் அனைவரும் என் அன்புக்குரியவர்களாக இருப்பீர்கள்.

சந்தேகத்திற்கு இடமின்றி, நான் ஆதிகாலத்தவர் மற்றும் யுகத்தின் அவதார புருஷராக இருந்தாலும், அவதார புருஷர் அவரது புத்தியை (நினைவாற்றலை) சார்ந்திருக்க முடியாது. இப்போது எனக்கு வயது அறுபதைக் கடந்துவிட்டது, நினைவாற்றல் பலவீனமாக உள்ளது. 60 வயதிற்குப் பின்னர் ஒரு மனிதனின் நினைவாற்றல் தோல்வியடைகிறது என்று ஜால் கேரவலா அடிக்கடி சொல்லும் ஒரு பழமொழி உள்ளது. இப்போது, பிப்ரவரி 25 அன்று, எனக்கு 64 வயதாகிறது, எனது பிறந்தநாளில் பங்கேற்கும் வகையில் நீங்கள் இங்கு இருப்பீர்கள். 64 வயதில் எனது நினைவாற்றல் எனக்கு உதவிக்கரத்தை நீட்டும் என்று நீங்கள் எதிர்பார்க்க முடியாது. ஆனால் வேடிக்கை என்னவெனில், நீங்கள் அனைவரும் 'ஞாபகத்தை' தேடி அல்லது நாடிச் செல்லும் அதே வேளையில், 'ஞாபகம்' என்னைத் தேடி, நாடி வருகிறது.

இந்த சகவாசத்தில், நீங்கள் அனைவரும் உங்கள் கவலைகளை மறந்து, என்னுடன் ஒன்றி இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். உங்களால் இயன்றவரை தோழமை உணர்வுடன், நீங்கள் அனைவரும் என்னுடன் நெருக்கமாக இருக்க முயற்சிக்க வேண்டும் என்றும் நான் விரும்புகிறேன். நான் அன்பின் இறைப் பெருங்கடல், இந்த இறைப் பெருங்கடலில் இருந்து இயன்றவரை ஈர்ப்பது, கிரகிப்பது அல்லது உள்வாங்க வேண்டியது உங்களைச் சார்ந்தது. ஒவ்வொருவரும் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும். உங்கள் கவலைகளை முழுவதுமாக மறந்து, என் மீது கவனம் செலுத்தினால் மட்டுமே இது சாத்தியமாகும்.

வார்த்தைகள், விளக்கங்கள், சொற்பொழிவுகள் இவை அனைத்தும் அன்பின் கண்ணியத்தைக் கெடுக்கின்றன. இதையும் மீறி, இடையிடையே நேரம் கிடைக்கும் போதெல்லாம், சில விளக்கங்களையும், சொற்பொழிவுகளையும் வழங்கி வருகிறேன். நீங்கள் அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டும் என்று நான் விரும்புவதை, புரிந்து கொள்ள முடியாதவர்கள் கவலைப்பட வேண்டாம். எனது சகவாசத்தில், இந்த ஐந்து நாட்களும் நாம் இங்கே ஒன்றிணைந்து இருப்பதை, உளமார அனுபவியுங்கள். நான் சொல்வதையெல்லாம் புரிந்து கொள்ளக்கூடியவர்கள், நிச்சயமாக, நன்றாக உணர்வார்கள்; ஆனால் புரிந்துகொள்ள முடியாதவர்கள், எனது முன்னிலையில், உங்களால் முடிந்தவரை என்னைப் பார்த்துக்கொண்டே இருங்கள்.

விளக்கங்கள், வார்த்தைகள் மற்றும் சொற்பொழிவுகளுக்கு நாம் முக்கியத்துவம் வழங்குவதில்லை. வார்த்தைகள் எந்த அர்த்தத்தையும் கொண்டிருப்பதில்லை. நாம் எதைப் புரிந்து கொண்டோம் என்று நினைக்கிறோமோ, அதை உண்மையில் புரிந்து கொள்ளத் தவறிவிடுகிறோம். யாதார்த்தமான உண்மைப்பொருள், மனித புரிதலுக்கு அப்பாற்பட்டது; கடவுள், புரிதலுக்கு அப்பாற்பட்டவர். மாறாக, தெய்வீக ஞானம் உதயமாவதற்கு முன்னர் அறிவுத்திறன் (புத்தி) மறைந்தாக வேண்டும்.

இதெல்லாம் வேடிக்கை நாடகம், தமாஷா (ஒரு காட்சி), மனம் நிர்மூலமாக வேண்டும்; மனோநாஷ் (ANNIHILATION OF LIMITED MIND) ஒன்றுதான் ஒருவரை யதார்த்தத்தை நோக்கி அழைத்துச் செல்லும். மனதை எப்படி அழிக்க (நிர்மூலமாக்க) முடியும்? வேடிக்கை என்னவெனில், மனம் தன்னைத் தானே அழித்துக் கொள்ள வேண்டும்! ஆனால், மனம் தன்னைத்தானே அழித்துக்கொள்ள முயலும் அந்த கணமே, மனம் வேலை செய்யத் தொடங்குகிறது! உங்களை ஒருவர் மீதோ, ஒரு பொருள் மீதோ குதிக்கச் சொன்னால், நீங்கள் அதைச் செய்யலாம். ஆனால், உங்களை உங்கள் மீதே குதிக்க சொன்னால், உங்களால் அதைச் செய்ய முடியாது. நீங்கள் அதிகபட்சம் குட்டிக்கரணம் போடலாம்; ஆனால், உங்கள் மீது நீங்களே

குதிக்க முடியாது. ஒன்றே ஒன்றைப் பரிந்துரைக்க முடியும்; அதுதான் அன்பு; அதுவே ஒரே தீர்வு.

இப்போது, சாதாரண மனித அன்பைப் பார்ப்போம். ஓர் ஆண் ஒரு பெண்ணை ஆழமாக நேசிக்கிறான், இருவரும் ஒன்றாக அமர்ந்திருக்கின்றனர், இருவரும் ஒருவரையொருவர் நேசிக்கின்றனர். இருவரில் ஒருவர் 'மற்றொருவர் கண்பார்வையற்றவராகவோ, நோயுற்றவராகவோ அல்லது ஊனமுற்றவராகவோ இருந்தால் என்ன செய்வது?' என்று நினைத்துப் பார்ப்பதில்லை. மனம் இந்த விதத்தில் வேலை செய்வதில்லை, ஆனால் அது அனைத்தும் அவனை அல்லது அவளை சொந்தமாக்க விரும்புவதில், (சூழ்நிலைக்குத் தகுந்தாற் போல்), ஒருவரை ஒருவர் தழுவுவது அல்லது முத்தமிடுவது போன்றவற்றில் கவனம் செலுத்துகிறது. மனம் அமைதியடைந்து, பிற விஷயங்களை முற்றிலும் மறந்துவிடுகிறது. இந்த சூழ்நிலையில், காதலும், காதற்செயலும் உச்சத்தை எட்டும் வேளையில், ஒரு நொடியில் மனம் தன்னைத்தானே அழித்துக்கொள்ளும் தருணம் வருகிறது. இது, மெய்மறந்தது போன்ற ஒரு நிலையைக் கொண்டுவருகிறது. சாதாரண மனிதக் காதலே இந்த அளவுக்குப் போக முடியுமானால், தெய்வீக அன்பை என்னென்பது?

பல்வேறு யோகாக்கள் மற்றும் பிரிக்கப்பட்ட 'நான்' எனும் அகந்தை பற்றிய அவரது குறுகிய விளக்கத்தை பாபா எடுத்துரைத்தார், **"நேரம் அனுமதித்தால், நான் சகவாசத்தின் போது முழு சொற்பொழிவையும் வழங்குகிறேன். இது என்னிடமிருந்து வெளிவந்த அசலும், முதலுமான விளக்கங்களில் ஒன்று. நேரம் இல்லையெனில், 700 ஆண்டுகளுக்குப் பிறகு நான் திரும்பி வரும் வேளையில் வழங்குவேன்!"**

பாபா தொடர்ந்து கூறினார்: **"தயவுசெய்து கேளுங்கள், இப்போது நாம் பிரார்த்தனை மொழியலாம். பிரார்த்தனை முடிந்ததும், நீங்கள் அனைவரும் வரிசையில் நின்று, ஒவ்வொருவராக என்னை அணுகி, அரவணைத்துக்கொள்ள வேண்டும். நீங்கள் ஒவ்வொருவரும் என்னை நெருக்கமாக சந்தித்து தழுவிக்கொள்வது இன்று மட்டுமே; இன்றைக்கு பிறகு, தரிசனத்திற்காக மேடைக்கு வர வேண்டாம். ஆண், பெண் ஒருவரையொருவர் நேசிப்பது போல், என்னை நேசித்துத் தழுவிக்கொள்ளவும். என்னைத் தவிர வேறு எந்த எண்ணமும் வேண்டாம். உங்களில் எவரேனும் ஜுரம் அல்லது வேறு ஏதேனும் நோயால் அவதிப்பட்டாலும், நான் பொருட்படுத்தமாட்டேன். மேலும், எனக்கு இடுப்புப் பாகத்தில் வலி இருப்பதை நினைத்து அச்ச உணர்வுடன் என்னிடம் வர வேண்டாம்."**

அவரது வேண்டுகோளிற்கு இணங்க, டாக்டர் தனபதி ராவ், பாபாவின் நாடித்துடிப்பை உணர்ந்து, பாபாவிற்கு ஜுரம் இருப்பதாகத் தெரிவித்தார். பாபா இவ்வாறு கூறினார்: **"ஜுரம் இருந்தாலும், நான் உங்கள் ஒவ்வொருவரையும் சந்திக்க விரும்புகிறேன். எவருக்குத் தெரியும், நாளை எனது ஜுரம் 105**

**டிகிரியை எட்டலாம், பின்பு நீங்கள் என்னை சந்திக்கும் வாய்ப்பை இழக்க நேரிடலாம். எனவே இந்த வாய்ப்பை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.”**

பாலக் பகவான், சுவாமி மங்களானந்த் ஆகியோரைக் குறிப்பிட்டு பாபா கூறியதாவது:

**மத்திய இந்தியாவில்** (மத்தியப் பிரதேசம்), **சிறுவன் பாலக் மெஹரை அவதாரமாக மக்கள் பாவித்தனர்; ஆனால், ‘அவரது பாதங்களை முத்தமிடவும், அவரை வணங்கவும் எவரையும் அனுமதிக்கக்கூடாது’ என்று நான் அவருக்கு அறிவுறுத்தினேன்; ஏனெனில் அதற்குரிய அதிகாரம் இல்லாத பட்சத்தில், அவர் கட்டுண்டவராகிறார். 40 நாட்கள் மௌனம் கடைப்பிடித்து, உபவாசம் மேற்கொள்ளுமாறு சுவாமி மங்களானந்திற்கு நான் அறிவுறுத்தியபோது, பாலக் மெஹர் முகாமை விட்டு வெளியேறி அவரைப் பின்தொடர்ந்து கூறினார்: “பாபாவின் கட்டளைகளைக் கருத்தில் கொண்டு, அவற்றைப் பின்பற்றுங்கள்! பாபா உங்களுக்குத் தர வேண்டியதை அவர் தருவார். நான் உங்களுக்குத் தரவேண்டியதை நான் தருவேன்.” அவரிடம் இதைக் கூறிவிட்டு, உடனே திரும்பி வந்து மேடையில் அமர்ந்தார். எப்படியோ அது எனது செவிகளை எட்டியபோது, அவர் தனது தவறை ஒப்புக்கொண்டார். எதிர்காலத்தில் இப்படிச் செய்யக்கூடாது என்று எச்சரித்து அன்புடன் நடத்தினேன். மங்களானந்த் சகவாசக் குழுவிடம் வேதாந்தத்தைப் பற்றிய உரையை வழங்குவதை வழக்கமாகக் கொண்டிருந்ததால் அவரை அனுப்பிவிட்டேன்.**

பழரசம் பருகும்போது பாபா இவ்வாறு குறிப்பிட்டார்:

**இது மாதுளை ரசம். நான் இதை மருந்தாக அருந்துகிறேன். தேவைப்படும்போது நான் மருந்துகளையும் எடுத்துக்கொள்கிறேன். அலோபதி, ஹோமியோபதி மற்றும் ஆயுர்வேத ஆகிய மூன்று மருத்துவர்கள் என்னை எப்பொழுதும் கவனித்துக்கொள்கிறார்கள். அவர்கள் வழங்கும் மருந்தை நான் எடுத்துக்கொள்கிறேன், இருந்தும் எனது நோய் இன்னமும் தொடர்கிறது. அமெரிக்கா, இந்தியா தேசங்களில் நடந்த, இரண்டு வாகன விபத்துகளால் எனது முழு உடல் எலும்பும் சிதைந்தது. இது தவிர, பயணங்கள், நீண்ட நாள் உபவாசங்கள், நெடிய கால்நடை பயணங்கள், செப்பனிடப்படாத கடினமான சாலைகளில் மாட்டுவண்டி பயணம் மற்றும் மஸ்த் தொடர்புகளுக்காக வெவ்வேறு தொலைதூர இடங்களுக்குச் செல்வது போன்றவற்றால் என் உடல் துண்டு துண்டாகிவிட்டது. மொத்தத்தில், நான் மிகவும் கடினமான வாழ்க்கையை நடத்தினேன். ஆனால் முழுப் பிரபஞ்சத்தின் நலனுக்காக, நான் துன்பப்பட வேண்டும்; எல்லையில்லா துன்பத்தை அனுபவிக்க வேண்டும். நானே துன்பப்படாவிடில், பிறருக்காக துன்பங்களைத் தாங்கிக்கொள்ளும்படி என் அன்பர்களிடம் எப்படிக் கேட்க முடியும்?**

பாபா உறுதியாக அறிவித்தார்:

**நான் ஆதிகாலத்தவன், ஒவ்வோர் இதயத்திலும் நிலைகொண்டிருப்பவன். சந்தேகத்திற்கு இடமின்றி, நான் ஆதிகாலப் புருஷன். எனவே நீங்கள் பிறரை நேசிப்பீர்களானால், பிறரை மகிழ்விப்பீர்களானால், உங்களுக்குத் துன்பம் விளையும் வேளையிலும் அவர்களுக்கு சேவை புரிவதானால், ஒவ்வொரு தனி இதயத்திலும் வாழும் அன்பிற்குரியவரான என்னை நீங்கள் நேசிப்பீர்கள்.**

**இப்போது நாம் பிரார்த்தனையை மொழிவோம். பிரார்த்தனை நிறைவடைந்ததும் அனைவரும் உங்கள் இருக்கைகளில் அமருங்கள். முதலில் பெண்மணிகள் ஒவ்வொருவராக வந்து, எனது கையில் மாலையணிவித்து, என்னைத் தழுவி தரிசனத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள். அதன் பின்னர் ஆண்கள்.**

**பிரார்த்தனை மொழியும் போது அதை மீண்டும் கூற வேண்டாம். என் மீது கவனம் செலுத்தி அமைதியாக இருங்கள். எல்லோரிலும் சமமாக நிலைகொண்டிருக்கும் ஒரே கடவுளான பர்வர்திகாரிடம்** (ஈஷ்வர்) **நாம் இப்போது பிரார்த்தனையை மொழிவோம்.**

கழுத்திலிருந்த மாலையைக் கழற்றி வைத்துவிட்டு, பாபா எழுந்து நின்று, குருநாதருக்கான பிரார்த்தனை (MASTER'S PRAYER), மனம் வருந்தி கூறும் இரங்கல் பிரார்த்தனை (PRAYER OF REPENTANCE) இரண்டையும் மொழியும் வேளையில், பாபா கைகளைக் கூப்பி நின்றார்; ஒட்டுமொத்த சகவாசக் குழுவும் எழுந்து நின்றது. குடும்ப சாஸ்திரி தெலுங்கிலும், புர்ஜர் மேத்தா குஜராத்தியிலும் இரண்டு பிரார்த்தனைகளையும் மொழிந்தனர், மேலும் மனம் வருந்தி மொழிந்த இரங்கல் பிரார்த்தனையின் போது, பாபா அதன் அடையாளமாக அவரது கன்னங்களில் மெதுவாகத் தட்டினார். அப்போது பாபா கூறியதாவது:

**இப்போது நீங்கள் அனைவரும் வெளியே சென்று ஓய்வெடுக்கவும், கைகால்களை சுத்தம் செய்யவும், இயற்கையின் அழைப்பிற்கு பதிலளிக்கவும், அல்லது புகைபிடிக்கவும், இது போல் ஐந்து நிமிடங்களுக்கு நீங்கள் விரும்பியதைச் செய்துவிட்டு திரும்பி வரவும் நான் விரும்புகிறேன். இந்தத் தழுவல் கிட்டத்தட்ட நான்கு மணிநேரம் நீடிக்கும், மேலும் ஒவ்வொரு நபருக்கும் அவரவர் வாய்ப்பைப் பெற போதுமான நேரம் உள்ளது. ஒருவரும் இந்த வாய்ப்பைத் தவறவிட மாட்டீர்கள். சுதந்திரமாக இருங்கள், நீங்கள் என்னைத் தழுவும்போது எளிதாகவும் இதமாகவும் உணருங்கள். உங்கள் மனம் இதர விஷயங்களில் இருக்கக்கூடாது, மாறாக என்னிடம் அன்பைக் கொடுப்பதிலும் என்னிடமிருந்து அன்பை அடையப் பெறுவதிலும் கவனம் செலுத்துங்கள். பின் வரிசையில் இருப்பவர்களுக்கு, கணிசமான அளவு நேரம் உள்ளது, நீங்கள் அனைவரும் வெளியே சென்று, சிறிது நேரம் கழித்து வரலாம்.**

**இந்த சகவாச சபை, உருவான விதத்தை நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும். கடந்த 1955ஆம் ஆண்டு நவம்பரில், ஆண்கள் மட்டுமே பங்கெடுத்தபோது, நீங்களே பெண்மணிகளுக்கும் சகவாசம்**

**வழங்குவதற்கான கோரிக்கையை முன்வைத்தீர்கள்; நான் அதற்கு இணக்கம் தெரிவித்தேன். பின்னர் அத்தகைய சகவாசத்திற்கான இடங்களை நான் நிர்ணயித்தேன், ஆனால் அவை ரத்து செய்யப்பட்டன. அதற்கேற்ப, இந்த சகவாசத்தில் பெண்மணிகளும் பங்கெடுக்கும் விதத்தில், நான் இணக்கம் தெரிவித்தேன். இந்த சகவாசத்தைப் பொறுத்தவரை, பெண்மணிகளுக்குக் கடமைப்பட்டிருக்கிறீர்கள் என்பதை, ஆண்களாகிய நீங்கள் அனைவரும் நினைவில் கொள்ளவேண்டும். எனவே, பெண்மணிகள் என்னை சந்தித்து முதலில் தழுவ வேண்டும்.**

பூனா பஜனை குழுவினர் ஆரத்தி நிகழ்த்திய பின்பு, பாபா கைகளைக் கழுவி, முதலில் அவரது கால்களை, பின்னர் அவரது நெற்றியையும் தொட்டு, மீண்டும் அவரது கழுத்தில் மாலையை அணிந்துகொண்டார். பாபா ஏதோ முக்கியமான பணியில் மூழ்கி இருப்பது போல தீவிரமாகக் காணப்பட்டார். அவரது விரல்கள் வேகமாக அதிர்ந்தன.

பெண்மணிகளுக்கான தரிசன நிகழ்ச்சி தொடங்கிய போது காலை 10:30 மணி; முதலில் பாபாவை அணுகியவர் அவரது ஆன்மீகத் தாயான குல்மாய்.

ஸ்காட்லாந்திலிருந்து வந்திருந்த பெண் ஒருவர், மெஹராபாத்தில் இரண்டு நாட்கள் தங்க அனுமதிக்கப்பட்டார். அவர் பாபாவை அணுகி, கண்ணீருடன் ஏதோ சொன்னபோது அவர் மனவருத்தத்துடன் காணப்பட்டார். பாபா அவருக்கு ஆறுதல் கூறினாலும், இது போன்ற விஷயங்களை முன்வைப்பதற்கான நேரம் இதுவல்ல என்றும் கூறினார்.

பஜனைகள் நடந்துகொண்டிருந்த போது, புகைப்படக்காரர்கள் தங்கள் கேமராவில் புகைப்படங்களை எடுப்பதில் மும்முரமாக இருந்தனர். பஜனைகளின் பக்தி பரவசத்தால் தூண்டப்பட்ட பாபா, முதலில் அவரது பாதங்களையும் பின்னர் அவரது நெற்றியைத் தொடுவதற்கும் அடிக்கடி குனிய வேண்டியிருந்தது. சகவாசம் நிகழ்ந்த ஐந்து நாட்களிலும் பாபா இதைச் செய்தார். மலர் மாலைகளைக் கொண்டு வந்த அனைவரிடமும் தனது உடல் அழுத்தத்தைக் குறைக்கும் நோக்கத்தில், அவரது கழுத்தில் அணியாமல் கைகளில் வைக்குமாறு பாபா கேட்டுக் கொண்டாலும், மூன்று அல்லது நான்கு பெண்மணிகள் அவரது கழுத்தில் மாலை அணிவித்தனர், அதை அவர் ஏற்றுக்கொண்டார். அவரது அணைப்பை ஏற்றுக்கொண்ட போது, சிலர் அவரது கன்னங்களில் முத்தமிட்டனர், அப்போது அவர், "**நாளை இந்த முத்தங்கள் மற்றும் தழுவல்களால் எனது கன்னங்கள் வீங்கிவிடும். ஆனால் நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன், ஏனெனில் இது உண்மையான அன்பை வழங்குவதும், ஏற்றுக்கொள்வதும் ஆகும்**" என்றார்.

சுமார் 11:10 மணியளவில், பாபா தனது அறைக்குச் செல்வதற்காக சில நிமிடங்கள் தரிசனத்தை நிறுத்தி வைத்தார். சிறிது நேரத்தில் தரிசனம் மீண்டும் தொடர்ந்தது. பாபா, "**உங்களில் ஒருவர் பின் ஒருவராக, என்னைத் தழுவி தரிசனத்தை அடையப் பெற்றவர்கள், மதிய உணவில் பங்கெடுத்து திரும்பி**

**வரலாம். கடைசி நபரின் முறை வரும் வரை நான் இங்கு இருப்பேன்**" என்று அறிவித்தார்.

சகவாச நிகழ்ச்சிக்கு ஒரு வாரத்திற்கு முன்பு, ரோடா மிஸ்திரி திடீரென கடுமையான வயிற்று வலியால் அவதிப்பட்டார். மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்ட வேளையில், உடனடியாக அறுவை சிகிச்சை செய்தாக வேண்டும் என்று மருத்துவர் கூறவே, அவரது கணவர் ஜிம், மருத்துவரிடம் சற்று காத்திருக்குமாறு கேட்டுக் கொண்டார்; மேலும் அவர் இது குறித்து பாபாவின் ஆலோசனையைக் கேட்டு, அவருக்குத் தொலைத்தந்தி அனுப்பினார். அறுவை சிகிச்சையை தள்ளிப்போடுவது ஆபத்தானது என்று மருத்துவர் எச்சரித்தார், ஆனால் தொலைத்தந்தி அனுப்பப்பட்ட அடுத்த கணமே, ரோடா சற்று நிம்மதியாக உணர்ந்தார். மறுநாள் காலையில் மருத்துவரே ஆச்சரியப்படும் விதத்தில், அவர் நன்றாக இருந்ததால், வீட்டிற்கு செல்ல முடிந்தது. சகவாச நிகழ்ச்சிகளில் கலந்துகொண்ட ரோடா, இப்போது பாபாவின் அரவணைப்பிற்காக அவர்முன் நின்றுகொண்டிருந்தார்.

ஒவ்வொரு நபரும் பாபாவிற்கு அறிமுகம் செய்யப்பட்ட வேளையில், அவர்கள் மிகவும் வேடிக்கையாக உரையாடினர். மும்பை மற்றும் பூனா குழுக்கள், 1920 ஆண்டுகளில் இருந்து அவரைப் பின்பற்றி, அவரது அரவணைப்பில் இருந்து வந்த மிகப்பழைய அன்பர்கள், அவர்களுடன் பாபா மிகவும் கலகலப்பாகக் காணப்பட்டார். சிலர் தங்கள் தலைகளை அவரது பாதங்களில் வைத்து, பிற அன்பர்களைவிட அதிக நேரம் எடுத்துக் கொண்டனர், ஆனால் பாபா எவரையும் அவசரப்படுத்தவில்லை, எந்த ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை. ஒரு கட்டத்தில், பாபா கூறினார், "**இதயம் முழுவதுமாக தூய்மைப்படுத்தப்படும் வேளையில், ஒருவர் இறை உணர்வை எய்துகிறார். கடவுள் பாசாங்குத்தனத்தைத் தவிர, பிற அனைத்தையும் மன்னிக்கிறார், பாசாங்குத்தனத்தை அவர் ஒருபோதும் மன்னிப்பதில்லை.**"

தனபதி ராவைக் குறிப்பிட்டு, பாபா கூறினார், "**அவர் ஆந்திராவில் தொலைதூர இடங்களுக்குச் சென்று, ஒவ்வொரு வீட்டிலும் அன்பு மற்றும் உண்மைப்பொருளாகிய ஏக இறைவனைப் பற்றிய எனது செய்தியைப் பரப்புகிறார். அவர் அற்புதமான பணிகளைச் செய்கிறார்.**"

ஒரு பெண்மணி கண்கலங்கி அழுததைப் பார்த்த பாபா, "**அவருக்கு குழந்தை இல்லாததால், குடும்பத்தில் இழிவாகப் பார்க்கப்படுகிறார்**" என்று கூறினார். பாபா அவருக்கு ஆறுதல் கூறும் விதத்தில், "**நானே உங்கள் குழந்தை, அனைவரும் எனது குழந்தைகள்**" என்று கூறினார்.

மனு ஜெஸவாலாவை அறிமுகப்படுத்திய பாபா, அவர் எரச்சின் சகோதரி என்று கூறினார். மனு தரிசனத்தில் பங்கெடுத்ததற்காக பாபா அவரை மன்னித்து, அவருக்கு நெருக்கமானவர்கள் தரிசனம் செய்ய உகந்த நேரம் இதுவல்ல என்று கருத்துத் தெரிவித்தார். ஜெஸவாலா குடும்பத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில்,

பாபா, “**அனைவரும் ரத்தின கற்கள்**” என்று குறிப்பிட்டார், மேலும் ஸட்டா மற்றும் தமானியா குடும்பங்களையும் பாராட்டினார்.

பூனாவைச் சேர்ந்த ரோடா எம். ஈரானியைப் பார்த்த பாபா, “**இந்தப் பெண்மணி எனது தரிசனத்திற்காக பூனாவிலிருந்து மெஹராபாத் வரை, தனது சைக்கிளில் பயணம் செய்வது வழக்கம்**” என்று கூறினார். அவர் 1946இல் மெஹராஸாத்தில் பாபாவை முதன்முதலில் சந்தித்தார்.

நவ்ஸாரி இசைக் குழுவின் தலைவரான பச்சூபாயிடம் (BACHOOBHAI) அவர் எப்படி இருக்கிறார் என்று கேட்டு, பாபா அவரது உடல் ஆரோக்கியத்தை கவனிக்குமாறு வலியுறுத்தி கூறினார்.

தீனா தலாட்டியைப் பற்றி பாபா இவ்வாறு குறிப்பிட்டார்: “**அவரது இளம் மகன், சமீபத்தில் லண்டனில் இருதய நோயால் தாக்கப்பட்டு காலமானார். உயிரைத் துறக்கும் வேளையில், பயங்கரமான வலி இருந்தபோதிலும், அவர் எனது பெயரைத் திரும்பத் திரும்ப உச்சரிக்கத் தவறவில்லை. இந்தச் செய்தி, தாயார் தீனாவின் காதுகளை எட்டியதும், அவர் கண்ணீர் சிந்தி அழவில்லை; மாறாக, எனது பெயரை உதட்டில் வைத்துக்கொண்டு, தனது மகன் பிரிந்து சென்றதில் மகிழ்ச்சியாக இருந்தார்.**”

அர்னவாஸை அறிமுகப்படுத்தி பாபா கூறுகையில், “**இதோ இன்னொரு மாணிக்கக் கல். அவர் நரிமன் தாதாசாஞ்சியின் மனைவி, கடந்த 20 வருடங்களாக குடும்பத்தினர் அனைவரும் எனது அன்பர்களாக இருக்கின்றனர்**” என்று குறிப்பிட்டார்.

நர்கிஸைப் பற்றி பாபா, “**அவர் நௌரோஜி தாதாசாஞ்சியின் மற்றுமொரு மகள். முழுக் குடும்பமும் என்னை நேசிக்கிறது. அவருடைய இரண்டு சகோதரர்களும் இளமையிலேயே காலமாகி விட்டனர்; ஆனால் இறுதி மூச்சு வரை, எனது பெயரை உச்சரித்து உயிரைத் துறந்தனர்**” என்றார்.

பீலாமாயின் மருமகள், லாஹூரைச் சேர்ந்த பெரின் ஈரானி, தனது இரண்டு மகள்களுடன் வந்திருந்தார்; அவர்களில் ஒருவர் ஊனமுற்றவர். தாயும் மகளும் தலைவணங்க முடியாமல் பாபாவின் முன் நின்று அழுதுகொண்டே இருந்தனர். நாற்காலியிலிருந்து எழுந்த பாபா, அவர்களை அன்புடன் அரவணைத்து, பின்னர் அமர்ந்தார்.

மதியம் 12:15 மணிக்கு, பெண்களின் தரிசனம் நிறைவடைந்தது; பாபா அவர்களை மதிய உணவுக்குச் செல்லுமாறு அறிவுறுத்தினார். அன்பர்கள் மண்டபத்திற்குள் நுழையத் தொடங்கியதும், பாபா எழுந்து நின்று, மண்டலியில் மூவர் கம்பளத்தைப் பாதுகாப்பிற்காகப் பற்றிக்கொள்ளவே, அவர் சிறுநீர் கழித்து, அங்கேயே இருந்த வண்ணம், ஏறக்குறைய பத்து நிமிடம் தனது பணியில் ஆழ்ந்தார்.

பூனாவைச் சேர்ந்த கே.எம். மடோன் (K.M. MADON) என்பவரை வரவழைத்த பாபா, 1955ஆம் ஆண்டு சகவாச நிகழ்ச்சிகளில் நடந்த நிகழ்வுகளை நினைவு கூர்ந்தார்: “**அவரைக் குறித்து அனைவரும் கவனமாக இருக்க வேண்டும்.**

**அவர் அதிகாலை 3:00 மணிக்கு எழுந்து, சகவாசிகளின் கண்களில், 101 நோய்களுக்கும் அருமருந்தாகத் திகழும் தனது 'அதிசய' தைலத்தைப் பூசும் பழக்கத்தைக் கடைப்பிடிப்பதால், உங்களுக்கு தூக்கம் வராது! அன்பர்களை பாபாவின் முன்னிலையில் விழித்திருக்கச் செய்யும் நோக்கத்தில் அவர் இதைச் செய்கிறார்!"**

ஸெயிலர் மாமாவை அறிமுகப்படுத்திய பாபா, **அவர் ஒரு பழைய பள்ளித் தோழன் மட்டுமின்றி அவரது 'லங்கோட்டி நண்பன்'** என்றும் கூறி, **"இது உங்களுக்குத் தலைக்கனத்தை ஏற்படுத்துமா?"** என்று கேட்டார்.

அதற்குப் பிறகு பாபா, தனது முகத்தையும் கைகளையும் கழுவி, கைக்கிடையே தண்ணீரை தெளித்தார். அவர் சிறிதளவு தண்ணீரை எடுத்து, சிறிது நேரம் கழித்து கொஞ்சம் அருந்தி, குஜராத்தி இசைக்கலைஞர்களை மதிய உணவுக்குச் செல்லுமாறு கேட்டுக்கொண்டார்.

ஏ.சி.எஸ். சாரி, பாபாவின் கழுத்தில் மாலை அணிவித்து, அவருடன் புகைப்படம் எடுக்க விரும்பியதோடு, இரண்டு முறை பாபாவின் அரவணைப்பையும் நாடினார் - ஒன்று தனக்கும், மற்றொன்று சாகவாச நிகழ்ச்சியில் கலந்து கொள்ள முடியாத ஒருவருக்கும் அவரது மனைவிக்கும், ஆனால் அவர் பாபாவிற்காக ஒரு சால்வையை அன்புப் பரிசாக அனுப்பியிருந்தார். அவரது இரண்டு வேண்டுகோளையும் ஏற்று, பாபா அவரை இரண்டு முறை ஆரத் தழுவி, மூன்று புகைப்படங்களை எடுத்துக் கொண்டார். மேலும், பாபா நான்காவது புகைப்படம் ஒன்றை எடுத்து, நகைச்சுவையின் சாயலை சற்று கசியவிட்டார். யோகி ஷுத்தானந்த் பாரதியின் வேண்டுதலின் பேரில், பாபா மீது சால்வையைப் போர்த்தி புகைப்படம் ஒன்று எடுக்கப்பட்டது.

மும்பையைச் சேர்ந்த நோஷிர் ஈரானி, பார்சி மதகுருவைப் போல, வாயில் வெள்ளைத் துணியை அணிந்துகொண்டு தரிசனத்திற்காக வந்தார். அவருக்கு ஜுரம் இருந்ததால், தரிசனம் செய்யும் நோக்கத்தில் இதுபோன்ற முறையை கையாண்டார். பாபா அவரைத் தழுவ அனுமதித்தார்.

பாபா, தொற்றிலிருந்து பாதுகாக்கும் எண்ணத்தில் சோப்பால் கைகளை சுத்தம் செய்தார். அப்போது, ஷுத்தானந்த பாரதி சில கருத்துக்களை எடுத்துரைக்க, அதற்கு பாபா, **"அன்புடன் வரும் பிறரின் மனதைப் புண்படுத்தக்கூடாது"** என்று பதிலளித்தார். முன்பு மெஹராபாத்தில் தொழுநோயாளிகளுக்கென உறைவிடம் ஒன்று இருந்ததாகவும், தொழுநோயாளிகளை தினமும் பாபா நீராட்டினார் என்றும் அவருக்குத் தெரிவித்தார்.

ஷுத்தானந்த பாரதியிடம் பாபா மேலும் குறிப்பிட்டார், **"நீங்கள் இப்போது எனது பக்தராக இருப்பதால், எனது பணியைச் செய்வீர்கள், மேலும் உங்களுக்குப் பின்னால் பக்தியும், புகழின் பின்புலமும் உள்ளது. நான் பிரபஞ்சத்தின் ஒளி. ஒரு முறை நீங்கள் உண்மைப்பொருளின் ஒரு சிறிய அம்சத்தைப் பார்க்கும்போது நீங்கள் என்னை அறிவீர்கள், அந்தப் பார்வை**

**உங்களுக்கு கிடைக்கும்.**” சாரி, பாபாவிற்கு அணிவித்த சால்வையை அவர் பாரதியிடம் கொடுத்தார்.

அப்போது பாபா ஒரு பழைய பக்தரின் பெயரை அறிய விரும்பினார். எரச் கூறினார், “பாபா, அவருடைய பெயரை நீங்கள் அறிந்திருப்பீர்கள் என்று நினைத்தேன்.”

அதற்கு பாபா, “**எனக்கு எவரையும் தெரியாது. எல்லாவற்றிலும் நான் இருக்கிறேன்; எல்லாவற்றிலும் நான் என்னை மட்டுமே பார்க்கிறேன். இது பெருமிதப் பேச்சு அல்ல, இது உண்மை; இது எனது அனுபவம்; என்னுடைய இந்த அனுபவம் முடிவின்றி தொடர்வது**” என்றார்.

பாபா, அவரது பெயரில் பணி புரிவதைப் பற்றி, “**எனக்காகப் பணிபுரிபவர், தனது சொந்த நன்மைக்காகவே செய்கிறார்**” என்று சுட்டிக்காட்டினார்.

ஒருவரை அறிமுகப்படுத்திய தனபதி ராவ், “அவர் என் உறவினர்” என்றார்.

அதற்கு பாபா, “**அவரை உங்கள் உறவினர் என்று சொல்லாதீர்கள். சகவாசம் என்றால் என்ன என்று உங்களுக்கு ஏதேனும் யோசனை உள்ளதா? அன்பால் நிறைந்த இதயத்துடன் என்னை அணுகும் ஒருவருக்கு, எனது சகவாசம் உண்டு. இதுவே கடைசி சகவாசம்; இனிமேல் இருக்காது. நான் இந்த உடலைத் துறந்த பின்னர், இந்த சகவாசத்தைப் பற்றி பல விஷயங்கள் எழுதப்படும். எனவே அவதார புருஷராக நான் இப்போது வாழும் காலகட்டத்தில், இந்த வாய்ப்பை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.**

“**இந்த இடம்** (மெஹராபாத்) **புனித யாத்திரை ஸ்தலமாக இருக்கும். நீங்கள் அடையப் பெற்ற இந்த வாய்ப்பு மிகவும் அரிதானது. பாபாவின் அரவணைப்பு, மனிதனுக்கு கடவுளின் அரவணைப்பு. இதுவே இந்த சகவாசத்தால் உருவாக்கப்பட்ட உறவு. ஒவ்வொன்றும் கடவுளை அணுகிக்கொண்டிருக்கிறது. இது ஒரு தனிச்சிறப்புமிக்க சந்தர்ப்பம். இதை நீங்கள் மீண்டும் அடையப் பெற மாட்டீர்கள். மெஹராபாத் புனித யாத்திரை ஸ்தலமாக இருக்கும், பிற்காலத்தில் ஆயிரக்கணக்கானோர் இங்கு ஒன்றுதிரள்வார்கள். இந்த நாளை அவர்கள் நினைவில் கொள்வார்கள், நீங்கள் அனைவரும் இதற்கு சாட்சியாக இருக்கிறீர்கள். எனவே, என்னில் கவனம் செலுத்துங்கள், பிற அனைத்தையும் மறந்து, இந்த ஐந்து நாட்களும் எனக்காக வாழுங்கள்**” என்றார்.

கோஹெரின் தந்தை ரூஸி பாப்பைச் சுட்டிக்காட்டி பாபா, “**நான் குவெட்டாவில், அவரது இல்லத்தில் பல ஆண்டுகளுக்கு முன்பு தங்கியிருந்தேன்**” என்று நினைவுகூர்ந்தார்.

ருஸ்தம் காக்காவைப் பற்றி, “**அவர் ஒரு நல்ல பாடகர் மட்டுமின்றி, எனது சிறப்பான அன்பரும் கூட**” என்று கூறினார்.



கீழ் மெஹராபாத் - பிப்ரவரி **1958**
(LOWER MEHERABAD - FEBRUARY 1958)





நேர்காணல் அறை
கீழ் மெஹராபாத் -
பிப்ரவரி **1958**
(INTERVIEW CABIN
LOWER MEHERABAD -
FEBRUARY 1958)



மெஹராபாத் - பிப்ரவரி **1958**
எரச், மெஹர்ஜி
(MEHERABAD - FEBRUARY 1958 ERUCH,
MEHERJI)

ராவ்ஸாஹேப் அஃப்ஸேரியைப் பற்றி பாபா இவ்வாறு குறிப்பிட்டார், **"அவர் என்னுடைய பழைய, பழங்கால நண்பர், புதிய மாற்று தோற்றத்தில் இருக்கிறார். அவர் என்னை மிகவும் நேசிக்கிறார்."**

பின்னர் அவர் விரிவாக விளக்கினார்:

**மிகவும் அரிதாகவே ஒருவரால், என்னை எனது நிஜ ரூபத்தில் பார்க்க முடியும். நீங்கள் என்னைத் தவிர, இதர அனைத்தையும் பார்க்கிறீர்கள். பிறர் எதைப் பார்த்தாலும், அனுபவித்தாலும், அது உண்மையில் நான் அல்ல; அது எனது யதார்த்தத்தைச் சுற்றியுள்ள ஒரு திரை. ஆனால் இந்தத் திரையைப் பார்ப்பதற்கும் அதிர்ஷ்டம் தேவை. மிக உயர்ந்த வகையைச் சார்ந்த உள் அனுபவம் கூட, என் உண்மையான நிலையை விட குறைவாகவே உள்ளது.**

**கடந்த இரண்டு நாட்களாக மெஹராஸாத்தில் ஒரு மஸ்த் தங்கவைக்கப்பட்டுள்ளார். முதல் வாரத்தில் சகவாச முகாமுக்கு வரும் வழியில் அவரை அழைத்து வந்து, ஓர் அறையில் தங்க வைத்தேன். அவருக்கு உடல் உணர்வு சிறிதளவும் இல்லை. நானும் எனது நெருங்கிய மண்டலியும், மாலையில் மெஹராஸாத் திரும்பியபோது, இந்த மஸ்தைக் காலையில் நாங்கள் விட்டுச்சென்ற அதே இடத்தில், ஒரே நிலையில் பார்க்கிறோம். இரவு முழுவதும் அவர் அப்படியே இருந்திருக்கிறார். அவர் மயங்கிய நிலையில் எனது காலடிகளில் தூசியாகிவிட்டார். அவர் என் அன்பான குழந்தை, ஆனால் அவர் கூட என் உண்மையான நிலையை உணரவில்லை. இது வேடிக்கையல்ல; இனிப்பு மாத்திரையை விழுங்குவதால் இறை உணர்வை அடைய முடியாது! உங்களில் சிலர்** (முதல் குழுவிலிருந்து) **இந்த மஸ்தைப் பார்த்திருக்க வேண்டும். அவரை மனநிலை பாதிக்கப்பட்டவர் என்று அழைக்க முடியாது, ஆனால் அவர் அப்படித்தான் இருக்கிறார். அவர் குழந்தை போலவும் தோன்றுகிறார். அவருடைய மனம் தானாக முன்வந்து செயல்படாது. அது வெற்று மனமும் அல்ல. அவரை முட்டாள் என்றும் சொல்ல முடியாது. அவர் மனநிலை பாதிக்கப்பட்டவரிலிருந்து வேறுபட்டவர்.**

**அவருடைய மகத்தான ஆளுமையைப் பார்க்கும்போது, இந்த நிலைக்கு, கடவுளின் மீதான அவரது தீவிர அன்புதான் காரணம் என்பதைக் காண்கிறோம். கடவுளுக்கான அவரது ஏக்கம் அவரைத் தூசாக, துகளாக மாற்றிவிட்டது. அவர் இந்த உலகில் இருப்பதுபோல தோன்றினாலும், இந்த உலகத்திற்கு சொந்தமானவர் அல்ல. நீங்கள் அனைவரும் அவரைப் போல மாறுவதை நான் விரும்பவில்லை. ஆனால், நீங்கள் கடவுள் மீது அவருடைய அன்பைக் கொண்டிருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். என் மீது அந்தத் தீவிரமான அன்பைக் கொண்டிருங்கள், நீங்கள் இப்போது இருப்பதைப் போலவே இயல்பாக இருங்கள். பிறகு நடக்கும் வேடிக்கையைப் பாருங்கள் - அதுவே நிஜ வாழ்க்கை!**

**என்னைப் பொறுத்த வரை, சாது-பாவி, உயர்ந்தவர்-தாழ்ந்தவர், செல்வந்தர்-ஏழை, ஆண்-பெண், இளைஞர்-முதியவர் அனைவரும் ஒன்றே! ஏன்? ஏனெனில் நான் எல்லோரிலும் இருக்கிறேன். என்னை அரவணைக்கவும், அன்புடன் சந்திக்கவும் எவரும் தயங்கக் கூடாது.**

சூரத்தைச் சேர்ந்த ரவிகாந்த் ராவல், மிகவும் தடித்த மனிதர், அவரிடமிருந்த மலர் மாலையைத் தேடிக் கொண்டிருந்ததைக் கவனித்த பாபா, இவ்வாறு கூறினார். "**ராவலைத் தவிர பிற அனைவரும் என்னை அன்புடன் அரவணைக்க வேண்டும். ராவல் சற்று நிதானத்தைக் கடைப்பிடித்து ஜாக்கிரதையாக இருக்க வேண்டும், இல்லையெனில் என்னை நசுக்கிவிடுவார்! அவருடைய மலர் மாலை திருடப்பட்டாலும், எனக்கான அவரது அன்பு பாதுகாப்பாக உள்ளது! மலர் மாலைகளை பிறர் பறிப்பது அல்லது திருடுவது எளிது. ஆனால் அன்பை எவரால் திருட முடியும்?**"

பாபாவிற்கு வியர்த்து கொட்டுவதைக் கண்டு, கூட்டத்தில் யாரோ ஒருவர் விசிறியால் வீச முன்வந்தார். அப்போது பாபா, "**எனக்கு அது தேவையில்லை. என்னைத் தழுவுபவர்கள் அன்பின் தென்றலைப் பரவச் செய்கிறார்கள். எனக்கு வியர்க்கும் வேளையில், இதமான தென்றல் வீசுகிறது. என் அன்பர்களின் அன்பை அனுபவிக்கவில்லை என்றால், நான் ஏன் இந்தப் பௌதீக உடலை எடுக்க வேண்டும்? நான் இந்த உடலில் வருவது துன்பங்கள், சிரமங்கள், அசௌகரியங்கள் மற்றும் தொந்தரவுகளை சந்திக்க மட்டுமே.**"

டாக்கே, எல்சா இருவரின் கலகலப்பான சகவாசத்தையும், அவர்கள் வழங்கும் சிறப்பான நகைச்சுவை விருந்தையும் பற்றி, முதல் குழுவிடம் கூறியதை, பாபா மீண்டும் எடுத்துரைத்தார். மேலும், "**கோலிகள் விளையாடுவது, பட்டம் பறக்கவிடுவது, கிரிக்கெட் பார்ப்பது, சீட்டு, கிட்டிபுள் விளையாடுவது எனக்கு மிகவும் பிடிக்கும். இதுபோன்ற விளையாட்டிற்காக மட்டும் நான் வரவில்லை, வேறு பல தேவைகளுக்காக இந்தப் பௌதீக உடலை எடுத்துள்ளேன். நான் கருணை, இரக்கம் மற்றும் அன்பின் இறைப் பெருங்கடல்.**

"**நீதிமன்றங்களில் நீதிபதிகள் இருப்பதை நாம் அறிவோம், விசாரணைக்குப் பிறகு தீர்ப்பு வழங்குவதே அவர்களின் கடமையாகும். உலக நீதிபதிகள் நீதி வழங்குகின்றனர். ஒருவர் குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்டு தண்டிக்கப்படுகிறார், அல்லது அவர்களின் தீர்ப்பின்படி நிரபராதி என விடுவிக்கப்படுகிறார். நான் உலகளாவிய நீதிபதி ஆதலால், நான் நீதி வழங்குகிறேன். ஆனால் என்னிடம் ஒன்றே ஒன்று தனித்துவமானது. நான் நீதி வழங்குவது மட்டுமின்றி, நீங்கள் குற்றவாளியாக இருந்தாலும் இல்லாவிடிலும், நான் உங்களை மன்னிக்கிறேன்.**"

பாப்பிராஜு அவரை அணுகியதும், பாபா, பாப்பிராஜின் தொப்பியைக் கழற்றி தனது தலையில் வைத்தார். அவர் பாபாவை அன்புடன் தழுவி

முத்தமிட்டார். அதற்குப் பிறகு, பாபா நகைச்சுவையாகக் கூறினார், "**அவர் என் மீதான அன்பில் மிகவும் மூழ்கிவிட்டார், அவர் இப்போது என்னை முத்தமிட்டது போல், அவர் தனது மனைவியை ஒருபோதும் தீவிரமாக முத்தமிட்டிருப்பார் என்று எனக்குத் தோன்றவில்லை!**"

ஹோமா, தாரா தாதாசாஞ்சி இருவரும் அவரை அணுகுவதைக் கண்ட பாபா, "**இவர்கள் இருவரும் என் மீது மிகுந்த அன்பு கொண்ட சகோதரர்கள். குறிப்பாக லண்டனிலிருந்து இந்த சகவாசத்தில் கலந்துகொள்வதற்காக ஹோமா வந்துள்ளார். இதற்கு முன்னர் அவர்கள் எனக்கு முழு உடலின் சகவாசத்தை வழங்கியுள்ளனர். பாபா கூறினார், ஒருமுறை மும்பையில் இருந்தபோது, காரிலிருந்து இறங்க, நான் ஊன்றுகோல்களைப் பயன்படுத்த வேண்டியிருந்தது. அவர்கள் இருவரும் நொண்டுநடை போட்டு வந்ததைக் கண்டேன். அவர்களும் என்னுடன் தள்ளாடித் தத்தளித்தனர் - நாங்கள் மூவரும் ஒரே நேரத்தில் தடுமாறியது கடவுள்களுக்கே ஒரு கண்கொள்ளா காட்சியாக இருந்தது!**"

பாபா தொடர்ந்து கூறினார், "**நான் நகைச்சுவையை ரசிக்கிறேன். நான் வேடிக்கையான பேச்சுகளால் மகிழ்ச்சியாக உணர்கிறேன். இதோ, நான் உங்களுடன் பேசிக்கொண்டிருந்த எல்சா மிஸ்திரி. நான் எனது உலகளாவிய பணியில் மூழ்கியிருக்கும் போதெல்லாம், அவர் என்னை சிரிக்க வைக்கிறார். நான் எனது நகைச்சுவை உணர்வை இழக்கவில்லை. பிறர் என்னைப் பற்றி வேடிக்கையாக பேசுவதையே நான் ரசிக்கிறேன்.**"

பெஹ்ராமின் மூத்த மகன் ஷெரூவை, பாபாவின் சகோதரனின் மகன் என்று எரச் அறிமுகப்படுத்தியபோது, பாபா, "**எல்லோரும் எனது சகோதரர்கள் மற்றும் சகோதரர்களின் மகன்கள். அனைவரும் என் உறவினர்கள், எனது குழந்தைகள். அனைவரும் நானே, அதே வேளையில் நானே நீங்கள்**" என்று கருத்துரைத்தார்.

மேலுமொருவரைக் குறிப்பிட்டு பாபா கூறினார், "**இதோ ஆந்திராவில் உயர் பதவி வகிக்கும் நெடுஞ்சாலை பொறியியலாளர் என். தர்மாராவ். ஆந்திரா சுற்றுப்பயணத்தின் போது, நான் பயணித்த கார் அல்லது ஜீப்பின் ஓட்டுநராக என்னுடன் இருந்தார். அவர் என் மீது அதீத அன்பு கொண்டவர், எனக்காக அயராது உழைப்பவர். ஒருமுறை ஜீப்பை ஆழமான பள்ளம் ஒன்றில் ஏறக்குறைய மூழ்கடிக்க இருந்த அந்த கணத்தில், ஸ்டீயரிங் வீலை பிடித்து விபத்தைத் தடுத்தேன்.**"

பாபா, ராவலைப் பாடச் சொன்னார், ஆனால் அவரது குரல் இனிமையாக இல்லாததால், பாபா அவரது காதுகளில் கைகளை வைத்து பொத்திக் கொண்டார். அவர் பாடி முடித்ததும் பாபா, "**நீங்கள் பாடியது நன்றாக இருந்தாலும், உங்கள் குரல் எனக்கு அதிர்ச்சியைத் தந்தது**" என்று கேலி செய்தார்.

ராவல் பதிலளித்தார், "மின்சக்தி நிலையம் ஒருபோதும் அதிர்ச்சியைப் பெற முடியாது. இங்கு வருகை தந்துள்ள உங்கள் சகவாசிகள், தங்கள்

மின்கலங்களுக்கு உயிரூட்டத்தை அடையப் பெறும் நோக்கத்தில், மின்சக்தி நிலையத்திற்கு வந்தவர்கள் அதிர்ச்சியடைகிறார்கள்."

**"ராவல் எனது நல்ல அன்பர், நண்பர்"** என்று பாபா அவரைப் புகழ்ந்த போது, ராவல் தூங்குவது போல பாபாவின் மடியில் தலை வைத்தார். சில நிமிடங்களுக்குப் பிறகு, பாபா அவரை எச்சரித்தார், "**ராவல், நீங்கள் இப்படி நடந்து கொண்டால், நான் உங்களை உதைக்க வேண்டியதுதான், அல்லது பிறர் உங்களைப் பார்த்து பொறாமைப்பட்டு, எனது காலடியில் தங்கள் தலைகளை உடைத்துக் கொள்வார்கள்.**"

உடனடியாக பதிலளித்த ராவல், "பாபா, உங்களுக்காக, உங்கள் நோக்கத்திற்காக எனது உடலை துண்டு துண்டாக வெட்டுவதற்கும் நான் தயாராக இருக்கிறேன்" என்றார்.

ஆந்திராவைச் சேர்ந்த திருமல ராவைப் பார்த்த பாபா, "**நான் காக்கிநாடாவில் அவரது இல்லத்திற்குச் சென்றிருந்தேன். அவர் மிகுந்த அறிவாளி, என்னை மிகவும் நேசிக்கிறார். அவர் 'கடவுள் பேசுகிறார்** (GOD SPEAKS) **புத்தகத்தை தெலுங்கில் மொழிபெயர்த்து, கையெழுத்துப் பிரதியை எனது 64ஆவது பிறந்தநாளான பிப்ரவரி 25 அன்று, எனது காலடியில் வைத்தார். அவர் ஒரு சமூக சேவகர், தேசபக்தர், சுதந்திர இயக்கத்தின் போது அரசியல் போராட்டத்தில் ஈடுபட்டதற்காகச் சிறைக்குச் சென்றவர். அவர் சில காலம் விந்திய பிரதேசத்தின் லெப்டினன்ட் கவர்னராகவும், தற்போது பாராளுமன்ற உறுப்பினராகவும் இருக்கிறார். அமெரிக்காவில் இருந்தபோது, அங்கே அவர் எனது குழுவை சந்தித்து, அவர்களுடன் ஒன்றுகலந்தார். நினைவில் கொள்ளுங்கள், எனக்கு இந்தத் தகுதிகளும், பதவிகளும் ஒரு பொருட்டல்ல. அவர் என்னை நேசிக்கிறாரா இல்லையா என்பது தான் இன்றியமையா ஒரே தகுதி. அவர் மீது நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். அவருடைய தலையும்** (அறிவாற்றல்) **இதயமும்** (அன்பு) **சமநிலையில் உள்ளன. அவர் உண்மையில் மனிதரில் மாணிக்கம்.**"

மும்பையைச் சேர்ந்த ஸொராப்ஜி ஸிகன்போரியாவை அறிமுகப்படுத்தி, பாபா கருத்துத் தெரிவிக்கையில், "**மும்பையில் எனது மையத்தை நடத்துபவர். அவர் பாபாவிற்காக உண்மையாக, நேர்மையாக அயராது உழைப்பவர். அதி புத்திசாலி, என்னை ஆழமாக நேசிக்கிறார், மேலும், பார்சிகள் மற்றும் ஸொராஸ்ட்ரியர்கள் இடையே எனது அன்பின் செய்தியைப் பரப்புகிறார்**" என்றார்.

ஸிகன்போரியாவுடன் மும்பையைச் சேர்ந்த ஒரு செல்வந்தர், சிந்தி தொழிலதிபர் கிஷின்சந்த் ராம்தாஸ் கஜ்வானி வந்தார், அவர் காலப்போக்கில் பாபாவின் வழியில் மிகவும் பயனுள்ளவராக இருந்தார். வேறு ஓர் இடத்திற்கு புனித யாத்திரை செல்லவிருந்த அவர், 'தற்செயலாக' அவரது ரயில் ரத்து செய்யப்பட்டதால், அதற்கு பதிலாக அவர் மெஹராபாத் வந்தார்.

விஜயவாடாவைச் சேர்ந்த சிந்தா சர்வராவ், மஜேட்டி ராமமோகன் ராவ் இருவரையும் குறித்து பாபா, "**இந்த இணைபிரியா ஜோடி, நான் தரிசனம் வழங்கச் செல்லும் இடங்களிலெல்லாம் அவர்கள் இருக்கிறார்கள். மும்பையிலும் பூனாவிலும் அவர்கள் இருவரும் எனது தரிசனத்திற்காக வந்தனர், அவர்கள் இப்போது இங்கும் இருக்கிறார்கள்**" என்று பாபா குறிப்பிட்டார்.

அதன் பிறகு பாபா, சகவாசத்தில் பங்கெடுக்கும் ஆண், பெண் அனைவரையும் எச்சரித்தார்: "**உங்களில் எவரும் மெஹராஸாத்திற்குச் சென்று அந்த இடத்தைப் பார்வையிட வேண்டும் என்று நினைக்க வேண்டாம். நேரம் குறைவாகவும், மிகவும் விலைமதிப்பற்றதாகவும் இருப்பதால், அதை நம்மால் இழக்க முடியாது. அங்குச் சென்று திரும்பி வர ஒரு முழு நாள் தேவைப்படும். ஆதலால் எவரும் அங்குச் செல்லும் எண்ணத்தைக் கைவிடலாம்.**"

டாக்டர் தனபதி ராவை அறிமுகப்படுத்திய பாபா, "**அவர் எங்கள் அனைவருக்கும் மகத்தான மூத்த அன்பர். ஆந்திரா மக்கள் அவரது உடல் ஆரோக்கியம் குறித்து புகார் கூறுகின்றனர். நாளை நான் அவருக்கு அறிவுறுத்தல் வழங்கும்போது, அதை நினைவூட்டும்படி அவரிடம் கேட்டுக் கொண்டேன்**" என்று குறிப்பிட்டார்.

ஸட்டா-தமானியா குடும்பப் பண்ணைக்கு அருகில் பணிபுரிந்த பாபாதாஸ் என்ற பணிக்கார சிறுவன், பாபாவின் ஆரத்தியை நிகழ்த்த (பாரம்பரிய உலோகத் தட்டில் எடுக்காமல்), தனது உள்ளங்கையில் எரியும் கற்பூரத்தை ஏந்தி வந்தான். மேடையில் வந்ததும், மண்டலி அதைக் கையிலிருந்து அகற்றி நெருப்பை அணைத்தனர். இதற்கு முந்தைய சகவாச நிகழ்ச்சியிலும் அவர் அதையே செய்ததால், அவரது உள்ளங்கை வீங்கியிருந்தது. அடுத்த நாள், பாபா அந்த இளைஞனைத் தழுவிக் கொள்வதற்காக, குறிப்பாக அந்தப் பண்ணையை நோக்கி நடந்தார். பாபாதாஸ், ஒரு மாதம் தண்ணீர் மட்டுமே அருந்தி உண்ணாவிரதம் இருந்ததாக பாபா, குழுவிடம் தெரிவித்தார்.

ஒரு பக்தரின் மனைவி, சகவாசத்தில் கலந்து கொள்ள ஒப்புக்கொண்டதற்கு இணங்க, விண்ணப்பதை நிரப்பிய பின்பு, திடீரெனக் காலமானார். பாபா அந்த பக்தரிடம், "**அவர் காலமானதை எண்ணி கவலைப்படுவானேன்? என்னை உங்கள் மனைவியாக பாவித்து, என்னை மணந்து கொள்ளுங்கள்**" என்று கூறினார்.

ஒரு குழுத் தலைவர், அவர் உணர்ச்சிவசப்படும் இயல்பைக் கொண்டவர் என்ற கருத்துக்கு பதிலளிக்கும் விதத்தில் பாபா, "**உணர்ச்சிவசப்படுவது மோசமானது என்று யார் கூறுகிறார்கள்? உணர்வு ரீதியான அன்பில் என்ன தவறு உள்ளது? உணர்வு அதன் சொந்த வழியில் நல்லது, ஆனால் அன்பு என்பது வேறு ஒன்று - உணர்ச்சியிலிருந்து முற்றிலும் வேறுபட்டது**" என்றார்.

வங்காளத்தைச் சேர்ந்த அன்பர்கள், பாபாவிடம் தங்கள் இடத்திற்கு விஜயம் செய்து, கொல்கத்தாவில் சத்குரு ராமகிருஷ்ணரின் சீடர்களுக்கு

தரிசனம் வழங்கி, ஆசிர்வதிக்குமாறு வேண்டினர். அதற்கு பதிலளித்த பாபா, **“நான் ஏன் அங்கு வர வேண்டும்? நான் அங்கு ஏற்கனவே இருக்கிறேன், எப்பொழுதும் இருக்கிறேன். நான் எல்லா இடங்களிலும் இருக்கிறேன். உங்கள் மூலமாகப் பேசுவதும் நான்தான், உங்கள் மூலமாகக் கேட்பதும் நான்தான். நான் எந்த இடத்திற்குச் செல்வதும், செல்லாததும் முற்றிலும் முக்கியமான ஒன்று அல்ல”** என்றார்.

ஒரு நபர் பாபாவிடம் வழங்கிய அவரது புகைப்படத்தை, பாபா தன்னையே வணங்கியதன் அடையாளமாகத் தனது நெற்றியில் தொட்டார்.

பாஜ்வா நகரின் ஹரிபாய் பட்டேலை அறிமுகப்படுத்திய பாபா, **“அவர் குஜராத்தில் ஒரு சிறந்த அன்பர் மற்றும் சேவகர். என்னைப் புகழ்ந்து பல குஜராத்தி பாடல்களை இயற்றியுள்ளார்”** என்று குறிப்பிட்டார்.

மாலை 4:00 மணிக்கு சகவாசக் குழுவுடனான சந்திப்பு முடிவடைய இருந்த நேரத்தில் பாபா கூறினார்: **“தயவுசெய்து கவனமாகக் கேளுங்கள். ஒவ்வொருவரும் என்னை சந்தித்து தழுவிய பின்னர், அனைவரும் ஆரத்திக்காக பந்தலில் அமைதியாக அமர்ந்திருங்கள். அதன் பிறகு நான் மெஹராஸாத்திற்குச் சென்று, நாளை திரும்பி வருவேன். எனக்கு உடல்நிலை சரியில்லை, ஜுரம் இருந்தால், எஞ்சியிருக்கும் நாட்களில் வர முடியாமல் போகலாம். எனவே, இன்றைய கடினமான நிகழ்ச்சிக்குப் பின்னர், என்னை ஓய்வெடுக்க அனுமதிக்க வேண்டும். நிச்சயமாக, நாளையிலிருந்து நானாக ஒருவரை மேடைக்கு வர அழைக்கவில்லை என்றால், என்னை சந்திக்கவோ, என்னுடனான நேர்காணலுக்காகவோ வர வேண்டாம். 25ஆம் தேதி மட்டும், நீங்கள் அனைவரும் மீண்டும் மாலை அணிவித்து, எனது பாதங்களைத் தொட்டு, தரிசனத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும் - அன்று என்னைத் தழுவ வேண்டாம்.”**

அதைத் தொடர்ந்து பாபா, மறைந்த குஸ்தாஜியின் சகோதரர்களான ஹோமி, ஸ்லாம்சன் ஆகியோரை அறிமுகப்படுத்தி, **“சகவாசத்தில் பங்கெடுப்பவர்களை எவராலும் அறிமுகப்படுத்த முடியாது; அவர்களை நான் மட்டுமே அறிவேன்!”** என்றார். குஸ்தாஜியின் மருமக்களும் உடன் வந்திருந்தனர், பாபா அவர்களைப் பார்த்து மகிழ்ச்சியடைந்தார்.

ஆந்திராவைச் சேர்ந்த மல்லிகார்ஜுன ராவ், பாபாவைப் பற்றி தெலுங்கில் எழுதப்பட்ட இரண்டு புதிய புத்தகங்களை பாபாவிற்கு வழங்கினார்.

கோடூரி கிருஷ்ணாராவ், பாபாவைத் தழுவிய பின்பு, திகைப்பில் மயக்கமானவர் போல “பாபா... பாபா... பாபா...” என்று மட்டும் உச்சரித்துக் கொண்டிருந்தார்.

**“என் மீது அவர் கொண்டிருக்கும் அன்பு தனித்துவமானது”** என்று பாபா கூறினார்.

ஆந்திரப் பிரதேசத்தின் நான்கு தலைமை ஊழியர்களான தனபதி ராவ், குடும்ப சாஸ்திரி, ரங்கா ராவ், மல்லிகார்ஜுன ராவ் ஆகியோருடன் உரையாடிய பாபா, **“குடும்ப சாஸ்திரி மிகவும் நம்பகமானவர். பிற ஊழியர்களை**

**சந்திப்பதற்கு முன்னர், உங்கள் நால்வரையும் ஒன்றாக சந்திக்க விரும்புகிறேன். நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். உங்கள் நால்வரையும் ஒன்றாகப் பார்க்க வேண்டும்**" என்று கூறி, பாபா மீண்டும் அவர்களைத் தழுவி, "**இந்த நால்வரும் ஆந்திராவின் மிகப் பெரிய ஊழியர்கள்**" என்று சகவாசக் குழுவிடம் தெரிவித்தார்.

எரச்சின் தாய் மாமா, மெஹர்ஜி மாமா ஸட்டா, மேடையில் வந்த போது பாபா, அவரைப் பற்றிக் குறிப்பிட்டதாவது: "**அவரது வாழ்க்கை தனிச் சிறப்பு மிக்கது. அவருக்கு நேரம் கிடைக்கும் போதெல்லாம், கடவுளைத் தேடுவதற்கும், எனது பெயரை உச்சரிப்பதற்கும், என் அன்பைப் பரப்புவதற்கும் அவர் செலவிடுகிறார். அவர் குணத்தால் தூய்மையானவர். துன்பத்தில் இருக்கும் பிறருக்கு அனைத்தையும் கொடுக்க விரும்பும் இதயம் கொண்டவர். அவருக்கு ஒரு நாள் குறுகிய காட்சி ஒன்றை வழங்க வேண்டும் என்று நினைக்கிறேன். ஆனால், அதற்கும் 'உள் அனுபவங்களுக்கும்' எந்த சம்பந்தமும் இல்லை என்பதை நினைவில் கொள்ளுங்கள். எனது உண்மை நிலையைப் பற்றிய ஒரு குறுகிய பார்வையை மட்டுமே அவருக்கு வழங்க விரும்புகிறேன்.**"

மெஹர்வான் ஜெஸவாலாவை, பாபா பாராட்டினார், "**அவர் எரச்சின் சகோதரர் மற்றும் எனது மாணிக்கம், அசல் மாணிக்கம்; தலை முதல் கால் வரை அவர் என்னுடையவர்.**"

எடிதா சதிராஜுவின் பக்கம் திரும்பிய பாபா, "**நீங்கள் எனக்காக எவ்வளவு கடினமாக உழைக்கிறீர்கள் என்பது எனக்குத் தெரியும்**" என்றார்.

ஒரு பக்தர் இரண்டாவது அரவணைப்பிற்காக மீண்டும் வரிசையில் இணைந்ததை கவனித்த பாபா, "**இதுவரை, முதல் முறை வராதவர்கள் பலர் இருக்கிறார்கள்**" என்று அவருக்கு நினைவூட்டினார்.

அப்போது உடனிருந்த உபாஸனி மஹாராஜின் மருமகனைப் பார்த்து பாபா, '**அவர் என்னை மிகவும் நேசிக்கிறார், நானும் அவரை மிகவும் நேசிக்கிறேன்**' என்று கூறி அறிமுகப்படுத்தினார்.

ஆந்திராவைச் சேர்ந்த இரண்டு சகோதரர்களான பாஸ்கரா மற்றும் ராமபத்ர ராஜு, மிகுந்த பக்தியுடன் இருந்தனர்; அவர்கள் வந்ததும், பாபா கூறினார், "**இருவரும் என் மீது வைத்திருக்கும் ஆழ்ந்த அன்பு, அவர்களின் இதயங்களில் ஆழமாக வேரூன்றி உள்ளது. என் மீதான அவர்களின் அன்பைப் பற்றி உங்களுக்குத் தெரியாது. அவர்கள் 'கடவுள் பேசுகிறார்'** (GOD SPEAKS) **விளக்கப்படத்தை தயார் செய்து, எனது காலடியில் சமர்ப்பித்தனர். அந்த விளக்கப்படம் எனக்கு மிகவும் பிடிக்கும்.**" மெஹராபாத் மண்டபத்தில் அந்த விளக்கப்படத்தைத் தொங்கவிடுமாறு அறிவுறுத்திய பாபா, "**இந்த சகோதரர்கள் பல ஆண்டுகளாக எனது பணியை உறுதியுடன் செய்து வருகின்றனர். ஆந்திராவின் நகரங்கள் மற்றும் கிராமங்களில், அவர்களின் குழுவினர் தங்கள் நாடகமான 'புர்ரா கதை'யை** (BURRA KATHA) **99 முறை**

**அரங்கேற்றியுள்ளனர். பிப்ரவரி 25 அன்று 100ஆவது முறையாக இதை நிகழ்த்த அனுமதி வழங்குவதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்”** என்றார்.

தமிழ்நாடு விருதுநகரைச் சேர்ந்த ராஜா முஹம்மது மற்றும் அவரது மனைவி ரஹிமத்பி (RAHIMATBI) ஆகியோர் பாபாவை சந்தித்தனர். அவரை அறிமுகப்படுத்தி பாபா கூறினார், **“அவர் மதராஸில், துணை காவல்துறை மேல் அதிகாரியாகப் பணிபுரிகிறார். அவர் ஓர் உண்மையான முஸ்லீம். பின்னர் அவர் பாண்டிச்சேரியில் காவல்துறை இன்ஸ்பெக்டர் ஜெனரலாக** (INSPECTOR GENERAL) **இருந்தார். அவர் என் மீது மிகுந்த அன்பு கொண்டவர். அவருடைய மனைவி ஓர் ஆழ்ந்த பக்தர். அவர்கள் என்னைப் பற்றிய தங்கள் அனுபவங்களை எழுதி ஆதிக்கு அனுப்பியுள்ளனர். விருப்பமுள்ளவர்கள், அவர்கள் எழுதியதைப் படிக்கலாம்.”**

டாக்டர் கனகதண்டி சூர்யநாராயணா, பாபாவின் அரவணைப்புக்காக வந்தபோது, பாபா அவரைப் பாராட்டினார்: **“இந்த டாக்டர் கனகதண்டி எங்களுக்கு எல்லாமே - மருத்துவர், சமையல்காரர், ஊழியர், அன்பர் எல்லாமே!”**

மாலை 5:00 மணிக்கு பாபா சிறிது தண்ணீர் பருகியபோது, அவருக்கு மீண்டும் இருமல் வந்தது. அவர் இது குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில், **“முதற் குழு இங்கு இருந்தபோதும், இந்த நேரத்தில் எனக்கு இதுபோன்ற இருமல் வந்தது. என்னை யார் நினைவு கூருகிறார்கள்?”** பாபா இந்தக் கேள்வியை முதல் குழுவிடம் கேட்டபோது, அவர்களால் பதில் சொல்ல முடியவில்லை என்று எரச் சொன்னார். ஆனால் பாபா, ‘**எதிர்வரும் கார்மேகம் தான் அவரை நினைவு கூருவதாக**’ மீண்டும் கூறினார். **“கார்மேகத்தின் வருகையை அது எனக்கு நினைவூட்டுகிறது என்பது நிஜம்”** என்று பாபா இதை உறுதிப்படுத்தினார்.

ராமலிங்கம் சாஸ்திரி அவரை அணுகியபோது, பாபா கூறினார், **“நான் அவருக்கு ‘பாபா சாஸ்திரி’ என்று பெயர் சூட்டினேன், அவர் சிறுவயதிலிருந்தே சாதுக்களை தரிசனம் செய்வதில் ஆர்வம் கொண்டவர். எனது தரிசன நிகழ்ச்சி எங்கு நடந்தாலும் அவர் வருவதுண்டு. எனது தரிசனத்திற்காக ஆந்திராவிலிருந்து அவர் தொலைதூரம் கடந்து, ஸாக்கோரி, ஹமிர்பூர், மற்றும் பல இடங்களுக்கு வந்தார்”**

மாலை 6:00 மணிக்கு ஆரத்தி நிகழ்ச்சியுடன் தரிசனம் நிறைவடைந்தது. மண்டபத்தை விட்டு வெளியேறி, பாபா தனது அறைக்குச் சென்றார், அங்கு, மண்டலியுடன் கலந்துரையாடிய பின்னர், அவர் மெஹராஸாத்திற்குப் புறப்பட்டுச் சென்றார்.

1958 பிப்ரவரி 23 ஞாயிற்றுக்கிழமை காலை 8:15 மணிக்கு, பாபா மெஹராபாத் வந்து, சகவாசக் குழுவின் நிர்வாகத்தைப் பற்றி மண்டலியுடன் கலந்தாலோசித்த பின்னர், அவர் காலை 9:05 மணிக்கு பந்தலுக்குள் நுழைந்தார். அவர் வருவதற்கு முன்னரே, கோதாவரி மாய் மற்றொரு நாற்காலியில்

மேடையில் அமர்ந்திருந்தார். அவர் பாபாவை தரிசனம் செய்த பின்பு, பக்தி இசை நிகழ்ச்சியுடன் குஜராத்தி ஆரத்தியும் பாடப்பட்டது. அது நிறைவடைந்ததும், பாபா சபைக்கு வணக்கம் செலுத்தினார்.

பாபாவின் ஆங்கில அறிக்கைகளை தெலுங்கில் மொழிபெயர்க்க, திருமல ராவை, பாபா மேடைக்கு அழைத்தார். நோயுற்றவர்களைப் பற்றி விசாரித்த பின்னர், அவர் கூறினார், “**கடந்த வாரம் நான் கோதாவரி மாயை, சகவாசத்தில் கலந்துகொள்ளும் அன்பர்கள் அனைவருக்கும் பரிச்சயம் செய்து வைத்தேன், இப்போது நான் அவரை உங்களுக்கு அறிமுகப்படுத்துகிறேன், அவருடைய பெருமையை நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். முதல் குழுவிற்கு வழங்கப்பட்டதைப் போலவே, எரச் எனது முன்னுரையை வாசிப்பார்**” என்றதும், எரச் அதை வாசித்தார்; அது முடிந்ததும், அன்பர்கள் அனைவரும் ‘கோதாவரி மாய்க்கு ஜெய்!’ என்று கோஷமிட்டனர்.

ஆந்திரா பஜனைக் குழுவினர் சில பாடல்களைப் பாடியதும், பாபா, ராவ்ஸாஹேப் அஃப்ஸேரியை மேடைக்கு அழைத்தார். பாபா கேட்டுக்கொண்டதற்கு இணங்க, ராவ்ஸாஹேப் பாரசீக மொழியில், ஹஃபீஸின் ஈரடிக் கவிதை ஒன்றை வாசிக்க, அது ஆங்கிலம், தெலுங்கு மற்றும் குஜராத்தி மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டது. அதன் பொருள்:

உங்கள் சுய இயல்பின் வரம்பிலிருந்து வெளியே வராதவரையில்,
உண்மைப்பொருளின் பாதையில் நீங்கள் எப்படிப் பயணிக்க முடியும்?

பாபா விளக்கினார்:

**இந்தப் பாதை சொல்லொணா மற்றும் தாங்கொணா துன்பங்களும் துயரங்களும் நிறைந்தது. யோகிகளும் துறவிகளும் கூட, ஏக இறைவனான என் உண்மை நிலையை அறியவில்லை. ஹஃபீஸ், ‘நமது இயல்பின் வரம்பிலிருந்து வெளியே செல்லுதல்’ என்பதைக் குறுப்பிடுகிறார். ஆனால் நம்முடைய அந்த இயல்பு என்றால் என்ன? பல்வேறு வடிவங்கள் மற்றும் உணர்வு நிலையின் பரிணாம வளர்ச்சியின் கருப்பொருளை நான் இப்போது மீண்டும் சொல்லப் போவதில்லை. இவற்றைப் பற்றி வெகுவாகப் புத்தகங்களில் விளக்கியுள்ளேன். உதாரணமாக, மனித உருவில் ஒரு குழந்தையாகப் பிறப்பிலிருந்து தொடங்குகிறோம். அந்தக் குழந்தையின் பூர்வ கர்ம வினைகளால் அது பிறவி எடுக்கிறது. குழந்தை பிறந்த உடனேயே, ஆண் அல்லது பெண் குழந்தை, தனது கடந்தகால வாழ்க்கையில் சேகரிக்கப்பட்ட மனப்படிவங்களை அனுபவிக்கத் தொடங்குகிறது. அப்படியானால், குழந்தையின் இயல்பு எப்படி இருக்கும்? குழந்தையின் இயல்பு, நிச்சயமாக, அதன் கடந்தகால மனப்படிவங்களுக்கு இணங்கினாற் போல் இருக்கும். அந்தக் குழந்தை தனது கடந்தகால வாழ்க்கையில் சேகரிக்கப்பட்ட அதன் மனப்படிவங்களின்படி செயல்பட வேண்டும், உணர வேண்டும், சிந்திக்க வேண்டும். வேறு எந்த வழியும் இல்லை, அவன் அல்லது**

அவள் மனப்படிவங்களை அனுபவித்தாக வேண்டும். அதுதான் 'விதியின் நிர்பந்தம்' (LAW OF MUST).

நிர்பந்தம் எனும் இந்த தவிர்க்க முடியாத கொள்கையுடன் இணைந்து, குழந்தை தனது கடந்தகால மனப்படிங்களுக்கு இணங்கி செயல்படவும், உணரவும், சிந்திக்கவும் சுற்றுப்புற சூழ்நிலைகள் உதவுகின்றன. குழந்தை பூமியின் ஒளியைக் கண்ட அந்த நேரத்திலிருந்தே, அது நாளுக்கு நாள் வளரத் தொடங்குகிறது. குழந்தை பிறந்ததும், அது அழ வேண்டும்; அதற்குப் பால் ஊட்ட வேண்டும்; அவன் அல்லது அவள் பெரிதாக வளர வேண்டும்; அதற்கு ஒரு பெயர் இருக்க வேண்டும். அதன் பாலினம், (பண்புக்கூறுகள், ஆளுமை, விருப்பங்கள்) இதுபோன்ற பல, கட்டாயம் என்ற கொள்கையால் தீர்மானிக்கப்படுகிறது. அது எங்கிருந்து வந்தது என்பது குழந்தைக்குத் தெரியாது. அந்தக் குழந்தைக்கு அதைப்பற்றிய சிந்தனையே இல்லை. குழந்தை, தான் பிறந்ததாக எடுத்துக்கொள்கிறது, மேலும் குழந்தை வாழத் தொடங்குகிறது. குழந்தைக்கு ஒரு பாலினம் மற்றும் ஒரு பெயர் உள்ளது; அது அழுகிறது, உண்கிறது, அருந்துகிறது, தொடர்ந்து பள்ளியில் படிக்கிறது மற்றும் வாழ்க்கையின் இன்பத்தை அல்லது துன்பத்தை அனுபவிக்கிறது - இவை அனைத்தும் அவனது அல்லது அவளது இயல்பின் காரணமாக - 'இயற்கையின் (சுற்றுப்புற சூழல்) காரணமாக அல்ல.'

ஹஃபீஸ் அந்தக் குழந்தையின் இயல்பைக் குறிப்பிடுகிறார். இது 'விதியின் நிர்பந்தம்'. உங்களால் உருவாக்கப்பட்டு, வளர்க்கப்பட்ட உங்களின் இயல்பே; நீங்கள் ஓர் ஆண் அல்லது பெண், உங்கள் உடல் நோயுற்றதாக அல்லது ஆரோக்கியமாக, அழகாக அல்லது அழகற்று இருப்பதாக நினைக்க வைக்கிறது; நீங்கள் பசியாக இருக்கிறீர்கள், வலுவாக இருக்கிறீர்கள், உடல்நலம் குன்றி இருக்கிறீர்கள் என்று நினைக்கவும் தூண்டுகிறது.

இப்போது நாம் ஆன்மீகப் பாதையில் எதிர்கொள்ளும் சிரமங்களுக்கு வருகிறோம். என்னென்ன சிரமங்கள்? ஆன்மீகப் பாதையில், நான் ஏக இறைவன் எனும் உண்மை நிலையைப் புரிந்துகொள்வது எப்பொழுதும் சாத்தியமற்றது. ஏன்? காரணங்களை நான் உங்களுக்கு விளக்குகிறேன். ஹஃபீஸ் என்ன சொல்கிறார்? அவர் கூறுகிறார்: "உங்கள் இயல்பின் வரம்பிலிருந்து வெளியே வந்துவிடுங்கள்." இதன் அர்த்தம் என்னவெனில்: "உங்கள் சுய இயல்புக்கு எதிராகச் செல்லுங்கள்." உங்கள் இயல்புதான், உங்களுக்குப் பசியையும், உண்ண உணவு வேண்டும் என்ற எண்ணத்தையும் தூண்டுகிறது. நீங்கள் பசியை உணரும்போது, உணவைக் கேட்டு வாங்கி உண்பீர்கள். ஆனால், நீங்கள் உண்ண வேண்டாம் என்று ஹபீஸ் விரும்புகிறார்; அது உங்கள் இயல்புக்கு எதிரானது, அதாவது உங்கள் இயல்பிலிருந்து 'வெளியே வருவது'. உங்கள் இயல்பு, உங்களுக்குப் பசி இல்லை என்று சொல்வதானால், ஹஃபீஸின் கூற்றுப்படி, நீங்கள் அதற்கு எதிராகச் செல்ல வேண்டும், அதாவது நீங்கள் உண்ண வேண்டும், மேலும் அதிகமாக உண்ண வேண்டும். நீங்கள் தூங்க வேண்டும் என்று

நினைப்பதானால், ஹஃபீஸின் கூற்றுப்படி, நீங்கள் தூங்கக்கூடாது. இதைத்தான் ஹஃபீஸின் ஈரடிக் கவிதையிலிருந்து நாம் புரிந்துகொள்கிறோம்.

ஆனால் அந்தக் கவிதை, உண்மையில் இதையெல்லாம் அர்த்தப்படுத்துகிறதா? ஹஃபீஸ் உண்மையில் கூறுவதன் அர்த்தம் என்ன என்பதை நான் உங்களுக்குச் சொல்கிறேன். ஹஃபீஸின் கூற்றுப்படி, உண்மையில், நீங்கள் எதையேனும் பார்க்க விரும்பினால், நீங்கள் அதைப் பார்க்கக்கூடாது. நீங்கள் எதையும் பார்க்க விரும்பவில்லை என்றால், நீங்கள் அதைப் பார்க்க வேண்டும். இதுவே உங்கள் இயல்பிலிருந்து விலகுவது என்பதன் பொருள். இப்படி எண்ணற்ற உதாரணங்களை 'தங்கள் இயல்பிற்கு எதிராகச் செல்வது' என்று சொல்லிக்கொண்டே போகலாம்.

மற்றுமோர் உதாரணத்தை எடுத்துக் கொள்ளுங்கள்: நீங்கள் ஒரு சாய்வான இடத்தில் ஓடும்போது, மூச்சுத் திணறுவீர்கள். அத்தகைய சூழ்நிலையில், நீங்கள் மூச்சிரைக்கக்கூடாது; நீங்கள் சாதாரணமாக சுவாசிக்க வேண்டும். மாறாக, நீங்கள் சாதாரணமாக உணரும்போது, அவ்வாறு உணரக்கூடாது; நீங்கள் கடினமாக சுவாசிக்க வேண்டும் அல்லது மூச்சுத் திணற வேண்டும். ஆதலால், உங்கள் இயல்பின் வரம்பிலிருந்து வெளியேறுவது கிட்டத்தட்ட சாத்தியமற்றது, எனவே நான் ஏக இறைவனான உண்மைப்பொருளாக இருப்பதை நீங்கள் உணர்வது உண்மையில் சாத்தியமற்றது. அப்போது நாம் என்ன செய்ய வேண்டும்?

ஹஃபீஸ் அவரது உதவிக் கரங்களை நீட்டி, நமக்கு ஒரு தீர்வை வழங்குகிறார். ஆனால் அந்தத் தீர்வும் மிகவும் கடினமானது, சாத்தியமற்றது, ஆனால் சற்றே குறைவான அளவில் கடினமானது அல்லது சாத்தியமற்றது. ஹபீஸ் கூறுகிறார்:

ஓ பைத்தியமே! இறை உணர்வை எய்தும் அளவுக்கு
உனக்குப் பைத்தியம் இருக்குமானால்,
அப்போது, ஒரு பரிபூரண குருநாதரின் பாதங்களில்
தூசி ஆக மாற வேண்டும்!

இந்த நேரத்தில், பாபா ஆங்கிலத்தில் வழங்கியதை, ராவ்ஸாஹேபிடம் பாரசீக மொழியில் (பின்பு தெலுங்கு மற்றும் குஜராத்தியிலும் மொழி பெயர்க்கப்பட்டது) கூறுமாறு கேட்டுக்கொண்டார்:

பாபா தொடர்ந்து கூறினார்:

ஒரு பரிபூண குருநாதரின் காலடியில் தூசி ஆக மாறும் நிலைக்கு நாம் மீண்டும் வருகிறோம். ஹஃபீஸ் கூறுவதன் அர்த்தம் என்ன? தூசிக்கு அதன் சுய சிந்தனை இல்லை; அதன் சுய விருப்பமும் இல்லை. அதை மிதிக்கலாம், நெற்றியில் பூசலாம் அல்லது காற்றில் பரவவிடலாம். முழுமையான கீழ்ப்படிதலுக்கு, 'தூசி போல் ஆவது' என்பதைத் தவிர, பொருத்தமான, சிறந்த உதாரணம் வேறு எதுவும் இல்லை.

**உங்களில் எவருக்கேனும் புரியவில்லை என்றால், அதைப் பற்றி கவலைப்பட வேண்டாம். என்னைப் பார்த்து, என்னையே நினைவில் கொள்ளுங்கள். அதுவே போதுமானது. வார்த்தைகளுக்கு உண்மையான மதிப்பு என்பது இல்லை. புரிந்து கொண்டால் நல்லது. இல்லையென்றால், அதைப் பற்றி கவலைப்படுவானேன்?**

பாபா இந்தக் கேள்வியுடன் நிறைவுசெய்தார்: "**கீழ்ப்படிதல் எனும் போது, நாம் புரிந்துகொள்வது என்ன?**" பூனாவிலும் மும்பையிலும் சென்ற வாரம் அவர் வழங்கிய நான்கு வகையான கீழ்ப்படிதல் பற்றிய சொற்பொழிவைப் படிக்குமாறு அவர் எரச்சிடம் கேட்டுக்கொண்டார். அதன் முடிவில், ராவ்ஸாஹேப் மொழிந்த மற்றுமொரு பாரசீக கவிஞரின் வரிகளை பாபா மொழிபெயர்த்தார்:

கடவுளுக்காக, பல்லாண்டு காலம் தீவிர
ஏக்கத்தைக் கொண்டு வாழ்ந்த பின்னர்,
ஆயிரமாயிரம் 'மர்தான்-இ-குதா'க்களில்
(இறைவனின் மனிதர்களில்) ஒருவர் அவரை உணர்கிறார்.
லட்சக்கணக்காக வாழ்பவர்களில் ஒரு சிலரே
தங்களுக்காக அதிகம் வாழ்வதில்லை,
ஆனால் கடவுளுக்காக வாழ்பவர் மட்டுமே
இறைவனை உணர்கின்றார்!

பாபா இவ்வாறு கூறி முடித்தார்: "**இது இறுதி இலக்கான இறை-உணர்தலின் பாதையில் எதிர்கொள்ளும் அதீத சிரமங்களைக் குறித்த சில யோசனைகளை நமக்கு வழங்குகிறது. 'மர்தான்' என்றால் ஆண் மகன்கள். இதன் பொருள் 'உண்மையான ஆண்' அல்லது 'உண்மையான மனிதன்' மட்டுமின்றி, அவர் கடவுளுக்கே உரியவர். லட்சக்கணக்கான அந்த மனிதர்களில் ஒருவர் மட்டுமே, பல்லாண்டு காலமாக தீவிர ஏக்கத்தைக் கொண்டு வாழ்ந்த பிறகு, கடவுளை உணர முடியும்.**"

இப்போது மணி 11:40 ஆகிவிட்டது. ஆந்திரா பஜனைக் குழுவினர் தெலுங்கில் பாடல்களைப் பாடி, பாபாவின் ஆரத்தியை நிகழ்த்தினர். பாபா விரும்பியபடி, கோதாவரி மாய் கன்யாக்களுடன் புறப்பட்டுச் சென்றார். பாபா, அவரது பிறந்தநாளன்று கோதாவரி மாயிடம் மெஹராபாத்திற்குத் திரும்பி வருமாறு அழைப்பு விடுத்து, அவர் விடைபெறும் வேளையில் 'ஜெய்' முழக்கங்களுடன் அவருக்கு வணக்கம் செலுத்துமாறு, சபையைக் கேட்டுக் கொண்டார்.

அன்று ஆந்திரா, கேஷவரம் கிராமத்தில் வாழ்ந்த ஏராளமான கிறிஸ்தவ அன்பர்கள் வந்திருந்தனர். பாபா அவர்களை மேடைக்கு அழைத்து அரவணைத்துக் கொண்டார்.

இதையடுத்து ஆந்திரா அன்பர்கள், பாபாவின் பிறந்தநாளில் அவரது பாதங்களைக் கழுவ அனுமதி கோரினர். சகவாசக் குழு அன்பர்கள் அதிக எண்ணிக்கையில் இருந்ததால், அங்கிருந்த அனைவரின் சார்பாகவும்

பன்னிரண்டு ஆண்களையும் பன்னிரெண்டு பெண்களையும் தேர்வு செய்யுமாறு பாபா அறிவுறுத்தி மேலும் கூறினார்: "**25ஆம் தேதி பாதபூஜையைத் தொடர்ந்து, நீங்கள் அனைவரும் என்னை அணுகி, தரிசனம் செய்யலாம். நீங்கள் எனக்கு மாலை அணிவித்து, எனது பாதங்களைத் தொடலாம். ஆனால் அந்நாளில் அனைவரையும் அரவணைக்க நேரமிராது. நேற்றிரவு, நான் எனது உலகளாவிய பணியில் ஈடுபட்டிருந்தேன், நான் படுக்கையில் படுத்து, புரண்ட வேளையில், உடலின் எந்தப் பகுதியை அழுத்தினாலும், எனக்கு வலி ஏற்பட்டது. நேற்றைய அரவணைப்பு நிகழ்ச்சிதான் இதற்குக் காரணம்.**"

எதிர்வரும் அவரது பிறந்த நாள் குறித்து கருத்துத் தெரிவிக்கையில், பாபா, "**என்னைப் பொறுத்த வரை, இது எந்த விசேஷமான சந்தர்ப்பமும் இல்லை. இது உங்கள் அனைவருக்காகவும் இருக்கலாம்; அவ்வாறே இருக்க வேண்டும். எனக்கு, ஒவ்வொரு நாளும் எனது பிறந்த நாள்.**"

கூட்டத்தில் அன்பர் ஒருவர் எழுந்து நின்று, "தேர்வு செய்யப்படும் பன்னிரெண்டு ஆண்களையும் பெண்களையும் குறித்து நமக்குள் ஒத்துப்போக முடியாவிட்டால், நாங்கள் இங்கே இருக்கத் தகுதியற்றவர்கள்" என்று அறிவித்ததும், பாபா, சிரிப்புக்கு மத்தியில், அவரை தேர்வுக் குழுவின் தலைவராக நியமித்தார்!

பாபா சகவாசக் குழுவை மதிய உணவுக்கு அனுப்பிய பிறகு, மதியம் 2:45 மணிக்கு, மீண்டும் பந்தலுக்கு வந்தார். நிர்ணயிக்கப்பட்ட நேரமான மதியம் 3:00 மணிக்கு ஆண்களில் பலர் வராதபோது, பாபா, "**என்ன ஒரே சத்தமாக இருக்கிறது. அவர்கள் தங்கும் அறையில் குறட்டை விட்டு தூங்குகிறார்களா?**" என்று கிண்டலாகக் குறிப்பிட்டார்.

பர்ஜர் மேத்தா பதிலளித்தார், "இது ஒரு தங்குமிடம் அல்ல, ஆனால் கர்ஜனை செய்யும் சிங்கங்களின் குகை!"

பாபா அவரிடம், "**அங்குப் போய் அவர்களை எழுப்பி, அனைவரையும் விரைவில் இங்கு வரச் சொல்லுங்கள்**" என்றார்.

பல நபர்கள் தங்கள் இருமலை அடக்க முயன்ற வேளையில், பாபா "**இருமல் வருவதை எவரும் அடக்க வேண்டாம். அனைவரும் சுதந்திரமாக இருமலாம்; சௌகரியமாகவும், நிம்மதியுடனும் இருங்கள்**" என்று பாபா தெரிவித்தார்.

மீண்டும், பாபா விரிவாக விளக்கினார்:

**இன்று காலை நான் கீழ்ப்படிதலின் பல்வேறு வகைகளை வழங்கினேன். என் அன்பர்கள் சிலரின் கீழ்ப்படிதல் அந்த வகைகளில் எதிலும் சேராது. இது முற்றிலும் வேறுபட்ட வகை!**

**சகவாசத்தில் கலந்துகொள்ளும் குழுவிற்கு அனுப்பப்பட்ட கடைசி சுற்றறிக்கையில், எவரும் என்னுடன் தனிப்பட்ட நேர்காணலுக்காக முற்படக்கூடாது என்று குறிப்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. நான் ஒருவரை என் அறைக்கு அழைத்தால், அது வேறு விஷயம். அது எனது விருப்பம். சிலர் இந்தியாவில் மட்டுமின்றி, லாஹூர், கராச்சி மற்றும் பிற**

இடங்களிலிருந்தும், வெகு தொலைவிலிருந்தும் வந்து, பெரும் சிரமங்களுக்கு ஆளான பின்னரும், என்னைக் கடைசியாகப் பார்த்து பத்து பதினைந்து வருடங்களுக்கு மேலாகிறது; அவர்கள் எனது தீவிர அன்பர்கள். நான் அவர்களை என் அறைக்கு அழைத்து, வேடிக்கையாக ஓரிரு வார்த்தைகள் பேசினால், அவர்களுக்கு சிறப்பு நேர்காணல்கள் வழங்கப்படுகின்றன என்று அர்த்தமாகாது. நான், சில சந்தர்ப்பங்களில், ஒரு நபருக்கோ அல்லது குழுவிற்கோ நேர்காணல் வழங்குகிறேன் என்று வைத்துக் கொண்டாலும், அது எனது விருப்பம், பிறர் எனது சுற்றறிக்கையைப் பொருட்படுத்தாமல், நேர்காணலுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று அர்த்தமல்ல.

முக்கியமான பேச்சுக்குக் கூட நேரமில்லாத போது, கிசுகிசுப்புகளில் மூழ்குவதற்கு எனக்கு எங்கே நேரம்? அவர்களின் நலனைப் பற்றி விசாரிப்பதற்காகவே நான் அவர்களை அழைத்தேன், எந்தவொரு நேர்காணலுக்கும் அல்லது கிசுகிசுப்பிற்கும் அவசியமில்லை.

சில அன்பர்கள் எனக்குக் கீழ்ப்படிந்து, சமீபத்திய சுற்றறிக்கையை 100 சதவீதம் கடைப்பிடிக்கும் விருப்பத்துடன் என்னைக் கேட்கிறார்கள், “பாபா, சிலரை உங்கள் அறைக்கு நேர்காணலுக்காக அழைத்தீர்கள், ஆனால் நாங்கள் உங்களுக்குச் கீழ்ப்படிவதைத் தவிர வேறு என்ன தவறிழைத்தோம்? இருந்தும் நீங்கள் எங்களை அழைக்கவில்லை?” அவர்களின் கீழ்ப்படிதல் அத்தகைய அரிதான வகையைச் சார்ந்தது!

பூனா, மும்பை, குஜராத் நகரங்களில் வாழும் என் அன்பர்களை அடிக்கடி சந்தித்து வருகிறேன். அந்தக் குழுக்களைச் சேர்ந்த எவரேனும் ஒரு நேர்காணலுக்கு வற்புறுத்தி, நான் இப்போது வேண்டாம் என்று சொல்வதானால், அது என் இதயத்தை வலிக்கச் செய்கிறது. என்னை அணுகும் ஒவ்வொருவரும் சிறிது நேரம், ஐந்து நிமிடங்கள் மட்டுமே எடுத்துக் கொள்வார். பூனா, மும்பை வாழ் அன்பர்கள், இப்படி ஒரு வேண்டுகோளை வைத்தால் அது எனக்கு வேதனையாக உள்ளது. எனவே, இப்போது ஒரு முடிவுக்கு வருவோம்; உங்கள் இறுதி வார்த்தை எனக்கு வேண்டும். ஒன்று நீங்கள், இன்றும் நாளையும் தனித்தனியாக வந்து சகவாச காலம் முழுவதையும், அப்படியே நேர்காணல்களில் கழிக்க வேண்டும், அல்லது தனிப்பட்ட நேர்காணல்கள் என்ற எண்ணத்தை கைவிட்டு, இந்த சந்திப்புப் பந்தலில் ஒன்றாக இருக்க வேண்டும்; அங்கு நான் உங்கள் அனைவருடனும் இருந்து, சொற்பொழிவுகளை வழங்கி, இசை நிகழ்ச்சிகளில் பங்கெடுக்க வேண்டும். இந்த வழியில், நீங்கள் அனைவரும் என்னைப் பார்க்கவும், நான் உங்கள் அனைவருடனும் இங்கே இருக்கவும் முடியும். நீங்கள் எதை விரும்புகிறீர்கள் என்பதை முடிவு செய்து சொல்லுங்கள். ஒருபுறம், நான் உங்களுக்கு வழங்க விரும்பும் சில முக்கியமான விஷயங்களை நீங்கள் அனைவரும் கேட்க வேண்டும். நீங்கள் அனைவரும் என்னைக் கடவுளாக எடுத்துக் கொண்டால், கடவுள் எல்லாம் அறிந்தவர்

**என்றால், உங்களில் சிலர் என்னிடம் தனித்தனியாக வந்து உங்கள் சிரமங்களை எடுத்துரைப்பதில் என்ன இருக்கிறது.**

**ஆன்மீகப் பாதையில் பயணிப்பவர்களுக்கு, வாழ்வையும் ஒளியையும் வழங்கும் 'சூரியன்' நான். சூரியனின் வெப்பத்திலும் வெளிச்சத்திலும் தங்களைத் தாங்களே எரித்து சாம்பலாக்கிக் கொள்ளும் சிலர் இருக்கிறார்கள். சிலர் சூரியனின் வெப்பத்தை மட்டுமே விரும்பும் வேளையில், ஒளியின் தாக்கத்திலிருந்து விலகி இருக்கிறார்கள். ஆன்மீகப் பாதையில் இளைப்பாறும் விதத்தில், நிழலில் இருக்க விரும்புவோர் மற்றும் நடக்கும்போது குடையை எடுத்துச் செல்ல விரும்புபவர்களும் உள்ளனர். இந்த மூன்று வகையைச் சார்ந்தவர்களும் ஆன்மீகப் பாதையில் பயணிப்பவர்கள்.**

பாபா, மீண்டும் அவருடைய சுற்றறிக்கையை மீறி, பலர், அவர்களுக்கான தனிப்பட்ட நேர்காணல்களை நாடியதைப் பற்றி குறிப்பிட்டார். **"உங்கள் வாக்குகளையும், இறுதி முடிவையும் எனக்குத் தெரிவிக்க வேண்டும். "என்னைப் பொறுத்தவரை, நான் இங்கே சந்திப்புப் பந்தலில் இருந்தாலும் சரி, என் அறையில் நேர்காணல் வழங்கினாலும் சரி, இரண்டும் ஒன்றுதான்."**

பந்தலில் பாபாவுடன் சகவாசத்தைத் தொடர, சபை ஒருமித்த குரலில் ஒப்புதல் வழங்கியது. அதற்குப் பதிலளித்த பாபா இவ்வாறு கூறினார்: **"இப்போது நீங்கள் அனைவரும் என் அறையைச் சுற்றிக் கூடி, ஆங்காங்கே நின்று, எட்டிப்பார்த்து, ஒரு தனிப்பட்ட நேர்காணலுக்காக உள்ளே நுழையவோ அல்லது எனது கவனத்தை ஈர்க்கவோ முயற்சிக்காதீர்கள். நான் எவரையேனும் அழைக்க விரும்பினால், நிச்சயமாக அவரை அழைப்பேன். அந்த நேரத்தில் அவர் எங்கிருந்தாலும் அவர் வரும் வரை நான் காத்திருப்பேன்.**

**"இப்போது நாம் 'ஓபியத்தின் தூண்டுதலின் கீழ் இருக்கும் சாதுக்கள்' பற்றிய சொற்பொழிவைத் தொடங்குவோம். கடந்த வார சகவாசத்தில், இந்த விஷயத்தைப் பற்றிய எனது சொற்பொழிவை நான் வழங்கினேன், அல்லது வழங்கத் தொடங்கினேன், நேரம் அனுமதித்தால், இன்று அதைத் தொடரவும் முடிக்கவும் தீர்மானித்துள்ளேன்; இது நாளையும் தொடரலாம். நான் உங்களுக்குச் சில விஷயங்களைச் சொல்ல விரும்புகிறேன், சிறிது நேர ஓய்வை மட்டும் அனுமதியுங்கள். ஒரு சில பஜனை பாடல்களுக்குப் பிறகு, மீண்டும் சொற்பொழிவைத் தொடங்கலாம். அது சலிப்பு மற்றும் சோம்பலிலிருந்து விடுதலை வழங்கும். சொற்பொழிவைத் தொடர்ந்து கேட்டுக்கொண்டிருந்தால், தூக்கம் வரும். நீங்கள் தூங்கி விழுந்தால், அது என்னையும் அவ்வாறே உணரத் தூண்டும்; எனவே, பஜனைகள் அல்லது நகைச்சுவைகளைக் கேட்கும் விதத்தில் சற்று ஓய்வு தேவை. 'ஓபியத்தின் தூண்டுதலின் கீழ் இருக்கும் சாதுக்கள்' பற்றிய சொற்பொழிவு அற்புதமானது.**

**“சகவாச நிர்வாகக் குழு, பிற்பகல் 3:00 மணிக்கு முன்பே தேநீரைத் தயார் செய்திருக்க வேண்டும். தேநீர் இன்னும் தயாராகவில்லை; அதற்கு மேல், இந்த ஓபியம் கதை. சகவாசிகள் தூக்கத்தில் ஆழ்ந்திருப்பதில் ஆச்சரியமில்லை!”**

எரச், கடந்த வார சகவாசத்தில் பாபா எடுத்துரைத்த கருத்துகளை வாசித்தார். பிற்பகல் 3:45 மணிக்கு, பல்வேறு பஜனை குழுக்களின் இசை நிகழ்ச்சி நடந்தது. அதைத் தொடர்ந்து, பெரும்பாலான ஆண்களும், பெண்களும் தேநீர் அருந்தச் சென்றனர், பாபா பந்தலில் இசையைக் கேட்டுக் கொண்டும், சிலருடன் நகைச்சுவை துணுக்குகளைப் பரிமாறிக் கொண்டும் இருந்தார்.

பிற்பகல் 4:35 மணியளவில் சொற்பொழிவு மீண்டும் தொடங்கியது. அது முழுவதுமாக விளக்கப்பட்ட பிறகு, பாபா இவ்வாறு கூறி முடித்தார்: **“எனவே ஓபியத்தின் தாக்கத்தில் இருக்கும் சாதுக்களின் மூலம், நல்லது, தீயது அனைத்தும் பின்னடைவை சந்தித்து மீட்கப்படுகிறது. இறுதியில் இவை அனைத்திற்கும் காரணம் எனது விளையாட்டு. இதில் யாருடைய தவறும் இல்லை. இது எனது லீலை** (திருவிளையாடல்). **நான் எல்லோரிலும் இருக்கிறேன், நான் எல்லாவற்றையும் செய்கிறேன், அதேவேளையில் நான் ஒன்றும் செய்வதுமில்லை.”**

மாலை 5.30 மணிக்கு நிகழ்த்திய ஆரத்திக்குப் பிறகு, பாபா தனது அன்பர்களிடம் வலியுறுத்தி கூறினார்: **“தைரியமாகவும், மகிழ்ச்சியாகவும் இருங்கள். நானும் நீங்களும் ஒன்றுதான். நிரந்தரமாக எனக்குச் சொந்தமான அளவிறுதியற்ற தன்மை, ஒரு நாள் ஒவ்வொருவருக்கும் சொந்தமாகும். நினைவில் கொள்ளுங்கள், நானும் நீங்களும் ஒன்று; நீங்களும் நானும் ஒன்று அல்ல!”**

பாபா எழுந்து நின்று மீண்டும் அமர்ந்தபோது கூறினார்: **“நாளை சேவகர்கள் கூட்டம் நடைபெறும் நாள். அனைத்து குழுவைச் சார்ந்த சேவகர்களும், மையங்களின்படி அல்லாமல், அனைவரும் ஒரு பெரிய குழுவாக ஒன்றிணைய வேண்டும் என்று நான் விரும்புகிறேன். ஒவ்வொருவரும், அவர் ஒரு சேவகர் என்று சொல்கிறார். சேவகர்கள் கூட்டத்தில் அனைவரையும் அழைக்க முடியாது. அமைப்பாளர்கள் சேவகர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.**

**“இந்தக் கூட்டம் நாளை மதியம் 3:00 மணி முதல் 5:00 மணி வரை நடைபெறும். நான் அவர்களிடம் ‘உண்மையான பணி’ மற்றும் ‘உண்மையான சேவகர்கள்’ குறித்து பேசுவேன். இந்த இரண்டு தலைப்புகளுக்கும் நான் முக்கியத்துவம் வழங்குவேன். பணி எனும் போது, அது ‘பணி’யின் உண்மையான அர்த்தத்தில் செய்யப்பட வேண்டும்; இல்லையேல் பணியே வேண்டாம் என்று சொல்கிறேன். கபடம், அகங்காரம் இரண்டையும் பொறுத்துக்கொள்ள மாட்டேன். நாளை இதைக் குறித்து சேவகர்கள் கூட்டத்தில் விரிவாக விளக்குகிறேன். கடந்த வாரம் நடந்த சேவகர்கள்**

**கூட்டத்தில் கலந்து கொண்ட உங்களில் சிலர், நாளை கலந்து கொள்ள வேண்டாம்."**

பாபா அன்று மாலை 6:00 மணியளவில் மெஹராஸாத் புறப்பட்டுச் சென்றார்.

அடுத்த நாள் 1958 பிப்ரவரி 24 திங்கட்கிழமை காலை 8:20 மணிக்கு, மெஹராபாத் திரும்பி வந்து, மண்டலியுடன் தனது அறையில் உரையாடலை நிகழ்த்தி, 9:30 மணிக்கு மண்டபத்திற்குச் சென்ற பாபா, இவ்வாறு தெரிவித்தார்: **"கடந்த இரண்டு நாட்களைக் காட்டிலும் இன்று எனக்கு அதிக ஜுரமாகவும், சளி தொந்தரவும் உள்ளது.**

"பிரிக்கப்பட்ட 'நான்' எனும் தனி நபர் அகந்தை" (SPLIT 'I') என்ற தலைப்பில் முதல் குழுவிற்கு வழங்கிய உரையையும், 'தெய்வீக மாயக்காட்சிகள்' (DIVINE HALLUCINATIONS) என்ற உள் அனுபவங்கள் குறித்த சொற்பொழிவையும் நிறைவு செய்ய, பாபா விரும்புவதாக எரச் அறிவித்தார்; ஆனால் அதற்கு மூன்று மணி நேரம் பிடிக்கும் என்று வருத்தம் தெரிவித்தார்.

பாபா மேலும் கூறினார், **"இது சொற்பொழிவுகளுக்கான நேரம் அல்ல. சகவாசத்திற்குப் பின்னர், இந்த உரைகள் அன்பர்களிடையே விநியோகிப்பதற்காக, குழுத் தலைவர்களுக்கு அனுப்பப்படுவதை நான் பார்த்துக் கொள்வேன். இவை என்னிடமிருந்து வந்த முதலும், அசலுமான உரைகள்."**

வலதுபுறம் அமர்ந்திருந்த எல்சாவைக் குறிப்பிட்டு, பாபா கேலி செய்தார், **"ஒரு பொழுதுபோக்காக, பழங்கால மன்னர்கள், கோமாளிகளின் தலைமுடியை வலிந்து, வெடுக்கென்று இழுக்கும் வேளையில், கோமாளிகள் சிரித்துக்கொண்டே இருப்பதைப் போல, நானும் உங்கள் தலைமுடியை வலிந்து இழுப்பது போல் உணர்கிறேன்."**

பாபாவின் அறிவுறுத்தலின் பேரில், எரச் "பிரிக்கப்பட்ட 'நான்' எனும் தனி நபர் அகந்தை" (SPLIT 'I') பற்றிய சொற்பொழிவைப் படித்தார். கூட்டத்தில் ஒரு நபர் உரையின் நடுவே குறுக்கிட்டு, "ஏக இறைவனாகிய உண்மைப்பொருளின் 'நான்' எனும் அகந்தை" (REAL 'I') மற்றும் "பொய்யான தனிமனித 'நான்' எனும் அகந்தை" (false 'I') என்பதைக் குறிப்பிட்டு, இங்கு 'நான்' என்பது, பௌதீக உடலைக் குறிக்கிறதா?" என வினவினார்.

பாபா இவ்வாறு பதிலளித்தார்:

**இந்தக் கேள்வியை "பொய்யும் போலியுமான தனிமனித 'நான்' எனும் அகந்தை"** (false 'I') **கேட்கிறது. "நான் மிஸ்டர் எக்ஸ்... எனக்குப் பசிக்கிறது... எனக்குத் தூக்கம் இல்லை... எனக்கு, எனது குடும்பம் உள்ளது... நான் எனது பணத்தையும் சொத்துக்களையும் இழந்தேன்." இதெல்லாம் பொய்யான தனிமனித 'நான்' எனும் அகந்தை. இதில் பௌதீக உடல், சூட்சும உடல், ஆழ் மன உடல் மூன்றும் அடங்கும். அதேபோல், எனது சொற்பொழிவை**

**மொழிபெயர்த்தவர், கேட்பவர் அனைவரும் பொய்யான 'நான்' எனும் அகந்தை படைத்தவர்கள்.**

**எல்சா ஒரு முஸ்லீம் என்று வைத்துக் கொள்வோம். அது அவருடைய பொய்யான 'நான்' எனும் அகந்தை. அவர் அல்லாவை மட்டுமே ஒரே ஏக இறைவனாக தொழுது வணங்குகிறார். எனினும், பிரார்த்தனை நேரத்தில் அவரது மனம் உலக விஷயங்களால் நிறைந்திருக்கும் - அவரது குடும்பம், அவரது வேலை, அவரது வணிகம். எனவே, "ஏக இறைவனாகிய உண்மைப்பொருளின் 'நான்' எனும் அகந்தை"யை** (REAL 'I') **வணங்குவதற்கு பதிலாக, "பொய்யான 'நான்' எனும் அகந்தையை"** (false 'I') **அதன் எண்ணற்ற வடிவங்களில் வணங்குகிறார்.**

திருமல ராவ் தெலுங்கில் இந்த விளக்கத்தை வழங்கும்போது, பாபா ஆழ்ந்து உள்வாங்கப்பட்டு, சில நேரங்களில், எதையோ விரட்டுவது போல தனது கைகளையும் விரல்களையும் விறுவிறுப்பாக அசைத்தார். இதர நேரங்களில், அவர் எவரையோ அழைப்பது போல் அல்லது எதையாவது கட்டளையிடுவது போல், அவரது விரல்கள் நகர்ந்தன. ஒருமுறை பாபா, அவரையே தரிசனம் செய்தார். ஒரு கட்டத்தில் அவரது கை சைகைகள் யாரோ ஒருவருக்கு ஆறுதல் தெரிவித்தது போலவும், பின்னர் எவரையாவது காத்திருக்கச் சொல்வது போலவும் அமைந்தன.

குஜராத்தி மொழிபெயர்ப்பாளர் புர்ஜர் மேத்தா 'அன்பு' என்ற வார்த்தையை 'பக்தி' என்று தவறாக மொழிபெயர்த்த போது பாபா குறுக்கிட்டு, புர்ஜரின் காதைத் திருகி தெளிவுபடுத்தினார்:

**அன்பை, பக்தி என்று சொல்ல முடியாது; மாறாக, பக்தியின் உச்சகட்டம் அன்பு. அன்புதான் அனைத்திலும் உயர்ந்தது. பக்தியின் மிக உயர்ந்த வகை என்று சொல்லலாம். பக்திக்கும் அன்புக்கும் வேறுபாடு உண்டு. உதாரணமாக, இங்கே ஒரு பக்தர் மற்றும் பாபா இருவரும் இருக்கின்றனர். பக்தர், பாபாவை வணங்கி, பக்தியுடன் வழிபடுகிறார். அந்த பக்தரின் பக்தி அதிகரித்து, அதன் உச்சத்தை எட்டும் போது, பக்தர் எரிந்து, தனக்கும் கடவுளுக்கும் இடையில், எந்தத் திரையும் இல்லாததைக் கண்டுகொள்கிறார். பக்தி அத்தகைய உச்சநிலையை அடையட்டும், அப்போது பாபாவிற்கும் உங்களுக்கும் இடையில் எந்தத் திரையும் இராது.**

**"இப்போது நீங்கள் அனைவரும் அந்த அன்பின் நிலையில் இருக்கிறீர்கள் என்று ஒரு பேச்சுக்காகக் கூட எடுத்துக் கொள்ளாதீர்கள்!"** என்று கிண்டல் செய்தார்.

**அன்பின் பாதை** (PATH OF LOVE) **மூன்றாவது பாதை. முதல் பாதை செயல்களின் பாதை** (PATH OF ACTIONS)**, அதாவது, பொய்யான 'நான்' எனும் அகந்தை படைத்த தனிமனிதர்களுக்கு சேவை செய்யும் பாதை. இரண்டாவது பாதை, பொய்யான 'நான்' எனும் அகந்தை படைத்த தனிமனிதர்களை வழிபடும் பாதை** (PATH OF DEVOTION)**.**

மூன்றாவதான அன்பின் பாதை மிக மிக முக்கியமானது. ஆகையால், நான் சொல்வதை, உங்கள் முழு கவனத்துடன் கேளுங்கள். மிகச்சிலரே தங்களின் வாழ்வை, ஆழ் மனதை நிர்மூலமாக்கி என்னுள் இணைகின்றனர். என்னை நேசிக்க விரும்புபவர்கள், அவர்கள் பின்பற்ற வேண்டிய அனைத்தையும் நான் வழங்கியுள்ளேன். அன்பு என்றால் அன்பு. இது எந்தவிதமான மேலோட்டமான தன்மை அல்லது சம்பிரதாயம் இல்லாதது. அன்பிற்குரியவரின் விருப்பத்தை அன்பன் நிறைவேற்ற வேண்டும், அன்பிற்குரியவரை எப்பொழுதும் மகிழ்ச்சியாகவும், முகமலர்ச்சியுடனும் வைத்திருக்க வேண்டும்.

நீங்கள் என்னை உங்கள் அன்பிற்குரியவராக எடுத்துக் கொண்டால், அவருடைய விருப்பம் என்னென்ன? அவை:

1) வீடு, குடும்பம், அலுவலகம், வேலைகள் போன்ற உங்கள் பொறுப்புகளைத் தவிர்க்கக் கூடாது.
2) உங்கள் உலகக் கடமைகளில் உண்மையுடன் பங்கெடுத்துக் கொள்ளுங்கள், ஆனால் இவை அனைத்தும் பாபாவினுடையது என்று உங்கள் மனதின் பின்புறத்தில் இருக்கட்டும்.
3) நீங்கள் மகிழ்ச்சியாக உணரும்போது, நீங்கள் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்று பாபா விரும்புவதாக எண்ணுங்கள். நீங்கள் துன்பப்படும்போது, நீங்கள் துன்பப்பட வேண்டும் என்று பாபா விரும்புவதாக நினைத்துக் கொள்ளுங்கள்.
4) ஒவ்வொரு சூழ்நிலையையும் ஏற்றுக் கொள்ளுங்கள், பாபா நீங்கள் இந்த சூழ்நிலையில் வாழ்வதை விரும்புகிறார் என்பதை நேர்மையாகவும் உண்மையாகவும் சிந்தியுங்கள், நம்புங்கள்.
5) பாபா ஒவ்வொருவரிடத்திலும் இருக்கிறார் என்பதை புரிந்து கொண்டு, பிறருக்கு உதவவும், சேவை செய்யவும் முயற்சி செய்யுங்கள்.

தொடர்ந்து, பாபா வலியுறுத்திக் கூறினார்:

எனது தெய்வீக அதிகாரத்துடன் நான் உங்களுக்குச் சொல்கிறேன் - எவர் ஒருவர் - அவர் அல்லது அவள், இறுதி மூச்சு விடும் வேளையில், எனது நாமத்தை உதடுகளில் வைத்து உச்சரிப்பவர், என்னிடம் வருகிறார்!

எனவே, நீங்கள் இறுதி மூச்சு விடும் வேளையில், என்னை நினைவுகூர மறந்துவிடாதீர்கள். நீங்கள் எனது பெயரை தொடர்ந்து நினைவில் வைத்துக் கொள்ளாவிடில், உங்கள் உடலைக் கைவிடும் அந்த கணத்தில், என்னை நினைவில்கொண்டு, எனது பெயரை உச்சரிப்பது என்பது முடியாத காரியம். ஒரு நாளைக்கு ஒரு முறையேனும் எனது பெயரை முழு மனதோடும், ஆழ் இதயத்திலிருந்தும் எடுத்துக்கொண்டாலும் போதும். நீங்கள் இறுதியில் என்னிடம் வருவீர்கள்.

பாபா இவ்வாறு கூறி முடித்தார்:

இப்போது நாம் இன்றைய ஆன்மீகப் பாடங்களை முடித்துவிட்டோம். சிறிது நேரம் பௌதீக உலக மேடைக்கு வருவோம். இப்போது நேரம் 10:45 மணி. எனது பாதங்களைக் கழுவுவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட 24 பேர் குறித்தும், நாளை (பிறந்தநாள் விழா) எனது காலடியில் அன்புப் பிரசாதம் வைப்பது குறித்தும், நேற்று மாலை குழப்பமும், கருத்து வேறுபாடும் உருவானதாக செய்தி எனது செவிகளை எட்டியது. இரண்டு விஷயங்களுக்கும் என்னிடம் தீர்வு உள்ளது, அது உங்கள் ஒவ்வொருவரையும் திருப்திப்படுத்தும் என்று நினைக்கிறேன்.

பல்லாண்டுகளாக, பக்கத்து அரன்காவ்ம் அன்பர்கள், இங்கிருந்து 45 மைல் தொலைவில் அமைந்த இரண்டு புனித நதிகள் சங்கமிக்கும் டோக்கா எனும் இடத்திற்கு நடந்து சென்று, நதி நீரை இங்கு கொண்டு வருகின்றனர். அவர்கள் அங்கிருந்து திரும்பி நடந்து வருகையில், மூங்கில் கம்புகளில் தொங்கவிடப்பட்ட கனமான நீர் கொள்கலன்களைத் தோளில் சுமந்து வருகின்றனர். அவர்கள் நீர் மட்டுமே அருந்தி, உபவாசம் கடைப்பிடித்து, நதியில் நீராடி தங்களை சுத்தமாக வைத்துக் கொள்கிறார்கள். அவர்களில் சிலர் ஹரிஜன மக்கள், தாழ்த்தப்பட்டவர்கள். என் ஒவ்வொரு பிறந்தநாளிலும் அவர்கள் இதைச் செய்கிறார்கள்; பொதுவாக எனது பிறந்தநாளில் நான் இங்கு இருப்பதில்லை. அவர்கள் எனது புகைப்படங்கள் மற்றும் என்னுடன் தொடர்புடைய பிற இடங்களிலும் புனித நீரை தெளித்து, தங்கள் வீடுகளுக்குத் திரும்பிச் சென்று, என்னை வணங்குகிறார்கள். எனது பிறந்தநாளில் நான் இங்கு இருக்க நேர்ந்தால், என்னிடம் வந்து எனக்கு மரியாதை செலுத்த அனுமதிக்கிறேன். ஆனால் இந்த கிராம மக்கள் ஒவ்வொரு வருடமும், நான் இங்கே இருந்தாலும் இல்லாவிட்டாலும் டோக்கா கிராமத்திற்கு நடந்து சென்று, ஆற்று நீரை கொண்டு வருகின்றனர்.

நாளை, இந்த கிராமவாசிகள் டோக்காவில் பாய்ந்தோடும் நதிகளிலிருந்து தண்ணீருடன் திரும்பி வருவார்கள் என்று எதிர்பார்க்கிறோம் - சுமார் ஒரு டஜன் நபர்கள், ஒருவேளை அதிகமாகவும் இருக்கலாம். இந்த சந்திப்புப் பந்தலுக்கு, அவர்களை நீருடன் அழைக்குமாறு பெண்டுவிற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. நான் அந்தத் தண்ணீரில் எனது கால்களை நானே கழுவுவேன் - எனது சொந்த கைகளால், எனது பாதபூஜையை நிகழ்த்துவேன்.

அதன் பிறகு, நீங்கள் அனைவரும் அந்தத் தண்ணீரை பிரசாதமாக எடுத்துக் கொள்ளலாம். அதை உங்கள் நெற்றியில் தடவி, உங்கள் அன்பின் நிமித்தம் அதை அருந்தி, நீங்கள் விரும்பும் வழியில் பயன்படுத்தலாம். நான் எல்லோரிலும் இருப்பதைக் கருத்தில் கொண்டு, நீங்கள் ஒவ்வொருவரும் எனது பாதங்களைக் கழுவுவதற்கு சமமாக இது எடுத்துக்கொள்ளப்படும். இது உங்கள் அனைவரையும் திருப்திப்படுத்தும் என்று நம்புகிறேன்.

பாபா தொடர்ந்து விளக்கினார்:

அன்புடன் அன்பளிப்பு வழங்குவது குறித்த இரண்டாவது விஷயத்திற்கு, என்னிடம் ஒரு தீர்வு உள்ளது. அன்பளிப்பாக எனது

காலடியில் ரொக்கப் பணத்தை வைக்க விரும்பியவர்கள் அல்லது முடிவு செய்தவர்கள் ஒவ்வொருவரும் (100, 50, 10 அல்லது ஒரு ரூபாய்) வழங்க முடிவு செய்த பணத்தை ஒன்று திரட்டுவதற்கான உங்கள் முடிவைப் பின்பற்ற வேண்டும். எவரும், தான் விரும்பி வழங்க நினைத்த தொகையை மாற்றக் கூடாது. இப்போது அந்தத் தொகையை, கூட்டவோ குறைக்கவோ முயற்சிக்காதீர்கள். ஆனால், அந்தத் தொகையை, நாளை எனது காலடியில் வைக்க வேண்டாம். மண்டபத்திற்கு வெளியே விற்கப்படும் புத்தகங்கள் மற்றும் துண்டு பிரசுரங்களை வாங்குவதற்கு இதைப் பயன்படுத்தி, மேலும் அந்தந்த மையங்களில் புத்தகங்களை பிறருக்கு விநியோகிக்கவும்.

வாய்ப்பும், வசதியும் படைத்தவர்கள், முடிந்தவரை, ‘லிஸன் ஹியூமானிட்டி’ (LISTEN HUMANITY) புத்தகத்தின் பிரதிகளை வாங்கவும். எடுத்துக்காட்டாக, எனது காலடியில் ரூ.100 அன்பளிப்பாக வைக்க விரும்பும் எவரும் ‘லிஸன் ஹியூமானிட்டி’ புத்தகத்தின் நான்கு பிரதிகளை வாங்கி, அவற்றை, வாங்க முடியாத பிற அன்பர்களுக்கு விநியோகிக்கலாம் அல்லது உங்கள் ஊர்களில் உள்ள நூலகங்கள், கிராம அலுவலகங்கள் போன்றவற்றின் கட்டுப்பாட்டில் வைக்கலாம்; இப்படி எனது செய்திகளைப் பரப்பலாம். புத்தகங்கள் பிறருக்கு இலவசமாக வழங்கப்பட வேண்டும். மொத்த அன்பளிப்பும் குறைவாக இருக்கும் பட்சத்தில், சிறிய கையேடுகள் அல்லது புகைப்படங்கள் போன்றவற்றை வாங்கி, பிற அன்பர்களுக்கு விநியோகிக்க வேண்டும்.

‘லைஃப் அட் இட்ஸ் பெஸ்ட்’ (LIFE AT ITS BEST) என்ற மற்றுமொரு சிறிய புத்தகத்தின் ஏராளமான பிரதிகள் மும்பை கப்பல்துறைக்கு வந்துவிட்டதாகவும், விரைவில் இங்கு எதிர்பார்க்கப்படுவதாகவும் ஆதி கூறுகிறார். அவை வரும்போது, ஒவ்வொரு பிரதியும் பெயரளவில் ரூ.1.50க்கு விற்கப்பட வேண்டும் என்றும், நீங்கள் அனைவரும் உங்களால் இயன்ற எண்ணிக்கையில் பிரதிகளை வாங்கி விநியோகிக்கலாம் என்றும் கேட்டுக் கொண்டேன்.

உங்களில் ஒரு ரூபாய் என்ற சிறிய தொகையைக் கூட செலவிட முடியாதவர்கள் கவலைப்பட வேண்டாம். நாளை நான் அன்பின் பிரசாதத்தை வழங்க வேண்டும் என்று விரும்புகிறேன். புத்தகங்களை வாங்குபவர்கள் அவற்றை வெறுமனே வைத்திருக்காமல், உங்கள் சொந்த ஊரில், முடிந்தவரை பலருக்கு விநியோகிக்கப்படுகிறதா அல்லது மக்களின் கைகளைச் சென்றடைகிறதா என்பதைக் கண்காணிக்க வேண்டும்.

நாளைய நிகழ்ச்சிகள் தொடர்பான இரண்டு முக்கிய விஷயங்களை இப்போது நாம் தீர்த்து வைத்துள்ளோம். இந்த நேரத்தில் மூன்றாவது விஷயம் ஒன்றும் உள்ளது. இன்று காலை ஏழு மணிக்கு, மெஹராஸாத்தில், ஆதி என்னை அழைத்தபோது, கவலையுடனும் குழப்பத்துடனும் காணப்பட்டார்; தவறு நடந்துள்ளதாகத் தெரிவித்தார்; பொறுப்பில் இருந்த

விஷ்ணு வழக்கத்திற்கு மாறாக, வருத்தமும் வேதனையும் அடைந்ததாகக் கூறினார்.

ஆந்திரா குழுவினர் திரும்பிச் செல்லும் பயணத்திற்காக, சிறப்பு ரயில் ஏற்பாடு செய்ததில் தவறு ஏற்பட்டுள்ளது. சிறப்பு ரயிலில் 500 பயணிகள் இருக்க வேண்டும். இப்போது அந்த எண்ணிக்கை சுமார் 400 அல்லது அதைவிட சற்று குறைவாக இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இதனால் ஏற்படும் பற்றாக்குறை சுமார் ரூ.3,000 அல்லது 2,000க்கு மேல். அது 2,000 அல்லது 3,000 அல்லது ரூ. 1,000 ஆக இருந்தாலும், அது மிகவும் பெரிய அளவிலான பற்றாக்குறை.

இன்று காலை நான் மெஹராபாத்திற்கு காரில் வந்து கொண்டிருந்தபோது, விஷ்ணு என்னை சந்திக்க சாலையோரத்தில் நின்று கொண்டிருந்தார்; மேலும், அவர் ஒரு குழப்பமான மனநிலையில் காணப்பட்டார், உண்மையில் உடல் நடுங்கினார். எனக்கு அந்த விஷயம் தெரியும் என்பதால் அவருக்கு ஆறுதல் கூறினேன், "விஷ்ணு, நீங்கள் சிறுவயதிலிருந்தே என்னுடன் இருக்கிறீர்கள், என் மீதான உங்கள் அன்போடு ஒப்பிடும்போது ரூ.3,000 பற்றாக்குறை ஒன்றுமே இல்லை. பற்றாக்குறை ரூ.300 கோடியாக இருந்தாலும் உங்கள் அன்புடன் ஒப்பிடுகையில் இது ஒன்றும் இல்லை, அதைப் பற்றி கவலைப்படாதீர்கள், அனைத்தையும் மறந்து விடுங்கள்.

இப்போது, இந்த சகவாசத்தில் கலந்துகொள்ளும் நீங்கள் எவரும் அதைப் பற்றி கவலைப்படவேண்டாம். பற்றாக்குறையைப் பற்றியோ, விஷ்ணுவின் கலக்கத்தை நினைத்தோ கவலைப்பட வேண்டாம். ஆதி ஒரு தீர்வை வழங்கினார். இப்போது கூட நாம் சிறப்பு ரயிலை ரத்து செய்யலாம் என்றும், அனைவரும் வழக்கமாகத் திட்டமிடப்பட்ட ரயில்களில் தங்கள் இல்லங்களுக்குச் செல்லலாம் என்றும் அவர் பரிந்துரைத்தார். ஆனால், அதை நான் விரும்பவில்லை. சிறப்பு ரயில் இங்கு வர வேண்டும். அது இங்கிருந்து சிறிது தூரத்தில் அமைந்த ரயில் பாதையில் வந்து, உங்கள் அனைவரையும் அழைத்துச் செல்ல வேண்டும். அஹமதுநகர் ரயில் நிலையம் வரை செல்ல வேண்டிய அவசியமில்லை. இந்தப் பெரும் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய எவரும் ஒரு நயா பைசா கூட வழங்கக்கூடாது. நீங்கள் அனைவரும் என் மீது கவனம் செலுத்தி, மேலும் மேலும் என்னை நேசிக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். உங்கள் அன்பில் நான் திருப்தி அடைவேன். இந்தப் பற்றாக்குறையைப் பற்றி நீங்கள் கவலைப்படுவதையும், பணம் செலவிடுவதையும் நான் விரும்பவில்லை. பற்றாக்குறையை நானே செலுத்திவிடுவேன்.

அதன் பிறகு பாபா விளக்கினார்:

நாம் மூன்று விஷயங்களுக்குத் தீர்வு கண்டுள்ளோம்:

1) பாத பூஜை (எனது கால்களைக் கழுவுதல்);
2) எனக்கான அன்பளிப்புகள் (பணமாக வழங்குதல்); மற்றும்

3) சிறப்பு ரயில் தொடர்பான பற்றாக்குறை.

ஆனால், மேலும் ஒரு முக்கியமான பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும், இதை என்னால் தீர்க்க முடியாது. அது உங்கள் அனைவராலும் தீர்க்கப்பட வேண்டும் என்று நான் விரும்புகிறேன். சேவகர்கள் கூட்டம், குழுக்களுடனான சந்திப்பு என இரண்டு கூட்டங்களுக்குத் திட்டமிட்டிருந்தேன். கடந்த சகவாசத்திலும் இதுபோன்ற இரண்டு சந்திப்புகள் நடந்தன. ஆனால் இந்த சகவாசத்தில், நேரம் குறைவாக உள்ளது. நாளை எனது பிறந்தநாள், இன்று மதியம் மட்டுமே எஞ்சியுள்ளது. இரண்டு அல்லது மூன்று மணி நேரம் மட்டுமே கிடைக்க வாய்ப்புள்ளது. என்னை சூழ்ந்திருக்கும் ஒவ்வொரு குழுவும் சுமார் பதினைந்து நிமிடங்கள் வேடிக்கையாகப் பேசி, தாராளமாக கலந்துரையாட வேண்டுமென விரும்புகிறேன், எந்தவிதமான சொற்பொழிவு அல்லது தீவிர பேச்சுக்களுக்காக அல்ல - ஒருவருக்கொருவர் நகைச்சுவையாகப் பேசப்போகிறோம் - நான் உங்களிடமும், நீங்கள் என்னிடமும்.

சேவகர்கள் கூட்டத்தை நானும் விரும்புகிறேன், அது நடைபெறுவது மிகவும் முக்கியம். ஆனால் நேரம் மிகவும் குறைவாக உள்ளது. பணி சம்பந்தமாக, அனைத்து இடங்களிலும் சேவர்கர்களிடையே கருத்து வேறுபாடுகளை நான் காண்கிறேன். சேவகர்கள் கூடும் போது, அவர்களுக்குள் மோதல்கள் ஏற்படுவதை நான் விரும்பவில்லை. ஒரு மோதலைத் தீர்க்க, எனக்கு கிட்டத்தட்ட ஐந்து மணிநேரம் ஆகும். பூனாவில், சேவகர் கூட்டத்திற்கு, போதிய நேரத்தை அனுமதித்து, நான்கு மணி நேரம் சேவகர்களுடன் செலவிட வேண்டியதாயிற்று. மெஹராபாத்தில் கடந்த வாரம் சேவகர் கூட்டத்தை நடத்தி, உண்மையான சேவகர் மற்றும் உண்மையான ஊழியர் குறித்து அவர்களுக்கு விளக்கினேன். ஆந்திராவில், உண்மையான பணி என்றால் என்ன என்பதை ஆந்திரா சேவகர்களுக்கு விளக்குவதற்காக (1954இல்) ஒரு முழு இரவு செலவிடப்பட்டது. இது குறித்து ஒரு சிறிய கையேடு, 'உண்மையான சேவகர் யார்? மற்றும் 'பாபா' என்றால் என்ன அர்த்தம்?' என்ற தலைப்பில் வெளியிடப்பட்டது.

இவை அனைத்தின் சாராம்சம் இதுதான்: பிறர் ஒருவர், எனது வழிமுறைகளைப் பின்பற்றுவதற்கு, நீங்களே முன் உதாரணமாக இருக்க வேண்டும்; அதன் மூலம், என் அன்பையும், செய்தியையும் மக்களிடையே பரப்பி, பிறர் என்னைப் பின்பற்றச் செய்ய வேண்டும். உங்கள் சொந்த உதாரணமே, பிறர் உங்கள் முன்மாதிரியைப் பின்பற்ற வழிவகுக்கும். இருப்பினும், உங்களால் எனது வழிமுறைகளை முழுமையாகவும், நேர்மையாகவும் பின்பற்ற முடியாவிட்டால், அவற்றைப் பிறருக்குத் தெரிவிக்கும் போது, குறைந்தபட்சம் அவர்களிடம் வெளிப்படையாக, உங்களால் அவற்றைப் பின்பற்ற முடியாது என்பதை ஒப்புக் கொள்ளுங்கள்; அதே வேளையில், நீங்கள் எனது செய்திகளையும், அறிவுறுத்தல்களையும் மட்டுமே வெளியிடுகிறீர்கள் என்பதைத் தெளிவுற கூறுங்கள்.

**நீங்களே உண்மையில் 100 சதவிகிதம் உணர்வுப்பூர்வமாக, நான்தான் அவதார புருஷர் என்று நம்பவில்லை என்றால், மெஹர் பாபாதான் அவதார புருஷர் என்று பிறரிடம் சொல்லாதீர்கள். நான் அவதார புருஷர் என்ற நம்பிக்கை உங்களுக்கு இல்லாமல், பாபா யுகத்தின் அவதார புருஷர் என்று பிறரிடம் சொல்வதில் எந்த பயனும் இல்லை.**

பாபா இவ்வாறு கூறி முடித்தார்: **"நேரம் மிகவும் குறைவாக உள்ளது, நீங்கள் அனைவரும் சேவகர்கள் கூட்டத்தையோ அல்லது குழுக்களின் கூட்டத்தையோ தேர்ந்தெடுக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்."**

"எங்களுக்கு எல்லா குழுக்களின் கூட்டம் வேண்டும்" என்று அனைவரும் ஒருமனதாக குரல் கொடுத்தனர்.

**"இன்று மதியம் 2:30 மணி முதல் 5:00 அல்லது 5:30 மணி வரை, நாம் குழுக்களின் கூட்டத்தை நடத்துவோம். ஒவ்வொரு குழுவும் என்னிடம் வந்து சுமார் பதினைந்து நிமிடங்கள் செலவிடலாம். குழுக்களை எப்படி ஒருங்கிணைப்பீர்கள்? மொத்தம் எத்தனை குழுக்கள்? நீங்கள் உங்களை எப்படிக் குழுக்களாகப் பிரிப்பீர்கள்?"**

பல்வேறு ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டன. திருமல ராவ், கூட்டத்தை மொழிவாரியாக மூன்று குழுக்களாகப் பிரிக்கலாம் என்று பரிந்துரைத்தார்:

1) தெலுங்கு பேசுபவர்கள்;
2) குஜராத்தி பேசுபவர்கள்; மற்றும்
3) மேற்குறிப்பிட்ட இரண்டும் பேசாதவர்கள் ஆனால் ஆங்கிலம் மற்றும் பிற மொழிகளில் எதையேனும் அறிந்தவர்கள்.

பாபா அவருடைய ஆலோசனையை ஏற்றுக்கொண்டு, **அப்படியானால் ஒவ்வொரு குழுவிற்கும் அதிக நேரம் ஒதுக்கலாம்** என்று கூறினார் - ஒவ்வொரு குழுவுக்கும் அரை மணி நேரம் அல்லது 45 நிமிடங்கள். தெலுங்கு குழு, மிகப்பெரியது என்பதால், முதலில் பந்தலிலும், இதர இரண்டு குழுக்கள் மெஹராபாத் மண்டபத்திலும் கூடினர்.

தெலுங்கு மற்றும் குஜராத்தி மொழிகளில் பாடல்கள் பாடப்பட்டன, ஆரத்தியும் நிகழ்த்தப்பட்டது. பாபா பந்தலை விட்டு வெளியேறி, மதியம் 12:30 மணிக்கு அனைவரையும் மதிய உணவிற்கு அனுப்புவதற்கு முன்னர், அவர் இவ்வாறு கருத்துத் தெரிவித்தார்: **"இந்த சகவாசத்தில் ஆண்கள், பெண்களுக்குக் கடமைப்பட்டுள்ளனர். இந்த சகவாசத்தில் வந்திருக்க வேண்டிய பல பெண்மணிகள், குழந்தைகள் மற்றும் வீட்டுப் பொறுப்புகள் காரணமாக இங்கு வர முடியவில்லை, ஏனெனில், அவர்களுக்கு ஆண்களாகிய நீங்கள் வீட்டிலேயே தங்கி, வீடுகளையும் குழந்தைகளையும் கவனித்து, பெண்மணிகளை அதிக அளவில் வர அனுமதித்திருக்க வேண்டும் என்று நான் விரும்பினேன்."**

பந்தலிலிருந்து பாபா, சமையலறைக்குச் சென்ற போது, அங்கு அவருக்கு ஆந்திராவைச் சேர்ந்த இரண்டு சமையல்காரர்கள் அறிமுகமானார்கள். அவர்கள் தயார் செய்த உணவை ஆய்வு செய்து, மதிய உணவிற்கு என்ன சமைக்கப்பட்டது என்று கேட்டார். காய்கறிகள், மாவு மற்றும் சமையல் பொருட்களைப் பார்வையிட அவர் சரக்கு அறைக்குச் சென்றார். சகன் அடுத்த நாள் பிரசாதமாக விநியோகிக்க லட்டுகளைச் செய்திருந்தார், பாபா அவற்றில் ஒன்றை சுவைத்தார்.

பூனா, மராட்டி பத்திரிகை 'கேஸரி'யின் (KESARI) உதவி ஆசிரியர் காஷிநாத் நாராயண் ஸோமன் (KASHINATH NARAYAN SOMAN), சமையல் அறையில் பணிபுரிந்து கொண்டிருந்தார். அவரது சேவை உணர்வில் மகிழ்ச்சியை வெளிப்படுத்திய பாபா, "**அவர் எம்.ஏ.** (முதுகலைப் பட்டம் பெற்றவர்) **நன்றாகப் படித்தவர். எனது சேவையில் பணிவுடன் சமையலறையில் பணிபுரிகிறார்**" என்று பாராட்டினார்.

மதிய உணவுக்குப் பிறகு, பாபா, தனது நேர்காணல் அறையின் வாசலில் ஊன்றுகோல்களில் சாய்ந்து நின்று, பந்தலுக்குச் செல்வதற்கு சில நிமிடங்களுக்கு முன்னர், அந்தக் காட்சியைக் கவனித்தார். ராவல் அங்கு நடந்து செல்வதைப் பார்த்த பாபா கேலி செய்தார், "**உங்கள் திருகு தளர்ந்துவிட்டதாக எல்சா என்னிடம் சொன்னார். இது உண்மையா? உங்களுக்கு இப்போது எவ்வளவு வயது ஆகிறது?**"

இருப்பினும், ராவல் தனது வழக்கமான அளப்பரிய உணர்ச்சி பொங்கும் விதத்தில் பறைசாற்றினார், "பாபா, நான் உங்கள் காலடியில் மட்டுமே உயிரைத் துறக்க விரும்புகிறேன்!"

பாபா கேட்டார், "**அப்படியானால் உங்கள் குடும்பத்தை கவனிப்பது யார்?**"

"அதை உங்களிடமே விட்டு விடுகிறேன் பாபா."

"**நன்றி**" என்று பாபா கருத்தார்ந்ததாகத் தோன்றும் வேடிக்கையான முறையில் பதிலளித்தார்.

பிற்பகல் 2:30 மணிக்கு ஆந்திரா குழுவினரை சந்திக்க, பந்தலுக்குச் செல்லும் வழியில், பாபா பெண்மணிகள் தங்கும் விடுதியில் சில நிமிடங்கள் நின்றார், அவர்கள் அனைவரும் மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்ந்தனர்.

பந்தலில் பாபா, மேடையில் அமர்ந்து இவ்வாறு கருத்துரைத்தார்: "**நாம் இந்த நேரத்தில் இலகுவான, மனதிற்கு இதமான பேச்சில் நேரத்தைக் கழிப்போம். எரச்சுக்கு சிறுநீர் கழிக்கக் கூட வாய்ப்பு இல்லை. அவர் கழிவறைக்குச் செல்லும் போதெல்லாம், சகவாசிகள் அவரை சூழ்ந்துகொள்வதால், அவர் திரும்பி வர ஒரு மணி நேரம் ஆகிறது. மெஹராஸாத்திலும் இரவு காவல் பணி உட்பட பல விஷயங்களை கவனிக்க வேண்டியுள்ளது.**"

தனபதி ராவ், குடும்ப சாஸ்திரி, ரங்கா ராவ், மல்லிகார்ஜுன ராவ் ஆகியோரை மேடைக்கு அழைத்து, பாபா ஒவ்வொருவரிடமும் அவரவர்

வயதைக் கேட்டு, பின்பு குறிப்பிட்டார்: "**ஆந்திராவுடனான எனது தொடர்பு மிகவும் பழமையானது. எனது இந்த அவதார காலகட்டத்தில், ஆந்திரா ஒரு சுதந்திர மாநிலமாக மாறியது. ஆந்திரா மற்றும் முழு தென்னிந்தியாவுடனும் எனக்குத் தொடர்பு உள்ளது, இது உங்களை மகிழ்விப்பதற்காகவோ அல்லது வேடிக்கையாகக் கூறுவதற்காகவோ இதை நான் குறிப்பிடவில்லை, ஆனால் உண்மையிலும் உண்மையைச் சொல்கிறேன். இதுவே நீங்கள் என்னை விரும்புவதற்கான காரணம்.**"

நகைச்சுவையாக, பாபா அவதானித்தார்: "**இந்த சகவாசம் குறிப்பாக பெண்மணிகளுக்கென இருந்தபோதிலும், ஆண்கள் அனைவரும் முன் வரிசையை ஆக்கிரமிக்கும் தனி சுதந்திரத்தைக் கையிலெடுத்து, பெண்மணிகளை பின்தள்ளி இருப்பதாக நான் பார்க்கிறேன்!**" ஆண்கள் சிரித்துக்கொண்டே முன் இருக்கைகளிலிருந்து எழுந்து, பெண்மணிகளுக்கு இடம் கொடுத்தனர். சில நிமிடங்களுக்கு, அங்கு நிலவிய சூழ்நிலை, மனதுக்கினிய பொழுதுபோக்காக அமைந்தது; ஆனால், இப்போது இனி நேரமில்லை என்ற பாபாவின் கைசைகைகளைப் பார்த்து அனைவரும் அங்கேயே அமர்ந்தனர். பாபா கூறினார்:

**ஒன்று மட்டும் உறுதியானது: நீங்கள் என்னை நேசிப்பதை விட நான் உங்களை நேசிக்கிறேன். என்மீதான உங்கள் அன்பினால், என்னுடனான சகவாசத்திற்காக, தொலைதூர இடங்களிலிருந்து நீங்கள் வந்துள்ளீர்கள். ஆந்திராவிலும், இதர இடங்களிலும் எனக்காக நீங்கள் செய்த ஒவ்வொரு பணியும் எனக்குத் தெரியும்; அதைப் பற்றி என்னிடம் எதுவும் சொல்ல வேண்டியதில்லை - நீங்கள் எதையும் செய்ய நினைப்பதற்கு முன்பே, நீங்கள் அதைச் செய்யப் போகிறீர்கள் என்று எனக்குத் தெரியும். உங்கள் நாடகங்கள், மேடைக்காட்சிகள் மற்றும் கதாகாலட்சேபம் மூலம் எனக்கு சேவை செய்யவும், எனது பணிகளைப் புரியவும் முயற்சிப்பது எனக்கும் தெரியும்.**

**கடவுள் அனைத்தையும் அறிந்தவர் என்று நீங்கள் அனைவரும் சொல்கிறீர்கள். கடவுளின் அவதாரமாக நீங்கள் என்னை ஏற்றுக்கொள்கிறீர்கள். நான் அனைத்தையும் அறிந்தவன், கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் அனைத்தையும் நான் அறிவேன். ஆனால் 'கடவுள் அனைத்தும் அறிந்தவர்' என்பதன் அர்த்தம் என்ன? மாயையில் நான் எப்படி எனது சொந்த விளையாட்டை விளையாடுகிறேன் என்று எவருக்கும் தெரியாது. மாயாவில் இடம், காலம் இரண்டும் உண்டு என்பது நிதர்சனமான உண்மை; ஆனால் நிஜத்தில் இடம், காலம் என்று எதுவும் இல்லை. கவனமாகக் கேளுங்கள். சொற்பொழிவு ஒன்றை வழங்க வேண்டாம் என்று நான் எவ்வளவுதான் விரும்பினாலும், இது அவ்வாறே மாறி விடுகிறது!**

**எதுவும் நடக்கவுமில்லை, எதுவும் நடக்கவும் செய்யாது என்று நான் உங்களுக்குச் சொல்கிறேன். எது நிகழ்ந்தாலும் அது இந்த கணத்தில் நிகழ்கிறது. இந்த கணம் நித்தியமானது மற்றும் தொடர்ச்சியாக அந்த**

அளவுக்கு நித்தியமானதாக இருக்கும், ஏனெனில் அடுத்த கணம் என்பதே இந்தத் தருணமாக இருக்கும். அதை அடுத்து வரும் அடுத்த கணமும் இந்தத் தருணம்தான். எனவே, இந்தத் தற்போதைய தருணத்தில் கடந்த காலம், எதிர்காலம் அனைத்தும் ஒன்றறக் கலந்துள்ளது.

**நீங்கள் ஒரு குழந்தையாக இருந்தீர்கள், நீங்கள் வளர்ந்து மனிதனானீர்கள். நீங்கள் கடந்து வந்த அனைத்து வருடங்களும், இந்த நொடியில் ஒன்றாக உள்ளடங்கியுள்ளன. மாயையில் மட்டுமே இடமும் காலமும் உள்ளது. நிஜத்தில், நேரம் மற்றும் இடத்திற்கான வாய்ப்பே இல்லை. ஏக இறைவன் எனும் உண்மை நிலையில், இந்தத் தருணம் மட்டுமே - நித்தியமான தருணம்.**

**கோடிக்கணக்கான கடந்த மற்றும் எதிர்கால ஆண்டுகள் இந்த யதார்த்த நிலையில் ஒன்றாக உள்ளடங்கியுள்ளன. கோடிக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு நடந்த அனைத்தும் எனக்குத் தெரியும், இன்னும் பல கோடி ஆண்டுகளுக்குப் பிறகு நடக்கவிருக்கும் விஷயங்களும் எனக்குத் தெரியும். உங்கள் அனைவரிலும் நான் இருக்கிறேன். நான் எல்லாம் அறிந்தவன். நாளை நீங்கள் என்ன நினைப்பீர்கள் என்றும் எனக்குத் தெரியும். நீங்கள் எப்படி இருந்தீர்கள், எப்படி உணர்ந்தீர்கள், எப்படி நினைத்தீர்கள், எப்படிப் பணிபுரிந்தீர்கள், இப்போது எனக்காக என்ன செய்கிறீர்கள் என்று எதையும் சொல்ல வேண்டியதில்லை என்று நான் சொல்கிறேன். நான் அனைத்தையும் அறிந்தவனாக இருந்தால், நான் எல்லாவற்றையும் அறிந்திருக்க வேண்டும். நான் அனைத்தும் அறிந்தவன்!**

**எனவே, என்னை நேசிப்பதும், எனக்காக உழைப்பதும், என் அன்பில் நேர்மையாக இருப்பதும்தான் உங்களுக்கான தலைசிறந்த விஷயம். உங்கள் பணியில் பாசாங்குத்தனத்தின் சாயல் சிறிதளவும் இருக்கக்கூடாது, எந்தவிதமான வெகுமதியையும் எதிர்பார்க்கக்கூடாது. உண்மையில், உங்கள் பணி மற்றும் அன்பினால் நான் மிக்க மகிழ்ச்சியாகவும் மனநிறைவுடனும் இருக்கிறேன்.**

பாபா கேட்டார், **“இப்போது, ஆங்கிலம் தெரிந்த எவரேனும் என்னை சிரிக்க வைக்க முடியுமா?”** பாப்பிராஜு எழுந்து நின்றார். அவரைப் பார்த்த பாபா, **“என்னை ஒரே நேரத்தில் சிரிக்கவும் அழவும் வைக்கும் ஒரே மனிதர் அவர்தான்!”** பாப்பிராஜு தனது ‘ஆந்திரா-ஆங்கிலத்தில்’ எவராலும் பின்பற்ற முடியாத ஒன்றை ஆரம்பித்தது, பாபாவையும் பிற அனைவரையும் பல நிமிடங்களுக்கு சிரிப்பு வெள்ளத்தில் (கண்ணீர் பெருக்கெடுக்க) ஆழ்த்தியது; பின்னர் அவர் மேடைக்கு நடந்து சென்று, நெஞ்சம் நெகிழ்ந்து, பாபாவின் தரிசனத்துடன் அரவணைப்பையும் பெற்றுக் கொண்டார்.

ஒரு முதியவர் தனது மகனின் அன்பை பாபாவிடம் தெரிவித்ததோடு, நிகழ்ச்சியில் பங்கெடுக்க முடியாத வேறு ஒருவரின் வாழ்த்துக்களையும் தெரிவித்தார். **“வழங்குவதற்கென வேறு என்ன உள்ளது? நான் அன்பின் இறைப் பெருங்கடல்”** என்று பாபா பதிலளித்தார்.

எரச், பாபாவிடம், இடைவேளையின் போது, சிலர் பாபாவின் காலடியில் வைக்க விரும்பும் பணத்தில், புத்தகங்களை வாங்குவதான பாபாவின் முடிவு குறித்து, குறிப்புகள் மூலம் தங்கள் அதிருப்தியை வெளிப்படுத்தியதாகக் கூறியதற்கு பாபா, அவர்கள் தங்கள் மனசாட்சிக்கு இணங்கும் விதத்தில் செய்ய முடியும் என்று கூறினார்; ஆனால் எந்த சூழ்நிலையிலும் அவருக்கு நகைகளையோ, தங்க ஆபரணங்களையோ வழங்கக்கூடாது. முதலில் அன்பளிப்பே தேவையில்லை என்பதை பாபா மீண்டும் வலியுறுத்தினார், **“சகவாசிகளின் நேர்மையான அன்பு மற்றும் ஆழ்ந்த பக்தியால் நான் முழுமையாக திருப்தி அடைவேன்”** என்று கூறினார்.

அப்போது பாபா, **“அரை மணி நேரத்திற்கு பதிலாக, நாற்பது நிமிடங்கள் கடந்துவிட்டன. இன்னும் ஐந்து நிமிடங்களில் தெலுங்குக் குழுவை, சில வார்த்தைகளுடன் அனுப்பிவிடுவேன். இது எனது கடைசி சகவாசம்; நாளை எனது கடைசி பிறந்தநாள். இது நான் எனது பௌதீக உடலைத் துறந்துவிடக் கூடும் என்றும் பொருள்படலாம். ஆனால் நான் எப்போதும் என் அன்பர்களாகிய உங்கள் இதயங்களில் வாழ்ந்து கொண்டிருப்பேன்.**

**“எதிர்வரும் மே மாதம், நான் அமெரிக்கா சென்று, அங்கிருந்து ஆஸ்திரேலியா செல்ல உள்ளேன். நான் திரும்பி வந்த பிறகு தரிசனம், சகவாசம், விழாக்கள் எதுவும் இருக்காது. இது மட்டும் நிச்சயம். எனவே என்னை மேலும் மேலும் நேசிக்கவும். பிற மனிதர்களுக்கு மேலும் மேலும் சேவை செய்யவும். என் மீதான உங்கள் அன்பில் நேர்மையாக இருங்கள். என்னை எப்பொழுதும் நினைவில் கொள்ளுங்கள். அன்பை வெளியே காண்பிக்கவோ அல்லது பிரச்சாரம் செய்யவோ வேண்டாம். நீங்கள் கடைப்பிடிப்பதை மட்டும் பிறருக்குச் சொல்லுங்கள். என் அன்பையும், அனைத்து ஆசீர்வாதங்களையும் நான் உங்களுக்கு வழங்குகிறேன்.**

வழக்கமான ஜெய் முழக்கங்களுக்குப் பிறகு, பாபா, 26ஆம் தேதி காலை, மெஹராபாத் மேல்மலைக்கு சகவாசக் குழுவை அழைத்துச் சென்று, தனது எதிர்கால சமாதியைக் காண்பிப்பதாகக் கூறினார்.

டாக்டர் தனபதி, பாபா மீண்டும் ஆந்திராவிற்கு வருகை தருமாறு கேட்டுக் கொண்டார், ஆனால் அது அவரால் சாத்தியமில்லை என்று பாபா சுட்டிக்காட்டினார்.

மதியம் 3:40 மணியளவில், கூட்டம் கலைந்ததும், குஜராத்திக் குழுவினர் இருந்த மெஹராபாத் மண்டபத்திற்கு பாபா, தூக்கு நாற்காலியில் அழைத்துச் செல்லப்பட்டார். பாபா, சிறிது தண்ணீரைப் பருகிவிட்டு, சிதுவிடம், **“நீங்கள் காசநோயால் தாக்கப்படலாம்”** என்று சைகையால் தெரிவித்தார்.

குஜராத்திக் குழுவினருடன் உரையாடிய பாபா, **“நூற்றுக்கணக்கான தெலுங்கு ஆண்கள் மற்றும் பெண்களை சந்தித்து, நான் உங்களிடம் வந்துள்ளேன். என்ன ஓர் அன்பான, அற்புதமான சூழல் அது. ஆனால் இங்கு,**

**பார்சி சிறுவர்களைப் பார்க்கும்போது, குஸ்தாஜி கூறியது எனக்கு நினைவுக்கு வருகிறது - பார்சி சிறுவர்களின் குறும்புகளும் கோமாளித்தனமும் பிசாசைக்கூட பயமுறுத்தும்!"**

நகைச்சுவையாக எல்சாவை சுட்டிக்காட்டி பாபா, "**இவர் அவர்களின் தலைவர்!**" என்றார்.

மேலும் நகைச்சுவையாக, பாபா அவதானித்தார், "**இந்தப் பேய்த்தனம் மிக்க குறும்புக்காரர்களுக்கு மத்தியில், நான் இங்கே சொல்ல விரும்புவதை மறந்துவிட்டேன்!**"

பின்னர் அவர் தொடங்கினார்:

**இந்தக் குழுவின் பெண்மணிகள் முன்னால் அமர்ந்திருப்பதைக் கண்டு மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். முதல் குழுவில், அவர்கள் பின்னால் அமர்ந்திருந்தனர். பார்சி பெண்கள் புத்திசாலிகள் என்பதில் சந்தேகமில்லை. இன்றைக்கு நாம் இங்கே மனதிற்கு இதமான, மகிழ்ச்சிகரமான உரையாடல்களுக்காக ஒன்று திரண்டுள்ளோம். ஆனால் அது தொடங்கும் முன், 'நீங்கள் எதற்கும் கவலைப்பட வேண்டாம்' என்று கூறி ஆரம்பிக்கிறேன். உங்களுக்கு என்ன துன்பம் வந்தாலும், என் மீதுள்ள முழு நம்பிக்கையோடும், அன்போடும் அதைப் பொறுத்துக் கொள்ளுங்கள். அதிகபட்சம் என்ன நடந்துவிட முடியும்? உங்கள் உயிரைத் துறக்க நேரிடலாம். நீங்கள் விரைவில் அல்லது பின்னர் ஒரு நாள் உயிரைத் துறக்க வேண்டும் என்பது நிதர்சனம். அனுதினமும் நீங்கள் உங்கள் உடலை கைவிட வாழ்கிறீர்கள் எனும்போது, ஆரம்பத்திலிருந்தே உங்களுக்கு உடல் இல்லை என்று ஏன் நினைத்து, அதற்கேற்ப பற்றின்றி செயல்படக்கூடாது? நீங்கள் ஒன்றை நினைவில் கொள்ள வேண்டும், அதாவது நேர்மையாக வாழ்வது. நான் எல்லோரிலும் எல்லாவற்றிலும் இருக்கிறேன். கடவுள் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறார், எனவே அவருடைய விருப்பத்திற்கு அடிபணிந்து இருங்கள்.**

(பாபா ஒரு குறிப்பிட்ட நபரைச் சுட்டிக்காட்டி) **ஒருமுறை, நீங்கள் குழந்தையாக இருந்தீர்கள். இப்போது, நீங்கள் மனிதராக வளர்ந்துவிட்டீர்கள். குழந்தைப் பருவத்திற்கும், இன்று மனிதராக இருக்கும் காலத்திற்கும் இடையில், நீங்கள் பல இன்னல்களையும், இடர்பாடுகளையும் அனுபவித்திருக்கிறீர்கள். அவை அனைத்தும் இப்போது எங்கே? எனவே, சந்தோஷம், துக்கம் என்று ஒன்று இல்லை என்பதே உண்மை. நீங்கள் எல்லாவற்றையும் நினைத்து, அனுபவிப்பதற்குக் காரணமாக இருப்பது மாயை. 20, 30 ஆண்டுகளுக்குப் பின்னர், இன்றைய எண்ணங்களையும், நிகழ்வுகளையும் கூட மறந்துவிடுவீர்கள். நீங்கள் மாயாவின் வலையில் சிக்கியுள்ளீர்கள், மேலும் மனப்படிவங்களின் திரட்சி உங்களை மாயாவில் மேலும் மேலும் பிணைக்கிறது. உதாரணமாக, ஒரு மனிதர் தூங்குகிறார். திருடர்கள் அவரைக் கொலை செய்ய முயல்வதாக அவர் கனவு காண்கிறார். அச்சத்தில் அவர் எழுந்து, அதே கனவை கண்டுவிடுவாரோ என்ற**

**நடுக்கத்தில், மீண்டும் தூங்க முடியாமல் தவிக்கிறார். ஆனால், அதே சமயம் அது கனவு என்று அவருக்குத் தெரியும். எனவே, இந்த முழு வாழ்க்கையும் ஒரு கனவு. இதற்கு, கடந்த காலமும் எதிர்காலமும் இல்லை, ஆனால் நித்திய நிகழ்காலத்தில் மட்டுமே அனைத்தும் உள்ளது - நித்தியமான 'இந்த நேரம்'!**

**நான் சொற்பொழிவு வழங்கக் கூடாது என்று நினைத்துக் கொண்டிருந்தேன், ஆனால் எனக்கு முன்னால் தோன்றிய சில முகங்களைப் பார்த்த பின்னர், ஏதோ** (தீவிரமான ஒன்றை) **சொல்லத் தூண்டப்பட்டேன்.**

சிது, பாபாவிற்குத் தேநீர் கொண்டு வந்த போது, யார் அதை அனுப்பச் சொன்னது என்று பாபா கேட்டார். அதற்கு சிது, "நீங்கள் தானே பாபா தேநீர் கொண்டு வர சொன்னீர்கள்" என்றார். சிதுவிற்கு காசநோய் வரலாம் என்று சைகையால் தெரிவித்ததை, சிது தவறாகப் புரிந்துகொண்டு, பாபா, தேநீர் கேட்டதாக நினைத்துக் கொண்டதால், பாபா மனம் நிறைந்த சிரிப்பை வெளிப்படுத்தினார். பாபா ஒரு வாய் அருந்தி, மீதியை காக்காவிடம் கொடுத்தார்.

பின்னர் அவர் சில வேடிக்கையான கதைகளைக் கூறுமாறு கேட்டுக்கொண்டார்; அப்போது ராவல் சொன்ன கதை சகவாசிகளை வயிறு குலுங்க சிரிக்க வைத்தது. மேலும் சில கதைகளுக்குப் பிறகு, சகவாசக் குழு மண்டபத்தை விட்டு வெளியேறத் தொடங்கியதும், பாபா அவர்களைத் திரும்ப அழைத்து, "**நான் மேற்கத்திய நாடுகளிலிருந்து திரும்பிய பின்னர், தரிசனம், சகவாசம், எந்த விதமான விழாக்களும் இருக்காது. அதனால், மேலும் மேலும் என்னை நேசியுங்கள் என்று கூறுகிறேன்.**

**"இன்றைய காலங்கள் மிகவும் கடினமானவை, எனது மேலங்கி உங்கள் கைகளை விட்டு நழுவக்கூடும். ஒரு வருடத்தில் நான் இந்தப் பௌதீக உடலைத் துறப்பேன் என்று நான் நினைக்கிறேன். எனவே, இந்த வாய்ப்பை தவறவிடாதீர்கள். தெளிவான மனசாட்சியுடனும், திறந்த இதயத்துடனும், என்னை உண்மையாக நேசிக்கவும், தேவைப்படுபவர்களுக்கு உதவவும் வேண்டும். நான் நித்தியமானவன்."**

பாபா, மும்பை அல்லது வேறு நகரத்திற்கு கிரிக்கெட் போட்டியைக் காணச் செல்லலாம் அல்லது சிறிது ஓய்வுக்காக ஓரிடத்தில் தங்கலாம் என்று எரச் கூறினார். ஆனால் அவர் அதற்குக் கட்டுப்பட்டவராக இல்லை. ஆனால், அங்கு அவர் இருப்பதை அறிந்த எவரும் அவரைப் பார்க்க முயற்சிக்கக்கூடாது.

சகவாசக் குழு கலைந்த பிறகு, பாபா, மீண்டும் 4:35 மணிக்கு தண்ணீர் அருந்தும் போது இருமல் வந்தது. ஐந்து நிமிடங்களுக்குப் பிறகு மூன்றாவது குழு அவரை சந்திக்க வந்த வேளையில், பாபா இதைக் குறிப்பிட்டு, "**இந்த உடலை விரைவில் கைவிட வேண்டும் என்று நான் என் இதயத்தில் உணர்கிறேன். கார்மேகம் வேகமாக நெருங்கி வருகிறது; கடந்த சில மதிய நேரங்களில் என்னை நினைவில் வைத்திருக்கிறது. முந்தைய இரண்டு குழுக்களுடனான எனது சந்திப்பில் மிக்க மகிழ்ச்சியடைந்தேன். தீவிரமான**

**விஷயங்களைப் பற்றி நாம் பேச வேண்டாம். சில இனிமையான, வேடிக்கை நிறைந்த உரையாடல்களுக்காக நாம் இங்கே வந்துள்ளோம்.**"

பாபா ஏதோ நகைச்சுவையான சம்பவங்களைக் கேட்க விரும்பினார். டாக்டர் மூர்த்தி சில நாட்களுக்கு முன்னர், அவர் சவரம் செய்து கொண்டிருந்தபோது, கரே அவசரமாக குளியலறைக்குள் நுழைந்து, அவருக்கு முன்னால் முந்திக்கொண்டார் என்று கூறினார். மூர்த்தி அதை ரசிக்காமல், கரேக்கு இடம் கொடுத்தாலும், அவர் பாதி சவரம் செய்து முடித்த அந்த கணத்தில், பாபாவால் கரே அழைக்கப்பட்டால் எவ்வளவு வேடிக்கையாக இருக்கும் என்ற எண்ணம் அவர் மனதில் ஓடியது. பாபா மண்டபத்தில் வந்ததை மூர்த்தி அறியவில்லை; சில நிமிடங்களில், பாபா, கரேயை அழைத்தார், அவர் பாதி சவரம் செய்த அந்த நுரை நிறைந்த முகத்துடன் செல்ல வேண்டியிருந்தது.

பாபா, எல்சாவிடம் டாக்டர் தேஷ்முக்கின் திரைப்பட கேமரா சுருளைத் திருடினாரா என்று கேட்டார். ஒருமுறை தேஷ்முக் பாபாவைத் தழுவியபோது, பாபா வேகமாக தேஷ்முக்கின் பேனாவை அவரது முன் பாக்கெட்டிலிருந்து எடுத்து, கூட்டத்தில் பிற அனைவரிடமும் காட்டினார். பேனாவை மறைத்து வைத்துக்கொண்டு, பாபா தேஷ்முக்கிடம், "**நீங்கள் எதையாவது இழந்துவிட்டீர்களா?**" என்று கேட்டதும், தேஷ்முக் குழப்பத்துடன் காணப்பட்டார். சாதாரணமாக, நிகழ்ச்சிகளுக்கு மத்தியில், ஏதாவது நகைச்சுவை சம்பவங்களை வெளிக் கொணரும் விதத்தில், எந்த ஒரு சந்தர்ப்பத்தையும் பாபா தவறவிட்டதில்லை.

ஏ.சி.எஸ். சாரி தாமதமாக வந்தார், பாபா அவரது தாமதத்திற்கான காரணத்தைக் கேட்டு, வேடிக்கையான ஏதாவது ஒன்றைச் சொல்லச் சொன்னார். "வேறு எவரையேனும் முயற்சி செய்யுங்கள், பாபா" என்று சாரி அக்கறையற்றவர் போல பதிலளித்தார். (சாரி தனிப்பட்ட நெருக்கடியை எதிர்கொண்டார், ஆனால் அதைக் குறிப்பிடவில்லை.)

கொல்கத்தா சாய்பாபா மையம், சாய் சமாஜின் செயலர் பி.எஸ்.வி. ஐயரை மூர்த்தி அறிமுகப்படுத்தினார். ஐயர் அப்போது ஒரு வேடிக்கையான கதையை எடுத்துரைத்தார்.

பாபா தனது சர்வ ஞானத்தைப் பற்றி இதர குழுக்களிடம் கூறியதை, எரச் மீண்டும் விவரித்த போது, பாபா கூறினார்: "**இதெல்லாம் ஒரு கனவு, ஆனால் நீங்கள் அதைக் கனவென உணர்வுப்பூர்வமாக அனுபவிக்கவில்லை. நீங்கள் தூங்கும்போது, கனவு காண்கிறீர்கள் என்று வைத்துக்கொள்வோம், அப்போது நான் உங்கள் தலையில் தட்டினால், நீங்கள் உடனடியாக விழித்து, அது ஒரு கனவு என்பதை உணர்ந்து கொள்வீர்கள்.**"

பாபா மேலும் கூறினார், "**நீங்கள் பிறருக்கு சேவை செய்வதானால், உங்கள் சேவை நேர்மையாக இருக்கட்டும். என்னை எப்போதும் நினைவில் கொள்ளுங்கள்.**"

ஐயர் உரையாடலின் இடையே குறுக்கிட்டு, பாபாவின் பிரச்சாரப் பணியைச் செய்ய விரும்புவதாகக் கூறினார். பாபா அவரைத் திருத்தினார்,

**“எனது பணி தொடர்பாக ‘பிரச்சாரம்’ என்ற வார்த்தையைப் பயன்படுத்த வேண்டாம். அன்பைப் பரப்புவதே எனது பணி. சாய்பாபாவின் பணி எனது பணியிலிருந்து எப்பொழுதும் வேறுபட்டு இருக்காது. நானே சாய்பாபா! சாய்பாபா மீது உண்மையான அன்பு இருந்தால், நீங்கள் அவருடைய பணியை முழு மனதுடன் செய்வதானால், அது எனது பணியைச் செய்வதாகும்.”**

பாபா, சாரிக்கு ஆறுதல் கூறினார், **“உங்கள் சூழ்நிலைகள் மற்றும் சிரமங்களை நான் அறிவேன், அதையும் மீறி நீங்கள் என்னை எவ்வாறு உறுதியாகப் பற்றிக்கொண்டீர்கள் என்பதையும் நான் அறிவேன்.”**

ஹமீர்பூரில் ஹர்ஜீவன் லால், டெல்லியைச் சேர்ந்த வாஸ் தேவ் கெய்ன் இருவரிடமும், அவர்கள் செய்து வரும் பணியைக் குறித்து, பாபா, தனது மகிழ்ச்சியைத் தெரிவித்தார். பாபா அவர்கள் இருவரையும் அரவணைத்து, ராஜா முஹம்மது மற்றும் அவரது மனைவியைத் தழுவினார்.

கொல்கத்தா அன்பர்களைக் குறிப்பிட்டு, பாபா, அவர்கள் பாபாவிற்காகச் செய்யும் பணியை அறிந்திருப்பதாக உறுதியளித்து, அதைப் பாராட்டினார். அவர் கொல்கத்தாவைச் சேர்ந்த ஏ.வி. ராகவுலுவைத் (A.V. RAGHAVULU) தழுவிக் கொண்டார்; அத்துடன் கூட்டம் முடிவுக்கு வந்தது.

கே.டி.ஆர்.எம் (K.D.R.M.) எனப்படும் ஆந்திரா தலைவர்களை மண்டபத்திற்கு அழைத்த பாபா, **“உங்களுக்குள் ஒத்துழைப்பும் அன்பும் உள்ளதா?”** என்று நேராகக் கேட்டார்.

தனபதி, மல்லிகார்ஜுனா, ரங்கா ராவ் மூவரும் உறுதியுடன் பதிலளித்த அதே வேளையில், அவர்களின் பதிலில் நேர்மையும், நாணயமும் இருக்குமாறு பாபா கேட்டுக் கொண்டதால், குடும்ப சாஸ்திரி பதிலளிக்க முடியாமல் திண்டாடினார். கடைசியில் குடும்ப சாஸ்திரி எந்தப் பிரச்சினையும் இல்லை என்றார்.

அப்போது பாபா அவர்களிடம், **“ஒரு விஷயத்தை நினைவில் கொள்ளுங்கள்: நேரம் நெருங்கிவிட்டது. ஒரு வருடத்திற்குப் பின்னர், இந்தப் பௌதீக உடல் நிச்சயமாக வீழ்ந்துவிடும்; இந்தக் காலகட்டத்தில், உங்கள் உறுதியும் தைரியமும் வெளிப்படட்டும். இதுவே நேரம். நான் இல்லாத வேளையில், உலகில் லட்சக் கணக்கானவர்கள் எனது பணியைச் செய்ய முன்வருவார்கள். நான் கடவுள் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. உங்களுக்குள் அன்பாக இருங்கள், பின்னர் அந்த அன்பை, பிறருடன் பகிர்ந்து கொள்ளுங்கள்; உங்கள் குடும்பம், பொருளாதார நிலைமை, மற்றும் பிற பிரச்சினைகள் பற்றி எனக்குத் தெரியும். நான் அமெரிக்காவிலிருந்து திரும்பியதும், நான் சொல்வது நிறைவேறுவதை நீங்கள் காண்பீர்கள். இதை வேறு எவருக்கும் சொல்லாதீர்கள்.”**

பாபா இவ்வாறு கூறி முடித்தார்: “**நீங்கள் இந்தப் பௌதீக உடலில் வாழ்வது ஒரு தற்காலிக நிகழ்வு. உங்களால் அத்துடன் இணங்கிச் செல்ல முடியாது. ஆனால் இந்தப் பௌதீகத் தளத்தில், நீங்கள் என் அருகில் இருந்தால், அது பெரிய விஷயம்.**”

ஆந்திராவின் நான்கு ‘தூண்கள்’ அறையை விட்டு வெளியேறியதும், மும்பை, பூனா, நவ்ஸாரி, அஹமதுநகர், நாக்பூர், டெஹ்ரா டூன் மற்றும் பிற இடங்களிலிருந்து வந்த நெருங்கிய அன்பர்களை பாபா அழைத்தார். 1958 மார்ச் வரையிலான, தனது அன்பர்களுக்கான அறிவுரைகள் அடங்கிய வாழ்க்கைச் சுற்றறிக்கை எண். 37 (‘பாபாவின் நினைவூட்டல்’ - ‘BABA’S REMINDER’) ஒவ்வொருவருக்கும் தனது கைகளால் ஒரு பிரதியை வழங்கினார். அந்தச் சுற்றறிக்கையை திரும்பத் திரும்ப படித்து, அதில் அடங்கிய வழிமுறைகளை நேர்மையாகப் பின்பற்றவும் பாபா அவர்களுக்கு அறிவுறுத்தினார். சமீபத்தில் திருமணமானவர்கள் மற்றும் விரைவில் திருமணம் செய்து கொள்ளவிருப்பவர்கள், எந்தக் காமச் செயலிலிருந்தும் விலகி இருப்பது குறித்த உத்தரவிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டது.

அதற்குப் பிறகு, பாபா மெஹராஸாத்திற்குப் புறப்பட்டுச் சென்றார்.

ஹோஷங் பரூச்சா, கடந்த அக்டோபர் மாதத்தில் மெஹராஸாத்திற்குச் சென்றிருந்தபோது, அவர் பாபாவிடம், அப்போது வாழ்ந்த சத்குருக்களின் பெயர்களையும், இருப்பிடங்களையும் கேட்டிருந்தார். சகவாச நிகழ்ச்சியின் போது அதைப் பற்றி அவருக்கு நினைவூட்டுமாறு பாபா கூறியதற்கு இணங்க, 24ஆம் தேதி, பாபா புறப்படும் வேளையில், ஹோஷங் இந்த விஷயத்தை அவருடைய கவனத்திற்குக் கொண்டு வந்தார். மறுநாள் காலை, ஹோஷங்கிடம் மூடப்பட்ட உறை ஒன்றை வழங்கி, வீடு திரும்பும் வரை திறக்கக் கூடாது என்று அறிவுறுத்தப்பட்டது. அதில், ‘**ஐந்து சத்குருக்களில் ஒருவர் வீதமாக தென்னிந்தியா**, **வட இந்தியா**, `**மத்திய இந்தியா**, **பாகிஸ்தான்**, **ஸிரியா போன்ற பகுதிகளில் நிலைகொண்டிருப்பதாக**’ பாபா வெளிப்படுத்தினார். “**ஸிரியாவில் இருப்பவர் ஒரு முஸ்லீம்**” என்று பாபா கூறினார். “**பாகிஸ்தானிய பஞ்ஜாபில் இருப்பவரும் ஒரு முஸ்லீம்தான். இந்தியாவின் பஞ்ஜாபில் இருப்பவர், சாய்பாபாவைப் போல முஸ்லீம், இந்து இரண்டின் கலவை. பழைய மத்தியப் பிரதேசத்தில் இருப்பவர் ஓர் இந்து, தென்னிந்தியாவில் இருப்பவரும் இந்துவே!**”

பாபா தனது 64ஆவது பிறந்தநாளை ஒட்டி, முகாமை அலங்கரிக்க சகவாசிகளுக்கு அனுமதி அளித்திருந்தார். ஒரு நாள் முன்னதாக, 24ஆம் தேதி, குறுகிய கால அவகாசத்தில் தங்களால் இயன்ற அனைத்தையும் செய்தனர். சாலையின் அருகே அமைந்த பெரிய நுழைவாயில் மேம்படுத்தப்பட்டது. சந்திப்புப் பந்தல் சிறப்பாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. மேடையில், அரன்காவ்ம் அன்பர்கள் மலர்களால் நிறைந்த படகு வடிவ இருக்கையை அமைத்தனர், மேலும் பாபாவின் இருக்கையின் மேல் அலங்கரிக்கப்பட்ட குடை, சிறிய மின்

விளக்குகளால் ஜொலித்தது. சில பெண்மணிகள் பாபாவின் அறைக்கு முன்னால் தரையில் வண்ணமயமான கோலமிட்டு, பூச்சரங்களை தொங்கவிட்டனர். 'நல்வரவு' என்று வண்ண எழுத்துக்களால் எழுதப்பட்ட அலங்கார வளைவு ஒன்று எழுப்பப்பட்டது. பிரதான சாலையிலிருந்து நேராக சந்திப்புப் பந்தலுக்குச் செல்லும் மேம்படுத்தப்பட்ட சாலையின் இருபுறமும், பூந்தொட்டிகள் வரிசையாக வைக்கப்பட்டிருந்தன. எல்லா இடங்களிலும் அலங்கார வளைவுகள், கொடிகள் மற்றும் பூச்சரங்கள் தொங்கவிடப்பட்ட நிலையில், மெஹராபாத், விழாக்கோலம் பூண்டு காணப்பட்டது.

1958 பிப்ரவரி 25ஆம் தேதி செவ்வாய்கிழமை அதிகாலை முதல், சகவாசக் குழுக்களில் இருந்த ஆண்களும் பெண்களும் தியானம் செய்யத் தொடங்கினர்; மேலும் பக்திப் பாடல்களைப் பாடி, ஆரத்திகளை நிகழ்த்தி - மெஹராபாத்தை தெய்வீக மதுவின் ஒளியால் ஒளிரச் செய்தனர். பாபாவை பந்தலுக்கு அழைத்துச் செல்வதற்காக, திறந்த கார் ஒன்று படகு வடிவத்தில் அலங்கரிக்கப்பட்டது. இதை அரன்காவ்ம் கிராமத்தைக் சேர்ந்த லக்ஷ்மண் மால்வாடே (LAXMAN MALVADE) என்பவர் ஓட்டினார். முழு சகவாசக் குழுவும், பாபாவை வரவேற்க அஹமதுநகர் சாலையில் சுமார் அரை மைல் தூரம் நடந்து சென்றனர். அரன்காவ்ம் கிராம மக்கள் பாடியும் நடனமாடியும் நீண்ட ஊர்வலமாக அணிவகுத்து நின்றனர். அரன்காவ்ம் அன்பர்கள் டோக்காவிலிருந்து புனித நதி நீருடன் திரும்பி வரவே, முழு சூழலும் பாபாவின் 'ஜெய்' எனும் இதய முழக்கங்களால் எதிரொலித்தது!

இதற்கிடையில், அன்று காலை மெஹராஸாத்தில், பாபா கழிப்பறைக்குச் செல்லாததால், காரில் சிறிது தூரம் சென்ற பிறகு, பாபா எரச்சிடம் கழிப்பறையைப் பயன்படுத்த வேண்டிய கட்டாயத்தைச் சுட்டிக்காட்டினார். "வழியில் ஆதியின் இல்லத்தில் (குஷ்ரு குவார்ட்டர்ஸில்) நிறுத்தலாமா?" என எரச் கேட்டார்.

**"இல்லை"** என்று பாபா சைகை செய்தார்; **"விரைந்து நேராக மெஹராபாத்திற்குச் செல்லுங்கள்."**

மீண்டும் வழியில், பாபா அவசரமாக கழிப்பறைக்குச் செல்ல வேண்டும் என்று கூறவே, "நாம் அக்பர் அச்சகத்தில் நிறுத்தலாம்" என்று எரச் பரிந்துரைத்தார்.

ஆனால் மீண்டும் பாபா இல்லை என்றார், **"மெஹராபாத்தைச் சென்றடைந்ததும், நான் நேராக என் அறைக்குச் சென்று அங்குள்ள கழிவுக்கலனைப் பயன்படுத்துவேன்; எவரையும் உள்ளே வர அனுமதிக்காதீர்கள்."**

எரச் தன்னால் முடிந்தவரை வேகமாக ஓட்டினார், ஆனால் காலை 7:30 மணிக்கு, மெஹராபாத்திலிருந்து ஏறக்குறைய கால் மைல் தொலைவில், பாபாவை வரவேற்க முன் வந்த அவருடைய அன்பர்களின் ஆரவாரம் மற்றும் ஜெய் முழக்கங்கள் எங்கும் எதிரொலித்தது. எரச் கார் ஹாரனை ஒலிக்கச் செய்து, மக்களை வழிவிடுமாறு கேட்டுக்கொண்டார்; ஆனால் அவருடைய

செவிகளில் விழுந்த ஒரே பதில்: “அவதார் மெஹர் பாபாவிற்கு ஜெய்!” மீண்டும் மீண்டும் உரத்த குரலில், “அவதார் மெஹர் பாபாவிற்கு ஜெய்!”

பாபாவின் காரைச் சுற்றி வளைக்கவே, எரச், ‘தயவு செய்து காரை நகர்த்திச் செல்ல அனுமதியுங்கள்’ என்று குரல் கொடுத்துக்கொண்டே சென்றார்; ஆனால் பாபா, எரச்சிடம் அமைதியாகவும், அவர்களின் உற்சாகத்தைக் கெடுத்துவிடாமல் இருக்குமாறும் சைகையால் தெரிவித்தார். **“இந்த வாழ்க்கையில், ஒருமுறை இத்தகைய வாய்ப்பு அவர்களுக்குக் கிடைக்கிறது”** என்று பாபா குறிப்பிட்டார். மேலும் கார் முன்னோக்கி நகர்ந்தது. அன்பர்களின் அளப்பரிய சந்தோஷம், தங்கள் பிரியமானவருக்கு ஒரு தவிர்க்கமுடியாத துன்பம்!

டெஹ்ரா டூன் நகரிலிருந்து திரைப்படத் தயாரிப்பாளரான பிரகாஷ் சாப்ரா (PRAKASH CHABRA), சுமார் 15 முதல் 20 பேர் கொண்ட குழுவினருடன் முந்தைய நாள் வந்திருந்தார். சீரான முறையில் ஊர்வலம் அணிவகுத்துச் செல்ல, அதைப் படமெடுக்க திட்டமிட்டார். மேலும் சில புகைப்படக் கலைஞர்கள் புகைப்படங்கள் எடுக்க பாதையை மறைத்ததால், கார் முன்னோக்கி நகர முடியாத சூழ்நிலை. பாபாவின் மரியாதையின் நிமித்தம், இந்திய ‘துப்பாக்கிக் குண்டுகள்’ வானத்தை நோக்கிச் சுடப்பட்டன; ஊர்வலம் மெதுவாகச் சென்றபோது, சில ஆண்களும் பெண்களும் அவர் மீது மலர்களைத் தூவினர். கோதாவரி மாய், பாபாவிற்கு நேர் பின்னால் ஒரு காரில் அமர்ந்து ஊர்வலத்தில் பின்தொடர்ந்து வந்தார்.

பாபாவின் கார் அவரது அறையைச் சென்றடைய கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் ஆனது. அவர் உள்ளளவில் பெரும் அவஸ்தையை உணர்ந்தபோதும், வெளித்தோற்றத்தில் மகிழ்ச்சியாகவும், முகமலர்ச்சியுடனும் காணப்பட்டார்; மேலும், பாடகர்களையும் நடனக் கலைஞர்களையும் தொடர்ந்து ஊக்குவித்தார். அது ஓர் அற்புதமான காட்சி! அனைவரும் மகிழ்ச்சி ஆரவாரத்தில் பித்துப் பிடித்தவர் போல், உற்சாகத்துடன் பாபாவின் காரைத் தடுத்தனர். இயற்கையின் தூண்டுதலால் எழும் தனது உடல் உந்துதலைக் கட்டுப்படுத்தி, அவர்களின் மகிழ்ச்சியில் அவதார புருஷர் முழுமையாகப் பங்கெடுத்தார்!

இறுதியாக, காலை 8:30 மணிக்கு, ஊர்வலம் பாபாவின் அறை அருகே வந்ததும், அவர் உள்ளே சென்றார்; பாபா வெளியே வந்த அடுத்த கணம், அவரது தோற்றம், மேலும் வெறித்தனமான ‘ஜெய்’ முழக்கங்களுக்கு வழிவகுத்தது. இரண்டு ஊன்றுகோல்களைப் பயன்படுத்தி, பாபா அலங்கரிக்கப்பட்ட திறந்த கார் அருகில் சென்று, அனைவரும் அவரைப் பார்க்கும் விதத்தில் அதில் அமர்ந்தார். காக்கா வலதுபுறம் அமர்ந்திருக்க, குமார், பாபாவின் தலைக்கு மேல் குடையைப் பிடித்த வண்ணம் பின்னால் நின்றார். எரச், மெஹர்ஜி மற்றும் இதர மண்டலி காரைச் சுற்றி ஒரு பாதுகாப்பு வளையத்தை உருவாக்கினர்.

பைதூலின் பருமமான மருமகன் பெஸி ஈரானி, ஆதி துபாஷ் மற்றும் பலர், கார் முன்னோக்கிச் செல்வதற்கான பாதையை அமைத்துக் கொடுக்க விரைந்தனர். தெலுங்கு பக்திப் பாடல்களின் இனிமையான மெல்லிசை,

இசைக்குழுவின் துணையுடன் காற்றில் எதிரொலித்தது. கோதாவரி மாயின் காருக்குப் பின்னால், ஒரு சில பார்சி பெண்மணிகள் பாபாவின் பூஜை, ஆரத்திக்கான சடங்குத் தட்டு மற்றும் பிற பொருட்களை எடுத்துச் சென்றனர்.

பக்தர்களின் ஊர்வலம் பாபாவின் அறையைச் சுற்றி வந்து, மண்டபத்தின் கிழக்கு மற்றும் வடக்கே மெதுவான வேகத்தில் பிரதான சாலையில் நகர்ந்து சென்று, தொடர்ந்து சந்திப்புப் பந்தலை நோக்கி செல்லும் மண் சாலையில் சென்றது. காலை 8.45 மணிக்கு பாபா மண்டபத்தை வந்தடைந்தபோது, அவர் அனைவரையும் உள்ளே சென்று இருக்கையில் அமருமாறு கேட்டுக்கொண்டார்.

பாபாவும், கோதாவரி மாயும் மேடைக்கு வந்த வேளையில், 'அவதார் மெஹர் பாபாவிற்கு ஜெய்!' மற்றும் 'கோதாவரி மாய்க்கு ஜெய்!' என்ற உரத்த குரல் முழக்கங்கள் கேட்டன. பார்சி பெண்களின் குழு, முதலில் பிறந்தநாள் வாழ்த்துக்களைப் பாடி, பாரம்பரிய குஜராத்தி பிறந்தநாள் பாடலைத் தொடர்ந்து, பாபாவிற்கு வாழ்த்துகளைத் தெரிவித்தது. மினூ கராஸ், பாபாவின் தலையில் ஒரு மலர் கிரீடம் அணிவித்தார், மேலும் பாபாவிற்கு ஏராளமான மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன.

பாபா அவரது இருக்கையில் அமர்வதற்கு முன்பு, கெய்மாய் ஜெஸவாலா மற்றும் அவரது குடும்பத்தினர் மேடையின் படிக்கட்டுகளில் நின்று பார்சி பாணியில் அவரை வணங்கினர். கெய்மாய், பாபாவின் நெற்றியில் சிவப்புத் திலகமிட்டு, அவருக்கு முன்னால் ஒரு தேங்காயை நல் அதிர்ஷ்டத்திற்காக உடைத்தார். பாபா, தனது மலர் கிரீடத்தைக் கழற்றி, வலது பக்கத்தில் அமர்ந்திருந்த கோதாவரி மாயிடம், அவரது பாதங்களைக் கழுவ பன்னிரெண்டு ஆண்களையும், பன்னிரெண்டு பெண்களையும் தேர்ந்தெடுப்பதில் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டைப் பற்றி விளக்கினார். எனவே, அவர் தனது கால்களைத் தானே கழுவி, புனித கோதாவரி நதியிலிருந்து கொண்டுவந்த தண்ணீருடன் கலக்க முடிவு செய்து, அதை சகவாசக் குழு அன்பர்கள் அனைவரும் தங்கள் நெற்றியில் பூசுவதற்காக வழங்கினார்.

இருக்கையை விட்டு வெளியேறிய பாபா, மேடையின் ஓரத்தில் இருந்த நாற்காலியில் அமர்ந்தார். டோக்கா நதி நீரை பாபாவின் வலதுபுறத்தில் வைத்திருந்த ஒரு பெரிய செம்பு உருளைப் கொள்கலனில் நிரப்ப பாபா, அரன்காவ்ம் அன்பர்களுக்கு உதவினார். பல சகவாசிகள், கங்கை மற்றும் இந்தியாவின் பிற புனித நதிகளிலிருந்து, தண்ணீர் நிரப்பப்பட்ட பாட்டில்களைக் கொண்டு வந்திருந்தனர், அவை உலோகக் கொள்கலனில் காலி செய்யப்பட்டு, பால், தேன், பன்னீர் போன்ற வாசனை திரவியங்களுடன் கலக்கப்பட்டன. அதைத் தொடர்ந்து பாபா அவரது கால்களை, ஒரு சுத்தமான தொட்டி போன்ற பரந்த பாத்திரத்தில் வைத்து, நான்கைந்து குவளை தண்ணீரை ஊற்றினார். அப்படியே இசை நிகழ்ச்சியும் தொடர்ந்தது. பாபா தனது கைகளால் பெரிய செம்புப் பாத்திரத்தில் விலைமதிப்பற்ற சரணாமிர்தத்தை (கடவுளின் தாமரை பாதங்களின் தேன்) ஊற்றினார்.



மெஹராபாத் (MEHERABAD) **25** பிப்ரவரி (FEBRUARY) **1958**



**மேலே**: பாபா அவருடைய கால்களைக் கழுவுதல், **கீழே இடம்**: கோதாவரி மாய் மாலை அணிவித்தல், **கீழே வலம்**: கோதாவரி மாய், ஸொராப்ஜி ஸிகன்போரியா, டாக்கே, யோகி **ஷுத்தானந்த் பாரதி** (TOP: BABA WASHES HIS OWN FEET, BOTTOM LEFT: GODAVRI MAI GARLANDS BABA, BOTTOM RIGHT: GODAVRI MAI, SOHRABJI SIGANPORIA, DHAKE, YOGI SHUDDHANANDA BHARATI)

மக்கள், நிரம்பியிருந்த பந்தல் முழுவதும், அவரது பாராட்டுக்களால் நிரம்பி வழிந்த ‘ஜெய்’ கோஷங்களை எழுப்பினர். எரச், பாபாவின் பாதங்களை ஒரு துண்டால் துடைத்து உலர்த்தினார். பின்னர் எழுந்து நின்று, பாபா தனது இருக்கைக்குத் திரும்பிச் சென்றார். பாபா அந்தத் துண்டை திருமல ராவிற்குப் பரிசாக வழங்கியதும், அவர் அதை நெற்றியிலும் கண்களிலும் நன்றியுடன் தொட்டு வணங்கினார்.

டோக்காவிலிருந்து கொண்டு வரப்பட்ட தண்ணீரில் சில தூசி, துகள்களை பாபா கண்டுகொள்ள நேர்ந்ததால், அவர் பக்தர்களிடம் அதை சுவைக்கவோ, அருந்தவோ வேண்டாம், ஆனால் அதை அவர்களின் நெற்றியில் பூசிக் கொள்ளலாம் என அறிவுறுத்தினார். அதைத் தொடர்ந்து, ஆண்களும் பெண்களும் பாபாவின் தரிசனத்திற்காக மேடை ஏறியபோது, ஒவ்வொருவருக்கும் உள்ளங்கையில் சிறிது நீர் வழங்கப்பட்டது; அதை சுவைக்கவோ அருந்தவோ கூடாது என்று பாபா மீண்டும் அறிவுறுத்தினார்.

காலை 9:20 மணிக்கு, தெலுங்கு மற்றும் குஜராத்தி மொழிகளில் பாபாவின் ஆரத்தி நிகழ்த்தப்பட்டது. திருமல ராவ், கடவுள் பேசுகிறார் (GOD SPEAKS) என்ற புத்தகத்தின் தெலுங்கு மொழிபெயர்ப்பை பாபாவின் பாதத்தில் வைத்து, ஒரு சிறிய உரையை நிகழ்த்தினார்:

பூமியில் மெஹர் பாபாவின் வடிவில், கடவுளின் ஒளிமயமான வெளிப்பாடு, என் ஆத்மாவின் அழுக்கடைந்து மங்கலாகிப் போன இருண்ட மூலையில் அதன் பிரகாசத்தை வெளிப்படுத்தி, என்னைப் போன்ற ஓர் அறிவிலிக்கு, ‘பிரபஞ்சத்தின் படைப்பும், அதன் நோக்கமும்’ பற்றிய புத்தகத்தை மொழிபெயர்க்க உத்தரவிடப்பட்ட அந்த நாள், எனது வாழ்க்கையில் ஒரு தனித்துவமான நாள். பாபா தனது உள்ளார்ந்த இறை அனுபவம் மற்றும் யதார்த்தத்தைப் பற்றிய உண்மையான அறிவிலிருந்து, மனிதகுலத்திற்கு ஆங்கிலத்தில் வழங்கியுள்ளார். இந்தப் புத்தகத்தை அதன் அனைத்து அம்சங்களிலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட தத்துவக் கோட்பாடுகளுடன் ஒருங்கிணைக்க முடியாது.

1955 நவம்பர் மாதத்தில் நிகழ்ந்த சகவாசத்தின் போது, பாபா என்னை அழைத்து, இந்த புத்தகத்தை தெலுங்கில் மொழிபெயர்க்கும்படி கட்டளையிட்டபோது நான், இது எனது ஆற்றலின் வரம்பிற்கு அப்பாற்பட்டதாக உணர்ந்தாலும், திகைப்பில் ஆழ்ந்தேன். அந்தப் பணிக்கு என்னால் நியாயம் செய்ய முடியுமா என்ற அச்சத்தை இயல்பாக வெளிப்படுத்தினேன். ஆனால் பாபா என்னை உற்சாகப்படுத்தி, “நான் உங்களுடன் இருக்கிறேன்; பணியைத் தொடருங்கள்” என்று கூறினார். இன்று, பாபா எனக்கு வேண்டிய பலத்தையும் வழிகாட்டுதலையும் வழங்கினார் என்பதை நான் ஒப்புக்கொள்ள வேண்டும்.

அன்புள்ளம் படைத்த பாபாவின் அருளுக்காக, நான் அவருக்கு நன்றியுள்ளவனாக இருக்கிறேன், இந்தப் பிறவியில் மட்டுமின்றி, எதிர்கால வாழ்விலும் நான் அவருடன் இணைந்திருக்க வேண்டும் என்பதே அவரிடம் நான் வைக்கும் எனது நிலையான பிரார்த்தனை.

திருமல ராவின் பக்தியைப் பாராட்டிய பாபா, கையெழுத்துப் பிரதியைத் தொட்டு, அவரிடம் அதை அச்சிடுமாறு ஒப்படைத்தார்.

அதைத் தொடர்ந்து, இசைக்கலைஞர்களுடன் இணைந்து, யோகி ஷுத்தானந்த் பாரதி, பாபாவிற்காக இசையமைத்த ஆங்கில பிறந்தநாள் பாடலைப் பாடினார். காலை 9:40 மணிக்கு, டாக்டர் தனபதி ராவ், ஆந்திரா அன்பர்களின் சார்பில், பாபாவின் பிறந்தநாளை ஒட்டி ஓர் உரையை வாசித்தார்; பின்னர் அதைச் சுருளாக, ஒரு உருளை வடிவ வெள்ளிப் பெட்டியில் வைத்து, அவர்களின் கூட்டு அன்பளிப்பான 1,416 ரூபாயை பாபாவின் காலடியில் வைத்தார்.

இதேபோல், மேற்கு வங்கம், பீஹார், ஒரிஸா மற்றும் பிற அன்பர்கள் சார்பாக, டாக்டர் மூர்த்தி ஓர் உரையை வாசித்தார். புர்ஜர் மேத்தா குஜராத்தியில் தனபதியின் உரையின் மொழிபெயர்ப்பைப் படித்தார். கேரளாவைச் சேர்ந்த டாக்டர் எம். ஆனந்தன் ஒரு சிறிய உரையை வழங்கியதைத் தொடர்ந்து இந்துமதி தேஷ்முக் மராட்டியில் ஓர் உரை நிகழ்த்தினார்.

இறுதியாக, காலை 10:10 மணிக்கு, இதற்கு முந்தைய சகவாச நிகழ்ச்சியில் கலந்துகொண்ட முதல் வாரக் குழுவைப் பிரதிநிதித்துவப்படுத்தி, டாக்கே சில வார்த்தைகளை மொழிந்தார். அவரது உரையை வாசிக்கும்போது, டாக்கே உணர்ச்சிவசப்பட்டு கண்ணீர் சிந்தினார், இதர பக்தர்களும் அவ்வாறே கண்கலங்கி அழுதனர். முந்தைய பேச்சாளர்களைப் போலவே, டாக்கே அவரது மனைவியுடன் இணைந்து பாபாவிற்கு மாலை அணிவித்தார்.

அப்போது பாபா, போதிய நேரம் இல்லாததால், சொற்பொழிவுகளை நிறுத்த வேண்டும் என்று குறிப்பிட்டார். தரிசனம் தொடங்க இருந்த நேரத்தில், பாபா, அனைவரும் தங்களால் இயன்றவரை விரைவாக இருக்குமாறும், தரிசனத்திற்குப் பிறகு, சாப்பாட்டுக் கூடாரத்திற்குச் சென்று, மதிய உணவை முடித்து, பந்தலுக்கு வருமாறும் கட்டளையிட்டார். பெண்மணிகள் ஒவ்வொருவராக அழைக்கப்பட்ட வேளையில், கோதாவரி மாய் முதலில் தரிசனம் செய்தார். பாபாவிற்கு மாலை அணிவித்து, அவரது பாதங்களைத் தொட்டு, தழுவிக்கொண்டார். சகவாசத்தில் கலந்துகொண்ட 200 பெண்மணிகள் ஒவ்வொருவராக பின்தொடர்ந்தனர். ஒவ்வொருவருக்கும் அவர்களின் நெற்றியை நனைக்க சரணாமிர்தத்தில் சிறிது கொடுக்கப்பட்டது. பணத்தை தக்ஷிணையாக வழங்க இருந்தவர்கள், பாபாவின் பாதத்தின் அருகில் இருந்த பெட்டியில் அதை வைத்தனர்.

பெண்மணிகளின் தரிசன நிகழ்ச்சி காலை 11:05 மணிக்கு நிறைவடைந்தது. பாபா, அப்போது பந்தலை விட்டு வெளியேறி, சில நிமிடங்கள் தனது அறைக்குச் சென்றார்; அரை மணி நேரத்திற்கு பின்னர், 600 பேரும் தரிசனத்தைப் பெற்றுக்கொள்ள ஆயத்தமாகும் வகையில், பாபா தனது 'சிம்மாசனத்தில்' மீண்டும் அமர்ந்தார். அஹமதுநகரிலிருந்து உள்ளூர்வாசிகள் பலர், பாபாவின் பிறந்தநாளை முன்னிட்டு அவரை கௌரவிக்கவும், அவரது தரிசனத்திற்காகவும் அன்று மெஹராபாத் வந்தனர்.

ஸரோஷ் அமெரிக்காவிலிருந்து நெட் & டோரோதியா ஃபுட் (NED & DOROTHEA FOOTE) என்று அழைக்கப்பட்ட இரண்டு சூஃபிக்களை அழைத்து வந்தபோது, அவர்கள் பாபாவிற்கு மாலை அணிவித்து, தரிசனம் செய்தனர். அவர்களின் ஒரு வார கால இந்தியப் பயணம் குறித்து, முன்கூட்டியே பாபாவிற்குத் தெரிவித்தபோது, இருவரும் உடனடியாக அவரை நாடி வரவேண்டாம் என அறிவுறுத்தப்பட்டனர். அதற்கிணங்க, அர்னவாஸ் மும்பையில் அவர்களைத் தொடர்பு கொண்டார், பின்னர் அவர்கள் ஆக்ராவில் அமைந்த தாஜ்மஹாலைப் பார்க்க டெல்லிக்குச் சென்றனர். இருவரும் 24ஆம் தேதி மாலை அஹமதுநகர் வருமாறும், மறுநாள் அவரது பிறந்தநாளன்று அனுமதிக்கப்படுவார்கள் என்றும் தொலைத்தந்தி அனுப்பப்பட்டது. மேலும், அன்று மாலையே அவர்கள் திரும்பிச் செல்லவேண்டும், பாபா நேர்காணல் வழங்கவோ, அல்லது எந்தக் கேள்விக்கும் பதிலளிக்கவோ மாட்டார் என்றும் அவர்களிடம் கூறப்பட்டது. எனவே அவர்கள் மீண்டும் மும்பை வந்து, அஹமதுநகருக்குக் காரில் பயணம் செய்தனர். அவர்களின் பயண முகவர் சந்தேகத்தைத் தெளிவு படுத்தும் விதத்தில், “அஹமதாபாத் என்று சொல்கிறீர்களா? எந்த சுற்றுலாப் பயணிகளும் அஹமதுநகருக்குச் செல்வதில்லை!” என வினவியதும், அவர்கள் அஹமதுநகர் சரியான இடம் என்று உறுதியளித்தனர்.

இதற்கு முன்னதாக பாபாவை சந்தித்த ஸ்காட்லாந்தைச் சேர்ந்த பெண்மணியும் இந்த சந்தர்ப்பத்தில் மெஹராபாத் வந்திருந்தார்.

பாபாவின் கழுத்தில் ஏராளமான மாலைகள் அணிவிக்கப்பட்டன, பழங்கள், இனிப்புப் பண்டங்கள், வாசனை திரவியங்கள், பட்டுத் துணிகள் போன்ற பல பரிசுகள் அவருக்கு அருகில் அமைந்த மேடையில் குவிக்கப்பட்டன. பெரும்பாலான பரிசுகளை பாபா வழங்கியவர்களிடமே பிரசாதமாகத் திருப்பிக் கொடுத்தார். பலர் பாபாவின் புகைப்படங்களைக் கொடுத்தபோது, அவர் அவற்றைத் திரும்பக் கொடுப்பதற்கு முன்னர் அவரது நெற்றியில் தொட்டு ஆசீர்வதித்தார். மண்டபம் முழுவதும் பஜனைகளும் கீர்த்தனைகளும் தொடர்ந்து எதிரொலித்தன.

ஆண்களின் தரிசன வேளையில், குடும்ப சாஸ்திரி, இதை ஒலிபெருக்கி மூலம் அறிவித்தார்: “ஆந்திரா அன்பர்கள், மெஹராபாத்திலிருந்து விஜயவாடாவிற்குத் திரும்பும் பயணத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்ட சிறப்பு ரயில் தொடர்பாக, 2,000 ரூபாய்க்கும் மேலான பற்றாக்குறையை ஈடுசெய்ய, ஆந்திராவின் அக்கிவிடு கிராமத்தைச் சேர்ந்த ஜூபுடி சுப்பண்ணா (JUPUDI SUBBANNA OF AKIVIDU), பாபாவின் அனுமதியைப் பெற்றுள்ளார்.”

சுப்பண்ணா, பாபாவை அணுகி, அந்தப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய, அவர் மனமுவந்து முன் வருவதாக கூறி, பாபாவின் அனுமதியைக் கோரினார். அவர் பாபாவிடம், “என்னில் நிலைகொண்டுள்ள நீங்கள் அதைச் செலுத்துகிறீர்கள், பாபா” என்றார்.

அதற்கு பாபா, "**நீங்கள் என்னை நேசித்து, நீங்கள் வாழும் இடத்தில் எனது பணியைச் செய்தால் போதும்; இந்தப் பணத்தை, அக்கிவிடு கிராமத்தில் நீங்கள் மேற்கொள்ளும் பணிக்காகப் பயன்படுத்துங்கள்**" என எடுத்துரைத்தார்.

ஆனால், சுப்பண்ணா, "தயவுசெய்து அந்தத் தொகையைச் செலுத்த என்னை அனுமதிக்கவும். இதற்கு நான் பணம் செலுத்துவதோடு, எனது பகுதியில் மேற்கொள்ளும் பணிக்காக, வேறு பணத்தைச் செலவிடுகிறேன்" என்று பதிலளித்தார். அவரது பக்தி பாபாவின் இதயத்தைத் தொடவே, பாபா அவரை அனுமதித்தார்.

பாபா, சுப்பண்ணாவை மேடைக்கு அழைத்து, அவரை கூட்டத்திற்கு அறிமுகப்படுத்தினார். ஆண்களின் தரிசனம் தொடர்ந்தது; பக்தர்கள் தங்கள் வீடுகளுக்கு மீண்டும் எடுத்துச் செல்ல புனித நீரை பாட்டில்களிலும், பிற பாத்திரங்களிலும் நிரப்பினர். பாபாவைத் தழுவ வேண்டாம் என்று அவர்களுக்குச் சொல்லப்பட்டது, அதனால் சிலர் அவரது கைகளில் முத்தமிட்டனர், சிலர் கைகளைத் தங்கள் நெற்றியால் தொட்டனர், சிலர் கண்கலங்கி அழுது கொண்டிருந்தனர், இவ்வாறு பல்வேறு வழிகளில் அவர்கள், அழகே உருவான கிறிஸ்துவின் மீது, தங்கள் ஆழ்ந்த அன்பை வெளிப்படுத்தினர். பாபா எல்லோரையும் தட்டிக் கொடுத்து, சிலரது கன்னங்களை அன்புடன் வருடினார். தரிசனம் செய்யும் போது, அவர் நகைச்சுவை துணுக்குகளைப் பரிமாறிய வண்ணம், பாடலுடன் தாளத்திற்கேற்ப கைகளைத் தட்டிக்கொண்டிருந்தார்.

ஆந்திராவைச் சேர்ந்த ஒருவர் பாபாவிடம், "நீங்கள் குஜராத்துடன் மிகவும் நெருக்கமாக இருப்பதால், எனது அடுத்த பிறவி அங்கேயே இருக்க வேண்டும் என்று மனப்பூர்வமாக விரும்புகிறேன்" என்றார்.

பாபா, "**நீங்கள் அவ்வாறு விரும்புவதே, குஜராத்தி அன்பர்களை ஆந்திராவில் அடுத்த பிறவி எடுக்கத் தூண்டும்**!" என்றார்.

நவ்ஸாரியின் பச்சூபாய் மற்றும் அவரது குழுவினர் குஜராத்தியில் பாடும் ஒரு குறிப்பிட்ட பாடலை பாபா பெரிதும் விரும்பினார்: "ஓ வெண்ணிற மேலங்கியை அணிந்தவரே! நாங்கள் உங்களை லட்சம் முறை வணங்குகிறோம்!"

பாபாவின் தூண்டுதலின் பேரில், எரச் இவ்வாறு அறிவித்தார், "இன்றிரவு சந்திப்புப் பந்தலில், தெலுங்கு நாடகமான 'புர்ரா கதா'வின் (BURRA KATHA) நூறாவது நிகழ்ச்சி இரவு 8:30 முதல் 10:30 மணி வரை அரங்கேற்றப்படும். அனைவரும் நாடகத்தைக் கண்டுகளிக்க வேண்டும் என்று பாபா விரும்புகிறார். உடல் ரீதியாக பாபா, இங்கு இல்லாவிடினும் அவருடைய பிரசன்னம் கண்டிப்பாக இருக்கும்."

மதியம் 2:00 மணிக்கு ஆண்களின் தரிசனம் நிறைவடைந்தது. பாபா தனது அறைக்குச் சென்றார்; சகவாசத்தில் கலந்து கொண்டவர்கள் மதிய உணவுக்காக சாப்பாட்டுக் கூடாரத்திற்குச் சென்றனர். அன்று பிற்பகல் பாபாவை தரிசனம் செய்ய, பொதுமக்கள் மற்றும் அரன்காவ்ம் அன்பர்களுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. பிற்பகல் 3:15 மணிக்கு, பாபா மீண்டும் மண்டபத்திற்குள் நுழைந்தார். அண்டை கிராமங்களில் இருந்தும் மக்கள் வெகு

தூரம் நடந்து வந்து கொண்டிருந்தனர். அவர்கள் அரன்காவ்ம் அன்பர்களுடன் ஒன்றிணைந்து ஆண்கள், பெண்கள் என இரு பிரிவாகப் பிரிக்கப்பட்டனர். தரிசனத்தின்போது, பாபாவின் அருகில் பல அன்பர்கள் தரிசனம் செய்யும் ஆண்களுக்கு உதவினர், மேலும் பெண்மணிகள் முன்னால் வரும் பெண்களுக்கு உதவியாக இருந்தனர். டாக்கே மராட்டி மொழியில் கிராமவாசிகளைத் துரிதப்படுத்தும் விதத்தில், 'அதிக நேரம் எடுக்காமல், பிரசாதத்தைப் பெற கைகளை நீட்டிச் செல்லுங்கள், தங்கள் குழந்தைகளை பாபாவின் காலடியில் வைக்க வேண்டாம்' என்று கேட்டுக்கொண்டார். பெண்மணிகள் முன்னே வந்தபோது, டாக்கேயின் மனைவி பாபாவின் வலது பக்கத்தில் அமர்ந்து லட்டுகளை பிரசாதமாக விநியோகிக்க அவரிடம் கொடுத்தார். அதைத் தொடர்ந்து, ஸாக்கோரியின் யஷ்வந்த் ராவ், ஆண்கள் தரிசனத்திற்காக வந்தபோது அவ்வாறே செய்தார்.

ஏறக்குறைய 5,000 பேர் பாபாவின் தரிசனத்தைப் பெற்றுக்கொண்டனர். பாபா ஒவ்வொரு பெரியவருக்கும் இரண்டு லட்டு உருண்டைகளையும், ஒவ்வொரு குழந்தைக்கும் ஒன்றையும் கொடுத்தார். மஸ்தை ஒத்த மனிதர் பாராகோட்டியும் வந்திருந்தார். பாபா அவரிடம் இரண்டு லட்டுகளை வழங்கியபோது, பாராகோட்டி மேலும் ஒன்றைக் கேட்க, பாபா அதை அவரிடம் கொடுத்தார். மீண்டும் அவர், "மேலும் ஒன்று" என்று கேட்கவே, பாபா அவருக்கு இன்னுமொன்றைக் கொடுத்தார். ஆக, ஏழு லட்டுகளை சேகரித்த பிறகுதான், பாராகோட்டி திரும்பிச் சென்றார்.

ஜுரத்தால் பாதிக்கப்பட்ட மெஹர்நாத்தை அழைத்துக் கொண்டு ரமா கல்சூரி வந்தார். '**இவ்வளவு ஜுரத்துடன் சிறுவனை ஏன் அழைத்து வந்தீர்கள்?**' என்று பாபா கேட்டதற்கு, ரமா பதிலளித்தார், "அவன் உங்கள் தரிசனத்திற்காக அழுது அடம் பிடித்தான், அதனால்தான் நான் அவனை அழைத்து வர வேண்டியதாயிற்று." பாபா, சிறுவனையும் அவனது சகோதரி ஷீலாவையும் முத்தமிட்டார்; ரமாவை உடனடியாக வீட்டிற்குச் செல்லும்படி அறிவுறுத்தவே, அவர் அதைச் செய்தார்.

தரிசனத்தின் போது, பாபா எந்தக் குழந்தை வந்தாலும், அவர்களுடன் கேலியாகப் பேசி, கன்னங்களை வருடி, தலையைத் தடவி, சிலரது தொப்பிகளைக் கழற்றி மறைத்து, அவர்கள் வந்து எடுத்துச் செல்வதற்காக இனிப்புப் பண்டங்களை நீட்டினார்.

ஒரு சிறிய இடைவேளையின் போது, பாபா, கோதாவரி மாயிடம், "**எல்லோரிலும் நான் நிலைகொண்டிருக்கிறேன் என்பது நிதர்சனம்; சூரியனின் மகிமை, ஏக இறைவனான உண்மைப்பொருளின் ஏழாவது நிழல். இதன் ஒரு குறுகிய பார்வை மட்டுமே, ஒருவரை அனைத்து உணர்வுகளையும் இழக்கச் செய்ய போதுமானது. இறை ஒளி ஒன்றுதான் தொடர்ச்சியாகக் காணப்பட வேண்டிய ஒன்று; வேறு எதுவும் இல்லை**"

மாலை 5:00 மணியளவில், கோதாவரி மாய், பாபாவிடம் விடைபெற்றுச் சென்றார். மாலை 5:50 மணிக்கு வெகுஜன தரிசனம் நிறைவடைந்தது. அப்போது

பூனா பஜனைக் குழு மற்றும் பிற பணியாளர்கள் தரிசனத்திற்காக அழைக்கப்பட்டனர்; அதைத் தொடர்ந்து, ஹிந்தி மற்றும் குஜராத்தி பாடல்களுடன் ஆரத்தி நிகழ்த்திய பிறகு, விழா நிறைவுக்கு வந்தது.

நிகழ்ச்சியின் முழு நேரமும் குணாதாய் காடேக்கர் மேடையில் கற்பூரம் ஏற்றி வைத்திருந்தார். ஆரத்தியின் போது அது அணைந்துவிடவே, பாபா அதை மீண்டும் எரியவிடுமாறு கேட்டுக்கொண்டார். மண்டபத்தை விட்டு வெளியேறும் முன்பு, பாபா ஷுத்தானந்த பாரதியைத் தழுவினார். பாபா, தூக்கு நாற்காலியில் அமர்ந்ததும், அவரை மெஹர்ஜி, பெஸி மற்றும் இரண்டு பேர், பாபா, காரில் ஏறுவதற்கு உதவியாக இருந்தனர். பாபா காரில் நுழைந்ததும், நாள் முழுவதும் காணொலி படம் பிடிப்பதில் மும்முரமாக இருந்த பிரகாஷ் சாப்ரா, சில இறுதிப் பிரியாவிடை காட்சிகளை படமாக்கினார். மாலை 6:00 மணிக்கு, உரத்த, ஜெய் முழக்கங்களுக்கு மத்தியில், குமார், காக்கா, எரச் மற்றும் ஓட்டுநருடன் பாபா மீண்டும் மெஹராஸாத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

1958 பிப்ரவரி 26 காலை 8:00 மணிக்கு, பாபா மெஹராபாத் திரும்பி வந்தார். அவர் நேராக தனது அறைக்குச் சென்று, அங்கு அவர், பிரகாஷ் சாப்ராவிற்கு வழங்கிய நேரடிப் பேட்டி, காணொளி படமாக்கப்பட்டது. சாப்ரா ஒரு செல்வந்தர் குடும்பத்தைச் சேர்ந்தவர், மேலும் 'இக்கால இந்திய துறவிகள் மற்றும் முனிவர்கள்' என்ற தலைப்பில் ஒரு திரைப்படத்தை உருவாக்க திட்டமிட்டிருந்தார், அதில் அவர் மெஹராபாத்தில் காணொளி படப்பிடிப்பில் பதிவுசெய்த காட்சிகளை இணைக்க விரும்பினார். இது ஒரு வணிக முயற்சியாக இருக்கக்கூடாது, ஆனால் ஒரு குறுகிய செய்திப்படமாக இருக்கும்.

பாபா அவரிடம், **"உங்களிடம் மேலும் ஏதேனும் கேள்விகள் உள்ளனவா?"** என வினவினார்.

"பாபா, நீங்கள் ஏன் மௌனம் காக்கிறீர்கள்?" என்று சாப்ரா கேட்டார்.

**"கடவுள் ஏன் மௌனமாக இருக்கிறார் என்று மக்கள் கேள்வி எழுப்புகிறார்களா?"**

சாப்ரா பதிலளித்தார், "நான் பொருள் உலகில் இருக்கிறேன், இது குறித்து எதுவும் சொல்ல முடியாது. இது மிகவும் தெளிவற்றது."

பாபா அவரிடம், **"எனது மௌனம் பேசுவதைக் கேட்க முடியாவிடில், வார்த்தைகளால் என்ன பலன்?"** என்று கேட்டார்.

அப்போது பாபா, சாப்ராவிடம், **"உங்களுக்கு ஏதேனும் உதவி தேவையா? படப்பிடிப்பு இடையூறு எதுவுமின்றி சரியாக நடக்கிறதா? உங்களுக்குத் தேவையான அனைத்தும் உள்ளதா?"** என்று கேட்டார்.

சாப்ரா உடனே, "நாங்கள் இந்தக் காணொளி படத்தைப் பொதுமக்களுக்காகத் தயாரிக்கிறோம், எனவே நீங்கள் ஏதேனும் செய்தி வழங்குவதானால், அதை உலகிற்கு எடுத்துச் செல்லலாம். அவ்வாறு செய்வதில் நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைவோம்" என்று கூறினார்.

பாபா, சகவாசத்திற்கு முன்பாக, இந்த நோக்கத்திற்காக, மெஹராஸாத்தில் அவர் எடுத்துரைத்த செய்தி ஒன்றை எரச்சிடம் படிக்குமாறு அறிவுறுத்தினார்: **“மனிதன் தனது மகிழ்ச்சிக்காக, கடுமையாக முயற்சிப்பதானால், அவன் தன்னிடம் மிகவும் ஆக்ரோஷமாகவும், பிறரிடம் அதிக சகிப்புத்தன்மையுடன் இருக்கட்டும்.”**

45 நிமிடங்களுக்குப் பிறகு, சாப்ராவின் நேர்காணல் நிறைவடையவே, திரைப்படக் குழுவினர் அறையை விட்டு வெளியேறினர். சாப்ரா தனது ‘இக்கால இந்திய புனிதர்கள் மற்றும் முனிவர்கள்’ (MODERN INDIAN SAINTS AND SAGES) என்ற திரைப்படத்தை ஒருபோதும் முடிக்கவில்லை, இருப்பினும் அவர் இந்தியாவில் உள்ள பிற ஆளுமைகளின் காட்சிகளை சேகரித்தார். மாறாக, இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர், அவர் இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையைப் பற்றிய மற்றொரு திரைப்படத் திட்டத்தை ‘மெஸையா’ (MESSIAH) என்ற தலைப்பில் தொடங்கினார்; அதற்காக அவர் ஹாலிவுட் மற்றும் ஜெருஸலம் நகருக்குப் பயணம் செய்தார். ரோமில், ஆறாம் போப் பாலையும் (POPE PAUL VI) சந்தித்தார். ஆனால் இந்தத் திட்டமும் நிறைவேறவில்லை. மெஹராபாத்தில் வாழும் இக்கால கிறிஸ்துவை அவர் ஏற்கனவே சந்தித்தார் என்பது திரைப்படத் தயாரிப்பாளருக்குத் தெரியாது!

காலை 8:50 மணிக்கு, பாபாவின் நாற்காலி மெஹராபாத் மேல்மலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது, அதைத் தொடர்ந்து சகவாச பெண்மணிகளும் அவர்களுக்குப் பின்னால் ஆண்களும் சென்றனர். பெஸி, மெஹர்ஜி, ஹோஷங் பரூச்சா, ஆதி துபாஷ், கிருஷ்ணா நாயர், திகம்பர் காடேக்கர் மற்றும் பலர் நாற்காலியைத் தூக்கிச் செல்லும் அரிய சேவையை மாறி மாறிப் பகிர்ந்து கொண்டனர். குமார், பாபாவின் பின்னால் இருந்து குடையைப் பிடித்துக் கொண்டிருந்தார். ரயில் தண்டவாளத்தைக் கடந்ததும், ஊர்வலம் மேலே செல்வதை காணொளி படப்பிடிப்பிற்காக, சாப்ராவின் கார் முன்னால் செல்ல அனுமதிக்கவே, நாற்காலி சிறிது நேரம் கீழே வைக்கப்பட்டது. பாபா, அந்த கணத்தில் தனது முகத்தை மெல்லிய நீல நிறத் துணியால் மறைத்துக்கொண்டு, தனது உலகளாவிய ஆன்மீகப் பணியில் மூழ்கியிருப்பது போல தோற்றமளித்தார்.

முன்பு செய்தது போல, தகரக் கொட்டகையின் கீழ், பாபாவிற்கு ஒரு மெத்தை கை நாற்காலி வைக்கப்பட்டிருந்தது. முழு சகவாசக் குழுவையும் அங்கு அமர வைக்க முடியாததால், பாபா ஊன்றுகோல்களைப் பயன்படுத்தி, தோட்டத்தின் தெற்குச் சுவருக்கு அருகில் சென்று, கை நாற்காலியில் வடக்கு நோக்கி அமர்ந்திருந்தார். பெண்மணிகள் கம்பளத்தின் மீது முன்னால் அமர, ஆண்கள் வெயிலில் அவர்களுக்குப் பின்னால் அமர வேண்டியதாயிற்று. வெயிலின் தாக்கத்தைத் தணிக்க பெண்மணிகளிடம் தலையை மறைக்குமாறு பாபா கூறினார். ஆண்களிடமும் அதையே சுட்டிக்காட்டினார். ஒலிபெருக்கி ஒன்று இணைக்கப்பட்டு, ஒரு மரத்தில் தொங்கவிடப்பட்டது.

அருகிலிருந்த ஒரு சிறிய பள்ளத்தில் எவரும் தவறி விழாமல் இருக்க, பாபா, புக்காரை எழுந்து நின்று மக்களை எச்சரிக்குமாறு கூறி, **"உங்களுக்கு இந்தக் குழிதான்"** என்று வேடிக்கையாகச் சுட்டிக்காட்டினார். சிறிது நேரம் கழித்து, பாபா திடீரென மினூ கராஸின் தொப்பியை அந்தப் பள்ளத்தில் வீசினார்.

முதல் குழுவுடன் செய்ததைப் போலவே, பாபா அவர்களுக்கு, மெஹராபாத் மேல்மலையின் அமைப்புகளைப் பற்றிய சில பின்னணியை விளக்கினார்; மேலும் எதிர்கால சமாதியில் மேற்கொண்ட அவரது உபவாசங்கள் மற்றும் ஏகாந்தவாசங்களைப் பற்றி விவரித்தார். மீண்டும், அவர் வலியுறுத்தி கூறினார்: **"நான் எனது உடலைக் கைவிட்ட பின்னர், எஞ்சிய பூத உடல் இங்கே இளைப்பாறும், மேலும் இந்த 'மலை' உலகின் முக்கிய புனித ஸ்தலமாக மாறும். இந்த நாளின் முக்கியத்துவத்தை நீங்கள் அனைவரும் உணரவில்லை. 70 ஆண்டுகளுக்குப் பின்னர், இந்த இடம் மிகப் பெரும் தனித்துவம் வாய்ந்த, அனுகூலமான புனித யாத்திரை ஸ்தலமாக இருக்கும், இங்கு ஒரு பெரிய நகரம் உருவாகும்.**

**"பாபா, அவர் உளதாயிருக்கும் இவ்வுலக வாழ்வில், இந்த மலையில் அமைந்த அவரது எதிர்கால சமாதிக்கு, உங்கள் அனைவரையும் அழைத்துச் சென்றுள்ளார். இன்று நீங்கள் அடையப் பெற்றிருக்கும் இந்த தனித்துவமான பாக்கியத்தைப் பற்றி உங்களுக்கு எந்தக் கருத்தும் கிடையாது. முதல் வார சகவாசத்திலும் நான் அதையே சொன்னேன்."**

**"கடவுள் தந்தையும், தாயுமானவர்"** என்ற பாபாவின் உரையை அவர் எரச்சின் மூலம் வழங்கினார்.

அதற்குப் பிறகு, பாபாவின் எதிர்கால சமாதியைப் பார்க்காதவர்கள், அதை தரிசனம் செய்துவிட்டு, மலையிலிருந்து கீழே இறங்கி நடந்து செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டனர். அவர் முன்பு கூறிய அதே அறிவுரைகளை வழங்கினார்: **"சமாதியில் தலைவணங்கும் வேளையில், நீங்கள் அனைவரும் இரண்டு விஷயங்களை நினைவில் கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன்:**

**"முதலில், என்னை முழு மனதுடன் நேசிக்க வேண்டும். அன்பு என்பது வெளியளவிலான வெளிப்பாடு அல்ல. நீங்கள், உங்கள் பிரியமான பாபாவில், உங்களை மறக்கும் வகையில் நேசிக்க வேண்டும். உங்களால் என்னை நேசிக்க முடியாவிடில், நான் உங்களை நேசிப்பேன், நீங்கள் என் அன்பிற்குரியவராக இருப்பீர்கள்.**

**"இரண்டாவதாக, உங்களது மகிழ்ச்சி அல்லது சௌகரியங்களைப் பொருட்படுத்தாமல் பிறருக்கு மகிழ்ச்சியைக் கொடுப்பது."**

காலை 10:30 மணிக்கு, பாபா அனைத்து சகவாசக் குழுவுடன் கீழ் மெஹராபாத்திற்குத் திரும்பிச் சென்று, பிரதான கட்டிடத்திற்கு எதிரே, பாபா, ஏழு வெவ்வேறு பெண் குழுக்களுடன் புகைப்படம் எடுத்தார். பாபா பெண்மணிகளிடம் **'அவரது மேலங்கியை உறுதியாகப் பற்றிக்கொள்ளுமாறு எச்சரித்தார், ஒரு**

**துண்டு காகிதத்தில் அச்சடிக்கப்பட்ட அவரது புகைப்படத்திற்கு பதிலாக, அவர்கள் அவரை தங்கள் இதயங்களில் நிலைநிறுத்தி, பேணி பாதுகாக்க வேண்டும்**' என்று மீண்டும் வலியுறுத்தினார்.

ஒரு மணி நேரம் கழித்து, 11:30 மணிக்கு, சகவாசக் குழுவினர் பந்தலில் ஒன்றுதிரண்ட போது, பாபா இவ்வாறு கூறினார்:

**எவரும் என்னுடனான நேர்காணலை நாட வேண்டாம். நிகழ்ச்சி நிறைவடைந்ததும், அனைவரும் மதிய உணவிற்குச் சென்று, தத்தமது இல்லங்களுக்குத் திரும்பிச் செல்லும் பயணத்திற்கான ஆயத்தத்தில் ஈடுபட வேண்டும். மும்பை அல்லது மும்பை வழியாகச் செல்லும் பயணிகள் மெஹராபாத்திலிருந்து புறப்பட, சிறப்பு ரயிலில் இரண்டு தனிப் பெட்டிகள் வழங்கப்படும் என்று ரயில்வே அதிகாரிகள் நல்ல செய்தி ஒன்றைத் தெரிவித்துள்ளனர். இதனால், மும்பை அல்லது ஆந்திராவிற்குச் செல்பவர்கள், டோண்ட் ரயில் நிலைய சந்திப்பு வரை ஒன்றாகச் செல்வார்கள்; அங்கிருந்து இரண்டு வெவ்வேறு ரயில்கள் புறப்படும், ஒன்று மும்பைக்கும் மற்றொன்று விஜயவாடாவிற்கும். அனைவரும் எனது பிரசாதத்தை தத்தமது இல்லங்களுக்கு எடுத்துச் செல்ல வேண்டும்.** (ஒவ்வொரு நபருக்கும் நான்கு லட்டுகள் அடங்கிய ஒரு சிறிய பொட்டலம் வழங்கப்பட்டது; இதை முந்தைய நாள் பாபா பொது மக்களுக்கும் விநியோகித்தார்.)

**நீங்கள் அனைவரும் மகிழ்ச்சியுடன் இங்கிருந்து வெளியேற வேண்டும் என்று நான் விரும்புகிறேன். நான் என் அன்பை உங்களுக்குத் தருகிறேன். என்னை மேலும் மேலும் நேசிக்கும் உங்கள் தீர்மானத்தில் உறுதியாக இருங்கள். இசை நிகழ்ச்சி நிறைவடைந்ததும், இறுதியாக, ஆரத்தியை நிகழ்த்திய பின்பு, நான் என் அறைக்குச் செல்வேன். அங்கே வந்து, என் அறை அருகே சுற்றி நோட்டமிட வேண்டாம்.**

**பிற்பகல்** 2:00 **மணிக்கு, நான் மெஹராபாத் மேல்மலைக்குச் செல்வேன், அங்கு மெஹராஸாத்தைச் சேர்ந்த எனது பெண் மண்டலி என்னை சந்திக்க வருவார்கள். சிறப்பு ரயிலில் சகவாசக் குழுவினர் புறப்படுவதைக் காண, என்னுடன் இணையுமாறு அவர்களை நான் கேட்டுக் கொண்டேன். ரயில் புறப்படும் வேளையில் உங்கள் அனைவருக்கும் கைகளை அசைத்து பிரியாவிடை வழங்குவேன். கடந்த வார சகவாசக் குழுவிற்கு இந்த பாக்கியம் இல்லாததால் ஒரு வகையில் நீங்கள் அதிக அதிர்ஷ்டசாலிகள்.**

பாபா, "**நீங்கள் அனைவரும் மெஹராவைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறீர்களா?**" என்று கேட்டார். எந்த பதிலும் இல்லை. ஜீன் அட்ரியலின் 'அவதார்' (AVATAR) புத்தகத்தில் அவரைப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளதை பாபா அவர்களுக்கு நினைவுபடுத்தினார். அவர் மேலும் கூற விரும்பினார், ஆனால் மெஹராவின் பங்கை விளக்க போதுமான நேரம் இல்லாததால் அதைத் தொடரவில்லை.

பாபாவின் அறிவுறுத்தல்கள் இருந்தபோதிலும், காடேக்கர், பாபாவுடன் தனிப்பட்ட நேர்காணலை நாடினார், ராவ்ஸாஹேபும் அவ்வாறே செய்தார். பாபா இருவரின் மீதும் அதிருப்தியை வெளிப்படுத்தி, "**காடேக்கரின் திருகு தளர்வாக இருப்பது அவரது தவறு அல்ல!**" என்று கேலி செய்தார்.

சுபத்ரா பன்டெலு ஒரு கஜல் பாடினார், பூனா பஜனைக் குழுவினர், சில பாடல்களைத் தொடர்ந்து, இறுதியில் ஆரத்தி நிகழ்த்திய பிறகு, சகவாச நிகழ்ச்சி நிறைவுக்கு வந்தது. பாபா எழுந்து நின்று, அனைவருக்கும் கைகளைக் கூப்பி, வணக்கத்தைத் தெரிவித்தார். அவர் தூக்கு நாற்காலியில் பந்தலிலிருந்து வெளியே சென்ற வேளையில், பக்தர்கள் அவரது காரை சூழ்ந்து கொண்டனர். பலர் அழுது கொண்டிருந்தனர். தங்கள் அன்பிற்குரியவரை உடல் ரீதியாக விட்டுச் செல்வது, மிகக் கடுமையான பாதிப்பை ஏற்படுத்தியது.

சாரி இது குறித்து பின்னர் எழுதினார்:

இந்தப் பிரிவின் காட்சி, ஐந்து நாட்களும் பாபாவுடன் இருந்த பாக்கியத்தால் விளைந்த மகிழ்ச்சி, அவரது சகவாசத்தை விட்டுப் பிரிந்ததால் உருவான வருத்தம் இவற்றின் கலவையாக இருந்தது. சிலருக்கு இல்லம் மற்றும் பணிகள் குறித்த கவலைகள் ஏற்கனவே தொடங்கிவிட்டன... பலர் தங்களைத் தாங்களே அடக்கிக் கொள்ள முடியாமல், தங்கள் உணர்ச்சிகளை வெளிப்படுத்தினர்; இன்னும் சிலர் தங்கள் உணர்வுகளை அடக்க முயன்றனர். பாபா அனைவரிடமும் சிரித்து மகிழ்ச்சியாக இருக்குமாறு கேட்டுக் கொண்டார்: "**என்னை உங்களோடு எடுத்துச் செல்லுங்கள். மேலும் மேலும் என்னை நேசியுங்கள்**" என்றார்.

பாபா தனது அறைக்கு ஓய்வு எடுக்கச் சென்றார், சகவாசக் குழு மதிய உணவிற்குச் சென்றது, ஆனால் அவர்களால் அதை உண்ண முடியவில்லை.

அன்று மெஹருவின் சகோதரி நாகு மயக்கமாகி விழுந்தார். அவர் ஒரு மருத்துவராக இருந்ததால், சகவாசத்தில் பெண்மணிகளுக்கு உதவ, சக மருத்துவர் ஒருவரை ஏற்பாடு செய்திருந்தார் - ஆனால் இறுதியில் அவரே ஒரு நோயாளியாகிவிட்டார்! சிறுவயதிலிருந்தே பாபாவின் நெருங்கிய தொடர்பில் இருந்தவர், அவருடைய வழிகாட்டுதலின் கீழ் வளர்ந்தவர். பாபா அவரைத் தன்னிடம் அழைத்தபோது நாகு அழுதுகொண்டே இருந்தார்.

பிற்பகல் 2:00 மணிக்கு, பாபா மெஹராபாத் மேல்மலைக்கு காரில் அழைத்துச் செல்லப்பட்டார், அங்கு மெஹராஸாத்திலிருந்து அழைக்கப்பட்ட பெண் மண்டலியும் இருந்தனர். சிறப்பு ரயில், குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னதாகவே, மாலை 4:00 மணிக்கு வந்து, மெஹராபாத் ரயில் தண்டவாளத்தில் நிறுத்தப்பட்டது. பக்தர்களின் பெட்டி பைகள், சிறப்பு ரயிலில் நிரப்பப்பட்டு, புறப்படும் சலசலப்பில் ரயிலில் ஏறி கண்ணீர் நிறைந்த கண்களுடன் பாபாவை அங்கும் இங்கும் தேடினர்.

மெஹராபாத் மேல்மலையிலிருந்து பாபா கைகளை அசைத்தார், அதன் பிறகு, பாபா, பெண் மண்டலியுடன் காரில் கீழே இறங்கி வந்து, முழுவதுமாக நிரம்பிய ரயிலுக்கு அருகில் நின்றார். அவர் வெளியே வந்ததும் "பாபா! பாபா!

அவதார் மெஹர் பாபாவிற்கு ஜெய்!" எனும் கோஷங்கள் காதுகளை அதிரச் செய்தது. பாபா அவர்களிடமிருந்து விடைபெறத் தொடங்கியது, குளமாக நிரம்பிய அவர்களின் கண்களுக்கு ஆறுதலாக இருந்தது. சிலர் அவரை நோக்கி விரைந்து செல்ல விரும்புவதாகத் தோன்றியது, ஆனால் அவர் ரயிலில் இருந்து இறங்க வேண்டாம் என்று அவர்களுக்கு சைகையால் தெரிவித்தார். சிறிய ஏழு வண்ணக் கொடிகள், ரயில் என்ஜின்களை அலங்கரிக்க, ஒரு பெரிய கொடி ரயிலின் முன்னால் ஏற்றப்பட்டது. சகவாச கூடாரங்களில் தொங்கவிடப்பட்டிருந்த சில சிறப்பு வாசகங்கள் அடங்கிய பதாகையுடன் பாபாவின் படங்கள் ரயில் பெட்டிகளுக்கு வெளியே ஒட்டப்பட்டன.

ரயில் புறப்படும் சத்தம் கேட்டது; பாபா பொறியாளரிடம் ரயிலை முன்னோக்கி நகர்த்துமாறு சைகையால் தெரிவித்தார். உரத்த ஆரவாரங்களுக்கு மத்தியில், தெய்வீக மதுபானம் தங்கள் இதயங்களைக் கிளறவே, சகவாசக் குழு, தங்கள் இல்லங்களை நோக்கி விரைந்தது. பலர் ஓடும் ரயிலில் வாசலருகில் நின்று கொண்டிருந்தனர், பிறர் தங்கள் பிரியமான பாபாவின் ஒரு கடைசி பார்வைக்காக ஜன்னல்களில் சாய்ந்த வண்ணம் அமர்ந்திருந்தனர். பாபா கைகளை அசைத்து, "**நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன்; என்னையும் உங்களோடு எடுத்துச் செல்லுங்கள்**" என்று சைகையால் தெரிவித்தார்.

ரயில் கண்களிலிருந்து மறைந்தபோது, பாபா, மெஹரா மற்றும் பிற பெண்மணிகளின் பக்கம் திரும்பி, "**அவர்கள் என்னிடமிருந்து ஒரு தீப்பொறியை எடுத்துச் செல்கிறார்கள், என் அன்பை எங்கும் பரப்புவார்கள்!**" என்றார்.

சகவாசக் குழுவில் ஒரு சிலர் இரவு நேர ரயில்களில் பயணித்தனர், மேலும் சிலர் மறுநாள் காலையில் புறப்பட்டனர்.

காலம் ஆழ்ந்த தாக்கத்தின் விளைவுகளுக்கு உட்படுத்தப்பட்டது: "இந்த அவதார காலகட்டத்தில், 1955 மற்றும் 1958 ஆண்டுகள், எப்பொழுதும் குறிப்பிடத்தக்க, தனித்துவமான இடத்தைக் கொண்டிருக்கும், ஏனெனில் அப்போது நடைபெற்ற சகவாச நிகழ்ச்சிகளின் போது, பல்வேறு பாகங்களைச் சேர்ந்த பறவைகளுக்கு, மெஹராபாத் தோட்டத்தில் கூடு கட்டி, பாடி, பரவசமாகக் காலத்தைக் கழிக்கும் வாய்ப்பு கிடைத்தது. தங்கள் பிரியமான இறைவனிடம் நெருங்கி வந்து, ஐந்து நாட்கள் அவர் அருகில் இருந்ததால், திரும்பிச் சென்று, தங்கள் சொந்த தோட்டங்களை அழகுபடுத்தும் விதத்தில், அவருடைய இறை கீதம் பரிசாக வழங்கப்பட்டது."



மேல் மெஹராபாத் **- 26** பிப்ரவரி **1958** (UPPERER MEHERABAD - 26 FEBRUARY 1958)



மெஹர் பாபா - பூனா **1958**

# மஹாபலேஷ்வர் & பூனா
(**Mahabaleshwar & Poona**)

1958 பிப்ரவரி 27 வியாழன் காலையில், சகவாசத்தின் போது தன்னார்வ தொண்டு செய்து, இன்னமும் இல்லம் செல்லாமல், அங்கேயே இருந்த அன்பர்களை சந்திப்பதற்காக, பாபா, மெஹராபாத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். பாபா அவர்களை அரவணைத்து, அவர்களின் முயற்சிகளைப் பாராட்டி, மெஹராஸாத்தில் சில தினங்கள் தங்குவதற்கு அவர் அனுமதித்த புக்கார், குமார் இருவரையும் தவிர, பிற அனைவரையும் தங்கள் இல்லங்களுக்குத் திரும்புமாறு அறிவுறுத்தினார். அதற்குப் பிறகு பாபா, கூலிக்கு அமர்த்தப்பட்ட அரன்காவ்ம் தொழிலாளர்களை சந்தித்து, அவர்களின் முயற்சிகளுக்கு, தனது முழுப் பாராட்டுகளையும் தெரிவித்தார்.

சகவாச நிகழ்ச்சிகளின் போது, பாபு காம்ப்ளே, பாபாவின் உணவை மெஹராபாத்தில் தயார் செய்தார்; ஆனால் ஒவ்வொரு நாளும் பாபா, அவரைக் கேலி செய்து, அவர் தயார் செய்த உணவை விமர்சித்து, கண்ணீர் சிந்த வைத்தார். சகவாசத்தின் முடிவில் பாபா, எரச்சிடம், "**இந்த சகவாசத்தை அனுபவிக்காதவர்கள் எவரும் இருக்க மாட்டார்கள்**" என்று குறிப்பிட்ட வேளையில், எரச் இவ்வாறு பதிலளித்தார், "அது உண்மைதான் பாபா. ஆனால் அனுதினமும் கண்ணீர் சிந்தும் ஒருவரைத் தவிர, அனைவரும் மகிழ்ச்சியுடன் வெளியேறினர் - அவர்தான் பாபு. அப்பாவி தோழர், உணவு தயார் செய்வதில் தனது வரம்பை மீறும் அளவுக்கு, தன்னால் இயன்ற அனைத்தையும் செய்தார். ஆனால் அவர் ஒவ்வொரு நாளும் பாபாவால் கண்டிக்கப்பட்டார்." பாபா எந்த பதிலும் வழங்காமல் 27ஆம் தேதி அவர் பாபுவை சந்தித்தபோது, அவரது அன்பான உழைப்பைப் பாராட்டி அவரைத் தழுவினார் - இது அவர் சிந்திய அனைத்து கண்ணீருக்கும் ஈடாக அமைந்தது!

பாபா, எரச்சிடம் விளக்கினார், "**நான் அவரை அனுதினமும் புகழ்ந்திருந்தால், அவர் எனது தலையில் அமர்ந்திருப்பார். இன்று அவர் அனுபவிக்கும் ஆனந்தத்தை அவர் அடைந்திருக்க மாட்டார். எனது தொடர்ச்சியான தொல்லைகளால், அவர் தனது பணியில் அதிக கவனம் செலுத்தினார், எனது உணவைத் தயார் செய்வதில் அதீத கவனமாக இருந்தார். அதனால்தான் இன்று அவரால் மிகவும் மகிழ்ச்சியாக உணர முடிந்தது!**"

கைக்கோபாத், பாவ் கல்சூரி, ஜங்க்ளே, ஜமாதார் ஆகியோரின் குடும்பங்களை சந்தித்த பின்னர், எரச், அலோபா, புக்கார் ஆகியோருடன் பாபா, அன்று மதியம் 2:00 மணிக்கு மெஹராஸாத் புறப்பட்டுச் சென்றார்.

'அவதார் மெஹர்' (AVATAR MEHER) என்ற தெலுங்கு இதழின் ஆசிரியர், பாபாவிடம் ஒரு செய்தியைக் வழங்குமாறு கேட்டுக்கொண்ட வேளையில், அவர் இவ்வாறு எடுத்துரைத்தார்: "**ஒரே வார்த்தையில் எனது செய்தி, அதுவே 'அன்பு'.**"

பிப்ரவரி 28 காலை, தீனா, பெர்விஸ் தலாட்டி இருவரும் கர்ஷெத்தின் தகனம் செய்யப்பட்ட சாம்பலுடன் மெஹராஸாத்திற்கு வந்தனர். பாபா அந்தக் கலசத்தை நீண்ட கணங்கள் மடியில் வைத்திருந்து, பின்னர் அதை எரச்சிடம் கொடுத்தார். தீனா, சளியால் அவதிப்பட்டதால், பாபா அவரை சற்று தூரத்தில் அமரச் சொன்னார். சிறிது நேரத்தில் இருவரும் அங்கிருந்து புறப்பட்டு மும்பைக்குச் சென்றனர்.

மார்ச் 1 மாலை 3:00 மணிக்கு, பாபா மெஹராபாத்திற்குச் சென்று, கீழ் மெஹராபாத்தில் அலி ஷாவின் கல்லறைக்கு அடுத்ததாக தோண்டப்பட்ட மற்றுமொரு கல்லறையில் அவர், கர்ஷெத்தின் கலசத்தை வைத்தார். டாக்டர் நீலுவின் அஸ்தி அதே நாளில், கர்ஷெத்தின் கல்லறையின் மறுபுறத்தில் புதைக்கப்பட்டது.

6ஆம் தேதி பாபா பெண் மண்டலியிடம் கூறினார், “**நான் எனது மௌனத்தைக் கலைக்கும்போது, உலகம் முழுவதிலும் அனைத்தும் சீராகிவிடும். மிகப்பெரிய உந்துதலால் உலகம் ‘முன்னோக்கி’த் தள்ளப்படும், எல்லாவற்றிலும் அமைதி நிலைபெறும்! நான் எனது மௌனத்தை அடுத்த பதினாறு மாதங்களில் கைவிடுவேன்.**”

அமெரிக்கா, ஆஸ்திரேலியா இரண்டு நாடுகளிலும் பாபாவின் சகவாசத்திற்கான ஏற்பாடுகள் இப்போது தொடங்கப்பட்டன. இது தொடர்பான கடிதப் பரிமாற்றம், மெஹராஸாத்தில் தினசரி நடந்து வந்தது. பாபாவின் இடுப்புப் பாகத்தில் வலி தொடர்ந்தது; சகவாசக் குழுக்களுடன் பல நாட்கள் அமர்ந்திருந்ததால் சந்தேகத்திற்கு இடமின்றி வலி அதிகரித்தது. 1958 மார்ச் 4ஆம் தேதி, ஆதி சீனியர் பதிவு செய்த தனது நாட்குறிப்பில் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்: “பாபாவின் துன்பம் தொடர்கிறது, இன்று அது மிகையாகத் தெரிகிறது.”

1956இல் மேற்கொண்ட மேற்கத்திய பயணத்தைப் போலல்லாமல், திட்டமிடப்பட்ட பதினைந்து நாட்கள் சகவாசத்தில் முழுமையாகப் பங்கெடுக்க முடியாதவர்கள், குறைந்தபட்சம் ஒரு வாரத்திற்கு வருகை தர வேண்டும் என்று மேற்கத்திய அன்பர்களுக்கு சுற்றறிக்கைகள் மூலம் தெரிவிக்கப்பட்டது.

‘**இந்த 1958 சகவாசத்தின் போது, விளம்பரம், நிருபர்கள் அல்லது தொலைக்காட்சிகள், ஒலிப் பதிவுகள் எதையும் அனுமதிக்கக்கூடாது**’ என்று பாபா வலியுறுத்துகிறார். ‘**காணொளி மற்றும் திரைப்படங்கள் எடுக்கப்படலாம், ஆனால் பாபா அன்பர்களால் மட்டுமே; வெளியுலகக் கலைஞர்கள் மற்றும் ‘பார்வையாளர்கள்’ அனுமதிக்கப்படமாட்டாது; சுருக்கமாகச் சொன்னால், சகவாசத்தின் முழு அர்த்தத்தில், அன்பர்கள் மற்றும் அன்பிற்குரியவருக்கு இடையே நிகழும் உண்மையான சகவாசம். மேலும், நியூயார்க்கிலிருந்து மர்டில் பீச், அல்லது மர்டில் பீச்சிலிருந்து ஸான்ஃபிரான்சிஸ்கோ, அல்லது அவர் ஆஸ்திரேலியாவிற்குச் செல்லும் போது, அவருடன் ஒரே விமானத்தில் எவரும் பயணம் செய்யக்கூடாது.**’

மார்ச் 10ஆம் நாள், மெஹர்ராஸாத்தில் தங்கவைக்கப்பட்ட இளம் மஸ்தைப் பார்க்க, பாபா, பெண்மணிகளை அழைத்து வந்தார்; **"அவர் தனது பௌதீக உடலையும் சுற்றுப்புற சூழலையும் முற்றிலும் மறந்த நிலையில் உள்ளார்"** என்று பாபா விளக்கினார். **"உண்ணுதல், அருந்துதல் போன்ற அவரது வெளியளவிலான செய்கைகள், நித்திரையில் நடமாடும் ஒருவரைப் போலவே நிகழ்கின்றன. பிறர், அவர் அதை உணர்வுப்பூர்வமாகச் செய்வதாகப் பார்த்தாலும், அவர் அறியாமலேயே தன்னிச்சையாகச் செய்கிறார்."**

பாபா, மஸ்தின் அறைக்குச் செல்லும் போதெல்லாம், மஸ்த் தனது வழக்கமான சாய்ந்த நிலையிலிருந்து நிமிர்ந்து, நேராக அமர்ந்திருப்பதை மண்டலி கவனிப்பது வழக்கம். முஸ்லீமாக இருந்ததால் அவரது தொழுகையின் பழக்கம் தொடர்ந்து இருந்து வந்தது. நாளின் சில நேரங்களில், மஸ்த் தனது முகத்தையும் கைகளையும் கற்பனையினாலான குழாய் நீரில் 'கழுவி', தலைதாழ்த்தி, பிரார்த்தனையில் ஈடுபடுவது அன்றாட நிகழ்வு.

மார்ச் 13 வியாழன் அன்று பாபா, மெஹர்ஜியின் காரில் எரச், பாவ் கல்சூரி, ஸவக் ஆகியோருடன் தனது மேற்கத்திய பயணத்திற்கான விஸாவைப் பெறுவதற்காக மும்பைக்குச் சென்று, அவர்கள் ஆஷியானாவில் தங்கினர்.

ஆதி & ரோடா துபாஷ் இருவரும் அப்போது மும்பையில் இருந்தனர். அவர்களது பதினோரு வயது சிறுவன் மேர்வான், சிறுவயது காரணமாக சகவாச நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள முடியவில்லை; எனவே, பாபா சிறுவனை ஆஷியானாவில் பார்த்தார். ஏற்கனவே அறிவுறுத்தியதற்கு இணங்க, தினமும் பிற்பகல் 4:00 மணிக்கு, நாகு ஆஷியானாவிற்கு வந்தார்.

பாபா மும்பையில் தங்கியிருந்தபோது, அவரும் மண்டலியும் ஒரு திரையரங்கத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர்; அங்கு அவர்களுக்கு, சாப்ரா மெஹராபாத்தில் படமாக்கிய சகவாச நிகழ்ச்சியின் காணொளி திரைப்படம் காண்பிக்கப்பட்டது. காட்சிகள் நன்றாகப் படமாக்கப்பட்டதைக் கண்டு, பாபா மகிழ்ச்சியடைந்தார். அமெரிக்க தூதரகத்திலிருந்து விஸா அடையப் பெற்றதும், பாபாவும், மண்டலியும் மார்ச் 15ஆம் தேதி மெஹர்ராஸாத் திரும்பிச் சென்றனர்.

மூன்று நாட்களுக்குப் பிறகு மார்ச் 18 அன்று, மெஹர்ராஸாத்தில் பாபாவை சந்திக்க வந்த பல 'புதியவர்கள்', அவருக்கு அறிமுகப்படுத்தப்பட்ட அந்த வேளையில், பாபா இவ்வாறு அவதானித்தார்:

**ஒரு விதிமுறையாக, அறிமுகம் என்பது ஒருவருக்கொருவர் அறியாத நபர்களிடையே தேவைப்படும் ஒன்று. அக்கறையும், கவலையும் கொண்டுள்ள நபர்களிடையே நிகழும் இதயபூர்வமான அன்பின் கொடுக்கல் வாங்கலுக்கு, அத்தகைய அறிமுகம் இன்றியமையாததாக உணரப்படுவதில்லை, ஏனெனில் இதயத்திற்கு அறிமுகம் தேவையில்லை. முன்பின் அறியாதவர்களிடையே கூட, ஒரு பரஸ்பர தொடர்பு உருவாகவும் வாய்ப்புள்ளது, அதைத் தொடர்ந்து ஒருவரையொருவர் ஏற்கனவே**

**அறிந்தவர்கள் போன்ற உணர்வையும், அங்கீகாரம் மற்றும் நெருக்கத்தையும் அது உருவாக்கும். இந்த உணர்வு முந்தைய வாழ்க்கையில் அவர்களின் கடந்தகால மனப்படிவங்களின் தொடர்பை அடிப்படையாகக் கொண்டது.**

**யார் ஒருவரையும் எனக்கு அறிமுகம் செய்ய வேண்டிய தேவையில்லை, ஏனெனில் எவரும் எனக்கு அந்நியர்கள் அல்ல. இருப்பினும், நான் பெரும்பாலான மக்களுக்கு அந்நியன்; எனது முன்னிலையில் வருபவர்களும், இருப்பவர்களும் அறிமுகம் இல்லாமல் அவ்வாறு செய்வதில்லை. உண்மையில், அவர்கள் பல அறிமுகங்களுடன் வந்துள்ளனர் - இது அவர்களின் கடந்தகால மனப்படிவங்கள், முந்தைய வாழ்க்கையிலிருந்து என்னுடன் அவர்களை இணைக்கிறது. இந்த 'அறிமுகங்கள்' அனைத்தும் இந்த நேரத்தில் எனக்கு அவர்களின் அறிமுகமாகும்.**

1958 மார்ச் 19 அன்று, பெண் மண்டலியுடன், பாபா பூனாவிற்குச் சென்றபோது, தாதி கேரவாலா, கணேஷ்கிந்த் தோட்டத்தில், அவர்களுக்கு மீண்டும் தங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார். எரச், பாவ் கல்சூரி, ஸவக் மூவரும் அவர்களுடன் இணைந்தனர்.

ஆந்திராவைச் சேர்ந்த பாஸ்கர ராஜு ஒரு கலை வல்லுனர்; ஏற்கனவே குறிப்பிட்டபடி, அவரும் அவரது சகோதரரும் 'கடவுள் பேசுகிறார்' (GOD SPEAKS) புத்தகத்தின் கருத்தைக் குறித்த விளக்கப்படத்தை உருவாக்கி, மெஹராபாத்தில் பிப்ரவரி மாதம் நிகழ்ந்த சகவாசத்தின் போது, பாபாவின் பாதங்களில் அர்ப்பணித்தனர். கூட்டத்திற்குப் பிறகு, பாபா அந்த விளக்கப்படத்தை மெஹராஸாத்திற்கு எடுத்துச் சென்று, மண்டலி மண்டபத்தில் சுவரில் தொங்கவிட்டார். அதை முழுமையாக ஆராய்ந்து, தேவைப்பட்டால் திருத்தங்கள் செய்யலாம் என்ற நோக்கத்தில், அன்று காலை பூனா புறப்படுவதற்கு முன்னர், அவர் எரச்சிடம் விளக்கப்படத்தை உடன் எடுத்துச் செல்லுமாறு அறிவுறுத்தினார்.

பூனா அன்பர்கள் மார்ச் 20 அன்று காலை கணேஷ்கிந்த் வந்து, பாபா முன்னிலையில் பஜனை நிகழ்ச்சியை நடத்தினர்.

கெய்மாய் ஜெஸவாலாவின் சகோதரி பானுமாஸி கேரவாலாவிற்கு தாதி மற்றும் ஸாம் என்ற இரு புதல்வர்கள் இருந்தனர். இவர்களது முதல் உறவினர் ரோஷன், அஹமதுநகரில் ஸட்டா குடும்பத்தைச் சேர்ந்தவர். ரோஷனின் சகோதரன், நவல் மற்றும் சகோதரி தூன் ஆகியோர் திசுக்களின் சிதைவால் இயல்பாக நடப்பது சிரமமாக இருந்தது; ஆனால், ரோஷன் இந்த நோயால் பாதிக்கப்படமாட்டார் என்று பாபா உறுதியளித்தார்.

ஒருமுறை, ரோஷன் குழந்தையாக இருந்தபோது, பாபா, அவளை பானுமாஸியின் மடியில் அமர வைத்தார். இந்தச் செயலின் முக்கியத்துவத்தை அப்போது எவரும் புரிந்து கொள்ளவில்லை; ஆனால் பல ஆண்டுகளுக்குப் பின்னர், 1958 மார்ச் 21 அன்று பூனாவில், பாபாவின் விருப்பத்துடன், ரோஷன்,

ஸாம் கேரவாலா இருவரும் திருமணம் செய்து கொண்டனர். அன்று, பாபா, அவரது மண்டலி மற்றும் பூனா அன்பர்கள் பலருக்கு, திருமணக் குழுவினரால் ஆடம்பர உணவு வழங்கப்பட்டது. அடுத்த நாள், தம்பதிகள் பாபாவின் ஆசீர்வாதத்தை நாடி கணேஷ்கிந்திற்கு வந்தனர்.

இதற்கிடையில், மேற்கத்திய நாடுகளுக்குப் பயணம் மேற்கொள்ளுவதற்கு முன்பு, பாபா கோடையின் வெப்பத்திலிருந்து விடுபட்டு, மெஹராபாத்தில் நடந்த சகவாசத்தைத் தொடர்ந்து, ஓய்வெடுக்க விரும்பி, பாபாவிற்கும் பெண்மணிகளுக்கும் மஹாபலேஷ்வரில் ஒரு பொருத்தமான வில்லாவைக் கண்டுபிடிக்குமாறு கோஹியார் சத்தாராவாலா கேட்டுக்கொள்ளப்பட்டார். உயரமான மலை ஒன்றின் மேல் கட்டப்பட்ட, 'ஷாப்பூர் ஹால்' (SHAPOOR HALL) என்ற பங்களா ஒன்றை அவர் வாடகைக்கு எடுத்தார். மெஹரா, மணி, மெஹரு, கோஹெர், ரானோ ஆகியோருடன் பாபா, மார்ச் 23 அன்று, மஹாபலேஷ்வருக்கு அழைத்துச் செல்லப்பட்டார். ஆண் மண்டலி குழுவில் எரச், பாவ் கல்சூரி, கைக்கோபாத், ஸவக் ஆகியோரும் மஹாபலேஷ்வருக்குச் செல்ல வேண்டியிருந்தது. மஹாபலேஷ்வருக்கு அவர்களைக் காரில் அழைத்துச் செல்ல, ஆதி அஹமதுநகரிலிருந்து பூனாவிற்கு வந்திருந்தார், மேலும் பெண் மண்டலிக்கு உதவியாக மெஹராஸாத்தைச் சேர்ந்த பணிப்பெண்களில் ஒருவரான ரக்மாவும் அழைத்துச் செல்லப்பட்டார்.

கோஹியாருக்கு எழுதிய கடிதத்தில் பாபாவின் வருகையைக் குறித்து இரகசியம் காக்குமாறு அவர் அறிவுறுத்தப்பட்டார். ஆனால், கோஹியார் கவனக்குறைவாக மேசை மீது வைத்த கடிதத்தை, அவருடைய மனைவி ரதி தற்செயலாகப் படிக்க நேர்ந்தது. பாபா வருவதை நினைத்து ரதி உற்சாகமாக இருந்தாலும், பாபாவின் வருகைக்குத் தேவையான பொருட்களை எடுத்துவர, ஒரு சேமிப்பு அறைக்கு நடந்து சென்றபோது, அவருடைய முழங்காலில் மோசமான முறிவும், நகர்வும் ஏற்பட்டது. இந்த விஷயம் பாபாவிற்குத் தெரிவிக்கப்பட்டதும், அவர் கோஹியாரைக் கடிந்து கொண்டார். ஆனால் ரதியிடம் '**கவலைப் படவேண்டாம், பாபாவின் துன்பத்தில் அவரும் பங்கெடுத்துக் கொள்கிறார்**' என்ற தகவலை வழங்குமாறு அறிவுறுத்தினார். பாபா, கோஹியாரின் மனைவி ரதியைப் பார்ப்பதற்காக, ரிப்பனுக்கு (RIPON) ஒரு விசேஷ பயணத்தை மேற்கொண்டார், மேலும் அவர் நன்றாக குணமடைந்ததும், ஷாப்பூர் ஹாலுக்கு வர அனுமதித்தார்.

24ஆம் தேதி, பாபா கீழ்வரும் செய்தியை ஆதி சீனியருக்கு அனுப்புமாறு எரச்சிடம் கூறினார்:

**கார்மேகம் மற்றும் எனது 'எச்சரிக்கை, நினைவூட்டல்' குறித்து சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து உத்தரவுகளையும், என்னை நேசிக்கும் அனைவரும் 1958, ஜூலை 10 வரை உண்மையுடன் கடைப்பிடித்து, எனது மேலங்கியை உறுதியாகப் பற்றிக்கொள்ள வேண்டும் என்று நான்**

**விரும்புகிறேன். இருப்பினும், திருமணமான தம்பதிகளுக்கு, பிரம்மச்சரியம் கடைப்பிடிக்கும் தடை உத்தரவிலிருந்து விலக்களிக்கிறேன்.**

பாபா, ஒரு மாதத்திற்கும் மேலாக மஹாபலேஷ்வரில் தங்கியிருந்த இந்த நேரத்தில், அவரது அமெரிக்கா மற்றும் ஆஸ்திரேலியா பயணத்திற்கான ஏற்பாடுகள் தொடர்ந்தன. ஏற்கனவே குறிப்பிட்டபடி, ஆண் மண்டலியில் எரச், பாவ் கல்சூரி, கைக்கோபாத், ஸவக் நால்வரும் பாபாவுடன் மஹாபலேஷ்வரில் இருந்தனர்; ஆனால் ஜால்பாய், நரிமன், மெஹர்ஜி, ஜிம் மிஸ்திரி, ஹோஷங் பரூச்சா, பெஹராம் தாதாசாஞ்சி ஆகியோர் மார்ச் மாத இறுதியில் மூன்று நாட்களுக்காக அழைக்கப்பட்டனர். ரிப்பன் ஹோட்டலில் சத்தாராவாலா குடும்பத்துடன் தங்கிய அவர்கள், பாபாவுடன் சீட்டாட்டம், சதுரங்கம் போன்ற விளையாட்டுகளில் பொழுதைக் கழித்தனர்.

அர்னவாஸின் சகோதரர் ஹோமா தாதாசாஞ்சியும் இந்த நேரத்தில் மஹாபலேஷ்வரில் இருந்தார், அவர் காலைப் பொழுதில் பெண் மண்டலியை நெடு தூர கார் பயணத்தில் அழைத்துச் சென்றார். சகவாச நிகழ்ச்சிக்காக லண்டனிலிருந்து ஹோமா அழைக்கப்பட்டிருந்தார், வெளியளவில் அவர் மும்பையில் தங்க விரும்புவதாகக் கூறினாலும், உண்மையில் அவர் லண்டன் திரும்பிச் சென்று அங்கு வாழ விரும்பினார். மறுபுறம், பாபா, அவர் லண்டனுக்குத் திரும்பிச் செல்வதில் வெளியளவில் ஆதரவாக இருப்பதாகத் தோன்றினாலும், உண்மையில் அவர் மும்பையில் இருப்பதை விரும்பினார். எனவே பாபா இங்கிலாந்துக்குத் திரும்பும்படி வற்புறுத்திக் கொண்டிருந்த வேளையில், மும்பையில் வாழ விருப்பம் தெரிவித்ததால், ஹோமாவின் மனம் இருதலைக் கொள்ளி எறும்பு போல் அலைமோதத் தொடங்கியது.

ஹோமா உண்மையில் இந்தியாவில் வாழ விரும்பினாலும், மஹாபலேஷ்வரில் பாபா, நல்ல மனநிலையில் இல்லாதபோது ஒரு நாள், இந்த மர்மம் வெளிவந்தது. அவர் திடீரென ஹோமாவிடம், **“நீங்கள் லண்டன் செல்வதா வேண்டாமா என்பதை இன்று நான் முடிவு செய்கிறேன். பெண்மணிகளை காரில் ‘ஆர்தர்ஸ் முனை’க்கு** (ARTHUR’S POINT) **அழைத்துச் சென்று, அதைப் பார்வையிடுங்கள்”** என்று கூறினார்.

அதன்படி ஹோமா அங்குச் சென்று, சாலையோரத்தில் நின்று காட்சியை ரசித்துக் கொண்டே, பாபா என்ன முடிவு எடுப்பார் என்று யோசித்துக் கொண்டிருந்த வேளையில், திடீரென, அந்த வழியாகச் சென்ற ஒரு பேருந்து அவரைக் கடந்தபோது, பெட்ரோல் நிரப்பப்பட்ட ஒரு கனமான பீப்பாய் கீழே விழுந்தது. பீப்பாய் ரோட்டில் உருண்டு சென்று, மலையிலிருந்து கீழே ஆழத்தில் விழுந்ததில் ஹோமாவிடமிருந்து அங்குல அளவு இடைவெளியில் நகர்ந்து சென்றதால் அவர் காப்பாற்றப்பட்டார். பீப்பாய் தாக்கியிருந்தால், நிச்சயம் குன்றின் மேல் விழுந்து மரணத்தை சந்தித்திருப்பார் என்று ஹோமாவிற்குத் தெரியும். அவர் லண்டனுக்குத் திரும்புவதற்கான தனது முடிவைக் கைவிடுவதற்கான அடையாளமாக இதை எடுத்துக் கொண்டார்; ஹோமா

மீண்டும் ஷாப்பூர் ஹாலுக்கு வந்ததும், பாபாவிடம், தான் மும்பையில் இருக்க முடிவு செய்ததாக அவருக்குத் தெரிவித்தார்.

ஜபல்பூர் நகரிலிருந்து அமியா குமார் ஹஸ்ரா மற்றும் ராம் லக்கன் ஷர்மா ஆகியோரை அழைத்து, இருவருக்கும் தகவல் அனுப்பப்பட்டது. ஹஸ்ரா, 'தனது அகந்தையைத் தாழ்த்திக் கொள்ளும்' முயற்சியில், கல்லூரிப் பேராசிரியராக இருந்த பணியைத் துறந்து, ஜபல்பூரிலிருந்து பதின்மூன்று மைல் தொலைவில் அமைந்த, பேடகாட் (BHEDAGHAT) குறுநகரத்தில் சுண்ணாம்புக் கல் செதுக்கும் தொழிலாளியாகப் பணியாற்றிக் கொண்டிருந்தார்.

ஹஸ்ரா கல்லூரியை விட்டு வெளியேறியது அவரது பெற்றோருக்கு மிகுந்த துயரத்தை ஏற்படுத்தியது. முதுகலைப் பட்டம் பெற்ற பின்னரும், ஷர்மாவும் அவ்வாறே செய்ய நினைத்தார், எனவே பாபா இருவரையும் மஹாபலேஷ்வருக்கு அழைத்து, '**முட்டாள்தனமாக நடந்து கொள்ள வேண்டாம்**' என்று கூறி, அவர்களின் தவறான போக்கைச் சுட்டிக்காட்டினார். மாறாக, '**ஆன்மீகத்தின் சாரமாக அவர் வலியுறுத்தி கூறியதற்குக் கீழ்ப்படிய முயற்சிக்க வேண்டும்**' என்றார். பாபா அவர்களிடம், "**இங்கிருந்து சற்றுத் தொலைவில் ஒரு பெண் தொழுநோயாளி இருக்கிறார். நான் உங்களிடம் அங்குச் சென்று அவருடன் உடலுறவு கொள்ளச் சொன்னால், நீங்கள் செய்வீர்களா?**" என வினவினார்.

ஹஸ்ரா முகம் சிவந்து, தலை குனிந்து, அவரால் முடியாது என்றார். ஆனால், ஷர்மா, "ஆம், நான் உங்களுக்குக் கீழ்ப்படிவேன். ஆனால் நான் அவ்வாறு செய்வதை நீங்கள் விரும்ப மாட்டீர்கள் என்று எனக்குத் தெரியும்" என்று பதிலளித்தார்.

பாபா சிரித்துக்கொண்டே, "**ஷர்மா, நீங்கள் அதி புத்திசாலி**" என்று குறிப்பிட்டார்.

அதைத் தொடர்ந்து, பாபா, ஹஸ்ராவிடம், அவரது பேராசிரியர் பதவியை மீண்டும் ஏற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்தினார், மேலும் ஷர்மாவிற்கு அவரது திருமண விஷயத்தில் அறிவுரை வழங்கினார். இருவரும் ஜபல்பூருக்குத் திரும்பிச் சென்றதும், ஹஸ்ரா ஒரு கல்லூரியில் ஆங்கிலப் பேராசிரியராகப் பணியில் இணைந்த அதே வேளையில், ஷர்மா அவரது ஆராய்ச்சியைத் தொடந்தார்.

மஹாபலேஷ்வரில், பாபா பெரும்பாலும் ஷாப்பூர் மண்டபத்தின் வராண்டாவில் ஒரு நாற்காலியில் அமர்ந்து, இயற்கைக் காட்சியை ரசித்து, மண்டலி மற்றும் பார்வையாளர்களுடன் சாவகாசமாகப் பொழுதைக் கழித்தார். நரிமன் தனது காரை பாபாவின் உபயோகத்திற்காக அனுப்பியிருந்ததால், எப்போதேனும் பாபா ஆண் அல்லது பெண் மண்டலியுடன் காரில் வெளியே செல்வது வழக்கம். 1958 மார்ச் 28 அன்று பாபா, அவர்களின் பங்களாவிலிருந்து பார்வையின் எல்லையில் இருந்த ஷிவாஜியின் மலை மற்றும் கோட்டையான பிரதாப்கருக்கு (PRATAPGARH) மண்டலியுடன் அழைத்துச் செல்லப்பட்டார்.

சில நாட்களாக வானிலை மேகமூட்டமாகவும், குளிர்ச்சியாகவும் மாறியது, பலத்த காற்று வீசியது. குளிர்ந்த தட்பவெப்பம் பாபாவின் இடுப்புப் பகுதியில் அவ்வப்போது ஆதீத வலியை ஏற்படுத்தியது. இந்த நேரத்தில் பாபாவின் உடல்நிலை சீராக இல்லை. உடல் நலம் குன்றி இருந்ததால், மிகக் குறைவாக, ஒரு நாளைக்கு ஒருமுறை மட்டுமே, அதுவும் சிரமப்பட்டு உணவு உண்டார். டாக்டர் தேஷ்முக் மஹாபலேஷ்வருக்கு வந்து, பாபாவிடம் மிகையாக ஊட்டமளிக்கும் உணவை உண்ணும்படி வேண்டினார். பாபா இறுதியாக, "**நான் என்ன உண்ண வேண்டும் என்பதை நீங்களே சொல்லுங்கள்**!" என்றார்.

அதற்கு பதிலளித்த தேஷ்முக், "நான் விரிவாக பரிசீலித்து நாளை சொல்கிறேன்" என்றார். அன்றிரவு, தேஷ்முக், பாபாவிற்கான உணவுப் பட்டியலை வரைவதில் பல மணி நேரத்தைச் செலவிட்டார். அந்தப் பட்டியல் பின்வருமாறு:

- காலை 6:00 மணி - காலை உணவு: இருபுறமும் வெண்ணெய் தடவி இரண்டு ரொட்டித் துண்டுகள், இரண்டு வாழைப்பழங்கள், இரண்டு ஆப்பிள்கள், ஒரு டம்பளர் பால் மற்றும் இரண்டு கப் தேநீர்
- காலை 8:00 மணி. - ஒரு டம்ளர் மாதுளை ரசம்
- காலை 10:00 மணி. - ஒரு கப் சூப்
- காலை 11:00 மணி - மதிய உணவு: பருப்பு மற்றும் சாதம், இரண்டு சப்பாத்திகள், இரண்டு காய்கறி உணவுகள், ஒரு தக்காளி, தயிர், அப்பளம் மற்றும் பழம்
- மதியம் 2:00 மணி - இரண்டு கப் தேநீர், நான்கு பிஸ்கட், இரண்டு வாழைப்பழங்கள், இரண்டு ஆப்பிள்கள், கேக் மற்றும் மாவு பண்டம்.
- மாலை 6:00 மணி - இரவு உணவு: பருப்பு மற்றும் சாதம், சப்பாத்தி, காய்கறிகள், பழத் துண்டுகளின் கலவை (சாலட்)
- இரவு 8:00 மணி - ஒரு டம்ளர் பால் மற்றும் பழம்.

அடுத்த நாள், தேஷ்முக், பாபாவிடம் உணவுப் பட்டியலைக் காட்டவே, அவர் மனம் விட்டுச் சிரித்தார். இருப்பினும், ஒவ்வொரு நாளும் தேஷ்முக், பாபாவிடம் இன்னும் கணிசமான ஒன்றைப் பின்பற்ற வேண்டும் என்று வற்புறுத்தவே, பாபா இவ்வாறு கருத்துத் தெரிவித்தார், "**ஒரு ஒலிம்பிக் விளையாட்டு வீரர் கூட, நீங்கள் பரிந்துரைக்கும் அளவுக்கு உண்பதற்குக் கடினமான ஒரு உணவுப் பட்டியலை உருவாக்கியுள்ளீர்கள்**!"

இருப்பினும் தேஷ்முக் வாதாடினார், "ஆனால் நீங்கள் அத்தகைய உணவுகளை உண்பது உங்கள் ஆரோக்கியத்திற்கு இன்றியமையாதது."

அப்போது பாபா, "**இன்று காலை இரண்டு பக்கமும் வெண்ணெய் தடவிய இரண்டு ரொட்டித் துண்டுகளை வைத்திருந்தேன். உலகில் எவரும் இப்படி ரொட்டி சாப்பிடுவதில்லை, ஆனால் நீங்கள் என்னிடம் சொன்னதால், நான் உங்களுக்குக் கீழ்ப்படிகிறேன்**" என்று பதிலளித்தார். பாபா கேலி செய்தாலும், தேஷ்முக் மகிழ்ச்சி அடைந்தார்.

இதற்கிடையில், ஐவி டியூஸ், டான் ஸ்டீவன்ஸ் இருவரும் 'கடவுள் பேசுகிறார்' (GOD SPEAKS) புத்தகத்தைத் திருத்தம் செய்யும் வேளையில் எழுந்த கேள்விகளின் பட்டியலை பாபாவிற்கு அனுப்பியிருந்தனர். இந்தக் கேள்விகளுக்குப் பதிலளிக்கும் விதமாக, எரச், பாவ் கல்சூரி இருவருக்கும், பாபா எடுத்துரைத்த பதில்களை, தேஷ்முக் திருத்தம் செய்வதாகத் திட்டம். (மெஹர் பாபா வழங்கிய ஆன்மீக அம்சங்கள் அடங்கிய '**பீம்ஸ்**' - BEAMS என்ற தலைப்பில் பதில்கள், பின்னர் ஒரு புத்தக வடிவில் வெளியிடப்பட்டன.)

இந்தக் காலகட்டத்தில், பாபா, சதாஷிவ் பாட்டீலையும் பூனாவிலிருந்து மஹாபலேஷ்வருக்கு அழைத்தார். ஷாப்பூர் ஹாலில் எரச், பாவ் அல்லது ஸவக் மற்றும் ஜால்பாய் பயன்படுத்தும் விதத்தில் மூன்று கட்டில்கள் மட்டுமே இருந்தன; அவர்களில் ஒருவர் எப்பொழுதும் பாபாவுடன் கண்காணிப்புப் பணியில் இருந்ததால் கட்டிலைப் பகிர்ந்து கொள்வது வழக்கம். சதாஷிவ் வரும் வேளையில், அவருக்குப் படுக்கை வழங்க வேண்டாம் என்று பாபா குறிப்பாக அறிவுறுத்தி, படுக்கைச் சுருளைத் தரையிலிட்டு அங்கேயே தூங்குமாறு அறிவுறுத்தினார். இக்காலகட்டத்தில், பாபா மதியம் 1:00 மணிக்கு தனது அறைக்கு ஓய்வெடுக்கச் செல்வதும், பாவ் கல்சூரி மதியம் 1:00 முதல் இரவு 11:00 மணி வரை அவர் அருகில் கண்காணிப்புப் பணியை மேற்கொள்ளுவதும், அதற்குப் பிறகு ஸவக் காலை 6:00 மணி வரை, அந்தப் பணியைத் தொடர்வதும் வழக்கமாக நடந்து வந்தது.

சதாஷிவ் மாலை 4:00 மணிக்கு மஹாபலேஷ்வர் வந்த வேளையில், பாவ் கல்சூரி, பாபாவுடன் இருந்தார்; ஆனால் அவர் இரவு 11:00 மணியளவில் மண்டலியின் அறைக்குச் சென்றபோது, சதாஷிவ், அவரது கட்டிலில் அயர்ந்து தூங்குவதைக் கண்டார். சதாஷிவ் 1918 முதல் பாபாவின் அரவணைப்பில் இருக்கும் மிகவும் வயதான, நெருங்கிய அன்பர் என்ற எண்ணத்தில், பாவ் கல்சூரிக்கு அவரை தூக்கத்திலிருந்து எழுப்ப மனம் வரவில்லை, மாறாக பாவ் தரையில் தூங்கினார்.

அடுத்த நாள், பாபா, பாவ் கல்சூரியை அழைத்து, '**அவர் எங்கே தூங்கினார்?**' என்று கேட்டதற்கு, பாவ், தனது கட்டிலை ஏற்கனவே சதாஷிவ் ஆக்கிரமித்திருந்ததால், அவர் தரையில் தூங்கியதாக பதிலளித்தார். "**ஏன் அவரை எழுப்பவில்லை?**" பாபா வினவினார்.

பாவ் கல்சூரி உடனே, "அவர் வயதானவர், பாபா. அவரது தூக்கத்தைக் கெடுப்பது சரியாக இருந்திருக்காது என்று நினைத்தேன்" என்றார்.

பாபா கடிந்து கொண்டார், "**சதாஷிவிற்கு, உகந்தது எது என்று நினைத்து நீங்கள் அதைச் செய்தீர்கள், ஆனால் நான் என்ன விரும்புகிறேன் என்பதை நீங்கள் நினைத்துப் பார்க்கவில்லை! நீங்கள் எனக்குக் கீழ்ப்படியாததால், உங்களுக்குத் தெரியாத அளவுக்கு என்னைக் காயப்படுத்திவிட்டீர்கள், இந்தக் காயம் ஒருபோதும் ஆறாது! என்னால் நேற்றிரவு ஒரு நிமிடம் கூட ஓய்வெடுக்க முடியவில்லை. சதாஷிவை**

**சௌகரியமாக இருக்கச் செய்து, என்னை வேதனைக்குள்ளாக்கினீர்கள். என்னைக் காயப்படுத்துவதில் உங்களுக்கு ஏதேனும் இன்பம் உள்ளதா? அதற்காகவா நீங்கள் என்னுடன் இருக்க வந்தீர்கள்? எப்போது, எனது ஆணையை மீறி, எது நல்லது, எது 'உகந்தது' என்ற எண்ணம் உங்களுக்குள் எழுமோ, அப்போது நீங்கள் எனக்குக் கீழ்ப்படிய முடியாது, உங்கள் உணர்வுகளை மட்டுமே நீங்கள் நினைவில் கொள்கிறீர்கள், என்னுடையதை அல்ல.**

**"சதாஷிவ் எனது நீண்ட நாள் அன்பராக இருந்தால் - ஏன், அவர் எனது தந்தையாகக்கூட இருக்கலாம்! - உங்களுக்கு அது குறித்து என்ன கவலை? இதுபோன்ற விஷயங்களைப் பற்றி சிந்திக்கவா, அல்லது எனக்குக் கீழ்ப்படியவா நீங்கள் என்னுடன் இருக்கிறீர்கள்? நீங்கள் ஒரு கச்சா** (வேகாத, பக்குவப்படாத, அனுபவமற்ற) **பானையாக இருப்பதால் உங்களை நம்ப முடியாது! நீங்கள் பிறரைப் பற்றி நினைக்கிறீர்கள், ஒருபோதும் என்னைப் பற்றி அல்ல. நீங்கள் எனது கழுத்தை நெரிக்கிறீர்கள்! இது என்ன வகையான நேசம்?"**

பாவ் கல்சூரி தனது தவறை ஒப்புக்கொண்டார், பாபா அவரை மன்னித்தார்.

1958 ஏப்ரல் 4 புனித வெள்ளி, அன்று காலை பாபா திடீரென இரண்டாவது வாகன விபத்து நடந்த இடத்தைப் பார்வையிட, உட்தாராவிற்குச் செல்ல விரும்புவதாகத் தெரிவித்தார். "**நீங்கள் என்னை சரியான இடத்திற்கு அழைத்துச் செல்வதில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும்; ஆனால் விபத்து நடந்த இடத்தைக் கடக்காமல், கவனமாகக் கண்டுகொள்ள வேண்டியது முக்கியம்**" என்று காரை ஓட்டிச் சென்ற கோஹியாரை எச்சரித்தார். அவர்களுடன் எரச், பாவ், ஸவக், ஜால்பாய் ஆகியோர் சென்றனர்.

கோஹியார் பின்பு கூறினார்: "அந்தக் குறிப்பிட்ட இடத்திற்குச் சில அடிகள் முன்பு நின்று, பாபா எங்களிடம் காரை விட்டு இறங்குமாறு கட்டளையிட்டார். அதற்குப் பிறகு, பாபா ஒரு கற்பனை எல்லைக் கோட்டை வரைவது போல, மூன்று முறை சாலையின் வழியாகவும், குறுக்காகவும் சிரமப்பட்டு நடந்தார். '**நான் இங்கிருந்து சத்தாரா பக்கம் ஒரு அடி கூட எடுத்து வைக்க விரும்பவில்லை.**' மண்டலியுடன் கிரிக்கெட் விளையாடிய, விபத்து நடந்த இடத்தின் எதிர்புறத்தில் அமைந்த மைதானத்தை, பாபா சுட்டிக்காட்டினார்.

மெதுவாக சாலையில் மேலும் கீழும் நடந்த பிறகு, பாபா மஹாபலேஷ்வருக்குத் திரும்பிச் சென்றார்.

மஹாபலேஷ்வரிலிருந்து பாபா வெளியேறிய பின்பு, கோஹியார், ஷாப்பூர் ஹாலை விருந்தினர் மாளிகையாக நிர்வகிப்பதாகத் திட்டம். ஒரு நாள் அவரிடம், '**மெஹர் பாபாவின் சித்திரத்தை வரவேற்பறையில் ஏன் மாட்டி வைக்கவில்லை?**' என்று பாபா கேட்டார்; பாபாவின் சில புத்தகங்கள் மற்றும் இலக்கியங்களையும் அங்கே வைக்கவில்லை. கோஹியார், அவர் நிர்வகித்த

இதர இடங்களில் அவ்வாறு செய்து வந்தார்; ஆனால் விருந்தினர்களில் ஒருவர் தனது கைக்குழந்தையின் 'கழிவை' சுத்தம் செய்ய பாபாவைப் பற்றிய துண்டுப்பிரசுரத்தைப் பயன்படுத்தியதைப் பார்த்த பிறகு, மீண்டும் அவ்வாறு செய்யத் தயங்கினார்.

கோஹியார் விளக்கினார், "உங்கள் இலக்கியங்கள் கழிப்பறை காகிதமாக பயன்படுத்தப்படுவதைப் பார்த்த பின்னர், உங்கள் துண்டுப்பிரசுரம் அல்லது புகைப்படத்தைப் பொது இடங்களில் வைப்பது பயனற்றது என்ற முடிவுக்கு வந்தேன்."

பாபா அப்போது இவ்வாறு பதிலளித்தார், "**இந்தச் சின்னஞ்சிறிய விஷயங்களுக்காக ஏன் வருத்தப்படுகிறீர்கள்? அசுத்தமான இடங்களிலும், பின் சந்துகளிலும் கூட எனது புகைப்படங்களைப் பார்க்கும் காலம் வரும். அது மோசமாக சிதைக்கப்பட்ட (அஞ்சல்) முத்திரைகளிலும், தீப்பெட்டிகளிலும், மலிவான வணிகப் பெயர் அடங்கிய உணவுகளின் அடையாளக் குறிப்புகளிலும் இருக்கும். அதனால் கவலைப்படுவானேன்? நான் மிகவும் அசுத்தமான இடங்களிலும் வாழ்கிறேன், மேலும் அசுத்தமான பொருட்களிலும் இருக்கிறேன்.**"

மறுநாள், பாபா இவ்வாறு குறிப்பிட்டார்; "**நிரந்தர, மாறாத்தன்மையுடைய ஏக இறைவன், என்றென்றும் மாறும் எல்லாவற்றிலும் வாழ்கிறார்.**"

ஏப்ரல் 12 அன்று அமெரிக்கா, ஆஸ்திரேலியா நாடுகளில் நடக்கவிருக்கும் சகவாச நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளும் அன்பர்களுக்கு, பாபா இந்தச் செய்தியை வழங்கினார்:

**என் அன்பர்களுக்கு, எனது சகவாசத்தை வழங்கும் ஒரே நோக்கத்துடன் நான் அமெரிக்காவிற்கும் ஆஸ்திரேலியாவிற்கும் வருகிறேன்; நீங்கள் ஒவ்வொருவரும் அதையே அடையப் பெறும் ஏக்கத்துடன் வரவேண்டும் என்று நான் விரும்புகிறேன். அனைத்திற்கும் மேலாக, இந்த சகவாசம் உங்கள் அன்பிற்குரியவருக்கும், அன்பர்களுக்கும் இடையேயான நெருங்கிய தோழமையாக இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். இந்தத் தனித்துவமான உறவை நீங்கள் பராமரிக்க விரும்பினால், கேள்விகள், சொற்பொழிவுகள் மற்றும் விளக்கங்களை நாடும் விருப்பத்துடன் வரவேண்டாம். நான் உங்களுக்கு எதை வழங்கினாலும், எனது விருப்பத்திற்கு முற்றிலும் தலைவணங்கும் எண்ணத்துடன், அதை முழுமையாக அடையப் பெறுவதற்கான தயார் நிலையில் வாருங்கள்.**

**எனது துன்பம், நாளுக்கு நாள் தீவிரமடைந்து வருகிறது; என் உடல்நிலை, நாளுக்கு நாள் மோசமாகி வருகிறது, ஆனால், என் உடல் அதன் பாரத்தைத் தொடர்ந்து சுமக்கிறது. அதையெல்லாம் மீறி, நான் சகவாசத்தை வழங்கத் திட்டமிட்டுள்ளேன். மனித குலத்தின் மீது எனக்குள்ள இரக்கம் மற்றும் அன்பினால் உருவான, என் மீது சுயமாகத் திணிக்கப்பட்ட**

**துன்பத்தைப் பற்றிய ஆழமான புரிதலை உங்களிடமிருந்து எதிர்பார்க்கிறேன். எனவே, அமெரிக்காவிலோ அல்லது ஆஸ்திரேலியாவிலோ, எனது இடுப்புக் காயத்திற்கான மருத்துவ பரிசோதனைகள் அல்லது சிகிச்சையை நான் மேற்கொள்ளமாட்டேன் என்பதையும் புரிந்து கொள்ளுங்கள். நான் அனுபவிக்கும் வலி, அதன் நோக்கத்தை நிறைவேற்றும் முன்னர், எந்த மருத்துவரும் அல்லது சிகிச்சையும் எனக்கு உதவ முடியாது. எனது வருகை முழுக்க முழுக்க உங்கள் அனைவருக்கும் எனது சகவாசத்தை வழங்கவே, என்பதை நினைவில் கொள்ளுங்கள்.**

**எனது பெரும் பாக்கியமிக்க தோழர்களாக என் அருகில் இருப்பதன் மூலம், நீங்கள் எனது தற்போதைய உலகளாவிய துன்பத்தை நேரில் கண்டு பகிர்ந்துகொள்வீர்கள்; மேலும் முற்றிலும் உங்களைப் போன்ற மனித நிலையில் இருக்கும் ஆதிகால புருஷன் என்ற அர்த்தத்தில், இந்த சகவாசம் தனித்துவம் மிக்கதாகத் திகழும். எனது தொடர்பில் வாழும் அன்பர்களுக்கு நான் அடிக்கடி வழங்கிய குறிப்பைப் பற்றி - அதாவது, எனது பிரகடனத்தில், எனது மகிமை எனது அவமானத்தைத் தொடர்ந்து வரும் என்று குறிப்பிட்டதை அவர்களுக்கு நினைவூட்டுவதோடு, எனது, சகவாச காலம் எனது உலகளாவிய துன்பம் மற்றும் உதவியற்ற தன்மையின் வட்டப்பாதையில் விழும் என்பதை அறிந்து கொள்வது, சகவாசத்தில் பங்கேற்கும் அனைவருக்கும் உதவியாக இருக்கும்.**

**இதுபோன்ற சுற்றறிக்கை ஒன்று, பிப்ரவரி மாதத்தில் மெஹராபாத் சகவாச நிகழ்ச்சிகளுக்கு முன்னதாக அனுப்பப்பட்டது. எனது விருப்பத்திற்கு இணங்கி அன்புடனும், அர்ப்பணிப்புடனும் வந்த எனது சகவாச அன்பர்கள், அவர்கள் எதிர்பார்த்ததை விட, அதிகமாக அடையப் பெற்றதில் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தனர். அதேபோல், உங்கள் அனைவருக்கும், நீங்கள் எதிர்பார்ப்பதை விட, அதிகமாக நான் உங்களுக்குக் வழங்கலாம் - அல்லது ஒன்றும் இல்லாதது போலவும் இருக்கலாம்; அதே வேளையில் அந்த ஒன்றும் இல்லாதது, எல்லாமுமாக நிரூபிக்கப் படலாம். எனவே நான் சொல்கிறேன், உங்கள் இறை அன்பரிடமிருந்து அதிகம் அல்லது ஒன்றுமே இல்லாத ஒன்றை அடையப் பெற, திறந்த இதயத்துடன் வாருங்கள். எனது வார்த்தைகளை அல்ல, எனது மௌனத்தின் மகிமையைப் பெற்றுக்கொள்ளும் தயார் நிலையில் வாருங்கள். உங்கள் அனைவருக்கும் என் அன்பும், ஆசீர்வாதமும்.**

ராம்ஜூ, டாக்கே, விஷ்ணு, சதாஷிவ் பாட்டீல் ஆகியோருடன், ஏப்ரல் 17ஆம் தேதி, பாபாவின் அழைப்பின் பேரில், அறிவுறுத்தல்களுக்காக ஆதி சீனியர் மஹாபலேஷ்வருக்கு வந்தார். டானும் உடனிருந்தார். கிஷன் ஸிங் 20ஆம் தேதி முதல் பத்து நாட்களுக்கும், மெஹர்வான் ஜெஸவாலா மற்றும் அவரது உறவினர் தாதி கேரவாலா மூன்று நாட்களுக்கும் (ஏப்ரல் 20-22) அழைக்கப்பட்டனர். நரிமன், அர்னவாஸ், கேட்டி, ஜிம் மிஸ்திரி ஆகியோர்

குழுவில் சில நாட்கள் இணைந்தனர்; அதைத் தொடர்ந்து கோர்ஷெத்தும் அவர்களுடன் வந்திணைந்தார்.

பாபாவின் தரிசனத்தை வேண்டி உள்ளூர்வாசிகள் கோஹியாரைத் துன்புறுத்திக் கொண்டிருந்தனர், எனவே பாபா தங்கியிருந்த கடைசி நாளான 1958 ஏப்ரல் 29 செவ்வாய்கிழமை அன்று, ஷாப்பூர் ஹாலில் பாபா தரிசனம் வழங்கினார். போர் நாட்டு மன்னர் (MAHARAJA OF BHOR), அவரது குடும்பத்தினர் மற்றும் மஹாபலேஷ்வரில் விடுமுறையில் இருந்த சில மகாராணிகள் உட்பட சுமார் 300 பேர் அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டனர். அன்று, மெஹர்ஜி தனது மகள்களான பெர்வின், மெஹர்னாஸ் இருவருடன் அங்கு வந்திருந்தார். சதாஷிவ் பாட்டீலும் பூனாவிலிருந்து வந்திருந்தார்

பாபா மறுநாள் குருபிரசாத்திற்குப் புறப்பட இருந்தார். சொகுசுப் பேருந்தில் பூனாவிற்குப் புறப்படும்படி நெருங்கியவர்களிடம் அறிவுறுத்தி, இரண்டு மண்டலியுடன் பாபா காரில் பின்தொடர்ந்தார். மறுநாள் காலை, பேருந்து நிலையத்திற்குச் சென்ற அவர்கள், அங்கு வாடகைக்கார் ஒன்று நின்றதைக் காண நேர்ந்தது. சதாஷிவ் அவர்கள் வாடகைக்காரில் சென்றால், பாபாவிற்கு முன்பே பூனா சென்றடையலாம் என்றார். மெஹர்ஜியும் அதற்கு ஒப்புக்கொண்டார், ஆனால் கோர்ஷெத், டாக்டர் தேஷ்முக் இருவரும் பேருந்தில் பயணம் செய்யும் பாபாவின் அறிவுரையை அவர்களுக்கு நினைவூட்டினர். இருந்தும், சதாஷிவ் வாடகைக்காரில் செல்வதற்கு ஆதரவாக இருந்து, இறுதியில் அவர்கள் ஒன்றில் புறப்பட்டனர்.

பாபா, மஹாபலேஷ்வரிலிருந்து பூனாவிற்கு காரில் செல்லும் வழியில் மெதுவாகச் சென்று கொண்டிருந்த வாடகைக்காரை கண்டார். அவர் குருபிரசாத் வந்தடைந்து, அங்கு அவர் பிற அனைவருக்காகவும் காத்திருந்தார், ஆனால் அவர்கள் வராததால், பாபா அவர்களைப் பற்றி அடிக்கடி கேட்டுக்கொண்டிருந்தார், இறுதியில் அவர்கள் வந்து சேர்ந்தனர். வழியில் வாடகைக்கார் பழுதாகிவிட்டது. கடும் வெயிலில் மணிக்கணக்கில் நிற்க வேண்டியதாயிற்று; ஆனால் வாடகைக்காரை சரிசெய்ய முடியாததால், அது ஒரு பெரிய பேருந்தின் உதவியுடன் பூனாவிற்கு இழுத்துச் செல்லப்பட்டது, அதனால் ஏறக்குறைய ஏழு மணி நேரம் தாமதமாக வந்தது. பாபா அவர்களிடம், “**நான் உங்களைப் பேருந்தில் பயணம் செய்யச் சொன்னேன். நீங்கள் ஏன் வாடகைக்காரில் சென்றீர்கள்? என் அறிவுறுத்தலில் நீங்கள் கவனம் செலுத்தாததால், தேவையில்லாமல் இந்த சிரமங்களை சந்திக்க நேரிட்டது**” என்று கூறினார்.

பாபா இரண்டு வாரங்கள் குருபிரசாத்தில் தங்கியிருந்தார். மே 2 அன்று, மேலதிக அறிவுறுத்தல்களுக்காக ஆதி சீனியர் வந்தார். ஆதி, அதே மாலையில் கைக்கோபாத்தை மீண்டும் மெஹராபாத்திற்கு அழைத்துச் சென்றார். அன்று, பாபாவின் சகோதரர் பெஹராம் தனது வருங்கால மருமகனான ஜஹாங்கிர் மஞ்சர்ஷா சுகத்வாலாவை, JEHANGIR MANCHERSHAW SUKHADWALLA (ஜெஹாங்கு, JEHANGU என்று அழைக்கப்பட்டார், 25 வயது), குருபிரசாத்தில் பாபாவை

முதன்முறையாக சந்திப்பதற்காக அழைத்து வந்தார். பாபா, ஜெஹாங்குவை மிகவும் விரும்பி, பெஹராமின் மகள் குல்னாருடன் அவரது திருமணத்திற்கு ஒப்புதல் அளித்தார்.

மே 3 அன்று, பாபா அமெரிக்காவில் வாழும் அன்பர்களுக்காக மற்றுமொரு குறுஞ்செய்தியை வழங்கினார். அவருடைய உடல் நிலை மோசமாகவும், தினமும், காரணம் புரியாத லேசான ஜுரம் இருந்தாலும், திட்டமிட்டபடி சகவாசத்தை வழங்கப்போவதாக அதில் குறிப்பிட்டிருந்தார்.

இந்த நிலையிலும் 1958 மே 4 ஞாயிற்றுக்கிழமை அன்று, பூனா குழுவினர் சிலர் பஜனை நிகழ்ச்சிக்கு நடுவே, குருபிரசாத் வராந்தாவில் பாபாவின் தரிசனத்தைப் பெற்றுக்கொண்டனர். அன்று முதல் முறையாக, பாபாவை தரிசனம் செய்த பரோடாவைச் சேர்ந்த 44 வயதான குருபிரசாத்தின் உரிமையாளர் மஹாராணி ஷாந்தாதேவி (MAHARANI SHANTADEVI OF BARODA) உட்பட, பலர் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டனர். வெகுநேரம் மஹாராணி, பாபாவின் நாற்காலியின் அருகில் அமர்ந்திருந்தார். குருந்த்வாடியின் ராணி 57 வயதான மாய்ஸாஹேப் சீதாபாய் பட்வர்தனும் (MAISAHEB SITABAI PATWARDHAN) தரிசனத்திற்கு வர நேர்ந்தது. அனைவரும் தரிசனம் செய்துவிட்டு அங்கே நேரத்தைக் கடத்தாமல் புறப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது, ஆனால் தரிசனம் நடந்து கொண்டிருந்ததால் தேஷ்முக் குருந்த்வாடி ராணியின் மகனை (தற்போதைய மஹாராஜா) அழைத்து வந்து பாபாவின் அருகில் அமர வைத்தார். பாபா அதை விரும்பாமல் அங்கிருந்த மிகவும் ஏழ்மையான பாபா அன்பர்கள் நால்வரை அவர் அருகில் அமருமாறு அறிவுறுத்தினார்.

மஹாராணி ஷாந்தாதேவி, பாபாவால் பெரிதும் ஈர்க்கப்பட்டார்; மேலும் அவர் தனது இதயத்தில் அவருடைய உலகளாவிய நோக்கத்தில் மிக்க நம்பிக்கை உள்ளவராக இருந்தார். மஹாராணியைத் தன்னருகில் அமர அனுமதித்து, அவருடன் சிறிது நேரம் உரையாடிய பாபா, ஷாந்தாதேவியை புறப்படுமாறு கேட்டுக்கொண்டார். அன்றிலிருந்து அவர் அடிக்கடி பாபாவிடம் வரத் தொடங்கினார்; ஒவ்வொரு வருடமும் குருபிரசாத் பங்களாவை பாபா பயன்படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்தார்.

இதற்கிடையில், ஆந்திராவைச் சேர்ந்த கோடூரி கிருஷ்ணா ராவ், மும்பை சிற்பி பி. தாலிம் என்பவரால் உருவாக்கப்பட்ட பாபாவின் வெண்கலச் சிலையை நிறுவினார். இது பாபாவிற்கு அர்ப்பணிக்கப்பட்ட, கொவ்வூரில் கட்டி எழுப்பிய கோவிலுக்காக அமைந்தது. கொவ்வூர் கோவில் திட்டத்தில் ஈடுபட்டிருந்த ஆதி, சிலையின் முன்னேற்றத்தை ஆய்வு செய்ய, அவ்வப்போது மும்பைக்குச் செல்வதை வழக்கமாகக் கொண்டார். இடையிடையே, சிற்பி தாலிமுடன் கடிதப் பரிமாற்றமும் நடந்து வந்தது. ஒரு கடிதத்தில், பாபாவின் பாதங்களின் வார்ப்பு ஒன்றை உருவாக்குமாறு சிற்பி பரிந்துரைத்தார்.



சதாஷிவ் பாட்டீலை தழுவுதல்
(EMBRACING SADASHIV PATIL)



மஹாபலேஷ்வர், **29** ஏப்ரல் **1958**
(MAHABALESHWAR, 29 APRIL 1958)



ஹரிஷ் தாலிம் பிளாஸ்டர் வார்ப்பிற்காக பாபாவின் கை, கால்களில் களிம்பு பூசுதல்
(HARISH TALIM APPLYING VASELINE TO BABA'S HANDS & FEET FOR PREPARING PLASTER CASTS)



பரோடா மஹாராணி ஷாந்தாதேவியுடன் பாபா
(BABA WITH MAHARANI SHANTADEVI OF BARODA)

இது ஒரு சிறந்த யோசனை என்று எண்ணிய ஆதி, அந்தக் கடிதத்தை மஹாபலேஷ்வருக்கு அனுப்பி, பாபாவிற்குத் தெரியப்படுத்தினார். 1932இல் இங்கிலாந்தில் பாபாவின் வலது கை வார்ப்பு உருவாக்கப்பட்டது, எனவே பாபா இதற்கும் ஒப்புக்கொண்டார். குருபிரசாத் மாளிகைக்குச் செல்லும்போது, தாலிம் வருவதற்கான தேதியை நிர்ணயம் செய்வதாகத் தெரிவித்தார்.

இதற்காக மே 4ஆம் தேதி, பாபா தரிசனம் வழங்கிக் கொண்டிருந்த வேளையில், தாலிமின் மகன் / உதவியாளர் ஹரிஷ் வந்தார். இருந்தும் பாபா, அவரைத் தனது பணியைத் தொடர அனுமதித்து, பொறுமையாக அரை மணி நேரம் அல்லது அதற்கு மேல் குருபிரசாத்தின் வராந்தாவில் அமர்ந்திருந்த வேளையில், அவரது காலில் இருந்த பிளாஸ்டர் வார்ப்புகள் காய்ந்து கொண்டிருந்தன. பாபா இவ்வாறு குறிப்பிட்டார், **“என் அவல நிலையைப் பாருங்கள்! நான் மறுபடியும் சிலுவையில் அறையப்படுவது போல் உணர்கிறேன்!”** துரதிர்ஷ்டவசமாக, அன்று பாபாவின் பாதங்கள் வீங்கியிருந்தன, அதன் விளைவாக, முந்தைய காலங்களில் மெலிதாகவும் அழகாகவும் இருந்ததோடு ஒப்பிடுகையில், பாபாவின் பாதங்கள் இப்போது பெரிதாகத் தோன்றின. எவ்வாறாயினும், நமக்காக, அவர் மனித உருவில் வரும்போது, இவை அனைத்தும் இறை-மனிதனின் உடல் துன்பங்களுக்கு சான்றாக இருக்கின்றன.

மே 7ஆம் தேதி பாபாவின் தரிசனத்திற்காக, காக்கா சிஞ்சோர்க்கரை அழைத்து வந்தார் ஆதி. அடுத்தநாள், பாபாவிற்கு இடுப்பு வலி அதிகமாகி, ஜுரமாக இருந்தது. பூனாவைச் சேர்ந்த டாக்டர் தேஷ்முக் அவருக்கு கார்டிஸோன் (CORTISONE) ஊசிமருந்தை வழங்கினார்.

இந்த நேரத்தில் ஒரு புதிய ‘தொடர்பில்’ வந்தவர், பிரேம் ஃபத்தாசந்த் கில்னானி (PREM FATACHAND KHILNANI, 40), சிந்தி (SINDHI) சமுதாயத்தைச் சார்ந்தவர். பிரேம் ஒரு நீதி அரசர் (JUDGE), அவர் குருபிரசாத் அருகே, மாலை உலாவச் செல்லும் வேளையில், அடுத்த நாள் அவதார் மெஹர் பாபா தரிசனம் வழங்கவிருக்கும் அறிவிப்பை கவனித்தார். இது குறித்து விசாரிப்பதற்காக அவர் வளாகத்தின் உள்ளே சென்றபோது, அங்கு ஒருவரையும் கண்டுகொள்ள முடியாமல், அங்கிருந்த ஒரு மர இருக்கையில் அமர்ந்து காத்திருந்தார். பாபா அவரைப் பார்த்து, தோட்டத்தில் யார் அமர்ந்திருக்கிறார் என்பதைக் கண்டறிய எரச்சை அனுப்பினார். அடுத்தநாள் காலை 11:15 மணிக்கு பிரேமை சந்திக்க பாபா அனுமதித்தார். பிரேம் வந்ததும் பாபாவின் படுக்கையறைக்குள் அழைக்கப்பட்டார். பதினேழு ஆண்டுகளுக்கு முன்பு பாபாவைப் பற்றி முதன்முதலில் கேள்விப்பட்டதை அவர் விவரித்தார். அவர் 1941இல் ஸுக்கூர் (SUKKOR, பாகிஸ்தான்) நகரில் வாழ்ந்த தனது தாய் மாமாவைப் பார்க்கச் சென்றிருந்தார், ஒரு நாள் இரண்டு நபர்கள் முன்னறிவிப்பு எதுவுமின்றி அங்கு வந்தனர். சாஞ்சி, பைதூல் இருவரும் கில்னானியின் மாமாவிடம், “நாங்கள் மெஹர் பாபாவின் அறிவுறுத்தலின் பேரில், மஸ்துகளைத் தேடி வந்துள்ளோம்;

இப்பகுதியில் ஆன்மீகப் பாதையில் முன்னேறிய நபர்கள் எவரேனும் உள்ளனரா? என்று கேட்டனர்.

கில்னானி அவர்களை மாபெரும் மஸ்த் காஸி ஸாஹேபிடம் (QAZI SAHEB) அழைத்துச் சென்றார். அந்த நேரத்தில், பாபா குவெட்டாவில் இருந்தார்; மஸ்துகளைக் கண்டுபிடித்துக் கொண்டு வருமாறு அனுப்பி வைத்த பைதூல் மஸ்தின் காதில் கிசுகிசுத்தார், "எங்களுடன் வாருங்கள்; மெஹர் பாபா உங்களை அழைக்கிறார். எங்களுடன் குவெட்டாவிற்கு வாருங்கள்."

மஸ்த் அவர்களின் மொழியைப் புரிந்து கொள்ளாதது போல நடித்தபோது, கில்னானி சிந்தி மொழியில் கூறுமாறு பரிந்துரைத்தார். இது முடிந்ததும், காஸி ஸாஹேப், "நான் படிப்பறிவில்லாதவன்; நான் எல்.எல்.பி. (சட்டம் பட்டம் பெற்ற வழக்கறிஞர்) அல்ல! அவருக்கு என்னிடமிருந்து என்ன வேண்டும்?" என்று கேட்டதும், கில்னானி அவர் பேசியதைக் கேட்டு அதிர்ச்சியடைந்தார், ஏனெனில் அவர் சட்ட கல்வி தேர்வில் அப்போதுதான் தேர்ச்சி பெற்றார். பைதூல் அவருக்கு ஆட்டிறைச்சி மற்றும் பிற சுவையான உணவுகளை வழங்கி, தொடர்ந்து வற்புறுத்திய பிறகும், மஸ்த் சற்றும் இணங்காமல் மறுத்துவிட்டார். இருப்பினும், பாபா ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு ஸுக்கூர் நகருக்குச் சென்று இந்த மஸ்தைத் தொடர்பு கொண்டார்.

அதற்குப் பிறகு, கில்னானி, பால் பிரண்டனின் 'எ ஸெர்ச் இன் ஸீக்ரெட் இந்தியா' (A SEARCH IN SECRET INDIA) என்ற புத்தகத்தைப் படித்து, பிரண்டனின் விளக்கத்திலிருந்து, மெஹர் பாபா ஒரு மோசடிக்காரராக இருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தார். ஆனால் அவர் குருபிரசாத்தில் பாபாவை நேருக்கு நேர் சந்தித்த வேளையில், அவர் பாபாவின் தெய்வீகத்தன்மையை நம்பி, நெருக்கமாகப் பின்பற்றத் தொடங்கினார்.

பாபா பூனாவில் தங்கியிருந்தபோது, 1958 மே 9 அன்று, பாவ் கல்சூரியின் மகள் ஷீலாவை மெஹராபாத்திலிருந்து அழைத்து வருமாறு பெண்டு, பாதிரி, சிது ஆகியோருக்கு அறிவுறுத்தினார். குழந்தைக்கு ஆறு வயதே என்றாலும், அவள் தனது தாயையும் சகோதரனையும் விட்டுவிட்டுச் செல்லும் அளவுக்கு தைரியம். குருபிரசாத்தில் மகிழ்ச்சியுடன், அவள் அந்த நாளைக் கழித்தாள். பாபா மெஹராபாத்திலிருந்து வந்தவர்களை அன்றிரவே திருப்பி அனுப்பினார்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு, மே 11 ஞாயிறு அன்று குருபிரசாத்தில் பஜனை நிகழ்ச்சி நடைபெற்றது. பாபா, "**நான் இன்று பஜனை பாடல்களைக் கேட்கும் நல்ல மனநிலையில் இருக்கிறேன், அதனால் தொடர்ந்து பாடுங்கள். இன்று நான் என்ன பணிபுரிகிறேன் என்று உங்களுக்குத் தெரியாது**" என்று குறிப்பிட்டார்.

மதுசூதன், பிரதாப், சுபத்ரா, தாடே மற்றும் பலர் காலை 8:00 மணி முதல் பிற்பகல் 3:00 மணி வரை தொடர்ந்து பாடி களைத்துப் போயினர். புகைப்படம் எடுக்க வந்த மீலன் ஸ்டுடியோவின் புகைப்படக் கலைஞர் பிக்குபாய், அன்று சுபத்ராவின் குரல் குறிப்பிடத்தக்க வகையில் மிகவும் சிறப்பாக இருந்ததாக

பாபாவிடம் கூறினார். பாபா பதிலளித்தார், "**ஆம், ஆனால் அவர் இப்போது நிறைவுசெய்யத் தயாராக இருக்கிறார்!**" ஏழு மணி நேர தொடர் நிகழ்ச்சிக்குப் பிறகு, பாபாவின் அறிவுறுத்தலுக்கு இணங்க, பஜனைக் குழு நிகழ்ச்சியை நிறைவுசெய்தது.

திகம்பர் காடேக்கர் (DIGAMBAR GADEKAR) அப்போது பூனாவில் எம்.எஸ்சி. (அறிவியலில் முதுகலைப் பட்டம்) தேர்வுக்காகப் பயின்று கொண்டிருந்தார். இந்த நேரத்தில் பாபா, அவரை தினமும் குருபிரசாத் வர அனுமதித்தார். ஒவ்வொரு தேர்வும் தொடங்கும் முன்பு, திகம்பர், பாபாவின் பெயரை உச்சரிக்குமாறு அறிவுறுத்தினார். தேர்வின் உரைநடைப் பகுதி நிறைவடைந்ததும், பாபா, "தேர்வு எப்படி நடந்தது?" என வினவினார்.

திகம்பர் உடனே, "நான் எல்லா கேள்விகளுக்கும் என்னால் இயன்றவரை பதில் அளித்துள்ளேன்" என்றார்.

"**நீங்கள் முதல் வகுப்பில்** (உயர்ந்த மதிப்பெண்களுடன்) **தேர்ச்சி பெற வேண்டும்**" என்று பாபா வலியுறுத்தி கூறினார்.

"பாபா, விளைவு என்னவாக இருக்கும் என்பது உங்கள் சித்தம்; ஆனால், முடிந்தவரை முயற்சி செய்வது எனது கடமை."

திகம்பருடைய செய்முறை சார்ந்த தேர்வுகள் நிறைவடைந்ததும், பாபா அதே கேள்வியைக் கேட்டார், திகம்பர் அதே பாணியில் பதிலளித்தார். பாபா அவரை எச்சரித்தார், "**நீங்கள் முதல் வகுப்பில் தேர்ச்சி பெறாவிட்டால், நமது தோஸ்தி (நட்பு) முடிவுக்கு வரும், நீங்கள் உங்கள் முகத்தை என்னிடம் காட்டாதீர்கள்!**"

திகம்பர் அச்சத்துடன் பதிலளித்தார்: "பாபா, எது நடக்க உள்ளதோ, அது உங்கள் தெய்வீக சித்தத்தின்படியே நடக்கும்" என்றார்.

தேர்வு முடிவு அறிவிக்கப்படுவதற்கு முன்பு, பாபா அவரிடம், "**நீங்கள் தேர்வில் தோல்வியடைந்தீர்கள்!**" என்றார்.

இருப்பினும், ஜூன் மாதம் தேர்வு முடிவுகள் அறிவிக்கப்பட்டபோது, திகம்பர் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றது மட்டுமல்லாமல், பல்கலைக்கழகத்தில் தனது பாடத்தில் முதல் மதிப்பெண் பெற்றிருந்தார். இந்தச் செய்தி பாபாவிற்குத் தெரிவிக்கப்பட்டதும், அவர் திகம்பருக்கு பின்வரும் செய்தியை அனுப்பினார்: "**எனக்குக் கீழ்ப்படிவதில் நீங்கள் குறைந்தபட்சம் மூன்றாம் வகுப்பில் தேர்ச்சி பெறுவீர்கள் என்று நம்புகிறோம்!**"

குருபிரசாத்தில் பாபா தங்கியிருந்த காலத்தில், பல்வேறு மும்பை திரைப்பட நிறுவனங்களிலிருந்து, பல பிரபலங்கள் பாபாவின் தரிசனத்திற்கு வந்தனர். ஒரு நாள் பாபா அவர்களில் ஒரு குழுவிற்கு இவ்வாறு விளக்கினார்:

**நல்லதோ தீயதோ, திரைப்படங்களின் உலகம், உண்மை என்று கருதப்படும் பெரிய உலகத்திற்குள் பரவலாக வளர்ந்துள்ளது. ஆனால் திரைப்பட உலகம் 'உண்மையான' பொருளுலகத்திற்கு அந்நியமானது அல்ல - இவை இரண்டும் மிகவும் நெருக்கமாக இணைக்கப்பட்டுள்ளன, ஒரே**

நூலால் கோர்க்கப்பட்டவையாகக் காணப்படுகின்றன. எல்லோரும், ஒரு வகையில், ஒரு நடிகர்; மேலும், உலகம் என்பது பெரும்பாலும், கவிஞர்கள் மற்றும் தத்துவவாதிகளால் அரங்கேற்றப்படும் மேடை நாடகங்களுடன் ஒப்பிடப்படுகிறது. உண்மையாகச் சொல்லப்போனால், நவீன வாழ்க்கையில் நிகழும் 'செயல் முறைகள்' அர்த்தமற்றவை, ஆனால் வெறும் 'நடிப்பு' என்று கூறும் வேளையில், திரைப்பட உலகம் மட்டுமே போலியாக நடக்கிற ஒன்று என்று கருதுவதற்கு, பரந்து விரிந்த இப்பூவுலகில் எந்த ஆதாரமும் இல்லை.

திரையுலகில், நடிகன் தனக்கு முன் இருக்கும் ஒப்பனை முறைப்படி சிந்திக்கவும், உணரவும், செயல்படவும் வேண்டும் - அது தற்காலிகமாக இருந்தாலும், அவர் சித்தரிக்கும் கதாபாத்திரத்தின் ஆளுமையை பிரதிபலிக்க வேண்டியது அவசியம். திரைப்பட உலகிற்கு வெளியே உள்ளவர்கள், அவர்களால் எதிர்பார்க்கப்படும் வழக்கமான வாழ்க்கை முறையைப் பின்பற்றுவதற்குப் போராடும் வேளையில், தங்களுடைய உள்ளார்ந்த தனிப்பட்ட வெளிப்பாட்டை இயக்க முடியாமல் சிரமப்படுவது, மிகையான அளவிற்கு உண்மை என்றே கூறலாம். இது அடையாளப்பூர்வமாக மட்டுமின்றி, சொல்லர்த்தமாகவும் உள்ளது. கண்ணாடியில் பார்க்கும்போது, மக்கள் பெரும்பாலும் தங்கள் கண்களால் அல்லாமல், பிறரின் கண்களால் தங்களைப் பார்க்கிறார்கள். இவ்வாறு, கண்ணாடியில் பிரதிபலித்த பிம்பம் அவர்களின் மனதில், அவர்கள் பிறர் மீது ஏற்படுத்தும் அபிப்ராயத்தையும், பிறர் அவர்கள் மீது வைத்திருக்கும் எதிர்பார்ப்புகளையும் தூண்டுகிறது - மேலும் அவர்கள் வகிக்கும் பங்கைப் பார்க்க முயற்சிப்பதே இறுதியில், பெரும்பாலானவர்கள் செய்ய முடியும் ஒன்றாக அமைகிறது. எனவே, கண்ணாடி என்பது நவீன வாழ்க்கையின் ஒரு தவிர்க்க முடியாத பகுதியாக மாறிவிட்டது; இதனால், இந்தக் காலகட்டத்தை நாம் கிட்டத்தட்ட 'கண்ணாடி-நாகரிகம்' என்று பெயரிடலாம்.

நடிகர் ஒரு ராஜாவின் பங்கை வகிக்கும் போது, அது ஒரு மாயை என்று அவருக்குத் தெரியும், இருந்தாலும் ஒரு விதத்தில், எந்த மாயையையும் பற்றி அறியாத வெளி உலகில், அவர் நிஜமான ராஜாவைக் காட்டிலும், மிகையான நன்மையைப் (பேரும், புகழும்) பெறுகிறார். இருப்பினும், இருதரப்பினரும் உண்மைப்பொருளான ஏக இறைவனைக் கண்டுகொள்ளத் தவறியதில் ஒரே அளவில் உதவியற்றவர்களாக உள்ளார்கள். ஒரு பேரரசர் அல்லது சீர்திருத்தவாதியின் பாத்திரத்தில் நடிக்கும் நடிகரை, அவர் பொய்யும் போலியுமானவர் என்று ஒருவரும் கண்டனம் செய்வதில்லை, ஏனெனில் அவர் இல்லாத ஒன்றை இருப்பது போல தோன்றச் செய்தாலும், அவரது நேர்மையானது ஒரு பொருட்டாக எடுத்துக் கொள்ளப்படுகிறது; மேலும், அவர் ஒரு பாத்திரத்தில் நடிக்கிறார் என்பது அவரது பார்வையாளர்களுக்குத் தெரியும். ஆனால் மேடை மற்றும் திரை உலகிற்கு வெளியே பலர் உள்ளனர், அவர்கள் உண்மையான வாழ்க்கையில், அவர்கள் உண்மையில் என்னவாக இருக்கிறார்களோ

அவ்வாறு தோன்றுவதில்லை. முதல் ரகம் தங்கள் படைப்பின் திரையில் இருக்கும் அதே வேளையில், இரண்டாவது ரகம் தங்கள் படைப்பின் திரைக்குப் பின்னால் இருக்கின்றனர்.

எந்தவொரு நடிகருக்கும், தவிர்க்க முடியாத குறிப்பிட்ட உரிமைகள், வாய்ப்புகள், கடமைகள் மற்றும் ஆற்றல்கள் உள்ளன. ஒரு நடிகர், தொழில்நுட்ப ரீதியாக தனது பங்கில் குறையற்றவராக இருக்கலாம், அவர் தனது உள்ளார்ந்த ஆன்மீக ஆற்றலைத் தவிர்க்க முயற்சித்தால், அவர் முக்கியமற்றவர் மற்றும் பயனற்றவராகி விடுகிறார். திரைப்பட உலகம், அது மிகப்பெரிய அளவிலான ஈர்ப்பையும், தோற்றத்தையும் உருவாக்கும் தருணத்தில், பொருளுலகத்திற்கான அதன் கடமைகளிலிருந்து தப்பிக்க முடியாது, மேலும் இந்தக் கடமைகள், பணம் சம்பாதிக்கும் ஆசையை விட, அதன் ஆன்மீகத் திறனை வெளிப்படுத்துவதாக இருக்க வேண்டும். திரைக்கதை எழுத்தாளர்கள், தயாரிப்பாளர்கள் மற்றும் நடிகர்கள் தங்கள் கலைநயத்தை, வெறுமனே அல்லது முக்கியமாக வணிகமாகப் பார்க்காமல், அவர்களின் ஆன்மீகத் திறனை உணர வேண்டும். அவர்கள் இதை எவ்வளவு தெளிவாக உணர்ந்து கொள்கிறார்களோ, அவ்வளவு கண்ணியமாகவும் திருப்திகரமாகவும் அவர்களின் முயற்சிகளின் விளைவுகள் இருக்கும், மேலும் அவர்களின் வங்கிக் கணக்குகளைப் பற்றி சொல்லப்படாவிட்டாலும், அவர்களுடனான உள் (ஆத்மார்த்தமான) கணக்கு மிகவும் மகிழ்ச்சி நிறைந்ததாக இருக்கும். இந்த ஆன்மீகத் திறனுக்கு, திரையுலகம் அதிக முக்கியத்துவம் கொடுக்க முடியாவிட்டால் அல்லது கொடுக்காவிட்டால் அது தோல்வியைத்தான் சந்திக்கும்.

வாழ்க்கையின் அழுத்தத்திலிருந்து ஓய்வெடுப்பதற்கும், பேராசை மற்றும் போர் சூழ்நிலைகளால் விளையும் பாதுகாப்பின்மை உணர்வைக் குறைப்பதற்காகவும், உள்ளளவிலான வெறுமையை நிரப்ப முயற்சிப்பதற்கும், சாதாரண மனிதன் பொழுதுபோக்கை நோக்கி தனது உள்ளுணர்வை, உடனடியாகத் திசைதிருப்புகிறான். திரையுலகம் இதைப் பெரிய அளவில் வழங்குகிறது. ஆதலால், எண்ணற்ற மக்களின் வாழ்வில் தாக்கத்தை ஏற்படுத்தும் மிகப் பெரிய வாய்ப்புகளில் ஒன்றான திரையுலகம், தனது ஆன்மீக ஆற்றலை முழுமையாகப் பயன்படுத்துகிறதா, அதனால் மனிதன் ஏக இறைவனான உண்மைப்பொருளைத் தேடுவதற்கு உதவுகிறதா, அல்லது அது வெறுமனே பொய்யான இன்பத்திற்கு ஆளாக்குக்கிறதா; மேலும், நாளைய உலகத்தின் பொறுப்புகளை எதிர்கொள்ள இளைஞர்களை ஊக்குவித்து, உத்வேகத்தைத் தூண்டுகிறதா அல்லது அளவுக்கதிகமான பாலியல் மற்றும் வன்முறை நிறைந்த திரைப்படங்களின் மூலம் இளைஞர்களின் உள் வளர்ச்சியைத் தடுக்கிறதா, அது மனிதனின் ஆன்மீகம் மற்றும் மேம்பாட்டிற்கான உள்ளார்ந்த தாகத்தைத் தணிக்க உதவாமல், செல்வம், பெயர், புகழ் போன்றவற்றை அடைய முயற்சிக்கிறதா என்று தன்னைத்தானே கேட்டுக்கொள்ள வேண்டும்.

ஏக இறைவன் எனும் ‘பிரிக்க முடியாத’ உண்மைப்பொருளிலிருந்துதான் ஒவ்வொரு பிரச்சினைக்கும் சரியான தீர்வு கிடைக்கும். கருத்தியல் மற்றும் நடைமுறை, செயற்கை மற்றும் இயற்கை, உண்மை மற்றும் பொய் ஆகியவற்றிற்கு இடையே உள்ள தவறான வேறுபாடுகளை பெரிதாக்குவதன் மூலம், வாழ்க்கையின் ஒற்றுமையில் எந்தவிதமான இயற்கைக்குப் புறம்பான பிளவுகளும் இருக்க முடியாது. ஏக இறைவன் எனும் ‘பிரிக்க முடியாத’ இறை வாழ்வின் ஒவ்வொரு அம்சத்தின் முக்கியத்துவமும், அடிப்படையான ஒற்றுமையில் இருக்க வேண்டும், வெளியளவிலான வேறுபாடுகளில் அல்ல - மேலும் இது, உள்ளார்ந்த ஆற்றலில், வெளி உலகில் உள்ளவர்களைப் போலவே, திரைப்பட உலகில் உள்ளவர்களுக்கும் பொருந்தும்.

உங்கள் உண்மையான இறை வாழ்வின் சிறந்த துவக்கம் தெய்வீக அன்பு - அது, வரையறுக்கப்பட்ட ‘நான்’ எனும் சுயத்தை எரிப்பது, அனைத்து அச்சங்களையும் நிராயுதபாணியாக்குகிறது, சபலம் நிறைந்த கவர்ச்சிப் பொருளுக்கு அப்பாற்பட்டது, காமம் மற்றும் பொறாமையின் குரல்களுக்கு செவிசாய்க்காதது, இது எல்லையற்ற ஆன்மீக ஆற்றலை வெளிப்படுத்துவது. திரையுலகில் இருப்பவர்களும், மனிதனுக்குள் இருக்கும் உயர் நிலையை எய்தும் ஏக்கம் நிறைந்த வாழ்வின் தெய்வீக விளையாட்டில், தங்களுடைய பங்கை தடையின்றி ஆற்ற வேண்டும். அப்போதுதான் அவர்கள் உண்மையான அழகைக் காண முடியும்; அப்போதுதான் அவர்களால் அதை முழுமையாக வெளிப்படுத்தவும் முடியும்.

திரைப்பட உலக மக்களின் ஆன்மீக ஆற்றல், வெளி உலக மக்களோடு ஒப்பிடுகையில், எந்த வகையிலும் வேறுபட்டதாக இல்லை என்றாலும், பெரும்பாலும் வித்தியாசமாக வெளிப்படுத்தப்பட வேண்டும். நீங்கள் ஒரு நடிகராக இருந்தாலும், தெய்வீகத்தை அனுபவித்து வெளிப்படுத்தலாம். திரைப்பட உலகில் மற்றும் அதன் மூலம், நீங்கள் கற்றுக்கொள்ளும் அதே வேளையில், கற்பிக்கவும் செய்யலாம். ஆனால் உங்களுக்குள் அன்பு அல்லது மகிழ்ச்சி, உண்மை அல்லது மனநிறைவு போன்றவற்றை நீங்கள் காணவில்லையென்றால், அவற்றை உங்கள் பார்வையாளர்களுக்கு உண்மையிலேயே வழங்க முடியாது. நீங்களாக உத்வேகத்தை அடையப் பெறாதவரை, உங்களால் பிறரை ஊக்கப்படுத்த முடியாது. அன்பு, உங்கள் உள்ளங்களில் ஊடுருவாத வரை, உணர்ச்சியற்ற உலக மக்களின் உள்ளங்களில், உங்களால் அன்பை எழுச்சியுறச் செய்ய முடியாது.

உண்மையான, உயிரூட்டமிக்க அழகு, தனக்குள் இருக்கும் ஆன்மீக ஆற்றலைக் கண்டறிந்து, வெளியிடுவதன் மூலம் மட்டுமே வெளிப்படுத்தப்படுகிறது என்பதை நடிகர் உணர வேண்டும். இளைஞர்களிடம் இயற்கையாகவே வெளிப்படும் புத்தம் புதிய, ஒளிரும் அழகை, யுக்தி அல்லது கைத்திறன் மூலம் அதிக அளவில் உருவாக்க முடியும் என்பதில்

**சந்தேகமில்லை. ஆனால் இத்தகைய யுக்தி அல்லது கைத்திறன், கலை ஆகாது. இதுபோன்ற நிலையற்ற அழகை உண்மையான அழகோடு ஒப்பிடுகையில், இரண்டும் இரு துருவங்கள். தொலைதூர முன்னோக்குப் பார்வை இல்லாமல், உங்கள் கலை ஆழ்ந்த உள்ளுணர்வின்றி மேலோட்டமாகவே இருக்கும்; எனவே இறை ஞானிகளிடமிருந்து அந்த முன்னோக்குப் பார்வையைப் பெறத் தயங்க வேண்டாம். இது உங்களுக்கு ஓர் உயிரூட்டமிக்க உத்வேகத்தை நல்கும், உங்கள் வாழ்க்கையில் தன்னிறைவைக் கொணரும்.**

**எனவே திரைப்பட உலகிற்கு எனது செய்தி:**

**கலைக்கூட** (GALLARY) **பார்வையாளர்களுக்காகவோ அல்லது பணத்திற்காகவோ** (SALARY) **நடிக்க வேண்டாம், ஆனால் உள்ளத்தின் உள்ளே உள்ள அளவிறுதியற்ற ஏக இறைவனுக்காக நடிப்புத் திறனை வெளிப்படுத்துங்கள். கடவுளின் முன்னிலையில் வாழுங்கள், உங்கள் பங்கைச் செய்யும் போதும், உங்களோடு அங்கம் வகிப்பவர்களுக்கும், முதலாளிகளுக்கும், மேலும் பிரிக்க முடியாத ஏக இறைவனின் ஓர் அங்கமாகத் திகழும் உங்களுக்கும் நீங்கள் உண்மையாக இருக்க முடியும். உலகம் ஒரு நாடக மேடை என்றால், கடவுள் மட்டுமே அதன் தயாரிப்பாளர், நீங்கள் அவருடன் ஒற்றிணைந்து இருக்காவிடில், நீங்கள் ஒரு சிறிய நடிகராக இருப்பதைத் தவிர, வேறு எவராகவும் இருக்க முடியாது.**

'பீம்ஸ்' (BEAMS) புத்தகத்திற்கான கையெழுத்துப் பிரதியை டாக்டர் தேஷ்முக் தயாரித்து முடித்திருந்தார்; மேலும் 'மறுசீரமைக்கப்பட்ட ஸூ:ஃபியிஸம்' (SUFISM REORIENTED) மூலம் வெளியிடுவதற்காக அமெரிக்காவிற்கு எடுத்துச் செல்லும் நோக்கத்தில் ராமகிருஷ்ணனிடம் தட்டச்சு செய்ய கொடுக்கப்பட்டது. ராமகிருஷ்ணன் 1958 மே 13 இரவு அதை முடித்து, அட்டையுடன் புத்தக வடிவில், அவர் பாபாவிடம் கொடுத்தார், பாபா அவரது பணியையும், முயற்சியையும் பாராட்டினார்.

ராமகிருஷ்ணனிடம் பாபா, "**நேற்று இரவு எத்தனை மணிக்குத் தூங்கச் சென்றீர்கள்? எத்தனை மணிக்கு எழுந்தீர்கள்? என்ன உண்டீர்கள்?**" என்று கேட்டதற்கு, அதிகாலை 2:30 மணிக்குத் தூங்கச் சென்றதாக ராமகிருஷ்ணன் கூறினார். பாபா, கவலை தோய்ந்த முகத்துடன், அன்று இரவு சீக்கிரமாகவே ஓய்வு பெறுமாறு அறிவுறுத்தினார். "**இது என் உத்தரவு**" என்று அவர் மேலும் கூறியபோது, ராமகிருஷ்ணன் அதற்கு இணங்குவதாக தலையசைத்தார்.

அன்று பாபாவின் முன்னிலையில் மண்டலியுடன் சில அன்பர்களும் அமர்ந்திருந்தனர். ராமகிருஷ்ணன் கதவுக்கு அருகில் ஒரு நாற்காலியில் அமர்ந்திருந்தார். திடீரென பாபா அவரிடம், "**நீங்கள் என்னிடம் சரணடைந்து விட்டீர்களா?**" என வினவியதும், அவர் தன்னிச்சையாக 'ஆம்' என்று பதிலளித்தார். பாபா ஆச்சரியத்தை வெளிப்படுத்தி, பின்னர், அவரது கட்டைவிரல் மற்றும் ஆள்காட்டி விரலை ஒன்றாக இணைத்து 'உத்தமம்' என்ற அர்த்தத்தில்

ஒரு வட்டத்தை சைகையால் காட்டினார். பாபா அதையே மண்டலியிடமும் கேட்கத் தொடங்கினார். ஒவ்வொரு மண்டலியும் 'இல்லை' என எதிர்மறையாக பதிலளித்தனர்.

பதில்களைக் கேட்ட ராமகிருஷ்ணன் திகைத்துப் போனார். அவர் நினைத்தார்: "இது எவ்வளவு விசித்திரம். இத்தனை ஆண்டுகளாக பாபாவுடன் இருந்து, அவருடைய கட்டளைகளுக்கு இடைவிடாது பணிந்து, ஓயாது அவருக்கு சேவைபுரியும் இந்த மனிதர்கள் - எல்லாவற்றையும் விட்டுவிட்டு அவரைப் பின்பற்றுபவர்கள், அவரிடம் சரணடையவில்லை என்றால், வேறு யார்தான் சரணடைய முடியும்?" உடனே, மண்டலி தன்னைக் கேலி செய்கிறார்களா என்ற எண்ணம் அவர் மனதில் அலை மோதியது.

ஆனால் மண்டலியிடம் கேட்ட பிறகு, பாபா, "**ஒருவரேனும் என்னிடம் சரணடைந்ததில் நான் மகிழ்ச்சியடைகிறேன்**" என்று குறிப்பிட்டார். பாபா அப்போது சீட்டு விளையாடத் தொடங்கினார். சிறிது நேரம் கழித்து, அடுத்த அறையில் தேநீர் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டதும், விரைவாக, பெரும்பாலான அனைவரும் அறையை விட்டு வெளியேறினர். ராமகிருஷ்ணன் அங்கேயே அமர்ந்திருந்தார், பாபா அவரையும் தேநீர் அருந்தச் செல்லுமாறு சைகையால் தெரிவித்தார். சில நிமிடங்களில் அனைவரும் அறைக்கு அழைக்கப்பட்டனர். பாபா வராண்டாவில் கோஹெருடன் நின்று கொண்டிருந்தார்; அவரது முகம் கோபத்தால் சிவந்திருந்தது. "**எல்லோரும் என்னை விட்டுவிட்டு தேநீர் அருந்தச் சென்றுவிட்டனர்!**" ராமகிருஷ்ணனை நேருக்கு நேராகப் பார்த்து, "**அவர்கள் அனைவரும் என்னிடம் சரண் அடைந்துவிட்டார்கள் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?**" என்று சைகையால் வினவினார். ராமகிருஷ்ணன் இன்னமும் பாபாவின் வழிமுறைகளுக்குப் பழக்கமாகததால், குழப்பமடைந்தார்.

சிறிது நேரத்தில் பாபா அமைதியானார். ஆதி சீனியர் அப்போது அங்கு வந்து, பாபாவிடம் சில பணிகளைப் பற்றி விவாதித்தார். ஆதி கிர்கியில் ராமகிருஷ்ணனின் வீட்டில் அனறிரவு தங்கயிருந்ததால், அவருடன் சென்றார். அன்று மாலையில் ஏதோ வேலை நிமித்தம் இருவரும் வெளியே சென்றுவிட்டு, இரவு 10.30 மணியளவில் திரும்பி வந்தனர். மறுநாள் அதிகாலையில் குருபிரசாத்திற்குச் சென்ற ஆதி, உடனடியாக திரும்பி வந்து, ராமகிருஷ்ணனிடம், "**நீங்கள் பாபாவிற்குக் கீழ்ப்படியவில்லை என்று அவர் கூறினார்**" என்பதைக் கூறிவிட்டு திரும்பிச் சென்றார். அப்போதுதான், முந்தைய நாள் இரவு சீக்கிரம் தூங்கச் செல்ல வேண்டும் என்று பாபா கட்டளையிட்டதை ராமகிருஷ்ணன் நினைவு கூர்ந்தார். இயற்கையாகவே, அவர் மிகவும் கவலையடைந்தார். ராமகிருஷ்ணன் அவரது பணியை முடித்து மதியம் 12.30 மணிக்கு வீடு திரும்பினார். அன்றைய தினம் தாதி, மெஹர்ஜியுடன் ஸ்கூட்டரில் வந்து தெரிவித்தார்: "**கவலைப்படாதீர்கள் என்று பாபா கூறினார். அவர் உங்களை மன்னித்துவிட்டார்.**"



**மர்டில் பீச்** (MYRTLE BEACH) **1958**



டான்கின், எரச், ஆதி சீனியர், நரிமன்,

மும்பை விமான நிலையம் - **15** மே **1958**

(DONKIN, ERUCH, ADI SENIOR, NARIMAN, MUMBAI AIRPORT, 15 MAY 1958)

# மர்டில் பீச் சகவாசம்

(**Myrtle Beach Sahavas**)

**1958 மே 15** அன்று, மெஹர் பாபா, அவரது இறுதி அயல் நாட்டுப் பயணம் என்று பின்னர் அறியப்பட்ட இந்தப் பயணத்திற்காக, இந்தியாவை விட்டு வெளியேறினார். பாபா, பெண் மண்டலியுடன் பூனாவிலிருந்து மும்பைக்கு, மெஹர்ஜியின் ஷெவர்லே காரில் அழைத்துச் செல்லப்பட்டார். ஆண் மண்டலி, நரிமன் மற்றும் ஆதியின் கார்களில் பின்தொடர்ந்தனர். அதே இரவில், பாபா, எரச், ஆதி சீனியர், நரிமன், டாக்டர் டான் ஆகியோருடன், ஸான்ட குரூஸ் விமான நிலையத்திலிருந்து (SANTA CRUZ AIRPORT) மதியம் **12:10** மணிக்கு, டி.டபில்யூ.ஏ. விமானம் **881** (TWA FLIGHT 881) வழியாக நியூயார்க் (NEW YORK) சென்றார். (பெண் மண்டலி **18**ஆம் தேதி, பாவ் கல்சூரியைப் போலவே, மெஹராஸாத் திரும்பிச் சென்றனர்). மும்பை, பூனா, நவ்ஸாரி நகர்களிலிருந்து பாபாவிற்குப் பிரியாவிடை அளிக்க வந்த அன்பர்களை அவர் சந்தித்து, அனைவரையும் மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்தினார். பாபாவும் மகிழ்ச்சியான மனநிலையில் காணப்பட்டார். விமான நிலையத்தில், பாபா, ஏற்கனவே அறிவுறுத்தியதற்கு மாறாக, அவருக்கு மாலைகள் அணிவித்து, ஆரத்தி நிகழ்த்தப்பட்டது. முழுக் குழுவும் பாபாவையே பார்த்துக் கொண்டிருந்த போது, பாபா, "**ஏன் என்னைப் பார்க்கிறீர்கள்; என் அளவிறுதியற்ற நிலையைப் பாருங்கள்!**" என்றார்.

அவர் மேலும் கூறினார், "**நான் ஒருபோதும் வருவதுமில்லை, போவதுமில்லை; நான் எப்பொழுதும் எனது நேர்மையான அன்பர்களின் இதயங்களில் வீற்றிருக்கிறேன்.**"

கெய்ரோ (CAIRO) நகரில் ஒரு மணி நேரம் நின்ற பின்னர், அவர்கள் பயணத்தைத் தொடர்ந்தனர். ரோம் (ROME) நகரில் அவர்கள் விமானங்களை மாற்ற வேண்டியிருந்ததால், நான்கரை மணி நேர இடைவெளி இருந்தது. மூன்று அல்லது நான்கு மணி நேரம் நாம் என்ன செய்யப் போகிறோம் என்று பாபா கேட்டார். ரோம் விமான நிலையத்தில் 'பைலட் ரேடியோ' (PILOT RADIO) மூலமாக, நோயாளி ஓய்வெடுக்கும் விதத்தில், ஓர் அறைக்கான ஏற்பாடுகளைச் செய்யும் முனைப்பில் டாக்டர் டான் ஈடுபட்டார். இத்தாலிய மொழியில் பேசிய டான், அவர் ஒரு பிரிட்டிஷ் மருத்துவர், மிகவும் முக்கியமான நபரின் பொறுப்பில் இருப்பதாகக் கூறி, அதிகாரிகளின் கவனத்தை ஈர்த்தார். சற்றே நேரத்தில், சக்கர நாற்காலியுடன் அங்கு வந்த இரண்டு உதவியாளர்கள் அவர்களை சந்தித்தனர்; அவர்கள் சக்கர நாற்காலியில் பாபாவை அழைத்துச் செல்வதாகச் சொன்னாலும், எரச், பாபாவை அழைத்துச் செல்ல விரும்புவதாக வலியுறுத்தினார். வந்தவர்கள் ஆங்கிலம் பேசவில்லை, டான் மட்டுமே இத்தாலிய மொழியில் உரையாடினார். பாபாவை வெளியில் ஒரு நடைமேடையில் இருக்கச் செய்து, டாக்டர் டான் அறையைப் பார்க்கச் சென்றபோது, அவசர மருத்துவ ஊர்தி ஒலியெழுப்பி பாபாவின் அருகில் வந்து

நின்றது. இரண்டு நபர்கள் மிகவும் மென்மையாக ஆனால் உறுதியாக, பாபாவைத் தூக்குப் படுக்கையின் உதவியோடு, அவசர மருத்துவ ஊர்தியில் ஏற்றினர். அவர்கள் செய்வதைப் பார்த்து எரச் எதிர்ப்புத் தெரிவித்தார், ஆனால் மொழிப் பிரச்சினை காரணமாக அவர்கள் கூறியதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. எரச் உடனடியாக பாபாவின் அருகில் அவசர மருத்துவ ஊர்தியில் குதித்து ஏறினார், அவர்கள் மூன்று மைல் தொலைவில் அமைந்த மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

மருத்துவமனையில் ஓர் அறைக்கு பாபா அழைத்துச் செல்லப்பட்டதும், அவரை பரிசோதிக்க மருத்துவர் ஒருவர் வந்தார். “அவர் ஒரு நோயாளி அல்ல! எங்கள் விமானம் புறப்படும் வரை ஓய்வெடுக்க, ஓர் அறையை மட்டுமே நாங்கள் விரும்பினோம். சில மணிநேரங்களில் நாங்கள் அடுத்த விமானத்தில் சென்றாக வேண்டும், எனவே எங்களை சரியான நேரத்தில் அழைத்துச் செல்ல வேண்டும்” என்று எரச் விளக்க முயன்றார். பாபாவின் உடல் வெப்பநிலையை சோதித்த பின்பு, டாக்டரும் செவிலியரும் வெளியேறினர்; பாபா கதவைப் பூட்டுமாறு எரச்சிடம் சைகை செய்தார். அவர்கள் கை கால் முகத்தை சுத்தம் செய்து, பின்பு பாபா படுக்கையில் சாய்ந்து, ஒரு போர்வையால் தன்னை மூடிக்கொண்டார். டாக்டர் டான், நரிமன், ஆதி மூவரும் வந்து, இரண்டு மணி நேரம் அமர்ந்துவிட்டு, விமான நிலையம் திரும்பிச் சென்றனர்.

பாபா, சிறுநீர் கழிக்கும் விருப்பத்தைத் தெரிவித்தபோது, அவர் சக்கர நாற்காலியிலேயே அமர்ந்திருந்தார். அருகில் கழிப்பறைகள் எதுவும் இல்லை, மேலும், சக்கர நாற்காலி, கழிப்பறை முகப்புப் பகுதியில் நுழைந்து செல்ல வாய்ப்பில்லை. எரச் (இதுபோன்ற நோக்கங்களுக்காக, எப்பொழுதும் அலுமினியக் கோப்பை ஒன்றை உடன் எடுத்துச் செல்வது வழக்கம்) இதர மண்டலியிடம் ஒரு தொலைபேசி சாவடியின் இரு பக்கங்களையும் ஆக்கிரமிக்கச் சொல்லி, அவர் பாபாவை நடுவில் சக்கர நாற்காலியில் தள்ளிச் சென்று, கழிப்பறைக்குள் எரச், கோப்பையில் சிறுநீர் கழிக்க பாபாவிற்கு உதவிய வேளையில், எரச் தொலைபேசியில் பேசுவது போல பாவனை செய்து, அதைச் செய்ய முடிந்தது.

தொடர்ந்து மாலை 6:45 மணிக்கு, அவர்கள் நியூயார்க் நகருக்குச் செல்லும் டி.டபில்யூ.ஏ. விமானம் 801இல் ஏறினர், அது ‘ஐடில்வைல்ட்’ (IDLEWILD) - இப்போது கென்னடி (KENNEDY) என்று அழைக்கப்படுகிறது - விமான நிலையத்தில் மூன்று மணி நேரம் தாமதமாக மே 17, சனிக்கிழமை காலை 9:30 மணிக்குத் தரை இறங்கியது. பாபாவின் அறிவுறுத்தலின்படி, அவர்களை எவரும் விமான நிலையத்தில் சந்திக்கவில்லை (சுங்க சோதனையில் அவர்களுக்கு உதவிய ஜே கொரினெட்டைத் தவிர - JAY CORRINET). அவர்கள், மறுபடியும் காலை 10.50 மணிக்கு, வடக்குக் கரோலினாவின் வில்மிங்டன் நகருக்கு (WILMINGTON NORTH CAROLINA), தேசிய விமானம் 325 (NATIONAL FLIGHT 325) வழியாக பயணத்தைத் தொடர்ந்து, மாலை 3:30 மணிக்குத் தரையிறங்கினர். அங்கிருந்து பாபாவை மர்டில் பீச் மையத்திற்கு அழைத்துச் சென்ற வேளையில், எலிஸபெத், கிட்டி மற்றும் சில நெருங்கிய அன்பர்கள் பாபாவிற்கு அன்பான வரவேற்பு

அளித்தனர். சகவாசத்தில் கலந்து கொண்டவர்களில் பெரும்பாலோர் 19ஆம் தேதிக்கு முன்பு மர்டில் பீச் மையத்திற்கு வர வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டனர்.

பலமுறை இந்தப் பயணம் தள்ளிவைக்கப்பட்டாலும், மர்டில் பீச் மையத்திற்கு, இது பாபாவின் மூன்றாவது வருகையாகும். இங்கிலாந்து, ஃபிரான்ஸ், ஸ்விட்சர்லாந்து, இஸ்ரேல், மெக்ஸிக்கோ மற்றும் அமெரிக்காவின் பல்வேறு பகுதிகளிலிருந்து இருநூற்று பதினைந்து 'பறவைகள்' வரத் தொடங்கின. சார்லஸ் பர்டம் (CHARLES PURDOM), டிலியா டிலியோன் (DELIA DELEON), அனிதா வியய்யார்ட் (ANITA VIEILLARD), ஹெடி மெர்டென்ஸ் (HEDI MERTENS), மார்கரெட் க்ராஸ்கே (MARGARET CRASKE), டார்வின் மற்றும் ஜீன் ஷா (DARWIN & JEANNE SHAW), எனிட் கோர்ஃப் (ENID CORFE), ஸாம் கோஹென் (SAM COHEN), ஜான் பாஸ் (JOHN BASS) போன்ற நீண்டகால அன்பர்களும், ஃபிலிஸ் ஃபிரடெரிக் (FILIS FREDERICK), அடெல் வோல்கின் (ADELE WOLKIN), ஃப்ரெட் & எல்லா வின்டர்ஃபெல்ட் (FRED & ELLA WINTERFELDT) போன்ற இடைக்கால அன்பர்களும் வந்தனர். ஐவி & சார்மியன் டியூஸ் (IVY & CHARMIAN DUCE), டான் ஸ்டீவன்ஸ் (DON STEVENS), ஆக்னஸ் பேரோன் (AGNES BARON), ஃப்ரெட் மார்க்ஸ் (FRED MARKS), ஜாய்ஸ் பர்ட் (JOYCE BIRD), மேரி பேரி (MARY PARRY), கென் & ஆலிஸ் லாட்டன் (KENN & ALICE LAWTON), ஹாரி கென்மோர் (HARRY KENMORE), ஹென்றி & கெச்சா கஷௌட்டி (HENRY & KECHA KASHOUTY) மற்றும் பலர் பாபாவின் 1952, 1956 வருகைகளின் போது அவரை சந்தித்தனர்.

இந்த விஜயத்தின் போது, பிரியமான பாபாவின் அரவணைப்பில், குறிப்பாக நெருக்கமாக வரவிருந்த ஒரு 'புதுமுகம்', பின்பு மர்டில் பீச் மெஹர் மையத்தின் வளர்ச்சியில் முக்கிய அங்கம் வகித்த 'ஜேன் பேரி ஹெய்ன்ஸ்' (JANE BARRY HAYNES) என்ற பெண்மணி ஆவார். ஜேன் 33, ஒரு நடிகை மற்றும் தயாரிப்பாளராக மேடை நாடகத் துறையில் தொழிலைத் தொடர்ந்தார். வடக்குக் கரோலினாவில் தனது குழந்தைப் பருவம் தொடங்கி வளர்ந்ததிலிருந்து, ஜேன் எப்பொழுதுமே மர்டில் பீச்சிற்குச் செல்ல வேண்டும் என்ற அதீத ஏக்கத்தைக் கொண்டிருந்தார் ('இது மெக்காவைப் போன்றது - ஏன் என்று எனக்குத் தெரியவில்லை.'), அதை அவர் இறுதியாக 1947ஆம் ஆண்டில் செய்ய முடிந்தது. பத்து ஆண்டுகளுக்குப் பிறகு, மர்டில் பீச் உள்ளூர் மேடை அரங்கங்களை நிர்வகிக்கும் வாய்ப்பு அவருக்கு வழங்கப்பட்டது. கணவரிடமிருந்து பிரிந்து, தனது மூன்று குழந்தைகளுடன் - இரண்டு மகன்கள், ஜான் (JOHN) & சார்லஸ் (CHARLES) மற்றும் ஒரு மகள், வெண்டி (WENDY) - மர்டில் பீச் செல்ல முடிவு செய்தார். அந்த நேரத்தில் 1957இல், ஒரு வளமான வாழ்க்கையை வாழ்ந்து வந்த போதிலும், சமீபத்தில் ஜேன், ஆழ்ந்த வெறுமையின் அதிர்ச்சிகரமான அனுபவத்திலிருந்து வெளிவர நேர்ந்தது. அவர் பின்பு கூறியதாவது:

அனைத்தும் ஒரே நேரத்தில் ஒன்றாக வந்தன. நான் உலகத்தால் மூடப்பட்டதாக உணர்ந்தேன். எனக்குக் கிடைக்காத உலக அனுபவம் இல்லை. ஓர் இரவு நான் என் ஆழ் இதயத்திலிருந்து, கிட்டத்தட்ட அடித்தளத்திலிருந்து

கூக்குரலிட்டேன்: “எனக்கு உதவுங்கள்! கடவுள் ஒருவர் இருப்பதானால் - நான் ஒவ்வோர் இரவும் பிரார்த்தனை செய்யும் இயேசுவே - தயவுசெய்து எனக்கு உதவுங்கள்.”

அடுத்தநாள், அவர் மர்டில் பீச்சிற்கு விமானத்தில் பயணம் செய்தார், ஜே.டி. ஸாலிங்கர் (J.D.SALINGER) என்ற எழுத்தாளரின் ‘ஃபிரானி அண்ட் ஜூயி’ (FRANNY AND ZOOEY) என்ற புத்தகத்தின் மூலம் அவர் தேடுதலுக்கான பதில்களைக் கண்டுகொள்ள முயன்றார். அந்தப் புத்தகம் ஆன்மீகப் பொக்கிஷங்களிலிருந்து பல மேற்கோள்களைக் கொண்டிருந்தது; மேலும் சூட்சும (பிராண) அறிவின் புதிய வாயில்களைத் திறந்தது போன்ற உணர்வை அடையப் பெற்றார்; அவருடைய வாழ்க்கையும், இதர அனைத்தும் கடவுளின் தெய்வீகத் திட்டத்தால் நிர்வகிக்கப்படுகின்றன என்பதை அவர் இப்போது புரிந்துகொண்டார்.

மர்டில் பீச்சில், ஜேன் காட்சி அரங்கம் ஒன்றைத் தன்வசப்படுத்தி, அதற்கு ‘கேரஸெல் ஸ்டார் தியேட்டர்’ (CAROUSEL STAR THEATER) என்று மறுபெயரிட்டார். பிரபல நகைச்சுவை நடிகையான ஸேஸூ பிட்ஸ் (ZAZU PITTS) ஒரு பழைய தோழியாக இருந்தவர், 1957ஆம் ஆண்டின் ‘புதிய மேடை நிகழ்ச்சி’ அமைப்பை அந்தப் பருவ காலத்தில் திறந்தார். அந்த ஆண்டு ஜூன் மாதத்தின் நடுப்பகுதியில் ஒரு நாள், நிகழ்ச்சி தொடங்கிய பிறகு, ஸேஸூ அப்பகுதியில் அமைந்த அழகான இல்லங்களில் சிலவற்றைப் பார்வையிட விருப்பம் தெரிவித்து, ஜேனும் அவருடன் செல்ல வேண்டும் என்று அவர் வற்புறுத்தினார். ஜேன் அவரது பணியில் மிகவும் மும்முரமாக இருந்தபோதிலும், இணக்கம் தெரிவித்து, திரைப்பட நட்சத்திரத்தை ஒரு பறவைக் கூடம் அமைந்த பங்களாவிற்கு - அங்கு மிஸ் யுனிவர்ஸ் அழகுப் போட்டி சில காலத்திற்கு முன்பு நடைபெற்றது - அழைத்துச் சென்றார். பிரையர்க்ளிஃபில் (BRIARCLIFFE) அமைந்த வீடு ஐலீன் கோட்ஸ் (EILEEN COATES) என்று அழைக்கப்பட்ட ஒரு கட்டிடக் கலைஞருக்குச் சொந்தமானது. அங்கிருந்த வேளையில், ஸேஸூ, திடீரென எதிர்பாராத விதத்தில் ஐலீனிடம், “தன்னை மெஹர் பாபா என்று அழைக்கும் இந்த குருநாதரை நீங்கள் அறிவீர்களா? நான் அவரைப் பார்க்க விரும்புகிறேன்” என்று கூறினார். ஹாலிவுட், மேரி பிக்ஃபோர்டிடமிருந்து (MARY PICKFORD) பாபாவைப் பற்றி ஸேஸூ கேள்விப்பட்டிருந்தார். நோரினா மேட்சபெல்லி இரண்டு நாட்களுக்கு முன்பு காலமானார். அவரது மரணம் மற்றும் மெஹர் பாபாவுடனான அவரது தொடர்பு குறித்து உள்ளூர் செய்தித்தாள்களில் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஐலீன் கோட்ஸ், எலிஸபெத்திற்கு அறிமுகமானவர்; 1956இல் பாபாவை சந்தித்தார். ஸேஸூ பிட்ஸ் இந்த வார்த்தைகளை உச்சரித்த தருணத்தில், ஜேனின் மனதில் இரண்டு நினைவுகள் விரைந்தோடின. 1952 மே மாதம் தனது தந்தையின் செய்தித்தாளில் அமெரிக்கா வருகை தந்த ஆன்மீக குருநாதர் ஒருவரைக் குறித்த கட்டுரையைப் பார்த்தது, அவருக்கு நினைவுக்கு வந்தது. அவர் தனது மாமியாருடன் மர்டில் பீச் வழியாக காரில் சென்றதை நினைவு கூர்ந்தார், இந்தியாவிலிருந்து ஒரு புனித மனிதர் அங்கு அமைந்த மையத்திற்கு வருகை தந்துள்ளதாகக் குறிப்பிட்டார்.

ஸேஸு, ஐலீன் இருவரும் மெஹர் மையத்திற்குச் செல்வதற்கான ஏற்பாடுகளைச் செய்வதை ஜேன் கேட்டதும், அவரும் செல்ல விரும்புவதாகக் கூறினார். அவர் 'ஆன்மீக ரகம்' (SPIRITUAL TYPE) அல்ல என்று எண்ணி ஐலீன் அவரைக் கண்டுகொள்ளவில்லை; ஜேன் அதைக் கேட்டு உள் குமுறலில் காரில் சென்று அமர்ந்தார். எவ்வாறாயினும், நிர்ணயிக்கப்பட்ட அந்த நாளில், ஐலீன், ஸேஸு பிட்ஸை உடன் அழைத்துச் செல்ல நாடக அரங்கத்திற்கு வந்தபோது, ஸேஸ் வேறு எங்கோ சென்றிருப்பதாகத் தெரியவந்தது. ஜேன் தயக்கத்துடன் அவர் இடத்தில் செல்லுமாறு வற்புறுத்தப்பட்டார். மர்டில் பீச் மையத்தில், எலிஸபெத் அவர்களை வரவேற்க சமையலறையிலிருந்து வெளியே வந்தார். ஜேன் இவ்வாறு நினைவு கூர்ந்தார்: "நான் உடனடியாக அந்த இடத்தின் அமைதி, மகிழ்ச்சி மற்றும் அழகை உணர்ந்தேன். 'இது உண்மையில் ஏதோ ஒன்று இல்லையா', என்று நான் நினைத்தேன்."

ஜேன் அடிக்கடி மர்டில் பீச் மையத்திற்கு வரத் தொடங்கியதைத் தொடர்ந்து, எலிஸபெத், கிட்டி இருவருடன் மிகவும் நெருக்கமாக இருந்து வந்தார். ஏற்கனவே குறிப்பிட்டபடி, நோரினா சமீபத்தில் காலமானார், வெளித்தோற்றத்தில் எலிஸபெத்தின் தோழியாக, பக்கத்துணையாக நோரினாவின் இடத்தில் ஜேன் இருக்க வேண்டும் என்று பாபா விரும்பினார்.

ஜேன், பாபாவின் வாழ்க்கையைப் பற்றி படிக்கத் தொடங்கினார், மேலும் எலிஸபெத், கிட்டி இருவரின் தன்னலமற்ற தன்மை, தூய்மை, அளப்பரிய அன்பு ஆகியவற்றால் பெரிதும் ஈர்க்கப்பட்டார். ஜேன் பின்பு நினைவு கூர்ந்தார்: "இந்த வார்த்தைகளை நான் ஒருபோதும் அனுபவித்ததில்லை, இந்த இலட்சியங்கள் அனுதின வாழ்க்கையில் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டன. இதை என்னால் தவிர்க்க முடியவில்லை." அவரது கிறிஸ்தவ பிரஸ்பைடிரியன் (CHRISTIAN PRESBYTERIAN) ஐயப்பாடுகள் இருந்தபோதிலும், 1920 ஆண்டுகளில் பாபாவின் நீளமான தலை முடியுடன் கூடிய இளம் வயது புகைப்படங்கள், இயேசு எப்படி இருந்திருப்பார் என்ற அவரது உருவத்தை மிகத்துல்லியமாக மனதில் பதிய வைத்தது.

இப்போது கிறிஸ்து தமது பௌதீக உருவில் மர்டில் பீச் மையத்திற்கு வந்துள்ளார். 1958 மே 19 திங்கட்கிழமை அதிகாலை, ஜேனின் தொலைபேசி மணி ஒலித்தது. எலிஸபெத்தின் குரல், "பாபா உங்களை அழைக்கிறார். அவர் இப்போது உங்களைப் பார்க்க விரும்புகிறார்" என்று கூறினார்.

ஜேன் குழம்பிப் போனார். "நான் இப்போது வர இயலாது," அவர் எலிஸபெத்திடம் கூறினார். "முதல் நாள் எவரும் வர அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்று நீங்கள் சொன்னீர்கள், அதைத் தவிர எனக்கு நிறைய வேலை உள்ளது...."

எலிஸபெத் மிகவும் அமைதியாக, "ஜேன், நான் உன்னிடம் ஒன்று சொல்ல விரும்புகிறேன், பாபா அழைத்தால், அதுதான் வரவேண்டிய சரியான நேரம்" என்றார்.

அவர் குரலில் ஏதோ ஒன்று தெரிந்தது, ஜேன் உடனடியாகப் புறப்பட்டுச் சென்றார். பாபா காலை 10:00 மணிக்கு லகூன் கேபினுக்கு வந்தபோது, ஜேன் அறைக்குள் நுழைந்தார். “நான் எனது மனதில் நினைத்தேன்: அவரைப் போல் அழகான எவரையும் நான் பார்த்ததில்லை. நான் பதட்டமாகவும் பயமாகவும் இருப்பேன் என்று நினைத்தேன், ஆனால் அவ்வாறு இல்லை. நான் மிகவும் நிதானமாக, நிம்மதியாக உணர்ந்தேன். பாபா மிகுந்த அன்புடனும், புரிதலுடனும் காணப்பட்டார். அவர் என்னை, நான் இருந்ததைப் போலவே ஏற்றுக்கொண்டார்.”

பாபா அமர்ந்து, அவரைத் தன் அருகில் அமருமாறு கூறினார். ஜேன், “நீங்கள் மிகவும் நன்றாக இருக்கிறீர்கள். உங்கள் உடல்நிலை சரியில்லை என்று கேள்விப்பட்டேன்” என்றார். பாபா, அவரை நேராகப் பார்க்காமல், வாசலைத் தாண்டிப் பார்த்தார். துன்பம் நிறைந்த முகத்தோற்றத்துடன், கை சைகையால் **“எனது துன்பம் எவருக்கும் புரியவில்லை”** என்று தெரிவித்தார். ஜேன் பாபாவின் கால்கள், கைகள் மற்றும் உடலைப் பார்த்ததை கவனித்து, பாபா, கையைத் தொட்டு, **”இந்தப் பௌதீக உடலைப் பார்க்காதீர்கள். இது பாபா அல்ல”** என்று குறிப்பிட்டார்.

எலிஸபெத் அவர்களுடன் இணைய அழைக்கப்பட்டார். பாபா அவரைக் கேலி செய்தார், **“பாபாவின் கைகளுக்கு எட்டியது ஜேன் பற்றிய கடிதங்கள் மட்டுமே.”**

சகவாசத்தில் கலந்துகொள்பவர்களுக்கு ‘மியுரியல் ஹூஸ்டனின் டிரிஃப்ட்வுட்’ (MURIEL HOUSTON’S DRIFTWOOD) உணவகம் மூலம் உணவு வழங்கப்பட்டது, மேலும், முன்பு ஜேன் ஒரு நண்பரிடம் குறிப்பிட்டார், “எனக்கு ‘மாஸ்டர்’ (குருநாதர்) என்றால் என்னவென்று தெரியாது, ஆனால் உணவு நன்றாக இருக்கும் என்று கேள்விப்பட்டேன்.”

திடீரென பாபா, ஜேனிடம், **“நீங்கள் ஏதேனும் சாப்பிட்டீர்களா?”** அவர் ‘இல்லை’ என்றதும், ஒளிரும் கண்களுடன் பாபா, **“போய் ஏதேனும் நல்ல உணவாக உண்ணுங்கள்”** என்றார். அவர் லகூன் கேபினை விட்டு வெளியேறி, சிறிது நேரம் கூட, டோனி ரூத்பெர்ட்டுடன் (TONI ROOTHBERT) சமையலறையில் அமர்ந்திருக்கவில்லை, அப்போது கிட்டி ஓடி வந்து, “நீங்கள் பாபாவின் பக்கத்தில் அமர வேண்டும் என்று அவர் கூறுகிறார். அனைவரையும் அங்கு அனுமதிக்கவும், நீங்கள் அவருடன் அமர வேண்டும் என்றும் முடிவு செய்துள்ளார்.

ஜேன், லகூன் கேபினுக்குத் திரும்பிச் சென்ற வேளையில், அங்கு அன்பர்கள் நுழைந்ததும், ஒவ்வொரு புதிய வருகையையும் அல்லது குழுவையும் பாபா வரவேற்றார். ஜேன், பாபாவின் அருகில் அமர்ந்து, அவர்களின் இறைவன் மற்றும் குருநாதரின் முன்னிலையில் வந்த புதிய முகங்களின் ஒளிரும் அற்புதமான தோற்றத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார். சிலர் சிரித்தனர், சிலர் அழுதனர், சிலர் தலை தாழ்த்தி வணங்கினர், சிலர் கைகளை அசைத்து அன்பை வெளிப்படுத்தினர்.

நியூயார்க் நகரிலிருந்து, பெரில் வில்லியம்ஸ் (BERYL WILLIAMS) என்ற கருப்பின அன்பர்களில் ஒருவர் உள்ளே வந்தபோது, சாதாரணமாக ஒரு பக்கமாக

மட்டுமே தழுவிய பாபா, அந்தப் பெண்மணியை இருபுறமும் தழுவி, ஸோஃபாவில் தனதருகில் அமருமாறு கேட்டுக்கொண்டார். அவர் அவ்வாறு செய்யும்போது, பாபா, ஜேனை நோக்கிப் பார்வையைத் திருப்பிய அந்த கணத்தில், கறுப்பர்களுக்கு எதிரான, தனது மனதில் ஆழமாக வேரூன்றிய தெற்கு இன பாரபட்சம் நிரந்தரமாகக் கரைந்து போவதை உணர்ந்தார்.

பாபா பின்னர் எலிஸபெத்திடம், '**ஜேன் தன் அருகில் அமர்ந்து என்ன நினைத்துக் கொண்டிருந்தார்?**' என்று கேட்டார். அதற்கு எலிஸபெத், "அது எனக்குத் தெரியாது பாபா, ஆனால் முழு நேரமும் அவர் உங்கள் முகத்திலிருந்து கண்களை விலக்கவில்லை" என்றார்.

இன்னமும் வராதவர்களைப் பற்றி ஏற்கனவே அங்கிருந்த அன்பர்களிடம் பாபா தொடர்ந்து விசாரித்தார்: சிலரின் பெயர்களைக் குறிப்பிட்டு '**அவர்கள் எப்போது வருவார்கள்?... அவர்கள் நிச்சயமாக வருவார்களா?... நீங்கள் அவர்களுடன் கடைசியாக எப்போது பேசினீர்கள்?... அவர்கள் எப்போது எதிர்பார்க்கப்படுகிறார்கள்?**" "தெரியாது" என்று ஒருவர் பின் ஒருவராக பதிலளித்தபோது, "**நான் 'தி வேஃபேரர்ஸ்'** (THE WAYFARERS - இறை பைத்தியங்கள்) **என்ற புத்தகத்தில் ஒரு புதிய அத்தியாயத்தை இணைக்கப் போகிறேன், 'எனக்குத் தெரியாது' என்று பதிலளிப்பவர்கள் அனைவரும் மஸ்தாக, இறை பைத்தியங்களாக, அதில் குறிப்பிடப்படுவார்கள்!**" என்று பாபா கேலி செய்தார்.

நியூயார்க் நகரிலிருந்து வந்த 25 அன்பர்கள் அடங்கிய குழு, மாலை சுமார் 4:30 மணிக்கு பாபாவால் வரவேற்கப்பட்ட கடைசி நபர்களாகும். பின்னர், எலிஸபெத், பாபாவை அவரது இல்லத்திற்கு அழைத்துச் சென்றார், இந்த விஜயத்தின் போது மண்டலியும் பாபாவுடன் தங்கியிருந்தனர்.

ஆரம்பத்தில் அங்கு வந்தவர்களில் ஒருவரிடம், "**நான் இனி அமெரிக்காவிற்குத் திரும்பி வர மாட்டேன்**" என்று பாபா கூறினார்.

"பாபா, நீங்கள் அற்புதமாகத் தோன்றுகிறீர்கள்" என்று ஒருவர் சொன்னபோது, "**எனக்கு இடுப்பு வலி மற்றும் ஜுரம் உள்ளது, ஆனால் நான் தொடர்ந்து அனுபவிக்கும் தெய்வீக ஆனந்தம் என்னைத் தாங்கிக் கொள்கிறது**" என்றார்.

பாபாவின் இல்லத்தில், மண்டலி பின்வரும் கால அட்டவணைப்படி இரவு கண்காணிப்புப் பணியைப் பகிர்ந்து கொண்டனர்:

மாலை 6:00 - இரவு 10:00 வரை - எரச்

இரவு 10:00 - நள்ளிரவு 12.00 மணி வரை. - டாக்டர் டான்

நள்ளிரவு 12.00 - அதிகாலை 3:00 வரை - நரிமன்

அதிகாலை 3:00 - காலை 6:00 வரை - ஆதி

1958 மே 20 செவ்வாய்க்கிழமை காலை 'பார்ன்' கொட்டகையில் மேற்கத்திய அன்பர்கள் ஒன்று திரண்டனர். பாபா ஒரு தூக்கு நாற்காலி மூலமாக உள்ளே அழைத்துச் செல்லப்பட்டார். முந்தைய நாள் தாமதமாக வந்தவர்களை வாழ்த்திவிட்டு பாபா கூறினார்: "**சகவாசம் என்றால் என்ன? அது**

**கடவுளுடனான தோழமை. நான் உங்கள் நிலைக்கு வருகிறேன் அல்லது நீங்கள் எனது உயர் நிலைக்கு வருகிறீர்கள் என்று அர்த்தம். நாம் ஒரே நிலையில் இல்லை. நான் உங்களிடம் வர வேண்டும் அல்லது நீங்கள் என்னிடம் வரவேண்டும். சகவாசத்தில் கடவுள் மனிதனாக மாறுகிறார்.**"

மெஹராபாத்தில் நடந்த சகவாசத்தைக் குறிப்பிட்டு பாபா கூறுகையில்: "**சாவகாசமாக கால்களை நீட்டி, வசதியாக அமருங்கள். உங்கள் இல்லங்களில் இருப்பதைப் போல் உணருங்கள், ஏனெனில், நான் உங்கள் நிலைக்கு வந்துள்ளேன். நீங்கள் இங்கு உயிர் ரீதியாகவும், உடல் ரீதியாகவும் இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்**" என்றார்.

அவர் இந்தியாவில் நடந்த வாகன விபத்தை விவரித்தார், "**எரச், தன்னை அந்த விபத்திற்குப் பொறுப்பாக உணர்ந்து, அவரையே குற்றம் சாட்டினார், ஆனால் எவரும் குற்றவாளி அல்ல. அனைத்தும், பல ஆண்டுகளுக்கு முன்னரே நிர்ணயிக்கப்பட்டது. நான் ஆதிகாலத்தவன், உலகின் துன்பத்தை நானே என் மீது ஏற்றுக்கொண்டேன். யார் ஒருவராலும் என்னைக் குணப்படுத்த முடியாது. விபத்து நடந்த அடுத்த கணமே, டான் மற்றும் பிறரிடம் நான் மீண்டும் நடக்க முடியாது என்று கூறினேன். நிபுணர்கள் என்னை ஆறு மாதங்களுக்குள் நடக்க வைப்பதாகச் சொன்னார்கள், ஆனால் அவர்கள் கூறியது தவறு என நிரூபணமானது... எனவே கடவுள் எவ்வாறு பணிபுரிகிறார் என்பதைப் பாருங்கள்!**"

மெஹராபாத் சகவாசத்தைப் பற்றி குறிப்பிடுகையில், பாபா, பெண்டுவிற்கு மூளையதிர்ச்சி ஏற்பட்டதாகவும், இடுப்பு எலும்பு முறிந்ததால் ஊன்றுகோல்களுடன் நகர்ந்ததாகவும் கூறினார்; என்றாலும், அவர் முழுச் செயல்பாடு மற்றும் ஏற்பாடுகளுக்கு பொறுப்பாக இருந்தார். பெண்டு, பாபாவிடம், "எனக்கு இரண்டு மாதங்கள் கொடுங்கள், நான் அனைத்து பணியையும் முடிக்கிறேன்" என்று கூறியிருந்தார். அதைப் பற்றி யோசிப்பதாக பாபா பதிலளித்தார். ஆதியிடம் போதிய பணம் இருந்தது, பெண்டுவிற்கு பொருட்களை வாங்க பணம் தேவைப்பட்டது, ஆனால் பாபா அவரை எச்சரித்தார், "**எதையும் இப்போது செலவு செய்யாதீர்கள். கடுமையான வலி காரணமாக, தொடர முடியாத சூழ்நிலையில், நான் நிகழ்ச்சியை ரத்து செய்யவும் வாய்ப்பு உள்ளது.**"

ஒரு நாள் பாபா மெஹராபாத்திற்குச் சென்று, "**கவலைப்படாதீர்கள், நாங்கள் பார்த்துக்கொள்வோம்**" என்று பெண்டுவிடம் தெரிவித்தார். 800 **பேருக்கு உணவு, தூங்குவதற்கு, தங்குவதற்கு போன்ற அனைத்து வசதிகளையும் வழங்குவதற்கான ஏற்பாடுகள் - செய்ய வேண்டிய பணிகள் பல இருந்தன. இது சகவாச தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர் இருந்த சூழ்நிலை. திட்டமிடப்பட்ட தேதிக்கு ஐந்து நாட்களுக்கு முன்னர், எதுவும் தொடங்கவில்லை. மண்டலி வெறித்தனமாக திக்குமுக்காடிப் போயினர், பெண்டுவிற்கு நரம்பு தளர்ச்சி ஏற்பட்டது.** அவரைத் தழுவிய பாபா,

**“கவலைப்படாதீர்கள்; எல்லாம் சீராகிவிடும். நான் ஆதியிடம் பணப்பையைத் திறக்க அனுமதிக்கிறேன்”** என்று உறுதியளித்தார். **ஏற்கனவே இந்தியாவில் வெகு தொலைவில் உள்ளவர்கள், தங்கள் பயணத்தை தொடங்கிவிட்டனர். ஐந்து நாட்களில் பணியை முடிக்க முடியாது என ஒப்பந்ததாரர் கூறி வந்தார். பாபா அவர்களிடம், “அது முடியும், நிச்சயமாக முடியும். நீங்கள் அதைச் செய்தால், நான் உங்களை அரவணைப்பேன்” என்று உறுதியளித்தார். அதனால் ஒப்பந்ததாரர் மகிழ்ச்சியடைந்தார், அவருடைய பணியாட்கள் அனைவரும் உற்சாகத்துடன் இரட்டிப்பு நேர வேலையில் முழு முனைப்புடன் ஈடுபட்டனர். இரவும் பகலும் வேலை நடந்தது. ஆச்சரியம் என்னவெனில், ஐந்தே நாட்களில் எல்லாம் தயாராகிவிட்டது.**

நெட் ஃபுட் (NED FOOTE) தான் நேரில் கண்டதை விவரித்தார். அனைவரும் மிகுந்த உற்சாகத்தில் இருந்ததாக அவர் கூறினார். தங்கும் வசதிகளும், சமையல் மற்றும் தூங்கும் ஏற்பாடுகளும் சிறப்பாக இருந்தன. ஆண்களுக்கும் பெண்களுக்கும் தலா 400 கட்டில்களுடன் கூடிய பிரம்மாண்டமான கூடாரங்கள் எழுப்பப்பட்டன. வெவ்வேறு பிராந்திய உணவுப் பழக்கங்கள் காரணமாக சமையல் செய்வது ஒரு பெரிய பிரச்சினையாக இருந்தது. ஆனால் சகவாசத்தில் பங்கெடுத்த கிழக்கத்திய அன்பர்கள், சிரமங்களை அன்புடனும் நன்றியுடனும் தாங்கிக்கொள்ளத் தயாராக இருந்தனர்.

இரண்டு வார சகவாச காலகட்டத்தில், பாபா தொடர்ந்து உடல் வலி மற்றும் ஜுரத்தால் அவதியுற்றாலும், மகிழ்ச்சியாக இருந்தார், மேலும் சகவாசக் குழுவினர், “நீங்கள் உடல்நலம் குன்றி இருப்பது போல தோன்றவில்லை” என்று கூறினர். அவரைத் தழுவி, மாலை அணிவிக்க அனுமதிக்கக் கூடாது என்று டாக்டர் கென்மோர் அவருக்கு அறிவுறுத்தினார், ஆனால் அது எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. (பாபா சைகை செய்தார், ‘**அதை ஒரு காதில் வாங்கி, மறு காது வழி விட்டுவிட்டேன்**’) அவர் தினமும் ஆண்களையும் பெண்களையும் சகவாச நிகழ்ச்சிகளில் அரவணைத்து, அனைவருக்கும் தனது அன்பை வழங்கினார். பலர் அங்கு மகிழ்ச்சியில் உயிரைத் துறக்க முன்வந்தனர். பாபாவின் பெயரை உதடுகளில் உச்சரித்துக்கொண்டே, தத்தமது இல்லங்களுக்குச் சென்றவர்களில் ஐவர், மிக விரைவில் உயிரைத் துறந்துவிட்டனர்.

அப்போது பாபா, அவர் முன் இருந்தவர்களைப் பார்த்து, **“கவலைப்படாதீர்கள். பாம்பு கடித்தால் ஒழிய, நீங்கள் உயிரைத் துறப்பதற்காக இங்கு வரவில்லை! நீங்கள் என்னை நேசிப்பதால், இங்கே மகிழ்ச்சியாக இருப்பீர்கள் என்று நம்புவோம். அசௌகரியங்களைப் பொருட்படுத்தாதீர்கள். நான் துன்பப்படுகிறேன் என்பதை நினைவில் கொள்ளுங்கள். வலியால் நான் மூன்று நாட்களாக சரியாக உணவு உண்ணவில்லை. உங்கள் அன்புதான் என்னை இங்கு அழைத்து வந்துள்ளது. நான் உங்கள் அனைவரையும் ஒன்றுபோல நேசிக்கிறேன்.”**

**சகவாச வேளையில், ஒருவரைத் தம் அருகில் அமரும்படி அடிக்கடி அழைத்தாலும், பிற ஒருவரை ஒருபோதும் அழைக்காமல் இருந்தாலும், கவலைப்பட வேண்டாம்** என்று கேட்டுக்கொண்டார். **அது, அவர் பணிபுரியும் வழிமுறை. அவர் ஒருவரை அழைத்ததற்காக, பிறர் மனதில் உருவாகும் கவலை, பாபா மீதான அன்பில் இடையூறாக இருக்கும்.**

ஒரு இடைவேளைக்குப் பிறகு, அனைவரும் எழுந்தனர், பாபாவும் எழுந்தார்; அதே நேரத்தில் ஹாரி கென்மோர் குருநாதருக்கான பிரார்த்தனை (MASTER'S PRAYER) மற்றும் மனம்வருந்தி மொழியும் இரங்கல் பிரார்த்தனையை (PRAYER OF REPENTANCE) வாசித்தார். பாபா அனைவரிடமும் வினவினார்: **"இங்கே அமர்ந்திருக்கும் நீங்கள் அனைவரும் எனக்கு 100 சதவீதம் கீழ்ப்படியத் தயாராக இருக்கிறீர்களா? நீங்கள் மிகவும் நேர்மையாக இருக்க வேண்டும்.** (எல்லோரும் கைகளை உயர்த்தினர்.) **நீங்கள் 100 சதவிகிதம் எனக்குக் கீழ்ப்படிய முடியுமா?"**

வேல்ஸ் (WALES) நகரிலிருந்து, தனது மனைவி டானுடன் (DAWN) வந்த ஏறக்குறைய இருபது வயதைக் கடந்த ஜான் லாட்டன் (JOHN LAWTON), "இது சாத்தியமில்லை!" என்றார்.

**"ஒருவர் முயற்சி செய்ய வேண்டும்"** என்று பாபா பதிலளித்து, தொடர்ந்தார், **"ஹாரி கென்மோர் இந்த விஷயத்தில் ஒரு (சூடான) விவாதத்தை நடத்தினார்; ஒருவர் கீழ்ப்படிய வேண்டும், அவ்வாறு செய்ய முயற்சிக்கக் கூடாது என்ற கருத்தைக் கொண்டுள்ளார். அவர் இங்கு வந்ததற்கு அதுவும் ஒரு காரணம். நான் விரும்புவது அன்பும் கீழ்ப்படிதலும்தான். இந்த இரண்டும் இருந்தால், நான் உங்களிடம் வெளிப்படலாம். சொற்பொழிவுகளும், செய்திகளும் சிறப்பானதாக இருக்கும், ஆனால் அவை வெறும் வார்த்தைகள், நான் விரும்புவது உங்கள் அன்பும், கீழ்ப்படிதலும். 100 சதவீதம். ஒருவரால் இயன்றதைச் செய்பவரை நான் விரும்புகிறேன். இயேசுவின் காலத்தில் நான் இதையே எடுத்துரைத்தேன். அனைத்தையும் விட்டுவிட்டு என்னைப் பின்பற்றுங்கள், கிருஷ்ணர் மற்றும் ஸொராஸ்டர் காலத்திலும் அதையேதான் கூறினேன்.**

**"நீங்கள் உங்கள் பொறுப்புகளை விட்டுவிட வேண்டும் என்று பொருள்படும் விதத்தில் நான் கூறவில்லை, ஆனால் எனது விருப்பம் உங்களுடையதாக மாற வேண்டும், எனது விருப்பம் உங்கள் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும்; கடவுள் எல்லையில்லா நேர்மை படைத்தவர், கடவுளை நேசிக்க நீங்களும் நேர்மையாக இருக்க வேண்டும், இப்போது கூறுங்கள் யார் எனக்கு 100 சதவீதம் கீழ்ப்படிவார்கள்? இந்திய சகவாசக் குழுவிடம் நான் இதையே கேட்டேன். மக்கள் எனக்காகத் தங்கள் உயிரைக் கொடுப்பதாகக் கூறினார்கள், இதில் பல அறிஞர்கள், அறிவாளிகள், வழக்கறிஞர்கள் மற்றும் பலர் இருந்தனர்."**

அப்போது ஒரு விவாதம் நிகழ்ந்தது. சிலர் முயற்சிப்போம் என்றதும், ஹாரி கென்மோரிடம் கேட்டதற்கு, அவர், "முயற்சி செய்வதாக ஒருவர்

சொல்வதானால், அவர் எப்பொழுதும் சாக்குப்போக்குகளைக் கண்டுகொள்வார். ஒருவர் அதைச் செய்தாக வேண்டும்! பாபா, ஒருவருடைய திறனை மீறி ஒன்றைக் கேட்டு அவர் தோல்வியடைந்தால், அது பாபாவின் தவறு!" என்று பதிலளித்தார்.

**"ஆன்மீகப் பாதையில், எந்த சமரசத்திற்கும் இடமில்லை"** என்று பாபா கூறினார். **"எனக்குக் கீழ்ப்படிய முடியாதவர்கள் உங்கள் கைகளை உயர்த்துங்கள்."** ஒருவர் கூட கையை உயர்த்தவில்லை. **"இப்போது எனக்குக் கீழ்ப்படிய முயற்சிப்பவர்கள் உங்கள் கைகளை உயர்த்துங்கள்."** மார்கரெட் க்ராஸ்கேயின் பாலே நடனக் கலைஞர்களில் ஒருவரைத் தவிர, அனைவரும் கைகளை உயர்த்தினர்.

அப்போது பாபா கூறினார்:

**காலங்காலமாக, அவதார புருஷர் இப்பூவுலகில் வரும் வேளையில், அவரைப் பின்பற்றுபவர்கள் ஒரு சிறிய குழு மட்டுமே. இந்தக் காலச் சுழற்சியில் அது வித்தியாசமானது. இந்தக் காலகட்டம் மிகவும் சிறப்பு வாய்ந்தது. இப்போது தென்னிந்தியாவில் ஆயிரக்கணக்கான மக்கள் என்னைப் பின்பற்றுகின்றனர். சமீபத்தில் அரசாங்கம் எனது வாழ்க்கை குறித்த பாடப்புத்தகத்தை, பள்ளிகளில் பயன்படுத்த அனுமதி வழங்கியுள்ளது. ஸொராஸ்ட்ரியர்கள் ஒரு காலத்தில் என்னை எதிர்த்தனர், ஆனால் இப்போது அவர்கள் என்னிடம் வந்து என்னை நேசிக்கின்றனர். பல சாதுக்கள் சகவாசத்தில் பங்கெடுத்து, என்னை நேசித்து, மரியாதையுடன் நடந்துகொண்டனர்; பல யோகிகளும் கலந்துகொண்டனர். இந்தியாவின் தென்பகுதியைச் சேர்ந்த பிரபல யோகியான ஷுத்தானந்த பாரதியும், நீண்ட தாடியுடன் மஞ்சள் நிற உடை அணிந்து, சகவாசத்தில் பங்கேற்றார். என்னுடன் மேடையில் வந்து அமர்ந்தார். எனது பெயரை பரப்பும் கடமையை தானும் ஏற்க விரும்புவதாக அவர் கூறினார்.**

இந்தியாவில், பாபா 'கார்மேகம்' (DARK CLOUD) குறித்த தனது செய்தியைப் பரப்பினார். பாபா தொடர்ந்து விளக்கினார்:

**கார்மேகம் மிக வேகமாக நெருங்கி வருகிறது. ஒரு சிலர் மட்டுமே என்னை உறுதியாகப் பற்றிக் கொள்வார்கள். என் அருகில் இருப்பவர்கள் உடலளவில் அல்ல, அன்பில் நெருக்கமாக இருப்பார்கள். பிற அனைவரும் என்னை விட்டுச் செல்வார்கள். பழைய, பழகிப்போன அனுபவம் திரும்ப திரும்ப வரும். இந்த அவதார காலகட்டத்தில், என்னைப் பின்பற்றுபவர்களின் எண்ணிக்கை மிகையாக உள்ளது, இருந்தாலும், இறுதியில் என்னுடன் ஒரு சிலரே எஞ்சியிருப்பார்கள். இது என்னைச் சுற்றிலும் பல அழகான, அற்புதமான கட்டிடங்கள் இருப்பது போலாகும். அவற்றை உருவாக்க பல ஆண்டுகள் ஆனது, ஆனால் நிலநடுக்கம் வரும் வேளையில், சில நொடிகளில் அனைத்தும் அழிந்துவிடும். ஒரு சிலர் மட்டுமே உயிர் பிழைக்கிறார்கள்.**

'மேற்கத்திய நாடுகளுக்கு இப்போது செல்ல வேண்டாம், இது ஒரு கடினமான காலகட்டம்' என்று மருத்துவர்கள் கூறினர். ஆனால் நான், "இல்லை, நான் என் அன்பர்களை சந்திக்க வேண்டும், இந்த விஷயங்களையெல்லாம் அவர்களுக்குச் சொல்ல வேண்டும்" என்று பதிலளித்தேன்.

நீங்கள் என்னை 100 சதவீதம் நேசித்தால், என்னை உறுதியாகப் பற்றிக் கொள்ள முடியும். எப்பாடுபட்டேனும் எனக்குக் கீழ்ப்படியுங்கள் - குறிப்பாக ஜூலை 10 வரை. நீங்கள், மறுபடியும் என்னை ஒருபோதும் இந்தப் பௌதீக உடலில் பார்க்க மாட்டீர்கள். ஜூலை 10ஆம் தேதிக்குப் பின்னர், எப்போது வேண்டுமானாலும் நான் சொன்னது போல் அனைத்தும் விரைவில் நிறைவேறும்.

பாபாவிற்கு எதிராக கட்டுரைகளை அச்சடித்து வெளியிட்ட ஒரு குஜராத்தி நாளிதழ், இந்த ஆண்டு (1958) ஒரு மகத்தான பார்சி துறவி வெளிப்படுவார் என்று ஜோதிட கணிப்பு ஒன்று குறிப்பிட்டதைச் சுட்டிக்காட்டி, "ஆனால் நான் ஒரு துறவி அல்ல! நான் ஆதிகாலப் புருஷன், நான் உங்களுக்குச் சொல்கிறேன். நேரம் நெருங்கிவிட்டது" என்றார்.

பாபா தொடர்ந்தார், "நீங்கள் என்னை உங்கள் ஞாபகத்தில் மட்டுமே காண்பீர்கள், நான் என் உடலை கைவிடும்போது, என்னை நேசிக்கும் அனைவரிடமும் நான் இருப்பேன். என்னால் ஒருபோதும் உயிரைக் கைவிட முடியாது. என்னை நேசியுங்கள், எனக்குக் கீழ்ப்படியுங்கள், அப்போது நீங்கள் என்னைக் கண்டுகொள்வீர்கள். இனிமேல் எனக்கு பணமும், பொருளும் பரிசாக வேண்டாம். உங்கள் அன்பு ஒன்றுதான் ஏற்றுக்கொள்ளப்படும். எனக்கு உங்கள் அன்பு மட்டுமே வேண்டும்.

"இப்போது நம்மில் ஒரு சிறிய மாற்றத்தைச் செய்வோம். நீங்கள் கைகளை உயர்த்தியது என்னை மிகவும் மகிழ்ச்சியடையச் செய்தது. இப்போது ஹாரி கென்மோர் நான் கூறும் கீழ்ப்படிதல் என்றால் என்ன என்று உங்களுக்கு விளக்குவார்."

பூனாவிலும் மும்பையிலும் பாபா வழங்கிய சொற்பொழிவின்படி, நான்கு வகையான கீழ்ப்படிதல் பற்றி கென்மோர் விளக்கினார். அப்போது பாபா கூறினார், "100 சதவிகிதம் என் மீது அன்பு வைத்து, 100 சதவிகிதம் கடவுளின் அவதாரமாக என்னை ஏற்றுக் கொள்ளாத வரை, 100 சதவிகிதம் எனக்குக் கீழ்ப்படிவது சாத்தியமில்லை. எனவே இது, எனது விருப்பத்தை நிறைவேற்றுவதாகக் கைகளை உயர்த்திய உங்கள் அனைவரையும் சார்ந்தது."

பாபா தொடர்ந்தார்: "நான் மேற்கத்திய நாடுகளுக்கு வந்ததன் நோக்கம் நிறைவேறிவிட்டது. நாளை நாம் சொற்பொழிவுகளைத் தொடங்குவோம். இப்போது சில நகைச்சுவைகளைப் பார்ப்போம்."

பார்ன் (BARN) கொட்டகையில் கூட்டம் நிறைவடைந்ததும், பாபா, லகூன் கேபினுக்கு அழைத்துச் செல்லப்பட்டார், அங்கு அவர் மாலை 4:00 மணி வரை,

பல்வேறு குழுக்களுடன் நேர்காணல்களை நிகழ்த்தினார். அடுத்த நாள், பார்ன் கொட்டகையில் கூட்டம் இல்லை, ஆனால் அனைவரும் காலை 9:30 மணிக்கு தயாராக இருக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டது.

லகூன் கேபினில் மார்கரெட்டின் நடனக் குழுவினர் அவரைப் பார்க்க வந்தபோது, பாபா அவர்களுடன் கேலி செய்து சிரித்துக் கொண்டிருந்தார். திடீரென பாபா கேட்டார், "**நீங்கள் அனைவரும் பார்ன் கொட்டகையில் கைகளை உயர்த்தினீர்களா?**"

பின்னால் இருந்த ஓர் இளைஞரைத் தவிர, பிற அனைவரும் 'ஆம்' என்று தலையசைத்தனர். பாபா, "**அது பாபாவிற்கு மகிழ்ச்சியைத் தருகிறது**" என்று குறிப்பிட்டார். பாபா தன்னை கவனிக்கவில்லை என்று நினைத்து, அந்த இளைஞர் நிம்மதியடைந்தார். சில நிமிடங்களுக்குப் பிறகு, பாபா, மிகவும் திகைப்புடனும் ஏமாற்றத்துடனும் பார்த்து, அவரைத் தனிமைப்படுத்தி, "**நீங்கள் கையை உயர்த்தவில்லையா?**" என்று கேட்டார்.

அந்த இளைஞர் பாபாவை எதிர்கொண்டு, அவரது கேள்விக்கு பதிலளிக்கும் அச்சத்தில் இருந்தார். அவர் உண்மையாகவே கீழ்ப்படிய விரும்பினார், ஆனால், பாபாவால் முன்பு பிறப்பிக்கப்பட்ட கட்டளைகளில் ஒன்றை நிறைவேற்றத் தவறியதால், அவர் போதுமான அளவு தயாராக உள்ளாரா என்பதை உள்ளளவில் தீர்மானிக்க முடியவில்லை. பாபா தலையை அசைத்து சிரித்தார், "**உங்கள் மனம் பயனற்றது! அதுதான் உங்களைக் குழப்புவது!**" அந்த நபர், பாபா கூறுவதற்கு இணங்கி சிரித்தார்.

லகூன் கேபினில் ஐவி டியூஸ் மற்றும் அவரது ஸூஃபி குழுவினரின் பாபாவுடனான நேர்காணலின் போது, பாபா, '**அவரது மேலங்கியை எப்படிக் கெட்டியாகப் பற்றிக்கொள்ளப் பழக வேண்டும், அது எவ்வளவு கடினமானது**' என்பதை மீண்டும் வலியுறுத்தினார்: "**இந்த அறைக்குள் ஆறு நாகப்பாம்புகள், எங்கிருந்தோ திடீரென வருவதானால், நீங்கள் என்னுடன் அமைதியாக அமர்ந்திருப்பீர்களா? நிச்சயமாக இல்லை, நீங்கள் பீதியில், அதி வேகத்தில், கதவுகளையும் ஜன்னல்களையும் தாண்டி, பறந்து கொண்டிருப்பீர்கள், நீங்கள் பாபாவை மறந்துவிடுவீர்கள்!**

"**நான் இயேசுவாக இருந்தபோது, பீட்டர் என்னை மறுத்தார். நான் உங்களை எச்சரித்த கார்மேகம் மிக மிக அருகாமையில் உள்ளது. நாகப்பாம்புகளின் திடீர் படையெடுப்பை நான் குறிப்பிட்டது போல், இது, எதிர்பாராத கோணத்திலிருந்து திடீரென நடக்கும். அத்தகைய கோணத்திலிருந்து நீங்கள் அதை சற்றும் எதிர்பாராமல் நிகழ்ந்ததால், நீங்கள் என்னை விட்டு விலகுவது நியாயமானது என்று உணர்வீர்கள். ஒவ்வொருவரும் அவரவர் மனரீதியான பலவீனத்தால் சோதனைக்கு உள்ளாக்கப்படுவார்கள்; ஆனால் என்னோடு அட்டைபோல் ஒட்டிக்கொள்ளும் முயற்சியை மட்டும் கைவிடாதீர்கள்.**"



நரிமன், பாபா & எரச், மர்டில் பீச், மே **1958**
(NARIMAN, BABA & ERUCH, MYRTLE BEACH, MAY 1958)



லகூன் கேபினுக்கு வெளியே,
ஆதி சீனியர், ஃப்ரெட், எரச், நரிமன்
(OUTSIDE LAGOON CABIN,
ADI SENIOR, FRED, ERUCH, NARIMAN)



லகூன் கேபின், மே **1958**
(LAGOON CABIN, MAY 1958)



மர்டில் பீச், பார்ன் கொட்டகை, மே **1958**,
டான் ஸ்டீவன்ஸ் (வலதுபுறம்)
(MYRTLE BEACH, BARN, MAY 1958,
DON STEVENS – RIGHT SIDE)

டார்வின் ஷாவிடம், பாபா, "**நீங்கள் எவ்வளவு ஆசீர்வதிக்கப்பட்டவர் என்பதை உணர்ந்தீர்களா? நீங்கள் பாபாவை நேசிக்கிறீர்கள், உங்கள் மனைவியும், குழந்தைகளும் பாபாவை நேசிக்கிறார்கள். என்னை நேசிக்கும் ஆன்மாக்களுடன் இணைந்து பணியாற்றுவதன் மூலம், அவர்களை என்னிடம் நெருக்கமாகக் கொண்டு வருவதற்கான கருவியாக இருப்பதன் மூலமும், நீங்கள் உண்மையிலேயே பாக்கியவான்கள்.**"

இஸ்ரேலின் கேரி பென் ஷம்மாயை (CARRIE BEN SHAMMAI) வரவழைத்து மண்டலிக்கு அறிமுகப்படுத்தினார். பாபா, "**கிறிஸ்துவின் காலத்தில் அங்கே** (பாலஸ்தீனத்தில்) **எனது சீடர்கள் கல்லால் அறைந்து தாக்கப்பட்டனர்**" என்று கூறி, அவர் கேரிக்கு உறுதியளித்தார், "**அங்கிருக்கும் எதிர்ப்பு சக்திகள் உங்களை என்ன செய்தாலும் பரவாயில்லை, நான் எப்பொழுதும் உங்களுடன் இருப்பேன்... நான் எப்பொழுதும் உங்களுக்குப் பக்கபலமாக நிற்பேன்**" என்றார்.

ஒரு கட்டத்தில் அனிதா, மார்கரெட், டிலியா, ஜேன் ஆகியோரை பாபா அழைத்து, ஜேனை தனது வலது பக்கத்தில் அமருமாறு கூறினார். ஜேன் சற்று பகட்டாக உடை அணிந்திருந்ததைப் பார்த்து, யார் இந்தப் புதுமுகம் என்று அனிதா யோசித்துக் கொண்டிருக்க, பாபா, அனிதாவின் பக்கம் திரும்பி வினவினார், "**அனிதா, ஜேனைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?**"

அனிதா திடுக்கிட்டுப் பார்த்தவர், ஆனால் உடனடியாக மீண்டு வந்து, "ஓ பாபா, மிகவும் இளமையாகவும் அழகாகவும் இருக்கிறார்" என்றார்.

பாபா தீவிரமாகப் பார்த்து, தலையை அசைத்து, "**இல்லை, இங்கே இல்லை** (முதலில் அவரது முகத்தை, பின்பு இதயத்தைச் சுட்டிக்காட்டி), **இங்கே அழகாக இருக்கிறார்**" என்று சைகையால் தெரிவித்தார்.

பாபா தன்னைப் பற்றி ஏன் இப்படிக் கூறினார் என்று ஜேனால் புரிந்து கொள்ள முடியவில்லை; அவரோ 'உலகத்தால் மூடி மறைக்கப்பட்ட' ஒரு பெண் என உணர்ந்தார். வெகு நாட்களுக்குப் பிறகு, தன் இதயத்தில் பாபா, அவரது அன்பைக் காண்கிறார் என்பதை ஜேன் உணர்ந்து கொண்டார்.

சகவாசத்திற்காக தனது குழந்தைகளை பள்ளிக்கூட வேளையில் அழைத்து வர வேண்டாம் என்றும், ஒவ்வொருவரையும் பள்ளி முடிந்ததும் தனித்தனியாக அழைத்து வந்து, பாபாவை சந்திக்கும்படியும் ஜேனிடம் அறிவுறுத்தப்பட்டது. அவரது மூத்த மகன் ஜான், வயது பத்து, 20ஆம் தேதி மதியம் முதலில் அழைத்து வரப்பட்டார். ஜான் சமீபத்தில் ஒரு கடுமையான வாகன விபத்தில் சிக்கினார். மிதிவண்டியில் செல்லும் போது, கார் மீது மோதியதால், அவரது உச்சந்தலையில் 120 தையல்கள் போடப்பட்டன. ஜேன், மூளை பாதிப்பு ஏற்படலாம் என அஞ்சினார்; ஆனால், பாபா சிறுவனின் மண்டை ஓட்டின் குறுக்கே கையை வைத்து, "**கவலைப்படாதீர்கள், அனைத்தும் சரியாகிவிடும்**" என்று உறுதியளித்தார்.

ஜான் ஹெய்ன்ஸ் பின்பு நினைவு கூர்ந்தார்:

நான் இறுதியாக என் உண்மையான தந்தையை சந்தித்ததாக உணர்ந்தேன், நான் அவரிடமிருந்து சில காலம் பிரிந்திருந்து, அவருடன் மீண்டும் இணைவதற்கு அனுமதிக்கப்பட்டது போல் உணர்ந்தேன். நான் அவரை எப்பொழுதும் அறிந்திருப்பது போன்ற உணர்வைக் கொண்டிருந்தேன். பாபா என்னைத் தழுவினார், அந்த நேரத்தில் நான் ஒரு குழந்தையைப் போல் உணர்ந்தேன். நான் எப்பொழுதும் ஒரு தந்தையிடமிருந்து உணர விரும்பும் அதே அன்பை உணர்ந்தேன்.

ஜானின் சகோதரர் சார்லஸ், ஒன்பது வயது, மறுநாள் மதியம் அழைத்து வரப்பட்டார். சார்லஸ், பாபாவிடம் தனது ஆரம்ப எதிர்வினையை நினைவு கூர்ந்தார்:

இவர் யாரோ ஒருவர், ஆனால், அவரை விட்டு விலக நான் விரும்பவில்லை! நான் அவரை சந்தித்தபோது, நான் உள்ளே நுழைவதற்கு முன்பு, யாரை சந்திக்கப் போகிறேன் என்று எனக்குத் தெரியாது - எனது தாயார் தீவிர பிரஸ்பைடிரியன் கிறிஸ்தவர். ஆனால் பாபாவைப் பார்த்ததும் ஒரு பரிச்சயம் என்னுள் ஏற்பட்டது. அவர் ஒரு பழைய நண்பர் என்று நீங்கள் கூறலாம். அன்றிலிருந்து நான் அவரை எனது குருநாதராகவும் தந்தையாகவும் கருதினேன்.

அந்த சிறுவன் பாபாவால் மிகவும் கவர்ந்திழுக்கப்பட்டான்; பாபா அமைதியாக இருந்ததைக் கூட அவன் கவனிக்கவில்லை!

அன்று மதியம் மற்றும் மாலை முழு நேரமும் மழையும், இரவில் பலத்த மழையும் பெய்தது. மே 21 அன்று பாபா காலை 9:30 மணி முதல் மாலை 4:00 மணி வரை, லகூன் கேபினில் குழுக்கள் மற்றும் தனிநபர்களுடன் நேர்காணல்களுக்கு, முழு நாளையும் அர்ப்பணித்தார்.

ஹூஸ்டன் (HOUSTON) நகரைச் சேர்ந்த டாக்டர் ஜேம்ஸ் அலன் சேம்பர்லைன் (DR. JAMES ALLEN CHAMBERLAIN) சகவாசத்தில் கலந்துகொள்வது, அவரது வாழ்க்கையின் மிகப்பெரிய அனுபவம் என்று கூறினார். அவர் பாபாவிற்குக் கீழ்ப்படிவதாக உறுதியளித்து, பாபாவின் தனிப்பட்ட ஒன்றைக் கேட்ட போது, பாபா, அவருக்குத் தலைமுடிச் சுருள் ஒன்றைக் கொடுத்தார். சேம்பர்லைன் கேட்டார், “மனநோயை குணப்படுத்த ‘ஹிப்னாட்டிஸம்’ (HYPNOTISM) உதவுமா?”

அதற்கு பாபா, “**சரியான முறையில் பயிற்சி செய்தால் மட்டுமே, அது பயனுள்ளதாக இருக்கும். இல்லையேல், அது தீங்கு விளைவிக்கும்**” என்று பதிலளித்தார்.

1958 மே 22 வியாழன் காலை ஒன்பது மணிக்குப் பிறகு, பாபா, லகூன் கேபினுக்கு வந்தார். வழக்கத்தை விட அதிகமாக அவர் சிரமப்பட்டுக் கொண்டிருந்தது அங்கிருந்த அனைவருக்கும் தெரிந்தது. (‘பாபா, உண்மையில் களைத்துப் போய்விட்டதாகத் தோற்றமளித்தார்’ என்று மேக்ஸ் ஹெஃப்லிகர் - MAX HAEFLIGER - மணிக்கு எழுதியிருந்தார்.) இருப்பினும், நியூயார்க் நகரிலிருந்து வந்த ‘தையல் குழு’ (SEWING GROUP) ஒன்றை, பாபா அன்போடு வரவேற்று

வாழ்த்தினார்; அவர்களில் சில பெண்மணிகள் பாபாவிற்காக, புதிய ஆடைகள் - மூன்று சத்ராக்கள், ஒரு இளஞ்சிவப்பு ஜாக்கெட், ஒரு வெள்ளை ஜாக்கெட், மற்றும் கைக்குட்டைகளைத் தயார் செய்து கொண்டுவந்தனர். பாபாவின் வருகைக்கு முன்பு, 'பரிசுகள் தவிர்க்கவும்' என்ற கட்டளையை அவர்கள் மறந்துவிட்டார்கள்; ஆனால், பாபா அவர்களின் காணிக்கைகளை ஏற்றுக்கொண்டார்.

சிறிது நேரத்தில், அனைவரும் பார்ன் கொட்டகையில் ஒன்று திரண்டனர். வெளியே மழை பொழிந்த போதிலும், கொட்டகை சூடாக இருந்தது. பாபா இவ்வாறு கூறினார்:

**நேற்று நான் கழித்த இரவு, மிகவும் மோசமான இரவுகளில் ஒன்று. நான் எனது வேலைப் பளுவால் நசுக்கப்பட்டேன். எனக்கு வலியும், ஜுரமும் அதிகமாகிவிட்டது. கிட்டியும் மண்டலியும் என்னிடம் இன்று முழுவதும் ஓய்வெடுக்கக் கூறினார்கள்; ஆனால், நான் அதற்கு செவிமடுக்கவுமில்லை, ஹாரி கென்மோரை அழைக்கவுமில்லை. நான் கூறினேன், "நான் போயாக வேண்டும். நேரம் நெருங்குகிறது. தேவைப்பட்டால் நாங்கள் கொட்டகையில் தூங்குகிறோம்." இன்று காலை எனக்கு ஜுரம் இன்னும் அதிகமாக இருந்தது. இப்போது, இரவு கடந்துவிட்டதால், இதோ நான் உங்களுடன் கொட்டகையில் இருக்கிறேன்.**

**இங்கு நிகழும் சகவாசத்தை நிறுத்திவிட்டு, ஆஸ்திரேலியா சகவாசத்தை ரத்து செய்து, நேராக இந்தியாவிற்குத் திரும்பலாம் என்று நினைத்துக்கொண்டிருக்கிறேன். மூன்று நாட்கள் நிலைமையை கண்காணித்து, பின்பு முடிவு செய்வேன். சகவாசத்தைத் தொடர முடிவு செய்தால், நான் ஆஸ்திரேலியாவிற்கும் சென்று, சகவாசத்தை வழங்குவேன். இதைப் பற்றி எவரும் கவலைப்படத் தேவையில்லை; ஏனெனில், நேற்று முன் தினம் நீங்கள் அனைவரும் எனக்குக் கீழ்ப்படிவதாக உங்கள் கைகளை உயர்த்தினீர்கள். எனவே எனது முதல் அறிவுரை, சகவாச நாட்கள் குறைக்கப்பட்டாலும், இல்லாவிட்டாலும், மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். நீங்கள் இங்கே இருக்கும் வரை, உங்கள் இல்லங்கள் மற்றும் விவகாரங்களைப் பற்றி நினைக்காதீர்கள்; ஆனால், எப்பொழுதும் என்னைப் பற்றி சிந்தியுங்கள். நான் எனது தெய்வீக அதிகாரத்துடன் கூறுகிறேன், நான் மனித உருவில் உங்களிடையே வந்த கடவுள், எனவே என்னை நேசியுங்கள். எனக்கு எல்லாம் தெரியும்.**

**ஆஸ்திரேலிய அன்பர்கள், நான் மண்டலியுடன் உலகைச் சுற்றிவரும் நோக்கத்தில்** $6,000 **அனுப்பியுள்ளனர். சகவாசம், பிரிஸ்பேன் நகரில் நடத்தப்பட வேண்டும் என்று நான் ஃபிரான்சிஸிடம்** (பிராபஸோன்) **தெரிவித்தேன். ஃபிரான்சிஸ் அங்கு 'அவதாரின் வாழ்விடம்'** (AVATAR'S ABODE) **எனும் சிறந்ததொரு வீட்டைக் கட்டியுள்ளார். அந்த நிலத்தில் புதிய வீடு கட்டவும், மலை உச்சிக்குச் செல்லும் பாதையை அமைக்கவும்**

**தொடங்கினார். "நான் அங்கு வந்து ஆறு நாட்களுக்கு எனது பிரசன்னத்தை வழங்குகிறேன்" என்று அவருக்கு எழுதினேன். அதற்கு ஃபிரான்சிஸ், "இங்கே நீங்கள் ஒரு நாள் இருந்தால் கூட போதும்" என்றார்.**

**இது எனக்கு ஹஃபீஸை நினைவூட்டுகிறது, அவர் கூறினார், "ஒரு பரிபூரண குருநாதரின் சகவாசத்தில், ஒரு கண நேரம் செலவிடுவது என்பது, ஒருவரின் முழு இதயத்தோடும், ஆன்மாவோடும் 100 ஆண்டுகள் நேர்மையாகப் பிரார்த்தனை செய்வதற்கு சமம்."**

**"நீங்கள் அனைவரும் மகிழ்ச்சியாக இருக்கிறீர்களா?"** எல்லோரும் கைகளை உயர்த்தினர்.

பாபா மேலும் கூறினார், "**எனக்கு எதுவும் உதவாதபோது, நானும் எனது கையை உயர்த்தியதால், நானும் மகிழ்ச்சியாக இருக்கிறேன்.**"

டான் ஸ்டீவன்ஸ், மெஹராபாத்தில் சகவாச நாட்களில் வழங்கப்பட்ட சில சொற்பொழிவுகளையும், அவருடைய குறிப்புகளையும் பாபாவின் கருத்துக்களுடன் இணைத்து வாசித்தார். ஸ்டீவன்ஸ் சிறிது நேரம் படித்துக் கொண்டிருந்த பின்பு, பாபா, பென் ஹேமனிடம், "**இப்போது நாம் என்ன செய்யலாம்?**" என வினவினார்.

பென் பதிலளித்தார், "நீங்கள் என்ன செய்தாலும் நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன்."

அப்போது பாபா, "**நாளை என்ற ஒன்று இல்லாததால், நான் நாளை வராமல் போகலாம்! இப்போது, 'பிரிக்கப்பட்ட அகந்தை'** (SPLIT EGO) **பற்றிய சொற்பொழிவை வழங்குவது நல்லது.**" டான் ஸ்டீவன்ஸ் இந்த சொற்பொழிவை வாசிக்கத் தொடங்கினார், அதற்குப் பிறகு, பாபா, பார்ன் கொட்டகையை விட்டு வெளியேறினார்.

அன்று அதிகாலை ஜேன் ஹெய்ன்ஸ் ஆழ்ந்த தூக்கத்திலிருந்து எழுந்து, திடீரென அழத் தொடங்கினார். அவர் சீக்கிரமாகவே மர்டில் பீச் மையத்திற்கு வந்து, பார்ன் கொட்டகையின் பின்புறம் இடைப்பட்ட நடைபாதையில் அமர்ந்திருந்தார். நடனக் கலைஞர்கள் பாபாவை தூக்கு நாற்காலியில் உள்ளே அழைத்துச் செல்லும் வேளையில், அவர், ஜேன் அமர்ந்திருந்ததைக் கண்டு, அருகில் அழைத்துச் செல்லுமாறு கேட்டுக்கொண்டார். தனது முகத்தை ஜேன் அருகில் கொண்டு வந்து வினவினார், "**நன்றாகத் தூங்கினீர்களா?**" என்ன நடந்தது என்று அவருக்குத் தெரியும். மீண்டும், இரண்டு மணி நேரம் கழித்து, கொட்டகையை விட்டு வெளியேறும் போதும், பாபா, தனது நாற்காலியில் ஜேன் அருகே சென்று, "**நன்றாகத் தூங்கினீர்களா?**" என்ற அதே கேள்வியை மீண்டும் கேட்டார்.

ஜேன் பின்னர் இவ்வாறு நினைவு கூர்ந்தார்:

அப்போது அவர் என்னை முதல்முறையாக, அவருடைய அழகிய கண்களில் பார்க்க அனுமதித்தார். அவருடைய கண்களில் ஏதோ ஒன்று தற்காலிகமாகத் திரையை விலக்குவது போல் இருந்தது. அனைத்தும் மறைந்து

போனது. பாபா மட்டுமே இருந்தார். பார்ன் கொட்டகையும் இல்லை அங்கிருந்த மக்களும் இல்லை. அவர் மிகவும் இளமையாகவும் அழகாகவும் தோன்றினார். சிறுவயதிலிருந்தே நான் அறியவும், நேசிக்கவும் முயன்ற கிறிஸ்து அவர். பாபா, என் இயேசுவை எனக்குத் தெள்ளத் தெளிவாகக் காட்டிய அந்த கணத்தில், நான் என் ஆழ் இதயத்தில் கதறினேன், "ஆனால், பாபா, அது நீங்களேதான்!" நான் பாபாவின் முகத்தை உற்று நோக்கியபோது, உள்ளுக்குள் கேட்க முடிந்தது: "ஆம், அது நான்தான், நானேதான்."

இந்த 'நெஞ்சை நொறுக்கும்' அனுபவம் ஜேனின் ஆழ் இதயத்தில் பொறிக்கப்பட்டது, ஒருபோதும் மறக்க முடியாதது.

பாபாவின் தெய்வீகத் தன்மையைப் பற்றிய இந்தக் குறுங்காட்சியைக் கண்ட பின்னர், அவர் யார் என்பதை உண்மையாகப் பாராட்டி, பெருமிதம் அடைந்த அந்த நேரத்தில், 1956 அமெரிக்கப் பயணத்தில் சார்மியன் டியூஸ் எடுத்த காணொளி திரைப்படத்தைப் பார்க்க பாபா விரும்புவதாக என்னிடம் தெரிவிக்க, கிட்டி ஓடி வந்தபோது, ஜேன் தன்னைத்தானே தெளிவாகப் புரிந்து கொண்டார். அன்று மதியம் ஜேன் நடத்திவந்த டவுன்டவுன் திரையரங்கில் (THEATER DOWNTOWN), முழுக் குழுவும் அவருடன் இணைய இருந்தது. பாலே நடனக் கலைஞர்கள் அனைவரும் உதவ முன்வந்து, தியேட்டரை அலங்கரிக்கச் சென்றனர்.

ஜேன் எப்படி பாபாவை வரவழைத்துச் செல்வார் என்பதைக் காணக் காத்திருந்த எலிஸபெத், "வெண்டியை (ஜேன் மகளை) பள்ளிக்கூடத்திலிருந்து அழைத்து வரும் நிலையில் நீ இல்லை; உனது கார் வேறு பழுதாக இருக்கலாம்! நான் போய் அவளை அழைத்து வருகிறேன்" என்றார்.

பாபா, சார்லஸ் ஹெய்ன்ஸை தன்னுடன் காரில் திரையரங்கிற்குச் செல்ல அனுமதித்தார். எலிஸபெத் ஓட்டும்போது சார்லஸ் முன் இருக்கையில் பாபாவின் அருகில் அமர்ந்தார். பின்னால் அமர்ந்திருந்த கிட்டி, பாபாவின் தோளைத் தட்டி, "பாபா, நான் உங்களிடம் ஒன்று கேட்க வேண்டும். (ஹெய்ன்ஸ்) குழந்தைகளின் தந்தைக்கு என்னவாயிற்று?"

பாபா, கிட்டியின் பக்கம் திரும்பி, தீவிரமான பார்வையுடன் தன் இரண்டு ஆள்காட்டி விரல்களையும் ஒன்றிணைத்து, பின்னர் அவற்றைப் பிரித்து, "**அது** (திருமணம்) **முடிந்தது**" என்று சுட்டிக்காட்டினார்.

"ஆனால் பாபா," கிட்டி விடாப்பிடியாகக் கேட்டார், "முடிந்தது என்று எப்படிச் சொல்கிறீர்கள்? குழந்தைகளுக்கு, அவர்களின் தந்தை தேவையில்லையா?"

பாபா வியப்புடன் அவர் பக்கம் திரும்பி, "**நீங்கள் என்ன சொல்கிறீர்கள் கிட்டி, அவர்களின் தந்தை, நான்தான் அவர்களுக்குத் தந்தை; நான் எப்பொழுதும் அப்படியே இருப்பேன்**" என்று சைகையால் தெரிவித்தார்.

திரையரங்கை நோக்கி பாபா வந்துகொண்டிருந்த வேளையில், இராணுவ வீரர்களின் மனைவிகளின் குழு ஒன்று, தங்களுடைய உறுப்பினர் சீட்டைக் காட்டி, திரையரங்கத்தில் நுழைய இருந்தனர். ஜேன் அந்தப் பெண்மணிகளை

தற்சமயம் வெளியேறுமாறு கெஞ்சினார், வெண்டியின் கையைப் பற்றிக்கொண்டு, வாசலில் பாபாவை வரவேற்க ஓடினார். ஜேன், வெண்டி இருவரும் அணிந்திருந்த இரட்டை ஊதா நிற ஆடைகளை பாபா பாராட்டினார். வெண்டி, ஆறு வயது சிறுமி, நேராக பாபாவின் கைகளில் பாய்ந்த போது, பாபா அவளை அணைத்து முத்தமிட்டார்.

சார்மியன் டியூஸின் திரைப்படம் தவிர, மெஹராபாத்தில் சமீபத்திய இந்திய சகவாச நிகழ்வுகளை காணொளி படமாக்கிய சாப்ராவின் திரைப்படமும் காண்பிக்கப்பட்டது, அதன் பிறகு பாபா மாலை 4:30 மணியளவில் மையத்திற்குத் திரும்பிச் சென்றார்.

பாபா, 1958 மே 23 வெள்ளிக்கிழமை காலை, பார்ன் கொட்டகைக்கு வந்து, அன்றைய நிகழ்ச்சியைப் பற்றிய தவறான புரிதலை நீக்கி, நடவடிக்கைகளைத் தொடங்கினார்:

**நான் நேரடி பேட்டிகள் வழங்க விரும்பவில்லை. அனைத்து நேர்காணல்களையும் நிறுத்த விரும்புகிறேன். ஆனால், இது என்னை எந்த வகையிலும் பிணைக்காது. அரை நாள், தனியார் ஒருவரை அழைக்கலாம், அல்லது எவரையும் அழைக்காமலும் இருக்கலாம் என்று ஆரம்பத்தில் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். நான் ஒரு சிறிய குழுவை என் இல்லத்திற்கு அழைக்கலாம் அல்லது பெண்மணிகளையும் சிறுமிகளையும் அங்கு அழைக்கலாம். இதன் பொருள் என்னவெனில், எனது முடிவுக்கு நான் கட்டுப்பட முடியாது. உங்களில் சிலர் நினைப்பதை நான் உணர்கிறேன்: "பாபா ஏன் ஐந்து பேரை மட்டும் தன் அருகில் அழைக்கிறார், அல்லது ஏன் தினமும் அனிதாவை அழைக்கிறார் அல்லது மார்கரெட்டை அழைக்கிறார்? மீதி நபர்களை ஏன் அழைக்கவில்லை?" இது அனைத்தும் என் விருப்பத்தைப் பொறுத்தது. நான் அவர்களை அதிகமாக நேசிக்கிறேன் அல்லது பிற அனைவரையும் குறைவாக நேசிக்கிறேன் என்று அர்த்தமல்ல. ஒரு வேளை நான் அழைக்காத ஒருவரை, பிற அனைவரையும் விட அதிகமாக நேசிக்கிறேன். தினமும் ஒன்பது மணி முதல் மதியம் வரை, பார்ன் கொட்டகைக்கு விஜயம் செய்வேன் என்று டானிடம் தெரிவிக்குமாறு நரிமனிடம் கூறினேன். அது, காலை 9:00, 9:30 அல்லது 10:00 மணியாகவும் இருக்கலாம், ஆனால் காலை 9:00 மணிக்கு பார்ன் கொட்டகையில் என்னை எதிர்பார்க்கலாம். அதைத் தொடர்ந்து, நான் மதியம் 2:00 மணி வரை, லகூன் கேபினுக்குச் செல்கிறேன். நான் எனது பணிக்காக எவரையேனும் அழைக்கலாம் அல்லது அழைக்காமலும் இருக்கலாம். நான் என் இல்லத்திற்குச் செல்லும்போது, எவரையேனும் அழைக்கலாம் அல்லது காலை 9:00 மணி முதல், மாலை 5:00 மணி வரை நேர்காணல்களை வழங்குவதன் மூலம், சகவாசத்தை நிறைவு செய்யலாம். இவ்வண்ணம் இரண்டு மாற்று வழிகள் உள்ளன; எனக்கு இரண்டும் பிடிக்கும். நாம் இனிமேல் அதை முடிவு செய்ய வேண்டும். எனவே, பார்ன்**

**கொட்டகைக்காகக் கைகளை உயர்த்துங்கள்!** (பல கைகள் உயர்த்தப்பட்டன.) **நேர்காணலுக்கான கைகள்!** (ஒருவரும் உயர்த்தவில்லை.)

**எனக்கு எல்லாம் தெரியுமானால், என்னிடம் சொல்ல என்ன இருக்கிறது? நீங்கள் சொல்வதற்கு முன்னரே எனக்குத் தெரியும். நீங்கள் எனக்குக் கீழ்ப்படிவதற்கு உங்கள் கைகளை உயர்த்தியதை மட்டும் நினைவில் கொள்ளுங்கள். நான் இந்தியாவிற்குத் திரும்பும்போது, கைகளை உயர்த்தியவர்களின் பட்டியலை என்னுடன் எடுத்துச் செல்வேன்; மேலும், திடீரென நான் தனித்தனியாகவோ அல்லது கூட்டாகவோ உத்தரவுகளை வழங்குவதானால், முற்றிலுமாக அதற்குக் கீழ்ப்படிய முயற்சி செய்யுங்கள். இதர அனைத்தும் நான் உங்களுக்கு வழங்கும் கட்டளைகளுடன் ஒப்பிடும்போது, எந்த மதிப்பும் இல்லாதவை.**

**இன்று காலை நான் முடிவெடுப்பதற்கென எனது முன்னால் ஒன்று இருந்தது. நேற்று இரவு பல பணிகள் நடந்தன. ஏறக்குறைய பதினோரு மணி வரை நான் மிகவும் அமைதியின்றி இருந்தேன் என்கிறார் எரச். டான், நரிமன், ஆதியும் அதைத்தான் கூறினார்கள். இப்போது நான் எடுக்க வேண்டிய முடிவு இதுதான்: இரண்டு அல்லது மூன்று நாட்களில், மர்டில் பீச் மையத்தை விட்டு வெளியேறலாமா அல்லது ஏழு நாட்களுக்கு நான் இங்குத் தங்குவதை நீட்டிக்க வேண்டுமா? மே 30 வரை தங்குவது என்று இன்று காலை முடிவு செய்தேன். 30ஆம் தேதி, நான் ஆஸ்திரேலியாவிற்குப் புறப்படுகிறேன், இதனால் சகவாசத்தை நான்கு நாட்கள் குறைக்கிறேன். நான் ஒரு வெள்ளிக்கிழமை வந்தேன், அதனால் பதினான்கு நாட்கள் இங்கேயே இருப்பேன்.**

**எலிஸபெத், கிட்டி இருவரும் இங்கே முதல் வாரம் வந்தவர்களையும், இரண்டாவது வாரத்தில் வரவிருப்பவர்களையும் பார்த்துக் கொள்ளுங்கள்.**

**நான் இந்த முடிவை எடுக்க பல காரணிகள் உள்ளன. எல்லாவற்றிற்கும் முன்னதாக, நான் ஜூலை 10ஆம் தேதிக்கு 30 நாட்களுக்கு முன்னர், இந்தியாவில் இருக்க விரும்புகிறேன். எனக்கும் என் அன்பர்களுக்கும் இது மிகவும் முக்கியமானது. இந்தியாவில் வாழும் என் அன்பர்களுக்காகவும் மற்றும் அனைவருக்காகவும் ஜூலை 10ஆம் தேதிக்கு முன்னர் எனது கைகளில் ஒரு மாதம் இருக்க வேண்டும்.**

**இன்று காலை மகிழ்ச்சியாக உணர்கிறேன். ஏன்? நேற்று, ஆதி என்னிடம் கூறினார், உங்களில் சிலர் இந்திய சகவாசத்தில் எடுக்கப்பட்ட குறிப்புகளைப் படிக்க வேண்டும் என்று விரும்புகிறீர்கள். தேஷ்முக், சாரி, மூர்த்தி,** (பி.) **ஐயர் ஆகியோரின் கைவண்ணத்தில் உருவான இந்திய சகவாசக் குறிப்புகள் உள்ளன - சொற்பொழிவுகள், சைகைகள் பற்றிய அறிக்கைகள் எரச்சால் வார்த்தைக்கு வார்த்தை மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. 'தி அவேக்கனர்'** (THE AWAKENER) **இதழுக்காக அவற்றை ஃபிலிஸிடம்** (ஃபிரடெரிக்) **கொடுத்துள்ளேன்.**

இந்திய சகவாசத்தின் போது வழங்கப்பட்ட பாபாவின் பல சொற்பொழிவுகள் வாசிக்கப்பட்டன, மேலும் பாபா, யோகி ஷுத்தானந்த் பாரதி, கோதாவரி மாய், பாலக் பகவான், சுவாமி மங்களானந்த் ஆகியோரைப் பற்றிக் கருத்துரைத்து, ஒவ்வொருவரையும் குறித்து விளக்கமளித்தார்.

முதல் நாளிலிலிருந்தே குழந்தைகள் பார்ன் கொட்டகைக்கு வர அனுமதிக்கப்பட்டனர், ஆனால், அவர்கள், கவனத்தைத் திசை திருப்ப முக்கிய காரணியாக இருந்ததால், பார்ன் கொட்டகைக்கு வெளியே விளையாடுமாறு பாபா அறிவுறுத்தினார். ஒரு பெண் குழந்தை, பாபாவின் சகவாசம் மறுக்கப்பட்டதால், அது முறையற்றது எனக் கருதி, சினம் கொண்டாள். ஓர் இரவு, அவளைக் கொட்டகைக்குள் வர அனுமதிக்கும்படி வேண்டி, பாபாவிடம் பிரார்த்தனை செய்தாள்.

பாபா, அந்த சிறுமியின் பிரார்த்தனைக்கு செவி சாய்ப்பது போல தோன்றியது; அன்றைய தினம் அவர், ஏற்புடைய முறையில் ஒழுங்காக, அமைதியாக அமரும் குழந்தைகளை, காலை நேர நிகழ்ச்சியில், பார்ன் கொட்டகைக்குள் அனுமதிக்கலாம் என்று அறிவித்தார். பாபா வரும் வேளையில், அந்த சிறுமி, அவருக்காகக் காத்திருந்தாள், பாபாவின் நாற்காலியின் அருகில் நின்று கொண்டிருந்தாள். ஒரு கட்டத்தில், பாபா குனிந்து அவள் நெற்றியை விரல் நுனியால் தொட்டு, தனது பாசத்தை வெளிப்படுத்தினார்.

சொற்பொழிவுகளுக்குப் பின்னர், ஒரு சிறிய இடைவேளையை வழங்கி, பாபா இசைத்தட்டுகளைக் கேட்க விரும்பினார். ஸ்விட்சர்லாந்து நாட்டிலிருந்து தனது மனைவி கிஸெலாவுடன் (GISELA) வந்திருந்த மேக்ஸ் ஹெஃப்லிகர், ஹெடி மெர்டென்ஸ் கொண்டு வந்த ஒரு பெண் பாடகியின் சுவிஸ் ஆலாபனைப் பதிவை இசைத்தார்; மேலும் 1934இல் ஃபாலன்ஃப்ளூ மலையில் (MOUNT FALLENFLUH) ஏகாந்தவாசம் மேற்கொண்ட பிறகு, பாபா எப்படி சிறப்பு ஆலாபனைகளைக் கேட்டு மகிழ்ந்தார் என்பதையும் விவரித்தார். “ஆனால் இந்தப் பதிவு, உண்மையான ஆலாபனையின் ஏழாவது நிழல் மட்டுமே” என்று மேக்ஸ் கூறினார்.

அது இசைக்கப்பட்டதும், பாபா “**அது ஏழு அல்ல, 14ஆவது நிழல்!**” என்று கூறியது அனைவரையும் சிரிப்பில் ஆழ்த்தியது.

ஆண் பாடகர் குழுவின் மற்றுமொரு சுவிஸ் பதிவு இசைக்கப்பட்டது. அதன் மிகையான நெகிழ்வுத்தன்மையைக் கேட்டு சிலர் கண்கலங்கி அழுதனர். பாபா தொடர்ந்து கூறினார்: “**இது, ஜூலை 10ஆம் தேதியை (மௌன நாள்) எனக்கு நினைவூட்டுகிறது. இந்த நேரத்தில், எவரும் உபவாசம் மேற்கொள்ளவோ அல்லது மௌனம் கடைப்பிடிக்கவோ கூடாது, மாறாக ஜூலை 9 மற்றும் 10ஆம் தேதிகளுக்கு இடையில், சரியாக நள்ளிரவில் வெறும் முணுமுணுப்பு ஒலியுடன்** (உள்ளூர் நேரப்படி) **இந்த வாசகத்தை ஏழு முறை மொழியவும்: ‘பிரியமான கடவுளே, உங்கள் விருப்பம் நிறைவேறியது.’**”

டான் ஸ்டீவன்ஸ் அன்பு, பக்தி இரண்டிற்கும் இடையேயான வித்தியாசத்தைக் குறித்த பாபாவின் இந்த விளக்கத்தை வாசித்தார்:

**அன்பு, அன்பனை எரிக்கிறது;**
**பக்தி, அன்பிற்குரியவரை எரிக்கிறது.**

**அன்பு, அன்பிற்குரியவரின் மகிழ்ச்சியைத் தேடுகிறது;**
**பக்தி, அன்பிற்குரியவரிடமிருந்து ஆசிகளை நாடுகிறது.**

**அன்பு, அன்பிற்குரியவரின் பாரத்தை சுமக்க முயல்கிறது;**
**பக்தி, அன்பிற்குரியவர் மீது பாரத்தை வீசி எறிகிறது.**

**அன்பு கொடுக்கிறது;**
**பக்தி கேட்கிறது.**

**அன்பு மௌனமானது, மேன்மை மிக்கது,**
**வெளியளவில் தோன்றாதது;**
**பக்தி, தானே அதை ஒளிவு மறைவு இன்றி வெளிப்படுத்துவது.**

**அன்பிற்கு அன்பை வெளிப்படுத்த அன்பிற்குரியவரின்**
**பிரசன்னம் தேவையில்லை;**
**பக்தி, அன்பிற்குரியவர் மீதான பாசத்தை வெளிப்படுத்த,**
**அவரின் பிரசன்னத்தைக் கோரத் தவறியதில்லை.**

பாபா, இது குறித்து கருத்துத் தெரிவிக்கையில், **“இந்த சொற்பொழிவின் ஆரம்ப நிலையை நான் விளக்கினேன். ‘கடவுளை நேசிப்பது எப்படி?’ என்று கேட்டு, முறையிடும் பக்தர்களின் கூற்றிற்கு செவிசாய்த்த ஹாரி கென்மோருக்கு, இந்தியாவில் இது வழங்கப்பட்டது. சமீபத்தில், இந்தியாவில் நடந்த சகவாசத்தில் பங்கெடுத்த ஒவ்வொருவரும் உண்மையான, நேர்மையான அன்பர்கள். எனக்காக உயிரைத் துறக்கத் தயாராக இருந்தவர்கள்.”**

அதற்குப் பிறகு பாபா, தமது ஏழு நிறக் கொடி பறக்கவிடப்பட்டிருந்த லகூன் கேபினுக்குச் சென்றார். மெஹராபாத்தில் நடந்த சகவாசத்தின் போது பயன்படுத்தப்பட்ட இரண்டு கொடிகளில் இதுவும் ஒன்று. மேற்கத்திய சகவாசத்தில் பயன்படுத்துவதற்காக, ஒரு கொடியை மர்ட்டில் பீச் மையத்திற்கு அனுப்புமாறு பாபா, மணியிடம் கூறியிருந்தார். மற்றுமொரு கொடி ஆஸ்திரேலியாவிற்கு அனுப்பப்பட்டது. பாபா பல்வேறு நபர்களையும் சிறு குழுக்களையும் லகூன் கேபினுக்கு வரவழைத்து, தன்னைப் பார்க்காதவர்களை, தனது கையை முத்தமிட அனுமதித்தார்.

1956இல் நியூயார்க் நகரில், டெல்மானிக்கோ ஹோட்டலில் பாபாவை சந்தித்த பிறகு, ஹென்றி கஷௌட்டி அடிக்கடி அவருக்கு அறிவுறுத்தல்களைக் கேட்டு எழுதுவது வழக்கம். பாபா, **“நீங்கள் இந்தியாவிற்கு வர வேண்டும்”**

என்று பதிலளித்திருந்தார். ஹென்றி இதைச் செய்ய விரும்பினார், ஆனால் அவரிடம் போதுமான பணம் இல்லை. அவர் வர்ஜீனியாவின் ஹாம்ப்டன் நகரில் அமைந்த தனது வீட்டில், திங்கள் இரவு கூட்டங்களை வழக்கமாக நடத்தத் தொடங்கினார்; ஆனால், ஒரு கட்டத்தில் அவர் எழுதினார், "குருடர்களைக் குருடர்கள் வழிநடத்துவது போல் உணர்கிறேன்."

பாபா பதிலளித்தார், "**அவதார புருஷர் உங்களுக்குப் பின்னால் இருக்கும் போது, குருடர்கள் குருடர்களை வழிநடத்துகிறார்கள் என்ற கேள்விக்கே இடமில்லை; உங்கள் அன்பு, நம்பிக்கை மற்றும் யுகத்தின் அவதார புருஷரைப் பற்றிய மிகவும் உன்னதமான உணர்வு, புரிதல் போன்றவை பெரிதும் போற்றத்தக்கவை.**"

1958இல் பாபாவின் இந்த வருகையின் போது, ஹென்றி அவரது மனைவி கெச்சாவுடன் மர்டில் பீச் மையத்திற்கு வந்தார், ஆனால் பாபா, ஹென்றியை அதிகம் கண்டுகொள்ளவில்லை; பாபாவே அவருக்கு எல்லாம் எனும்போது, அவரது அலட்சியம் ஹென்றிக்குப் பெரும் அதிர்ச்சியாக இருந்தது; அவர் உயிருடன் வாழ்வது போன்ற எண்ணமே அவருக்கு இல்லை. பாபா 'இவரை', 'அவரை'ப் போன்ற பலரை அழைத்தார் - ஆனால் ஹென்றியை அல்ல. இறுதியாக, ஒரு நாள் ஹென்றி தனது இதயத்தில், பாபா கடவுள் என்பதால், அவரை நான் காணக்கூடாது என்பது கடவுளின் விருப்பமாக இருக்க வேண்டும் என்று தீர்மானித்தார். அடுத்த சில நிமிடங்களில், பாபா அவரையும் அவர் மனைவியையும் வரவழைத்தார்!

லகூன் கேபினில், தம்பதிகள் பாபாவின் காலடியில் தரையில் அமர்ந்தனர். ஹென்றி, பாபாவின் காலை முழங்காலிலிருந்து கீழே தடவி, "நான் உங்களை மனம் கனிந்து போற்றி பாராட்டுகிறேன், உங்களை மனமார நேசிக்கிறேன்" என்று அவரிடம் மீண்டும் மீண்டும் முணுமுணுத்தார். பாபா அவரிடம், "**நீங்கள் என்னுடன் மீண்டும் பிறவி எடுத்து வருவீர்கள். நீங்கள் எனக்கு மிகவும் நெருக்கமானவர்**" என்று கூறினார். அவர், ஹென்றியின் மனைவியிடம், "**ஹென்றி ஓர் அபூர்வமான ரத்தினக் கல் என்பதை நீங்கள் புரிந்துகொள்கிறீர்களா? அவர் என்னைப் புகழ்ந்து, நீண்ட நெடிய கடிதங்களை எழுதுகிறார். ஒரு வழக்கறிஞரின் காதல் கடிதங்கள், கவிஞரின் கவி நயத்துடன் உள்ளது!**"

கெச்சா உடனே, "அவர் உங்களுடன் இந்தியாவிற்குத் திரும்பிச் செல்ல விரும்புகிறார்" என்றார்.

"**நான் அவரை அழைத்துச் சென்றால் நீங்கள் என்ன செய்வீர்கள்?**"

"நானும் வருவேன்!" அவர் உறுதியாக பதிலளித்தார்.

பாபா, கெச்சாவிடம், "**நீங்கள் பிறரை மகிழ்விக்க முயற்சி செய்யுங்கள். நான் உங்களை மகிழ்விக்கிறேன். உங்கள் தாயும் தந்தையும் என்னை மிகவும் நேசிக்கின்றனர். நீங்கள் யாரை நேசிக்கிறீர்கள், ஹென்றியையா? அல்லது என்னையா?**"

“உங்களால்தான் நான் ஹென்றியை நேசிக்க முடிகிறது” என்று புத்திசாலித்தனமாக பதிலளித்தார்.

பாபா சிரித்துக்கொண்டே நாற்காலியிலிருந்து எழுந்து, அவரைத் தழுவினார். அவர் ஹென்றியிடம், “**கெச்சா என் இறை ஒளியின் ஓர் அலங்கார விளக்கு. நான் உங்களுக்கு ஓர் அழகான குடும்பத்தைக் கொடுத்துள்ளேன். நீங்கள் அவர்களை கவனித்துக்கொள்ளுங்கள். உங்கள் கடந்த கால கர்ம வினைகள் அனைத்தும் அழிக்கப்பட்டுவிட்டது. நீங்கள் இருவரும் எனது தெய்வீக கட்டைவிரலின் கீழ் இருக்கிறீர்கள்**!” என்று கூறினார்.

லகூன் கேபினில் பாபாவை அடுத்ததாக சந்தித்தவர்கள் நியூயார்க் நகரைச் சேர்ந்த ஜோனா ஸ்மித் (JOANNA SMITH) மற்றும் ஒலிவியா மௌ(க)ம் (OLIVIA MAUGHAM) என்ற இரு புதுமுகங்கள். இரண்டாம் உலகப் போரின்போது ஹிட்லரின் உரையைக் கேட்டு, நாட்டை விட்டு ஓடிப்போன ஒரு பெரிய, தீரம் நிறைந்த ஜெர்மன் யூதப் பெண்மணி ஜோனா. ராமகிருஷ்ணா மையத்தின் நீண்டகால உறுப்பினராக இருந்த அவர், ராமகிருஷ்ணாவின் போதனைகள் ‘தன்னை வெறுமையாக்கி விடுவதாகவும், அவர் அதைவிட அதிகம் விரும்பி, பாபாவிடம் அதைக் கண்டுகொண்டதாக நம்பினார். அவர் லகூன் கேபினுக்குள் பாபாவை சந்திக்க வந்தபோது, ”**உங்கள் ஆன்மீகம் குறித்த அனைத்தையும் என்னிடம் கூறுங்கள்**” என்று பாபா அவரிடம் கூறினார். அறிவார்ந்த நாட்டம் கொண்ட ஜோனா, வேதாந்தம் மற்றும் அது தொடர்பான விஷயங்களைப் பற்றி பேசத் தொடங்கினார். ஆனால், அவர் பேசிக் கொண்டிருந்த போதே, அவர் மனம் மேலும் மேலும் துவண்டு போவது போல தோன்றியது; அவரது கூந்தல் கலைந்தது, மூக்குக்கண்ணாடி வளைந்து நழுவியது, அவரது பேச்சு ஒரே குழப்பமானதாக இருந்தது. அவரை அழைத்து வந்தவர்களுக்கு, அவரிடம் எந்த ஒரு ‘பிடிப்பும் இல்லாதது போல தோன்றியது’ மிகுந்த ஆச்சரியமாக இருந்தது. இறுதியாக, பாபா, இடையே குறுக்கிட்டார், “**இவை அனைத்தும் வார்த்தைகள், வார்த்தைகள், வெறும் வார்த்தைகள்! வேறொன்றுமில்லை! கடவுளும், கடவுளின் மீதான அன்பு ஒன்றுதான் இன்றியமையாதது என்பது உங்களுக்குத் தெரியாதா?**” என்று கேட்டதும், ஜோனா, பாபாவின் காலடியில் விழுந்து கண்கலங்கினார். அவர் இதயம் தன்னிச்சையாக ஆக்கிரமிக்கப்பட்டது.

ஒலிவியா மௌ(க)ம், வேதாந்த பாரம்பரியத்தில் இணைவதற்கு முன்பே, பாபாவைக் குறித்த ஓர் அதிர்ஷ்டவசமான வாய்ப்பின் மூலமாக அவரைக் கண்டுகொள்ள நேர்ந்தது. ஒரு நாள், மளிகைக் கடை ஒன்றில் பொருட்களை வாங்கும் வேளையில், அங்கு நின்ற ஒரு பெண்மணியிடம், ஜீன் அட்ரியல் எழுதிய ‘அவதார்’ (AVATAR) என்ற புத்தகத்தின் நகல் இருந்ததை ஒலிவியா காண நேர்ந்தது. அட்டையிலிருந்த பாபாவின் சித்திரத்தைப் பார்த்த ஒலிவியா, “யார் அது?” என வினவவே, அந்தப் பெண்மணி பாபாவைப் பற்றி அவரிடம் கொஞ்சம் விளக்கினார்; அதி விரைவில் ஒலிவியா அதீத பக்தியுடன் பாபாவைப் பின்பற்றத் தொடங்கினார். அவர் அடுத்த நாளே வேதாந்தத்தில் தீட்சை பெற்றிருக்க

வேண்டிய அந்தத் தருணத்தில், அது உண்மையில் அவர் பின்பற்ற விரும்பும் பாதையா என்ற உறுதிப்பாடு இல்லாமல் இருந்தார். இவ்வாறு, இறுதியில் அவர் பாபாவின் அரவணைப்பில் வந்து அவரை மனமாரப் பின்பற்றினார்.

பிற அன்பர்கள் அனைவரையும் சந்தித்த பின்பு, பாபா, தனது தூக்கு நாற்காலியில் மர்டில் பீச் மையத்தை, ஒவ்வோர் அறையாக சுற்றி அழைத்துச் செல்லப்பட்டார்; பல அன்பர்கள் பாபாவைப் பின்தொடர்ந்தனர். மார்கரெட்டின் நடனக் கலைஞர்கள் மற்றும் ஹரோல்ட் ரட் (HAROLD RUDD) போன்ற பிற அன்பர்கள், மாறி மாறி பாபாவின் நாற்காலியைத் தாங்கிச் சென்றனர். இரண்டு அறைகளில், பாபா இறங்கி வாசல் வரை சென்றார். அதன் பிறகு, மதியம் 3:00 மணியளவில் தனது இல்லத்திற்குப் புறப்பட்டார்.

1958 மே 24 சனிக்கிழமை காலை, பாபா, பார்ன் கொட்டகைக்குள் நுழைந்ததும், நேரம் என்ன என்று கேட்டார். பின்னர் அவர் கூறினார்: “**பாபாவின் நேரம் ஒன்பது மணி, மனம் வருந்தி மன்னிப்புக் கோரும் பிரார்த்தனையில் இன்று என்னுடன் மீண்டும் இணையுங்கள்; கடவுள் தமது எல்லையற்ற இரக்கத்தால் உங்கள் பாவங்கள், பலவீனங்கள், குறைபாடுகள், தோல்விகள் அனைத்தையும் மன்னிப்பார். பிரார்த்தனை உங்களுக்குள் ஆழமாக மூழ்கும் அந்த கணத்தில், கவனம் என் மீது இருக்கட்டும்.**” அனைவரும் எழுந்து நிற்க, ஹாரி கென்மோர் பிரார்த்தனையை மொழிந்தார்.

அதைத் தொடர்ந்து, டான் ஸ்டீவன்ஸ், பாபாவின் ‘**இறைவன் தந்தையும், தாயுமானவர்**’ (GOD BEING BOTH FATHER AND MOTHER IN ONE) என்ற சொற்பொழிவைப் படித்தார் (இதற்கு முன்னர் 1958 பிப்ரவரி 18 அன்று மெஹராபாத்தில் வழங்கப்பட்டது). சொற்பொழிவின் போது இரண்டு முறை, விபத்துக்களால் பாபாவின் உடல் இயலாமலானதைக் குறிப்பிடும் போது, பாபா அவரது வலது பாதத்தைத் தொட்டு அல்லது சுட்டிக்காட்டி அவரது நெற்றியைத் தொட்டார். பின்னர், ‘**அன்பு ஒன்றுதான் பரிகாரம்**’ (LOVE IS THE REMEDY) வார்த்தைகளுக்கும் விளக்கங்களுக்கும் தேவையற்ற முக்கியத்துவம் கொடுக்காமல் இருப்பது) என்ற சொற்பொழிவு வாசிக்கப்பட்டது. பாபா கேட்டார்:

**மஜ்னுன் - லைலா என்ற இரு காதலர்களைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறீர்களா? அவர்களுக்கு இடையேயான மனித அன்பு அதன் உச்சத்தில் இருந்தது. மஜ்னுன், லைலாவிடமிருந்து வெகு தொலைவில் இருந்தான், எப்பொழுதும் அவளையே நேசிக்க முயன்றான், அவன் எங்குச் சென்றாலும் அவள் பெயரையே திரும்பத் திரும்ப மொழிந்தான். லைலா வேறு தொலைதூர இடத்தில் இருந்தபோதிலும், ஒரு நாள் மஜ்னுனின் காலில் ஒரு முள் நுழைந்து இரத்தம் வந்த அதே கணத்தில், லைலா தனது காலில் ஓர் அதிர்ச்சியை உணர்ந்ததோடு, இரத்தம் வழிவதையும் காண நேர்ந்தது. அப்படிப்பட்ட மனித அன்பு கூட தெய்வீக அன்பை விட குறைவானது. மனித அன்பு அதன் உச்சத்தில் இஷ்க்-இ-மிஸாஜி**

(ISHQ-E-MIZAJI, தாங்கொணா தீவிரம் மிகுந்த அன்பு). **தெய்வீக அன்பு என்பது இஷ்க்-இ-ஹக்கிகி** (ISHQ-E-HAKIKI, அமைதியும், சாந்தமும் நிறைந்த அன்பு).

டான் ஸ்டீவன்ஸிடம் பாபா கேட்டார், **"மஜ்னுன்-லைலாவின் கதை எப்படி முடிந்தது?"** அவருக்குத் தெரியவில்லை.

கென்மோர் குறுக்கிட்டு, "லைலா வேறொருவரை காதலித்து திருமணம் செய்திருந்தாலும் மஜ்னுன் மகிழ்ச்சியாக இருந்திருப்பார்" என்றார்.

பாபா தொடர்ந்தார்:

**மஜ்னுனின் இறுதிக் கட்டம் இவ்வாறு வெளிப்பட்டது. அவனது முழு வாழ்க்கையும் லைலாதான். எல்லோரிலும் அவளைப் பார்த்தான். நிச்சயமாக, அவன் தனது உடைகள், உடல்நிலை, உணவு ஆகியவற்றில் கவனம் செலுத்தவில்லை. அவன் அவளையே நினைத்துக்கொண்டு அலைந்தான். அப்போது, மரத்தின்கீழ் அமர்ந்திருந்த ஓர் ஆன்மீக குருநாதரை சந்திக்கவே, குருநாதர் அவனை அழைத்தார்: "நீங்கள் லைலாவை நேசிப்பது போல கடவுளைத் தீவிரமாக நேசிக்க முயற்சித்திருந்தால், அவரை எல்லா இடங்களிலும், எல்லாவற்றிலும் பார்த்திருப்பீர்கள்."**

**மஜ்னுன் பதிலளித்தான்: "நான் கடவுளுக்குப் பின்னால் இல்லை, நான் லைலாவிற்குப் பின்னால் இருக்கிறேன். நான் அவளைப் பார்க்கிறேன்." குருநாதர் அவனை அழைத்தார், அவனைத் தழுவினார், மஜ்னுன் எல்லா இடங்களிலும் கடவுளின் அனுபவத்தை அடையப் பெற்றான். பின்னர் அனல் ஹக் ('நான் கடவுள்') என்று கதறி அழுதான் - 'லைலா'விற்கு பதிலாக 'நான் கடவுள்!' என்றான். இந்த 'அனல் ஹக்' மன்சூரிடமிருந்து வேறுபட்டது.**

டான் ஸ்டீவன்ஸ் பாபாவின் மற்றுமொரு **'பொய்யும், போலியுமான நான் எனும் அகந்தை'** (FALSE 'I') என்ற சொற்பொழிவை படித்தார்:

**பரிணாம நிலையில், 'பொய்யான சுயம்' அல்லது 'பொய்யும், போலியுமான நான் எனும் அகந்தை' என்ற உணர்வு, மிகவும் குறுகிய அளவில் இருப்பது, பரிணாம வளர்ச்சிக்கான வாய்ப்பை வழங்குகிறது. மனித வடிவில், உணர்வின் பரிணாமம்** (வளர்ச்சி) **நிறைவடைகிறது, முழுமையடைகிறது. அன்பு முதன்முறையாக சுறுசுறுப்புடன் செயலில் வருகிறது. இவ்வண்ணம், அன்பு மிகவும் சுறுசுறுப்பாகவும் முழுமையாகவும் அங்கம் வகிக்கும் வேளையில், 'பொய்யும், போலியுமான நான் எனும் அகந்தை' உள்ளூர நுகரப்பட்டு அழிவை சந்திக்கத் தொடங்குகிறது.**

**இறுதியில், அன்பு அதன் உச்சத்தை எட்டும்போது, பொய்யும், போலியுமான 'நான்' எனும் அகந்தை, அன்பால் முழுவதுமாக நுகரப்படுகிறது. இது அன்பிற்குரியவரின் பலிபீடத்தில் அன்பன், அன்பு இரண்டும் நிறைவுற வழிவகுக்கிறது. அன்பன், அன்பில் நிலைத்திருப்பதுமில்லை, அன்பன் மீது அன்பு ஆட்சி புரிவதுமில்லை. இவ்வாறு இலக்கு எய்தப்படுகிறது. அன்பிற்குரியவர் தமது சுயத்தை விட உயர்ந்தவர்; அவரைத் தவிர வேறொன்றுமில்லை; இதர அனைத்தும் உள்ளூர நுகரப்படும்.**



மார்கரெட்டின் நடனக் குழு பாபாவை தூக்கு நாற்காலியில் அழைத்துச் செல்லும் காட்சி
(BEING CARRIED IN THE LIFT CHAIR BY MARGARET'S DANCERS)



குழந்தைகளுக்கான விருந்து, மர்டில் பீச்,
**24 மே 1958**
(CHILDREN'S PARTY, MYRTLE BEACH, 24 MAY 1958)



மர்டில் பீச், மே **1958**
(MYRTLE BEACH, MAY 1958)

நியூயார்க் நகரின் பெரில் வில்லியம்ஸை மேற்கோள் காட்டி, பாபா மேலும் கூறினார்:

**விளக்க முடியாத ஒன்றை, இப்போது விளக்குவேன். புரிந்து கொள்ள முடியாததை, நீங்கள் புரிந்து கொள்ள முயற்சி செய்ய வேண்டும்.**

**இதோ இங்கே பெரில். நீங்கள், பெரில், எல்லையில்லா பெருங்கடல், ஆனால் அந்தப் பெருங்கடலின் 'துளி'யாக, உங்களுக்கு மூன்று அடுக்குகள் உள்ளன. நீங்கள் பார்க்கிறீர்கள், கேட்கிறீர்கள், வாசனையை நுகர்கிறீர்கள், இதைச் செய்கிறீர்கள், அதைச் செய்கிறீர்கள், செய்வது அனைத்தும் உள்ளே இருந்தல்ல, ஆனால் உங்கள் கண்கள், உங்கள் மூக்கு, உங்கள் வெளிப்புற அடுக்குகளாகிய ஐம்புலன்கள் மூலமாகச் செய்கிறீர்கள். நீங்கள் பார்ப்பது உங்கள் எல்லையற்ற ஏக இறைவனான பரமாத்மாவின் வெளிப்புற ஐம்புலன்களிலிருந்து வருகிறது, அதில் நீங்கள் துளியாக இருக்கிறீர்கள். பெரில் தனது ஐம்புலன்களின் வெளிப்புற அடுக்கு வழியாக அளவிறுதியற்ற பரமாத்மாவைக் காணவில்லை. பெரில் ஆற்றலைப் பயன்படுத்தி, செயலில் ஈடுபடுகிறார், அது போன்ற மற்றும் பல. அது நீங்களல்ல, நீங்கள் எங்கும் செல்லவில்லை, நீங்கள் அளவிறுதியற்றவர். உங்களின் துளிதான் பார்க்கிறது, நகர்கிறது, மேலும் ஒரு துளியாக நீங்கள் வரம்புகளை உணர்கிறீர்கள். உங்கள் கைகள் அல்லது கால்கள் துண்டிக்கப்பட்டால், நீங்கள் எப்போதும் பெரில் என்றே உணர்கிறீர்கள். நீங்கள் கை அல்ல, உடல் அல்ல; நீங்கள் வரையறுக்கப்பட்டவர் என்று நினைக்க வைப்பது உங்கள் மனம்.**

பாபா அப்போது, ஒரு தொப்பி, தலையணை, பேனா, ஒரு பெட்டி மற்றும் நோட்டுப் புத்தகத்தை வரவழைத்து, சொற்பொழிவைத் தொடர்ந்தார்:

**இங்கே பெரில், அளவிறுதியற்றவர், தொப்பி வடிவில் உள்ளார் என்று வைத்துக்கொள்வோம். பெரில் வரம்பற்றவர், அவர் எல்லையற்றவர். அவருக்கு முடிவு என்ற ஒன்று இல்லை. ஆனால் பெரில் உண்பது, அருந்துவது போன்ற அனைத்தையும் இந்த அடுக்குகள்** (ஐம்புலன்கள்) **மூலம் செய்கிறார்.**

(பாபா தலையணை மீது இருந்த நோட்டுப் புத்தகம், பேனா மற்றும் பெட்டியைக் காட்டினார்.) **பெரில், இந்தத் தொப்பியின் வெளிப்புறத்தில்** (தொப்பியின் கிரீடம்) **அனைத்து விஷயங்களையும் செய்வதற்கு பதிலாக, உள்நோக்கித் திரும்பி, எல்லாவற்றையும் எல்லையற்றதாகப் பார்க்க வேண்டும். ஒரே ஒரு திருப்பத்தின் மூலம்** (பாபா தொப்பியை உள்நோக்கித் திருப்பியபோது, எதிர் பக்கம் திறக்கப்பட்டது) **அவர் தன்னை எல்லையற்றவராகக் காண்கிறார். நீங்கள் முதல் அடுக்கைக் கைவிடுவதானால், அங்கே மற்றொன்று உள்ளது. இந்த அடுக்குகள் வழியாக, மாயையை, நீங்கள் தொடர்ந்து பார்க்கிறீர்கள். நீங்கள் ஒரு முழுமையான திருப்பத்தை எடுப்பதானால், எல்லையற்றவராக உணர்கிறீர்கள்.** (அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தரும் விதத்தில் பாபா தொப்பியை அணிந்தார்.)

இப்போது, இதிலுள்ள விஷயம் என்னவெனில், பெரில் இதை எப்படிச் செய்ய வேண்டும்?

இது சாத்தியமற்றது, ஏனெனில் லட்சக்கணக்கான பிறப்புகளிலிருந்து அவர் ஒரே திசையில் பார்க்கும் பழக்கத்தை உருவாக்கிவிட்டார். நீங்கள் பிறக்கும்போது, உங்களுக்கு முன்னால் இருப்பதைப் பார்ப்பது போல், அதையே தொடர்ந்து பார்த்து, அதை சாதாரணமாக எடுத்துக் கொள்வது பழக்கமாகிவிடுகிறது. உங்களது சொந்த முயற்சியின் மூலமாகவோ அல்லது ஆன்மீகப் பாதையில் வாலிகளின் வழிகாட்டுதலின் மூலமாகவோ உங்களால் அதிகபட்சம் செய்யமுடிவது, உங்கள் பார்வையின் கோணத்தை சற்று மாற்றுவதுதான். நீங்கள் ஒரு முழுமையான திருப்பத்தை எடுக்க மாட்டீர்கள், ஆனால் உங்கள் பார்வையின் கோணத்தை மாற்றுவீர்கள். அதைத் தெளிவுபடுத்தும் விதத்தில் ஒரு செயல் விளக்கத்தைப் பார்ப்போம். இதை நான் இந்தியாவில் விளக்கவில்லை.

இது (பாபா, நோட்டுப் புத்தகத்தைச் சுட்டிக்காட்டி) பௌதீகத் தளம். இது (பெட்டியை சுட்டிக்காட்டி) சூட்சும தளம். நீங்கள் பௌதீக உலகத்தை, பௌதீகத் தளத்தின் மூலம் பார்க்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டீர்கள். இப்போது, பெரில் (ஐந்தாவது ஆன்மீகத் தளத்தில் ஆழ் மன உணர்வுடன் நிலைகொண்ட) ஒரு வாலியைத் தொடர்பு கொண்டால், பெரில் (உள்நோக்கி) திரும்புவதற்கு அந்த வாலியால் உதவ முடியாது, ஆனால் அவர் ஓர் அடியை பின்னோக்கி எடுத்து வைத்து, சூட்சும தளத்தைப் பார்க்க உதவ முடியும். இப்போது, பௌதீக உலகம் கண்ணின் பார்வையிலிருந்து மறைந்து விடும் (பாபா நோட்டுப் புத்தகத்தை அகற்றினார்). ஆனால் ஒரு பரிபூரண குருநாதர் அவரை (பெரிலை) குதிக்க வைத்து, முழுவதுமாக திரும்பச் செய்கிறார், அதுதான் முடிவு. ஒரு பரிபூரண குருநாதரின் உதவியுடன், அவர் முன்னோக்கி செல்ல, பின்வாங்க வேண்டிய தேவையில்லை.

இந்த விளக்கம் எனக்கு பெரும் தலைவலியைத் தருகிறது. உண்மையில் இது இப்படித்தான் நடக்கும். சூட்சும தளத்தில் இருப்பவர்கள், பௌதீகத் தளத்தில் இருப்பவர்களிடமிருந்து வேறுபட்ட அனுபவங்களைக் கொண்டுள்ளனர். பார்வையின் கோணம் முற்றிலும் மாறுகிறது, ஆனால், அது அனைத்தும் இன்னும் மாயை. ஆழ் மன தளத்தில், நீங்கள் அற்புதமான காட்சிகளைக் காண்கிறீர்கள். உங்கள் பார்வை மாறும் அதே வேளையில், நீங்கள் மாயையை வேறு கோணத்தில் பார்க்கிறீர்கள். ஆனால் நீங்கள் மாயைக்கும் அப்பால் செல்ல வேண்டும். பௌதீகம், சூட்சுமம், ஆழ் மனம், இறைவன் அனைத்தும் இங்கேயே உள்ளன. பௌதீக, சூட்சும, ஆழ் மன உலகங்கள் ஒன்றை விட மற்றொன்று உயர்ந்தவை அல்லது தாழ்ந்தவை என்று நினைக்காதீர்கள் - அனைத்தும் இங்கே உள்ளன. உங்கள் சுய பார்வையின் கோணம்தான் இந்த வித்தியாசத்தை ஏற்படுத்துகிறது. நீங்கள் சூட்சும உலகப் பொருட்களை இன்னும் ஆழமாகப் பார்க்கத் தொடங்குகிறீர்கள்; அதைத் தொடர்ந்து ஆழ் மன உலகத்தில் இன்னும்

ஆழமாகப் பார்க்கிறீர்கள்; பின்னர் ஒரு முழுமையான திருப்பத்தை ஏற்படுத்துவதன் மூலம், உங்களை நீங்கள் எல்லையற்றவராக பார்க்கிறீர்கள். இறுதியில் உங்களைத் தவிர வேறு எதுவும் இல்லை.

அந்த ஆனந்தத்தைப் பற்றி உங்களுக்கு ஏதாவது கருத்து உள்ளதா? அது தொடர்ச்சியாக, இடைவெளி இல்லாமல், நிரந்தரமானதாகவும், என்றும் மாறாததாகவும் இருக்கும் ஒன்று.

டான் ஸ்டீவன்ஸ் கூறுகிறார்: "உங்கள் விளக்கங்கள் மிக அருமை, உண்மையில் மிகவும் அருமை!" ஆனால் உங்களுக்கு விளக்கங்கள் பற்றிய எந்த யோசனையும் கிடையாது. அனைத்தும் அவ்வளவு எளிமையான முறையில் விளக்கப்படவில்லை. என்னை எனது சுய ரூபத்தில் பார்ப்பது எவ்வளவு அற்புதமானது! அன்பு ஒன்றுதான் உங்களை என்னிடம் கொண்டு வர முடியும்!

பாபா தொடர்ந்து கூறினார்:

இந்தியாவில் நடந்த சகவாசத்தில் பல ஊழியர்கள் இருந்தனர். பாபாவின் பணி வேகமாக பரவி வருகிறது. ஆந்திராவில் இப்போது பல மையங்கள் உள்ளன, எத்தனை என்பது ஆதிக்குக் கூட நினைவில் இல்லை. ஹமிர்பூரிலும் அப்படித்தான்; அங்கு பல சிறிய மையங்கள் உள்ளன. சிறுவர்கள் பள்ளிகளிலும், வயல்வெளிகளிலும் பாபாவின் பெயரை மீண்டும் மீண்டும் மொழிகின்றனர். பள்ளிக்குச் செல்லும் வழியில் அல்லது குழுக்களாக பாபாவின் பஜனைகளைப் பாடுகின்றனர். அவர்கள் ஒரு சிறந்த ஆளுமையைக் குறித்த கட்டுரை ஒன்றை எழுத வேண்டியிருக்கும் வேளையில், அவர்கள் பாபாவின் வாழ்க்கை சரித்திரத்தைப் பற்றி எழுதுகிறார்கள், பலர் முதல் பரிசை வென்றுவிடுகிறார்கள்.

மேலும் ஒரு சுவாரஸ்யமான விஷயம் உள்ளது: 'காலை வணக்கம்' என்பதற்கு பதிலாக 'சீதா-ராம்' அல்லது 'ஜெய்ராம்' என்ற வார்த்தைகளால் ஒருவரையொருவர் வாழ்த்துவது வட இந்தியாவில் பழங்கால வழக்கம். இப்போது அவர்கள் 'ஜெய் பாபா' என்று கூறுகிறார்கள், ஆனால் முந்தைய வழக்கம் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் பழமையானது.

பல ஊழியர்கள் எனக்காக தங்கள் இதயங்களை அவர்களின் பணியில் ஈடுபடுத்துகின்றனர், ஆனால் அவர்களிடையே வேறுபாடுகள் உள்ளன. அவர்களின் வேறுபாடுகள் அனைத்தும் என் மீதான தீவிர அன்பின் மூலம் எழுகின்றன. இந்த நாட்டில் ஐவி (டியூஸ்) ஒரு சிறிய குழுவைக் கொண்டுள்ளார்; இன்னும் அவர்களிடையே வேறுபாடுகள் உள்ளன.

"அது உண்மையா டான்?"

டான் ஸ்டீவன்ஸ், "இங்கேயும் அங்கேயும்" என்று பதிலளித்தார்.

பாபா தொடர்ந்தார்:

ஒரு பெரிய குழுவில், பெரிய வேறுபாடுகள் நிலவுவது உண்டு. அதனால் ஆந்திராவில் (1954இல்), ராஜமுந்திரியில் ஓர் இரவு முழுவதும் 'பணி' என்பதன் அர்த்தத்தை விளக்கி, சொற்பொழிவு வழங்க

**வேண்டியிருந்தது. ஆனால் எனது அறிவுரைகளைப் பின்பற்றுவதற்கு, அவர்கள் தங்களால் இயன்றதைச் செய்த போதிலும், சிரமங்கள் தொடர்ந்தன.** (இதன் விளைவாக), **சகவாச கூட்டத்தில் அவர்கள் தங்கள் குறைகளை என்னிடம் முறையிட்டனர். ஒவ்வொருவரிடமும் தனித்தனியாகப் பேசுவதற்கு பதிலாக, 'பணி' குறித்த ஐந்து நிமிட சொற்பொழிவை அவர்களுக்கு வழங்கினேன்.**

டான் ஸ்டீவன்ஸ் மெஹராபாத் சகவாசத்தின் போது வழங்கப்பட்ட 'பாபாவின் பணி' (BABA'S WORK) என்ற சொற்பொழிவை வாசித்ததைத் தொடர்ந்து, பாபா இவ்வாறு கருத்துத் தெரிவித்தார்: "**இது இந்திய ஊழியர்களுக்கானது, ஏனெனில் நான் 'பணி' மற்றும் 'பணியாளர்கள்' அல்லது 'ஊழியர்கள்' என்றால் என்ன என்பதை பல சந்தர்ப்பங்களில் தெளிவுபடுத்தினேன். இது எனது அறிவுரை.**"

அப்போது பாபா, "**நேற்றிரவு யார் தூங்கவில்லை?**" என வினவினார்.

கெச்சா கஷௌட்டி கையை உயர்த்தியபோது, பாபா ஏன் என்று கேட்டார். "ஏனெனில் நான் ஒருவரை நீரில் மூழ்காமல் காப்பாற்ற முயற்சித்ததாக கனவு கண்டேன்," என்று அவர் பதிலளித்தார்.

"**படுக்கைக்குச் செல்வதற்கு முன்னர் ஐந்து நிமிடம் என்னை நினைவில் கொள்ளுங்கள்**" என்று பாபா அவருக்கு அறிவுறுத்தினார்.

ஹரோல்ட் ரட் கூறினார், "பாபா, நான் தூங்காமல் இருப்பதற்கு எண்ணற்ற, ஆழமான காரணம் உள்ளது. குழந்தை (ரஃபேல்) என்னைத் தூக்கத்திலிருந்து எழுப்பிவிட்டான்!"

பாபா கூறினார், "**உங்கள் விளக்கத்தைக் கேட்டு நான் மகிழ்ச்சியடைகிறேன், ஏனெனில் உலகில் உள்ள அனைத்துக் குழந்தைகளும் என்னை எப்படித் தூங்காமல் விழித்திருக்கச் செய்கிறார்கள் என்பதை, இப்போது உங்களால் புரிந்து கொள்ள முடிகிறது!**"

பாபா சில நிமிடங்கள் ஓய்வெடுக்குமாறு கேட்டுக்கொண்டார். கூட்டம் மீண்டும் தொடங்கியபோது, அவர் கூறினார்: "**இன்று மதியம் குழந்தைகளுக்கான விருந்து ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதால், மதிய உணவுக்காக, பன்னிரெண்டு மணிக்குள் அனைவரையும் அனுப்புமாறு கிட்டி என்னிடம் கேட்டுக் கொண்டுள்ளார். நாளை நான் பெண்மணிகள் அடங்கிய ஒரு சிறிய குழுவை என் இல்லத்திற்கு அழைக்கிறேன். இது மெஹராவின் பணி தொடர்பானது.**

"**அதன் பின்னர் எதிர்வரும் திங்கட்கிழமை மதியம், மார்கரெட்டின் நடனக் கலைஞர்கள் ஒரு நிகழ்ச்சியை நடத்த உள்ளனர்; எனவே, மதியம் 2:30 மணி முதல் 3:30 மணி வரை, பார்ன் கொட்டகையில் அனைவரும் இருக்க வேண்டும், கிட்டத்தட்ட நீங்கள் அனைவரும் நிற்க வேண்டியது வரும். எரச் நாள் முழுவதும் நின்றுகொண்டிருக்கிறார். அதனால் உங்களுக்கு ஒரு மணி நேரம் என்பது அதிகம் இல்லை. செவ்வாய்கிழமை, ஆண்களின் நிகழ்ச்சி, எனக்கு ஓய்வு வழங்கும் விதத்தில் எதிர்பாராத ஒரு நிகழ்ச்சி. நீங்கள்**

இன்னும் அது குறித்து யோசிக்கவில்லை என்றால், பாபா, ஆண்களிடம் சைகையால் தெரிவித்தார், "யோசிக்கத் தொடங்குங்கள்!"

"காலையில் அனைவரும் என்னுடன் ஒன்பது முதல் பகல் பன்னிரண்டு மணி வரை, பார்ன் கொட்டகையில் இருக்க வேண்டும். பாபாவின் 'ஒன்பது மணி', நினைவில் கொள்ளுங்கள்! அதன் பின்னர் ஒவ்வொரு நாளும், மதியம் முதல், நான் லகூன் கேபினில் இருப்பேன்."

பாபா நேரம் என்ன என்று கேட்டு, தொடர்ந்து கூறினார், "பாபாவின் நேரம் பத்து மணியைக் கடந்து பத்து நிமிடம்!" (இது உண்மையில் பதினொன்று மணிக்குப் பிறகு பத்து நிமிடம்.)

'**செயலும், செயலற்ற தன்மையும்**' (ACTION AND INACTION) பற்றிய சொற்பொழிவு (முதன்முதலாக முந்தைய ஆண்டு பூனாவில் வழங்கப்பட்டது) பின்பு வாசிக்கப்பட்டது:

1. கடவுளின் 'அனைத்தையும் கடந்த அப்பாற்பட்ட நிலையில்', 'உணர்வற்ற செயலற்ற தன்மை' உள்ளது.
2. இறை-உணர்வை அடைந்த நிலையில், 'உணர்வுப்பூர்வமான செயலற்ற தன்மை' உள்ளது. இது பரிபூரண இறை உணர்வு நிலை அல்ல, ஆனால், 'விடுதலை'யை எய்திய நிலை (அதாவது முக்தி நிலை; ஒரு ஜீவன்முக்தா, பூமியில் இருக்கும் போது விடுதலை அடையப் பெற்ற தனிப்பட்ட ஆத்மா). இந்த நிலையில், எல்லையற்ற சக்தி, அறிவு, பேரின்பம் ஆகியவற்றை நல்கும் முழுமையான அமைதியின் மொத்த சொரூபம் உள்ளது.
3. மேற்கூறிய 1 மற்றும் 2ற்கு இடையிலான இடைப்பட்ட நிலையில் - 'உணர்வுப்பூர்வமான செயல்' உள்ளது. செயல்கள் மனப்படிவங்களுக்கு வழி வகுக்கும். மனப்படிவங்கள் மேலதிகச் செயல்களையும், அதனால் விளையும் பிணைப்புகளையும் உருவாக்கும். இந்த நிலையில் பிணைப்புகளின் சூழல் உருவாகிறது.
4. ஏழாவது ஆன்மீகத் தளத்தில் அதாவது ஒரு மஜ்ஜூப் நிலையில், 'உணர்வற்ற செயல்' உள்ளது.
5. பரிபூரண குருநாதர்களின் நிலையில், 'உணர்வுப்பூர்வமான செயலின் செயலற்ற தன்மை' உள்ளது.

பரிபூரண குருநாதர்கள் மனப்படிவங்களிலிருந்து விடுதலை அடையப் பெற்றவர்கள்; அவர்களை எந்த மனப்படிவங்களும் தொற்றிக் கொண்டிருக்காது. எனவே, அவர்களின் சுய செயல்களுக்கு எந்த வாய்ப்பும் இருக்க முடியாது. அவர்களின் வாழ்க்கை செயலற்றது, ஆனால் நடைமுறையில் நிலவும் சுற்றுப்புற சூழ்நிலைகள் காரணமாக, செயலில் உள்ளது. பரிபூரண குருநாதர்களின் செயல்கள், அப்போது நிலவும் சுற்றுப்புற சூழ்நிலையால் தூண்டப்படுகின்றன. செயல்கள் எவ்வாறு தூண்டப்படுகின்றன? பாபா எப்போதேனும் அதை விளக்குவார். ஆனால் மேலே குறிப்பிடப்பட்ட நிலைகளின் சில எடுத்துக்காட்டுகள் இங்கே:

**‘அனைத்தையும் கடந்த அப்பாற்பட்ட நிலையில்’** (THE BEYOND, BEYOND STATE OF GOD) **கடவுள், தொட்டிலில் ஆழ்ந்து தூங்கும் குழந்தையுடன் ஒப்பிடலாம். ‘உணர்வற்ற செயலற்ற தன்மை’க்கு** (UNCONSCIOUS INACTION) **இது ஓர் எடுத்துக்காட்டு.**

**இறை உணர்வை அடைந்த ஒருவரின் நிலையை** (ஜீவன்முக்தா, பரிபூரண குருநாதர் அல்ல) **தொட்டிலில் இன்னும் முழுமையாக விழித்திருக்கும் குழந்தையுடன் ஒப்பிடலாம். ‘உணர்வுப்பூர்வமான செயலற்ற தன்மை’க்கு** (CONSCIOUS INACTION) **இது ஓர் எடுத்துக்காட்டு.**

**1 மற்றும் 2ற்கு இடையிலான இடைப்பட்ட நிலையை, தொட்டிலுக்கு வெளியே விழித்திருக்கும் குழந்தையோடு ஒப்பிடலாம். இது, உணர்வுப்பூர்வமான செயலுக்கு** (CONSCIOUS ACTION) **ஓர் எடுத்துக்காட்டு.**

**ஏழாவது ஆன்மீகத் தளத்தில் நிலைகொண்டிருக்கும் மஜ்ஜூபின் நிலையை, தூக்கத்தில் நடமாடும் ஒருவருடன் ஒப்பிடலாம். தூக்கத்தில் நடமாடும் ஒருவர், இதர செயல்களைச் செய்தாலும், இந்த நிலையில் அவர் என்ன செய்கிறார் என்பது அவருக்குத் தெரியாது. இதேபோல், ஏழாவது ஆன்மீகத் தளத்தில் நிலைகொண்டுள்ள ஒரு மஜ்ஜூபும் செயல்களைச் செய்கிறார், ஆனால் அவற்றைப் பற்றிய உணர்வில்லை. அவர் செய்வது அனைத்தும் உணர்வற்ற செயல்கள் - அவர் உண்கிறார், அருந்துகிறார், உரையாடுகிறார், ஆங்காங்கே நகர்கிறார் இது போன்ற பல. ஆனால் இவை அனைத்தும் அவரது உணர்வற்ற செயல்கள்** (UNCONSCIOUS ACTION).

**ஒரு பரிபூரண குருநாதரின் நிலையை, விழித்திருக்கும் குழந்தையுடன் ஒப்பிடலாம், ஆனால் மனிதகுலத்தால் தொடர்ந்து ஆட்டிக் கொண்டிருக்கும் தொட்டிலின் உள்ளே இருப்பது போன்ற நிலை. இதுவே உணர்வுப்பூர்வமான செயல் ஈடுபாடுடைய செயலற்ற தன்மை** (CONSCIOUS, ACTIVE INACTION). **செயலற்ற தன்மை என்பது தொட்டிலுக்குள் இருப்பது, மற்றும் செயல் ஈடுபாடுடைய செயலற்ற தன்மை என்பது பிறரால் தொட்டில் ஆட்டப்படுவது.**

**கடவுள் உண்மையில் உணர்வுப்பூர்வமாக செயலின்றி இருப்பவர். இந்த உணர்வுப்பூர்வமான செயலின்மையின் அமைதி மிகவும் உள்ளார்ந்தது, அது கடவுளுக்கு எல்லையற்ற சக்தி, எல்லையற்ற அறிவு, எல்லையற்ற பேரின்பம் ஆகியவற்றின் பண்புகளை வழங்குகிறது.**

**இதைப் புரிந்து கொள்ள இரண்டு அல்லது மூன்று முறை படிக்க வேண்டும்; அது கடினம் என்பதால் ஹ:பீஸ் கூறினார்: “பிரபஞ்சமும் அதன் விவகாரங்களும் ஒன்றும் இல்லை என்றால், உண்மையிலேயே ஒன்றுமில்லாதது.”**

**நமது செயல்களால் நாம் பிணைப்புகளை உருவாக்குகிறோம். நல்ல, தீய செயல்கள் இரண்டும் பிணைப்புகளை உருவாக்கும். ஒருவர் செயல்களுக்கு அப்பால் செல்லும் வேளையில் பிணைப்புகள் இராது. ஒருவர் ஆழ்ந்த தூக்கத்தில் இருக்கும் வரை, செயல்களுக்கு அப்பால் செல்ல**

முடியாது, ஏனெனில், மனப்படிவங்கள் செலவழிக்கப்பட்டாக வேண்டும். மனப்படிவங்கள் செலவழிக்கப்படும் வேளையில், மேலதிகமான செயல்கள் உருவாக்கப்படுகின்றன; மேலும், செயல்கள் மேலதிகமான பிணைப்புகளை உருவாக்குகின்றன.

டான், நீங்கள் ஆழ்ந்த தூக்கத்தில், கடவுளின் மூலமுதலான அசல் நிலையில் இருக்கிறீர்கள். பிணைப்புகள் இல்லை, செயல்கள் இல்லை. ஆனால் கடந்த கால செயல்களின் மனப்படிவங்கள் உங்களைத் தட்டி எழுந்திருக்கச் செய்யும், எனவே உங்கள் மனப்படிவங்களை செயலின் மூலம் செலவழிக்கத் தொடங்குவீர்கள். உங்கள் செயலற்ற நிலையின் மூலமுதலான அசல் நிலைக்கு உணர்வுப்பூர்வமாகச் செல்வதே குறிக்கோள். தூக்கத்தில் நீங்கள் சுயநினைவின்றி இருப்பதால், அங்கே சுயநினைவற்ற செயலற்ற தன்மை நிலவும்.

செயல்களிலிருந்து விடுபடுவது எப்படி? மீண்டும் நாம் அன்பின் தோள்களில் சாய்கிறோம். அன்புதான் ஒரே பரிகாரம். இந்த அவதார காலகட்டத்தில் மட்டுமல்ல, ஒவ்வொரு முறை வரும்போதும் அன்புதான் ஒரே பரிகாரம் என்பதை ஆணித்தரமாகச் சொல்கிறேன்.

நாம் மஸ்துகளைப் பார்த்திருக்கிறோம். அவர்கள் என்னை மிகவும் தீவிரமாக நேசிக்கிறார்கள் என்பதால், தூங்குவதற்கும், உரையாடுவதற்கும் அல்லது உண்பதற்கும் எந்த சந்தர்ப்பமும் இல்லை. அத்தகைய அன்பை உங்களிடம் கட்டாயப்படுத்தாதீர்கள். இது இயற்கையாகவே வருவது.

எனக்கு வேண்டியது இதுதான். கவனமாகக் கேளுங்கள்; என் அன்பர்களுக்கு இது மிகவும் இன்றியமையாதது:

அன்பிற்குரியவரின் விருப்பத்தை, அன்பன் நிறைவேற்ற வேண்டும். என் அன்பர்களுக்கான எனது விருப்பம் (MY WISH) பின்வருமாறு:

எனது விருப்பம்

1. உங்கள் பொறுப்புகளைத் தவிர்க்காதீர்கள்.
2. உங்கள் உலகக் கடமைகளில் உண்மையுடன் கலந்துகொள்ளுங்கள், ஆனால் இவை அனைத்தும் பாபாவினுடையது என்று எப்போதும் உங்கள் மனதின் பின்னால் இருக்க வேண்டும்.
3. நீங்கள் மகிழ்ச்சியாக உணரும்போது, 'நான் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்று பாபா விரும்புகிறார்', மேலும், நீங்கள் துன்பப்படும்போது, 'பாபா, நான் துன்பப்பட வேண்டும் என்று விரும்புகிறார்' எனவும் சிந்தியுங்கள்.
4. தவிர்க்க முடியாத ஒவ்வொரு சூழ்நிலையையும் ஏற்று நடந்து கொள்ளுங்கள், மேலும், நேர்மையாகவும் உண்மையாகவும் சிந்தியுங்கள்: "பாபா என்னை இந்த சூழ்நிலையில் வைத்துள்ளார்."
5. பாபா ஒவ்வொருவரிடத்திலும் இருக்கிறார் என்பதை புரிந்து கொண்டு, பிறருக்கு உதவவும், சேவை செய்யவும் முயற்சி செய்யுங்கள்.

**நான் ஒவ்வொருவருக்கும் எனது தெய்வீக அதிகாரத்துடன் கூறுகிறேன், யார் ஒருவர் தனது இறுதி மூச்சை விடும் வேளையில் எனது பெயரை உச்சரிக்கிறாரோ, அவர் என்னிடம் வருகிறார். எனவே உங்களின் கடைசி தருணங்களில் என்னை நினைவுகூர மறவாதீர்கள். இந்த நேரத்திலிருந்து, நீங்கள் என்னை நினைவில் கொள்ளத் தொடங்காத வரை, உங்கள் இறுதி மூச்சை விடும் நேரம் நெருங்கும்போது, என்னை நினைவில் கொள்வது கடினமாக இருக்கும். இனிமேலாவது அந்தப் பயிற்சியைத் தொடங்க வேண்டும். தினமும் ஒரு முறை எனது பெயரை உச்சரித்தாலும், இறுதி தருணங்களில் என்னை மறக்க மாட்டீர்கள்.**

இதை வாசித்த பிறகு, பாபா சிலரிடம் நகைச்சுவை துணுக்குகளை மொழியுமாறு கேட்டுக்கொண்டார். ஹாரி கென்மோர் மற்றும் ஹாரி ஃப்ளோர்ஷெய்ம் ஒவ்வொருவரும் ஒன்றை எடுத்துரைத்தனர். அதைத் தொடர்ந்து பாபா, '**எனது விருப்பம்**' (MY WISH) என்ற அறிக்கையை மீண்டும் வாசிக்குமாறு அறிவுறுத்தினார். "**ஜூன் 10 முதல் ஜூலை 10 வரை, இந்தியாவிலிருந்து நான் அனுப்பும் உத்தரவுகளுடன் இதுவும் இணைக்கப்பட வேண்டும்**" என்று அவர் குறிப்பிட்டார்.

அறிக்கை மூன்றாவது முறையாக வாசிக்கப்பட்டது. பாபா கூறினார், "**இங்கே கூறப்பட்ட அனைத்தையும் நீங்கள் புள்ளிவாரியாகப் பின்பற்ற வேண்டும் என்று நான் விரும்புகிறேன்; ஆனால் இந்த அறிக்கை, கீழ்ப்படிதல் குறித்த ஒரு விஷயத்தை உட்படுத்தவில்லை. ஜூன் 10 முதல் ஜூலை 10 வரை நான் அனுப்பும் எந்த உத்தரவையும், நீங்கள் எப்பாடுபட்டேனும் துல்லியமாகப் பின்பற்ற வேண்டும்.**"

இத்துடன் கூட்டம் நிறைவடைந்தது. பாபா, பார்ன் கொட்டகையை விட்டு வெளியேறினார்; எலிஸபெத் தனது நீல நிற ஃபோர்ட் காரில் பாபாவை மெதுவாக அழைத்துச் சென்றார். கார் கடந்து செல்லும் வேளையில், அவர் கையை நீட்டும்போது அதைத் தொடவும், முத்தமிடவும் அன்பர்களின் நீண்டதொரு வரிசை உருவானது. லகூன் கேபினில் மதியம் 2:00 மணி வரை, பாபா தனிப்பட்ட நேர்காணல்களை வழங்கினார்.

அன்று மதியம், மர்டில் பீச் மையத்தில், காப்பாளர் கேபின் அருகில் அமைந்த வட்டப் பகுதியைச் சுற்றி குழந்தைகளுக்கான விருந்து நடைபெற்றது. கார்பென்டர் (CARPENTER) மற்றும் ஹெய்ன்ஸ் (HAYNES) குழந்தைகள் போன்ற சில சிறுவர், சிறுமியர்கள் பாபாவிற்கு நறுமணம் மிக்க, மஞ்சள் நிற இரட்டடுக்கு இதழ்களைக் கொண்ட மலர் மாலைகளை அணிவித்தனர், மேலும் அவர் 40 குழந்தைகளில் ஒவ்வொருவரையும் தழுவினார். பாபா ஐந்து அடுக்கு பிறந்தநாள் கேக்கை வெட்டினார். இது பாபாவின் உண்மையான பிறந்தநாள் அல்ல என்பது அனைவருக்கும் தெரியும், ஆனால் குழந்தைகளின் மகிழ்ச்சியைக் கருத்தில் கொண்டு, அவர் விருந்துக்கு இணக்கம் தெரிவித்தார்.

பாபா குழந்தைகளுக்கு ஆரஞ்ச் பழ ரசத்தை காகிதக் கோப்பைகளில் ஊற்றினார், மேலும் ஒவ்வொருவருக்கும் இனிப்பு மிட்டாய்களை வழங்கினார்.

அவர் ஒரு சில மிட்டாய்களை, ஒரு திசையில் பார்த்துக் கொண்டே, வேறொரு திசையில், பெரியவர்களை நோக்கி எறிந்தார்; உண்மையில் யார் ஒருவருடைய பிறந்தநாளாக இல்லாதபோதும், சிறுவர்கள் 'பிறந்தநாள்' விருந்து குறித்து மிகவும் உற்சாகமாக இருந்தனர். இது விசித்திரமான தேநீர் விருந்து (ஆலிஸ் மேட் ஹேட்டர்ஸ் டீ பார்ட்டி! - ALICE MAD HATTER'S PARTY) என்று அவர்களில் ஒருவர் குறிப்பிட்டார். 'உண்மையான பிறந்தநாள் அல்லாத விழா', லூயிஸ் கரோலின் ஆலிஸின் 'அட்வென்சர்ஸ் இன் ஒண்டர்லேண்ட்' (LEWIS CARROLL'S ALICE'S ADVENTURES IN WONDERLAND) என்ற கற்பனை கதையை நினைவூட்டுகிறது!' இந்த சிறுவர்களுடன் பாபா மிகவும் மகிழ்ச்சியாக இருந்தார். 'தி கிங் அண்ட் ஐ' (THE KING AND I) என்ற இசைத் திரைப்படத்தின் ஒலிப்பதிவு தொகுப்பு முழுவதும் இசைக்கப்பட்டது. மதியம் 3:00 மணியளவில் பாபா அவரது இல்லத்திற்குச் திரும்பிச் சென்றார். குழந்தைகள் ஏரியில் உள்ள படகுகளில் சவாரி செய்யச் சென்றனர்.

1958 மே 25 ஞாயிற்றுக்கிழமை காலை, பாபா பார்ன் கொட்டகைக்குள் அழைத்துச் செல்லப்பட்டபோது, அனைவரும் எழுந்து நின்று, "அவதார் மெஹர் பாபாவிற்கு ஜெய்!" என்று கோஷமிட்டனர். பலத்த மழை பெய்து கொண்டிருந்தது, பாபா அவர்களை வாழ்த்தினார்:

**இன்று நல்ல வானிலை! அது எனது மனநிலையை பிரதிபலிக்கிறது. நேற்றிரவு நான் எப்படித் துன்பப்பட்டேன் என்பது உங்களுக்குத் தெரியாது. இன்று காலை நான் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறேன். நீங்கள் அனைவரும் உங்கள் ஆரோக்கியத்தை கவனித்துக் கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன். சளி பிடிக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள். ஒருவரிடமிருந்து வேறொருவரை அது தொற்றிக் கொள்ளும், பின்னர் அது என்னிடம் வரும்! இந்தியாவில் நடந்த சகவாச நிகழ்ச்சிகளில், இந்தியா முழுவதிலுமிருந்து பக்தர்கள் வருகை தந்தனர்; மேலும் சிலர் ஜூரத்துடன் வந்தனர், குறிப்பாக முதற்குழு. என்னுடன் இருப்பதிலும், சகவாசத்தில் பங்கேற்பதிலும் அனைவரும் மிக்க மகிழ்ச்சியடைந்தனர். சிலர் இருமிக்கொண்டு இருந்தனர், அது முகாம் முழுவதும் பரவத் தொடங்கியது. இருப்பினும் கடைசி நாட்கள் நன்றாகவே கழிந்தன.**

**ஃபிரான்சிஸ் பிராபஸோனுக்கும், இந்தியாவிற்கும் தொலைத்தந்தி அனுப்பப்பட்டுள்ளது. நான் 30ஆம் தேதி இங்கிருந்து ஆஸ்திரேலியா புறப்படுகிறேன் என்று மெஹராவிற்குத் தெரிவித்தேன். ஆனால் லட் (டிம்ப்ஃபில்), நெட் (ஃபுட்) இருவரும் அதைக் குறித்து அல்லது எதைக் குறித்தும் உறுதியாக இல்லை!**

**நேற்றிரவு நம்பமுடியாததாக இருந்தது. இன்று காலை, வானிலை இவ்வாறு இருந்தபோதிலும், நான் மிகவும் மகிழ்ச்சியாக உணர்கிறேன். இன்று பார்ன் கொட்டகையில் கூட்டம் நிறைவடைந்ததும், நான் என்**

**இல்லத்திற்குச் செல்வேன். மதியம் 1:00லிருந்து 1:30 வரை, நான் தேர்ந்தெடுத்த பெண்மணிகளின் குழு ஒன்றை சந்திக்க உள்ளேன். அதன் பின்னர், இதர பெண்மணிகள் என்னுடன் இணையலாம். எனவே, இன்று மாலை 4.00 மணி வரை, எவரும் மையத்தை விட்டு வெளியே செல்ல வேண்டாம். நாளை, மார்கரெட்டின் நடனக் குழுவினரின் நிகழ்ச்சி நடைபெற உள்ளது. நாளை மறுநாள், மைக் லோஃப்டஸ்** (MIKE LOFTUS) **ஆண்களின் ஒரு நிகழ்ச்சியை ஏற்பாடு செய்ய உள்ளார். 28ஆம் நாள் அனைத்து ஆண்களும் என் இல்லத்திற்கு அழைக்கப்படுகிறார்கள். 29ஆம் தேதி புறப்படுவதற்கு ஆயத்தமாகும் பணிக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. அன்று மதியம் அனைவருக்கும் விடுமுறை. நான் பார்ன் கொட்டகைக்கும், கடற்கரைக்கும் வரலாம். உங்கள் அனைவருக்கும் நான் கூறியது தெளிவாக உள்ளதா?**

ஒவ்வொரு நாளும் பாபா, ஃபிலிஸ் ஃபிரடெரிக்கிடம் இடுப்பு வலி பற்றி கேட்டார். ஒரு நாள் அது மிகவும் மோசமானது என்று அவர் தெரிவித்தார். பாபா அவரை வெகுநேரம் பார்த்துவிட்டு, “**எனது எல்லையற்ற துன்பத்தில் ஒரு குறுகிய பாகத்தை நான் உங்களுக்குக் கொடுக்கிறேன்**” என்றார். பாபா, டாக்டர் கென்மோரிடம் சிகிச்சை அளிக்குமாறு அறிவுறுத்தி, “**எனது வலிக்கு எந்த நிவாரணமும் இல்லை, ஆனால் நான் மகிழ்ச்சியாக உணர்கிறேன்**” என்று குறிப்பிட்டார்.

வயதில் பெரியவரான ரத் ஒயிட் (RUTH WHITE) தாமதமாக வந்தபோது, பாபா கூட்டத்தில் ஒருவரை அனுப்பி, 29ஆம் தேதி வரையான நிகழ்ச்சிகளைக் குறித்து அவருக்குத் தெரியப்படுத்தினார். அப்போது பாபா, “**நேற்று இரவு யார் நன்றாக தூங்கவில்லை?**” என வினவினார்.

பாபாவைக் குறித்த சிந்தனை, உடல்நலமின்மை போன்ற காரணங்களை பலர் கூறினர். சில குழந்தைகளும் அவர்கள் சரியாக தூங்கவில்லை என்றும் கூறினர். பாபா விளையாட்டுத்தனமாகக் கேலி செய்தார், “**குழந்தைகளுக்கு உடல்நலம் சீரில்லை. அதிகமாக கேக் மற்றும் ஐஸ்கிரீம் உண்டதால், பிறர் தங்களைக் கடித்துக் கவ்வியதாக அவர்கள் கனவு கண்டனர்!**”

அப்போது பாபா, “**யார் நன்றாகத் தூங்கினார்கள்?**” என்று கேட்கவே, பல கைகள் உயர்ந்தன; பாபா கேட்டார், “**ஏன்? நீங்கள் அனைவரும் நன்றாக தூங்க வேண்டும். உங்களால் தூங்க முடியவில்லை என்றால், கவலைப்பட வேண்டாம். என்னை அதிகம் நினைவில் கொள்ளுங்கள், ஆனால் என்னை நினைவில் கொள்ள வேண்டுமென்றே விழித்திருக்காதீர்கள். எக்காரணத்திற்காகவும் உங்களால் தூங்க முடியவில்லை என்றால், எனது பெயரை மீண்டும் மீண்டும் மொழியுங்கள்.**”

அப்போது, பாபாவின் ‘**கட்டாயத்தின் விதி**’ (LAW OF MUST) என்ற சொற்பொழிவு வாசிக்கப்பட்டது:

**இந்தத் தவிர்க்க முடியாத ‘கட்டாயத்தின் விதி’, ஒவ்வொரு பிறவியிலும், மனிதனின் தனிப்பட்ட மனப்படிவங்கள் பற்றிய விழிப்புணர்வு**

இருக்கும் வரை, மனிதனின் விதி என்று அழைக்கப்படுவதைக் கட்டுப்படுத்துவது மட்டுமின்றி, அதை மறுவடிவமைக்கிறது. மனித திட்டங்களை மீறும் கொள்கையானது, தெய்வீக சட்டத்தின் அடிப்படையில் அமைந்துள்ளது, இது பரிணாம வினைப்பதிவுகளால் சரிசெய்து, சீரமைக்கப்படுகிறது. தெய்வீகச் சட்டத்தை மீறுவது தெய்வீக சித்தம் மட்டுமே.

பரிணாம வளர்ச்சியின் உணர்வு நிலை தொடங்கி, உணர்வு நிலையின் உட்சுழற்சி வரை, ஒரு முழு நீள வாழ்க்கையில் நிகழும் பல மரணங்கள், ஒரு வாழ்க்கையில் நிகழும் பல தூக்கங்களைப் போன்றது. தனக்காக வாழ்பவர் உண்மையிலேயே இறந்தவர், கடவுளுக்காக இறப்பவர் உண்மையிலேயே உயிர் வாழ்பவர் ஆகிறார்.

பாபா மேலும் விளக்கினார்:

கடவுள், எப்படிக் கற்பனைக்கு அப்பாற்பட்டவர் என்பதை சில வார்த்தைகளில் விளக்குகிறேன். கடவுளுக்குத் தொடக்கம் இல்லை. கடவுள் எப்போது இல்லை என்று உங்களால் கற்பனை செய்ய முடியுமா? உங்கள் கற்பனையானது உங்களை, கோடிக்கணக்கான ஆண்டுகள் பின்னோக்கி அழைத்துச் செல்கிறது என்று வைத்துக்கொள்வோம்; உங்களின் பதில் இன்னமும் என்னவாக இருக்கும்: கடவுள் இருந்தார். ஆனால் கடவுளுக்கு முன்னால் என்ன இருந்தது? மீண்டும் அதே பதில்: கடவுள் இருந்தார். எனவே, கடவுளுக்கு முன்பாக என்ன இருந்தது என்பதை எவராலும் கற்பனை செய்ய முடியுமா? அல்லது அனைத்தும் எப்படித் தொடங்கியது? கடவுள் எப்படி எல்லாவற்றையும் தொடங்கினார் என்பது குறித்த எந்த யோசனைக்கும், கற்பனை கூட நம்மை கொண்டு செல்ல முடியாது. தொடக்கம் இல்லை என்று நினைப்பதை, கற்பனை செய்து பார்க்க முடியாது.

“டான் (ஸ்டீவன்ஸ்), நீங்கள் அதைப் பற்றி எப்படி நினைக்கிறீர்கள்?”

“ஒரு வட்டமாக,” டான் பதிலளித்தார்.

பாபா தொடர்ந்தார்:

தொடக்கம் இல்லை. இருப்பினும், ‘கடவுளின் தொடக்கத்தின்’ தொடக்கத்தை கற்பனை செய்வோம்.

நாம் அதே முடிவுக்கு வருகிறோம்: கடவுள் இருந்தார். மற்றும் கடவுளுக்கு முன்? அதே பதில்: கடவுள் இருந்தார். இப்போது, மாயையில் நீங்கள் ஒரு தொடக்கத்துடன் உங்களைக் காண்கிறீர்கள். மேலும், எங்கே தொடக்கம் இருக்கிறதோ, அங்கே ஒரு முடிவும் இருக்கும். மாயையை அனுபவிக்கும் நீங்கள், தொடக்கமும் முடிவும் இல்லாததை எப்படிக் கற்பனை செய்ய முடியும்? ஆயினும் நீங்களாகவே, உங்கள் ‘எல்லையற்ற பெருங்கடலின்’ ஒரு துளியாக, தொடக்கமும் முடிவும் இல்லாமல் இருக்கிறீர்கள். உங்களிடம் இந்த உடல் வடிவம் உள்ளது. நீங்கள் பிறக்கிறீர்கள். ஒரு துளியாக உங்களுக்குத் தொடக்கம் உள்ளது; நீங்கள் வளர்கிறீர்கள், நீங்கள் இறக்கிறீர்கள், நீங்கள் முடிவை சந்திக்கிறீர்கள்.

**நீங்கள் மாயையில் தொடங்கி மாயையில் முடிக்கிறீர்கள். மாயையில், உங்கள் உடல்களுடன் உங்களுக்கு தொடக்கமும் முடிவும் உண்டு. எல்லையற்ற பெருங்கடலாக - அதில் நீங்கள் ஒரு துளியாக இருக்கும் தருணத்தில் - தொடக்கமும் முடிவும் இல்லை.**

**நெட்** (ஃபூட்)**, உங்களுக்கு ஒரு மனம் உள்ளது. மனம் மாயையில் உள்ளது. தொடக்கமும் முடிவும் இல்லாத ஒன்றை மனம் சிந்திக்க முயல்கிறது, ஆனால் மனம் அதை அடைய முடியாது, ஏனெனில் மனமே மாயை.**

**உங்கள் 'உண்மையான பரமாத்மா எனும் சுயத்தை' அனுபவிப்பதே குறிக்கோள். நீங்கள் இருக்கிறீர்கள், மேலும் நீங்கள் எப்பொழுதும் இருப்பீர்கள். உங்களைத் தவிர வேறு எவரும் இல்லை. உங்களுக்கு ஏன் தொடக்கமும், முடிவும் இல்லை என்பது உட்பட அனைத்தையும் உடனடியாக, ஒரே கண்ணிமைப் பொழுதில் நீங்கள் அறிந்து கொள்வீர்கள். ஆனால் இந்த அறிவிற்கு, மனம், பகுத்தறிவு அல்லது தர்க்க ரீதியான எந்த தொடர்பும் இருக்கக்கூடாது. அது மனதிற்கு அப்பாற்பட்டது. எல்லாவற்றிற்கும் பதில் உங்களுக்குத் தெரியும், எதுவும் நடக்கவில்லை, எதுவும் நடக்காது என்பதும் உங்களுக்குத் தெரியும். நீங்கள் பின்னர் ஆனந்தத்தை அனுபவிக்கிறீர்கள்; நீங்கள் எல்லாம் வல்லவராக, அனைத்தையும் அறிந்தவராக ஆகிறீர்கள்.**

பாபா, **'சர்வ வியாபி'** (எங்கும் நிறைந்தவர் - OMNIPRESENCE) என்ற சொற்பொழிவை வழங்கினார்:

**எங்கும் நிறைந்திருப்பவருக்கு மறைவாக எதுவும் இருக்க முடியாது. அப்படிப்பட்ட ஒருவரிடமிருந்து எதுவும் மறைக்கப்பட முடியாது என்பதால், அவர் எல்லாம் அறிந்தவராக இருக்க வேண்டும். அவர் அனைத்தும் அறிந்தவர், அறிவின் ஆதாரமாகத் திகழ்பவர்.**

**எனவே, அவர் எல்லாவற்றையும் செய்யத் தெரிந்தவராக இருக்க வேண்டும். அவர் சொல்கிறார்: "எனக்கு எல்லாவற்றையும் உருவாக்கத் தெரியும், எல்லாவற்றையும் அழிக்கத் தெரியும், எல்லாவற்றையும் பாதுகாக்கத் தெரியும், எனக்கு எல்லாவற்றையும் செய்யவும் தெரியும்."**

**ஆகவே, எவர் ஒருவர் எல்லாம் அறிந்தவராக இருக்கிறாரோ, அவர், தவிர்க்க முடியாமல் சர்வ வல்லமையுள்ளவராக இருக்கிறார். அவர் எங்கும் நிறைந்திருப்பது அவரை எல்லாம் அறிந்தவராக ஆக்கியது; மேலும் இது அவரை சர்வ வல்லமையுள்ளவராகவும் ஆக்கியது. சுருக்கமாகச் சொன்னால், எங்கும் நிறைந்தவராக இருப்பது என்பது, ஒரே நேரத்தில் சர்வ ஞானம் படைத்தவராகவும், சர்வ வல்லமை உள்ளவராகவும் இருக்க வேண்டும். கடவுளின் இந்த மூன்று பண்புகளும் ஒன்றோடொன்று இணைந்து, கடவுளின் எல்லையற்ற பேரின்பத்தை உருவாக்குகின்றன. எல்லாம் அறிந்தவர், எங்கும் நிறைந்தவர் மற்றும் சர்வ வல்லமை படைத்த ஒருவர் எல்லையற்ற பேரின்ப நிலையில் இல்லாமல் இருக்க முடியாது.**

பாபா கேட்டார்:

நேற்று என்ன நடந்தது? ஒன்றுமில்லை! நாளை என்ன நடக்கும்? ஒன்றும் நடக்காது! அனைத்தும் இப்போது நடக்கும். இந்தத் தருணத்தில் நிகழும் எல்லா அனுபவமும் ஞானம் - அறிவு, விவேகம்.

இதற்கு மனதோடும், பகுத்தறிவோடும் எந்தத் தொடர்பும் இல்லை. அளவிறுதியற்ற, நித்திய அறிவின் இந்த அனுபவத்தை அடையப்பெற்றவன் ஞானி. மனம் கூறுகிறது: "நேற்று பாபா இங்கே இருந்தார், பாபா எங்களுக்கு ஒரு சொற்பொழிவை வழங்கினார், நாங்கள் அனைவரும் அதை கவனமாகக் கேட்டோம், நேற்று குழந்தைகளுக்கு விருந்து வழங்கப்பட்டது." மேலும் மனம் கூறுகிறது: "நாளை, நாங்கள் ஒரு நிகழ்ச்சியை நடத்துவோம்."

ஆனால் நேற்று, நாளை என்று எதுவும் இல்லை என்பதை அரியதான ஒருவர் மட்டுமே அறிவார். தொடக்கமில்லாத தொடக்கம் முதல் முடிவற்ற முடிவு வரை, என்றென்றும் நித்தியமாக இருக்கும் 'இந்த கணம்', 'இப்போது' என்ற ஒன்று மட்டுமே உள்ளது. 'இப்போது எனும் நித்தியத்தை' அனுபவிக்கும் ஒருவரின், அனைத்து சந்தேகங்களும், கவலைகளும், பனி போல் கரைந்து, அவர் நித்திய ஆனந்தத்தில் நிலைத்திருப்பதையும் காண்கிறார்.

அதைத் தொடர்ந்து பாபா **'முன்னறிவு'** (FOREKNOWLEDGE) குறித்து விளக்கமளித்தார்:

அ) ஒரு சாதாரண மனிதனின் முன்னறிவு, கடந்த கால அனுபவங்களின் அடிப்படையில் நினைவாற்றலைச் சார்ந்தது:

1. ஒருவர் மலை உச்சியில் ஒரு மனிதனைப் பார்க்கும்போது, அந்த மனிதன் மலையிலிருந்து கீழே விழுந்தால், அவன் நிச்சயமாக உயிரைத் துறப்பான் என்பதை அந்த நபர் முன்கூட்டியே அறிந்திருக்கிறார்.
2. ஒரு பந்தயப் பாதையில் குதிரைகளின் வரிசையை ஒருவர் பார்க்கும்போது, 'தொடக்கக் குறிகை' வழங்கப்பட்டதும் குதிரைகள் ஓடும் என்பதை அந்த நபர் முன்கூட்டியே அறிவார்.
3. ஒருவர் விஸ்கி பாட்டிலைப் பார்க்கும்போது, அது போதை தரும் என்பதை முன்கூட்டியே அறிந்திருக்கிறார். அவர் விஸ்கியை போதையுடன் தொடர்புபடுத்துகிறார்.

ஒரு சாதாரண மனிதனின் முன்னறிவுக்கு இதுபோன்ற ஆயிரக்கணக்கான உதாரணங்களைச் சொல்லலாம்.

ஆ) ஒரு பரிபூரண குருநாதரின் முன்னறிவு என்பது பிரிக்க முடியாத, நிரந்தர அனுபவத்தைப் பொறுத்தது:

1. நித்தியம் = தொடர்ச்சியில் இடைவெளியின்றி இருப்பது.
2. நித்தியம் = என்றென்றும் நிலைத்திருப்பது. கடந்த காலம், நிகழ்காலம் மற்றும் எதிர்காலம் ஆகியவை, தம்மைத் தாமே, ஒப்பீட்டளவில் கூட, தீர்மானிக்கும் வாய்ப்பின்றி இருப்பது.

அதனால்தான் பரிபூரண குருநாதர்கள் மற்றும் அவதார புருஷர், 'அனைத்தும் நான் அறிவேன்' என்று வலியுறுத்தி கூறுகின்றனர். அவர்கள்,

**அளவிறுதியற்ற, பிரிக்க முடியாத, எங்கும் நிறைந்த, 'பரமாத்மா'வாக உளதாயிருக்கும் நிலையைத் தவிர, வேறு எதற்கும் இடமில்லை என்பதற்கு, அவர்களின் நிரந்தரமான, பிரிக்க முடியாத அனுபவமே காரணமாகும்.**

**கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் என்று ஒன்று இருந்தால், எனக்கு எல்லாம் தெரியும் என்று சொல்கிறேன். இதன் பொருள் என்னவெனில், நீங்கள் கடந்த காலத்தில் எத்தனை பிறவிகள் எடுத்தீர்கள், எதிர்காலத்தில் எத்தனை பிறவிகள் எடுப்பீர்கள் என்பது எனக்குத் தெரியும், மேலும் லட்சம் பிறவிகளுக்குப் பிறகு, நீங்கள் பிறவி எடுக்கும் போது, என்ன நினைப்பீர்கள் என்பதும் எனக்குத் தெரியும்! என்னுடைய 'என்றென்றும் நித்தியமாக நிலைத்திருக்கும் இப்போது எனும் இந்த கணத்தில்' அதை நான் அறிவேன். இதுவே அனைத்தையும் அறிந்தவன் என்பதன் பொருள்.**

பாபா '**நேரம் என்ன?**' என்று கேட்டார். மணி 11:00 ஆகியிருந்தது. "**நாம் அனைவரும் மாயையில் கடிகாரங்கள் மற்றும் காலநேரம் பற்றி எப்படிக் கவலைப்படுகிறோம் என்பதைப் பாருங்கள்! ஆனால் நாம் மாயையைத் தாண்டிச் செல்லும்போது, நேரம் இல்லை, இடம் என்பதும் இல்லை. அது நித்திய பேரின்பமாக மட்டுமே இருக்கும்.**"

அப்போது பாபா, "**நாம் சில பாடல்களைக் கேட்போம்**" என்று சைகையால் தெரிவித்தார். எட்டு வயது சிறுமி, மக்தலேனா அல்வாராடோ (MAGDALENA ALVARADO) 'மழை நாள்' பற்றிய கவிதை ஒன்றை மொழிந்தாள்.

வயோலெட் ஹச்சின்ஸ், VIOLETTE HUTCHINS (ஆஷ்வில், வடக்குக் கரோலினா, ASHEVELLE NORTH CAROLINA) இன்று கிறிஸ்தவ பெந்தெகொஸ்தே பண்டிகை (THE CHRISTIAN FESTIVAL OF PENTECOST, ஏசு சிலுவையில் அறையப்பட்ட 40 நாட்களுக்குப் பின்னர் அவருடைய சீடர்கள் மீது பரிசுத்த ஆவி நிலைகொண்ட நாள்) - ஈஸ்டர் (EASTER) முடிந்த ஏழாவது ஞாயிற்றுக்கிழமை - அதன் முக்கியத்துவம் என்ன என்று கேட்டார். '**அது தான்**' என்று கூறி, பாபா, "**அதற்கான பதிலை தெரிந்துகொள்ளாமல் இருப்பது நல்லது**" என்றார்.

அப்போது, ஹாரி கென்மோரைப் பற்றி, பாபா குறிப்பிட்டார், "**அவருக்கு நல்ல இதயம் உள்ளது. அவர் பாபாவிடம் 100 சதவிகிதம் இருக்கிறார், மேலும் மெஹராவிடம் ஐந்து நிமிடம் பேச அனுமதிக்கப்பட்ட ஒரே மனிதர். மெஹராவை எந்த மனிதருடனும் பேச நான் அனுமதிக்கவில்லை. ஹாரி, நீங்கள் மெஹராவுடன் இருந்தபோது என்ன உணர்ந்தீர்கள்?**"

ஹாரி கூறினார், "மெஹரா, அன்பு, தூய்மை இரண்டையும் வெளிப்படுத்துகிறார். அவர் பாபாவின் சரியான 'பெண்பக்கம்' என்று நான் உணர்ந்தேன்." பாபா திரும்பி அவருக்கு ஒரு முத்தம் கொடுத்தார்.

பாபாவின் விருப்பமான பாடல் 'பிகின் தி பிகீன்' (BEGIN THE BEGUINE) இசைக்கப்பட்டது. அந்தப் பாடலுக்கு நித்தியமான அர்த்தம் இருப்பதாக பாபா கூறினார்: (நாற்காலியில் கை விரல்களால் தாளம் போட்டுக்கொண்டே) "**நான் மும்பைக்குச் செல்லும்போது எப்பொழுதும் நரிமனின் இல்லத்தில் இந்தப் பதிவைக் கேட்கிறேன்.**"

அதற்குப் பிறகு, நான்கு இந்திய கஸல் பதிவுகள் இசைக்கப்பட்டன, அதன் அர்த்தத்தை பாபா விளக்கினார். இடையிடையே, அவர் குறிப்பிட்டார்:

**இந்தியாவில் மரபு வழி வந்த இசை உள்ளது; மேலும், பாரம்பரிய பாடகர்களும் உள்ளனர். எனக்கு, பாரம்பரிய இசையில் ஆர்வம் இல்லை. பாடகர்கள் வந்து எனக்காக பாரம்பரிய பாடல்களைப் பாடுகின்றனர், ஆனால் நான் அதைப் பாராட்டுவதில்லை. எனக்குக் கவாலி பாடல்கள் மிகவும் பிடிக்கும். கவாலி பாடகர்கள் பேசுவதற்கும் அவர்கள் பயன்படுத்தும் வார்த்தைகளுக்கும் ஆழமான அர்த்தம் உள்ளது. கவாலி பாடல்கள் அனைத்தும் என்னை அடிப்படையாகக் கொண்டவை - எனது மகத்துவம் மற்றும் எனது பணியைப் பற்றியவை.**

**கவாலி பாடல்கள் மதம் சார்ந்தவை அல்ல, ஆன்மீகப் பாடல்கள். அவற்றிற்கு பக்தி பாடல்கள் மற்றும் மதத்துடன் எந்தத் தொடர்பும் இல்லை. கிறிஸ்துவ ஆன்மீகவாதிகள் ஒவ்வொருவரும் எனது ரத்தினங்கள், ஒவ்வொருவரும் கடவுளை நேசிப்பவர்கள் - இயேசு, அவர்களின் தலையாயக் கருப்பொருள். இயேசு அவர்களுக்குப் பிரியமானவர், அவர்கள் தங்கள் அன்பானவரை நேசிப்பதைத் தவிர, வேறு எதையும் செய்யவில்லை. அவர்களின் பாவங்கள் எரிந்து சாம்பலாகும் அளவுக்கு அவர்கள் அன்பினால் எரிந்து கொண்டிருந்தனர்.**

**சில இசைத்தட்டு பதிவுகள் அதிர்ஷ்டவசமாக பிம்பல்காவ்மில் இருந்தன; இல்லையெனில், நான் ஒவ்வொரு வார்த்தையையும் விளக்க வேண்டியிருந்திருக்கும்!**

இசை நிகழ்ச்சிக்குப் பிறகு, பாபா மதியம் 1:00 மணிக்கு தமது இல்லத்திற்குச் சென்றார். ஏறக்குறைய 20 பெண்மணிகள் வரவேற்பறையில் ஒன்றுதிரண்டனர். அவர்கள் பல ஆண்டுகளாக மெஹராவிற்குத் தெரிந்தவர்கள் அல்லது அவரைத் தொடர்பு கொண்டவர்கள். மெஹரா, பல சிறிய சிறிய பரிசுகளை அனுப்பியிருந்தார், ஒவ்வொரு பரிசும் யாருக்கு என்பதையும் பாபாவிடம் கூறியிருந்தார். பாபா குறிப்பிட்டார், **“அந்த நேரத்தில், ஒவ்வொரு முறையும் மெஹரா யாருடைய பெயரைச் சொன்னாலும், நான் எனது தலையை மட்டும் ஆட்டினேன், ஆனால் இப்போது என்னால் அதை நினைவுகூர முடியவில்லை. உலகளாவிய பிரச்சினைகளை என்னால் தீர்க்க முடியும், ஆனால் இது போன்றவற்றை அல்ல!”**

எரச் கூறினார், “இன்று காலை பாபா தனது படுக்கையில் அனைத்து பரிசுகளையும் விரித்துவைத்தார். அவர் ஒரு வணிகர் போல தோற்றமளித்தார்.”

பாபா ஒரு நாற்காலியில் அமர்ந்த போது, பெண்மணிகள் அவரைச் சுற்றி ஒரு வட்டத்தில் தரையிலும், நாற்காலிகளிலும் அமர்ந்தனர். பாபா கூறினார்:

**என் அன்பில் முதலில் மெஹரா, பிறகு மணி. மெஹரா என் அன்புக்குரியவர். பணியில் மணி என் உண்மையான சகோதரி. தற்போது உடல்நிலை சரியில்லாமல் இருந்தாலும் அவர் என்னை நேசிக்கிறார், காலை**

**முதல் இரவு வரை கடிதம் மற்றும் பிற விவரங்களுடன் எனக்காகப் பணிபுரிகிறார். அவர் என்னை நேசிப்பதோடு, 100 சதவிகிதம் என்னிடம் சரணடைந்துள்ளார்.**

பாபா ஒவ்வொரு பெண்மணிக்கும், மெஹராவிடமிருந்து முதல் பரிசை வழங்கினார் - மெஹராவின் வேண்டுகோளின் பேரில், பாபாவின் சகோதரர் பெஹராமால் எடுக்கப்பட்ட புகைப்படம். மெஹரா மிக இளம் பெண்ணாகவும், பாபா சிறுவனாகவும் இருந்தபோது எடுக்கப்பட்ட, குறும் விளக்கத்துடன் கூடிய இரட்டைச் சித்திரம். '**அவர் (மெஹராபாத்தில்) முதன்முதலில் பாபாவுடன் இணையும் போது, மெஹராவிற்கு வயது பதினேழு**' என்று பாபா குறிப்பிட்டார்.

அப்போது பாபா, தனது படுக்கையறைக்குச் சென்று, ஒவ்வொருவரையும் தனித்தனியாக அழைத்து, மெஹராவின் அன்பளிப்பை வழங்கினார். ஜேன் ஹெய்ன்ஸ், அவர் புதியவராக இருந்தாலும், முதலாவதாக அழைக்கப்பட்டவர்களில் ஒருவர்; எலிஸபெத்துடனான நட்பு மட்டுமே, அவர் அங்கிருந்ததற்குக் காரணம் என்று நினைத்துக்கொண்டு, ஸோஃபாவில் அமர்ந்திருந்தார். ஆனால், அவர் பாபாவின் படுக்கையறைக்கு அழைக்கப்பட்டபோது, **"உங்களுக்காகவே நான் உங்களை நேசிக்கிறேன் என்பதை நம்ப முயற்சி செய்யுங்கள்"** என்று அவரிடம் குறிப்பிட்டு, பாபாவின் சித்திரத்துடன், ஒரு ஜோடி காதணிகளை ஜேனிடம் கொடுத்தார்.

பின்பு, பாபா முன் அறைக்குத் திரும்பி வந்தார், அவர் ஓர் இளைஞனாக இருந்தபோது அவரது தலைமுடியின் சுருளைக் கொண்ட ஒரு சிறிய பெட்டகத்தை அனைவரும் பார்ப்பதற்காகக் கொடுத்தார். அது செம்பழுப்பு நிறத்தில் இருந்த தலைமுடிச் சுருள். பெஹராமால் வரையப்பட்ட அழகான, பெரிய வண்ணப் புகைப்படங்களையும் அவர் தனது அனைத்து மையங்களுக்கும் குழுக்களுக்கும் வழங்கினார். அவர், 20 பெண்மணிகளில் ஒவ்வொருவருக்கும் மற்றொரு சுருளிலிருந்து தனது தலைமுடியில் சிலவற்றைக் கொடுத்தார், மேலும் இந்த மகத்துவம் வாய்ந்த பிரசாதத்தை அடையப் பெற்ற பின்னர் ஒவ்வொருவரையும் நேரடியாக வெளியேறுமாறு அறிவுறுத்தினார்.

இடுப்பு வலி மற்றும் தொடர் ஜுரத்தால் அவரது உடல்நிலை எவ்வளவு பலவீனமாக இருந்தது என்று பாபா குறிப்பிட்டார். அவர் ஐவியிடம் கூறினார், **"நான் இயேசுவாக சிலுவையில் அறையப்பட்ட போது, கடவுள் என்னைக் கைவிட்டு விட்டதைப் போல் ஒரு கணம் நான் உணர்ந்து, மேலும் மொழிந்தேன்: 'கடவுளே, என் கடவுளே! ஏன் என்னைக் கைவிட்டாய்?'"**

பாபா, அவர் அமெரிக்கா வருவதற்கு முன்னர் எடுத்துரைத்த '**பீம்ஸ்**' (BEAMS FROM MEHER BABA ON THE SPIRITUAL PANORAMA) புத்தகத்திற்கான கையெழுத்துப் பிரதியை ஐவியிடம் வழங்கினார்.

இன்னமும் மழை பெய்து கொண்டிருந்தது, இரண்டாவது குழு பெண்மணிகள் சற்று தாமதமாக வந்தனர். பாபா அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு சில கைக்குட்டைகளையும், பிறருக்கு வேறு ஏதேனும் ஒன்றையும்

வழங்கினார். அவர் அன்னா கர்ராஸ்சிடம் (ANNA KARRASCH) கேட்டார், **"குட்டிப் பையன் எங்கே?"** அவருடைய மகன் லாரியைப் (LARRY) பற்றி கேட்டார்.

"அவனை அழைத்து வர வேண்டுமா?" என்று கேட்டதற்கு, பாபா தலையை அசைத்தார், பின்பு பரிசுகளின் தட்டில் கையை நீட்டி அதன் மத்தியில் அவர் உணர்ந்த ஒரு சிறிய பேழையை வெளியே எடுத்தார், அது தனது அன்பால் நிரப்பப்பட்டதாகக் குறிப்பிட்டு, அதை அன்னரோஸாவிடம் கொடுத்தார்.

ஒவ்வொரு பெண்மணியும் பாபாவின் கைகளிலிருந்து அடையப்பெற்ற அன்பளிப்பால் மனம் நிறைந்து, நன்றியுடன் வெளியேறினர்.

எலிஸபெத்தின் கார் ஒரு நாள் காலை பழுதான நிலையில் நெட் ஃபுட், பாபாவை அவரது நீல நிற காடிலாக் (CADILLAC) காரில் அழைத்துச் செல்லத் திட்டமிடப்பட்டது. பாபா முன் இருக்கையில் அமர, நரிமன், எரச் இருவரும் பின்னால் அமர்ந்தனர். பின்பு, நெட், பாபாவை பார்ன் கொட்டகையிலிருந்து அவரது இல்லத்திற்குத் திரும்ப அழைத்தும் சென்றார்; திரும்பும் வழியில் ஒரு கட்டத்தில், பாபா புன்னகைத்துக்கொண்டே நெட்டின் முதுகில் தட்டினார்.

1958 மே 26 திங்கட்கிழமை காலை பத்து மணியளவில் பாபா, பார்ன் கொட்டகைக்கு வந்து குறிப்பிட்டார்: **"இன்று, முதல் முறையாக நான் நேரத்தை கடைபிடிக்கிறேன். எனது நேரப்படி ஒன்பது மணி ஆகிறது. ஆறு முதல் எட்டு மணி வரை, நான் சகவாசத்தைக் குறித்து மண்டலியுடனும், எட்டு முதல் ஒன்பது வரை பணியாட்களுடனும் மும்முரமாக இருந்தேன். ஒன்பது முதல் பத்து மணி வரை, நான் லகூன் கேபினில் இன்று புறப்பட்டுச் செல்லும் அன்பர்களுடனும், புதியவர்களுடனும் இருந்தேன். காலை 11:45 மணிக்கு, நான் லகூன் கேபினுக்குச் சென்று, குறிப்பிட்ட சில அன்பர்களைப் பார்க்க வேண்டும். நான் மீண்டும் மதியம் இரண்டு மணிக்கு இங்குத் திரும்பி வருவேன். கிட்டி, இன்னும் புதியவர்கள் இருக்கிறார்களா? இருவர் என்று நினைக்கிறேன்; இரண்டாவது வாரத்தில் எத்தனை பேர் எதிர்பார்க்கப்படுகிறார்கள்?"**

"மூன்று அல்லது நான்கு," கிட்டி பதிலளித்தார்.

**"அவர்கள் என்னை ஒரு நொடிப்பொழுது மட்டுமே சந்தித்தால், அது வாழ்நாள் முழுவதற்கும் போதுமானது. இப்போது நாம் சொற்பொழிவுகளைக் கேட்போம்"** என்றதும், **'கடவுளும், பிரபஞ்சமும்'** (GOD AND COSMOS) என்ற தலைப்பு வாசிக்கப்பட்டது:

**கடவுள், அளவிறுதியற்ற உண்மைப்பொருளானவர்; பிரபஞ்சம் என்பது அளவிறுதியற்ற மாயை. இந்த மாயையில் எண்ணிலடங்கா சூரியன்கள், நட்சத்திரங்கள், சந்திரன்கள், கோள்கள் உள்ளன; ஒட்டுமொத்த படைப்பும் முடிவின்றி உருவாகிறது.**

**உதாரணமாக, ஒரு மனிதனின் தலையை எடுத்துக் கொள்ளுங்கள். தலை ஒன்று, தனி மனிதனின் மனமும் ஒன்று. இருந்தும், இந்த ஒரு தலையில் எண்ணற்ற முடிகள் வளரும். அனைத்து முடிகளும்**

அகற்றப்பட்டாலும், முடியின் வளர்ச்சி நின்றுவிடாது; தலைமுடி மீண்டும் உருவாகி தலையை மூடிவிடுகிறது.

தலையில், முடிகள் எண்ணிலடங்காதவையாக இருந்தாலும், அதற்கு எந்த மதிப்பும் இல்லை, ஏனெனில் எல்லா முடிகளும் உதிர்ந்து, தலை, வழுக்கையாக இருந்தாலும், அப்படியே இருக்கும். முடியுடன் இணைக்கப்பட்ட மதிப்பு எதுவாக இருந்தாலும், இறுதியில் அது அலங்காரப் பொருளாகவே இருக்கும். கூந்தல் தலையை கவர்ச்சியாகத் தோற்றுவிக்கவும், சுய திருப்தி உணர்வை உருவாக்கவும் உதவும். ஆனால் அவை தோன்றி, மறையும் தலையுடன் ஒப்பிடும் போது, தலைமுடிகளுக்கு எந்த மதிப்பும் இல்லை.

எண்ணற்ற எண்ணங்களை உருவாக்கும் ஒரு தனிமனித மனதை, எண்ணிலடங்கா முடி வளர்ச்சியைக் கொண்ட தலையுடன் ஒப்பிடலாம். ஒரு தனிமனித மனம் எண்ணிலடங்கா எண்ணங்களை உள்ளடக்கி, வெளிப்படுத்தும் மற்றும் உள்வாங்கும் திறன் கொண்டது. ஆற்றல் மற்றும் அனைத்து பொருட்களும் மனதின் விளைவு.

எல்லையில்லா மெய்ப்பொருளான கடவுளின் அனைத்து முக்கியத்துவத்தையும் புரிந்து கொள்ள, இந்த அனைத்து முக்கியத்துவத்தையும் மனதின் முக்கியத்துவத்துடன் ஒப்பிடலாம்; மேலும், படைப்பின் முக்கியத்துவத்தை தலையில் உள்ள முடியுடன் ஒப்பிடலாம்.

பிரபஞ்சத்துடன் ஒப்பிடும்போது, கடவுள் அளவிறுதியற்ற அளவுக்கு முக்கியமானவர் என்று நான் உங்களுக்குச் சொல்கிறேன்; இது ஒருவரை கவர்ந்திழுக்கும், மாயையான சுய திருப்தியை உருவாக்கும் முடியைத் தவிர, வேறு எந்த மதிப்பையும் கொண்டிருக்கவில்லை.

அதைத் தொடர்ந்து ‘உண்மையான பிறப்பு மற்றும் உண்மையான இறப்பு’ (REAL BIRTH AND REAL DEATH) பற்றிய இரண்டாவது சொற்பொழிவு வாசிக்கப்பட்டது:

உண்மையான பிறப்பு ஒன்றே ஒன்று; அது போல், உண்மையான இறப்பும் ஒன்றே ஒன்று. நீங்கள் ஒரு முறை பிறக்கிறீர்கள், உண்மையில் ஒரு முறை மட்டுமே இறக்கிறீர்கள்.

உண்மையான பிறப்பு என்றால் என்ன? இது உண்மைப்பொருள் எனும் இறைப்பெருங்கடலில் ஒரு ‘துளி’யின் பிறப்பு. அதன் பொருள் என்ன? இது தனித்துவத்தின் உருவாக்கம், இது முதலாவதாக மிகக் குறுகிய அளவில், வரையறுக்கப்பட்ட உணர்வு நிலையின் மங்கலான ஒளியின் மூலம், பிரிவின்மையிலிருந்து பிறந்து, வரம்பு குறித்த அறிவுடன் வரம்பற்ற ஏக இறைவனாக மாறி, திகைப்புக்குள்ளாக்கியது.

உண்மையான மரணம் என்றால் என்ன? அனைத்து வரம்புகளிலிருந்தும் உணர்வு விடுபடுவது. அனைத்து வரம்புகளிலிருந்தும் விடுதலை அடைவதே உண்மையான மரணம். இது உண்மையில் அனைத்து வரம்புகளின் மரணம். உண்மையான பிறப்புக்கும் உண்மையான இறப்புக்கும்

**இடையில், பிறப்பு, இறப்பு என்று அழைக்கப்படுவது போன்ற உண்மை எதுவும் இல்லை.**

**பிறப்பு, இறப்பு இவற்றின் இடைநிலை கட்டத்தில், உண்மையில் நடப்பது என்னவெனில், உணர்வு, அனைத்து வரம்புகளிலிருந்தும் விடுபடும் வரை, உணர்வின் வரம்புகள் படிப்படியாக தேய்ந்துகொண்டே வரும். இறுதியில், அனைத்து வரம்புகளிலிருந்தும் முற்றிலும் விடுபட்ட உணர்வு, அளவிறுதியற்ற உண்மைப்பொருளை என்றென்றும், நித்தியமாக அனுபவிக்கும். உண்மையான மரணம், உண்மையான வாழ்க்கைக்கு சமம். எனவே நான் வலியுறுத்திக் கூறுகிறேன்: கடவுளுக்காக உயிரை விடுங்கள், நீங்கள் கடவுளாக வாழ்வீர்கள்.**

பாபா மேலும் கூறியதாவது:

**நீங்கள் முதலில் ஒரு குழந்தை, அதன் பின்பு வயதாகி உடலைத் துறக்கிறீர்கள்; ஆனால் நீங்கள் ஒருபோதும் இறக்கவுமில்லை, பிறக்கவுமில்லை. கிழக்கத்திய நாடுகளில், வேதாந்திகள் மறுபிறவியை நம்புகிறார்கள், அதாவது ஒருவர் இறை உணர்வை எய்தும் வரை, எண்ணற்ற பிறப்பு மற்றும் இறப்புகளை நம்புகிறார்கள்.**

**முஸ்லீம்கள் ஒரு பிறப்பை மட்டுமே நம்புகிறார்கள், அது போல், ஒரே ஒரு மரணத்தை மட்டுமே நம்புகிறார்கள். கிறிஸ்தவர்களும் ஸொராஸ்ட்ரியர்களும் இதையே நம்புகிறார்கள். அனைத்தும் சரிதான். ஆனால் இயேசு, புத்தர், முஹமது, ஸொராஸ்டர் அனைவரும் உண்மையான பிறப்பு மற்றும் உண்மையான மரணம் என்று நான் கூறுவதையே அர்த்தப்படுத்துகிறார்கள். நான் கூறுகிறேன், நீங்கள் ஒரு முறை பிறந்து ஒரு முறை இறக்கிறீர்கள்.**

**பிறப்பு, இறப்பு என்று சொல்லப்படுபவை அனைத்தும் தூக்கமும், விழிப்பும் மட்டுமே. தூக்கத்திற்கும் மரணத்திற்கும் இடையேயான வேறுபாடு என்னவெனில், நீங்கள் தூக்கத்திலிருந்து விழிக்கும் போது, அதே உடலில் உங்களைக் காண்பீர்கள். ஆனால் மரணத்திற்குப் பிறகு, நீங்கள் வேறு உடலில் விழித்திருக்கிறீர்கள். நீங்கள் ஒருபோதும் இறக்கவில்லை; ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் மட்டுமே இறந்து கடவுளுடன் ஒன்றிணைகிறார்கள்.**

**‘நிர்வாண்’** (NIRVAN, **ஃபனா**, FANA) **மற்றும் ‘நிர்விகல்ப்’** (NIRVIKALP, **ஃபனாஃபில்லா**, FANA-FILLAH) பற்றிய சொற்பொழிவு வாசிக்கப்பட இருந்தது. ஆனால், பாபா அதை முன்னுரையாக, சுருக்கமாக எடுத்துரைத்தார்:

**இது குறுகியது, ஆனால் கடினமானது. பின்பற்ற முடியாதவர்கள் கவலைப்பட வேண்டாம். இது வார்த்தைகளைத் தவிர வேறொன்றுமில்லை. அன்பு ஒன்றுதான் இன்றியமையாதது. புத்திக்கூர்மை இல்லாத ஒருவன், நான் நேசிக்கப்பட வேண்டிய விதத்தில் என்னை நேசிக்க முடியுமானால், என்னை நேசிக்கத் தெரியாத அதிபுத்திசாலியை விட அவன் எல்லையற்ற பாக்கியவான்.**

ஃபனா (நிர்வாண்): ஃபனா என்பது உணர்வற்ற நிலை. ஃபனாவில், ஆன்மா, பரமாத்மாவாக தன்னைக் கடவுள் என்பதைத் தவிர, பிற அனைத்தையும் பற்றி அறியாமல் உள்ளது. ஆன்மா தனது மனித நிலையை இழந்து நிர்விகல்ப் (நான் கடவுள்') என்ற தெய்வீக நிலையை அடையப் பெறுவதற்கு முன்னர், அது நிர்வாண் நிலையின் வெற்றிடத்தை அனுபவிக்க வேண்டும். நிர்வாண் என்பது எல்லையற்ற வெற்றிட நிலை, அங்கு ஆன்மா உண்மையான எதையும் முழுமையாக உணரவில்லை. நிர்வாண், உடனடியாக நிர்விகல்ப் எனும் நிலையை நோக்கி நகர்கிறது, அங்கு ஆன்மா உண்மைப்பொருளான ஏக இறைவனின் நிலையை முழுமையாக உணர்கிறது.

நிர்வாண் மற்றும் நிர்விகல்ப் நிலைகள் இரண்டும் மிகவும் மாற்றமுடியாத வகையில் பிணைக்கப்பட்டு, ஒன்றோடு ஒன்றாக இணைந்துள்ளன; ஒவ்வொன்றும் தெய்வீக இலக்கு என்று கூறலாம்.

பொய்யும் போலியுமான ஒன்றுமில்லாத ஒன்று (FALSE NOTHING) = எல்லாம் எனக் கருதப்படும் மாயை.

உண்மைப்பொருளான ஒன்றுமில்லாத நிலை (REAL NOTHING) = எல்லாமும் அல்லது எதுவும் இல்லாத நிலை.

அனைத்தையும் உள்ளடக்கிய ஏக இறைவனான உண்மைப்பொருள் (REAL EVERYTHING) = அளவிறுதியற்ற கடவுள்.

பொய்யும் போலியுமான ஒன்றுமில்லாத ஒன்று, எல்லாம் எனக் கருதப்படும் மாயைக்கு வழிவகுக்கும்; மேலும், உண்மைப்பொருளான ஒன்றுமில்லாத நிலை, அளவிறுதியற்ற கடவுளுக்கு வழிவகுக்கும். பொய்யும் போலியுமான ஒன்றுமில்லாத ஒன்று, பொய்யும் போலியுமான எல்லாவற்றுடனும் இணைக்கப்பட்டுள்ளது; மேலும், அனைத்தையும் உள்ளடக்கிய ஏக இறைவனான உண்மைப்பொருள், அளவிறுதியற்ற கடவுளோடு இணைக்கப்பட்டுள்ளது. இறுதியில், பொய்யும் போலியுமான ஒன்றுமில்லாத ஒன்று, பொய்யும் போலியுமான எல்லாவற்றுடனும் முடிவடையும்; மேலும், அனைத்தையும் உள்ளடக்கிய ஏக இறைவனான உண்மைப்பொருள், அளவிறுதியற்ற கடவுளோடு முடிவடையும்.

இருமைத்தன்மையை அடிப்படையாகக் கொண்ட இம்மாய உலகில், பொய்யும் போலியுமான ஒன்றுமில்லாத ஒன்றுதான், பொய்யும் போலியுமான எல்லாமுமாகத் திகழும்; ஒருமைத்தன்மை நிறைந்த இறை உலகில், அனைத்தையும் உள்ளடக்கிய ஏக இறைவனான உண்மைப்பொருளும், அளவிறுதியற்ற கடவுளும் ஒன்று.

பாபா இவ்வாறு கருத்துரைத்தார்:

**நீங்கள் இதை ஏழு முறை கவனமாகக் கேட்டால், புரிந்துகொள்ளத் தொடங்குவதற்கான வாய்ப்பு உள்ளது; அல்லது, நீங்கள் உங்களை ஒன்றுமில்லாத ஒன்றில் இழக்க நேரிடும்! 'உண்மைப்பொருளான ஒன்றுமில்லாத நிலை' என்றால் என்ன? 'ஒன்றுமில்லாத**

நிலை’க்கும், ‘உண்மைப்பொருளான ஒன்றுமில்லாத நிலை’க்கும் இடையே வேறுபாடு உள்ளது. ‘உண்மைப்பொருளான ஒன்றுமில்லாத நிலை’ என்றால் எதுவும், ‘ஒன்றுமில்லாத நிலை கூட இல்லாதது’ என்று அர்த்தம். ஆறாவது ஆன்மீகத் தளத்தில், ஒருவர் கடவுளைத் தவிர வேறு எதையும் காண்பதில்லை, கடவுளை எங்கும் காண்கிறார்; ஒருவர் எதையும் காணாத அதே வேளையில் அனைத்தையும் காண்கிறார். இதில் இன்னமும் இருமைத்தன்மை உள்ளது - அதாவது, ‘பார்ப்பவர்’ மற்றும் ‘பார்க்கப்படும் பொருள்’. பார்ப்பவர், கடவுளைத் தவிர வேறு எதையும் பார்க்கவில்லை.

பார்ப்பவர், ஒரு பரிபூரண குருநாதரின் உதவியுடன் ஆறாவது ஆன்மீகத் தளத்தைக் கடந்து, ஆழமான வெற்றிடத்தில் தள்ளப்படும்போது, அவரது அனுபவம் எல்லையற்ற வெற்றிடமாக இருக்கும். அதை விவரிக்க முடியாது. பார்ப்பவரும் இல்லை, பார்க்கப்படும் பொருளும் இல்லை; ‘ஒன்றுமில்லாத நிலை’யும் இல்லை, அல்லது ‘அனைத்தும் நிறைந்த நிலை’யும் இல்லை. இதுவே ‘உண்மைப்பொருளான ஒன்றுமில்லாத நிலை’. ஆனால் இந்த ‘உண்மைப்பொருளான ஒன்றுமில்லாத நிலை’, உடனடியாக ‘கடவுளுடன் ஐக்கியமாகும் நிலை’யுடன் நிறைவடையும். ஆழமான வெற்றிடமானது எல்லையற்றது, அது அளவிறுதியற்ற தன்மையால் நிரப்பப்பட வேண்டும். அதுவே, ஏழாவது ஆன்மீகத் தளத்தில் நுழையும் போது ஏற்படும் அனுபவம். ஆகவே, எங்கும் கடவுளைக் காணும் ஆறாவது ஆன்மீகத் தளத்தில் நிலைகொண்டுள்ள சாதுக்களுக்குக் கூட, ‘உண்மைப்பொருளான ஒன்றுமில்லாத நிலை’ என்றால் என்ன என்று எதுவுமே தெரியாது.

இந்த சொற்பொழிவைக் குறித்த கேள்விகளுக்கு பதிலளிப்பது பற்றி பாபா கூறினார்: உண்மையைச் சொல்வதானால், கேள்விகள் மற்றும் பதில்களை நான் விரும்பவில்லை. தொடக்கமற்ற தொடக்கத்திலிருந்தே நான் ஒரே ஒரு கேள்வி கேட்டேன், ‘நான் யார்?’ (WHO AM I?) அதற்கு, நான் ஒரு பதிலைக் கொடுத்தேன், ‘நான் கடவுள்!’ (I AM GOD!) இதர எல்லா கேள்விகளும், பதில்களும் என்னில் எந்தவித ஆர்வத்தையும் தூண்டுவதில்லை. இருந்தும், உங்களை மகிழ்விக்க, நான் கேள்விகளைக் கேட்டு, அவற்றிற்கு பதில்களை வழங்குகிறேன். ஹாரி (கென்மோர்) கேள்விகளால் நிறைந்துள்ளார்.

ஒருவர் கேட்டார், “ஆன்மீகத் தளங்களின் உணர்வுடன் இருப்பவர்கள், அதே ஆன்மீகத் தளத்தின் உணர்வுடன் பிறவி எடுக்கிறார்களா?” பாபா இவ்வாறு பதிலளித்தார்:

ஆம், ஆனால், பௌதீக உணர்வுடன் ஒரு நபர் உடலைத் துறந்து, பௌதீக உணர்வோடு உலகில் மீண்டும் பிறக்கும்போது, உணர்வின் வெளிப்பாடு மிகவும் படிப்படியாக நிகழும். குழந்தை வளர வளர, பௌதீக உலகின் கடந்த கால அனுபவங்களுக்கு ஏற்ப, அதே பழைய பௌதீக உலகைப் பற்றி படிப்படியாக அறிந்து கொள்கிறது. ஒரு குறிப்பிட்ட ஆன்மீகத் தளத்தின் உணர்வுடன் பிறந்த ஒரு குழந்தை, அந்த ஆன்மீகத் தளத்தைப்

பற்றி உடனடியாக, ஒரே நேரத்தில் உணர்வதில்லை. குழந்தை படிப்படியாக வளரும் வேளையில், ஆன்மீகத் தளமும் மிகவும் படிப்படியாகப் பரந்து விரியும். பிற்கால வாழ்க்கையில், இந்தக் குழந்தை, ஒரு மனிதனாக வளர்ந்து, பௌதீக உலகின் ஒரு மனிதன் தனது உலக வாழ்க்கையில் நிலைநிறுத்தப்படுவதைப் போல், இந்த வாழ்க்கையிலும் அந்தந்த ஆன்மீக உணர்வுத் தளத்தில் நிலைபெறுகிறான்.

இவ்வாறு, பௌதீக உலகின் ஒரு நபர், பௌதீக உணர்வுடன் மறுபிறவி எடுக்க இறக்கிறார். அதுபோலவே, குறிப்பிட்ட உணர்வு தளத்தில் நிலைகொண்டுள்ள ஒருவர், தனது முந்தைய வாழ்க்கையின் அந்தந்த உணர்வுத் தளத்தில் மறுபிறவி எடுக்கிறார். உயர்ந்த ஆன்மீகத் தளங்களில் அவர் மேலும் முன்னேறலாம் அல்லது முன்னேறாமலும் இருக்கலாம். ஓர் உயர்ந்த ஆன்மீகத் தளத்தில் முன்னேறுவது என்பது, ஆன்மீக வழிகாட்டியின் உதவி அல்லது பரிபூரண குருநாதரின் கருணை அல்லது அந்த குறிப்பிட்ட ஆன்மீகத் தளத்தில் அவரது சொந்த முயற்சியைப் பொறுத்தது.

அன்று நான் கூறியது போல, பௌதீக, சூட்சும, ஆழ் மன கோளங்கள் மற்றும் கடவுள் அனைத்தும், உங்களில், உங்கள் மனித உருவத்தில் உள்ளன. அவற்றை வேறு உலகில் கண்டுகொள்ள முயற்சிக்காதீர்கள். அவை உங்களுக்குள்ளேயே உள்ளன. உணர்வின் கண்ணோக்குப் பார்வையே, பிற உலகங்களின் அனுபவத்தை வழங்குகிறது.

பௌதீக உலகில், முழுப் பிரபஞ்சமும் உள்ளது; மேலும், சூட்சும மற்றும் ஆழ் மன உலகங்களில் எண்ணற்ற அனுபவங்களும் உள்ளன. ஆனால், பௌதீக உலக அனுபவங்கள், சூட்சும உலகின் அனுபவங்களிலிருந்து வேறுபட்டவை. நீங்கள் உங்களில் மாறாதவர்; அனைத்தும் உங்களில் உள்ளது. நீங்கள் பூகோள ரீதியாக உயர் மட்டங்களுக்குச் செல்ல வேண்டாம். உணர்வின் கண்ணோக்குப் பார்வையின் கோணம் மாறும்போது, உங்கள் அனுபவம் மாறுகிறது.

முடிவில் நீங்கள் உங்களை கடவுளாக உணர்கிறீர்கள், அதுவே உங்கள் இறுதி இலக்கின் உண்மையான அனுபவமாகும். பௌதீக, சூட்சும மற்றும் ஆழ் மன உலகங்களின் இதர அனுபவங்கள் அனைத்தும் மாயை. சொர்க்கம், நரகம், நட்சத்திர உலகம், ஆழ்மனத் தளங்கள் இதுபோன்ற பலவற்றின் அனைத்து நிலைகளும் அப்படித்தான். உங்களுக்குள்ளேயன்றி வேறு எங்கும் அவற்றைத் தேடாதீர்கள். இறுதியில் உங்கள் சுய பரமாத்மாவாக மாற, நீங்கள் என்னை நேசிக்க வேண்டும். வேறு எந்தத் தீர்வும் இல்லை.

**‘சரணடைதல்’** (SURRENDERANCE) குறித்து இந்தக் குறுஞ்செய்தி வாசிக்கப்பட்டது:

**ஒரு பரிபூரண குருநாதரிடம் உண்மையாக சரணடைபவர், அதற்கான அனுமதியைக் கோராமலேயே முழுமையாக சரணடைகிறார். தனது சரணாகதியை குருநாதர் ஏற்றுக் கொள்வதைக் கூட அவர்**

**எதிர்பார்ப்பதில்லை. முழுமையான சரணாகதி என்பது, தான் செய்ய வேண்டியதைப் போலவே, முழுமையாக சரணடைந்த ஒருவரை, குருநாதர் ஏற்றுக்கொள்வதை உள்ளடக்கியது.**

பாபா கருத்துரைத்தார், "'**நான் உங்களை எப்படி நேசிக்க முடியும்?' என்று என்னிடம் கேட்பது, என்னை அவமானப்படுத்துவதற்கு நிகராகும்! நான் எப்படி பதில் சொல்ல முடியும்? உங்கள் பதில் என்ன, ஹாரி?"**

ஹாரி கென்மோர் பதிலளித்தார், "என்னை இந்த இக்கட்டான சூழ்நிலையில் மாட்ட வைத்ததற்கு நன்றி! பாபாவை எப்படி நேசிப்பது என்று ஒருவருக்கு சொல்லித்தர முடியாது; அதைத் தானே கண்டுபிடிக்க வேண்டும். இது போன்ற கேள்வி, அன்பனைக் குறிப்பிடுகையில் அவனது அன்பை மறுக்கிறது."

'**அன்பு மற்றும் கீழ்ப்படிதல்**' (LOVE AND OBEDIENCE) பற்றி விளக்கி பாபா தொடர்ந்தார்:

**பீட்டர், இயேசுவை எப்படி நேசிக்க வேண்டும் என்று இயேசுவே கூறியிருந்தால், பீட்டர் அவரை மறுத்திருக்க மாட்டார். எனக்கு எப்படிக் கீழ்ப்படிய வேண்டும் என்பதை நான் உங்களுக்குச் சொல்ல முடியும், ஆனால் என்னை எப்படி நேசிப்பது என்பதற்கு பதில் இல்லை. நீங்கள் அன்பை புரிந்து கொள்ளும் விதத்தில் என்னை நேசியுங்கள்.**

**எனக்குக் கீழ்ப்படிவது எப்படி என்பதை நான் உங்களுக்குச் சொல்ல முடியும்: நான் சொல்லும் எதையும் செய்ய வேண்டும், வாழ்க்கையை அதற்கு விலையாகக் கொடுத்தேனும் செய்ய வேண்டியது அவசியம். எப்பாடு பட்டேனும் 100 சதவிகிதம் முழு மனதுடன் கீழ்ப்படிந்தால், அது என்னை நேசிப்பதை விட உயர்ந்ததாக இருக்கும்.**

**அன்பை விட கீழ்ப்படிதல் மேலானது. ஆனால் யார் எனக்குக் கீழ்ப்படிய முடியும்? அரிதான ஒருவரால் மட்டுமே அவ்வாறு செய்ய முடியும், ஆனால் உங்கள் அனைவரிடமிருந்தும் அந்த உறுதி எனக்கு உள்ளது. நான் என்ன செய்யச் சொல்கிறேனோ, அதை மட்டும் செய்யுங்கள். நீங்கள் அனைவரும் உங்கள் கைகளை உயர்த்தியுள்ளீர்கள்; எனவே நாம் பார்ப்போம்.**

இறுதியாக, '**அன்பரும், அன்பிற்குரியவரும்**' (THE LOVER AND THE BELOVED) பற்றிய இந்த சொற்பொழிவு வாசிக்கப்பட்டது:

**அன்பான கடவுள் அனைத்திலும் உளதாயிருக்கிறார். அப்படியானால் அன்பனின் கடமை என்ன? தன்னையும் பொருட்படுத்தாமல் அன்பிற்குரியவரை மகிழ்விப்பதாகும். தனது சொந்த மகிழ்ச்சியைப் பற்றி சிறிதும் சிந்திக்காமல், அன்பன், அன்பிற்குரியவரின் இன்பத்தை நாட வேண்டும். கடவுளை நேசிப்பவருக்கு இருக்க வேண்டிய ஒரே எண்ணம், அன்பிற்குரியவரை மகிழ்வுறச் செய்வதுதான்.**

**எனவே, நீங்கள் உங்கள் சொந்த மகிழ்ச்சியைப் பற்றி நினைப்பதை நிறுத்திவிட்டு, பிறருக்கு மகிழ்ச்சியைக் கொடுப்பதானால், நீங்கள்**

**உண்மையில் கடவுளின் உண்மையான அன்பனின் பங்கைச் செய்கிறீர்கள், ஏனெனில் அன்பான கடவுள் அனைத்திலும் உளதாயிருக்கிறார்.**

**ஆனால், பிறருக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கும்போது, உங்களைப் பற்றிய ஓர் இம்மி அளவு எண்ணம் இருந்தால் கூட, அது அன்பு அல்ல, பாசம். இது பிறரை மகிழ்விக்கும் போது, சுய மகிழ்ச்சியைத் தேட முனைகிறது. உதாரணம்: முதலாவதாக, மனைவி மீதான ஒரு கணவனின் பாசம். கணவன் தனது மனைவிக்கு மகிழ்ச்சியைக் கொடுக்க விரும்புகிறான்; ஆனால் அவ்வாறு செய்யும்போது அவன் தனது மகிழ்ச்சியைப் பற்றியும் நினைக்கிறான். இரண்டாவதாக, ஒரு தாய் தனது குழந்தை மீது கொண்டிருக்கும் பாசம். இந்தப் பாசத்திலிருந்து, தாய் தனது குழந்தைக்கு மகிழ்ச்சியைக் கொடுப்பதன் மூலமும், தேடுவதன் மூலமும் மகிழ்ச்சியை அடையப் பெறுகிறாள்.**

பாபா கூறினார்: “**நீங்கள் தனிமனித கடல்** (INDIVIDUALISED OCEAN)”. அவர், தான் வைத்திருந்த தொப்பியின் விளிம்பைச் சுட்டிக்காட்டி கூறினார்:

**இந்தத் தொப்பியை நீங்களெனக் கற்பனை செய்யுங்கள். நீங்கள் இந்தப் பௌதீக உலகைப்** (பெட்டியை சுட்டிக்காட்டி) **பார்க்கிறீர்கள், ஒரு துறவியின் உதவியுடன், நீங்கள் பின்னோக்கி குதித்து, சூட்சும உலகை** (தொப்பியின் பின்னால் பெட்டியை வைத்து நோட்டுப்புத்தகத்தைச் சுட்டிக்காட்டி) **அனுபவிக்கத் தொடங்குகிறீர்கள். அப்போது மீண்டும் வேறொரு துறவியின் உதவியுடன், நீங்கள் ஆழ் மன உலகைப் பார்க்கிறீர்கள், சூட்சும அல்லது பௌதீக உலகங்களை அல்ல.**

**ஆனால் ஒரு பரிபூரண குருநாதர் என்ன செய்கிறார்? அவர் உங்களது சுயத்தை முழுவதுமாகத் திரும்பச் செய்கிறார்; ஒரு முழுச் சுற்றுத் திருப்பத்தை ஏற்படுத்துகிறார், அப்போது தனிப்பட்ட சுயம் மறைந்துவிடும். சுயம் மறைந்து, கடவுள் மட்டுமே உளதாயிருக்கிறார்.**

**இப்போது கேள்வி என்னவெனில், தனித்துவம் எவ்வாறு தக்கவைக்கப்படுகிறது? தனித்துவத்தின் முத்திரை அப்படியே நிலைகொண்டிருக்கும்; இப்போது, ‘நான் கடவுள்’ மற்றும் ‘பெரில் கடவுள்’ என்று கூறுவது மட்டும் எஞ்சியுள்ளது. இயேசு கூறினார்: ‘நான் கடவுள்.’ இந்த முத்திரை, அல்லது குறியீடு மட்டுமே எஞ்சியிருக்கும். அதுவே இன்னமும் உண்மையான தனித்துவமாக உளதாயிருக்கும்.**

**நினைவில் கொள்ளுங்கள், உண்மையான ‘பரமாத்மா’ உள்ளே உள்ளது. ஒரு பரிபூரண குருநாதர் உதவும்போது, உண்மையான ‘பரமாத்மா’ அகற்றப்படும் அந்த வேளையில், எஞ்சியிருக்கும் முத்திரை, அசல் தனித்துவமாகும். நான் அதை இப்படித்தான் உங்களுக்கு விளக்கவோ அல்லது உங்கள் அறிவைத் தொடச் செய்யவோ முடியும். உண்மையான ‘பரமாத்மா’ அகற்றப்படும் போது, உண்மையான ‘பரமாத்மா’வின் தனித்துவம் ஒரு முத்திரையாகவே எஞ்சியிருக்கும்.**

இப்போது எல்லையற்ற இறைப்பெருங்கடலை எடுத்துக்கொள்ளுங்கள். அது துளிகளால் நிறைந்துள்ளது. ஒவ்வொரு துளியும் தனித்தனியாகப் பிரியாத வரை, கடலாகத்தான் இருக்கும். எனவே கடலில் எண்ணற்ற துளிகள் உள்ளன. ஒருவர் கூறுகிறார்: 'நான் கல்.' வேறொருவர் கூறுகிறார்: 'நான் ஆண், நான் பெண்; நான் இது, நான் அது.' இப்போது மூன்று துளிகள் இருப்பதாக வைத்துக்கொள்வோம், அதன் உண்மையான 'பரமாத்மா' அகற்றப்படும் வேளையில் கடவுள் எஞ்சியிருக்கிறார், ஆனால் அதே வேளையில் தனித்தன்மையும் இருக்கிறது. எனவே, 'பர்டம்' எனும் ஒரு துளி கூறுகிறது: 'நான் கடவுள்', அதே வேளையில், அவரது சுய 'இறைப்பேரின்பப் பெருங்கடலைப் பற்றிய அவரது அனுபவம்' இடைவேளையின்றி தொடர்கிறது. இப்போது 'லட்' என்று அழைக்கப்படும் மற்றொரு துளி, அதே இறைப்பெருங்கடலில் இருந்து பிரிக்கப்பட்டது. அதன் உண்மையான 'பரமாத்மா' அகற்றப்படும் போது, தனித்துவம் எஞ்சியிருக்கும், மேலும் அவர் அதையே கூறுகிறார்: 'நான் கடவுள்.' 'பெரில்' கூறுகிறார்: 'நான் கடவுள்.' இறைப்பெருங்கடலின் மூன்று துளிகளும் ஒன்றையே கூறுகின்றன, ஆனால் அனுபவம் தனிப்பட்டது. புரிந்துகொள்வது மிகவும் எளிதானது, அடையப் பெறுவது மிகவும் கடினம்!

எனவே, நீங்கள் ஏழாவது ஆன்மீகத் தளத்திற்குள் தள்ளப்படும் போது, என்ன நடக்கும்? நீங்கள் உங்கள் பொய்யும் போலியுமான சுயத்தையும் உங்கள் உண்மையான 'பரமாத்மா'வையும் கைவிடும் அந்தத் தருணத்தில், உடனடியாக, உங்களைக் கடவுளாக அனுபவிக்கிறீர்கள்.

பாபா இப்போது இடைவேளை என சைகையால் தெரிவித்தார். சிலர், குறிப்பாக குழந்தைகள் அவரது நாற்காலியைச் சுற்றி ஒன்றுதிரண்டனர். கூட்டம் மீண்டும் தொடங்கிய போது, **"ஸெயின்ட் மீராவைப் பற்றி நீங்கள் அனைவரும் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? இந்தியாவில், ஒவ்வொருவருக்கும் அவரைத் தெரியும். கிருஷ்ணரைப் புகழ்ந்து, அவர் பாடிய பஜனைகளை மக்கள் பாடுகிறார்கள்"** என்று குறிப்பிட்டார்.

மீராவின் வாழ்க்கையைப் பற்றி எரச் சுருக்கமாக விவரித்தார்:

மீரா மிகவும் அழகான ஒரு சிறுமி. அவர் வட இந்தியாவில் ஒரு செல்வந்தர் குடும்பத்தின் இளவரசரின் மனைவி, பின்னர் அந்த இளவரசர் அரசரானார். மீரா, கிருஷ்ணாவை ஆழ் இதயத்திலிருந்து நேசித்தார், ஆனால் 5,000 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த கிருஷ்ணனின் காலகட்டத்தில் வாழவில்லை. மீரா இருநூறு அல்லது முந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தார். அவர் மஹாராணி என்பதால், வீதிகளில் நடந்து செல்வதை அவருடைய கணவர் விரும்பவில்லை, மேலும் மஹாராணிகள் கூட்டத்துடன் கலப்பதில்லை. கிருஷ்ணரின் பெயரை உதடுகளில் பாடிய வண்ணம் ஏழைகளின் குடில்களுக்குள் நுழைவதை வழக்கமாகக் கொண்டார். கிருஷ்ணர் மீதான அவரது அன்பை சோதிக்க, அவர் பல சோதனைகளையும் அச்சுறுத்தல்களையும் சந்திக்க நேர்ந்தது. அவர் ஓர் அறையில் அடைக்கப்பட்டார், அவருடைய

உணவில் விஷம் கலக்கப்பட்டது, ஒரு பூச்செடிக்குள் நாகப்பாம்பு ஒன்று மறைத்து வைக்கப்பட்டது. அவர் எல்லாவற்றையும் தனது பிரியமான கிருஷ்ணரின் பரிசாக ஏற்றுக்கொண்டார், எதுவுமே நடக்கவில்லை. கிருஷ்ணர் அவரைப் பாதுகாத்தார். தனது பகவான் கிருஷ்ணரைத் தவிர வேறு எவருடனும் எந்தத் தொடர்பும் வைத்துக் கொள்ள மறுத்தார்.

இறுதியாக, மன்னர், மீராவை நாடுகடத்தி, சிறைக்காவலில் வைத்தார்; மீரா கூறினார்: "மன்னர் என்னை வெளியேற்றினால், எனக்கு ஓர் இடம் உண்டு, ஆனால் பிரபஞ்சத்தின் இறைவன் அதிருப்தி அடைந்தால், எனக்கு எங்கும் இடமில்லை." மக்களும் அவருக்கு எதிராகத் திரும்பினர்.

வருடங்கள் பல கடந்தன; அவர் கந்தல் உடையிலும் பிரகாசமாகத் தோற்றமளித்தார். அப்போது அரசர் வந்து அவரது காலில் அடிபணிந்தார். இந்தியாவில் ஆண் ஒருவர், ஒரு பெண்ணின் கால்களில் தலைவணங்குவது பாவம், மேலும், மனைவிக்கு அது மன்னிக்க முடியாத குற்றம். ஆனாலும், அவர் உண்மையாக இருந்ததால் அரசர், மீராவின் கால்களில் விழுந்தார். மீரா உயிரைத் துறந்தபோது, அனைவரும் அவரை வணங்கினர், இப்போது மக்கள் அவருடைய பஜனைகளைப் பாடி மகிழ்கின்றனர்.

பாபா கூறினார், "**நானே கிருஷ்ணா. மீரா என்னை நேசித்தது போல நீங்கள் அனைவரும் என்னை நேசிக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். மெஹராவின் அன்பு வேறுபட்டது அதை மீராவின் அன்புடன் ஒப்பிட முடியாது**."

ஸெயின்ட் மீராவின் பஜனைகளில் ஒன்றின் பதிவு இசைக்கப்பட்டது, அதில் அவர் பாடுகிறார்: "கிருஷ்ணா என்னுடையவர்; நான் கிருஷ்ணனுடையவள். எனக்கு வேறு எவருடனும் எந்தக் கொடுக்கல் வாங்கலும் இல்லை."

அதன்பிறகு, பாபா, டான் ஸ்டீவன்ஸ், ஹாரி கென்மோர் இருவரிடமும் '**அவிலாவின் புனித தெரஸாவைப் பற்றி உங்களுக்குத் தெரியுமா**' என்று கேட்டார். கென்மோர் பதிலளித்தார், "அவர் தனது வாழ்நாள் முழுவதையும் இயேசுவுக்காக அர்ப்பணித்தார். அதுதான் எனது நினைவுக்கு வருகிறது."

அதற்கு பாபா, "**அதுதான் மிகவும் முக்கியமான விஷயம். அவர் என்னை நேசித்தார்; தனது வாழ்க்கையை எனக்காக முழுமையாக அர்ப்பணித்தார்**."

மரியன் ஆண்டர்ஸன் (MARIAN ANDERSON) பாடிய ஆன்மீக இசைப்பதிவு இசைக்கப்பட்டது. பாபா, தனது ஆள்காட்டி விரலையும், கட்டை விரலையும் இணைத்து, அவருக்கே உரித்தான முறையில், சிறப்பாக இருப்பதாகத் தெரிவித்தார். அவர் பாடிய ஒரு பாடல், 'அவர் முழு உலகையும் அவரது கையில் பற்றிப் பிடித்துள்ளார்' என்று குறிப்பிட்டது. பாபா தனது வலது கை சைகையால் தெரிவித்தார், "**எனது உள்ளங்கையில் முழுப் பிரபஞ்சமும் அடங்கியுள்ளது**!" இசைப்பதிவின் கடைசி பாடல் 'லெட் மை பீப்பிள் கோ' (LET MY PEOPLE GO) பாடல் இசைத்ததும், பாபாவின் முகம் பவித்திரமான தோற்றத்தை

வெளிப்படுத்தியது. பார்ன் கொட்டகையில் முழு அமைதி நிலவியது. அவர் வலது பாதத்தைத் தொட்டு, பின்னர் அவரது நெற்றியை இரண்டு முறை தொட்டார்.

பார்ன் கொட்டகைக்கு வெளியே, எலிஸபெத், பாபாவுடன் காரில் அமர்ந்திருந்த போது, ஜேனை தன் அருகில் அழைத்தார். எலிஸபெத் அவரிடம், “நீங்கள் அவரை நேசிக்கிறீர்கள் என்று அவருக்குத் தெரியும், மேலும், அவர் உங்களை மிகவும் நேசிக்கிறார் என்றும் பாபா உங்களுக்குச் சொல்லச் சொல்கிறார்.” இந்த உரையாடலை நினைவுகூரும் போது, ஜேன் கூறினார்: “என் இதயத்தில் ஏதோ ஒரு மாற்றம் தென்பட்டது; ஆனால், பாபா என் மனதை முழுமையாக அமைதியில் ஆழ்த்தினார்.”

ஒரு நாள் பார்ன் கொட்டகைக்குச் செல்லும் வழியில், பெகி மியோ (PEGGY MUIR), மணல் சாலையில் எதிரே வந்துகொண்டிருந்த காரின் பாதையிலிருந்து சிறிது பக்கவாட்டில் செல்லவே, அவரது கணுக்கால் சுளுக்கிக் கொண்டது. அவர் அதைக் கண்டுகொள்ளாமல், பார்ன் கொட்டகைக்குச் சென்று, முழு நேர நிகழ்ச்சிகளிலும் கலந்துகொண்டார். கால் வலியைக் குறித்து புகார் கூறவில்லை. பாபா முதலில் கொட்டகையை விட்டு வெளியேறும் வேளையில், குழு எப்பொழுதும் எழுந்து நின்று, பின்னர் அவரைப் பின்தொடர்ந்து மையத்திற்குச் சென்றனர். பெகி மீண்டும் காரில் அழைத்துச் செல்லப்பட்டார்.

பெகி, லகூன் கேபினுக்குச் சென்று, பாபாவின் முன்னால் தரையில் அமர்ந்தார். பாபா அவரிடம், **“எங்கே அதிகம் வலிக்கிறது என்பதைக் காட்டுங்கள்”** என்று சைகையால் கேட்டார். பெகி கணுக்காலின் வெளிப்புறத்தில் விரலை வைத்த போது, பாபா கீழே இறங்கி, கணுக்காலின் மேல் கையை வைத்தார். அடுத்த கணம் அவர் எழுந்து, கேபினை விட்டு வெளியே வந்து, நடக்க முயற்சித்த போது, கணுக்காலில் சிறிதளவும் வலியை உணரவில்லை; எந்த அசௌகரியமும், வீக்கமும் இல்லாமல், அது வெளியளவில் சீரானாதாக பெகி உணர்ந்தார்.

அன்று மதியம் தொடங்கி, பிற்பகல் 2:00 மணி வரை, பாபா மீண்டும் லகூன் கேபினில் தனிப்பட்ட நேர்காணல்களை வழங்கினார். ஒவ்வொரு நாளும் பிரார்த்தனை செய்ய வேண்டுமா என்று கேட்ட அமெரிக்க அன்பர் ஒருவரிடம், பாபா மீண்டும் ஹாஃபீஸை மேற்கோள் காட்டிக் கூறினார், **“குருநாதர் முன்னிலையில் ஒரு கணம் நேரம் இருப்பது, 100 வருட பிரார்த்தனைக்கு நிகரானது.”**

டேனா ஃபீல்டிடம் (DANA FIELD) பாபா, **“நீங்கள் எனது மண்டலியில் ஒருவர். உங்கள் பணியைத் தொடருங்கள்”** என்று கூறினார். இதையே பாபா, டான் ஸ்டீவன்ஸிடமும் கூறினார்.

எனர்ஜி ஃப்ளோர்ஷெய்ம், “பாபா, நீங்கள் உங்கள் பௌதீக உடலைக் கைவிட்ட பிறகும், உங்கள் பணியில் நான் ஈடுபட என்னை அனுமதியுங்கள்”, என்று கூறியது, பாபாவை ஆழமாகத் தொட்டது.

பிலி ஈட்டன் (BILI EATON) நியூயார்க் நகரிலிருந்து சகவாசத்தில் கலந்து கொள்ள வந்திருந்தார். அவர் ஓர் ஆண்மகனைக் காதலித்து, பிரம்மச்சரியம் தொடர்பான பாபாவின் ஆறுமாதக் கட்டளையை மீறியதால், முழு நேரமும் குற்ற உணர்வால் ஆட்கொள்ளப்பட்டிருந்தார். வேறு பலருடன் லகூன் கேபினில் பாபாவை முதன்முதலில் சந்திக்க வந்த போது, பாபா அவரைக் கண்டுகொள்ள முடியாத இடத்தில் அனைவருக்கும் பின்னால், ஒரு மூலையில் ஒளிந்து கொண்டார். பாபா அனைவருடனும் உரையாடிவிட்டு, “**பிலி - பிலி எங்கே?**” என்று கேட்டு, அவரிடம் அழைத்தார்.

பிலி பின்னர் விவரித்தார்:

பாபாவின் காலடியில் அமர்ந்திருந்ததையும், அவர் என்னைப் பார்த்ததையும் நீங்கள் கற்பனை செய்து பார்க்கலாம். நான் நினைத்தேன்: “கடவுளே, நான் என்ன செய்யப் போகிறேன்?” நான் இந்த கனமான எண்ணத்தின் ஈர்ப்பை உணர்ந்தேன்; அப்போது அவர் என்னைப் பார்த்து வினவினார்: “**நீங்கள் எப்போதும் போல் என்னை நேசிக்கிறீர்களா?**” நேரம் வேகமாகவும் மெதுவாகவும் ஒரே நேரத்தில் நகர்ந்து கொண்டிருந்தது. எனது மனம் துடித்துக் கொண்டிருந்தது - அவருக்கு நான் என்ன பதில் சொல்ல முடியும்? என்ன சொல்வதென்றே தெரியவில்லை. அப்போது அவர், “**அனிதாவைப் போல் நீங்களும் என்னை நேசிக்கிறீர்களா?**” என்றார். நான் அதை தெரிந்துகொள்ள வழியில்லாததால், “பாபா, எல்லா இதயங்களையும் நீங்கள் மட்டுமே அறிவீர்கள்” என்றேன். அவர் சிரித்துக் கொண்டே என்னை சிரமத்திலிருந்து விடுவித்தார்.

மற்றுமொரு முறை பிலி, லகூன் கேபினுக்கு வந்தபோது, குழுவில் ஐந்து பேர் அவருக்குக் கடிதங்களைப் படித்துக்கொண்டிருந்தனர். தனது சொந்த விவகாரத்தில் இன்னமும் குற்ற உணர்வுடன் இருந்த அவர், பாபாவின் முன்னால் கண்கலங்காமல் மகிழ்ச்சியாக இருக்க முயன்றார். சோகத்தின் உணர்வை மறைக்க, அவர் வெறித்தனமாக வேலைகளில் ஈடுபட ஆரம்பித்தார்.

அவர் பின்னர் நினைவு கூர்ந்தார்:

ஏதோ சில காரணங்களால், பாபா அவரைப் பார்க்க என்னை ஈர்த்ததாக உணர்ந்தேன். அந்த உணர்வை எப்படி விளக்குவது என்று எனக்குத் தெரியவில்லை. அவரது கண்களில் வெளிப்பட்ட அன்பின் தோற்றம், மிகவும் வலுவாகவும் சக்திவாய்ந்ததாகவும் இருந்தது, நான் அமராமல் இருந்திருந்தால், அது என்னை வீழ்த்தியிருக்கும். எனது நண்பர்கள் மற்றும் குடும்பத்தினர் அனைவரின் அன்பையும் விட, அவர் என்னை நேசித்தார் என்பது அந்த நேரத்தில் எனக்குத் தெரியும். தோற்றம் மிகவும் சக்திமிக்கதாக இருந்தது, அது இடியுடன் இணைந்த மின்னல் போல் இருந்ததாலும், ஒரே நேரத்தில் அது மிகவும் மென்மையாகவும் இதமாகவும் இருந்தது. அந்த அன்பு பல வருடங்களாக என்னைத் தாங்கியது. பாபா எல்லோரையும் நேசிக்கிறார் என்பதை நான் சந்தேகத்திற்கு இடமின்றி அறிந்தேன். அவர்கள் யாராக இருந்தாலும் - எவ்வளவுதான் கொடூரமானவர்களாக, எளிமையானவர்களாக, மோசமான கொலைகாரர்களாக இருந்தாலும் - அவர் அனைவரையும் நேசிக்கிறார். இந்த

அன்பு மிகவும் அளப்பரியதாக இருந்ததோடு, அப்போது என்னை குணப்படுத்தவும் தொடங்கியது.

பிற்பகல் 2:30 மணியளவில், மார்கரெட்டின் பதினொன்று இளம் பாலே நடனக் கலைஞர்களின் நிகழ்ச்சி, பார்ன் கொட்டகையில் நடந்தது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் அவர்களில் சிலர், பாபா முன்னிலையில் நடன நிகழ்ச்சியை நடத்திய போது, அவர்கள் போதிய ஆயத்தம் இல்லாமல் வந்தனர். இப்போது அவர்கள் முன்னதாகவே ஒரு திட்டத்தை வகுத்து, இசைக் கருவிகள் மற்றும் வேண்டிய ஆடைகளைக் கொண்டு வந்தனர். அவர்கள் கொட்டகையின் தரையில் பதிக்கப்பட்ட மெழுகின் மேற்பரப்பை அகற்றி, பின்னர் அதை மாற்றுவதாக உறுதியளிக்கவே, பாபா அதை அனுமதித்தார். ஒரு நடனக் கலைஞர், அவர்கள் பெரும்பாலான இடத்தைப் பயன்படுத்த விரும்புவதாகக் கூறவே, பாபா இரண்டு வரிசைகளில் மட்டும் நாற்காலிகளை தனக்காகவும் நிற்க முடியாதவர்களுக்காகவும் வைக்க அனுமதித்தார்.

கொட்டகையில், பாபா இளஞ்சிவப்பு நிற மேலுடை அணிந்து, பட்டு தலையணையில் அமர்ந்திருந்தார். ஜேன் ஹெய்ன்ஸை அவருக்கு அருகில் அமர, வழிவிட்டு உதவுமாறு மக்களுக்கு சைகையால் தெரிவித்தார். சாதாரணமாக, அவர் ஜேனிடம், **“பாபா தொண்டை வலிக்கு மிகுந்த உணர்திறன் மிக்கவர் என்பது உங்களுக்குத் தெரியும். மக்கள் என் அருகில் இருக்கும் வேளையில் எனக்கு எளிதில் சளி பிடிக்கும்”** என்று கூறினார். ஜேனுக்கு நாள்பட்ட தொண்டை பிரச்சினை இருந்தது, அது அந்தக் காலகட்டத்தில் சற்று தீவிரமாக இருந்தது. பாபாவையும் தொற்றிவிடுமோ என்ற அச்சத்தில், தன்னால் இயன்றவரை அவரிடமிருந்து விரைந்தோடினார். ஆனால் அவர் அவ்வாறு செய்த அந்த கணமே, உடனடியாக, வெளியளவில் எங்கிருந்தோ ஒரு தசைப்பிடிப்பு வந்தது. அவர் தன்னைச் சுற்றி இரும்புக் கரம் ஒன்று அரவணைப்பதை உணர்ந்தார்; இதனால் அவர் பாபாவின் அருகில் மீண்டும் நெருக்கமாக இருக்க வேண்டிய கட்டாயம். ஜேன் இரண்டு காரணங்களுக்காக ஆச்சரியத்தில் ஆழ்ந்தார்: பாபாவின் சிரமங்கள் மற்றும் பலவீனமான, நொறுங்கிப்போன உடல் மிகவும் தெளிவாக இருந்தாலும், அவரது பிடி மிகவும் சக்தி வாய்ந்தது! இரண்டாவதாக, பாபா எட்டிய தூரத்தை, எந்த ஒரு மனிதனாலும் எட்டியிருக்க முடியாது; ஏனெனில் ஜேன் வெகு தொலைவில் இருந்தார்.

டான் ஸ்டீவன்ஸ் நிகழ்ச்சியை அறிவித்து இவ்வாறு கூறினார்: “பாபா, உங்கள் வார்த்தைகள் எங்கள் மீது ஆழமான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. நேற்று, நாளை என்று எதுவும் இல்லை என்பதை நாங்கள் அறிவோம், எனவே, இந்த நிகழ்ச்சியை உங்களுக்காக என்றென்றும் நிலைத்திருக்கும் ‘இப்போது’ எனும் இந்த நிமிடத்தில் வழங்குகிறோம்!”

பீட்டர் ஸால் (PETER SAUL), வயோலா ஃபார்பர் (VIOLA FARBER), ஜீன் ஸெப்ரூன் (JEAN CEBRUN), மேரி அடேர் (MARY ADAIR), ஜோ ஃபேபியன் (JOE FABIAN), டெக்ஸ்

ஹைடவர் (TEX HIGHTOWER), ஸ்கிப்பர் டெமன் (SKIPPER DAMON), பண்டி கெல்லி (BUNTY KELLY), நவோமி வெஸ்டர்வெல்ட் (NAOMI WESTERVELT), சிந்தியா மேஸ் (CYNTHIA MAYS), ஜீப்ரா நெவின்ஸ் (ZEBRA NEVINS) ஆகியோர் பாபாவிற்காக நடன நிகழ்ச்சிகளை அரங்கேற்றினர். அவர்கள் பாபாவிற்காக தனிப்பாடல்கள் மற்றும் ஜோடிப் பாடல்கள் என பல பாடல்களைப் பாடி நடனமாடினர். பார்ன் கொட்டகையின் சுவர்கள் பார்வையிலிருந்து மறைந்து, முழு இடமும் விரிவடைந்தது போல் இருந்தது. வேறொரு நடனக் கலைஞரான டொனால்ட் மஹ்லர் (DONALD MAHLER), கனடாவிலிருந்து வந்து மேடைக் கலைஞராகப் பணியாற்றினார். 1920களில் ஒருமுறை இதுபோன்ற நிகழ்ச்சியை நடத்தியதைத் தொடர்ந்து, இந்த நிகழ்ச்சியில், ஸ்கிப்பர் டாமன் (SKIPPER DAMON), பாபாவிற்கு அவரது மணி வடிவான மகளிர் தொப்பியைக் கொடுத்ததும், அவர் அதை அணிந்தார். பாபா, மார்கரெட் மற்றும் ஒவ்வொரு நடனக் கலைஞர்களையும், டான் ஸ்டீவன்ஸையும் தழுவினார். அவர், **"என் அன்பர்களின் இந்த மேடை நடனத்தால் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன், என் மீதான அதீத அன்புடன் அனைவரும் அதைச் செய்தனர்"** என்றார். அதற்குப் பிறகு, மார்கரெட், அவர்கள் அன்று மதியம் நடனமாடியதைப் போல், ஒருபோதும் நடனமாடியதில்லை என்று கூறினார்.

பாபா, தனது பெயரில் அமெரிக்காவில் எதையும் சொந்தமாக வைத்திருக்க விரும்பவில்லை என்று முடிவு செய்திருந்ததால், அன்று மாலை அவர், வழக்கறிஞராக இருந்த நெட் ஃபுட்டை அழைத்து, '**மெஹர் மையத்தை எலிஸபெத் தலைமையிலான, இலாபகரமான நோக்கம் எதுவும் இல்லாத ஒரு நிறுவனமாக மாற்றுவதற்கான திட்டங்களை வகுக்கும்படி**' அவரிடம் கேட்டுக்கொண்டார். டான் ஸ்டீவன்ஸ், ஐவி, சார்மியன் டியூஸ் ஆகியோர் ஒரு கட்டத்தில் அழைக்கப்பட்டனர், மேலும் அவர் மறுசீரமைக்கப்பட்ட ஸூஃபியிஸம் (SUFISM REORIENTED) அமைப்பின் எதிர்காலப் பணிகளைப் பற்றி அவர்களுக்கு அறிவுறுத்தினார்.

இங்கிலாந்தின் ஹில்டா தாப் (HILDA THORPE), தனது மகன் ஸைமனுடன் (SIMON) சகவாசத்தில் கலந்து கொண்டார். 26ஆம் தேதி, அவர் தனது இரண்டாவது மகன் நியூஸிலாந்தில் வாழும் அந்தோணிக்கு (ANTHONY) சகவாசம் மற்றும் பாபாவை சந்தித்த முதல் பதிவுகள் பற்றி எழுதினார்.

பின்வருபவை ஹில்டாவின் கடிதத்திலிருந்து தேர்வு செய்யப்பட்ட தொகுப்பு:

"...எங்களில் 220 நபர்கள், உணர்வுப்பூர்வமாக அனுபவிக்கும் இந்த இன்றியமையா அனுபவத்தை எப்படிக் கோர்வையாக எழுதுவது என்று எனக்குத் தெரியவில்லை. வார்த்தைகள் இல்லாத மற்றும் தனிப்பட்ட குறியீடுகள் கூட தோல்வியடையக் கூடிய - ஆனால் இதயத்தால் மட்டுமே போதுமான அனுபவமாக அடையப்பெறும் ஒன்றை - வேறொரு விதத்தில் தெரிவிக்க முயற்சிப்பது கூட சாத்தியமில்லை என்று நான் தைரியமாகக் கூறுகிறேன்.

இப்போது, அந்த மனிதரைப் பற்றி நான் எப்படிச் சொல்வது? நான் இங்கு வருவதற்கு முன்னர், அவர் யார் என்று எனக்கு ஏதேனும் சந்தேகம் இருந்திருந்தாலும், எதுவும் இப்போது இல்லை. அவர் பரிபூரணமானவர். அவர் அதே கிறிஸ்து என்பதை வார்த்தைகளால் சொல்ல முடியாது - உணர்வுப்பூர்வமாக மட்டுமே அறிய முடியும்."

ஹில்டா முதன்முதலில், பாபாவை வேறு சிலருடன் கடந்த 19ஆம் தேதி சந்தித்தார். சந்திப்பை விவரிக்கையில், அவர் கூறியதாவது:

"மர்டில் பீச் மையம் வரை காரில் சென்றோம். அனைவரும் ஒருவித தடுமாற்றத்தில் இருந்தனர். அந்தத் தருணம் நெருங்கவே, ஒவ்வொருவரும் வித்தியாசமாக உணர நேர்ந்தது - ஒருவித அச்சம் அல்லது நடுக்கம். நான் மெய்சிலிர்ப்பது போல் உணர்ந்தேன், ஆனால் நிதானமாக இருந்தேன்... நாங்கள் எங்கு இருந்தோம் என்பதை அறிந்து கொள்வதற்கு முன்பு, வாசலுக்கு வெளியே நின்றோம், எனது கைகள் நிச்சயமாக நடுங்கத் தொடங்கின.

"அதைத் தொடர்ந்து நான் அழைக்கப்பட்டேன், வாசலுக்கு வெளியே எனது பெயர் மற்றும் நான் எங்கிருந்து வந்தேன் என்ற விபரங்களை வழங்கினேன். வாசல் திறந்தது, பாபா அங்கு இருந்தார். அந்தோணி, இது உண்மையில் அசாதாரணமானது, அற்புதமானது. நான் எதையும் பார்க்கவில்லை அல்லது வேறு எவரையும் கண்டுகொள்ள முடியவில்லை. நான் எனது கைகளை முகத்தில் வைத்து கதறி அழுத போது, நான் அவரது கைகளில் இருந்தேன். அவர் மிகவும் மென்மையாக இருந்தார், அவர் என்னைப் பற்றிப் பிடித்துக்கொண்டு, எனது தலையை நீண்ட நேரம் அவரது கைகளில் எடுத்து, எனது முகத்தில் அவரது முகத்தை அழுத்தினார். கடைசியாக, நீண்ட நெடிய காலமாக, ஒரு வாழ்க்கை அல்ல, ஆனால் பல வாழ்க்கைகளுக்கு பிறகு, நான் என் இல்லத்தில் இருந்தது போல் உணர்ந்தேன். இங்கே அந்த முடிவு இருந்தாலும், இது ஆரம்பம் மட்டுமே. நான் எனது கால்களில் தட்டுத் தடுமாறி வெளியே வந்தேன்.

"ஆம், ஸை (ஸைமன், SIMON) என்னுடன் இருந்தான், அவன் எனக்குப் பின்னால் பாபாவிடம் சென்றான். அதற்குப் பிறகு, நாங்கள் இருவரும் அந்த அழகான காடுகளுக்கு வெளியே இருந்தோம்; நான் விடுதலை ஆனவர் போல மகிழ்ச்சியுடன் அழுதேன். அந்த கணத்திலிருந்து, நாங்கள் ஒவ்வொரு நாளும், கண்கள் குளமாக நிரம்பி வழிய, அடக்க முடியாமல் வெடித்து சிதறி வருகிறோம்."

1958 மே 27 செவ்வாய் அன்று, காலை 10:00 மணிக்கு பாபா, பார்ன் கொட்டகைக்குள் நுழைந்தார். குழந்தைகள் அவருக்கு பூக்களை வழங்கினர் மற்றும் லாரி கர்ராஷ்ச் உருவாக்கிய மாதிரி பொம்மை விமானத்தை அவருக்கு வழங்கினார்.

நியூ ஜெர்ஸி நகரிலிருந்து மர்டில் பீச்சிற்கு வருவதற்கு முன்பு, ஹரோல்ட் ரட், ஸெசில் பி. டிமில் (CECIL B. DEMILLE) என்பவருக்கு, 'தி டென் கமாண்ட்மெண்ட்ஸ்' (THE TEN COMMANDMENTS) என்ற அவரது சமீபத்திய

திரைப்படத்தை, மெஹர் பாபா பார்த்ததாகவும், அதை அவர் மிகவும் விரும்புவதாகவும் எழுதியிருந்தார். மர்டில் பீச் மையத்தில் இருந்தபோது, டிமிலின் பதில் கடிதம் ஹரோல்டுக்கு அனுப்பப்பட்டது, அதில் அவர், 1932இல் ஹாலிவுட், மேரி பிக்ஃபோர்டின் இல்லத்தில் மெஹர் பாபாவை சந்தித்ததில் அவர் அடையப் பெற்ற பெரும் பாராட்டு மற்றும் பாக்கியம் பற்றி குறிப்பிட்டிருந்தார். 26ஆம் தேதி, ஹரோல்ட் இதைப் பற்றி நரிமனிடம் கூறவே, அவர் லகூன் கேபினில் இருந்த பாபாவிடம் கூறினார். பாபா, ஹரோல்டை வரவழைத்து, டிமில்லின் கடிதத்தைப் படிக்கச் சொன்னார். பாபா அதன் உள்ளடக்கத்தில் மிகவும் மகிழ்ச்சியடைந்தார்; பின்னர், ஹரோல்ட் ரட்டிடம் மறுநாள் முழுக் குழுவின் முன்னிலையில் அதைப் படிக்குமாறு கூறவே, இந்த நேரத்தில் அவர் அதைச் செய்தார்.

**"திரைப்படத்தின் முதல் பாதியை நான் மும்பையில் பார்த்தேன். இன்றைக்கு ஆண்களால் ஒரு நிகழ்ச்சி வழங்கப்பட உள்ளது. அவர்கள் என்னை சிரிக்க வைத்து, மகிழ்ச்சியாகப் பார்க்க விரும்புகிறார்கள்"** என்று பாபா கருத்துரைத்தார்.

மிக்கி ஃப்ளோர்ஷெய்ம் இவ்வாறு முறையிட்டார், "பாபா ஒரு நிகழ்ச்சியை பாதியிலேயே விட்டுவிட்டு சென்றுவிடுவார் என்பதை நாங்கள் அறிவோம், எனவே நாங்கள் அதை மிகவும் சுருக்கமாகச் செய்ய தீர்மானித்துள்ளோம். 'முதலை பார்வையாளர்களின் முதன்மையான பழங்கால வரிசையில்' (SUPREME AND ANCIENT ORDER OF ALLIGATOR WATCHERS) என்ற தொடருடன் தொடங்க விரும்புகிறோம். ஆண்கள் இறுதியில் அறிமுகப்படுத்தப்படுவார்கள், எனவே அவர் எப்படி வெளியேற முடியும்?"

**"இன்று காலை எலிஸபெத், கிட்டி இருவரும் என்னிடம், நேற்று பார்ன் கொட்டகையில் போதிய இடமின்மையால், பின்னால் நின்று கொண்டிருந்த பார்வையாளர்கள், வியர்வையில் நனைந்ததாகக் கூறினார்கள். அது உண்மையா?"** என பாபா வினவினார். **"வியர்வையுடன் நடனக் கலைஞர்கள் எப்படி நிகழ்ச்சியை நடத்த முடியும்? அவர்கள் என் மீதான அன்பினால் நடனமாடினார்கள். எனக்காக உஷ்ணத்தையும் வியர்வையையும் உங்களால் தாங்க முடியாவிட்டால், எப்படி உங்கள் கழுத்தை எனக்கு வழங்குவீர்கள்? எனக்கு ஒன்றும் புரியவில்லை! ஹாரி கென்மோர் நான் கூறுவதைக் கேட்டு மகிழ்ச்சியடைகிறார்."**

பாபா இருமிக்கொண்டே குறிப்பிட்டார்: **"எனக்குத் தொண்டை வலியாக உள்ளது** (ஜேன் ஹெய்ன்ஸின் இதயம் நடுங்கியது!), **ஆனால், இந்தப் பரிமாற்றம் எனக்கு அன்பின் மூலம் நிகழ்ந்ததால் நான் மகிழ்ச்சியடைகிறேன்."**

ஐரீன் கோனிபியரின் 'இன் க்வெஸ்ட் ஆஃப் ட்ரூத்' (IN QUEST OF TRUTH) புத்தகத்திற்காக எடுத்துரைத்த கருப்பொருள், ஆன்மீகம் மற்றும் தெய்வீகக் கண்ணோட்டங்களில் இருந்து வெளிவந்ததன் ஓர் அம்சமாக, பாபாவின் 'கருணை' (COMPASSION) குறித்த சொற்பொழிவு வாசிக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து பாபா, பின்வருமாறு கருத்துரைத்தார்:

**'கர்மவினை'யின் விதி செயல்படும் முறையைப் புரிந்துகொண்டால், இங்கு வழங்கிய விளக்கங்கள் முழு நிறைவானவை. இந்தியாவில், எனது மண்டலியிடம், "நான் இப்போது உடல் ரீதியாக, மன ரீதியாக உதவியற்றவன், அதே வேளையில் ஆன்மீக ரீதியிலும் உதவியற்றவன்" என்றேன்.**

**யுகத்தின் அவதார புருஷர், ஆன்மீக ரீதியில் எவ்வாறு உதவியற்றவராக இருக்க முடியும் என்பதை, மண்டலியால் புரிந்து கொள்ள முடியவில்லை. நேற்றிரவு, எரச் என்னிடம் கேட்டார்: "கடவுள், ஆன்மீக ரீதியில் உதவியற்றவராக இருப்பது எப்படி?" அவருக்கு நான் அளித்த விளக்கத்தை இப்போது மீண்டும் சொல்கிறேன்.**

**நான் அனைத்து சக்தியையும் உணர்ந்தவன், அனைத்தையும் அறிந்தவன். எனக்கு எல்லாம் தெரியும். என்னால் எதையும் - எல்லாவற்றையும் செய்ய முடியும் என்பதில், நான் உறுதியாக இருக்கிறேன். ஆனால் இந்த நேரத்தில், இப்போது, நான் எதுவும் செய்ய விரும்பவில்லை. நான் எனது சக்தியைப் பயன்படுத்தினால், பிரபஞ்சத்திற்காக நான் அனுபவிக்கும் துன்பத்தின் நோக்கம் நிறைவேறாது.**

**இயேசு, சர்வ வல்லமையுள்ளவராகவும், எல்லாம் அறிந்தவராகவும் இருந்தார். அவர் சிலுவையில் அறையப்பட வேண்டும் என்று அவருக்குத் தெரியும்; அதைத் தவிர்க்க, தனது சக்தியைப் பயன்படுத்தியிருக்க முடியும், ஆனால் அவர் அதைப் பயன்படுத்த விரும்பவில்லை. சிலுவையில் அறையும் அளவுக்கு அவர் தன்னை மிகவும் உதவியற்றவராக்கிக் கொண்டார்: 'என் கடவுளே, நீர் என்னைக் கைவிட்டீர்! ஏன்?' அவர் தனது சக்தியைப் பயன்படுத்த முடிந்திருக்கும், ஆனால் அவர் அதைப் பயன்படுத்த விரும்பவில்லை. அதுபோல தற்போது, எனக்கும் ஆன்மீக உதவியற்ற நிலை உருவாகியுள்ளது.**

**"ஹாரி, உங்களுக்குப் புரிகிறதா?"** கென்மோர் தலையசைத்தார்.

**"உங்களுக்குத் தெளிவாக இருந்தால், அது அனைவருக்கும் தெளிவாகப் புரியும்."** அதற்குப் பிறகு, பாபா, கென்மோரிடம் விளக்கம் கேட்டார். அவர் விளக்கவே பாபா சிரித்தார்.

பின்பு பாபா, சார்லஸ் பர்டமிடம் அதே கேள்வியைக் கேட்க, அவர் கூறினார், "இயேசுவிற்கும் பாபாவிற்கும் கர்மவினை என்பது இல்லை; அவர்கள் ஆண்மகன்களாகத் இருக்கத் தீர்மானித்தனர்." பாபா அவருடைய பதிலை விரும்பி, தொடர்ந்து கூறினார்:

**ஒரு பரிபூரண குருநாதர் கூறியதை, ஹ∴பீஸ் மேற்கோள் காட்டுகிறார்: "நான் எனது நண்பனைக் கொன்றேன், என் எதிரிக்கு ஊட்டமளித்து வளர்த்தேன். பரிபூரண குருநாதர் ஒருவர், ஏன் இதைச் செய்கிறார் அல்லது அப்படிச் சொல்கிறார் என்று கேட்க கடவுளுக்குக் கூட அதிகாரம் இல்லை." இதை விளக்க, நான் இன்னும் பல நாட்கள் இங்குத்**

**தங்கியிருக்க வேண்டும்! அது ஆழமான அர்த்தத்தை உள்ளடக்கியது. நீங்கள் கஷ்டப்படும்போது, கவலைப்படாதீர்கள். "இது பாபாவின் அருள்" என்று கூறுங்கள். அப்போது உங்கள் அன்பில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.**

**இப்போது, உங்களுக்கு என்ன வேண்டும்? மேலும் ஒரு சொற்பொழிவா, இசையா அல்லது நகைச்சுவையா? தனிப்பட்ட முறையில், எனக்கு நகைச்சுவைகள் வேண்டும், ஆனால் உங்கள் விருப்பப்படியே செய்வோம். ஒவ்வொரு மாயையான சூழ்நிலையிலும் நீங்கள் அனைவரும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.**

**"உங்களால் நான் கூறுவதைப் பின்பற்ற முடிகிறதா, ஹாரி?"** கென்மோர் மீண்டும் தலையசைத்தார்.

பாபா இவ்வாறு கூறி முடித்தார், **"நீங்கள் என்னை நேசிக்காதபோது நான் மகிழ்ச்சியாக இல்லை!"**

குறிப்பாக, சகவாசத்திற்காக 'ஹீத்கிட்' (HEATHKIT) இசைப் பதிவு தட்டை உருவாக்கிய ஒரு பெண்மணி, பாபாவிடம் கேட்டார், "இந்தியாவின் 'அன்பின் அழைப்பை' (INDIAN LOVE CALL) நீங்கள் கேட்க விரும்புகிறீர்களா?"

**"எந்த அழைப்பாக இருந்தாலும்!"** பாபா கேலி செய்தார்; **"அல்லது, வேறு ஏதாவது அழைப்பிற்காக வெளியே செல்ல விரும்புகிறீர்களா?"** அதாவது கழிப்பறை அழைப்பு போன்றவை....

'பிகின் தி பிகீன்' (BEGIN THE BEGUINE) பாடல் இசைக்கப்பட்டது (ஒரு ஜெட் விமானம் மேலே பறப்பது போன்ற ஒலி பாடலின் முடிவில் உச்சரிக்கப்பட்டது) 'பின்னர் அவர் முழு உலகையும் கையில் எடுத்தார்' (HE'S GOT THE WHOLE WORLD IN HIS HANDS) என்ற வரி பாடப்பட்டது. மரியோ லான்ஸா (MARIO LANZA) என்பவரால் பாடப்பட்ட இந்த 'பிகின் தி பிகீன்' பதிவைக் கேட்டு பாபா **"அவருடைய குரல் எனது செவிகளுக்கு இதமாக இல்லை"** என்று குறிப்பிட்டார்.

**'மாயா'** (MAYA) பற்றிய ஒரு சொற்பொழிவு மற்றும் **'ஒளிவட்டம் & முழு ஒளிவட்டம்'** - 'தி ஆரா அண்ட் தி ஹேலோ' - 'THE AURA AND THE HALO' (இரண்டும் ஐரீன் கோனிபியருக்கு வழங்கப்பட்டது) டான் ஸ்டீவன்ஸால் வாசிக்கப்பட்டது. பாபா அதை விளக்கிக் கூறினார்:

**நான் நிலைகொண்டிருக்கும் என் உண்மையான ரூபத்தைப் பார்க்காதவரை, நீங்கள் அனைவரும் குருடர்கள். இதைத்தான் 'மாயா' பற்றிய இந்த சொற்பொழிவின் மூலம் நான் சொல்கிறேன். 'மேற்கத்தியர்கள் ஆன்மீக நாட்டம் மிக்கவர்கள், அவர்கள் கிழக்கத்தியர்களை விட ஆன்மீக புரிதல் கொண்டவர்கள்' என்று ஐரீன் கோனிபியர் என்னிடம் கூறினார். அவர் கூறுவது சரிதான் என்றேன். கிழக்கத்திய மக்களுக்கு ஆன்மீகப் புரிதல் குறைவு, ஆனால் அவர்களுக்கு அதிக அன்பு உள்ளது. நிச்சயமாக, ஐரீன் இதைக்கேட்டு மகிழ்ச்சியடையவில்லை. எனவே, நான் அவருக்கு ஒரு விளக்கத்தை உருவாக்க வேண்டியிருந்தது. பின்னர் அவர் மகிழ்ச்சியடைந்தார், அதனால் கடவுளும் மகிழ்ச்சியாக இருக்கிறார்!**

**ஒன்றை மட்டும் நினைவில் கொள்ளுங்கள்; அதைப் பின்பற்ற முயற்சி செய்யுங்கள், இது மிகவும் புதியது மற்றும் கடினமானது. அனைத்தும் உங்களுக்குள் உள்ளது என்று ஏன் சொல்கிறேன்? அது மேலேயோ கீழேயோ இல்லை. உணர்வு நிலையில் மட்டுமே வேறுபாடு உள்ளது. உதாரணமாக, எறும்பு ஒன்று இங்கே பார்ன் கொட்டகையின் தரையில் நகர்கிறது. இது சுதந்திரமாக, சுறுசுறுப்பாக உள்ளது. நீங்கள், இங்கே அதே தளத்தில் செயல்களைச் செய்கிறீர்கள்; ஆனால் உங்களுடன் ஒப்பிடும் போது எறும்பின் உணர்வு மிகச் சிறியது. ஜெட் விமானங்கள் கொட்டகையின் மீது பறப்பதை நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். ஆகாய விமானங்கள் மற்றும் பல விஷயங்களைப் பற்றியும் உங்களுக்குத் தெரியும். ஆனால் உங்களுடன் ஒரே தளத்தில் இருக்கும் எறும்புக்கு விமானங்களைப் பற்றி எதுவும் தெரியாது. எறும்பின் அனுபவத்திற்கும், உங்கள் அனுபவத்திற்கும் இடையே உள்ள வித்தியாசம் மிகவும் பெரியது, இருப்பினும் நீங்கள் இருவரும் ஒரே பௌதீகத் தளத்தில் இருக்கிறீர்கள். அதேபோல், உங்கள் அனுபவத்திற்கும் எனது அனுபவத்திற்கும் இடையே உள்ள வேறுபாடு, உங்களுக்கும் எறும்புக்கும் உள்ளதைப் போன்றது. நாம் இங்கே ஒரே அறையில் ஒரே தரையில் ஒன்றாக இருக்கிறோம், ஆனால் எனக்கு நீங்கள் எறும்புகள் தோன்றுவது போலவே தோன்றுகிறீர்கள்.**

பாபாவின் வேண்டுகோளுக்கு இணங்க, ஹாரி கென்மோர் ஒரு நகைச்சுவை துணுக்கை எடுத்துரைத்தார், இது பாபாவையும் அனைவரையும் மனதார சிரிக்க வைத்தது. மதியம் 1:30 மணி வரை, லகூன் கேபினில் இருப்பதாக பாபா அறிவித்தார். “**ஜன்னல்களில் திரை மூடியிருக்கும். நான் உங்களை அழைக்கலாம், அழைக்காமலும் இருக்கலாம்,**” என்று அவர் கூறினார்.

லகூன் கேபினுக்கு அழைக்கப்பட்டவர்களில் மேக்ஸ் மற்றும் கிஸேலா ஹெஃப்லிகர் இருவரும் அடங்குவர். டாக்டர் நீலுவை பாபா நினைவு கூர்ந்தார்; மேக்ஸ், நீலுவுடன் எவ்வளவு நெருக்கமாக இருந்தார் என்று குறிப்பிட்டார். அப்போது பாபா, “**மேக்ஸ், நீங்கள் மண்டலியில் ஒருவர். அதை எப்பொழுதும் நினைவில் கொள்ளுங்கள். இனிமேல் என்னை நீங்கள் பார்க்க மாட்டீர்கள். இதுவே எனது இறுதி மேற்கத்திய பயணம். நீங்கள் இருவரும் இங்கு வந்தது நல்லது**” என்றார். பாபா தனது இரு கன்னங்களில் முத்தமிட மேக்ஸை அனுமதித்தார். பின்னர் அவர் மேக்ஸ் மற்றும் கிஸேலாவின் தலைகளை ஒன்றாக இணைத்து, ஒரு மென்மையான தழுவலுடன் அவரது நெற்றியை இருவருக்கும் இடையே வைத்தார்.

பிற்பகலில், பார்ன் கொட்டகையில் ஆடவர்கள், பாபாவிற்காக நிகழ்ச்சி ஒன்றை நடத்தினர். பாபாவை அவரது தூக்கு நாற்காலியில் அமர வைத்து, உள்ளே அழைத்துச் சென்றதும், அனைவரும் ‘மெஹர் பாபாவிற்கு ஜெய்’ என்று கோஷம் எழுப்பினர், பின்னர் ‘ஹெயில், ஹெயில் தி கேங்ஸ் ஆல் ஹியர்’ (HAIL HAIL THE GANG’S ALL HERE) என்று பாடினர், அதைத் தொடர்ந்து லியோனார்ட்

வில்லோபி (LEONARD WILLOUGHBY) 'வென் தி ஸெயின்ட்ஸ் கோ மார்ச்சிங் இன்' (WHEN THE SAINTS GO MARCHING IN) என்ற பாடலைப் பாடினார். நிகழ்ச்சிகளின் பொறுப்பாளராக இருந்த மிக்கி ஃப்ளோர்ஷெய்ம், பாபாவிற்கு ஒரு மத்தளம் இசைக்கும் பொம்மை முதலையை பரிசாக வழங்கினார்; பென் ஹேமன் அவருக்கு ஒரு பெரிய, பஞ்சினால் நிரப்பப்பட்ட முதலையை வழங்கினார். ஹாரி கென்மோர், ஹரோல்ட் ரட் இருவரும், ஒரு புதிய நடிகர் (ஹரோல்ட்) மற்றும் அவரது நாடகப் பயிற்சியாளர் (ஹாரி), ஜூலியஸ் ஸீஸரின் (JULIUS CAESAR) ஒரு காட்சியை ஒத்திகை பார்ப்பதைப் பற்றிய நாடகம் ஒன்றை நிகழ்த்தினர். அதைத் தொடர்ந்து, லியோனார்ட் 'அவர் முழு உலகையும் தமது கைகளில் அடக்கியுள்ளார்' (HE'S GOT THE WHOLE WORLD IN HIS HANDS) என்ற பாடலைப் பாடினார்.

டேனா ஃபீல்டிற்கு ஒரு குழந்தையைப் போல் உடை அணிவித்து, சக்கர வண்டி ஒன்றில் வைத்து தள்ளிக்கொண்டே, லேலண்ட் டி லாங் (LELAND DE LONG) உள்ளே நுழைந்தபோது, பாபா சிரித்தார். மேக்ஸ் ஹெஃப்லிகர் ஓர் அவசர 'மனப்படிவங்களின்' அறுவை சிகிச்சை செய்யவிருக்கும் நோயாளியாக நடித்தார். 'புற்றுநோய் கட்டி' (காற்றடைக்கப்பட்ட ஒரு பெரிய பலூன்) வெடிக்கும் வரை அறுவை சிகிச்சை நிபுணர் நோயாளியின் வயிற்றிலிருந்து மனப்படிவங்களைக் குறிக்கும் காகிதச் சங்கிலிகளை வெளியே எடுத்துக்கொண்டிருந்தார். தூங்கிக் கொண்டிருந்த பென் ஹேமனை எழுப்ப, மிக்கி ஃப்ளோர்ஷெய்ம் விசில் அடித்துக் கொண்டே இருந்தபோது, பாபா அவரது கன்னங்களைத் தட்டி, "**இன்று நான் சிரித்தது போல் இந்த அவதார காலகட்டத்தில் நான் சிரிக்கவில்லை**!" என்றார்.

சார்லஸ் பர்டம் மற்றும் பலர், சில நகைச்சுவையான கதைகளை விவரித்தனர். சார்லஸின் கதை ஒரு பேரழிவு நிகழ்வின் பின்விளைவுகளை உள்ளடக்கியது. "இரண்டு குரங்குகள், ஓர் ஆண் மற்றும் ஒரு பெண் தவிர, பூமியில் வேறு எதுவும் இல்லை," என்று அவர் கூறினார். ஆண் குரங்கு, பெண் குரங்கின் பக்கம் திரும்பி, "நாம் முழு விஷயத்தையும் மீண்டும் தொடங்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன்!" என்றது.

நிகழ்ச்சி நிறைவடைந்ததும், பாபா, "**இன்றைய நடிப்பு, எனது அடுத்த அவதார காலகட்டத்தில் நான் இழக்கப்போகும் சில விஷயங்களில் ஒன்றாகும்**!" அவர் அனைத்து கலைஞர்களையும் உதவியாளர்களையும் அரவணைத்தார். சில மனிதர்கள் பாபாவின் முன் கண்கலங்கி, மண்டியிட்டு பாபாவின் அரவணைப்பைப் பெறவே, அவர்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்தனர்.

'பிகின் தி பிகீன்' (BEGIN THE BEGUINE) பாடல் ஒலிபரப்பப்பட்ட போது, ஹென்றி கஷௌட்டி 'டிராம்போன்' (TROMBONE) இசைக் கருவியை வாசித்துக் கொண்டிருந்தார்; அவர் தனியாகப் பின்னணி இசையை இசைத்துக் கொண்டிருந்த போது, பாபாவின் முகம் ஒரு விசித்திரமான, ஆழமான காட்சியை வெளிப்படுத்தியது. அது பளிங்கு கல் போல் அசையாமல் காட்சியளித்தது, மனிதகுலத்தின் மீதான ஒட்டுமொத்த அக்கறையும் அவரது முக பாவனைகளில் பொறிக்கப்பட்டிருந்தது போல தோன்றியது. முழு இசைக்குழுவும் இசைப்பதை

நிறுத்திய போதும், பாபா தனது உள் பணியைச் செய்து கொண்டிருந்தது வெளிப்படையாகத் தெரிந்ததால், அவரும் இசைப்பதை நிறுத்த வேண்டுமா என்று ஹென்றி ஒரு கணம் யோசித்தார். அறையில் முழுமையான நிசப்தம் நிலவியது, ஆனால் ஹென்றி அவரது இசையை நெடுநேரம் தொடர்ந்து முடித்தார்.

ஹென்றி, பாபாவின் அரவணைப்பைப் பெற்றுக்கொள்ள வந்த வேளையில், பாபா அவரது டிராம்போனை சைகையால் காட்டி, "**அருமை**!" என்று தெரிவித்து, ஹென்றியின் இரு கன்னங்களிலும் முத்தமிட்டார்; தொடர்ந்து டிராம்போனை இசைத்ததன் மூலம் அவர் சரியாக சிந்தித்ததாகக் குறிப்பிட்டார்.

திடீரென பாபா, பார்ன் கொட்டகையை விட்டு வெளியேறிய வேளையில், அவரது மனநிலையில் மீண்டும் மாற்றம் தென்பட்டது. அவர் முகத்தில் ஒரு சோகம் தோன்றியது, அவரது கண்கள் தொலைதூரத்தை நோக்கியது. "ஏதோ ஓர் உள் நிகழ்வு திடீரென அவரைத் தாக்கியது போல் இருந்தது" என்று மேக்ஸ் பின்பு மணிக்கு எழுதியிருந்தார். ஒருவேளை அது அந்த நேரத்தில் ஃபிரான்ஸ் நாட்டில் நடந்த அரசியல் நெருக்கடியுடன் தொடர்புடையதாக இருக்கலாம், இது அரசாங்கத்தின் வீழ்ச்சிக்கு வழிவகுத்தது. அனிதா வியய்யார்ட் (ANITA VIEILLARD), மற்றும் ஜீன் ஸெப்ருன் - JEAN CEBRUN (இருவரும் ஃபிரெஞ்சுக்காரர்கள்) பாபாவின் இருபுறமும் நின்று கொண்டிருந்தனர். அனிதா, பாபாவிடம், "தயவுசெய்து, ஃபிரான்ஸ் மேலும் துன்பத்தில் ஆழ்ந்திருக்க அனுமதிக்க வேண்டாம்; அவள் ஏற்கனவே, இரண்டாவது உலகப்போரில் அதீத துன்பங்களை அனுபவித்து விட்டாள்" என்றார்.

பார்ன் கொட்டகையில் அனைவரும் அமைதியாக இருந்த அவ்வேளையில், பாபா நாற்காலியில் அமர்ந்தார். அவரது தூக்கு நாற்காலியில் பாபா அமர உதவியபோது, மீண்டும் அவர் சிறிது நேரம் அங்கிருந்து தன்னை நகர்த்த அனுமதிக்கவில்லை. அனைவரும் அப்படியே நின்றனர். பின்னர் அவர் பார்ன் கொட்டகையிலிருந்து வெளியே அழைத்துச் செல்லப்பட்டு, படிகளில் இறங்கி, சில நிமிடங்கள் அங்கேயே அசையாமல் இருந்தார். மீண்டும் அனைவரும் அப்படியே நின்று பார்த்துக் கொண்டிருந்தனர்.

லகூன் கேபினில், பாபா வெளியே அமர்ந்து, தனது உலகளாவிய பணியைத் தொடர்ந்தபோது, அவரது விரல்கள் வேகமாக நகர்ந்தன. அன்பர்கள் அனைவரும் அமைதியாக அவரைச் சுற்றி சிலைபோல நின்றனர். சுமார் பத்து நிமிடங்களுக்கு அவர் தனது உள் பணியைத் தொடர்ந்தார். இந்த நேரத்தில் டார்வின் ஷாவின் மகள் லீட்ரைஸ் ஒரு அசாதாரண அனுபவத்தை அடையப் பெற்றார்:

'நான் அனைவருக்கும் பின்னால் சிறிது தூரத்தில் இருந்தேன், பாபாவைப் பார்க்க நான் சற்று சாய்ந்தபோது, பாபா என்னைப் பார்த்தார்; அவருடைய கண்கள் என் முன்னால் இருப்பது போல தோன்றியது. அந்த கணத்தில், பாபா யாராக இருந்தாலும், எந்தக் கடவுளாக இருந்தாலும், 'அவர் அந்த மனிதரே' என்ற ஓர் அதிர்ச்சியைக் கொடுத்தது; அந்த உளதாயிருக்கும் கடவுள்; நான் உள்வாங்க

முயற்சித்த ஓர் உண்மையான உடல் அதிர்ச்சி போல் இருந்தது. இது மிகவும் வலுவான அனுபவமாக இருந்தது.'

அதற்குப் பிறகு, பாபா காரில் விருந்தினர் மாளிகைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அவர் காரை விட்டு இறங்கியதும், அவருக்காக ஒரு நாற்காலி அவசரமாக கொண்டு வரப்பட்டது. வெளியே அமர்ந்து, அவர் தனது இல்லத்திற்கு அழைத்துச் செல்லப்படுவதற்கு முன்பு, சுமார் ஏழு நிமிடங்கள் அமைதியாகவும், அதீத தீவிரமாகவும் தனது பணியைத் தொடர்ந்தார்.

அன்று நெட் ஃபுட், நரிமனை வில்மிங்டன் நகருக்கு, பயணச்சீட்டில் மாற்றம் செய்வதற்காக அழைத்துச் சென்று, இருவரும் இரவு 7:00 மணிக்குத் திரும்பி வந்தனர்.

தினமும் காலையில், எல்லா வின்டர்ஃபெல்ட், லீட்ரைஸ், பிலி ஈட்டன் மூவரையும் டார்வின் ஷா, பாபாவின் இல்லத்திற்கு, சுத்தம் செய்வதற்காக காரில் அழைத்துச் சென்றார். ஒவ்வொருவருக்கும் தனித்தனி கடமைகள் இருந்தாலும், அவர்கள் பாபாவின் படுக்கையறைக்குச் சென்று, ஒன்றிணைந்து அவரது படுக்கையை சீர்செய்தனர். ஒவ்வொரு நாளும், அவர்கள் தங்களுடைய பணியை எவ்வளவு விரைவாக முடிக்க முடியுமோ, அவ்வளவு விரைவில் முடித்து, பாபா, காலை நிகழ்ச்சிகளுக்கு செல்வதற்கு முன்னர், அவரது காலடியில் அமர முயன்றனர். பாபா முன்வாசல் வழியாகச் செல்லும் போது, அவர்களின் பணி முடியாத பட்சத்தில், அனைவரும் பின்புறம் விரைந்து சென்று, அவர் காரில் செல்லும் வேளையில் அவரை நோக்கி கைகளை அசைத்தனர்.

1958 மே 28 புதன்கிழமை காலை புறப்படுவதற்கு முன்பு, பிலி, எல்லா, லீட்ரைஸ் மூவரிடமும் பாபா, **"நாளை, நாம் கடற்கரைக்குச் செல்லலாம். முடிந்தவரை என்னருகில் நெருக்கமாக இருப்பது மிகவும் முக்கியம்"** என்று தெரிவித்தார். பாபா கூட்டத்துடன் இருக்கும் வேளையில், பிறருக்கு மத்தியில், சிரமப்பட்டு அவரை நோக்கி விரைந்து செல்லும் வகையைச் சார்ந்தவர் அல்ல என்பதால், இந்த அறிவுறுத்தல் தனக்கானது என்று லீட்ரைஸ் உணர்ந்தார்.

காலை 9:50 மணிக்கு பாபா, பார்ன் கொட்டகைக்குள் நுழைந்தார். அப்போது அவர் கூறியதாவது:

**மிக உயர்ந்த ஆன்மீக அனுபவம், ஏக இறைவனின் ஒருமைப்பாட்டை நிலைநாட்டுவது; மேலும், மிக உயர்ந்த ஆன்மீக நிலை என்பது, இருமைத் தன்மையில் ஒற்றுமையை வெளிப்படுத்துவது. ஒருமைத் தன்மை என்று கூட சொல்ல முடியாத ஏக இறைவனின் ஒருமைப்பாட்டின் அனுபவமே மிக உயர்ந்த அனுபவம். மிக உயர்ந்த ஆன்மீக நிலை என்பது, இருமையில் ஒற்றுமையை வெளிப்படுத்தும் பரிபூரண குருநாதர்களின் நிலையாகும். அவர், கடவுளுடன் ஐக்கியமான பின்னர், எல்லா உயிர்களின் மீதான அன்பின் நிமித்தம், கடவுளை பூமிக்குக் கொண்டுவருகிறார்.**

**இன்று நான், உலகெங்கிலும் உள்ள என் அன்பர்களை, உடல்ரீதியாக இங்கு இல்லாத அனைவரையும், இந்த நிமிடம் வரை மன்னிக்குமாறு, கடவுளின் எல்லையற்ற கருணையில் வேண்டிக்கொள்கிறேன்.**

ஹாரி கென்மோர் மனம் வருந்தி மன்னிப்பு கோரும் இரங்கல் பிரார்த்தனையை மொழியும் போது, பாபா அனைவரையும் அமர்ந்திருக்குமாறு கேட்டுக் கொண்டார். அப்போது அவர் கூறியதாவது:

**ஹஃபீஸ் மிக அருமையாகச் சொல்கிறார், அதுதான் உண்மை: 'பரிபூரண குருநாதர்கள் தூசியை பொன்னாக மாற்றுவதில்லை, ஆனால் தொட்டதெல்லாம் பொன்னாகும் ஒரு தொடுகல்லாக** (TOUCHSTONE) **மாற்றுகிறார்.'**

**இதன் அர்த்தம் என்னவெனில், பரிபூரண குருநாதர்கள் படிக்கட்டின் கீழ் நிலையில் இருப்பவர்களை, ஒரே பார்வையில் (நஸர்,** NAZAR) **மிக உயர்ந்த நிலைக்குக் கொண்டுவர முடியும். நஸர் என்றால் பார்வை என்று பொருள். ஒரு குருநாதர் விரும்பினால், அவர் இங்கே பார்ன் கொட்டகையில் அமர்ந்திருக்கும் வேளையில், இந்தியாவில் இருக்கும் ஒருவருக்கு இறை உணர்வை வழங்க விரும்பினால், அவருடைய ஒரே ஒரு பார்வை போதுமானது. ஹஃபீஸ் மேலும் கூறுகிறார், 'ஆனால் அத்தகைய பரிபூரண குருநாதர், என்னை எப்போதாவது பார்ப்பாரா என்ற கேள்விக்குறியோடு இருக்கிறேன். நான் அவரை மிகவும் நேசிக்கிறேன், ஆனால் அவரது கடைக்கண் பார்வையேனும் கிடைக்காதா என்ற அச்ச உணர்வில் நான் இருக்கிறேன்.'**

**இன்று, மதியம், 2:00 முதல், 3:00 மணி வரை, ஆடவர்கள் என் இல்லத்திற்கு வந்து, அதைப் பார்வையிடவும், இறுதியாக ஆரத்தழுவி பிரசாதத்தை அடையப் பெறவும் வேண்டும் என்று நான் விரும்புகிறேன். நாளை எனக்கு விடுமுறை. எனக்கு விடுமுறை என்றால் அதிக வேலை. நாளை மறுநாள், விமான நிலையத்திற்குச் செல்பவர்கள், அதிகாலை 3:00 மணிக்கு எழுந்திருக்க வேண்டும்; காலை 5:35க்கு புறப்படத் தயாராக இருங்கள் என்கிறார் நெட் ஃபுட். நானும் மண்டலியும் அதிகாலை 3:00 மணிக்கு எழுந்து விடுவோம், எனவே நாளை பெட்டி, பைகளை நிரப்பும் பணி. எரச், எந்நேரமும் என்னுடன் லகூன் கேபினிலும், நள்ளிரவு வரை என் இல்லத்திலும் இருக்கிறார். அவர் அனுதினமும் காலை 5:00 மணிக்கு எழுந்துவிடுவது வழக்கம். ஆனால் நாளை அவர் சுதந்திரமாக இருக்கிறார். குழுவில் உள்ள அனைவரும் விமான நிலையத்திற்குச் செல்வதாக கிட்டி என்னிடம் கூறுகிறார். இது தேவையா? பெண்மணிகள் மட்டுமா அல்லது அனைவரும் செல்கிறார்களா?**

"அனைவரும், பாபா!" கிட்டி கூறினார்.

**ஹாரி (மிக்கி) ஃப்ளோர்ஷெய்ம், பென்னுக்காக, ஏழு முறை விசில் அடிக்க வேண்டும் என்பதே இதன் பொருள்! பென், அதிகாலை 3:00 மணிக்கு எழுந்திருங்கள்; ஹாரி உங்களை எழுப்புவார்! இன்று நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன் - மிக்க மகிழ்ச்சியாக இருக்கிறேன். மெஹராபாத் சகவாசத்தை ஒப்பிடுகையில், இங்கு நான், என் அன்பை அதிகம் வழங்கினேன் என்று மெஹராவிடம் தெரிவிக்க நரிமன், இன்று காலை, கோஹெருக்குக் கடிதம்**

**எழுதினார். இது உண்மை. இங்கு உங்களுக்காக அதிக நேரத்தை செலவிடுகிறேன் என்கிறார் எரச்.**

**மெஹரா என்னை மிகவும் நேசிக்கிறார். நான் நேசிக்கப்பட வேண்டிய விதத்தில் அவர் என்னை நேசிக்கிறார். அவர் கிட்டிக்கு ஓர் ஈரடி மராட்டி கவிதையை எழுதியுள்ளார். இன்று காலை, அனைவருக்காகவும், எனது முன்னிலையில் இதை வாசிப்பதற்காக அவர் கேட்டுக்கொள்ளப்பட்டதாக, கிட்டி என்னிடம் கூறினார்: "ஓர் அன்பன் என்ன செய்ய வேண்டும்?" சத்குரு ராம்தாஸ் தனது பக்தர்களுக்காக வரைந்த ஈரடிக் கவிதை. ராம்தாஸ், துக்காராம் இருவரும் ஒரே காலத்தில் வாழ்ந்த குருநாதர்கள்.**

கிட்டி வாசித்த ஈரடிக் கவிதையை ஆதி பாடலாகப் பாடினார். அதன் மொழிபெயர்ப்பு (மெஹரா, பாபாவின் பெயரையும் இணைத்து எழுதியது) இதோ!

உங்கள் சகவாசத்தால் நான் எப்பொழுதும் ஆசீர்வதிக்கப்படுவேன்.
எனது வாழ்க்கையின் ஒவ்வொரு கணமும்,
உங்கள் சகவாசத்தை நான் விரும்புகிறேன்,
உங்கள் காரணத்திற்காக மட்டுமே இந்த
உடலை தியாகம் செய்ய வேண்டும்.
எல்லையில்லா எம்பெருமானே, நீங்கள்
எல்லையற்ற பண்புகளைக் கொண்டுள்ளீர்கள்,
என்னிடம் அலட்சியமாக இருக்காதீர்கள்!

ஓ மெஹர் பாபா, குருநாதர்களின் குருவானவரே!
இந்தக் கடைசி ஆசையைத் தவிர,
நான் வேறு எதுவும் கேட்கவில்லையே!
நான் கடவுளையோ, கடவுளை உணர்தலையோ கேட்கவில்லையே.
தயவு செய்து என்னிடம் அலட்சியமாக இருக்காதீர்கள்!

அதன் அர்த்தத்தை விளக்கிய பிறகு, பாபா இவ்வாறு கூறினார், **"எல்லோரும் நாளை அருகாமையில் இருக்கும் நகருக்குச் செல்லலாம், ஆனால் என்னுடன் எதுவும் உறுதியாகச் சொல்ல முடியாது. நான் லகூன் கேபினுக்கு வரலாம் அல்லது நான் வராமலும் இருக்கலாம். நான் அந்த பொம்மை முதலையுடன் விளையாடலாம்! நான் இங்கே கேபினுக்கு வந்தால், எரச் என்னுடன் வரமாட்டார்; எனது வார்த்தைகளை எடுத்துரைக்க எவரும் இருக்க மாட்டார்கள், என்னைப் பார்த்துக் கொண்டிருங்கள், என்னுடனே அமர்ந்திருங்கள், நான் வரவே மாட்டேன் என்று அர்த்தமல்ல, வலிமையானவர்களை நான் கேட்கலாம், என்னை கடற்கரைக்கு அழைத்துச் சென்று, ஐந்து நிமிடங்கள் அங்கேயே இருக்கலாம். என்னுடன்** (நாளை) **நிலையான நிகழ்ச்சி எதுவும் கிடையாது."**

சமீபத்தில் வந்திருந்த எலிஸபெத்தின் மருமகன் ஹாரி ஹார்ட்ஷோர்ன் பக்கம் திரும்பிய பாபா, **"அவர் என் மீது கொஞ்சம் அன்பு வைத்திருக்கிறார்.**

**நான் அவரை அதிகமாக நேசிக்கிறேன். ஒருவேளை, ஒருநாள் அவர் என்னை மேலும் அதிகம் நேசிப்பார்."**

**"இனி எவரிடமிருந்தும் பாராயணம் இல்லை. டான், நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?"** குழந்தைகளை நோட்டமிட்டுக் கொண்டிருந்த டான் ஸ்டீவன்ஸ், ஒரு சிறுமியின் தலைமுடி மிகவும் சுருளாக இருப்பது குறித்து யோசித்ததாக பதிலளித்தார்.

பாபா கேலி செய்தார், **"'கடவுளின் தலைமுடி மற்றும் தலை'** (THE HAIR AND THE HEAD OF GOD) **பற்றிய சொற்பொழிவை நீங்கள் மறக்கவில்லை போலும்!**

**"இன்று மதியம் என் இல்லத்தில், ஆண்கள் மகிழ்ச்சியாக இருந்தால், சிறுவர்களை வர அனுமதிக்கிறேன். அவர்களுடன் நான் மிகவும் மகிழ்ச்சியாக உணர்கிறேன். பென் என்ன சொல்கிறீர்கள்?"** (பென் இணக்கம் தெரிவித்தார்.) பென், 'ஆம், அவர்கள் வரலாம்' என்றார்.

**"நேற்று இரவு, எவரும் ஒற்றையடி பாதை வழியாக** (விஷ பாம்புகள் காரணமாக) **செல்ல வேண்டாம் என்று தொலைபேசி மூலம் எச்சரிக்க, நரிமனிடம் கேட்டுக்கொண்டேன்."**

அதைச் செய்ய மறந்துவிட்டதாக நரிமன் கூறினார். பாபா இவ்வாறு எடுத்துரைத்தார்:

**அற்புதம்! இது நரிமனின் தவறல்ல. வில்மிங்டன் நகருக்குச் சென்று, நேற்றைய நிகழ்ச்சியை அவர் தவறவிட்டதே இதற்குக் காரணம். ஒற்றையடி பாதைகளில், கும்மிருட்டில், அங்கும் இங்கும் நகர வேண்டாம் என்பதை நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன். பாம்பைக் கண்டால் பயப்பட வேண்டாம். பாபாவின் பெயரை மீண்டும் மீண்டும் மொழியுங்கள், அது கடித்தால் நீங்கள் பதற்றமடைய வேண்டாம். "பாபா!" என்று உங்கள் முழு இதயத்துடன் சொல்லுங்கள்.**

**இப்போது எனக்கு ஒன்று நினைவுக்கு வருகிறது. நேற்று, என் இல்லத்தில் கிட்டி, மார்கரெட், எலிஸபெத் ஆகியோரிடம், ஒருமுறை மெஹராபாத்தில் நடந்ததை எடுத்துரைத்தேன். ஆன்மீகக் காட்சிகள், அனுபவங்கள் மற்றும் எனது பிரசன்னத்தை உணரும் கைக்கோபாத்தைப் பற்றி நான் அவர்களிடம் கூறினேன். அவர் மெஹராஸாத்தில் எப்பொழுதும் என்னுடன் இருக்கிறார். நான் வேறு இடங்களுக்குச் செல்லும்போது, அவர் என்னுடன் இணைகிறார், அவருடைய குடும்பத்தினர் மெஹராபாத் மேல்மலையில் தங்குகிறார்கள். பதினேழு ஆண்டுகள் கடந்துவிட்டன, அவர்கள் எப்பொழுதும் மேல்மலையில் வாழ்ந்து, தங்கள் சொந்த விவகாரங்களைக் கையாளுகின்றனர். அவர்கள் செய்யும் ஒரே காரியம், பாபாவை நேசிப்பதுதான். அங்கே இன்னுமொரு பெண்மணி இருக்கிறார், அவர் பெயர் மணி. ஆனால் பல 'மணி'கள் இருந்ததால் நான் அவரை மன்ஸாரி என்று அழைத்தேன். கிட்டி, எலிஸபெத், டிலியா அவரை அறிவார்கள்.**

பாபாவின் வேண்டுகோளுக்கு இணங்க, எலிஸபெத் கதையை விவரித்தார்: "பாம்புகள் மனித மூச்சை உள்ளிழுப்பதில் மகிழ்ச்சியடைகின்றன. பல ஆண்டுகளுக்கு முன்பு, பாபா மன்ஸாரியிடம், கொள்ளையர்களிடமிருந்து பாதுகாக்க ஒரு கழியைக் கொடுத்தார், அப்போது அவர் கூறினார், 'பாபா, முழு கிராமமும் உங்கள் காலடியில் வணங்குகிறது; அவர்கள் ஆசிரமத்திற்குள் காலடி எடுத்து வைக்கத் துணிய மாட்டார்கள்."

பாபா தொடர்ந்தார்: "**மன்ஸாரி ஒரு பதட்டமான வகையைச் சார்ந்தவர் அல்ல. அவர் ஒரே ஒரு விஷயத்தைத் தவிர, வேறு எதற்கும் அஞ்சுவதில்லை. பாம்புகளைக் கண்டால் மட்டுமே அஞ்சுகிறார்! ஓர் இரவு அவர் விழித்த போது, அவர் மார்பில் ஒரு நாகப்பாம்பு இருந்ததைக் கண்டார். அவர் கண்கள் அதை சந்தித்தன. எப்பொழுதுமே நான் அவரை எச்சரித்தேன், சிரமங்கள் அல்லது அவசரநிலைகளில், எனது பெயரை, முழு மனதுடன் மீண்டும் மீண்டும் உச்சரிக்க வேண்டும்; ஆனால் அவர் அச்சத்தில் உறைந்துபோனார்; ஏறக்குறைய ஐந்து நிமிடங்கள் எதுவும் சொல்ல முடியவில்லை; பின்னர் அவர் கழியை எடுத்து, எனது பெயரை மொழிந்து, பாம்பை அறைந்து, படுக்கைக்கு வெளியே தள்ளினார்; ஆனால், நாகப்பாம்பு, மீண்டும் படுக்கையில் ஊர்ந்து செல்வதை அவர் பார்க்கவே, எனது பெயரை மீண்டும் மொழிந்து, கழியால் அதைக் கொன்றார்; இரண்டு நாட்களுக்குப் பின்னரும் அவர் நடுங்கிக்கொண்டிருந்தார், அடுத்த முறை என்னைப் பார்த்தபோது, நான் அவர் உயிரை எப்படிக் காப்பாற்றினேன் என்று கூறி அழுதார்.**"

மன்ஸாரியின் அச்சம், நடுக்கம், பாம்பின் கண்களைப் பார்ப்பது போன்றவற்றை பாபா நகைச்சுவையாக, கதை முழுவதையும் பாவனையால் வெளிப்படுத்தினார்.

பாபா அவர்களிடம், "**காலை 11:45 மணி வரை, நாம் என்ன செய்ய வேண்டும் என்று நீங்கள் பரிந்துரைக்கிறீர்கள்? உங்களுக்கு என்ன வேண்டும்?**" என்று கேட்டார்.

"உங்களை எது மகிழ்விக்குமோ, அதுவே பாபா!" என அனைவரும் பதிலளித்தனர்.

"**எல்லாம் எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது! நான் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறேன். நேற்றைய நாடகம் என்னை மகிழ்வித்தது, அது என்னைச் சிரிக்க வைத்ததால் அல்ல, ஆனால் நீங்கள் அனைவரும் என்னை நேசிப்பதால்.**"

ஸரூஹி பஹ்ஜெஜியன் (ZAROUHI BAHJEJIAN) எழுந்து நின்று பாபாவின் வழிகாட்டுதலையும் உதவியையும் நாடினார். அவர் பதிலளித்தார், "**உங்களிடமிருந்து இதைக் கேட்டதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன், ஆனால் இதை என்னிடம் சொல்ல வேண்டிய தேவை உள்ளதா?**

"அவர் எனது பெரிய தாயார் டவ்லா மாஸியை ஒத்திருக்கிறார்," என்று அவர் மேலும் கூறினார்.

**அவர் உயிரைத் துறக்கும் வேளையில், எனது பெயர், டவ்லா மாஸியின் உதடுகளில் இருந்தது. நாங்கள் ஒன்பது மற்றும் பத்து வயது சிறுவர்களாக இருந்தபோது, நானும் எனது சகோதரன் ஜாம்ஷெட்டும் அயராமல் மோதிக் கொள்வது வழக்கம். பள்ளியிலும் கல்லூரியிலும் எப்போதும் நான்தான் தலைவன். எல்லோரும் என்னை "மேர்வான், இங்கே வா" என்று அழைத்தார்கள், ஏனெனில் நான் சண்டையைத் தீர்த்து, சுமூகமான சூழலை உருவாக்கினேன். நான் மிகவும் ஆற்றல் மிக்கவனாக இருந்தேன். அவர் வளர வளர, ஜாம்ஷெட் என்னை நேசிக்க ஆரம்பித்தார். அதைத் தொடர்ந்து, மெஹராபாத்தில், அவர் எப்பொழுதும் என்னையே நினைத்துக்கொண்டிருந்ததால் தூங்கக் கூட முடியவில்லை. அவர் பூனாவிற்குச் சென்றபோது, திடீரென அவர் தலைவலியால் நோய்வாய்ப்பட்டார் மற்றும் அவரது இதயம் கனமாக இருந்தது, மேலும் இரத்தக் கசிவு ஏற்பட்டு மூளை தாக்கப்படும் சற்று முன்னர், அவர் மிகவும் மகிழ்ச்சியாக உணர்ந்தார். அவர் எனது பெயரை உரத்த குரலில் மொழிந்து, பின்பு கோமாவில் வீழ்ந்தார். அதில் அற்புதமான அம்சம் என்னவெனில், கோமாவில் இருந்த அந்த மூன்று மணி நேரமும், 'பாபா, பாபா, பாபா' என உதடு உச்சரித்துக்கொண்டே இருந்தது.**

**அப்போது அங்கிருந்த மணி, ஜாம்ஷெட்டை இந்த நிலையில் பார்த்தார். பின்னர் அவர் உயிரைத் துறந்து என்னிடம் வந்தார்.**

**எனது உறவினர்கள், எனது பள்ளிக்கூட நண்பர்கள் அனைவரும் என்னை நேசிக்கிறார்கள். என்னை அவதார புருஷராக ஏற்றுக்கொள்கிறார்கள். என்னுடன் சண்டையிட்டு, என்னுடன் கோலி விளையாடி என்னை அவதார புருஷராக ஏற்றுக்கொள்வது, அவர்களுக்கு எவ்வளவு கடினமாக இருந்தது என்பது உங்களுக்குத் தெரியாது.**

சார்லஸ் பர்டம் கேட்டார், 'என்னிடம் வருவது' ('TO COME TO ME') பற்றிய உங்கள் கருத்து என்ன என்பதை விளக்குகிறீர்களா?"

பாபா பதிலளித்தார்:

**என்னிடம் வருவது என்பது விடுதலை, என்னை நானாக அனுபவிப்பது, பிறப்பு இறப்புகளின் பிணைப்புகள் இல்லை. ஆனால், இது ஒரு பரிபூரண குருநாதர் அல்லது பரிபூரணத்தின் நிலையைக் குறிக்காது; அது பௌதீக உடலில் உயிருடன் இருக்கும்போது மட்டுமே எய்துவது. எனவே நீங்கள்** (உடலில் இருக்கும் போது), **இந்தப் பரிபூரண நிலையுடன் ஆசீர்வதிக்கப்படாவிட்டால், குறைந்தபட்சம் நீங்கள்** (பௌதீக உடலைத் துறந்த பின்பு) **விடுதலை அடையப் பெறலாம்.**

**உங்கள் உடலைத் துறக்கும் தருணத்தில், எனது பெயரை மட்டும் உச்சரித்தால், நீங்கள் என்னிடம் வருவீர்கள். ஆம், யார் ஒருவரும் என்னிடம் வரலாம். உடலைத் துறக்கும் தருணத்தில் எனது பெயரை உச்சரிப்பது**

**எளிதானது அல்ல. அப்போது நீங்கள் தனிப்பட்ட முறையில் ஆனந்தம், எல்லையற்ற ஆனந்தத்தை அனுபவிக்கிறீர்கள். முக்தி அடைந்த பின்னர், எல்லையற்ற ஆனந்தத்தை என்றென்றும் நிரந்தரமாக அனுபவிக்கிறீர்கள். ஏன்? ஏனெனில் அது என்றென்றும் நித்தியமாக உங்களுக்குச் சொந்தமானது. உங்களுக்குச் சொந்தமானதை நீங்கள் நித்தியமாக அனுபவிக்கிறீர்கள். ஆன்மீகப் பரவசத்தை கூட தெய்வீக பேரின்பத்துடன் ஒப்பிட முடியாது. இதை நினைவில் கொள்ளுங்கள்.**

**“ஹாரி, நான் பார்ன் கொட்டகையை விட்டு வெளியேற வேண்டுமா?”** என்று பாபா கேட்டார்.

கென்மோர், “பாபா, உங்கள் மனதை நீங்களே தீர்மானிக்கும் நிலையில் நீங்கள் இல்லையா?” என வினவினார்.

**“பென், நீங்கள் என்ன பரிந்துரைக்கிறீர்கள்?”**

“எப்படி வேண்டுமானாலும் உங்கள் விருப்பத்திற்கிணங்க,” பென் ஹேமன் பதிலளித்தார்.

ஹரோல்ட் ரட் எழுந்து நின்று ஒரு வேடிக்கையான கதையை எடுத்துரைத்தார். அதன் பின்பு, கெச்சா கஷௌட்டி, பாபாவிற்கு, பெண்மணிகளிடமிருந்து ‘முதலை வடிவில் ஒரு கிரீடம்’ வழங்கினார். பாபா, மிக்கி ஃப்ளோர்ஷெய்மை அழைத்து, அதை அணியச் செய்தார். மைக் லோஃப்டஸ் ஒரு நகைச்சுவைத் துணுக்கை எடுத்துரைத்தார்.

டான் ஸ்டீவன்ஸ், ஐவி டியூஸ் இருவரிடமும், ‘கடவுள் பேசுகிறார்’ (GOD SPEAKS) புத்தகத்தில், ‘**கடவுள், சூரியனுடனும், இதர ஆன்மீகத் தளங்கள், பூமி, காற்று மற்றும் பலவற்றுடன் ஒப்பிடப்படுவதை அவர்கள் நினைவில் கொண்டுள்ளார்களா**’ என்று பாபா வினவ, இருவரும் ‘இல்லை’ என்ற போது, பாபா சிரித்துக்கொண்டே, “**புத்தகத்துடன் இவ்வளவு தொடர்பில் இருக்கும் ஐவி, டான் ஆகியோருக்கு, இது நினைவில் இல்லை என்பது ஆச்சரியமாக இல்லையா?**” என்று கேட்டார்.

‘**இந்த ஒப்புமை நினைவில் உள்ளதா**’ என்று சார்லஸ் பர்டமிடம் கேட்டதற்கு அவர், ‘ஆமாம்’ என்று கூறினார்; மேலும், பாபா அந்தப் பகுதியை விளக்கினார்:

**உதாரணமாக சூரியனைக் கடவுள் என்று எடுத்துக் கொள்ளுங்கள். சூரியன் கடவுள் அல்ல, வாயு. ஆனால் அது கடவுள் - எல்லையற்ற சக்தி, எல்லையற்ற ஆனந்தம், எல்லையற்ற அறிவு என்று எடுத்துக்கொள்வோம். இவை அனைத்தும் சூரியனில் உள்ளது. ஆழ் மன உலகத்தில் நிலைகொண்டுள்ளவர்கள், சூரியனுக்கு அருகில் இருக்கிறார்கள், அவர்கள் நேரடியாக சூரியனின் கதிர்களை அடையப் பெறுகிறார்கள். சூட்சும உலகில் நிலைகொண்டுள்ளவர்கள் சற்று தொலைவில் உள்ளனர். அறிவு மற்றும் ஆனந்தத்தின் கதிர்கள், ஆழ் மன உலகத்தின் மூலமாகக் கசிவுறச் செய்யப் படுகின்றன, மேலும் எஞ்சியிருப்பவை மட்டுமே சூட்சும கோளத்தில்**

நிலைகொண்டுள்ளவர்களால் அடையப் பெறப்படுகிறது. பௌதீக உலகம் வெகு தொலைவில் உள்ளது; இது மிகவும் தடிமனானது, மிகவும் அடர்த்தியானது. அளவிறுதியற்ற ஆனந்தம் மற்றும் அறிவின் கடைசி தடயங்கள் மட்டுமே பௌதீக உலகில் வருகின்றன. சூட்சும தளத்தில் நிலைகொண்டுள்ள யோகிகள் எனது கதிர்களை குறைவாகவே அடையப் பெறுகிறார்கள். பௌதீகத் தளத்தில் நிலைகொண்டவர்கள் எனது எல்லையற்ற சக்தி, பேரின்பம் மற்றும் அறிவின் ஒரு சுவடுகளை மட்டுமே அடையப் பெறுகிறார்கள். ஆழ் மனத் தளத்தில் எல்லையற்ற அறிவின் கதிர்கள் நேரடியாக அடையப் பெறப்படுகின்றன, மேலும் இந்த ஆன்மீகத் தளத்தில் நிலைகொண்டுள்ள அந்த மகான்கள், ஒவ்வொருவரின் மனதையும் எண்ணங்களையும் அறிவார்கள். எல்லையற்ற அறிவின் கதிர்கள் ஆழ் மனத் தளத்தில் விழும் போது, அவை துறவிகள் மற்றும் வாலிகளால் நேரடியாக அடையப் பெறப்படுகின்றன. அறிவு இப்போது பௌதீக மற்றும் சூட்சும மனங்களின் எண்ணங்களை அறியும் அளவுக்கு மாற்றம் கண்டுள்ளது.

சூரியனில், எல்லையற்ற அறிவானது, அனைத்தையும் கடவுளாக அறியும். ஆழ் மனத் தளத்தில், அந்த எல்லையற்ற அறிவின் கதிர்கள், அனைவரின் மனங்களையும் அறியச் செய்கின்றன. அவை சூட்சும தளத்தில் ஊடுருவும்போது, சூட்சும தளத்தில் நிலைகொண்டுள்ளவர்கள் அவர்களுடன் தொடர்புடையவர்களின் மனங்களை அறிவார்கள். சூரியனிலிருந்து வரும் அதே எல்லையற்ற அறிவு, ஆழ் மன மற்றும் சூட்சும உலகங்கள் வழியாக ஊடுருவி, பௌதீக உலகில் வீழ்ந்து, மனித மனத்திற்கு புத்திசாலித்தனம், பகுத்தறிவு சக்தி, தர்க்க ரீதியாக மற்றும் மனத்துடன் தொடர்புடைய அனைத்தையும் வழங்குகிறது. எனவே, இந்தப் பௌதீக மனித மனம், மிகவும் சக்தி வாய்ந்தது, பல விஷயங்களை சிந்திக்கவும், கண்டுபிடிக்கவும் முடியும், எதையும் கற்பனை செய்யக்கூடியது, உண்மையில் சூரியனைப் பற்றிய அந்த எல்லையற்ற அறிவின் துளியைத் தவிர வேறொன்றுமில்லை.

இப்போது, வேறு எதுவும் இல்லை. இது ஏற்கனவே எனக்குத் தலைவலியைத் தருகிறது. பென் கூறுகிறார், “பாபா, ஓய்வெடுங்கள்.”

பெரில், இப்போது பாருங்கள்: இந்தப் பௌதீக மனித மனம் எதையும் கண்டுபிடிக்கவும், கற்பனை செய்யவும், சிந்திக்கவும் முடியும், என்றாலும் அது பிறரின் மனங்களை அறிய முடியாது. ஆனால், ஆழ் மன உணர்வுள்ள மனித மனம் அனைவரின் மனங்களையும் அறிய முடியும். 100 வருடங்களாக மண்ணோடு மண்ணாக இருந்த ஒரு மனித பிணத்தைக் கூட உயிர்ப்பிக்கும் அளவுக்கு ஆழ் மன உணர்வு சக்தி வாய்ந்தது! இப்படி இதற்கு முன்பு நடந்துள்ளது. இந்த ஆழ் மன சக்தியானது, சூரியன், கடவுள் என்ற உயர்ந்த சர்வ சக்தியின் கதிர்கள். இங்கே, சூரியனின் கதிர்கள் உயிர் துறந்தவர்களை உயிர்ப்பிக்க முடியும். நான் மீண்டும் சொல்கிறேன், ஆழ் மன, சூட்சும மற்றும் பௌதீக உலகங்கள் அனைத்தும் இயற்கையில் அல்லது சமுதாயத்தில் காணப்படும் நிகழ்வுகள் - மாயை. கடவுளைத் தவிர உண்மைப்பொருள் வேறு

**எதுவும் இல்லை. பிற அனைத்தும் மாயை. எனவே உயிர் துறந்தவர்களை உயிர்ப்பிப்பதும், பார்வையற்றவர்களுக்குப் பார்வை வழங்குவதும் தமாஷா - வெறும் கேலிக்கூத்து!**

சில இசைப் பகுதிகளைக் கேட்ட பின்பு பாபா, பார்ன் கொட்டகையிலிருந்து லகூன் கேபினுக்குப் புறப்பட்டுச் சென்றார். நடனக் கலைஞர்கள் வந்த வேளையில், ஜேன் ஹெய்ன்ஸ் அவருடன் இருக்க அனுமதிக்கப்பட்டார். பார்ன் கொட்டகையில் அவர்களின் நடிப்பைப் பார்த்து என்ன நினைக்கிறீர்கள் என்று பாபா கேட்டார். ஜேன் சிரித்துக்கொண்டே, உங்களுக்குத் தெரியும் பாபா. அவர்கள் மிகவும் அற்புதமான திறன் படைத்தவர்களாகவும் அழகாகவும் இருப்பதால், எனது திரை அரங்கில் அவர்களை வைத்துக்கொள்ள விரும்புகிறேன்" என்றார்.

"**நீங்கள் அப்படித்தான் நினைக்கிறீர்கள் என்று நான் நினைத்தேன்**," என்று பாபா பதிலளித்தார், அவரும் சிரித்தார்.

மதியம் 1:45 மணிக்கு எலிஸபெத், பாபாவை லகூன் கேபினிலிருந்து அவரது இல்லத்திற்கு அழைத்துச் சென்றார்.

பாபாவின் வேண்டுகோளுக்கு இணங்க, மதியம் 2:00 மணிக்கு ஆதி வராந்தாவில் வெளியே வந்த வேளையில், '**அனைத்து ஆண்களும் வந்துவிட்டார்களா?**' என்று கேட்டார். ஒரு இளஞ்சிவப்பு நிற மேல் கோட் அணிந்து, அவரது முன் அறையில், தூரத்து மூலையில் அமர்ந்திருந்த பாபாவிடம், அனைவரும் அழைத்துச் செல்லப்பட்டனர். பாபா மகிழ்ச்சியான மனநிலையில் காணப்பட்டார்; அதற்கு முந்தைய நாள், அந்த ஆடவர்கள் அவருக்காக நிகழ்த்திய மாபெரும் வேடிக்கையான நிகழ்ச்சியை நினைவு கூர்ந்தார். பாபா, "**என்னை ஆரத் தழுவி, என்னிடமிருந்து பிரசாதத்தைப் பெற்றுக்கொண்டு, இல்லம் முழுவதையும் நீங்கள் பார்வையிடலாம்**" என்று சைகையால் தெரிவித்தார். அவர் ஒவ்வொருவரையும் தழுவி, சிறப்பு இனிப்பு மிட்டாய்களைப் பிரசாதமாக அவர்களின் கைகளில் கொடுத்தார்.

அதன் பின்னர், ஆதி மற்றும் எரச்சின் உதவியோடு, பாபா மெதுவாக வீட்டை விட்டு வெளியேறினார். ('அவர் மிகவும் பலவீனமாகவும், உதவியற்றவராகவும் காணப்பட்டார்,' என்று மேக்ஸ் பதிவு செய்திருந்தார்.) அவர் ஒரு மாக்னோலியா (MAGNOLIA) மரத்தின் நிழலில் நின்ற போது, அவருக்காக ஒரு நாற்காலி கொண்டு வரப்பட்டது. அவர் அனைவரையும் நோக்கி, இனிப்பு மிட்டாய்களை வீசத் தொடங்கினார், ஒரு திசையைப் பார்த்து மற்றொரு திசையில் வீசினார். பாபா இவ்வாறு குறிப்பிட்டார், "**இது ஒரு விளையாட்டு அல்ல. இது எனக்கும் அன்பர் ஒவ்வொருவருக்கும் இடையிலான எதிர்கால பந்தம்**." அனைவரும் அவரவர் பிரசாதத்தைப் பற்றிப் பிடித்த பின்பு, பாபாவின் முன்னால் ஒன்று திரண்ட அந்த நேரத்தில், அவர் பிரசாதத்தின் முக்கியத்துவத்தை விளக்கத் தொடங்கினார்:

**இது மனிதனுக்கு கடவுள் வழங்கும் அன்பளிப்பு. அந்த உணர்வுடன் அதை உண்டால் பலன் கிடைக்கும்; ஆனால் வெறும் இனிப்புப் பண்டம் என்ற எண்ணத்தில் உண்டால் அதில் எந்த அர்த்தமுமில்லை. பிரசாதத்தை வேறொருவருக்கு கொடுக்க வேண்டாம். உடனே சாப்பிட்டு விடுங்கள்.**

பின்னர், அவர் வெளிப்படுத்தினார்:

**முதல் முறையாக, பிரசாதத்தை நடைமுறை வழக்கத்திற்கு கொண்டு வந்த அவதார புருஷர் கிருஷ்ணா. ஒருமுறை அவர் நான்கு தோழர்கள் அல்லது அன்பர்களுடன் இருந்தபோது, மலை உச்சிகளில் உபவாசம் மேற்கொண்ட ரிஷி** ((முனிவர்) **ஒருவர், கிருஷ்ணரிடம் பிரசாதத்திற்காக வந்தார். அவர் நீண்ட காலம் தியானத்தில் இருந்ததால், அவரது கண் இமை மயிர்கள் கீழ்நோக்கி வளர்ந்து, எறும்புகள் அவர் உடலை ஆக்கிரமிக்க வழிவகுத்தன.**

**கிருஷ்ணர், பிரசாதம் அவரது அன்பர்களுக்கானது, வேறு எவருக்கும் இல்லை என்று பதிலளித்தார். இது லட்டுகள் அல்லது இந்திய தேசத்தின் இனிப்பு உருண்டை வடிவில் இருந்தது. இறுதியில், மிகவும் புத்திசாலியான ரிஷி, கிருஷ்ணரின் பிரியமான, ஊனமுற்ற சீடர் பெண்டியாவிடம்** (PENDYA), **அவருக்காக கிருஷ்ணரிடம் பிரசாதத்தைக் கேட்குமாறு கெஞ்சினார். இதை, அவர் தனது அன்பர்களின் அடிமையாக இருந்ததால், கிருஷ்ணர் அனுமதித்தார்; இதன் விளைவாக ரிஷி இறை ஒளியின் அனுபவத்தை அடையப் பெற்றார் - இறை உணர்தல் அல்ல.**

**இரண்டாவது முறை வழங்கும் இந்தப் பிரசாதத்திற்குப் பின்னர், இனி, அரவணைப்புகள் இராது. நீங்கள் ஒவ்வொருவரும் எனது கையில் முத்தம் பதித்து, உடனடியாகச் செல்லலாம். நான் நாளை காலை 10:00 மணிக்கு, லகூன் கேபினுக்கு ஒரு மணி நேரத்திற்காக வருவேன். ஆனால் அப்போது நீங்கள் எனது புன்முறுவலை மட்டுமே அடையப்பெறுவீர்கள், அவ்வளவுதான்!**

அவர்களுடன் மேலும் சில நிமிடங்கள் உரையாடிய பிறகு, பாபா தனது இல்லத்திற்குள் சென்றார், அன்பர்கள் அனைவரும் வெளியேறினர்.

அவர் முன்பு, காலை 10:00 மணிக்கு வருவதாகக் கூறியிருந்தாலும், 1958 மே 29 வியாழன் அன்று காலை 9:20 மணிக்கு பாபா, லகூன் கேபினுக்கு வருகை தந்து, பல தனிப்பட்ட நேர்காணல்களை வழங்கினார். அவர் ஒரு குழுவிற்கு ‘திட நம்பிக்கை’ (CONVICTION) பற்றி விளக்கி, **“திட நம்பிக்கை மிக முக்கியமானது; நம்பிக்கையை விட முக்கியமானது. மனமும் இதயமும் நம்பிக்கைக்கு வழிவகுக்கிறது, மேலும் நம்பிக்கை, திட நம்பிக்கையை வழங்கும். இந்தத் திட நம்பிக்கைக்காக ஒருவர் மனதையும் உடலையும் கைவிட்டுவிடுவார், ஆனால் திட நம்பிக்கையை அல்ல.”**

ஜேன் ஹெய்ன்ஸ், பாபாவின் சகவாசத்தில் மிகவும் ஈர்க்கப்பட்டார், அதற்கு பதிலாக அவருக்கு ஏதேனும் வழங்க விரும்பினார். “நீங்கள் எனக்கு ஒரு புதிய வாழ்க்கையைத் தந்துள்ளீர்கள்” என்று அவர் நினைத்தார். “நீங்கள் என்னை

விரக்தியிலிருந்து விடுவித்தீர்கள், எனது வாழ்க்கையில் மாபெரும் மாற்றத்தைக் கொண்டுவந்தீர்கள், என் மீதும் எனது குழந்தைகள் மீதும் உமது கருணைக் கரத்தை வைத்தீர்கள். என்னிடம் எதுவும் இல்லை, கொடுக்க எதுவும் இல்லை." அப்போது, எலிஸபெத் அவருக்கு வாசிக்கக் கொடுத்த நோரினாவின் 'ஜீஸஸ், தி ஸன் ஆஃப் மேன்' (JESUS, THE SON OF MAN) என்ற தலைப்பில் கலீல் ஜிப்ரான் (KAHLIL GIBRAN) எழுதிய புத்தகம் நினைவுக்கு வந்தது. அந்தப் புத்தகத்தில், மேரி மேக்டலன் (MARY MAGDALENE), இயேசுவை சந்தித்த சம்பவம், குறிப்பாக, ஜேனின் ஆழ் இதயத்தைத் தொட்டது. அவர் பாபாவிற்கு இந்தப் பாகத்தை படிக்க வேண்டும் என்று முடிவு செய்தார், அவர் இதைச் செய்ய விரும்புவதாகக் கூறி எலிஸபெத்திற்குத் தொலைபேசி மூலமாகத் தெரிவித்தார்.

29ஆம் தேதி காலை, எலிஸபெத், ஜேனை மிகுந்த முகமலர்ச்சியுடன் வரவேற்றார், "அனைத்து ஏற்பாடும் செய்யப்பட்டுள்ளது; நான் அதைப் பார்த்துக்கொள்வேன். நீங்கள் இன்று பிற்பகல் பார்ன் கொட்டகையில் அந்தப் பகுதியைப் படிப்பீர்கள்."

ஜேன் வியப்படைந்தார். "நான் அப்படிச் சொல்லவில்லை!" என்று கத்தினார். "நான் அதை பாபாவிடம் தனிப்பட்ட முறையில் படிக்க விரும்பினேன். நீங்கள் எப்படி இதைச் செய்திருக்க முடியும்?"

அப்போது ஒருவர் வந்து, "ஜேன், எலிஸபெத்! பாபா உங்கள் இருவரையும் அழைக்கிறார்" என்றார். லகூன் கேபினில், எலிஸபெத் அழத் தொடங்கினார். பின்னர் அவரது உணர்ச்சிகள் தணிந்தன. அந்தப் பிரச்சினை பாபாவிடம் கூறப்பட்டபோது, அவர், "**பரவாயில்லை. எலிஸபெத், ஜேனை மிகவும் நேசிக்கிறார்**" என்றார். அவர் தனது இரண்டு விரல்களையும் ஒன்றாக இணைத்து கூறினார், "**ஆன்மீக இரட்டையர்கள். ஆனால், எலிஸபெத் பாபாவை அதிகம் நேசிக்கிறார். அவருக்கு எனது கைமுட்டி ஓர் அடையாளம் - இது ஒரு பாறை போன்றது! இப்போது கண்ணீரை நிறுத்துங்கள்.**"

ஜேன், "இது எனது தவறு; தயவுசெய்து என்னை மன்னியுங்கள். நான் அதைக் குறித்து தெளிவாக இல்லை" என்றார்.

பாபாவின் கை வெளியே வந்து, அவரை எஃகு போலப் பற்றிக் கொண்டு, பின்னர் அமருமாறு அறிவுறுத்தினார். "**எலிஸபெத், ஜேன் மிகவும் விரும்பும் அந்தப் புத்தகம் எங்கே?**"

"யூபான் டூன்ஸில் உள்ளது."

"**அங்குச் சென்று அதை எடுத்து வாருங்கள். ஜேன், பாபாவின் முன்னிலையில் அதைப் படிப்பார்.**"

ஜேன் அவரைத் தயார்படுத்திக் கொள்ள பதினைந்து நிமிடங்கள் அவகாசம் வழங்கப்படவே, அவர் கேபினிலிருந்து வெளியே வந்த அவ்வேளையில், எலிஸபெத் புத்தகத்தை எடுத்துவர யூபான் டூன்ஸ் விரைந்தார். அவர் திரும்பி வந்ததும், இருவரும், மீண்டும் லகூன் கேபினுக்குள் நுழைந்தனர். ஜேன், பாபாவின் முன் அமர்ந்து படிக்கத் தொடங்கினார். நடுவில், பாபாவின் விரல்கள் வேகமாக நகர ஆரம்பித்தன. பாபாவின் உலகளாவிய பணியைப் பற்றி

அறியாத ஜேன், ஒருவேளை அவர் நன்றாகப் படிக்கவில்லையோ என்று யூகிக்கத் தொடங்கினார்; இந்த எண்ணம் அலைபாய்ந்த அந்த கணத்தில், பாபாவின் விரல்கள் செயலிழந்து நின்றன. ஜேன் இவ்வாறு நினைவு கூர்ந்தார்: "ஜிப்ரான் விளக்கியதற்கு இணங்க - 'ஆன்றியாக் (ANTIOCH) நகரில் உள்ள சிலைகளைப் போலவே' - பாபாவின் கண்கள் எனது முகத்தை விட்டு அகலவில்லை."

ஜேன் படித்து முடித்ததும், பாபா சிறிது நேரம் அமைதியாக இருந்தார். "**இப்போது என்னிடம் வாருங்கள்,**" என்று குறிப்பிட்டு, பாபா அவரை ஆரத்தழுவிக் கொண்டார்; ஜேன், அவர் முன்னால் மண்டியிட்டு நின்றார். அவரைப் பார்த்து, "**இதை நீங்கள் பாபாவிற்கு வழங்கிய விதம், என் ஆழ் இதயத்தைத் தொட்டது. உங்களுக்குக் கூறுகிறேன், நான் இயேசு, நான் இயேசு கிறிஸ்து. இப்போது நாம் போகலாம்**" என்று கூறி, அவரை ஒரு கையிலும், எலிஸபெத்தை மற்றொரு கையிலும் பற்றிப் பிடித்த வண்ணம் மூவரும் வெளியே நடந்தனர்.

புத்தரின் வாழ்க்கையைப் பற்றிய (எட்வின் அர்னால்ட், EDWIN ARNOLD எழுதிய) 'லைட் ஆஃப் ஆசியா' (LIGHT OF ASIA) கவிதையின் இசைப்பதிவை ஹரோல்ட் ரட் மொழிவதைக் கேட்க, பாபா வெளியில் அமர்ந்திருந்தார். அதைக் கேட்கும்போது, பாபாவின் மனநிலை தீவிரமாக இருந்ததோடு, அவரது விரல்கள் இடையிடையே பணிபுரிந்தன. அது முடிந்ததும், பாபா அமைதியாக இருக்கக் கோரி, "**இந்தப் பதிவு சொர்க்கத்திலிருந்து வந்தது**" என்றார். ஜேன், பாபாவின் உடனடிப் பிரிவைப் பற்றி சிந்திக்கத் தொடங்கினார்; மேலும் பாபாவைக் கண்டுகொண்ட அடுத்த கணத்தில் அவரை 'இழக்கும்' வருத்தத்தில் ஆழ்ந்தார்.

அந்த இசைப்பதிவின் பாராயணத்திற்குப் பிறகு, பாபா, ஜேனை லகூன் கேபினுக்கு அழைத்து அவரிடம், "**எதற்கும் மனம் கலங்கவோ, அஞ்சவோ வேண்டாம், நான் எப்பொழுதும் உங்களுடன் இருப்பேன்**" என்று உறுதிப்பட கூறினார். ஜேன் திரும்பிச் செல்ல இருந்த வேளையில், பாபா, "**உடல் ரீதியாக**" என்று இணைத்ததை, ஆதியிடம் மறுபடியும் மொழியுமாறு கூறினார். பாபா இந்தியா திரும்பியதும், ஜேனுக்கு இந்தத் தொலைதந்தியை அனுப்பினார்: "**என் அன்பில் மறுபிறவிக்காக நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர், மேலும் மேலும் என்னை நேசிக்கவும்.**"

ஜேன் எந்த நேரமும், 'தனது 33 வயதிற்குள் இறந்துவிடுவேன்' என உணர்ந்தார், மேலும் ஒருவிதத்தில் அவர் - அவதார புருஷரின் அரவணைப்பில் 'மறுபிறவி' எடுக்க வேண்டும்!

அதைத் தொடர்ந்து பாபா, கடற்கரைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்; பிற அன்பர்கள் அங்குத் தனித்தனியாக நடந்தார்கள் அல்லது ஓடினார்கள். கடற்கரைக்கான வாயில் திறக்கப்படுவதற்காக அவர்கள் காத்திருந்தபோது, சார்லஸ் பர்டத்தை காரில் அவரருகில் அமர அழைத்தார். சார்லஸ் காரில் ஏறியதும், வாசல் திறக்கப்படவே, காரிலிருந்து இறங்கும் அவசரத்தில், கிட்டி

கதவை மூடியதில், தன்னையறியாமலே சார்லஸின் இடது கட்டை விரல் கதவிடையே மாட்டிக்கொண்டது. பாபா உடனடியாக கிட்டியை பனிக்கட்டி எடுத்துவர அனுப்பினார். இதற்கிடையில், முழுக் குழுவும் காரைச் சுற்றி ஒன்றுதிரண்டது; பாபா கூறினார், "**சார்லஸ் காரணமாக, நீங்கள் அனைவரும் என்னுடன் ஐந்து நிமிடங்களுக்கு மேல் இருக்கும் வாய்ப்பை அடையப் பெற்றீர்கள்**." (முந்தைய நாள் அவர் கடற்கரைக்கு ஐந்து நிமிடங்களுக்கு வரலாம் என்று கூறினார்.) அப்போது பர்டம் (ஒருவேளை நகைச்சுவையாக) உடல் ரீதியாக பாபாவின் அருகில் இருப்பது, எப்போதுமே ஆபத்தானது என்று தான் உணர்ந்ததாகவும், அந்த விபத்து அதன் அறிகுறியாகும் என்றும் கூறினார்.

மேக்ஸ் இவ்வாறு விவரித்தார்: "பாபா கடற்கரைக்கு, தூக்கு நாற்காலியில் தண்ணீரில் அழைத்துச் செல்லப்பட்டார்; அதற்குப் பிறகு, பாபா தண்ணீரிலிருந்து வெளியேறி கரையில் நின்றுகொண்டிருந்தார். இது பைபிளின் பரிமாணங்களின் நம்பமுடியாத தோற்றமாக இருந்தது. இது 'தி டென் கமான்ட்மென்ட்ஸ்' (THE TEN COMMANDMENTS) திரைப்படத்தில், யூதர்கள் எகிப்திலிருந்து, மோஸஸ் தலைமையில் செங்கடலை நோக்கிப் புறப்பட்ட காட்சியாக எனது நினைவுக்கு வந்தது. மேலும், சிறுவனாக இருந்த போது, பள்ளிக்கூடத்தில் கத்தோலிக்க திருச்சபையில் நடந்த ஊர்வலங்களையும் எனக்கு நினைவூட்டியது. பாபா, ஒரு விதத்தில், பழங்கால சடங்குளின் விழாவாக இல்லாமல் - ஜெபமாலை பிரார்த்தனை, சடங்கு சம்பிரதாயங்கள் எதுவும் இல்லாமல் - இயற்கையாகவே புத்துயிர் அளித்தார். இது ஒரு புதிய வாழ்க்கையில் ஆழமான உண்மைகளின் முத்திரையைப் பதிக்கும் அதிகாரம் கொண்ட ஆதிகாலப் புருஷரின் மனநிறைவு மற்றும் ஆழமான உறுதிப்படுத்துதல் ஆகும். இது இயற்கையான வளர்ச்சிப்போக்கின் செயல்முறை மரபாக இல்லாமல், அதன் முழுமையான உருமாற்றமாக இருந்தது."

பாபாவை அவரது அன்பர்கள், தூக்கு நாற்காலியில் கடல் நீரின் விளிம்பிற்கு அழைத்துச் சென்றனர், அங்கு அவர் தனது பாத அணியைக் கழற்றினார். அட்லாண்டிக் பெருங்கடலில் தனது கால்கள் மூழ்கும் வரை, அவரை சுமந்து செல்லும் அனைவரையும் கடலுக்குள் நெடு தூரம் நடந்து செல்லுமாறு அவர் அறிவுறுத்தினார். இதை கவனித்த நரிமன் ஒருவரிடம், "உங்கள் கடற்கரைகள் புனிதப்படுத்தப்பட்டு, இப்போது அவை பாதுகாப்பாக உள்ளன" என்று குறிப்பிட்டார்.

பாபா தனது நாற்காலியை கடற்கரையில் கீழே வைக்குமாறு சைகையால் தெரிவித்தார்; அவரது அன்பர்கள் அவரைச் சுற்றி ஒன்றுதிரண்டனர். பாபா, லீட்ரைஸ் ஷாவை தன்னுடன் ஒட்டிக்கொண்டு இருக்குமாறு அறிவுறுத்தியதால், அவர் ஒரு கணம் கூட அவரைவிட்டு விலகவில்லை. அவர்கள் கடற்கரைக்குச் செல்வார்கள் என்று தெரிந்திருந்ததால், அவர் ஒரு மேலாடையை அணிந்திருந்தார். பாபாவின் பாதங்கள் துடைக்கப்பட வேண்டும் என்பதற்காக, லீட்ரைஸ் மேலாடையை அகற்றி அதை வழங்கினார். ஹெலன் அல்வாரடோ தனது கம்பளிச் சட்டையையும் கழற்றி அவரது கால்களை உலர

வைக்க பயன்படுத்தினார். பாபாவின் தூக்கு நாற்காலி ஈர மணலில் மீண்டும் கொண்டு செல்லப்பட்டது.

அவர் மர்டில் பீச் மையத்தில் தங்கியிருந்த நாட்களில், பாபாவின் தூக்கு நாற்காலியை எடுத்துச் செல்லும் பாக்கியத்தை அடையப்பெற்ற நடனக் கலைஞர்கள் ஐவர்: ஜீன் ஸெப்ரூன், ஜோ ஃபேபியன், பீட்டர் ஸால், டொனால்ட் மஹ்லர் மற்றும் டெக்ஸ் ஹைடவர். பாபா காரில் அமர முற்பட்டபோது, ஒருவர் நாற்காலியிலிருந்து அவருக்கு உதவ முயன்றார். பாபாவிற்கு உதவி செய்ய முயற்சிக்கும் போதெல்லாம், பாபா ஒருவித பதற்ற நிலையை உருவாக்கி, அவரைத் தடுமாறச் செய்தார்; அப்போது பாபா அந்த நபரின் காதையும் திருகினார். அன்று கடற்கரையில் பெண்மணிகளும் தங்கள் பிரியமான பாபாவைத் தூக்கு நாற்காலியில் அழைத்துச் சென்றனர்.

டிலியா டிலியோன் இவ்வாறு நினைவு கூர்ந்தார்: "பாபாவுடன் கடற்கரையில் அலைகள் அங்கும் இங்கும் விரைந்தோட, மகிழ்ச்சியான கூட்டத்துடன் இணைந்திருந்தது, மறக்க முடியாத அத்தியாயங்களில் ஒன்றாகும்,"

பாபா, மீண்டும் லகூன் கேபினுக்கு அழைத்துச் செல்லப்பட்டார், அங்கு அவர் சிலரை உள்ளே அழைத்தபோது, என்ன நடந்தது என்பதை ஃபிலிஸ் விவரித்தார்:

திடீரென, பாபா தனது உலகளாவிய பணிபுரியும் நிலைக்குச் சென்றார். அவரது கண்கள் மீண்டும் தலையில் சுழன்றன; குழுவில் உடனடியான அமைதி நிலவியது. நாங்கள் ஒரு மிகப்பெரிய மின் டைனமோவின் முன்னிலையில் இருக்கும், அப்படி ஓர் அதிர்வை உணர்ந்தோம். இது அதி தீவிரமாக இருந்தது, ஒரு ரஷ்ய பெண்மணி திடீரென "எனக்கு வேண்டியது உங்களிடம் உள்ளது!" என்று கூச்சலிட்டு, பாபாவை நோக்கி விரைந்தார். மண்டலி மிகவும் எச்சரிக்கையாக இருந்ததால், பாபாவைத் தொடவிடாமல் தடுத்தனர். பாபா அந்த நிலையில் இருக்கும் போது அவர் தொட்டிருந்தால்... (அவருக்கு என்ன நிகழ்ந்திருக்கும் என்று எவருக்குத் தெரியும்). அது மிகவும் வியத்தகு தருணமாக இருந்தது.

கடற்கரையில், அவரது நாற்காலியைத் தவிர, சில பெண்மணிகளுக்கு பாபாவின் குடையை அவர் தலை மீது பிடிக்கும் பாக்கியமும் வழங்கப்பட்டது. ஜேன் ஹெய்ன்ஸுக்கு வாய்ப்பு எதுவும் கிடைக்கவில்லை, மேலும் பாபாவின் எண்ணங்களை அறியாத அவர், பொறாமையுடன் சற்று சீற்றமும் அடைந்தார். பாபா அவரை லகூன் கேபினுக்கு அழைத்தபோது, அவர் பாபா முன் மண்டியிட்டு நின்றார். "**கடற்கரையில் இருந்த வேளையில், நீங்கள் என்னிடம் ஏதாவது சொல்ல விரும்பினீர்களா?**" அவர் கேட்டார்.

ஜேன், "நான் உங்கள் தலை மீது குடையை பிடித்துக்கொள்ள விரும்பியதோடு, உங்களை நேசிக்கிறேன் என்று சொல்ல விரும்பினேன்" என்று பதிலளித்தார்.



**அன்பர்களை நோக்கி பிரசாதத்தை வீசும் காட்சி, 28 மே 1958**

(TOSSING PRASAD TO THE MEN, 28 MAY 1958)



பாபா 'லைட் ஆஃப் ஏஷியா' கவிதையை ரசிக்கும் காட்சி, டிலியா, அனிதா, எரச், ஃப்ரெட், டியர்ட்ரா ஈட்டன், எனர்ஜி
(LISTENING TO THE POEM 'LIGHT OF ASIA, DELIA, ANITA, ERUCH, FRED, DEIRDRE EATON, ENERGY)



மர்டில் பீச் கடற்கரை,
**29 மே 1958**
(AT THE BEACH, MYRTLE BEACH, 29 MAY 1958)



வில்மிங்டன் விமான நிலையம்
(WILMINGTON AIRPORT)

பாபா அவரை ஆரத்தழுவி, "**இப்போது, இது சிறந்ததில்லையா?**" என வினவினார். ஜேன் புறப்பட ஆயத்தமானதும், பாபா, மண்டலியின் பக்கம் திரும்பி, "**பழைய தோழர். எனது மிக மிக பழைய தோழர், ஜேன். நான் அவரை மிகவும் நேசிக்கிறேன்.**" ஜேன் கேட்காதது போல பாசாங்கு செய்து, அவர் அதை மீண்டும் கேட்க விரும்பினார். அவர் முன்னோக்கி சாய்ந்தபடி, "என்ன?" என்று வினவ, பாபா அதை மீண்டும் இனிமையான சைகையால் தெரிவித்தார்.

அன்று பிற்போதைய வேளை முழுவதும் பாபா, தன் இல்லத்தில் ஓய்வு எடுத்தார்.

அன்று பிற்பகலில் அவர், பெண்கள், ஆண்கள் மற்றும் சிறுவர்களை தன் இல்லத்திற்கு அழைத்த போது, பாபா மையத்தில் சிறுமிகள் எவரேனும் இருந்தால், அவர்களையும் அழைத்துவரக் கூறினார். ஐந்து அல்லது ஆறு பேரை ஆதி வீட்டுத் தாழ்வாரத்திற்கு அழைத்துச் சென்ற வேளையில், அவர்கள் பாபாவின் முன்னால் தரையில் அமர்ந்தனர்; சில நிமிடங்களுக்குப் பின்னர், அவர் ஒவ்வொருவரையும் முத்தமிட்டுத் தழுவி, அவர்களுக்கு ஒரு சிறிய பரிசையும் வழங்கினார். இறுதியாக முன்னோக்கி அழைக்கப்பட்ட சிறுமிக்கு, அவரது மணிக்கட்டில் பாபா இரண்டு சிறிய வளையல்களை நழுவவிட்டு முத்தமிட்டார். பின்னர், அவரது தாயார் வளையல்களை தண்ணீரில் நனைத்து முயற்சித்தார் - அவை அவரது கைக்கு மிகவும் சிறியதாக இருந்தன.

1958 மே 30 வெள்ளிக்கிழமை அதிகாலை 3:00 மணிக்கு பாபா எழுந்தார். கிட்டி, டிலியா, மார்கரெட் ஆகியோர் இறுதி பிரியாவிடை அளிக்க அன்று அதிகாலையில் பாபாவின் இல்லத்திற்குச் சென்றனர். பாபா தனியாக இருந்தார். சில வினாடிகள், நம்பிக்கைக்குப் பாத்திரமான மூன்று கோபியர்களையும் தனது முன்னால் நிற்கும்படி சைகையால் தெரிவித்து, ஒவ்வொருவரையும் சுட்டிக் காட்டி, தன் இதயத்தில் கையை வைத்தார். மூவரும் 1931 முதல் பாபாவின் அரவணைப்பில் இருந்து வந்தனர்.

மெஹர் மையத்தின் ஒவ்வொரு துகள்களையும் திருப்திபடுத்தும் விதத்தில், இறைபோதை தரும் மதுபானத்தை வழங்கிய பிறகு, காலை 5:30 மணிக்கு எலிஸபெத்தின் ஃபோர்டு காரில் கிட்டி, எரச், டான் ஆகியோருடன் பாபா, மர்டில் பீச்சிலிருந்து புறப்படும் போது பொழுது விடிந்துவிட்டது. (ஆதி, நரிமன் இருவரும் ஹாரி ஹார்ட்ஷோர்னின் ப்யூக் காரில் சவாரி செய்தனர்.) அவர் லகூன் கேபினில் ஒரு நிமிடம் நின்று தனது அன்பர்களிடம் விடைபெற்றார். முரியல் ஹூஸ்டன், பிரையர்க்ளிஃப் வாசலில் காத்திருந்தார், பாபா அவரையும் தழுவினார். ஜேன், ரத் வைட் இருவரும் இரண்டாவது காரில் பின்தொடர்ந்தனர். சகவாசக் குழுவின் முக்கிய அங்கத்தினர் மூன்று பேருந்துகளில் வில்மிங்டன் விமான நிலையத்திற்கு முன்னதாகப் புறப்பட்டுச் சென்றனர்.

காலம் இதைக் குறிப்பிடுகையில், “மர்டில் பீச் மெஹர் மையத்திற்கு பாபாவின் கடைசி வருகை இதுவாக இருந்தாலும், அவரது பிரசன்னம் இன்னும் பல நூறு ஆண்டுகளுக்கு அன்பர்களின் அனுபவமாக இருக்கும்! இந்த மையம் காலங்காலமாக இறைவனைத் தேடுபவர்களுக்கு ஒரு கலங்கரை விளக்கமாகத் திகழும், ஏனெனில் அவரது அன்பின் ஒளி ஒவ்வொரு மரம், செடி, கொடிகளின் இலையிலும் மின்னுகிறது. மெஹர் மையத்தின் தோட்டம் அவரது அன்பர்களுக்காக, பசுமையாக மாற்றப்பட்டது; அதனால் அவரது பறவைகள் எப்பொழுதும் சுவையான பழங்களை ருசித்து, அவரது இனிமையான பாடலின் எதிரொலியைக் கேட்கும் வாய்ப்பாக அமையும்.”

பாபாவும் மண்டலியும் சுமார் 7:30 மணியளவில் வில்மிங்டன் விமான நிலையத்திற்கு வந்தனர். விமான நிலையத்தில், பாபாவின் காரை முழுக் குழுவும் சூழ்ந்து கொண்டது. ஒருவரைத் தழுவி பாபா, “**இன்று காலை என்னைத் தழுவியதை எவரிடமும் சொல்லாதீர்கள்**” என்று கிண்டலாக சைகை செய்தார்.

விமான நிலையத்தின் உள்ளே, ஒரு தூணின் அடிவாரத்தில் சணல் துணியாலான நாற்காலியில் பாபா அமர்ந்திருந்தபோது, அனைவரும் அவரை சூழ்ந்து கொண்டனர். விமான நிலைய ஊழியர்களில் சிலரும், அவரது ஆளுமையில் ஆர்வமாக இருந்து, அருகில் அல்லது தூரத்தில் நின்று பார்த்தனர். சிலரது உடல்நிலை, தூக்கம் மற்றும் அவர்கள் எப்படி வீடு திரும்புகிறார்கள் என்பது குறித்து பாபா வினவினார். சோகம் நிறைந்த முகத்துடன் இருந்த ஓரிரு அன்பர்களிடம், சிரித்து மகிழ்ச்சியாக இருக்குமாறு சைகையால் தெரிவித்தார். அவர் பென் ஹேமன், மிக்கி ஃப்ளோர்ஷெய்ம் ஆகியோருடன் மீண்டும் கேலி செய்தார். மிக்கி, “இன்று அதிகாலை 3:00 மணியளவில், பென் என்னை நோக்கி விசில் அடித்தார்!” என்றார்.

பல முறை, பாபா, நெட் ஃபுட் மற்றும் அவரது காரில் இருந்தவர்களைப் பற்றி விசாரித்தார். அவர்கள் தாமதமாக வரவே, அவர்களுடன் இருந்த அனிதா வியய்யார்ட், அதற்கான காரணத்தை எடுத்துரைத்தார்.

பாபா அப்போது, “**உங்கள் அனைவரிலும் நான் இருக்கிறேன். ஆனால் நீங்கள் எல்லாவற்றையும் விரட்டியடித்த பின்னரே, என்னால் உங்கள் இதயத்தில் நுழைய முடியும்**” என்று கூறினார்.

மீண்டும் அவர் கூறுகையில், “**நான் கடவுள், நான் உங்கள் அனைவரிலும் இருக்கிறேன். ஆனால் நான் வெட்கப்படுகிறேன், சிறிதளவு அசுத்தத்தைக் கண்டால் கூட, நான் உங்கள் இதயத்தில் நுழைய மறுக்கிறேன்**” என்றார்.

அனிதா, “எவ்வளவு நேரமாக இங்கு விமான நிலையத்தில் இருக்கிறீர்கள்?” என வினவ…

“**நித்தியத்திலிருந்து!**” பாபா பதிலளித்தார். “**நான் ஒருபோதும் வருவதுமில்லை, போவதுமில்லை. எல்லா இடங்களிலும் நான் நிறைந்து**

**இருக்கிறேன். நான் எதையும் விட்டு விலகாதது அற்புதம் அல்லவா? இது உண்மையில் அற்புதம் தானே?"**

ஒரு கட்டத்தில், பாபா குறிப்பிடத்தக்க விதத்தில் அவரது வலது காலை தட்டினார், பின்னர் அவரது இடது, பின்னர் அவரது வலது காலை மீண்டும் தட்டினார்; அவரது விரல்கள் காற்றில் வேகமாக அதிர்ந்து வேலை புரிந்தன. அவர் ஃப்ரெட் ஃப்ரேயின் சிறிய மகள் தாராவையும், லட் டிம்ப்ஃபிலின் மகள் த்ரீ-பியையும் முத்தமிட்டார் (அவர் அழுதுகொண்டிருந்தார்). ஒவ்வொரு பெண்மணியிடமும், **"இன்று நீங்கள் என்னைத் தழுவியதை எவரிடமும் சொல்லாதீர்கள்"** என்று திரும்பத் திரும்ப கூறினார்.

எப்பொழுதும் பிறர் நலன் கருதும் பாபா, ரத் ஒயிட், ஃபிலிஸ் ஃபிரடெரிக் ஆகியோரிடம் நாற்காலிகளைக் கொண்டுவர சைகையால் தெரிவித்தார். இறுதியாக அவர் கிட்டி, எலிஸபெத், மையத்தின் பராமரிப்பாளரான ஃபிராங்க் ஈட்டன் ஆகியோரைத் தழுவினார்.

ஹென்றி கஷௌட்டி விமான நிலையத்தில் ஒரு சுவாரஸ்யமான அனுபவத்தை அடையப் பெற்றார். அவர் காத்திருப்பு அறைக்குள் நுழைந்த வேளையில், பாபா ஏற்கனவே அனைவராலும் சூழப்பட்டிருந்தார். பாபாவைப் பார்க்க முடியவில்லை, ஆனால் எரச்சின் குரலை மட்டும் அவரால் கேட்க முடிந்தது. ஹென்றி, டான் (வில்லியம் டான்கின்) ஒரு பக்கத்தில் நிற்பதைக் கண்டு அவருடன் உரையாடச் சென்றார். ஆனால் சில நிமிடங்களுக்குப் பிறகு, பாபாவைப் பார்க்க முடியாவிட்டாலும், அருகில் இருப்பது நல்லது என்ற சிந்தனையில், அவர் பிற அனைவருக்கும் பின்னால் மண்டியிட்டு, மையத்தில் தனக்குக் கிடைத்த பாபாவின் சக்தி வாய்ந்த அனுபவங்களை நினைத்துக் கொண்டு, தலையைக் குனிந்து கேட்டுக் கொண்டிருந்தார். சிறிது நேரத்தில் அவர் தலையை உயர்த்தியபோது எதிரே பாபாவை நோக்கி அன்பர்களிடையே ஒரு தெளிவான இடைவெளி இருப்பதைக் கண்டு வியப்படைந்த நிலையில், நேராக பாபாவிடம் சென்றார். பாபா, ஹென்றியை நேரடியாகப் பார்த்து ஒரு முத்தம் கொடுத்தார்! "ஏன் எனக்கு முன்னால் வேறு எவரும் அமரவில்லை?" என்று ஹென்றி ஆச்சரியப்பட்டார்: அதன் பின்னரே பாபா, அன்பர்களின் 'கடலை இரண்டாகப் பிரித்துவிட்டார்' என்பதை உணர்ந்தார்; இவ்வாறு, ஹென்றி, பாபாவின் இறுதிக் காட்சி ஒன்றை காண முடிந்தது.

ஒரு கட்டத்தில், 1956இல் வில்மிங்டன் விமான நிலையத்திற்கு, முந்தைய விஜயத்தின் போது செய்தது போலவே, பாபா எழுந்து, 'நீக்ரோக்கள்' என்று குறிப்பிடப்பட்ட கருப்பு மனிதர்களின் 'ஆண்கள் கழிப்பறை'க்குச் சென்றார். சிறிது நேரத்தில் வெளியே வந்து குழுவுடன் அமராமல், தனியாக வேறு இடத்தில் அமர்ந்தார்.

பாபா, 'பெக்-ஆன்டி'யை (PEG-ANDY) அழைத்த போது (அவர் மியோ - MUIR தம்பதிகளைக் குறிப்பிடுவது போல்), அவர்கள் விரைந்து சென்று அவர் முன் மண்டியிட்டு அமர்ந்தனர். பாபா தனது கைகளை முஷ்டிகளாக்கி, அவர்களின் முகங்களுக்கு மிக அருகில் கைகளைப் பிடித்தார். அவரது கைமுட்டிகளின்

இறுக்கத்தால், அவரது கைவிரல் கணுக்குகள் வெளிறிப்போய் இருந்தன. இருவரின் கண்களை ஆழமாக உற்று நோக்கிய பாபா, அவர்களின் முகங்களுக்கு முன்னால் தனது கைமுட்டிகளை அசைத்து, "**எனது மேலங்கியை இரு கைகளாலும் பற்றிக் கொள்ளுங்கள். இறுக்கமாக எனது மேலங்கியை இரு கைகளாலும் பற்றிக் கொள்ளுங்கள்**," என்று கடுமையான முகபாவத்துடன் சைகை செய்தார். பாபா இரண்டு முஷ்டிகளையும் ஆன்டியின் முகத்திற்கு முன்னும், பின்பு பெக்கியின் முன்னும் வைத்து, மீண்டும் ஆன்டியிடம், "**நான் சொல்வதை நீங்கள் கேட்கிறீர்களா? நீங்கள் கேட்கிறீர்களா? உங்களுக்கு நன்றாகப் புரிகிறதா? நான் கூறுவதில் கவனம் செலுத்துங்கள்**" என்று கூறினார்.

பின்னர், "**என்ன நடந்தாலும் பரவாயில்லை, எனது மேலங்கியைப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள்**" என்று சைகையால் தெரிவித்தார்; இருவரும் மன்னிக்கப்பட்டனர்.

காலை 8:30 மணிக்கு, தேசிய விமானம் 326இல் புறப்படும் நேரம் நெருங்கியது. ஒரு சக்கர நாற்காலி கொண்டு வரப்பட்டது; தெய்வீக அன்பானவர் அதில் அமர்ந்தார்; அவரைச் சுற்றி அனைவரும் கூட்டமாக, மீண்டும் ஒருமுறை அவரைத் தொட கைகளை நீட்டினர். அவர் வாசலைத் தாண்டிச் செல்லும்போது, அன்பர்களின் கண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது, மேலும் 'அவதார் மெஹர் பாபாவிற்கு ஜெய்!' என்ற உரத்த அழுகைக் குரல் எழுந்தது. முழுக் குழுவும் அவருக்குப் பின்னால் மெதுவாகப் பின்தொடர்ந்து, பாபா (இளஞ்சிவப்பு நிற ஜாக்கெட், வெள்ளை சத்ரா மற்றும் பாத அணிகள் அணிந்திருந்தார்) உதவியின்றி விமானத்திற்கு மெதுவாகப் படிக்கட்டுகளில் ஏறிச் சென்று, திரும்பி, கைகளை அசைத்து விடைபெற்றார்.

ஆன்டி மியோ விமானத்தில் ஏறும் படிகளின் பாதையின் அடிவாரத்தில் தன்னை நிலைநிறுத்திக் கொண்டார். பாபா மேலே ஏறியபோது, ஆன்டி, பாபாவின் சத்ராவின் விளிம்பை மெதுவாகப் பிடித்து பின்பு விடுவித்தார். விமானம் ஓடுபாதையில் நகர்ந்து செல்லும் வரை, பாபா, ஜன்னலிலிருந்து வால் பகுதிக்கு அருகே தொடர்ந்து தனது வலது கையை அசைத்துக்கொண்டே இருந்தார். விமானம் வாஷிங்டன், டி.சி.யை நோக்கிப் பறந்து சென்றது.

பாபா, எரச், ஆதி, நரிமன், டான் ஆகியோருடன் கலிஃபோர்னியாவிற்கு (ஆஸ்திரேலியா செல்லும் வழியில்) லட் டிம்ப்ஃபில் மட்டுமே செல்ல அனுமதிக்கப்பட்டார். வில்மிங்டனிலிருந்து வாஷிங்டன் டி.சி.க்கு சென்ற விமானம் கிட்டத்தட்ட காலியாக இருந்தது; மேலும் ஆறு அல்லது எட்டு பயணிகள் மட்டுமே விமானத்தில் இருந்தனர். பாபா இடது பக்கம் கடைசி வரிசைக்கு எதிர் இருக்கையிலும், லட் அவர் அருகிலும் அமர்ந்தனர். வாஷிங்டனுக்குச் செல்லும் இரண்டரை மணி நேர விமான பயண வேளையில், பாபா, லட்டுடன் உரையாடினார், தொடர்ந்து விமானம் எங்குத் தரை இறங்கும் என்று கேட்டார். 'நியூ பெர்ன், வட கரோலினா, நோர்போக், வர்ஜீனியா இரண்டு இடங்களிலும் தரை இறங்கி, அவர்கள் வாஷிங்டன், டி.சி.யை சென்றடையும்

போது நேரம் சுமார் காலை 11:00 மணியை எட்டிவிடும். அவர்களின் விமானம் கலிஃபோர்னியா செல்ல எவ்வளவு நேரம் பிடிக்கும் (இரண்டு மணிநேரம்); மேலும் அவர்கள் மதிய உணவு எங்கே உண்பார்கள்' என்ற கேள்விகளுடன் உரையாடல் தொடர்ந்தது.

இந்த விமானத்திலோ அல்லது கலிஃபோர்னியாவிற்குச் செல்லும் அவர்களின் அடுத்த விமானத்திலோ மதிய உணவு வழங்கப்படவில்லை. விமானத்தில் உண்ண ஏதாவது உள்ளதா என்று பாபா, பணிப்பெண்ணிடம் கேட்டார். அவரிடம் காலை உணவு தட்டு இருந்ததை, பாபா கொண்டு வரும்படி கேட்டுக் கொண்டார். அவர் சிறிதளவு சுவைத்துவிட்டு, அதை லட் முன் வைத்து, அதை அவரது மதிய உணவாக உண்ணுமாறு கூறினார். பாபா, மண்டலியிடம் உண்ண ஏதாவது உள்ளதா என்று கேட்டார். அவர்களிடம் இருந்ததெல்லாம் ஒரு 'கேன் ஸ்பாம்' (பதப்படுத்தப்பட்ட மாமிசம்) மட்டுமே. டாக்டர் டானிடம் அது சரியாக ஜீரணம் ஆகுமா என்று கேட்ட பிறகு, பாபா அதில் பெரும்பகுதியை உண்டார்.

பாபா, அவர்கள் அப்போது எங்கே இருந்தனர் என்று லட்டிடம் தொடர்ந்து கேட்டதால், லட், டாக்டர் டானின் விமான வரைபடத்தைக் கேட்டு வாங்கி, அதன் பின்னர் அவர்கள் இருக்கும் இடத்தைச் சுட்டிக்காட்டினார். லட், வாஷிங்டன், டி.சி. வரையிலான வரைபடத்தில் அவர்களின் போக்கைக் கண்டுபிடித்து, ஒரு கோடு வரைந்து, அதை மீதமுள்ள நிமிடங்களின் எண்ணிக்கையாகப் பிரித்தார். குறிப்பாக, வாஷிங்டன் வரை, வரைபடத்தில் அவர்கள் எங்கிருந்தார்கள் என்பதை பாபா அறிய விரும்பினார்.

விமானி ஒரு சக்கர நாற்காலிக்காக ரேடியோ மூலமாகத் தொடர்பு கொண்டார். அவர்கள் தொடர்ந்து பயணம் செய்யும் டி.டபிள்யூ.ஏ (TWA) விமானம் 47ஐ நோக்கி பாபாவை அழைத்துச் செல்ல, உதவியாளர் ஒருவர் சக்கர நாற்காலியுடன் காத்திருந்தார். ஐவி டியூஸின் நண்பர் அவர்களை சந்தித்து, 1956ஆம் ஆண்டு பாபாவின் வருகையின் போது எடுத்த காணொளி பதிவுகளின் மூன்று சுருள்களை வழங்கினார்; மேலும் ஒரு சிறுமி அவரது தாயாருடன் பாபாவை சந்தித்த போது, கண்கலங்கி அழுதார். பாபாவும், ஆண்களும் உடனடியாகத் தங்கள் விமானத்தில் ஏறினர்; விமானம் புறப்படுவதற்கு இன்னும் பதினைந்து நிமிடங்களே இருந்தன. மதியம் 1:00 மணிக்கு விமானம் புறப்பட்டது. அவர்களுக்கு விமானத்தில் சிற்றுண்டி வழங்கப்பட்டதால் பசியைத் தணிக்க முடிந்தது.

குழு லாஸ் ஏஞ்சலஸில் விமானங்களை மாற்ற வேண்டியிருந்தது, மேலும் இணைப்பு விமானம் புறப்பட 20 நிமிடங்கள் மட்டுமே இருந்தன; ஆனால் ஏதோ காரணங்களுக்காக, டி.டபிள்யூ.ஏ (TWA) 6:50 மணிக்கு புறப்படும் விமானம் (எண். 77), பாபா மற்றும் அன்பர்களின் வருகைக்காகக் காத்திருக்க முடிவு செய்தது. பாபா மீண்டும் சக்கர நாற்காலியில் உதவியாளர் ஒருவரால் அந்த விமானத்திற்கு அழைத்துச் செல்லப்பட்ட சிறிது நேரத்தில் அது புறப்பட்டது; இரவு 8:40 மணிக்கு ஸான் ஃபிரான்சிஸ்கோவில் தரையிறங்கியது.

லட் ஒரு காரை வாடகைக்கு எடுத்தார், அவர்கள் சரியாக இரவு 9:00 மணிக்கு விமான நிலையத்தை விட்டு வெளியேறினர். லட்டின் வீட்டிற்கு (141 கிரவுன் ரோடு, கென்ட்ஃபீல்ட் - CROWN ROAD, KENTFIELD) எவ்வளவு தூரம் (35 மைல்), அங்குச் செல்ல எவ்வளவு நேரம் ஆகும் (ஒரு மணி நேரப் பயணம்) என்பதை பாபா அறிய விரும்பினார். பாதி தூரம் வந்துவிட்டோமா, இன்னும் எவ்வளவு தூரம் போக வேண்டும் என்று பாபா கேட்டுக் கொண்டே இருந்தார். அவர்கள் வந்ததும், ஏற்பாடுகள் பற்றி கேட்டார்: எத்தனை அறைகள்? படுக்கைகள் எங்கே இருந்தன?

பாபா, 'த்ரீ-பி'யின் (THREE-B) அறையில் (லட்டின் மகள் டயான், DIANE) தூங்க முடிவு செய்தார். வந்த சிறிது நேரத்தில், பாபா தனது பிரம்பு ஒன்றால் வீட்டின் நடுவில் ஒரு கற்பனைக் கோட்டை வரைந்து, "**இரவில் இதைக் கடக்க வேண்டாம்**" என்று லட்டிற்கு அறிவுறுத்தினார். மர்டில் பீச் மையத்திற்குச் செல்வதற்கு முன்னர், அவர்கள் வெப்பத்தையும் சுடுநீரையும் அணைத்ததை லட் திடீரென நினைவு கூர்ந்தார்; எனவே பாபா விதிவிலக்கு அளித்து, சூடான நீரை இயக்க சிறப்புப் பகுதிக்குள் மீண்டும் நுழைய அனுமதித்தார். ஆதி, லட் இருவரும் பாபாவிற்கு 7-அப் (ஸோடா), காலை உணவுக்கு, சில மளிகை சாமான்கள் மற்றும் உள்ளூர் ஹாம்பர்கர் உணவு, 'ஈட் & ரன்' (EAT & RUN) உணவகத்திலிருந்து சிற்றுண்டி ஆகியவற்றை வாங்குவதற்காக ஒரு மளிகைக் கடைக்குச் சென்றனர்.

இறுதியாக அவர்கள் படுக்கைக்குச் சென்றபோது, இரவு 11:30 மணி ஆகிவிட்டது; ஏறக்குறைய 23 மணிநேரத்திற்கு முன்னர் அவர்கள் அதே காலையில் மர்டில் பீச் மையத்தில் விழித்தெழுந்தனர். லட் தூங்குவதற்காகப் படுக்கைக்கு சென்ற வேளையில், நரிமன் அங்கு வந்து, "நீங்கள் பல இரவுகளாக சரியாகத் தூங்கவில்லை, ஆனால் இன்று இரவு நன்றாகத் தூங்குமாறு பாபா உங்களிடம் கூற விரும்புகிறார்" என்றார்.

இரவு முழுவதும் பாபாவின் கண்காணிப்பாளராக இருந்த ஆதி, மறுநாள் 1958 மே 31 அதிகாலை 4:00 மணிக்கு லட்டை எழுப்பினார். வீடு மிகவும் குளிராக இருந்தது; பாபா, வெப்ப உலையை இயக்க விரும்பினார். இரண்டு மணி நேரம் கழித்து, ஆறு மணிக்கு, தூக்கத்திலிருந்து எழும்புமாறு பாபாவின் செய்தியைத் தெரிவிக்க, நரிமன், லட்டின் அறைக்குச் சென்றார். காலை உணவுக்குப் பிறகு, பாபா முழு வீட்டையும் நோட்டமிட்டார். பாபா இரண்டு மணிநேரம் மட்டுமே தூங்கினாலும், அவர் புத்துணர்ச்சியுடன் காணப்பட்டார்; பாபா, நன்றாகத் தூங்கியதாகச் சுட்டிக்காட்டினார்.

காலை 8:00 மணிக்குப் பின்னர், அவர்கள் விமான நிலையத்திற்குச் சென்றனர். லட் அவர்களை 'கோல்டன் கேட்' பாலம் (GOLDEN GATE BRIDGE) வழியாக நெடுஞ்சாலை 101இல் தெற்கு நோக்கி, கோல்டன் கேட் பார்க், ஸன்ஸெட் பவுல்வர்டு (GOLDEN GATE PARK SUNSET BOULEVARD), லேக் மெர்சிட் (LAKE MERCED) வழியாக, ஸான் புருனோ (SAN BRUNO) மற்றும் விமான நிலையத்திற்கு அழைத்துச் சென்றார். லட் தேர்ந்தெடுத்த பாதையை பாபா விரும்பி, அவர் நல்ல

மனநிலையிலும் மகிழ்ச்சியுடனும் காணப்பட்டார். விமான நிலையத்தில், பாபா தனது அன்பர்கள் அனைவரும் ஒன்றிணைய அனுமதித்தார், ஏறக்குறைய 25 அன்பர்கள் வந்திருந்தனர் - சிலர் போர்ட்லேண்ட் (PORTLAND), ஃபீனிக்ஸ் (PHOENIX), லாஸ் ஏஞ்சலஸ் போன்ற தொலைதூரத்திலிருந்து வந்தவர்கள். பாபா அவர்களிடம் கூறினார்:

**மர்டில் பீச் மற்றும் ஆஸ்திரேலியாவில் வாழும் அன்பர்களுக்கு எனது சகவாசத்தை வழங்குவதற்காக, மேற்கத்திய நாடுகளுக்கு நான் இந்தப் பயணத்தை மேற்கொண்டுள்ளேன். எங்குச் சென்றாலும், விமான நிலையங்களில் நான் எவரையும் சந்திக்கவில்லை. இந்த இரண்டு இடங்களில் ஏதாவது ஒன்றில், முழு சகவாச நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளும் அன்பர்களை மட்டுமே சந்தித்தேன் அல்லது சந்திப்பேன். ஆனாலும், ஸான்ஃபிரான்சிஸ்கோவில், நான் விதிவிலக்கு அளித்து, அன்பர்கள் என்னைப் பார்க்க அனுமதித்துள்ளேன். ஆதலால், உங்களைப் பாக்கியவான்களாகக் கருதுங்கள். இப்போது, ஒவ்வொருவரும் என்னிடம் வந்து, எனது கையில் முத்தமிட்டுச் செல்ல வேண்டும்.**

ஒவ்வோர் ஆணும் பெண்ணும் அவ்வாறே செய்தனர்; பின்னர், எரச், பாபாவை சக்கர நாற்காலியில் அழைத்துச் சென்று, விமானத்தில் ஏறும் வாயிலுக்கு கீழே இறக்கிவிட்ட வேளையில், பாபா, மீண்டும் தனது அன்பர்களை சந்திக்க அனுமதித்தார்.

காலம் இவ்வாறு பதிவு செய்தது: “இந்த மேற்கத்திய பயணத்தில், இது, பாபாவின் ஆறாவது மற்றும் கடைசி அமெரிக்க வருகையாகும். 1931 முதல், அவர் மொத்தத்தில் 200 நாட்களை அங்கே கழித்தார். இந்த அவதார காலகட்டத்தில், இனி ஒருபோதும் அவர் அமெரிக்க மண்ணில் பாதங்களைப் பதிக்க மாட்டார். இந்தியாவிற்கு வெளியே அனைத்து நாடுகளிலும், பாபா, வேறு எங்கும் இல்லாத அளவுக்கு, அமெரிக்காவில் அதிக நேரம் செலவிட்டார், மேலும் இது, அந்த நாட்டில் வாழும் ஏராளமான அவரது அன்பர்களுக்காக அவர் செய்த பணியின் சான்றாகும்.”



மெஹர் பாபா, ஆஸ்திரேலியா - ஜூன் **1958**

(MEHER BABA, AUSTRALIA - JUNE 1958)

# அவதார புருஷரின் வாழ்விடம் - ஆஸ்திரேலியா

(**Avatar's Abode – Australia**)

ஃபிரான்சிஸ் பிராபஸோன் ஆஸ்திரேலியாவில் சகவாச நிகழ்ச்சியைப் பற்றிய பாபாவின் திட்டத்தைக் கேள்விப்பட்டதும், அதற்குப் பொருத்தமான இடம் ஒன்றைக் கண்டுபிடிக்கத் தொடங்கினார். ஸிட்னிக்கு மேற்கே, ப்ளூ மவுண்டன்ஸ் (BLUE MOUNTAINS WEST OF SYDNEY) மற்றும் ஆர்மிடேலுக்கு அருகில் அமைந்த நியூ இங்கிலாந்து ஹைலேண்ட்ஸ் (NEW ENGLAND HIGHLANDS NEAR ARMIDALE) வரை, நீண்ட நெடிய தூரம் பயணம் செய்து, இறுதியில், ஒரு நகரம் மையத்திற்கு உகந்தது அல்ல என்பதை அவர் உணர்ந்தார். பின்னர், 1958 ஜனவரி 11 அன்று மணி பின்வரும் கடிதத்தை ஆஸ்திரேலியா அன்பர்களுக்கு அனுப்பினார்:

**அமெரிக்காவில் நிகழவிருப்பது போல், ஆஸ்திரேலியாவிலும் பாபா, அவரது சகவாசத்தை ஒரே இடத்தில் வழங்க உள்ளார். சகவாச நிகழ்ச்சிகளுக்கான ஏற்பாடுகள், அன்புடன், விரும்பி, முடிந்தவரை உதவிக் கரம் நீட்டும் நபர்களின் ஒத்துழைப்புடன், ஃபிரான்சிஸின் கண்காணிப்பில் நடத்தப்படவேண்டும் என்று பாபா விரும்புகிறார். பாபா முக்கிய விஷயங்களை கோடிட்டுக் காட்டும் அதே வேளையில், மேலும் விவரங்களை உங்களிடம் விட்டுவிடுகிறார். சகவாசம் நிகழும் இடம்: பாபா, குயின்ஸ்லாந்து** (QUEENSLAND) **மாகாணத்திற்கு முதல் முன்னுரிமையும், பீக்கன் ஹில்லுக்கு** (BEACON HILL) **இரண்டாவது விருப்பத்தையும் முன்வைக்கிறார். ஜூன் மாதத்தில் தட்பவெப்பம் நன்றாகவும், அந்த இடம் எல்லாக் கோணங்களிலும் - நிதி, வசதி, அனைவருக்கும் தங்குமிடம் போன்றவை - நடைமுறையில் உகந்ததாகவும் இருந்தால், குயின்ஸ்லாந்தை பாபா விரும்புகிறார். ஆனால் நீங்கள் இதற்குக் கட்டுண்டவராக இருக்க வேண்டாம். குயின்ஸ்லாந்து மேற்குறிப்பிட்ட கோணங்களில் பொருத்தமாக இல்லையெனில், நீங்கள் அந்த யோசனையை கைவிட்டு, சம்பந்தப்பட்ட அனைவருக்கும் பீக்கன் ஹில்லில் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். குயின்ஸ்லாந்து நடைமுறையில் வாய்ப்புள்ளதாகக் காணப்பட்டால், அது சிறந்ததாக இருக்கும் - பாபா ஆஸ்திரேலியாவின் மற்றுமொரு பகுதியை தனது பிரசன்னத்தால் ஆசீர்வதிப்பார். என்ன முடிவு எடுக்கப்பட்டது என்பதை ஃபிரான்சிஸ் தெரிவிக்க வேண்டும் என்று பாபா விரும்புகிறார்.**

மொத்தத்தில் இது ஆச்சரியம் அளிப்பதாக இருந்தது. ஃபிரான்சிஸுக்கு அல்லது ஆஸ்திரேலிய பாபா குழுவிற்கு, குயின்ஸ்லாந்துடன் எந்தத் தொடர்பும் இல்லை, அல்லது இதற்கு முன்னர் அங்குச் சென்றதும் இல்லை. இருப்பினும், (ஜூன் மாதம் தொடங்கும்) ஆஸ்திரேலிய குளிர்காலத்தில் பாபா தனது சகவாசிகளுக்கு வெப்பமான காலநிலையை விரும்புவார் என்பதை ஃபிரான்சிஸ்

அறிந்திருந்தார், மேலும் பாபாவின் 'விருப்பம்' என்பதால், அதற்கான கால நேரம் குறைவாக இருந்த போதிலும், செய்ய முடிந்த அனைத்தையும் செய்வேன் என்று ஃபிரான்சிஸ் முடிவு செய்தார்.

கடிதம் கைகளுக்கு வந்து சேர்ந்த ஒரு வாரத்திற்குள், ஃபிரான்சிஸ், குயின்ஸ்லாந்தில் அமைந்த டாம்பரீன் மவுண்டன் (TAMBOURINE MOUNTAIN) மற்றும் படெரிம் (BUDERIM) உள்ளிட்ட மலைப்பகுதிகளைப் பார்வையிடச் சென்றார். இறுதியாக அவர் கீல் மவுண்டனில் (KIEL MOUNTAIN) 82 ஏக்கர் அன்னாசிப்பழப் பண்ணையைக் காண நேர்ந்தது. இது 88 ஆண்டுகளுக்கு முன்பு, ஜெர்மன் லூத்தரன் மிஷனரியின் வம்சாவளியில் வந்த ஹைன்ரிச் கீல் (HEINRICH KIEL, THE DESCENDANT OF A GERMAN LUTHERAN MISSIONARY) என்பவரால் உருவாக்கப்பட்டது. இந்த நிலம், பிரிஸ்பேனுக்கு (BRISBANE) வடக்கே 75 மைல் தொலைவில் அமைந்துள்ளது. தான் சரியான இடத்தைக் கண்டுபிடித்ததாக ஃபிரான்சிஸ் உணர்ந்து, பாபாவிற்கு ஒரு விரிவான கடிதம் வரைந்தார். அந்த இடம் 'மிகவும் பொருத்தமானது' என்று பாபா மீண்டும் தொலைத்தந்தி அனுப்பினார்.

மறைந்த பேரன் வான் ஃபிராங்கன்பெர்க்கின் (BARON VON FRANKENBERG) பண்ணைலிருந்து பெறப்பட்ட பணத்தைப் பயன்படுத்தி, ஃபிரான்சிஸ் அந்த நிலத்தை வாங்கினார்; அதற்கு பாபா, பின்னர் '**அவதாரின் வாழ்விடம்**' (AVATAR'S ABODE) என்று பெயரிட்டார். 450 அடி மலை உச்சியில் இருந்ததால், அவதாரின் உறைவிடம் 360 டிகிரி, (கிழக்கே ஆறு மைல்கள்) பசிபிக் பெருங்கடல் வரையிலான காட்சிகளை உள்ளடக்கி இருந்தது. இப்பகுதி - ஸன்ஷைன் கோஸ்ட் (SUNSHINE COAST) - துணை வெப்பமண்டலமாக இருந்தது, அதன் நுரைத்திரள் (ஸர்ஃப்) கடற்கரைகள், மழைக்காடு நீர்வீழ்ச்சிகள், சிறிய பழங்கள் மற்றும் பால் பண்ணைகளுக்குப் பெயர் பெற்றது. இது சிறிய கிறிஸ்தவ தேவாலய மண்டபங்களைக் கொண்ட ஒரு பகுதி - ஆஸ்திரேலியாவின் மிகவும் மதம் சார்ந்த பகுதிகளில் ஒன்றாகும்.

1958 ஆஸ்திரேலியா சகவாசத்திற்காக, பாபாவும் மண்டலியும் ஸான் ஃபிரான்சிஸ்கோவிலிருந்து 'க்வாண்டஸ் விமானம்' 743/032இல் (QANTAS FLIGHT 743/032), மே 31 சனிக்கிழமை காலை 11:00 மணிக்குப் பயணம் செய்தனர். ஹொனலுலுவில் (HONOLULU) மாலை 6:15 மணிக்குத் தரை இறங்கிய அவர்கள், நான்கு மணிநேர இடைவெளிக்குப் பின்னர் (ஒரு சிறப்பு இரவு உணவு, க்வாண்டஸின் விமான சேவையாக வழங்கப்பட்டது); சர்வதேச தேதிக்கோட்டைக் கடந்து, மீண்டும், ஃபிஜி நாட்டின் நதீ (NADI, FIJI) நகரத்தில் அடுத்த நாள், ஜூன் 2 அன்று காலை 8:00 மணிக்குத் தரையிறங்கி (தேநீர் அருந்தி), அரை மணி நேர இடைவெளிக்குப் பின்னர் அவர்கள் மாலை 3:30 மணிக்கு ஸிட்னி நகரை வந்தடைந்தனர்.

ஸிட்னி விமான நிலையத்தை வந்தடைந்ததும், அவர்களை, பத்திரிகை நிருபர்கள் சந்தித்தனர். அவர்களிடம் உரையாடும் வேளையில், "மெஹர் பாபா அனைத்தும் அறிந்தவர்; இப்போது நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்றும் அவருக்குத் தெரியும்" என்றார் ஆதி.

ஒரு நிருபர், “நான் இப்போது என்ன நினைக்கிறேன்?” என வினவ, பாபாவுடன் ஒரு பார்வையையும் புன்னகையையும் பரிமாறிக்கொண்ட ஆதி, “பாபாவிற்குத் தெரியும் ஆனால் அவர் உங்களிடம் அதை வெளிப்படுத்தமாட்டார்” என்று பதிலளித்தார்.

ஸிட்னி விமான நிலையத்திலிருந்து, பாபாவும் மண்டலியும் டிரான்ஸ் ஆஸ்திரேலியன் ஏர்லைன்ஸ் (TRANS AUSTRALIAN AIRLINE) மூலம் பிரிஸ்பேனுக்கு மாலை 6:15 மணிக்கு புறப்பட்டு, அன்று இரவு 8.45 மணியளவில் அவர்கள் வந்தடைந்தனர். பாபா, எரச்சின் கையைப் பற்றிக்கொண்டு, தார் தளத்தின் குறுக்கே மெதுவாக நடந்தார். அவர்கள், ஃபிரான்சிஸ், பில் லே பாஜ் (BILL LE PAGE), ஜான் ப்ரூஃபோர்ட் (JOHN BRUFORD) ஆகியோரை சந்தித்து, அன்று இரவில் பெல்வியூ ஹோட்டலில் (BELLEVUE HOTEL) தங்க வைக்கப்பட்டனர். பிரிஸ்பேன் வெப்பமண்டல தாவரவியல் பூங்கா (BRISBANE’S TROPICALBOTANIC GARDENS) மற்றும் மாநிலத்தின் கம்பீரமான பார்லிமென்ட் மாளிகையை (THE STATES MAJESTIC PARLIAMENT HOUSE) ஒட்டி - அந்த நேரத்தில் அது பிரிஸ்பேனின் மிக அழகிய பகுதிகளில் ஒன்று என்பதால், பில் அந்த இடத்தைத் தேர்ந்தெடுத்தார். பெல்வியூ ஓர் அழகான ஹோட்டலாக இருந்தது, அதில் பாபா அவரது தனியுரிமையை அனுபவிக்கும் விதத்தில், ஒரு சிறிய தரைமட்ட குடிலையும் உள்ளடக்கியது. ஆனால் பாபா அவரது ‘மிகவும் மோசமான இரவுகளில்’ ஒன்றாக இருந்ததாகக் கூறியபோது, பில் மிகவும் ஏமாற்றமடைந்தார். பில் எதிர்பாராத விதமாக, ஹோட்டலின் பயன்பாட்டிற்காக அதிக அளவு பீர் பீப்பாய்களை இறக்குவதற்கு, சரக்கு வண்டிகள் இரவு நேரத்தைப் பயன்படுத்தியதிலிருந்து எழுந்த சத்தம் பாபாவைத் தொந்தரவு செய்தது.

அடுத்த நாள், 1958 ஜூன் 3 செவ்வாய்க்கிழமை காலை, பாபா, ஃபிரான்சிஸ், பில் இருவரையும் ஹோட்டலின் குடிலுக்குள் அழைத்து, பயணத்திற்கான ஏற்பாடுகளைப் பற்றி அவர்களிடம், அனைத்தும் திட்டப்படி சீராக முடிந்ததா என்பதைக் கேட்டறிந்தார்.

குழு, காலை 9:00 மணியளவில் பிரிஸ்பேன் புறப்பட்டது. ஜான் தனது புதிய காரில் பாபா, எரச், ஃபிரான்சிஸ் ஆகியோரை ஊம்பை (WOOMBYE) குறுநகருக்கு அழைத்துச் சென்றார். பில் பிற மண்டலியுடன் வேறொரு காரில் பின்தொடர்ந்தார். இது குறு நகரங்கள், கிராமப்புறங்கள் மற்றும் காடுகளின் வழியாக நீண்ட பயணமாக இருந்தது. ஆஸ்திரேலியர்கள் பாபாவிடம் கிளாஸ்ஹவுஸ் (GLASSHOUSE) மலைகளைச் (விசித்திர வடிவிலான எரிமலைக் குன்றுகள்) சுட்டிக்காட்டினர். வழியில் எரிபொருள் நிரப்பி, பீர்பம் (BEERBURRUM) என்ற இடத்திலிருந்து குழு பயணத்தைத் தொடர்ந்ததும், பாபாவின் வருகையைப் பற்றிய தகவல் பிற அனைவருக்கும் தெரிவிக்கப்பட்டது. ஜான் ப்ரூஃபோர்ட் இந்தப் புதிய காரில் பாபாவை அழைத்துச் செல்வதில் மிக்க மகிழ்ச்சி அடைந்தார்.

அவர்கள் காலை, எதிர்பார்த்ததை விட சற்று முன்னதாகவே, பயணத்தின் ஒரு பகுதியாக, பாபா, ஜானிடம் வேகமாக ஓட்டச் சொல்லவே, 11:20 மணிக்கு ‘அவதாரின் வாழ்விடம்’ (AVATAR’S ABODE) வந்தடைந்தனர். ஜான்

போலியோ நோயால் தாக்கப்பட்டு, ஒரு கால் ஓட்டுநராக இருந்தார்; ஒருவேளை அவர் சாதாரண உடல் திறன் படைத்தவராக இருந்திருந்தால், பந்தய கார் ஓட்டுநராக கருதப்பட்டிருப்பார்! வேகமாகக் கார் ஓட்டுவதை ரசித்த அவர், அந்த வாய்ப்பை முழுமையாக பயன்படுத்திக் கொண்டார். ஆனால், பாபா விரும்பியபடி காரின் கண்ணாடிகள் மூடப்பட்டு, வெப்பமூட்டும் கருவி இயக்கப்பட்டதால் அவருக்கு பயங்கரமாக வியர்த்தது.

இந்த நேரத்தில் குயின்ஸ்லாந்தில் பாபா-அன்பர்கள் எவரும் வசிக்கவில்லை என்றாலும், ஃபிரான்சிஸ், நான்கு மாதங்களுக்கும் குறைவான நேரத்தில், மின்சாரம் அல்லது ஓடும் நீர் எதுவும் இல்லாத போதிலும், மழையிலும் சாலைகளை தயார் செய்து, பாபாவின் பயன்பாட்டிற்காக தங்கும் இடம், சந்திப்புக் கூடம், பாபாவின் தேவைக்கு ஏற்ப ஒலி ஊடுருவாத படுக்கையறை மற்றும் மரச்சாமான்கள், படுக்கைகள் ஆகியவற்றை அவதாரின் வாழ்விடத்தில் சிறப்பாகச் செய்து முடித்தார். ஃபிரான்சிஸ் சாலையின் ஒரு பகுதியின் சாய்வை கணிசமாகக் குறைத்து சீர்செய்தார், அதனால் பாபாவிற்கு அதிக சிரமம் இருக்காது. ஆஸ்திரேலிய பாபா-அன்பர்கள் உதவி வழங்குவதற்காக அங்கேயே தங்கினர் அல்லது ஸிட்னி மற்றும் மெல்போர்னில் (MELBOURNE) இருந்து நீண்ட தூரம் சென்று தங்களால் இயன்ற பணியில் உதவிக்கரங்களை வழங்கினர். விக்டோரியா மற்றும் நியூ ஸவுத் வேல்ஸ் மாநிலங்களிலிருந்து (STATES OF VICTORIA & SOUTH WALES) சகவாசத்தில் கலந்துகொள்ள எதிர்பார்க்கப்படும் 50 அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களுக்கு, ஃபிரான்சிஸ், குழுவினருடன் மேலதிகமான தங்குமிடங்களை ஏற்பாடு செய்திருந்தார். அசல் பண்ணை வீடு, பெண்மணிகளுக்கான குடியிருப்பு மற்றும் சமையலறை போன்றவை மலையின் கீழ் தளத்திற்கு மாற்றப்பட்டது; மேலும் பாபா மற்றும் மண்டலிக்கு பழைய பண்ணை வீட்டிற்கு அருகில் ஒரு புதிய இல்லம் கட்டப்பட்டது. சகவாசிகள் பிரதான நுழைவாயிலுக்கு அருகில் கூடாரங்களில் தங்க வைக்கப்பட்டனர்.

சகவாச நிகழ்ச்சியில் கலந்துகொள்ள இருந்த 58 நபர்களில் பெரும்பாலோர் முந்தைய நாள் வருகை தந்தனர்; மேலும் உணவு தயார் செய்தல், சுத்தம் செய்தல், பாத்திர பண்டங்களைக் கழுவுதல் போன்றவற்றிற்கான கடமைகள் பட்டியல் முறையில் ஒதுக்கப்பட்டன. சமீபத்தில் பொழிந்த மழை காரணமாக, பாதைகள் மற்றும் சாலைகள் சேறும் சகதியுமாக இருந்தது. ஆனால் பாபாவின் கார் வந்த அந்த வேளையில் சூரியன் பிரகாசித்தது; பாபா அவரது உறைவிடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

பாபா சாலை வழியாகக் காரில் சென்றபோது, ஆஸ்திரேலிய அன்பர்கள் பண்ணை வீட்டில் ஒன்றுகூடி, பாபாவை நோக்கி கைகளை அசைத்தனர், ஆனால் பண்ணை வீடு சற்று தொலைவில், சாலையிலிருந்து 40 அடி அளவுக்குக் கீழே இருந்ததால், பாபா அவர்களைப் பார்க்கவோ, கைகளை அசைக்கவோ முடியவில்லை. பாபாவின் ஏழு வர்ணக் கொடி (மெஹராபாத் சகவாசத்தில் பறக்கவிட்டது) கம்பத்தில் பறந்து கொண்டிருந்தது, ஆனால் எவரும் அருகில்

இல்லை. சொல்லப்போனால், பாபா வரும் வேளையில் அனைவரும் பண்ணை வீட்டில் ஒன்றுதிரளுமாறு ஃபிரான்சிஸ் கேட்டுக்கொண்டதால், ஆஸ்திரேலிய அன்பர்களில் சிலர் பண்ணையை நோக்கி விரைந்தனர். அவர்கள் பாபாவின் வருகையைக் குறித்து 'பாபா வந்துவிட்டார்' என்ற செய்தியை பிறருக்குச் சொல்ல ஆர்வமாக இருந்ததால், அனைவரும் கீழே ஓடினர். பாபாவிற்காகக் கட்டப்பட்டிருந்த வீட்டிற்கு வந்த அவர், ஃபிரான்சிஸிடம், **"என் அன்பர்கள் எங்கே?"** என்று ஆர்வத்துடனும், ஆச்சரியத்துடனும் கேட்டார். பாபா தனது பயணக் களைப்பால் ஓய்வெடுக்க வேண்டியிருந்தால், பண்ணை வீட்டில் காத்திருக்குமாறு குழுவிடம் கூறியதாக ஃபிரான்சிஸ் விளக்கினார். பாபா வீட்டிலிருந்து சிறிது தூரத்தில் அமைந்த சந்திப்பு மண்டபத்திற்குக் குழுவை அழைக்குமாறு கூறி அனுப்பினார்.

மேலும் பாபா, **"குழந்தைகள் எங்கே?"** என்று வினவி, **"பரவாயில்லை, நான் அவர்களை பிறகு பார்க்கிறேன்"** என்றார். குழந்தைகள் பண்ணை வீட்டில் தங்க வைக்கப்பட்டனர், சிலர் உண்மையில் பாபாவைப் பார்க்க மிகவும் ஆர்வமாக இருந்த அதே வேளையில், சகவாசம் பெரியவர்களுக்கு மட்டுமே என அறிவுறுத்தப்பட்டிருந்ததை நினைவில் கொண்டனர்.

அவதாரின் இல்லத்தின் திறவுகோலை ஃபிரான்சிஸ், பாபாவிடம் கொடுக்க, அவர் வீட்டின் கதவைத் திறந்து, உள்ளே பிரவேசித்தார். பாபாவிற்கு வீடும், அவருக்காகப் பிரத்யேகமாகக் கட்டப்பட்ட அறையும் சுற்றி காட்டப்பட்டது. அந்த நேரத்தில் வீட்டின் முன்னும் பின்னும் தெரிந்த ரம்மியமான காட்சிகளையும் பாபா பார்வையிட்டார். அங்கு நின்ற பாபா, **"அடுத்த 700 ஆண்டுகளில் அவதார புருஷரின் வாழ்விடம், உலக யாத்திரை ஸ்தலமாக மாறும்"** என்று கூறினார். 'அது ஒரு நாள் உண்மையிலேயே 'கடவுளின் வாழ்விடமாக'த் திகழும் என்று பாபா கூறியதாக' ராபர்ட் ரூஸ் நினைவு கூர்ந்தார்.

சந்திப்புக் கூடத்தில் முழுக் குழுவும் ஒன்று கூடிய பிறகு, பாபாவின் இடுப்பில் ஏற்பட்ட காயத்தின் வலியைக் குறைக்கும் விதத்தில் ரெக் பாஃபில் (REG PAFFLE) என்பவரால் பிரத்யேகமாகக் கட்டமைக்கப்பட்ட நாற்காலியில் பாபாவை அவரது வீட்டிலிருந்து அழைத்துச் சென்றனர். ரெக் நாற்காலியை ஒருபுறம் தாங்கிச் செல்ல விரும்பினார்; ஆனால் அவர் முன்னோக்கிச் சென்று அந்த வாய்ப்பை அடையப் பெற முடியாத அவ்வேளையில், அவரது எண்ணங்களை அறிந்த பாபா, ரெக் பாஃபிலை அழைத்து, நாற்காலியைத் தாங்கிச் செல்லும் குழுவில் ஒருவராக இருக்குமாறு சைகையால் தெரிவித்தார்.

சந்திப்புக் கூடம், பாபா அமர்வதற்கான பின்பகுதியைத் தவிர, இதர பாகங்கள் கரடுமுரடான சணல் துணி மற்றும் வளைந்து நெளிந்த இரும்புக் கம்பிகளால் தயார் செய்யப்பட்ட சுவர்களின் எளிய அமைப்பாக இருந்தது.

மக்கள் வெறுமனே தரை மீது டின்கள், மரக் கட்டைகள் அல்லது பலகைகளை இருக்கைகளாக அமைத்து அமர்ந்திருந்தனர். நுழைவாயிலில், பாபா கீழே இறங்கி, எரச்சின் உதவியுடன் கூடத்தின் முன் மெதுவாக நடந்து சென்றார்.

பாபா உள்ளே பிரவேசித்த அவ்வேளையில் அனைவரும் எழுந்து நின்றனர்; தங்கள் அன்பானவர் மீண்டும் தங்களுடன் இருக்கும் மகிழ்ச்சியில் அவர்களின் இதயம் நிறைந்து வழிந்தது. பாபா சிறிய கான்கிரீட் மேடையில் ஒரு நாற்காலியில் அமர்ந்தார்; இடுப்புக் காயத்தால் அவர் அவதிப்பட்டபோதிலும், பாபா, கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர், அவர்கள் அவரைப் பார்த்ததைப் போலவே பிரகாசமாகவும் அழகாகவும் தோற்றமளித்தார்.

தொடர்ந்து பாபா, அவரது வருகையின் நோக்கத்தை விளக்கினார்: **“நீங்கள் இங்கு நான்கு நாட்கள் எனது சகவாசத் தோழமையை அனுபவிப்பதற்காக வந்துள்ளீர்கள். ஒவ்வொரு காலையிலும் நாம் 9:00 மணிக்கு சந்தித்து, மதிய உணவைத் தொடர்ந்து ஒரு மணி நேர இடைவேளைக்குப் பிறகு, மதியம் 1:00 மணிக்குத் தொடங்கி, மாலை 4:00 மணி வரை சந்திப்போம். உணவுக்கு என்ன ஏற்பாடு செய்துள்ளீர்கள்? மண்டலி அனைவரும் அதே உணவை உண்பார்கள். ஆடவர்கள் ஏன் சாலை ஓரம் கூடாரத்தில் தூங்குகிறார்கள்?”** என பாபா வினவினார்.

அது பொதுப்பாதையல்ல, சொத்தின் மீது அமைக்கப்பட்ட சாலை, பாபாவின் வீடும் அந்தச் சாலையில்தான் உள்ளது என்றும் ஃபிரான்சிஸ் விளக்கினார்.

அவர் ஃபிரான்சிஸிடம், **“சொத்து யாருக்குச் சொந்தம்?”** என்று கேட்டதற்கு, அது இப்போது பாபாவினுடையது என்று ஃபிரான்சிஸ் பதிலளித்தார். அதற்கு பாபா, **“எனது பெயரில் எந்தப் பொருளும், சொத்தும் இருக்கக்கூடாது”** என்று கூறி, அந்தச் சொத்தை ஃபிரான்சிஸ் பெயரில் பதிவு செய்யுமாறு அவருக்கு அறிவுறுத்தினார்.

**சொத்தின் அளவு, அமைப்பு, மதிப்பு, கட்டிடங்கள் போன்ற பலவற்றிற்குப் பங்களித்தவர்களைக் குறித்து, பாபா பல கேள்விகளை எழுப்பினார். அவரது வருகைக்காக என்ன, எந்த அளவுக்குச் செய்யப்பட்டுள்ளது என்பது குறித்தும் அவர் தமது மகிழ்ச்சியையும் ஆச்சரியத்தையும் வெளிப்படுத்தினார். பாபா ஒவ்வொருவரையும் அவரவர் பெயர் அழைக்கப்பட்ட வரிசையில் நிற்குமாறு அறிவுறுத்தினார். இந்த மக்களின் நிதி உதவிகளை அவர்களுக்கே திருப்பித் தருமாறு பாபா உத்தரவிட்டார்.**

பாபாவின் முன்னால் பல குழந்தைகள் அமர்ந்திருந்தனர்; ஒன்பது வயதுக்கு மேற்பட்ட குழந்தைகள் மட்டுமே சகவாசத்தில் கலந்து கொள்ள வேண்டும் என்று கூறப்பட்டதால், பாபா அவர்களின் வயதைக் கேட்டார். எல்லா குழந்தைகளும் ஒன்பது வயதுக்கு மேலானவர்கள்.

பாபா, ஃபிரான்சிஸிடம் அனைவரையும் அறிமுகப்படுத்துமாறு அறிவுறுத்தவே, ஒவ்வொருவரும் தனித்தனியாக அவருக்கு முன்னால் அழைக்கப்பட்டனர். ஃபிரான்ஸிஸ் ஒவ்வொருவரையும் அருகில் அழைத்து பெயரை மொழிந்த போது, பாபா, அந்த அன்பரை ஆரத்தழுவினார். பில் லே பாஜ் குடும்பம், ஈனா லெமன் (ENA LEMMON), கிளாரிஸ் ஆடம்ஸ் (CLARICE ADAMS), எல்ஸீ

ஸ்மார்ட் (ELSIE SMART), புரூஃபோர்ட் (BRUFORD) **தம்பதிகள், ரெக் பாஃபில்** (REG PAFFLE), லோர்ணா & ராபர்ட் ரூஸ் (LORNA & ROBERT ROUSE) போன்ற பல நீண்டகால அன்பர்களும், புதியவர்களும் வந்திருந்தனர்.

அனைவரும் மீண்டும் அமர்ந்தபோது, பாபா கேட்டார், "**மனம் வருந்தி மன்னிப்புக் கோரும் பிரார்த்தனையை** (REPENTANCE PRAYER) **மனதார மொழியக்கூடியவர்கள் எவரேனும் இருக்கிறார்களா?**" எவரும் அதை நினைவில் வைத்துக்கொள்ளாததால், அதன் பிரதி ஒன்று வரவழைக்கப்பட்டது, ஜான் ப்ரூஃபோர்ட் பிரார்த்தனையை மொழிந்தார். பாபா அப்போது, "**இதுகாறும் நீங்கள் செய்த பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்பட்டுவிட்டன**" என்று கூறினார். இது எவ்வளவு ஆழமானது, எதிர்பாராதது என்று அங்கிருந்தவர்களில் சிலர் பின்பு கருத்துத் தெரிவித்தனர். தங்கள் கடந்தகால வரம்பு மீறிய குற்றம் குறைகள் அனைத்தும் மன்னிக்கப்பட்டதாக அவர்கள் உண்மையிலேயே உணர்ந்தனர்.

அதன் பின்னர் அன்பர்களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது. பில், ஃபிரான்சிஸ் இருவரும் பாபாவை, தனிப்பட்ட முறையில் சந்திக்க அழைக்கப்பட்டனர், மேலும் ஆஸ்திரேலியாவில் பாபாவின் பெயரில் செய்யப்பட்ட பணிகள் குறித்து விவாதித்தனர்.

அதைத் தொடர்ந்து, முழுக் குழுவும் சந்திப்புக் கூடத்தில் மீண்டும் ஒன்றுகூடியது. அந்தச் சொத்தின் பல்வேறு அமைப்புகளைப் பார்வையிட்ட பாபா, இவ்வளவு குறுகிய காலத்தில், அந்த இடத்தைத் தயார் செய்வதற்காக எடுத்த முயற்சியைப் பாராட்டினார். அவர் ஃபிரான்சிஸிடம், "**இதற்கு என்ன தைரியம் தேவை!**" என்று சைகையால் தெரிவித்த பாபா, இதற்காக உதவிய அனைவரின் பெயர்களையும் ஃபிரான்சிஸிடம் கேட்டார்; அப்போது, அவரும், ராய் பால்ச் (ROY BAULCH) என்பவரும் முக்கிய ஊழியர்கள் என்று கூறி, பின்னர் அவர் பிற அனைவரின் பெயர்களையும் ஒவ்வொன்றாக அழைத்த அந்த கணத்தில், அவர்கள் எழுந்து நின்றனர். பாபாவின் வீடு மற்றும் தளபாடங்களைக் கட்டமைப்பதில் மிகவும் கடினமாக உழைத்த ரெக் பாஃபில், ஒவ்வொரு வார இறுதியிலும், ஆஸ்திரேலியா ஹோட்டலில் தனது வழக்கமான பணிகளுக்கு இடைப்பட்ட நேரத்திலும், ஸிட்னியிலிருந்து வடக்கே 620 மைல்கள் முன்னும் பின்னுமாக காரில் பயணம் செய்து, அவர் அவதார புருஷரின் வாழ்விடத்திற்காக அயராது, பணிவுடன் பணிபுரிந்தார்; பாபா அவரை உள்ளே அழைத்து, சந்திப்புக் கூடத்தில் இருந்த நேரம் முழுவதும் அவரை தனது காலடியில் அமர வைத்தார்.

மெஹராபாத் சகவாசத்தைப் பற்றி பாபா குறிப்பிட்டார்; மேலும் திட்டமிட்ட நேரத்தில் அனைத்து ஏற்பாடுகளும் தயாராக இருக்க வாய்ப்பில்லை என்று பெண்டு அஞ்சிய அந்த நேரத்தில், ஐந்தே நாட்களுக்குள் சகவாசத்தில் 800க்கும் மேற்பட்ட ஆண்கள் மற்றும் பெண்களுக்கு வேண்டிய ஏற்பாடுகள் அனைத்தும் செய்யப்பட்டன.

**"ஒருவரின் சொந்த இயல்பின் வரம்பிற்கு வெளியே அடியெடுத்து வையுங்கள்; துகள்களைப் போலாகி விடுங்கள்"** - வேறுவிதமாகக்

கூறப்போனால், **முழுமையாகக் கீழ்ப்படிவது என்றால் என்ன** என்று, கடவுளைத் தேடும் ஒருவருக்கு, ஹஃபீஸ் அறிவுறுத்துவதைப் பற்றிய பாபாவின் சொற்பொழிவை ஃபிரான்சிஸ் வாசித்தார். இடையிடையே பாபா பலமுறை விளக்கமளித்தார்.

முடிவில், பாபா கேட்டார், "**சகவாச காலகட்டம் முழுவதும், அதைத் தொடர்ந்து 1958 ஜூன் 10 முதல் ஜூலை 10 வரை, நீங்கள் அனைவரும் எனக்குக் கீழ்ப்படிய முடியுமா? எனக்குக் கீழ்ப்படிவதற்கு இணக்கம் தெரிவிப்பவர்கள் கைகளை உயர்த்தவும், ஆனால் கீழ்ப்படிதல் என்றால் என்ன என்பதை நன்கு சிந்தித்துப் பார்க்கவும் வேண்டும். உங்களுக்கு இதன் அர்த்தம் புரிகிறதா?**" சிறுவர்களில் நோயல் (NOEL), காலின் ஆடம்ஸ் (COLIN ADAMS), லாரி அடோல்ஃபஸ் (LAWRIE ADOLPHUS) என்ற நபரைத் தவிர அனைவரும் கைகளை உயர்த்தினர். பாபா அந்த மூவரையும் அவர் அருகில் அழைத்து கேட்டார்: "**சகவாசத்தில் கலந்துகொள்வதற்கான நிபந்தனைகளை நீங்கள் அறிவீர்களா? எனக்குக் கீழ்ப்படிவதற்குத் தயாராக இருப்பவர்கள் மட்டுமே அதில் பங்கேற்க வேண்டும்.**"

தனக்குப் புரியவில்லை என்று காலின் கூறினார்; பிற இருவரும் அவருக்குக் கீழ்ப்படிய முடியுமா என்பது குறித்து உறுதியாகத் தெரியவில்லை என்றனர். பாபா, '**சகவாசத்தில் கலந்து கொள்வதற்கான நிபந்தனைகளை, அவர் தனது மகன்களிடம் விளக்கியுள்ளாரா**' என்று கிளாரிஸ் ஆடம்ஸிடம் கேட்டதற்கு அவர் கூறினார், "ஒருவேளை, போதுமானதாக இல்லை."

பாபா கூறினார், "**எனக்குக் கீழ்ப்படிய முடியாத அனைவரையும் நான் அமெரிக்க சகவாசத்தில் கலந்துகொள்ள அனுமதிக்காத போதும், இம்மூவரையும் நான் இங்கே என்னுடன் இருக்க அனுமதிப்பேன்.**"

ராபர்ட் ரூஸ், ஒவ்வொருவரும் தாங்கள் மிகவும் உணர்திறன் மிக்க குறிப்பிடத்தக்க விஷயங்களில், கீழ்ப்படிந்து செல்லுமாறு பாபா கேட்டுக் கொள்வதை கவனித்து, அவரை பாபா கண்டுகொள்ளாமல் கடந்து செல்வார் என்று நம்பினார். ஆனால் அந்த எண்ணம் மனதில் அலைமோதிய அடுத்த கணமே, பாபா அவரிடம் திரும்பி, "**நான் லோர்னாவின்** (LORNA, அவரது மனைவியின்) **கழுத்தைத் துண்டிக்கச் சொன்னால் நீங்கள் எனக்குக் கீழ்ப்படிவீர்களா?**" என்று கேட்டார். ராபர்ட், லோர்னாவை மிகவும் நேசித்ததால், கிட்டத்தட்ட அழுதுகொண்டே, "ஆம்" என்று பதிலளித்தார்.

பதினைந்து வயதான பெர்னார்ட் ப்ரூஃபோர்ட்டிடமும் (BERNARD BRUFORD) பாபா கேட்டார், "**நீங்கள் நிர்வாணமாகப் பள்ளிக்குச் செல்வீர்களா என நான் உங்களிடம் கேட்பதானால், நீங்கள் அதைச் செய்வீர்களா?**" இளமைப்பருவ சிறுவனாக இருந்ததால், பெர்னார்டுக்கு இது ஒரு தர்மசங்கடமான சூழ்நிலையாக இருந்தது. அவ்வாறு செய்வது கடினம் என்று பெர்னார்ட் பதிலளித்தார். பாபா, எதுவும் கூறாமல் கடந்து சென்றார்.

பதினான்கு வயதான சிந்தியா ஆடம்ஸிடமும் பாபா அதே கேள்வியைக் கேட்க, அவர் "எனக்குத் தெரியாது" என்று பதிலளித்தாலும், அவரால் முடியாது

என்பதில் உறுதியாக இருந்தார். பாபா, இப்போதும் எதுவும் கூறாமல் கடந்து சென்றார்.

கூட்டத்தில் இருந்த சில புதியவர்களிடம் பாபா அதே கேள்வியைக் கேட்டார். ஆழ்ந்த மன உளைச்சலுக்கு ஆளான ஒரு பெண்மணி எழுந்து நின்று, தனது குழந்தைகளின் கழுத்தைத் துண்டிப்பது குறித்து, "இது மிகவும் கொடுமையான செயல்" என்று கூறினார். பாபா தலையசைத்து அவரை அமருமாறு சைகையால் தெரிவித்தார். கூட்டத்தில் பங்கெடுத்த அனைவரும் இது, பாபாவுடனான அதி தீவிரமான சந்திப்பு என்பதை நினைவுகூர்ந்தனர்; அதில் அவர்கள் ஒவ்வொருவரும் கீழ்ப்படிதலின் உண்மையான அர்த்தத்தையும், அவர்கள் உண்மையிலேயே அதற்குத் திறமை வாய்ந்தவர்களா என்பதையும் சிந்திக்கத் தொடங்கினர்.

பாபாவின் எதிரில் கையை உயர்த்தாமல் இருந்த அடோல்ஃபஸ், மிகவும் வருத்தமடைந்து, உடனே வெளியேற விரும்பினார்; ஆனால் பாபா அதற்கு செவிமடுக்கவில்லை. பாபா கூறினார், "**இப்போது எனக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று நான் கேட்கவில்லை, எனக்கு ஆதரவாக இருக்குமாறு மட்டுமே கேட்டுக்கொள்கிறேன்.**" அந்த மனிதர் அங்கிருந்து எழுந்து சென்று, "ஆ, இப்போதுதான் எனக்கு நிம்மதி கிடைத்தது!" என்று நினைத்துக்கொண்டே வெளியேறிய அடுத்த கணம், அவர் சிறிது நேரம் அங்கேயே நின்று யோசனை செய்தார்: எனது வாழ்நாள் முழுவதும் நான் ஒவ்வொரு விஷயங்களிலிருந்தும் ஓடி மறைகிறேன். எனவே அவர் மீண்டும் பாபாவிடம் வந்து, கீழ்ப்படிவதற்கு அனுமதிக்குமாறு வேண்டினார். பாபா அவரை அன்புடன் மன்னித்து, அமருமாறு கேட்டுக்கொண்டார்.

பாபா பத்து நிமிட இடைவேளையை அனுமதித்து, குழுவை வெளியே சென்று கீழ்ப்படிதலுக்கான பாபாவின் கோரிக்கையின் உள் அர்த்தத்தைப் பற்றி சிந்திக்குமாறு அறிவுறுத்தினார். சகவாசிகள் திரும்பி வந்ததும், ஒவ்வொரு நபரும் அவரால் இயன்றதைச் செய்யத் தீர்மானித்ததால், சூழ்நிலை தெளிவாக, அமைதியாக இருந்தது. கீழ்ப்படிதல் பற்றிய சொற்பொழிவு தொடர்ந்தது, நான்கு வகையான கீழ்ப்படிதல் விளக்கப்பட்டது (ஒரு படைவீரன், ஊதியம் பெறும் பணிக்காரன், அடிமை மற்றும் கடவுளை நேசிப்பவன்).

அதைத் தொடர்ந்து, பாபா பின்வருமாறு கூறினார்:

**எந்த சமரசமும் இருக்க முடியாது; உலகை நேசிக்க முடியாது, கடவுளையும் நேசிக்க முடியாது. சாதாரண உலக மனிதன் சமரசம் செய்தாக வேண்டும்; ஆனால், உலகத்தின் வழிகளில் எனக்குக் கீழ்ப்படிவதில் எந்த சமரசமும் இருக்க முடியாது.**

**பாபா கடவுள், அவர் பரிசுத்தமானவர்; உங்களில் உள்ள அசுத்தங்களே என்னை உங்கள் இதயங்களில் நுழைய விடாமல் தடுக்கின்றன. நீங்கள் என்னை விலக்கி வைத்திருந்தாலும், நான் உங்களில் இருக்கிறேன்.**



**அவதார புருஷரின் இல்லம், ஜூன் 1958**
(AVATAR'S ABODE- JUNE 1958)







பாபா, அமெரிக்காவில் வழங்கிய சொற்பொழிவுகளை இந்தக் குழுவிற்கும் வாசிக்குமாறு அறிவுறுத்தினார். இவை வாசிக்கப்பட்டாலும், பாபாவே பேசுவதைப் போல் இருந்ததாகக் கலந்துகொண்டவர்கள் உணர்ந்தனர். மேலும் விளக்கங்களை வழங்க அவ்வப்போது பாபா இடையே குறுக்கிட்டார். சகவாசத்தின் அர்த்தத்தைப் பற்றிய சொற்பொழிவின் முடிவில், பாபா மேலும் கூறினார்:

**இந்தப் பௌதீக உடலில் நீங்கள் என்னைப் பார்ப்பது இதுவே கடைசி முறை. இன்னும் பன்னிரண்டு மாதங்களில் நான் இந்த உடலை கைவிடப் போகிறேன். காலம், நேரம் அனைத்தும் ஒரு மாயை; நீங்கள் கடந்த காலத்தையும் எதிர்காலத்தையும் மறந்துவிட்டு நித்தியத்திற்காக வாழ வேண்டும். இதர அனைத்தும் மாயை, கடவுள் மட்டுமே நித்தியமானவர். ஒரு சிலர் மட்டுமே எனது மேலங்கியைப் பற்றிப் பிடித்துக் கொள்வார்கள். வரவிருக்கும் காலத்தில் நீங்கள் அதைக் கெட்டியாகப் பற்றிக் கொள்ளுங்கள்.**

**இந்த சகவாசத்தின் போது, நீங்கள் உங்கள் பிரச்சினைகள், குடும்பங்கள், பணிகள் மற்றும் பலவற்றை மறந்துவிட்டு, நான் உங்களுடன் இருப்பதை அனுபவிக்க வேண்டும். நான் உங்கள் ஒவ்வொருவருக்குள்ளும் நிலைகொண்டிருப்பதால், உங்கள் பிரச்சினைகள் அனைத்தையும் நான் அறிவேன்.**

**நான் ஆஸ்திரேலியாவிற்கு வந்த எனது பணியின் மிக முக்கியமான பாகத்தை இன்று முடித்துவிட்டேன். நேரம் என்பது மாயை என்றாலும் நாளை காலை ஒன்பது மணிக்கு மீண்டும் நாம் சந்திப்போம்!**

இளைஞரான காலின் ஆடம்ஸின் கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்தது, பாபா அவரிடம், "**பாபா உங்களை நேசிக்கிறார், நீங்கள் சோகமாக இருக்கக்கூடாது**" என்று சைகையால் தெரிவித்தார். அவர் வெளியே மெதுவாக விழும் மழைத் தூறல்களைக் காட்டி, "**நீங்கள் அழும்போது, பாபாவும் அழுகிறார்!**" என்று கூறினார்.

இது, காலினுக்கு ஆறுதல் அளிக்கவில்லை; எனவே, பாபா, அவனது தாயார் கிளாரிஸை எழுந்து நிற்குமாறு சைகை செய்தார். அவர் எழுந்து நின்ற போது, பாபா அவரிடம் வலியுறுத்திக் கூறினார், "**நீங்கள் காலினிடம் பேச வேண்டும். அவனுக்கு விஷயங்களை விளக்குங்கள். அவன் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும், மேலும் அவன் மகிழ்ச்சியாக இருப்பதை நீங்கள் பார்த்துக்கொள்ள வேண்டும்.**"

பன்னிரெண்டு வயது சிறுவனுக்கு கீழ்ப்படிதலை எப்படி விளக்குவது என்று கிளாரிஸ் யோசித்துக் கொண்டிருந்தபோது, பாபாவின் கண்களைக் காண நேர்ந்தது. அவர் நினைவு கூர்ந்தார், "அந்த கணத்தில், பாபாவிற்கு அனைத்தும் தெரியும் என்று நான் முதல்முறையாக நம்பினேன். தெளிவாக, எந்த சிந்தனையுமின்றி நான் அதை நம்பினேன். பாபாவிற்கு அனைத்தும் தெரியும்!"

அப்போது காலின் ஓடி வந்து, "அம்மா, நீங்கள் எப்படி (பாபாவிற்குக் கீழ்ப்படிவதாக) உறுதியளிக்கிறீர்கள்? எவரையேனும் புண்படுத்தும்படி அவர் உங்களிடம் கேட்கலாம்!"

கிளாரிஸ், "சரி, இப்போது பாருங்கள், பாபாவிற்கு அனைத்தும் தெரியும் என்று நான் நம்புகிறேன்..." என்று கூறி அதை அவர் உண்மையில் விளக்க முயற்சித்தார்: "எனவே, அவர் உங்களிடம் ஒன்றை செய்யுமாறு கூறுவதை, நீங்கள் புரிந்துகொண்டாலும், இல்லையென்றாலும் அனைத்தும் சரியே!"

காலினின் கலங்கிய முகம் இப்போது பிரகாசமாக இருந்ததால் அவர் தொடர்ந்து விளக்க வேண்டிய அவசியம் இல்லை, அவன், "ஓ, அவருக்கு அனைத்தும் தெரிந்தால் சரி!" என்றான்.

சிறிது நேரம் கழித்து, பாபா தனது இல்லத்திற்குச் சென்றார். பாபாவுடனான அந்த முதல் நாள் நிகழ்ச்சிக்குப் பின்னர், எல்ஸி ஸ்மார்ட் தனது உணர்வுகளை நினைவு கூர்ந்தார்:

ஒரு வலுவான பெரிய நீரோட்டத்தில் போராடி, இப்போது பாதுகாப்பாக இருக்கும் மக்களைப் போல, நாங்கள் அனைவரும் அன்றைய பதற்றத்தை, கடந்த சில நாட்களாக இடியுடன் கூடிய மழை, காற்றை அடித்துச் செல்வது போல் உணர்ந்தோம். பாபாவின் அன்பின் அரவணைப்பில் எங்கள் இதயங்கள் கரைந்து, ஒவ்வொருவரும் புதிதாக, புத்துணர்ச்சியுடன் இருப்பது போல தோன்றியது. முதல் நாள் சகவாசத்தில் எங்களுடைய குறிப்பிட்ட பிரச்சினைகளையும், எங்கள் நண்பர்களின் உணர்திறன் மிக்க எதிர்வினைகளையும் எதிர்கொள்ளும் வலிமையையும் அடையப்பெற்றதாக உணர்ந்தோம்... மாலை உணவில் விதவிதமான விவாதம், சிரிப்பு ஆரவாரம், ஒரு பெரிய மகிழ்ச்சிகரமான குடும்பத்தின் உரையாடலின் சலசலப்பு அனைத்தும் இடம்பெற்றது.

1958 ஜூன் 4 புதன்கிழமை காலை 6:00 மணிக்கு பாபா எழுந்து, பின்னர் அவரது இல்லத்தில் தனிப்பட்ட நேர்காணல்களை வழங்கினார். அவருக்காகப் பிரத்யேகமாக கட்டப்பட்ட அறையில் (இப்போது 'பாபாவின் அறை' என்று அழைக்கப்படுகிறது) அவர் அமர்ந்திருந்தார். அவரது வருகையை எதிர்நோக்கி, சீராகக் கட்டி முடிக்கப்பட்ட ஒரே அறை அது மட்டுமே. நான்கு சுவர்கள், கூரை மற்றும் தளம் ஆகியவை உலோகக் கட்டிடத்தின் உள்ளே ஒரு முழுமையான 'குறுகிய, பாதுகாப்பான அறை' போன்ற தோற்றத்தை உருவாக்கியது; அந்த நேரத்தில், ஃபிரான்சிஸ் அதை ஒரு நாள் அங்கிருந்து அகற்றி, கெய்ல் மலையின் உச்சியில் அவதார புருஷருக்கு உகந்த முறையில், ஓர் அற்புதமான கட்டிடத்தில் வைப்பதை நோக்கமாகக் கொண்டிருந்தார். இந்த அறை ஆஸ்திரேலிய கடின மரங்களால் கட்டப்பட்டது ('அடுத்த 700 ஆண்டுகளையும் தாண்டி நீடூழி வாழவேண்டும்' என்று ஃபிரான்சிஸ் நியாயப்படுத்தினார்).

பாபா மீண்டும் சிந்தியா ஆடம்ஸிடம் அவர், பாபாவிற்குக் கீழ்ப்படிவாரா என்று கேட்கவே, சிந்தியா ஒருவேளை அவர் வீட்டிற்கு அனுப்பப்படுவாரோ என்ற அச்சத்தில், ஒரு குழப்பமான இரவைக் கழித்து, இந்தப் பிரச்சினையைக்

குறித்து சிந்தனை செய்து, “என்னால் இயன்றவரை முயற்சி செய்கிறேன் பாபா” என்று பதிலளித்தார்.

**“நூறு சதவீதம்? 100 சதவீதம் முயற்சி செய்வீர்களா?”** என்று பாபா கேட்டார்.

“ஆம்,” அவர் பதிலளித்தார்.

சிந்தியா பின்னர் அவர் எப்படி உணர்ந்தார் என்பதை நினைவு கூர்ந்தார்:

1956இல் நான் பாபாவை முதன்முதலில் சந்தித்தபோது, அவரை மிகவும் வியக்கத்தக்க விதத்தில், மிகவும் உன்னிப்பாக கவனிப்பவராக, புதிர் நிறைந்தவராக, ஆனால் பிரமிப்பூட்டுபவராகக் கண்டேன். ஆனால் இந்த சந்தர்ப்பத்தில் அவதார புருஷரின் வாழ்விடத்தில், பாபா மிகவும் சக்தி வாய்ந்தவராகவும், மிக மிகக் கடுமையானவராகவும் இருப்பதைக் கண்டேன். கீழ்ப்படிதல், அன்பு இவற்றைப் பற்றி எடுத்துரைத்து, அவர் என்னை அச்சுறுத்துவதைப் போல தோற்றமளித்தார் - இவை இரண்டும் என்னிடம் போதிய அளவில் இல்லை என்பதால் என்னால் எப்படியும் செய்ய முடியாது என்றும் உணர்ந்தேன்.

பில் லே பாஜ் பின்னர் எழுதினார்:

பொதுவாக இந்த இரண்டாவது ஆஸ்திரேலியா விஜயம் முழுவதும், பாபா தீவிரமானவராகவும், சில நேரங்களில் மட்டுமே சிரிப்பை வெளிப்படுத்தி, அமைதியாக ஒதுங்கி இருப்பது போலவும் தோற்றமளித்ததோடு, அவர் தனது முதல் வருகையைக் காட்டிலும் நிச்சயமாக மிகவும் கடுமையாக இருந்தார். முதல் வருகையில் அவர் விதைத்த அன்பின் விதை முளைத்து, தளிர்விடுவதை விரைவுபடுத்த நினைத்தது போல் இருந்தாலும், இந்த விஜயத்தில் நமது நகைச்சுவை மனநிலையைத் தூண்டாத அதே நேரத்தில், நாம் அவரை நேசித்து, அவருக்குக் கீழ்ப்படிவதில் உண்மையாக நாம் அதைச் ‘செய்வோமா?’ அல்லது ‘செய்ய மாட்டோமா?’ என்பதில் ஆர்வம் காட்டவில்லை.

ஆஸ்வால்ட் ஹாலின் நேர்காணலின் போது, பாபா, ஏன் அவரது மனைவி பெற்றி (BETTY) அங்கு இல்லை என்று கேட்டார். பின்னர் ஒரு தெளிவான புன்னகை ததும்பும் முகத்துடன், அவரது முழு கவனைத்தையும் பாபா அவர் மீது ஈர்த்தார். ஆஸ்வால்ட் வீடு திரும்பியதும், பெற்றி அவரிடம், ஒரு நாள் காலையில் தரையை சுத்தம் செய்து கொண்டிருந்த வேளையில், ’பேரானந்தம்’ என்று அழைக்கும் ஒன்றில் ஆழ்ந்துவிட்டதாகக் கூறினார். அது சிறிது நேரம் நீடித்து, பின்பு மறைந்தாலும், அவர் அதை ஒருபோதும் மறக்க மாட்டார், அது எப்பொழுதும் உள்ளளவில் இருக்கும் என்று அவருக்குத் தெரியும். பாபாவுடனான ஆஸ்வால்டின் அந்த நேர்காணல் சரியாக அதே காலை நேரத்தில் நிகழ்ந்ததாகத் தெரிய வந்தது.

நேர்காணல்களின் போது, ரூஸ் மற்றும் புரூஃபோர்ட் குடும்பங்கள் இந்த நிலத்தில் தங்குவதற்கான சாத்தியக்கூறுகள் உரையாடலில் எழுந்தது. பாபா, இந்தியா திரும்பிய பின்னர் இந்த விஷயத்தைப் பரிசீலிப்பதாகத் தெரிவித்தார்.

1958 ஜூன் மாத இறுதியில், ரூஸ் மற்றும் புரூஃபோர்ட் குடும்பங்கள் அவதார புருஷரின் வாழ்விடத்தில் தங்க வேண்டும் என்று பாபா கடிதம் அனுப்பினார். ரூஸ் குடும்பம் பண்ணை வீட்டிற்குச் சென்றதைத் தொடர்ந்து, அந்த நிலத்தில் ஒரு வீட்டைக் கட்ட ப்ரூஃபோர்டுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

அவரது நேர்காணலின் போது, ராபர்ட் ரூஸ் 'அவதாரின் வாழ்விடம்' (AVATAR'S ABODE) அமைந்த மொத்த நிலத்தின் ஒரு பகுதியை விவசாயம் செய்யுமாறும், பாபா ஆஸ்திரேலியாவிலிருந்து புறப்பட்டுச் சென்ற பின்பு, பில் லே பாஜ் ஸிட்னிக்குத் திரும்புமாறும் அறிவுறுத்தப்பட்டனர். ராபர்ட், பில் இருவரும் மண்டலி உறுப்பினர்களாக அங்கம் வகிப்பவர்கள் என்று பாபா குறிப்பிட்டார்.

மதிய உணவு நேரம் வரை நேர்காணல்கள் நீடித்தன. மதிய உணவுக்குப் பிறகு, குழு திரும்பி வந்ததும், பாபா இல்லத்தில் அமைந்த விசாலமான அறையில் மெஹராபாத் மற்றும் மர்டில் பீச் சகவாச நிகழ்ச்சிகளில் வழங்கப்பட்ட சொற்பொழிவுகள் இங்கும் வாசிக்கப்பட்டது.

மழை தூறிக் கொண்டிருந்தது, பாபா கூறினார், **"உங்கள் வெதுவெதுப்பான மழையுடன் கூடிய வானிலை எனக்கு மிகவும் பிடிக்கும். இது 1955இல் இந்தியாவில் நடந்த முதல் சகவாசத்தை எனக்கு நினைவூட்டுகிறது, அந்த நாளிலும் மழை பெய்தது."** பாபா கட்டிடத்தின் எளிமை பற்றியும், மெஹராபாத்தில் தனது ஆரம்ப நாட்களை இது, எப்படி நினைவுபடுத்தியது என்றும் கூறினார்.

'**அன்பர்கள் சோர்வாக இருப்பதாக நினைக்கிறீர்களா, சிறிது நேரம் வெளியே செல்ல வேண்டுமா**' என்று பாபா, ஃபிரான்சிஸிடம் கேட்டார். பில் பத்து நிமிட இடைவேளை கேட்டபோது பாபா தயங்கினார், **"ஓர் இடைவேளை என்பது இடைவேளைதான்..."** என்று கருத்துரைத்த அவ்வேளையில், அனைவரும் சொற்பொழிவைத் தொடருமாறு பரிந்துரைத்தனர், இருப்பினும் பலர் கொட்டாவிவிட்டு மிகவும் சோர்வாகக் காணப்பட்டனர். அன்று மதியம் கூட்டம் சற்று சீக்கிரமாகவே நிறைவடைந்ததால், அனைவரும் தத்தமது குடியிருப்புக்குத் திரும்பிச் சென்றனர்.

1958 ஜூன் 5 வியாழன் காலை 8:55 மணிக்கு, குழு பாபாவின் இல்லத்தில் ஒன்றுகூடிய அவ்வேளையில், பாபா, அன்பர்கள் அனைவரும் நன்றாகத் தூங்கினார்களா என்று கேட்டார், தூங்காதவர்கள் எழுந்து நின்று ஏன் என்று சொல்ல வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டனர். மனம்வருந்தி மன்னிப்புக் கோரும் பிரார்த்தனையை (REPENTANCE PRAYER) டான் மொழியவே, அனைவரும் எழுந்து நின்றனர். **அவரை நேசிப்பவர்கள், ஆனால் சகவாசத்தில் பங்குகொள்ள முடியாதவர்கள் உட்பட அனைவரும், அந்த நிமிடம் வரை செய்த பாவங்கள் மற்றும் குற்றம் குறைகளுக்காக, மன்னிக்கப்பட்டதாக** பாபா மீண்டும் கூறினார்.

பெண்மணிகள் தங்கும் அறைக்கு (பழைய பண்ணை வீடு - பின்னர் அது ரூஸின் குடியிருப்பாக மாறியது) பாபா செல்வதற்கு காலநிலை சீராக உள்ளதா என்று பார்க்க அவர் ஃபிரான்சிஸை வெளியே அனுப்பிவைத்தார். சகவாசிகளுக்கான உணவு இங்குதான் தயார் செய்யப்பட்டது. தொடர்ந்து மேகமூட்டமாக இருந்தாலும் மூடுபனி மேலெழுந்து கொண்டிருந்தது. ஃபிரான்சிஸ் மழை தூறல் விழும் வாய்ப்புள்ளதாகக் தெரிவித்தாலும், பாபா எப்படியும் அங்குச் செல்ல முடிவு செய்தார். அவர் ஒரு மேல் கோட்டை அணியவே, ஜான் ப்ரூஃபோர்ட் மலையிலிருந்து பண்ணை வீட்டிற்கு பாபாவை அழைத்துச் சென்றார். இடுப்புக் காயத்தால் வலி இருந்தபோதிலும், பாபா நீண்ட படிக்கட்டுகளில் ஏறி, வீட்டின் உள்ளே சென்று அறைகளை ஆய்வு செய்தார். சமையல்காரர்களை அழைத்தார். பாபா அடுக்குப் படுக்கைகளில் ஒன்றைச் சுட்டிக்காட்டி, அது மே லண்ட்கிஸ்ட்டினுடையது என்று கூறினார். பின்னர் அவர் மேயின் படுக்கையருகே தொங்கவிடப்பட்டிருந்த புகைப்படத்தைக் காட்டினார். இனிமையாக சிரித்துக்கொண்டே, மே, அவருக்கு எவ்வளவு பிரியமானவர், அவர் பாபாவை எவ்வளவு நேசித்தார் என்று குறிப்பிட்டார். அப்போது பாபா, சாலையோரம் போடப்பட்டிருந்த ஆண்களின் கூடாரங்களைப் பார்க்க காரில் அழைத்துச் செல்லப்பட்டார். அவர் கூடாரங்களை ஆய்வு செய்யும் போது ஒரு கூடாரத் தூணில் சாய்ந்து நின்றார்.

பாபா இல்லத்திற்குத் திரும்பி வந்ததும், அவர் பெண்மணிகளை வரவழைத்தார். இந்த சந்திப்பில் கலந்துகொண்டவர்கள், இதை ஒரு மிகவும் நெருக்கமான, சிறப்பான நிகழ்வாக நினைவு கூர்ந்தனர். உதாரணமாக, ஜோனா ப்ரூஃபோர்ட் இவ்வாறு நினைவு கூர்ந்தார்:

பாபா, மிகவும் நிதானமாக இருந்தார்! குடும்ப உறுப்பினர்களுடன் தமது இல்லத்தில் இருப்பது போல் இருந்தது. அவர் அங்கே கட்டிலில் அமர்ந்தபோது, அவர் அருகில் பெண் மண்டலி அனுப்பிய பல பொருட்கள் இருந்தன. அவர் அங்கே சாய்ந்து, ஏதோ விளையாட்டில் ஈடுபட்டிருப்பது போல தோற்றமளித்து, பெண்மணிகளில் யார் ஒருவருக்கு என்ன கொடுக்க வேண்டும் என்று ஆராய்ந்து கொண்டிருந்தார். பாபா ஒரு சிறிய காரியத்தில் அதிக நேரம் எடுத்துக்கொள்வதைப் பார்க்க மிகவும் அருமையாக இருந்தது.

பாபா படுக்கையில் பட்டு மெத்தைகளில் சாய்ந்திருக்க, பெண்மணிகள் அறையில் கம்பளத்தின் மீது அவரைச் சுற்றி அமர்ந்திருந்தனர். பாபாவின் விளக்கங்களை எடுத்துரைக்க எரச் அவர் அருகில் நின்றுகொண்டிருந்தார். மெஹராவைப் பற்றி பாபா அவர்களிடம் கூறினார்: "**மெஹரா பெண்மணிகளில் அதி தூய்மையானவர், அவர் உங்கள் அனைவருக்கும் அவரது அன்பை அனுப்பியுள்ளார். உங்கள் ஒவ்வொருவருக்கும் சில பரிசுகளையும் வழங்க விரும்புகிறார். மெஹராவிற்குப் பிறகு மணி, எனது சகோதரி. அவருக்கு என்னைத் தவிர வேறு எந்த சிந்தனையும் இல்லை. அவர் எனக்காக அனைத்தையும் செய்கிறார்.**"

பாபா அவர்களுக்கு, மெஹரா, மணி மற்றும் இதர பெண் மண்டலியின் புகைப்படங்களைக் காட்டி, அதற்குப் பிறகு, மெஹரா அவர்களுக்குக் கொடுக்குமாறு கூறி அனுப்பிய நான்கு பெரிய புகைப்படங்களை எடுத்துக் காட்டி, **“இப்போது இவற்றை யாருக்குக் கொடுக்க வேண்டும்?”** என்று கேட்டார்.

ஜோன் ப்ரூஃபோர்ட் கூறினார், “பாபா அன்பர்கள், யார் ஒருவருடைய இல்லங்களுக்கு அதிகம் செல்கிறார்களோ, அவர்களுக்கே அவை செல்ல வேண்டும் என்று நான் நினைக்கிறேன்.”

எனவே, கிளாரிஸ் ஆடம்ஸ், ஃபிரான்சிஸ் லீ, லோர்னா ரூஸ், ஜோன் லே பேஜ் ஆகியோருக்கு பாபா தலா ஒன்றைக் கொடுத்தார். அதைத் தொடர்ந்து, பாபா எஞ்சியுள்ள பரிசுகள், சிறிய தோல் பாத அணிகள் மற்றும் கை வளையல்களை வழங்கினார். அவர்கள் திரும்பிச் செல்வதற்கு முன்னர், ஒவ்வொருவருக்கும் பாபாவின் தலைமுடிக் கொத்து ஒன்று அவரால் கொடுக்கப்பட்டது. பாபாவின் இரண்டு பெரிய வண்ணமயமான புகைப்படங்கள் அவரது அறையில், ஒன்று வாசலின் உட்புறத்திலும் மற்றொன்று வெளிப்புறத்திலும் தொங்கவிடப்பட்டன.

பெண்மணிகள் வீட்டு வராண்டாவிற்குச் சென்றதும், ஆண்கள் பாபாவுடன் தனிமையில் அமரும் வாய்ப்பைப் பெற்றனர். ஒவ்வொருவருக்கும் மெஹராபாத் மேல் மலையிலிருந்து எடுத்துவந்த ஒரு சிறிய கூழாங்கல் கொடுக்கப்பட்டது. காலை நிகழ்ச்சி முடிந்துவிட்டதாக நினைத்து, பின்னர் அனைவரும் பண்ணை வீட்டிற்குத் திரும்பிச் செல்லவே, பாபா மீண்டும் பிரசாதத்திற்காக அனைவரையும் அழைத்தார். பாபாவின் அறிவுறுத்தல்களின்படி, அருகில் அமைந்த பண்ணை வீட்டில் தங்கியிருந்த குழந்தைகள், தொடர்ந்து முதலில் பெண்களும், இறுதியாக ஆண்களும் அழைக்கப்பட்டனர். அவர் ஒரு சிலரை நோக்கி இனிப்பு மிட்டாய்களை வீசினார், ஆனால் அவற்றைப் பற்றிப் பிடிக்காத பட்சத்தில், மறுபடியும் வீசுவதற்காக அவை அவரிடம் திருப்பித் தரப்பட வேண்டும்.

பில் லே பாஜ் இவ்வாறு நினைவு கூர்ந்தார்:

நான் வீட்டின் ஒருபுறமும், ஃபிரான்சிஸ் மறுபுறமும் அமர்ந்திருந்த போது, பாபா முதலில் ஃபிரான்சிஸைப் பார்த்து, பின்னர் என்னை பார்த்ததும், அடுத்தவர் ஃபிரான்சிஸ் என்று நான் நினைத்துக்கொண்டேன்; கைகளைக் கப் வடிவில் வைத்திருந்த எனது மடியில் ஒரு சிகப்பு, சதுர மிட்டாய் வேகமாக வந்ததைக் கண்டேன் - பாபாவிற்கும் எனக்கும் இடையே சுமார் 20 அடி தூரம்! நான் அசைவின்றி நகராமல் இருந்தேன். நான் அமர்ந்திருந்த இடத்தைக் கூடத் திரும்பிப் பாராமல், பாபா என்னை நோக்கி மிட்டாயை வீசினார்.

குழு மதிய உணவுக்காக, பண்ணை வீட்டிற்குத் திரும்பிச் சென்று, பின்பு மதியம் 1:00 மணிக்கு பாபாவின் இல்லத்தில் மீண்டும் ஒன்றுகூடியது. பாபா வராந்தாவில் அமர்ந்திருந்தாலும், ‘தொலை தூரத்தில்’ தீவிரமாகப் பணிபுரிந்து கொண்டிருந்தது தெரிந்தது. அவரது முகம் உள்வாங்கப்பட்ட தோற்றத்தில், கடுமையான துன்பத்தை வெளிப்படுத்தியது. பாபா அவர்களிடம் கூறினார்: **“இந்த**

**சகவாசம் ஒரு வகையில் தனித்துவமானது, ஏனெனில், நீங்கள் எனது அதிர்ஷ்டசாலியான தோழர்களாக என் அருகில் இருப்பதன் மூலம், எனது தற்போதைய உலகளாவிய துன்பத்தைப் பகிர்ந்து கொள்வீர்கள்; அதே வேளையில் முழுவதுமான மனித நிலையில் நான் உங்களுடன் இருக்கிறேன்.**"

ஒரு கட்டத்தில், பாபா, "700 **ஆண்டுகளில், அவதார புருஷரின் வாழ்விடம் உலக புனித யாத்திரை ஸ்தலமாக மாறும்**" என்று கருத்துத் தெரிவித்தார்.

இளம் பெர்னார்ட் ப்ரூ·போர்ட், காலின் ஆடம்ஸ் இருவரும் புகைப்படம் எடுத்து பாபாவின் மனநிலையை சீர்குலைக்க தயங்கினர். சிறுவர்கள் தங்கள் கேமராக்களுடன் நெருங்கி வந்த வேளையில், பாபாவின் வெளிப்பாட்டின் தீவிரத்தைக் கண்டு, மனம் மாறி அமைதியாக விலகிச் சென்றனர்.

பாபாவின் புகைப்படம் எடுக்க வேண்டுமா என்று எரச் கேட்டபோது, பெர்னார்ட் பதிலளித்தார், "ஆம், ஆனால் புகைப்படம் எடுப்பது சரிதானா? நாங்கள் அவரை தொந்தரவு செய்ய விரும்பவில்லை." எரச், சிறுவர்களை முன்னோக்கிச் சென்று, சில புகைப்படங்களை எடுக்கும்படி ஊக்கப்படுத்தியதும், அதை அவர்கள் செய்தனர்.

பல ஆண்டுகளுக்குப் பின்னர், எரச் அந்த சம்பவத்தை நினைவுகூர்ந்து, பெர்னார்டை ஊக்கப்படுத்தியதில் எவ்வளவு மகிழ்ச்சியடைவதாகக் கூறினார்; ஏனெனில் 'மிகவும் தீவிரமான' மனநிலையில் எடுக்கப்பட்ட பாபாவின் புகைப்படங்கள் மிகக் குறைவு - இதற்கு மண்டலி மிகவும் பழக்கப்பட்டவர்களாக இருந்தாலும், வேறு பல வெளி நபர்கள் அதை ஒருபோதும் பார்த்ததில்லை.

சிறிது நேரம் கழித்து, பாபா எழுந்து, எரச்சின் கையில் சாய்ந்து, சூரிய வெளிச்சத்தில் சில படிகள் நடந்து, வீட்டின் முன்புறம் சென்றார்; அங்கு அவர் பல மலைகளைச் சார்ந்து கடல் நீண்டு நிலைகொண்டிருந்த அழகிய காட்சியை ஆய்வு செய்தார். ·பிரான்சிஸின் முதுகில் வருடியவாறு பாபா, "**இந்த இடத்தை நீங்கள் மிகவும் நன்றாகத் தேர்ந்தெடுத்தீர்கள்**" என்று சைகையால் தெரிவித்தார். தன் அருகில் உருண்டு புரண்ட பிரின்ஸ் (PRINCE) என்ற நாயைத் தட்டிக் கொடுத்தார். (பாபா வந்த முதல் நாள் அந்த நாய் பாபாவின் முன்னால் படுத்து தூங்கியது.) பிரின்ஸ் மீண்டும் மனிதனாக பிறவி எடுக்கும் என்று பாபா தெரிவித்தார்.

குழு உள்ளே சென்றபோது, பாபா இந்தியாவிலும் அமெரிக்காவிலும் எடுக்கப்பட்ட காணொளி திரைப்படங்களைக் காண்பிக்கச் சொன்னார்; ஆனால் அந்த இடத்திற்கு மின்சாரம் இன்னும் வழங்கப்படவில்லை. எனவே அதற்கு பதிலாக, அவர் கதைகள் மற்றும் நகைச்சுவைகளை மொழியுமாறு அன்பர்களைக் கேட்டுக்கொண்டார், "**நீங்கள் உங்கள் நகைச்சுவையால் என்னை சிரிக்கச் செய்ய வேண்டும், அல்லது உங்கள் அன்பால் அழ வைக்க வேண்டும்!**" பாபா, பப்பாளிக்கான ஆஸ்திரேலிய வார்த்தையைக் கேட்டு மகிழ்ந்தார் - 'பாவ் பாவ்.'

(PAW PAW) மூன்று பெண்மணிகள் தங்கள் புருவங்களுக்கு இடையே இந்திய பாணியில் பொட்டு வைத்துக்கொண்டதைக் கண்டு பாபா மிக்க மகிழ்ச்சியடைந்தார். ஜோன் புரூ:ஃபோர்ட் மூன்று நகைச்சுவையான கதைகளை விவரித்தார். நோயல் ஆடம்ஸ், ஆஸ்வால்ட் ஹால் மற்றும் பலர், பல கதைகளை எடுத்துரைத்து பாபாவை சிரிக்க வைத்தனர். பதிலுக்கு, பாபா அவர்களுக்கு சுவாமி மங்களானந்த், பாலக் பகவான், கோதாவரி மாய், யோகி ஷுத்தானந்த் பாரதி ஆகியோரைப் பற்றிய கதைகளைக் கூறினார்.

பாபாவை மீண்டும் சந்திக்க பில் லே பாஜ் தனது தந்தையார் ராயை (ROY) அழைத்து வந்திருந்தார். பாபா, ராய் வந்ததை கவனித்து அவரை சைகையால் வரவழைத்தார். ராய் பாபாவின் முன் மண்டியிட்ட வேளையில், பாபா அவரை அன்புடன் அரவணைத்தார். பின்னர், அனைவரும் பாபாவைக் கடந்து செல்லும்போது அவரது கையை முத்தமிட்டனர்.

1958 ஜூன் 6 சகவாசத்தின் கடைசி நாளான வெள்ளிக்கிழமை அன்று, ஆஸ்திரேலிய குழு காலை 9:00 மணிக்கு சந்திப்பு அறையில் ஒன்றுகூடியது. பாபா சுண்ணாம்பு துண்டை எடுத்துவரக் கூறி, பௌதீக, சூட்சும, ஆழ் மன உலகங்களைக் குறிக்கும் வகையில், தரையில் மூன்று வட்டங்களை வரையுமாறு எரச்சிடம் கூறினார். பாபா ஒரு தொப்பியைப் பயன்படுத்தி, பொய்யும் போலியுமான நான் எனும் அகந்தையைப் பிரதிநிதித்துவப்படுத்தி, பின்னர் அதை விளக்கத் தொடங்கினார்:

**உங்களின் 'ஏக இறைவன் எனும் உண்மைப்பொருளான நான்', 'பொய்யும் போலியுமான நான்' எனும் பங்கை வகிக்கிறது. எடுத்துக்காட்டாக, உங்கள் 'ஏக இறைவன் எனும் உண்மைப்பொருளான நான் எனும் பரமாத்மா'வுடன் பொய்மை இணைக்கப்பட்டுள்ளது. உதாரணமாக ஃபிரான்சிஸை எடுத்துக் கொள்ளுங்கள். ஃபிரான்சிஸின் 'உண்மைப்பொருளான நான் எனும் பரமாத்மா'வுடன் பொய்மை இணைக்கப்பட்டுள்ளது. பௌதீக, சூட்சும, ஆழ் மன உலகங்களுடன், ஏக இறைவனாகிய உண்மைப்பொருள் அனைத்தும் ஃபிரான்சிஸில் உள்ளன. ஃபிரான்சிஸின் 'உண்மைப்பொருளான நான் எனும் பரமாத்மா', 'பொய்யும் போலியுமான நான்' எனும் பாகத்தை வகிப்பதால், பௌதீக உலகத்தை மட்டுமே அவரால் பார்க்க முடியும். 'ஏக இறைவன் எனும் உண்மைப்பொருளான நான்' பின்னோக்கிப் பார்க்கிறது. இப்படி, பின்னோக்கி ஒரு படி நகர்வது** (அதாவது எதிர் திசையைப் பார்ப்பது என்பது) **உண்மையில் ஒரு படி முன்னோக்கியே உள்ளது. ஐந்தாவது ஆன்மீகத் தளத்தில் நிலைகொண்டிருக்கும் வாலி ஒருவர், ஃபிரான்சிஸை** (1)**லிருந்து** (2) **வரை அழைத்துச் செல்கிறார். சூட்சும உலகில், பல ஆன்மீகத் தளங்கள் உள்ளன, ஆனால் அனைத்தும் உண்மையில் மாயையே - அழகான இசை, ஒளிகள், வாசனைகள் இப்படிப் பல. ஆறாவது ஆன்மீகத் தளத்தில் நிலைகொண்டுள்ள பீர் அல்லது துறவி, ஃபிரான்சிஸை ஆழ் மன உலகிற்கு அழைத்துச்**

**செல்கிறார்; இங்கே, பார்க்கும் திசை நேர் மாறாக மாறுகிறது, எல்லையற்ற கடவுள் காணப்படுகிறார். ஆறாவது ஆன்மீகத் தளத்தில், ஃபிரான்சிஸ் கடவுளைக் காண்கிறார்; ஆனால் அவர் கடவுள் என்று அவருக்குத் தெரியாது. பௌதீகத் தளத்திலிருந்து சூட்சும, ஆழ் மன உலகிற்குப் பிரவேசிக்கும் பாதையில், முழு உணர்வு நிலைத்திருக்கும். பரிபூரண குருநாதர், உண்மைப்பொருளாகிய 'நான்' எனும் நிலைப்பாட்டிலிருந்து, பொய்யும் போலியுமான நான் எனும் சுயத்தன்மையை அகற்றுகிறார்** (இந்த நேரத்தில் பாபா தொப்பியை காற்றில் சுழல விட்டார்), **இறுதியில் ஏக இறைவனான உண்மைப்பொருள் 'நான்' எனும் உண்மையான நிலைப்பாட்டுடன் உளதாயிருக்கும்.**

**உண்மையான 'நான் கடவுள்' எனும் நிலைப்பாடு அளவிறுதியற்ற தன்மையுடன் ஒன்றிணைகிறது. பொய்யான 'நான்' அகற்றப்படும்போது, தனித்துவம் நிலைநாட்டப்படுகிறது. உண்மையான 'நான்' எனும் நிலைப்பாடு சொல்கிறது: "நான் கடவுள்." ஆனால், உண்மையில் எல்லா தனித்துவங்களும் ஒன்றுதான். பரிபூரண குருநாதர்கள் அனைவரும் கூறுகின்றனர்: "நான் கடவுள்," இவ்வாறு தனித்துவத்தை வெளிப்படுத்தும் அதே வேளையில், அனைவரும் கடவுளில் நிலைகொண்டிருக்கின்றனர்.**

**பரிபூரண குருநாதர் (சத்குரு) என்பவர் 'தனிப்படுத்தப்பட்ட இறைப்பெருங்கடல்', மற்றும் அவதார புருஷர் என்பவர் 'இறைப்பெருங்கடல் சார்ந்த தனிமனிதன்'. அவதார புருஷர் அனைத்திலும் இருப்பவர், அனைத்தும் தன்னில் இருப்பதை முழுமையாக அறிந்தவர்.**

அதைத் தொடர்ந்து பாபா இசை, நகைச்சுவை துணுக்குகள் மற்றும் கதைகளை வரவழைத்தார். ஃபிரான்சிஸ் மற்றும் அனைவருக்கும் ஏமாற்றம் தரும் விதத்தில், எவராலும் பொருத்தமான எதையும் வழங்க முடியவில்லை, அதனால் ஓர் அசௌகரியமான அமைதி நிலவியது. சிறிது நேரத்திற்குப் பிறகு, சிலர் கிறிஸ்துமஸ் கேரல் பாடல்களைப் பாடத் தொடங்கினர், ஆனால் அவை மெதுவாகவும் புனிதமாகவும் இருந்தன. பாபா அதிருப்தி அடைந்ததாகத் தோன்றியது, ஆதலால் யாரோ ஒருவர் வால்ட்ஸிங் மாற்றில்டா (WALTZING MATILDA, ஒரு மகிழ்ச்சிகரமான நாட்டுப்புறப் பாடல் மற்றும் அதிகாரப்பூர்வமற்ற ஆஸ்திரேலிய தேசிய கீதம்) பாடலைப் பாடத் தொடங்கினார். பாபா இதை ரசிக்கவே, அனைவரும் ஒன்றிணைந்து பாடி, பாபாவின் தாளத்துடன் கூடிய கலகலப்பான, மகிழ்ச்சியான ராகத்திற்கு நகர்ந்தனர். நோயல் ஆடம்ஸ் புல்லாங்குழல் வாசித்தார். அதன் பின்பு மதிய உணவுக்குச் சென்ற குழுவினர், மதியம் 1:00 மணிக்கு மீண்டும் ஒன்றுகூடி பாபாவிற்குப் பிரியா விடை அளிக்க ஆயத்தமாயினர்.

ஒவ்வோர் அன்பரையும் பாபா ஆரத்தழுவி, ஜோன் ப்ரூஃபோர்டின் காரில் அமரவே, எரச், ஃபிரான்சிஸ் இருவரும் பின் இருக்கையில் அமர்ந்தனர். பில் லே பாஜ், ராபர்ட் ரூஸ் மற்றும் பிற மண்டலி அனைவரும் அனைத்து சாமான்களுடன் பாபாவின் காரை பின்தொடர்ந்தனர். பாபாவின் கார் பிரிஸ்பேன்

நகரை நோக்கி நகர்ந்த வேளையில், அனைவரும் கைகளை அசைத்தனர். அன்பர்கள் அனைவரும் மறுநாள் காலை வரை அங்கு இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டனர். அடுத்த இரண்டு நாட்களுக்கு எவரும் பாபாவின் வீட்டிற்குள் நுழைய வேண்டாம் என்றும், அனைவரும் என்.எஸ்.டபிள்யூ (NSW) மற்றும் விக்டோரியாவில் (VICTORIA) அமைந்த தத்தமது இல்லங்களுக்குத் திரும்பிச் செல்ல வேண்டும்; சென்று சேர்ந்ததும், பாபாவிற்கு அவரவர் இடங்களிலிருந்து தொலைத்தந்தி ஒன்றை அனுப்புமாறும் பாபா அறிவுறுத்தினார்.

பாபாவும் மண்டலியும் மாலை 4:30 மணிக்கு பிரிஸ்பேனுக்கு வந்தனர். பெல்வியூ ஹோட்டலின் (BELLEVUE HOTEL) குடிலில் மீண்டும் அன்று இரவு தங்கினர். பாபா அவரது இரவு உணவில் வெறும் கீரையைத் தவிர, வேறு எதையும் எடுத்துக்கொள்ளவில்லை; ஆனால் உணவைத் தயார் செய்த பெண்மணி சிறிது எலுமிச்சை ரசத்தை சேர்க்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. 'பாபா எதனையும் சேர்க்காமல் வெறும் கீரையை விரும்பியதால், எலுமிச்சை ரசத்தை ஏன் சேர்க்க வேண்டும்?' என்ற தகவலுடன் கீரை திருப்பி அனுப்பப்பட்டது . இது கீழ்ப்படிதலின் மற்றுமொரு பாடமாக அமைந்தது.

காலையில் நான்கு ஆஸ்திரேலியர்கள் (ஃபிரான்சிஸ், ஜோன், பில், ராபர்ட் ஆகியோர்), பாபா மற்றும் நான்கு மண்டலி ஸிட்னி நகருக்கு விமானத்தில் சென்று, அங்கிருந்து பில் லே பாஜின் குடியிருப்பான மெஹர் ஹவுஸில் அன்றிரவைக் கழித்தனர். வந்தவுடன், பில் வீட்டின் திறவுகோலைக் கண்டுபிடிக்க முடியாதபோது 'சிறிய நெருக்கடி' ஒன்றை சந்திக்க நேர்ந்தது. பாபாவைக் காத்திருக்கச் செய்யாமல் இருக்கும் விதத்தில், பில், ஜன்னல் வழியாக ஏறி பாபாவை உள்ளே அனுமதித்தார். பிற அனைவரும் பெட்டி, சாமான்களில் மும்முரமாக இருந்ததால், பில், பாபாவுடன் வீட்டில் தனியாக இருக்கவேண்டிய சூழ்நிலை; அசௌகரியமாக உணர்ந்த பில், பாபாவைப் படுக்கையில் அமர அழைத்து, அவர் திறவுகோலைத் தேடத் தொடங்கினார். பாபா அதற்கு செவிமடுத்து, அருகிலிருந்த மூங்கில் நாற்காலியில் அமர்ந்து, பில்லை வேடிக்கைப் பார்த்தார். பில் மேலும் பதற்றமடைந்து, 'ஒருவேளை சாவி தரையின் கீழ் விழுந்திருக்கலாம்' என்றார். பில் தரையில் கீழே பார்க்குமாறு பாபா சைகையால் தெரிவித்தார். (கீழே அமைந்த அசுத்தம் நிறைந்த தளத்திற்கு ஒரு பொறி கதவு இருந்தது.) இந்த நேரத்தில் பில் பாம்புகளைக் கண்டு மிகையாக அஞ்சினார். அவை வீட்டின் புதர் சூழ்ந்த பகுதிகளில் பொதுவாக இருந்தன. அங்கே மக்கள் பெரும்பாலும் வீடுகளுக்கு அடியில் கூடுகளை அமைத்தனர். இருப்பினும் பில் திருகுக் கம்பியால் கதவைத் திறக்க முயன்ற அவ்வேளையில், பாபா கைகளைத் தட்டி, பில்லிடம் நிறுத்துமாறு அறிவுறுத்தினார்; அந்த நிமிடம் முதல், பில் பாம்புகள் மீதான பயத்தை அனுபவித்ததில்லை.

பாபா, '**மெஹர் ஹவுஸில் எப்பொழுதும் அவரது இல்லத்தில் இருப்பதாக உணர்ந்தார்**' என்று குறிப்பிட்டார், மேலும் அவர் நிதானமாகவும்

சௌகரியமாகவும் உணர்ந்தார். பாபா, சாதாரணமான வேடிக்கை கலந்த தொனியில் உரையாடிக் கொண்டிருக்க, சுவரில் இருந்த புகைப்படங்களைச் சுட்டிக்காட்டி, அவை தனது ஆரம்ப காலங்களை நினைவூட்டுவதாகக் கூறினார் (பாபா கம்லி கோட்டில் இருந்தார்). '**அவர் நலமுடன் இருப்பதாகவும், இந்தியாவிற்குத் திரும்பப் போவதாகவும்**' தெரிவித்து, மெஹராவிற்குத் தொலைத்தந்தி ஒன்றை அனுப்புமாறு மண்டலிக்கு அறிவுறுத்தினார். ராபர்ட் ரூஸ் தொலைத்தந்தியை அனுப்பிவிட்டு, மதிய உணவை வாங்கிவரச் சென்றவர், மீன், பாலாடைக்கட்டி மற்றும் ரொட்டியுடன் திரும்பி வந்தார். ஃபிரான்சிஸ், பில் இருவரும் உணவு தயார் செய்ததை பாபா பார்வையிட்டார், பின்னர் அனைவருக்கும் உணவு வழங்கப்பட்டது. பாபா அவரது கைகளால் ஒவ்வொரு தட்டிலும் பாலாடைக்கட்டியை வெட்டி வைத்து பரிமாறினார். இந்த சந்தர்ப்பத்தில், பைபிளில் குறிப்பிடப்பட்ட நிகழ்வுகளின் உணர்வுகளை பில் நினைவு கூர்ந்தார்.

உரையாடலின் போது, பாபா, மேசை மீதிருந்த பில்லின் இராணுவ தொப்பியைக் குறிப்பிட்டார். அவர் இராணுவத்தில் ஓர் உளவியலாளராக பணிபுரிவதாக பில் விளக்கினார். பில், அவர் இராணுவத்தில் கையாண்ட மக்கள் மீதான தனது பணியின் தாக்கம் குறித்து கவலைப்பட்டார். அவரது எண்ணங்களை அறிந்த பாபா, ஒவ்வொரு முறையும் எவர் ஒருவரையும் நேர்காணல் செய்வதற்கு முன்பு, பில், பாபாவின் பெயரை நினைவுகூருமாறு அறிவுறுத்தப்பட்டார்.

பாபா 1956ஆம் ஆண்டு ஸிட்னி நகருக்கு விஜயம் செய்த போது பயணித்த அதே காரில் பில், பாபாவை விமான நிலையத்திற்கு அழைத்துச் சென்றார். '**பயணம் சௌகரியமாக இருக்குமா**' என பாபா கேள்வி எழுப்பவே, சக்கரங்களில் மேலும் சிறிதளவு காற்றை நிரப்பினால் பாதுகாப்பாக இருக்கும் என்று பில் உறுதியளித்தார். அவர்கள் சில மணி நேரத்திற்கு முன்னதாகவே விமான நிலையம் வந்து சேர்ந்தனர்.

ஐந்து நாட்கள் ஆஸ்திரேலியாவில் தங்கியிருந்து (1956இல் அவரது முதல் வருகையைப் போலவே), பாபா, எரச், ஆதி, டான், நரிமன் ஆகியோருடன் 1958 ஜூன் 7 மாலை 'பிரிட்டிஷ் ஏர்வேஸ்' விமானம் 713இல் (BRITISH AIRWAYS FLIGHT) புறப்பட்டார். விமானம் டார்வின் (DARWIN), சிங்கப்பூர், கொழும்பு வழியாகப் பறந்து, அடுத்த நாள் மாலை 7:15 மணிக்கு மும்பை ஸாண்டா குரூஸ் விமான நிலையத்தை வந்தடைந்தது. டார்வின் விமானத்தளத்தில் எரிபொருள் நிரப்பப்பட்டபோது, பாபாவும் மண்டலியும் சிறிது நேரம் முனையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். (இவ்வாறு பாபா, ஆஸ்திரேலியாவின் எட்டு மாநிலத் தலைநகரங்களில் நான்கில் அவரது பாதங்களைப் பதித்தார்.) விமானம் நான்கு மணி நேரம் தாமதமாக வந்தது - ஆனால் பாபா அவரது அசல் திட்டத்தை விட பத்து நாட்களுக்கு முன்னதாகவே வந்து கொண்டிருந்தார்.

காலம் இதை இப்படி அவதானித்தது: “பாபா தனது அன்பின் விதையை அவதார புருஷரின் வாழ்விடத்தில் விதைத்தார், அதனால் அது என்றென்றும் அங்கு மலரும். இந்தப் புனித பூமி, எதிர்கால சந்ததியினருக்காகத் தயாராக வைக்கப்பட்டது; ஆஸ்திரேலியா தேசம் முழுவதிலுமிருந்தும் ஆன்மாக்கள் அங்கு குவிந்து, அவதார புருஷரின் கருணை மற்றும் தெய்வீக ஆசீர்வாதத்தில் அடைக்கலம் தேடும்.”



**அவதார புருஷரின் இல்லம், ஜூன் 1958**
(AVATAR'S ABODE- JUNE 1958)



**பிரிஸ்பேன் விமான நிலையம், ஜூன் 1958**
(BRISBANE AIRPORT - JUNE 1958)



ஒரு சாதாரண

மனிதன், தனக்காகத்

துன்பப்படுகிறான்;

குருநாதர்கள் மனித

குலத்துக்காகத்

துன்பப்படுகிறார்கள்;

அவதார புருஷர்

எல்லா

உயிர்களுக்காகவும்,

அனைத்து

பொருட்களுக்காகவும்

துன்பப்படுகிறார்.



-அவதார் மெஹர் பாபா